Koviloor Digital Library
A. No. 4337
நூலகம், கோவிலூர்

அருட்பெருஞ்ஜோதி

திருவருட் பிரகசாச வள்ளலார்

என்னும்

சிதம்பரம் இராமலிங்க சுவாமிகள்

திருவாய் மலர்ந்தருளிய

திருவருட்பா

ஐந்து திருமுறைகள்

சென்னை
சமரச சுத்தசன்மார்க்க சங்க
வெளியீடு
'அருட்பெருஞ்ஜோதி நிலையம்'
அருட்பெருஞ்ஜோதி அச்சகத்தில்
பதிப்பித்தது.
7/99, அம்மன் கோயில் தெரு,
கிருஷ்ணங்குளம் சமீபம், சென்னை.

சித்திரபானு ஆண்டு புரட்டாசித் திங்கள் 25-ம் நாள்
பதிவு செய்தது] 11-10-1942. [ரூ. 6

Koviloor Digital Library

Koviloor Digital Library

எல்லா உயிர்களும்! இன்புற்று வாழ்க!!

ஜீவகாருண்யமே! திறவுகோல்!!



சென்னை சமரச சுத்தசன்மார்க்க சங்கம்,

7/99, அம்மன் கோயில் தெரு, கிருஷ்ணங்குளம் சமீபம்,

சென்னை—[1-4-1943]

Koviloor Digital Library

Koviloor Digital Library

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

அருட்பெருஞ்ஜோதி

திருவருட்பா

குறள் வெண்பா

திருச்சிற்றம்பலம்

எல்லாம் செயல்கூடும் என்னாணை யம்பலத்தே
எல்லாம்வல் லான்றனையே யேத்து

திருச்சிற்றம்பலம்

அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை

Koviloor Digital Library

Koviloor Digital Library

அருட்பெருஞ்ஜோதி

தொழுவூர்-வேலாயுத முதலியாரவர்கள் இயற்றிய

வாயுறை வாழ்த்து

இணைக்குறளாசிரியப்பா

புண்ணிய முடைத்தே புண்ணிய முடைத்தே
மண்ணகத் துயரிய மக்கட் பிறப்பும்
புண்ணிய முடைத்தே புண்ணிய முடைத்தே
பண்ணப் பழுத்த புண்ணிய நுகர்தரு
விண்ணகத் துயரிய வியன்குடிப் பிறப்பினும்
புண்ணிய முடைத்தே புண்ணிய முடைத்தே.
அதனால்,

மாசறு காட்சி மயன்றவான் றவமுடை
ஆணவத் தக்கனார் வேள்விபுக் கொடுங்கிய
வானவக் குழாத்து மாலரில் கழிப்பிய
காசிப னளித்த தேசுடை யாக்கை
மாயா வரத்தொரு மாச்சூ ராசற
மூவெயின் முருக்கிய முரட்டழன் முறுவல்
வழங்கிய வாலமர் மறைமுதல் யோகி
கண்ணுதல் வழியே தண்ணருள் பழுத்த
தேவுய ருலகெலா நாவுயர் புகழ்ச்சுவை
மூவிரு முகத்துச் செங்கனி யாவையு
மளித்த மூதாதை செருக்கது கைப்ப
வெண்வகை வடிவத் தொருவன் றிசைச்செவி
பருகிய பிரணவ விரதச் செங்கனி
முல்லை யாற்று முருந்தெயிற் றரிவையர்
ஆதரம் பெருக வோம்பருட் கற்பின்
வயாவறுத் தீன்ற வையவாய் மறுப்படா
தொருபய லணைத்துப் போக மார்த்த
பூண்முலை யிமயப் பொலம்பூங் கொம்பு
முச்சிமோந் தின்ப முற்றுச் செங்கனி
மாக்கடன் மதிபெறு வானுண வருந்திய
பல்பெரு மகத்து நோன்பினு நன்பகற்
பலவுடன் கழிந்த வுண்டிய ராய்வற
நண்ணிய மராஅடித் தண்ணறு நிழல்வயின்
அண்ணல்வெள் யானைமண் ணுறுத்துப் புரந்த
குலக்கோ மாட்டி குறக்கோ மாட்டி
மெய்யுறச் சுவைத்த தெய்வச் செங்கனி
விட்பட ரொழுக்கறு மட்படர் புதைக்குடில்
ஓவா வாழ்க்கை யுணர்ச்சிவலி யருகுபு
சிறுத்த காலத்துப் பெருத்தநோ யுழந்து
தலைப்பெ யொன்றுடை யிரண்டிற் றிகழ்ந்த
மலக்குறும் பாசு மரீஇய வெமரம்
புண்ணுறு நெஞ்சப் புலம்பு தபவிரு
கண்ணுகர் செங்கனி யாகுறு பாக்கு
நனியதர் சிறப்ப நாட்டிய நாடித்

Koviloor Digital Library

தயாமூல தன்ம தத்துவம் புலப்படத்
தன்னோர் தயாவிற் றன்வலித் ததனால்
கொலைபுண ரரக்கர் கொடும்பாட்டுக் காசற
வலைபுணர் பள்ளி யாண்டகை யண்ணல்
அரசிளங் குமரனிற் பரசினர் பழிச்சக்
கொடுமரங் குனித்து நெடுநீர் நீந்திக்
கவித்தொகை தைவரக் கைவரத் தேவி
சென்றுபே ராவம் பொன்றுறப் பின்றை
நின்றவெம் பவப்பழி யொன்று வொன்று
மனனக னெகிழ்ந்து மன்னிய
வினனகஞ் செழிப்ப வியைபழி துரப்ப
மெய்ப்பிறப் பில்லான் கப்பறு
மொருகுறி கண்டு பெருவரம் படைத்திவ்
வகனிலக் கரிசறத் தன்பெயர் நிலைஇய
வேது வினப்பெயர் காதலிற் புனைஇ
அடர்முளி கானம் படரெரி போலத்
தம்மையுந் தஞ்சார் தவத்தையுந் தவம்புணர்
மெய்ம்மலி யுறுநர் மேதகு குழூஉவையுஞ்
சுட்டற வொழியுந் தோற்றஞ் சான்ற
உயிர்க்கொலை பழகிப் புழுக்குடர் பெருக்கி
மலவுடல் வளர்க்கும் பழியூ னுணவினர்
நினைப்பருங் கூட்ட நேர்பா தகமறத்
திருவுரு சிறந்த பேரரு டன்னியல்
தேற்றிய
திருவருட் பிரகாசச் செழுங் கனியாய்
எம்மையு மெம்முடைத் தம்மையுந் தம்முறு
திறத்தையுங் காட்டியெஞ் சித்தந் தழைப்பத்
திருவாய் மலர்ந்த செந்தேன் பொதிந்து
பெருகருட் பாவாந் தேத்தடை கிடந்த
கருவார் மையற் கவல்கட் டழிக்கும்
திருவார் **தணிகைச் செந்தமிழ்ப் பெருக்கு**
வருவா ரிதிமலிந் தாடி வாழிய
வாழிய வுலகே வாழிய வுலகே
வாழிய வறனே வாழிய நலனே
வாழிய மறையே வாழிய துறையே
வாழிய தவமே வாழிய வாழ்த்திய
ஊழிய லுடம்பே வேழிய ஞவே
வாழிய வாழிய வாழிய நாவே
வாழிய வருளே வாழிய வருளே
வாழிய வருளே வாழிய வருளே.

நேரிசைவெண்பா

ஆரியனார் சீர்பாதந் தாங்க வமைசிரமும்
ஆரியனார் சீர்பா டவாநாவும்—ஆரியனார்
செம்மொழியே சிந்திக்கு நெஞ்சுந் தருந்தவமே
யெம்மையினும் வாழ்க வினிது.

திருச்சிற்றம்பலம்

Kovilur Digital Library

ஆண்டவர்
A. No.........
நூலகம், கோவிலூர்

இரண்டாம் பதிப்பு 1942

அருட்பெருஞ்ஜோதி

திருவருட் பிரகாச வள்ளலார் திருவடிகள் வாழ்க

குரு வணக்கம்

மருவாணைப் பெண்ணாக்கி யொரு கணத்தில் கண்விழித்து வயங்கு மப்பெண், உருவாணை யுருவாக்கி யிறந்தவரை யெழுப்புகின்ற வுறுவனேனும், கருவாணை யுற விரங்காது உயிருடம்பைக் கடிந்துண்ணுங் கருத்தனேல் **எங்குருவாணை எமது சிவக்கொழுந்தாணை ஞானியெனக் கூறேனே!** என்று திருவாய் மலர்ந்தருளிய எல்லாம் வல்ல தனிப்பெருந் தந்தையரே! தேவரீரது மேன்மை மிக்க திருவடிகளைத் தொழுது, யாங்கள் செய்கின்ற விண்ணப்பம் யாதோ வென்னில் :—

தேவரீரது அருள் நெறிக்குப் புறம்பாக இவ்வுலகத்திலே மக்களாய்ப் பிறந்த நாங்களும் எமது ஆன்மநேய ஒருமைப் பாட்டுரிமைச் சகோதரர்களும் பலவேறு லக்ஷியங்களைக் கொண்டு, பலவேறு கற்பனைகளால் வழிதெரியாது, அலைந்து அலைந்து, இறந்து, இறந்து வீண் போகாமல், தேவரீர் அன்புடன் எடுத்துரைத்த சுத்த சன்மார்க்கத்தின் முக்கிய லட்சியமாகிய **ஜீவகாருண்யத்தையே** கடவுள் வழிபாடாகக் கொண்டு, மெய்ப் பொருளினை யுணர்ந்து, உண்மையன்பு, உண்மையிரக்கம் முதலிய நற்குணங்களைப் பெறச் செய்வித்துப் **பேரின்ப லாபத்தையடைவித்தருளுதல்** வேண்டும். எல்லாமுடைய தனிப்பெருந் தந்தையரே! தேவரீர் திருவருட் பெருங்கருணைக்கு வந்தனம்! வந்தனம்!!

அருட்பெருஞ்ஜோதி! தனிப்பெருங்கருணை!!

Koviloor Digital Library

அருட்பெருஞ்ஜோதி

எல்லாம் செயல்கூடும் என்னாணை அம்பலத்தே
எல்லாம் வல்லான் றனையே ஏத்து

திருச்சிற்றம்பலம்

பதிப்புரை

இத் தெய்வீகத் திருவருட்பா, திருவருள் துணைகொண்டு, இதுவரையில் வெளிவராத முறையில் இரண்டாம் பதிப்பாக, புதிய அழகிய பெரிய எழுத்துக்களைக் கொண்டு, யாவரும் எளிதில் கற்றுணருமாறு, தெளிவான முறையில் அருமையான வசன பாகங்களுடன், விவரமான அகராதியும் கொண்டு, உயர்ந்த அழகிய பட்டுக் கட்டடத்துடன் வெளிவருகிறது.

இப்பதிப்பு வெளிவருவதற்கு மிகவும் உதவியாக விருந்த திருவாளர், த. மு. ஏகாம்பர முதலியார் (ஹாடன் அண்டு கம்பெனி - உரிமையாளர்) அவர்கட்கு எமது நன்றி உரித்தாகுக.

சன்மார்க்கச் சகோதரர்கள் இவ்வருமையான பதிப்பைப் பெற்று அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர் பெருங் கருணையில் திளைத்து வாழ்வார்களாக!

இங்ஙனம்
சென்னை சமரச சுத்த சன்மார்க்க சங்க
1-9-1942 அன்பர்கள்.

Koviloor Digital Library

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

அருட்பெருஞ்ஜோதி

திருவருட்பா

ஐந்து திருமுறைகள்

நூற் பிரிவு

வசன பாகம்

பக்கம்.

1	வாயுறை வாழ்த்து	—	1
2	குரு வணக்கம்	—	3
3	பதிப்புரை	—	4
4	நூற்பிரிவு	—	5
5	தொழுவூர் வேலாயுத முதலியார் — உண்மைகள்		1
6	திருவருட்பிரகாச வள்ளலார் திவ்ய சரித்திரம்	—	6
7	சென்னை சமரச சுத்தசன்மார்க்க சங்கம்		88
8	மனுமுறை கண்ட வாசகம்	—	91
9	ஒழிவிலொடுக்கம் (உரை)	—	145
10	தொண்ட மண்டல சதகம் (உரை)	—	172
11	பொன்வண்ணத் தந்தாதி (உரை)	—	190
12	இனி அச்சிடுவதாகக் குறிக்கப்பட்டவை	—	192

Koviloor Digital Library

பதிக அட்டவணை

			பாட்டு.	பக்கம்.
முதல் திருமுறை				
1	திருவடிப் புகழ்ச்சி	—	1/128	1
2	விண்ணப்பக் கலிவெண்பா	—	418	6
3	நெஞ்சறி வுறுத்தல்	—	705	31
4	சிவநேச வெண்பா	—	104	73
5	மகாதேவ மாலை	—	101	85
6	திருவருண் முறையீடு	—	232	106
7	வடிவுடைமாணிக்க மாலை	—	102	132
8	இங்கித மாலை	—	167	144
இரண்டாவது திருமுறை				
1	புண்ணிய விளக்கம்	—	11	163
2	அருள் நாம விளக்கம்	—	10	165
3	ஸ்ரீசிவஷண்முக நாம ஸங்கீர்த்தன லகரி	—	10	167
4	நமச்சிவாய ஸங்கீர்த்தன லகரி	—	10	169
5	நற்றுணை விளக்கம்	—	10	171
6	திருவருள் வழக்க விளக்கம்	—	10	173
7	சிவபுண்ணியத் தேற்றம்	—	10	174
8	முத்தியுபாயம்	—	10	176
9	அவலத் தழுங்கல்	—	10	177
10	பழமொழிமேல் வைத்துப் பரிவு கூர்தல்	—	10	179
11	அபராதத் தாற்றாமை	—	10	181
12	அருளியல் வினாவல்	—	10	183
13	திருமுல்லைவாயில் திருவிண்ணப்பம்	—	10	186
14	காட்சிப் பெருமிதம்	—	10	187
15	கொடைமடப் புகழ்ச்சி	—	10	188
16	திருவருள் வேட்கை	—	10	190
17	அபராத விண்ணப்பம்	—	10	191
18	அறிவரும் பெருமை	—	10	193
19	அருள்விடை வேட்கை	—	10	194
20	எழுத்தறி பெருமான் மாலை	—	31	195
21	நெஞ்சொடு நேர்தல்	—	10	199
22	திருப்புகழ் விலாசம்	—	10	200
23	திருச்சாதனத் தெய்வத் திறம்	—	10	202
24	தியாகவண்ணப் பதிகம்	—	10	204
25	ஆடலமுதப் பத்து	—	10	205
26	திருவடிச் சரண் புகல்	—	10	208
27	சிவாநந்தப் பத்து	—	10	210
28	சந்நிதி முறையீடு	—	11	212
29	தவத்திறம் போற்றல்	—	10	213
30	நெஞ்சுறுத்த திரு நேரிசை	—	26	214
31	சிகாமணி மாலை	—	15	217
32	கவி முறையீடு	—	12	219

Koviloor Digital Library

			பாட்டு.	பக்கம்.
33	எதிர்கொள் பத்து	—	10	221
34	நெஞ்சொடு நேர்தல்	—	10	223
35	நெஞ்சறை கூவல்	—	10	225
36	நெஞ்சைத் தேற்றல்	—	10	227
37	நெஞ்சறி வுறாஉ	—	10	229
38	நெடுமொழி வஞ்சி	—	10	231
39	பற்றின் திறம் பகர்தல்	—	10	233
40	அடிமைத் திறத் தலைசல்	—	11	235
41	அவத் தொழிற் கலைசல்	—	10	236
42	நாளவத் தலைசல்	—	10	237
43	அவலமதிக் கலைசல்	—	11	238
44	ஆணுவாழ்வி னலைசல்	—	10	240
45	அருட்டிறத் தலைசல்	—	36	241
46	திருவிண்ணப்பம்	—	10	245
47	பிரசாத விண்ணப்பம்	—	10	247
48	வழிமொழி விண்ணப்பம்	—	10	248
49	சிறுமை விண்ணப்பம்	—	11	251
50	ஆற்று விண்ணப்பம்	—	10	253
51	இரங்கல் விண்ணப்பம்	—	10	255
52	காதல் விண்ணப்பம்	—	10	257
53	பொருள் விண்ணப்பம்	—	10	259
54	கொடி விண்ணப்பம்	—	11	261
55	நாடக விண்ணப்பம்	—	11	264
56	திருவண்ண விண்ணப்பம்	—	12	266
57	மருட்கை விண்ணப்பம்	—	10	267
58	கொடைமட விண்ணப்பம்	—	10	270
59	சிறுவிண்ணப்பம்	—	10	271
60	பெருவிண்ணப்பம்	—	10	273
61	திருக்காட்சிக் கிரங்கல்	—	10	274
62	திருவருட் கிரங்கல்	—	10	276
63	எண்ணத்திரங்கல்	—	10	277
64	நெஞ்சுநிலைக் கிரங்கல்	—	11	278
65	தனிமைக் கிரங்கல்	—	10	280
66	கழிபகற் கிரங்கல்	—	10	282
67	அர்ப்பித்திரங்கல்	—	10	284
68	அச்சத்திரங்கல்	—	10	286
69	புறமொழிக் கிரங்கல்	—	10	288
70	கருணை பெறு திரங்கல்	—	10	289
71	திருவருட் பதிகம்	—	10	291
72	பிரசாதப் பதிகம்	—	10	294
73	பிரார்த்தனைப் பதிகம்	—	10	295
74	திருப்புகற் பதிகம்	—	10	296
75	சிந்தைத் திருப்பதிகம்	—	10	297
76	உய்கைத் திருப்பதிகம்	—	12	299

Koviloor Digital Library

			பாட்டு.	பக்கம்.
77	ஆநந்தப் பதிகம்	—	11	300
78	திருவண்ணப் பதிகம்	—	10	302
79	அம்மைத் திருப்பதிகம்	—	10	306
*	சிவகாமவல்லி தோத்திரம்	—	5	310
80	கலைமகளார் திருப்பதிகம்	—	4	311
81	போற்றித் திருப்பதிகம்	—	10	312
82	விண்ணப்பப் பதிகம்	—	10	314
83	தரிசனப் பதிகம்	—	10	315
84	அபராத விண்ணப்பம்	—	22	316
85	கலி விண்ணப்பம்	—	10	319
86	கருணை விண்ணப்பம்	—	10	320
87	அடிமைப் பதிகம்	—	10	321
88	வேட்கைக் கொத்து	—	10	323
89	சரணப் பதிகம்	—	11	325
90	நற்றாய் கவன்றது	—	9	327
91	உள்ளப் பஞ்சகம்	—	5	328
92	சிவசிதம்பர சங்கீர்த்தனம்	—	5	329
93	திருக் குறிப்பு நாட்டம்	—	4	329
94	தனித்திருப் புலம்பல்	—	4	330
95	பரமராசியம்	—	2	330
96	திருப் புகழ்ச்சி	—	3	331
97	திருமருந் தருணிலை	—	2	332
98	திருவருள் விலாசம்	—	2	332
99	சல்லாப லகரி	—	2	332
100	அறநிலை விளக்கம்	—	1	333
101	அருள்நிலை விளக்கம்	—	1	333
102	வினுவுத்தரம்	—	2	333
103	நெஞ்சொடு நெகிழ்தல்	—	12	333
104	பொதுத் தனித் திருவெண்பா	—	13	335
105	தனித் திரு விருத்தம்	—	48	337
106	நிந்தாஸ்துதி	—	1	343
107	பெரியநாயகி யம்மை தோத்திரம்	—	3	344
108	ஞானசிகாமணி தோத்திரம்	—	3	344
109	வயித்தியநாதர் பதிகம்	—	12	345
110	ஸ்ரீராமநாமத் திருப்பதிகம்	—	11	350
111	போற்றித் திருப்பஞ்சகம்	—	5	352
112	இலக்குமி தோத்திரம்	—	1	353
*	துலுக்காணத்தம்மன் பேரில் பஞ்சரத்தினம்	—	5	353

மூன்றுவது திருமுறை

1	திருவுலாப் பேறு	—	10	355
2	நாரையுங் கிளியு நாட்டுறு தூது	—	10	357
3	இரங்கன் மாலை	—	31	358
4	திருவுலா வியப்பு	—	10	362

			பாட்டு.	பக்கம்.
5	சல்லாப வியன்மொழி	—	10	363
6	இன்பக் கிளவி	—	10	364
7	இன்பப் புகழ்ச்சி	—	10	365
8	திருவுலாத் திறம்	—	10	367
9	வியப்பு மொழி	—	10	368
10	புணரா விரகு பொருந்துறு வேட்கையின் இரங்கல்		30	369
11	குறியாராய்ச்சி	—	11	373
12	காட்சி அற்புதம்	—	10	374
13	ஆற்றாக் காதலின் இரங்கல்	—	11	375
14	திருக்கோலச் சிறப்பு	—	10	377
15	சோதிட நாடல்	—	10	378
16	திருவருட் பெருமிதம்	—	10	379
17	காதற்சிறப்புக் கதுவாமாண்பு	—	12	380
18	ஆற்றா விரகம்	—	10	382
19	காதன் மாட்சி	—	10	383

நான்காவது திருமுறை

1	அன்புமாலை	—	31	385
2	அருட்பிரகாச மாலை	—	100	392
3	பிரசாத மாலை	—	10	412
4	ஆநந்த மாலை	—	10	414
5	பத்தி மாலை	—	10	416
6	சௌந்தர மாலை	—	12	419
7	அதிசய மாலை	—	14	421
8	அபராத மன்னிப்பு மாலை	—	10	424
9	ஆளுடைய பிள்ளையார் அருள்மாலை	—	12	427
10	ஆளுடைய அரசுகள் அருள்மாலை	—	10	431
11	ஆளுடைய நம்பிகள் அருள் மாலை	—	10	433
12	ஆளுடைய அடிகள் அருள் மாலை	—	10	435

ஐந்தாவது திருமுறை

1	சித்தி விநாயகர் பதிகம்	—	14	437
2	வல்லபை கணேசர் பிரசாதமாலை	—	11	440
3	கணேசத் திருவருள் மாலை	—	10	442
4	தனித்திரு மாலை	—	9	444

திருத்தணிகைப் பதிகம்

1	பிரார்த்தனை மாலை	—	30	446
2	எண்ணப்பத்து	—	10	449
3	செழுஞ்சுடர் மாலை	—	11	451
4	குறையிரந்த பத்து	—	10	452
5	ஜீவசாக்ஷி மாலை	—	28	454
6	ஆற்றா முறை	—	10	460
7	இரந்த விண்ணப்பம்	—	10	462
8	கருணை மாலை	—	30	463
9	மருண்மாலை விண்ணப்பம்	—	10	467

Koviloor Digital Library

			பாட்டு.	பக்கம்.
10	பொறுக்காப் பத்து	—	10	468
11	வேட்கை விண்ணப்பம்	—	10	470
12	ஆறெழுத் துண்மை	—	10	471
13	போக்குரை யீடு	—	10	473
14	பணித்திறம் வேட்டல்	—	10	474
15	நெஞ்சொடு புலத்தல்	—	11	475
16	புன்மை நினைந் திரங்கல்	—	10	476
17	திருவடிசூட விழைதல்	—	10	479
18	ஆற்ரு விரக்கம்	—	10	480
19	ஏழைமையினிரங்கல்	—	9	481
20	பணித்திறஞ் சாலாப் பாடிழிவு	—	10	482
21	காணுப் பத்து	—	10	484
22	பணித்திறஞ் சாலாமை	—	6	486
23	குறைநேர்ந்த பத்து	—	10	486
24	முறையிட்ட பத்து	—	10	489
25	நெஞ்சவலங் கூறல்	—	10	490
26	ஆற்ருப் புலம்பல்	—	5	492
27	திருவருள் விழைதல்	—	3	493
28	புண்ணியநீற்று மான்மியம்	—	5	493
29	உறுதி யுணர்த்தல்	—	3	494
30	எண்ணத் தேங்கல்	—	2	494
31	கையடைமுட்டற் கிரங்கல்	—	4	495
32	பொது	—	6	495
33	நாளவம்படாமை வேண்டல்	—	10	496
34	அன்பிற் பேதுறல்	—	10	498
35	கூடல் விழைதல்	—	10	500
36	தரிசனை வேட்கை	—	10	502
37	நாளெண்ணி வருந்தல்	—	10	504
38	ஏத்தாப்பிறவி யிழிவு	—	10	505
39	பவனிச் செருக்கு	—	10	507
40	திருவருள் விலாசப்பத்து	—	10	508
41	திருவருட் பேற்று விழைவு	—	10	511
42	செல்வச் சீர்த்தி மாலை	—	10	512
43	செவியறி வுறுத்தல்	—	10	514
44	தேவ வாசிரியம்	—	3	515
45	இங்கிதப் பத்து	—	12	516
46	போற்றித் திருவிருத்தம்	—	15	517
47	திருப்பள்ளித் தாமம் தாங்கல்	—	3	519
48	தனித்திருத் தொடை	—	18	519
*	சிங்கபுரிக் கந்தர் பதிகம்	—	10	522
49	தெய்வமணி மாலை	—	31	524
50	கந்தர் சரணப் பத்து	—	10	536

திருச்சிற்றம்பலம்

Koviloor Digital Library

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

அருட்பெருஞ்ஜோதி

திருவருட்பா

நேரிசை வெண்பா

திருச்சிற்றம்பலம்

இன்று வருமோ நாளைக்கே வருமோ அல்லதுமற்
றென்று வருமோ அறியேன் எங்கோவே—துன்றுமல
வெம்மாயை அற்று வெளிக்குள் வெளிகடந்து
சும்மா இருக்குஞ் சுகம்.

திருச்சிற்றம்பலம்

அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை

Koviloor Digital Library

Koviloor Digital Library

A. No........
நூலகம், கோவிலூர்

அருட்பெருஞ்ஜோதி

திருச்சிற்றம்பலம்

திருவருட்பிரகாச வள்ளலார்

தலை மாணுக்கர்

தொழூவூர் வேலாயுத முதலியார் எழுதிய

உண்மைகள்*

திருச்சிற்றம்பலம்

தென் இந்தியாவில் பிரசித்திபெற்ற யோகி, திரு அருட் பிரகாச வள்ளலார், என்னும் சிதம்பரம் - இராமலிங்க சுவாமிகளின் சீடர்களில் நான் ஒருவன்.

இங்கு அடையாறு தத்துவ ஞான சங்கத்தைப்பற்றி எனது குருநாதன் எடுத்துக்காட்டிய சில உண்மைகளை மாத்திரம் வெளிப் படுத்த விரும்புகிறேன்.

(இது, ஆங்கிலேயரும், இந்துக்களில் சிலரும், மகாத்மாக் களைப் பற்றியும், மகாத்மாக்களின் ஆக்ஞையின்படி, தியசாபிகல் சங்கம் ஏற்பட்டதைப் பற்றியும், ஐயமுற்றிருப்பதை நீக்க, ஆசிரியர், இதுபோது அச்சிட்டுவரும் நூலில், மகாத்மாக்கள் இருக்கின்ருர்க ளென்பதை நிரூபிக்கவேண்டி, மிகுந்த கஷ்டமெடுத்துக் கொண்டதைக் கேள்வியுற்று, அருளிய தாகும்).

மற்றும் இது, ஜனங்கள் கொண்டிருக்கும் அவநம்பிக்கைகளை அடியோடே நீக்கி 'தியசாபி' (தத்துவ ஞானம்) என்பது வெறும் மித்தையல்ல என்பதையும், 'தியசாபி சங்கம்' நிலையற்றதிலிருந்து ஏற்படவில்லை என்பதையும், நிரூபிக்கும் என்று நம்புகின்றேன்.

முதலில் எமது பெருமானுரைப் பற்றியும், அவரது போதனை களைப் பற்றியும், சுருக்கமாகச் சொல்லுகின்றேன்.

---

* சென்னை பிரிஸிடென்ஸி காலேஜ் தமிழ்ப் பண்டிதராயிருந்த தொழூவூர் - வேலாயுத முதலியார் அவர்கள், "அந்தரங்க தியசாபியின் குறிப்புகள்" எனும் நூலாசிரியருக்கு வரைந்து கொடுத்த நற்சாட்சி பத்திரம்.

Koviloor Digital Library

திரு அருட்பிரகாச வள்ளலார்

இவர், சென்னை இராஜதானியில், தென்னாற்காடு ஜில்லா சிதம்பரம் தாலூக்கா, '**திரு மருதூர்**' என்னும் கிராமத்தில் அவதரித்தவர். இவர் தம் இளம்பிராயத்திலேயே சென்னைக்கு வந்து அங்கு வெகு காலம் வசித்திருந்தார்.

இவர் தம் **ஒன்பதாம் வயதிலேயே,** ஆரியர்களாலும், திராவிடர்களாலும், சரிசமானமாய் அபிமானித்தவர். **அகத்தியர்** முதலிய முனிவர்களால் எழுதப்பட்ட **பாக்களை, ஓதாமலே** மனப்பாடமாய் பாடும் **நாவளத்தைப் பெற்றிருந்ததாகவும் சொல்லக் கேள்வி.**

நான் 1849-ம் வருடம், இவரது சீடனானேன். இவர் எவ்விடமிருந்து? எவரால்? **ஞானதீட்சை** பெற்றார் என்பது எவருக்கும் தெரியமாட்டாது. என்றாலும், சில வருடங்களானதும், இவரை, அநேக சீடர்களடுத்துச் சூழ்ந்து கொண்டிருந்தனர். இவர், சிறந்த ஒரு ஏமசித்தர். இவருக்கு, **மாமிசம் உண்பவர்களை மாற்றும் அற்புத சித்தி இருந்த தென்பது அநேகருக்குக் கண்கூடாம்.**

இவருடைய பார்வை ஒன்றே, மாமிச உணவின் விருப்பத்தை யொழிக்கப் போதுமானதா யிருந்தது.

இவர், பிறருடைய மனதில் நிகழுபவைகளைப் பார்க்கவல்லவர்.

இவர், 1855-ம் ஆண்டில் சென்னையை விட்டுச் சிதம்பரத்திற்குப் போனார். அங்கிருந்து **வடலூர், கருங்குழி** என்ற இடங்களுக்குச் சென்று, அங்கு நீண்டகால மிருந்தனர்.

அங்கிருக்கும்போது, இவர் அடிக்கடி தம் சீடர்கள் அறியா வண்ணம் **மறைந்திருப்பதுண்டு.** இவர் எங்குச் சென்றாரென்பதை அறிவோர் எவருமிலர். **இப்படி வெகுநாள் மறைந்திருப்பார்.**

இவர், உருவத்தில் சாதாரண உயரமுள்ளவர். **மெலிந்த சரீர**முடையவர். **எலும்புகள் தெரியும்.** ஆயினும் **வீரிய பலமுள்ளவர்.** நிமிர்ந்த தேகம், தெளிந்த மாநிற (சாதாரண **சிவப்பு**) மேனியர். நீண்ட **மெல்லிய நாசி** யுடையவர். பரந்த **பொறி பறக்குங் கண்களை** யுடையவர். இவருடைய முகத்தில், **சதா சற்று விசனக்குறி** காணப்பட்டிருந்தது.

இவர், கடைசிக் காலத்தில் முடியை நீளமாய் வளரவிட்டிருந்தார்.

இவர், யோகிகளுக்கு அடுக்காத வழக்கமாகிய பாதரட்சையைத் (ஆற்காட்டு சோடு) தரித்திருந்தார்.

Koviloor Digital Library

இவருடைய உடை, இரண்டு வெள்ளை யாடையைவிட வேறில்லை, (ஒரே ஆடையை உடுத்திருந்ததாகவும் கேள்வி). இவர் கடும் நிராகாரத் தபசிபோலிருந்தார். இவர் **இளைப்பாறினதாக எவரும் அறிய மாட்டார்.** இரண்டு, அல்லது மூன்று நாளைக் கொருமுறை யுண்பார். அப்போதும் சில **கவளத்தோடு** திருப்தியடைவர். இரண்டு மூன்று மாதகாலம் வரை **உபவாச விரதம்** எடுப்பர். அப்போது, கொஞ்சம் சர்க்கரை கலந்த பானத்தைத் தவிர வேறொன்றும் உட்கொள்ளார்.

இவர், சாதிவேற்றுமை பாராட்டலாகாது என்று போதித்ததால், ஜனங்கள் அதில் பிரியப்பட்டார்களிலர். எனினும், பல சாதியாரும் இவரைச் சுற்றிப் பெருங் கூட்டமாய்க் கூடினர். அவர்கள் இவருடைய போதனைக்காக வந்திலர்கள். ஆயினும், இவர் **அற்புத சித்திகளைப்** பெற்றவர் என்று கேள்வியுற்று, அவ் வற்புதங்களைப் பார்க்க வந்தவர்களாவர். இவர், அவர்களுக்கும் அவ்விதமானது ஒன்றும் இல்லையென்றும், (எமது கொள்கை) **சுத்தமான, தத்துவ சாத்திர யுக்தமான சமயம்—'சமரச சுத்த சன்மார்க்கம்'—என்றும்** அடிக்கடி வற்புறுத்திச் சொல்லுவார்.

அங்கு இவர்கள் செய்த போதனைகளில் சில வருமாறு:—

(1) **நான்** கொடுத்த போதனைகளை, **இந்துக்கள் செவியுற்றுக் கேளாத போதிலும்,** வேதாகமங்களில் அமிழ்ந்து கிடக்கும் அந்தரங்கக் கருத்துக்களைப் பத்திரமாய் வைத்திருக்கும் **மகாத்மாக்கள்** அந்நிய நாட்டாருக்கு வெளிப்படுத்துவார்கள். அந்நிய நாட்டார் அவைகளைச் சந்தோஷத்துடன் ஏற்றுக்கொள்வார்கள்.

(2) **தற்போது,** உலகில் மேலிட்டிருக்கும் கலி **புருடனின்** விபத்துக்கேதுவான செல்வாக்கு, **இனி பத்து வருடத்திற்குள்** (கலி 5000த்துடன்) **அடங்கிப்போகும்.**

(3) **மாமிசம் உண்ணும் வழக்கம் நாளாவட்டத்தில் விட்டுப் போகும்.**

(4) **சாதி, வமிச** முதலியவைகளால் ஏற்படும் வேற்றுமையானது அடைவினில் நீங்கிப்போய், **அகிலமாம் சகோதரத்துவத்தின்** மூலக் கருத்தின் சாரத்தை ஒத்துக்கொண்டு, இந்தியாவில் **'சகோதர அறம்'** நிலைநாட்டப் பெறும்.

(5) **உண்மையில், 'கடவுள்'** எனப்படுவது **'அகிலமாம் அன்பாம்',** அஃது, உலகிலுள்ள எல்லாவற்றிலும் பரிபூரண சமாதானத்தையும், **சமரச நிலையையும்** ஏற்படுத்தி அவைகளை நிலை நிறுத்துகின்றது.

(6) **ஒவ்வொருவருக்குள்ளும்** அடங்கி யிருக்கும் **தெய்விக சத்தியை,** மானிடர்கள் தெரிந்துகொண்டதும், **இயற்கைச் சத்திகளை** மாற்றக்கூடிய அற்புத வல்லமைகளைப் பெறுவார்கள் என்பதாம்.

Koviloor Digital Library

1867-ம் ஆண்டில், இவர், '**சமரச சுத்த சன்மார்க்க சங்கம்,** என்னும் ஒரு இயக்கத்தை யுண்டாக்கினர். அகிலமாம், சகோதரத்வ மூலக்கருத்தை உலகில் நிலைநாட்டி, **வேதத்தின் சத்திய போதனைகளைப் பரவச் செய்யும் சங்கம்,** என்பது அதன்கருத்து. இஃது தியசாபி (தத்துவ ஞான) சங்கத்தின் கருத்தோடும் ஒத்திருக்கின்றது, என்று நான் சொல்லவேண்டியது அவசியமில்லை.

எமது 'சமரச சுத்த சன்மார்க்க சங்கம்' ஐந்தாறு வருடந்தான் அங்கு இருந்தது. (பிறகு உலகமுழுதும் பரவிக்கொண்டே யிருக்கிறது) அதுபோது, அநேக ஏழைகளுக்கும், தேகந் தளர்ந்த பலவீனர்களுக்கும் அன்னமும், உடையும் அளிக்கப்பட்டு வந்தது.

இவர், ஐம்பத்தொரு வயதை யடைந்தபோது, தாம், உலகை விட்டுப் போவதாகச் சொல்லி, சீடர்களுடைய மனதை, ஒருவகை ஆறுதலுக்குக் கொண்டுவர ஆரம்பித்தார். சமாதியி லிருக்கப்போவதாகத், தமது விருப்பைக் காட்டினர். இவர், 1873-ம் ஆண்டில் ஆறு மாத காலமாக மன்பதை யுலகுக்குள்ள **சகோதர ஒற்றுமையைப்பற்றி** வெகு விமரிசையாகப் போதித்தார். (இவர் போதனைகளைச் சன்மார்க்க சங்கப்பதிப்பு **வேது திருமுறையில் வசனபாகங்களில்** கண்டுகொள்க)

பின்னர், அவ்வாண்டுக் கடைசியில், மூன்று மாதமாய் பிரசங்கஞ் செய்வதை நிறுத்திவிட்டு மௌனமா யிருந்தார்.

1874-ம் ஆண்டில், ஜனவரி மாதக்கடைசியில் பேசத்தொடங்கி **இனி நடக்கப்போகும் விஷயங்களை** எச்சரிகையாகக் கொடுத்தார்.

பிறகு இவர், தமது சீடர்களுக்கு **அன்பு நிறைந்த ஆசிகளைக்** கூறி, தாம் இருந்த **அக் குடிசைக்குள் விரித்திருந்த படுக்கையில் சாய்ந்து கொண்டார். (ஸ்ரீமுகவூ தைமீ 19உ புனர் பூசமும், பூசமும் கூடிய இரவு 12-மணி.)**

அவருடைய உத்தரவின்படி அதன் கதவு பூட்டப்பட்டது.

பின்னர், ஒரு வருடத்திற்குப் பிறகு, அரசாங்கத்தார் கதவைத் திறந்து பரிசோதித்ததில், அவ் வறை வெறும் அறையா யிருந்தது.

அவர், மறையுங்கால், மறுபடியும் தாம் வருவதாகச் சொன்னரே தவிர, வருங்காலம், சந்தர்ப்பம், என்பவைகளைக் குறித்து ஒன்றும் தெரிவிக்கவில்லை.

அதுவரையில், தாம், இந்தியாவில் மாத்திரமல்லாமல் **ஐரோப்பா,** **அமெரிக்கா** முதலிய நாடுகளிலும் உலக முன்னேற்றத்தைக் குறித்து வேலை செய்யப் போவதாய்த் தெரிவித்தார்.

இது ஆயிரக்கணக்கான ஜனங்களுக்கும் தெரிந்ததே யாம். இது, இவருடைய சரித்திரத்தின் மிகச் சுருக்கமாம்.

Koviloor Digital Library

இனி இவர், இந்து சரித்திரங்களிலுள்ள நல்லொழுககக் கருத்துக்களைப் பிரசங்கிப்பதிலும், அகிலமாம் சகோதர ஐக்கிய ஒற்றுமை, இரக்கம், தயவு முதலியவைகளின் கருத்தை, ஜனங்களின் மனதில் தைக்கும்படிச் செய்வதிலும் ஊக்கமாயிருந்தார். என்றாலும்;—அவர் கொடுத்த உந்நத, நல்லொழுக்கங்களை மதித்து, அபிமானித்தவர்கள் வெகு சிலரேயாவர். இதைப்பற்றிக் கடைசிக் காலத்தில் விசனமுற்று அடிக்கடி இவர் சொன்னதாவது :—

" அகில சகோதர ஒற்றுமையைப் பாராட்டும் இச்சங்கத்தில் அங்கத்தினராக வர நீங்கள் அருகரல்லர். இச்சங்கத்தின் உண்மையங்கத்தினர், இந்தியாவிற்கு வடக்கே வெகு தூரத்தில் வசிக்கிறார்கள்.

நீங்கள் நான் சொல்வதைக் கேட்பதில்லை, எனது போதனையின் கருத்தின்படி நடக்கவுமில்லை. நான் சொல்வதைக் கவனிக்க மாட்டோம் என்று திடப்படுத்திக்கொண்டீர்கள் போலும். என்றாலும், காலம் நெருங்கிவிட்டது, ருஷியாவிலிருந்தும், அமெரிக்காவிலிருந்தும், இன்னும் இதர நாடுகளிலிருந்தும் அறிவாளிகள் இந்தியாவிற்கு வந்து, இதே அகில சகோதர ஒற்றுமையின் கொள்கைகளைப் பிரசங்கிப்பார்கள்.

நான் இப்போது உங்களுக்கு, வீணில் சொல்லும், சிறந்த உண்மைகளை, அப்போது நீங்கள் தெரிந்து கொண்டு மதித்து நடப்பீர்கள். வடக்கே வெகு தூரத்தில் வசிக்கும் அம்பல சகோதரர்கள், இந்தியாவில், அநேக அற்புதங்களை நிகழ்த்தி, நமது தேசத்திற்கு அளவிடக்கூடாத நன்மைகளை விளைவிப்பதை, சீக்கிரம் நீங்கள் காண்பீர்கள் " என்பதாம்.

இவர் ஞானதிருஷ்டியில் கண்டுசொன்ன விஷயங்கள் யாவும் தவறாமல் நிறைவேறின.

மகாத்மாக்கள் வடக்கே இருக்கிறார்களென்பது இந்துக்களுக்கு நவீன கருத்தல்ல. ருஷியாவிலிருந்து, 'பிளாவட்ஸ்கி அம்மையார்' என்பவரும், அமெரிக்காவிலிருந்து, 'கர்னல் ஆல்காட்' என்பவரும் வருவதைப்பற்றி பல வருடங்களுக்கு முன்னரே அற்புதச் செய்தியாக வெளிப்படுத்தியதேயாகும்.

இந்த, தியசாபிகல் சுசைட்டி, எவர்களுடைய ஆக்ஞையின்படி ஏற்படுத்தப் பட்டதோ, அம் மகாத்மாக்களுடன், எனது குருவும் சேர்ந்தவரென்றும் எதிர்க்கமுடியாத அத்தாட்சியாக இருக்கின்றது. இதில் பல சான்றுகளிருக்கின்றன.

இங்ஙனம்

திரு அருட்பிரகாச வள்ளலார் அடிமை

தொழுவூர் வேலாயுதம்.

திருச்சிற்றம்பலம்

Koviloor Digital Library

அருட்பெருஞ்ஜோதி

திருவருட் பிரகாச வள்ளலார் திருவடி வாழ்க

திருவருட்பா

திரு அருட்பிரகாச வள்ளலார்

திவ்ய சரித்திரம்

திருச்சிற்றம்பலம்

ஆரியனார் சீர்பாதந் தாங்க அமைசிரமும்
ஆரியனார் சீர்பாட ஆம்நாவும்—ஆரியனார்
செம்மொழியே சிந்திக்கும் நெஞ்சுந் தருந்தவமே
எம்மையினும் வாழ்க இனிது.

திருவிருந்திடுந் தெய்வத்தாமரை மலர்ச் செய்ய
உருவிருந்திடும் பதமலர் உவப்பினேன் றலைக்கே
பெருவிருந்திடும் அருட்பிர காசனார் பெருஞ்சீர்
வருவிருந்திடும் வாயதே வாழிநீ டூழி.

தொழுவூர்: வேலாயுத முதலியார்.

சீராளும் வாய்மைத் திருவருட் பிரகாச வள்ளல்
பேராளும் ராமலிங்க பிள்ளைப்பே—ரேராளும்
மெய்ப் பசும்பால் வெண்ணெயுளே மேவுறுநெய் யின்பவர்தங்
கைப்புருச் சொற் சரிதங் காண்.

பொன்னேரி: சுந்தரம்பிள்ளை.

திருச்சிற்றம்பலம்

எல்லாம் ஆனவரென்றும் ஒன்றும் அல்லாதவரென்றும், சர்வ காருண்யரென்றும், சர்வ வல்லபரென்றும், எல்லாம் உடையராய்த் தமக்கு ஒருவாற்றானும் ஒப்பு உயர்வில்லாத் தனிப்பெருந் தலைவராக விளங்கும்,

Koviloor Digital Library

அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரை,

இவ்வுலகினிடத்தே, ஜீவர்கள் அறிந்து, அன்புசெய்து, அருளை யடைந்து, அழிவில்லாத சத்திய சுக பூரணப் பெரு வாழ்வைப் பெற்று வாழாமல்,—பல வேறு கற்பனைகளாற் பல வேறு சமயங்களிலும், பல வேறு மதங்களிலும், பல வேறு மார்க் கங்களிலும், பல வேறு லக்ஷியங்களைக்கொண்டு, நெடுங்காலமும் பிறந்து பிறந்து, அவத்தை வசத்தர்களாகிச் சிற்றறிவு மின்றி விரைந்து விரைந்து பல வேறு ஆபத்துகளினால் துன்பத்தில் அழுந்தி இறந்திறந்து வீண் போகின்றார்கள்.

ஆதலால், ஜீவர்கள், அவ்வாறு இறந்து இறந்து வீண் போகாமல், உண்மை யறிவு, உண்மை யன்பு, உண்மை இரக்கம், முதலிய சுபகுண ங்களைப் பெற்று, நற்செய்கை யுடையராய், எல்லாச் சமயங்களுக்கும், எல்லாமதங்களுக்கும், எல்லாமார்க்கங்களுக்கும், உண்மைப்பொது நெறி யாகி விளங்கும், சுத்த சன்மார்க்கத்தைப் பெற்றுப் பேரின்ப சித்திப் பெருவாழ்வில், பெருஞ் சுகத்தையும், பெருங்களிப்பையும் அடைந்து வாழும்பொருட்டு எல்லாம் வல்ல உண்மைக் கடவுள், தாமே திரு வுள்ளங்கொண்டு சோணாட்டில், சிதம்பர தலத்திற்கு அணித்தாய திரு மருதூர்ப்பதியில், திரு அவதாரஞ்செய்து, திருவருட்பா என்னும் தெய்வச் சமரச வேதத்தை இயற்றியருளி, இவ்வுலகின் கண்ணே சிதம்பரம்—இராமலிங்கபிள்ளை என்னும் பிள்ளைத் திருநாமம் பூண்டு, திரு அருட்பிரகாச வள்ளலாய் விளங்கி, முத்தமிழ் வல்ல ஞானசாரியர், சுத்த சன்மார்க்கப் போதகாசாரியர், சமரசவேத சன்மார்க்க சங்கத் தாபனசாரியர், திருவருட்பெருஞ்சித்தர், ஓதா துணர்ந்தார் என்னும் காரணப் பெயர்களைப் பெற்று, 'இக்காலந் தொடங்கி அளவு குறிக்கப்படாத நெடுங்காலம், அளவு குறிக்கப்படாத அற்புத சித்திகளெல்லாம் யாமே இருந்து விளையாடுகின்றோம்' என்னும் திருக்குறிப்பை யுணர்த்தி அருட்பெருஞ்ஜோதி சொரூபராய், ஈரேழு பதினான்கு உலகங்களிலும் உள்ளவர்கள் யாவரும், ஒருங்கே, 'இஃது என்னே! இஃது என்னே!' என்று அதிசயிக்கும்படி திருவுருக்கரந்து, இற்றைக்கும் நம்புமடியார்களுக்குத் தோன்றாத் துணையாக அங்கை நெல்லிக்கனிபோல் விளங்கிக்கொண்டு, உலக முழுதும் சன்மார்க் கத்தையும், சமரசத்தையும், ஜீவகாருண்யத்தையும் தமது ஞான சத்தியால் அருளரசாட்சி செய்து கொண்டிருக்கின்ற ஞான பானு வின் திவ்ய சரித்திரம் வருமாறு:—

Koviloor Digital Library

1. பரத கண்டத்தின் பண்பு

தொன்று தொட்டுச் சீருஞ் சிறப்புஞ் சிறந்து விளங்கும் இந் நாவலந்தீவில் மண்ணாசை, பொன்னாசை முதலான அநித்தியப் பொருள்கள் பல்வகையாகி மாயா மயமான நவ நவமாய பல்வகை யின்பங்கள் நிறைந்துள்ளதுவாகி, உலகியலுக் கொத்தவாறு வைதீக இலௌகீக முதலாய கருமங்கட்கேற்ப அனுபவித்தற்கிடமாய போக பூமியாகி, விண்ணவரும் மண்ணவரும் பல பிறவி யெடுத்தெடுத்து இளைத்திளைத்து இடர்க்கடல் நீந்தி, முத்தியின்பக்கரையை யடைய அவதரித்தற்கிடமாகி, பர அபர ஞானத்திற்குரிய பல ஞான சாத்திரங்களை வரைந்து, யுத்திபுத்திக்குப் பொருந்தத் தார்க்கிக லட்சணத்துடன் தர்க்கித்து, ஞானவான்களென்று மற்றைய கண்டத்தவரால் மதிப்புற்ற மகான்கள் வதிதற்கிடமாகி ஒளிர்கின்றது இப்பரதகண்டம்.

2. சோழ நாட்டுச் சீர்மை

இத்தகைய சிறப்பு வாய்ந்த இக்கண்டத்திலே, காட்டரண், மலையரண், நீரரண் முதலிய காப்புக்களுடன், நெய்தல், முல்லை, மருதம், குறிஞ்சி, பாலை முதலிய ஐவகை நிலங்களும் மலிந்து செழித்திருப்பதும்;—தவத்தர், முனிவர் முதலியோர் வசிக்கும் இடங்கள் செறிந்து எக்காலத்தும் நீர்வளம், நிலவளம், குடிவளம் நிறைந்து, பார்ப்போர் கேட்போராய மக்கட்கு மனக்களிப்பை விளைத்துப் பூமகளுக்கோர் திலகம் போன்றதாய், எங்கும் சிவமணங் கமழ்ந்து, பத்தி, ஆசாரம், ஊக்கம் முதலியவற்றில் மேம்பட்டுக் குறையாச் செல்வத்தோடு கூடி விளங்குவதும்;—மாரிக் காலத்தும் கோடை காலத்தும், செழுமை கலந்து கரைபுரண்டு முத்து, சந்தனம், யானைமருப்பு, கரும்பு மூங்கில் முதலியவற்றை இரு கையாலும், ஏற்றுக்கொள்வோர் தரத்திற் கேற்றவாறு பார்த்து, அளித்துக்கொண்டு இருமருங்குந் தெய்வத் தலங்கள் சூழும் பெருமைபெற்று மிக்க புனிதத் தீர்த்தமாய பொன்னி, காவிரி எனப் பல பெயர்கள் வாய்ந்த தெய்வநதி பாய்ந்து வளம் பெருக்க விளங்குவதும் சோணாடு என்னும் சோழ நன்னாடாகும்.

3. தில்லைவனத்தின் சிறப்பு

அத்தகைய நாட்டில், ஆன்மாக்கள் உய்வான் வேண்டி எல்லாம்வல்ல முழுமுதற் செழும்பொருளாகிய அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர், சிவபெருமான் உருவுடன் திருக்கோயில் கொண்டெழுந்தருளி யிருக்கின்ற தலங்கள் பல உள. அப்பலவற்றுள்ளும் சிறப்புடைய திருவாரூர், திருவானைக்கா, திருவண்ணாமலை, திருக்

Koviloor Digital Library

காளத்தி, சிதம்பரம் என்னும் பஞ்ச பூதத் தலங்களினுள்ளும், சர்வ ஆன்மாக்களுக்கும் பொதுவாய், பூமிக்கு இருதய கமலமாய்க், காணுந்தோறும் காணுந்தோறும் புதுமை யுடையதாய்த், தன்னைத் தரிசித்தவர்களுக்கு ஞானனந்தத்தைத் தோற்றுவிக்கும் பெருமை யுடையதாய்ச், சர்வத்திற்கும் இடங் கொடுப்பதாய், எப்பொழுதும் எல்லா பாதத்திலும் விளங்கும் ஞானமாகிய சபையாய், சிவசொருப மாய், சத்தாகிச் சித்தாகி இன்பமாகிச் சதா நிலேயாய் எவ்வுயிர்க்கும் சாக்ஷியாகித் தெய்வ முழுவயிரத் தனிமணியாய்ப் பிரகாசிக்கின்ற திருச் சிற்றம்பலமாய், மகாதேவனது ஆனந்தத் தாண்டவத்திற்கு அதிட்டானமாய் விளங்குவது தில்லேவனம் என்னும் சிதம்பரத் திருத் தலமாம்.

4. திரு மருதூர் மாண்பு

இத்தெய்வப்பதியின் வடமேற்கில், காத தூரத்தில், ஐந்திணை சேரத் தமிழின் துறை நுகர்ந்து, புறத்துறையின் வந்த பொருளவை கொண்டு செய்வன செய்மாக்கள் மலிந்து பல வளங்களுடன், சிறந் தோங்கும் திரு மருதூர் என்னும் ஓர் தெய்வத் திருப்பதியுள்ளது.

5. இராமையபிள்ளை—சின்னம்மையார்

அத்திரு மருதூர்ப்பதியின்கண் வசிப்பவராய், அன்பு, அறிவு, இரக்கம், ஈஸ்வரபத்தி முதலிய நற்குணங்களாற் சிறந்தவராய், கல்வி கேள்விகளில் வல்லவராய், கருணீகருல திலகராய்ச் சிவத்தொண்டும், சிவத்தியானமும் கனவிலும் மறவாத தூய சித்த முடையவராய்ப், பல வகை யறங்களையும் வளர்ப்பவராய், நிராமயனை மறவாதவராய்த், தெளிந்த சித்தம் உடையவராய்ச், சிவனடியார்களுக்கும் ஆதரவற்ற ஏழைகளுக்கும் அமுதுபடைக்கும் அன்புநிறைந்தவராய்— இராமையபிள்ளை என்னும் பெயருடைய ஓர் பெரியாரிருந்தார். அவர் இல்லறம் நடத்திவரும் நாளில் மனைவியர் ஐவர், ஒருவர் பின் னொருவராக மணந்து அரனடி யடைந்தனர். எனினும், தமது அற வொழுக்கம் தவறாது நடக்கும் பொருட்டுப், பொன்னேரிக் கடுத்த சின்னகாவணம் என்னும் கிராமத்து நந்தாமணி விளக்காய், கற்பிற் சிறந்தாராய், பொறையில் பூமகளாய்,

> தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழு தெழுவாள்
> பெய்யெனப் பெய்யு மழை.
>
> தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற
> சொற்காத்துச் சோர்விலாள் பெண்.

என்னும், பொய்யாமொழிக்கு இலக்காகித், திருவாகுஞ் சின்னம்மையே

Koviloor Digital Library

உருவாக வந்து அத்திருநாமமே கொண்டாலன்ன சின்னம்மை, யென்னும் பொன்னம்மையார் ஆருந்தாரமாய் அமைய, அவ்வம்மையாரும், இராமைய பிள்ளையாரும்,

இல்வாழ்வா னென்பான் இயல்புடைய மூவர்க்கும்
நல்லாற்றின் நின்ற துணை.

தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தானென்றாங்கு
ஐம்புலத்தா றோம்பல் தலை.

என்னுந் திருவாக்குகளுக் கேற்ப உடலுயிர் போன்று இருவரும் பிரியா அன்பினராய், நல்லறமாகிய இல்லற வழியிலேயே தமது வாணாட்களை வீணாக்காது பல்லறங்களை வளர்த்து வந்தனர்.

அவ்வண்ணமாக அத்திரு மருதூரிலும், அதற்கயற் புறத்தும் உள்ளார்க்குக் கல்வி பயிற்றுவதும், மருதூர், கருங்குழி, முதலான சில கிராமக்கணக்கு வரைவதும் முதலிய உத்தமத் தொழிலிலேயே ஊதியங்கள் கொண்டு இல்லறம்வழாது, அவமாயவெல்லாம் அன்றே அழியவும், தவமாய வெல்லாந் தமைவந்தடையவும் வாழ்ந்துவரும் நம் இராமைய பிள்ளையார்,

பெறுமவற்றுள் யாமறிவ தில்லை அறிவறிந்த
மக்கட்பே றல்ல பிற. எனவும்,

எழுபிறப்புந் தீயவை தீண்டா பழிபிறங்காப்
பண்புடை மக்கட் பெறின்.

எனவும், மக்கட்பேற்றைப் பற்றிப் பெரியோர் பெரிதும் புகழ்ந்து உரையாடுகின்றனர், ஆதலால், அந்நன்மக்கட்பேறு தமக்கும் கிடைக்கவேண்டுமென்னும் உள்ளக் கிடக்கையராய்த் தினமும், திருச்சிற்றம்பல முடையானை அப்பேறு குறித்து வேண்டி வருவாராயினர்.

வருநாளில், அவர்க்கு **'எவ்வண்ணம் வேண்டுகினும் அவ்வண்ணம் இரங்கி ஈந்தருளும்'** அம்பலவாணன் அருளால், மனைவியாராகிய சின்னம்மையார் வயிற்றில் **சபாபதி பிள்ளை, பரசுராம பிள்ளை** என்னும் ஆண்மக்கள் இருவரும், **சுந்தரம்மாள், உண்ணாமுலையம்மாள்** என்னும் பெண்மக்கள் இருவரும் ஆக **நால்வர்** பிறந்தனர்.

6. சிவயோகியார் வருகை

அவ்வருஞ் செல்வரோடு பெருமிதமாக வாணாள் நடத்துங்காலை, சுமார் பத்து வருடங்கள் கடந்தபின் ஒரு பகல், திருமேனி முழுதுந் திருநீறணிந்து, புலியுரி, யோக தண்டம், யோகப்பட்டிகை மேற்கொண்டு, சிரத்துங் கண்டத்

Koviloor Digital Library

துஞ் சிவனருட் கண்மணி யணிந்து, தண்டு கமண்டல கரத்தராய்ச் சிவயோகியார் ஒருவர், தமது இல்லத்திற்கு எழுந்தருளக்கண்ட சின்னம்மையார், அவ்வருளாளரை வரவேற்று ஆதனத்திருத்தி, "புண்ணிய நீறணிந்த புனிதரே! தேவரீர் சிறியேனுடைய இச்சிறு மனையிற்றானே திருவமுதுண்டு திருவருள் பாலித்தல் வேண்டும்" எனச் சிரம் வணங்கி வேண்ட, அம்மெய்த் தவரும் அவ்வேண்டுகோட் கிணங்கி, அறுசுவை நிறைந்த உண்டியினை அம்மையார் படைக்க, அன்பொடு கலந்து உண்டு, ஆனந்த நிறைவினை யடைந்தார். அம்மெய்த்தவர் அம்மையாரின் அருங்குணங்களை அளவிலாது வியந்து கூறிப் பின்னர், அவர்க்குச் சிவபெருமானருள் போற்றித் திருநீறு கொடுத்து, "அருளம்மையே! இத்தெய்வத் திருநீற்றை யணிந்து உட்கொள்வீராக! நீர் இன்னுஞ் சில நாளில், சமரச சன்மார்க்கத்தை நிலைநிறுத்த வல்ல சற்புத்திரனைப் பெறுதற்குக் கருக்கொள்ளப் பெறுவீர்!" என்று கூறித் தம் உருவினைக் கரந்தார். அன்றே சின்னம்மையார் மணிவயிற்றில் அருட்ஜோதி புகுந்தது. உடனே, சின்னம்மையார் எல்லாந் திருவருட் செயலே என எண்ணியிருந்து தம் இன்னுயிர்த் துணைவர் வருதலும், அவர்பால், அடிகள் வந்ததும், அவ்வடிகட்குத் தாம் அன்னமளித்ததும், அவர் தனக்குத் திருநீறளித்துச் செப்பியதும், திருவுருக்கரந்ததும் தெரிவித்தார்.

அதைக் கேட்ட இராமையபிள்ளையும், பரசிவப் பிரபுவே இங்ஙனம் வந்தாரென மகிழ்ந்தும், தாம் தரிசிக்கப் பெறாததைப் பற்றி வருத்தமும் கொண்டு திருவருளைச் சிந்தித்துக்கொண்டிருந்தார்.

7. தெய்வத் தந்தையார் திரு அவதாரம்

அன்று முதல், அம்மையார் மணிவயிற்றில் கரு உண்டாயிற்று. முத்தரும் முனிவரும் முடிவணங்கும் நல் உத்தமக்கருவினை உதரந்தாங்கிய அவ்வுத்தமியாருக்கு ஓரொரு மாதங்களாகப் பத்து மாதங்களும் பரனருளதனால் கழிந்தன.

அகத்தே கறுத்துப் புறத்துவெளுத் திருந்த உலகர் அனைவரையும்
சகத்தே திருத்திச் சன்மார்க்க சங்கத்து அடைவித்திட அவரும்
இகத்தே பரத்தைப் பெற்று மகிழ்ந் திடுதற் கென்றே எனை யிந்த
யுகத்தே யிறைவன் வருவிக்க வுற்றே னருளைப் பெற்றேனே.

(திருவருட்பா—6வது திருமுறை)

என்னும் அருள்வாக்கின்படி அதுசமயம், அகத்தே கறுத்துப் புறத்தே வெளுத்துப் பொய்ந்நெறி நின்று புலம்புகின்ற இவ்வுலகி

Koviloor Digital Library

னரை, இச்சகத்தே திருத்தி மெய்ந்நெறியாம் சன்மார்க்க நெறி மேவு விக்கவும், மருட்பாடல் பாடி மயங்கித்திரியும் மாந்தர் தமக்கு அருட்பாடல் பாடி அருளமுதம் ஊட்டவும்,—கலையுரைத்த கற்பனையே நிலையெனக் கொண்டாடும் கண்மூடி வழக்கமெலாம் மண்மூடிப் போகவும்,—ஒத்தாரும் உயர்ந்தாரும் தாழ்ந்தாரும் எவரும் ஒருமையுளராகி உலகியல் நடத்தவும்,—

அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரின் அருள்வழி,

கலி 4925-சுபானு வருடம், தட்சணாயனம், வருஷ ருது, புரட்டாசி மாதம், 21-ந் தேதி, பூர்வ பக்ஷம், துதியை திதி, ஞாயிற்றுக்கிழமை, இளஞாயிறே போன்று உதயாதி 29½-நாழிகை, மீன லக்கினம், சித்திரை நட்சத்திரம் 4 ஆங்கால் துலாராசி; (5-10-1823) கூடிய சுபதினத்தன்று நம் தெய்வத் தந்தையார் திரு மருதூர்ப்பதியிலே திரு அவதாரஞ் செய்தார்.

அப்பொழுது உலகமெங்கும் என்றுமில்லாத ஓர் பிரகாசம் உண்டாயது; தேவர்கள் பூமாரி பொழிந்தனர்; அன்பர்கள் அனைவரும் ஆனந்தம் அடைந்தனர்; இத்தினம் ஓர் சுபதினம் எனக் களித்தனர்; ஓர் பெரியார் அவதரித்தாரென ஆசி கூறினர்.

இலக்கினம்		சனி	குரு
	இராசி		அங்காரகன் கேது
இராகு			
		புதன் சந்திரன்	சுக்கிரன் சூரியன்

இந்த ஜாதகத்தை ஓர் அன்பர் கணித்து அடியில் வருமாறு பலன் குறித்துள்ளார் :—

'இந்த ஜாதகமுடையோன் சிரஞ்சீவி; இவன் உயிர்போவதில்லை; உலகனைத்தும் **வள்ளலாய்** வாழுவான்; தைரியவான்; கனதனங்கருதான், சுழுத்தி நாட்டமுடையான்; **உலகுயிரின்பால் பேரிரக்கங் கொண்டவன்;** பத்தாவது ஆண்டில் ஒன்றில் காதலனாவான்; கற்பமும், உலகத்தைத் திருத்தும் குணமும், சக்தியாலுணர்வான். முப்பதாம் ஆண்டில் **பிறப்பு இறப்பு அற்ற நிலையடை**

Koviloor Digital Library

வான். நாற்பதாம் ஆண்டில் கைவல்யஞானம் பெறுவான்; ஞானசித்தியால் ஐம்பதில் **பொன்னுடலாகிப் பொலிவான்.** இவன் ஞானவுடல் எடுத்த பெரியோன். மந்திரம், யோகம், வைத்தியம், வாதம், நூல் நுணுக்கம்—சிந்தையில் எண்ணியவுடனே எய்துவான்'.

8. பிள்ளைப் பருவம்

இராமைய பிள்ளையும், அந்நாளில் பல நல்விழாக் கண்டு, அடியார்க்கும், அன்பர்க்கும், சுற்றத்தார்க்கும், ஏழைகட்கும் **நல் விருந்திட்டு** ஆன்றோர் பலரை வருவித்து அவர்தம் முன்னிலையில் எல்லாம் வல்ல ஆண்டவரின் அருள்நினைந்து அம்மகவிற்கு **இராமலிங்கம்** எனத் திருநாமமிட்டுத் தெய்வ இன்பத்திற்றிளைத் திருந்தார்.

அன்று முதல் அத்திரு **மருதூர்ப்பதியில்** பல அற்புத நிகழ்ச்சிகள் நிகழ்ந்தன. நீர்வளஞ் சுருங்கியிருந்த **அம்மருதூரிலே** மழை பெருகி நெல் முதலிய தானிய விளைவுகள் அதிகரிக்கலாயின. நூறாண்டு வயதுடைய முதியவருங்கூட, **"என்ன இது?** புதுமையா யிருக்கிறதே! இத்துணைக் காலமாக இவ்வருடம் பெய்த மழைபோலப் பெய்ததில்லையே! தானியங்கள் விளைந்ததுபோல் விளைந்ததில்லையே!" என வியந்தனர். அப்பதியில் உள்ளார்க்கு நோய் முதலியன தலைகாட்டாது ஒழிந்தன. மாடு கன்றுகள் யாவும் செழித்து ஓங்கின. சகல ஜீவராசிகளும் சந்தோஷமாக இருந்தன. இவ்வாறு அற நிகழ்ச்சிகள் பல நிகழ்ந்தன.

திரு மருதூர்ப்பதி முழுவதும் விளைவு பெருகி மனமகிழ்ந்த குடிமக்கள் அனைவரும் இவ்வாறானமைக்குக் காரணம் யாதெனத் தோன்றாராகிப் பின்னர்த் தெளிந்து, "ஓ!, இவை நம் இராமைய பிள்ளையார்க்குப் பிறந்த நன்மகவின் பொருட்டாக நிகழ்ந்த அற்புதங்களே!" எனத் தெளிந்து ஒவ்வொருவரும் இராமைய பிள்ளையின் வீட்டிற்கு வந்து அவ்விளங்குழந்தையைக் கண்டு வணங்கிச் செல்ல ஆரம்பித்தனர். அவர்களுக்கு ஆகாத காரியங்கள் எல்லாம் ஆகத் தொடங்கின. குழந்தையைப் பார்த்த ஊரார், குழந்தையாக நினையாது, 'இக்குழந்தை குழந்தையல்ல, குழந்தை வடிவிற்றோன்றிய குமரவேளே' எனக் குதூகலமுடையவராய்க் குழந்தையினிடத்துப் பெரிதும் அன்பும் பக்தியும் செய்து இராமைய பிள்ளையையும், சின்னம்மையாரையும், 'பெற்றாலும் இவர்களைப் போலல்லவோ பேறு பெறல் வேண்டும்!' என வாயார வாழ்த்தி வரலாயினர்.

Koviloor Digital Library

9. அருட்குழந்தையின் அம்பலக் காட்சி

இராமைய பிள்ளையானவர் ஒருநாள் தமது அருமைமிக்க மனைவியாரோடும் மக்களோடும் எல்லாம் வல்ல இறைவராகிய திருச்சிற்றம்பலக்கடவுள், ஆனந்தத் தாண்டவம் பயிலும் அம்பலங்காணச் சிதம்பரஞ் சென்றார்; தமது அருமை இளங்குமரர் இராமலிங்கரைக் கரத்திலேந்திக் கொண்டே அம்பலத்தரசை வணங்கினார். அவ்வேளை அப்பைய தீக்ஷிதரென்னும் வேதியர் நடராஜப் பெருமானுக்கு கற்பூர ஆராதனை செய்தார். இராமைய பிள்ளையின் கரத்திலிருந்த இராமலிங்கராகிய குழந்தையோ, சிவகாமவல்லி மகிழ்ந்து ஒருபால் விளங்கக் கனகசபையின் கண்ணே ஆனந்த நடம் பயிலும் நடராஜப் பெருமானுடைய அருளமுதம் ஒழுகும் திருமுகத்தையும் கற்பூரஜோதியையும் காந்தவிழியால் கண்ணிமை கொட்டாது பார்த்துக் கொண்டேயிருந்து காண்போர் அதிசயிக்கக் கலகலவென்று நகைசெய்தது. அதனைக் கண்ட அப்பையதீக்ஷிதர், 'இக்குழந்தை அம்பல வாணரின் அருட் குழந்தையே' என்று வாழ்த்தி — இராமைய பிள்ளையையும் அவர் மனைவி மக்களையும் தம் இல்லத்தில் இருத்தி உபசரித்தனுப்பினார்.

10. தந்தையார் பிரிவும் — தமயனார் வாழ்வும்

ஈன்றபொழுதிற் பெரிதுவக்குந் தன்மகனைச்
சான்றோ னெனக்கேட்ட தாய்.

என்னுந் திருக்குறளுக்கிணங்க இராமைய பிள்ளை மகனைப் பெற்ற அன்றினும், இன்றே பெருமித மகிழ்வுடையராய்த் தம் ஆருயிரன்ன அருமை மகவினை அன்போடு வளர்த்து வந்தார். இவ்வாறு சில பகல் கழியவும் அவரை ஆண்டவருடைய அருளழைப்ப, அவ் வருளமுதம் அருந்துதற் பொருட்டாக அவனிவாழ்வு நீத்து அமர வாழ்வு எய்தினார். தங்களை வையத்தில் முன்னிருக்க வைக்கும் தந்தையார் விட்டுப் பிரிந்தது பற்றிப் பெரிதும் மனங்கலங்கி திருவருளால் பின்னர்த் தெளிவுகொண்டு மூத்த பிள்ளையாகிய சபாபதிபிள்ளை தம்முடைய தம்பிமாரோடும், தங்கையரோடும், தாயரோடும், தமது அன்னையா ரவதரித்த அரும்பதியாகிய பொன்னேரிக்குச் சென்று, அங்குள்ள தமது அன்னைக்கு அன்னையாராகிய பாட்டியாருடைய பாதுகாப்பில் சிலநாளிருந்து, அங்கிருந்தும் சென்னையம்பதியைச் சேர்ந்தார். சென்னையை அடைந்த சபாபதி பிள்ளை அந்நாளில் பிரபல வித்வானாக விளங்கிய உரையாசிரியர்: மகாவித்வான் காஞ்சீபுரம் சபாபதி முதலியாரிடம் அமிழ்தினு மினிய தமிழ்மொழி யதனைக் கற்றுவந்தார். சிறிது காலத்திற் கெல்லாம் அவர் அப்பெருங்கல்வியிற்

Koviloor Digital Library

சிறந்தவராகி ஓர் பாடசாலையில் ஆசிரியராக இருந்தும், ஒய்ந்த சமயங்களில் **புராணப் பிரசங்கஞ் செய்தும்** பொருளீட்டிக் குடும்பத்தைப் பாதுகாத்து வந்தார்.

11. பெருமான் ஓதா துணர்தல்

சபாபதி பிள்ளை தமது அருமைத் தம்பியாராகிய நமது இராமலிங்கப் பெருமானுக்கு ஐந்தாவதாண்டில் கல்வி பயிற்றவேண்டும் என்னும் கருத்துடையராய் **முறைப்படி வித்தியாரம்பஞ் செய்து** பின்னர்த் தாமே ஆசிரியராயமர்ந்து கற்பிக்க ஆரம்பித்தார். குழந்தைப் பருவமாயிருக்கும் இராமலிங்கப் பெருமானுர் பயபக்தியுடன் தமயனிடம் பாடஞ் படித்துக்கொள்வதுபோல் நடித்தாரே தவிர உண்மையில் பாடம் படித்தாரில்லை; ஆயினும் தமது கருத்து முழுவதும் **கந்தப் பெருமானிடமே செலுத்தி யிருந்தார். எனவே தம் தம்பியாரைத் தமது ஆசிரியரான காஞ்சீபுரம் மகா வித்வான் சபாபதி முதலியாரிடம் கல்வி பயில விடுத்தார்.**

அவரிடமும் நம் பிள்ளைப் பெருமான் ஒழுங்காகப் பாடங் கேட்பதுமில்லை, படிப்பில் கருத்தைச் செலுத்துவதுமில்லை. ஆயினும் அவர் தம் கருத்தைக் கந்தப் பெருமானுர் கழல்களில் பாமாலையாகிய பூமாலை சாத்திப் போற்றிப் புகழ்தலிலேயே செலுத்தினுர். ஒவ்வொரு நாள் மாலையிலும் சென்னையிலுள்ள **கந்தப் பெருமானுர்** ஆலயத்திற்குச் சென்று;

ஈயென்று நானெருவ ரிடநின்று கேளாத
இயல்புமென் னிடமொ ருவர்ஈ
திடுவென்ற போதவர்க் கிலையென்று சொல்லாமல்
இடுகின்ற திறமும் இறையாம்
நீயென்றும் எனைவிடா நிலையுநா னென்றுமுள்
நினைவிடா நெறியும் அயலார்
நிதியொன்றும் நயவாத மனமுமெய்ந் நிலையென்றும்
நெகிழாத திடமும் உலகிற்
சீயென்று பேயென்று நாயென்று பிறர்தமைத்
தீங்குசொல் லாத தெளிவும்
திரமொன்று வாய்மையுந் தூய்மையுந் தந்துநின்
திருவடிக் காளாக் குவாய்
தாயொன்று சென்னையிற் கந்தகோட் டத்துள்வளர்
தலமோங்கு கந்த வேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வ மணியே.

(திருவருட்பா—தெய்வமணிமாலை)

Koviloor Digital Library

முதலான பாமாலைகளைத் தொடுத்துப் பாடுவார்; இச் செயல்களை யெல்லாம் மாணவர்கள் மூலமாகவும், நேரிலும் அறிந்த மகாவித்வான் சபாபதி முதலியார், "என்ன இது! இத்துணைப் பெரிய வித்வானாக விளங்கும் நம்மாலும் பாடமுடியாத பாடல்களை இச் சிறுவன் பாடுவதென்றால் என்ன ஆச்சரியம்! இத்தகைய அருள்நிறைந்த குழந்தைக்கு நாமோ கல்வி பயிற்றுவது!" எனக் கருதிப் பாடஞ் சொல்லுதலைக் கைவிட்டு விட்டார்.

இதைக் கேள்விப்பட்ட சபாபதிபிள்ளை யவர்கட்கு ஆற்றொணாத் துயரம் உண்டாயிற்று. அருமைத் தம்பியார் தமது கருத்தின் வண்ணம் நடந்துகொள்ளாது வேறு வழியிற் செல்வது அவருக்குச் சிறிதும் பிடிக்கவில்லை. அதனால் அவர் தமது நண்பர்கள் பலரிடம் பிள்ளைப் பெருமானைப் பற்றிக் குறை கூறுவாராயினர். என்ன குறை கூறியும் பிள்ளைப் பெருமான், தமது கருத்துப்படி கல்வி பயில்வாரென்று தோன்றவில்லை. அதனால், அவருக்குச் சினம் பெரிது முண்டாக மனைவியாரை யழைத்து "நம்முடைய தம்பி இராமலிங்கம் நமது கருத்துக்கிணங்கக் கல்வி பயிலாது இந்த இளவயதில் காலத்தை வீணேபோக்குகின்றான். ஆதலால், அவனுக்கு இன்று முதலாக நம் வீட்டில் உணவும் உடையும் அளிக்க வேண்டாம்" என்று கடிந்து கூறினர். ஆனால், பிள்ளைப் பெருமான்மீது மிக்க அன்புடைய அவ்வம்மையாருக்கோ கணவனுருடைய கட்டளையின் வண்ணம் மைத்துனராகிய பிள்ளைப் பெருமானைப் பெயர்த்துவிடவுங் கருத்தில்லை. கணவருடைய சொல்லைத் தள்ளவும் மனமில்லை. இவ்விரண்டு தர்ம சங்கடங்களுக்கிடையில் அம்மையார் இடர்ப்பட நேர்ந்தது. ஆயினும் பிள்ளைப் பெருமானைக் கணவனார் கட்டளையின் வண்ணம் விட்டுவிட்டாரில்லை. கணவனாரில்லாத சமயங்களில் வீட்டின் பின்புறமாக பிள்ளைப்பெருமானை வரவழைத்து உண்டியருத்தி, உடையளித்து உபசரித்து அனுப்பிக் கொண்டிருந்தார். இவ்வாறாகப் பல நாட்கள் கழிந்துவந்தன.

ஒருதினம் தந்தையாரின் திதி வந்தது; நண்பர்கள், உறவினர், அறிந்தோர், வறியார்கள் அனைவரும் வந்திருந்தனர். அவர்களுடனெல்லாம் அளவளாவுகின்ற சபாபதி பிள்ளைக்குத் தமது அருமைத் தம்பியார்மீது கருத்துச் சென்றது. தமது தம்பியார் இல்லாததைப் பற்றிப் பெரிதும் மனம் வருந்தினர். வருந்தியாவதென்? வந்திருப்போரெல்லாம் பசியோடிருக்கின்றனர் என அவர்கட்கெல்லாம் அறுசுவையமைந்த உண்டியினை அன்போடும் ஆதரவோடும் அருத்தினர். தாமும் உண்டார்; மற்றைய எல்லோரும் உண்டு ஆயிற்று. ஆனால் சபாபதி பிள்ளையாருடைய மனைவியார் மட்டும் உண்ணவில்லை. பகற்பொழுதும் சாய்வுற்றது; மாலைக்காலமும் வந்தெய்தியது; சுமார் மாலை நான்கு

Koviloor Digital Library

மணிக்குப் புறக்கடையின் வழியே வீட்டினுள் நுழைந்தார் பிள்ளைப் பெருமான். அவர் வருகைக்காக உண்ணுது காத்திருந்த அவ் வம்மையார் அன்போடும் ஆதரவோடும் வரவேற்றுச் சில்லிட்டிருந்த உணவை யிட்டார். பிள்ளைப் பெருமானும் அதை வெறுத்துத் தள்ளாது உட்கொள்ள ஆரம்பித்தார். அதைக்கண்ட அம்மையாரின் உள்ளமுருகியது; கண்களில் ஊற்றிருப்பதை யொப்பக் கண்ணீர் பெருகிற்று. எல்லோரும் அறுசுவையோடு கூடிய உணவை சுடுகையோடு உண்டுகளிக்கத் தம் அருமை மைத்துனர் மட்டும், சில்லிட்ட உணவை உண்ணுவது தம்மாற் பொறுக்க முடியாது போகவே, அழத் தொடங்கினுர்கள். அதைக் கண்டார் நம் பிள்ளைப் பெருமான், அவருக்கும் அழுகை வந்துவிட்டது. தம்மீது அவ்வம்மையாருக்கு இருக்கும் அளவுகடந்த அன்பினை நினைந்து தாமும் அழுதார். அப்பொழுது அவ்வம்மையார் "தாங்கள் தமயனுர் சொற்படி கல்வி பயிலுவதில் கருத்தைச் செலுத்தினுல் இத்துணைத் துன்பங்களுநம் நேராவே; ஆகையால் இனியாவது தாங்கள் கல்வி பயிலுவதில் கருத்தைச் செலுத்தவேண்டும்." என அன்போடு மொழிந்தார். அடிகளும் அவ்வம்மையாரிடம் இனித் தாம் ஒழுங்காகக் கல்வி பயிலுவதாகவும், தமக்குத் தனியே ஒரு அறையினைக் கொடுக்கவேண்டுமெனவுங் கூறினுர். பொழுது விடிந்ததும் அம்மையாரும் தம் கணவனுரிடம் எல்லாவற்றையும் கூறி மேல்மாடியிலுள்ள அறையினைப் பிள்ளைப் பெருமானுருக்குக் கொடுக்குமாறு செய்தார்கள்.

12. அறுமுகன் அற்புதக் காட்சி

அறையினை* அடைந்த நம் பிள்ளைப் பெருமானுர் தெய்வ ஆராதனைக்கு வேண்டிய திருவிளக்கு, பழம், திருமலர், சாம்பிராணி வத்தி, கற்பூரம், கற்கண்டு முதலியவற்றைச் சேகரித்துக் கொண்டு அவ்வறையிலேயே திருவிளக்கை ஏற்றி, ஒரு கண்ணுடியைச் சுவரில் மாட்டி அக்கண்ணுடிக்கு மாலைசூட்டி, பழம் படைத்து, கற்பூரம் காட்டி, கண் இமைகொட்டாது அதனையே உற்று நோக்கினுர். அக் கண்ணுடியிற் சிறிது நேரத்திற் கெல்லாம் திருத்தணிகைக் கந்தப் பெருமானுர் தெய்வத் திருவுருவம் தெரியலாயிற்று. அத்தருணத்தே,

சீர்கொண்ட தெய்வ வதனங்க ளாறுந் திகழ்கடப்பந்
தார்கொண்ட பன்னிரு தோள்களுந் தாமரைத் தாள்களும் ஓர்
கூர்கொண்ட வேலும் மயிலுநற் கோழிக் கொடியும் அருட்
கார்கொண்ட வண்மைத் தணிகா சலமும்என் கண்ணுற்றதே.

*அந்த அறை:—சென்னை, ஏழுகிணற்றுக் கடுத்த வீராசாமி பிள்ளை தெரு 39-வது இல்லத்தில் இப்போதும் உள்ளது.

Koviloor Digital Library

எனப் பலவகையான பாமாலைகளைப் புனைந்து அன்று முதல், அத்திரு வுருவத்தையே உபாசிக்கலாயினர். இச் செயல் நம் பிள்ளைப் பெருமானருக்கு ஒன்பதாவது ஆண்டிலேயே நிகழ்ந்தது. நிகழ்ந்த அற்றைநாள் தொடங்கி பிள்ளைப் பெருமானுக்குத் தணிகைப் பெருமான் திருவருளால் சகல கலைகளுந் தாமாகவே விளங்கலாயின. அன்று முதல் அவ்வறையிலேயே தனித்திருந்து பாமாலைகளை இயற்றுவதும், பாடிப்பரவுவதும், யோகநிஷ்டையிலிருப்பதும் ஆகியவைகளில் பெருமானர் திளைத்திருந்தார். அக்கால அண்ணியாராகிய பாப்பாத்தி அம்மையார்—தமது வீட்டு வேலையை முடித்துக்கொண்டு வந்து அவ்வறையின் கதவருகே இருந்துகொண்டு, தாமும் அவ் வினிய பாக்களை செவிமடுத்துப் பேரின்பத்தில் பாகங்கொள்வது வழக்கம்.

13. பிரசங்க வைபவம்

சபாபதி பிள்ளையவர்கள் முத்தியாலு பேட்டையில், வாரந்தோறும் பிரசங்கஞ் செய்துவந்த சோமுசெட்டியார் வீட்டில், ஓர் தினம் நடராஜப் பெருமானர் திருவுருவம், பொன்னால் புதிதாக எழுதப் பெற்று, அதனைப் பிரதிஷ்டை செய்து அன்று திருஞான சம்பந்தப் பெருமான் சரித்திரம் சொல்ல ஏற்பாடு செய்திருந்தார். ஏற்பாடு செய்திருந்த அத்தினமே, சபாபதி பிள்ளைக்குத் தேகம் சுகமில்லாது தலைவலி சுரமாக இருந்ததால், அவர் மிகவும் அயர்ந்து தமது மனைவியாரிடம்,—"நமக்கு அதிக ஊதியம் கிடைக்குமிடமாயிற்றே, அதோடு புதிதாக நம் பெருமான் திருவுருவம் தாபிக்கும் தினம்; இத்தினத்தில் போகாமல் நின்றால் அவர் மனம் எவ்வளவு புண்படும்!" எனப் பிரலாபித்தார். அம்மையாரும் மனமயர்ந்து, திடீரென, நம்பெருமானை நினைத்துக் கொண்டு,—"இதோ வருகிறேன்",—என்று சொல்லி மாடிக்குச் சென்று திருவறையில் ஆனந்த நித்திரையில் இருந்த இளைய பெருமானைப் பணிவுடன், "இன்று உமது தமயனர் உடல் நலமின்மையால் பிரசங்கம் செய்ய இயலாதுபற்றி மிகவருந்துகிறார், தாங்கள் சென்று அந்தப் பிரசங்கத்தை நிறுத்தாது இரண்டொரு பாசுரங்களைப் படித்துவிட்டுவந்தால் நலமென வேண்டுகிறேன்" என்று கேட்டதும், அவ்வாறே செய்வதாக ஒப்புக்கொண்டார் நம் பெருமானர். உடனே அம்மையார் தம் கணவரிடம் வந்து, "கவலைப்படவேண்டாம் உங்கள் தம்பியார் போவதாக ஒப்புக்கொண்டார். தாங்கள் வருந்தற்க" என விண்ணப்பித்தார். உடனே சபாபதி பிள்ளை தம்பியை யழைத்து, "அப்பா, நீ சென்று இரண்டொரு பாடல்களைப்பாடி, தீப ஆராதனை செய்துவிட்டு, செட்டியார் அவர்களிடம் விவரம் சொல்லி, மன்னிக்குமாறு கேட்டுக் கொண்டு வந்துவிடு. சுகமே போய்வா" என்று கட்டளையிட்டு அனுப்பினர்.

Koviloor Digital Library

அக்கட்டளையைச் சிரமேற்றாங்கி, இளைய இராமலிங்கரும் செட்டியார் வீட்டிற்குச்சென்று வணங்கி, தமயனார் உடல் நலமின்மையைப் பற்றித் தெரிவித்து அவருக்குப் பதிலாகத் தாம் இரண்டொரு பாடல்களைச் சொல்வதாகத் தெரிவித்தார். செட்டியார் வருந்தி 'சும்மா விட்டுவிடாமல் இதுவாகிலும் நடக்கிறதே' என ஒருவாறு தேறி ஆரம்பிக்கச் செய்தார்.

பெருமான் தொடங்கினார் பிரசங்கத்தை—இரவு ஒன்பது மணிக்கு முடிவுபெறும் பிரசங்கமானது **பனிரண்டாவது மணிக்கு இரண்டு வரிகளே முடிவுற்றன.** பிள்ளைப் பெருமான் பிரசங்கமோ செவிக்கு இன்பமளிக்கும் அவ்வளவிலில்லை; ஊனுக்கும் இன்பமளித்தது உயிருக்கும் இன்பமளித்தது. இவ்வளவு மதுரமான இப்பிரசங்கத்தைக் கேட்ட அவ்வவையினர் அளவில்லாத ஆனந்தத்தை யடைந்தனர். அவருடைய இனிய குரலோசை எங்கும் ஒலித்து ஆங்காங்கு இருந்தவர்களும் ஆச்சரியத்துடன் ஓடிவந்து பெருங்கூட்டமாகக் கூடினர். ஆறறிவிற் குறைந்த கீழ்ப்பறவைச் சாதிகளும் அப்பிரசங்கத்தைக் கேட்டிருப்பின்,—வேட்டமுறும்; பொல்லாப் புலி, கரடி போன்ற விலங்கினங்களும்—மெய்ஞ்ஞான நாட்டமுறும் என்னில், **அருட்குமரனருள் பெற்று விளங்கும் நம் அருட்பிரகாசனார் அமுதவாக்கைக் கேட்ட** அவர்கள் அடைந்த ஆனந்தம் ஒரு **வியப்போ!**

14. தமயனார் உண்மை உணர்தல்

ஆனந்தங்கொண்ட அவ்வவையினர் பிள்ளைப் பெருமானாரே அப்புராணத்தை முடித்தருளல் வேண்டுமெனச் சபாபதி பிள்ளையை வேண்டினர். அதற்கு அவரும் இசைந்தார். எனினும் அவருக்கு ஐயந் தோன்றியது. "என்ன இது? ஒரு புதுமையா யிருக்கிறதே! நம்முடைய தம்பியோ, நாம் கல்வி பயிலவிட்ட காலத்துக் கருத்தில்லாதவனாய் அதனைப் பயிலாது பொழுது போக்கியவனாயிற்றே; அவனுடைய பிரசங்கம் எவ்வாறு இனிமை யுடையதாயிருக்கும்; இதனை நாமும் ஒருநாள் ஆராய்ந்தறிதல் வேண்டும்" என்று துணிந்து ஒருநாள் பிள்ளைப் பெருமானார் பிரசங்கம் செய்யும் இடத்தில் ஒருசார் மறைவாக வீற்றிருந்து பிரசங்கத்தைக் கேட்டார்; கேட்ட அவர்க்குப் பிரசங்கஞ் செய்பவர் "**தமது தம்பிதானா?**" என்னும் ஐயமுண்டாயிற்று.

உண்டான ஐயத்தால் மறுபடியும் உற்றுநோக்கி "தம்பியார் தான்" எனத் தீர்மானித்தார். அதன்பின்பு தெய்வத் தன்மை பொருந்திய அவரைத் '**தணிகாசலமாந் தலத்தமர்ந்த சைவமணியாம் சண்முகனே!**—தம்பியல்ல,'—என்னும் முடிவுக்கு வந்தார். உடனே தமது

Koviloor Digital Library

மனைக்குச்சென்று அருமைமிக்க மனைவியாரை அழைத்தார். "ஆருயி ரனையாய்! நான் இதுவரை நமது இராமலிங்கத்தைத் தம்பியென நினைத்திருந்தேன்; அதனால் பல தவறுகளுமிழைத்தேன். தணிகைக் குமரனே தம்பியாய் அவதரித்திருக்கிறார். இன்றல்லவோ அவ்வுண்மை யினை உள்ளவா றுணர்ந்தேன். ஓதாதுணரவல்ல அவ்வுத்தமரை ஓதிவர விடுத்தேன், ஓதாமையைக்கண்டு உள்ளங் கசந்தேன்; உணவளிக்கவும் மறுத்தேன்; உடையளிக்கவும் வெறுத்தேனே. ஐயோ! என்னுடைய அச் செய்கைகளெல்லாம் அவர் பெருமையை யறியாத உன்மத்தரின் செயல்களாக முடிந்தனவே" என்று பற்பலவாக வியந்தும் வருந்தியும் கூறித் தமது தம்பியாரைத் தெய்வமாகக் கொண்டு சீர்பெற்றுய்யுமாறு அவருக்கும் பணித்தார். அக்கட்டளையைச் சிரமேற்கொண்ட அவ்வம்மை யாரும் நம் பிள்ளைப் பெருமானா ரிடத்து அன்றுமுதல் பெரும் பய பக்தியோடு நடந்து கொள்வா ராயினர். ஆனால் அவர் செய்கை நம் பெருமானாருக்கு அருவருப்பாகவே யிருந்தது.

15. ஒற்றியூர் பெருமான் உபாசனை

செல்வ மிகுந்தோங்கும் சென்னைக்கு அணித்தாயும், ஆளுடைய நம்பி, ஆளுடைய பிள்ளையார், ஆளுடைய அரசு எனும் மூவர்களின் பாடல்கொண்ட முதுமையுடையதாயும்,—சுந்தர மூர்த்தி சுவாமிகளைச் சங்கிலி நாச்சியார் மணவாளராகக் கொண்ட மாண்புடையதாயும்,— மாணிக்கத் தியாகர், இளமைதந்த தியாகர், எழுத்தறி பெருமானார், வியாகரண ஈசுவரர் முதலாய மூர்த்திகளை யுடையதாயும்,—விளங்குவது திருவொற்றியூர்த் திருத்தலம்.

அத்தகு திருப்பதியின் சிறப்பை யறிந்த நம் பிள்ளைப் பெருமான் நாள்தோறும் மகிழ்வோடு அத்தலத்திற்குச் சென்று, ஆங்கு எழுந்தருளி யிருக்கும் எழுத்தறி பெருமானும் தியாகப் பெருமானுக்கு அருட்பா வெள்ளத்தால், உள்ளங்குளிர இன்பநீராட்டினர்.

சிந்தை மயங்கித் தியங்குகின்ற நாயேனை
முந்தை வினைதொலைத்துஉன் மொய்கழற்கா ளாக்காதே
நிந்தையுறும் நோயால் நிகழவைத்தல் நீதியதோ
எந்தைநீ யொற்றி எழுத்தறியும் பெருமானே.

பூமாந்தும் வண்டென நின் பொன்னருளைப் புண்ணியர்கள்
தாமாந்தி நின்னடிக்கீழ்ச் சார்ந்துநின்று ரையோநான்
காமாந்த காரமெனுங் கள்ளுண்டு கண்மூடி
ஏமாந்தே னொற்றி எழுத்தறியும் பெருமானே.

Koviloor Digital Library

மன்னு ருத்திரர் வாழ்வைவேண் டினையோ?
மால வன்பெறும் வாழ்வுவேண் டினையோ?
அன்ன வூர்திபோ லாகவேண் டினையோ?
அமையு மிந்திர னாகவேண் டினையோ?
என்ன வேண்டினுந் தடையிலை நெஞ்சே!
இன்று வாங்கிநா னீகுவ னுனக்கே
வன்னி யஞ்சடை யெம்பிரா னொற்றி
வளங்கொ ளூரிடை வருதியென் னுடனே.

என்பனவாகிய பல அருமைப் பாடல்களைப் பாடி வருவாராயினர். (**இரண்டாந் திருமுறை முழுதும் கவனிக்கவும்**) ஆங்கு எழுத்தறி பெருமானுருடைய பிராகாரத்தில் எழுந்தருளி யிருக்கும் முருகப்பெருமானிடம் நின்று நெடுநேரம் தியானிப்பது வழக்கம்.

16. நூலாசிரியரானது

இங்ஙனமாகத் திருவொற்றியூர்த் தியாகராய வள்ளலைத் தினமுந் தொழுது திருவருளுடையாராய்த் திகழும் பிள்ளைப் பெருமானைச் சூழ்ந்திருந்த பல வித்வான்களுள் அந்நாளிலிருந்த **காஞ்சீபுரம் மகாவித்வான் சபாபதி முதலியார்** என்பவர், சுவாமிகளின் ஆற்றலை நன்கு அறிந்தவராதலால், 'அவர் திருவாக்கால் ஓர் உரைநடை வெளிவரவேண்டும்' என்னும் எண்ணங்கொண்டு, சிறுவர்கள் படித்தற்கு அரியதொரு நூலை ஆக்கிக்கொடுக்க வேண்டுமென வேண்ட, அவரின் வேண்டுகோட் கிணங்கி, நம் அருட் பிள்ளையாரும், பெரிய புராணத்துள்ள மனுவெனும் வேந்தனுடைய அருமைச் சரிதத்தை **'மனுமுறை கண்ட வாசகம்'** என்னும் பெயரோடு உரைநூலாகப் பண்டிதரும், பாமரரும் படித்துணர்ந்து, பயன்பெறத்தக்க நிலையில் மிக அழகாகச் **செந்தமிழ்ச் சுவைசெறிய, நவரசம் ததும்ப, கல்லுங் கரைய, ஜீவதயவு விளங்க,** எழுதிக் கொடுத்தார். அந் நூலைப் படித்துப் பார்ப்போருக்கு அதன் அருமை மிக நன்கு விளங்கும். காஞ்சி-மகா வித்வான் சபாபதி முதலியாரும் அந்நூலைப் பெரிதும் புகழ்ந்துரையாடி அதனைப் போற்றிப் படித்துப் புண்ணியம் பெறுமாறு மற்றையோருக்கும் அறிவுறுத்தி வந்தார். அந்நூலை வாங்கிப்படித்து அருட்பிள்ளையாரின் அருமையையும் பெருமையையும் உணர்ந்து கொண்டு அவர்களின்மீது அன்பு செலுத்தத் தலைப்பட்டவர்கள் அநேகர்.

17. தொண்டமண்டலமா? தொண்டைமண்டலமா?

அவ்வநேகருள் சென்னைமா நகரிலிருந்த புலவர்களும் பலர். ஆதலால் அவர்களுள் நிகழ்ந்த ஓர் ஐயத்தினை, அருட் பிள்ளையாரி

Koviloor Digital Library

விடத்துத் தீர்த்துக் கொள்ளுவதென அனைவரும் ஒருங்குகூடி முடிவு செய்துகொண்டு, பெருமானிடத்து வந்து தங்களின் ஐயத்தை அகற்றி உண்மையை விளக்க வேண்டுமென வேண்டினர். அதற்கவர்களும் இசைய, "அருள்வலியுடைய ஐயா! அடியேங்கட்குத் **தொண்ட மண்டலமா? தொண்டை மண்டலமா?** என்னும் ஐயம் நேர்ந்திருக்கிறது. அதனைத் தாங்களே விளக்கியருளல் வேண்டும்" என்று வினயத்தோடு வேண்டினர். அவர்கள் வேண்டியாங்கு, ஒல்காப் பெரும்புகழ்த் **தொல்காப்பியம்** முதலாய பேரிலக்கண நூல்களின் சான்றுகளைக் கொண்டும் பிற இலக்கியங்களைக் கொண்டும் "**தொண்ட மண்டலம்**" எனவே வழங்கல் வேண்டுமென எவரும் ஏற்றுக் கொள்ளும் வண்ணம் சென்னை, தங்கசாலைவீதி 361-வது எண்ணுள்ள **தொண்டமண்டலம் துளுவ வேளாளர் உயர்தரக் கலாசாலையில்** நிரம்பிய அறிஞர்கள் அவையில், எடுத்துரைத்தனர். அப்புலவர்களும் அவ்வுண்மைச் சமாதானத்தை முகமலர்ச்சியோடு ஏற்று, அவ்வாறே அதனை வழங்கத் தொடங்கினர். **தொண்டமண்டலம் துளுவ வேளாளர் இயற்றமிழ்ப் போதகசாலை** இரட்சகக் கர்த்தாவாகிய **கொண்ணூர் ஐயாசாமி முதலியாரவர்கள்** அவ்வாறு பிள்ளைப் பெருமான்-**தொண்டமண்டலம்** என்று வழங்குவதே முறை என்று நிறுவிய பேருரையைப் புத்தக வடிவமாக்கித்தரப் பெருமானை வேண்டினர். பெருமானும் வேண்டியபடியே அவ்வுரையினைப் புத்தகமாக்கித் தந்தார்கள். அதுவே '**தொண்டமண்டல சதகம்**' என்னும் நூல். இதனைத் திருவருட்பா—வசனபாகத்தில் காண்க.

தொண்டமண்டல சதகமென்னும் அந்நூலிற்குக் காஞ்சீபுரம்-மகா வித்வான் சபாபதி முதலியாரும், புரசை-அஷ்டாவதானம் சபாபதி முதலியாரும், விருத்தாஜலம்-தியாகராஜக் கவிராயரும், புதுவை-சுப்பராய முதலியாரும், மற்றுமுள்ள அக்காலத்திருந்த பெரும் புலவர்களும் **சாற்று கவி** யளித்தார்கள்.

இந்நூல் வெளியீட்டிற்குப் பின், பிள்ளைப் பெருமான் "**ஒழிவிலொடுக்கம்**" என்னும் உயரிய நூலின் **சிறப்புப் பாயிரமாகிய** ஒரு பாட்டிற்கு மட்டும் ஒரு அரிய பேருரை எழுதி அனைவரும் அந்நூலின் கருப்பொருளை உள்ளவாறுணருமாறு வெளியிட்டார்கள். இதனையும் திருவருட்பா—வசனபாகத்தில் காண்க.

இதுவரையில் பெருமான் சிவநேசவெண்பா, நெஞ்சறிவுறுத்தல், மகாதேவ மாலை, இங்கித மாலை முதலிய விழுமிய பொருள்களையுடைய பாமாலைகளையும் **இரண்டாந் திருமுறையையும்** திருவாய் மலர்ந்தருளினார்கள்.

Koviloor Digital Library

18. மாணவர் தொழுவூர் வேலாயுத முதலியார்

இவ்வண்ணமாகப் பல அரும்பெரும் பாடல்களைக் கருணை மேலிட்டால் உலகோருய்யும் வண்ணம் திருவாய் மலர்ந்து வருகின்ற நம் பிள்ளைப் பெருமானுடைய பெருமையை யுணராதிருந்த, தொழுவூர் வேலாயுத முதலியார் என்னும் செந்தமிழ் வித்வான், மிகக் கடினமான நடையில் நூறு சிலேடைப் பாட்டுகளைப்பாடி, "இப்பாடல்கள் பழைய ஏட்டுச் சுவடியிலிருந்து தமக்குக் கிடைத்தன" வென்றும், அவைகளைச் 'சங்க காலத்துப் புலவர்கள் பாடினார்' என அவ்வேட்டில் குறிக்கப்பட்டிருக்கின்றது என்றும் நம் பிள்ளைப் பெருமானிடங் கொண்டுவந்து காட்டினர்.

மூன்று காலங்களையும் உணரவல்ல நம் பிள்ளைப்பெருமான், 'இப் பாடல்களைப் பாடியவர் இவரேயாகல் வேண்டும்' என்பதை உணர்ந்து, 'இவர்க்குள்ள முனைப்பை யொழித்துச் சன்மார்க்கத்தில் இவரைத் திருப்பவேண்டும்' எனத் திருவுளத் தெண்ணியவராய், "அப்பா! இப் பாடல்கள் பொருளிலக்கணந்தேருக் கற்றுக்குட்டி பாடியவை; சங்கப் புலவர் பாடியவை யல்ல; அவர்கள் பாடி யிருப்பரேல் இவ்வளவு பெரும்பிழைகளிரா" என்றுங் கூறினர்.

அவ்வுரைகளைக் கேட்ட தொழுவூர் வேலாயுத முதலியார், பெருமானுடைய ஆற்றலைக்கண்டு உள்ளம் நடுங்கி தம்முடைய முனைப்பை இழந்து, அப்பொழுதே பிள்ளைப் பெருமானரின் அடி பணிந்து, தம்மை மன்னித்து, ஆட்கொண்டருளல் வேண்டுமென வேண்டினர். பெருமானும், முதலியார் பரிபக்குவ நிலையை யுணர்ந்து, 'புதியவ னல்லன், பழையவன்றான்—நம் பிள்ளை நமக்கே கிடைத்தான்'—எனத் தேறுதல்கூறி ஆட்கொண்டார். அன்றுமுதல் அவரைத் தலை மாணவராகக் கொண்டு, அவர்க்குத் தமிழ்மொழி நூல்களில் ஏற்பட்ட ஐயங்களை அடிக்கடி அகற்றியும், அவ்வவற்றின் உண்மைப் பொருள்களை உணர்த்தியும், ஆரியமொழி நூல்கள் பலவற்றைப் போதித்தும் வந்தார்கள். அடிகளின் திருவருளுக் கிலக்காகிய நாள் முதலாக அம் முதலியாருக்குக் கல்விப் பெருக்கம் முன்னையினும் பன்மடங்கு அதிகமாக, அதனல் அவருக்குப் பிரபலமான பேரும் புகழும் உண்டாயின. அதோடு நம் பிள்ளைப் பெருமானர், அம் முதலியாருக்குக் குமரவேள் திருவருள் உபாசனையையும் உபதேசித்தருளி, 'உபய கலாநிதிப் பெரும் புலவர்' என்னும் பட்டமு மளித்தார்கள்.

பிறகு, சென்னை — நரசிங்கபுரம் — வீராசாமி முதலியார், பொன்னேரி-சுந்தரம் பிள்ளை, ஸ்ரீநிவாச வரதாச்சாரியார், ஞானசுந்தர ஐயா,

Koviloor Digital Library

கிரியா யோக சாதகராய பண்டார ஆறுமுக ஐயா* முதலியோரும் பெருமானாரின் சிறந்த மாணவர்களானார்கள்.

பின்னர், தமிழ் நாட்டில் எங்குமுள்ள பண்டிதர்களும், தம்பிரான் முதலியோரும், பெருமானாரின் பெருமையைக் கேட்டுத், தங்கட்கு ஏற்படும் ஐயங்களையும் வந்து கேட்டுத் தெளிந்து செல்வார்களானார்கள்.

இப்படியாகப் பெருமானார், சென்னையம்பதியிலும் பிற ஊர்களிலுமுள்ள அநேகருக்கு அவரவரின் பக்குவ நிலைக்கேற்றவாறு, அறிவு கொளுத்தி, அளவிலாப் புகழுடன் விளங்கிவந்தார். அந் நாளிலுங்கூட நகரத்திலிருக்கும் அவ்வாழ்க்கை தமக்குப் பிடியாது, பல வேளைகளில் சென்னைக்கு வெளியிலே தனிமையாகச் சென்று விடுவார். சென்று, ஆங்குள்ள மண்மேடுகளிலும், சிறு குன்றுகளிலும் அமர்ந்து **உள்ள நிறைவினை—உண்மை நெறியினை—ஒருமைப் பாட்டினைக்** கடைப் பிடிப்பார். அவ்வளவோடு மட்டுமில்லை, இரவு வந்து விடின் அம் மண்மேடுகளிலேயும், குன்றுகளிலேயும் இருந்துவிடுவார். இதனை நம் பெருமானாரே,

> **தேட்டிலே மிகுந்த சென்னையி லிருந்தால் சிறுகுறும் என்றுளம் பயந்தே**
> **நாட்டிலே சிறியவூர்ப் புறங் களிலே நண்ணினேன் ஊர்ப்புற மடுத்த**
> **காட்டிலே பருக்கைக் கல்லிலே புன்செய்க் களத்திலே திரிந்துற்ற இளைப்பை**
> **ஏட்டிலே யெழுத முடியுமோ இவைகள் எந்தைநீ யறிந்தது தானே.**

என்றெடுத் தோதுமாற்றாற் றெளியலாகும்.

19. பெருமானாரின் திருவிளையாடல்கள்

இவ்வாறிருந்து வரும் நாளில், ஓர் நாள் இரவு, சென்னை இலக்ஷ்மண பிள்ளையும், **திருமழிசை கந்தசாமி** முதலியாரும் தொடர்ந்துவரப் பெருமானார் திருவொற்றியூருக்குச் சென்று கொண்டிருந்தார். அப்பொழுது இடையில் ஒரு மோகினி வந்து பின் வந்த இருவரை மாத்திரம் வழிமடக்கியது. அது கண்ட நம் பெருமான் "**பிச்**" என்று கூற, உடனே அது அவ்விடத்தை விட்டு மறைந்து போயது.

மற்றொருநாள், தம்முடைய மாணவர்கள் பலரும் தம்மைச் சூழ்ந்துவரத் திருவொற்றியூருக்குச் செல்லும்போது, இடைவழியில் மழை வந்தமையால் பெருமானார் குறுக்கு வழியாக ஓர் சந்துவழியில் நுழைந்து ஒரு கணத்தில் திருவொற்றித் தலத்தை அனைவரும் அடை

*பண்டார ஆறுமுக ஐயா அவர்கள் பெருமானிடம் விநாயக புராணம் முழுதும் பாடம் கேட்டவர்.

Koviloor Digital Library

யும்படி செய்தார். அக்கூட்டத்தில் சோமு செட்டியார் முதலிய அன்பர்களும் இருந்தனர்.

அன்றிரவு தரிசனம் முடிந்தபின், மழையினால் வெளிவர முடியாமல், வாகன மண்டபத்திலேயே தங்க நேர்ந்தது. அதனால் அனைவரும் பசியினால் வருந்த, **வடிவாம்பிகை** சன்னிதிக்குச் சென்று அம்மையார் திருவருளால் **அனைவருக்கும் அன்னமளிக்கப்பட்டது.** பெருமான் அன்னையார் கருணையை நினைந்து **'வடிவுடை மாணிக்க மாலை'**யைத் திருவாய் மலர்ந்தருளினார்கள்.

> தீதுசெய் தாலுநின் னன்பர்கள் தம்முன் செருக்கிநின்று
> வாதுசெய் தாலுநின் னுண்மறந் தாலு மதியிலியேன்
> ஏதுசெய் தாலும் பொறுத்தருள் வாயொற்றி யின்னிடைப்பூ
> மாதுசெய் தாழ்குழன் மானே **வடிவுடை மாணிக்கமே.**

[அக்காலங்களில் ஒற்றியூருக்குச் செல்லும் வழி தகுந்த பாதையின்றி மணல் வெளியாகவே யிருந்ததால் தரிசனார்த்தமாகப் போய் வருவதே கஷ்ட சாத்தியமாகும்.]

பெருமான் ஒருநாள் ஒற்றியூர் சென்று தரிசித்தபின் அன்றிரவு ஒரு சத்திரத்திலேயே தங்கி அயர்ந்தபோது, ஒருவர் குருக்கள்போல வந்து அன்னமளித்துச் சென்றார். பின்னர் குருக்கள்தானா? என்று விசாரித்தபோது அவர் வெளியூர் சென்று இரண்டு நாளாயிற்று எனத் தெரிந்தது. தியாகப் பெருமானே குருக்களாக வந்து அன்னமளித்ததாகத் தெரியவந்தது.

பின்னொருநாள், ஒற்றியூர்ப் பெருமானைத் தரிசித்து விட்டுப் பெருமானார் ஓரிடத்தில் படுத்திருக்க, அதனை யறிந்த **கள்வனொருவன்,** இவரருகில் வந்து **வலது காதிலிருந்த கடுக்கனைக் கழற்றினான்.** அதனை யறிந்துகொண்ட பெருமானார், அறியாததுபோலவே யிருந்து **தமது இடது காதினையும் திருப்பிக் காட்ட** அக்கள்வன் இடக்காதிலுள்ள கடுக்கனையும் கழற்றிச் சென்றான்.

20. வைணவப் பிரசங்க வன்மை

இங்ஙனமாக அருட்பெருஞ்ஜோதி ஆண்டவனார் அருளமுதமாந்தி—அருள் விளையாட்டயரும் நம்பெருமானை, ஒருகால் சில வைணவர்கள் தம்முடைய சமயச் சார்பாக ஏதாவது அரும்பொருள்களைப் பற்றிய உபந்நியாசமொன்றைச் செய்தருளித் தங்களை உய்விக்கவேண்டுமென வேண்டினர். பெருமானாரும் அவர்தம் விருப்பிற்கிணங்கி, அச்சமயச் சார்புடைய **'குரு பரம்பரை பிரபாவம்'** என்னும் அரிய நூலினை விளக்கிப் பலவகை வைணவப் பிரபந்தங்களின் மேற்கோள்

Koviloor Digital Library

களுடன் எடுத்துரைத்து அவர்களுள்ளத்தைக் களிப்பித்தனர். அந்நாளிலிருந்து வைணவர்கள் அனைவரும் நம்பெருமான் சைவ சமய உண்மைகள் மட்டும் அறிந்தவர் என்று கொண்டிருந்த எண்ணத்தை அறவே விடுத்தார்கள்.

21. பொருள் நயவாமை

நம் பெருமானுருக்குப் பொருள் விருப்பு ஒரு சிறிதுங் கிடையாது. அதனிடத்திலிருக்கிற வெறுப்பு மிகுதியினுல், அப்பொருளுடையார்பால் அணுகுவதையும் அவர்கள் வெறுத்திருந்தார்கள். அவ் வுண்மையினை,

பொருளிலே யுலகம் இருப்ப தாதலினுல் புரிந்துநாம் ஒருவர்பாற் பலகால்
மருவினுற் பொருளின் இச்சையால் பலகால் மருவுகின் ருனெனக் கருதி
வெருவுவ ரெனநான் அஞ்சி யெவ்விடத்தும் மேவிலேன் எந்தைநீ யறிவாய்
ஒருவு மப்பொருளை நினைத்தபோ தெல்லாம் உவட்டினேன் இதுவுநீ யறிவாய்.

பணத்திலே சிறிதும் ஆசையொன் றிலைநான்
படைத்தஅப் பணங்களைப் பலகால்
கிணற்றிலே யெறிந்தேன் குளத்திலும் எறிந்தேன்
கேணியி லெறிந்தனன் எந்தாய்!
குணத்திலே நீதான் கொடுக்கின்ற பொருளை
யெறிகலேன் கொடுக்கின்றேன் பிறர்க்கே
கணத்திலே யெல்லாங் காட்டுநின் னருளைக்
கண்டன னினிச்சொல்வ தென்னே.

சடமாகி யின்பந் தராதாகி மிகுபெருஞ்
சஞ்சலா கார மாகிச்
சற்ருகி வெளிமயற் பற்ருகி ஒடுமித்
தன்மைபெறு **செல்வம்** அந்தோ
விடமாகி யொருகபட நடமாகி ஆற்றிடை
விரைந்து செலும் வெள்ளமாகி
வேலையலை யாகிஆங் காரவலை யாகிமுதிர்
வேனிலுறு மேக மாகிக்
கடமாய சகடமுறு காலாகி நீடுவாய்க்
காலோடு நீரா கியே
கற்பிலா மகளிர்போற் பொற்பிலா துழலும்இது
கருதாத வகைய ருளுவாய்
தடமேவு சென்னையிற் கந்தகோட் டத்துள்வளர்
தலமோங்கு கந்த வேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வ மணியே.

Koviloor Digital Library

என்னும் அருமைப் பாடல்கள் செல்வ நிலையாமையை மிக அழகாக விளக்கிக் காட்டுகின்றன. இவ்வண்ணம் பொருளிச்சையை வெறுத்திருக்கும் நம்பெருமானுக்குச் சென்னையிலிருந்த சோமு செட்டியாரும் இன்னும் பல பொருளாளர்களும் தங்கள் தங்கள் வீடுகளில், பெருமானார் பிரசங்கங்கள் புரிவதற்குப் பிரதியாகப் பொருள் கொடுப்பார்கள். அதை இவரும் வாங்குவார்போல வாங்கிச் சிறிது தூரம் வந்ததும் ஓட்டின் மேலும், தெருவிலுமாக எறிந்துவிடுவார். இந் நிகழ்ச்சியை அறிந்துகொண்ட அச்செல்வர்கள், பொருளைப் பெருமானிடங் கொடாது மூத்தவராகிய சபாபதி பிள்ளையினிடஞ் சேர்ப்பித்து விடுவார்கள். பெருமான் சிறுபோதுமுதல் உலகபோகங்களை துச்சமாகக் கொண்ட பெரியார் என்றும், செம்பாகமாகப் பாடும் செந்நாப்புலவர் என்றும் அடக்கமே பொருளெனத் தேர்ந்த அருளாள ரென்றும் பலர் அதிசயித்த உணர்வினராய்ப் பழகிவந்தனர்.

பெருமான் சிறுவயதில் நடந்து கொண்ட முறைகளைக் கீழ்க்கண்ட பாடல்களே தெளிவாக விளக்கும்.

கையுற வீசி நடப்பதை நாணிக் கைகளைக் கட்டியே நடந்தேன்
மெய்யுறக் காட்ட வெருவி வெண்துகிலால் மெய்யெலா மையகோ மறைத்தேன்
வையமேற் பிறர்தங் கோலமு நடையும் வண்ணமு மண்ணலே சிறிதும்
பையநா னூன்றிப் பார்த்ததே யில்லை பார்ப்பனேல் பயமிகப் படைப்பேன்.

காட்டுய ரணைமேலிருக்கவும் பயந்தேன் காலின்மேற் கால்வைக்கப் பயந்தேன்
பாட்டயல் கேட்கப் பாடவும் பயந்தேன் பஞ்சணை படுக்கவும் பயந்தேன்
நாட்டிய வுயர்ந்த திண்ணைமேலிருந்து நன்குறக் களித்துக்கால் கீழே
நீட்டவும் பயந்தேன் நீட்டிப் பேசுதலை நினைக்கவும் பயந்தன னெந்தாய்.

22. மக்களைப் பாடாத மாண்பு

கந்தசாமி முதலியாரென்பார் தாங்கொண்ட வறுமையினால் அடிகளிடமணுகி, "எனது வறுமையை நீக்கிக் கொள்ளும் பொருட்டாகச் சுவாமிகள் சில பிரபுக்களுக்குச் சீட்டுக் கொடுத்தருள வேண்டும்" என வேண்டினர். வள்ளலாரோ, அவரைநோக்கி,

ஏட்டாலுங் கேளயலென்பாரை நான்சிரித்து என்னை வெட்டிப்
போட்டாலும் வேறிடங்கேளேன் என்னுணைப் புறம் விடுத்துக்
கேட்டாலும் என்னையுடையா னிடஞ்சென்று கேட்ப னென்றே
நீட்டாலும் வாயுரைப் பாட்டாலுஞ் சொல்லி நிறுத்து வனே.

என்னுந் திருப்பாடலைக் கூறி "நாம் எதற்கும் எல்லாம் வல்லவராகிய அருட்பெருஞ்ஜோதி இறைவரையே வேண்டுவமல்லது, இவ்வுலக மாந்தரை மதித்து ஏற்கமாட்டோம்; நீரும் அவ்வழியே பற்றி ஆண்டவரையே வேண்டினால் அவனருளால் உமது வறுமை, சூரியனைக்கண்ட பனிபோல் விலகிவிடும்" என்று உபதேசித் தனுப்பினர்.

Koviloor Digital Library

23. சாற்றுகவி யளித்தல்

திருமழிசை முத்துசாமி முதலியார் என்பார் நம் பிள்ளைப் பெருமானுரிடத்துப் பெரிதும் அன்புடையவரும், அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரிடத்து நிறைந்த அன்புடையவரும், தமிழ்மொழி ஆராய்ச்சியில் மிக்க வல்லவரும் ஆவார். அத்தகு நல்லார், தாம் பாடிய பாடல்களுக்குப் பிள்ளைப் பெருமானுரிடம் **சாற்றுகவி** வாங்குதல் வேண்டுமென்னும் விருப்பம் பல நாட்களாக இருந்து வர, அவர்கள் ஒருகால் சுவாமிகளை அணுகி "பெருமானே! அடியனேன் பாடிய இவ் வருளில் பாடல்களைத் தேவரீர் கண்ணுற்று, அவைகள் அருட்பாடல்களாக ஆதற்பொருட்டு ஓர் **அருட்கவி** திருவாய் மலர்ந்து ஏழைமீது திருவருள் பாலிக்க வேண்டும்" என வேண்டினர்.

பிள்ளைப் பெருமானும் அப்பாடல்களைக் கண்ணுற்று அவைகள் ஆண்டவரின் திறங்களை எடுத்தோதுதலை யறிந்து அவற்றிற்கு, '**ஒருவகைப் பொருடெரித்**' என்னுந் தலைப்பிணையுடைய சாற்றுகவி ஒன்றை அளித்தார்கள்.

24. திருமணம்

பிள்ளைப் பெருமானின் அருமைக் காலம் இவ்வாறாகக் கழிந்து வரும் நாளில், பெருமானுருக்குத் **திருமணஞ் செய்து** காண வேண்டுமென்று அன்னையார், அண்ணனுர் முதலியோருக்கும் அவா அதிகரிக்க, அவர்களும் பலகால் நம்பெருமானை அதற்கு உடன்படும்படி வேண்டினர். எவ்வளவு வேண்டியும், பெருமான் அதற்கு இசையவில்லை. பின்னர் ஒருகால் ஒற்றியூரில் நம்பெருமான் நேசித்துவந்த ஒரு சிவயோகியாரைக் கொண்டு அடிகளாரைத் திருமணஞ் செய்துகொள்ள வற்புறுத்த, அடிகளும் அதற்கு ஒப்புக் கொண்டார். ஒப்புக் கொள்ளவே பெருமானுரின் தமக்கையாராகிய உண்ணுமுலையம்மாளின் அருமை மகளாகிய **தனக்கோட்டியம்மாள்** என்னும் சீரிய வொழுக்கமுடைய உத்தமியைத் திருமணஞ் செய்வித்தனர்.

நம்பெருமானுரின் கருத்தினை உணராத மற்றையர், பெருமானை உலகவாழ்வில் ஈடுபடும்படி எவ்வளவோ முயன்றும், தம்முடைய அருளானந்தப் பொதுவாழ்விற்குச் சிறிதும் தடையின்றித் தம் எண்ணத்தின் வழியே நின்றுர்.

பள்ளியறையில் திருவாசகமென்னுஞ் சீரியநூலைக் கரத்து ஏந்திக் கருங்கல் மனமுங் கரைந்துருகக், கண்கள் தொடுமணற் கேணியிற் சுரந்துநீர் பாய, மெய்ம்மயிர் பொடிப்ப, விதிர் விதிர்ப்பெய்தி யாவரும்

அன்பராகும் அந்நிலையில் அதனைப் பாடிக்கொண்டே பரமானந்தத்திலிருந்துவிட்டார். இவ்வாறே பெருமான் ஒவ்வொருநாளும் நடந்துகொண்டிருக்க, உறவினரும் மற்றவரும் தாம்செய்த தவறினை—அறியாமையை—உணர்ந்து வருந்தினர்.

25. மணலைச் சிவலிங்கமாக்கிய மாண்பு

இவ்வாறாக நம்முடைய வாழ்வின் பொருட்டாகத் திருக்கோலம்பூண்ட, கருணாநிதியாகிய தனிப்பெருஞ்செல்வர், சதா நிஷ்டை கூடிச் சகச வாழ்விலிருந்து வருநாளில், ஒரு நாள் திருவொற்றியூரிலுள்ள பட்டினத்தடிகள் ஆலயத்திற்கு அருகிலிருக்கும் குளத்தருகே சென்றார்கள். அங்குப் பல நாட்களாகப் பட்டினத்தடிகள் ஆலயத்தொண்டு புரிந்துவந்த ஒரு வயது சென்ற அம்மையார், நம்பெருமானாரை அடிபணிந்து "ஐயனே! அடியேனுய்யுமாறு ஓர் அற்புதங்காட்டி யருளல் வேண்டும்" என வேண்ட, உடனே நம்பெருமானாரும், அம் முதியவளின் அரிய பக்குவ நிலையை யுணர்ந்து, ஒரு பிடி மணல்வாரி அவர் கையிலே கொடுத்து மூடிக்கொள்ளுமாறு பணித்தார்கள். அவ்வம்மையாரும் அவ்வாறே மூடிக்கொள்ளத் தாம் அவ்விடத்தைவிட்டு அகன்று விட்டார். பின் அவ்வம்மையார் தமது கரத்தைத் திறந்து பார்க்க, அம்மணலெல்லாம் சிவலிங்கங்களாகத் தோன்றின. தோன்றலும், அவ்வம்மையாரும் அகமிக மகிழ்ந்தவராய் அன்று முதல் நம்பெருமானாரிடத்து அளவிலா அன்புடையவர்களானார்கள்.

26. பாம்பும் பணிந்த பண்பு

அதற்குப் பிறகு ஒருநாள் தம்முடைய நண்பர்கள் பலர் சூழச் சென்னையை யடுத்துள்ள வியாசர்பாடிக்குப் பெருமானார் பிரசங்கஞ் செய்யச் சென்று, பிரசங்கத்தை முடித்து இரவு நேரத்தில் ஆங்கிருந்து அவர்களோடுந் திரும்பி வரும்பொழுது, நடுவழியில் ஒரு பெரிய பாம்பு இவர்களை நோக்கி வர, எல்லோரும் பயந்து ஓடிவிட்டனர்; அடிகள்மட்டும் அவ்விடத்தைவிட்டு அகலாது அச்சமின்றி நின்றுகொண்டிருந்தார்கள். அப்பாம்பும் அடிகளுடைய திருவடிகளில் சிறிதுநேரம் சுற்றிக்கொண்டிருந்து பின்னர் பெருமான் ஏகுமாறு கூற ஏகிவிட்டது.

27. குறை இறையினிடத்துக் கூறலாம்

மற்றொருகால், தமது தமயனார் சபாபதிபிள்ளை மருகரும் தமது மாணவருமாகிய, புராணிகர் - பொன்னேரி - சுந்தரம்பிள்ளை தனது

Koviloor Digital Library

வறுமையைத் தீர்த்தருள வேண்டுமெனக் குறையிரந்த பொழுது, அடிகள் அவருக்கு,

திருவோங்கு பொற்சபையுஞ் சிற்சபையு நம்பெருமான் செய்யா நின்ற
உருவோங்கும் ஆனந்தத் தாண்டவமுங் கண்டினிதாங்கு உறைக யானுந்
தருவோங்கு தில்லைநகர்க் கோரிருபா னுள்வரைக்குட் சார்கின் றேன்நம்
இருவோங்கள் குறையுமிறைக் குரைத்தகற்றிக் கொளலாநீ யினையே லையா.

என்னும் பாடலைக்கூறி அவரை அனுப்பி வைத்தனர்.

28. அடிப்பது கூடாதென்றது

பின்னும் ஒருகால், அப்புராணிகர், பொன்னேரி சுந்தரம் பிள்ளை தமது தமையனார் குமாரராகிய வடிவேற்பிள்ளை* முதலாயினோருக்குப் பாடஞ் சொல்லிக் கொடுக்கும்பொழுது அடித்ததாகக் கேள்விப்பட்ட நம்பெருமானார், அவருக்கு,

படிப்பதுநன் றெனத்தெரிந்த பாங்குடையாய் மன்றுள்வெளிப் பரமனன்பே
தடிப்பதுநன் றெனத்தெரிந்த சதுருடையாய் அறநவின்ற தவத்தாய் வீணில்
துடிப்பதிலாத் தூயமனச் சுந்தரப்பேர் உடையாய் என் தோழ! கேள்நீ
அடிப்பதுமச் சிறுவர்களை யடிப்பதுநன் றலவென்மேல் ஆணை யாணை.

என்னும் பாடலைக் கடித மூலமாக எழுதி விடுத்து அவரை அத்தவறினின்றும் உய்வித்தருளினார்.

29. ஆடம்பரங்களை யகற்றல்

சபாபதி முதலியார் என்ற செங்குந்த மரபினர் ஒருவர் வேண்டுகோட் கிணங்க, அவரில்லத்தில் நடைபெற்ற திருமணத்திற்குச் சென்று, ஆங்குள்ள அனைவரும் ஜோடு அணிதல், சொக்காயிடுதல், சரிகைத் தலைப்பாகை யணிதல் முதலாய வீண் ஆடம்பரங்களில் கருத்தைச் செலுத்துவோராகவும், அம்மாதிரி ஆடம்பரங்களோடு வருவோர்க்கே அதிக மரியாதை செலுத்துவோராகவும் இருத்தலையுணர்ந்து, தாம் அவ்வீட்டினுள் நுழையாது, எதிர்வீட்டுத் திண்ணையிலேயே அமர்ந்துகொண்டு அவருக்கு அறிவுகொளுத்தும் பொருட்டாக,

சோடில்லை மேல்வெள்ளைச் சொக்காயில்லைநல்ல சோமனில்லை
பாடில்லை கையிற் பணமில்லை தேகப்பருமனில்லை
வீடில்லை யாதொரு விருப்புமில்லை விவாகமது
நாடில்லை நீநெஞ்சமே! யெந்தவா றினிநண் ணுவையே.

---

* சென்னையில் பிரபல புராணிகராக இருந்த பிரசங்க ரத்நாகரம் சிதம்பரம் வடிவேற்பிள்ளை இவரே யாவர்.

Koviloor Digital Library

என்னும் பாடலைத் திருவாய் மலர்ந்து, அம் முதலியாருக்கும், அங்குள்ளோருக்கும் அவ்வாடம்பரங்களி லிருந்த மயக்கினை யொழித்துச் சன்மார்க்கந் தெரித்தாட்கொண்டார்.

30. சதுர்வேத சாரசங்கிரகம்

சிறிது காலஞ்சென்ற பிறகு ஒருநாள் நம்பெருமான் திருவொற்றியூர் வடிவாம்பிகையம்மன் சன்னிதிமுன் நின்று தோத்திரஞ் செய்துகொண்டிருக்கிற வேளையில் ஓர் அன்பர் தோன்றி "சதுர் வேத சார சங்கிரகம்" என்னும் ஓர் ஏட்டுச் சுவடியைக் கொடுத்து மறைந்தார்.

31. உத்தம மனிதன்

நம்பெருமான் எப்பொழுதும் திருவொற்றியூருக்குக் கீழண்டை மாடவீதி வழியாகச் செல்லாது ஆங்குள்ள நெல்லிக்காய்ப் பண்டாரச் சந்து வழியாகச் செல்லுவது வழக்கம். ஒருநாள் மட்டும் வழக்கத்திற்கு மாருகத் தேரடி வீதி வழியாகச் சென்றுகொண்டிருந்தார். அத்தெருவிலுள்ள திண்ணையொன்றிலிருந்த நிர்வாண சந்நியாசி ஒருவர், அப்பக்கம் போகிறவர்களை யெல்லாம் "கழுதை போகிறது" "மாடு போகிறது" என்றே சொல்லுவது வழக்கம். அச் சந்நியாசியும் அன்று தம் வழக்கத்திற்கு மாருக நம்பெருமான் போவதைக்கண்ட மாத்திரத்தில், "இதோ உத்தம மனிதன் போகிருன்" என்று உள்ளங் களிசிறக்க உரைத்தார். உரைத்ததோடு தம் உடம்பினையும் தம் கரங்கொண்டு மூடிக்கொண்டார். அதைக்கேட்ட நம்பெருமானுர், அவர் பக்கலில் சென்று ஏதோ சில உரைகளைக் கூற, அன்றிரவே அச் சந்நியாசி அவ்விடத்தை விட்டு அகன்றுவிட்டார்.

32. சங்கராச்சாரியாரின் சந்தேகம்

சங்கராச்சாரியார் ஒருகாலத்துச் சென்னைக்கு வந்திருக்கும்பொழுது "தமக்கு ஆரியநூலில் ஏற்பட்ட ஐயங்களை நிவர்த்திக்கவல்ல ஆரியமொழி வல்ல புலவர்களுளரோ?" என வினவப் பக்கத்திலிருந்த பிராமணரொருவர் நம் பெருமானைச் சுட்டிக் காட்டினுர். உடனே அச்சங்கராச்சாரியாரும், அந்நூலைப் பெருமானிடத்துக் கொடுத்துத் தமக்கு ஐயமேற்பட்ட இடத்தைக் காட்டவும், அதை நம்பெருமான் ஒருமுறை பார்த்துவிட்டுத் தம் முதல் மாணவராகிய, தொழுவூர் வேலாயுத முதலியாரைச் சந்தேக நிவர்த்தி செய்யுமாறு பணித்தார். பணியினைச் சிரமேற்கொண்ட முதலியாரும், சங்கராச்சாரியாரின் சந்தேகங்களின் நிவர்த்திகளைச் சாங்கோபாங்கமாக எடுத்துரைத்து அமைந்தனர்.

Koviloor Digital Library

33. வாதநோய் தீர்த்தமை

மற்ஞெருநாள், வித்வான் கண்ணுடி - சுப்பராய முதலியார் என்பார், பல ஆண்டுகளாகத் தம்மை வருத்தும் வாத நோயைத் தீர்த்தருள வேண்டுமென நம்பெருமானை வந்தித்து வேண்ட, பெருமானுரும் அவ்வாறே அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரின் அருள் வலங்கொண்டு, அப்பெருநோயினைத் தீர்த்து அவருக்கு உய்வு அளித்தார். அப்பொழுது அகமிக மகிழ்ந்த அவ்வித்வான் நம்பெருமான்மீது,

அகத்தியனே வான்மிகியோ ஆதிசேடன் ருனே
மகத்துவமாஞ் சம்பந்த மாலோ—சகத்திலகுஞ்
சச்சிதா னந்தத்தின் தண்ணளியோ என்னென்பேன்
மெச்சுமதி ராமலிங்க வேள்!

என்னும் புகழ்ப் பாமாலையைப் பாடினர்.

34. அருளம்மை தந்த அன்னம்

ஒரு நாள் இரவு, நம் பெருமான் திருவொற்றியூருக்குச் சென்று சிறிதுகாலந் தாழ்த்து வந்தமையினுல், தமக்கையார் வீட்டினை * உள்தாளிட்டுக் கொண்டு உறங்கிவிடத் தாம் திண்ணையின்மீது பசியோடு படுத்துறங்கினுர்கள். அடியவர் பசியோடு உறங்குவதை யறிந்த அருளம்மையாகிய ஒற்றி வடிவுடைய நாயகியே, நம் பெருமானுரின் தமக்கையார் திருவுருவோடு அருகே வந்து தட்டி எழுப்பினர். எழுப்பலும் எழுந்த பெருமானை நோக்கி அவ் வம்மையார், தாமரையிலையில் பொங்கல் சோற்றினை அளித்துச் "சாப்பிடு" என்று கூறினுர். அடிகள் தமக்கையாரே என்றெண்ணியவராய் உணவையருந்திப் பின்னர் உறக்கங் கொண்டார். சிறிது நேரத்திற் கெல்லாம், உள்ளே உறங்கிக் கொண்டிருந்த தமக்கையார் திடுக்கிட்டு எழுந்து 'தம்பியார் இத்துணை நேரம் பசியோடு எங்கிருக்கின்ருரோ தெரியவில்லையே' என்று பலவாருகக் கூறிக் கொண்டே கதவைத் திறந்து கொண்டு வெளியில் வந்து பார்த்து, உறங்குகின்றவரை உணவளிக்கலாமென எண்ணி எழுப்ப, அவர் "ஏன் மீண்டும் எழுப்புகின்றீர்கள்; இப்பொழுது தானே உணவளித்துச் சென்றீர்" என்று வினவினுர்.

வினவுதலைக்கேட்ட அம்மையாருக்கு அதிகமான வியப்புத் தோன்றவே "ஈதென்ன மாயமா யிருக்கின்றதே; நான் இப்பொழுது தானே நின்னை உணவருந்துதற் பொருட்டாகத் தட்டி எழுப்பினேன்; முன்னெருகால் வந்ததாகக் கூறுவது வியப்பாக இருக்கிறதே" என்று

* சென்னை, ஏழுகிணறு, வீராசாமி பிள்ளை வீதி 39வது இல்லம்.

Koviloor Digital Library

கூறினர். அடிகளும் பெரிதும் வியப்படைந்து "ஓ! நம் அருளம்மையின் அருள்விளையாட்டே." என உணர்ந்துகொண்டவராய், ஆனந்த பரவசமெய்தி அமர்ந்திருந்தார். இதனை நம்பெருமானர், 'நெஞ்சறிவுறுத்தலில்'

அன்றொரு நாள் நம்பசிகண் டந்தோ தரியாது
நன்றிரவில் சோறளித்த நற்றாய் காண்.

எனக் கூறியிருத்தல் காண்க.

35. அழுக்குக் கந்தைக்கு ஆற்று திரங்கினர்

சின்னுட்கள் கழிந்தபின் ஒருகால் பெருமானர், திரு முல்லைவாயில் முதலிய திருத்தலங்களை வணங்கிக்கொண்டு, பாடி என வழங்கும் திரு வலிதாயத்திற்குச் சிவபெருமானைத் தரிசிக்கச் சென்றார். சென்றிகாலத்து அச் சிவலிங்கத்திற்கு ஆங்குள்ளவர்களின் கவனக்குறைவினுல், அக்கோயில் குருக்கள் ஒரு அழுக்குக் கந்தையைச் சுற்றி வைத்திருந்தனர். அதைக் கண்ணுற்ற அடிகட்கு மனம் தாங்காது மிக வருத்தத்தோடு,

சிந்தை நின்ற சிவானந்தச் செல்வமே
எந்தை யேயெமை யாட்கொண்ட தெய்வமே
தந்தை யேவலி தாயத் தலைவநீ!
கந்தை சுற்றுங் கணக்கது வென்கொலோ!

என்னும் பல செந்தமிழ்ப் பாடல்களைப் பாடி நின்டனர். தெய்வீகம் பொருந்திய இவர் திருவாக்கானது சில காலத்திற் கெல்லாம் அவ் வலிதாயத் திருத்தலம் மிகவுஞ் சீருஞ் சிறப்பும்பெற்று விளங்கத் தொடங்கி, இன்றும் பெருஞ் சிறப்போடு நடந்து வருவது உலகமறிந்ததே.

36. சென்னை கந்த கோட்டம்

இதுபோலவே, சென்னை கந்தப்பெருமான் ஆலயஞ்சென்று,

திருவோங்கு புண்ணியச் செயலோங்கி அன்பருள்
திறலோங்கு செல்வம் ஓங்கச்
செறிவோங்க அறிவோங்கி நிறைவான இன்பந்
திகழ்ந் தோங்க அருள் கொடுத்து
மருவோங்கு செங்கமல மலரோங்கு வணமோங்க
வளர்கருணை மயமோங்கி யோர்
வரமோங்கு தெள்ளமுத வயமோங்கி ஆனந்த
வடிவாகி யோங்கி ஞான

Koviloor Digital Library

உருவோங்கும் உணர்வில்நிறை யொளியோங்கி யோங்குமயில்
ஊர்ந்தோங்கி யெவ்வு யிர்க்கும்
உறவோங்கும் நின்பதம்என் உளமோங்கி வளமோங்க
உய்கின்ற நாளெந்த நாள்?
தருவோங்கு சென்னையிற் கந்தகோட் டத்துள்வளர்
தலமோங்கு கந்த வேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வ மணியே. (தெய்வமணி மாலை)

என்பது முதலிய 31 பாடல்களைப் பாடிய பின்னர் ஸ்ரீ கந்தப் பெருமானுர் ஆலயம் தென்னுடு முழுதுமில்லாப் பெருஞ் சிறப்புப் பெற்று விளங்கிவருகின்றது நாமனைவரும் அறிந்ததேயாகும்.

37. அன்னையார் பிரிவு

இத்தறுவாயில் தன்னையீன்ற **சின்னம்மையார்** தம் வாணுள் நீக்கவும், **பரசுராம பிள்ளை** தேகம் மெலிவுற்றுப் பிணியால் வருந்துவ துணர்ந்து, அவர் விருப்பப்படி சிதம்பரத் தலத்திற்குக்கொண்டு சென்று, தில்லை நடராஜாவின் தரிசனஞ் செய்துவைக்க எண்ணங்கொண்டனர்.

38. புதுவை அன்பர்கள் ஐயம்

அவ்வாறே தம் நண்பர்கள் பலர் தம்மைச் சூழ்ந்துவரக் கால் நடையாகவே வழியிலுள்ள பல திருத்தலங்களை வணங்கிச் செல்கின்ற போது **புதுவை மாநகரில்,** ஒரு சில அடியவர்களின் விருப்பினுல் தங்கி யிருந்த காலத்தில், அவ்வூரிலுள்ள பல பிரமுகர்களும் அடிகளிடத்து வந்து, தமக்கு ஏற்படும் ஐயங்களை யகற்றிச் செல்ல ஆரம்பிக்கலாயினர். அடிகளும் அவரவர் கொண்டுள்ள ஐயங்கள் அடியோடு ஒழிந்து போமாறு, அழுத்தமான விடைகளை பசுமரத்தாணிபோல் கூறிவரலா யினர். இவ்வாறு அவ்வூர் முழுவதும் அதற்கடுத்துள்ள பிறவூர்கள் முழுதும் அடிகளுடைய புகழ் பகலவனெளிபோல் பரவியது.

39. தில்லைப் பெருமான் தரிசனம்

பின்னர்ச் சிலநாள், அங்கு தங்கி யிருந்த பிறகு, அப் பதியினை யும் அணித்தேயுள்ள பல தலங்களையும் வணங்கிக் கொண்டு அன்பர்களோடும் தம் தமயனுர் பரசுராமபிள்ளை யுடனும் **அம்பலவாணன் ஆனந்தத் தாண்டவம் பயிலும்** அம்ப லத்தை யடைந்தார். ஆங்குச் சிற்சபேசனைத் தரிசித்து ஆனந்தக் கணணீர்வாரப் பற்பலவாகப் பாடியாடித் துதித்துப் பரவசமடைந்து,

Koviloor Digital Library

சுற்றுப் பக்கங்களிலுள்ள திவ்ய க்ஷேத்திரங்களையும் தரிசித்து, ஆங்காங்கும் பாமாலைகள் சாத்திப் பின்னும் சிதம்பரம் வந்து, ஆனந்தநடன தரிசனம் செய்தருளினார். அந்தத் தருணந்தான் நான்காந் திருமுறை இயற்றியருளிய காலம்.

40. சுந்தர சுவாமிகள் தோழமை

பெருமான் அம்பலவாணரை அன்பர்கள் பலருஞ் சூழத் தரிசித்துப் பலவகையாகத் தோத்தரித்துவிட்டு, தெற்குச் சன்னிதி வீதியிலெழுந்தருளி யிருந்தார். அப்பொழுது ஆங்கு கிழக்குச் சன்னிதி வீதியில் கோடக நல்லூர் சுந்தர சுவாமிகள் என்பார் ஒருவர் தங்கியிருக்க—அவரைச் சென்று பார்க்க விருப்பமுடையவராய், நம் பெருமான் ஒரு சிலரை, அவரிருப்பிடத்திற்கு அனுப்பிச் சமயம் பார்த்து வரக் கட்டளையிட்டனர். அன்பர்களும் அவ்வாறே சென்று அச்சுவாமிகளை வினவ, அவர்கள் உடனே தம்முடைய அடியவர்கள் சூழ, "அவர்கள் சமயம் பார்த்து இங்கு வரவேண்டியதில்லை; நாமே வந்து அவர்களைக் காண நின்றோம்" என்று அவ்வன்பர்களுடனேயே வந்தார்கள். வந்த அச் சுந்தர சுவாமிகளோடு வள்ளலாரும் அளவளாவிக்கொண்டு, இருவருமாக மூன்று நாட்கள்வரை ஒருவரைவிட்டு ஒருவர் பிரியாமல், ஆலய வழிபாடு முதலிய செய்த நேரம் போக, மீதி நேரங்களை யெல்லாம் பல வகையான ஞான விஷயங்களைப் பற்றி, உரையாடுவதிலேயே செலவழித்தனர்.

இங்ஙனமாக உரையாடியதில் அச் சுவாமிகட்கு அடிகளார்மீது அளவுகடந்த அன்பும், பக்தியும் உண்டாயின. அதோடு அருகேயிருந்த அன்பரொருவர் அடிகள் அருளிச் செய்த "மகாதேவ மாலையில்" சில பாடல்களைக் கூறி, "இப்பாடல்களையும், இவைபோன்ற இன்னும் அநேக பாடல்களையும் பெருமானார் திருவாய் மலர்ந்தருளி யுள்ளார்கள்" என்று கூற, அதைக் கேட்டவுடன் அவர்கள் முன்னையினும் பன்மடங்கு மகிழ்ச்சியோடு "எங்களை ஆட்கொள்ள வந்த இன்னுருவே இவ்வுருவம்" என்று அடிகளைப் போற்றிப் புகழ்ந்து விடைகொண்டு பிரிந்தார்.

பிரிந்தவரை வழி யனுப்பச்சென்ற அன்பர்களிற் சிலர், சுவாமிகள் எதிரே யிருந்து பேசவேண்டி யிருக்கப் பக்கலிலேயே யிருந்து பேசிய தன் காரணம் என்னையென வினவ, அதற்குச் சுந்தர சுவாமிகள், "எதிரேயிருந்து பேசுவோர் ஆற்றலை இழுத்துக் கொள்ளும் சக்தியுடையவர்கள் அவர்கள். ஆதலினாலேயே யாம் பக்கலிலிருந்து பேசினோம்" என்று விடை பகர்ந்தார்.

Koviloor Digital Library

சுவாமிகள் சென்றதும், நம்பெருமானார் கண்களிலிருந்து கண்ணீர் ததும்பலாயிற்று. அதைக்கண்ட அன்பர்கள் '**என்ன காரணமோ?**' என ஏக்கமுற்றவர்களாய், "சுவாமிகள் வருந்துவது எதன்பொருட்டாக?" என்று வினவவும், பெருமானார், "**இப்பொழுது நம்மோடு அளவளாவிச் சென்ற சுவாமிகள் இன்னும் ஆறுமாதங்கட்குள் மறைந்து விடுவார்கள்**" என்று கூறி மேலும் வருந்தினார்கள். அவ்வாறே முடிந்தது.

அங்கிருந்தும் புறப்பட்டுச் சீர்காழிக்கு நம்பெருமானார் சென்று, அங்குள்ள அம்மன் சன்னிதியில் பல அன்பர்களின் வேண்டுதலுக்கிணங்கி, பிரசங்கத்தை அருண்மாரியாகப் பொழிந்தார். அதனைக் கேட்ட அன்பர்கள் உடல்குளிர, உயிர்தழைக்க, உணர்ச்சி ஓங்கப் பெற்றவர்களாய் அடிகளி லிடத்து நீங்கா அன்புடையவர்களானார்கள்.

41. குன்ம நோய் தீர்த்தார்

அங்கொருநாள் பல வருடங்களாகக் குன்ம நோயினால் வருந்து நின்ற ஒருவர், அடிகளை வந்து வணங்கித் தம் நோய் நீங்கப் பெருங் கருணை புரிதல் வேண்டுமெனக் குறையிரந்துகொள்ள அருட்பெருஞ் ஜோதி ஆண்டவரின் அருள் வலத்தால் திருநீறு கொடுத்து அப் பெருநோயை நொடிப்பொழுதில் தீர்த்தருளினார்கள்.

அங்கிருந்தும் வைத்தீச்சுரன் கோயிலுக்குச் சென்றபொழுது, அக்கோயிலின் தருமகர்த்தராகிய வித்வான் உலகநாதத் தம்பிரான் தம் பெயரும் வருமாறு வைத்திச்சுரன் பேரில் பதிகமொன்று திருவாய் மலர்ந்தருளல் வேண்டுமென, அவ்வாறே, அடிகளும்,—

கல்லையு முருக்கலாம் நாருரித் திடலாம்
கனிந்தகனி யாச்செய் யலாம்
கடுவிடமு முண்ணலாம் அமுதாக்க லாங்கொடுங்
கரடிபுலி சிங்க முதலா
வெல்லுமிரு கங்களையும் வசமாக்கலா மன்றி
வித்தை யுங்கற் பிக்கலாம்
மிக்கவா ழைத்தண்டை விறகாக்க லாமணலை
மேவுதேர் வடமாக் கலாம்
இல்லையொரு தெய்வம்வே றில்லையெம் பாலின்பம்
ஈகின்ற பெண்கள் குறியே
எங்கள்குல தெய்வமெனு மூடரைத் தேற்றவெனில்
எத்துணையு மரிதரிது காண்
வல்லையவ ருணர்வுற மருந்தருள்க தவசிகா
மணியுலக நாத வள்ளல்
மகிழுவரு வேளூரி லன்பர்பவ ரோகமற
வளர் வயித்திய நாதனே.

Koviloor Digital Library

என்று அப்பதிகத்தில் அவர் பெயரையும் அமைத்து 12 பாடல்கள் பாடி அவரைத் தீயநெறியினின்றும் உய்வித்தருளினர்.

பின்னர் நம்பெருமானுர், மதுரை முதலிய அரும் பதிகள் பல வற்றைத் தரிசித்துக்கொண்டு, தமது சிறிய தமயனுராகிய **பரசுராம பிள்ளை** யிருந்த கருங்குழி என்னும் ஊருக்கு வந்துசேர்ந்தார்கள். சில தினங்களுக் கெல்லாம், அப் பரசுராம பிள்ளை பரனடி யடைய, அவ் வூரை விட்டுப்பிரிய நம் பெருமான் புறப்படும்பொழுது, அவ்வூரிலுள்ள **வேங்கட ரெட்டியார்** என்னும் அன்பர் ஒருவர் "எம்முடைய வீட்டிலேயே இருந்தருளல் வேண்டும்; வேறெங்கும் செல்லுதல் வேண்டாம்" என்று அன்போடு வற்புறுத்த, அப்படியே அவருடைய வீட்டி லேயே தங்கி யிருந்தார்.

அக்காலத்தில், சுவாமிகள் பக்திமார்க்கமே சிறந்ததென்றும் **கொல்லா விரதமே** மேம்பட்டதென்றும், பலருக்கும் நன்கு போதித்து நல்வழி யடையச் செய்து வந்தனர். இதுவுமன்றி இவர்களது மேம்பாட் டைக்கேள்வியுற்ற கற்றறிவாளர் பலரும் வெகுளி கொண்டு பிள்ளையவர் களிடம் வாதிடலும், அன்னவர்களை **அருள் வசத்தால்** வென்றும், அவர்களையும் நன்னெறி யடைவித்தும் வந்தனர். இவ்வண்ணம் நிகழு நாளில், சென்னைக்கு அடுத்த திருமயிலை யென்னும் க்ஷேத்திரத்தில், தமது மூத்த சகோதரர் **சபாபதி பிள்ளை** ஆண்டவர் திருவடி யடைந்த செய்தியைப் பிறர் உணர்த்தா முன்னமே உணர்ந்து அவ் விஷயத்தில் நுழையாது சுவானுபூதியிலேயே தங்கியிருந்தார்.

42. தண்ணீர்விளக்கு எரிந்த தன்மை

அங்கிருக்கும் நாட்களில் ஒருநாள் இரவு ரெட்டியார் வீட்டினர் அனைவரும் வெளியூருக்குப் போகவேண்டிய நிமித்தமாக, ஒரு விளக்கினை **எண்ணெய்விட்டு** ஏற்றி அருகில் ஒரு **புதிய மண் பாத்திரத்தைப்** பழக்குவதற்காக அதனுள் தண்ணீர் விட்டு வைத்துச் சென்றனர். பெருமான் வழக்கம்போல அவ்விளக்கண்டை அமர்ந்துகொண்டு **பாக்களை** வரைந்து கொண்டிருந்தவர்கள் **எண் ணெய் என எண்ணி அதை எடுத்து அவ்விளக்கில் ஊற்றினுர் கள்.** அம்மாதிரியே அன்று இரவு முழுவதும் ஐயா அவர்கள் அந் நீரையே விட்டுக்கொண்டிருந்தார். **அந்நீரிலேயே விளக்கும் எரிந்து கொண்டிருந்தது.**

விடியற்காலையில் வீடுவந்துசேர்ந்த அம் மனைக் கிழத்தியாகிய **முத்தாலம்மாள்** விளக்கு நிறைய நீர் இருப்பதையும், அந்த விளக்கு எரிந்துகொண் டிருப்பதையும் நோக்கினுர். அதன் பின்னர் அடிக

Koviloor Digital Library

விடத்துப் பெரிதும் அன்பும் பக்தியும் ஏற்பட்டு அதனால் சுவாமிகளைத் தெய்வமாகக் கொண்டாடத் தலைப்பட்டனர்.

43. ஞானியார் உபதேசம் பெற்றநிலை

திருச்சிற்றம்பல ஞானியார் என்பவர் ஒருவர் அடிகளின் அருமை பெருமைகளை யறிந்து அவர்களிடத்து அருளுபதேசம் பெறுதல் வேண்டு மென்னும் விருப்புடையாராய்க் கருங்குழிக்கு வந்து, ஆங்குள்ள நம் பெருமானை அடிவணங்கித் தமது கருத்தைத் தெரிவித்தார். அதற்கு நம் பெருமானார், "துறவுநிலை மேற்கொண்ட தங்கட்குக், கொள்ளாத அடியேன் உபதேசஞ் செய்தல் ஒவ்வாது" என்று மறுத்தும், அவர் கேளாமை கண்டு,

> நின்னிலைமை என்னருளால் நீயுணர்ந்து நின்றடங்கில்
> இந்நிலையே யந்நிலையை யெய்துதிகாண்—முன்னிலையில்
> நிற்குருவி னுட்டாதே யென்றுரைத்தான் ஏரகம்வாழ்
> சற்குருவென் சாமி நாதன்.

என்னும் வெண்பா வொன்றினை அவர்க்கு வரைந்து கொடுத்தனுப்பினர். அதனைப் பெற்றுக்கொண்டு அந்த ஞானியாரும் மதுரையிலுள்ள திருஞான சம்பந்தமூர்த்தி சுவாமிகள் மடத்திற்குச் சென்று விட்டனர்.

பின் ஒருகால், (கடந்த அக்ஷய ஸ்ரீ) கருங்குழி புருஷோத்தம ரெட்டியார் என்பவர், மதுரையிலுள்ள அச் சம்பந்த மூர்த்தி சுவாமிகளது மடத்திற்குப் போய்விட்டதை யறிந்த அவருடைய தாய் தந்தையர், நம்பெருமானிடத்து வந்து, தம் மகனை ஆங்கிருந்து அழைப்பித்தருள வேண்டுமெனக் குறையிரந்து கொண்டனர். அவர்களுடைய கருத்தை நிறைவேற்றி வைத்தற் பொருட்டாகப் பெருமானார் அம்மடத்திலுள்ள தம்முடைய மாணவராகிய திருச்சிற்றம்பல ஞானியாருக்கு எளியநடையில் அந்தப் புருஷோத்தம ரெட்டியாரை அனுப்பி வைக்குமாறு கடித மொன்று எழுதினர்.

அக்கடிதமானது, அந்த ஞானியாரும், கணக்கிலவதானி—தேவிபட்டினம் முத்துசாமி பிள்ளையுமாக உரையாடிக் கொண்டிருக்கின்ற வேளையில் போய்ச் சேர்ந்தது. அக்கடிதத்தை அம் முத்துசாமி பிள்ளையும் படித்துப் பார்த்தார். பார்த்ததும் 'பெரிய மேதாவி யொருவர் எழுதிய கடிதம் இலக்கண இலக்கியச் செறிவின்றி இவ்வாறிருக்கின்றதே' என்று பதறி ஞானியாரைக் கேட்டார். அதற்கு ஞானியார் "வள்ளலார் வார்த்தையாடியிருக்கும் காலங்களில் சிந்திய இலக்கணமே இந்த உலகில் பரவியிருக்கின்றது" என்று அவ்

Koviloor Digital Library

விடையை மறுக்க, அந்த அவதானியார் "அங்ஙனமாயின் அம்மாதிரி ஒரு கடிதம் அவரிடமிருந்து வரவழையுங்கள்" என்று கூறினர்.

உடனே ஞானியாரும், அவ்வாறே ஒரு கடிதமெழுதி யனுப்புமாறு நடந்த வரலாற்றையும் உடன் கூட்டி எழுதி அடிகட்கு அனுப்பி வைத்தனர். அக்கடிதத்தைக் கண்ட சுவாமிகள் வெறுப்புடன் அதனை "பிச்" என்று சொல்லி கீழே வைத்து விட்டனர். ஆனால் அச்சமயம் உடனிருந்த **தொழுவூர் - வேலாயுத முதலியாருக்கு** ஆற்றுமையாயிருக்க அவர் சுவாமிகளிடத்து அதனை எழுதி முடிக்குமாறு விண்ணப்பஞ் செய்துகொள்ள, சுவாமிகள் **இரண்டு வரி மாத்திரம்** எழுதி அவரிடந்தந்து மீதத்தை **"நீரே எழுதிவிடும்"** என்று கூறிவிட்டனர். அவ்வாறே அக்கடிதத்தைத் **தொழுவூர் - வேலாயுத** முதலியார் எழுதி முடித்து அனுப்பினர்.

☞ அக்கடிதம் வருமாறு காண்க.—

இலக்கண வியனடை

வழக்கப்பா டுறுத்துவிக்கும் பத்திரிகை

உணர்ந்தோரானியில் வகையவின்ன வென்றவற்றிற் பின்மொழிமதிக்கு முன்மொழி மறைக்கு முதலிறு விளங்க முடிப்பதாய பின் மொழி யடைசார் முன்மொழி ஞாங்கர் விளங்கிய ஞானிகட்கு:—

பொய்யற் கெதிர்சார்புற்ற மூலியொன்று வளைத்து வணக்கஞ் செய்த ககன நீரெழிலென்றும், வான் வழங்கு பண்ணிகாரமென்றும், நாகச்சுட்டு மீனென்றும் வேறு குறிப்பதொன்று.

அண்மைச் சுட்டடுத்த வேழாவதன் பொருண்மை யும்மை யடுத்த பல்லோர் வினைப் பெயர்ப் பொருள் குறிஞ்சி யிறைச்சிப் பொருளொன்றனோடு புணர்ப.

சேய்மைச் சுட்டடுத்த வத்திறத்தியல் யாது?

இரண்டனுருபொடு புணர்ந்த தன்மைப் பன்மை யாறுவதன் பொருட்டாக்கினூர்க் குய்த்த கற்பிய லதிகரிப்பின் வருந்தலைமகட் பெயர விரண்டனோ டிரண்டிரண்டுகக் கழிவிலைப் பெயரவு மாகார விற்று முதனிலைத் தனிவினைச் செயவென் வாய்பாட்டு வினையெச் சத்தனவாகக் கலம்பகச் செய்யுளுறுப்பாற் சிறத்தும்.

இருவகை முதற்பொரு ளொன்றன் பாகுபாட் டுறுப்பிற் குறித்த, வைம்பெரும் பூதத்தோர் விசேடணத் தெதிர் மறை நடுக்குறை யியற் சொற் பெயர வுயிர்ப் பெயராக வெதிர்காலங் குறித்து நின்றது:

Koviloor Digital Library

சில வினைச் சார்பான், விலங்கு சூடிய வரையில் வெளியாம்.
இதனோ டிருவகைப்பட்ட வோர்சார் புதுநிலஞ்செல வுய்த்தனம்.
வேண்டுழி வேண்டியாங் குய்க்க, மற்றைய பின்னர்வரைதும்.
இற்றே விசும்பிற் கனைச்சலம்.

பார்வதிபுரம்,
சுக்கில ௵
துலா ரவி 27௳.

இங்ஙனம்:
நங்கோச் சோழன்
வீரமணிச் சூடியார் திருவாணைப்படிக்கு
அடிமை
தொழுவூர் - வேலாயுதம்

இப்பத்திரிகையை ஞானியார் அவ் வவதானியாரிடங் காட்டினர். அவர் அதைப் பன்முறை படித்துப் பார்த்தும் பொருள் விளங்காமை கண்டு "வேண்டுமென்றே ஒரு வித்வான் பூட்டுப்போட்டால் அந்த வித்வான்தான் அதைத் திறக்கவேண்டும்" என்று கூறினர். அதைக் கேட்ட ஞானியார் புன்னகையுடன், அங்ஙனமாயின் தாங்களும் "வேண்டுமென்றே ஒரு பூட்டுப்போடுங்கள் பார்ப்போம்" என்றார்கள்.

அவ்வாறே அவதானியாரும்,

தகர வரிக்குழல்கா மாதியைந்திற் றங்கும்
தகரவரி நாலைந்து சாடும் — தகரவரி
மூவொற்றி யூர்பதங்கள் மூன்றுமங்கை யேந்துமொரு
சேவொற்றி யூர்பதத்தைச் சேர்.

என்ற கவியினை எளிதில் பொருள் விளங்காவாறு எழுதித் தந்தனர்.

அக்கவியினை ஞானியார் நம் பெருமானாருக்கு அனுப்ப அவர்கள் அதற்குரிய உரையினையும், அவர் உணராத மற்றோர் தத்துவ உரையினையும் எழுதி அனுப்பினர்.

எழுதி அனுப்பிய உரையினைக்கண்ட அவதானியார் புறப்பட்டு சுவாமிகள் வீற்றிருக்கும் கருங்குழிக்கு வந்து சேர்ந்தார். சேர்ந்தவர் சுவாமிகள் இருக்குமிடத்தை விசாரித்துக்கொண்டு அவ்வீதிக் கோடியிலேயே கரங்களைச் சிரமேற் குவித்துக்கொண்டு ஆங்குவந்து சுவாமிகளின் திருவடிகளில் அடியற்ற மரம்போல் விழுந்து வணங்கி "யான் செய்த பிழைகளை யெல்லாம் பொறுத் தருளல் வேண்டும்; வித்வான் எனமதித் திருந்தேன்—பரிபூரண ஞானியென உணர்ந்திலேன்" என்று அழுது அரற்ற, தாயினுந் தயவுடைய நம் பெருமான் அவரை மன்னித்து ஆட்கொண்டார்.

Koviloor Digital Library

44. குஷ்டம்—கண் மறைவு நீக்கினர்

மற்றொருகால், அக்கருங்குழியிலுள்ள பாலு ரெட்டியார் என்பார் குஷ்ட நோயினுல் துன்பம் ஆற்ருராய்ச் சுவாமிகளை யடுத்துத் தம் குறை தீர்த்தருள வேண்டினர். சுவாமிகளும் அவர் வேண்டியாங்குத் திருநீறு கொடுத்துத் தீரா நோயைத் தீர்த்தருளினர். அப்படியே முத்து நாராயண ரெட்டியார் என்பவருக்குற்ற கண் மறைவினைத் தீர்த்தருளினுர். அதனுல் மனமிக மகிழ்ந்த அம் முத்து நாராயண ரெட்டியார் தம்முடைய நிறைந்த செல்வ முழுவதையும் சுவாமிகட்கு எழுதி வைப்பதாக விளம்ப, அடிகள் அதனை மறுத்து "வேண்டுமாயின், இவ்வூரிலுள்ள ஸ்ரீநிவாஸப் பெருமாள் கோயிலுங்கு எழுதி வைத்துவிடுங்கள்" என்று இயம்பினர். அங்ஙனமே அவரும் அக் கோயிலுக்கு எழுதி வைத்துவிட்டார்.

தைப்பூச காலங்களில், திருக்கூட்டம் வடலூரிலிருந்து சித்தி வளாகம் செல்லும் மூன்ரும்நாள், ஷை ஸ்ரீநிவாஸப் பெருமாள் சன்னிதியில் தங்கி, பிரசாதங்கள் பெற்றுப்போவது இன்றும் நடந்துகொண்டு வருகிறது.

கருங்குழியிற்றனே மற்ருேர் நாள் மாலையில் ஐயா அவர்கள் தம்முடைய அன்பர்கள் பலருஞ் சூழ இயற்கைக் காட்சியைக் கண்ணுற, தெய்வீக மாமரத் தருகில் சென்றனர். அப்பொழுது இடைவழியில் மழை பொழிய எல்லோருடைய ஆடைகளும் நனைந்துபட்டன; ஆனுல் ஐயா அவர்களுடைய ஆடைமட்டும் ஒரு சிறிதும் நனையவில்லை. அதைக்கண்ட அவ்வன்பர்கள் பெரிதும் வியப்படைந்தனர். இங்ஙனமாகச் சுமார் பதினுறு ஆண்டுகள் ஐயா அவர்கள் கருங்குழி என்னும் அக்கிராமத்திலேயே யிருந்து வந்தார்கள்.

அவ்வூரில் கோயில் கொண்டிருக்கும் விநாயகப் பெருமான் மீது,

நாவி னுலுனை நாடொறும் பாடுவார் நாடு வார்தமை நண்ணிப் புகழவும்
ஓவி லாதுனைப் பாடவுந் துன்பெலாம் ஓட வும்மகி ழ்ோங்கவுஞ் செய்குவாய்
காவி நேர்களத் தான்மகி ழைங்கரக் கடவுளே நற் கருங்குழி யென்னுமூர்
மேவி யன்பர்க் கருள்கண நாதனே விளங்குஞ் சித்தி விநாயக வள்ளலே.

என்ற பதிகம் முழுதும் திருவாய்மலர்ந் தருளினுர்கள்.

45. கூடலூரில் குருவாயின நிலை

பின்னர் நம் பெருமானைக் கூடலூருக்கு அப்பாசாமி செட்டியார் என்னும் அன்பரொருவர் அழைக்க, அவ்வழைப்பினை மறுக்காது ஆங்குச் சென்றுர்கள். சென்று அங்குவந்து கூடிய அன்பர்கட்கு, உய்யும் அறநெறியினை எடுத்துரைத்து, அமைந்திருந்தனர். இது நிற்க,

Koviloor Digital Library

கூடலூர் தேவநாயகம் பிள்ளை என்றேரன்பர்க்குச் சிலவருடங்கட்கு முன் இறந்துபோன அவருடைய தந்தையார் "அப்பா! நான் இறந்துபோன பிறகு ஒரு மனிதர், முக்காடிட்டுக் கொண்டுவந்து கைதனிலிருக்கும் பிரம்பினுல் "இதுதானே உன் தகப்பன் வியோகஸ்தானம்" என்று தட்டிக் கேட்பார்; அவ்வுத்தமரையே நீ ஞானசிரியராகக் கொண்டு அருள்நெறியில் நிற்கக்கடவை" என்று கூறி தேகவியோகமாயினர்.

அவர் கூறியபடியே, நம் பெருமானுர் அத் தேவநாயகம் பிள்ளை இல்லத்திற்குச் சென்று அவரை யழைத்துக் கைபிலிருந்த பிரம்பினுல் தட்டி வினவினுர். வினவலும், அத் தேவநாயகம் பிள்ளை தமது தந்தையார் கூறிப்போன அடையாளங்கள் அனைத்தும் சரியாயிருப்பதைக் கண்டு, அடிபணிந்து தமது தந்தையார் இறுதிக்காலத்திற் கூறிப் போயினமையைச்சொல்லி தம்மை ஆட்கொள்ளுமாறு வேண்டினுர். அப்படியே அவரைத் தமது மாணவராகக் கொண்ட நம் பெருமானுர் அவர் இரசவாதத்தில் மயக்குற்றவராய்த் தம்முடைய செல்வத்தைச் சிதறடித்தவர், என்பது தெரிந்தமாத்திரத்தில் அவருடைய மயக்கை யொழித்து அருள்நெறி காட்ட, இரும்பினைப் பதினுறு மாற்றுப் பொன்னுக மாற்றிக் காட்டி "இது இச்சையற்றவர்களுக்குச் சித்திக்கும், ஆதலால் இனி நீ இதில் மயங்காதே" என்று அதனை மறைத்துவிட்டனர்.

46. செஞ்சிமலை வாசம்

மற்றெரு சமயம் பெருமான் செஞ்சி மலையில் சஞ்சரிக்குங்கால் அத் தேவநாயகம் பிள்ளை செஞ்சி மலைக்குப் பெருமானைப் பார்க்கப் போனபோது தம்மோடு வந்தவர் பசியினுல் மிகவும் வருந்த அவர் பசி தீரும்பொருட்டாகச் சுவாமிகள் லட்டு ஒன்றும், செம்பு நிறைய நீரும் திடீரென வரவழைத்துக் கொடுத்தார். அவர் அதை உண்டு அருந்திய பின்னர், அச்செம்பினைக் கொண்டுபோய்க் கொடுத்து வருவதாகக்கூறிச் சிறிதுதூரம் சென்று மீண்டார்.

47. தீண்டிய பாம்பே மாண்டது

கூடலூர் அப்பாசாமி செட்டியார் வாழைத் தோட்டத்தினுள் நம் பெருமானுர் ஒருகால் சென்றபொழுது, அத்தோட்டத்தில்

Koviloor Digital Library

ஒரு பேயன்வாழை மரத்தின் மீதிருந்த ஒரு பாம்பு தலையில் தீண்டி விட்டது. அதனைக் கண்ட மற்றையோர், "சுவாமிகளைப் பாம்பு கடித்துவிட்டதே" என்று பதறியவர்களாய்ச் சிகிச்சை செய்யவும், அப் பாம்பினைக் கொல்லவும் முயன்றார்கள். நம் பெருமானே அவர்களை நோக்கி "அவ்விஷம் நம்மை ஒன்றும் செய்யாது, அப்பாம்பும் இறந்து போவதற்காகவே நம்மைத் தீண்டியது; அதுவும் இன்னும் சிறிது நேரத்தில் தானாகவே மடிந்துவிடும். ஆகவே அதனை நீங்கள் அடித்தலும் வேண்டாம்" என்று கூறினர். அடிகள் கூறியபடியே விஷமும் அடிகளை ஒன்றுஞ் செய்யவில்லை. அப்பாம்பும் சிறிது நேரத்திற்கெல் லாம் இறந்தது.

அப்பொழுது கூடலூரில் முறையே ஒவ்வொருநாள் இரவிலும் நம் வள்ளற்பெருமானார் பிரசங்கம் நடைபெற்று வந்தது. அப்பிரசங் கத்திற்கு நாள்தோறும் மஞ்சகுப்பத்திலிருந்து வந்துபோகும், இராம கிருஷ்ணப் பிள்ளைக்கு இடைவழியில் எங்காவது அச்சமேற்படின் உடனே அங்கு ஒரு மனிதன் ஒரு விளக்கைக் கரத்தேந்திக்கொண்டு நடப்பதும், பிள்ளைக்கு அச்ச மொழிந்ததும் மறைந்து போவதுமாகப் பல நாட்களாக நடந்துவந்தது. அங்ஙனமாகத் தோன்றுகின்ற மனி தனை எத்தனையோ முறை இராமகிருஷ்ணப் பிள்ளை பார்க்க முயன்றும் பார்க்க முடியவில்லை. ஆதலால் அவர் அம்மனிதர் வருவது போவதில் ஐயங்கொண்டு நம் **அருளாளரிடத்து** வந்து அதனைக் கூறினர். செவி மடுத்த அருட்செல்வரும் தெரியாதவரைப்போல "எல்லாம் திருவருட் செயலே" என்று கூறிவிடுத்தனர்.

இக் கூடலூருக் கடுத்துள்ள திருப்பாதிரிப்புலியூரில் அப் பொழுது நடந்த ஆற்றுத்திருவிழாவில் "பிரம்ம சமாஜத்தார்" என்னும் ஒரு கூட்டத்தார் விக்கிரக ஆராதனை கூடாதென, அதனைக் கண்டித்து உரை நிகழ்த்தினர். அதனை யறிந்த நம் பெருமானார் அந்த சமாஜத் தினருக்குத், "தாங்கள் விக்கிரக ஆராதனையை மறுப்பது இன்னின்ன வகைகளினால் தகுதியன்று" என்று ஒரு கடிதம் அனுப்பினர். அக் கடிதத்தைக் கண்ட சமாஜத்தினர், அடிகளுடைய கடிதம், உண்மையும், உறுதியுமுடையதா யிருப்பதைக்கண்டு அதை மறுக்க முடியாதவராய் அடிகளின்மீது போலி மறுப்பொன்றை அவர்களுள் ஒருவராகிய ஸ்ரீதர ஸ்வாமி நாயகரைக்கொண்டு எழுதுவித்தனர். இது சம்பந்தமான பிறவற்றைக் கீழ்க்காணும் பகுதியில் காண்க.

Koviloor Digital Library

48. நடந்தவண்ணம் உரைத்தல்

கல்வி கேள்விகளால் சிறந்த அறிவுடையவர்களுக்கு வந்தனஞ் செய்து வெளிப்படுத்துகை

அக்ஷயவருஷ தைமீ 5உயில் கூடலூரைச் சார்ந்த திருப்பாதிரிப் புலியூருக் கடுத்த பெண்ணைநதித் தென்கரையில் உண்ணாமுலை செட்டிச் சாவடிக்குச் சமீபத்தில், ஓர் நைமித்தியத் திருவிழா வைப்பற்றி அறிவுடையோ ரனேகர் கூடினர். அவ்விடம் **சிதம்பரம் - இராமலிங்க சுவாமிகளு மிருந்தனர்.** அப்போது பிரம்ம சமாஜம் **சம்பேடு - ஸ்ரீதர ஸ்வாமி நாயகர்** சிலருடன் வந்திருந்தார்.

அதற்குமுன் திருப்பாதிரிப்புலியூரில், ஸ்ரீதர ஸ்வாமி நாயகர் செய்த பிரசங்கத்தினுல் சந்தேகத்தி லழுந்திய சிலர், தமது சந்தேகத்தை நீக்கிக் கொள்வதற் கிஃதோர் தருணமென்று கருதி, அக்கூட்டத்தில், **சிதம்பரம் - இராமலிங்க சுவாமிகளை** நோக்கி, "ஐயா! பிரமத்தை நினைப்பது தகுதியென்றும், விக்கிரக ஆராதனை செய்வது தகுதியல்ல வென்றும், இங்கே வந்திருக்கின்ற **ஸ்ரீதர ஸ்வாமி நாயகரவர்கள்** எங்கள் முன்பாகப் பலமுறை பிரசங்கித்தார். அதனுல் எங்களுக்குச் சந்தேக முண்டாகி யிருக்கின்றது; அந்தச் சந்தேகத்தை நிவர்த்தி செய் விக்க வேண்டும்." என்று கேட்டுக் கொண்டார்கள்.

அப்போது, சிதம்பரம்-இராமலிங்க சுவாமிகள், "பிரம்மத்தை யறியத் தொடங்கினோர் அறிதல் வேண்டும்: விக்கிரக ஆராதனை செய்யத் தொடங்கினோர் செய்தல் வேண்டும்; இவ்விருவகையும் அதற் குரிய **பக்குவர்களுக்கு அடுத்த வகைகளென் றறிய வேண்டும்**" என்று சொல்லினர்.

அப்போது அங்கிருந்தவரிற் சிலர், நாயகரைப் பார்த்து, "இது விஷயத்தில் தங்கள் கோட்பாட்டை வெளிப்படுத்தி, நிறுத்தல் வேண்டும்" என்றார்கள். நாயகர், "லிகித மூலமாய் வெளிப்படுத்து வேன்," என்றார்.

அதுகேட்டு, "ஒரு சபையில் மாறுபட்ட இருவர், தங்கள் தங் கள் கோட்பாடுகளை அந்தச் சபையி லறிஞரறிய எடுத்துரைத்து, அதற் குத் தக்க **காட்சி, அனுமானம், உவமானம், சத்தம்** முதலிய பிர மாணங்களும்—**உடன்படல், மறுத்தல்;**—ஒரு சாருடன்பட்டு மற்றொரு சாருடன்படாமை;—முற்றும் உடன்படல் போன்று உடன்படாமை,— முதலிய கோட்பாடுகளுக் கமைந்த பலவகை யுக்திகளும்,—அனுபவத்

Koviloor Digital Library

தோடு தர்க்க வுபதர்க்க, — லக்ஷண உபலக்ஷணங்களுக்குப் பொருந்த விவகரித்து—அந்த விவகாரத்தில் சந்தேக விபரீத மயக்கத்திற்கு இடங்கொடாமல், முடிந்த நிச்சயத்தைப், பின்னர் லிகிதமூலமாய்ப் பிறரறிய வெளிப்படுத்தல் மரபே யல்லது, — மாறுபட்டோர் இருவரும் வேறு வேறிடங்களிலிருந்து அறிஞர் சபாதிபத்திய மின்றித் தங்கள் தங்கள் மனஞ் சென்றவழி அவைவை—யெல்லையைக் கடந்தெழுதிக் கொள்வதில் நியாயந் தோன்ருது", — என்றும், "ஒழியாத லிகிதச் சண்டையாக முடியும்" என்றும்,—"அது தர்க்க லக்ஷண மரபல்ல" என்றும்,— சுவாமிகள் சொல்லினர்.

அங்கிருந்தவரிற் சிலர், நாயகரைப் பார்த்து, "ஐயா! தங்கள் கோட்பாட்டை வெளியிட்டுப் பிரமாணத்தால் நிலைபெறச் செய்து, எங்களையும் அவ்வழியில் நடத்துவிப்பதற்கு அடுத்த தருண மிதுவாக விருக்க, இத்தருணத்தி லிப்படிச் சொல்வது தங்கள் கோட்பாட்டிற் கழகல்ல". என்ருர்கள்.

உடனே நாயகர் "நித்திய—நிரஞ்சன—நிர்மல-நிராமய—நிராலம்ப:—சொரூபமும்—அவாங் மனோ கோசரமுமான பிரமத்தை நினைப்பது தக்கதென்பதும், விக்கிரக ஆராதனை செய்வது தகாதென்பதும் எங்கள் பிரமசமாஜ வேதசமாஜ கோட்பாடு" என்று வெளியிட்டார்.

"அவாங் மனோகோசரமான பிரமம், மனதினுலெப்படி நினைக்கப்படும்? ஆகாயம் அடியாலும் படியாலும் அளக்கப்படும் - காற்று கையாற் பிடிக்கப்படும்-என்பவைபோல், வார்த்தை மாத்திரத்தாலன்றி, அர்த்த லக்ஷயானுபவங்களுக்கு இடம்பெற வில்லையே!" என்று சுவாமிகள் வினவினர்.

"மிதக்கியானமுள்ள நம்முடைய மனத்திற்குப் பரிமித வத்துவைப்போ 'லடங்காதென்று சொன்னதல்ல" என்று நாயகர் உத்தரித்தனர்.

"மனத்திற்கு அகோசரமென்பது, மனத்திற்கு விஷயம் படாததென்று பொருள்படுமே யல்லது, சிறிது விஷயமாகிப் பெரிது விஷயமாகாதென்று பொருள் படாது" என்றும்,—"அவ்வாறு பொருள்கொள்வது லக்ஷண வுபலக்ஷண விதியல்ல" என்றும்,—"ஒரு காலத்தில் ஒரு பொருள் சிறிது விஷயமானுல், மற்ருெரு காலத்திற் சிறிது விஷயமாகும்; பிறிதொரு காலத்திற் சிறிது விஷயமாகும்; இவ்வாறு முழுவதும் விஷயமாகும்" என்றும்;—"அவாங் மனோ கோசரமென்றதில் மனத்திற்குச் சிறிது விஷயமானபடி வாக்குக்குஞ் சிறிது விஷயமாதல் வேண்டும்" என்றும்,—"இங்ஙனம் மனவாக்குகளுக்குச் சிறிது விஷயமாகுமென்று கொண்டபோது, கண், காது, மூக்கு, மெய், வாய், கை முதலிய மற்ற

Koviloor Digital Library

இந்திரியங்களுக்கும் விஷயமாகுமென்பதும் தானே விளங்குதலால், பிரம லக்ஷணத்தோடு விரோதப்படும்" என்றும்,—"மனம் முதலான அந்தக் கரணங்களுக்கும், கண்முதலான இந்திரியங்களுக்கும், நாம ரூபக்கிரியை கள் விஷயமாகுமல்லது, தத்துவாதீதமாகிய பிரமம் விஷயமாகு மென் பது விபரீதவுணர்ச்சி" என்றும், — "மனேலயங்கிடைத்த பின்னர் பிரமானுபவங் கிடைக்கும்" என்றும்,—"மனஞ் சிறிது தோன்றி னும் ஆத்மஞானம் விளங்காது" என்றும்,—"**மனம்:** அசத்து, சடம், அநித்தியம், துக்கம், அசுத்தம் உடையது; — **பிரமம்:** சத்து, அறிவு, நித்தியம், இன்பம், சுத்தம் உடையது—ஆகலின், மனத்திற்குப் **பிரமம்** எவ்வகையினும் விஷய மாகாது" என்றும்,—"இவ்வாறே வேத முத லிய கலைகளிலும், ஆப்த வாக்கியங்களிலும், ஆணையிட்டுள்ளது" என் றும்,—"**பிரமம்** மனத்திற்கு விஷயப்படாதென்பது அனுபவத்திற்கும் மற்ற ஹேதுக்களுக்கும் யூகங்களுக்கும் பொருந்துகின்ற பக்ஷம்" என் றும்,—சுவாமிகள் சொல்லினர்.

பின்னர், சிலபொழுது நாயகர் சும்மாவிருந்தனர். அங்கிருந்தவரிற் சிலர், நாயகரைப் பார்த்து, "சும்மாவிருக்கப்படாது, உத்தரிக்க வேண் டும்" என்றார்கள். நாயகர், சற்று நேரஞ் சென்று மீளவும் "மனத்தி னல் பிரமத்தை நினைக்கக் கூடும்" என்று முன் சொல்லியதையே சொல்லினர்.

"**தங்களிஷ்டப்படி** விதியைக் கடந்த விவகாரமுந் தடைபடு கின்றது, பிரமம், மனத்திற்கு விஷயமாகுமானல் கண்ணுக்கும் விஷய மாகும்; இவைகளுக்கு, விஷயமாகுமானல், மற்ற இந்திரியங்களுக்கும் விஷயமாகும் என்று நான்முன் சொல்லியதைத் தாங்கள் சிறிது உய்த் துணர வேண்டும்" என்று சுவாமிகள் சொல்லினர்.

நாயகர், சற்றுநேரஞ் சென்று "மனத்திற்கு விஷயமாவதெல்லாங் கண்ணுக்கு விஷயமாகுமோ?" என்றார். அதற்கு சுவாமிகள் "ஆகும்" என்றார்கள்.

நாயகர் "மற்ற இந்திரியங்களுக்கு விஷயமாகாமல் மனத்திற்கே விஷயமாகத் தக்கது ஒன்றுமில்லையோ! ஒன்றுமில்லையோ!!" என்று பலமுறை வியந்து வினவினர்.

"**மனத்திற்கே** விஷயமாகத் தக்கது யாது? அதனைத் தாங்களே வெளிப்படுத்தல் வேண்டும்" என்று சுவாமிகள் கேட்டனர்.

"**ஆனந்தம்** மனத்திற்கே விஷயமாவது" என்று நாயகர் சொல்லினர்.

"**ஒரு ரூப** விஷயத்தைக் கண்கள் கண்டு அந்த ரூப விசேஷத்தால் ஆனந்த விருத்தி யடைந்து, பின்னர் அதன் வழியாக மனத்திற்கும்

Koviloor Digital Library

அவ்வானந்தத்தை யடைவிக்கும்'' என்றும்,—"கண்கள், முன்னர் ஆனந்தத்தை யடைதற்கு அடையாளம், அக்கண்களி லிருந்து சிந்துகின்ற பாஷ்பங்களே'' என்றும், — "அதை யானந்த பாஷ்பமென்று வழங்குவதே போதுமான பிரமாணம்'' என்றும்,—"இஃதன்றி, நேத்திரானந்தம், சிரவணானந்தம்—என்று அறிவுடையோர் பிரயோகிப்பதை யூகிக்க வேண்டும்'' என்றும்,—இங்ஙனம் கண்முதலிய இந்திரியங்களும், மனம் முதலிய கரணங்களும் ஆன்மாவுக்கு உபகாரக் கருவிக ளாதலால், அவைகள் ஆனந்த மடைந்தன வென்பது உபசரிப்பு'' என்றும்,— "ஆனந்தம், பிரத்தியேக ஆன்மஞான விஷயமென்பது உண்மை'' என்றும்—சுவாமிகள் சொல்லினர்.

பின்னர் சற்றுநேரஞ் சென்று, "ஓரிந்திரியத்திற்கு விஷயமாவது வேறோ ரிந்திரியத்திற்கும் விஷயமாகு மென்றது எப்படி? காதுக்குப் புலப்படுவது மூக்குக்குப் புலப்படாது, கருத்துக்குப் புலப்படுவது கண்ணுக்குப் புலப்படாது'' என்று நாயகர் சொல்லினர்.

"முன்னர் அவாங் மனோகோசர மென்றதற்குத் தாங்கள் கொண்ட கருத்தின்படி வாக்குக்கும் மனத்திற்கும் பிரமம் சிறிது விஷயமாகுமானால், கண்களுக்குங் கைகளுக்குஞ் சிறிது விஷயமாகுமென்று தாங்களே யூகித்தறியலாம்'' என்றும்,—"ஒருபொருள் மனத்தினால் நினைக்கப்படுமானால் காதினாலுங் கேட்கப்படும்; காதினாற் கேட்கப்பட்டது கண்ணினாலுங் காணப்படும்; கைகளாலும் பிடிக்கப்படு மென்பது உபதர்க்க-உபலக்கணம்'' என்றும்,—"ஸ்தூல சூக்கும காரண பூதங்களால் உருவாகித் தோன்றுகின்ற பொருளினிடத்து, மன முதலான கரணங்களுக்கும், கண் முதலான இந்திரியங்களுக்கும் விஷயங்களாகத் தக்க பண்புகள் உண்டாயிருக்குமென்று அறிந்த பக்ஷத்தில், ஒரு பொருள் ஒரு பண்பினால் ஓரிந்திரியத்திற்கு விஷயமாகுமானால், அந்தப் பொருள் மற்றொரு பண்பினால் மற்றோ ரிந்திரியத்திற்கும் விஷயமாகு மென்று சாதாரண ஜனங்களாலும் அறியப்படும்'' என்றும்,—"அக்ஷயோக ஞாயத்தாலும், இந்திரியங்களின் சொரூப ரூப சுபாவ வியத்தி விசேஷ சாமானிய முதலியவைகளையும், மனமுதலான கரணங்களின் சொரூப ரூப சுபாவ வியாபக வியத்தி விசேஷ சாமானிய முதலானவைகளையும் வெளிப்படுத்துகின்ற தத்துவ சாத்திரங்களாலும், பிரகிருதி சாத்திரங்களாலும், உய்த்துணர்ந்து தெளியப்படும்'' என்றும்,—" கண்களும் மனமும்,—அதிகரணோ பாதமான சம்பந்த முடையது'' என்றும்,—" மத்திய, பூத, தூல, சூக்கும காரியம்'' என்றும்,—" இதனால் மனத்திற்கு விஷயமாவது, கண்களுக்கும் விஷயமாகும்'' என்றும்,—"கண்களுக்கு விஷயமாவது, மனத்திற்கும் விஷயமாகும்''—என்றும் சுவாமிகள் சொல்லினர்,

Koviloor Digital Library

அந்தச்சமயத்தி லிவைகளைக் கேட்டுச் சூழநின்ற திருவயிந்திர புரம் வைஷ்ணவப் **பிராமண** பண்டிதர்களும், ஸ்மார்த்த பண்டிதர் களும் அந்தச் சபையினுட் புகுந்திருந்து சுவாமியை நோக்கி, "மனத் திற்குப்புலப்படுவது கண்களுக்கு எப்படிப் புலப்படும்?" என்று வினவினர்.

"ஒருபொருளில், ஸ்தூலப் பிரகிருதி-சூக்குமப் பிரகிருதி-காரணப் பிரகிருதி - மகா காரணப் பிரகிருதி - மூலப் பிரகிருதி - என ஐவகைப் பிரகிருதி அங்கங்க ளுண்டு" என்றும்,—"அவைகளில் காரணப் பிரகிருதி மகா காரணப் பிரகிருதி யங்கங்கள் மனத்திற்கு விஷயமாகும்" என் றும்; —"ஸ்தூல சூக்குமப் பிரகிருதி அங்கங்கள் கண்களுக்கு விஷய மாகும்" என்றும்;—"இவைகளைச் சாதாரண லக்ஷணம்" என்றும், — "அசாதாரண லக்ஷணத்தில், கண்ணறிவு, பலமுறை சாதன லக்ஷியத் தால் நுட்பவறிவாகி, மனத்திற்கு விஷயமாகின்ற காரண மகாகாரணப் பிரகிருதி யங்கங்களையும் அறியும்" என்றும், — "இவ்வா றறிவது, அசாத்தியமல்ல, சாத்தியமே" என்றும்,—"இதனை **அக்கயோகசாதனம்** முதலிய வழிகளாலும்,—தத்துவ சாத்திரங்களாலும்,—அநுமான முத லிய பிரமாணங்களாலும்,—அறிந்து கொள்ளலாம்"—என்றும்,—"அன்றி, மனத்திற்குப் புலப்படுவது பிரபஞ்சம்-அது கண்களுக்கும் புலப்படும்" என்றும் சுவாமிகள் சொல்லினர்.

"மனத்திற்குப் பிரமம் புலப்படாதோ?" என்று பண்டிதர்கள் வினவினார்கள்.

"பிரமம் மாயாதீதமாதலால், மாயாகாரியமாகிய மனத்திற்குப் புலப்படாது" என்று சுவாமிகள் சொல்லினர்.

ஆனால், "பிரமத்தை யெப்படி யறியலாம்?" என்று பண்டிதர்கள் வினவினார்கள்.

"ஆன்ம ஞானத்தால் அறியலாம்" என்று சுவாமிகள் சொல் லினர். பின்னர் **சம்மதித்தவர்களாக,** பண்டிதர்கள் சும்மா விருந் தார்கள்.

அதன்மேல் அங்கிருந்தவர்களிற் சிலர் நாயகரைப்பார்த்து, "சும்மா விருக்கப்படாது, தருணம் நேரிட்டபோதே உத்தரிக்க வேண்டும்" என்றார்கள். நாயகர், ஆரம்பத்தில் சொன்னது போலவே "லிகிதமூல மாய் உத்தரிக்கின்றேன்" என்று சொல்லினர். அதுகேட்டு அந்தச் சபையிலிருந்தவர்களும், அதன் புறத்து நின்றவர்களுஞ் சிரித்தனர். அதுபொறாமல், நாயகர் "இன்னும் எட்டுத்தினத்திற்குள் இவ்விடத்தில் என்னைச் சிரித்தவர்களையெல்லாம் நான் சிரிப்பிக்கச் செய்கின்றேன்" என்று சபதங்கூறினர்.

Koviloor Digital Library

அதுகேட்டு அந்தச்சபையில் உணர்வுந் தயவுமுடைய வொருவர், "இதென்ன கெர்வித வார்த்தை!" என்றனர்.

அது பொருமல், நாயகர் அளவிறந்த கோபாவேசத்தோடுங் கண்கள் சிவப்பத் தேகம் பதைப்ப, வாயாற் சில பழிபடு வார்த்தைகளைச் சொல்லிக் கொண்டே திடீரென் றெழுந்து, இடி முழங்கினாற் போல் ஆரவாரித்தனர். இவருக்குச் சகாயமாய், பின்வந்தவர்களும், நெருப்பில் நெய்விட்டதுபோற் கோபமூண்டு கோஷித்தனர்.

அந்தருணத்தில் சுவாமிகள், நாயகருக்கும் மற்றவர்களுக்குங் கோபந் தணியத்தக்க நல்ல வார்த்தைகளைச் சொல்லி, எழுந்தவரை மீளவும் உட்காரவைத்து, "ஐயா நாயகரவர்களே! கெர்வித வார்த்தையென்ற சத்தத்தின் லக்ஷியத்தை நாம் உள்ளபடி யறிந்தால், இவ்வளவு தீவிரம் நேரிடுமென்று எனக்குத் தோன்றவில்லை. ஆயினும், போனது போக, இனியாவது இச்சபையாரறிய பிரமம் மனத்திற்கு விஷயமாகாதென்று நான் தெரிவித்தபடி, தாங்களுஞ் சம்மதிக்கின்றபக்ஷத்தில், சம்மதமென்று சொல்லிச் சும்மா விருக்கவேண்டும்; அவ்விதம் சம்மதியாத பக்ஷத்தில் பிரமாணத்தாலும், யுக்தியாலும், அனுபவத்தாலுந் தங்கள் கோட்பாட்டை நிறுத்திவிர்களாக!" என்று சொல்லினர்.

நாயகர் "இப்போது என்னை விட்டுவிட்டால், பின்பு லிகித மூலமாக வாதிக்கின்றேன்" என்று சொன்னார்.

"எதிர்நின்று வாதிப்பதற்குக் கூடாமையால், லிகித மூலமாய் வாதிப்பீர்களென்பதில் நம்பிக்கை யில்லை யென்றும், லிகித மூலமாய் வாதிப்பது தர்க்க லக்ஷண மரபல்லவென்றும் முன்னரே குறித்திருக்கின்றேன்" என்றுஞ் சொல்லி முடித்துப் பின்னர், அந்தச் சபையிலுள்ளோரை நோக்கி, "பிரம்மானுபவமானது, விக்கிரக ஆராதனை செய்தாலல்லது வாராது" என்றும், "விக்கிரகம் என்பது விசேட இடம் என்று பொருள்படும்" என்றும், "ஆன்மா இருப்பதற்குக் கிரகம், மனிதர் முதலிய ஜீவ தேகங்கள்" என்றும், "பிரமப் பிரகாசமிருந்து வெளிப்படுவதற்கு விக்கிரகம் தேவ தேகங்கள்" என்றும், "அத் தேவ தேகங்களாகிய விக்கிரகங்களில் விதிப்படி பக்தியோடு உபாசிக்கில் பிரமப் பிரகாசம் எளிதில் வெளிப்பட்டு அனுக்கிரகிக்கும்" என்றும், "அவ்வாறு விசேட இடமென்று சொல்லப்படுகின்ற விக்கிரகங்களில், பிரமப் பிரகாசம் வெளிப்பட்டு அனுக்கிரகித்ததற்கு அடையாளம், சில காலத்திற்குமுன் விக்கிரகாராதனஞ் செய்த பத்தர்கள், குஷ்டம், குன்மம் முதலான தீராத வியாதிகளைத் தீர்த்தும், இறந்தவர்களை எழுப்பியும், இன்னும் செயற்கரிய அநேக மகத்துவங்களை நடத்தியும் இருந்ததே போதுமானது" என்றும், "இப்போதும் விக்கிரகாராதனை செய்கின்ற பத்தர்கள் சில மகத்துவங்களைச் செய்து வருகின்றார்கள்" என்றும்,

"பிரம சமாஜத்தார்-வேத சமாஜத்தார் அந்த அடையாளங்களை யுடையவர்களாகத் தோன்றவில்லை" யென்றும், "நாமெல்லாம், நமது பக்குவத்திற்குத் தக்கபடி விக்கிரகாராதனை செய்து, அதனால் அருளைப்பெற்று, அதனால் அறிவுவிளங்கி, அதனால் பிரம சுகத்தை யனுபவிக்கலாம்" என்றும்,—சுவாமிகள் சொல்லிக் கொண்டே எழுந்தனர். இவ்வண்ணமாக அவ்விவாதம் வெற்றியோடு முடிவுற்றது.

49. புலவர்களின் விவாதம்

பின்னொருகால், இரண்டு புலவர்கள் தங்களுக்குள்ள விவாதத்தைத் தீர்த்துக்கொள்ள அடிகளிடத்து வந்தனர். அவர்களை அடிகள் அமரச்செய்து "என்ன காரணம்?" என்று வினவினார். அதற்கவ் வித்வான்கள் "அருளானந்தப் பொதுவாழ்வுடைய ஐய! உலக நிகழ்ச்சிகளனைத்தும் (நல்லவையும் கெட்டவையும்) ஆண்டவனாலேயே நடக்கின்றன '**அவனன்றி ஓரணுவும் அசையாது**'—என்பது எங்களுள் ஒருவருடைய வாதம்;

இந்தச் சிவனால் வரும்அறு பகையெலாம் இவன் செயல் என்னாமல்
அந்தத் தேவனால் வரும்என்ற மூடர்கள் அதோகதி அடைவார்கள்
இந்தச் சிவனால் வரும்அறு பகையெலாம் இவன் செயல் அல்லாமல்
அந்தத் தேவனால் அன்று எனும் விவேகிகள் அமலவீடு அடைவாரே.

(கைவல்யம்—சங் - 59 - ம் பாட்டு)

என்பது மற்றொருவருடைய வாதம். ஆகவே, இவ்விரண்டு கொள்கைகளுள் எக்கொள்கை சிறந்தது என்பதைத் தேவரீர் திருவாய்மலர்ந்தருளல் வேண்டும்: அதற்காகவே இங்கு வந்தோம்" என்று கூறினர். அதற்கு சுவாமிகள் "ஒரு நிர்வாண சந்நியாசி நடுத்தெருவில் போய்க்கொண்டிருக்கும் பொழுது அவரைக்கண்ட ஒருவன் 'மிகநல்லவர்'; என்று எண்ணியவனாய் அவருக்கு ஒரு கனிந்த வாழைப்பழங் கொடுத்தான். மற்றொருவன், 'பெண்கள் நடந்து செல்கின்ற வழியில் நிர்வாணத்தோடு செல்கின்ற இவன் மிகப் பொல்லாதவன்,' என்று கல்லால் அடித்தான். இவ்விருவருடைய செய்கைகளையும் ஓரிடத்திருந்து பார்த்த மூன்றாவது மனிதனொருவன், உடனே அங்குவந்து சந்நியாசியையும், அவருக்கு வாழைப்பழங் கொடுத்தவனையும், கல்லாலடித்தவனையும் ஒருங்கே அழைத்துச்சென்று நியாயாதிபதியிடம் விடுத்து "இச்சந்நியாசியை இத்துஷ்டன், இந்த மனிதர் கொடுத்த பழத்தை வாங்கும்பொழுது கல்லாலடித்தான்" என்று அடித்தவனைக்காட்டி அடுத்தவனைச் சாக்ஷியாகக் கூறினான். அப்பொழுது அந்நீதிபதி, சந்நியாசியாரை நோக்கி "யார் உம்மை அடித்தது?" என்று கேட்டார். சந்நி

Koviloor Digital Library

யாசியார் **வாழைப்பழங் கொடுத்தவனைக்காட்டி, "அடித்தவன் இவன்"** என்றார். கொண்டுவந்துவிட்டவர், "பழங்கொடுத்தவர் இவர்-கல்லாலடித்தவன் இவன்" என்று அவ்விருவரையும் நீதிபதியிடம் காட்டிக்கூறி யிருக்கும்பொழுது சந்நியாசியார் **'இவ்வாறு பழங்கொடுத்தவனும் கல்லாலடித்தவனும் ஒருவனே'** என்று கூறுகின்றாரே, என்று தெளியாதவராய், மீளவுஞ் சந்நியாசியாரை நோக்கிப் "பழங் கொடுத்தவர் யார்?" என்று வினவினார். **கல்லாலடித்தவனைக் காட்டி "பழங்கொடுத்தவன் இவன்"** என்றே அப்பொழுதுஞ் சந்நியாசியார் கூறினார். அப்பொழுதுந் தெளிவுறாத நீதிபதி பின்னுஞ் சந்நியாசியாரை நோக்கிக், "கல்லாலடித்தவன் யார்?" என்று வினவ, அதற்கவர் **அழைத்துக்கொண்டு வந்தவனைக் காட்டி, "கல்லாலடித்தவன் இவன்"** என்று பதிலளித்தார். நீதிபதி, உடனே உண்மை தெளிந்து கல்லாலடித்தவனைச் சிறைப்படுத்திவிட்டுச் சந்நியாசியாரையும், பழங் கொடுத்தவரையும், அழைத்து வந்தவரையும் அனுப்பிவைத்தார். கதை இவ்வளவே.

இக்கதையில் உள்ள சந்நியாசியை ஒத்தவர்கட்கு **'எல்லாம் ஆண்டவன் செயல்களே; அவனன்றி ஓரணுவும் அசையாது'** என்னுங்கொள்கை ஏற்றது. ஏனெனில் அடித்தவன் — அடியாதவன் ஆகிய இருவரையும் வேறு பிரிக்கவில்லை; வேற்றுமை செய்யவில்லை. அதுபோல **'இது என்னுடைய செயல்' 'இது கடவுளுடைய செயல்'** என்று பிரித்துக் காணாமல் **எல்லாம் இறைவன் செயலே** என்று, எல்லாவற்றையும்,

> அன்றே யென்றன் ஆவியும் உடலும் உடைமை யெல்லாமுங்
> குன்றே யனையாய் எனையாட் கொண்டபோதே கொண் டிலையோ
> இன்றோ ரிடையூ றெனக் குண்டோ எண்டோண்முக்க ணெம்மானே
> நன்றே செய்வாய் பிழை செய்வாய் நானோ இதற்கு நாயகமே.

என்று கூறியாங்கு ஒப்படைத்து உயிர் தாங்குபவர்கள் அவர்களாதலால் அவர்கள் செய்வினையும் ஆண்டவனுடைய வினையேயாகும்.

சந்நியாசியையும் மற்றிருவரையும் நீதிபதியிடத்து அழைத்துச் சென்றவரை ஒத்தவருக்குக் கடவுள் செயல்கள் சில-ஜீவர்கள் செயல்கள் சில என்னும் கொள்கை ஏற்புடையது. ஏனெனில், அவர்கள் **வேற்றுமை மயக்கில் விழுந்து கிடப்பவர்கள்."** என்று அவர்களைத் தேற்றி அனுப்பி வைத்தனர்.

Koviloor Digital Library

50. சித்தரின் வருகை

மற்றொருநாள் இரவு கூடலூர் அப்பாசாமி செட்டியார் வீட்டினுள்ளிருக்கும் அறையொன்றில் ஐயா அவர்கள் தனித்திருக்கிற காலத்தில், திடீரென யாரோ ஒரு மனிதர் தங்கு தடையின்றி அவ்வீட்டினுள் பிரவேசித்தார். அதனைக் கண்ட அவ்வீட்டுத் திண்ணையிலிருந்த சிலர் அப்புது மனிதரைப் பின்தொடர்ந்தனர். ஆனால், அவர்கள் உள்ளே சென்றதும் முன்னால் சென்ற அம்மனிதர் மாயமாய் மறைந்துவிட்டனர். ஆதலால் இவர்கள் 'அம்மனிதர் எங்கேயாவது ஒளித்துக் கொண்டாரோ!' என்னும் ஐயமுடையவர்களாய் அவ்வீட்டிலுள்ள ஒவ்வொரு அறைகளையும் பரிசோதிக்கத் தொடங்கி, ஐயா அவர்கள் இருக்கும் அறை நீங்கலாக மற்றைய அறைகளையும் இடங்களையும் பரிசோதித்தும், அம்மனிதர் புலப்படாது போகவே கடைசியாக ஐயா அவர்களிருக்கும் அறைக்குச் சென்று, அவர்களிடத்து இந்நிகழ்ச்சி முழுவதையும் எடுத்துக்கூற, பெருமானார் புன்னகையோடு அவர்களை நோக்கி "வந்தவர் மனிதரல்ல, அவர் ஒரு சித்தர்; அவர் நம்மைக் காணவே இங்கு வந்தார்; இந்நேரம் அவர் காசியிலிருப்பார்; அவர் கொடுத்துப் போனதே இந்த லட்டு" என்று அவர்களுடைய சந்தேகத்தை விளக்கியருளினர். அவ்வருள் மொழிகளைக் கேட்ட அன்டர்கள் பெரிதும் மகிழ்ச்சி அடைந்தனர்.

51. தாசில்தாரின் தருக்கு

மஞ்சகுப்பம் என்னும் ஊருக்கு தாசில்தாராக இருந்த வேங்கடசுப்பு ஐயர் என்பவர், இரக்கமின்றித் தாம் ஊர்திகளில் ஏறிக்கொண்டு, செல்கின்ற இடங்களுக்கெல்லாம் ஊது கொம்பு வைத்து ஊதிக்கொண்டே வருவதற்கென ஒரு சக்கிலியை நியமித்துப் பலநாட்களாக, அம்மாதிரியே நடத்திவந்தார். இதனை யறிந்த நம் ஐயா அவர்கள், அவ்வேங்கடசுப்பு ஐயர், பிரசங்கத்திற்கு வந்தபொழுது அவரையழைத்து "நீர் வண்டியிலேறிச் செல்லும்பொழுது நும்போன்ற ஒரு மனிதன் பல மைல்கள் தூரம் நடந்து ஓடி வருவதென்றால், இதைவிட வேறு ஜீவகாருண்யமற்ற செயல் என்ன விருக்கிறது! அல்லாமலும் இந்தவாழ்வு எத்தனை நாளைக்கு நிலைத்திருக்கப் போகிறது. ஆதலால் இனி அவ்வழக்கத்தை அறவே விட்டு விடுங்கள். இல்லையானாலும், தாங்கள் செல்லவேண்டிய ஊருக்கு முன்னமேயே அவனை அனுப்பிவைத்து, அந்த ஊருக்கு அருகே நீங்கள் போனதும் அவன் ஊதுவதை வைத்துக் கொள்ளுங்கள்" என்று அறிவுறுத்தினர்.

Koviloor Digital Library

52. உண்ணுக்கும் — கண்ணோயும்

ஒருகால் உண்ணுக்கு வளர்ந்து அதனால் பெருந்துன்புற்ற சேலம் வாசியாகிய ஒரு ஜவுளி வியாபாரி பெருமானை அடுக்க, பெருமானுர் அத்துன்பத்தைத் திருநீறு கொடுத்தே தீர்த்தருளினார்கள். அப்படியே, கண்ணோயினால் முகம்வீங்கித் துன்புற்ற ஒருமனிதன், ஐயா அவர்கள் விவகாரஞ் செய்து கொண்டிருக்கும் வேளையில் அவ்வழியேபோக, அச்சமயம் பெருமானுர் அம்மனிதனைப்பார்த்து சும்மா இருக்கச் சகிக்காமல் உடனே அவனை அழைத்துப், பக்கலிலிருந்த ஒரு வாழைப் பழத்தைக் கொடுத்து "இதை வைத்துக்கட்டு; உன் நோய் தீர்ந்துவிடும்" என்றுகூற, அவனும் அவ்வாறே அப்பழத்தினைக்கட்டிக் குணமடைந்தான்.

53. வடலூர்

சத்திய தருமச்சாலை

இங்ஙனமாக எம்போல்வார் மயக்கொழித்து இன்னருள்சுரந்து வரும் ஏந்தலார்க்கு, எல்லா உயிர்களும் பசியற்று இன்புற்றுவாழவும், ஜீவகாருண்யமே கடவுள் வழிபாடு என்பதையும்—ஜீவகாருண்யமே மோக்ஷவீட்டின் திறவுகோல் என்பதையும் மக்கள் உணர்ந்து — பேரின்ப சித்திப் பெருவாழ்வடையும் பொருட்டும், ஓர் தருமச்சாலை இயற்றல் வேண்டுமென்னும் எண்ணமுண்டாக, அதனைத்தம் அருமை மாணவர்களிடத்தும் அன்பர்களிடத்தும் அறிவித்தார்கள். அவர்களும் "அப்படியே செய்யக் காத்திருக்கின்றோம்." என்று கூறிப் பல இடங்களைக் குறிப்பிட்டு 'அங்கே ஏற்படுத்தலாம்—இங்கே ஏற்படுத்தலாம்' — என ஒவ்வொருவரும் ஒவ்வோரிடத்தைக் குறிப்பிட்டார்கள். வள்ளலார், ஒரு நாள் காலை, திடீரென தமது மெய்யன்பர்களுடன் புறப்பட்டு திருச்சிற்றம்பலம், திருக்கூடலையாற்றூர், திருமுதுகுன்றம், திருவதிகை, திருவிரும்பைமாகாளம், திருப்பாதிரிப்புலியூர், தியாகவல்லி ஆகிய இச் சிவதலங்களுக்கு நடுவேயும், தென்பெண்ணை, திருக்கெடிலம், வெள்ளாறு, மணிமுத்தாநதி ஆகிய நதிகள் நாற்புறமுஞ் சூழப்பெற்றதாயும், வடற்பெரு வெளியாய்ப் போவார் வருவார்க்குப் பசிதீர்க்கப் போதியதாயும், எவ்வகை விவகாரங்களுமில்லாது தனித்திருந்து இன்புறுதற்கு ஏற்றதாயும், உள்ள வடலூர் என்னும் தெய்வத் திருப்பதியில் ஒரு பரந்த இடத்திலே — தற்போது தருமச்சாலையுள்ள இடத்தில்—வந்து நின்று, 'இதுவே தகுதியான ஞானபூமி' என்று தீர்மானித்தார்கள்.

Koviloor Digital Library

அத் தீர்மானத்தைச் சிரமேற்கொண்ட அன்பர்கள், அவ்வாறு செய்ய முயற்சிக்க அதன் பயனாக அவ்வூரிலுள்ளவர்களே, ஐயா அவர்களது **தருமச்சாலைக்கு எண்பதுகாணி நிலத்தைப் பட்டா செய்து கொடுத்தனர்.**

தருமச்சாலைத் திருப்பணி நடந்துவரும் நாட்களில் ஒருநாள், ஐயா அவர்கள், **பின்னலூர் சாலையில்** போய்க்கொண்டிருக்கும் பொழுது, அம்பாள்புரம் **வேம்பையர்** என்னும் பாகவதர் யாரோவென அறியாதவராய், தூரத்திலிருந்துகொண்டே **"போகிறது யார்?"** என்று கேட்க, அதற்கு நம் ஐயா அவர்கள் **"நான்தான் நீலவியாபாரி"** என்று கூறினர். நீலம் என்றால்—**மாயை [அஞ்ஞானம்]** என்றும், வியாபாரியென்றால் **வாங்க வருபவர்** என்றும் பொருள் கொண்டால், அடிகளுடைய நிலைக்கு அது ஒருவாறு பொருந்தக் காணலாம். எனினும் ஐயா அவர்கள் எப்பொருள்பட அதனைக் கூறினரோ? அறியேம்.

54. வேட்டவலம் — ஜமீன்தார்

வேட்டவலம் என்னும் ஊருக்கு ஜமீன்தாராகிய **அப்பாசாமி பண்டாரியாருக்கு** மனைவிமார் இருவர். அவருள் ஒருவரை **பிரம ராக்ஷஸம்** என்கின்ற பேய் பிடித்துக்கொண்டது; மற்றொருவரை **மகோதர நோய்** அடுத்துவிட்டது. பிரம ராக்ஷஸம் என்னும் பேயும் நீங்காதபேய்; மகோதரம் என்னும் நோயும் தீராதநோய். தனது செல்வமெல்லாம் செலவழிந்தாலும் செலவழியட்டும், தம்முடைய இரு மனைவியரும் குணப்பட்டால் போதுமென ஜமீன்தார் ஏராளமான பொருட்செலவு செய்து பூசாரிகளையும், மந்திர வாதிகளையும், வைத்திய நிபுணர்களையும் கொண்டு பரிகாரஞ்செய்து பார்த்தார். எவையும் பலிக்கவில்லை. ஊர்களிலுள்ள கிராமதேவதைகள் எனச் சொல்லுகின்ற சிறு தெய்வங்களனைத்திற்கும் அளவில்லாத ஆடு கோழிகளைப் பலி கொடுத்தார். ஐயோ! பாவம். ஜமீன்தாருடைய மனைவியர் இவ்வாறாக வேண்டுமென்று அந்த ஆடு கோழிகள் மனத்தினாலும் எண்ணியிருக்குமா? அதற்குப் பதிலாக அவருக்குப் பாவ மூட்டையே சேர்ந்தது. எனவே அவர் எண்ணம் எவ்வகையினாலும் ஈடேறவில்லை. அப்படியிருக்கும்பொழுது, அவ்வூரிலுள்ள ஆடு கோழிகள் அழிந்தநுபோக அழியாதிருப்பவை செய்த அருந்தவத்தாலோ,-**மருள்நெறி யொழிந்து அருள்நெறி ஓங்கும் அருமைக்காலம் அணுகியதாலோ**-ஐயா அவர்களின் பெருமை விளங்க ஆண்டவர் திருவுள்ளத்தெண்ணியதாலோ,— அல்லது ஜமீன்தார் அடுத்தடுத்தெடுத்த அநேக முற்பிறப்புகளில் செய்த அருந்தவத்தின் பயனாலோ, — நம் ஐயா அவர்களிடத்து அப்பெருந் துயரத்தை அகற்றிக் கொள்ளலாம் என்னும் அருமை எண்ணம்

Koviloor Digital Library

அந்த ஜமீன்தாரின் உள்ளத்தில் உண்டாயது. ஆகவே, அவர் தம் ஏவலாளர் சிலருடன் ஐயா அவர்களிடத்துவந்து அடிபணிந்து, "எம்மை யாட்கொள்ளவந்த அருளுருவே! தேவரீர் பெரிதுந் தயைசெய்து எம் இல்லத்திற்கு வந்து எம்மை ஆட்கொள்ளல் வேண்டும்" என வேண்டினர்.

ஐயா அவர்களும் ஆண்டவனின் திருவருள் தூண்டுதலால் அதற் கிசைந்தவராகி ஜமீன்தார் முன்னதாகச் செல்லவும், அவர் தம் ஏவலாளருடன் அவருடைய அரண்மனைக்குச் சென்றார்கள். பெருமானார் வருகைக்காக ஜமீன்தார், நகரை அலங்கரித்து, அரண்மனையைச் சிங்காரித்து, பெருமான் வந்து அமர்வதற்கென இரண்டு நாற்காலிகளை அமைத்து வரவை எதிர்நோக்கிக் கொண்டிருந்தார். இரண்டு நாற்காலிகளை அமைத்ததன் காரணம், யாதெனில்:—அவ்விரண்டில் ஒன்றைத் தாம் மனதிலே எண்ணிக்கொண்டு தாம் எண்ணியிருக்கிற அந்நாற்காலியிலேயே சுவாமிகள் அமர்வாராயின் **அவரே நம்மை ஆட்கொள்ளவந்த பெரியார்** என்பதைத் தீர்மானிக்கக்கூடும்;—என அந்த ஜமீன்தார் மனத்தில் எண்ணியதேயாம். இஃதிவ்வாறிருக்க,

பெருமான், ஜமீன்தாரின் ஆட்கள் அழைத்துவர அப்பதியை யடைந்து, அவர் மாளிகைக்குள் நுழைய ஆரம்பித்த அப்பொழுதே **பிரம ராக்ஷஸம்** பிடித்திருந்த ஜமீன்தாரின் **முதல் மனைவியார்** வீட்டினுள்ளிருந்து வெளிவாயிலை யடைந்து ஐயாவை வணங்கி, **"ஐயா அவர்களே! நான் போய் வருகிறேன்; விடைகொடுத்தருளல் வேண்டும்"** என்று திருநீறு வாங்கித் தரித்துக்கொண்டனர். அப்பொழுதே அவரைப் பற்றியிருந்த **பிரம ராக்ஷஸம்** அவரை விட்டுப்பிரிந்துபோயது.

அதன்பின் ஐயா அவர்கள் உள்நுழைந்து ஜமீன்தார் மனத்தில் **எண்ணங்கொண்டிருந்த நாற்காலியிலேயே** அமர்ந்தருளினார்கள். இவ்விரு நிகழ்ச்சிகளையுங் கண்ட ஜமீன்தார் ஆனந்தக்கடலில் மூழ்கினர். உடனே வள்ளலாரின் திருவடிகளில் விழுந்து வணங்கினர்; எழுந்தார். இன்னது சொல்வதென்றே அவருக்குத் தெரியவில்லை கண்களினின்றும் ஆனந்தக் கண்ணீர்பெருக "அடியேனது குறை தவிர்த்தாண்டு கொண்ட ஆண்டவரே! அடியனேன் தங்கட்கு என்ன கைம்மாறியற்றப் போகின்றேன்? என்னுடைய செல்வ முழுவதும் எடுத்துக் கொடுத்தாலும், எம்பெருமானே! தாங்கள் எளியேற்குச் செய்த பேருதவிக்கு அது இணையாகாதே! ஆதலால் **நானும் எனது வழிவழி வருபவர்களும் தேவரீருக்கே அடிமை பூணுகின்றோம்.** அதுவே நாங்கள் செய்யுங் கைம்மாறாகும். இது நிற்க, எனது இளைய மனையாளும் மகோதர நோயினால் பல வருடங்களாக வருந்துகிறாள். அவளையும் தேவரீர் ஆட்கொண்டு அவளுடைய அத்திராப் பிணியையும் தீர்த்தருள வேண்டும்,"

Koviloor Digital Library

என மேலுங் குறையிரந்து கொண்டார். இரக்கம்கொண்ட ஐயா அவர்கள், ஜமீன்தாருடைய இளைய மனைவியாரின் மகோதர நோயையும், மூன்றுவேளை திருநீறு கொடுத்துத் தீர்த்தருளினார்கள்.

55. பலி நிறுத்தம்

பின்னர் அவ்வூரிலுள்ள **பாம்பு, தேள்** முதலிய விஷ ஜந்துக்களைப் பிடித்து ஊருக்குப் புறத்தேயுள்ள காடுகளில் கொண்டுபோய் விடும்படி ஒரு பிடாரனை நியமித்து அவனுக்கு ஊதியங்கொடுக்கச் செய்தனர். அவ்வாறே அவனும் அனேகமாக அவ்விஷ ஜந்துக்களை ஊருக்கு அப்புறப்படுத்தினான். அப்படியே அவ்வூரில் அதுவரை நடந்த **பலியிடும் வழக்கத்தை அறவே மாற்றி** எல்லோரும் பாற்பொங்க லிட்டுப் பரவிப், புகழும் புண்ணியமும் அடையச் செய்தனர்.

நலிதரு சிறிய தெய்வமென் றையோ நாட்டிலே பலபெயர் நாட்டிப்
பலிதர ஆடு பன்றிகுக் குடங்கள் பலிக்கடா முதலிய வுயிரைப்
பொலிவுறக் கொண்டே போகவுங் கண்டே புந்திநொந் துளநடுக் குற்றேன்
கலியுறு சிறிய தெய்வவெங் கோயில் கண்டகாலத்திலும் பயந்தேன்.

துன்னெனக் கொடியோர் பிறவுயிர் கொல்லத்
தொடங்கிய போதெல்லாம் பயந்தேன்
கண்ணினு லையோ பிறவுயிர் பதைக்கக்
கண்டகா லத்திலும் பதைத்தேன்
மண்ணினில் வலையுந் தூண்டிலுங் கண்ணி
வகைகளுங் கண்டபோ தெல்லாம்
எண்ணியென் றுள்ள நடுங்கிய நடுக்கம்
எந்தைநின் திருவரு ளறியும்.

பிறகு, ஆங்கிருந்தும் புறப்பட்டுத் தமது அன்பர்களாய கூடலூர்: தேவநாயகம் பிள்ளை, தொழுவூர்: வேலாயுத முதலியார் முதலானோருடன் ஐயா அவர்கள் **விருத்தாஜலத்தை** யடைந்து ஆங்கு திருக்கோயில் கொண்டெழுந்தருளி யிருக்கும் பரசிவத்தின் மிது பல பாடல்களைப் பாடி மகிழ்ந்து உறைவாராயினர்.

56. கல்பட்டு ஐயா

பின்னர், நம் ஐயா அவ்வூரில் உள்ள **கல்பட்டு ஐயா** (கல்பட்டு இராமலிங்க சுவாமிகள்) என்னும் உத்தம யோகியாருடைய விருப்பின்படி அவருக்குச் **சட்சு தீக்ஷை** செய்து அவரையும் அழைத்துக் கொண்டு **வடலூர்** வந்து சேர்ந்தார்கள். அக் கல்பட்டு ஐயாவுக்கு வடலூரிலேயே ஓர் ஆசிரமமும் அமைத்துக் கொடுத்தார்கள். அவரும்

Koviloor Digital Library



வடலூர் சமரச சுத்தசன்மார்க்க

சத்திய தருமச்சாலை

அருட்பெருஞ்ஜோதி அச்சகம், சென்னை.

Koviloor Digital Library

Koviloor Digital Library

ஐயா அவர்கள் சத்திய தருமச் சாலையில் பிரசங்கம் செய்யும் வேளைகளில் வந்து செவிமடுத்துச் செல்லுவார்.

57. சத்திய தருமச்சாலைத் திறப்புவிழா

இஃதிவ்வாறாக, இதற்குள் சத்திய தருமச்சாலை கட்டி முடிவு பெறப் பிரபவ ஆண்டு, வைகாசித் திங்கள், 11-ஆம் நாள் வியாழக்கிழமை யன்று அச் சாலையினுள் பிரவேசமாகி அப்பொழுதே சன்மார்க்க விளக்கத்தின் முதற் பிரிவாகிய ஜீவகாருண்ய ஒழுக்கத்தின் முதற் பாகத்தை வரைந்து முடித்தனர். முடித்த அப் பகுதிக்குச் சிதம்பரம் வேங்கடசுப்பு தீக்ஷிதர் அவர்களைக்கொண்டு வழிபாடு முதலியன செய்வித்து அதனை வாசிக்கச்செய்தார். செய்ததோடு சமரச வேத பாடசாலை ஒன்றையும் அதன்கண் ஸ்தாபித்தனர். ஸ்தாபித்த நாள்முதல் மூன்று நாட்கள்வரை ஒவ்வொரு நாட்களிலும் பதினாயிரம் பேருக்கு மேற்பட்டவர்கட்கு அன்னமளிக்கப்பட்டது. அத்துடன் நிற்காமல், எப்பொழுதும் அச் சத்திய தருமச்சாலையை நோக்கிப் பசியோடு வருவோருக்கு எவ்விதக் குறைவுமில்லாது அன்னதானம் ஐயா அவர்களுடைய கட்டளைப்படி நடந்தேறிவந்தது. "எப்போதும் அடுப்பு புகைந்துகொண்டே இருக்கவேண்டும்" என்ற ஐயா அவர்கள் வாக்கின்படி இன்றைக்கும் அவ்வாறே நடந்துவருவது எல்லோரும் அறிந்ததே.

சத்திய தருமச்சாலைத் திறப்புவிழா தினத்தன்று வள்ளற் பெருமானால் வெளியிடப்பட்ட பத்திரிகை வருமாறு:—

58. ஜீவகாருண்ய ஒழுக்க விளம்பரம்

அருட்பெருஞ்ஜோதி

கல்வி கேள்விகளால் பகுத்தறியத்தக்க அறிவையுடைய உயர் பிறப்பாகிய **மனிதப்பிறப்பைப் பெற்றுக் கொண்டவர்கள்** அனைவர்க்கும் வந்தனஞ் செய்து **அறிவிக்கை.**

உலகத்தில் மனிதப்பிறப்பைப் பெற்றுக் கொண்டவர்கள் இந்தப் பிறப்பினால் அடையத்தக்க பிரயோஜனத்தைக் காலமுள்ள போதே அறிந்து அடையவேண்டும்.

அந்தப் பிரயோஜனம் யாதோ? எனில்:—

எல்லா அண்டங்களையும் எல்லாப் புவனங்களையும், எல்லாப் பொருள்களையும, எல்லாச் சீவர்களையும், எல்லாச் செயல்களையும், எல்லாப் பயன்களையும், தமது பரிபூரண இயற்கை விளக்கமாகிய அருட்

Koviloor Digital Library

சத்தியால் தோன்றி விளங்க விளக்கஞ் செய்விக்கின்ற இயற்கையுண்மை வடிவினராகிய கடவுளின் பூரண இயற்கை யின்பத்தைப் பெற்று எக்காலத்தும்,— எவ்விடத்தும்,— எவ்விதத்தும்,— எவ்வளவும், — தடைபடாமல் வாழ்கின்ற ஒப்பற்ற பெரிய வாழ்வை அடைவதே இந்த மனிதப் பிறப்பினுல் அடையத்தக்க பிரயோஜனம் என்று அறிய வேண்டும்.

இயற்கை யின்பத்தைப் பெற்றுத் தடைபடாமல் வாழ்கின்ற அந்தப் பெரிய வாழ்வை எதனுல் அடையவேண்டும்? எனில் :—

கடவுளின் இயற்கை விளக்கமாகிய அருளைக்கொண்டே அடைய வேண்டும் என்றறியவேண்டும்.

கடவுளின் இயற்கை விளக்கமாகிய அருளை எதனுல் பெறக் கூடும்? எனில்:—

ஜீவகாருண்ய ஒழுக்கத்தினுல் கடவுளருளைப் பெறக்கூடுமல்லது வேறெந்த வழியாலும் சிறிதும் பெறக்கூடாதென்று உறுதியாக அறிதல் வேண்டும்.

ஜீவகாருண்யத்தின் முக்கிய லக்ஷியமாவது எது? எனில்:—

எந்த வகையிலும் ஆதாரமில்லாத ஏழைகளுக்குண்டாகின்ற பசி யென்கின்ற பெரிய ஆபத்தை நிவர்த்தி செய்கின்றதே முக்கிய லக்ஷியமென் றறிய வேண்டும்.

பசியின் கொடுமை:—உலகமுழுவதும் ஆளுகின்ற சக்கரவர்த்தியாகிய **அரசனுக்கும்**—உலகமுழுவதும் ஒரு நிமிஷத்தில் வெல்லத்தக்க **சுத்தவீரனுக்கும்**—மூன்ருசைகளையும் ஒழித்து உண்மையறிந்து பிரமாணுபவத்தைப் பெற்ற **சீவன் முத்தர்களுக்கும்** பசி நேரிட்டபோது மனமிளைத்தும் — வலி குலைந்தும்—அனுபவந் தடைப்பட்டும் — வருந்துகின்ருர்களென்ருல் எந்த வகையிலும் **ஆதாரமில்லாத ஏழைகளுக்குப்** பசிநேரிட்டால் என்ன பாடு படார்கள்!

பசி அதிகரித்த காலத்தில் முகம் புலர்ந்துபோகின்றது — உச்சி வெதும்புகின்றது — பிரமரந்திரம் அடைபடுகின்றது—காது கும்மென்று செவிடுபடுகின்றது — கண் பஞ்சடைந்து எரிந்து நீருலர்ந்து குழிந்து போகின்றது—நாசி அழன்று கலைமாறி பெருமூச்சுவிடுகின்றது—நாக்கு நீருலர்ந்து தடிப்பேறுகின்றது — மெய் முழுதும் கருகி சக்தியற்று ஸ்மரணைகெடுகின்றது—வாக்குக் குழறித்தொனி மாறுகின்றது—கைகளும் கால்களும் தடதடத்துச் சோர்ந்து தடுமாறுகின்றது — மல சல வழி வெதும்பி வேறுபடுகின்றது—உரோமம் வெறிக்கின்றது—பற்கள் கருகித் தளர்கின்றன — இரத்தமும் சலமும் சுவறுகின்றது — சுக்கிலம் தன்மை மாறி வறளுகின்றது—எலும்புகள் குழைந்து நோக்காடுண்டாகின்றது—

Koviloor Digital Library

நாடி நரம்புகள் வலியிழந்து மெலிந்து கட்டுவிடுகின்றது — வயிறு பகீரென்கின்றது—மனம் தளர்ந்து நினைவு மாறுகின்றது — புத்தி கெட்டு நிலைமாறுகின்றது — சித்தம் கலங்கித் திகைப் பேறுகின்றது — அகங்காரம் குலைந்து அச்சமுண்டாகின்றது — பிரகிருதி சுருங்குகின்றது — **கடவுள் விளக்கமும், ஆன்ம விளக்கமும் மறைபடுகின்றது**— தாப சோபங்கள் மேன்மேலுண்டாகின்றன—இவ்வளவு அவத்தைகளும் ஏககாலத்தி லுண்டாகின்றன. இது எல்லாச் சீவர்களுக்கும் பொதுவாகவே யிருக்கின்றது. ஆகாரமுண்டு பசிநீங்கிய தருணத்தில் தத்துவங்களெல்லாந் தழைத்து **கடவுள் விளக்கமும் ஆன்ம விளக்கமும்** அகத்திலும் முகத்திலும் வெளிப்பட்டு திருப்தி இன்ப முண்டாகிறது.

ஆதலின் நாமனைவரும் **எந்தவகையினும் ஆதாரமில்லாத ஏழைகளுக்குப்** பசி நேரிட்டபோது மிகவும் கருணையுள்ளவர்களாகி நம்மாற்கூடிய மட்டில் அந்தப் பசியென்ற ஆபத்தைப் பொதுவாக நிவர்த்திப்பதற்கு முயற்சி செய்வதே **ஆன்ம லாபமென்று அவசியம் அறியவேண்டும்.**

ஆகலில், இந்த ஜீவகாருண்ய ஒழுக்கத்தை நடத்தும் பொருட்டு, கூடலூர் ஜில்லா, கூடலூர் தாலுக்காவைச் சார்ந்த **வடலூரென்கின்ற பார்வதிபுரத்தில், சமரசவேத தருமச்சாலை*** யென்றொரு தருமச்சாலை யேற்படுத்தப் பட்டிருக்கின்றது. அது **பலர் சகாயத்தினலேயே** நிலைபெற வேண்டுமாதலால், ஜீவ தயையுடைய புண்ணியர்கள், தங்கள் தங்களாற் கூடியவரையில் பொருள் முதலிய உதவி செய்து அதனல் வரும் **லாபத்தைப் பாகஞ் செய்துகொள்ள வேண்டு மென்பது எங்கள் கோரிக்கை.**

இப்படிக்கு,

பிரபவ ஆண்டு
வைகாசித்திங்கள் 11-ம் நாள்
சத்திய தருமச்சாலை, வடலூர்.

திருச்சிற்றம்பலம்
இராமலிங்கம்

***ஆன்மநேய சகோதரர்காள்! சத்திய தருமச்சாலைக்கு வருடச் சந்தா ரூபாய் ஒன்று அனுப்பித் தங்கள் பெயரைப் பதிவு செய்துகொண்டு பேரின்ப லாபத்தில் பாகங்கொள்ள வேண்டுமென்பது எங்கள் கோரிக்கை.**

Koviloor Digital Library

59. வேம்பையரின் விஷமம்

இப்படியிருக்கிற காலத்தில் ஐயா அவர்கள் அன்பர்களின் வேண்டுகோளுக்கிரங்கி, செம்பு, ஈயம், இரும்பு முதலிய உலோகங்களைப் பொன், வெள்ளி முதலிய உயர்ந்த உலோகங்களாக மாற்றிக் காட்டி அவற்றை எவருக்குங் கிட்டாதபடி கேணிகளிலுங் குளங்களிலுமாக எறிந்துவிடுவார். ஐயா அவர்கள் அவைகளை மாற்றுவதற்குச் செய்த செய்கைகளையும், சேர்த்த பொருள்களையும் அருகிருந்து பார்த்திருந்த **வேம்பையர்** என்பவர் அப்பொருள்களைச் சேகரித்துக்கொண்டு யாருமறியா விடத்தில் தாமும் அவ்வாறே செய்ய ஆரம்பித்தார். அங்ஙனம் ஆரம்பிக்கவே திடீரென அவருடைய கண்களிரண்டும் ஒளி மழுங்கிப் போயின. எவ்வளவோ சிகிச்சைகளைச் செய்தும் கண்ணொளி வராமையினால், கடைசியாக ஐயா அவர்களிடமே வந்து நடந்தவற்றை மறைக்காது கூறித் தம்முடைய பிழையை மன்னித்தருள வேண்டி நின்றார். ஐயா அவர்களும் புன்னகை புரிந்து **தண்ணீரைக்கொண்டு அவருடைய கண்களில் ஒளி மேவுமாறு செய்தனுப்பினர்.**

60. தருமசத்திரம்

ரெட்டிச்சாவடியில் அமீனு உத்தியோகம் பார்த்துவந்த **மாயூரம்** சிவராமய்யர் என்னும் மிகுந்த செல்வமுடைய ஒருவர் தமக்குப் பிள்ளைப்பேறு இல்லாமையின் வருந்தி, வடலூருக்குவந்து, ஐயா அவர்களை அடிபணிந்து தமக்கு மகப்பேறு கிட்டுமாறு திருவருள் பாலிக்க வேண்டுமென வேண்ட, அவரிச்சையின்படியே ஓர் ஆண் மகவு **பிறக்க அருள் செய்து,** அவரைக்கொண்டு பண்ணுருட்டிக்கும் வடலூருக்கும் மத்தியில் பெண்ணை யாற்றின் கரையிலுள்ள கோட்டைப் புலவனூரில் **ஒரு தரும சத்திரமும்** கட்டுவித்தனர்.

61. ஐயர் அடிமை பூண்டது

விருத்தாஜலத்திலிருந்த வக்கீல்: வேங்கடேசய்யர் என்பவர், ஒவ்வொரு சனிக்கிழமை இரவுகளிலும் வடலூருக்கு வந்து, ஞாயிற்றுக் கிழமைகளில் நடைபெறும் பிரசங்கத்தைக் கேட்டுவிட்டுத் திரும்பிப் போவது வழக்கம். அவர், இரவு நேரங்களில் வடலூருக்கு வரும்பொழுது இடையிலே மூன்று மைல் தூரமுள்ள காட்டைக் கடக்க நேரிடும். அப்படிக் கடக்க நேரிடும்பொழுது அவருக்கு முன்னே இரண்டு **தீவர்த்திகள்** ஆள் உருவமோ பிறவோ தெரியாது போய்க்கொண்டிருக்கும். இந்நிகழ்ச்சியை இரண்டு மூன்று முறைகளில் பார்த்த அவ் வேங்கடேசய்யர், இவ்வாறு நிகழ்வது ஐயா அவர்களின் அற்புதமே யென்

Koviloor Digital Library

பதை உணர்ந்து தாமுந் தம்மனைவியருமாக வடலூருக்கு வந்து, அங்கேயே தங்கி ஐயா அவர்கட்கு அடிமைபூண்டு அவர்களுடைய பூரண அருளுக்குப் பாத்திரரானார்கள்.

62. வினவிற்குமுன் விடை

சாதாரணமாக நம்போல்வார் எத்துணைச் சிறந்த கல்வி கேள்விகளில் மிக்கவரா யிருந்தாலும், மற்றவர்கள் தங்களை ஏதாவது கேட்டால்தான் அதற்குத் தக்க விடையளிப்பர்; சில வேளைகளில் பதிலளிக்கவும் ஆற்றலில்லாதவர்களாய்த் திகைப்பர். நம் ஐயா அவர்களோ, அவ்வளவு தூரம்வரை வைத்துக் கொள்வதில்லை. திரிகாலமுணர்ந்தவராதலால் பிறர் தம்மிடம் வந்து வினவுதற்கு முன்னரேயே, அவர்கள் மனத்தில் எண்ணி வருகின்ற கேள்விகட்குத் தகுந்த பதிலேயே பிரசங்கிப்பார்கள். இந்நிலையினை யுணராத சாஸ்திரிகள் நால்வர், ஐயா அவர்களைச் சாம வேதத்தில் பல கேள்விகளைக் கேட்கவேண்டுமென மனத்திலெண்ணியவர்களாய் வந்து கொண்டிருந்தனர். அவர்கள் வருவதற்கு முன்னமேயே, அந்த சாமவேதப் பிரசங்கத்தை ஐயா ஆரம்பித்துவிட்டார்கள். அந்த நான்கு சாஸ்திரிமார்களும் ஐயா அவர்களிடம் அணுகுகின்ற தருணத்தில் அவர்கள் என்னென்ன கேட்கவேண்டுமென்று வந்தார்களோ, அவைகளுக்கெல்லாம் ஒன்றன்பின் ஒன்றாகப் பதிலை ஐயா அவர்கள் கூறிக்கொண்டே யிருந்தார்கள். அவ்வற்புதப் பிரசங்கத்தைக் கேட்ட சாஸ்திரிமார்களுக்கு அளவு கடந்த வியப்புண்டாயிற்று. சந்தோஷ சாகரத்தில் மூழ்கினவர்களாய் "என்ன இது? நாம் கேட்கவேண்டுமென்று எண்ணிவந்த கேள்விகளுக் கெல்லாம் கேட்பதற்கு முன் தகுந்த விடையளிக்கின்றாரே! இவரல்லவோ ஞானி, இவரல்லவோ திருவருட் செல்வர்; இவரல்லவோ எல்லாம் வல்ல சித்தர்" என்று வாயார வாழ்த்தி வணங்கிச் சென்றனர்.

63. திருவருட்பா வெளியிடுதல்

திருவருட் பிரகாச வள்ளலாராகிய நம் ஐயா அவர்கள் திருவாய்மலர்ந்தருளிய * **திருவருட்பாக்கள்** முழுவதையும் அச்சிட வேண்டுமென்னுங் கருத்துடையவர்களாய் அன்பர்களான புதுவை: வேலு முதலியார், சிவானந்தபுரம்: செல்வராய முதலியார், இறுக்கம்: இரத்தின முதலியார் முதலானோர் ஐயாவை அப்பணிக்கு உத்தரவு கொடுத்தருள வேண்ட, அடிகளும் அன்பர்களின்

*அப்பதிப்பில் 'இனி அச்சிற் பதிப்பிக்கப்படுபவை' எனப்பல பிரபந்தங்களைக் குறித்தனர். அவற்றுட் சில பின் அச்சாயின. மற்றவையாவன:—

Koviloor Digital Library

உள்ளத்திலெழுந்த ஆசையினை—அன்பினைக் கெடுத்தல் ஆகாதென்னும் கருத்துடையவராய் ஒருவாறு உடன்பட்டார்கள்.

உடனே அவர்கள் உபயகலாநிதிப் பெரும் புலவராய தொழுவூர் - வேலாயுத முதலியா ரவர்களைக்கொண்டு அதுவரை பாடியருளிய பாக்கள் முழுவதையும் நான்கு திருமுறைகளாக வகுத்து 1867 ம் ஆண்டில் அச்சியற்றி வெளியிட்டனர்.

64. சங்க தோஷ நிவர்த்தி

ஐயா அவர்களின் அடியவருள் ஒருவராகிய நாயனு ரெட்டியார் என்பாருடைய மனைவியாருக் கிருந்த சங்க தோஷத்தை, ரெட்டியார் வேண்டுகோளின் வண்ணந் திருநீறு கொடுத்துத் தீர்த்தருளிய

1. கலாந்த விளக்கம்	13. பொது வேதம்
2. யோகாந்த விளக்கம்	14. தத்துவ விருத்தி
3. நாதாந்த விளக்கம்	15. பிரகிருதி விருத்தி
4. போதாந்த விளக்கம்	16. இயல் வகை
5. வேதாந்த விளக்கம்	17. அளவை வகை
6. சித்தாந்த விளக்கம்	18. ஞான வகை
7. அண்ட விளக்கம்	19. இலக்கண விருத்தி
8. பிண்ட விளக்கம்	20. தருக்க விருத்தி
9. சுத்த சிவராசியம்	21. தென்மொழி விளக்கம்
10. பரம சிவராசியம்	22. வடமொழி விளக்கம்
11. மந்திரக் கொத்து	23. கலை மரபு
12. மகா வாக்கிய வகை	

முதலிய பலப்பல பிரபந்தங்கள் எப்போது வெளிவருமோ அறியேம்.

அச்சிட்ட புத்தகத்தில் திருவருட் பிரகாச வள்ளலார் என்று தம்மைச் சிறப்பித்து இருந்ததை வள்ளலார் பார்த்து உபயகலாநிதிப் பெரும் புலவரை நோக்கி "பிச் ஏன் காணும் திருவருட் பிரகாச வள்ளலா ரென்று உம்மை யார் போடச்சொன்னது?" என்று அதட்டிக் கேட்க, முதலியார் நடுநடுங்கினவராய் வாய்புதைத்து வள்ளலாரது திருவடிகளையே சிந்தித்து மௌனமாய் நின்றனர். ஐந்து நிமிஷஞ் சென்ற பிறகு, திருவருட் பிரகாச வள்ளல்—(பதி), ஆர் என்னும் சிதம்பரம் இராமலிங்க பிள்ளை என்று பிரித்துக் காட்டி அறிவுறுத்தினர்.

திருத்தணிகைப் பதிகங்களை முதலியார் ஐந்தாந் திருமுறையாக வகுத்து 1880 ம் வருடத்தில் அச்சிட்டு வெளிப்படுத்தினர். அதில் முதலியார் திருவருட்பா வரலாறு என்று ஒன்று இயற்றிச் சேர்த்தனர். ஏனைய பாடல்களை ஆறுந் திருமுறையாய் வகுத்து வைத்திருந்ததை வள்ளலார் உணர்ந்து சுத்தசன்மார்க்க லக்ஷியானுபவ காலம் வருகிற வரையில் வெளியிடப்படாதெனக் கட்டளையிட்டனர். குருவாணையைச் சிரமேற்றுங்கி அச்சிடாது விட்டனர். திருவருட்செயலால் பின்னர் 1885ம் ஆண்டில் வேலூர் பத்மனாப முதலியார், லோகநாத செட்டியார் இவர்களால் முதன் முதல் ஆறுவது திருமுறை அச்சிடப்பட்டது.

Koviloor Digital Library

தோடு, அவருக்கிருந்த ரசவாத இச்சையினை அறிந்து, ஒரு குவளையில் தண்ணீரும் மணலுமிட்டுச் சிறிது நேரம் கையினால் மூடிப் பின் திறந்ததும், அம் மணலெல்லாம் பொன் துகளாயின. பின்னர் அந்த ரெட்டியாருக்கிருந்த அம் மயக்கொழிந்தது.

65. சங்க நிதியோ! பதும நிதியோ!

வானநாட்டில் சங்கநிதி பதுமநிதி என இரண்டு நிதிகளுண்டு. அவை தம்முள்ளிருக்கும் பொருள்களைப் பிறர் எவ்வளவு, எடுத்துக்கொள்ளினும் அவ்வளவையும் மீண்டும் உண்டாக்கிக் கொண்டு எப்பொழுதும் குறையா நிலையிலிருக்கும். அம்மாதிரி, ஐயா அவர்களின் **சத்திய தருமச்சாலையும்** ஒருகாலத்துத் தன்னிடத்து சமைத்து வைத்திருந்த உணவை, எடுக்க எடுக்கக் குறையாது முன் போலிருக்கச் செய்தது. எவ்வாறெனில்:—

ஒருநாள் இரவில் உணவு எல்லாம் சமைத்தபிறகு உண்ணப் போகின்ற வேளையில் சுமார் **நூறுபேர்** திடீரென வந்துவிட்டனர். அவர்களைக் கண்டவுடனே அடியவர்கட்கெல்லாம், "என்ன இது? இத்துணைப் பேர்கள் வந்துவிட்டனரே! இங்கேயுள்ள உணவோ மிகச் சிலர்க்கே அளிக்கத்தகுந்தது; மற்றையோருக்குச் சமைத்துப்போடுவதென்றால் இவ் விரவு வேளையில் அது சாத்தியமில்லையே" என்று வருந்துவதை யறிந்த ஐயா அவர்கள், அவர்களை நோக்கி **"பிச்" "இலைபோடுங்கள் எல்லோருக்கும்"** என்று கூறித்தாமே, அந் நூற்றுவருக்கும் பரிமாறத் தொடங்கினார்கள். தொடங்கவே, அங்கு அட்டியிருந்த **சிறுஉணவு அனைவருக்கும் பரிமாறப்பட்டும், அவ் வளவிற் குறையாது அப்படியே யிருந்தது.** அனைவரும் வயிறு நிரம்ப உணவருந்தி மகிழ்ந்தனர்.

66. குன்ம நோய் தீர்த்தார்

மற்றொருகால், ஐயா அவர்கள் திருவாதிரைநாள் தெரிசனத்தின் பொருட்டுச் சிதம்பரஞ் செல்லுகையில் வழியில் ஒரு மனிதன் குன்ம நோயினால் பெரிதும் வருந்துவதைக் கண்டு ஆற்றாராய், அவனுடைய அப்பெரு நோயை அப்பொழுதே அருள் வலத்தால் நிவர்த்தித்து அருளினார்.

67. மழை பொழிய வைத்த மாட்சி

கடுவெயிலினாலும், மழையில்லாக் குறையினாலும், வடலூருக்கு வருவாரும், சுற்றுப் புறத்துள்ள ஊராரும் பெரிதும் வருந்த, ஐயா அவர்கள் உடனே தமது திருவருள் வலிவால் நான்கு செவி மழை

Koviloor Digital Library

பொழிய அனுக்கிரகஞ் செய்தார். இப்படியே, புதுப்பேட்டை நகரினர் வந்து ஐயாவை வணங்கித் தம் பதிக்கழைத்துச் சென்று, ஆங்குள்ள இரண்டு கிணறுகளில் நீரின்மையையும், சிறிது நீரிருந்தும் அதில் கைப்பு கலந்திருத்தலையும் காட்டி, அவ்விரண்டு குறைகளும் நீங்க அருள்புரியுமாறு வேண்ட, அவ்வூராரின் வேண்டுதலுக் கிசைந்து, அவ்வாறே அக்கிணறுகளில் நீர்ப் பெருக்கமும், மதுரமும் உண்டாகத் திருவருள் பாலித்தார்கள். அக்கிணறுகளில் அன்றுதொட்டு இன்றுவரை எப்பொழுதும் நிறைந்தநீர் குறையவேயில்லை. அதை இன்றுங் காணலாம். அதோடு ஆற்றுநீரைக் காட்டிலும் அக் கிணறுகளில் நீர் சுவை மிக்குடையதாய் விளங்குகின்றது.

68. பெரு நெருப்பு அவித்த பெருமை

அந்நிகழ்ச்சி நடந்த பிறகு அவ்வூரிலேயே ஒரு வீடு தீப்பற்றிக் கொண்டு எவராலும் அணைக்க முடியாத அந்நிலையில் கொழுந்துவிட்டெரிய, ஐயா அவர்கள் உடனே அப்பெரு நெருப்பினைத் தம்முடைய ஆடையால் விசி அணைத்து அனைவரையுங் காத்து அருளினர்.

69. பதிற்றுப் பத்தந்தாதி பார்வை யிட்டது

திருப்பாதிரிப்புலியூர் இயற்றமிழாசிரியர் சிவசிதம்பர முதலியார் என்பார் தாம் பாடிய பதிற்றுப் பத்தந்தாதியைப் பார்வையிட்டு அதற்கோர் சாற்றுகவி அளித்தருளுமாறு ஐயா அவர்களை ஒருகால் வேண்ட, ஐயா அவர்களும் அதனைப் பார்வையிட இணங்கினர். பார்வையிட்டபிறகு, "இன்னின்ன பாக்களிலுள்ள இன்னின்ன சொற்கள் இன்னின்ன சொற்களாக இருக்குமேல் நன்றாக இருக்கும்" என்று ஒரு சில சொல்ல, அவற்றின்படியே அம்முதலியாரும் அச்சொற்களை மாற்றி ஐயாவின் அருளுக்குப் பாத்திரரானார். ஐயா அவர்கள் அந் நூலுக்குச் சாற்று கவியும் அளித்தார்கள்.

70. 'புன்செய்' 'நன்செய்' ஆகிய புதுமை

தாசில்தார் முருகேச பிள்ளை என்பாருடைய மாமனாராகிய மிராசுதார் மணலூர் நடராஜ பிள்ளையின் அன்பு, இரக்கம் முதலிய குணங்களையும், அடிமைத் திறத்தையுங் கண்டு மகிழ்ந்த நம் ஐயா அவர்கள் அவர்கட்கிருந்த 'புன்செய்' நிலங்கள் முழுவதையும்' 'நன்செய்' ஆகத் திருவருள் பாலித்தார்கள். அப் பிள்ளையும், தம்முடைய புன்செய் நிலங்களை யெல்லாம் நன்செய் ஆக்கிய நாதனார் திருவடிகளில் விழுந்து வணங்கி, அன்றுமுதலாக அந்நிலங்களிலிருந்துவரும் தானியங்

Koviloor Digital Library

A. No...........
நூலகம், கோவிலூர்

களில் பெரும்பகுதியினை ஐயா அவர்களின் ஆணையின்படி பசியென வந்தோர்க்கும், பாவலர் நாவலர்கட்கும் பரிவுடன் அளித்துப் பண்பும் பயனும் பெறுவாரானார்.

71. விருந் தருந்திய வியப்பு

விருத்தாஜலத்திலிருந்த அன்பரொருவர் நம் ஐயா அவர்கட்கு அமுதளிக்க வேண்டுமெனப் பல நாட்களாக ஆசை கொண்டிருந்தார். அன்பருளங் கோயில்கொண்ட அருட்பெருஞ் ஜோதி ஆண்டவரின் அருட்பிள்ளையாராகிய நம் ஐயா, அன்பர் எண்ணிய எண்ணத்தை அறிந்து கொண்டார்கள். ஆயினும், மனிதர் முக்குண வேறுபாட்டால் முரணுவர் அதனால், அவ்வன்பர் என்றும் ஒரே நிலையராய் அன்புளங் கொண்டிருக்கின்றாரா? இல்லையா? என்பதைப் பரிசோதிக்கவே சில நாட்கள் அவரெண்ணத்தை நிறைவேற்றாதிருந்தார். அவ்வன்பர் என்றும் அந்நிலையில் மாறுபடாதிருக்கவே திடீரென ஒருநாள் அவரில்லத்திற்கு ஐயா எழுந்தருளினார். அப்பொழுது அவர் வீட்டில் பருப்புத் துவையலும், ரசமுமே யிருந்தன. அவைகளே போதுமென அப்பொழுதே ஐயா அமுதுகொண்டருளி அவ்வன்பருக்கு வாழ்வளித்து மீண்டனர்.

72. கள்வர்க்கும் காட்டிய கருணை

ஒருநாள் இரவில் நம் ஐயா அவர்களும், மஞ்சகுப்பம் கோர்ட்டு சிரஸ்தாதார் — இராமச்சந்திர முதலியார் என்பாரும் ஒரு மாட்டு வண்டியில் ஏறிக்கொண்டு வடலூரிலிருந்து மஞ்சகுப்பம் போய்க்கொண்டிருக்கையில், இடை வழியில் கள்வர்கள் வந்து வண்டியை மறித்தனர். மறித்த அப்பொழுதே வண்டிக்காரனும், உடன்வந்த சேவகனும் ஓடி விட்டனர். வண்டியினுள் ஐயாவும், முதலியாருமே தனித்திருந்தனர். வண்டியை மறித்த கள்வர்கள் உடனே, வண்டியின் பின்புறம் வந்து மிக அவசரமாக முதலியார் அணிந்திருந்த வைரமோதிரத்தைப் பார்த்து அதைக் கழற்றித் தருமாறு அதட்ட, ஐயா அவர்கள் அக்கள்வரை நோக்கி, "அவசரமோ?" என்று கூற, அக்கள்வர்கள் ஐயாவைத் தடியாலடிக்கக் கைகளைத் தூக்கினர். அக்கைகள் அப்படியே நின்று விட்டன; கண்களும் பார்வை இழந்தன. உடனே — கள்வர்கள் நடுநடுங்கி பயந்து, தாங்கள் அறியாமல் வறுமையின் கொடுமையால் செய்த குற்றத்தை மன்னித்தருள வேண்டுமெனத் திருவடிகளில் விழுந்து வணங்கினர். ஐயா அவர்களும் மனமிரங்கி "பிச்" என்னும் மகாமந்திரத்தைக்கூறி அவர்கள் இழந்த பார்வையை மீளவும் அடையு

Koviloor Digital Library

மாறு திருவருள் பாலித்தார்கள். அன்றுமுதல் அக்கள்வர்களும் சன்மார்க்க நெறியில் நின்று சுவாமிகட்கு அன்பரானுர்கள்.

73. அரவும் ஆணைக்கு உட்பட்டது

குறிஞ்சிப்பாடியிலுள்ள வணிக மரபின ரொருவர் ஐயா அவர் களிடத்து மிகுந்த அன்பும் பக்தியும் உடையவர். அவரொருகால் வடலூர் வருதற் பொருட்டாக வந்துகொண்டிருக்கையில் ஜலங்கழிக்க, களாச்செடியின் மறைவில் உட்கார, அச்செடி அருகேயுள்ள புற்றரவு ஒன்று அவரைத் தீண்டிவிட்டது. அதையறிந்த செட்டியார், உடனே "இராமலிங்கமேல் ஆணை" என்றுகூற, அப்பாம்பும் புற்றினுள் நுழையாது வாய் திறந்தபடியே அசையாது நின்றுவிட்டது; செட்டியார் அதனைக் கவனியாது பயத்துடன் வீடுபோய் விட்டார். விஷம் ஒன்றும் செய்யவில்லை. செட்டியார் மிகவும் ஆச்சரியமும் சந்தோஷமுங் கொண்டு, ஐயா அவர்களைத் தரிசிக்க வடலூர் வந்தார். அவரைக் கண்டதும், "பிச்" ஓர் உயிரை எத்தனை நாட்கள் பட்டினிபோடுகிறது? மூன்றுநாளாயிற்றே; உடனே போய் ஆணையை விடுதலை செய்யும்" என்று கூறினுர்கள். மிக்க ஆச்சரியத்துடன் செட்டியார் பயந்து அப்படியே சென்று பார்க்க, அப்பாம்பு வாயைப் பிளந்து கொண்டு புற்றின் வாயிலில் படுத்துக்கொண்டிருந்தது. ஆணையை விடுதலை செய்ய, உடனே அப்பாம்பும் புற்றினுள் நுழைந்துவிட்டது.

74. இசைப் புலவரினுஞ் சிறந்தார்

நல்லிசை வாய்ந்த சிதம்பரம் கிருஷ்ணய்யர் என்பவர் ஒருகால் "மகாதேவ மாலை"யில் உள்ள பாடலொன்றை அபூருப ராகத்தில் பாடிப்பழகி வடலூருக்கு வந்து, ஐயா அவர்களின் திருமுன்னர் பாடினர். அப்பாடலை முழுதும் அன்போடு கேட்டிருந்த ஐயா அவர்கள், இறுதியில் அப்பாடலையே அவரினும் நயமாக நல்லிசையில் பாடி மகிழ்வித்தார்கள்.

75. சித்துருக் காட்டினமை

திருவதிகைக்கு ஐயா அவர்கள், ஒரு பகல் இறை வழிபாட்டிற் காகச் சென்ற காலத்துத் தம்மைப் பார்க்க விரும்பிய அன்பர்களது கூட்டம் அதிகமாகிவிட்டதை யுணர்ந்து, தம்முருவை இரண்டு மூன்று இடங்களில் அவ்வன்பர்கட்குக் காட்டி அருள்புரிந்தார்.

Koviloor Digital Library

76. அரிசி வரவழைத்த அற்புதம்

பின்னர்ச் சிலநாட்கள் கழிய, ஒரு பகல் சத்திய தருமச்சாலைக்கு உணவுப் பொருள்கள் எதுவும் இல்லையென உக்கிராணம் பார்த்த **சண்முகம் பிள்ளை** வந்து அடிகளிடத்து அணுகி முறையிட, அடிகளும் சிறிது தியானத்திலிருந்துவிட்டு, **"நாளை யெல்லாம் வந்துவிடும்"** என்று கூறி அனுப்பினர். மறுநாள் அப்படியே மூன்று வண்டிகள் நிறைய அரிசியும் மற்றைய உணவுப் பொருள்களும் தருமச் சாலையின் வாயிலில் வந்து நின்றதைக் கண்ட சாலையிலுள்ளவர்கள் ஓடோடியும் வந்து, "எங்கிருந்து கொண்டு வருகிறீர்கள்? யாருடைய பொருள்கள் இவை? யார் கொடுத்துவரச் சொன்னது?" என்று பலவாறுகக் கேட்க, அவைகளைக் கொண்டுவந்த அன்பர், **"சுவாமிகள் இரவு கனவில் எளியேற்குக் கட்டளை யிட்டார்கள்;** அக்கட்டளையைச் சிரமேற் கொண்டே யான் கொண்டுவந்தேன்; யாளிருப்பது **திருத்துறையூர்"** என்று எல்லாவற்றையும் விவரமாகக் கூறினர். பிறகு அவர்கள் அவரைச் சுவாமிகளிடம் அழைத்துக் கொண்டுபோய் விடுத்து அனைத்தையுங் கூற, அவர்களும் ஒன்று மறியாதவர்கள்போல அவற்றைக் கேட்டுக் கொண்டு அவ்வடியவர்க்குத் திருநீறு அளித்தார்கள்.

77. ஆள் சுமை யகற்றுதல்

வடலூருக்கு மேற்கேயுள்ள கொங்கர பாளயத்திலிருந்து வந்த பிராமணரொருவர், தம்முடைய கழுத்தில் ஏதோ ஒரு ஆள்சுமை யிருந்து அழுத்துவதுபோல் பலநாட்களாகத் தம்மைத் துன்புறுத்துவதாகக்கூற, ஐயா அவர்களும் மனமிரங்கி அச் சுமை யகலுமாறு அருள்புரிந்தார். இவ்வாறே அவ்வூரிலுள்ள வயது சென்ற ஒரு கிழவியின் உடல் நடுக்கத்தையும் ஒழித்தருளினர்.

78. காயத்திரி மந்திரங் கழறுதல்

ஆடூர் என்னும் அருமைப் பதியில் வேத, ஆகம, புராண, இதிகாச சாஸ்திரங்களாகிய நூல்க ளனைத்தும் அறிதிற் பயின்றவரும், அடக்கம், அன்பு, பொறுமை, இரக்கம் முதலிய நற்குணங்கள் வாய்க்கப் பெற்றவரும், ஆகிய **அன்பர் சபாபதி சிவாசாரியர்** என்பவர் ஐயா அவர்களின் தரிசனத்தின் பொருட்டு வர, அவரோடும் ஐயா அவர்கள் அளவளாவிக் கொண்டிருக்கும் பொழுது அச் சிவாசாரியர் **"காயத்திரி மந்திரத்தின்" உண்மைப் பொருள் விளக்கத்தினைச்** சிறிது எடுத்துரைத்தல் வேண்டுமென் றிரக்க, ஐயா அவர்களும் அவ்வாறே அவர்களைத் தனியிடத்திருத்தி அதனை விளக்கி யருளினர்.

Koviloor Digital Library

79. அங்கும் இங்கும் இருந்த அற்புதம்

சுவாமிகளால் ஆட்கொள்ளப் பெற்றவராகிய **கூடலூர் - தேவ நாயகம் பிள்ளை** யென்பவர் ஒருகால், தம்முடைய ஒரே புதல்வராகிய ஐயாசாமி என்பவர் அவருடைய 20-ம் ஆண்டில், நோய் வாய்ப்பட்டு வைத்தியர்களால் கைவிடப்பட்ட அக்காலத்தில், நம் பெருமானை நினைத்துக்கொண்டு, "என் ஐயாவே! என்செய்வேன் எனக்கு வாய்த்த ஒரேமகனை எவ்வாறு பிரிவேன் ஆண்டவரே! இதுதருணம் காக்கக் கருணை யில்லையா?" என்று பிரார்த்தித்த அந் நள்ளிரவு **11-மணிக்கே** நம் ஐயா அவர்கள், கூடலூரிலுள்ள அத்தேவநாயகம் பிள்ளை இல்லத்திற்குச்சென்று, அவருக்கும் அவரருமைப் புதல்வருக்கும் திருநீறு வழங்கி "**நாளை குணமாகும் பயப்படாதீர்கள்**" என்று ஆறுதல் தேறுதல் கூறி மீண்டார். நிற்க, எந்த இரவு கூடலூருக்குச் சென்று, தேவநாயகம் பிள்ளை யவர்களின் குமாரரது நோய்ப்பிணியைத் தீர்த்து வந்தாரோ, அந்த இரவு முழுதும், **வடலூர் சத்திய தருமச்சாலையிலும் அன்பர்களோடு நம் ஐயா அவர்கள் உபந்நியாசம் செய்திருக்கின்றார்கள்.** சாலையிலிருந்த அன்பர்களுக்கு சுவாமிகள் செய்த இவ்வற்புதம் தெரியாமலிருந்தது. பிறகு இதனைத் தேவநாயகம் பிள்ளையால் அறிந்து, அன்பர்கள் பெரிதும் வியப்புற்றனர்.

---

80. திரை மறைவில் திருச்சிற்றம்பலம்

இது நடந்த சிறிது நாட்களுக்குள் சிதம்பரத்தில் ஆனித் திருமஞ்சனத் திருவிழா நடைபெறும் நாள் நெருங்கியது. அவ்விழாவிற்கு ஐயா அவர்களோடு தொடர்ந்துப் போவதற்காகப் பல அன்பர்கள் வடலூருக்கு வந்தனர். ஐயா அவர்கள் புறப்படவில்லை. அதை வெளியிடவுமில்லை. அதனால் பலர், "ஐயா வரமாட்டார்கள் போலும்" என்று எண்ணிச்சென்று விட்டனர். சிலர் மட்டும் எப்படி யிருந்தாலும் "ஐயா வராமற் போகார்" என்னுந் திடமான எண்ணத்துடன் அங்கேயே இருந்தார்கள். திருவிழா நாளும் வந்துவிட்டது. அப்பொழுதும் ஐயா புறப்படா திருப்பதைக் கண்டு, அச்சிலரும் 'சிதம்பர தரிசனங் கிட்டாது போயிற்றே' என வருந்தினர். அவர்தம் மனவருத்தத்தை அறிந்துகொண்ட ஐயா அவர்கள், **சத்திய தருமச்சாலையில்** ஓரிடத்தில் ஒருதிரையைத் தொங்கவிட்டு அவர்களை யழைத்து "இத்திரையினுட் சென்று பாருங்கள்" என்று கூற, அவர்களும் அவ்வாறே திரையினுட் செல்லவும்—**திருச்சிற்றம்பலக் காட்சி**—அதாவது—சிதம்பரத்தில் எவ்வாறு அன்றைய திருவிழாவில் **அம்பலவாணரின் விழாக்காட்சி யிருக்குமோ அவ்வாறே தோன்றி**

Koviloor Digital Library

யது. தோன்றவே, அவ்வன்பர்கள் அம்பலவாணனை அடிபணிந்தெழுந்து, திரைப்புறத்திலிருக்கும் ஐயா அவர்களின் திருவடிகளிலும் விழுந்து வணங்கி அருள்பெற்றுச் சென்றனர்.

81. சத்திய ஞான சபை

அதன் பின்னர் அடிகளார் தமது மெய்யன்பர்களின் வேண்டுகோளுக் கிணங்கி வடலூரில் **எண்பது காணி** நிலப்பரப்புள்ள ஓரிடத்திற்கு **உத்தரஞான சிதம்பரம்** என்று திருவருளியலால் திருநாமஞ்சூட்டி, அவ்வெளியில் **தமது உள்ளத்தில் கண்ட** ஓர் **ஞானசபையைக் கட்டத்** திருவுளங் கொண்டார்.

> "**சத்திய ஞான சபையென்னுட் கண்டனன்**
> சன்மார்க்க சித்தியை நான்பெற்றுக் கொண்டனன்
> நித்திய ஞான நிறையமு துண்டனன்
> நிந்தை யுலகியற் சந்தையை விண்டனன்." (திருவருட்பா)

அச்சபை அமையவேண்டிய முறையினை ஓர் **படமாக (Plan)** எழுதி அன்பர்களிடங் காட்டிக் கொடுத்து இம்மாதிரி ஓர் ஞானசபையினை அட்டகோணமாகத் தாமரை மலரன்ன—கட்டுதல் வேண்டுமென உத்தரவிட்டனர். உத்தரவைச் சிரமேற்கொண்ட அன்பர்கள் கட்டட வேலையைத் தொடங்கினர்.

பின்னர், அடிகளார் அவ்வடலூருக்கு இரண்டு மைல்களுக்கு அப்பாலுள்ள **மேட்டுக் குப்பம்** என்னும் ஒருமேட்டில் குடிசையொன்று கட்டுவித்துக்கொண்டு அக்குடிசையிலேயே மெய்யன்பர்கட்குச் **சன்மார்க்க போதனை** செய்துகொண்டிருந்தார்கள்.

82. கொடிமரம்

இவ்வாறிருக்கும் நாளில், ஞானசபையின் கொடிமரத்திற்கு மரம் வாங்கிவரச் சென்னைக்குச் சென்ற கண்ட்ராக்டர் **ஆறுமுக முதலியார்,** மரவாடியில் தக்க மரம் கிடைக்கவில்லை யென்று மீண்டு வந்து அடிகளிடத்துத் தெரிவிக்க, அடிகள் "அப்படியானால் நீர் முதலிலேபோம், நான் இதோ வருகிறேன்" என்று கூறி யனுப்பினர். அவர் அவ்வாறே செல்ல அடிகளார் அவருக்கு முன்னே சென்னையிலுள்ள மரவாடியில் **கொடிமரத்திற்கு வேண்டிய மரத்தின்மீது உலாவிக் கொண்டிருந்தார்.** அதைக்கண்ட அம்முதலியார் பெரிதும் வியப்படைந்தார். பின்னும் அடிகளார் அவ்வாறே அம்மரத்தைவாங்கி முதலியாரிடம் ஒப்புவித்து, 'கொண்டுபோம்' என்று கூறினர்கள். கூறிய

Koviloor Digital Library

படியே முதலியார் புறப்பட்டு வடலூருக்குச் செல்லுவதற்கு முன்னேயே அடிகளார் வடலூரில் காணப்பட்டார்கள். அம்மட்டோ? அவ்வடலூரிலிருந்தவர்கள் எல்லாரும் அடிகளார் இன்றுமுழுதும் இங்கு தானே இருந்தார் என்று கூறினர்கள். ஆறுமுக முதலியாரோ "இல்லை? இல்லை என்னோடு மரவாடிக்கு வந்திருந்தாரே" என்று கூறினர். இவ்விரண்டையு மறிந்த எல்லோரும் என்றுமிலா மகிழ்வு எய்தி இன்புற்றிருந்தனர்.

83. புறவினத்தார் பலன்

அதன்பின் ஒருகால் ஞானசபையின் மேல்விதானங் கட்டும்போது, அதில் வேலை செய்துகொண்டிருந்த மூவரைத் தாங்கியிருந்த சாரம் முறிந்து, அவர்கள் கீழே விழுந்ததும், அவர்கட்கோ அல்லது அவர்களின் கீழே வேலை செய்துகொண் டிருந்தவர்கட்கோ எவ்வித ஆபத்தும் நேரவில்லை. இவ்வாறே மற்றுமோர் அற்புதமும் நிகழ்ந்தது. ஞானசபை கட்டி முடித்தவுடன், அன்பர்களிற் சிலர் தஞ்சாவூர் மராட்டியர்களைக்கொண்டு அச் சபையினெதிரே பெரும் பொருட் செலவில் ஒரு பந்தல் அமைத்தனர். அதனை யறிந்த அடிகளார், "இப்பந்தலை அமைத்தவர்கள் உறவினத்தாரல்லர்; **புலைப் புசிப்பும் உயிர்க்கொலை யுமுடைய புறவினத்தார்.** ஆதலினால், இப்பந்தல் திருவருளாளருக்குச் **சம்மதமில்லை"** என்று கூறியவுடனே பெருமழை யுண்டாகி அம்மழை யிடையே ஓர் இடிவிழுந்து அப்பந்தல் தீப்பற்றிக் கொண்டது. ஆயினும் அதனால் மற்றைய மனிதர்களுக்கோ பொருள்களுக்கோ எவ்விதச் சேதமுமில்லை.

84. திருக்கண்ணாடி—ஜோதிமணி விளக்கு

பின்னர் அடிகளார் சென்னையிலிருந்து ஓர் பெரிய நிலைக்கண்ணாடியினை வரவழைத்து, அதனைச் சித்திவளாகம் எனும் பெயர் புனைந்த மேட்டுக் குப்பத்திலுள்ள தம்முடைய சிறு குடிலில் ஒரு மண்டலம் வைத்து வழிபாடுசெய்து பிறகு அக்கண்ணாடியையும்—ஒரு திருவிளக்கையும், தம்மை யடுத்து, தமது கண்மூடி. ஆசாரங்களை யெல்லாம் விடுத்து, சன்மார்க்க முறையையே கடைப்பிடித்துப் பூணூல் முதலியவற்றை நீக்கிச் சமபந்தியாகவும் உண்டு வந்த அன்பரான—சபாபதி சிவாசாரியரைக் கொண்டு, ஞானசபையின்கண் ஸ்தாபிக்கும்படிக் கூறினர். அச் சிவாசாரியரும் அப்படியே அவை யிரண்டினையும் முறைப்படி ஸ்தாபித்து அடிகளார் கூறியாங்குப் பொதுவுஞ் சிறப்புமாகிய இருவகை வழிபாடுகளையுஞ் செய்து வரலாயினர். சுவாமிகள்மட்டும் மேட்டுக் குப்பத்தி

Koviloor Digital Library

லேயே தங்கியிருந்தார்கள். ஆயினும் அன்பர்கட்குத் தாம் கூறியபடி தைப்பூச தரிசன மட்டுஞ் செய்துவித்தார்.

85. ஞான சபை விளக்கம்

ஒன்றே குலமும் ஒருவனே தேவனும் என்னும் பண்டைக் கொள்கைக் கேற்ப உலக மக்கள் அனைவரையும் ஆன்மநேய ஒருமைப் பாட்டுரிமைச் சகோதரர்களாக ஜாதி, மத, சமய, வருணாசிரம சங்கற்ப விகற்ப பேதமின்றி ஓரே குலமாகக் கொள்ள வேண்டும் என்று, வள்ளலார் வலியுறுத்தி வந்தார்கள். அதற்காக தமிழர், ஆரியர், மகம்மதியர், கிறிஸ்தவர், பௌத்தர், சமணர் முதலான பலவகை ஜாதியினரும் ஒருமிக்க எல்லாம் வல்ல அருட்பெருஞ்ஜோதி இறைவனை வணங்கும்படியான ஏற்பாடு செய்தனர். மேலும்,

தெய்வங்கள் பலபல சிந்தை செய்வாரும்
　　சேர்கதி பலபல செப்புகின் றாரும்
பொய்வந்த கலைபல புகன்றிடு வாரும்
　　பொய்ச்சம யாதியை மெச்சுகின் றாரும்
மெய்வந்த திருவருள் விளக்கமொன் றில்லார்
　　மேல்வினை யறிகிலர் வீண்கழிக் கின்றார்
எய்வந்த துன்பொழித் தவர்க்கறி வருள்வீர்
　　எனைப் பள்ளி யெழுப்பிமெய் யின்பந்தந்தீரே,

என்றபடி எண்ணற்ற தெய்வங்களைக் கற்பனை செய்து வேற்றுமை மயக்கில் விழுந்துழலும் வீணர்களுக்கெல்லாம் நல்லறிவு கொளுத்தி சன்மார்க்கப் பெருநெறியில் வாழும் பொருட்டாகத் தாம் நிறுவிய சத்திய ஞானசபைக்குள்ளே, திருவிளக்கே—அறிவாகிய அருட்பெருஞ் ஜோதியாகவும், அதற்கு எதிரில் உள்ள கண்ணாடியே—மனமாகவும், அதற்குமுன் மனமாயையே—ஏழு திரைகளாகவும் அமைத்துள்ளார்கள். ஜீவகாருண்யம், தோத்திரங்கள் முதலான வழிபாடுகளாலும் மனமாகிய கருங்கற்பாறை கசிந்துருக உருக அம் மாயாதிரைகள் ஏழும் ஒன்றன்பின் ஒன்றாக நீக்கப்பட்டு, மனமானது தூய்மையான கண்ணாடிபோல் விளங்க, அதன் வழியே அறிவாகிய அருட்பெருஞ் ஜோதி தரிசனம் கண்டு மரண மிலாப் பெருவாழ் வடைந்து பேரின்ப லாபத்தைப் பெறுவதற்கு வழி காட்டியுள்ளார்கள்.

மேலும் ஞானசபையில் எவ்வகை உருவவழிபாடும் அபிஷேகம் முதலானவைகளும், டவுல், நாதஸ்வரம், டமாரம் முதலான வாத்திய கோஷங்களும் அதிர்வெடி முதலிய வேட்டுகளும் கூடாது என்று கட்டளை யிட்டுள்ளார்கள். அத்துடன் ஜாதி, மத, சமய பேத

Koviloor Digital Library

மின்றி மண், பெண், பொன்னுசையை மறந்தவராய், தெய்வபக்தியில் சதா சிந்தனை செலுத்துபவராய், சன்மார்க்க ஒழுக்கமுடைய ஒருவரைக் கொண்டு ஞானசபையில் பூஜைசெய்ய ஏற்பாடு செய்திருந்தார்கள்.

உயிர்க் கொலையும் புலைப்புசிப்பும் உடைய புறவினத்தவர்கள் வணங்கத் தனியிடம் புறத்தே அமைத்து அங்குள்ள வாயிலின் மேல் **"ஆடு, கோழி, மச்சம் முதலியவற்றின் புலாலுண்பவர்கள் இந்த வாயிலுக்குள் நுழையப்படாது"** என்ற விளம்பரப் பலகை ஒன்றினைத் தொங்க விட்டிருந்தார்கள். ஏனைய அகவினத்தார்கள் அனைவரும் உள்ளே சென்று இறைவனை வணங்கும் உரிமை பெற்றிருந்தனர். **ஆயின் புறவினத்தவரும் புலாலுணவை அறவே நீக்கி அகவினத்தாராகலாம் என்ற அனுமதி யுள்ளது.**

சுவாமிகள் வெளியிட்ட **சத்திய ஞானசபை விளக்கப் பத்திரிகையை** ஆறுந் திருமுறை வசனபாகத்தில் கண்டுகொள்க.

86. அவதானியாருக்கு 'உண்மை நெறி'

பிறகு எப்பொழுதும் சுவாமிகள் மேட்டுக் குப்பத்திலுள்ள சித்தி வளாகத் திருமாளிகையிலேயே தங்கி யிருப்பதும் சன்மார்க்கப் போதனை செய்வதுமாக இருந்தனர். அங்கே **விவகாரம்** பேசும் பொழுது அன்பர்கள் திரள் திரளாக வந்து கேட்டு ஆனந்த முறுவார்கள். அங்ஙன மிருந்து வருங்கால் ஒரு நாள் சுவாமிகள் பிரசங்கஞ் செய்யும் வேளையில், நூறு அவதானங்கள் செய்த ஐயங்கார் ஒருவர் அங்குவந்து நின்றார். நின்ற அவரைச் சுவாமிகளின் தேனினு மினிய பிரசங்கத்தைத் தெவிட்டாது உளங்கொண்டு திளைக்கும் அன்பர்களில் ஒருவரும் கவனித்திலர். அதனால் சினமூண்ட அவ் அவதானியார் சுவாமிகளை நோக்கி "சுவாமிகளே! தங்கட்கு எப்படி வித்தையிலும், ஞானத்திலும் பிறர்க்கு இடங்கொடுத்து விடுதல் கூடாது என்றெண்ண மிருக்கிறதோ அதுவேபோலத் தங்களுடைய இச்சபையும் எனக்கு இடங் கொடுக்கக் கூடாதென்றே எண்ணிவிட்டது" என்று குறும்பாகக் கூறினார். சுவாமிகள் அவருடைய பக்குவ மின்மையை யறிந்து அவரை யமரச்செய்து சில வினாக்களை வினவ, அவர் விடைசொல்ல அறியாது விழிக்கவும் அவரைத் தனியே அழைத்துத் தாம் சுவரில் எழுதிவைத்துள்ள **உண்மை நெறியினைக்** காட்டி "இதனைக் கைப்பற்றுங்கள்" என்று முன்னேறுவதற்கான வழியை யறிவுறுத்தினர். அதன்மேல் அவதானியார் சுவாமிகளிடத்து அடிமைபூண்டு அருள்பெற்றார்.

Koviloor Digital Library

87. ஆட்டுக் குட்டியின் அன்பு

மேட்டுக் குப்பம் சித்திவளாகத் திருமாளிகையில் சன்மார்க்கப் போதனை நடைபெறுங்காலத்தில், ஒரு நொண்டி ஆட்டுக் குட்டியும் ஆங்கு வந்து செவிமடுப்பதும், பின்னர் எல்லோரும், அம் மாளிகையினை வலம் வரும்போது தானும் வலம் வருவதுமாக இருந்துவரும். அதற்காகச் சுவாமிகள் அந்த ஆட்டுக்குட்டிக்கு அன்பர்களைக்கொண்டு ஆகாரம் முதலியன வைக்கச்செய்வார்கள்.

88. தீயினாலுந் துன்புறாத திருமேனி

சுவாமிகள் அக்குடிசையினுள் பிரமதண்டிகா யோகம் செய்வது வழக்கம். அதாவது இரு பக்கங்களிலும் நெருப்பு நிறைந்த இரும்புச் சட்டிகளை வைத்துக் கொண்டு இடையிலிருந்து செய்யும் யோகம். அதையறியாத சபாபதி குருக்கள் ஒருநாள் திடீரென நுழைய அவருடைய கால்கள்பட்டு ஒரு சட்டியிலிருந்த நெருப்பு சிதறிக் குருக்கள்மீதும், சுவாமிகள்மீதும் பட்டன. குருக்கள் உடம்பு வெந்து போயிற்று; சுவாமிகள் சுத்ததேகம் பெற்றவராகையால் சிறிதும் துன்பம் ஏற்படவில்லை.

89. பிநாகபாணியாரின் பிதற்றல்

பிநாகபாணி முதலியார் என்பவர் புதுச்சேரியிலுள்ள தந்தி ஆபீஸ் மானேஜர். அவருக்கு ஏழுபாஷைகள் வரை எழுதப் படிக்கத் தெரியும். அவ்வளவேயன்றி அம்மொழிகளிலெல்லாம் அவர் வல்லவரல்லர். அந்த நிலையிலேயே அவருக்கு அகங்கார முண்டாகி விட்டது. அதனால் அவர் சுவாமிகளையும், சாலையிலுள்ள மற்றவர்களையும் சோம்பேறிகளென்றும, வெற்றுக் கும்பலென்றும், இன்னும் பலவாகவும் இகழ்ந்து உரையாடி வருவார். ஒருகால் அவர் சுவாமிகளைப் பல மொழிகளில் கேள்விகள் கேட்டு, அடக்க வேண்டுமென மேட்டுக் குப்பத்திற்கு வந்தார். அவர் சபைக்கு வருவதற்கு முன்னமேயே சுவாமிகள் "நமக்கு ஒருவர் புத்தி புகட்ட வருகிறார்;" என்றுகூறினார்கள். பின்னர் பிநாகபாணியும் வந்து ஒன்றும் பேசாது மௌனமாக ஓரிடத்தில் அமர்ந்து கொண்டார்.

அதன்பிறகு சுவாமிகள், தம் அருகிலிருந்த **தொழுவூர் வேலாயுத முதலியார் மூத்த குமாரனாகிய திருநாகேச்சுரம்** என்னும் நான்கு வயதுடைய சிறுவனைப் பிநாகபாணி முதலியார் எதிரே நிறுத்தி "உனக்கு எத்தனை பாஷைகள் தெரியும்" என்று வினவினார்கள். அதற்கப் பையன் "**எனக்கு ஆறு பாஷைகளில் பாண்**

Koviloor Digital Library

டித்திய முண்டு" என்று கூறினன். கூறவே பிநாகபாணியாருக்கு அச்சம் அதிகரித்தது. அதனல் பெருங் கஷ்டத்தோடு அமர்ந்திருக்கும் அம்முதலியோரை நோக்கிப் பின்னும் சுவாமிகள் "நீங்கள் எந்தப் பாஷையில் வேண்டுமானலும் இந்தப் பையனைக் கேள்விகள் கேளுங்கள்; பதில்சொல்லுவான்" என்றனர். பிநாகபாணி முதலியார் பேச வாய்திறக்க முயன்றும் முடியவில்லை, அவருக்கு அச்சமும் நாணமும் நடுக்கமும் உண்டாகி தம்முடைய அறியாமைக்கும், தாம் கூறித் திரிந்த பிதற்ற லுரைகட்கும் வருந்திக்கொண்டு மௌனமா யிருந்தனர். பின்னர், சுவாமிகளது கிருபையால், வாய்திறக்க அவரே சுவாமிகளை வணங்கி, 'ஆண்டவரே! அடியனேன் செய்த பிழைகளை யெல்லாம் பொறுத்தருளல் வேண்டும்' என வேண்டி அருள்பெற்று விடைகொண் டேகினர்.

90. மந்திர வாதிகளும்—மகா காளியும்

மந்திரவாதிகள் நால்வர் வடலூரிலிருந்து சுவாமிகளைத் தரிசித்தற் பொருட்டாக மேட்டுக் குப்பத்திற்கு ஒருநாள் இரவு பதினைந்து நாழிகை யளவில் வந்துகொண் டிருக்கும் பொழுது, இடையிலே யுள்ள ஒரு காளி அவர்கட்குப் பயங் காட்டியது. அவர்கள் அதை நோக்கி "நாங்கள் திரும்பிவருங் காலத்தில் உனக்குப் பூட்டிடுகிறேம்" என்று கூறி வந்துவிட்டனர். அவர்கள் சுவாமிகளைத் தரிசித்து மீளுங்காலை சுவாமிகளிடத்தில் காளி யின் வரலாற்றைக் கூற, அதற்குச் சுவாமிகள் "பூட்டிட வேண்டாம்; நம்மிடத்திற்கு வந்துபோவதாகக் கூறுங்கள்; போதுமானது" என்று கூற, அவர்களும் அவ்வாறே காளிக்குக் கூறப் பேருருவோடு வந்த அக்காளி தன்னுடைய உருவைக் குறைத்துக்கொண்டு அவர்களுடைய கட்புலனுக்கே புலனகாது போயொழிந்தது.

91. வடலூரார் பெற்ற புண்ணியம்

மிகுந்த செல்வவந்தர்களும், வடலூருக்குப் பெரியதனக் காரர்களு மாகிய அருணசல படையாட்சி, வேங்கடாசல படையாட்சி ஆகிய இருவரையும் சுவாமிகள் வரவழைத்து "நீங்கள் இன்றே புலையுணவை விட்டுவிடுங்கள்; உங்கட்கு அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர் திரு வருளால் பல நன்மைகள் உண்டாகும்." என்று கூறினர்கள். அவர் களும் அவ்வாறே புலையுணவை விடுத்துப் புண்ணிய வழியில் நின்றூர் கள். அதனல் அவர்களுடைய நிலங்களில் அவ்வருடமுதல் ஒரு பங்

குக்கு ஐந்து பங்கு விளைவு அதிகரிக்க லாயிற்று. அதைக்கண்ட அவர்கள் மற்றவர்களையும் புலையுணவை நீக்கிப் புண்ணியம் பெறுமாறு செய்தனர்.

92. உண்மை நெறியை உணர்த்தல்

பின்னொரு நாள் கண்ட்ராக்டர் ஆறுமுக முதலியார் என்பார் சுவாமிகளிட மிருந்து ஒரு குளிகை பெற விரும்பினர். அவர் விருப்பினை யறிந்த சுவாமிகள், அவருடைய கரத்தில் மிளகுப் பிரமாண முள்ள இரு குளிகைகளை வைக்க, அவற்றையே அவர் தாங்கமுடியாது கீழே வைத்துவிட்டார். அதைக்கண்ட சுவாமிகள் அவரை நோக்கி "இந்த ஆசையை இனி நீர் விட்டுவிடும்; ஏனெனில் இது உண்மை நெறிக்கு ஏற்புடையதல்ல" என்று உரைத்தருளினார்கள்.

93. குருக்களுங் குளிகையும்

அப்படியே குருக்க ளொருவருக்கும் சுவாமிகள் நல்லறிவு கொளுத்தினர். சுவாமிகளிடத்தில் அன்புடையவரா யொழுகி வந்த குருக்க ளொருவர் குளிகையைப் பெற்றுச் செல்வவந்தராகலா மென எண்ணி சுவாமிகளை வேண்ட, சுவாமிகள் குளிகை யொன்றினை ஒரு பெட்டியின்மீது வைத்து 'இதை எடுத்துக்கொள்ளும்' என்றார்கள். அக்குருக்கள் அதை எடுக்க முயன்றபோது அக் குளிகை அவர் கரத்தை வலுவாகப் பிடித்துக் கொண்டது. பின்னர் அவரும் சுவாமிகளை வேண்டி அத் தீங்கிலிருந்தும் விடுபட்டு நல்லறிவு பெற்றார்.

94. 'ந' கரப் பொருள் விளக்கம்

மற்றொருநாள் மகா வித்வான்களிருவர் சுவாமிகளை யணுகி திருவாசகத்தின் முதல் அகவலுக்குப் பொருள் கூறுமாறு வேண்டினர். அதற்கிசைந்த சுவாமிகளும், அம் முதல் அகவலில் முதலெழுத்தாகிய 'ந' என்னும் ஓர் எழுத்திற்கு மட்டும் இரண்டு மணிநேரம் 61-இலட்சணங்கள்வரை எடுத்தோதி வர, அவற்றை அவ் வித்வான்கள் உள்ளத்தமைத்துக் கொள்ள முடியாதவர்களாய்ச் சுவாமிகள் திருவடிகளை வணங்கி 'இனி கேட்பதற்கு எங்கட்கு ஆற்றலில்லை' என்று கூறிச் சென்றனர்.

95. வலைஞரை ஆட்கொண்ட வைபவம்

மேட்டுக் குப்பத்துக்கு அருகேயுள்ள செம்படவர் இருவர் வலைகளைக் கையிலேந்திக் கொண்டு சுவாமிகள் இருக்கும் வழியே போக

Koviloor Digital Library

அவர்களைச் சுவாமிகள் அருகழைத்து "உலகினிடத்தே பல தொழில்களிருக்கப் பல்லாயிரக் கணக்கான உயிர்கள் அழிவதற்கு ஏதுவாகிய இத்தொழில் உங்கட்கு வேண்டுவதில்லை; ஆதலால், இக்கொடுந்தொழிலை இன்றே விட்டு விடுங்கள்" என்றும், இன்னும் பலவிதமான அறங்களையும் அவர்கட்கு இனிமையாகக் கூறினார். கூறியதைக் கேட்ட அவர்கள், இனி அச்செயல் செய்வதில்லை யென்று சொல்லி விட்டு, அவர்கள் சென்று பழையபடியே வலைவீசினர். வலைகள் அறுபட்டன. அறுந்துபட்ட அவைகளைச் சீர்ப்படுத்தி மீளவும் வீச, அப்பொழுதும் அவை அறுபட்டனவே யல்லாது பயனெதுவு மில்லை. இப்படியே பலமுறை அவர்கள் வீசும்பொழு தெல்லாம் வலைகள் அறுந்துபோக அவர்கட்கு நல்லறிவு வந்து "அச்சுவாமிகள் சொன்ன வற்றை அசட்டை செய்ததனால் வந்தது இந்தக்கேடு" என்பதை உள்ளத்துட் கொண்டு அன்றிருந்து அப்பாவத் தொழிலை விடுத்து அறமேற் கொண்டு சுவாமிகளின் அருள் பெற்றனர்.

96. தொழுவூர் வேலாயுத முதலியார் துன்பம்

தொழுவூர்- வேலாயுத முதலியாருக்கு ஒருகால், உடம்பு முழுவதும் சிரங்குண்டாகி அதனால் வீக்கமும் துன்பமு முண்டாக, அதனை ஆற்றாராய் முதலியார் வள்ளலாரிடத்து வர, வள்ளலாரும் அவருக்குத் திருநீறு கொடுத்து அப்பொழுதே அவருடம்பு குணமடைய அருள் செய்தார்.

97. வழி காட்டி மறைந்தமை

கூடலூர்: சின்னதம்பி பிள்ளை ஒருநாள் வடலூரிலிருந்து மேட்டுக் குப்பம் வரும் வழியில் வழி தப்பிப் பல வழிகளில் சென்று தடுமாற, அத்தருணத்தில் வள்ளலார் அவர் முன்னே தோன்றி வழியினைக் காட்டி மறைந்தார்.

98. பசுவைப் போற்றல்

வேறொருநாள் திருவொற்றியூரிலுள்ள **இராஜகோபாலப் பிள்ளை** என்னும் யாதவ மரபைச் சேர்ந்த அன்பரொருவர் மேட்டுக்குப்பத்திற்கு வள்ளலாரைத் தரிசித்தற்பொருட்டு வர, அவரை அமரச் செய்து, அவர் பசுவினங்களை ஒழுங்கே காப்பாற்றுகிறதில்லை யென்பதை முன்னரே உணர்ந்திருந்த நம் வள்ளற் பெருமான் அவருக்குப் பசுவின் அருமை பெருமைகளைப் பற்பலவிதமாக எடுத்துக் கூறி, அவருக்கு நல்லறிவு கொளுத்தினார்கள். அவ் விராஜகோபாலப் பிள்ளையும் வள்ளலாரிடம் விடை

Koviloor Digital Library



சகல நோய்களையும் தீர்க்க வல்ல — சாலை தீர்த்தம்



சுவாமிகளுக்கு அடிமைப்பட்ட — தெய்வீக மாமரம்



சகல நோய்களையும் தீர்க்கவல்ல — கேணி தீர்த்தம்

அருட்பெருஞ்ஜோதி அச்சகம், சென்னை

Koviloor Digital Library

Koviloor Digital Library

பெற்றுக்கொண்டு வீடு வந்து சேர்ந்து, அன்று முதலாக வள்ளலார் கூறியாங்கு பசுக்களை ஒழுங்கே காப்பாற்றி வருவாராயினர்.

அப்படியாக அவர் பசு வினங்கட் கெல்லாம் உபசாரங்கள் செய்துவரும் நாளில் ஒருபகல் அவரை ஒரு முரட்டுப் பசு முட்டித் தள்ளிவிட்டது. அதனாலடிபட்டு வருந்தும் போது அவருடைய கனவில் வள்ளலார் தோன்றி "நீர் கவலைப்பட வேண்டாம்; நாளைக் காலையிலே இரண்டு பேர் வந்து உம்முடைய உடல் நோயைக் குணப்படுத்துவர்" என்று உரைத்து மறைந்தார். அவ்வாறே மறு நாளிருவர் வந்து அவருடைய உடல் நோயைத் தீர்த்தார்கள்.

99. வெண் குஷ்டமும்—கருங் குஷ்டமும்

கொங்கண தேசத்தாரிருவர் வெண்குஷ்டத்தினால் ஒருவரும், கருங்குஷ்டத்தினால் ஒருவருமாகத் துன்புற, ஆற்றாதவர்களாய் வள்ளலாரின் பெருமையை யறிந்து, அவர்களிடமணுகிக் "குறை தவிர்த் தாண்டருளல் வேண்டும்; குணப்பெருங் குன்றே!" என்று குறையிரக்க, கருணைக்கடலான வள்ளலார் அவ்விருவரையும் பற்றியிருந்த அவ்விரு வகைக் குஷ்ட நோய்களையும் ஐந்து நாட்களில் விலக்கினர்.

100. மகமதியச் சிறுவன் வினை

இளவயதுள்ள மகமதியச் சிறுவ னொருவன் தன் உடம் பெல்லாம் எண்ணெயைத் தடவி, அதன்மீது ஆங்காங்கு பஞ்சு ஒட்டவைத்துக் கொண்டு, வள்ளலாரிடம் வந்து விளையாட்டாக, "எனக்கு உடம்பெல்லாம் செரங்குங்க! நீங்க தீர்க்குணுங்க" என்று கூறினன். வள்ளலாரும் "தீர்ந்துவிடும் போ" என்றுகூறி அனுப்பினர். வீட்டிற்குப் போவதற்குள் அவன் பஞ்சு ஒட்ட வைத்திருந்த இட மெல்லாம் பெருஞ் சிரங்குகள் உண்டாகித் துன்புறுத்தத் தலைப் பட்டன. துன்பம் பொறுக்கமாட்டாத அம்மகமதியச் சிறுவன், மீளவும் வள்ளலாரிடம் வந்து முறையிட சாலையிலுள்ள கிணற்றுத் தீர்த்தத்தில் அவனை முழுகும்படி ஐயா கூறினர். அவனும் அக் கிணற்றுத்தீர்த்தத்தில் முழுகித் தனது துன்பம் நீங்கிப் போயினன்.

101. ஒன்றுக்கு மூன்று

பின்னர் ஒருகால், ஒரு மகமதியர் வள்ளலாரிடமணுகி "இரச பஸ்பஞ் செய்வதற்கு உரிய மூலிகை இது" என்று ஒரு மூலி கையின் பெயரை மிகவும் இரகசியமாகக் கூறினர். அதனைக்கேட்ட

Koviloor Digital Library

வள்வலார் "அப்படியா? இரசபஸ்பம் செய்வதற்கு நீர் சொன்ன மூலிகையைத் தவிர்த்த மூன்று மூலிகைகளுண்டு; அவை யின்னின்ன." என்று எல்லோருங் கேட்க உரத்த சப்தத்துடன் மொழிந்தனர். அம் மகம்மதியர் வெட்கித் தலைகுனிந்து போயினர்.

102. முதற்றே—முதல் "தே"

மற்றொருகால் புலவரொருவர் அடிகளிடம் வந்து" சுவாமி! திருக் குறளில் முதற் குறளிலேயே முதற்றே யுலகு என்பதில் ஏகாரம் ஈற்றசையாயின் கடுகைத் துளைத்தேழ் கடலைப் புகட்டி...... என்று கூறியது எவ்வாறு பொருந்தும்?" என்று வினயத்தோடும் வினவினர். அதற்கு நம் வள்ளலார் "புலவரே! முதற்றே என்பதை 'முதல் தே' எனப் பிரித்துப் பாரும். ஒன்றுந் தோஷமிராது" என்று கூறினர்.

103. முருக தாசரின் முதிர்ந்த அன்பு

திருநெல்வேலி யென்னும் திருப்பதியில், சைவவேளாண் மரபில் அவதரித்தவரும், ஒன்பது பிராயந்தொடங்கி ஒண்கட லமிழ்தெனத் தீஞ்சுவைக் கவிகளால்—சிவ குமரனை வழுத் தும் சீரிய ஒழுக்கமுடையவருமாகிய **தண்டபாணி சுவாமிகள்** என் னும் முருகதாசர் என்பார் நமது வள்ளலாரின் அருமை பெருமைகளைப் பிற அன்பர்கள் மூலம் அறிந்து அளவிலா மகிழ்வும் அன்பும் உடைய வராய் வள்ளலாரைத் தரிசிக்கும் விருப்பங்கொண்டு வள்ளலாரிடம் வர, வள்ளலாரும் அவரை அன்போடு வரவேற்று உபசரித்தனர். அது சமயம் அம் முருகதாசர் தாம் முருகன்மீது பாடிவைத்திருந்த அருமைப் பாக்களை வள்ளலாருக்குக் காட்டினர். வள்ளலார் அப்பாக்களில் ஒரு சிலவற்றைப் பார்த்து உளமகிழ்ந்து 'முருகதாசர்—அருணகிரிதாசரே' என்று வியந்து கூறினர். இம் முருகதாசரே வள்ளலார்மீது **அனு பவப் பதிகமும் விண்ணப் பதிகமும்,** பாடியவர். (6-வது திருமுறை, வசன பாகத்தில் காண்க)

104. பிள்ளை யவர்களின் பேரன்பு

கவி பாடுவதில் கம்பரெனப் பெயரும் புகழும் வாய்ந்தவரும், திருவாவடுதுறை ஆதினத்து மகாவித்வானாக இருந்தவரும், ஆகிய **மகாவித்வான்: மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர் கள்** தம்முடைய மாணவராகிய **மாயூரம்: வேதநாயகம் பிள்ளை** இயற்றிய நூல்களுக்குச் **சாற்று கவி** வாங்குதற் பொருட் டாக வள்ளலாரிடம் ஒருகால் வர, வள்ளலாரும் அவரை முகமலர்ச்சி யோடு நல்வரவு கூறி வரவேற்றனர். பிள்ளையவர்களும், வள்ளலாரை

Koviloor Digital Library

வணங்கி அமர்ந்து தம் கருத்தை வெளியிட, வள்ளலாரும் அவ்வாறே ஒரு சாற்று கவி அளித்தனர். அதன்பிறகு பிள்ளை அவர்கள், வள்ளலாரிடத்து, 'இங்கிதமாலை'யைப் பற்றிச் சிறிது விளக்கியருளுமாறு வேண்டினர். வள்ளலார் இங்கிதமாலையின் முதற் பாட்டிற்கு மட்டும் நான்கு மணி நேரம் வரைப் பலவகைப் பொருள்களை எடுத்தோதி, அதற்குமேலும் அனுபவ உரை விரிக்கத் தொடங்கினர். அவ்வுரையைக் கிரகித்துக் கொள்ளக் கூடாமையால் பிள்ளையவர்களும், மற்றவர்களும் திகைத்துப் போயினர். வள்ளலார், அதுகண்டு உரையை நிறுத்திக் கொள்ள, மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் வள்ளலாரிடத்துப் பொங்கி வழியும் ஞான அமுதத்தைக் கண்டு அளவிலா வியப்பும், ஆனந்தமுங் கொண்டவராய் அன்று முதல் வள்ளலாருடைய பேரன் பரினுஞ் சிறந்த பேரன்பராயினர்.

105. அங்கங்கள் வேறான அதிசயம்

ஒருநாள் இரவு வெளியே போன ஐயா அவர்கள் அதிக நேரமாயியுந் திரும்பி வரவில்லையேயென்று, வேலூர் சண்முகம் பிள்ளை என்பார் சாலையை விட்டு வெளியே போய்ப்பார்க்க, அங்கே ஐயா அவர்களுடைய அங்கங்களெல்லாம் தனித்தனியாகக் கிடந்தன. அதைக்கண்ட அப்பிள்ளை, உடல் நடுங்க உயிர் நடுங்க—"அந்தோ! அடிகள் இவ்வாறு ஆயினரே, இனி என் செய்வோம்" என்றின்னன பல மொழிந்து வருந்துகின்ற வேளையில் ஐயா அவர்கள் திடீரென அவருடைய கண் முன்னே தோன்றி, "நீர் இனி இம்மாதிரி வந்து பார்க்காதீர்!" என்று எச்சரித்தனர். அவரும் மகிழ்வொடு ஐயா அவர்களுடைய ஆணையைச் சிரமேற்கொண்டு பின் தொடர்ந்துவர இருவரும் சத்திய தருமச்சாலையை அடைந்தனர்.

106. "அமாவாசை" அருள் பெறல்

வடலூர் சேரியிலுள்ள அமாவாசை என்னும் ஒருவன் சிறிது பக்குவமுடையவனா யிருப்பதைக் கண்டு, அடிகள் அழைத்து வரச் செய்து, "நீ இறந்துபோன மாடுகளைப் புதைத்துவிட வேண்டும்" என்று கூற அவ்வாறே அவனும் புதைக்கின்ற பழக்கத்தைக் கைக்கொண்டான். அதையறிந்த அடிகள் மீண்டும் அவனை யழைப்பித்து, "மாட்டினைப் புதைத்துவிடுவதோடு நீ இனி மேல் மாமிசமும் உண்ணாதே" என்று ஆணையிட்டனர். அதற்கும் அவ்வமாவாசை இணங்கியவனாய்த் தான் மிகவும் வறுமை நோய் வாய்ப் பட்டிருத்தலை எடுத்துரைத்து அதனை நீக்கி யருளல் வேண்டு

Koviloor Digital Library

மென ஐயாவை வேண்டினன். ஐயாவும் அவனுடைய தீவிர பக்குவ நிலைக்கு மெச்சி நாள்தோறும் அவனுக்கு "ஓர் அரை ரூபாய்" சுலப மாகக் கிட்டுமாறு திருவருள் பாலித்தார்.

107. கள்வனுக்கும் காட்டிய கருணை

அதன்பிறகு ஒருநாள் வடலூருக்கு அடுத்த குள்ளஞ் சாவடி என்னுமிடத்திற்கு ஐயா அவர்கள் சென்ற காலத்தில் அங்குள்ள அன்ப ராகிய ஒரு மகம்மதிய-'போலீஸ் ஹெட்கான்ஸ்டபில்' புது வஸ்திர மொன்றை அடிகளுக்குப் பாதகாணிக்கையாக வைத்து வணங்கி, தான் வாழ்வு பெறுதற் பொருட்டாக அவ்வஸ்திரத்தை யணிந்து கொள்ளும் படி வேண்டினர். அவர் வேண்டுதலுக்காக அடிகள் அவ்வஸ்திர்த்தை யணிந்துகொண்டு அன்றிரவு அங்குதானே படுத்திருக்க, அவ்விரவில் ஒரு திருடன் வந்து அவ்வஸ்திரத்தை மெல்ல இழுத்தான். அதைக் கண்ட தும் மகம்மதியர் அக் கள்வனைப் பிடித்து தண்டிக்க முயன்றார். ஐயா அவர்கள் அவரைத் தடுத்து, இழுத்த அவனுக்கே அவ்வஸ்திரத்தைக் கொடுத்தனுப்பினர்.

108. புகைப் படம்

பிறகொருநாள் சாலை அபிமானிகளாகிய அன்பர்கள் சிலர் நம் திருவருட் பிரகாச வள்ளலாரைப் (போட்டோ) புகைப்படமெடுக்க வேண்டுமென விருப்பங்கொண்டு சென்னை மாசிலாமணி முதலியார் முதானவரைக் கொண்டு எட்டு தரம் புகைப்படம் எடுத்தும் வள்ளலாருடைய திருவுருவம் படத்திலமையவில்லை. பின்னர் அவ்வெண்ணத்தை அவர்கள் விட்டனர். சுத்த தேகம் அமைந்த எம்பெருமானார் திருமேனியும் புகைப் படத்தில் விழுமோ? அகண்டாகார சச்சிதானந்த சொரூபராகிய தெய்வ உருவத்தைச் சிறுபடத்தில் அடக்க யாரால் முடியும்?

109. பொன்னான மேனி!

இங்ஙனம் நிகழ்ந்த சிறிது காலத்திற்குப் பிறகு, பண்ணுருட்டியி லுள்ள குயவரொருவர் வள்ளலார் திருவுருவத்தைப் பலகாலும் பார்த்த ஒரு பழக்கத்தின்மேல் அம்மாதிரியே ஓர் உருவம் அமைத்து அதற்குப் பலவகை நிறங்கள் கொடுத்துக் காண்போர் கண்ணைக் கவருந் தரத்ததாகச் செய்துவந்து வள்ளலாரிடங் காட்டினர். வள்ளலாரோ, அத் திருவுருவைக் கரத்தில் வாங்கிப் "பொன்னான மேனி மண்ணாயிற்றே" என்று அப்படியே கைநழுவ விட்டு விட்டார். அவ்வுருவமும் கீழே விழுந்து உடைந்துபோனது.

Koviloor Digital Library

110. ஜீவகாருண்யத்தின் முடிவு

வேறொருநாள், ஜீவகாருண்யமென்றால் மக்களிடத்தும், மாக்களிடத்தும் கருணைகாட்டுவது என்ற அளவில் சில அன்பர்கள், பேசிக் கொண்டிருப்பதைக் கேட்டு வள்ளலார், அவ்வன்பர்களை அருகழைத்து அவர்களை நோக்கி "நீங்கள் பேசிக் கொள்கிற அளவில் ஜீவகாருண்யம் முடிவுபெற்று விடாது; அது இன்னும் பரந்து செல்வது; உதாரணமாக ஒரு கதை சொல்லுகிறேன். கேளுங்கள்" என்று சொல்லத் தொடங்கினர். "அன்பர்களே! இரு முதியவர்கள் ஒரு வீதி வழியே சென்று கொண்டிருந்தனர்; அப்பொழுது அவருள் ஒருவரின் கால்பட்டு வீதியிற்கிடந்த ஒரு மண் கட்டி உடைந்துபோயது. அதைக் கண்ட மற்றவர் உடனே மூர்ச்சையானார். மூர்ச்சையடைந்த அவருக்கு உபசாரங்கள் செய்து மூர்ச்சையைத் தெளிவித்த முன்னையவர், 'தாங்கள் மூர்ச்சை யுற்றதற்குக் காரணம் என்னை?' என வினவ, அதற்கு அம் முதியவர் 'உம்முடைய காலினால் அவ் வழகிய மண் கட்டி உடைந்து உருக்குலைந்து போனதே காரணம்' எனக்கூறினர்" என்று கதையைச் சுருக்கமாக முடித்து, அவர்கட்கு ஜீவகாருண்யத்தின் முடிவினை உணர்த்தி யருளினர்.

111. யோகத்தினுஞ் சிறந்தது தோத்திரமே

பிறகொருநாள் வள்ளலாரை அன்பர்கள் "யோகம் முதலியன செய்ய எங்களால் இயலாதனவாயிருக்கின்றன: ஆதலால் யாங்கள் ஈடேறுதற்குரிய ஒரு இலகுவான மார்க்கத்தைத் தேவரீர் திருவாய் மலர்ந்தருளல் வேண்டும்" என்றிரக்க, வள்ளலாரும், "இக் கடையுகமாகிய கலியுகத்தில் உங்களால் யோகம் முதலிய சாதனங்களை இயற்றமுடியாது; ஆதலால் நீங்கள் தோத்திரத்தையே ஈடேறும் மார்க்கமெனக் கொள்ளுங்கள்" என்றிசைத்தனர்.

நினைந்துநினைந்து உணர்ந்துஉணர்ந்து நெகிழ்ந்துநெகிழ்ந்து அன்பே
நிறைந்துநிறைந்து ஊற்றெழுங் கண்ணீர் அதனால் உடம்பு
நனைந்துநனைந்து அருளமுதே! நன்நிதியே! ஞான
நடத்தரசே! என்னுரிமை நாயகனே! என்று
வனைந்துவனைந்து ஏத்துதும் நாம் வம்மின் உலகியலீர்!
மரணமிலாப் பெருவாழ்வில் வாழ்ந்திடலாங் கண்டீர்
புனைந்துரையேன் பொய்புகலேன் சத்தியஞ்சொல் கின்றேன்
பொற்சபையிற் சிற்சபையிற் புகுந்தருணம் இதுவே.

112. சன்மார்க்கத்தில்—இன்னிசை

பிற்க, வள்ளலாரிடம் சேர்ந்திருந்த கூட்டங்களில் ஒருசிலர், தோத்திரஞ் செய்யுங் காலத்தில் பிடில், மத்தளம் முதலியவற்றை

Koviloor Digital Library

வைத்துக் கொள்ளுதலும், ஆராதனை செய்யுங் காலத்துப் பலவித மான கோஷங்களுடன் கூச்சல் போடுதலும், பிரம்ம தாளம், நகார், கண்டாமணி, நாகசுரம் முதலிய ஒலிக்கருவிகளை வைத்துக் கொள்ளு தலுஞ் செய்தனர். அவற்றைக் கண்ட நம் ஐயா அவர்கள் பெரிதும் மனம்வருந்தி அவர்களை அழைத்து "நீங்கள் செய்யும் இக்காரியங்க ளெல்லாம் சன்மார்க்கத்திற்கு முற்றிலும் மாறுனவை யென்பதை நீங்கள் அறியவேண்டும்; மனநெகிழ்ச்சியோடு ஆண்டவனுடைய தோத்திரங்களை அமைதியாக அன்போடு பாடுவதுதான் சன்மார்க் கத்தின் முக்கிய லக்ஷியத்திற்கு முற்றிலும் உடன்பா டானது என்பதையும் அறிய வேண்டும்; அறிந்து இவைகளை அறவே விட்டு விட வேண்டுவதே உங்கள் கடமை" எனக் கண்டிப்பாகத் தெரிவித் தார்கள். அன்றிருந்து அவ்வீணுடம்பரங்களெல்லாம் அறவே ஒழிந்தன. ஆனுல், பின்னுல் இப்பொழுது சில ஆண்டுகளாக அவைகள் தொடங்கி யிருக்கின்றன. மீண்டும் ஐயா அவர்களின் கருத்திற்கும் சன்மார்க்கத் திற்கும் உவப்பான—உடன்பாடான முறைக்கு வருவதற்கு எல்லாம் வல்ல ஆண்டவர் திருவருளைச் சிந்திப்போமாக.

113. தேங்காய்கூடப் பலியிடுதல் கூடாது

தெய்வத்திற்குப் பலியிடும் கொடிய வழக்கத்தைச் சுவாமிகள் கண்டிப்பாகத் தடுத்து வந்தார்கள். அத்துடன் **தேங்காயைக் கூடப் பலியிடுதல் கூடாது** என்றும் அந்தத் தேங்காயைப் பலியிடாமல், முன்னதாகவே உடைத்து திருத்தி அத்துடன் சர்க்கரை, கற்கண்டு திராட்சை முதலியன கலந்து ஆண்டவருக்கு இனிப்பாக நைவேத்தியம் வைக்கவேண்டு மென்றும் சொல்லிவந்தார்கள். ஆண்டவரை நமது வாயினுல் வாயார **வாழ்த்துவது** தவிர பிறரைக் கொண்டு வேறு பாஷைகளில், அர்த்தம் விளங்காமல் அருச்சனை முதலியன செய்தல் அவ்வளவு முறையானதல்ல வெனவும், அபிஷேகாதிகள், புஷ்ப அலங் காரங்கள், தீப அலங்காரங்கள் முதலியனவும், வாகனங்களில் ஏற்றி ஆடம்பரங்களுடன் உலா வருதல் முதலியனவும் சன்மார்க்கத்துக்கு உரியன அல்ல; எனவும், இப்படிப்பட்ட ஆரவாரங்கள் கூடாவெனவும் அரிதிற்கிடைக்கும் பணத்தை ஏழைகளின் பசி நிவர்த்திக்கே உப யோகிக்க வேண்டுமென்றும், அடிக்கடி மெய்யன்பர்கட்கு உபதேசித்து வந்தார்கள்.

ஒருநாள் ஒரன்பர், திருவிளக்குகளை நிறைய ஏற்றிவைக்க, அதனைக் கண்டு, இவ்வளவு அதிகமான விளக்குகள் ஏன்? ஏதோ ஒன்றிரண்டை வைத்துக்கொண்டு மீதியை ஏழைகளின் ஆகாரங்கட்கு உபயோகிக்க லாகாதா? என்று கண்டித்தார்.

Koviloor Digital Library

மற்றொருகால் ஒரன்பர், நிறைய புஷ்பம் முதலியன வாங்கிவரை அதனைக்கண்டு "ஏன்காணும்? இவ்வளவு புஷ்பம்? ஆண்டவர் கேட்டாரா? இதனால் திருப்தியடைவாரா? **தும்பை,** அருகு முதலானவற்றை நீரே போய்க் கொண்டுவரலாகாதா? இப் பணம் எத்தனை ஏழைகட்கு பசியை நிவர்த்திக்கும்!" என்று கண்டித்து வந்தார்கள். இத்துடன் ஞான சபையைத் தாபித்து, அதைப் பூசிக்கும் முறையை, (ஞான சபை விளக்கப் பத்திரிகை 6-ந் திருமுறை வசனபாகம்) எழுதிக் கொடுத்தார்கள். அதன்படியே சில மாதங்கள் நடந்துவந்தது. பின்பு, சுவாமிகள் திருக்காப்பிட்டுக் கொள்ளும் சில தினங்கட்கு முன்பு, அதனைப் பூட்டிவிட்டுச் சாவியை வாங்கிக்கொண்டு "ஆண்டவர் வருங் காலத்தில், சபையானது தானே திறந்துகொள்ளும்; அப்போது அது **அற்புதமான கட்டிடமாகத் தோன்றும், எல்லா அற்புத சித்திகளும் நடக்கும்"** என்றார்கள். அவ்வண்ணமே சுவாமிகள் திருக்காப்பிட்டுக் கொண்டபின் மூன்றுவருடம் வரையில் சபை மூடியிருந்தது. **பின்னர் வெகுதானிய ஆண்டு சித்திரைத் திங்கள் முதல்நாள்,** சாலை அபிமானிகளும், சபாபதி சிவாசாரியரும் மொத்தம் ஆறுபேர்கூடி அவர்களுக்குள் ஓர் பிரமாணம் செய்துகொண்டு, திரைக்குள்ளே ஒரு பீடத்தைவைத்து அதன் பேரில் சரிகைகளால் அலங்கரித்த தலையணைகளையும் திண்டுகளையும் வைத்து அதனைக் குருபீடமாகச் சிந்தித்துப் பிரதிதினமும் தோத்திரமும், பிரதிமாத பூசத்திற்குத் தீப அலங்காரத்தோடு தோத்திரமும், ஐயா அவர்கள் கட்டளையிட்டவண்ணம் நடத்தி வந்தனர். அவ்வாறு நடந்துவந்த பூசையானது நாளடைவில் மாறுபட்டுச் சன்மார்க்கத்திற்கு விரோதமாக அபிஷேகாதிகள், நாகசுரங்கள், கொட்டு முழக்குகள், பேரிகை, கண்டாமணிகள் அதிர்வேட்டுகளுடன் ஆரவாரங்கள் சாதாரண முறையில் நடந்துகொண்டுவருவதை அந்தத் **திருவுளந்தான் தடுத்து** ஒழுங்கான முறையில் வருவிக்க வேண்டுமென நாமெல்லோரும் எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுவோமாக.

இதுவரை, அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரின் பரிபூரண அருளமுதருந்திப் பாருலகதனில் அப்பரம கிருபாநிதி யென்னக், கல்லார்க்குங் கற்றவர்க்கும் களிப்பருளுங் **களிப்பாய்**—காணார்க்குங் கண்டவர்க்குங் கண்ணளிக்கும் **கண்ணாய்**—வல்லார்க்கும் மாட்டார்க்கும் வரமளிக்கும் **வரமாய்**—மதியார்க்கும் மதிப்பவர்க்கும் மதிகொடுக்கும் **மதியாய்**—நல்லார்க்கும் பொல்லார்க்கும் நடுநின்ற **நடுவாய்**—நரர்களுக்கும் சுரர்களுக்கும் நலங்கொடுக்கும் **நலமாய்**—எல்லார்க்கும் பொதுவில் இருந்தாண்டு கொண்ட **சிவமாய்—எம்மரசாய்—எம்மை உய்விக்கவந்த எம்பெருமானாய் நின்றொளிர்கின்ற தெய்வத் தந்தையாராகிய திருவருட்பிரகாச வள்ளலார் தோன்றுந் துணையாயிருந்து** உலக

Koviloor Digital Library

வர்க்குத் துணை புரிந்த நிகழ்ச்சிகளை அப்பெருமான் அடிமலர்த் துணை கொண்டு அறைந்தாம். இனி அப்பெருமான் உலகவர் சமரச சுத்த சன்மார்க்க சாதனம் இன்னதென்பதைத் தெரிந்துய்யத் திருக்காப்பிட்டுக் கொள்ளுதற்குப் பத்துநாட்கள் முன்னே திருவாய் மலர்ந்தருளிய சுத்த சன்மார்க்க விவகாரத்தைச் சிறிது சுருக்கமாகக் கூறுவோம்.

"**ஆன்மநேய** ஒருமைப்பாட்டு உரிமைச் சகோதரர்கட்கு அறிவிப்பது:—

இதுவரையில் கர்மசித்தருடைய காலம்; அதனால் சமயங்களும் மதங்களும் பரவியிருந்தன; இப்போது வரப்போகிறது ஞானசித்தருடைய காலம்; இனி ஜாதி, சமயம் முதலான ஆசாரங்களெல்லாம் போய் சமரச சுத்தசன்மார்க்க சத்திய ஞானசாரம் ஒன்றே விளங்கும்; (பெருமான் புகன்றபடியே இக்காலத்தில் எங்கும் ஜாதி, சமயம், மதம் முதலான பேதம் குறைந்து சமரச நோக்கமே பெருகி வருவது கண்கூடாம்) சமய மதங்களில் சொல்லுகிற கருத்தர்கள், மூர்த்திகள், ஈசுரன் பிரமம், சிவம் முதலிய தத்துவங்கள் காலப் பிரமாண பரியந்தம் இருப்பதே யொழிய அதற்கு மேலிரா. சமய மதங்களில் சொல்லுகிற கர்த்தர்களுடைய சித்திகள் சர்வசித்திகளுடைய கடவுளின் சித்தியின் லேசங்கள்; அந்த சர்வசித்தியையுடைய கடவுளுக்கு ஒப்பாகார்கள்; கோடிகோடி பங்கு தாழ்ந்த தரத்திலிருக்கிறார்கள்; இப்போ திருக்கும் **வேதாகம புராணங்களிலும் சமய மதங்களிலும் லட்சியம் வையாதீர்கள்.** வைத்தால் சமரச சுத்தசன்மார்க்கத்தில் உங்களுக்கு லட்சியம் வராது; வராவிட்டால் நீங்கள் அடையப் போகிறது ஒன்றுமில்லை; ஆதலால் அதுகளெல்லாம் பற்றறவிட்டு, சர்வ சித்தியையுடைய கடவுள் ஒருவருண்டென்றும், அவர் ஒருவரே யென்றும், அவரை உண்மை யன்பால் வழிபாடு செய்யவேண்டும். அப்படிப்பட்ட சமரச சுத்தசன்மார்க்கத்திற்குரிய கடவுளை வழிபாடு செய்வதற்குச் சாதனம் இருவகை: அவை— **பர உபகாரம்—சத்விசாரம்.** (1) பர உபகார மென்பது தேகத்தாலும், வாக்காலும், திரவியத்தாலும் உபகாரஞ்செய்வது. (2) சத்விசார மென்பது நேரிட்டபக்ஷத்தில் ஆன்மநேய சம்பந்தமான தயாவிசாரத்தோடு இருப்பது; கடவுளது புகழை விசாரித்தல், ஆன்மாவின் உண்மையை விசாரித்தல். தன் சிறுமையைக் கடவுளிடத்தில் விண்ணப்பித்தல். விசார மென்பது சரியை முதலான நான்கில் நாலாவது ஞானத்தில் சரியை, கிரியை, யோகம் ஞானமென்கிற நான்கு படிகளில் மூன்றாவது படியாகிய ஞானத்தில் யோகஞ் செய்கிற படி (15-ஆவது படி) யாகும். விசாரஞ் செய்கிற உஷ்ணத்தால் ஜலத்திலிருக்கிற பாசியை நீக்குவது போல, ஆன்மாவைத் தெரிய வொட்டாமல் மறைத்துக் கொண்டிருக்கும் பச்சைத் திரையை நீக்கிக்கொள்ளலாம். அது நீங்கின

Koviloor Digital Library

உடனே அதற்கு மேலிருக்கும் மற்ற ஆறு திரைகளும் அதிக விரைவில் நீங்கிப் போய்விடும். விசாரத்தைவிட ஆண்டவரை மன நெகிழ்ச்சியோடு தோத்திரஞ் செய்வதினாலும், சதா அவர் திருவடியை சிந்தித்துக் கொண்டிருப்பதினாலும், கோடிகோடி பங்கு அதிகமாக நல்ல உஷ்ணத்தை உண்டுபண்ணிக் கொள்ளலாம். என்றறிக." இதன்விரிவை ஆறாந் திருமுறை வசன பாகத்தில் கண்டு கொள்க.

114 திருக்காப்பிட்டுக் கொள்ளுதல்

காற்றாலே புவியாலே ககனமத னாலே
கனலாலே புனலாலே கதிராதி யாலே
கூற்றாலே பிணியாலே கொலைக்கருவி யாலே
கோளாலே பிறவியற்றுங் கொடுஞ்செயல்க ளாலே
வேற்றாலே யெஞ்ஞான்றும் **அழியாதே விளங்கும்**
மெய்யளிக்க வேண்டுமென்றேன் விரைந்தளித்தான் எனக்கே
ஏற்றாலே யிழிவெனநீர் நினையாதீர் உலகீர்
எந்தைஅருட் பெருஞ்ஜோதி யிறைவனைச்சார் வீரே.

நோவாது நோன்பு எனைப்போல் நோற்றவரும் எஞ்ஞான்றும்
சாவாவரம் எனைப் போற்சார்ந்தவரும்—தேவா
நின் பேரருளை யென்போலப் பெற்றவரும் எவ்வுலகில்
யாருளர் நீ சற்றே அறை.

இங்ஙனமாக எம்மனோரை வாழ்விக்க வந்த பெருமான் சென்ற கலியுகம் 4975 ஸ்ரீமுக வருடத்தில் மேட்டுக் குப்பத்திலுள்ள **சித்தி வளாகம்** என்னும் அற்புத மாளிகையில் சிலநாள் கதவை மூடிக் கொண்டு வெளிவராதிருத்தலும், பின்னர் வெளி வருதலும்—வெளி வந்த நாட்களில் பிரசங்கஞ் செய்தலுமாகப் பல மாதங்களைக் கழித்தனர்.

இவ்வாறு சில மாதங்கள் கழிந்ததும் ஒருநாள் அன்பர்களனைவரையும் நோக்கி "ஆன்ம நேய ஒருமைப்பாட்டுரிமைச் சகோதரர்களே! நாம் அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரின் ஆணைப்படி, **கடையை விரித்தோம்; கொள்வார் இல்லை. கட்டிவிட்டோம்** ஆதலால், இனி **இரண்டரை கடிகை நேரம்** உங்களுடைய ஊனக் கண்களுக்குத் **தோன்றமாட்டோம். நீங்கள் இந்தத் தீபத்தினைக் கடவுள் எனக்கொண்டு ஜீவகாருண்ய நெறியில் வழிபட்டுய்யுங்கள். பிறகு அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர் வருவார்; அப்போது பல அற்புத சித்திகளை நிகழ்த்துவார்; திருவருட் செங்கோலாட்சி செலுத்துவார்; அகவினத்தார்க்குச் சாகாவரமும், ஏனையோர்க்குப் பரிபாக நிலையையும் அளிப்பார்."** என்று உபதேசித்தார்கள்.

Koviloor Digital Library

தாம் திருக்கதவை மூடியிருக்குங்கால் அரசாங்கத்தினர் திறக்கும்படி ஆக்ஞாபிக்கின் ஆண்டவர் அருள் செய்வார் என்று கட்டளையிட்டு, எல்லோருக்கும் மன அமைதியை உண்டுபண்ணி, ஸ்ரீமுகஆண்டு, (இங்கிலீஷ் 1874ஆ) தைத் திங்கள் 19ம் நாள் புனர்பூசமும், பூசமும் கூடும் சமயம் வெள்ளிக்கிழமையன்று இரவு பன்னிரண்டு மணிக்கு மேட்டுக் குப்பத்திலுள்ள சித்திவளாகத் திருமாளிகையினுள் நுழைந்து திருக்காப்பிட்டுக் கொண்டார்கள்.

அருட்பெருஞ்ஜோதி

திருவருட்பிரகாச வள்ளலார் திருவடிகள் வாழ்க.

115. அரசாங்கத்தார் உண்மையுணர்தல்

வள்ளலார் திருக்காப்பிட்டுக் கொண்டதன்பின் சில நாட்கள் கழித்து அரசாங்க உத்தரவின் கீழ் கலெக்டரும், டாக்டரும், தாசில்தாருமாக மேட்டுக்குப்பத்திற்கு வந்தனர். வந்தவர்களுள், கலெக்டரும், அவருடன் வந்த டாக்டரும் பேசாதிருந்தனர். ஆனால் தாசில்தார் வேங்கடராமய்யர் மட்டும் தமது அதிகார முறைமையில் ஆங்குள்ள அன்பர்களைப் பலவகையான இழிமொழிகளாற் கூறி, கதவைத் திறவுங்கள்; இல்லையானால் உங்கட்கு அபராதம் நேரிடும்; என்று அதட்டி மிரட்டினர். அத் துரைமகனிருவரும் சித்திவளாகத்தை இரண்டு மூன்றுமுறை சுற்றிப் பார்த்துவிட்டுப் "பெரியோர்களைப் பற்றி நாம் ஒன்றும் குறைகூறுதல் கூடாது" என்னும் உயரிய நோக்கோடு, அன்பர்களை அழைத்து "நீங்கள் இங்கே என்ன செய்கிறீர்கள்?" என்று கேட்டனர். அதற்கு அவ்வன்பர்களும் "ஐயா அவர்கள் கூறியபடி அன்னதானஞ் செய்தலும், ஆண்டவரை வணங்குதலும் செய்கிறோம்" என்று பதில் கூறினர். அதனைக் கேட்ட துரைமகனிருவரும், மகிழ்வெய்தி அன்றையதினம் ஆங்கு நடக்கவேண்டிய அன்னதானச் செலவுக்காக ரூபாய்கள் இருபதும் கொடுத்துவிட்டுப் போயினர். அப்பொழுது கூட தாசில்தார் முணுமுணுப்பை விடவில்லை. அவரும் தாம் வந்த குதிரை மீதேறிக்கொண்டு செல்ல ஒரு சிறிது தூரத்திற்கெல்லாம் குதிரை மிரண்டு ஐயரை முட்புதரில் தள்ளிவிட்டது. முன்னே சென்ற துரைமகனிருவரும் திரும்பிப் பார்க்க தாசில்தார் வாராமை கண்டு கொஞ்சதூரம் பின் வந்துபார்க்க, ஐயர் முள்ளில் விழுந்து பரிதபித்துக் கொண்டிருந்தார். 'இவர் அங்குப் பல இழிமொழிகளைப் பேசினரே அதனுடைய பலன்தான் இது' என்று அவர்கள் இருவரும் பேசிக்கொண்டு ஐயரை வெளியேற்றிக் கட்டைவண்டியில் கொண்டு போயினர்.

Koviloor Digital Library

116. அரவந் தீண்டுதலை யறிவித்தல்

கோட்டகம் என்னும் ஊரிலுள்ள பள்ளிக்கூடத்தான் என்பவருடைய சொப்பனத்தில் வள்ளலார் தோன்றி, "அன்பனே! உன்னை இன்னும் மூன்று நாட்களில் அரவம் தீண்டும்; அதுபற்றி நீ ஒன்றும் அஞ்சவும் வேண்டாம்; ஔஷதங்கள் உண்ணவும் வேண்டாம்; அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரின் திருவருளால் அது தானே குணப்படும்" என்று கூறி மறையப் பின்னர் அம்மாதிரியே அனைத்தும் நடந்தன.

117. திரு மருதூர் என்று மறைந்தார்

நாகூர் சுவாமிநாத செட்டியார் முதலிய சில அன்பர்கள் வடலூருக்கு வந்து தரிசனஞ் செய்துகொண்டு மீளுங்காலை இரவு வந்தெய்தியது. ஆயினும் அவர்கள் அவசர மிகுதியினால் அப்பொழுதே ஊருக்குப் புறப்பட வழியிலே கள்ளர் பயமிருந்த விடத்தில் அவர்களுடைய வண்டிக்குப் பிறகே இளவயதுடைய ஒரு சிறுவனைப்போல் வள்ளலார் வந்துகொண் டிருந்தார். அதனைக் கண்ட அவர்கள் "வண்டியின் பின்னே தொடர்ந்து வரும் நீ எந்த ஊர்?" என்று வினவுதலும் "நான் இருப்பது மருதூர்" என்று சொல்லி மறைந்தனர். மறைந்த பிறகுதான் அவர்கட்குக் கூடவந்தவர் நம் வள்ளலார் என்பது புலனாயிற்று.

இங்ஙனமே சுவாமிகள் இன்றும் தம்மை நம்பும் அன்பர்கட்குத் தோன்றாத் துணையாயிருந்து வேண்டுவன வேண்டியாங்கு அருள் செய்து வருகின்றார்கள்.

அருட்பெருஞ்ஜோதி

கருணையிலா ஆட்சி கடுகி ஒழிக
அருள் நயந்த நன்மார்க்கர் ஆள்க தெருள் நயந்த
நல்லோர் நினைத்த நலம்பெறுக நன்று நினைத்து
எல்லோரும் வாழ்க இசைந்து

திருச்சிற்றம்பலம்

Koviloor Digital Library

சென்னை
சமரச சுத்தசன்மார்க்க சங்கம்
1. தோற்றம்

தங்கமே யனையார் கூடிய ஞான சமரச சுத்தசன்மார்க்க
சங்கமே கண்டு களிக்கவும் சங்கம் சார் திருக்கோயில் கண்டிடவும்
துங்கமே பெறும் சற்சங்கம் நீடூழி துலங்கவும் சங்கத்தில் அடியேன்
அங்கமே குளிர நின்றனைப் பாடி ஆடவும் இச்சைகாண் எந்தாய்!

இத் தெய்வீகச் சங்கமானது திருவருட்பிரகாச வள்ளலார் ஏற்படுத்திய சங்கத்தின் தொடர்ச்சியே யாகும். திருவருள் வலுத்தால் சென்ற **பிரமோதூத ஆண்டு பங்குனித் திங்கள் 30-ஆம் நாள் (14—3—1930) இரவு 12** மணிக்குப் பெருமானுர் வழிபாடுசெய்து அருட்செங்கோல் பெற்ற **திருவொற்றியூர் திருத்தலத்தில் தோன்றிற்று.** அது முதற் கொண்டு சுவாமிகள் தணிகை நாதனைக் கண்டு சகல கலைகளையும் ஓதாதுணர்தற்கேற்றதா யமைந்த சென்னை, வீராசாமி பிள்ளை தெரு, 39வது இல்லத்து மேல் மாடியிலுள்ள திரு அறையிலேயே ஒவ்வோர் ***வியாழக்கிழமையும்,** ஏழை மக்கட்குப் **பசியாற்றுவித்தும்** அன்று காலை மாலை **திருவருட்பா பாராயணம்** செய்துகொண்டும், வெள்ளிக்கிழமை தோறும் திருவொற்றியூரில் இரவு 7 மணிக்குமேல் திருவருட்பா பாராயணம் செய்துகொண்டும் வருகிறது.

2. பிறந்தநாள் விழா

இவ்வாறாக ஏழை மக்கட்குப் பசியாற்றுவித்தல், திருவருட்பா பாராயணம் செய்தல் முதலான பணிகளாற்றுவதுடன் ஆரம்பித்த ஆரும் மாதம் திருவருட்பிரகாச வள்ளலாரின் பிறந்த நாளான புரட்டாசித் திங்கள் சித்திரை நட்சத்திரத்தன்று எம்பெருமானின் **108–வது பிறந்த நாள் விழாவை** வெகுசிறப்பாக சென்னை தங்கசாலைத்தெரு, 361-வது எண்ணுள்ள தொண்டமண்டலம் கலாசாலையில் திருவாளர் மோசூர்-கந்தசாமி முதலியார் B. A., அவர்களின் அவைத்தலைமையில் கொண்டாடப் பட்டது. பெருமான் தமது பிள்ளைப்பிராயத்தில் கந்தப் பெருமானுரை தரிசித்தமுறையாக, பிறந்தநாள் விழாவில் திருக்கூட்டம் பெருமானுருடன் கந்தகோட்டம் சென்று கந்தப் பெருமானுரைத் தரிசித்தும் வருகிறது, அதுமுதற்கொண்டு ஆண்டுதோறும் புரட்டாசித் திங்கள் சித்திரை நட்சத்திரத்தில் **வள்ளலார் இருந்து விவகாரம் செய்த அதே தொண்டமண்டலம் கலாசாலையில், சுவாமிகள் பிறந்தநாள்**

* பெருமானுர் விவகார காலத்தில் பிரதி வியாழக்கிழமை தோறும் குருநாதனை வழிபாடு செய்து வந்தது பிரசித்தம்.

Koviloor Digital Library



‘அருட்பெருஞ்ஜோதி நிலையம்’

சென்னை சமரச சுத்தசன்மார்க்க சங்கம்

அருட்பெருஞ்ஜோதி அச்சகம், சென்னை.

Koviloor Digital Library

Koviloor Digital Library

விழாவானது வெகு சிறப்பாக நடைபெற்று வருவதை அன்பர்கள் அறிவர். அம்மாதிரியான விழாவில் திருவாளர்கள் மோசூர் கந்தசாமி முதலியார்; மறைமலை அடிகள்; சோமசுந்தர பாரதியார்; திருப்பாதிரிப் புலியூர் ஞானியார் சுவாமிகள்; S. சச்சிதானந்தம் பிள்ளை; திரு. வி. கலியாணசுந்தர முதலியார்; கா. சுப்பிரமணியம் பிள்ளை; T. P. மீனாட்சி சுந்தரம் பிள்ளை; தெய்வசிகாமணி முதலியார்; T. M. கிருஷ்ணசாமி ஐயர்; இசையரசு தண்டபாணி தேசிகர்; சுந்தர ஓதுவாமூர்த்தி; முதலான பல தமிழ்ப் பேரறிஞர்கள் தலைமை தாங்கியும், சொற்பொழிவாற்றியும் இசை விருந்தளித்தும் வந்தனர்.

3. திரு அருட்பா — திரு ஆயிரம்

அக் காலத்தில் அன்பர்கள் பலரும் திருவருட்பா பாராயணம் செய்வதற்கு ஏற்றதொரு சிறு நூல் இல்லாமலிருந்தது ஒருபெருங் குறையா யிருந்தது. அக் குறையை நிவர்த்திப்பதற்காக திருவருட்பா ஆறு திருமுறைகளிலுமிருந்து பாராயணம் செய்வதற் கேற்றவாறு ஓராயிரம் பாடல்களைத் திரட்டி **'திருவருட்பா திரு ஆயிரம்'** என்னும் மகுடமிட்டு ஒரு நூல் வெளியிடப்பட்டது. அது ஆண்டுதோறும் ஒவ்வோர் பதிப்பாக வெளியாகி இப்போது பனிரெண்டாவது பதிப்பாக பல்லாயிரக் கணக்கில் தமிழர்களிடையே பரவி வருகிறது. அத்துடன் திருவருட்பாவிலிருந்து சிறுசிறு பிரிவாக வள்ளற் பெருமானார் திவ்ய சரித்திரம், மனுமுறை கண்ட வாசகம், ஜீவகாருண்ய ஒழுக்கம், சன்மார்க்க ஒழுக்கம், நாமாவளி, கீர்த்தனை, விநாயகர் திருவருட்பா, திருவடிப் புகழ்ச்சி, மகாதேவ மாலை, தெய்வமணி மாலை, குமரன் திருவருட்பா, வடிவுடை மாணிக்கமாலை, அம்பாள் திருவருட்பா, பாராயணத் திருவருட்பா, (ஒரு பை விலையுள்ளது 0-0-1 சுமார் 50 பாடல்கள் கொண்டது) ஸ்ரீராமர் திருவருட்பா, உண்மை நெறி முதலான பல நூல்களையும், மகாதேவமாலை, இங்கிதமாலைக்கும், விருத்தியுரையும், சுவாமிகளின் திருவுருவப் படங்களையும் வெளியிட்டுவருகிறது.

4. சாலை சகாப்தம் — வைகாசி 11ம் நாள்

ஐயா அவர்கள் ஜீவகாருண்யத்தை நிலைநாட்டும் பொருட்டு வடலூர்ப் பதியில் பிரபவ ஆண்டு வைகாசித் திங்கள் 11ம் நாள் சத்திய தருமச் சாலை திறப்பு விழாச் செய்தார்கள். அத் திருநாளைக் கொண்டாட ஆண்டுதோறும் வைகாசித் திங்கள் 11ம் நாளன்று நமது சங்கமும் வடலூர் முறையைத் தழுவி அந்த ஆண்டு விழாவை நடத்தி வருகிறது.

5. திரு அருட்பா முழுப்புத்தகம் (சன்மார்க்க சங்கப் பதிப்பு)

அன்பர்கள் அருட்பா ஓதி மகிழ்ந்துவரும் நாளில் திருவருட்பா முழுவதும் நமது சங்கத்தின் சார்பில் வெளிவர வேண்டுமென ஆர்வம்

Koviloor Digital Library

பொங்கவும் அச்சமயம் திருவாளர் தி. நா. முத்தைய செட்டியார் அவர்கள் பதிப்பித்த திருவருட்பா கிடைக்கப் பெருமையாலும் சங்கத்தின் சார்பில் வாலாஜாபாத், இந்துமத பாடசாலை உரிமையாளர் திரு. வா. தி. மாசிலாமணி முதலியார், காஞ்சிபுரம் குமரன் அச்சு நிலைய உரிமையாளர் திரு. தவசி. குப்புசாமி முதலியார் முதலானோரின் பேருவியால் திருவருட்பா முழுப் புத்தகம் இரண்டு வால்யுமாகத் தெளிவான முறையில் நூதனமாக சுவாமிகளின் 110ஆம் ஆண்டு பிறந்தநாள் விழாவில் வெளியிடப்பட்டது. அப்பதிப்பு முடியவே இரண்டாம் பதிப்பாக இந் நூல் வெளிவர நேர்ந்தது. சன்மார்க்க காலம் நெருங்கியதாலே யாம்.

5. தைப்பூச விழா

ஐயா அவர்களின் "**தைப்பூசந்தவறுதீர்கள்**" என்ற உத்தரவுப்படி ஆண்டு தோறும் சன்மார்க்க சங்கத் திருக்கூட்டம் வடலூருக்குச் சென்று தைப்பூச விழாவில் அருட்பெருஞ்ஜோதி தரிசனம் கண்டு திருவருட்பா பாராயணம் செய்து எண்ணிறந்த ஏழைமக்கட்கு ஆகாரமளித்து சன்மார்க்கத் தொண்டாற்றி வருவதும் அன்பர்கள் அறிந்ததே.

6. அருட்பெருஞ்ஜோதி நிலையம்

இதுவரை சுமார் ஒன்பது வருடங்களாக மேற்குறிப்பிட்ட சன்மார்க்கத் தொண்டுகளை, **குளை சாமிபிள்ளை தெரு 36வது இல்லத்திலிருந்தே** சங்கம் நடத்திவந்தது. அதன் பின்னர் திருவருள் துணையினால் சென்னை, பெத்துநாய்க்கன் பேட்டை, இருஷ்ணுங்குளத்திற்குச் சமீபமாக உள்ள **அம்மன் கோயில் தெருவில் 7/99வது இல்லம்** புதியதாகக் கட்டப்பெற்று **'அருட்பெருஞ்ஜோதி நிலையம்'** **(10-6-1941)** திருவப் பெற்றது. அது முதலாக சங்கம் அதிலேயே தன் பணியாற்றி வருகின்றது. அத்துடன் **'சன்மார்க்க பாடசாலை'** ஒன்றையும் **'சன்மார்க்க நூல் நிலையம்'** ஒன்றையும் நடத்தி வருகின்றது.

7. அருட்பெருஞ்ஜோதி அச்சகம்

சன்மார்க்க சங்கத்து வெளியீடுகளை அச்சு இயற்றுவதற்காகவே **அருட்பெருஞ்ஜோதி அச்சகம்'** என்ற ஒன்றை ஏற்படுத்தி அதிலேயே திருவருட்பாக்கள் பலவற்றைப் பிழையின்றி அழகான எழுத்துக்களைக் கொண்டு கண்கவரும் வனப்புமிக்க முறையில் அச்சியற்றிக் கொண்டு வருகிறது. இனியும் பலவேறு பணிகள் இயற்ற சங்கம் முனைந்திருக்கிறது. அவற்றிற்கு எல்லாம்வல்ல அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர் திருவருள்துணை புரிவாராக!

அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை

Koviloor Digital Library

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

அருட்பெருஞ்ஜோதி

திருவருட்பா

மனுமுறை கண்ட வாசகம்

நேரிசை வெண்பா

திருச்சிற்றம்பலம்

அன்ன வயல்சூ ழணியாரூர் வாழ்மனுவாம்
மன்னன் முறைகண்ட வாசகத்தைப்—பன்னுதற்கு
நேய மிகுந்தா னினைப்போர்க் கருள்புழைக்கைத்
தூய முகத்தான் றுணை.

கங்கைக் சடையான்முக் கண்ணுடையா னன்பர்தம்முள்
அங்கைக் கனிபோ லமர்ந்திருந்தா—னைங்கை
முகத்தான் கணங்கட்கு முன்னின்றான் மூவாச்
சுகத்தான் பதமே துணை.

திருச்சிற்றம்பலம்

1. சோழநாட்டுச் சிறப்பு

கடல் சூழ்ந்த உலகத்திலுள்ள எல்லாத் தேசங்களிலுஞ் சிறப்புடையதாய்,—காவிரி யென்னுந் தெய்வத் தன்மையுள்ள நதியினால் எந்தக் காலத்திலுங் குறைவுபடாத நீர்வளப்ப முள்ளதாய்,—வாழைச்சோலை, பலாச்சோலை, மாஞ்சோலை, தென்னஞ்சோலை, கமுகஞ்சோலை, கருப்பஞ்சோலை முதலாகிய பலனுள்ள சோலைகள் அணியணியாக ஒன்றையொன்று சூழ்ந்தோங்கப் பெற்ற

Koviloor Digital Library

தாய்,—அசோகு, குருக்கத்தி, சண்பகம், பாதிரி முதலான விருக்ஷங் களால் நெருங்கப்பெற்று வண்டுகள் பாடுகின்ற மலர்ச்சோலைகளும், தாமரைத் தடாகங்களும், அல்லி, நீலம் முதலான புட்பங்கள் மலர் கின்ற நீர் நிறைந்த ஓடைகளும், பொய்கைகளும், ஏரிகளும் குளங் களும் பலவிடங்களிலுமுள்ளதாய், — செந்நெல் முதலாகிய பயிர்கள் மாறாது முப்போகமும் விளைகின்ற குறைவற்ற விளைவையுடைய வயல் கள் நெருங்கியுள்ளதாய்,—

சிதம்பரம், பஞ்சநதம், மத்தியார்ச்சுனம், சம்புகேச்சுரம் முத லான திவ்விய க்ஷேத்திரங்கள் இடையிடையி லுள்ளதாய்—இல்லற தருமத்தில் எள்ளளவும் பிழைபடாது செல்வத்திலும் கல்வியிலும் நிறை வுள்ள குடிகளுக் கிடமானதாய்,—பல வளப்பங்களுங் கொண்டு—பூமி தேவிக்கு **முகம்போல** விளங்குகின்ற **சோழ தேசத்திலே;**

2. திருவாரூர்ச் சிறப்பு

பாதாள லோகத்தைப் பார்த்திருக்கின்ற ஆழமுள்ள அகழியினால் சூழப்பட்டு இந்திரலோகத்தை எட்டிப்பார்க்கின்ற உன்னத முள்ள கோபுரங்களையுடைய மதிலும், உய்யானம், நந்தவனம், பூஞ்சோலை முதலானவைகளும், தெய்வதீர்த்தம், பிரமதீர்த்தம், வசந்த வோடை, செங்குவளை யோடை முதலான நீர்நிலைகளு முள்ளதாய்;—

தேர்நிலைகள், யானைக் கூடங்கள், குதிரைப் பந்திகள், சேனை யிடங்கள், ஆஸ்தான மண்டபம், அரச மண்டபம், விசித்திர மண்டபம், விநோத மண்டபம், நியாய மண்டபம், நிருத்த மண்டபம், கல்வி மண்ட பம், கணக்கறி மண்டபம், பாடல் மண்டபம், பரிசன மண்டபம், சித் திர மண்டபம், தேவாசிரிய மண்டபம், சித்திரத் தெற்றி, சிலம்பக்கூடம், ஆயுதசாலை, அமுதச்சாலை, அறச்சாலைகளு முள்ளதாய்;—ரத்நப் பீடிகை களும், கனகமாளிகைகளும், பளிங்கு மாடங்களும், மணிப் பந்தல் களும், மகர தோரணங்களும், மங்கள கோஷங்களுமுள்ள கடைவீதி, கணிகையர் வீதி, சூத்திரர் வீதி, வைசியர் வீதி, அரசர் வீதி, அந்தணர் வீதி, ஆதிசைவர் வீதி, சைவர் வீதி, வைதிகர் வீதி, தபோதன ரிருக்கை, சைவ முனிவர் மடம், உட்சமயத்தா ருறையுள் முதலான வளப்பங்களை யுடையதாய்;—

தியாகராஜப் பெருமான் எழுந்தருளிய **கமலாலயமென்னுந் திருக்கோயிலை** உள்ளே யுடையதாய்; **சோழராஜர்கள்** பரம்பரையாக அரசாட்சி செய்வதற்குரிய ராஜதானியாய்; நிலமகள் திருமுகத்திலிட்ட திலகம்போல் விளங்கிய **திருவாரூர்** என்கிற நகர மொன்றுண்டு.

Koviloor Digital Library

3. மனுச்சோழர் மாண்பு

ஆதிலே, மூன்று சுடர்களிலும் முதற் சுடராகி மேன்மையடைந்த சூரிய குலத்திற் பிறந்து அரசாட்சி செய்துவந்த சோழராஜர்களில் பிறந்தவராய்;—அறுபத்துநான்கு கலைகளிலும் வல்லவராய்;—உயிருக் குறுதியைத் தருகின்ற நல்ல கேள்விகளை யுடையவராய்;—**எல்லா உயிர்களுக்கும் இதஞ்செய்கின்றவராய்** 1. வேதமோதுதலும், 2. யாகஞ் செய்தலும், 3. **இரப்பவர்க்கீதலும்,** 4. பிரஜைகளைக் காத்தலும், 5. ஆயுதவித்தையில் பழகுதலும், 6. பகைவரை அழித்தலுமென்னும் ஆறு தொழில்களும்,—வீரமுள்ள சேனைகளும், செல்வமுள்ள குடிகளும், மாறுத பொருள்களும், மதிநுட்பமுள்ள மந்திரியும், பகைவரா லழிக்கப்படாத கோட்டையு முடையவராய்;— வழக்கை அறிவிப்பவரையும், தங்களுக்குள்ள குறைகளைச் சொல்லிக் கொள்பவரையும், இலேசிலே தமது சமுகத்துக்கு அழைப்பித்து, அந்த வழக்கைத் தீர்த்தும் அக்குறைகளை முடித்துங் கொடுப்பவராய்;— பாலொடு பழஞ்சேர்ந்தாற்போல முகமலர்ச்சியோடு இனிய வசனஞ் சொல்பவராய்;—

பின்வருவதை முன்னே அறிந்துகொள்வதும்,—உறவினர், அயலார், சிநேகர், பகைவர், இழிந்தோர் உயர்ந்தோர் முதலான யாவரிடத்தும் — காலவேற்றுமையாலும் குணவேற்றுமையாலும் உண்டாகின்ற நன்மை தீமைகளை உள்ளபடி அறிந்து கொள்வதுமாகிய விவேகமுள்ளவராய்;—**அகங்காரம், காமம், கோபம், லோபம், மோகம், பொறுமை, வஞ்சகம், டம்பம், வீண்செய்கை** முதலான குற்றங்களைத் தினையளவுங் கனவிலும் புரியாதவராய்;—**துற்குணங்களையுடைய சிறியோர் சேர்க்கையை மறந்தாயினும் நினையாமல்,**—செய்தற்கு அரிதான செய்கைகளைச் செய்து முடிக்கவல்ல நற்குணங்களையுடைய பெரியோர்களைச் சகாயமாகக் கொண்டு, செய்யத்தக்க காரியங்களைத் தெரிந்து செய்தும், செய்யத்தகாத காரியங்களைத் தெரிந்து விடுத்தும், பகைவலியும், தன்வலியும், துணைவலியும், கால நிலைமையும், இட நிலைமையும் அறிந்து காரியங்களை நடத்தியும்; அடுத்தவர்களது குணம், வல்லமை, ஊக்கம் முதலான தன்மைகளை, ஆராய்ந்து, தெளிந்து அவரவர் தரங்களுக்குத்தக்க உத்தியோகங்களை அவரவர்க்குக் கொடுத்தும்; பழமை பாராட்டியும்; சுற்றந் தழுவியும்; கண்ணோட்டம் வைத்தும்; ஜாதி இயற்கை, ஆசிரம இயற்கை, சமய இயற்கை, தேச இயற்கை, கால இயற்கை முதலான உலகியற்கைகளை அறிந்து அவ்வவைற்றிற்குத் தக்கபடி ஆராய்ந்து செய்தும்,—**நல்லொழுக்கத்துடன்** நடப்பவராய்;—

குடிகளுக்கு அணுவளவு துன்பம் நேரிடினும் அதை மலையளவாக எண்ணித் தமக்கு வந்ததுபோல் **இரக்கங்கொண்டு** மனமுருகுவதனால்

Koviloor Digital Library

தாயை யொத்தவராய்,—அத்துன்பத்தைவிட்டு இன்பத்தை அடையத் தக்க நல்வழியை அறியும்படி செய்விப்பதனுல் தந்தையை யொத்த வராய்,—அவர்களுக்கு அந்த நல்வழியைப் போதித்து அதிலே நடத்து நின்றபடியால் குருவை யொத்தவராய்,—அந்தக் குடிகளுக்கு இகபர சுகத்தைக் கொடுப்பதற்கு முன்னின்று, அதுபற்றி முயற்சி செய்யும் போது வரும் இடையூறுகளை நீக்குகின்றபடியாலும், அந்த ஒழுக்க வழியிலிருந்து தவறினல், அந்தக் குற்றத்துக்குத் தக்க தண்டனை விதித்து அவ்வழியில் பின்னும் நடத்துகின்றபடியாலுந் தெய்வத்தை யொத்த வராய்;—குடிகளுக்கு ஆபத்து நேரிடும் போது 'கட்டிய வஸ்திரம் அவிழ்ந்தவன் கைபோல்', உடனே அந்த ஆபத்திலிருந்து நீங்கும்படி கை கொடுப்பதனுல் சினேகனை யொத்தவராய்;—

நல்ல காரியமிது, கெட்ட காரியமிது வென்று காட்டுகின்றபடி யால் **கண்** போன்றவராய்;—குடிகளுக்கு அச்சம், அவலம் முதலானவை நேரிடாமல் காத்து வருதலால் **உயிர்** போன்றவராய்;—குடிகள் தம்மை நினைக்குந்தோறும் "இப்படிப்பட்ட நற்குண நற்செய்கைகளையுடைய புண்ணிய மூர்த்தியை அரசனுகப் பெற்ற நமக்குக் குறையொன்று மில்லை" என்று களிக்கின்றபடியால் **பொன்புதையலை** யொத்தவராய்;— கைம்மாறு வேண்டாது கொடுத்தலால் **மேகத்தை** யொத்தவராய்;—

அறிவே ஆயிரங் கண்களாகவும், கைகளே **கற்பகமா**கவும், கண் களே **காமதேனு**வாகவும், திருமுகமே **சிந்தாமணி**யாகவும், மனே திடமே **வச்சிராயுத**மாகவும், கொண்டபடியால் **இந்திரனை** யொத்தவ ராய்;—சிங்காதனமே **செந்தாமரை**யாகவும், அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கு புருஷார்த்தங்களும் அடைதற்குரிய நான்கு மார்க் கங்களை நான்கு முகங்களாகவுங் கொண்டு, அந்தந்த மார்க்கங்களில் அந் தந்தப் பொருள்களை விருத்தி பண்ணுகிறபடியால், **பிரமனை** யொத்த வராய்;—ஆக்கினை சக்கரமே சக்கராயுதமாகவும், செங்கோலே திருமக ளாகவும், பிறந்த பெரும்புகழே திருப்பாற்கடலாகவும், யுத்தமல்லாத காரியங்களை ஒழிந்திருப்பதே யோக நித்திரையாகவுங் கொண்டு, மண ணுலகிலுள்ள உயிர்களைக் காத்து வானுலகிலுள்ள தேவர்களுக்கு யாகங் களால் அமுது கொடுத்து வருகின்றபடியால் **திருமாலை** யொத்தவராய்;— 1. சோர்வில்லாமை, 2. தூய்மை, 3. வாய்மை யென்னும் மூன்றுமே மூன்று கண்களாகவும், துணிவுடைமையே சூலமாகவுங் கொண்டு;— பாவங்களை யெல்லாம் நீக்கிரகஞ் செய்துவருகின்றபடியால் **உருத்திர மூர்த்தியை** யொத்தவராய்;—

வாட்டத்தை நீக்கி மகிழ்ச்சி செய்கின்ற அருளுள்ளபடியால் **அமிர்தத்தை** யொத்தவராய்;—சிவபக்தியில் மிகுந்தவராய்;—பொறுமை

Koviloor Digital Library

யில் **பூமியை** யொத்தவராய்;—தருமமே உருவாகக் கொண்டு நடுநிலை யிலிருந்து மனுநீதி தவறாது விளங்கிய **மனுச்சோழரென்னும்** பெயரையுடைய **சக்ரவர்த்தியானவர்**;—

கலிங்கர், குலிங்கர், வங்கர், கொங்கர், அச்சியர், கொச்சியர், தெங்கணர், கொங்கணர், தெலுங்கர் முதலான தேசத்தரசர்களெல்லாம், திறைகட்டி வணங்க, உலக முழுவதையும் ஒரு குடைநிழலில் வைத்துச் செங்கோல்செலுத்தி அரசாட்சிசெய்யுங்காலத்தில், உலகமெங்கும்,—புலி யும் பசுவும் கூடிப்போய் ஒரு துறையில் நீர் குடித்துலாவியும், — சிங்க மும் யானையும், சேர்ந்து திரிந்தும்,—பருந்துங் கிளியும் பழகி மகிழ்ந்தும்,— கூகையுங் காகமும், கூடிப்பறந்தும்,—பூனையும் எலியும், பொருந்தியிருந் தும், இந்தப்படி மற்றுமுள்ள விரோதமாகிய உயிர்களும் ஒன்றுக் கொன்று விரோதமில்லாமல் சினேகஞ்செய்து வாழ்ந்திருக்கவும்;—மரங் கள் புல்லுகள் முதலான நடையில்லாத உயிர்களும்,—வாடுதல், உலர் தல், உதிர்தல், வெட்டுண்ணல் முதலான குறைகளில்லாமல் வளர்ந் தோங்கி வாழ்ந்திருக்கவும்;—பெருங்காற்று, பெருவெள்ளம், பெருமழை தீப்பற்றல், இடிவிழுதல் முதலான உற்பாதங்கள் சிறிது மில்லாமல், சுகுணமான காற்றும்,—மிதமான வெள்ளமும்,—பருவ மழையும்,— தவறாமலுண்டாயிருக்கவும்;—பசி நோய், உடம்பு நோய், அவமிருத்து, உயிரச்ச முதலான துக்கங்களொன்றுஞ் சேராமல், சுகமே சூழ்ந்திருக்க வும்:—1. பிரம, 2. க்ஷத்திரிய, 3. வைசிய,4. சூத்திரரென்கின்ற ஜாதி யாரும்,—1. பிரமசாரி, 2, கிரகஸ்தன், 3. வானப்பிரஸ்தன், 4. சந்நியாசி என்கின்ற ஆசிரமத்தாரும்,—சைவர், வைணவர், வைதிகர் என்கின்ற சமயத்தாரும்,—தங்கள் தங்களுக்குரிய ஆசாரங்களில் குறைவு படாமல் வாழ்ந்திருக்கவும்:—

அன்னதானம், சொர்ணதானம், கோதானம், பூதானம் முதலான **தானங்களும்,**—தேவாலயங் கட்டுவித்தல், திருக்குள மெடுத்தல், செழுஞ் சோலை வைத்தல், தண்ணீர்ப்பந்தல் வைத்தல், சத்திரங் கட்டு வித்தல் முதலான **தருமங்களும்,** — சாந்திராயண முதலான **விரதங் களும்,**–தியானஞ் செய்தல், ஜெபஞ் செய்தல் முதலான **தவங்களும்,**– தவறுபடாமல் ஓங்கியிருக்கவும், **தியாகேசப் பெருமானுக்கும்,**—மற்று முள்ள தெய்வங்களுக்கும், திரிகால பூசைகளும், திருப்பணிகளும், திரு விழா முதலான சிறப்புக்களும் குறைவில்லாமல் நடக்கவும்— அவரது ஆக்கினையே செய்வித்து வந்தது.

அவரது ஒப்புயர்வில்லா அரசாட்சியிலே, பூவே பறிபடுவது;— புனலே சிறைபடுவது;—காற்றே அலைபடுவது;— கல்லே கடினமுடை யது;—மாவே வடுபடுவது,—வாழையே குலைபடுவது;—வண்டே மது வுண்பது;—பந்தே அடிபடுவது;—பரியே கட்டுண்பது;—நெல்லே குத்

Koviloor Digital Library

துண்பது ;—நெற்கதிரே போர்படுவது ;—வயலே வளைபடுவது ;—மாதரிடையே குறைபடுவது ;— தரித்திரமே தரித்திரப்படுவது ;— துக்கமே துக்கப்படுவது ;—பொய்யே பொய்படுவது ;—இவையல்லாமல் பொருள் பறிக்கப்படுவோரும்,—சிறைச் சாலையில் வைக்கப்படுவோரும்,— பகைவரால் அலைக்கப் படுவோரும்,—கடின மனமுள்ளவர்களும்,—வடுப்படுவோரும்,— குலைபடுவோரும், — மதுவுண்போரும்,— அடிபடுவோரும்,— குத்துண்போரும்,— போரிற்படுவோரும்,— கட்டுண்போரும்,— வளைபடுவோரும்,—குறைபடுவோரும்,—தரித்திரப்படுவோரும்,— துக்கப்படுவோரும்,— பொய்படுவோரும்,— வேறேயில்லாமையால் அந்நாட்டில் மேன்மையே விளங்கியிருந்தது.

4. பிள்ளைப்பேறு கருதிப் பெருநோன்பாற்றல்

இந்தப் பிரகாரமாக மந்திரி முதலான அங்கங்களுடன் அரசாண்டிருந்த அம்மனுச் சோழரென்னும் சக்கரவர்த்தியானவர் புத்திரப் பேறில்லாமல் மனம் வருந்தி, அப்பேற்றைப் பெறும்படி அறுபது வருஷகாலமாக அனேக தானங்களும், தருமங்களும், யாகங்களும், விரதங்களுஞ் செய்தும், புத்திரோற்பத்தியில்லாமையால், "புத்திரச்செல்வம் பெறுதவர் பொருட்செல்வம் பெற்றும் பயனில்லையே :—புத்திரன்போல் நமக்கு இந்த அரசச்செல்வம் இம்மை மறுமை யின்பங்களைக் கொடாதே ;—சந்ததியில்லாவிட்டால் பிற்காலத்தில்,—கண்களில்லாத முகமும், சூரியனில்லாத பகலும்போல,—அரசனில்லாது இவ்வுலகந் தலை தடுமாறிப்போமே ;—ஆதலால், இனிப் புத்திரனைப் பெற்றுக்கொள்வதற்குத் தக்க முயற்சி நமது ஆண்டவனுகிய தியாகராஜப் பெருமானை வழிபடுவதே யல்லது வேறொன்றுமில்லை ;—ஆனால் மோக்ஷப் பேற்றைக் குறித்து நிஷ்காமியமாக இத்தனை நாளும் வழிபட்டு வந்த நாம், இப்போது புத்திரப்பேற்றைக் குறித்துக் காமியமாக நமதாண்டவனை வழிபடுவது தகுதியல்லவாயினும், 'தீராக் குறைக்குந் தெய்வமே முடிவு' என்றபடி எவ்விதத்தினும் தீராத புத்திரனில்லாக் குறையைச் சிவபெருமானது திருவருளாலேதான் தீர்த்துக்கொள்ளல் வேண்டும்," என்று ஆலோசித்துத் துணிவுகொண்டு, தமது மனைவியாருடன் ஆகம விதிப்படிக் கமலாலய மென்னும் புண்ணிய தீர்த்தத்தில் ஸ்நானஞ் செய்து, பயபக்தியுடன் பூங்கோயிலைப் பஞ்சாவரண வலமும் செய்து உட்புகுந்து, தியாகராஜப் பெருமானது சந்நிதிக்கெதிரே அஷ்டாங்க பஞ்சாங்கமாக நமஸ்கரித்து, வணங்கிய முடியும், மலர்ந்த முகமும், நீர் பொழிந்த கண்ணும், துதி மருவிய நாவும், கூப்பிய கையும், புளகமுற்ற உடம்புங் கொண்டு நின்று,—

Koviloor Digital Library

"எம்பெருமானே! புத்திரப்பேறில்லாத குறையைத் தீர்த்தருளல் வேண்டும்," என்று விண்ணப்பித்துப் பலவிதமாகத் தோத்திரஞ்செய்து தமது அரண்மனைக்குச் செல்வர். இந்தப் பிரகாரமே நாள்தோறும் போய் வழிபட்டுப் பிரார்த்தித்துக் கொண்டே வந்தார்.

5. பிள்ளையைப் பெற்றுப் பெருவிழாச் செய்தல்

அவர் செய்யும் வழிபாட்டுக்கும் வந்தனைக்கும் இரங்கித் தியாகராஜப் பெருமான்,—புத்திரப் பேறுண்டாகும்படி அனுக்கிரகஞ்செய்ய அந்த அனுக்கிரகத்தால் மகாராஜனுக்கு மகிழ்ச்சியுண்டாகும்படி, வலம்புரிச்சங்கு விலையுயர்ந்த வெண்முத்தினைக் கருப்பங் கொண்டது போலத் தேவியார் தமது திருவயிற்றில் கருப்பங்கொண்டு, பத்து மாதமுஞ்சென்று, நல்ல சுபதினத்தில்,—தர்மதேவதை தாண்டவமாடவும்,—வானகத்தார் மலர் சொரிந்து வாழ்த்தவும்,—வையகத்தார் மனங்களிக்கவும்,—அதிதியாரானவர் ஆதித்தனைப் பெற்றதுபோலவும், —மல்லிகைக் கொடி மணமுள்ள மலரைப் பெற்றது போலவும், —எவ்வெவர்களும் அதிசயிக்கத்தக்க சர்வ லக்ஷணங்களும் நிறைந்த வடிவுள்ள ஒரு புத்திரனைப் பெற்றார்.

புத்திரன் பிறந்த சந்தோஷமான சமாசாரத்தைப் பாங்கிகள், அதிசீக்கிரமாக வந்து தம்மை மறந்த மனக்களிப்புள்ளவர்களாக எதிர் நின்று,—"ஆண்டவனே! எங்கள் தலைவியார் திருவயிற்றிலிருந்து, தேவரீர் புகழே வடிவாகவும், புண்ணியமே உயிராகவுங் கொண்டு பொன்னுலகத்தைக் காக்கின்ற புரந்தரனும் நாணமடையப் பூவுலகத்தைக் காக்கத்தக்க வல்லமையுள்ள **புத்திரசிகாமணி உதயஞ்செய்தது**" என்று விண்ணப்பஞ் செய்யக்கேட்ட மனுச்சக்கரவர்த்தியானவர்,—தூரதேசத்திற்போயிருந்த கப்பல் துறைமுகத்தில வந்ததென்று சொல்லக்கேட்ட வர்த்தகனைப் போலவும்,—கூடிப் பிரிந்த மங்கையின் குரலோசையைக் கேட்ட நாயகனைப் போலவும்,—தாகங்கொண்டு தவிக்குங் காலத்தில் சமீபத்தே தண்ணீருண்டென்று சொல்லக்கேட்ட தேச சஞ்சாரியைப் போலவும், மனங்குளிர்ந்து உடல் பூரித்து அளவிடப்படாத களிப்புடையவராய், அந்தப் பாங்கிகளுக்கு, விலையுயர்ந்த ஆடையாபரணங்களை வெறுப்படையும்படி பரிசுகொடுத்துத் தாம் நீராடி நியமங்கள் முடித்து,-

வேத வித்துக்களாகிய பிராமணர்களுக்கு—விதை தானம், சொர்ணதானம், கன்னிகாதானம், அசுவதானம், கஜதானம், பூதானம், கோதான முதலான தானங்களைக் கொடுத்து,—புத்திரன் பிறந்தநாள் தொட்டுப் பன்னிரண்டு வருஷ மட்டுங் குடிகள் வரி கொடாமல்

Koviloor Digital Library

சர்வமானியமாகத் தாமே அனுபவித்துக் கொள்ளவும்,—திறை கட்டி வரும் அரசர்கள் ஏழுவருஷ மட்டும் அந்தத் திறைகளைக் கட்டாமல் தாங்களே எடுத்துக் கொள்ளவும்,—சிறைச்சாலையிலிருந்த சத்துருக்களை விட்டுவிடவும்,—பொக்கிஷசாலையைத் திறந்துவிட்டு, நகரிலும் நாட்டிலு முள்ளோர் யாவரும் தங்கள் தங்களுக்கு வேண்டியமட்டில் ஏழுநாள் வரையில் எடுத்துக்கொண்டு போகவும், — தேவாலயங்களிலெல்லாம், புதிதாகத் திருப்பணிகளும், திருவிழா முதலான சிறப்புக்களும் செய் விக்கவும் கட்டளையிட்டு, பின்னர்த் தான் தேடிவைத்த திரவியத்தைத் தெரியக் கண்டுகொண்டவனைப்போலத் — திறை மறைவிலிருந்த அச் செல்வக் குழந்தையை வெளிப்படக் கண்டு மனமகிழ்ச்சியடைந்து, இளஞ் சூரியோதயம் போல இந்தப் புத்திரன், இவ்விடத்தில் உத யஞ்செய்தது சிவானுக்கிரகமேயல்லது வேறல்ல வென்று வியப் படைந்து,

சோதிட சாத்திரங்களில் வல்லமையுள்ள பெரியோர்களைக் கொண்டு ஒப்பற்ற செல்வம், கல்வி, வெற்றி முதலிய அதிர்ஷ்டங்கள் நடனஞ் செய்கின்ற சாதக பலனைக் குறித்துத் தியாகராஜப் பெரு மானது திருவருளால் வந்ததுபற்றி அக்கடவுளின் திருப்பெயர் கொண்டு, **விதி விடங்கன் என்னும் நாமகரணமும், அன்னப் பிராசனம்,** சௌளம் முதலான சடங்குகளும், மிகுந்த விபவமாகவும், வேத யுக்தமாகவும், அதது செய்யத்தக்க பருவங்களில் செய்வித்தும்‘— அந்தப் புதல்வனை வாச நீராட்டுவித்தும்,—இனிய உணவுகளை ஊட்டு வித்தும்,—பொன்னாலும், இரத்தினங்களாலுஞ் செய்த பூஷணங்களைப் பூட்டுவித்தும்,—மார்மேலும் தோள்மேலும் மடிமேலும் வைத்து வைத்து முத்தாடியும்,—திருந்தாத குதலைச் சொற்களைக் கேட்டு மகிழ்ந்தும்,— கற்பக விருக்ஷத்தின் கனியைக் கேட்பினும் அந்தக்கணமே தருவித்துக் கொடுத்தும்,—சிறிய விளையாடல்களைச், செய்யக் கண்டு களித்தும்,— கற்புள்ளவள் கணவனை உபசரிப்பது போல உபசரித்தும்,—படிப் பில் ஆசை வைத்தவன் பாடத்தைப் பாராட்டுவது போலப் பாராட் டியும்,—தன்னை உயர்ந்தவனுக்க நினைத்தவன் தருமத்தை வளர்ப்பது போல வளர்த்தும்,—முன் சிறுமையடைந்து பின் செல்வத்தைப் பெற் றவன் அச்செல்வத்தைப் பாதுகாப்பதுபோலப் பாதுகாத்தும்,—புத்திர சம்பத்தினல் வரும் பயனை அடைந்தவரா யிருந்தார்.

Koviloor Digital Library

6. வீதி விடங்கற்கு வித்தை கற்பித்தல்

இந்தப்படி இணையில்லாத செல்வப் பெருக்கத்தில் வளர்க்க வாழை யிளங்குருத்துப் போல,—வளர்ந்து வருகின்ற புத்திர னுக்கு, ஐந்தாம் வயதில் அக்ஷராப்பியாசம் செய்வித்து — ஏழாம் வயதில் சகல தேசத்தரசர்களுக்குந் தெரிவித்து—நகரை யலங்காரஞ் செய்வித்து.—பத்மராகம், கோமேதகம், வயிரம், வைடூரியம் முதலான இரத்தின கசிதமான கலியாண மண்டபத்தில், வேத வேதாங் கங்களில் வல்லவரான பிராமணர்களும், சாபானுக்கிரக சாமர்த்திய முள்ள தபோதனர்களும் ஆசீர்வதிக்கவும்,—மன்னர், மண்டலிகர், பட்ட வர்த்தனர், மகுடவர்த்தனர், அமைச்சர், உறவினர், சினேகர் முதலான வர் கண்டு களிக்கவும்,—சுமங்கலப் பெண்கள் சோபனம் பாடவும்,—பேரி, சங்கம், மிருதங்கம் முதலான மங்கள வாத்தியங்கள் முழங்கவும், —நல்ல சுபமுகூர்த்தத்தில் வேதவிதிப்பிரகாரம் உபநயன கலியாண மும்,—சகல வேதாகம சாஸ்திரங்களிலும் வல்லமையுள்ள ஆசாரிய ரைக் கொண்டு வித்தியாரம்பமுஞ் செய்வித்தார். சில நாட்களுக் குள்ளே வீதிவிடங்க னென்னும் அப்புத்திரனானவன்—வேதங்கள், சாஸ்திரங்கள், புராணங்கள், ஸ்மிருதிகள், இதிகாசங்கள் முதலான கலைகளில் ஆசிரியனைப் பார்க்கிலும் எண்மடங்கு வல்லமை யுள்ளவனாகி —யானையேற்றம், குதிரையேற்றம், ரதாரோகணம், வில்வித்தை, வாள் வித்தை, இந்திரஜாலம், மகேந்திரஜாலம் முதலான சமஸ்த வித்தை களையுங் குறைவரக் கற்றுக் கொண்டு,—.

ஆதிசேடனைப்போல் அறிவும்,—காமனைப்போல் கட்டழகும், —ஆண்சிங்கம் போல் ஆண்மையும்,—மதயானை போல் நடையும்—, மார்த்தாண்டன் போல் வாய்மையும்,—கற்பக விருக்ஷம் போல் கொ டையு முடையவனும்,—சிவபக்தி, ஜீவகாருண்யம், பொறுமை, அன்பு, ஆசாரம், ஒழுக்கம், ஊக்கம், சாந்தம், சற்சனநேயம் முதலான நற்குணங்களுடன்—உயிருக்கு முடிவு நேரிடுமாலும் உண்மையே பேசுவதும்,—உறுதியே சொல்வதும்,—இன்சொல்லே கூறுவதும்,—இதமே செய்வதும்,—பயனுள்ள காரியங்களையே பாராட்டு வதும்,—பிராமணர் தவத்தோர் முதலான பெரியோர்களைக் கண்டால், அன்போடும், அச்சத்தோடும், எதிர்கொண்டு தலையால் வணங்கி வா யால் வாழ்த்துவதுமாகிய நற்செய்கைகளை யுடையவனும்,—மாதா பிதாக்களது மனக்குறிப்பறிந்து அவரிச்சையின்வழி நடந்து மகிழும் படி செய்து,—இளமைப் பருவத்திற்றனே எல்லாம் அறிந்தவனென்று

Koviloor Digital Library

கண்டோர் கொண்டாடவும்,—கேட்டோர் மனங்களிக்கவும்,—இளவரசு பட்டத்துக்குத் தகுந்த பருவமடைந் திருந்தான்.

7. அரசிளங்குமரன் ஆலயம் போதற்கு அனுமதி பெறல்

அப்படியிருந்த நாட்களில் ஒருநாள், அவ் வீதிவிடங்கனென்னும் இராஜபுத்திரன், தன் பருவத்துக்கொத்த இராஜ குமாரர்களும், மந்திரிகுமாரர்களும் சூழ்ந்துவர, தன் பிதாவாகிய மனுச்சோழருடைய சமுகத்துக்கு வந்து, — பிதாவினது திருவடிகளுக்கு அஷ்டாங்க பஞ்சாங்கமாகத் தெண்டனிட்டெழுந்து,— தூசொதுக்கியும், உடம்பொடுக்கியும், கைகட்டியும், வாய்புதைத்தும் எதிரே நிற்க, — அப்போது மனுச்சக்ரவர்த்தி யானவர்,—நெடுநாள் பிரிந்திருந்த கன்றினைக் கண்ட பசுவைப் போலவும்,—இடந்தெரியா திருந்த புதையலை எதிர்படக்கண்டவனைப் போலவும்,—கண்கள் களிகூரக்கண்டு, உள்ளமும் உடலும் பூரித்துத் தமது இரண்டு கைகளாலுந் தழுவி அணைத்தெடுத்து மடிமேல் வைத்து, உச்சிமோந்து, முதுகைத் தடவி — "எனக்கு நெடுநாளாக இருந்த மனக்குறையைத் தவிர்த்து இம்மை மறுமைப் பயனைக் கொடுக்கும்படி பிறந்த அருமையாகிய அமிர்தத்தை யொத்த என் புத்திரனே! உன் மனதில் ஏதோவொரு எண்ணமுண்டானதாகத் தோன்றுகிறது; அவ்வெண்ணம் இன்னதென்று வெளிப்படுத்த வேண்டும்" — என்று கேட்டார்.

அதுகேட்ட வீதிவிடங்கன், "மூன்றுலகத்திலுங் கேடில்லாத கீர்த்தியை நாட்டிய பெருந்தன்மையுடைய தேவரீரைப் பிதாவாகப் பெற்ற அடியேனுக்கு எண்ணங் கொள்வதற்கு என்னகுறை யிருக்கிறது? நமது குலதெய்வமாகியும், — இஷ்ட தெய்வமாகியும், — கமலாலயத்தி லெழுந்தருளிய தியாகராஜப் பெருமானைத் தரிசித்து வர வேண்டு மென்னும் எண்ணமொன்று மாத்திரமுண்டு. இவ்வெண்ணம் இடையூறில்லாமல் நிறைவேறும்படி தேவரீர் திருவுள்ளங் கொள்ள வேண்டும்" என்று விண்ணப்பஞ் செய்தான்.

அதுகேட்டு, அரசரானவர், "சர்வ வல்லமை யுள்ள சுயம்புவாகியும், — கருணைக் கடலாகியும் கடவுளாகியும், — பிள்ளைக்கலி தீர்த்த பெருமானுகியும் விளங்கிய, — தியாகராஜப் பெருமானைச் சேவிப்பதற்குத் தடையுண்டோ? தனக்கிணையில்லாத தருமமூர்த்தியைத் தரிசிக்க வேண்டுமானுல் தடுப்பவர் யார்? புண்ணியந்தேடப் புத்திரன்

Koviloor Digital Library

தொடங்கினால், தந்தை தடைசெய்வானோ? நானே கற்பிக்கவேண்டிய நல் விஷயத்தை நீயே தெரிந்து செய்யத் தொடங்குவது நான் பூர்வஞ் செய்த புண்ணிய மல்லவோ? பிள்ளைதேடும் புண்ணியம் பிதாவுக்கு முண்டென்று பெரியோர் சொல்வது பிழைபடா தென்பதை நானறி யேனோ? நெல் முதலான பயிருக்கு நீர் விடுவோரையும், — குருடர்க்குக் கோல் கொடுப்போரையும், — இரவில் வந்தவர்க்கு இடங் கொடுப்போரையும், — அஞ்சி வந்தவர்க்கு அபயங் கொடுப்போரையும், — தாகங் கொண்டோர்க்குத் தண்ணீர் கொடுப்போரையும், — பசிகொண்டு பரிதபிப்போர்க்கு அன்னங் கொடுப்போரையும், — சேற்றில் விழுந்து திகைக்கின்றோர்க்குக் கை கொடுப்போரையும், — ஆற்று வெள்ளத்தில் அகப்பட்டோரைக் கரையேற்றுவோரையும், — சத்திரங் கட்டித் தருமஞ் செய்வோரையும் தடுத்தாலும், — குருதரிசனம், சிவஞானி தரிசனம், சிவதரிசனம் செய்வோரை ஒருக்காலுந் தடுக்கப்படாது; ஆதலால், புத்திரனே! உனக்கு வேண்டிய சிறப்புக்களுடன் சுகமாகப்போய் ஆண்டவனைத் தரிசனஞ்செய்து, சிவஞானமுந், தீர்க்காயுளும் பெற்று வருவாய்" — என்று கட்டளை யிட்டார்.

அந்தக் கட்டளையை அன்புடன் தலைமேற் கொண்டு வணங்கி விடைபெற்று, — மாதாவினிடத்திற் போய்ப் — பத்தியுடனே பணிந் தெழுந்து கைகூப்பி நின்று, — "அநேக விரதங்களை அனுஷ்டித்து அடியேனைப் பெற்றெடுத்து, கண்களை இமைகள் காப்பனபோற் காத்துவளர்த்த தாயே! அடியேன் தெய்வசிகாமணி யாகிய தியாக ராஜப் பெருமானைத் தரிசனஞ் செய்யவேண்டும்; இதற்குத் தந்தை யாருடைய சம்மதம் பெற்றுக்கொண்டேன்; இனி உமது உள்ளமும் ஒருமித்தருளவேண்டும்" — என்று குறையிரந்து கொண்டான்.

அதுகேட்ட தாயானவள், உருக்கத்துடன் மனமகிழ்ச்சி கொண்டு, முகமலர்ந்து, முலைகளிலிருந்து பால் பீரிடவும், கண்களில் ஆசை நீர் அரும்பவும், தன்னருமைத்திருமகனை நோக்கி,—" இறைவனையும் * என்னையும் நற்கதியிற் சேர்க்க வந்த நாயகமே! நாங்கள் முன்செய்த தவப்பயனாலே கிடைத்த முத்தமே! எங்கள் வருத்தமெல்லாந் தீர்க்கவந்த மாணிக்கமே! கல்வியிற் சிறந்த கண்மணியே! சுந்தர வடிவமுள்ள சூரியனே! சாந்த குணமுள்ள சந்திரனே! பேரறிவுடைய பிள்ளாய்! நெடுநாளாகப் பல விதமான தருமம், தானம், தவம் முதலியவற்றைச் செய்தும் பெற்றுக் கொள்ளாமல், தியாகேசர் சந்நிதிக்கு நடந்து அந்தக்கடவுளின் அனுக் கிரகத்தால் உன்னைப் பெற்றுக்கொண்டோம். அப்படிப்பட்ட பெருங் கருணையுள்ள பெருமானை நீ தரிசிக்க வேண்டுவது அடுத்த காரியங்

* இறைவன் - மனுச்சோழன்

Koviloor Digital Library

தான்; ஆதலால், நீ போய்க் கண்குளிரக் கண்டு தரிசித்து, உபநயன முதலான மங்கலக் கோலங் கண்ட எனது கண்கள், மணக் கோலமுங் கண்டு களிப்படைய வேண்டுமென்று எண்ணியிருக்கிற என்னெண்ணம் விரைவில் முடியும்படி ஒரு வரத்தையும் பெற்றுவரக் கடவாய்" என்று விடை கொடுத்தாள்.

8. தானை புடைசூழத் தலைவன் வெளிப்படுதல்

அவ்விடையைப் பெற்றுக்கொண்ட வீதி விடங்கன், தன் அரண்மனைக்கு வந்து தயிலம், சந்தனம், கஸ்தூரி, பால், தயிர், நெய், பழம் முதலான அபிஷேக திரவியங்களும்;— மாணிக்கமாலை, மரகதமாலை, முத்துமாலை, பவளமாலை, பொன்மாலை, வச்சிரமுடி, இரத்தின குண்டல முதலான திரு ஆபரணங்களும்; — கொன்றைமாலை, தும்பைமாலை, வில்வமாலை, சண்பகமாலை, முல்லைமாலை, மல்லிகைமாலை முதலான திருமாலைகளும்; — வெண்பட்டு, கோசிகப்பட்டு, பீதாம்பரம் முதலான திரு ஆடைகளும்: — மற்றும் வேண்டிய திரவியங்களெல்லாமுந் தியாகேசர் கோவிலுக்குக் காரியக்காரர்கள் வசத்தில் முன்னதாக அனுப்பிவித்து, — பின்பு தான், மஞ்சனச் சாலையில் வாச நீராடி, வெண்பட் டுடுத்துச், சிவத்தியானத்துடன் திருநீறு தரித்துத் திலகமணிந்து; — கிரீடம், குண்டலம், கண்டசரம், வாகுவலயம், பதக்கம், சரப்பளி, கடகம், ஆழி, பொற்பூணு நூல், பொன்னரைஞாண், உதரபந்தனம், வீரகண்டை முதலான பூஷணங்களும் பூண்டு, ஜோதிமயமான பீதாம்பர வுத்தரியம் மேலே தரித்து; நவரத்தின மிழைத்தவொரு பொற்பிரம்பைக் கையிற் பிடித்துக்கொண்டு; அரண்மனை வாசலை விட்டு வெளியே புறப்பட்டு, வேத பாரகராகிய வேதியர் முதலானவர்களுக்குப் பலபல தானங்கள் செய்து; மனோவேகமும் பின்னடையத்தக்க வேகமான நடையுள்ள நான்கு குதிரை கட்டிய மகா மேருவைப்போல உயர்வுள்ள ரத்தின கசிதமாகிய ரதத்தின் பேரில் ஆரோகணித்துக் கொண்டனன்.

அப்போது, வேத வேதியர், மீமாம்சகர், தார்க்கிகர், வையாகரணிகள், சோதிடர், ஆயுள்வேதியர், வேதாந்தியர், ஆகம சித்தாந்திகள், புராணிகர், சமயசாத்திரப் பிரசங்கிகள் முதலான வித்தியா வல்லவர்களும்,—மந்திரி, பிரதானி, தானுபதி முதலான காரியத் தலைவர்களும், சிநேகர், உறவினர், புரோகிதர் முதலானவர்களும், மன்னர், மண்டலிகர், பட்டவர்த்தனர், மகுடவர்த்தனர் முதலான அரசர்களும்—தங்கள் தங்கள் பெருமைக்குத்தக்க வாகனங்களிலேறிச் சூழ்ந்து சென்றனர்.

நெற்றிப் பட்டம், கிம்புரி முதலான அணிகள் சூட்டி, அலங்கரிக்கப் பெற்ற **மதயானைகள்** கர்ச்சித்துச் சென்றன;—முத்துக்குஞ்சம், முத்து வடம், முத்துவாளி, கிண்கிணிமாலை, பொற்கலனை முதலான அணிகளால் அலங்கரிக்கப்பெற்ற வலியுள்ள **குதிரைகள்** கனைத்துச் சென்றன;—வீரபட்டம்; வீரசங்கிலி, வீரகண்டை முதலான அணிகளையணிந்த **வீரர்கள்** ஆரவாரித்துச் சென்றனர்;—மங்கலப் பாடகர் பாடினர்,—வந்தியர் மாகதர் புகழ்ந்தனர்,—மங்கல மங்கையர் வாழ்த்தினர், —நாடகக் கணிகையர் நடனஞ் செய்தனர். பட்டாங்கு படிக்கவும், கட்டியங் கூறவும், அஷ்ட மங்கலங்களை யேந்திச் சுமங்கலிகள் சூழ்ந்து போகவும்,—வெள்ளை வட்டக் குடைகள் நிழற்றவும்,—வெண்சாமரை வீசவும்,—மயிற் குஞ்சங்கள் சுழற்றவும்,—பூந்தட்டேந்தவும்,—பேரிகை, தம்பட்டம், தக்கை, உடுக்கை, சச்சரி, தாளம், மத்தளம், தாரை, சின்னம், மல்லரி, சங்கம், எக்காளம், ருத்திரவீணை, நாரதவீணை, தும்புரு வீணை, இராவணஹஸ்தம், கின்னரி, புல்லாங்குழல் முதலான 1. தோற் கருவி, 2. துளைக்கருவி, 3. கஞ்சக்கருவி, 4. மிடற்றுக்கருவி, 5. நரம்புக் கருவி என்கின்ற ஐவகையானும், **முப்பத்திரண்டு** வாத்தியங்களும் முழங்கின.

தேரிற்கட்டிய மணிகளினோசை கணீர் கணீரென்று சத்தித்தன, —ஆடுகின்ற மாதரது அடிகளிற் பூண்ட சிலம்போசை, கலீர்கலீரென்று ஒலித்தன,—சகல மங்கல சம்பிரம ஆடம்பரங்களுடன், மாளிகைகளின் வாயில்கள் தோறும் மலர்ப்பந்தரிட்டு,—மணிமாலைகள் தூக்கி,— வாழை கமுகுகள் நாட்டி,—மெழுகிக் கோலமிட்ட திண்ணைகளிற் பூரணகலசங்களும்,—பொற்பாவைகளும்,—முளைப்பாலிகைகளும்,—முகவிளக்குகளும் — வெண்சாமரைகளும்,— இணைக்கயல்களும்,— கண்ணாடிகளும்,— பூந்தட்டுகளும்,—மங்கலமாக வைத்து அலங்கரித்து,—பரிமள திரவியங்களைக் கலந்த பனிநீர் தெளித்துத் தூளி எழும்பாமல் தளஞ்செய்தும், —ஆடல்பாடல் முதலான விநோதங்களைக் கொண்டும்—வீதி விளங்கியது. அவ்வீதியினிடத்துத் தேவேந்திரன் தியாகராஜ தரிசனஞ் செய்யப் போவதுபோல—அவ் வீதி விடங்கனென்னும் இராஜகுமாரன் தேரை நடத்தினான்.

9. மைந்தன் எழில் கண்டு மங்கையர் மையல் கொளல்

அப்பொழுது இரதி, இந்திராணி முதலான தேவமாதர்களையொத்த அவ்வீதியிலுள்ள ஸ்திரீ ஜனங்களெல்லாம் அப்புத்திரனைக்கண்டு,—மணமுள்ள மலரை வண்டுகள் சூழ்ந்தது போலவும்,

Koviloor Digital Library

—இனிய சுவையுள்ள தேனை ஈக்கள் சுற்றியது போலவுஞ்—சூழ்ந்து கொண்டனர். அம்மாதர்,—கலைநெகிழ்ந்தும், — கைவளை சோர்ந்தும், —கண்ணீர் ததும்பியும்,—குழலவிழ்ந்தும்,—கொங்கைகள் விம்மியும்,—பசலை போர்த்தும்,—மையலடைந்த மனத்தவர்களாய், "கரும்பை வில்லாகவுடைய காமனைப் பார்க்கிலும் எண்மடங்கு அழகுடைய இளவரசே! கன்னிகைப் பருவமுள்ளவளே நான், என்மேற் கடைக்கண் செய்யாயோ" என்றும்,—"எழுதப் படாத சுந்தரவடிவமுள்ள இளங் காளையே! புருஷர் முகம் பாராத பூவையே நான், என்னைப் புணர்ந்து போகாயோ" என்றும்,—"கண்களுக்கு நிறைந்த கட்டழகனே! காவலழி யாத காரிகையே நான், என்னைக்கலந்து போகாயோ" என்றும்,— "சுபலக்ஷணங்கள் நிறைந்த சுந்தரவடிவனே! கலியாணமில்லாத கன்னி கையே நான், என்மேற் கருணை செய்யாயோ" என்றும்,—"**மனுச் சக்ரவர்த்தி பெற்ற மதயானையே!** சிறு வயதுள்ளவளே நான், என் னைத் திரும்பிப் பாராயோ" என்றும்,—"அதிசயிக்கத்தக்க அழகனே! நிறையழியாத நேரிழையே நான், சற்றே நின்று போகாயோ" என்றும் —"**இராஜ புத்திரனுக்கு வீதி விடங்க னென்று பெயரிட்ட பெரி யோர்க்கு அனந்ததரம் அடிக்கடி தெண்டனிட்டாலும் போதாதே**" என்றும்— தம்மிற்றாமே பேசி மனதுருகித் தம்மை மறந்தார்கள்.

சில மாதரோ, "வாசமுள்ள தயிலம்பூசி மணமுள்ள மலர்மாலை சூழ்ந்து, வாழைப்பூவிதழ்போல் வகிர்ந்து, குயில் முகம் போல முடி யிட்டுப், பளிங்குச் சிமிழ்க்குள்ளிருந்து தோன்றுகின்ற பருத்த நீலக் கல்போல் தாவள்யமான தலைச்சாத்துக் குள்ளிருந்து சிறுகித்தோன்று கின்ற குடுமியும்,—பார்க்கின்றவரது பார்வைக்கு இன்பந்தருகின்ற தோற்றமும்,—மாறுத மலர்ச்சியும்,—மனோரஞ்சிதமான அழகும்,— குளிர்ச்சியும் ஒளியும் பெற்றுச் செந்தாமரை மலர்போல் விளங்கும் முகமும்,—கருமை மிகுந்து செம்மை கலந்து காருண்யந் ததும்பி இங்கிதமறிந்து சிறிதே இமைத்து மனோரம்மியமாய் மலர் போன்று நீண்ட கண்களும்,—ஒளிகொண்டு உயர்ந்து நீண்ட நாசியும்,—குண்டல மணிந்து நீண்டு அகன்ற செவியும்,—திரிபுண்டரந் தரித்துத் திலகந் தீட்டி அழகு பெற்று அகன்று உயர்ந்த நெற்றியும்,—பவளம்போற் சிவந்து திரண்ட உதடும்,—முல்லையரும்புகள் போலச் சிறுத்து நெறுங்கி ஒளிவீசும் பற்களும்,—குறுகி மென்மையாகிச் சிவப்பேறிய நாவும்,— கண்டசர முதலான ஆபரணங்களையணிந்து வலம்புரிச் சங்குபோல் திரண்ட, கண்டமும்,—மத்தளம் போலத் திரண்டு, மந்தரமலைபோல உயர்ந்து, கண்டோர் கண்களையுங் கருத்தையுங் கட்டுகின்ற சுகந்த மாலையணிந்த வெற்றியுள்ள தோளும்,—வீணைத் தண்டுபோல நீண்டு தாழ்ந்து கடகமணிந்த கையும்,—தாமரை மலர்போற் சிவந்து மிருது வாகி மழைபோற் சொர்ணம் பொழிகின்ற முன்கையும், விளக்கமிகுந்து

Koviloor Digital Library

பதக்க முதலானவை அணிந்து களபகஸ்தூரிகள் பூசிக் கண்ணுடிபோல அகன்று மலைபோல உயர்ந்த மார்பும்,—சிறுத்துயர்ந்த வயிறும்,—ஆழ்ந்து அழகுபெற்ற உந்தியும்,—யானைத் துதிக்கைபோன்று திரண்ட தொடையும்,—வட்டந் தோன்றுது தசைகொண்டு செழிப்புள்ள முழங் காலும்,—திரண்டு நீண்ட கணைக்காலும்,—தாமரை மலர்போன்று வீர கண்டையணிந்த கால்களும்,—வரம்பு கடவாத வடிப்பமுள்ள வடிவ முடைய இந்த இராஜபுத்திரனைக் கண்டு களிப்பதற்கு நானென்ன தவஞ் செய்தேனே!' என்றும்;

"**இராஜ சிங்கமாகிய** இந்தக் குமாரனைச் சிருஷ்டித்தவன் பிரம தேவனே யானால், இவனழகுக்குத் தக்க மாதினை இனி எங்கே உண்டு பண்ணுவானே!"—என்றும், "இவ்வழகனது வடிவைக் கண்டால் உருகாத கருங்கல்லும் உருகுமானல் பேதைமையுள்ள பெண்கள் மனம் உருகாதிருக்குமோ!" என்றும்,—"இவனது பூரண சந்திர விம்பம் போன்ற புன்னகை ஒன்றுமே மூன்றுலகத்திலுமுள்ள பெண்களுக்கெல் லாம் பித்தேற்றுமே!"—என்றும் பலவிதமாகத் தனித்தனிச் சொல்லி மோகங்கொண்டு நின்றார்கள்.

10. அரசிளஞ் சேயை ஆடவர் போற்றல்

அவ்வீதியிலுள்ள வாலிபர், வார்த்திபர் முதலான புருஷ ஜனங்க ளெல்லாங் கண்டு, "ஆ! ஆ!! இந்தப் புத்திரனே இராஜபுத்திரன், இவனுக்கு முன் மற்ற இராஜபுத்திர ரெல்லாம்,—இராக்ஷசபுத்திரரே" என்றும்—"இவன் வடிவே வடிவு, இவன் வடிவுக்குமுன் மற்றவர் வடிவெல்லாம்—மர வடிவே" என்றும்,—"இவன் கற்ற வித்தையே வித்தை, இவனுக்கு முன் மற்றவர் கற்ற வித்தை யெல்லாம்—மாய வித் தையே" என்றும்,—"இவன் குணமே குணம், இவனுக்கு முன் மற்றவர் குணமெல்லாம்—வில்லின் குணமே" என்றும்,—"இவனே இளவரசு, இவ னுக்கு முன் மற்ற இளவரசெல்லாம்—பூவரசே" என்றும்,—"இவனே சீமான், இவனுக்கு முன் மற்ற சீமான்களெல்லாங் — கலைமான்களே" என்றும்—பேசி வியந்தோர் பலர். "இவன் வீரமே வீரம், இவன் வீரத் துக்கு முன் மற்றவர் வீரமெல்லாஞ்—சவ்வீரமே" என்றும்,—"இவன் யௌவனமே யௌவனம், இவன் யௌவனத்துக்கு முன் மற்றவர் யௌவனமெல்லாம்—வெவ்வனமே" என்றும்,—"இவன் பாக்கியமே பாக்கியம், மற்றவர் பாக்கியமெல்லாம்—நிர்ப்பாக்கியமே" என்றும்,—"இவனைப் பெற்றவரே பெற்றவர், மற்றவரெல்லாம்—பெண் பெற்ற வரே" என்றும்—பேசினேர் சிலர்.

Koviloor Digital Library

"இந்தக் குணரத்தினமான புதல்வனைப் பெறுதற்கு நமது மகாராஜனும் அவரது மனைவியாரும் என்ன நோன்பு நோற்றாரோ" என்றும்,—"வெற்றியையுடைய வீரசிங்கம் போன்ற இந்தப் புத்திரனது திருமுக மண்டலத்தில் சாந்தந் ததும்புகின்றதே" என்றும்,—'இவனது கண்கள் கருணை பொழிகின்றனவே' என்றும்,—'இவனது வடிவில் அழகு ஒழுகுகின்றதே' என்றும்,—'நெடுநாளாகக் கண்டு களிக்க வேண்டுமென்று எண்ணி எதிர்பார்த்திருந்த நமக்கு இன்று தியாகராஜப் பெருமான் திருவருளல்லவோ இந்த இராஜபுத்திரனை இவ்வீதியில் வரும்படிச் செய்தது! இனி, அவ்வருளுக்கு என்ன கைம்மாறு செய்வோம்?' என்றும்—பேசி மகிழ்ந்தோர் சிலர். "இந்தப் புத்திரன் தியாகேசப் பெருமான் வரத்தினால் தோன்றினான் என்பதை இவனது அற்புதமான வடிவம் காட்டுகின்றதே" என்றும்,—'நமதரசனுக்குச் சந்ததி இல்லாமையால் பிற்காலத்தில் உலகம் என்ன பாடு படுமோ வென்று எண்ணி இளைத்திருந்த நமது துன்பத்தை யெல்லாம் நீக்கி இன்பத்தைக் கொடுத்த இப்புத்திரனுக்கு நாம் செய்யும் உபகாரம் ஒன்று மில்லையே' என்றும்,—'மனுச்சோழ மகாராஜனைப் போல நம்மை யெல்லாம் பாதுகாத்து வருவானென்பதற்கு வேறே அடையாளம் வேண்டுமோ! இவனிடத்திற் கருணை ததும்புகின்ற கடைக்கண்களே காட்டுகின்றன' என்றும்,—பலர் பலவிதமாகத் தனித்தனிச் சொல்லிக்கொண்டு சூழ்ந்து நின்றார்கள். இந்தப் பிரகாரம் அவ்வவ் வீதியிலுள்ள ஸ்திரீ ஜனங்களும் புருஷ ஜனங்களும் பார்த்துப் பார்த்து பலவிதமாகப் புகழ்ந்து நெருங்க வீதிவிடங்கன் தேரிலேறிச் சென்றனன்.

11. இளைஞன் தேர்க்கீழ் இளங்கன்றரை படலம்

அரசகுமாரன் செல்லும்போது, ஒரு வீதியில் தேரிலே கட்டிய குதிரைகள் தேர்ப்பாகன் வசத்தைக் கடந்து தெய்வத்தின் வசமாகி, அதிவேகமாக அத்தேரை இழுத்துக் கொண்டு சென்றன. அத்தருணத்தில் தாய்ப் பசுவானது பின்னேவர, முன்னே வந்த அழகுள்ள ஒரு பசுங்கன்றானது 'இளங்கன்று பயமறியாது'—என்கிற மொழிப்படியே துள்ளிக் குதித்துக்கொண்டு எதிர் வந்து இராஜகுமாரனைச் சூழ்ந்து வருகிற ஜனத்திரள்களுக்குள்ளே ஒருவருமறிந்து கொள்ளாதபடி ஊழ்வினையாற் கண்மயக்கம் செய்வித்து, உட்புகுந்து, அதிவேகமாகச் செல்கின்ற தேர்ச்சக்கரத்தில் அகப்பட்டு, அரைபட்டு, உடல் முறிந்து, குடல்சரிந்து, உயிர்விட்டுக் கிடந்தது.

Koviloor Digital Library

12. இளவேந்து உற்றதுன்னி
இறைவனை இறைஞ்சுதல்

உடனே, அந்தப் பசுங்கன்று, தனது தேர்ச்சக்கரத்தில் அகப்பட்டதைக் கேட்ட விதிவிடங்கன்—'இடியோசை கேட்ட நாகம் போலத்'—திடுக்கிட்டு, நடுநடுங்கித் தேரிலிருந்து கீழே விழுந்து, எண்ணப்படாத துன்பத்தோடும் பயத்தோடும் எழுந்து போய், அப்பசுங்கன்று இறந்து கிடைப்பதைக் கண்டு—மதிமயங்கி,—மனம் பதைத்துக்—கையுங் காலும் நடுக்கெடுத்துப் பெருமூச்சு விட்டு, உடம்பு வெயர்த்துச் சோபமடைந்து விழுந்து, சிறிதே தெளிந்தெழுந்து, கண்களிலே நீர் ஆருகப் பெருக நின்று, 'சிவசிவ! சிவ சிவ!! சங்கரா! சங்கரா!! சம்புவே! சம்புவே!! மஹாதேவா! மஹா தேவா!! தியாகராஜப்பிரபு! தியாகராஜப்பிரபு!! தேவரீரைத் தரிசிக்க வேண்டுமென்று வந்த அடியேனுக்கு இப்படிப்பட்ட இடரும் வரலாமா? நன்றி அறியாத பாவி இவன், நம்மைத் தரிசிக்கத் தக்கவனல்லவென்று திருவுளங் கொண்டு தானோ என்னை இந்தப் பழிக்கு ஆளாக்கியது? தேவரீரைத் தரிசனஞ் செய்ய எண்ணி வந்த அடியேன், கால்வருந்த நடந்து பயபக்தியுடனே வந்து தரிசிக்க வேண்டும்; அவ்வாறு செய்யாமல், செல்வச் செருக்கினுல் தேரி லேறிக்கொண்டு ஆடம்பரங்களுடன் பக்தியில்லாது,—பகல் வேஷக்காரன்போல,—டம்ப வேஷங்காட்டி வந்த அன்பில்லாத பாவியாகிய என் பிழையைக் குறித்து நோவதல்லது, என் பெருமானிடத்துக் குறை சொல்லத் தகுமோ?

இப்படிப்பட்ட பெரும்பாதகஞ் செய்யத்தானே பிள்ளையாகப் பிறந்தேன்! விரிந்த பாற்கடலில் விஷம் பிறந்தது போல் மறை நெறி தவருத மனுவின் வம்சத்தில் எதிரற்ற பாவியாகிற நான் ஏன் பிறந்தேன்? பழிபாவங்களைக் கனவிலுங் கண்டறியாத மனுச் சோழராகிய என் பிதாவுக்குப் பெரும் பழியைச் சுமத்தத்தானு பிறந்தேன்? சிவபெருமானைத் தரிசித்துச் சீர்பெறலாமென் றெண்ணி வந்த எனக்குச் சிவதரிசனங் கிடையாது தீராப்பழி கிடைத்ததே! ஓகோ! "எண்ணம் பொய்யாகும், ஏளிதம் மெய்யாகும்" என்கிற வார்த்தைகள் என்னிடத்திலே இன்று அனுபவப் பட்டனவே; ஐயோ! நான் கற்ற கல்வியெல்லாம் கதையாய் முடிந்தனவே! நான் கேட்ட கேள்வி யெல்லாம் கேடாய் முடிந்தனவே! நான் அறிந்த அறிவெல்லாம் அவலமாய் விட்டனவே! நான் தெளிந்த தெளிவெல்லாந் தீங்காய் விட்டனவே! அரகரா! இப்படிப்பட்ட தீங்கு வரு

Koviloor Digital Library

மென்று அறிந்தால் தேரிலேறேனே; பசுவைக் கொலைசெய்வதே பாவங்களிலெல்லாம் பெரும்பாவம்! அதைப் பார்க்கிலும் பசுங் கன்றைக் கொலை செய்வது பஞ்சமா பாதகத்தினும் பதின் மடங்கு அதிகமென்று பெரியோர் சொல்லக்கேட் டறிந்திருக்கிற நான், இன்று அந்தப் பாதகத்துக்கு ஆளாகியும் உயிரை விடாமல் உடலைச் சுமந்திருக்கிறேனே!

'இளங்கன்று எதிரே வரவும், அதைப்பாராமல் அதன் மேல் தேரைநடத்தியது செல்வச் செருக்கல்லவோ' என்று உலகத்தோர் பழிக்கும் பழிக்குத்தான் உடம்பெடுத்தேன்; நான் புத்தி பூர்வமாக எள்ளளவாயினும் அறிந்திருப்பேனானால் இப்படிப்பட்ட அபாயம் நேரிடவொட்டேன்! என்ன செய்வேன்! என்ன செய்வேன்! 'மனுச் சோழர் காலத்தில் அவர் புத்திரன் ஒரு பசுங்கன்றைக் கொன்றா னென்னும் பழிமொழியை உலகத்தில் நிலைபெற நாட்டினேனே; நீதி தவறாது உலகத்தை யெல்லாம் ஆளுகின்ற மனுச்சக்கரவர்த்தி யென்னும் மகாராஜனுக்குப் பிள்ளையாகப் பிறக்கும்படி யிருந்த நல்வினை இப் போது பேயாகப் பிறப்பதற்குத் தக்க தீவினையாய் விட்டதே. இந் தப் பிறப்பிலே இப்பழியை ஏற்றுக்கொள்வதற்கு முன்பிறப்பில் என்ன பாவஞ்செய்தேனோ! தூய்மையுள்ள சூரிய குலத்திற்கு ஆதியாகிய மனுவென்பவரும் அவர் வழிக்குப் பின்வழியாகத் தோன்றிய—குலோத் துங்க சோழர்,—திருநீற்றுச் சோழர்,—காவிரி கரைகண்ட சோழர்,— மனுநீதிச் சோழர்,—இராஜேந்திரச் சோழர்,—ராஜ சூடாமணிச் சோழர், —ராஜ ராஜ சோழர்,—உறையூர்ச் சோழர்,—மண்ணளந்த சோழர்,— கங்கை கொண்ட சோழர்,—தேவர் சிறைமீட்ட சோழர்,—மரபுநிலை கண்ட சோழர்,—எமனை வென்ற சோழர்,—சுந்தரச் சோழர்,—மெய்ந் நெறிச் சோழர்,—முதலான என் மூதாதைகளான முன்னோர்களெல்லாம் தீமையைச் சேராது செங்கோல் நடத்தி யடைந்த கீர்த்தி இக்காலத் தில் எடுக்கப் படாத பழியைச் சுமந்த என்னால் மறைந்து போகும் படி நேரிட்டதே! ஐயோ! இதை எண்ணும்போது நான்,—'குலத்தைக் கெடுக்கவந்த கோடாரிக் காம்பானேனே'—'மரபழிக்கவந்த வச்சிராயுத மானேனே' கன்றுக்குப் பாலூட்டாதவனைக் கண்டாலும் பாவ மென்று சொல்லுகிற பெரியோர்கள், சேங்கன்றைத் தேர்க்காலி லிட்ட என்னைக் குறித்து என்ன சொல்வார்கள்?

இந்தக்கன்று எங்கே பிறந்ததோ! எங்கே வளர்ந்ததோ! எங்கே போக எண்ணியதோ! இங்கே வந்து இறக்க நேரிட்டதே! சுந்தர முள்ள இக்கன்று இறந்ததைக் கண்ட எனக்கே இவ்வளவு துக்க முண்டாயிருக்கின்றதே! இதை ஈன்ற தாய்ப்பசு கண்டால் என்ன பாடு படுமோ! இச்சேதியை என் பிதாவானவர் கேட்பாரானால் ஏதாய் முடியுமோ! வார்த்தை மாத்திரத்திலே பழியென்று சரசஞ் செய்கின்ற

Koviloor Digital Library

வர்களையுந் தண்டிக்கின்ற தந்தையார் திருமுகத்தில் தகுதியல்லாத பழியைச் சுமந்து தண்டனைக்காளாகிய நான் எவ்வாறு விழிப்பேன்; இனி இவ்வுலகில் பழிக்காளாகி உண்டுடுத்து உலாவி உயிர் வைத்திருக்க மாட்டேன். இன்றே என்னுயிரை இழந்து விடுகிறேன்" என்று பலவிதமாகப் பரிதபித்து, துக்க சமுத்திரத்திலழுந்திக் கரைகாணாத வனுகி நின்றனன்.

13. சோர்வுடைச் செல்வனைச் சூழ்ந்தோர் தேற்றல்

உடன் சூழ்ந்துவந்த அந்தணர், அமைச்சர் முதலானோர் இராஜ குமாரனைப் பார்த்துத் தாங்களும் விசனமடைந்தவர்களாய், 'ஓ விவேக முள்ள வீதிவிடங்கனே! நீர் என்ன கெடுதி நேரிட்டதென்று இப்படிப் பிரலாபிக்கின்றீர்! அந்தப் பசுவின் கன்றை நீர் கொல்ல வேண்டு மென்று கொன்றீரோ! அல்லது அந்தக் கன்று தேர்க்காலில் அகப்படு வதை அறிந்தும் அஜாக்கிரதையா யிருந்தீரோ! அக்கன்று ஓடிவந்ததைச் சூழ்ந்திருந்த நாங்கள் ஒருவரும் அறியோமே! நீரெப்படி யறிவீர்? அது கர்ம வசத்தாலே எல்லார் கண்களிலும் மண்களைத் தூவி வலிய வந்து மடிந்ததே! அதற்கு நீர் என்ன செய்வீர்? மிருக ஜாதிகளிலே உயர்வுள்ள பசுவின் கன்று இறக்க நேரிட்டதே யென்று எண்ணி யெண்ணிச் சோர்ந்து போகின்றீர்! ஆனால் அதற்கென்ன செய்வோம்! பொன் கத்தியென்று கழுத்தரிந்து கொள்ளலாமோ? இதனால் நமக்குப் பழி பாவம் ஒன்றுமில்லை! ஆயினும், இதுபற்றி உமது மனது அலை பாய்ந்து அவலங் கொள்ளுகின்றபடியால் வேதத்தில் விதித்திருக் கின்ற பிராயச்சித்தங்களுள் இதற்குத் தக்கது எதுவோ அதைக் கேட் டறிந்து செய்துகொள்ளலாம். நீர் சித்தங் கலங்காமல் தேரிலேறும்' என்று சொன்னார்கள்.

14. கோமகன் குடும்பகதை கூறல்

அது கேட்ட வீதிவிடங்கன், அமைச்சர் முதலியோரைப் பார்த்து, "நடுவாகப் பேசுகின்ற நல்லோர்களாக இருந் தும், காலவேற்றுமையால் கருத்து வேறுபட்டு முகநட்பா கப் பேசி முகந் துடைக்கின்றவர்கள் போற் சொன்னீர்கள்; இதென்ன ஆச்சரியம்! பூர்வம் எங்கள் வம்சத்தில், சிபிச் சக்கரவர்த்தி என்ப வர் ஒருவர், ஒரு வேடன் துரத்திக்கொண்டு வரப் பயந்து அடைக்

Koviloor Digital Library

கலமாகப் புகுந்த புருவுக்கு அபயஸ்தஞ் செய்து, பின்பு அவ்வேடன் வந்து புருவைக்கேட்டு வழக்கிட்டபோது, அந்தப் புருவுக்கு ஈடாகத் தமது சரீரத்திலுள்ள மாமிசத்தை யெல்லாம் அரிந்தரிந்து தராசில் வைத்தும் நிறை காணுமலிருக்க அது கண்டு தாமும் அந்தத் தராசி லேறினர். அவர் பட்சி ஜாதிகளில் சாமானியப் பிறவியாகிய புருவின் உயிர்க் கொலைக்கே அஞ்சித் தம்முடம்பைக் கொடுத்ததுமன்றி உயிரையுங் கொடுத்தாரானல், அப்பட்சி ஜாதிகளில் விசேடப் பிறப்பாகிய கருடன் முதலான உயிர்களினிடத்து எப்படிப்பட்ட காருண்ய முள்ளவரா யிருக்க வேண்டும்? அதனினும் உயர்ந்த மிருக ஜாதிகளில் எவ்வகைப் பட்ட கிருபையுடையவரா யிருக்கவேண்டும்? அதனினும் அம்மிருக ஜாதிகளில் விசேடமாகிய பசுக்களிடத்தில் எப்படிப்பட்ட இரக்கமுள்ளவரா யிருக்கவேண்டும்? அதனினும் பசுவின் கன்றுகளிடத்தில் எவ்வகைப்பட்ட தயையுள்ளவரா யிருக்க வேண்டும்? அப்படிப்பட்டவருடைய வம்சத்தில் நான் பிறந்தும், இன்று வீதியில் வரும்போது யாரோ பயங் காட்டித் துறத்த, அதனல் நடுங்கி என்னெதிரே அடைக்கலமாகத் துள்ளியோடி வந்த இந்தப் பசுங்கன்றை அபயஸ்தங் கொடாமல் அநியாயமாகத் தேர்க்காலில் அகப்பட்டிறந்து போகச் செய்தேனே! இப்படிப்பட்ட என்னை என்ன செய்தால் தீரும்? என்னை இதற்குத் தக்க பிராயச்சித்தஞ் செய்து கொள்ளும்படி சொன்னீர்கள்! எங்கள் வம்சத்திலிருந்த அரசர்கள் இரக்கத்துடன் நீதி தவறுது அரசு செலுத்தி வந்த கிரமத்தையும், என்பிதாவாகிய மனுச்சோழர் நடு நிலைமை தவறுமல் எவ்வுயிர்களையும் தம்முயிர் போலப் பாதுகாத்து வருகின்ற முறைமையையும், அரசர்க்குக் கோ பூசை செய்வது கடனென்ற வேத வாக்கியத்தையும், அரசர் பசுக்களுக்கு யாதொரு குறைவும் நேரிடவொட்டாமல் மிகுந்த ஜாக்கிரதையுடன் விருத்தி செய்விக்க வேண்டுமென்ற பெரியோர் வாக்கியத்தையும், ஐயோ! எங்கே அனுப்பிவிட்டு இங்கே பிராயச்சித்தஞ் செய்து கொள்வேன்!!" என்று துயரத்துடன் சொல்லினன்.

15. இளங்கன் றிறந்தது விதியெனத் தேற்றல்

அது கேட்ட அவ்வந்தனர் முதலானவர்கள் (அக்குமாரனை நோக்கி), "வாராய் இராஜ புத்திரனே! நாங்கள் முகத்துக்கிச்சையாக முன்றென்று பேசிப் பின்றென்று சொல்லுகின்றவர்கள் அல்லம்; நெடுநாளாக எங்களுடன் பழகியிருந்தும் எங்கள் சுபாவம் இன்னும் உமக்கு நன்றாகப் புலப்பட வில்லையென்று தோன்றுகிறது. உலகந் தலைகீழாகுமானாலும் உள்ளபடி சொல்லுவோமே யல்லது புதிதாகத்

Koviloor Digital Library

தொடுத்துப் பொய் பேச மாட்டோம். நாங்கள் சொல்லும் வார்த்தையில் நம்பிக்கை வைத்துக் கேட்கக் கடவீர். அந்தப் பசுங்கன்று, ஒருவர் துறத்த அதனால் பயந்து அடைக்கலமாக வேண்டுமென்கிற அறிவோடு உமக்கெதிரே ஓடி வந்ததல்ல; அல்லது தானே துள்ளிக் குதித்து ஓடிவந்ததுமல்ல; அதை இன்ன விடத்தில் இன்ன காலத்தில் இன்னபடி இறக்குமென்று விதித்திருந்த அதன் தலைவிதியே அதனைத் துறத்திக்கொண்டு வந்து தேர்க்காலில் அகப்படுத்திச் சிதைத்துவிட்டது; அதன் விதி அப்படியிருக்க நீர் வீணாக விசனப்படுவதில் என்ன பயன்? "**கும்பகோணத்துப் பள்ளன் கொள்ளை கொண்டு போகத் தஞ்சாவூர்ப் பார்ப்பான் தண்டங் கொடுத்தான்**" என்னும் பழமொழிபோல அதனுயிரை விதி கொள்ளை கொள்ள உம்முயிரைத் தண்டங் கொடுப்பதேன்? நீர் ஒன்றுக்கும் அஞ்சாமல் தேரிலேறும்," என்று சொன்னார்கள்.

16. பிராயச் சித்தத்திற்குப் பெரியோரை நாடல்

அதுகேட்டு இராஜபுத்திரன், 'சிவதரிசனஞ் செய்ய எண்ணித் தேரிலேறும்போதே கால்தவறியும் இடது தோளும் இடது கண்ணும் துடித்துங் காட்டிய உற்பாதங்களை ஆலோசியாமல் புறப்பட்ட என் மதியை நினைத்துத்தான் துயரப்படுவேனோ!—அரசர் குலத்திற் பிறந்தும் என்னை இழிகுலத்தார் செய்யும் செய்கையைச் செய்வித்த என் விதியை நினைத்துத்தான் துயரப் படுவேனோ!—மாசில்லாத சூரிய குலத்துக்கு மாசுண்டாகும்படிச் செய்ததைக் குறித்துத் துயரப்படுவேனோ!—பிதாவுக்குப் பழிசுமத்தப் பிள்ளையாகப் பிறந்ததைக் குறித்துத் துயரப் படுவேனோ!—இந்தக்கன்று இறந்ததை நினைத்துத் தான் துயரப் படுவேனோ!—இக்கன்றின் இறப்பைக் கண்ட தாய்ப்பசு துக்கப்படுமென்பதை நினைத்துத் துயரப்படுவேனோ!—நானொருவன் எதற்கென்று துயரப்படுவேன்!—என்ன செய்வேன்!—செய்யத்தக்க தொன்றும் இன்னதென்று அறியேனே!—ஆயினும், "முற்ற நனைந்தார்க்கு ஈரமில்லை" என்பதுபோல, முழுதும் பழிப்பட்ட எனக்கு இனியென்ன துக்க மிருக்கின்றது!—இனிப் பெரியோர் சொல் கடக்கப் படாதென்பதுபற்றி உமது சொற்படியே (இதோ) இரதத்தில் ஏறுகின்றேன்; என்னை எப்படிப் புனிதனாக்க வேண்டுமோ அப்படிச் செய்து கடைத் தேற்றுவது உங்களுக்கே கடன்"—என்று சொல்லி யேறி, இரதத்தை வந்தவழியே திருப்பி விட்டுப் பிராயச்சித்தம் அறிந்து செய்விக்கத்தக்க பெரியோர்களிடத்துக்குப் போயினான்.

Koviloor Digital Library

17. கன்றிழந்த பசு கதறி வருந்தல்

இந்தப் பிரகாரம் இராஜகுமாரன் போயினபின்பு, இறந்துவிட்ட அக்கன்றை ஈன்ற தலையீற்றுப் பசுவானது தன் கன்று துள்ளிக் குதித்தோடிய வழியேபோய், அந்தக்கன்று கீழே விழுந்து கிடப்பதைத் தூரத்தே கண்டவளவில் குலை குலைந்து,— நடுநடுங்கி,— புத்தி மயங்கி,— ஒன்றுந் தெரியாமற்,— சூறைக்காற்றில் அகப்பட்ட துரும்பைப்போல்,— சுழன்று சுழன்று,— ஓடிச்சமீபத்தில் வந்து, உடல் சிதைந்துங் குடல் சரிந்தும் உயிர்விட்டுக் கிடப்பதைப் பார்த்துச் சோர்ந்து விழுந்து,— பிரக்கினை தப்பிப் பிணம்போற் கிடந்து,— பின்பு சற்றே தெளிந் தெழுந்து,— பெருமூச்சு விட்டு,— அந்தக் கன்றைச் சுற்றிக் கோவென்றலறி யலறி,— அதனுடம்பை முகர்ந்து முகர்ந்து,— "இஃதென்ன தீவினையோ! இஃதென்ன இந்திரசாலமோ! இஃதென்ன விபரீதமோ! வாலசைத்துக் காலிசைத்து எனக்குமுன் துள்ளியோட இப்போது பார்த்தேனே! இத்தனை விரைவில் இப்படிப்பட்ட இடி யிடிக்குமென்று எவ்வளவு மறியேனே! காவிரி முதலான தீர்த்த யாத்திரை செய்தும்,— சிதம்பரம் முதலான ஸ்தலயாத்திரை செய்தும்,— திருக்கோயில்களிலுந் திருவீதிகளிலு முள்ள புல் முதலானவைகளை வாயினுற் களைந்து திருப்பணி செய்தும்,— புல் மேயாமலும் நீர் குடியாமலும் நெடுநாள் விரதங் காத்தும்,— உன்னைப் பெறப்பட்ட பாடு தெய்வம் அறியுமே!— அவ்வளவு பாட்டையும் அவலமாக்கிப் போட்டு சேங்கன்றே!— என்னைத் தெருவில் விட்டாயே! உன்னைப் பெறுகிறதற்கு நோற்ற நோன்புகளால் வந்த இளைப்பு இன்னும் ஆறவில்லையே! இதற்குள் இப்படிப் பட்ட ஆருத பெருநெருப்பை அடிவயிற்றில் வைத்தாயே! இந்தத் துக்கத்தை இனி எந்த விதத்தினுற் சகித்துக்கொள்ளுவேன்! 'பாவிக்குப் பாக்கியந் தக்காது' என்பதற்குச் சரியாக பளிங்குபோன்ற நிறமும்,— பால் வடிகின்ற முகமும்,— சிறுததுத் திரண்ட திமிலும்,— கடைந்தெடுத்தது போன்ற கால்களும்,— வாழைச் சுருள்போன்று வளர்ந்த வாலும்,— சித்திரக்கன்று போன்று சுபலக்ஷணங்களைப் பெற்ற வடிவமுடைய நீ,— நிர்ப்பாக்கிய முள்ள எனக்குத் தக்காமற் போய் விட்டாயே! உன்னுடைய சுந்தரமுள்ள வடிவத்தைக் கண்டாற் காமதேனுவுங் கட்டியணைத்து முகங் குளிர்ந்து முத்தங் கொள்ளுமே! நான் உன்னைப்பற்றியல்லவோ உயிர் தரித்து உலகத்திலுலாவி யிருந்தேன்! இன்னும் ஒருதரம் உன்னழகிய முகத்தைக்கண்டு, என்மடி சுரந்து, பால் சொரியக் காண்பேனே! ஐயோ! உன்னை 'ஆயிரங்

Koviloor Digital Library

கன்றுகளிலும் அழகுள்ள கன்று' என்று கண்டோர் சொல்லக் களிப்புடன் கேட்ட என் காதுகளால், இன்று 'இளங்கன்றை இறக்கவிட்டு மலட்டுப் பசுப் போல வருந்துகின்றதே' என்று, பலபேரும் பழித்துப் பேசுகின்ற வார்த்தையை எவ்வாறு கேட்பேன்?" என்று எண்ணி எண்ணி மனமழுங்கி, இளைப்படைந்து, மூர்ச்சித்து,—மறுபடியுந் தெளிந்து, இறந்து கிடக்கின்ற கன்றினுடம்பை உற்றுப்பார்த்து, இரதத்தின்சக்கரம் ஏறுண்டு இரத்தஞ் சொரிய அழுந்திக் கிடக்கின்ற வடுவைக் கண்டு,—"ஓகோ! என் ஏழை மதியால் ஏதோ ஒரு சொற்பமான அபாயத்தால் விழுந்திறந்ததென்று எண்ணி இரங்கினேனே! இவ்வடுவைப் பார்க்கும் போது தேர்ச்சக்கரம் ஏறுண்டு உடல் சின்னப்பட்டு இறந்ததாகத் தெரிய வருகின்றதே! ஆ! ஆ!! உனக்கு இப்படிப்பட்ட பெரிய அபாயம் வந்து சம்பவிக்கும்படி நானென்ன பாவஞ் செய்தேனோ! ஓ! குழந்தாய்! நீ தேர்க்காலில் அகப்பட்ட போது எப்படிப் பயந்தாயோ! என்ன நினைந்தாயோ! எவ்வாறு பதைத்தாயோ? உயிர்போய் உடல் குழம்பிக் கிடக்கின்ற உன்னைப் பார்க்கப் பார்க்கப் பெற்ற வயிறு பற்றி எரிகின்றதே!!" என்று கண்ணீர் விட்டுக் கதறி, அழுதழுது, புரண்டு புரண்டு, விம்மி விம்மி, வெதும்பி வெதும்பிப் பெருமூச்சு விட்டுக் கீழேவிழுந்து, மெய்ம்மறந்து கிடந்து பின்பு எழுந்து,—"என் கன்றினைத் தேர்க்காலில் அழுத்திக்கொன்ற காருண்யமில்லாத கண்மூடியைக் கண்டால் என்னிரண்டு கொம்புக்கும் இரையாக்காது விடுவேனோ! மைந்தரைப்பெறாத மலட்டுத்தன முள்ளவர்களும் இப்படிச் செய்யத் துணிவு கொள்ளார்களே! ஆ! இது செய்யத் துணிந்தவன் இன்னும் மேன்மேல் செய்யத் துணியான்!—என்று வெம்பியும், "துன்பஞ் செய்விக்குந் துஷ்டர்களுக்கும், கொலை செய்கின்ற கொடுந் தொழிலோர்க்கும் இடங்கொடாத இந்நகரம், இன்று வலியற்ற உயிர்களையும் மாய்த்து விடுகின்ற வஞ்சகர்க்கும் இடங் கொடுத்ததே! ஐயோ? இதில் அரசனில்லையோ! நீதியில்லையோ! நெறியில்லையோ! இதென்ன அநியாயமோ!"—என்று முறையிட்டு, தன் கன்றை இழந்ததனால் உண்டாகிய துக்கத்தைச் சகிக்கமாட்டாததாய் வருந்தி,—"நமக்கு நேரிட்ட துக்கத்தை நமது இறைவராகிய மனுச்சோழரிடத்திற் சென்று குறிப்பித்து நிவர்த்தி செய்து கொள்ளுவோம்"—என்றெண்ணி, அக்கன்றைப் பசுந் தழைகளால் மூடிவைத்துக் கண்ணீர் சொரிந்து கதறிக்கொண்டே மனுச்சக்கரவர்த்தியின் வாயிலில் வந்து,—குடிகளுக்குக் குறைவு நேரிட்டால் அதை அரசனுக்கு அறிவிக்கும்படி அவ்வரண்மனை வாயிலில் கட்டியிருக்கிற—ஆராய்ச்சி மணியைத் தன் கொம்பினால் மிகுந்த விசையோடும் வலியோடும் அடித்தசைத்தது. அப்படி அசைத்தபோது, அந்த நகரத்திலுள்ள ஜனங்களெல்லாம்,—ஒரு காலத்திலாயினுங் கேட்டறியாத ஆராய்ச்சி

Koviloor Digital Library

மணியினது ஓசையை இன்று நூதனமாகக் கேட்டோம். என்ன விபரீதமோ!" — என்று ஒருவர்க்கொருவர் பேசிக் கொள்ள, அந்த மணியிலிருந்து காதமட்டுங் கேட்கக் கணீரென்று ஓசையுண்டாயிற்று.

18. இளவரசால் வந்த இடரென்றறிந்து

ஆற்றொணாத் துயரில் அரசன் ஆழ்தல்

அவ்வோசையைச் சபாமண்டபத்தில் மந்திரி முதலானவர்கள் சூழச் சிங்காசனத்தின் மேல் வீற்றிருந்த மனுச்சக்கர வர்த்தியானவர் கேட்டு, — மாதர்கள் காலிலணிந்த சிலம்போசை கேட்ட மாதவர் போலவும், — அழுகுரலோசை கேட்ட அந்தணர் போலவும், — சண்டை இரைச்சலைக்கேட்ட சற்சனர் போலவும், — புலி முழக்கங் கேட்ட புல்வாய் போலவுந் — திடுக்கிட்டு, — திகைப்படைந்து, — சிங்காசனத்திலிருந்து 'பெருங்காற்றால் அடியறவிழுந்த பனைமரம்போலக்' கீழே விழுந்து, — மூர்ச்சை யடைந்து, — சிறிது நேரஞ் சென்று தெளிந்தெழுந்து, — உடல் நடுங்கி, — உள்ளம் பதைத்து, — உயிர் சோர்ந்து, — நாவுலர்ந்து, — கண்கலங்கி, — நடை தள்ளாடி, — அதிவேகமாக அரண்மனை வாசலுக்கு வருமுன், — வாயிற் காப்போர் அரசனுக்கெதிரே அஞ்சியஞ்சி வந்து, அடியில் விழுந்தெழுந்து, — 'ஆண்டவரே! அரண்மனை வாயிலில் கட்டியிருக்கிற ஆராய்ச்சி மணியை ஒரு தலையீற்றுப் பசுவானது தன் கொம்பினால் அடித்து ஓசையுண்டாக்கியது" — என்று விண்ணப்பஞ் செய்தார்கள்.

அதுகேட்டு அரசன் விரைவில் வந்து, அவ்வாராய்ச்சி மணியின் அருகே உடல் மெலிந்து, — முகஞ்சோர்ந்து, — கண்ணீர்சொரிந்து, — கதறி நிற்கின்ற பசுவைக் கண்டு, — சாவியாய்ப்போன தன் பயிரைக் கண்ட தரித்திரனைப்போல் மனம்நைந்து நைந்துருகி, நொந்து நொந்து வருந்தி, — "ஐயோ சாதுவான இந்தப் பசுவுக்கு என்ன துன்பம் நேரிட்டதோ! இதன் குறையை இன்னதென்று மதித்தறிந்து கொள்ள வல்லமை இல்லாதவனாக இருக்கின்றேனே!" — என்று பதைத்துத் தம்மருகில் அச்சத்துடன் நிற்கின்ற அமைச்சர்களைப் பார்த்து, — "எனக்குப் புகழும் புண்ணியமும் மேன்மேலும் வருவிக்கின்ற உங்கள் மந்திரித்துவம் நன்றாகவிருந்தது! உங்கள் அஜாக்கிரதையினாலல்லவோ இந்தப் பசுவுக்கு ஏதோ ஒரு குறை நேரிட்டது!" — என்று கோபித்துப் பார்க்க, அது கண்டு அச்சங்கொண்ட மந்திரிகளுள், — அப்பசு துயரப் படுவதற்குக் காரணம் இன்னதென்று முன்னே அறிந்தும் அரசனிடத்திற் சொல்வதற்கு அஞ்சியிருந்த ஒரு மந்திரியானவன், — 'இனி இதை நாம் மறைத்து வைத்தாலும் வேறொருவரால் வெளிப்படு

Koviloor Digital Library

மாதலால், நாமே அறிந்தமட்டில் அறிவிப்போம்' — என்றெண்ணி, அரசனை வணங்கி,—"தலைவனே! உமது புத்திரன் இவனுறு ஏறிப்போன இரதத்தின் சக்கரத்தில் இளங்கன்று ஒன்று எதிரே குதித்து வந்து அகப்பட்டு இறந்துவிட்டது; அந்தக்கன்றை ஈன்ற இந்தப் பசுவானது ஆருத் துயர்கொண்டு ஆராய்ச்சி மணியை அசைத்தது"—என்று சொன்னுன்.

அச்சொல்லானது,—'வெந்த புண்ணில் வேலுருவியது போல்',—மணியொலி கேட்டு வருந்தி யிருந்த செவிகளினுள்ளே சென்றுருவிச் சுறுக்கிட்டு வெதுப்பவிழுந்து, விஷந்தலைக்கேறினுற்போல வேதனையடைந்து அஞ்சுபுலனும் அறிவுங் கலங்கிப் பஞ்சப் பிராணனும் பதைபதைத் தொடுங்க, பேச்சு மூச்சில்லாமற் சோர்ந்து கிடந்து, அருகிலிருந்த அமைச்சர்கள் செய்த சாந்தோபசாரத்தினுல் சோர்வு நீங்கி அப்பசுவை அடிக்கடி பார்த்துப் பார்த்து, கண்ணீர், கடல் வெள்ளம் போல் பெருகவும்,—நெருப்பில்விட்ட நெய்யைப் போல், நெஞ்சம் உருகவும்,—"ஐயோ! இந்தப் பசுவுக்கு இப்படிப்பட்ட துக்க முண்டாவதற்கு நானே முக்கிய காரணமாக இருந்தேனே! தன் கன்றுக்கு அபாயமொன்று மில்லா திருக்கினுஞ் சுபாவத்திலே காணுந்தோறுங் சதறி உருகுகின்ற அன்பையுடைய இந்தப் பசுவானது, தன்கன்று இறந்து கிடக்கின்றதைக் கண்டபோது எப்படி உருகியதோ! என்ன பாடுபட்டதோ! கன்று சமீபத்திலிராமல் சற்றே தூரத்திலிருக்கினும், பார்த்துப் பார்த்துப் பதைக்கின்றதும், அம்மா! அம்மா! என்று அலறுகின்றது மாகிய சுபாவச் செய்கைகளையுடைய பசுவானது, கன்றிறந்து கண் மறைவிற் கிடக்கின்றதை எண்ணி எண்ணி, எப்படிப் பதைக்கின்றதோ! ஐயோ! அடிக்கடி அலறுகின்றதே! புலி முதலான துஷ்ட மிருகங்களிலொன்று எதிரிடுமாகுல் முன்சென்று தன்னுயிரைக் கொடுத்தாயினுங் கன்றினுயிரைக் காக்க வேண்டுமென்னுங் கருத்துள்ள பசுவுக்கு இறந்த கன்றை எதிர் கண்டபோது எப்படி உயிர் பதறியதோ! சிவசிவா! சிறுகன்று தேர்க்காலில் அகப்பட்டபோது எப்படித் துடித்ததோ வென்று எண்ணுந்தோறும் என்னுள்ளம் பகீரென்று பதைக்கின்றதே! இந்தப் பசுவானது,—'குள்ளனைக்கொண்டு ஆழம் பார்க்க வந்தது போலவும்,'—'பேயைத் தெய்வமென்று பிள்ளைவரம் கேட்கவந்தது போலவும்'—'கொல்லை ஆள்காட்டியைக் கூலி கேட்க வந்தது போலவும்'—'விழலினிடத்து நிழலுக்கு வந்தது போலவும்,'—என்னைக்கொண்டு தன் துயரைத் தீர்த்துக் கொள்ள எண்ணியல்லவோ இவ்வாராய்ச்சி மணியை அசைத்து இவ்விடத்து நிற்கின்றது! இதற்கு என்ன செய்வேன்!

Koviloor Digital Library

எமன் கையில் அகப்பட்ட உயிர் எந்தவிதத்தாலுந் திரும்பாதென்று உலகத்தார் சொல்லும் உறுதியான வார்த்தை வீண்போக—முன்னொரு காலத்தில் நமது நகரத்தில் ஓர் அந்தணன் ஈன்ற சிறுவன், அகாலத்தில் மரணமடைய, அதுபற்றி அவ்வந்தணன் துயர் கொண்டு தமது சமுகத்தில் வந்து—'சிவநெறி திறம்பாமற் செங்கோல் செலுத்துகிற உமது காவலைக்கடந்து அகாலத்திலே அந்தகன் வந்து, இரவும் பகலுந் தவம் செய்து யான் அருமையாகப் பெற்ற ஒரு பேருன புத்திரனை உயிர் கொண்டு போனனே; தலைவனே இது தகுமோ!'—என்று முகமும் மனமுஞ் சோர்ந்து முறையிட்டுக் கொள்ள,—அது கேட்டு மலமுருகி நொந்து—சிவபெருமான் திருவடியன்றி மற்றொன்றிலும் மனம் வையாத தமது வல்லமையால் எமலோகத்திலிருந்த உயிரை மீட்டுக் கொண்டுவந்து, முன்னிருந்த உடலில விட்டு, அவ்வந்தணனை மகிழ்ச்சி செய்வித்து; அன்றுதொட்டு எமனைத் தாமுள்ள வரையிலுந் தமது நகரத்திலும் நாட்டிலும் வரவொட்டாமற் செய்த என் குல முதல்வராகிய சைவச் சோழரைப் போல,—அவ்வளவு பெரிதான காரியஞ் செய்யாவிடினும்,—இப்பசுங் கன்றின் உயிரொன்றை மாத்திரமாவதும் மீட்டுக் கொடுக்க வலியற்றவனாக இருக்கின்றேனே! அவமிருத்து நேரிட்டபோது 'சஞ்சீவகரணி' யென்னும் தெய்வத்தன்மையுள்ள மருந்தைக் கொடுத்துப் பிழைப்பிக்கச் செய்த என் குலத் தலைவர்களிற் சிலர்போல் அம்மருந்தையாயினும் பெற்றுக் கொள்ளத்தக்க தவஞ்செய்தேனே!—தமது அஜாக்கிரதையினால் பிற உயிர்க்குக் கெடுதி நேரிட்டபோது அது பொறாமல் தம்முயிரை விட்டுவிட்ட சில அரசர்களைப் போல, என் அஜாக்கிரதையினால் நேரிட்ட இப்பசுங்கன்றின் முடிவைக் கேட்டறிந்த நான், **உயிரையாயினும் விட்டேனே!**—அன்னிய தேசத்தரசர் குற்றஞ் செய்தோரைக் கொலை செய்தாரென்று கேட்டாலுங் 'குற்றம் வந்ததென்ன! கொலை செய்ததென்ன!' என்று குலை நடுங்குகின்ற நல்லோர்கள் மரபிற் பிறந்த நான்,—குற்றம் வரவும் கொலை செய்யவும் அரசு செலுத்தி அந்த நல்லோர்களியல்புக்கு நாணமுண்டாகத் தானே, 'வீட்டின் வாயிலில் வெள்ளெருக்குப் பூத்தது போலத்' தோன்றினேன்!

நாம் அரசாட்சி செய்ய ஏற்பட்ட நாள் தொட்டு இந்நாள் வரையிலும், எவ்வுயிரும் எவ்விதத்திலும் யாதொரு குறையும் இல்லாமல் வாழ்ந்து மகிழ்ந்திருக்க, நீதியுடன முறைதவறாது செங்கோல் செலுத்தி வரும்படி சிவானுக்கிரகம் பெற்றோமே யென்று ஒரு நாழிகைக்குமுன் வரையிலும் எனக்கு உண்டாயிருந்த மனக்களிப்பையெல்லாம் மண்ணிற் கவிழ்த்தேனே! நாமும் பழிபாவங்களுக்குப் பயந்தே அறநெறி தவறாது அரசு செலுத்தி வருகிறோம்; 'பழைய தரித்திரனுக்குப் பணங்

Koviloor Digital Library

கிடைத்தது' போல் நமக்கும் சிவானுக்கிரகத்தால் ஒரு சிறுவன் பிறந்தான்; அவனும் கற்றவர் மகிழக் கல்வி கேள்விகளில் நிறைந்து பண்பும் பருவமும் உடையவனுனன்; இனி நமக்கென்ன குறை என்று எண்ணி எண்ணி **இருமாப் படைந்தேனே!** புத்திரப்பேறு பெற்றுப் புனிதனுனே மென்று **பூரித்திருந்தேனே!** நமது புத்திரன் இளவரசுப் பட்டத்திற்கு ஏற்றவனுனன்; இனிக் கல்யாணஞ் செய்விப்போமென்று **கனவு கண்டிருந்தேனே!** நமது புத்திரன் நற்குணங்களை உடையவனுக இருக்கின்றுன்; பெற்றெடுத்த நமது பேர் கொண்டுவருவானென்று மனோராச்சியம் பண்ணி **மகிழ்ந்திருந்தேனே!**

இளங்கன்று எதிர்வரவுங் கண் கெட்டுக் கருத்தழிந்தவன் போலத் தேரை நடத்தித் தீராப் **பழி பூண்டானே!** ஐயோ இவன் என் செங்கோலைப் பிடிக்கத்தக்க செல்வப்பிள்ளை யாகாமல் **தென்னம் பிள்ளை யானனே!** சிவதரிசனஞ் செய்யப் போகிறவன் தேரூர்ந்தே போகப்படாது! அவ்வாறு போயினும் நாற்புறத்திலும் நடப்போர்களை விலக்கும்படி ஆள் விலக்கிகளை விட்டு, முன்னே பரிக்காரர் வரவு குறித்துப்போகப் பின்னே மெல்லெனத் தேரை விடவேண்டும்; அப்படிச் செய்யாமல் பாலியப்பருவம் பயமறியாதென்பதற்குச் சரியாகப் பரபரப்பாகத் தேரை நடத்திப் **பசுங்கன்றைக் கொன்றுன்!** ஐயோ! இவன் கல்வியறிவுள்ளவனுக இருந்தும் அறிவழிந்து, **அரசன் பிள்ளை யாகாமல் அணிற்பிள்ளை யானனே!** கொடிய பாதகங்களிலெல்லாங் கொலைப்பாதகமே தலைமை யென்று வேத முதலாகிய கலைகளில் தானும் படித்தறிந்தான்; — சான்றோர் சொல்லவுங் கேட்டறிந்தான்; — அப்படி அறிந்திருந்தும் அப்பாதகஞ் சேரவொட்டாமல் தன்னைக்காத்துக்கொண்டு பட்டப்பிள்ளை யாகாமல் **பழிப்பிள்ளை யானனே!** ஐயோ! புதல்வனைப் பெற்றுல் புண்ணியம் பெறலாமென் றெண்ணிய எனக்கு மலடாயிருந்தாலும் வாழ்வுண்டென்று நினைக்கும்படி நேரிட்டதே! நான் நெடுநாளாகத் தியாகராஜப் பெருமானை வேண்டிக்கொண்டது இப்படிப்பட்ட பெரிய பழிக்காளாகிய பிள்ளையைப் பெறத்தானே! பிள்ளை என்ன செய்யும்! பெருமான் என்ன செய்வான்! **"மாதா பிதாக்கள் செய்தது மக்களுக்கு"** என்னும் பெரியோர் வார்த்தையின்படி நான் செய்த தீவினையே என் புத்திரனுக்கு நேரிட்டதென்று நினைத்து, என்னை வெறுத்துக் கொள்ள வேண்டுமென்றுலும், **இந்தப் பிறப்பில்** என் புத்தி யறிந்து ஒருதீங்குஞ் செய்ததில்லையே!

இந்தப் பிறப்பிலில்லாவிட்டாலும் முற்பிறப்பிலே,

நல்லோர் மனத்தை நடுங்கச் செய்தேனே!
வலிய வழக்கிட்டு மானங் கெடுத்தேனே!
தானங் கொடுப்போரைத் தடுத்து நின்றேனே!

Koviloor Digital Library

கலந்த சிநேகரைக் கலகஞ் செய்தேனோ!
மனமொத்த நட்புக்கு வஞ்சகஞ் செய்தேனோ!
குடிவரி உயர்த்திக் கொள்ளை கொண்டேனோ!
ஏழைகள் வயிறு எரியச் செய்தேனோ!
தருமம் பாராது தண்டஞ் செய்தேனோ!
மண்ணோரம் பேசி வாழ்வழித் தேனோ!
உயிர்க்கொலை செய்வோர்க்கு உபகாரஞ் செய்தேனோ!
களவு செய்வோர்க்கு உளவு சொன்னேனோ!
பொருளை இச்சித்துப் பொய் சொன்னேனோ!
ஆசை காட்டி மோசஞ் செய்தேனோ!
வரவுபோக் கொழிய வழியடைத் தேனோ!
வேலை யிட்டுக் கூலி குறைத்தேனோ!
பசித்தோர் முகத்தைப் பாரா திருந்தேனோ!
இரப்போர்க்குப் பிச்சை இல்லை யென்றேனோ!
கோள் சொல்லிக் குடும்பங் கலைத்தேனோ!
நட்டாற்றிற் கையை நழுவ விட்டேனோ!
கலங்கி ஒளித்தோரைக் காட்டிக் கொடுத்தேனோ!
கற்பழிந் தவளைக் கலந்திருந் தேனோ!
காவல் கொண்டிருந்த கன்னியை யழித்தேனோ!
கணவன்வழி நிற்போரைக் கற்பழித் தேனோ!
கருப்ப மழித்துக் களித்திருந் தேனோ!
குருவை வணங்கக் கூசிநின் றேனோ!
குருவின் காணிக்கை கொடுக்க மறந்தேனோ!
கற்றவர் தம்மைக் கடுகடுத் தேனோ!
பெரியோர் பாட்டிற் பிழை சொன்னேனோ!
பக்ஷியைக் கூண்டில் பதைக்க அடைத்தேனோ!
கன்றுக்குப் பாலூட்டாது கட்டிவைத் தேனோ!
ஊன்சுவை உண்டு உடல் வளர்த் தேனோ!
கல்லும் நெல்லுங் கலந்து விற்றேனோ!
அன்புடை யவர்க்குத் துன்பஞ் செய்தேனோ!
குடிக்கின்ற நீருள்ள குளந் தூர்த்தேனோ!
வெய்யிலுக் கொதுங்கும் விருக்ஷ மழித்தேனோ!
பகைகொண்டு அயலோர் பயி ரழித்தேனோ!
பொது மண்டபத்தைப் போயிடித்தேனோ!
ஆலயக் கதவை அடைத்து வைத்தேனோ!
சிவனடி யாரைச் சீறி வைதேனோ!
தவஞ் செய்வோரைத் தாழ்வு சொன்னேனோ!
சுத்த ஞானிகளைத் தூஷணஞ் செய்தேனோ!

Koviloor Digital Library

தந்தைதாய் மொழியைத் தள்ளி நடந்தேனே!
தெய்வ மிகழ்ந்து செருக்கடைந் தேனே!

என்ன பாவஞ் செய்தேனே! இன்னதென் றறியேனே!

ஐயோ! இந்தப் பசுவின் சோர்ந்த முகத்திற் கண்ணீர் ததும்பு கின்றதைக் கண்ட என் கண்களை,—நுங்கு சூன்றெடுப்பது போலப் பிடுங்கி எறியேனே! இதன் கன்றை உன் புத்திரன் தேர்க்காலில் ஊர்ந்து கொன்றுனென்று சொல்லக் கேட்ட என் செவிகளைச் செம்பு நீருருக்கி விட்டுச் செவிடாக் கேனே! இந்தப் பசு ஆராய்ச்சி மணியினுல் தன் குறையை அறிவித்த நாழிகை தொட்டு இந்நாழிகை வரையிலும் அக் குறையைத் தீர்ப்பதற்கு வேண்டிய உறுதி மொழியைக் கூருதிருக்கிற எந்நாவைச் சூடுள்ள நெருப்பாற் சுடுவேனே! இதற்குத் துன்பமுண் டாக்கினவன் இன்னுனென்று அறிந்தும் அவனை இன்னும் தண்டனை செய்யாது தாழ்த்திருக்கின்ற என் கைகளைக் கத்தியைக் கொண்டு கண் டித்து விடேனே! இதன் கன்றைப் பிழைப்பதற்குத் தக்க நன்முயற்சி யைத் தேடி, நாலு திக்குகளிலும் நடவாத என்காலைக் கோடரி கொண்டு குறுக்கே வெட்டேனே! இதன் மெலிவை அடிக்கடி கண்டும் வற்றி ஒடுங் காத மலபாண்டமாகிய என் உடம்பை வாளாயுதங்கொண்டு மடித்துக் கொள்ளேனே! இதன் பரிதாபத்தையும் நமக்கு நேரிட்ட பழியையும் எண்ணி உருகி அழியாத உள்ளத்தை வலிய விஷத்தைவிட்டு மாய்த்து விடேனே! நிலையிலா உயிர்க்கஞ்சி இவைகளில் ஒன்றுஞ் செய்யா துயிர் வைத்திருக்கின்றேனே! என்ன செய்வேன்! "பாவிக்குத் தீர்க்காயுள்" என்பதற்குச் சரியாகப் பெரும் பாவியாகிய என்னுயிர், தனக்குத் தானேயும் போகின்ற தில்லையே!

"நல்ல பூஜாபலத்தினுல் தெய்வபக்தியுடன் செங்கோல் செலுத்தி வருகின்றுன் மனுச்சோழன்" என்று மண்ணுலகத்தாரும் விண்ணுலகத்தாரும் புகழ்ந்த புகழெல்லாம் பொய்யாய்ப் போய்விட்டன வே; நான் அப்புகழை வேண்டினவனல்ல. ஆதலால்,—அது போகட்டும்; உயிரினும் ஒன்பதுபங்கு அதிகமாகத் தேடிவைத்த புண்ணியமும் போகின்றதே! ஆ! நான் நீதிதவருது அரசு செய்கின்றே னென்பதை நினைத்தால் எனக்கே ஏளனமாக இருக்கின்றதே! சேங் கன்றைத் தெருவில் சிதைக்கவும் ஒருமித்திருந்த என் செங்கோலை, —அளவுகோ லென்பேனே!—அஞ்சனக்கோ லென்பேனே!—எழுது கோலென்பேனே! ஏற்றக்கோ லென்பேனே! கத்திரிக்கோ லென் பேனே!—கன்னக்கோ லென்பேனே!—குருடன்கோ லென்பேனே! —கொடுங்கோ லென்பேனே——துடைப்பக்கோ லென்பேனே!— துலாக்கோ லென்பேனே!—மரக்கோ லென்பேனே!—வைக்கோ லென்பேனே!—அல்லது இன்று இறந்த பசுங்கன்முகிய பிரேதத்தைப்

Koviloor Digital Library

புரட்டிச் சுடுகின்ற பிணக்கோ லென்பேனோ!—என்ன கோலென்றுதா னெண்ணுவேன்!—இளங் கன்றைக் கொலை செய்யச் சம்மதித்திருந்த என் ஆக்கினா சக்கரத்தைக் கிரக சக்கர மென்பேனோ!—அல்லது இச் சேங்கன்றைச் சிதைத்த தேர்ச் சக்கர மென்பேனோ!—என்ன சக்கர மென் றெண்ணுவேன்!—இந்தப் பசுவின் கன்றுக்கு அபாயம்நேரிடக் காத்திருந்த என் காவலைச் சிறுபெண் காக்கின்ற தினைக்காவ லென் பேனோ!—குருடன் காக்கின்ற கொல்லைக்காவ லென்பேனோ!—புல்லாற் செய்த புருடன் காக்கின்ற புன்செய்க் காவலென்பேனோ!—வரும்படி யில்லான் காக்கின்ற வாயிற்காவ லென்பேனோ!—பயிரைக் காக்க வைத்த பண்ணைக்காவ லென்பேனோ!—வேலை வேண்டிக் காக்கின்ற வெருங்காவ லென்பேனோ!—அல்லது இக்கன்றை அடக்கஞ் செய்யக் காத்திருக்கின்ற அரிச்சந்திரன் காவ லென்பேனோ! என்ன காவ லென்றுதானெண்ணுவேன்! என்ன செய்வேன்! ஐயோ! இப்படிப்பட்ட பாவியாகிய என்னை மனுவென்று பேரிட்டழைப்பது,—காராட்டை வெள்ளாடென்றும்,—அமங்கள வாரத்தை மங்களவார மென்றும்,—நாகப்பாம்பை நல்ல பாம்பென்றும்,—வழங்குகின்ற வழக்கம் போன்ற தல்லது உண்மை யல்லவே! இனி, இப்பசுங்கன்று உயிர்பெற்றெழுந் திருப்பதற்கு உபாயம், என் புத்திரனுயிரையே யன்றி என் உயிரை யும் என் மனையாள் உயிரையும் என்னரசாட்சியையும், எனக்கு உரித் தாகிய மற்றெல்லாப் பொருள்களையுங் கொடுத்து விட்டால் நேரிடு மென்று சொல்வாருண்டானால், இதோ கொடுத்து விடுகிறேன். அவ் வாறு சொல்வோருமில்லையே! இதற்கு நேரிட்ட துக்கமும், எனக் கிதனாலுண்டாகிய துயரமும் எப்படித் தீருமோ! இப்படியென் றறி யேனே! என்ன செய்வேன்;' என்று பலவிதமாகப் பரிதவித் திருந்தார்.

19. அரசனை வணங்கி அமைச்சர்கள் கூறல்

இந்தப் பிரகாரம் பரிதபித்து வருந்துகின்ற மனுச்சக்கரவர்த் தியை அருகிலிருந்த அமைச்சர்கள் நோக்கிக் கைகுவித்துத் தொழுது நின்று,—"ஓ மனுநீதி தவறாத மகாராஜனே! விதிவசத்தாலே வலிய வந்து மடிந்த இளங்கன்றைக் குறித்து நீர் துன்பப்படுவது உயிர்களிடத்து உமக்குள்ள காருண்யத்திற்கு இயல்பே யென்று எண்ணி, இது வரையும் எதிரொன்றுஞ் சொல்லாது சும்மா இருந்தோம்; இனிக் 'காரியக் கெடுதியில் வாய்மூடிக்கொண் டிருப்பது மந்திரிகளுக்கு அழகல்ல' என்றபடியால், நாங்கள் சொல்

Koviloor Digital Library

லும் வார்த்தையைக் கேட்டருளவேண்டும்,—உமது புத்திரன் ஜீவ காருண்யமே தேகமாகக் கொண்டவன். தான் பூமியதிராது எந்த ஜெந்துக்கள் எதிர்வந்து அகப்பட்டுக்கொள்ளுமோ வென்று, கீழ்நோக்கி அஞ்சி மெல்லென நடக்கின்றபோது, வேறோர் அதிர்ச்சியினால் நடுங்கிச் சிற்றெறும்புகள் விரைவாக ஊர்ந்து போகின்றதைப் பார்த்து, திடுக்கிட்டு,—'ஓகோ என்ன பாவம்! இந்த உயிர்களுக்கு நடுக்கம் உண்டாக நடந்தோமே'—என்று எண்ணி, முகஞ்சோர்ந்து, பிரமை கொண்டு நிற்க நாங்கள் அநேகமுறை பார்த்திருக்கின்றோம். அப்படிப்பட்ட கிருபையுள்ளவன், இந்தக் கன்றை அஜாக்கிரதையினால் கொன்றானென்று எண்ணுவதற்கு இடமில்லை. அன்றியும், அவருடன் சூழ்ந்து போன, பிராமணர் முதலானோர்களுக்கும், தேரைச் சூழ்ந்துபோன எங்களுக்கும், தேர்க்குமுன் நடந்த ஜனங்களுக்கும், தெருவில் நின்று பார்த்திருந்த பிரஜைகளுக்கும் இலேசமுந் தெரியாதபடி அக்கன்று மாயமாகக் குதித்து வந்து மடிந்தது' என்று சொன்னார்கள். அன்றியும், தேர்க்கு முன்னே யானைவீரர், குதிரைவீரர் முதலானோர் அணியணியாக யூகம் வகுத்ததுபோல நெருங்கிப்போக, விருது பிடிப்போர், எச்சரிக்கை சொல்வோர், கட்டியங் கூறுவோர், பட்டாங்கு படிப்போர், சோர்வு பார்ப்போர், ஆள்விலக்குவோர் முதலானவர்கள் நடக்க. இத்தனைபேரையுங் கடந்து, தேர்க்குச் சமீபத்திற் சிங்கக் குட்டியாயிருந்தாலும் வரமாட்டாது. இதுவோ கோல் பிடித்தவனைக் கண்டால் கூப்பிடுதூரம் ஓடுகின்ற இயல்பையுடைய இளங்கன்று; இந்தக்கன்று அந்தக் காவலையெல்லாங் கடந்து தேர்க்குச் சமீபத்தில் எதிரே துள்ளியோடி வந்ததென்றால் இந்திரசால மென்று எண்ண வேண்டுவதாக இருக்கின்றது! ஆதலால், அக்கன்றை அதன் விதியே இப்படிப்பட்ட ஆச்சரிய மரணஞ் செய்வித்ததன்றி உமது புத்திரன் செய்வித்ததல்ல. இந்தக் காரியம் இப்படியிருக்க, புத்திரன் கொன்றானென்று அவனை நோவதும், அவனைப் பெற்றதனால் பழி வந்ததென்று உம்மை நீர் நோவதும், எய்தவன் இருக்க அம்பை நோவது போலவும், அம்பு செய்து கொடுத்த கருமானை நோவது போலவு மல்லவோ இருக்கின்றது? நீர் சகல கலைகளையுங் கற்று, கேள்வியில் மிகுந்து, அரசர்களெல்லாம் புகழ்ந்து கொண்டாடத்தக்க தன்மையையுடையவர். உமக்கு இது விஷயத்தில் நாங்கள் விரித்துச் சொல்ல வேண்டுவதென்ன? இனி துன்பப்படுவதை விட்டு, உயிர்க்கொலை தம்மையறியாது நேரிட்டாலும், பிறர் செய்யக் கண்டாலும், அதற்குத் தக்க சாந்தி செய்துகொள்ள வேண்டு மென்றும்; விதிப்படி வினை வசத்தால் நேரிட்ட இந்தக் கன்றின் கொலைக்கு முன்னிலையாக இருந்த உமது புத்திரனையும், பெரியோர்களைக் கொண்டு இதற்குத்தக்க பிராயச்சித்தத்தை யறிந்து செய்விக்க வேண்டுவதே உமக்கு முறை"—என்றுஞ் சொன்னார்கள்.

Koviloor Digital Library

20. பழிக்குப் பழி வாங்கப் பார்த்திபன் நினைத்தல்

அதுகேட்ட மனுச்சக்கரவர்த்தி யானவர், வியர்வு, துடிப்பு, நகை முதலான கோபக்குறிகள் தோன்ற மந்திரிகளைப் பார்த்து, —"அமைச்சர்களே! உங்கள் நியாயம் நன்றா யிருந்தது; நீங்கள் சொல்லிய நீதி உங்களுக்கே ஒப்பாகு மல்லது தரும தேவதை சம்மதிக்குமோ! கன்றை யிழந்து வருந்துகின்ற இப்பசுவின் சஞ்சலத்தையாவது சாந்தப்படுத்துமோ? இப்படி நீங்கள் சொல்லியது என் முகத்தைக் குறித்தோ, என் புத்திரனுயிருக் கிரங்கியோ, அல்லது உங்கள் சீவனத்தை எண்ணியோ, எதுபற்றியோ?

உலகத்தையாளும் அரசன், — ஆசை பற்றியாவது, வெகுளி பற்றியாவது, தாட்சண்யம் பற்றியாவது, உறவு பற்றியாவது நடு நிலையாக நியாயங் கண்டு சொல்லாமல் மாறுபட்டால், அதை மறுத்து இது விஷயத்தில் அரசன் நம்மைக் கொல்லுவானாயினுங் கொல்லட்டும், அவனுக்கு உறுதி கூறுவதே நமக்குக் கடனென்று நிச்சயித்துக் கொண்டு, நியாயங் கண்டு நடுநிலையாகச் சொல்வது மதி யுடைய மந்திரிகளுக்குத் தருமமாக விருக்க, — நீங்கள் அதை நினையா மல் இப்படிச் சொல்லியது என்ன நினைத்தோ? சந்திர சூரியர் திசை மாறினாலும், — சமுத்திரந் தடைமீறினாலும், — மகமேரு நிலை குலைந்தாலும், — மனங் கலங்காது, விவகாரங்களிற் பழுது வாராது பாதுகாக் கின்ற குணத்தையுடைய நீங்கள், இன்று, நீதி இல்லாத சில குறும் பரசரைக் கூடி, அவ்வரசர், — தூளியென்றால் நிர்த்தூளியென்றும்; — கரும்பு கசப்பென்றால் எட்டிக்காய்போற் கசப்பென்றும்; — தாயைக் கொலை செய்வது தக்கதென்றால் — வேதத்தின் முதற்காண்டத்தில் விதித்திருக்கின்றதென்றும்; — வெள்ளத்திற் கல் மிதக்குமோ வென்றால் — ஆற்றில் அம்மி மிதக்கக் கண்டோமென்றும் — காக்கை வெளுப் பென்றால் — நேற்றைப் பொழுதில் நிறக்கக் கண்டோமென்றும்; — கல் லின்மேல் நெல் முளைக்குமென்றால் — கொத்தாலாயிரங் குலையாலாயிர மென்றும்; கள்ளனைப் பிடிக்கலாமோ வென்றால் — பிடித்தால் பெரும் பாவமல்லவோ வென்றும்; — பொய் ஆயிரமட்டுஞ் சொல்லலாமோ வென்றால் — ஐயா, ஐயாயிரமட்டுஞ் சொல்லலாமென்று விதி யிருக்கிறதென்றும்; — பெண்சாதி யுள்ளவனுக்குப் பிள்ளை

Koviloor Digital Library

கொடுப்பது யாரென்றால் — ஐயா! பெண் கொடுத்தவனே பிள்ளை கொடுக்கவேண்டு மென்றும்; — ஒருவன் மனையாள் மற்றொருவனைக் கூடலாமென்றால் — ஐயா, அடக்கத்தில் ஆயிரம்பேரோடு கூடினாலும் குற்றமில்லை யென்றும்; — இந்தக் கழுவில் இவனை ஏற்றலாமோ வென்றால் — கழுவுக்குத் தக்க கனமில்லை யென்றும்; — என் பிள்ளையும் எச்சரிக்கைக்காரன் பிள்ளையும் ஒருவனை யொருவன் உதாசினமாகத் திட்டினாராம், இதற்கென்ன செய்யலாமென்றால் — உமது சற்புத்திரன் வாய்க்குச் சர்க்கரையிடவேண்டும், மற்றவன் வாய்க்கு மண்ணிடவேண்டும், என்றும் சொல்லுகின்ற துர்மந்திரிகளைப்போல நியாயம் பாராது நயிச்சிய வார்த்தைகளைச் சொன்னீர்கள். இது கால வேற்றுமை யென்றே எண்ணுகிறேன்.

'தன்னைக் கொடுத்தாவது தருமத்தைத் தேடவேண்டும், என்னும் பெரியோர் வார்த்தையைப் பிடிப்பது சற்குண முடையோர்க்குத் தகுதி யென்றும், தாய்தந்தை யிடத்திலாயினுந் தராசுக்கோல் போலச் செப்பமாக நின்று தீர்ப்புக் கொடுக்க வேண்டுவது அரசர்க்கு அவசியம் வேண்டிய சற்கரும மென்றும், எனக்கு அடிக்கடி அறிக்கையிட்ட நீங்கள் இன்று அதோகதியில் தள்ளிவிடத்தக்க அநியாயத் தீர்ப்பை அங்கீகரிக்கப் போகின்றீர்கள். இது உங்களிடத்து நேரிட்ட அவஸ்தை வசமென்றே எண்ணுகிறேன். ஒருவரிடத்துத் தண்டனை விதிக்கும்போது, —எவ்வுயிர்களுந் தன்னுயிர்போ லெண்ணுவதும்,—எந்தப்பொருள் எந்தப்பிரகாரமா யிருந்தாலும் அந்தப் பொருளின் உண்மையை அறிந்து கொள்வதும், — உருவுநோக்காது அறிவை நோக்குவதும், ஊழ்வினை நோக்காது செய்வினை நோக்குவது மாகிய இப்படிப்பட்ட இலக்கணங்களுக்குப் பொருந்த விதிக்க வேண்டு மென்று எனக்கு அறிவித்துவந்த நீங்கள், இன்று, என் புத்திரன் இரக்கமுள்ளவனென்றும், — அவன் அஜாக்கிரதையினால் கொன்றதல்ல வென்றும் — பழவினையாற் பசுங்கன்று மடிந்ததென்றும், — அதனால் அதற்குத் தக்க பிராயச்சித்தஞ் செய்விக்க வேண்டு மென்றும்; வாதியை மாத்திரம் வரவழைத்துக் கொண்டு நடுக்கொள்ளைக்காரன் நியாயந் தீர்த்தானென்பது போற் சொல்லி நின்றீர்கள்.

ஓகோ! அமைச்சர்களே! நீங்கள் அந்நாளிருந்த அமைச்சர்களல்ல; இந்நாளில் என்னைக்கெடுக்க நினைத்துக்கொண்டு எங்கேயிருந்து வந்தவர்களோ வென்று எண்ணுகிறேன். ஐயோ! எனக்கு இப்படிப்பட்ட அநியாயத்தைக் கற்பித்தோ இம்மை மறுமை யின்பங்களை வருவிப்பீர்கள்! என்றும் மீளாத சிவகதியை யடையத் தக்க உறுதி வார்த்தைகளைப் பேசிய நீங்கள், இன்று என்றும் மீளாத அவகதியை அடையத் தக்க இழிவுள்ள வார்த்தைகளைப் பேச எங்கே கற்றுக் கொண்டீர்

Koviloor Digital Library

களோ! ஆ! ஆ! இந்த ஒர வஞ்சனையை உற்றுநினைக்குந் தோறும் நெஞ்சந் திடுக்கிடுகின்றதே! உங்கள் சொற்படி இது காரியத்தில் உடன் பட்டேனானல் தருமமும் தவமும் சலிப்படையுமே! இக்காலத்தில் எனக்கு மேற்பட்டவர்க ளில்லையென்று வழக்கழிவு செய்து வஞ்சித்துப் பேசுவேனானல் **காலம் போகும் வார்த்தை நிற்குமே!** மனு நூலில் சொல்லிய நீதியின்படி நடத்துகின்றபடியால், மனுச்சோழன் மனுச்சோழனென்று நெடுந்தூரம் நீண்ட பெயரைச் சுமந்த நான், இதற்குச் சம்மதித்தேனானல்,—எழுத்தறியாதவன் ஏட்டைச் சுமந்தது போலவும்,—கண்ணில்லாதவன் கண்ணாடியைச் சுமந்தது போலவும்,—வாசனையறியாதவன் மலர் சுமந்தது போலவும்,—வீணாகவே இந்தப் பெயரைக் கொண்டா னென்று ஏழுலகத்தாரும் இகழ்ந்து பேசுவார்களே! இன்றைக்கு என் புத்திரன் செய்த இந்தக் கொடுங் கொலையாகிய பாதகத்துக்குப் பரிகாரஞ் செய்து, இலேசாக விட்டு, நாளை மற்றொருவன் இதைப் பார்க்கினுஞ் சிறிய கொலையொன்று செய்யக் கண்டு, அவனைக் கொலை செய்விப்பேனானல், 'தரும மறியாத இவ்வரசன் தனக்கொன்று பிறர்க்கொன்று செய்கிறான்' என்று பார்த்தவர்களெல்லாம் பழித்துப் பேசுவார்களே! அல்லது 'தன் வீட்டு விளக்கென்று முத்தமிட்டால் சுடாது விடாது' என்பதுபோல என் புத்திரன் செய்த கொலை யென்று புத்திராபேக்ஷையால் அடக்கிக் கொள்ளுவேனானல், அதுபற்றிவரும் **பழி பாவங்கள் என்னை அடையாமலிருக்குமோ?** ஆதலால், இப்பசுவானது அருமையான இளங்கன்றை இழந்து வருந்துகின்றதைத் தவிர்க்க வலியில்லாதவனாகிய 'நானும் இந்தப் பசுவைப்போல நெடுநாளாக வருந்தி அருமையாகப் பெற்ற என் புத்திரனைப் பழிக்குப் பழியாகக் கொன்று வருத்தங் கொள்ளுவதே தகுதி' என்று சொல்லினார்.

21. செய்யத்தகுவ திதுவெனக் கூறல்

அதுகேட்டு மனங்கலங்கிய மந்திரிகளுக்குள் ஒரு மந்திரியானவர், அரசனை வணங்கி, “தருமநெறி தவறாத தலைவனே! சாவதானமாகத் தயவு செய்து என் வார்த்தையைக் கேட்டருள வேண்டும். 'ஆன்மாக்களுக்கு அறிவின் உயர்வு தாழ்வு பற்றியே புண்ணிய பாவங்களும் ஏறிக் குறைந்திருக்கும்' என்னுஞ் சுருதி வாக்கியத்தின்படி, தர்மார்த்த காம மோக்ஷங்களைப் பெறுதற்கு யோக்கியமான அறிவுள்ள மனிதப்பிறவி யெடுத்த ஜீவர்களுக்குள் 'ஆனை மதப்பட்டு அடவி யழித்தது' என்னும் நியாயம்போல,—மதத்தினால்

Koviloor Digital Library

காமக் குரோதாதிகள் காரணமாக ஒருவரை யொருவர் கொலை செய்தாராளுல் அக்கொலைக்கு ஈடாகக் கொன்றவரைக் கொலை செய்விக்கக் கடவ ரென்றும்; — அப்படியன்றிக் 'காக்கை யேறிப் பனம்பழம் விழுந்தது' என்னும் நியாயம்போல் வலிமை பகைமை முதலானவையில்லாமல் விதிவசத்தா லொருவர் இறந்ததற்கு வியாஜமாக முன்னிட்டு, அவர்களை அவ்வாறு இனி முன்னிடவொட்டாம லிருக்கத் தண்டித்து, முன்னிட்டதனுல் வந்த பாவத்துக்குப் பரிகாரஞ் செய்யக் கடவ ரென்றும்; அப்படியன்றி அமுத மூட்டுகின்றபோது அதுவே விஷமாகிக் கொன்ற தென்னும் நியாயம்போல், நல்ல வழியில் நிறுத்தும் பொருட்டு அச்சமுறுத்தித் தண்டிக்கும்போது அபாயம் நேரிட்டிறந்ததற்கு வேறு காரணமாகி யிருந்த தந்தை, குரு, அதிகாரி முதலானோர்களை அனசன முதலான அரிய விரதங்கள் தவங்கள் செய்விக்கக் கடவ ரென்றும்; — மிருகம் பக்ஷி முதலான மற்ற உயிர்களுக்கு மனிதர்களால் கொலை நேரிட்டால் அந்தந்த உயிர்களின் தரத்துக்கும் அவரவர் குணகுணங்களுக்குஞ் செய்கைகளுக்குங் காரணங்களுக்குந் தக்கபடி யறிந்து பிராயச்சித்தஞ் செய்விக்கக் கடவரென்றும்—பொதுவாக அற நூல்களில் விதித்திருக்கப்பட்ட விதியை இன்று கன்றின் கொலைபற்றி நீர் செய்விக்க எண்ணிய அபூர்வமான விதி விலக்குகின்றதே; இது தகுதியைக் கடக்கின்ற குற்றமென்று சொல்வதற்கு இடமுண்டு பண்ணுமே" என்முர்.

22. இளவரசரை இழக்க இறைவன் துணிதல்

அதுகேட்ட அரசன், "மந்திரியே! நீர் பயனைத்தரும் விருக்ஷத்திலுள்ள பழத்தைப் பாராது பிஞ்சைப் பிடித்தது போல் பிடித்தீர். நன்முயிருந்தது உமது வார்த்தை! அறிவின் உயர்வு தாழ்வுகளைப் பற்றிப் புண்ணிய பாவங்கள் ஏறிக்குறையு மென்று பூர்வபாகத்திற் சொல்லிய சுருதி, — உத்தர பாகத்தில், பரமேசுவரன் ஆன்மாக்கள் தோறும் விகற்பமில்லாமல் நிறைந்திருக்கிறபடியால், மாயையின் காரியமாகி வேறுபட்ட அறிவை நோக்காமல், அப்பரமேசுவரனை நோக்கி, எல்லா உயிர்களையும் சமமாக எண்ணி, நடக்கவேண்டும், — என்ற உத்தரபாகத்தின்படி பிறப்பு, குணம், சாதி, தொழில் முதலான விகற்பங்களை நாடாது, உயிர்க் கொலையினிடத்துச் சமானமாகத் தண்டிப்பதே தகுதி; என் புத்திரன் தேரிலேறிக் கொண்டு செல்வச் செருக்கினுல் மறதிபற்றியே இப்பசுவின் கன்றைக்கொன்முன்; ஆதலால், இவன் — 'காக்கை யேறிப் பனம்பழம் விழுந்தது' போல வியாஜமானவனுமல்லன்; — 'அமுதமூட்ட விஷமா

Koviloor Digital Library

னதுபோல்' நன்மை செய்விக்கப்போய்க் கொலைக்குக் காரணமானவனு மல்லன் — 'ஆனை மதப்பட்டு அடவியழித்தது' என்று நீர் சொல்லிய நியாயத்துக்குச் சரியாக இருக்கின்றான். ஆதலால் இவனைக் கொல்வதே முடிவு" என்று சொன்னார்.

23. மகனைக் கொல்ல மந்திரியை ஏவல்

அது கேட்டு மற்றொரு மந்திரியானவர், அரசனைத் தொழுது, "மகாராஜனே! சுருதியில் எல்லா உயிர்களையும் உயர்வு தாழ்வு நோக்காது சமனாக நோக்கவேண்டுமென்று உத்தர பாகத்தில் விதித்திருக்கின்றது. அந்தண ரொழுக்கத்துக் கன்றி அரச ரொழுக்கத்துக்குப் பொருந்தாதே; அது பொருந்துமானால், — பிராமணர் முதலான குலாசாரமும், — பிரமசாரி முதலான ஆசிரம ஆசாரமும்,— பெரியோர், சிறியோர், நல்லவர், தீயவர், என்கிற கிரமப்பாடுகளும் வேறுபட்டு, உலகநிலை தவறி, அரசாட்சி மழுங்கிவிடுமே. இது ஒழுக்கத்தைக் கடக்கின்ற குற்றமென்று சொல்வதற்கு இடங் கொடுக்குமே. ஆதலால் பூர்வ பாகத்தில் விதித்த விதிப்படி அற நூல்களிற் குறித்த நியாயங்களைக்கொண்டு தீர்ப்பிடுவதே நெறியாகும்" — என்று சொன்னார்.

அதுகேட்டு மனுச்சோழர் நகைத்து, "அமைச்சரே! நீர் 'வழிக்குத் துணையாக வருவான்போல் வந்து நடுகாட்டிற் பயங்காட்டிப் பணம் பறிக்கின்றவன் போலப்' பயம் காட்டுகின்றீர். பரமேசுவரன் அவ்வவ்வுயிர் களிடத்திலும் வேறுபடாமல் விளங்குகின்ற படியால்' 'எவ்வுயிர்களையும் பொதுவாக நோக்கவேண்டும்' என்ற உத்தரபாகத்தின் விதியை நான் அனுசரித்துக்கொண்டது உயிர்க் கொலையாகிய பாவ நிவர்த்திக்கு மாத்திரமே யல்லது மற்றொன்றிற்கு மல்ல; இக்கருத்தை அறிந்து கொள்ளாமல் 'கருத்தறியாதவன் சொன்னதே கொள்வான்' என்பதுபோலக் கொண்டு ஒழுக்கங்கடந்த குற்றம் வருமென்று கூறினீர். ஆனால் மற்றவை யெல்லாம் நிற்க, கொலைப்பாதக நிவர்த்திக்கு மாத்திரம் எவ்வுயிர்களையுஞ் சமமாகக் கொள்ளவேண்டும் என்பது எவ்வகையா லென்பீரேல், — உயிர்க ளெல்லாஞ் சிற்சத்தியினுருவ மாகலானும், — எல்லா உயிர்களுக்கும் இறைவனேத னுகரணங்களைக் கொடுத்தலானும். — அவனது சிற்சத்தியாகிய உயிர்களை அவன் கொடுத்தருளிய உடம்பில் நின்றும் நீக்குதல் நினைக்கப்படாத அபராதமாகலானும், — எந்தெந்த உயிர்களும் இயல்பினாலல்லாமல் இம்சையினால் உடம்பை விட்டுப் பிரியும்படி நேரிட்டால் அந்தந்த உயிர்

Koviloor Digital Library

களுக்கும் அவ்வெவ்வுடம்பை விட்டு நீங்கும்போ துண்டாகும் வருத்தம் பெரிதாக இருக்குமாகலானும், — அன்றியும் கொலை செய்யு மிடத்துக் கரும்பையும் எள்ளையும் ஆலையிலுஞ் செக்கிலும் வைத்தாட்டும் போது நெருக்கி லகப்பட்டு அரைபட்டு நசுக்குண்டு சின்னபின்னப் பட்ட அக்கரும்பிலும் எள்ளிலு மிருந்து ரசமும் நெய்யும் எப்படிக் கலங்கி வருமோ அப்படியே உடல் நசுக்குண்டு அரைபட்டுச் சின்னமாக அதிலிருந்தும் நடுங்கி அறிவு கெட்டுத் திகைப்படைந்து கலங்கி வருவது எவ்வுயிர்களுக்கும் பொதுவாகலானும், — தமக்குக் கொலை நேரிடுவதை அறிந்தபோது — உடம்பு நடுங்கியும் — பதைத்தும் — வியர்த்தும் — தடதடத்தும் — தள்ளாடியும் — கால் சோர்ந்தும் — கண் கலங்கியும் — இருளடைந்தும் — காதுகள் கும்மென்று அடைபட்டும் — நாசி துவண்டும் — வாய் நீருலர்ந்தும் — நாக் குழறியும் — வயிறு பகீரென்று திகிலடைந்தும் — மனந் திகைத்துப் பறையடித் தாற்போற் பதபத வென்றடித்துத் துடித்துத் துக்கமுஞ் சோர்வுங்கொண்டு மயங்கவும், பாய்மரச்சுற்றி லகப்பட்ட காக்கை போலவும், — நீர்ச்சுழியி லகப்பட்ட வண்டு போலவும், — சுழல் காற்றில் அகப்பட்ட துரும்பு போலவும், — உயிர் சுழன்று சுழன்று அலையவும் உண்டாகின்ற பயங்கரம் எவ்வுயிர்களுக்கும் இயல்பாகலானும், — இறந்தவுடன் அவ்வுயிர்கள் இறப்பினாற் பட்ட இம்சையுமன்றி உடனே பிறப்பினாலும் வருத்தமடைந்து துக்கப்பட வேண்டுமாகலானும் நாம் வேண்டி ஒருயிரைப் பிறப்பிப்பதற்குச் சுதந்தர மில்லாத படியால், நாம் வேண்டி ஒருயிரை இறப்பிப்பதற்கும் சுதந்தர மில்லை; இறப்பிப்பதற்கும் பிறப்பிப்பதற்கும் இறைவனே சுதந்தர முள்ளவனென் றெண்ணாமல் ஆகாமியத்தாற் கொலைசெய்வதனால் மீளாநரகம் நேருமென் றறிந்து கொள்வீர்.

"ஆதலால், எவ்வுயிர்களிடத்துங் கொலைப் பாதகத்தைச்சமமாகக் கொள்ளவேண்டும். இந்த நியாயத்தின்படி என் புதல்வனைப் பழிக்குப் பழியாகக் கொன்று விடுவதே முடிவு" என்று சொன்னார்.

அது கேட்டு, வேறொரு மந்திரியானவர் மனுச்சோழரை வணங்கி, "அரசனே! உமது பெயரினால் விளங்கும் மனுநூலிற் குடுமியையும் முகரோமத்தையும் க்ஷவரஞ்செய்து, தான் கொன்ற பசுத் தோலைப் போர்த்துப் பசுமந்தையினிடத்தில் வாசஞ்செய்து, கோசலத்தினால் ஸ்நானம் பண்ணி, இந்திரியங்களை யடக்கியிருத்தல், கஞ்சி குடித்தல், அவிசுபண்ணி உண்டல், பட்டினியிருத்தல், பசுமந்தை யினுடன் போதல், பசுக்களுக்கு உபகாரஞ் செய்தல், பசுத்தானஞ் செய்தல், முதலான செய்கைகளைப் பசுக்கொலை செய்தோர்க்குப் பிராயச் சித்தமாகச் செய்விக்க வேண்டுமென்று விதித்திருக் கின்றதே; — அதற்கு

Koviloor Digital Library

மாறாகப் புதல்வனைக் கொலை செய்வீரானால் விதிமாறுட்டமென்னுங் குற்றம் வருவதாகத் தோன்றுகின்றதே" என்று சொன்னார்.

அதுகேட்ட மனுச்சக்கரவர்த்தியானவர், மந்திரி! நீர் சொன்னது பால்வேண்டி அழுகின்ற குழந்தைக்குப் பழத்தை எதிர் வைத்துப் பராக்கு காட்டுவது போலிருக்கின்றது. விதிமாறுட்டமென்னுங் குற்றம் வருவதாகத் தோன்றுகின்றதென்று சொன்னீர். அந்த மனுநூல் அநித்தியமாகிய தேகத்தில் அபிமானமும்,—அசுத்தமாகிய பிரபஞ்ச போகத்தில் ஆசையும், வைத்த கர்மிகளுக்கே அவ்விதி கூறியதல்லது நித்தியமாகிய சிவத்தில் அபிமானமும்,—சுத்தமாகிய சிவபோகத்திலாசையும் வைத்த என் பிதா மூதாதை முதலானவர்களுக்குக் கூறியதல்ல. உயிர்க்கொலை நேரிட்டால் உயிர்விடக்கடவரென்றே குறிப்பினாற் கூறியிருக்கின்றது. என்பிதா மூதாதைக்கு எவ்விதியோ அவ்விதியே எனக்கும் என் புத்திரனுக்கும் வேண்டத்தக்கது. ஆதலால் விதி மாறுட்டமாகாது. இந்த நியாயத்தால் என் புத்திரனை இழந்துவிடுவதே முடிவு" என்று சொன்னார்.

அதுகேட்ட மற்றொரு மந்திரியானவர், மகாராஜனை வணங்கி,—"உலகந் தோன்றியது முதல் இதுபரியந்தம் தெய்வ கடாட்சத்தினாலும் வல்லமையினாலும் நீதியுடன் உலகாண்ட அரசர்கள், தாங்கள் ஆளுங்காலங்களிற் பசு முதலான மிருக வர்க்கங்களுள் ஒவ்வொன்றை அகங்காரத்தால் அடித்துக் கொன்ற அநியாயமானவர்களையும் பிராயச்சித்தஞ் செய்வித்தார்களேயல்லது கொலை செய்வித்தவர்களுண்டென்று கேட்டதில்லை. அப்படியிருக்க உமது புத்திரன் இந்தப் பசுவின் கன்றைக் கொல்ல வேண்டுமென்று கருவு கொண்டு கொன்றவனல்லன். நீரெப்படி யவனைக் கொலைசெய்யும்படி தீர்ப்பிடலாம்? அவ்வாறு தீர்ப்பிட்டால் முன்னோர் செய்கைக்கு முரணானதென்னுங் குற்றமுண்டாகுமே" என்றார்.

அதுகேட்டு மனுச்சோழரானவர், "மந்திரி! நீர் மரபறியாதவன் மணம்பேச வந்ததுபோற் பேசவந்தீர். முன்னோர் செய்கைக்கு முரணானதென்னுங் குற்றம் வருமேயென்றீர். ஆனால், நான் சொல்வதை நன்றாகக் கேளும், பூர்வம் என் முன்னோர்கள் ஆளுங் காலங்களில் இப்படிப்பட்ட கொலை நேர்ந்ததேயில்லை. ஏகதேசங்களில் ஒவ்வொரு கொலைப்பாதகம் நேரிட்டபோது தம்முயிரையுங் கொடுத்துப் பழிக்கு ஈடுகாட்டி யிருக்கின்றார்கள். அவர்கள் நிற்க மற்ற அரசர்களோவென்றால் தாங்கள் ஆளுங்காலங்களில் தேசாசார முதலான கற்பனைகளைப் பற்றி நூதன நூதனமான நியாயங்களை ஏற்படுத்திக் கொண்டு அவைகளின்படி நடத்தினார்கள். அவ்வரசர்கள் என்னோடு சேர்க்கப்பட்டவர்களல்லர். ஆதலால் என் தீர்ப்பின்படி நடத்துவதே துணிவு" என்றார்.

Koviloor Digital Library

அதுகேட்டு மற்ற மந்திரிகளெல்லாம் சேர்ந்து வணங்கி நின்று, "மகாராஜனே! கூறியதே கூறுகின்றார்களென்று கோபஞ் செய்யாமல் யாங்கள் சொல்லும் வார்த்தையைக் கேட்டருள்வீராக. இந்தப் பசுவோ ஐயறிவுள்ள மிருக வர்க்கத்துள் ஒன்று; இது பெற்ற கன்றோ பால் கொடுத்தற்குரிய பசுவாகத் தக்கதன்று. ஏருழுதற்குரிய எருதாகத்தக்க சேங்கன்று. உமது புத்திரனோ ஆறறிவுள்ள ஆண்மக்களிற் சிறந்த நல்லறிவுடையவன். அவனோ அக்கன்றைக் கொல்லவேண்டுமென்று கொன்றவனல்லன். இக்கொலையோ கன்றினுடைய ஊழ்வினையென்று உலகமெல்லாஞ் சொல்லும். ஆதலால், இதற்குத் தக்க பிராயச்சித்தம் செய்விப்பதே முறை" என்று சொன்னார்கள்.

அதுகேட்ட அரசன், "மந்திரிகளே, நீங்கள் உண்மையைக் கண்டறிந்து சொல்லுவதற்குச் சக்தியற்றவர்கள் போல் இலேசாகச் சொல்லுகின்றீர்கள். நல்லது, நான் சொல்லுகின்றதைக் கேளுங்கள். இப்பசுவோ ஐயறிவுள்ள மிருகவர்க்கத்திலொன்றென்று சொன்னீர்கள். நன்றாயிருக்கின்றது உங்கள் நியாயம். உயர்வு தாழ்வுகளை உயிர்களின் அறிவினிடத்து வைத்து, தாழ்ந்த அறிவுள்ள மிருகங்களைக் கொன்றால் பிராயச் சித்தமென்றும், உயர்ந்த அறிவுள்ள மனிதர்களைக் கொன்றால் கொலை செய்வதென்றும் சொல்லுகின்ற உங்கள் வார்த்தையின் படியே இப்பசு மனிதரறிவைப் பார்க்கினும் உயர்ந்த அறிவுள்ளதாக இருக்கின்றது. எவ்வாறெனில், எந்த உலகத்தில் எந்தப்பசு இந்தப் பசுவைப் போலக் கன்றிறந்ததைக் குறித்து ஆற்றப்படாத துக்கத்தோடும், — அதிகாரிகளாலும், பகைவர்களாலும், அயலாராலும், மற்ற உயிர்களாலும், ஒருவர்க்குக் குறை நேரிட்டால் அக்குறையை அரசன், — தனக்குத் தெரிவிப்பதறகு அரண்மனை வாயிலில் ஆராய்ச்சிமணி கட்டுவித்திருக்கிறானென்று சாதாரண மனிதர்களாலும் அறியப்படாத இந்தக் காரியத்தை அறிந்து வந்து, அந்த மணியைக் கொம்பினாலடித்துச் சத்தமெழுப்பிக் கதறிக் கண்ணீர் வடித்துக் கொண்டு நின்றது? இதனை எப்போதாவது கேட்டிருக்கின்றீர்களோ? இல்லையே. இந்தப் பசுமாத்திரம் அப்படியறிந்து செய்ததை இன்றுபார்த்து நின்றீர்கள். ஆதலால், இது முன் தவக்குறையால் பசுவுடம்பெடுத்ததாயினும் மனிதப் பிறப்பில் உயர்குலத்தில் மேலான அறிவோடு பிறந்திருக்கிறதாகவே கொள்ளவேண்டும்.



24. பசு எல்லாப் பிறப்பிலும் உயர்வு

அன்றியும், பசு எல்லாப் பிறப்பிலும் உயர்வு உள்ளதென்றும் — அதன் கொம்பின் அடியிலே பிரம விஷ்ணுக்கள் இருக்கின்றார்க

Koviloor Digital Library

ளென்றும்;—காவிரி முதலான புண்ணிய தீர்த்தங்கள் அந்தக் கொம்பின் நுனியில் இருக்கின்றனவென்றும்;—சிவபெருமான் சிரசிலும், சிவசத்தி நெற்றியிலும் இருக்கின்றார்களென்றும்;—சுப்பிரமணியக் கடவுள் நாசியிலும்,—அசுவினி தேவர் காதுகளிலும்,—சந்திர சூரியர் கண்களிலும்,—வருணன் நாவிலும்,—சரஸ்வதி குரலிலும்—கந்தருவர் மார்பிலும்,—இந்திரன் கழுத்திலும்,—உருத்திரர் முதுகிலும்,—சத்தமாதர்கள் குறியிலும்,—இலக்குமி குதத்திலும்,—கங்கை மூத்திரத்திலும்,—பூமிதேவி வயிற்றிலும்,—யமுனை சாணத்திலும்,—திருப்பாற்கடல் முலையிலும்,—யாகாக்கினி வயிறு முகம் இதயம் என்னும் உருப்புக்களிலும்,—அருந்ததி முதலான கற்புள்ளவர்கள் உடம்பிலும் இருப்பார்களென்றும் சொல்லியிருக்கின்றதே. அன்றியும், பரமசிவன் திருமுடிக்கு அபிஷேகம் செய்ய யோக்கியமான பால் முதலான திரவியங்களைக் கொடுக்கின்றதே;—அன்றியும், திருவெண்ணீற்றின் காரணமான திரவியம் பிறப்பதற்கும் இடமாகவு மிருக்கின்றதே.—அன்றியும், நான்கு வேதமும் கால்களாகவும்,—கருமமும் ஞானமும் கண்களாகவும்,—ஆகமங்களும் சாத்திரங்களும் கொம்புகளாகவும்,—தருமமே உடலாகவும்,—தவமே நடையாகவுங் கொண்டு பரமேசுரனுக்கு வாகனமாக விளங்கிய தரும இடபத்துக்கு இனமாகவும் இருக்கின்றதே!—இப்படிப்பட்ட மேன்மையுள்ள பசுவை ஐயறிவுடைய மிருகவர்க்கத்துள் ஒன்றென்று சொல்லல் தகுமோ? இதன் கன்றோ பால் கொடுத்தற்குரிய பசுவாவ தில்லை, ஏருழுதற்குரிய எருதாகத்தக்க சேங்கன்று என்று சொன்னீர்கள்! தேவர்களெல்லாம் பிறப்பதற்குத் தவஞ் செய்கின்ற மகத்துவமுள்ள இந்தத் திருவாரூரிலே பிறந்த எல்லா உயிர்களும் சிவ கணங்களென்கின்ற சித்தாந்தப்படி இந்த க்ஷேத்திரத்திலே பிறந்த இக்கன்றைச் சிவகணமென்று கொள்ளுவதை விட்டு சேங்கன்றென்று சொல்லல் தகுமோ? புத்திரனோ ஆறறிவுள்ள ஆண்மக்களிற் சிறந்த நல்லறிவுள்ளவனென்றீர்கள். சிவதரிசனஞ் செய்யத் தேரூர்ந்துபோய்ச் செல்வ மறைப் பிறைக் கண் மறைந்து கன்றைக் கொன்றவன் நல்லறிவுள்ளவனென்று சொல்லப்படுவனோ? கன்றிறந்ததை ஊழ்வினையென்று உலகஞ் சொல்லுமென்றீர்கள்; பிராரத்துவ வாதிகளே யல்லாமல் காமக்குரோதாதிகளாற் பாபங்களைச் செய்வதற்கு ஜீவனே ஆகாமிய கர்த்தாவென்று கொள்கிற உத்தம மார்க்கத்தை யுடையோர்கள் ஊழ்வினையென்று சொல்வாரோ? இதற்குத் தக்க பிராயச்சித்தஞ் செய்விப்பதே முறை யென்றீர்கள்; 'மலையை எடுத்துண்டு வயிறு நோகின்றவனுக்குச் சுக்கிடித்துக் கொடுக்கின் அது சொஸ்தப் படுமோ?, அதுபோலக் கொலைப்பாதகஞ் செய்தோர்க்குப் பிராயச்சித்தஞ் செய்யின் அப்பாபம் நிவாரணமாமோ? அவ்வாறு செய்வோனானால் மீளா நர

Koviloor Digital Library

கத்தில என் புத்திரனை வீழ்த்துவதுமன்றி, யானும் விழுந்து வருந்துவேன்; இவ்வுலகத்திலும் என்றும் மீளாத பழிக்கு ஆளாகச் சமைவேன்: அன்றியும், எண்ணிறந்த பெருமை பெற்ற இரவி குலத்திற்கும் என்னை அடுத்திருக்கின்ற உங்களுக்கும் ஒரிழுக்கு வார்த்தையு முண்டாக்கினவனுவேன். ஆதலால் இனி என் சொல்லுக்கிரண்டில்லை; இந்தப் பசுவின் கன்றைக் கொன்ற பழிக்கு ஈடாக என் புத்திரனைக் கொலை செய்வதே நிச்சயமாகிய தீர்ப்பு" என்று சொல்லிவிட்டுப் பின்பு மந்திரிகளுக்குள் கலாவல்லபனென்கிற மந்திரியைப் பார்த்து, "மந்திரி! என் புத்திரனை அழைத்துப் போய் அந்தக் கன்று இறந்து கிடக்கின்ற வீதியிற் கிடத்தி, நீ தேரிலேறிக்கொண்டு அவனுடம்பின்மேல் தேர்ச் சக்கரம் மேறும்படிச் செய்து கொலை செய்து வருவாய்" என்று கட்டளையிட்டார்.

அப்போது மற்ற மந்திரிகளெல்லாம் கை நெரித்துக் கொண்டு கண்களிலே நீரரும்ப மனங்கலங்கிப் பிரமை கொண்டு நின்றார்கள்.

25. மந்திரி தானே மாய்த்துக் கொளல்

கலாவல்லபனென்கிற மந்திரியானவன் 'கடுந்தவம் புரிந்து பெற்ற கவுத்துவ மணியைக் கடலிலெறிந்து விட்டுவா,' வென்றும்,—'பலநாள் வருந்தி வளர்த்த பஞ்சவர்ணக் கிளியைப் பருந்துக்கிரை யிட்டுவா' வென்றும்,—'செய்தற்கரிய தவஞ்செய்து பெற்ற தேவாமுதத்தைச் சேற்றிற் கழித்துவா' வென்றுஞ்,—சொல்லக் கேட்டவன் போல் திடுக்கிட்டு உணர் வழிந்தும்,—திகைப் பூண்டு மிதித்தவன்போல் மயங்கி நின்றும்,—சற்று உணர்வு தோன்ற, அது விஷயத்தில் மனமில்லாதவனு யிருந்தும், அரசன் ஆணையைத் தடுப்பதற்கு அஞ்சி வணங்கி விடைபெற்றுக் கொண்டு, அவ்விடம் விட்டுப் புறப்பட்டுத் தளர்ந்த நடையோடு முகங் கருகி, நெடுமூச்சு விட்டுக்கொண்டு—"சிவசிவா! சம்போ! சம்போ! இந்தப் பாதகஞ் செய்யத் தானே நான் மந்திரியாக ஏற்பட்டேன்! கொலையென்று சொல்லுகின்றோர்களைப் பார்த்தாலும் பயங் கொள்ளுகின்ற எனக்குத்தானே இப்படிப்பட்ட விதிவரவேண்டும்! இந்தக் காரியத்தைச் செய்யாது விடுவோமென்றால் அரசன் கட்டளையைக் கடந்தானென்னுங் குற்றம் நேரிடுமே" யென்றும், "அல்லது செய்வோமென்றால் நமது உயிர்போற் சிறந்த வீதிவிடங்கன் விஷயத்தில் எப்படிக் கொலை செய்யத் துணிவு உண்டாகும்" என்றும், எண்ணியெண்ணி, "என் மனம் 'இரு தலைக்கொள்ளிக்குள் அகப்பட்ட

Koviloor Digital Library

எறும்புபோல்' திகைக்கின்றதே! இதற்கு என்ன செய்வேன், என்ன செய்வேன்" என்று வருந்தி வருந்தி, ஒருகால் முன் வைப்பதும் மற்றொருகால் பின் வைப்பதுமாகி ஊசலாடுகின்றவனைப் போல அலைந்தும், "வேந்தன் விஷமுண்ணெனக் கட்டளை யிடினும் உண்ணவேண்டிய உரிமை நமக்கிருக்கிறபடியால் போய்த் தொலைப்போர்" என்று சற்றே நடந்து "எண்ணுதற்கும் யோக்கியமல்லாத இப்பாதகத்தை எப்படிச் செய்வோம்" என்று சற்றே நின்று, நடைத்தூக்கங் கொண்டவன் போல் தெளிந்தும், மயங்கியும், பித்தம் பிடித்தவன்போல் பிதற்றியும் கண்ணீர் சொரிந்து கலங்கினவனாகிப் பின்பு தெளிந்து "அரசன் நமக்கும் தந்தை யாதலால் வீதிவிடங்கன் செய்த குற்றத்தை நாமேற்றுக்கொண்டு நம்முயிரைக் கொடுத்து விடுவோம்" என்று துணிவுகொண்டு, அக்கன்று இறந்துகிடக்கிற வீதியினிடத்து அணை கடந்த வெள்ளம்போல அதிவேகமாக வந்துநின்று, தன்னரையிலிருந்த உடைவாளை உரையிலிருந்துருவி எடுத்துக்கொண்டு, தனது கழுத்தில் வைத்து, ஊட்டியை அரிந்துகொண்டு உயிரிழந்து விழுந்தான். அதுகண்டு சிலஒற்றர்கள் அதி சீக்கிரமாய்ப் போய் மனுச்சோழரிடத்தில்,—"ஆண்டவரே! தேவரீருக்குக் கண்போல் விளங்கிய கலாவல்லப னென்னும் மந்திரியானவர் சேங்கன்றிறந்து கிடக்கின்ற தெருவிற்போய் அரையிலிருந்த உடைவாளைக்கொண்டு தமது கழுத்தை அரிந்துகொண் டிறந்துவிட்டார்"— என்று விண்ணப்பஞ் செய்தார்கள்.

26. மன்னனுமிறக்க மனந் துணிதல்

அதுகேட்ட அரசன்,—அளிந்த புண்ணில் அம்பு பட்டது போல் துடிதுடித்து, மிகவும் மனங்கலங்கி—"ஓகோ இதென்ன பாவம்! இதென்ன பாவம்!! ஐயோ! கலாவல்லப னென்கிற மந்திரியானவன் நாலிட்ட ஏவலைச் செய்வதற்குச் சம்மதித்தவன்போல் சென்றது, நம் அரசனுக்குக் கன்றைப்பற்றி வந்த பழி மாத்திரம் போதாது, நாமும் பழிசுமத்துவோமென நினைத்துத் தானோ! எனக்கு நேரிட்ட இடரை யறிந்தும் 'எரியுங் கொள்ளியை யேறத் தள்ளுவது போலவும்,' 'மீண்டெரியும் நெருப்பில் நெய்விடுவதுபோலவும்' இவ்விடருக்குமே லிடருண்டாகும்படி செய்தானே! கப்பல் உடைந்து கலங்கும்போது தெப்பமும் உடைந்ததுபோல், கன்றின் பழிக்குக் கலங்கும்போது மந்திரி பழியும் வளைத்துக் கொண்டதே! எனக்கு வந்த துன்பமெல்லாந் தனக்கு வந்ததாக எண்ணி, என்னை இரவும், பகலும் காத்திருந்த மதியுள்ள மந்திரியை இனி எக்காலத்திற் காண்

Koviloor Digital Library

பேன்! இதைக் கேட்டவர்க ளெல்லாம் இதென்ன கொடுமையோ! 'கொள்ளை கொண்டவனைவிட்டு குறுக்கே வந்தவன்மேற் குற்றம் நாட்டியதுபோலவும்,' 'கொண்ட மனையாளிருக்கக் கூலிவாங்க வந்தவளைத் தாலிவாங்கச் சொன்னது போலவும்,' பசுங் கன்றைக் கொன்ற தன் புதல்வனிருக்க, அவனை விட்டு அப்பழியை அமைச்சன்மேல் வைத்து அவனுயிரை வாங்கச்சொன்ன இவ்வரசன் அநியாயக்காரனென்று இகழ்ச்சி செய்வார்களே! 'அறிவில்லாதவன் செய்த காரியம் பயன் படாதது மாத்திரமோ! பழியும் பாவமுங் கொடுக்கும்' என்ற பெரியோர் வார்த்தைக்கு இலக்காயினேன்! ஐயோ!' நான் என்ன காரியஞ் செய்தேன்! திருவாரூர்ப் பூங்கோயிலினிடத் தெழுந்தருளியதெய்வமே! அடுத்தவர்களுக்கு அருள்செய்கின்ற ஆண்டவனே! உன்னை நம்பியிருக்கின்ற அடியேனை இப்படியுஞ் சோதனை செய்யலாமோ! உன் திருவடிகளுக்கு ஆளாயிருக்கின்ற அடியேனை இப்படிப்பட்ட பழிக்கும் ஆளாக்கலாமோ!" என்று பலவிதமாகப் பரிதவித்துக்கொண்டு, "பின்னே துக்கந் தருவதான காரியங்களை முன்னே அறிந்து அக்காரியத்தைச் செய்யாது விடவேண்டும்; ஆலோசித்தறியாது செய்துவிட்டால் அதுபற்றித் துயரப்படாமல் மேல் செய்யத்தக்க காரியங்களை ஆலசியப்படுத்தாமல் செய்யவேண்டுமாதலால், வருவது தெரியாது மந்திரியை அனுப்பிய நாம் துக்கப்படுவதிற் பயனென்ன? இனி நாமே போய்ப் புத்திரனைத் தேர்க்காலி லூர்ந்து, மந்திரி பழிக்கு நம்முயிரைக் கொடுத்து விடுவோம்,' என்றெண்ணி, அரண்மனைக்குப் புறத்தில் வந்து புத்திரனை அழைத்து வரும்படி காவற்காரர்களுக்குக் கட்டளையிட்டார்.

---

26. இளங்கோ கொலைக்களம் புகுதல்

அவர்கள் கண்ணீர் வடிந்த முகத்துடன் "ஐயோ! மனுநீதி தவறாத மன்னனுக்கும் இப்படிப்பட்ட ஆபத்து நேரிடலாமா! நமது இளவரசனாகிய வீதிவிடங்கனிடத்திற் சென்று, 'ஐயா! உம்மை அரசன் அழைத்துவரச் சொன்னார் என்று எவ்வாறு சொல்வோம்! என்ன செய்வோம்!' என்று துயர் கொண்டு வீதிவிடங்கனிருக்கும் அரண்மனைக்குச் சென்றார்கள்.

அதற்கு முன்னதாகவே, பெரியோர்களிடத்துப் பிராயச்சித்த விதியைக் கேட்கப்போன வீதிவிடங்கன், தமது பிதாவினிடத்துப் பசுவானது வந்து முறையிட்ட சமாசாரத்தை ஒற்றர்களாலே கேள்விப்பட்டு, " இனி நமக்கென்ன பிராயச் சித்த மிருக்கின்றது! நமது பிதாவானவர் செய்கிற தீர்ப்பின்படி நடந்துகொள்வோம்! என்று

Koviloor Digital Library

தேகம் மெலிந்து, மேனி வேறுபட்டு, மனந்தளர்ந்து, முகஞ்சோர்ந்து தமது அரண்மனையினிடத்து வந்திருந்தான். அப்போது அரசன் அனுப்பிய காவற்காரர்கள், அவ்வீதிவிடங்கனைக் கண்டு, கைகுவித்து எதிர்நின்றார்கள். அவர்களைப் பார்த்து, "நீங்கள் என்ன காரியமாக என்னிடத்தில் வந்தீர்கள்?" என்று கேட்க, அவர்கள் ஒன்றுஞ் சொல்லாது ஊமைகளைப்போல விம்மி விம்மி அழுது கண்ணீர் வடித்துக் கொண்டு நின்றார்கள். அதுகண்டு வீதிவிடங்கன், 'இவர்கள் ஏதோ ஒரு துன்பமான சமாசாரத்தைச் சொல்ல வந்தவர்கள், நாவெழாமல் நடுங்குகின்றார்கள்' என்று அறிந்து, "ஓ! காவற்காரர்களே! வந்த காரியம் இன்னதென்று சொல்லாமல் துக்கப்படுவதில் பலனில்லை; அந்தக் காரியம் எனக்குத் தெரியும், ஆயினும் துயரப்படாமல் சொல்லுங்கள்" என்றான். அதுகேட்டு, "ஐயா எப்படிச் சொல்லுவோம்! என்ன செய்வோம்! எங்கே போவோம்! எல்லார் குடியையுங் கெடுக்க எங்கே இருந்தோ தாட்சண்யமில்லாத தலையீற்றுப் பசுவானது ஒன்று வந்து ஆராய்ச்சி மணியை அசைத்து இனி உலகத்தை ஆள்வாரில்லாமல் அழிந்து போகும்படி உம்மை அரசன் அழைத்துவரச் செய்வித்தது" என்று சொன்னார்கள். அதுகேட்டு, வீதிவிடங்கனைச் சூழ்ந்திருந்த உறவினர் சினேகர் முதலானோ ரெல்லாம் "இப்படிப்பட்ட அவதி நேரிடத்தானோ தியாகேசர் கோவிலுக்குப் போகத் தொடங்கியது! எள்ளளவும் இப்படி வருமென்று அறியோமே! இதற்கு என் செய்வோம்" என்று அழுது சோர்ந்தார்கள். அந்தப் பிரகாரமே அரண்மனையிலுள்ள மற்றவர்களும் புலம்பி ஆவலித்தார்கள்.

இந்த அழுகையொலியை வீதிவிடங்கன் தாயானவள் கேட்டு, இஃதென்ன காரணமென்று விசாரித்து, இன்ன காரணமென்று அறிந்து கொழுகொம்பற்ற கொடியைப்போல் கீழே விழுந்து மூர்ச்சை யடைந்து, சற்றே அறிவு வரத் தெளிந்து "பாவியாகிய விதி என் பாக்கியத்தை அழித்ததே! தீமையாகிய வினைப்பயன் என் செல்வத்தை அழித்ததே; வஞ்சகமாகிய ஊழ் என் வாழ்வை அழித்ததே! பல நாள் வருந்திப் பெற்ற என் வயிறு பற்றுகின்றதே! பகீரென்று பதைக்கின்றதே! ஐயோ, என் புத்திரன் செய்த குற்றத்திற்கு என்னைக் கொன்றாலாகாதோ"—என்று பலவிதமாகச் சொல்லிக் கைநெரித்துக் கொண்டு கண்ணீர்விட்டுக் கொண்டு, வயிறு பிசைந்து கொண்டு, மாரடித்துக் கொண்டு, வாயலறைந்து கொண்டு, மனம் பதைத்துக் கொண்டு, மண்ணில் புரண்டுகொண்டு கோவென்று அழுதழுது புலம்பினாள்.

அப்போது வீதிவிடங்கனென்கிற இராஜபுத்திரன், அழுகின்ற தாய் முதலானவர்களைப் பார்த்து,—"வீணாக நீங்கள் அழுது புலம்பு

Koviloor Digital Library

இன்றதனால் என்ன பிரயோஜனம்! பிரமதேவன் முதலான கர்த்தர்களுக்கானாலும் விதியைக் கடக்கக் கூடுமோ! எலும்பு நரம்பு தோல் முதலான அசுத்தங்களாற் கட்டிய இந்தச் சிறுவீட்டை நிலையென்று நம்பப்படுமோ? என்று பிறந்தார்களோ அன்றே இறந்தார்களென்று நினைக்க வேண்டும். ஆறிலுஞ் சாவு நூறிலும் சாவென்றும், நிலத்தில் முளைத்த பூண்டுகள் நிலத்திலே மடியுமென்றும், சாமானியரான அசேதனர்களும் சொல்லிக்கொள்ளுகின்றார்களே; அறிவுள்ள உங்களுக்குத் தெரியாமற் போனதென்ன? இதுபற்றி எவ்வளவுந் துயரப்பட வேண்டுவதில்லை" — என்று பலவிதமான உறுதி வார்த்தைகள் கூறி, அவ்விடத்திலிருந்து புறப்பட்டு மனதில் நாணமும் நடுக்கமும் உண்டாகத் தந்தையாரிடத்திற்குப் போய்த் தொழுது வணங்கித் தூரத்திலே நின்றான். அப்படி நின்ற புதல்வனை மனுச்சக்கரவர்த்தியானவர் நேரே பாராதவராய் வேறொருவன் முகத்தைப்பார்த்து, "இவன் இளங்கன்றை எவ்வாறு கொன்றானோ, அவ்வாறு கொலை செய்யப்படுதற்குத் தக்க குற்றவாளி யாயினான்" என்றார். அப்பொழுது புத்திரன், "பசுங்கன்றைக் கொன்ற பாவியாகிய நான் அப்போதே உயிர் விட்டுப் பழிக்குப்பழி சரிக்கட்டுவேன். ஆனால், தேவரீர் கட்டளை எப்படி நடப்பிக்கிறதோ, அப்படியே நடப்போமென்று அக்கட்டளையை எதிர்பார்த்திருந்தேன்" என்று விண்ணப்பம் பண்ணிக்கொண்டான். உடனே அரசன் கொலை வீரர்களை அழைப்பித்து, "இந்தக் குற்றவாளியை ஏற்பாட்டின்படி கடுங்காவல் செய்து கன்று இறந்து கிடக்கின்ற வீதியிற் கொண்டுபோய்க் கிடத்துங்கள்" என்று கட்டளையிட்டார். அந்தக் கட்டளைக்கு அஞ்சி, அவ்வீரர்கள் உருவிய கத்தியோடு சூழ்ந்து, நடுவே இராஜபுத்திரனைக் காவல் செய்து நடத்திக்கொண்டு போக, மனுச்சக்கரவர்த்தியும் மலைபோல் உயர்ந்த ஒரு தேரிலேறிக்கொண்டு பின்னே நடந்தார்.

அதுகண்ட அந்நகரத்திலுள்ள ஜனங்களெல்லாம் "இந்த இராஜகுமாரனுக்கு ஐசுவரியமும் அழகும் அறிவும் குறைவில்லாது கொடுத்த தெய்வம் இடையிலே இந்தப் பழிக்கு ஆளாகச்செய்து, 'நல்ல விதி நடுவே இருக்கக் கோணிய விதி குறுக்கே வந்த' தென்று சொல்வதற்குச் சரியாக்கியதே! இன்பத்தை அனுபவிக்கின்ற இளமைப் பருவத்தில் எடுக்கப்படாத பழிவந்து சூழ்ந்து, 'சோறுண்ணும்போது தொண்டை விக்கிக்கொண்டதென்பதுபோல்' துன்பத்தை உண்டுபண்ணியதே! — வெண்ணெய் திரண்டு வரும்போது தாழி உடைந்ததென்பதுபோலக் கலியாணக்கோலங் கொள்வதற்கு இசைந்து வரும் பருவத்தில் இச்செல்வத் திருமேனிக்குத் தீங்கு உண்டாகும்படி நேரிட்டதே! — சிவதரிசனத்துக்குப் போனவிடத்தில் சேங்கன்றின் பழி

Koviloor Digital Library

வந்து 'கிணறு வெட்டப் போனவிடத்தில் பூதம் புறப்பட்டதுபோல்' தோன்றியதே!—'கடைகொள்ளப் போகும்போது கள்ளனெதிர்ப்பட்டதுபோல்' அருள்பெற்று வரப்போகும்போது இந்தப் புத்திரனுக்கு அந்தக் கன்றானது எமனைப்போல எங்கேயிருந்து எதிர்ப்பட்டதோ!—இந்தக் குமாரனைப்பற்றி நமக்கெல்லா முண்டாகிய இரக்கம் பழிவாங்கவந்த பசுவுக்கு முண்டாயிருக்குமானால், ஆராய்ச்சிமணியை அசைத்து முறையிட்டுக்கொள்ளாதே! ஐயோ! இந்தப் பசுவானது சூரிய வமிசத்தை அழிக்கத் துசங் கட்டிக்கொண்டதே!—இனி நம்மரசனுக்குப் பிற்காலத்தில் நீதியுடன் அரசாட்சி செய்யத்தக்க அரசனைப்பெறாமல் எல்லா உயிர்களும் நிலைதடுமாறி நின்று மயங்குமே!—இந்த இராஜபுத்திரன் முன்பு சேனை சூழத் தேரிலேறிவந்த மங்கலமாகிய கோலத்தைக்கண்டு மகிழ்ச்சியடைந்த நாம்—இப்போது இப்புத்திரன் காவல் சூழக் காலால் நடந்து வருகின்ற பரிதாபமாகிய கோலத்தைப் பார்ப்பதற்கு என்ன பாவஞ் செய்தோமோ!—இந்தப் புத்திரனுயிர்க்கு ஈடாக நம்முயிரை யெல்லாங் கொடுத்துவிடுவோமென்றாலும் அரசன் சம்மதிக்க மாட்டாரே!—இந்தப் புத்திரன் உயிரிழந்தால் பின்பு அரசனும் உயிரிழப்பார் பின்பு நாமிருந்து என்ன செய்வது!—இதற்கு முன் இறந்துவிடுவதே சுகமாக விருக்கின்றதே! ஆ! ஆ! நம்மரசனைப்போல இப்படிப்பட்ட அருமையான நீதியோடு அரசு செய்கிறவர்கள் முன்னுமில்லை, பின்னுமில்லையே.—தியாகராஜப் பெருமான் நமது இராஜனுடைய மனதைச் சோதிக்கும் படியாகவே இவ்விதஞ் செய்வித்ததாகத் தோன்றுகின்றதே!—தருமதேவதை நமது அரசனது உண்மையாகிய நீதியின் தன்மையைச் சோதிக்கும்படி இவ்விதஞ் செய்வித்ததாகத் தோன்றுகின்றதே!"—என்று பலவிதமாக அவரவர்களுந் தங்கள் தங்களுக்கு நேரிட்ட ஆபத்தென்று நினைத்துப் புலம்பியும் அதிசயித்தும் நின்றார்கள்.

ஆகாயத்தினிடமாக இவ்வதிசயத்தைப் பார்க்கும்படி வந்திருக்கின்ற தேவர்களெல்லாம்,—"இந்த மனுச்சக்கரவர்த்தியானவன் செய்யத் துணிந்த காரியம் இவர்க்கு முன்னிருந்த அரசர்களுக்குச் சொல்லத்தான் கூடுமோ? அல்லது நினைக்கத்தான் கூடுமோ? இம்மனிதர்களைப் பார்க்கிலும் உயர் பிறப்பினராகிய நம்மவர்களுக்குத்தான் செய்யக்கூடுமோ? இவ்வரசன் நீதியிலும் மனோதிடத்திலும் சிறந்தவனாக இருக்கின்றான். இவனுக்குச் சிவகடாக்ஷங் கைகூடுமல்லது மற்றவர்களுக்குக் கூடுமோ? ஆயினும், இன்னும் நடக்கப்போகிற அற்புதங்களையெல்லாம் பார்த்தறிவோம்"—என்று புகழ்ந்து சொல்லி நின்றார்கள்.

Koviloor Digital Library

27. வீதிவிடங்கன் வீதியிற் கிடத்தல்

இந்தப் பிரகாரமாகச் சொல்லிக்கொண்டு நிற்க, மனுச்சக்கரவர்த்தியானவர் அந்தப் பசுங்கன்று இறந்து கிடக்கின்ற வீதியிற்போய், தமது புத்திரனைக் காவல் செய்து, முன்னே நடத்திவந்த கொலை வீரர்களைப் பார்த்து,—"இனிக் காலதாமதம் பண்ணுமல் இந்தப் பசுங்கன்றை எடுத்து அப்புறத்தே வைத்து, அவ்விடத்தில் இவ் வீதிவிடங்கனைக் கிடத்தி வையுங்கள்" என்று கட்டளையிட்டார். அதுகேட்டுக் கொலைவீரர்கள் மனம் பதைத்து மதி மயங்கி நின்ருர்கள். அப்பொழுது தந்தையாகிய மனுச்சக்கரவர்த்தியின் கட்டளையைக் கேட்டு மயங்கி நிற்கின்ற கொலைவீரர்களை வீதிவிடங்கன் பார்த்து,—"நீங்களேன் மயங்கி வருந்துகின்றீர்கள்? அந்தக் கட்டளையின்படி நானே செய்துகொள்ளுகிறேன்"—என்று சொல்லித் தியாகராஜப்பெருமான் சந்நிதிக் கெதிராகத் திரும்பி இரண்டு கைகளையுங் குவித்துச் சிரசின் பேரில் வைத்துக் கொண்டு,—"சிறு பிள்ளைக்குத் திருப்பாற்கடலை அழைத்துக் கொடுத்த தியாகராஜப் பெருமானே! அகண்ட பரிபூரண சச்சிதானந்த சுயம்பிரகாச சாட்சாத்கார சிதாகாச சொரூப சின்மயனுகிய சிவசங்கரனே! அடியேன் பசுங்கன்றைக் கொன்ற பாதகனுயினேன். அதுவும் போதாமல், ஐயோ! எனக்கு நல்வழியைக் கற்பித்துக் கண்போல் விளங்கிய நின்னடிமையிற் சிறந்தவனுகிய மதியுள்ள கலாவல்லபனென்கிற மந்திரியையும் இறப்பிப்பதற்குக் காரணமாகியு மிருந்தேன்! இப்படிப் பட்ட என் போல் பாவிகளெங்கே யுண்டு? என் பிதா தண்டிக்கப்போகிற தண்டனை என் பாதகத்துக்குத் தக்க தண்டனையு மல்லவே! என்ன செய்வேன்! பாவியாயினும் எனக்கு வேறொரு கதியுமில்லாதபடியால், முன் தாயைக் கூடித் தந்தையைக் கொலை செய்தவனது மாபாதகத்தை மன்னித்து அனுக்கிரகஞ் செய்ததுபோல்,—அடியேனுக்கும் அனுக்கிரகஞ் செய்யவேண்டும்; என் பிதாவுக்கும் எனக்கும் உரித்தாகியிருந்த மற்றவர்களுக்கும் என்னைப்பற்றிவந்த பழிபாவங்களை நீக்கியருளவேண்டும்; என்பொருட்டு இறந்த மந்திரியை எழுப்பிக் கொடுத்தருளவேண்டும்;—இதோ இந்தப் புலாலுடம்பைப் போட்டுவிட்டு வருகிறேன்,—என்னையுந் திருவடி நீழலிற் சேர்த்துக்கொள்ள வேண்டும்,—இந்தப் பிறப்பிலே எனக்குத் திருவடி கிடையாதானல் வருபிறப்பிலாயினும் கிடைக்கத்தக்க நல்லறிவும் பேரன்பு முள்ளவனுகப் பிறப்பிக்க வேண்டும்"—என்று சொல்லி விண்ணப்பஞ் செய்துகொண்டு திரும்பி நின்று, மாதா, பிதா, குரு, முதலானவர்களுக்கும் மனத்தினுல் வந்தனஞ் செய்து, "இம் மனுச்சோழருடைய

Koviloor Digital Library

செங்கோல் மாருது நிலைபெற்றிருக்க வேண்டும்" என்று இஷ்ட தெய்வத்தைப் பிரார்த்தித்துக் கொண்டு பஞ்சாக்ஷரத்தை உச்சரித்துக் கொண்டு விழுந்து வடக்கே தலையும், தெற்கே காலும் வைத்து, இரண்டு கண்களையும் மூடிக்கொண்டு சிந்தையைச் சிவபெருமான் திருவடித் தியானத்தில் வைத்துக் கொண்டு, யோகநித்திரை செய்பவன்போல் உடம்பைக் கிடத்திஞன்.

28. மகன்மேல் தேரை மன்னன் செலுத்தல்

அப்போது மனுச்சக்கரவர்த்தியானவர் சிவத்தியானஞ் செய்து கொண்டு, தியாகேசர் சந்நிதியைநோக்கி—"அடியேனை ஆட்கொண்ட ஆண்டவனே! இவ் வீதிவிடங்கனென்பவன் பசுங்கன்றைக் கொலை செய்தானென்பது பிரத்தியக்ஷமாக உண்மையென்று வெளிப் பட்ட படியால், இந்தக் குற்றவாளியின் கொலைப்பாதகந் தீரத்தக்க தண்டனை செய்வதற்குச் சக்தியில்லாத அடியேன், தேவரீர் திருவுளப் பாங்கின்படி, மேலோர் ஏற்படுத்திய தரும நூல்களில் கொலைசெய் தவனைக் கொலை செய்யக் கடவரென்று விதித்திருக்கின்ற விதியின்படி, விதிமாருட்ட முதலான குற்றங்களுக்குச் சிறிது மிடங்கொடாமல், இவனைக் கொலை செய்யும்படி திரிகரண சுத்தியாகத் தீர்ப்பிட்டுக் கொண்டு, இதோ தேர்க்காலிலூர்ந்து கொலைசெய்யத் தொடங்கு கின்றேன். இத்தீர்ப்பினிடத்துத் தேவரீர் திருவடி சாக்ஷியாக என் மனமறிந்து யாதொரு பிசகும் நேரிட்டதில்லை. என்னையு மறியாது ஏதாகிலுங் குறை நேரிட்டிருக்குமாஞல் அதைத் தேவரீர் மன்னித்துக் கொள்ளவேண்டும். இந்தக் குற்றவாளியின் பாபாத்மாவை அப்பாபத் தினின்று நீங்கும் வண்ணந் தக்க தண்டனை செய்வித்தருளி, மறு பிறப்பிலாயினும் கடைத்தேறும் வழியைக் கடாக்ஷிக்க வேண்டும்" என்று விண்ணப்பஞ் செய்து கொண்டு, தேரிற் கட்டிய குதிரைகளை விழுந்து கிடக்கின்ற வீதிவிடங்கன் கழுத்தடியிற் சக்கர மழுந்தும்படி நேராக முடுக்கித் தேரை நடத்திஞர். அப்போது தேர்ச் சக்கரமானது வீதிவிடங்கன்மேல் அழுந்திக் கறகற வென்று இழுத்துக் கொண்டு அதி வேகமாகச்செல்ல உடல் குழம்பிச் சின்ன பின்னப்பட்டு, நசுக் குண்டு, கையாற்பிசைந்து, ரசம் பிழிந்த மாங்கனியின் கோதுபோல உடல்வேறு உயிர்வேருக இறந்தான்.

அதுகண்ட தேவர்களெல்லாம், "அருமையாகப் பெற்ற புத் திரனை நோக்காமல் புண்ணியத்தை நோக்கிய கண்ணியவானே! உனக் குச் சுபகர முண்டாவதாக"—என்று வாழ்த்திக் கற்பகப் பூமாரி பொழிந்தார்கள். தேவ துந்துமிகள் அதிர்ந்தன. அந்நகரத்தாரெல்

Koviloor Digital Library

லாம்,— இப்படிப்பட்ட நீதி செலுத்துகின்ற மகாராஜனை என்ன தவஞ் செய்து பெற்றுக் கொண்டோம்"—என்றும்,—"ஐயோ! இனி எக்காலத்தில் வீதிவிடங்கனைக் காண்போம்"—என்றும், இன்பக் கண்ணீரும் துன்பக்கண்ணீரும் விட்டுக்கொண்டு நின்றார்கள். உடனே மனுச்சக்கரவர்த்தி யானவர் மந்திரியின் பழிக்காகத் தம் உயிரைக் கொடுக்கத் துணிந்துதேரிலிருந்து கீழே யிழிந்தார்.

29. இறைவன் வெளிப்படுதல்

அப்போது, ஸ்ரீ கண்டர்,— அனந்தேசர்,— காலச் செந்தியுருத்திரர்,— துவாதச ருத்திரர்,— ஏகாதச ருத்திரர்,— புத்தியட்டகர், கூர்மாண்டர்,— ஆடகர்,— சத வுருத்திரர்,— அஷ்ட மூர்த்திகள்,— நீலலோகிதர்,— கங்காள கபாலர்,— அசுவாரோகணர்,— அஷ்டபயிரவர்,— வீரபத்திரர்,— சக்கரதரர்,—நான்முகர், முதலான **பதமூர்த்திகளும்**;— கபாலிகன், — அசன்,— புதன்,— வச்சிர தேகன்,— பிநாகி,— கிருதசாதிபன். — உருத்திரன்,— பிங்கலன்,— சாந்தன்,— க்ஷயாந்தகன்,— பலவான்,— அதிபலவான்,— பாசாத்தன்,— மகாபலவான்,— சுவேதன்,— ஜயபத்திரன்,— தீர்க்கபாகு,— ஜலாந்தகன்,— மேகவாகனன்,— சௌமியகேசன்,— சடாதரன்,— லக்ஷ்மீதரன், — ரத்நந்திரன்,— ஸ்ரீ தரன்,— பிரசாதன்,— பிரகாசன்,— வித்தியாதிபன்,— ஈசன்,— சர்வஞ்ஞன், — பலிப்பிரியன்,— சம்பு,— விபு,— கணத்தியக்ஷன், கிரியக்ஷன்,— திரிலோசனன் முதலான **பதத்தலைவர்களும்**;— இந்திரர்,— சந்திரர்,— சூரியர் முதலான **தேவர்களும்**;— வசிட்டர்,— அகத்தியர்,— புலத்தியர்,— பராசரர்,— வியாசர் முதலான **முனிவர்களும்**;— கண்ணுவர்,— கருக்கர்,— சதானந்தர் முதலான **இருடிகளும்**;— அசுரர்,— அந்தரர்,— ஆகாயவாசிகள்,— விஞ்சையர்,— வித்தியாதரர்,— கருடர்,—காந்தருவர்,— இயக்கர்,— கின்னரர்,— கிம்புருடர், — சித்தர்,— நிருதர்,— பூதர், — பைசாசர்,—போகபூமியர், —உரகர் முதலான **கணங்களும்**;—நந்தி,— பிங்கிருடி,— சண்டன்,— பிரசண்டன்,— சங்குகன்னன்,— வாணன்,— அந்தகன்,— கும்போதரன்,— விருபாக்ஷன் முதலான **பிரமத கணங்களும்** சூழ்ந்து துதித்து வரவும்;— பேரிகை,— மத்தளம்,— தாளம், சங்கம், — சச்சரி,— தடாரி முதலான வாத்தியங்கள் முழங்கி வரவும்;

"**எல்லாம்வல்ல இறைவன் வந்தான்,**
நல்லோர்க்கருளும் நாயகன் வந்தான்
முப்புரமெரித்த முன்னோன் வந்தான்

Koviloor Digital Library

தப்பிலார்க்கருள் செயுந் தயாநிதி வந்தான்
வள்ளல் வந்தான், மகாதேவன் வந்தான்
எள்ளி லெண்ணெய்போ லிருப்பவன் வந்தான்
அன்பர்க் கருளும் ஐயன் வந்தான்
இன்பங் கொடுக்கும் இறைவன் வந்தான்
முத்தொழில் நடத்தும் முதல்வன் வந்தான்
பத்தர்கள் புகழும் பதத்தோன் வந்தான்
தேவர்கள் போற்றுந் தியாகன் வந்தான்
மூவர்கள் வாழ்த்தும் முக்கணன் வந்தான்"

என்று சின்னங்கள் பிடித்து வரவும்,— தும்புருநாரதர் யாழிசை பாடி வரவும்,— உருத்திர கணிகையர் நடனஞ் செய்து வரவும்,— ஒற்றை வெண்குடை, சாமரை முதலான மங்கலவிருதுகள் நெருங்கி வரவும்,— ஆனைமுகக் கடவுளும், ஆறுமுகக் கடவுளும் — இருபக்கங் களிலும் இசைந்து வரவும்,—உலகமாதாவாகிய உமாதேவியார் இடது பக்கத்திலிருக்க, ஜடாமகுட திரிநேத்திர காளகண்ட சதுர்ப்புஜம் முத லானவை விளங்க, தர்மசொரூபமாகிய இடபவாகனத்தின் மேல் சர்வ மங்கல சக்தியே திருமேனியாகக் கொண்ட தியாகராஜப்பெருமான் எழுந்தருளி, மனுச்சோழ ராஜனுக்குமுன் தரிசனங்கொடுத் தருளி, குளிர்ந்த நிலவு தளும்பி வீசுகின்ற புன்னகை காட்டி, அரச னுக்கு ஜில்லென்று உடம்பும், உள்ளமும், உயிரும் குளிரும்படி செய் வித்து, கருணை யென்னும் வெள்ளம் நிறைந்து, பொங்கித் ததும்பி, பெருக்கெடுத்து, ஒளிகொண்டோங்கி, மடைதிறந் தோடுகின்ற மலர் போன்ற திருக்கண்களால் அருள் நோக்கஞ்செய்து, அவ்வரசனுக் குண்டாயிருந்த விடாய் முழுதுந்தீர்த்து,— "நம்மிடத்து நம்பிக்கையும் பேரன்பும் வைத்து, மனுநீதி தவறாது அரசாட்சி செய்கின்ற மனுச் சோழனே! நீ நடத்துகின்ற நீதியின் பெருமையை உலகத்தவர் செவ்வையாகத் தெரிந்து கொள்ளும்படி நாமே இவ்வாறு சோதித் தோம்! இனி ஒன்றுக்கும் அஞ்சவேண்டாம்" — என்று திருவாய் மலர்ந் தருளி இறந்து கிடக்கின்ற பசுங்கன்றும்; — கலாவல்லபனென் னும் மந்திரியும், வீதிவிடங்கனென்னும் இராஜகுமாரனும் உயிர் பெற்று எழுந்திருக்கும்படி கடாக்ஷித்தருளினர்.

Koviloor Digital Library

31. மாதிருக்கும் பாதியனை மன்னன்

புகழ்ந்தேற்றல்

அந்தக்கணமே நித்திரை நீங்கி எழுகின்றதுபோல், இளங் கன்றுனது உயிர்பெற்று எழுந்து தன் தாய்ப் பசுவினிடத் திற் சென்றது. மந்திரியும் புதல்வனும் உயிர்பெற்றெழுந்து, ஆண்டவனை வணங்கி, அருகே மலர்ந்த முகத்தோடு வந்தனை செய்து கொண்டு மகிழ்ந்து நின்றார்கள். அது கண்டு அந்நகரத்திலுள்ள ஜனங்க ளும் மற்றவர்களும் தம்மை அறியாத பெருங் களிப்புடையவர்களாய்ச் சிலர், — "அற்புதம், அற்புதம், அற்புதம், அற்புதம்," — என்று ஆடி னார்கள். சிலர், — "புண்ணிய பூசை பலித்தது, பலித்தது" — என்று பாடி னார்கள்; சிலர், — "சூரியகுலந் தோன்றியது, தோன்றியது" — என்று துதித்தார்கள்; சிலர், — "துக்கம் நீங்கியது, சுகம் கிடைத்தது" — என்று துள்ளினார்கள்; சிலர், — "குறையெல்லாந் தீர்ந்தது, குறையெல் லாந் தீர்ந்தது" — என்று கொண்டாடினார்கள்; சிலர், — "கும்பிட்ட தெய்வம் குறுக்கேவந்தது" — என்று குதித்தார்கள்; சிலர், — "எம் பெருமா னெதிர்ப்பட்டா லென்ன முடியாது" — என்று எக்களித்தார் கள். சிலர், — ஒருவரையொருவர் கட்டித் தழுவிக்கொண்டு ஒரு காத மட்டும் ஓடித்திரும்பினார்கள்; சிலர், — "கலக்கந் தீர்ந்தது களிப்பு வந்தது" — என்று கைகொட்டினார்கள்; சிலர், தோள் தட்டிக்கொண் டும், தொடை தட்டிக்கொண்டும், முகரோமத்தை முறுக்கிக் கொண் டும், முகமலர்ந்துகொண்டும், உடல் நிமிர்த்திக்கொண்டும், உலாவி நின்றார்கள்; சிலர், — "வாழ்வுவந்தது" — என்று மனம் பூரித்தார்கள்.

இப்படி அவரவர்களும் அளவில்லாத ஆனந்த முடையவர்களாய் 'இழந்துவிட்ட பொருள் எதிர்வரப் பெற்றவர்கள் போல்' சந்தோஷ கோஷஞ் செய்துநிற்க, மனுச்சக்கரவர்த்தியானவர், கங்கையும் இளம் பிறையும் விளங்குகின்ற சடா மகுடத்தையும், — திரிபுண்டரமுந் தில கமும் திருநோக்கும் விளங்குகின்ற நெற்றியையும், — அருள் ததும்பி வழிகின்ற திருநோக்கங்களையும், — சங்கு குண்டலமணிந்து தாழ்ந்த செவிகளையும், — நறுங்குமிழ்போன்று விளங்குகின்ற நாசியையும், — வேதமாகிய தெள்ளமுதத்தைக் கொள்ளை கொண்டுண்ணும்படி அன் பர்களுக்கு அருளிச்செய்கின்ற செம்பவளம் போன்ற திருவாய்மல ரையும், வானவர்க்குயிர் கொடுத்த மணிகண்டத்தையும், — கொன்றை மாலை யணிந்து குலவரைகள் போலுயர்ந்த திருத்தோள்களையும், — மானும், மழுவும், வரதமும், அபயமுங்கொண்ட மலர்க்கரங்களையும், — சிவந்து மெல்லென்று திருவருள் பழுத்து ஆனந்தமொழுகிப் பத்தர்

Koviloor Digital Library

கள் மனத்தில் தித்தித்திருக்கும் பாதமலர்களையும், — செம்பவள மலை போன்ற திருமேனியையும், — பச்சைக்கொடி படர்ந்தது போன்று பார்வதியார் மகிழ்ந்து விளங்குகின்ற பாகத்தையுங் கண்குளிரக்கண்டு, — களிப்படைந்து, — ஆனந்த நீர் ஊற்று நீர்போல் சுரந்து சுரந்து, — விழுந்து விழுந்து மார்பினிடத்து வண்டலாடவும், — உடல் குழைந்து விதிர் விதிர்த்துச் சிலிர் சிலிர்த்து, மயிர்க் கூச்செறிந்து என்பு நெக்கு விட்டுருகியும், — மனங் கனிந்து கனிந்து கசிந்து கசிந்து நெகிழ்ந்து நெகிழ்ந்து படபடவென்று பதறிப் பதறி உருகி யுருகி ஆனந்த வெள்ளத்தி லழுந்தி யழுந்திப் பரவசமாகியும், — "சிவசங்கர சிவசங்கர சிவ சங்கர சிவசங்கர சிற்பர தற்பர சிற்குண சின்மய சிவசிவ" — என்று வாய்நீர் சுரந்து பாடிப் பாடி நாக்குழறித் தழும் பேறியும், — "ஹர ஹர" — என்று ஆனந்தக் கூத்தாடியும், தண்டுபோல் அனந்த முறை கீழே விழுந்து விழுந்து வணங்கி உடம்பிற் புழுதியாடியும், குளிர்ச்சி பொருந்திய சந்திர விம்பம் போன்ற முகத்தின்கண் முத்துமாலை யணிந்தது போல வியர்வரும்பி இளநகை தோன்றி மலர்ந்து விளங்கக் கைகளைக் கூப்பிச் சிரசின்மேல் வைத்துக்கொண்டு, அன்பே வடிவமாகி நின்று, — "பிரமன் முதலாகிய பெரிய தேவர்களெல்லாம் அரிய தவஞ் செய்தும் கனவிலுங் காண்பதற் கருமையாகிய கடவுளே! — அன்பு அணுவளவு மில்லாத அடியேனுக்கு அருமையாகிய திருமேனியை நனவிலே எளிதாகக் காட்டியருளிய தேவரீர் பெருங்கருணையை என்னென்று துதிப்பேன்! — பொய்யுலகத்தை மெய்யென்று நம்பிப் புன்மையாகிய போகத்தை விரும்பி, — புவியாண்டு, மீளா நரகில் விழத் துணிந்திருந்த அஞ்ஞானத்தையுடைய அடியேனையும் ஒரு பொருளாகத் திருவுள்ளத்திற் கொண்டு காட்சி கொடுத்தருளிய கருணைக் கடலே! — கண்ணுண் மணியே! — கரும்பின் சுவையே, — கற்பகக் கனியே! — கருணை நிதியே! — தேவரீர் திருவருட் பெருமையை என்னென்று சொல்லுவேன்!

யான் என்கின்ற ஆணவப்பேயும்
எனதென்கின்ற இராட்சதப் பேயும்
மாயை யென்கின்ற வஞ்சகப் பேயும்
பெண்ணாசை யென்கின்ற பெரும் பேயும்
மண்ணாசை யென்கின்ற மானிடப் பேயும்
பொன்னாசை யென்கின்ற பொல்லாப் பேயும்
குரோத மென்கின்ற கொள்ளிவாய்ப் பேயும்
உலோப மென்கின்ற உதவாப் பேயும்
மோக மென்கின்ற மூடப் பேயும்
மத மென்கின்ற வலக்காரப் பேயும்
மாற்சரிய மென்கின்ற மலட்டுப் பேயும்

Koviloor Digital Library

மனப்பேயோடு கூடி இரவும் பகலும் ஆட்ட, ஆடி ஆடி யிளைக்கின்ற அடியேனைக்காத்தருளத் திருவுள்ள மிரங்கித் தரிசனமருளி, துன்பத்தை நீக்கி இன்பத்தை யளித்த எம்பெருமானே! — என்னுண்டவனே! — என் தந்தையே! — என் தாயே! — என் குருவே! — என் தெய்வமே! — என் குல தெய்வமே! — என் உயிர்த்துணையே! — என் அறிவுக்கறிவாகிய இறைவனே! — தேவரீர் திருவடிப்புகழை வேதங்களு மறியாது விழித்துக்கொண்டு தேடித் தேடி இளைக்கின்றன வென்றால், கிருமி கீடங்களிலுங் கீழ்ப்பட்ட அசேதனனாகிய அடியேன், எப்படி அறிந்து துதிப்பேன்! — தேவரீர் திருவடிக்காட்சி பலிக்கும்படி செய்வித்த இந்தப் பசுவுக்குங் கன்றுக்கும் என்னை அடிமையாகக் கொடுப்பேன்; அல்லது வேறென்ன கைம்மாறு செய்வேன்! — தேவரீர் திருமேனிக் காட்சி கிடைப்பதற்குக் காரணமாகிய **வீதிவிடங்கனென்னும் புத்திரன்** இன்றுதான் எனக்குப் புத்திரனாயினான்! — தேவரீரது திருவருட் கோலத்தைக் காணப்பெற்ற அடியேனுக்கு இனி என்ன குறை இருக்கின்றது! — அன்பர்களுக்கு இன்பமளிக்கின்ற ஆண்டவனே! — தேவரீர் கிருபா நோக்கஞ் செய்யப் பெற்று உடல் பூரித்தேன்! — உள்ளங் குளிர்ந்தேன்! — உயிர்தழைத்தேன்! — பசுங்கன்றும் மந்திரியும் மைந்தனும் உயிர்பெற்று எழுந்திருக்கவும் வரம் பெற்றேன்! — வாழ்வடைந்தேன்! — துக்கமெல்லாம் நீங்கினேன்! — சுகப்பட்டேன்! — மனத்துக்கு அடங்காத மகிழ்ச்சிகொண்டு நின்றேன்! — இனி அடியேனுக்குத் தேவரீர் திருவடியினிடத்துத் **தவறாத தியானமும். சலியாத அன்பும்** தந்தருளி யென்னை அடிமைகொள்ள வேண்டும். — குற்றஞ்செய்தாலுங் குணமாகக் கொள்கின்ற குணக்குன்றே! — பன்றிக்குட்டிக்கு முலை கொடுத்த பரம்பொருளே! — புலி முலையைப் புல்வாய்க்கு ஊட்டிய புண்ணிய மூர்த்தியே! — கல்லடிக்கும் வில்லடிக்குங் கருணைபுரிந்த கருத்தனே! — திருவாரூர்ப் பூங்கோயிலிலெழுந் தருளிய **தியாகராஜப் பிரபுவே! போற்றி! போற்றி!!"** என்று தோத்திரஞ் செய்து தொழுது நின்றார்.

32. பெருமான் அருள் புரிந்து மறைய

அரசன் ஆலயம் புகுந்து வணங்கல்

அரசன் செய்த தோத்திரங்களைத் திருச்செவி ஏற்றுக்கொண்டு தியாகராஜப் பெருமான், — "நம்மிடத்தில் அன்புள்ள அரசனே! நீ இன்னும் நோயற்ற வாழ்வுங் குறைவற்ற செல்வமும் பெற்று, நமது அருளே துணையாகக் கொண்டு, இவ்வுலகத்தை யெல்லாம் ஒரு குடையின்கீழ் ஆண்டு, மெய்யறிவு விளங்கி,

Koviloor Digital Library

மாறுத மகிழ்ச்சியோ டிருக்கக் கடவாய்! பின்பு எக்காலத்தும் மீளாத பேரானந்த போகத்தை நாம் தருவோம்"—என்று அருள் புரிந்து கணங்களுடன் அந்தர்த் தானமாக எழுந்தருளினர்.

அதுகண்டு மனுச்சக்கரவர்த்தியானவர், பின்பும் கீழ்விழுந்து நமஸ்கரித்துத் தொழுது, தோத்திரஞ் செய்து கொண்டு, அப்பசுவையுங் **கன்றையும்** உபசாரத்துடன் நல்ல புல்லுள்ள இடங்களில் மேய்த்து மிகுந்த சுகத்திலிருக்கும்படி செய்வித்துக் கலாவல்லபனைக் கட்டி யணைத்துக்கொண்டு—"என் புத்திரன் பழிக்கு ஈடாகச் செய்தற்கரிய செய்கையைச் செய்துகொண்ட அன்புள்ள அமைச்சனே!—உன்போலெனக் கினியவர்கள் உண்டோ!"—என்று உபசரித்து, பின்பு, **விதிவிடங்க** னென்னும் மைந்தனை எடுத்து மடிமேல் வைத்து, முத்தங்கொடுத்து, உச்சி மோந்து,—"யான் செய்த புண்ணியத்தால் கிடைத்த புத்திரனே! உன்னுலல்லவோ உயர்வை யடைந்தேன்" என்று உபசரித்து, பின்பு மைந்தனும் மந்திரியுந் தாமுமாகக் **கமலாலயமென்னும் கோயிலுக்குச்** சென்று ஆசாரத்தோடும் அன்போடும் விதிப்படி சிவபெருமானைத் தரிசனஞ் செய்து, அபிஷேகாதி சிறப்புகளும் அநேகம் திருப்பணிகளுஞ் செய்வித்துத் தொழுது, வணங்கித் துதித்து, வலங்கொண்டு, விடைகொண்டு புறப்பட்டு, அங்நகரத்திலுள்ள ஜனங்களெல்லாம் மனங்களித்து வாழ்த்திப் புகழும்படி மங்கல வாத்தியங்கள் முழங்க, வீதியை வலமாக வந்து, அஷ்ட மங்கலங்களேந்திய சுமங்கலிகளும், அந்தணர் அமைச்சர் முதலானவர்களும் வாழ்த்தி மங்கலச் செய்கைகளோடும் எதிர்கொள்ள அரண்மனையிற் சென்று வேதியர், துறவினர், விருந்தினர், உறவினர் முதலானேர்களுக்கு அவரவர்க்குத்தத்க வரிசைகளைச் செய்து மகிழ்வித்து, கற்புநிலை தவருத மனைவியார் மனங் குளிர்ந்து களிக்கும்படி மைந்தனைக் காண்பித்து, மந்திரி முதலானவர்கள் சூழச் சிவானுக்கிரகத்தால் சிங்காசனுதிபதியாய், உலகத்தை யெல்லாம் ஒரு குடைநிழலில் வைத்து அறநெறிப்படியே அரசாட்சி செய்திருந்தார்.

வாழ்த்து

நேரிசை வெண்பா

வாழி மனுச்சோழர் வாழி யவர்மைந்தன்
வாழியவர் மந்திரியாம் வல்லனும்—வாழி யவர்
செங்கோன் முறையவர்தஞ் சீர்கேட் பவர்வாழி எங்
கோன் பதம் வாழியே.

திருச்சிற்றம்பலம்

மனுமுறைகண்ட வாசகம் முற்றிற்று.

Koviloor Digital Library

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

ஒழிவி லொடுக்கம்

ஒழிவிலொடுக்கப் பாயிர விருத்தி

சிறப்புப் பாயிரம்

நேரிசை வெண்பா

*வள்ளல் குருராயன் வாதுவென்ற சம்பந்தன்
வள்ளன்மலர்த் தாடலைமேல் வைத்துரைத்தா — னுள்ளத்
தழிவிலடுக் குந்தேனை யன்பரெலா முண்ண
வொழிவி லொடுக்கநூ லோர்ந்து.

இச்செய்யுள் கருதிற் றியாதோவெனின், இந்நூன்முகத் தாசிரியர் பெயர் முதலியவற்றைக் குறித்து நிற்றலிற் சிறப்புப் பாயிர வொழுக்க முணர்த்தல் கருதிற்றென்க.

வள்ளல் குருராயன் வாதுவென்ற சம்பந்தன் — வள்ளன் மலர்த் தாடலைமேல் வைத்து என்பது:— வள்ளலாரென்னுந் திருப்பெயருடையவர், ஞானாசாரிய நிருபராகிச் சமையவாதிகள் தருக்கச் செருக்குகள் பிறப்பட்டொழியப் பேரருள் நெறியான் வெற்றிகொண்டு, சீகாழி யென்னுந் திருநகர்க் கண்ணே, மெய்ந்நெறி விளங்க, வீற்றிருந் தருளிய திருஞானசம்பந்தப் பிள்ளையாரது வள்ளற்றன்மையுடைய, மலர்போலுந் திருவடிகளைத் தமது நன்முடிக்கண் ஓர் பொன் முடியாக அணிந்து.

ஓர்ந்து — உள்ளத் — தழிவிலடுக் குந்தேனை யன்பரெலா முண்ண — வொழிவி லொடுக்கநூ லுரைத்தான் என்பது:— அத் திருவடிகளின் அருட்டுணையால் தத்துவங்களனைத்துஞ் சடமென்றோர்ந் துணர்ந்து, அவற்றைக் கடந்து, தற்காட்சியோடு திருவருட் காட்சியுஞ் செய்து, அங்ஙனம் வாதனையா னசைந்தெழும் போதந் தோற்றுது, அதனை யத்திருவருளொளியி னடக்கி ஆண்டு, மேன்மேலு மெழா நின்ற, சிவானந்தத் தேனைத் தாம் அனுபவஞ் செய்தவாறு, அதன் கண் அன்புள்ள பக்குவருஞ் செய்தற்பொருட்டு, அச் சிவானந் தானுபவ அந்தரங்க மெல்லாம் வெளிப்பட்டு விளங்க, ஒழிவிலொடுக்க மென்று ஓர் உபதேச முறையை யுரைத்தருளினர் — என்றவாறு.

Koviloor Digital Library

வள்ளல் — என்னும் பெயர் :—

ஆசிரியர்க்குத் தாம் முன்னிருந்த கிரியாசாரிய நிலைக்கண் அவ்வாசாரிய மரபின் வழித்தாய் வந்த காரண வபிடேகச் சிறப்புப் பெயரென்க. அல்லதூஉம், பின்னர் ஞானசாரிய நிலைக்கண், தமதருண் ஞான நோக்காளியைந்த கண்ணுடைய வென்னுங் காரண விசேடண மேற்கொண்டு, நின்ற இவ்வள்ளலென்னும் பெயர். ஈண்டவ் விசேடண மிசை யெச்ச நிலையினிற்ப நின்றதெனினும் அமையுமென்க.

இஃது வினை. பண்பு முதலிய வடுத்த தொகைநிலைச் சொற்றொடராகாது, தொகாநிலையாய்த் தனைத்தொடர் பயனிலை யண்மைப் பொருளுணர்ச்சி யின்றி யிடையிட்டு நிற்கத் தான் செய்யுண்முதற்கண் தனித் திருந்தமையின் ஆற்றலின்றுலோவெனின், அற்றன்று ; — கொடை மடங் குறித்த குணங்காரணமாக வந்த இவ்வள்ளலென்னும் பெயர் தன்னுறுப்புகளுட் **கொடைகுணம், புக ழூழகு வளமென்னு** நல்வகைக் குறித்த பல்பொருட் பகுதியாய வண்மையென்னு முதலுறுப்பான் ஆசிரியர்க் குளவாய அக்கொடை முதலிய அருட்குணங்களைக் குறிப்பிற் புலப்பட விரித்தலிற் பொருளாற்றல் உண்டென்க. அல்லதூஉம்;— இப்பெயர், உயர்பொருட்கிடனுய், உடனிலைக் கூட்டாய், ஒருநெறியசைத்தாய், ஓரினந்தழுவிப் பல்வகைக் குறிப்பிற்படர்ந்து, முற்றியைபு வண்ணப் பெருஞ் சொல்லாக நிற்றலிற் சொல்லாற்றலும் உண்டென்க. ஆயின், இவ்வாசிரியர் பெயர் இச்செய்யுளின் இடை கடைகளின் ஒன்றினிறுத்தாது, முதலடி முதற்சீ ரெதுகைத் தொடைக்க ணிறுத்ததிற் குறித்த தியாதோவெனின் ; — ஒன்றிரண்டெனக்கொண்டுறு மறை யாகம நன்றிருமுடிபி னடுநிலைநடா அய்ப் புலம்பெறு தத்துவ நியதியிற்போந்து, உண்மலங் தெறு மறிஞர் வாழ்த்திப்பரவும் ஆசிரியர் **சன்மார்க்க** முதலிய மார்க்க நான்கனுட் டலைமையிற் றலைமையாய வுத்தம சன்மார்க்கத்தின ரென்பது குறித்ததென்க. இங்ஙனம் **உத்தம சன்மார்க்கத்தின** ரென்பதை யாசிரியர் கூறிய[1] **“இதுவென்றதெல்லாம் பொய் யென்றுன்”** என்னுந் திருவெண்பாவாற் காண்க. இஃ தின்னும் விரிக்கிற் பெருகும்.

குருராயன்—என்பது :—

திருஞானசம்பந்தப் பிள்ளையாருக்குச் சிறப்பிற் சிறப்பாய காரணப் பெயராய் நின்று, — ஓதியுணர்ந்து பன்னுட் பல சாதனங்களின்

---

[1] **இதுவென்ற தெல்லாம் பொய்யென்று** னெனக்குப்
பொதுவன்றித் தங்குமிடம் போச்சு — அதுநான்காண்
என்று னதன்பே ரிரவைப் பகலாக்கும்
ஒன்றே பரம சுகமோ. (பொதுவிலுபதேசம்: பாட்டு—44.)

Koviloor Digital Library

முயல்று முயன்று, ஆசாரியத்தன்மை யொருவாறு அரிதிற் கிடைப்பப் பெற்றும், ஓரோர் காலங்களின் அவத்தை வயப்பட்டு மயங்கு மற்றையா சாரியர்போலாது ஓதாமல வேதாகமாதிகளை முற்று முணர்ந்திறைப்போது மோர் சாதனங்களின் முயன்றதின்றி, ஞானசாரிய வருளிலக்கணங்க ளனைத்துந் தாமே தம்பால் நிரம்பிநிற்ப, அமர்ந்தன ரென்பதூஉம்,— ஓதியுணர்ந்த அவ்வாசாரியர்க்கெல்லாம் அவரவரறிவின் கண் அருளுரு வாய் நின்றறிவித்தும் ஆசாரியவுருவாய் வெளிநின்று அனுக்கிரகித்தும் நின்றன ரென்பதூஉம். — திருநோக்கஞ் செய்தன் முதலிய அறுவகைத் தீக்கையானு மன்றித் தமது திருவுருவைக் காண்டல் நினைத்தன் மாத் திரையே பக்குவரல்லாரும் பக்குவராய்ப் பயன்பெற நின்ற திருவருட் பெருமைய ரென்பதூஉங் குறித்ததென்றுணர்க. இங்ஙனம் ஓதா மல் வேதாகமாதி யுணர்ந்தமை முதலியவற்றை யாசிரியர் கூறிய [1] "**தன்மையும் முன்னிலையும்**" என்னுந் திரு வெண்பாவாற் காண்க.

அல்லதூஉம், குருராயன், என்பது, **வாதுவென்ற சம்பந்தன்** என்பதற்கு மேனிற்கவைத்த விதப்புக் குறிப்பாற் பிள்ளையார், இவ் வவதாரத்தின் மேனின்ற அவதாரத்தினுங் குமார சற்குருவாய் அர னார்க்கும் அகத்தியனார்க்கும் உபதேசித்தருளிய ஆசாரியத் தலைமையுங் குறித்த தெனக்கொள்க.

"**தென்னவ** னங்ஙனஞ் சூழ்காத் திரிநக சூலகரத்
தென்னவ னங்கனந் தப்பத நீட்டினன் செல்வமுன்பின்
றென்னவ னங்கநன் னீற்றாற் றிருத்திய தென்னவன்னந்
தென்னவ னங்கனங் கைச்சிலைக் கூனையுந் தீர்த்தருளே"

அருணகிரிநாதர், கந்தரந்தாதி, 56.

என்றதனாற் பிள்ளையார் இவ் வவதாரத்திற்கு மேனின்ற அவதாரத்திற் குமாரசற்குரு வென்பது காண்க.

"உழல்மதிற் சுட்ட தனமுகைப் பெருமான்
வணங்கிநின் றேத்தக் குருமொழி வைத்தோய்
*　　　　*　　　　*　　　　*
குறுமுனி தேற நெடுமறை விரித்தோய்"

கல்லாடம், பாயிரம் 2.

---

[1] **தன்மையு** முன்னிலையுந் தானாய்ப் படர்க்கையுமாய்
என்னொழிவி லின்புமா யின்புமிது — என்னுத
வேதாந்த சித்தாந்த மேபிறவா வீடென்றுன்
ஓதாமல் வேதமுணர்ந் தோன்.

(பொதுவிஞுபதேசம்: பாட்டு — 42.)

Koviloor Digital Library

"அருமறையா கமமங்க மருங்கலைநா றெரிந்த
வகத்தியனுக் கோத்துரைக்கு மருட்குருவாங் குருளை"
பரபக்ஷம், பாயிரம் 4 — சித்தியார்

என்பவைகளால் அரனார்க்கும் அகத்தியனார்க்கும் உபதேசித்த ஆசாரியத் தலைமையை யுணர்க.

ஆயின், குருவேந்தன் என்னாது குருராயன் என்றது எது குறித்தற்கோ வெனின்:—நான்கன் வேற்றுமையானடுத்து பிக்குயர் நெறிப் பொருண்மையின் வந்த காரகச் சிறப் பொருதலைத் தொடர் மொழிப் பெயராய இக்குருராய னென்பதன்கட் குருவென்பதன், முதனிலை யெழுத்துத் தமிழியல் விதிப்படி மொழிக்கு முதலாகியும், ராய னென்பதன் முதனிலை யெழுத்துத் தமிழியல் விதியின்றி ஆரியவியல் விதிப்படி மொழிக்கு முதலாகியும், வந்து இருவகையியலுங் கோடலின், இதனைத் தம்பெயராகவுடைய பிள்ளையாருந் தமிழ்நூல் — வடநூலென்னும் இருவகை நூற்கு முரியாரென்பது குறித்தற்கென்க. ஆசிரியர் [1] "மறைப் புலவன் தமிழ்க்குறிசில் சீகாழிச்சம்பந்தன்" என்றதனால் இருவகை நூற்கு முரியாரென்பது காண்கவென்க. அல்லதூஉம், பொருள் வேறுபடாது, சிறிதே வடிவுவேறுபட்டு நின்ற குருராயனென்பது தன்னையுள்ளூன்றி நோக்கினார்க்கு இலை மறை காய்போல் ஜா வென்னு முயிர் மெய்யோ டிருந்த தன் முன் வடிவ முட்கொண்டு விளங்கக் காட்டி நிற்கின்ற தாகலின், இதனையுடைய பிள்ளையாருந் தமது கடவுட்டன்மை வேறு படாது உத்தமபுருட வுருவங்கொண்டு நின்ற தம்மை, அன்பான் உள்ளூன்றி நோக்கினார்க்குக் குமாரசற்குரு வென்னும் பெயர் கொண்டு, அளவிகந்த சூரியர் உதயம்போன் றொளிவீசுந் தம் முன்னுருவாய தெய்வத்திருவுருவுட் கொண்டு, விளங்கக்காட்டி, நின்றனரென்று குறித்தற் கென்பதுமா மென்க.

"மறையவர் திருவே வைதிக நிலையே வளர்ஞானப்
பொறையணி முகிலே புகலியர் புகலே பொருபொன்னித்
துறைபெறு மணியே சுருதியி னொளியே வெளியேவந்
திறையவ னுமையா ளுடனரு டரவெய்தினையென்பார்."
ஆளுடைய பிள்ளையார் புராணம் 92.

---

1. சத்தியநிர் வாணத்தாற் றற்போதத் தாக்கறுத்து
வைத்து வழிகாட்டு மறைப்புலவன் — சுத்தன்
தமிழ்க்குரிசிற் சீகாழிச் சம்பந்த னென்பான்
எமக்கருளிச் செய்த திது.
(பொதுவினுபதேசம் : பாட்டு—11.)

Koviloor Digital Library

என்று, மூவாண்டிற் பிள்ளையார் திருவருள் வடிவைக்கண்டு சீகாழி யுள்ளார், வியந்துகூறியவாருய விச்செய்யுளால் உள்ளுன்றி நோக்கி னர்க்குத் தம் மூன்னுருவைக் காட்டி நின்றனரென்பது காண்க வென்க.

இனி இன்றியமையாக் காட்டுளதேற் காட்டுவதன்றி மற்றைய விரிக்கிற் பெருகும் என்க.

அல்லதூஉம், குரு என்பத னீற் றுயிர்மெய்யோடு ராயன் என்பதின் முதலுயிர்மெய் புணராப் புணர்க்கையாய் நின்றதாகலின், இங்ஙனம் ஆனந்த வடிவராகிய பிள்ளையாருந் தாங்கொண் டருளிய மானிடத் திருவுருவோடு புணராப் புணர்க்கையாய் நின்றனரெனக் குறித்தற் கென்பதுமா மென்க.

அல்லதூஉம், குறிலிணைக் கெதிர் நெடில் குறிலெண்ணீடாக நிற்பவு மீற்றி னவ்வெண்ணீடின்றி யொற்று நிற்பவுந் தொடர்ந்த மொழி யாகலிற் **பிள்ளையாரும் பக்குவர்க்கு மறைப்பொருளாயும், அதிபக்குவர்க்கு அனுபவப் பொருளாயும்** இவ்விரண்டினுங் கலவாது **அதீதப்பொருளாயு** நின்றனரென்று குறித்தற் கென்பதுமா மென்க.

குரு என்பதன் பொருள் :—

இங்ஙனம் குருராயனென்பதிற் **கு** வ்வென்பது — **இருள், ரு** வ்வென்பது — **அருள், — ராயன் —** என்பது விளங்கச் செய் கின்றோன் — பொருளாம். இதனுல் **கு** வ்வென்னு மசுத்தாவத்தையில் நின்றோரை **ரு** வ்வென்னுஞ் சுத்தாவத்தையில் தாம் நின்றவண்ணம் நிறுத்துகின்றோர் குரு ஆவர். இச்சுத்தா வத்தைக்கு ஆதாரனுகியும் அதீதனுகியும் விளங்கி இவ்வவத்தையினின்றும் அக் குருவாயினோர் தாழாத வண்ணம் அருள் செய்து நின்று அதீதப் படுத்துகின்றோன் **ராயன்** ஆவன் ஆகலின், இதனுலும் உணர்கவென்க.

எழுத்தாதிப் பல்வகைக் குறிப்பிற் பொருணெறிபற்றி நின்ற **நோக்கம், செறிவு, நுட்பம், இங்கிதம், இன்பம், கம்பீரம், சிறப் புறுதி,** முதலிய நற்குணந் தழீஇய சொற்புண ரீதென்றே, ஆசிரியரும் [1] "**சரியாதி நான்கினுக்கும்**" என்னுந் திருவெண்பாவி னிடைக்கட் குருராயனென்று இதன் பெருமை தோன்ற வைத்தனரென்க. இஃது இன்னும் விரிக்கிற் பெருகு மென்க.

---

1. **சரியாதி நான்கினுக்குஞ்** சாலோக மாதி
வருமா றெனக்களித்த வள்ளல் — குருராயன்
ஞானத்திற் பக்குவர்க ணல்வர்க் குபதேசம்
ஆனத் தையுநிகழ்த்தி னன்,
(ஒழிவிலொடுக்கம்.—3. சத்திநிபாதத் துந்தும ரொழிவு 1-ம் திருவெண்பா.)

Koviloor Digital Library

வாதுவென்ற சம்பந்தன் :—

வாதுவென்ற சம்பந்தன் என்பதிற் பொதுவானே வாது வென்ற என்றது என்குறித்தோ வெனின்,—எண்வகைக் குன்றத் தெண்ணாயிரவராய பாயுடுக்கைப் பறிதலைச் **சமணர்க** ளொருங்கே கூடித் தென்மதுரைக்கட் **செந்தமிழ்ப் பாண்டியனை** முன்னிட்டுச் செருக்காற் செய்த **சுரவாதம், அன்னவாதம், புனல்வாதங்கள்** பிற்படத் **திருநீற்றானுந் திருவாக்கானும் வென்று** திறல்கொண்டமை யன்றியும், **பரசமய கோளரி** யென்று தானே யொலித்த திருச்சின்னத்தின் தெய்வப் பேரொலி கேட்டு, உளம்பொறாது எதிரிட்டு மறித்த போதமங்கைப் **புத்தநந்தியின்** பொய்த்தருக்கமும், புழுத்தலையும், பொடிபட்டழியவும், பின்னருள்ளது போன் றில்லதைப்பற்றிச் சாக்கியக் குழுவுள் தலைவனாய **சாரிப்புத்தன்** சிற்சிலவகையாற் செய்த சமையவாதந் தலைதடுமாறவும், **செந்தமிழ் வேதத் திருமுறை** தாங்கி மேம்படும் அறிஞரான் வெற்றி கொண்டமையும், **திருவோத்தூரின்கண்** அரனுக்கிடுபனை **ஆண்பனை** யாயிற்றே யென்று, அசதியாடிய **அமணக்**குழூஉக்களின் வாய்வாதங்கள் மண்பட் டொழியத் தாம் திருவாய் மலர்ந்த **திருக்கடைக்காப்புள் ஓர் மொழியானே** அவ்வாண்பனை பெண்பனையாகச் செய்து விறல் கொண்டமையுங் குறித்ததென்க.

அல்லதூஉம், வாது என்ப திலக்கணையாகக் கொண்டு **பெருமண நல்லூரின்கண் திருமண** நல்விழாவைத் தரிசிப்பான் வந்த மக்கட்கெல்லாந் தொன்றுதொட் டிடைவிடாது உடனிழற்போற் சூழ்ந்துள பிறவிப் பெருவாதுகளனைத்தும் வென்றதூஉம்,—**திருப்பாச்சிலாச்சிராமத்தின்கண்** மழவன் மகளார்க்கு அடுத்த முயலக வாது வென்றதூஉம்,—**மருகற்கண்** ஓர் வசியனுக்கு அடுத்த விடவாதுவென்றதூஉம்,— இவை முதலியவுங் குறித்ததெனினுமாமென்க. வெற்றி கொண்ட பொருட்டிறன் முதலியவற்றுள் ஒன்றேனுந் தோன்றக்கூறாது இலேசானே **வாது வென்ற** என்றது என்குறித்தோவெனின்,—பிறர்க்கு இங்ஙனம் வேறல் தம்மானுந் துணைமையானும் பற்பலநாட் பற்பல வகையின் முயற்சிசெயினு முற்றாதெனினும், பிள்ளையார்க்குச் **செந்தமிழ் பொழியுந்** திருவாக்கானே ஆண்டாண்டு அவ்வேறன் முற்றியதென்பது குறித்தென்க. **வாது** என்பது **குரு ராயன்** என்பதனோடுஞ் **சம்பந்தன்** என்பதனோடுஞ் சாராது நடுநின்றமையின், அத்துவித நெறியினுஞ் சேராது, துவிதநெறியினுஞ் சாராதுநின்ற பதிதவாதிகளது பயனில் வாதமெனினு மமையுமென்க.

எதிரேற்கப்பட் டெதிர்வினைக் கீழ்ப்பட மேற்கொள் வினையெழுச்சிப் பொருளின் வந்த வெல்லென்னும் பிறவினைப் பகுதியானடுத்த **வென்ற** என்னும் பெயரெச்சஞ் **சம்பந்தனென்னும்** பெயர் கொண்டு

Koviloor Digital Library

முடிந்து, இங்ஙனம் வெற்றி கொண்ட பருவம் பிள்ளையார்க்கு இளங் குமாரப் பருவமெனக் குறித்ததென்க. என்னை? எச்சமென்பது இளஞ் சேய் மேற்றாகலின்.

சம்பந்தன் என்பது பிள்ளையார்க்கு மூவகைவைக்கண் மூவுலகும் புகழப் பொற்பொடு புணர்ந்த அற்புதத் திருப்பெயராகலின், ஆண்டு பெருமானருளப் பிராட்டியா ரளித்த சிவஞானத் தெள்ளமுதருந்தி அச்சிவஞானத்திற்கு உரிமை பூண்டமை குறித்ததென்றுணர்க. ஆயின் **சிவஞான சம்பந்தன்** என்றது **சம்பந்த** னென வைத்ததென் கொலோவெனின்:—சிவஞானமுமன்றிச் சிவானந்த மானந்தாதீதம் என்பவைக்கும் உரிமை பூண்ட தலைமைபற்றியும் அவற்றை உலகுயிர்க்கு இங்ஙன மென்றுணர்த்தி உரிமை செய்விக்கு மாட்சிபற்றியும் அங்ஙனம் வைத்ததென்க.

அல்லதூஉம், சுருங்கச் சொல்லுதல் வனப்பினாற் சம்பந்த னெனவே **சிவஞான சம்பந்த** னென வுரிமைச் சிறப்பு வழக்கால் தானே தோன்றுமென வைத்த தெனினுமாமென்க. எங்ஙனமெனின், இந்திரனென்பது இறைமைச் சிறப்பு வழக்கால் தேவேந்திரனையும் உடையானென்பது பொருட்சிறப்பு வழக்கால் பொன்னுடையானையுங் குறிக்குமாகலி னென்க.

வள்ளன் மலர்த் தாள் :—

வள்ளன் மலர்த் தாள் என்னும் ஒருவகை வனப்பு, இருவகைச் சந்தி, மூவகை மொழித்தொகைச் சொற்றொடர்க்கண், வள்ள லென் னுங் குணிப்பெயர் வினைமுதற் றொழிற் பயனுறப்படு முடைமைக் குணப்பெயராய் நின்று, பிள்ளையாரது திருவடிகள் தம்மையடைந் தோர்க்கு, வரையா தானந்தப் பேற்றை யளித்து, அவரைத் தாங்கிக் கோடலைக் குறித்த தென்றுணர்க.

அஃதேல், ஆனந்தப் பேற்றைத் தருதற்குந் தாங்கிக் கோடற் குங் கருத்தர் பிள்ளையாரன்றோ? அங்ஙனம் இருப்பத் திருவடிகட்கு இங்ஙனங் கூறல் எங்ஙனமெனில்;—திருவடிகள் தம்மை வழிபடு வோர்க்கு இரங்கி இன்பமீதற்பொருட்டு எழுந்தருளும் பிள்ளையாரது படர்ச்சி நிகழ்ச்சிக் கருவியாய் நின்று அவரை யவ் வழிபடுவோர்பால் வருவித்தலானும், ஞான தீக்கை பண்ணுங்கால் அவர் சென்னியிற் சூட்டப்பட்டு ஐக்கியம் வருவித்தலானும், நித்தியானந்தப் பேறு வாய்க்கு மாகலின் இங்ஙனமென்க.

அல்லதூஉம், வாட்டமி லருளுங் கோட்டமில் குணனு மசையா நிலையு நசையா மனனும், வெகுளாப் பண்பும், விடாப் பேரன்புஞ், செவ்வியின் மரீஇ எவ்வெவர் எவ்வகை வேட்டனர் அவ் வகை விருப்பொடு குறிப்பின் வரையா தீதல் வள்ளற்றன்மை

Koviloor Digital Library

என்ப வாகலின், இவ் வள்ளற்றன்மையைத் தம்பால் அடைந்தோ ரிடை யடைவித் தருளுங் கருணை பற்றி யங்ஙனங் கூறியதெனினு மமையுமென்க. அஃதேல் வள்ளற் றன்மை வழங்கு மலர்போலுந் திருவடி யென்றன்றோ வுரை விரித்தல் வேண்டும். அங்ஙன மின்றி வள்ளற் றன்மையுடைய மலர் போலுந் தாளென விரித்திருக்கின்றதே யெனின்;— அங்ஙன மடைவித்தலும் வள்ளற் றன்மையே யாகலினு முடைய தொன்றன்றே யுதவப்படுமாகலினும் இங்ஙனம் விரித்தல் அங்ஙனங் கூறற்கு மமைதியாமெல்க.

அல்லதூஉம், அருளின்றி யமையாத வள்ளற்றன்மைக் கவ் வருளே முதற்காரணமா மாகலின், **ஆனந்தவடிவராகிய பிள்ளையார்** அவ்வானந்தப் பேற்றை யளிக்கும் வள்ளற்றன்மைக்கு முதற்காரண மாகிய திருவருட் சத்தியே திருவடியென்று குறித்தற்குக் காரணத் தைக் காரியமாக ஈண்டு உபசரித்த தெனினு மமையு மென்க.

அல்லதூஉம், எமது திருவடிகளை வழிபடின் வீட்டின்ப மெளி தில் தருவேமென்று பிள்ளையார் விதித்தருளிய அருள் விதிப்படியறிந்து வழிபடின், அவ்வழிபாட்டான் அவ்வீட்டின்பந் தரப்பெறுதல் உண் மையாகலின், அவ்வுண்மை நோக்கி யீண்டு கூறிய தெனினும், பிள்ளை யார் திருமேனி முற்றுந் தெய்வத்தன்மை பூரணமாகலின் அதனையறி விக்க ஈண்டு கூறியதெனினு மமையுமென்க. திருவடிகட்கு அடை. யாய வள்ளலென்பதூஉம் ஆசிரியர் பெயராய வள்ளலென்பதூஉம், அடியிணை எதுகைத் தொடையாய் எழுத்தசை சீரொலி பொருளாதி களா னொற்றுமைக்கொண்டு நின்று பிள்ளையாரது திருவடித் தீக்கைக் கும் ஆசிரிய ரதிபக்குவத் தன்மைக்கும் உள்ள வொற்றுமைப் பொருத் தம் விளக்கினவென்க.

வள்ளல் என்பது, பிள்ளையார்க்குக் காரணச் சிறப்புப் பெய ராகக்கொண்டு பொருள் கூறுவாருமுளர். அங்ஙனங்கூறின், இத்துணைச் சிறப்பின்று என்று மறுக்க என்னெனின்;— அவயவச் சிறப்பான வய விக்குணம் வெளிப்படுத்தலே பெரும்பாலு மின்பமாகலினென்க! இத னைப் [1] "**போற்றிமாலுன் முகனுங் காணாத புண்டரிகம்**" என்பத னுற் காண்கவென்க. வள்ள மலர்த்தாடெனப் பாடமோதி வள்ளம் போலுங் குவிந்த வாய்மலரென மலர்க்கடையாக வுரை விரிப்பாருமுளர். அங்ஙனம் விரித்தலின் இத்துணைப் பெரும் பயனின்றென மறுக்க இங்ஙன மின்னும் விரிக்கிற் பெருகுமென்க.

மலர் என்பது, வள்ளற்றன்மையி னருகு வைத்தமையின், ஈண்டு நிறைதலுங், குறைதலுமாயுள்ள நீர்நிலைக்கண் தோன்றியும், அழிந்தும், விரிந்துங், குவிந்தும், வாடியும் நின்று,— வண்ணமும் நறை

1. திருவாசகம், திருவெம்பாவை, 20

Koviloor Digital Library

யும், வாசமுஞ், சிறிதே சிறுபோது கொண்டு பறித்தலாதிய சிறு தொழிற்படு மலர்களை நீக்கி, ஆண்டு திரிபிலாத் தெய்வத் தெண்ணீர் நிலைக்கண், ஒழியா மலர்ச்சியும், அழியா மணமும், பொன்னிறப் பொலிவும், இன்னற வொழுக்கும், மென்மையுந், தன்மையும், வியப்புறு முருவுங், கண்டோர் கண்கவர் காட்சியும், மாட்சியுங் கொண்டு, முக்காலமுங் குன்றா மலரைக் குறித்தமை காண்க. என்னெனில் ;—பிள்ளையார் திருவடிகள்—மெய்ஞ்ஞான விளக்கமாய், அருண்மணம் வீசிப், பொனனிறம் பொலிந்து, ஆனந்த மொழுக்கி, மெல்லென வுற்றுத் தண்ணெனக் குளிர்ந்து, தரிசிக்கின்றோர் வியப்புறு முருவாய் அவரது விருப்ப நோக்கம் பரவ என்றும் ஒரு தன்மையவா யிருக்கின்றமையி னென்க. ஆயின், மலர்போலுந்தாளென்று உவமை விரிந்தபடி நிற்றற்கு இடங்கொடாது மலர்த்தாளென்ற தென்னெனின்,—அத்தெய்வத் திருமலர்தனைக் கண்டோர்க்குச் சிறிய விடயானந்தந் தருதலேயன்றித் திருவடிபோற் சிவானந்தம் தரமாட்டாச் சிறுமை நோக்கி யென்க.

அல்லதூஉம், சுபவடிவாய், எவ்வகைச் சுபங்கட்கு முன்னின்ற தனை விளங்குறச் செய்வதாய், மகிழ்வுடையோர் யாரு மேற்கொண்டணியப்படுவதாய், நிற்கு நன்மலர் போலுமெனக் கூறினு மமையும்; என்னெனின்,— திருவடிகள் அருள்வடிவாய், ஆனந்தப் பேற்றிற்கு முன்னின் றளிப்பதாய், அறிவுடையோர் தந்தலைமேற் கொண்டணியப் படுவதாய் நிற்றலினென்க.

அல்லதூஉம், மலரையடைந்த வண்டுகளதனது தேனுண்டு களிகொள்ளுதல் போற் றிருவடிகளை யடைந்தோரும் அருளானந்தம் பெற்றிறுமாத்தலினிங்ஙனங் கூறியதெனினு மமையுமென்க. இதனைத் தொகையுவமை யணியாகக் கூறலின்றி வள்ளன் மலர்த்தாளெனக் கூட்டி யற்புதத் தொகையுவமை யணியாகக்கொண்டு பொருள் கூறுவாருமுளர். அவர் கூறுங் கூற்றிற் பெருபய லின்றென மறுக்க. இஃதின்னும் விரிக்கிற் பெருகுமென்க.

தாள் என்பது,—அடிகட்கன்றியும் முயலுதற்கும், உண்ணின்ற பொருள் வெளிப்படாமைக்கும், அதனை வெளியின்றோ ருட்சென்று கவரப் படாமைக்குங் காப்பாகக் காப்பினிற்குங் கருவிக்கு மலரிதற் கணியி னிருகடையு மிணைத்து நிற்கு மிடைப்பூட்டிற்கு மிடனுகி வந்த பல பொருளொரு சொல்லாகலின், திருவடிகள் தம்மை யடைந்தோரை யானந்த நிலையுட் சேர்த்தலும், அங்ஙனஞ் சேர்ந்தோர் மீட்டு மவ்வானந்த நிலையினின்றும் போதவசைவு தோற்றி வெளிப்படாமைக்கும் அவத்தைகளுட் சென்று தாக்கிக் கவரப்படாமைக்குங் காப்பாக அருளுருவாயதன் முன்னிற்றலுஞ் சிவத்துடன் சீவனை யிடைநின்று கூட்டு

Koviloor Digital Library

வித்தலுங் குறித்தது காண்க. இக்குறிப் புணர்த்தவன்றே மலர்க்கா லென்னாது மலர்த்தா ளென்றதென் றுணர்க.

தலைமேல் வைத்து :—

தலைமேல் வைத்து என்பது,—ஆசிரியர் தம் ஆசாரியராகிய பிள்ளையார் திருவடித்தீக்கை செய்யத் தாம் பெற்றமை குறித்தது காண்க. அஃதேல், வைக்கப்பட்டு எனச் செயப்பாட்டுவினை யெச்சத்தா னிருத்தற்பாலதன்றோ வெனின்,—ஆசிரியர்க்கு அத்திருவடிக் கண்ணேயுள்ள பிரியத் தொடர்ச்சியின் பெருமை தோன்ற இங்ஙனம் நின்று அங்ஙனங் குறித்ததென்க. இதற்கு இவ்வாறன்றித் தலைமேற் பாவனையான் வைத்தெனக் குறித்ததென்று கூறுவாரும் உளராலோவெனின்,—அவ்வாறு கூறிற் பிள்ளையார் இந்நூலாசிரியர்க்கு ஞானாசாரிய ரென்பதும் இவர் ஞானதீக்கை யுடையாரென்பதும் விளங்குதலின்றி மற்றையாசிரியர் போல் எடுத்தநூ லினிது முடிதற்பொருட்டுப் பாவனையான் வழிபடு கடவுட் பழிச்சின ரென்றிலேசிற் கருதப்படுமாகலின் அங்ஙனங் கூறன் மரபன்றென்க. தலையில் வைத்து என்னாது தலைமேல் வைத்து என்றமையான், மறைமுடிக்கண்ணே வயங்காநின்ற அச்செல்வத் திருவடியின் சீர்மை தோன்றிற் றென்க.

ஓர்ந்து :—

ஓர்ந்து என்பதில் ஓர் என்னும் பிறவினை முதனிலை, அறிவுதனக்கெதிரிட்ட வுணர்ச்சிப் பொருட்கண் எதிரிடுவதுபோன்று எதிரிடா துள்ளாழ்ந்த அப்பொருட்டிற னெதிரிடப் பெயரும் புடைபெயர்ச்சியு மெதிரிட்ட பின்னர் விகற்பியா தெதிர்க்குந்தொறு மெதிரிடப் பெயரும் புடைபெயர்ச்சியுங் கோடலிற் கருவித்திறனுந் தன்றிறனும் அருட்டிறனும் உற்றுணர்ந் தவ்வுணர்ச்சி விகற்பியாது தேறி நின்றமையைக் குறித்தது காண்க. இக்குறிப்புத் தோன்றவன்றே திருவள்ளுவ நாயனாரும் [1] "ஓர்த்துள்ள முள்ள துணரின்" என்றாரென்றறிக.

உள்ளத் தழிவில் :—

உள்ளத் தழிவில் என்பதில் உள்ள மென்பதன் பகாப்பதவியிற்றாப் பகுபதப் பொருளி னிடவாகு பெயரா யனுப்பொருட்கண் வந்த வுள்ளென்னும் பகுதி யுட்புறத்தும் அப்போதம் எழுஞ் சிற்றசைவும் பேரசைவுங் குறித்தது காண்க.

உள்ளம் என்பது,—வாதனையா னுள்ளெழும் போதத்திற் காகுபெயராயது வள்ளலென்பதுபோன் றுருழுகிசையாய் வர வுள்ள வழிவி லென்னாது பொறுத்திசையாய் வர உள்ளத் தழிவிலென்ற தென்கொ

1. திருக்குறள், மெய்யுணர்தல், 7

Koviloor Digital Library

லோவெனின் :—வேற்றுமை வழியாகலினும் போதவசைவு சார்பின்றி யமையாமை குறிக்கவேண்டு மாகலினும், சாரியையோடு புணர்த்தி யங்ஙனங் கூறியதென்க. அழிவு என்பதில் அழியென்னும் பொது வினைப் பகுதி முன்னர்த்தோற்ற நிகழ்ச்சிப் பின்னர் ஓர் காலத்தும் ஓரிடத்துமின்றிக் கெடுதற் பெயற்சிக்கண் வந்ததாகலின் அப் போத நிகழ்ச்சி பின்ன ரெக்காலத்தும் உட்புறமென்னு மெவ்விடத்துந் தோற்ற நிகழ்ச்சியின்றி யொடுங்கியவாறு குறித்ததென்றுணர்க. இங்ஙனமன்றி உள்ளத்தழிவி லென்பதற்கு மனத்தினசைவற்ற விடத்தெனப் பொருள் கூறுவாரு முளராலோவெனில், மனத்தி னசைவுபோத வசைவிற் றனே யறுமாகலினு மஃதருதவிடத் திஃதெவ்வாற்றானு மறுதாகலினும் அது பொருந்தாதென்க. இதனை ஆசிரியர் கூறிய [1] "**பற்றுத போதும் பதறும்**" என்னுந் திருவெண்பாவாற் காண்கவென்க.

அடுக்குந் தேன் :—

அடுக்குந் தேன் என்பதில் அடுக்கு மென்பது அடுத்த லென் னுந் தொழிற் பெயர்க்கண் தல்விகுதி தன்னொற்றுச் சந்தியொடு நீங்க வெதிர்காலப் பெயரெச்ச விடைநிலை யும்மை ககரமெய்ச் சாரியை யூர்ந்து தன்னொற்றுச் சந்திபெற்றுண்டு நின்றிறையு மிடப்பாடு தோற் றுது செறிதற் பெயர்ச்சியும், அடுக்கலென்னுந் தொழிற் பெயர்க்கண் அல்விகுதி நீங்க அவ்வெதிர்காலப் பெயரெச்ச விடைநிலையும்மை விகுதி நீங்க நின்று தன்வரவு கண்டோடிய குற்றுகரமூர்ந்த மெய்க்கண் ணேறி நின் றிறையுமிடைப் போதின்மை படாது பன்முறை மேன் மேலுறுதற் பெயர்ச்சியும் பொருளாகக்கொண்டிருவகைப்பகுதி யொரு வகை யெச்சமாக நிற்றலின், சிறிதும் இடத்தானுங் காலத்தானும் பிரிவு தோன்றாது செறிந்து பன்முறை மேன்மேலெழும் ஆனந்தத் தேனென்று குறித்த தென்றுணர்க.

உள்ளத்தழிவி லடுப்பது ஆனந்தமாகலிற் றேனென்பதை யுவமக் குறிப்பாற் சிவானந்தத் தேனென்றதென் றுணர்க.

தேனுண்ட வண் டசைவின்றி யத்தேன்மயமாயிருத்தல் போல, ஆனந்தானுபவத்தர் போதவசைவின்றி யிவ்வானந்த மயமாயிருத்தலி னுவமையாகக் குறிக்கப்பட்டதென் றுணர்க.

இதனை யொப்புமைக்கூட்ட மொட்டாதிகளாகக் கூறுவாரு முளராலோவெனின், அவ்வாறு கூறினும் பொருள் சிதையாமையி

---

1 **பற்றுத** போதும் பதறும் பழக்கமதைக்
கற்று லென்னுகக் கலக்காது — சற்றேநீ
தீண்டிவிடிற் றுன்காண் செனன மரணமது
மாண்டுவிடி னிசிவமா வை.
(ஒழிவிலொடுக்கம் 3. இயோகக்கழற்றி :— 15-வது திருவெண்பா)

Koviloor Digital Library

ஞெருவா றமையுமென்க. போதவசைவின்கண் தோற்றல் விடயானந்த மாகலில், போதவொழிவின்கண் தோற்றல் சிவானந்தமெனக் குறித் தற்கு உள்ளத்தழிவிலடுக்குந் தேனென்ற தென்றுணர்க. எங்ஙனமெ னின், உள்ளத்தழியாமையினடாத்தே னென் றெதிர்மறுக்கப் படுதலி னென்க. மதுரம்பற்றித் தேனை யானந்தத்திற் குவமை கூறுவாரு முளராலோவெனின், அது நாவிடயமாயிறைப்போது நிற்றலின் இத் துணைச் சிறப்பின்றென்க.

அன்பரெலா முண்ண :—

அன்பரெலா முண்ண வென்பதில், அன்பர் என்பது பொருள் புகழாதியைக் குறித்துப் பயில்வோரை நீக்கிச் சிவானந்தம் எந்நாள் அடைது மென்றிடைவிடாததனையே விரும்பிப் பயில்வோரைக் குறித்த தென்றுணர்க. எலாமென்பது—சரிதாதி கன்ம மார்க்கங்களைக் கூறும் பிற நூல்களெல்லாம் பருவநோக்காது சாதிசமயாசார விகற்பங்களை நோக்கிச் சிலரை நீக்கியுஞ் சிலரை நிறுவியும் அதிகரித்தல் போலாது, அச்சாதி சமயாதிகளி னுயர்ந்தோர் தாழ்ந்தோர் யாரேனும் பருவத் தராயின் இந்நூற்கு உரியராவரென்பது குறித்த தென்றுணர்க.

உட்கொள வென்னும் பொருளுட் கொண்டு பொருட்டுப் பொருளிற்போந்த உண்ணவென்னும் வினையெச்சம் ஆனந்தானுபவத் திற்கு விடாத விலக்கணை யாயிற்றென் றுணர்க. என்னையெனில், உண்ணலிற் பசி நீங்கல்போல் ஆனந்தானுபவத்திற் பசுத்துவம் நீங்கலி னென்க.

பயன் காரணம் பற்றிவந்த **ஒழிவிலொடுக்கநூல்** என்பது ஒழிவிலொடுக்க மென்னு நூல் ஒழிவிலொடுக்கந் தருநூலென விரு வழிக்கும் பொதுவாய சந்தியான் வந்தமையில், தன்னை வேதாந்தத் **திற்கும் சித்தாந்தத்திற்கும் பொது** வென்று குறித்ததென் றுணர்க.

ஒழிவிலொடுக்க நூலுரைத்தான் :—

ஒழிவிலொடுக்க நூலுரைத்தான் என்பதில் வேற்றுமை சாரியை யுருபு முதலியவொன்றும் விரியாது நிற்றலின், ஞானசாரமன்றிக் கருமாசார மொன்றும் விரியாத விந்நூலின் நின்மலத்தன்மை தோன் றிற்றென்றுணர்க. **உரைத்தான்** என்பது—ஒருவர் மதிநுட்பத்தால் தான் கண்டறிந்த மாற்றுயர்ந்த பொன்னின் றன்மையைப் பிறரு மறிந்து பயன் கோடற்குக் கட்டளைக்கல்லி னுரைத்துக் காட்டல்போல், சுருதி குருவனுபவத்தாற் றுமனுபவித் தறிந்த சிவானந்தப் பேற்றின் றன்மையைப் பக்குவருமறிந்து பயன்கோடற்பொருட்டு நூற்க ணுரைத் துக் காட்டினரென்று குறிப்புறுத்திற் றென்றுணர்க.

என்னெனி லுரையென்பது பொன்னுரையும் பொருளாகக் கோடலினென்க. உரைத்தான் என்னும்பயனிலை செயப்படு பொருளி

Koviloor Digital Library

னிறுதியி னியையாது செயப்படு பொருட்குங் கருவிப் பொருட்குமேல் **தாடலே மேல் வைத்து** என்பத னிறுதியிற் றொடர்ந்து நின்றதென் னெனின், சிவஞானத் திக்கை யுடையரா யுரைத்தாரென்பது மன்றித் தமதாசாரியர் திருவடி சான்ருகத் தாங்கண்ட வனுபவத்தை விளங்க வுரைத்தாரென்பதுங் குறித்தற்கென்க. என்னை? தாடலேமேல் வைத்து எனவே சான்ருகவைத்து என்பது தானே யமையுமாகலின்.

தலேமேல் வைத்து என்பதன்பின் நிற்கக் கடவதாய ஓர்ந்து என் பது செயப்படு பொருட்பி னிறுதி நிலேயாய் நின்ற தென்னெனின், இந்நூல் கற்ருேர்க்குக் கருமங் குறைந்து ஞானமேலிடுதலுண்மை குறித் தற்கென்க. எங்ஙனமெனின், அவ்வோர்ந்து என்பது விணக்குறை யாகலினென்க. **'உள்ளத்தழிவி லடுக்குந்தேணை யன்பரெலா முண்ண ஒழிவிலொடுக்க நூலோர்ந் துரைத்தான்'** எனக்கொண்டு போத வொழிவின்கண் அடுப்பதாய ஆனந்தத்தை யன்பரெல்லா மனுபவிக் கும் பொருட்டு வேதாகம முடிபான ஞானநெறியை யாராய்ந்து ஓழிவி லொடுக்கமென் ருேர்நூலே யுரைத்தார் எனப்பொருள் கூறுவாருமுளர். அங்ஙனங் கூறின் ஆசிரியர் பரஞானமுடையாரென்பது தோற்ருது: அபரஞானமுடையாராகப் பொருள்படு மாகலினும், அபரஞானத்தாற் கூறப்பட்ட நூல் மிகச் சிறவாமையானும்; அது பொருந்தா தென்க.

இந்நூலியற்றற் கேற்ற நற்பொருளுடைமையுஞ் சிறப்புப் பாயிர விலக்கணத்துள் ஆக்கியோன் பெயரேயென முதனிறுத்தப்பட்ட நிமித்த காரணச் சிறப்புடைமையும் இச்செய்யுண் முடிபுக்கெழுவாயாந் தலேமை யுடைமையும் பற்றி வள்ளலென முதனிறுத்திய தென்க. இந்நூலாசிரி யர்க்கு ஆசாரிய ரிவரென்பது தோன்றற்கு அவ்வள்ளலென்பதன்புடை குருராயனென்பதை நிறுத்திய தென்க. இங்ஙனம் ஆசாரியரென்பவர் **பிள்ளேயார்** என்பது தோன்றற்கு **ஞானசம்பந்தனென** வைத்தல் வேண்டுமாகலின் அந்த ஞானத்தைக் குறிக்கும் பாசவெற்றியாய **'வாதுவென்ற'** வென்பது முன்கூடிச் சம்பந்தனென வதன்புடை நிறுத்திய தென்க.

இரண்டாம் அடிக்கட் பிள்ளேயார் தாள்கள் நிறுத்தத் தொடங்கி முன்னர் அத்தாள்களின் இயற்கை யருளென்று குறிக்க வள்ளலென் றும், அதன்வடிவா் ஆனந்தமென்று குறிக்க மலரென்றும் முறையே வைத்து வள்ளன் மலர்த்தாளென நிறுத்தியதென்க. தாள்களன்றியும் பிள்ளேயாரும் அருளியற்கையரே யென்பது குறிக்கச் சம்பந்தனென் னுஞ் சத்தந் தோற்றியவுடன் வள்ளற் சத்தந்தோன்ற நிறுத்திய தென்க. இங்ஙனம் நிறுத்தியவை சொற்பொருண் முறைநிலே. தாளென் பதற்குத் தலேயென்பதற்குமுள்ள சொற்பொருட் சம்பந்த வின்பம்பற் றித் தாடலேயென்றும் தலே யென்பதற்கும் மேலென்பதற்கு முள்ள

Koviloor Digital Library

உரிமை நோக்கம் பற்றித் தலைமேலென்றும், மேலென்னு மிடப் பொருட்கு வைத்தற்றெழில் சிறந்ததுபற்றி மேல்வைத்து என்றும், வைத்து என்பதற்கும் உரைத்தானென்பதற்கும் இறுதியு முதலு மின மாதல்பற்றி வைத்துரைத்தா னென்றும் முறையே நிறுத்திய தென்க. இங்ஙனம் நிறுத்தியவை சொன்முறைநிலையும் சொற்பொருள் முறை நிலையுமாம்.

இங்ஙனம் முற்று முறைநிலை கூறப்புகின் மிகப் பெருகுமாகலி னொருவாறு காட்டினம். மற்றையவு மிவைகொண்டுணர்க வென்க.

இச்செய்யுட் பொருள் ஆசிரியரது அருளறிவின் மாட்சிமையை வெளிப்படையானுங் குறிப்பானும் விளங்க விரித்தலின் வாகைத் திணையுட் சால்பு முல்லைப் பொருளின்பாற் பட்டதென்க. என்னை? * **"சால்பு முல்லைப்பொருள் :—வான்றோயு மலையன்ன சான்றோர் தஞ்சால்புரைத்தன்று"** என்பவாகலின் இச்செய்யுள் தன்னுட் செயப் படு பொருளாய் நின்ற நூற்சிறப்பைத் தன்னானுந் தன்னுறுப்புக்களா னுங் குறிப்பாற் குறித்து நின்ற நன்னேக்குடைச் செய்யுளென் றுணர்க. அங்ஙனங் குறித்தவை யெங்ஙன மெனின் :—

இச்செய்யுள்தான் கலிப்பா, வஞ்சிப்பா, ஆசிரியப்பா வென்னு முப்பாவினுஞ் சிறந்த, **வெண்பாவாகலின்,** இக்குறிப்பால் இந்நூல் **சரிதைநூல், கிரியைநூல், யோகநூல்** என்னு முந்நூலினுஞ் சிறந்த **ஞானநூல்** என்று குறித்ததென்க.

தான் ஈரசையானுசிட் டிருவகைத் தளை தழீஇ யொழுகிசைச் செப்பலோசையான் வந்ததாகலின், இக்குறிப்பால் இந்நூல் ஆகம முடிவும் வேதமுடிவுங் கூறு மிருவகை நெறியு மொருவகை நெறியாத் தழீஇக் கொண்டிருந்தமை குறித்ததென்க.

தான் ஒன்றடுத்த விரட்டை முப்பத்தா றெழுத்துக்களைக் **கொண்டு** நிற்றலின், இக்குறிப்பான் இந்நூல் பாசமொன் றடுத்த தத்துவ முப்பத்தா றென்றும், முப்பத்தாறன் றன்மை யிவையென்றும் பகுத்தறிதல் வகையு முணர்த்துவ தெனக் குறித்ததென்க.

தான் நான்கடுத்த முப்பத்தாறசைகளை யசைத்து நிற்றலின், இக்குறிப்பா னிந்நூல் அத்தத்துவ முப்பத்தாறனையும் நியதிகளைத் தன் முறையை யுணர்த்துவதெனக் குறித்ததென்க. அஃதேன் முப்பத்தா றன்மே னன்கடுத்த தெனனெனின்,— ஆன்ம தத்துவத்தின் வன்மை தோன்றற் கோரசையும், வித்தியா தத்துவத்தின் வலிதோன்றற் கோரசை யும், நாததத்துவத்தின் பெருமை தோன்றற் கீரசையு மிகுந்தனவென்க.

*. புறப்பொருள் வெண்பாமாலை, 8. வாகைப்படலம், 31.

Koviloor Digital Library

தான் பதினைந்துசீர் சீர்கொள நிற்றலின், இக்குறிப்பான் இந்நூல் ஆசாரியத்தன்மை, சீடத்தன்மை, பதித்தன்மை, பசுத் தன்மை, பாசத்தன்மை, உபதேசத்தன்மை, பக்குவத்தன்மை, யோகநிவர்த்தி, கிரியை நிவர்த்தி, சரிதை நிவர்த்தி, விரத்தி விளக்கம், துறவுத்தன்மை, அருளவத்தைத் தன்மை, வாதனை மாண்டார் தன்மை, நிலையியல்பு என்னு மிப்பதினைந்தனையுஞ் சீர் பெறக் கொண்டதெனக் குறித்ததென்க.

தானெழுவகைத் தளையி னியைந்த தாகலின், இக்குறிப்பான் இந்நூல் ஆன்மதரிசனம், அருட்டரிசனம், பரைதரிசனம், பரை யோகம், பரையோக நீக்கம், போதவொழிவு, இன்பப்பேறு என்னு மெழுவகை நிலையும் அறிவிப்பதெனக் குறித்ததென்க.

தான் தனிச்சொல் பெற்று நான்கடியுடன் நடந்த தாகலின், இக்குறிப்பான் இந்நூல் கூறு மொப்பற்ற ஞானமும், சுத்தச்சரிதை, சுத்தக்கிரியை, சுத்தயோகம், சுத்த ஞானம் என நான்கு பாதத் தோடு நடப்பதெனக் குறித்ததென்க.

தான் ஒரூஉத் தொடையோடு முத்தொடையா னியன்றதாகலின், இக்குறிப்பான் இந்நூற் சுருதி, குரு, அனுபவ மென்னு மூன்று மொத்தியன்ற தெனக் குறித்ததென்க.

அல்லதூஉம் இச்செய்யுளடி நேரடியாய் விதித்த வெழுத்தெல்லை யினிகவாது நிற்றலின், இக்குறிப்பான் இந்நூல் மெய்வீட்டி னெறித்தாய் அவ்வீட்டி னெறிக் கெல்லையாய ஞானத்தினிகவாது, நின்ற தெனினுமா மென்க. எல்லை என்னெனில், * "பத்தெழுத்தென்ப நேரடிக்களவே, யொத்த நாலெழுத் தொற்ற லங்கடையே" யென்ப வென்க. இங் ஙனம்குறித்தற்கன்றே இச்செய்யு ளீற்றடியி னூற்பெயரை வேறடை கொடாது தனிமையி னிறுத்திய தென்க.

இச்செய்யுள் சிறப்புப் பாயிரத்தாயி னப்பாயிரத் திலக்கண மிதனுளிருந்தவா றெங்ஙன மென்னின்: **வள்ள** லென்பதனு லாசிரியர் பெயரும், **குருராயன் வாதுவென்ற சம்பந்தன் வள்ளன் மலர்த் தாடலைமேல் வைத்துரைத்தா** னென்பதனுல், ஞானுசாரியராகிய பிள்ளையாரருளுபதேச வழித்தென வுட்கொளப் படுதலின் **வழியும்**, இந்நூற் றொடர் தமிழ்த் தொடராகலி னித்தமிழ் வழங்குநிலமே யிந்நூல் வழங்கு நிலமெனக் கருதப்படுதலின் **எல்லையும்**, ஒழிவி லொடுக்க நூலென்பதனுல் **நூற்பெயரும்**, ஒழிவிலொடுக்கமென அன் மொழித் தொகைப் பெயர் மாத்திரையி னில்லாது நூலென விரித் தமையி னிந்நூலுந் தொகை விரியுடையதெனக் கருதப்படுதலின் **யாப்பும்**, உள்ளத் தழிவிலென்பதனுற் கருதிய **பொருளும்**, அன்ப

* தொல்காப்பியம், செய்யுளியல், 38.

Koviloor Digital Library

ரெல்லாம் உண்ணவென்பதனுல் அன்பரெலா முணற் பொருட் டிஃ தியற்றுக வென்றுள்ளெழுந் தெதிரிட்டு நின்றது ஆசிரியரது பெருங் கருணையெனக் கருதப்படுதலிற் கேட்போரும், உள்ளத்தழிவி லடுக்குந் தேனென்பதனுற் பயனும் புலப்படுமாகலின், அவை யிருந்தவா றிங்ஙனமென்க.

இவ்வுரை — முற்காலத்து — கண்ணுடைய வள்ளலார் இயற்றிய ஒழிவிலொடுக்க நூலின் பாயிரச் செய்யுட்கு (1851-ல்)
சிதம்பரம் இராமலிங்க பிள்ளையவர்களாற் செய்யப்பட்டது.

ஒழிவிலொடுக்க நூற்கும் சிதம்பர சுவாமிகள் உரைக்கும் சுவாமிகள்

எழுதிப் பதிப்பித்த குறிப்புகள்

I. ஒழிவிலொடுக்கநூலின் உரைபாடத்தில் சிலசில இடங் களிலுள்ள மறை சொற் பொருட்குத் தெளி சொற்பொருள்.

1. பொதுவிலுபதேசம்.

1.வது "வேதாகமப்பவுரி வீசும்" என்னும் திருவெண்பா.

1. **பவுரிக் கூத்து** — வலமிடமாகச் சூழ்ந்தாடுங் கூத்து.
2. **குறு மன்னியர்** — சிலராலறிந்து மதிக்கப்படும் பிரபுத்துவ முடையோர்.
3. **மகா மன்னியன்** — பலராலுமறிந்து மதிக்கப்படும் பிரபுத் துவமுடையோன்.
4. *** பிரளயாகலர்** — மும்மலங்களுள் ஒருமலம் நீத்தோர், அவர் பிரமன் முதலானோர்.

2-வது "தன்னிழப்பை என்ன கற்றுச் சாதிப்பான்" என்னும் திருவெண்பா.

1. **ஞாதுரு** — காண்பான்; 2. **ஞானம்** — காட்சி;
3. **ஞேயம்** — காணப்பட்டது.

3-வது "கூலித் தொழிலாளர்" என்னும் திருவெண்பா.

1. **சூக்குமை வாக்கு** — வார்த்தை தோன்றற்கு முதற்காரணமா யுந்தியிலே நாதவடிவாய் நிற்குமொரு சக்தி.
2. **பகடிக் கூத்து** — உள்ளதுபோன் றில்லாததைக் காட்டும் வெளிவேடம் அல்லது அகசியக்கூத்து.

* 165-ம் பக்கத்தில் அனுபந்தத்தைப் பார்க்கவும்.

Koviloor Digital Library

4-வது "குட்டித்திரட்கரடி" என்னும் திருவெண்பா
பரஞானம் — அனுபவ ஞானம், அபரஞானம், வாசகஞானம்.

5-வது "குருட்டரிப்பனுர்க்கும்" என்னும் திருவெண்பா
1. அரிப்பாளன் — குப்பை முதலிய விடங்களிற் பொன் முதலிய அரித்தெடுக்கின்றோன்.
2. கொழுந்தாடை — கரும்பின் நுனித்தழை.

10-வது "சாயாபுருடனைப்போல்" என்னும் திருவெண்பா
சாயாபுருடன் — தந்நிழலைப்பபார்த்துப் பின்-ஆகாயத்தை யுற்று நோக்குகின்றோர்க்கு அவ்வாகாயத் தின்கண் புருடவடிவம் போற் றோன்றும் அந்நிழற்காட்சி.

12-வது "தாக்கற்ற பூரணத்தில்" என்னும் திருவெண்பா
பைமறித்தல் — உள்ளிருந்த சரக்கு வெளிப்படப் பை வாய்தொட்டு உட்புற மேற்பட்டும் வெளிப்புற முட்பட்டு மடங்க மடக்கல்.

16-வது "ஆலிங்கனத்திலே" என்னும் திருவெண்பா
கிண்கிணிவாய்ச் செய்தலர்தல்—வட்டவடிவாக முகங்கொண்டு மலர்தல்.

21-வது "முலையுண்ணி நீருண்ணும்" என்னும் திருவெண்பா
பஃறுளை — பலதுளை.

42-வது "நன்மையு முன்னிலையும்" என்னும் திருவெண்பா
பற்ற — பார்க்கிலும்.

43-வது "மலையேறிப் போவார்க்கு" என்னும் திருவெண்பா
அருகித்தோற்றல் — சுருங்கித்தோற்றல்.

52-வது "சத்தாதி தத்துவம் போய்" என்னும் திருவெண்பா
பிரேரகம் — காரியப்படுத்தல்.

54-வது "தத்துவத்தா ரல்லார்" என்னும் திருவெண்பா
பிரதிபலிதம் — எதிர் விம்பம்.

56-வது "நாயேறி வீழ்ந்தேன்" என்னும் திருவெண்பா
சகசமலம் — அனாதியாகியமலம்.

2. சத்திநிபாதத் துத்தம ரொழிவு

2-வது "கின்னரியைத் தொட்டவர்போல்" என்னும் திருவெண்பா
கடா — வினா.

3-வது "சும்மாதே பார்த்திருக்க" என்னும் திருவெண்பா
விட்டிசையா திசைத்தல் — நடுவே நில்லாம லொலித்தல்.

Koviloor Digital Library

4-வது "மூலமூதிர" என்னும் திருவெண்பா
நக்கினம் — நிருவாணம்.
17-வது "கல்லையுருவாக்கும்" என்னும் திருவெண்பா
தேறிட்டநீர் — தேற்றாங் கொட்டையாற் றெளிவிக்கப் பட்டநீர்.

3. யோகக் கழற்றி

8-வது "உபதேசப்பித்தோ" என்னும் திருவெண்பா
கவுசனை — யாதாயினுமோர் பொருளை யுள்வைத்து மறைய மேன்மூடிக் கட்டு மேற்கட்டு.
14-வது "கூட்டிற்குரங்கை" என்னும் திருவெண்பா
சுழல் விறிசு — கொள்ளி வட்டம் போற் சுற்றுவதாய ஒருவகை மருத்துவாணம். (இத்தேயத் திக்காலத்தில் சுழல்புரிசு என்று வழங்குகின்றது.)
18-வது "மண்ணை மலையை" என்னும் திருவெண்பா
அநன்னியம் — அன்னியமல்லாமை.
22-வது "பழக்கங்கொடியது பார்" என்னும் திருவெண்பா
நெற்பொலி — தூற்றுநெல்.
23-வது "கட்டியநாண் விட்டாலும்" என்னும் திருவெண்பா
தும்புசெறித்து — தும்பு அவிழ்த்து.
30-வது "மறப்பு நினைப்பும்" என்னும் திருவெண்பா
அனுபவிக்கச் சிதைக்கும்— அனுபவிக்க அறிகின்ற போதும்.

5. சரிதைக் கழற்றி

13-வது "கயிற்றரவும்" என்னும் திருவெண்பா
அவித்தியாகதம் — அஞ்ஞானமயம்.

6. விரத்தி விளக்கம்

2-வது "அறுசமையத்தோர்க்கும்" என்னும் திருவெண்பா
முடி களச முத்தி — முடி — சிரசு; களசம் — நீக்கம், முத்தி — வீடு.
3-வது "வாசிக்குச் சாவீரர்" என்னும் திருவெண்பா
வாசியென்ற வார்த்தை — இது செய்க விடுக வென்று நியாயமாகக் கூறும் வார்த்தை.

Koviloor Digital Library

8-வது "அறிந்துபற்றி நின்று" என்னும் திருவெண்பா
1. வியாபகம் — கலப்பு; 2. வியாத்தி —கலக்கப்படுவது
9-வது "கூரிருளின் மின்மினி" என்னும் திருவெண்பா
விசர்க்கரித்தல் — விடுத்தல்.

7. துறவு

3-வது "பட்டினத்து பிள்ளையினை" என்னும் திருவெண்பா
1. வெறுவீடர் — அனுபவிப்பதற் கில்லாமையால் விட்டோர்போன் றிருப்போர்.
2. கறண்டல் — பற்களால் நெருக்கிப் புரண்டுதல்.
13-வது "குரங்கிற் றுனிச்சீ" என்னும் திருவெண்பா
சேட்டித்தல் — தொழிற்படுத்தல் அல்லது குணக்கேடான தொழில் விளைத்தல்.
19-வது "அங்கக்காரன் றுதிப்பும்" என்னும் திருவெண்பா
சிங்கி — விலங்கு.

8. அருளவத்தைத் தன்மை

5-வது "கருவி கழல" என்னும் திருவெண்பா
1. நாங்கூழ் — நாகப்பூச்சி யென்னுமோர் கிருமி.
2. விகளம் — மௌனம்.
9-வது "நடைதளர்ந்து" என்னும் திருவெண்பா
மடலெடுப்பு — பனைமடலாற் குதிரை செய்தேறுதல்.
18-வது "சூலையும் பேயும்" என்னும் திருவெண்பா
ஐவரரசர் — பாண்டு மக்களாகிய தருமன் முதலிய ஐவர்.
38-வது "உருகு பரமசுக" என்னுந் திருவெண்பா
மந்தகாசப் பிரகாசம் — புன்னகைப் பிரகாசம்.

II. அடிக் குறிப்புகள்

[1] "உள்ளவுரை நாயேற் குறச் செய்யும்" என்று பாடமோதலு முண்டு.

1. காப்புச் செய்யுட்கள்:—
3-வது "வள்ளலுரைத்த...தாள்" என்னும் திருவெண்பா

Koviloor Digital Library

[2] ஈண்டு — இத்தோத்திரச் செய்யுட்கள் உரையாசிரியரால் இந் நூற்கு உரை இனிது முடிதற்பொருட்டு இயற்றப்பட்டன.

[3] பரிபூரணமே பரையாய் — என்பதைப் பரிபூரணப் பரையே யாய் — என்று கூட்டுக.

[4] இங்ஙனம் செய்யுட்கட் டாறு யென்னு மொருமையை யுரைக் கட் டாமாகி யெனப் பன்மையாகக் கூறியது என்னை எனின், பிள்ளை யார் என்னும் திருவருட்பெயரின் பெருமைநோக்கி என்க. இவ் வாறு கூறியவற்றிற் கெல்லாம் விதி யிங்ஙனமென்றுணர்க.

[5] கதறல் — கதற்றல் என விகாரமாயிற்று.

[6] அகந்தை யென்பது — அந்தை யென்றிடைக் குறையாயிற்று.

[7] செட்டையாற் பரிசித்தன் முதலியன வவ்வம் முட்டைக டத் தம் பருவமடைதற் கென்றறிக.

III. அமைத்துக் கொளல்

---

[8] **காப்பின்கண்** "ஈண்டு - இத்தோத்திரச் செய்யுட்கள்" என்ற வையுள் "ஆனைமுக னறுமுக" னென்னுஞ் செய்யுளை யொழித்து வேறு கொள்க.

[9] "இக்கதையை யிப்பொருளுக்கு" என்றதை அக்கதை யிப்பொரு ளுக் கெனக் கொள்க. இங்ஙன மின்னும் சில விடங்களி லுள: அவற்றையு மங்ஙனங் கொள்க.

"மாறுபாடாய்க் கருதி" என்பதில் செய்து என்னும் வாய் பாட்டு வினையெச்சமாய ஆய் என்பதை செயவென்னும் வாய்பாட்டு

---

2. இதன் திருத்தம் ஒன்றை "அமைத்துக்கொளல்" என்ற அடுத்த பிரிவிற் காண்க.
3. 1. பொதுவிலுபதேசம்:—
   41-வது "அருளாலே நம்மை" என்னும் திருவெண்பா
4. 42-வது "தன்மையு முன்னிலையும்" என்னும் திருவெண்பா
5. 51-வது "நினைப்பு மறப்பறுத்து" என்னும் திருவெண்பா
6. 53-வது "சிந்தை பயமிலச்சை" என்னும் திருவெண்பா
7. சந்நிநிபாதத் துத்தமரொழிவு:—
   13-வது "பரிசித்துஞ் சிந்தித்தும்" என்னும் திருவெண்பா
8. காப்புச் செய்யுட்களைக் குறிந்த அடிக் குறிப்பு.
9. பொதுவிலுபதேசம்:—4-வது "குட்டித் திரட்கரடி" என்னும் திரு [வெண்பா.

Koviloor Digital Library

வினையெச்சமாய ஆகவெனக்கொள்க. இங்ஙனம் இன்னும் சில இடங்களிலுள : அவற்றையு மங்ஙனங்கொள்க.[1]

[2] **வடசொற்களுள்** ஞாநம் — ஞானம்; ஆநந்தம் — ஆனந்தம் எனத் தமிழிற்குப் பொதுவுஞ் சிறப்புமாய நகர னகரங்கள் சிற்சில விடங்களில் விரவி நின்றன. அவற்றைத் தமிழ்ச் சிறப்பு வழக்கு நோக்கி யமைத்துக் கொள்க.

[3] **"இருப்பதுமன்றி** அங்ஙன நின்று கேட்குமொழி பிரமோபதேச மொழியாகலி" னென்பதும் சில வுரை பாடங்களி னுண்டு.

[4] **"ஞானத்திலின்பை நசிப்பித்து நானதுவா மூனத்தை யாரெரிழிவிப்போர்"** என்பதற்கு, "சுவானுபவத்தான் ஞானானந்தத்தைப் பெருது அதனை விடயச் சேற்ருற் கெடுப்பித்து விடயச்சேற்றி லழுந்தி நின்று அவ்வானந்தத்தை யடைதற் கேதுவாய்க் கூறும் ஞான சாத்திரங்களைக் கேட்டறிந்த மாத்திரத்தினுல் அவ் வானந்தமய னுனென்று கூறும்" என்பது சிலவுரை பாடங்களிலுண்டு: இது உரை வேறுபாடு.

அனுபந்தம்

160-ம் பக்கத்தில் கண்ட "பிரளயாகலர்—மும்மலங்களுள் ஒரு மல நீத்தோர், அவர் பிரமன் முதலானோர்" என்னும் தெளி சொற் பொருள் விளக்கம்.

பிரளயகாலர் இருமலமுடைய உருத்திரர்கள் என்றும், சகலராவார் மும்மலமுடையராகிய பிரம விட்டுணுமுதற் கிருமி ஈருகவுள்ள உயிர்கள் என்றும் ஒரு சாரார் கூறலும், அதை ஆராயும் முகத்தான் மேற்கண்ட தெளிசொற்பொருளின் நுண்கருத்தை சுவாமிகளின் முதன் மாணக்கராகிய தொழுவூர் வேலாயுத முதலியார் அவர்கள் விளக்கிக்காட்டிய வாசகம் வருமாறு:—

பிரளயாகலர் இருமலமுடையார் ஆவார் எனில்,— இருமலம் உடைமையும் பிரளயாகலர் அவற்றை உடையராவாரு மாயின், இரு

1. பொதுவிலுபதேசம்:—"குட்டித் திரட்கரடி" என்னும் திருவெண்பா.
2. 5-வது "குருட்டருப்பனுர்க்கும்"; 10-வது "சாயா புருடனைப்போல்" என்னும் திருவெண்பாக்கள் முதலியன.
3. 8-வது "தேனுண் டுமிழும்" என்னும் திருவெண்பா
4. சந்நிநிபாதத் துந்நம ரொழிவு:—
6-வது "வாநிவடத்தினமும்" என்னும் திருவெண்பா

Koviloor Digital Library

மலத்தையும் புசித்தற்கு உடைமையாகத் தேடியபின் உடையராவாரெ னக் கூறியவொருயிற்று. எனவே இருமலத்தைத் தேடுவாரெவரோ அவர்தாம் பிரளயாகலர் எனப்பட்டவர் என்று ஆம். என்னை? ஆவா ரென ஆக்கவினை எதிர்காலம் பற்றி நிற்றலானும், உடையார் என்பது முக்காலத்திற்கும் பொதுவாகிய குறிப்பு வினைமுற்று ஆதலானும், அதுவினையாலணையும் பெயராகி அப்பெயர் மற்றொரு பெயரோடு ஒட்டு மாறு விளக்கும் பண்பு வாசகமாய் இறந்தகாலப் பெயரெச்சம் அடுத்து நிற்றலானும் என்க. அங்ஙனமாதலின், எம்மலத்தையும் ஒழிக்க முயல்வதே சிறப்பு எனவும், அங்ஙனம் ஒழித்தாரே புவனேச ராகிய உருத்திரராதியர் எனவும், வேதாகமங்கள் கூறி முறையிட வும், அதனை நோக்காது ஒழிக்கத்தக்க இருமலத்தையும் புசித்தற்கு உடைமையாகத் தேடுவார் உருத்திரர் என்று பொருள்படப் பிரளயா கலராவார் இருமலமுடையராகிய **உருத்திரர்களென்று** கூறுவது மாறு கொளக் கூறல் முதலிய குற்றங்களுக்கு இடனாய் ஆற்றல் முதலிய கெட்டு நின்றது. இனி...அவ்வாசகத்தை நினைப்பினும் பெரும் பாத கங்களுள்ளும் பெரும்பாதகம் விளையும் என்க.

இங்ஙனமாகலி னன்றே மலம் துன்பஞ் செய்வன என்றும் அவை ஒழித்தற்பாலனவும் பிறவும் என்றும், யாவர்க்கும் பொருள் கிடைக்கப் **பிள்ளையவர்கள்** அம்மல மூன்றனுள் ஒன்று ஒழித்தார் என்றனர். ஆகவே, இனி இரண்டொழிப்பார் என்பது கூறுதமையும். ஆகலின், **பிள்ளையவர்கள்** கூறியதாகிய "**மும்மலங்களுள் ஒரு மல நீத்தோர் பிரளயாகலர்—அவர் பிரமன் முதலானோர்**" என்றதுவே "*1. சுருங்கச்சொல்லல் — 2. விளங்கவைத்தல்—3. நவின்றோர்க்கினிமை — 4. நன்மொழி புணர்த்தல் — 5. ஓசையுடைமை — 6. ஆழமுடைத் தாதல் — 7. முறையின் வைப்பே — 8. உலகமலையாமை — 9. விழுமி யது பயத்தல் — 10. விளங்கு தாரணத்ததாகுதல்*" [1] என்னும் பத்தழ கினுக்கும் உதாரணமாய் நின்றதோர் வாசகமென்க...

ஆயின் பிள்ளையவர்கள் பிரமன் முதலாயினோரைப் பிரளயா கலர் எனக் கூறினர். அக்கருத்து என்னையெனில்:—

பிரளயாகலர் மூவகையாருள் ஒருவர், மலகன்ம பரிபாகராய் அவ் வெண்ணமே இறை திருவருளான் முத்தி அடைவர் எனவும; (மற் றொரு வகையார்) அபக்குவ மலகன்ம சகிதராய் புரியட்டகம் பெற் றனராயினும் அவருட் சிறந்தார் மந்திரேசுரராய் புவனாதிபதித்துவம் அடைந்து, ககனேசாதி அஷ்டமண்டலிகளாய்க் கலாதத்துவத்தினும், குரோதேசாதிஎண்மராய்க் குணதத்துவ மஸ்தகத்திலும் வீரேச ஸ்ரீகண் டேசராய்க் குணதத்துவத்தின் கீழும், பிரமாண்டத்தின்மேலும், சதருத்

1. நன்னூல். பொதுப்பாயிரம், 13.

Koviloor Digital Library

திரராய்ப் பிரமாண்டாதாரர்களுமாய் வசிப்பர் — இவர் அதிகாரபோகார்த்தம் தூலமடைந்து சகலர்போல்வர் எனவும்; மற்றொருவகையார் புரியட்டகமுடையராய்க் கன்மானுகுணயோனிகளை அடைவர் எனவும்; முற்கூறிய சதருத்திரர் **பிரமன்** முதலானோர் எனவும் **கபாலீசன்** முதலானோர் எனவும் — மூலாகம பேதங்கள் கூறுதலின், அவ்விரிவகையாமாறு விளங்கப் **பிள்ளையவர்கள்** சுருங்கக் கூறுதல் என்னும் அழகாதி பெறக் கூறியவாறென்க.

இக்கருத்தினை போஜதேவர் அருளிச் செய்த **தத்துவப் பிரகாசிகை**, அகோரசிவாசாரியார் அருளிச்செய்த **அதன் உரை**, காமிக பேதமான **மிருகேந்திரம், சித்தாந்தசேகரம், திருமந்திரமாலை** முதலிய வற்றுள்ளுங் காண்க. இனி **விஞ்ஞானகலர் சகலர்** இலக்கணமும் பிறவும் இடம்பெற்றுழி விரிப்பாம்.

இனிச் சித்தாந்த சேகரத்தில் அஷ்டாதச சதவுருத்திரர் திருநாமங் கூறுமிடத்து,

„కపాలీశోహ్యజో బుద్ధో వజ్రదేహప్రమర్ధనః
విభూతిరవ్యయశ్శాస్తా||"

"கபாலீசோஹ்யஜோ புத்தோ வஜ்ரதேஹ ப்ரமர்தந:
விபூதிரவ்யயச்சாஸ்தா||"

என்று தொடங்கி,

„అథభూభూతకాలాగ్ని రుద్రోహాటక ఏవచ
కూర్మాణ్డజశ్చ సత్యశ్చబహ్మావిష్ణుశ్చరుద్రకః||"

"அதபூபூதகாலாக்நி ருத்ரோஹாடக ஏவச
கூர்மாண்டஜச்ச ஸத்யச்ச ப்ரஹ்மவிஷ்ணுச்ச ருத்ரகஹ:|| "

என்று முடித்தவற்றுள் பிரமன் விஷ்ணு என்பவர்கள் உருத்திரபேதமேயாய் அடங்குவர் என்பதும் பிரளயாகலரே என்பதுங் காண்க.—

ஆயின் பிள்ளையவர்களுக்குப் பிரளயாகலர் என்பவர் உருத்திரரே என்பது கருத்தாய் அவர் பெயர் விளங்கக்கூறுவது வேண்டினராயின், **கபாலீசன்** முதலானோர் எனக்கூருது பிரமன் முதலானோர் என மயங்கக் கூறுவானேன்?, எனில், அற்றன்று: பிருதிவி தத்துவத்திலுள்ள புவனபேத **நூற்றெட்டினுள்** அண்டத்துட் புறத்துள்ள புவனம் ஆறனுக்குந் தலைவராவாருள் பாதலத்தில் **காலாக்கினி யுருத்திரர், கூர்மாண்டர், ஆடகேசுரருமாகிய** மூவர் போக, பூமிக்கு மேல் ஆகாயத்திலுள்ள மூன்று புவனத் தலைவராகிய பிரமா விஷ்ணு ருத்திரருள் முதலாதல் நோக்கி பிரமன் முதலானோர் எனக் கூறினர் என்க. இங்ஙனம் மூலாகம **வுபாகம பத்ததி** முதலியவற்றுள்ளும் உருத்திரர் பேதங்களைக் கூறுமிடத்து ஒவ்வோர் காரணம்பற்றிப்

Koviloor Digital Library

பிரசித்திப்பொருளை அந்தமாகவும் ஆதியாகவும் கூறுதல் வழக்காதல் நோக்கி பிரமன் முதலானோர் எனக் கூறியுள்ளனவுங்காண்க. இவற்றை விரிப்பிற் பெருகும்.

இங்ஙனம் பிரளயாகலர் புரியட்டக சரீரிகளாய் அவருளொரு சாரர் கன்மானுகுண யோனிகளுறுவரென ஆகமங் கூறிற்றேல், புரியட்டகம் மாயாகாரிய தத்துவக் கூட்டத்தானியன்ற தனுவாதலாலும், சகலர் போலத் தூல தேகமும் பெறுதலாலும், அவரை மாயா பாசம் தொலைத்தவரென எங்ஙனங் கூறுவது? இனி, இக்கருத்தை உணராது, பிரமன் விட்டுணுமுதல் கிருமி ஈருகவுள்ள உயிர்கள் மும்மலமுடையார் என்று கூறினரே எனின், அது ஆகமவிதிகளைப் பெற்று அனுபவத்தால் தெரிந்து கூறியவாறு அன்று. ஆதலின் **பிள்ளையவர்கள்** உரையை மறுத்தல் ஆற்றுறதென்க.

இனி மறுத்தல் ஆற்றுதென்ற அம்முறையைச் சொல்வகையானும் பொருள்வகையானும் விரிக்கின்றும். என்னை? அவர் "**சகலர் — மும்மலமுடையராகிய பிரமன் விட்டுணு முதல் கிருமி யீருகவுள்ள உயிர்கள்**" எனக் கூறியதால், மற்றைய விஞ்ஞானகலர் பிரளயாகலர் உயிர்த்தொகையில் உள்ளாரன்று, முத்தர் என்றவாறுயிற்று. அங்ஙனம் முத்தராகவே அவர்க்கு ஒரு மலமும் உள்ளது என்பது பொருந்தாது. இங்ஙனம் உயிர் முத்தர் என்பதன் பொருளும் ஓர்ந்துணர்க. ஆகவே, அது "**மூவகை யாருயிர்வர்க்கம்**" என்றதனேடு முரணுகின்றது.

அல்லதூஉம், ஒரு சாதிவகைப் பல பண்புப் பெயர்ப் பொருளவற்றின் ஆதியந்தம் கூறவந்தவிடத்து, ஆதிக்கு — அச்சாதி இருமைப் பண்புப்பெயர்ப் பொருளையும் அந்தத்திற்கு — அச்சாதிப் பண்புப் பெயரின் ஒரு பொருளையும் கூறலமையாது.

அங்ஙனமன்று; பல பண்பு என்றமையான், தொழில் வேற்றுமையால் சிறப்பியற்பண்பு — பொதுவியற்பண்பு — இழிவியற்பண்பு எனப்பொதுவகையினும் பண்பு மூவகைப் படுமாதலின், அம்மூவகையுங் குறித்தற்கு ஆதியந்தங் குறித்து வேறுபிரித்துப் பொதுவியற்பண்பி சிறப்பியற் பண்பியைச்சேர்த்து முதலென அடக்கி இழிவியற்பண்பியை ஈற்றினடக்கி அங்ஙனங் கூறியவாறெனில், அற்றன்று. அக்கூற்று சாதி நுகர்ச்சி ஒற்றுமையின் கண்ணதன்றிப் பண்பின்பாலதன்று. ஆகலான் நுகர்ச்சி ஒற்றுமை யுடைய சாதியை விரிக்க வந்தவிடத்துப் பண்பு வகைப்பாடு பற்றிக் கூறவேண்டுவதின்று. விளங்குதற்கெனின், சிறப்பியற் பண்பியையும் இழிவியற்பண்பியையும் முதலுங் கடையுமாகக் குறித்தாற்போதும். அதுவே மரபுமாம். ஆகவே '**விட்டுணுமுதல் கிருமி ஈருக**' வெனில் பொது வியற் பண்பியாகிய

Koviloor Digital Library

பிரமனைக் கூறவேண்டா. இடையிற்றானே போதரும். அங்ஙனமன்றிப் பண்பையுடைய பெயரைப் பிரித்துரைத்து முதலென ஓர் எண்ணுப் பண்பியாக அடக்குதல் பண்புப் பொதுமை கூறுமுகத்து வழு: எண்ணுப் பண்பின் ஓரியற் பொதுப்பண்பி சேர்வதல்லது ஓரியல் வேற்றுமைப் பண்பிகள் தம்முட்சேராவா மாகலின். அற்றேல், பிரம விட்டுணுக்கள் ஓரியற் பொதுப்பண்பியாகாரோ வெனில், ஆகார்; நாமரூபக் கிரியை முழுவதும் வேற்றுமைப் படுதலான் என்க.

அற்றேல், பிள்ளையவர்கள் "பிரமன் முதலானோர்" எனக் கூறுதலின், அவன்மேற் சிறந்த விட்டுணுவும் உயிரெனக்கூறி மறுத்தற் குப் போலும் அங்ஙனங் கூறியதெனில், ஆண்டும் "விட்டுணு முதல் கிருமி ஈறாகிய" எனக் கூறி னமையும்; "பிரமன் விட்டுணு முதல்" என்பதும் வழுவேயாம் என்க. ஆகலின் சொல்வகையாலும் சொற் புணர்த்த வகையாலும், ஒருசார் பொருள் வகையாலும், அவ்வாசகம் வழுவேயாம் என்க. இதனை இன்னும் விரிக்கிற் பெருகும்.

இனி, பொருள் முழு வகையினுல் ஆராயினும் பொருந்தாது. என்னை? அவ்வொழிவி லொடுக்கத்து [1] "வேதாகமப் பவுரி வீசும்" என்ற குருதோத்திர முதற்றிரு வெண்பா "கருணை பொழிவான் எடுத்தகை" என்றவிடத்து, பிள்ளையார் உபதேச முறை முதலிய வைகளைத் தெரித்தற்கு எடுத்துக் காட்ட, ஆண்டு எழுந்தருளியிருந்த "தோடுடைய செவியன்"என்னுந் திருக்கடைக் காப்பின் திருவுளக் கிடையை விரித்து [2] "பிரளயாகலர்க்கு அனுக்கிர கித்தலும் இது" என்றதனுலும் அங்ஙனம் மெய்ப்பொருள் வந்த கோலம் குரு வடிவு என்பது.

> [3] தோடு கூற்றுப் பித்தா மூன்றும்
> பீடுடைத் தேசிகன் பேரரு ளாகும்.

என்றதனுல் பெறப்படுதலானும்; ஆண்டு எழுந்தருளிய குருவடிவத் தைப் பிரமன் விண்டு முதலாயினோர் ஆண்டும் கைலை முதலிய பிறண் டும் தரிசித்ததாக அப்புராணமும் பிறபுராணமும் கூறுதலினுலும்; அவர் நீங்கிய கீட்டாதியாயுள்ள மற்றைச் சகலர்கள் அங்ஙனம் எளிதில் தரிசித்தமை கூறப்பெறுமையானும்; பிரம விஷ்ணுக்கள் சகலர் என்ப தற்கு நியாய மென்னை?

---

1. வேதா கமப்பவுரி வீசுங் களாசங்லை
யாதார வெற்பி லபிடேகம் — போதத்
திரளிலெழு பாநு வெனதொழிவி லின்பக்
கருணைபொழி வானெடுத்த கை. (பொதுவிலுபதேசம்)
2. சிதம்பர சுவாமிகள் உரை.
3. அகஸ்தியர் தேவாரத் திரட்டு, திருப்பதிகக் கருத்துரை.

Koviloor Digital Library

இங்ஙனம் சொல்வகை யறியாதாரோ நூல்வகை யறிவார்! அல்லதூஉம், அங்ஙனம் "சகலர் மும்மலமுடையராகிய பிரமன் விட்டுணுமுதல் கிருமி ஈருக வுள்ள உயிர்கள்" என்று ஒழிந் தாரேல், ஔவையார்,

> ¹ மாலய னங்கி இரவி மதியுமையோ
> டேலுஞ் சிவசத்தி யாறு.

எனவும், ஆளுடையவரசுகள்,

> ² * * * காண்டகு சோதி யார்க்குப்
> பிரிவிலா வமரர் கூடிப் பெருந்தகைப் பிரானென் றேத்தும்
> அரியலாற் றேவி யில்லை யையனை யாறு னார்க்கே.

எனவும் வரும் பூர்வாசாரியர்கள் திருவாணைக் கென்ன விடை கொடுக்கக் கூடும்? பூர்வாசாரியர்கள் இங்ஙனம் அப்பிரம விஷ்ணுக்களுக்குச் சிவ சத்தியெனத் தெய்வத்தன்மை தரிப்பது காண்க.

அல்லதூஉம், கிரியார்ச்சனையிற் சத்தகுரு பூசையிலும், பிரா சாத்திகம் ஆதாராதிதெய்வம், நிவர்த்தியாதி அதிதெய்வம், பூதாதிதெய் வம், புவனாதிதெய்வம், கிருத்தியாதி தெய்வம், நவவடிவம் கூறியவற் றுள்ளும் பிறவாற்றானும் பிரம விஷ்ணுக்களைச் சிறப்பித்துத் தியா னிக்கவும் பூசிக்கவுமாகக் கட்டளையிட்டபின், அவர்களைக் கிருமிக்கு ஒத்த கீழுயிர் என்று கூறுவது ஆமோ?

அல்லதூஉம், சேரமான் பெருமாள் பொன்வண்ணத் தந்தாதியுள்,

> ³ இடமால் வலந்தா னிடப்பால் துழாய்வலப் பாலொண்கொன்றை
> வடமா லிடந்துகி றேல்வல மாழி யிடம்வலமான்
> இடமால் கரிதால் வலஞ்சே திவனுக் கெழினலஞ்சேர்
> குடமா லிடம்வலங் கொக்கரை யாமெங்கள் கூத்தனுக்கே.

எனவும், ஆளுடையவரசுகள்,

> ⁴ வடிவுகொண்டார்ந் திலங்குமழு வலங்கைக் கொண்டார்
> மாலையிடப் பாகத்தே மருவக் கொண்டார்.

எனவும் கூறியதற்கேற்ப, வைஷ்ணவத்துள்ளும் பேயாழ்வார் அருளிச் செய்த 3-வது திருவந்தாதியுள்ளும்,—

---

1. ஔவை குறள், வீட்டு நெறிப்பால், 7.
2. "எரியலால் உருவமில்லை" என்னும் திரு ஐயாற்றுத் திருநேரிசை.
3. பொன்வண்ணத் தந்தாதி—6-வது பாட்டு
4. "முடிகொண்டார்" என்னும் தனித் திருத்தாண்டகம்.

Koviloor Digital Library

தாழ்சடையு நீண்முடியு மொண்மழுவுஞ் சக்கரமுஞ்
சூழரவும் பொன்னுணுந் தோன்றுமால் — சூழுந்
திரண்டருவி பாயும் திருமலைமே லெந்தைக்
கிரண்டுருவு மொன்ரு யிசைந்து.

என்று ஒத்துக்கூறியிருத்தலாலும், விஷ்ணுவைக் கீடத்தோடொப்பக் கூறுவது பொருந்துமோ?

ஆயின்,

அறுவகைச் சமயத் தறுவகை யோர்க்கும்
விடுபேருய் நின்ற விண்ணோர் பகுதி
கீடம் புரையும் கிழவோன் (திருவாசகம்—திருவண்டப்பகுதி.)

என்று திருவாசகம் கூறியருளிற்றுலோ எனின், ஆன்மாக்கட்கு மலந் தொலைப்பிக்கு முபாயமும் சிவத்தியல் விளக்கு முகமாகவும் கூறியதன்றி வேறன்று. இக்கருத்தை விரிப்பிற் பெருகுமாதலின் குரு முகத்தா லுணர்க.

திருச்சிற்றம்பலம்

ஒழிவிலொடுக்கம் முற்றிற்று

இன்றுமுதல்
புலால்
உண்ணுதீர்கள்.

சென்னை சமரச சுத்தசன்மார்க்க சங்கம்,
"அருட்பெருஞ்ஜோதி நிலையம்"
7/99, அம்மன்கோயில் தெரு, கிருஷ்ணுங்குளம் சமீபம், சென்னை.
1942

Koviloor Digital Library

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

தொண்டமண்டலசதகம்

1. நூற்பெயர் இலக்கணம்

திருச்சிற்றம்பலம்

* தொண்ட மண்டல சதகம்:

ஒருவாறித னிலக்கணம் விரிக்கின்றும்.

இஃது:— மூவகை மொழி — இருவகைச் சந்தி — முத்திறத் தொகை — ஒருதலை நோக்க — மூந்நிலை யிலக்கணச் செந் நிலைத்தொடர்.

முற்பாட்டுயர் பொருட்டலைமை யுடையதினிலைமை, இடைப் பாட்டுடைய துரிமையுடைமை நிலைமை, பிற்பாட் டுடைமை யுரிமை யு டை ய துடைமையாய — இத்தொடரைச் சொற்றிறங் தோன்றத் தொடர்பின்மை செயின், **தொண்டன் — மண்டலம் — சதகம்** என்று செய்க. இதனுள்,

தொண்டனென்பது

வழக்கியற்பாடு — ஒற்றுமைச்செறிவு — வேற்றியற்கரணம் — குறிப்புயர் நோக்கம் — பொருள்விரியாக்கம் — குற்றியல் வண்ணம் — இடைப்பல் வயிற்றொகை — முதலிய சொல்லியற்பாகு பாட்டினமைந்த முதற்றொகைச் சிறப் புயர்திணைக் காரணப் பொருட் பெயர்.

மண்டலமென்பது

வடசொன்ளேக்கியற் காரணப் பண்புகோ ளிடப் பெயர்.

---

* இவ்வுரை இற்றைக்கு 87-வருடங்கட்கு முன் இராக்ஷச வருடத்தில் (1854-ம் வருஷம் ஜனவரிமாதம்) தொண்டமண்டலம் துளுவ வேளாளர்கள் ஏற்படுத்திய இயற்றமிழ்ப் போதகசாலை இரட்ச கர்த்தாவாகிய கொன்னூர் ஐயாசாமி முதலியாரவர்கள் கேட்டுக்கொண்டபடி ஸ்ரீமத் சிதம்பரம் இராமலிங்க பிள்ளை யவர்களாற் செய்தருளி, நம்மால் பதிப்பிக்கப்பட்ட தொண்டமண்டல சதகத்துட் கண்டது.

(தொண்டமண்டல சதகம் இயற்றியவர்— படிக்காசுப் புலவர்.)

Koviloor Digital Library

சதகமென்பது

வடசொற் பாட்டியற் காரண வெண்ணிலைக்குழூ உக்கோட்பெயர்.
இத்தொடர்க்கண் இயைபின்மையிற் பொருள் கொளின்:—

தொண்டன் — ஆதொண்டன், **மண்டலம்** — வட்டம், **சதகம்** — நூற்றினாலாய கூட்டம் என்று கொள்க.

இயைபுண்மையிற் பொருள் கொளின் :—

தொண்டன் — ஆதொண்டனென்னு மோரரையன்; **மண்டலம்** — இருபதின்காதவெல்லை வட்டமாய நாடு; **சதகம்** — நூறு செய்யுட்களாலாய கூட்டம் என்று கொள்க.

பொருத்த வியைபிற் பொருண் முடிபு கொளின் :—

ஆதொண்டனென்னு மரையனா லாளப்பட்ட விருபதின்காத வெல்லை வட்டமாய நாட்டின் வண்மையைக் குறித்த நூறு செய்யுட் கூட்டத்தானாய வோர் வகை யாப் பென்று கொள்க. இங்ஙனம் வழங்கல் சொற் சுருங்கியல், — பொரு ளாழ்பியல், — குறிக் கோளியல், — தொகையின்பம், — அளவிசைபாடு, — பல்வயின் வழக்கு, — ஒருங்கிய லுடைமை, — முதலிய தோன்றக் காரணம் பற்றிய பெயர்க்கோள்களை வழங்குவிக்குங் கலைவல்லோர் கண்ணிய நிலையென்றுணர்க. இஃதின்னும் விரிக்கிற் பெருகும்.

இதனுள் தொண்டமண்டல மென்பத னியலை விளங்க வகுத்துணர்த்துக வெனின் :—

ஆதொண்டந் தழைவயிற் கிடத்தப் பட்டதனால் ஆதொண்டனெனக் காரணக் குறிப் பெயரேற்று, இரவி மரபின்கண் ணோரிறை மகனா லாளப்பட்ட வெதிரி லாட்சி யுடைமையின் இம்மண்டலத்திற் குத் தொண்டமண்டல மெனப் பெயர் வழங்கிற்று.

இனி, ஆதொண்டந் தழையானு மலரானு மியற்றிய தொங்க லணிந்தமையின் **ஆதொண்டனெனப் பெயர் வழங்கிற் றென்பாரு முளராலோவெனின் :—** அங்ஙனங் கூறினு மிங்ஙனம் வழங்க லொத்த நிலைபொன்க.

அற்றேல், ஆதொண்டந் தழைவயிற் கிடத்தப்பட்டவனை **ஆதொண்டனென்று குறியிடு செய்த லெங்ஙனமெனின் :—**மேற் கலைவல்லோர் கண்ணிய நிலையென்று மதனா லுணர்க வென்க. அன்றி, — கடப்பந் தழைவயிற் கிடத்தப்பட்டவனைக் கடம்பனென்றும், — வேப்பந் தழையானு மலரானுந் தொடுத்த தொங்க லணிந்தோனை வேம்பனென்றும் — இங்ஙனம் பலபட வழங்குங் காரணக் குறிப்பெயர்கள் பலவுள வவற்றாற் றேர்ந்து தெளிக வென்க.

Koviloor Digital Library

அற்றேல், ஆதொண்டன் மண்டலமெனல் வேண்டும்; தொண்டமண்டலமெனல் எங்ஙனமெனின்:—

நிறுத்தமொழிக்கண் ணீற்றுச் சிறப் புயர்திணை யாண்பாற் படர்க்கை விகுதியாய அன் னென்பதன் னகரமெய் குறித்து வருகிள வியோ டங்நிறுத்த மொழி பிளவுபட் டிருசொன்னீர்மையிற் பொருந் தாப் புணர்ச்சியாய்ப் புணர்ச்சி யின்பம் பெருமை நோக்கி, அவை யொன்றுபட்டொரு சொன்னீர்மையிற் பொருத்தப் புணர்ச்சியாய்ப் புணர்ச்சியின்பம் பெறற்பொருட்டு ஒத்தகிழத்திக்குங் கிழவோற்கும் புணர்ச்சியின்பந் தோன்றற்பொருட் டகன்று நிற்கு முயிர்ப் பாங்கி போன் றகன்று நிற்பவும்; நிறுத்தமொழிக்கண் முதனிலை வேற்றுமை யொற்றுமை விரவுறுப் பாகாரம் பல்லையின் வழக்குத் தொகையின்ப முதலிய நோக்கித் தொகுக்கப்பட்டுந் தொகாவியலின் ஞாபகவிடய வுருவி னருகிக் கண்ணுற்று நிற்பவும் — **தொண்டமண்டல மென்று** வழங்கிற் றென்க.

இஃது இருவயிற்றேற்றம் சிறப்பாட்சியுடைமை பொருளடைச் சேர்பு ஒற்றுமைச்செறிவு ஒத்திசைப்பேறு நுனித்துணர்புணர்வு முத லிய நோக்கியலைப் பெற்றுத் தேயவழக்குச் சிறப்புடைச் சொற்றொட ரிற் போந்த காரணக் குறிப்பெயரென்க.

தொண்டமண்டலமெனிற் காரணக் குறிவிளங்கப் **புலப்பட லின்றாலோ வெனின்:**—மேற்சொற் சுருங்கியன் முதலிய குறித்து வழங்குவித்தல் கவிஞர் கண்ணியதிலை யென்றும், ஆதலிற் கூர்ந்தறிக வென்க.

கூர்ந்தறிதற் றன்மையது செய்யுள்வழக்கே யன்றிப் **பாடை வழக்குத் தேயவழக்கு முதலிய வன்றாலெனின்:**—இத்தொண்ட மண்டலமென்பது செய்யுள் வழக்குமுதற் பல்வகை வழக்கினும் பயின்று வரலானு முற்காலத்ததன்றிப் பிற்காலத்துக் காரணக்குறி யாக்கப்பெயராய் வழங்கலானும் புறப்பாட்டிற் பொருண்முடிபு வல் லுந ரல்லார்க்கும் விளங்கப் புலப்படுதலானு மதனகப் பாட்டிற் செய்கை முடிபு முதலிய இயன்மாத்திரையே கூர்ந்தறிக வென்றுமென்க.

இஃது செய்யுண் முதலிய பல்வகை வழக்கினும் பயின்று வருதன் முதலிய இச்சதக யாப்பின்கண்ணும், — காஞ்சி மான்மியத்தைக் குறித்த காப்பிய முதலியவற்றின்கண்ணும், — பாடை வழக்குத் தேய வழக்கு நகர்வழக்கு முதலிய வழக்கியற்கண்ணும்,—பல்வகைப்பெயர்க்கு மிலக்கணம் புலப்படுத்தற் கருவியாய மூந்துநூன் முதலிய நூன்முடி பின்கண்ணும், — வழக்குணர்ச்சிக் கண்ணும், — காண்கவென்க.

Koviloor Digital Library

அற்றேற் கூர்ந்தறிக வென்ற வகப்பாட்டிற் செய்கை முடிபு முதலிய விளங்கப் புலப்படுத்துக வெனின் :—பயன்றரூஉந் தொழிலது புடைபெயர்ச்சிக்கண் ணுரிமை தோற்றி யுரிமை யுடைமைக்கு முதலாய முதற்பொரு ளெஞ்சி நிற்ப அம்முதலாய முதற்பொருட் டொழின் முடிபிட னேற்ற தன் றொழிற் பயனுறுதற் கிடனாய செய்பொரு ளம் முதற் பொருணோக்கிய லொருபுடை யொப்பத் தொழிற்பயன் றோற்றற்கிடனாய தரப்பொருள் வேற்றுரிமை யேற்றுத் தன்றொழின் முடிபின் முற்றிப் புடைபெயர்ச்சியி னுரிமை பெற்ற முதற் பொருண்மையி னொப்புமை பெற்றுந் தன் புடைபெயர்ச்சியி னுரிமையேற்று வேற்றுரிமை முதற் பொருட் கரணத் தொழிற்பய னுறப்படூஉஞ் செய்பொருளைத் தன் கருமத்தொழிற் பயனுறப்படூஉஞ் செய்பொருளாப் புடைபெயர்ந்தத னுரிமையேற்ற முதலாய முதற்பொருட் பாடுபெற்றும் வந்த விரிசொற் றெரிநிலைவினை முற்றானணைந்த பெயர்க்கோணிலை நோக்காய — **ஆதொண்டந் தழையிற் கிடத்தப்பட்டவன்** — **ஆதொண்டந் தழையானு மலரானு மியற்றப்பட்ட மாலையைத் தரித்தவன்** — என்பன தன் வினைமுதற் றொழிற்பயன் றோற்றுமிடனுந் தன் றொழிற்பய னுறப்படூஉஞ் செய்பொருளு மிடனாக — ஆதொண்டந் தழையன், — ஆதொண்டைத் தழையன், — என விரிசொற் குறிப்பு வினைமுற்றா னணைந்த பெயர்க்கோணிலை நோக்காய்ப் பின்னர் இடப் பொருளவ்வயவியுங் கருவிப்பொரு ளவயவியு மிடனாகப்பெற்று, — ஆதொண்டை யென்பதனிற் றைகாரங் கெட் டஃதூர்ந்த மெய்ம்மேல் விகுதி அன் றூர்ந்து ஆதொண்டன் எனக் குறுந்தடியுஞ் செம்பட்டு மாயவாறு போற் றொகைநிலை யேற்றுப் பெயரேயாய் நின்றது.

அல்லதூஉம், ஆசிரியர் **தொல்காப்பியர்** கூறிய

> **பனையு** மரையு மாவிரைக் கிளவியு
> நினையுங் காலை யம்மொடு சிவணு
> மையெ னிறுதி யரைவரைந் து கெடுமே
> மெய்யவ ணொழிய வென்மனார் புலவர்
>
> (தொல்காப்பியம், எழுத்ததிகாரம், உயிர்மயங்கியல். 81.)

என்னுஞ் சூத்திரத்துள் நினையுங்காலை யென்பதனாற் றழை யென்னுஞ் சொல்வந்துழி தொண்டை யென்னுஞ்சொல் விறுதி யைகாரங் கெட் டஃதூர்ந்த மெய்ம்மே லம்முச்சாரியை யூர்ந்து நின்றதன்றே; அங்ஙனம் உயர்திணை யாண்பாற் படர்க்கை விகுதியாய அன் னென்பதனை யேற்குமிடத் தத்தழை யென்ப தெஞ்சியத் தழையிற் கிடத்தப் பட்டவனென் றறிந்துகோடற் குறியாத் தழையாற்போந்த அம்முச் சாரியையின் மகரவொற்று நீங்க நின்ற அகரத்தின் பின்னர் அவ்வுயர் திணை யாண்பால் விகுதி அன் னென்பதி னகர நீங்க நின்ற னகர

Koviloor Digital Library

வொற் றடுத்து ஆதொண்டன் என்ருயது எனினுமமையும். இதனை, முதனிலை — இறுதிநிலை — இடைநிலை முதலிய பல்வகை யுறுப்புக்களிற் பல்வகை நோக்குடைப் பலவகைப் பெயரும் செறிப்பிற் றிறப்பட நெறிப்படூஉம் வழக்கிற் பல்வகை விகாரத்தாற் செந்நிலைபெறூஉ மென விதித்த வுணர்வுடையோ ருயர்நெறி வழக்கா லுய்த்துணர்க.

இங்ஙனம், ஆதொண்டனென்னும் பெயர் முதற்பொருண் முடிபு தன் முடிபிற்பெற்ற தன்றொழிற் பய னுறப்படூஉஞ் செய்பொருட்டன்மை யகப்பாட்டினும், உடைப்பொருட் பிறிதி னுரிமையுடைமைத் தன்மை புறப்பாட்டினும், உயர் பொருளடைச் சிறப்பிடப் பெயர் அவ்விருவயினும் பொருந்த நின்ற மண்டலமென்பதனோடு மருவும் வழி, மேல் வகுத்தவண்ணந் தன் னீறும் முதலுந் தொகுத்தலைப் பெற்றதென்க. அல்லதூஉம், முதலெஞ்சிநின்ற இப்பெயர் மண்டலத்தோடணைந்த வழி விகுதி அன் எஞ்சி அம்முச்சாரியை பெற்று வருமொழி நோக்கி மகரமொழியத் தொண்டமண்டல மென்ருய தெனினு மமையும். இதனை ஆசிரியர் தொல்காப்பியர் கூறிய,

> **அப்பெயர்** மெய்கெடுத் தன்கெடு வழியு
> நிற்றலு முரித்தே யம்மென் சாரியை
> மக்கண் முறைதொகூஉ மருங்கி னான.
> (தொல்காப்பியம். எழுத்ததிகாரம். புள்ளிமயங்கியல். 155.)

என்னுஞ் சூத்திர நோக்கத்தாற் காண்க வென்க.

ஆதொண்டனென்பது — தென்சொல் லேனுக்கு; — மண்டலமென்பது — வடசொன்னேக்கு; — தம்முட் செறிவா னைத்தலேவேனும் பாடையா னைவ்வாமை பெறலின் அங்ஙனம் பெருமை நோக்கியும், முன் நிலையாய வந்நிலைக்கும், — பின் னிலையாய விந்நிலைக்கு மிலச்சினையாத னேக்கியும், விசேடண விசேடியச் செந்நிலைமரபு நோக்கியும் — இங்ஙன முதலு மீறுந் தொகுத்தலைப் பெற்றதெனினும்; முதனிலை வண்ண வொற்றுமை, — இசையொற்றுமை, — உருவொற்றுமை, — நோக்கியும் இறுதிநிலை, — சிறப்புநிலை, — இனவொற்றுமை, — நோக்கியுந் தொகுத்தலைப்பெற்ற தெனினு மமையும். இஃதின்னுங்கூறிற் பெருகும்.

ஆகலின், ஆசிரியர் தொல்காப்பியர் கூறிய,

> **உணரக்** கூறிய புணரியன் மருங்கிற்
> கண்டுசெயற் குரியவை கண்ணினர் கொளலே
> (தொல்காப்பியம். எழுத்ததிகாரம். புள்ளிமயங்கியல். 110)

என்னுஞ் சூத்திரக் கருத்தா னமைக வென்க.

அன்றி, ஆதிநாராயணன் புரம் — நாரண புரம்; — ஆபூதன் மங்கலம், — பூதமங்கலம்; பெரும்பற்றினுற் புலிப்பாதன் பூசித்தலூர்

Koviloor Digital Library

—பெரும் பற்றினுற் புலி பூசித்தவூர்; பெரும்பற்றப்புலியூர்—புலியூர் முதலிய பெயர்க் கோள்களையும்; புள்ளம் பூதன்குடி—பூதங்குடி; கொற்றன் குடி — கொற்றங்குடி; சாத்தன் குடி — சாத்தங்குடி; கொற்றன் மங்கலம் — கொற்றமங்கலம்; சாத்தன் மங்கலம் — சாத்தமங்கலம்; வேடன் மங்கலம் — வேட்ட மங்கலம்; வேடன் குடி — வேட்டங்குடி; சாத்தன் மங்கை — சாத்தமங்கை; விஜயன் மங்கை — விஜயமங்கை; கண்ணன் — மங்கை கண்ணமங்கை; கண்ணன் புரம் — கண்ணபுரம்; கண்ணன் குடி — கண்ணங்குடி; சீராமன் விண்ணகரம் — சீராமவிண்ணகரம்; வரகுணன் மங்கை — வரகுணமங்கை; ஐயைபுரம் — ஐயபுரம் முதலிய பெயர்க் கோள்களையும்; நந்தன் மண்டலம் — நந்தமண்டலம்; சேரன் மண்டலம் — சேரமண்டலம்; சோழன் மண்டலம் — சோழமண்டலம்; முதலிய பெயர்க் கோள்களையும் — பற்றுகக் கொண்டமைக வென்க. இதனைப் பிற்காலத்து மரூஉ வழக்கென்று கொள்வாரு முளராலோ வெனின், அங்ஙனம் கொள்வது மரபன்று; கொள்கினுங் கொள்க வென்க.

இத்தொண்டமண்டல மென்பது பல்வகைப் புணர்ச்சிக்கும் பல்வகை வழக்கியற்கும இயற்பாடின்னேசை முதலியவற்றிற்கும் ஒத்த நிலை யென்க.

இங்ஙனமன்றி, தொண்டைமண்டல மென்பாரு முளராலோ வெனின் :—

அங்ஙன மாறுபடக் கூறுவோர் நுண்ணிய அறிஞர் கண்ணிய நிலையும் மாற்றம் பொருளுறூஉ மாற்ற நிலையும் பல்வகைப் புணர்ப்பிற் செல்வகை நிலையுங் கடிபுகோ ணெறியின் முடிபுறூஉ நிலையு மிழுக்கறூஉம் பல்வகை வழக்கிய னிலையு மொருவாற்று னுமோர்ந்துணர்கில ராய்ப் போலி யியனிலை கோலுந ரென்க. என்னை? இலக்கணநுட்பங் கூர்ந்துய்த்துணர்தற் றன்மையுளரே லங்ஙனங் கூறற் கியையா ராகலின்: அவர் சில வழூஉநெறி வழக்குப் பற்றிக் கூறுதன் மாத்திரையரன்றி விவகரிக்கக் கடவரல்லர்.

ஆயினும், அவர்க்கும் மற்றவர்க்கும் அவ்வழக் கழிவழக்கேயன்றி யிழிவழக்குமா மென்றுணர்ச்சி தோன்றற் கியாமே அத்தலைக்கண்ணின் றவர்கூற்றுக விவகரித் ததனை மறுக்கின்றும் :—

அவர் கூற்றுக விவகரித்தல் :—

தொண்டைத் தழையானு மலரானு மியற்றிய மாலையணிந்தவ னுண்ட மண்டலமாகலின், தொண்டைமண்டல மெனல்வேண்டும்.

அதனை மறுத்தல் :—

தொண்டைமண்டலமெனின், கொவ்வைத் தூற்றையுடைய மண்டல மென்றும் ஒருவாறு ஆதொண்டைத் தூற்றையுடைய மண்

Koviloor Digital Library

டலமென்றும் தெளிவின்றிக் கருதப்படுவ தன்றித் தொண்டைத் தழையானு மலரானு மியற்றிய மாலையணிந்தவனு லாளப்பட்ட மண் டலமென்று கருதப்படுவதன்று.

அல்லதூஉம் சேரன்மண்டலம்—சேரமண்டலம்; சோழன் மண் டலம்—சோழமண்டலம் என்பனபோ லிம் மண்டலத்திற்கு, முன்னர் துண்டீரனு லாளப் பட்டமையின் துண்டீரன் மண்டலம்—துண்டீர மண்டலம்; துண்டீரன் புரம்—துண்டீர புரம் என்றும்; பின்னர் தண்டகனு லாளப்பட்டமையின் தண்டகன் நாடு—தண்டகனுடு; தண்டகன் புரம்—தண்டகபுரம் என்றும் பெயர் வழங்கின. அவை போல், அதன்பின்னர் ஆதொண்டனு லாளப்பட்டமையின், ஆதொண் டன் மண்டலம்—ஆதொண்டமண்டலம்—தொண்டன் மண்டலம்—தொண்டமண்டல மென்றே மரபு வழுவாமை வழங்கல்வேண்டும். இதற்குப் பிரமாணம்;—

> **முக்கணுன்** கணநா தர்க்கு முதன்மைத்துண் டீர னுண்டு
> மிக்கதுண் டீர னுடாய்த் தண்டக வேந்தன் ருங்கித்
> தக்கதண் டகனன் னுடாய்த் தபனன்மா குலத்துச் சோழன்
> ஒருக்கதார்த் தொண்ட மான் காத் தாயது தொண்ட னுடே.

இங்ஙனம் பல்காப்பியங்களினும் பலபிரபந்தங்களினும், பிரபல வித்வான்களாக முன்னிருந்த ஔவையார், கம்பன், ஒட்டக்கூத்தன் முதலானோர்கள் பல்வகைக் காரணங் குறித்துச் செய்த பல்வகைச் செய்யுட்களினும், ஈண்டு முன்னும் பின்னும் வகுத்தமைக்குப் பிர மாணங்களிருக்கின்றன. அவைகளை விரிக்கிற் பெருகும். ஆகலின்; அவற்றைத் தனித்தனி காண்டொறு மாங்காங் குணர்ந்தமைக.

அங்ஙனமன்றித் தொண்டைமண்டல மெனின்:—சான்றோர் வழித்தாய மரபு வழுவி மயங்குவதூஉ மன்றிக் "காஞ்சிவிருக்க முடைமையா னந்நகருடை வளாகத்திற்குக் காஞ்சிமண்டல மென்று வழங்கிற்று: அங்ஙனமே, தொண்டைத் தூறுடைமை பற்றித் தொண்டை மண்டல மென்று வழங்கிற்றிஃதே துணிபு" என்று திரிபுதோற்றும். அன்றித் தொண்டைத் தழையானு மலரானு மியற்றப்பட்ட தொங்கலணிந்த வோரரசனு லாளப்பட்ட மண்டலம் அவ்வரையனுக் குரிமை தோன்ற நிற்றலின்றிப் பரம்பரையா னன்றி யிடைப்பாட்டாற் பெற்ற அத்தொண்டையை வேற் றுரிமையாகப் பெறற்கு எவ்வாற்றானும் பொருத்தமின்று. இதனைக் கல்வியிற் சாதா ரணத் தன்மையுடையோரும் "வாதராயண சம்பந்தத்தி னினம் போலும்!" என்று எள்ளுவர்; அன்றிக் குமரியைக் கொண்டவனை விட்டுக் கூடவந்தவனோடு கூட்டியனுப்பியது போலும்!" என் றசதியாடுவர். என்னின், கற்றுவல்லோர் முகப்பின் இஃதென்னும்?

Koviloor Digital Library

இதன் கண் — உரிமை மலைவு — பொருண் மலைவு — மரபு மலைவு — வழக்கு மலைவு — தகுதி மலைவு — உணர்ச்சி மலைவு — யூக மலைவு — நியாய மலைவு — கருத்து மலைவு — முதலிய மலைவின் ஒருமைகயே புலப்படுகின்றன. ஆகலின், **தொண்டைமண்டல மென லமைவன்று; தொண்டமண்டல மெனல் வேண்டும்.**

அவர் கூற்றுக விவகரித்தல்:—

அஃதேல், அற்றன்று; பாண்டியன் மண்டலம் பாண்டிமண்டல மென்றாயதுபோல் தொண்டையன் மண்டலம் என்பது விகுதி அன் கெட்டுத் தொண்டைமண்டல மென்றாயது: ஆகலிற் றொண்டைமண்டல மெனல் வேண்டும்.

அதனை மறுத்தல் :—

பாண்டியன் மண்டலம் பாண்டிமண்டல மென்றாயது மரூஉ வழக்கு. இஃதங்ஙனமன்று. மரூஉ வழக்காயினும் பாண்டியென்பது குடிப்பெயர்க் கோளாய் அவ்வரையனையும் ஒற்றுமை யுரிமையா லம் மண்டலத்தையு மன்றி வேறு குறித்தலின்றி நிற்றலி னறிஞரா லமைத் துக்கொள்ளப்பட்டது. தொண்டை மண்டல மென்பதை மரூஉ வழக்கி னமைத்துக்கொள்வேமெனின், இங்ஙனங் குறித்தலின்றிப் பல்வகை யானும் வேறு குறித்து வழூஉ நிலையைப் பெறுகின்றது. என்னை? தொண்டைத் தழையானு மலரானுந் தொடுத்த தொங்க லணிந் தோனைத் தொண்டையன் எனின்: பிற்காலத்தின் மக்கள் வரலா றுண ராமையின் **"பெருந் தொண்டையனைத் தொண்டைய னென்று வழங்கினர் கொல்?** அன்றிப் புழைக்கை யுடைமையாற் றும்பி முகத்தவன்கொல்?" என் றையுறுதற்கும், தொண்டு ஐயனென்று பிரித் தேற்ற பெற்றி கோடற்கும், ஒருவாற்றாற் கேள்வியுடையோருங் "கொவ்வைத் தழையிற் புனைந்த மாலையுடையன் கொல்? ஆதொண் டைத் தழையிற் கிடத்தப் பட்டவன்கொல்?" என்றையுற்று மயங்கு தற்கும் இடனாய்ச் சொல்வலி பொருள்வலி இன்னிசைவண்ண முத லிய சிதைவுற நின்று வழூஉ நிலையைப் பெற்று மண்டலத்தோ டணைந்து **ஐயம் — மயக்கம் — கவர்கோண்** முதலிய இழுக்கினை யேற்று வழுவினும் வழுவாய் நிற்றலானும்; இங்ஙனம் வழங்கல் அறி ஞர் வழக்கன்றாகலானும்; இதனை வழூஉநிலை யென்றும். இஃது **"உடற் றாய்மை கருதி நீராட் டுவந்துசென்றாண்டளற்றி னழுந் திய நொக்கு"** மென்று எள்குதற் கிடனன்றிச் சிறிது மமைத்துக் கோடற் கிடனன்று. ஆகலின், தொண்டை மண்டலமென லமை வன்று; தொண்ட மண்டல மெனல் வேண்டும்.

Koviloor Digital Library

அவர் கூற்றுக விவகரித்தல் :—

அற்றேல், தொண்டை யென்பது :— ஆகுபெயராய் நின்று அரையனையுணர்த்தி யுரிமைதோற்றி மண்டலத்தொடு புணர்ந்து தொண்டைமண்டல மென் றாயிற்று: அதனால் தொண்டை மண்டல மெனல் வேண்டும்.

அதனை மறுத்தல் :—

இடைப்பாட்டி னியதி யினை யின்றி வந்த கடம்பூர் என்பது கடம்பவிருக்கத்தையுடைய வூரென்று தன்னளவே புலப்படுத்து மன்றி ஆகுபெயராய்க் கடப்பமாலையைத் தரித்தவனூ ரென்று பிறிதளவு புலப்படுத்துவ தின்று. **என்னை? ஆகுபெயர்** ஒன்றன் பெயரானதற் கியைபிறிதைத் தொன்முறை யுரைப்பதாகலின். அங்ஙனமே பரம்பரை யானன்றி இடைப்பாட்டி னியதி யினையின்றி வந்த தொண்டை மண்டலத்தொடு புணர்ந்துழி தொண்டையை யுடைய மண்டலமென்று தன்னள வுணர்த்துமன்றித் தொண்டையை யுடையான் மண்டல மென்று பிறிதி னளவுணர்த்தற் கோர் வகையானும் வலியின்று. இஃது "'பூகமின்றி ஒன்று குறித்தொன்றுவரைய வொல்று பட்ட' தென்னு முலக வழக்கி னினம் போலும்!" என்றெள்குதற் கிடனும். ஆதலிற் றொண்டை மண்டலமென லமைவன்று : **தொண்ட மண்டல மெனல் வேண்டும்.**

அவர் கூற்றுக விவகரித்தல் :—

அற்றேல், தொண்டை யுடையனு லாளப்பட்டது தொண்டை யென்று ஈறுகெட் டைவிகுதி யேற்றுச் சிறப்புப் பெயராய் மண்டலத்தொடு புணர்ந்து அங்ஙனமாயிற்று : ஆகலிற் றொண்டை மண்டல மெனல் வேண்டும்.

அதனை மறுத்தல் :—

ஐயீற்றின் ஐகார விகுதி போந்து கெட்டுப் புணரிற் குறியீ டின்மையிற் சிறப்பன்று! இங்ஙனம் புணர்த்தல் இயற்பாடுமன்று: அறிஞர் மரபுமன்று. அங்ஙன மாயினும் தொண்டையை யுடையதென் றுகுமன்றித் தொண்டையுடையனு லாளப்பட்டதென் றொருவாற்றானு மாவதன்று. அன்றிச் சோழமண்டல முதலியவற்றோடு முரணும். அங்ஙன மமைதியின்றிக் கூறினுஞ் சந்தியின்பத்தான் **நாகை பட்டினம் நாகப்பட்டின** மென்றாயதுபோல், **தொண்டை மண்டலம் தொண்டைமண்டல** மென் றுதலேவேண்டும். இதனை முன்னர் விலக்கியவாற்றுட் காண்க. இஃது பல்வகை யிழுக்கினுஞ் செல்வகைத்து. "இரும் பொற்பூண்டுரீஇச் சென்று கரும்பொற் றனை கைபுகுத்தியதி னினம்!" என்றெள்குதற் கிடனும். ஆகலிற்

Koviloor Digital Library

றொண்டைமண்டலமென லமைவன்று; தொண்ட மண்டல மெனல் வேண்டும்.

அல்லதூஉம், இங்ஙனம் தொண்டை யென்பது பல்வகைப் பொருட்கிடனுய பெயர்த் திரிசொல். ஆதொண்டை யென்பது தன் னளவே யுணர்த்தும் பெயரியற்சொல். இங்ஙனம் திரிசொல்லாற் சிறப் புப் பெயர்க் காரணக்குறி செய்தல் வழக்கறிந் தோர் மரபன்று. இயற்சொல்லாற் காரணக் குறிப்பெய ரமைத்தலே யுரைது மரபு. இஃது ஆதொண்டச் சக்கரவர்த்தி யென்றுவழங்கும் அறிஞர் வழக்கா லறியப்படும்.

அவர் கூற்ருக விவகரித்தல்:—

அற்றேல், ஆதொண்டையன் என்பது மண்டலத்தொடு புணர்ந் துழி, முதலு மீறுங் கெட்டு அங்ஙன மாயிற்று: ஆகலின் தொண்டை மண்டல மெனல் வேண்டும்.

அதனை மறுத்தல்:—

ஆதொண்டையன் எனின்,— தொகையின்பமும் இசையின்ப மும் செறிவுகோளு மின்றிப் புல்லென்கையானும், சுருங்கியற் பேரின் பங் குறித்து முன்னும் பின்னுந் தொகை செய்தமைத்த சான்ருேர் ஓரெழுத்தா னீட்டியற்பெயர்ப் பாற் படுத்தி முடிபு வழூஉச் செயற் கியையா ராகலினும், இங்ஙனம் தொகுக்கப்படின் பொருளாட்சி முதலிய குன்றலின்றிச் செந் நெறியிற் பெரும்பயன் றரலானும், அங் ஙன மமைத்தல் வழூவேயாம். இஃது ஆதொண்டையன் சக்கரவர்த்தி ஆதொண்டையச் சக்கரவர்த்தி யென்னுது, ஆதொண்டன் சக்கரவர்த்தி ஆதொண்டச் சக்கரவர்த்தி யென்று வழங்கும் அறிஞர் வழக்கா லறியப் படும்.

அவர் கூற்ருக விவகரித்தல்:—

ஈண்டு ஆதொண்டைச் சக்கரவர்த்தி யெனின் வழூவென் னெனின்?

அதனை மறுத்தல்:—

அங்ஙனம்பெறின், அவ்வரையற்கு ஆதொண்டையாற் காரணக் குறிப் பெயரமைப்பான் கருதிய வன்றே கருதியதாதல் வேண்டும். அங்ஙன மின்றிப் பின்னர் செங்கோன்மை ஆண்மை முதலிய வண்மை யுடைமை பற்றி முகமனு வமைக்கப்பட்டது ஆகலின். வழூஉ இங்ஙன மென்க. ஈண்டு ஆதொண்டன் சக்கரவர்த்தி ஆதொண்டச் சக்கரவர்த்தி யென்பது "புடைப்புளகன்னிப் பொற்குலைக்கண்ணே இடைப்பிள வியையா விரட்டைப்பழம்போல்" ஒருரு பொருட் கிருவயினெழும் திடைப்பிள வறியாச் சிறப்பினப் பெயர். ஆதொண்டன் சோழன்— ஆதொண்டச் சோழனென்பது மது. இதனை,—தசரதன் சக்கரவர்த்தி—

Koviloor Digital Library

தசரதச் சக்கரவர்த்தி; நளன் சக்கரவர்த்தி — நளச்சக்கரவர்த்தி; புரூரன் சக்கரவர்த்தி — புரூரச் சக்கரவர்த்தி; சோழன் ராஜன் — சோழராஜன்; சேரன் ராஜன் — சேரராஜன்; பாண்டியன் ராஜன் — பாண்டியராஜன்; சோழன் மஹாராஜன் — சோழமஹாராஜன்; சைவல் சோழன் — சைவச்சோழன்; குலோத்துங்கன் பாண்டியன் — குலோத்துங்க பாண்டியன்; சோழன் மன்னன் — சோழமன்னன்; சேரன் மன்னன் — சேரமன்னன் — என வழங்கும் பல்வகை முடிபு வழக்குகளாற் றெளிந்தமையப்படும்; ஆகலின், **ஆதொண்ட னெனல் வேண்டும்:** ஆதொண்டைய னெனல் இழுக்கு. இங்ஙனம் இழுக்காய ஆதொண்டைய னென்பது முதலு மீறுங் கெட்டு மண்டலத்தோடு புணர்ந்து தொண்டை மண்டல மென்றுயிற் றெனினும், மேற்குறித்த பல்வகை வழூஉக்கட்கும் பேரிடனாகத் தக்கது. "**'இடனறிந்து பிருண்டாத் தின வுண்ணி யெரிவிற் புழுங்கிற்று'** என்பதற்கும், **'கருத் தறியாமற் கலப்பான் புகுந்து அருத்த மிழுக்குமா'** லென்பதற்கு மினம்!" என்று எள்குதற் கிடனும். ஆகலிற் றொண்டை மண்டல மெனல் வழூஉ; **தொண்டமண்டல மெனல்வேண்டும்.**

அவர் கூற்றுக விவகரித்தல்;—

தொண்டைக்கா டுடைமையாற் றொண்டை மண்டல மெனல் வேண்டும்.

அதனை மறுத்தல்:—

இங்ஙனம் தொண்டமண்டல வரலாற்றை வகுக்குங் காப்பியத்திற் கண்டதே யன்று; இவ்வாறுண்டென் றறிஞரானிது காறியாங் கேட்டதுமின்று: ஆகலின் வழுவாம். இஃது **'வழியறியாக் கன்று குழிவழியாச் சென்'** றென்பதற்கினம். இங்ஙனம் வழியறியாது மொழியினும், **பொய்கூறினும் பொருந்தக் கூறுக** வென்னு மிழிந்தோர் வழக்கின்கண்ணு மேற்புடைத் தன்று. என்னையெனின் காஞ்சி, தில்லை, என்னு மரப்பெயர்கள் ஒற்றுமை யுரிமை குறித்து காஞ்சியைக் கண்டு தில்லையை யடைந்தா ரென்று வழங்கப்படுகின்றன. அங்ஙனம் தொண்டையைக்கண்டு என்று எவ்வகை வழக்கினும் வழங்கப்பட்டதின் றாகலினென்க. இதனாலுந் **தொண்ட மண்டல** மெனல் வேண்டும்.

அவர் கூற்றுக விவகரித்தல்:—

தொண்டைமான் என்னும் பெயருள் வேற்றோ ரரையனிருந் ததிகரித்தமையின் தொண்டைமான் மண்டல மென்பது மான் கெட்டு அங்ஙன மாயிற்று: ஆகலிற் றொண்டை மண்டல மெனல் வேண்டும்.

Koviloor Digital Library

அதனை மறுத்தல்:—

இங்ஙனம் புணரினும், மேற்குறித்த வழூஉ நிலைகட் கிடனும்.

அன்றித் தொண்டைமா னென்பதே வழு—என்னை? தொண்டைமா னென்பது—தனிமொழி, தொடர்மொழி யென்பவற்று ளெம்மொழி? விடை—தனிமொழி. வினா:—தனிமொழியாயின் இதற்கு முதனிலை, இறுதிநிலை, இடைநிலை, என்னை? விடை:—தொண்டை—முதனிலை, ஆன்—கடைநிலை, மகரம்—இடைநிலை யாம்.

அதனை மறுத்தல்:—

என்னின் முதனிலைக்கும் இறுதிநிலைக்கும் இடைப்பா டொத்து நிற்பது இங்ஙனம் வரூஉம் பெயர்கட்கு இடைநிலை. ஈண்டு முதனிலை யீற் றைகாரக் குறுக்கம் விலங்கிப் பொறுத்திசைப்ப விடைப்பாடின்றி யிறுதிநிலையோ டிணைந்து வேறு குறித்தலி னிடைநிலையிய லமைவின்று. அன்னீறன்றி ஆனீறு ஆறிறந்தன்றி யைந்திறந் தியையுந் தொடர் மொழிப் பெயர்க்கன்றி இங்ஙனம்—உரித்தாவ தன்று,—நயப்பாடின் மையின். ஆகலின், இறுதிநிலை யியலு மமைவின்று. விகாரத்தால் வேறு குறித்தலின் முதனிலை யியலு மமைவின்று.

அல்லதூஉம், இஃதிடைநிலை யாயின், கோமான் எனபதற்கும் அங்ஙனம் இடைநிலையாகல் வேண்டும். அங்ஙனமாயின, கோ—ம்—ஆன்: இவற்றுள், கோ—அரையன் என்னின், ஆன்—விகுதி அதி காிப்பின்றி மூங்கைபோலும், யானையுண்ட கனிபோலும் பெயர்ச்சியும் பயனுமின்றி வற்றன் மரனி னின்றது. ஆகலின், இஃது இங்ஙன மன்று—ஆகலின், அஃது அங்ஙனமன்று.—இஃது கைபட லறியான் பொய்பட லொன்றோ'[1] வென்பதற் கினம். ஈண்டு தொடர்மொழி யாய்க்—கோன்—மன்—கோமான் என நிலைமொழி யீறுகெட்டு வரு மொழி முதனீண்டது. இதனை வழுதிமன் என்னுங் காப்பிய வழக்கானுங் கண்டுணர்க. அன்றி, கோன் மஹான்—கோமான், என நிலைமொழி யீறு கெட்டு வருமொழி வடமொழி யாதலின் விகாரம் பெற்றுக் கோமான் என்றாயது. அன்றி, கோன்மான் என நிலைமொழி யீறுகெட்டுக் கோமா னென்றாயது. இங்ஙனமே தொண்டன்மன்—தொண்டன் மஹான்—தொண்டன்மான் என்பன தொண்டமா னென்றாயது. மன் மஹான்—மான் என்பவைக்குப் பெருமையுடையவ னென்பது பொருள். ஆகலின், தொண்டைமா னெனல் வழு; தொண்டமானெனல் வேண்டும். இங் ஙனமே சேரன் மான்—சேரமான், மலையன் மான்—மலையமான் முத லியவுங் காண்க. ஆகலின் மண்டலத்தோடு கூடியவழி தொண்ட மண்

1 பொய்படு மொன்றோ புனைபூணுங் கையறியாப்
பேதை வினைமேற் கொளின் (திருக்குறள், பேதைமை, 9)

Koviloor Digital Library

டல மெனல் வேண்டும். அன்றி, தொண்டனுடைனல் வேண்டும்; தொண்டைநாடெனல் வழூஉ, என்னை? சேரன் நாடு — சேரனுடு; சோழன் நாடு — சோழநாடு; பாண்டியன் நாடு — பாண்டியனுடு: மலையன் நாடு — மலையனுடு என்பதுபோல், தொண்டன் நாடு — தொண்டனுடு எனல் மரபு ஆகலின். தொண்டனுடு எனில் அடியனென்ன முதல் வேறு குறிக்குமே யெனின் அங்ஙனங் குறிப்பதில் ஆற்றலுமின்று, — பயனுமின்று. என்னை? ஆ வென்பது கரண விடயமாக நின்று உரியானைக் குறிக்கின்றதாகலின்; அன்றி, உடையானை யன்றி உடைமை குறித்தலின் ருகலி னென்க.

இங்ஙனம் பல்வகையாற் சொல்வகை செய்தலென்? தொண்டை மண்டல மெனின் மேற்குறித்தவண்ணம் உரிமை மலைவு — பொருண் மலைவு, — மரபுமலைவு, — வழக்குமலைவு, — தகுதிமலைவு, — உணர்ச்சி மலைவு, — யூகமலைவு, — நியாயமலைவு, — கருத்துமலைவு, — ஐயங்கவர் கோள் — மயக்கம், — வேற்றுக்குறிப்பு, — வேற்றுரிமைநிலைமை, — நியதியின்மை, — இயைபின்மை, — சொல்வலிச் சிதைவு, — பொருள்வலிச் சிதைவு, பொய்க்கோள் – அனர்த்தம், — இன்னிசைவண்ணச் சிதைவு — பிளவுபாடு, — முதலிய பல்வகை வழுக்கட் கிடனும்.

அன்றி, ஆதொண்டை யென்பதனீற் றைகாரக் குறுக்கங் குற்றலகே பெற்றது. தொண்டை யென்பத னீற் றைகாரக் குறுக்கங் குற்றலகோ டொற்றலகு பெற்றது. என்னை? ஆதொண்டை :— ஆ — தொண் — டை : ஈரலகு — ஓரலகு — அரையலகு — முதலிடைப்பாடு இருகலை நடுவிடைப்பாடு காற்கலை — கடையிடைப்பாடு முக்காற்கலை ஆகலின், ஆதொண்டை யீற் றைகாரக் குறுக்கங் குற்றலகே பெற்றது. தொண்டை : தொண் — டை : ஓரலகு — அரையலகு முன்னிடைப்பாடு காற்கலை பின்னிடைப்பாடு அரைக்கலை ஆகலின் தொண்டை யீற்றைகாரக் குறுக்கங் குற்றலகோ டொற்றலகும் பெற்றது. இங்ஙனம் தொண்டை மண்டலத்தோடு புணருங்கால், மண் – ட – ல – ம் : ஓரலகு — அரையலகு — ஓரலகு — அரையலகு நான்கிடைப்பாடு : கால் — கால் அரை — அரை பெற்று வேற்றிசை விரவி நிற்றலின், புணர்ச்சியிடை ஐங்கலையைப் பெற்றுப் பிரிந்து வேறு குறிக்கின்றது. ஆகலினும், தொண்டை மண்டல மெனல் வழு; தொண்ட மண்டல மெனல் வேண்டும்.

இங்ஙனம் பெயர்க் கோள்கட்கு இயற்சொற் பெயர் முதலிய, சொல்விரிப் பெயர் முதலிய, — செஞ் சொற் பெயர் முதலிய, — சாதி கூற்றுப் பெயர் முதலிய, — ஒருமொழிப் பெயர் முதலிய, — உயர்திணைப் பெயர் முதலிய, — பாற் பெயர் முதலிய, — பொதுவிற் பொதுப் பெயர் முதலிய, — தன்மைப் பெயர் முதலிய, — வழக்குப் பெயர் முதலிய, —

Koviloor Digital Library

வெளிப்படைப் பெயர் முதலிய,—வரையினடைப் பெயர் முதலிய,—உய ருரிமைப் பெயர் முதலிய,— சிறப்புநிலைப் பெயர் முதலிய,—சித்துப் பொருட் பெயர் முதலிய,—இடுகுறிப் பெயர் முதலிய,—மரபுநிலைப்பெயர் முதலிய, —எழுத்துத் தொடர்ப் பெயர் முதலிய, —பொருணிலைப் பகு பதப் பெயர் முதலிய, — பெருஞ் சொல்லாட்சிப் பெயர் முதலிய, — முத னூல் வாய்பாட்டுப் பெயர் முதலிய — **இவைமுதற் பெயர்ப் பாகுபாடு களி னிலக்கணங்களும்;** எழுத்துப் புணர்ச்சி, — பதப் புணர்ச்சி, — தொடர்புப் புணர்ச்சி,—பொருட் புணர்ச்சி,—வண்ணப் புணர்ச்சி,—அள புப் புணர்ச்சி,—இயைபுப் புணர்ச்சி, — சமநிலைப் புணர்ச்சி, — கலவைப் புணர்ச்சி, — தெரிநிலைப்புணர்ச்சி, - குறிப்புப் புணர்ச்சி, — வேற்றுமைப் புணர்ச்சி,-ஒற்றுமைப் புணர்ச்சி,—சிறப்புடைப் புணர்ச்சி,-பொதுவுடைப் புணர்ச்சி - இருமைப்புணர்ச்சி,—**முதலிய புணர்ச்சி யிலக்கணங்களும்;** கூர்ந்துணரார்க்குத் தொண்ட மண்டல மென்பதி னிலக்கணமும் புலப்படுவதன்று.

இங்ஙன முணரமாட்டாதார் :—ஆதொண்டச் சக்கரவர்த்தி யென்பவர் தாமரசு செய்யுங்காலத்தில் தம்மாற் கட்டுவித்த ஆலயங்க ளிற் றம் பெய ரிலச்சினை சிலையின்கட் பொறிப்பித்தனர்; ஆண்டும் ஆதொண்டவென்றே இலக்கணவமைதி பெற்றிருக்கின்றது: இதனை— **திருவலிதாயம், திருமுல்லை வாயில்** முதலிய சிவதலங்களிற் சென் றேனுங் கண்டு தெளியக் கடவர். **இஃதின்னுங் கூறிற் பெருகும்.**

குறிப்பு:—தொண்ட மண்டல மென்பதைத் தொண்டை மண்டல மென்று இச்சென்னை நகரிலிருக்கின்ற வித்துவான்களிற் சிலர் மாறுக வழங்க, அது குறித்துச் சில பிரபுக்களும் வித்துவான்களும் உபாத்தி யாயர்களும் "இவ்விரண்டில் இலக்கணவமைதியும் உலக வழக்குமுள் ளது யாது? அதனை யொருவாறு தெரிவிக்கவேண்டும்" என்று கேட் டுக்கொண்டபடி,

ஸ்ரீமத் சிதம்பரம் இராமலிங்கபிள்ளை யவர்களாற் றெரிவிக்கப்பட்டது.

1. நூற்பெயர் இலக்கணம் முற்றிற்று.

2. வழிபடு கடவுள் வணக்கப் பாட்டுரை

வழிபடு கடவுள் வணக்கம்

ஆசிரிய விருத்தம்

கொண்டலை நிகர்க்கும் வேளாண் குடியொடு தழீஇய தொண்ட
மண்டல சதகந் தன்னை வளமையான் வகுப்பதற்குப்
புண்டர நுதலி ரண்டு புயமிசை யிருந்திரண்டு
குண்டல நிகரி ரண்டு குமரரை **வணக்கஞ் செய்வாம்.**

Koviloor Digital Library

"கொண்டலை......வணக்கஞ் செய்வாம்":—என்னும் இச் செய்யுள்:—

வியனுறு மெதிரதூஉம் விழாக் கொடையும்
பயனுறாஉந் தொழிலும் பழியாப் பண்பும்
வாய்மையு மறிவுமா அன்பு மாண்மையும்
தூய்மையும் பொறையுந் தோஒற்றமும் அன்பும்
உளங்கொ ளிரக்கமு மொழுக்கமு முதலா
விளங்கு விழுக்குடி வேளாண்குடியே.

இத்தொண்ட மண்டலத்திற் பெரும்பாலு மிறை கொளப் படடுத் தம்வளமையா னீண்டுறாஉ மற்றைக் குடிகட்கும் இம்மண்டலத்திற்கும் வளமை தோற்றிற்று—அஃது நெறிப்பானுஞ் செறிப்பானுந் தோன்ற வழிபடு கடவுட் பராஅய்ப் புலப்படுத்துவ லென்று புகுந்தமை யுணர்த்துகின்ற தென்க.

எங்ஙனமெனின், "கொண்டலை நிகர்க்கும் வேளாண்குடி யொடு தழீஇய தொண்ட மண்டல சதகந் தன்னை வளமையான் வகுப்பதற்குக் குமரரை வணங்குவா" மென்ற துய்த்துணர்கவென்க. இஃது வற்புறுத்தற்கு வேளாண்குடியை யளவைமுகத்தான் வெளிப்படையின் விளங்கவைத்து மற்றைக்குடிகளை வேற்றுரு பொடுவிற் பராமுகத்தாற் குறிப்பின்கண் சார்த்தி வைத்ததே யமையுமென்க. விளங்கு விழுக்குடி வேளாண்குடி யென்றதனுலன்றே அங்கையிற் கனிபோன் றிங்ஙனம் பெற்றும்.

அஃதீண்டெற்றுற் பெறுது மெனின்:— கொண்டலை நிகர்க்கும் வேளாண்குடி யென்றதனுற் பெறுது மென்க. எங்ஙனமெனின்,— கொண்டலை — பருவப்புயலை; நிகர்க்கும் — ஒக்கும்; வேளாண்குடி — வேளாண்குடிப் பிறப்பினர் எனவே: வேளாண்குடிப் — பிறப்பினர் —"கைம்மாறு கனவினுங் கருதலின்றி வரையாது வழங்கும் வள்ளற்றன்மை யுடையாரென்றும்," — எவ்வாற்ரு னுயர்ந்தோர் கட்குந் தம்மையன்றி உலகிய னடத்தப் படாச் சிறப்புடைக் கருவியாந் தன்மை யுடையரென்றும்,— இங்ஙனம் வையகத் தார்க் கன்றி வானகத்தார்க்குங் குன்ரு நன்றிகுயிற்றுநரென்றும்; 'தம்மானே யன்றித் தங்கருவியானுங் கருமத்தானும் எவ்வெவ் வளாகத் தெவ்வெவ் வுயிர்கட்கு மின்பந்தரூஉ மியலின ரென்றும்': — 'ஆன்ற கல்வி, — ஊன்று கேள்வி, — சான்ற வுணர்ச்சி, — ஏன்ற ஒழுக்க முதலிய உயர்நெறிக் குன்றத் தும்ப ரிம்பர் பல்காற் பயிலுறும் பாங்கின ரென்றும்', — 'தொன்னெறி அரையர்க்குத் துணைவ ராகிப் பகைப்புல னடுங்கிய படர்ந்தெதிருறீஇ வாய்விட்டார்த்து வாள் புடைபெயர்த்து விற்புடைத்தழீஇப் பொறபொடு பெய்யு மாண்

Koviloor Digital Library

மைய ரென்றும், — **தண்ணளி யுருக்கொடு** தாங்கிச் செங்கோனிலை பெறச்செய்யுந் தலைமைய ரென்றும்,' — 'எத்திறத்தவரு மெதிர் கொடு பராஅய்ப் பற்பல திறப்படூஉம் பரிசிற் பழிச்ச உயரிடத் தோங்கிய பெயருள ரென்றும்,' — 'கடவுளாணையிற் கடவாச்செறிவும் யாவரு மதிக்கு மேளருடைமையும் புலவராற் புனையும் புகழினீட்டமுங் களக்கறு மொண்மையும் விளக்குறு பசுமையும் **பொய்யா மாற்ற மும் போக்கறு தோற்றமு மின்சுவை நிறைவு மெத்திற நலனு முடைய ரென்றும்,** — உவமைக் குறிப்பாற் பெறப்படுதலின் இங் ஙனமென்க. ஈண்டு வகுத்தவை கொண்டலின்கண்ணு மூய்த்துணர்ந்து கொள்க. இஃது வகுத்த தன்றி விரிப்பிற் பெருகும்.

இனி, கொண்டலை நிகர்க்கும் வேளாண்குடி என்பதற்கு:— கொண்டல் — கொண்டலைநடாத்தும், ஐ — தலைவனாகிய இந்திரனை, **நிகர்க்கும்**—ஒத்த. வேளாண் குடி—வேளாண்குடிப்பிறப்பினர் எனினு மமையும். இங்ஙனம் பெறுங்கால், வேளாண்குடிப் பிறப்பினர் தமது நல்லொழுக்க மென்னு மாணையாற் கொண்டலை யாங்காங்குப் பெய் வித்து நடத்தலும், ஐவகைத் திணையினு முய்வகைத் திணையாய மரு தத்திணையை வளம்படுத்துக் காத்தலும், வேளாண் வேள்விக்கு வேந்த ராதலும், வீழாது தரூஉம் வேளாண்மைக்குரிய கருவியை யுடையராத லும், யாவரானும் விரும்பப்படூஉ மியற்கைய ராதலுங் கொள்க. ஈண்டு வகுத்தவை இந்திரன்மாட்டு மூய்த்துணர்க. இஃதும் விரிப்பிற் பெருகும்.

அன்றி, கொண்டலென்பது இலக்கணையாற் காவற் கடவுளாய **விண்டுவாகக் கொண்டு அக்கடவுளை யொத்த வேளாண்குடி யெனினு மமையும்.** இங்ஙனங் கொள்ளுங்கால், வேளாண்குடிப் பிறப்பினர் 'நடுநின் றெவ்வெவ் வுயிர்க்கு நுகர்ச்சி வருவித்தலும், — பகைப்புலன் முருக்கிப் பாதுகாத்தலும், — திருவிற்பொலிந்த சிறப் புடையராதலும், — **இன்சுவையமுத மிரந்தோர்க்கீதலும்,—பூமகட் குரிமை பூண்டு நிற்றலும், — சத்துவத் தனிக் குணத்தானே பயிற லும், — ஊக்கமுஞ் செவ்வியு முடைய ராதலுங்'** கொள்க. ஈண்டு வகுத்தவை விண்டுவின் மாட்டு மூய்த்துணர்க. இஃதும் விரிப்பிற் பெருகும்.

கொண்டலை நிகர்க்கும் வேளாண்குடி யென விரியுவமையின்கண் ணுவம உருபன்றி யையுருபும் விரித்த திங்ஙனம் விரிப்பதற்குக் குறி யுணர்த்த வென்க. உவமைக்கும் பொருட்கு மொரு நோக்கத்தா னன்றிப் பலபட வகுத்த தெற்றுலெனின்,—உவமைப் பொருள் புகழ் பொருண் மிகை குறித் தழுக்கற்று முரணுதற் குறியா நிகர்க்குமென் னுந் தடுமா றுவமவுருபு விரித்தமையி னென்க. என்னை? ஆசிரியர்

Koviloor Digital Library

தொல்காப்பியர் உவம வுருபுகளை வகுத்து முடிபு செய்யு மிடத்து, "கடுப்ப வேய்ப்ப" [1] வென்னுஞ் சூத்திரத்தா னிகர்ப்ப வென்பது மெய்யுவம வுருபென்று வகுத்தவண்ண மவ்வுருபு ஈண்டஃ தேலாது தொழில் பயன் முதலிய வேற்றதாகலின். அஃதே லிஃதி யாண்டும் வரைதலின்றோ வெனின் [2] "தடுமா றுருபுக டாம்வரை யின்றே" யென்பவாகலின் விரும்புமிடத்தின் றென்க. அன்றி, இஃதழுக்கற்று முரணுதற் பெயர்ச்சிக்கட் போந்த வெச்சம் போ ற லி னங்ஙனங் குறிக்கவைத்த தெ னி னு மமையுமென்க. இவ்வுவமை நோக்கைச் [3] "சுட்டிக் கூறு" வென்னுஞ் சூ த் தி ர நோக்கத்தானுங் காணக. உவமையும் பொருளு மொத்தல் வேண்டு மென்றவா றொத்த வண்ண முய்த்துணர்க. அன்றி, உவமப்போலி மறுக்கப்படா வாகலி னீண்ட வற்றுள்ளு மேற்பன விரும்பினு மிழுக்கின்றென்க. இஃதின்னும் விரிக்கிற் பெருகும்.

கொண்ட லென்பது,—விரவு மிகையொலிக் காப்பிய வழக்குத் தொடரியற் பால்பகா வஃறிணைப் பல்பொருள் குறித்த வொருபெயர்த் திரிசொல். ஈண்டுச் சிறப் புய ருரிமைக் கருவி யவயவப் பொது நிலைப் பூதப் பொருட்டாகிய மேகத்தை யுணர்த்திற்று.

வேளாண்குடி யென்பது,—உயர்நிலைக் காப்பிய வ ழ க் கு ச் சொன்னடைச் சிறப்பு முன்னிலைக் காரணம் பின்னிலை யிடுகுறிச் சாதிக் கூற்றுத் தொடர் நிலை கருத்துப் பொருட்புறத் துயர்திணைக் காட்சிப் பொருட் பன்மைத் தோற்றத் தன்மொழித்தொகைச் சொற்றொடர். இதனை வேளாண்மைக் குரிய குடிப்பிறப்பின ரென்று வி ரி த் து க் கொள்க. **வேளாண்மை**—நன்றி ஈகை வேளாண்டொழின்மை முதலிய பல்பொருள் கு றி த் த வொருசொல். அஃது வேளாண்டொழி லுடைமையா னன்றி ஈகை முதலிய நற்செய்கை யுடைமைக்கு முரிய வோர் குடிப்பண்பாயிற்று. குடியென்பது—குலம், ஊர் முதலிய குறித்த வோர் சொல். அஃ தீண்டு குலத்தின்மேனின்றது. அன்றி, மருதத் திணை யூரென்பது மொன்று. வேளாண்டொழில் என்பதில்:—வேள்

1. கடுப்ப வேய்ப்ப மருளப் புரைய
வொட்ட வொடுங்க வோட நிகர்ப்பவென்
றப்பா லெட்டே மெய்ப்பா லுவமம்
(தொல்காப்பியம், பொருளதிகாரம், உவம இயல், 15)
2. தடுமா றுவமங் கடிவரை யின்றே
(தொல்காப்பியம், பொருளதிகாரம், உவமை இயல், 35)
3. சுட்டிக் கூறா வுவம மாயிற்
பொருளெதிர் புணர்த்துப் புணர்ந்தன கொளலே
(தொல்காப்பியம், பொருளதிகாரம், உவம இயல், 7)

Koviloor Digital Library

என்பது நன்னிலம், ஆண் என்பது — உரிமைத்தலைமை, தொழில் என்பது, முயன்று முடித்தல்: இதனால் நன்னிலந்திருத்திச் செந்நெறி பொங்கப் பைங்கூழ் விளைக்கு முரிமைத் தலைமைத் தொழில் என்பது பெறப்பட்டது. அல்லதூஉம் வேள் என்பது விரும்பப்படுகை, ஆண் டொழில்—ஆண்மைத்தொழில்: இதனால் அரையரால் விரும்பப்படூஉம் மந்திரித் தலைமை சேனைத் தலைமை யென்னும் ஆண்மைத் தொழி லுடையோ ரென்பதூஉ மமையுமென்க. இதனையுடைய குடிப்பிறப் பினர் வேளாண் குடிப்பிறப்பினர் வேளாளரென்க. இவ்வேளாண் குடிப்பிறப்பினர் ஈகை முதலிய நற்செய்கைகளின் மிக்கா ரென்பதற்கு வேறு கூறவேண்டுவ தின்று: இவர் குடிப்பெயரே தக்க சான்றென்க. அன்றி அந்தணர், அரையர், வணிகர் முதலியோர் தத்தமக்குரிய வொழுக் கங்களை நடத்தற்கு வேளாண் குடிப்பிறப்பினரது உதவி முற்றும் வேண்டுதலின், இவர் நெறி பெருநெறி யென்பதற்கு மஃதே சான் றென்க. இதனைத் தொல்காப்பியத்தில்

நாற்றமுந் தோற்றமு மொழுக்கமு முண்டியும்
* * * * * *
வேளாண் பெருநெறி வேண்டிய விடத்தும்
* * * * * *

(தொல்காப்பியம், பொருளதிகாரம், களவியல், 23.)

என்னும் சூத்திரத்துள் வேளாண் பெருநெறி என்றதனாற் காண்க. அன்றி, இவர்க்கு இத்தொழிலுரிமைச் சிறப்பு என்பதூஉம் இவரது மேம்பாட்டுத் தன்மையையும் **மரபியலிற்** காண்க. இதனை விரிக்கிற் பெருகும்.

வழிபடுகடவுள் வணக்கப் பாட்டுரை முற்றிற்று.

தொண்டமண்டல சதகம்

கட்டளைக் கலித்துறை

பூதவஞ் சூத முதலாக நின்று பொதும்பிற்சந்த
பாதவம் போன்மிக்க **வேளாளர்** தங்கிய பான்மையினால்
ஆதவஞ் சூழ்தரு பல்கோடி தேச மனைத்தினுமா
மாதவஞ் செய்ததன் றேதமிழ்சேர் தொண்ட மண்டலமே.

(பூதவம் — ஆலமரம்; சூதம் — மாமரம்; சந்தபாதவம் — சந்தனமரம்;
ஆதவம் — சூரியன்)

Koviloor Digital Library

பொன் வண்ணத் தந்தாதி

பாசுரம் *

கட்டளைக் கலித்துறை

வேதியன் பாதம் பணிந்தேன்
பணிந்துமெய்ஞ் ஞானமென்னுஞ்
சோதியென் பாலுற வுற்றுநின்
றேற்கின்று தொட்டிதுவே
நீதியென் ருன்செல்வ மாவதென்
றேன்மே னினைப்புவண்டா
ரோதிநின் போல்வகைத் தேயிரு
பாலு மொழித்ததுவே.

வியாக்கியானம்

வேதியன் — சத்தார்த்த லக்ஷியனாகிய இறைவனது,
பாதம் — திருவடிகளை,
பணிந்தேன் — வணங்கினேன்,
பணிந்து — பணிந்து (திருவருட் சமுகத்தில் நின்ற யான் அவனால் கடைக்கணிக்கப் பெற்றதனால்),
மெய்ஞ்ஞான மென்னும் சோதி — மெய்யறி வென்னும் இயற்கை விளக்கமாகிய அவ் விறைவனது ஆண்பால் வடிவம், (சோதி யென்பது சோதிப்பாலெனக் கொளற்பாலது.)
என்பா லுற — ஆன்ம சத்தி விளக்கமாகிய எனது பெண்பாலிற் கலக்க,
உற்று நின்றேன் — ஐக்கி யானுபவம் பெற்று நின்றேன்,
(நின்றேற்) கு — அங்ஙனம் நின்ற என்னை, இறைவன் மீட்டுங் கடைக் கணித்து,
இன்று தொட்டு — இது பொழுது தொடங்கி,
இதுவே — இவ் வனுபவ ஒழுக்கமே,
நீதி யென்ருன் — நீ யனுபவிக்கின்ற ஒழுக்கமாகுக என்று திருவாய் மலர்ந் தருளினன். (யானும்),
செல்வ மாவ தென்றேன் — அடைதற்குரிய திருவருட் செல்வ மிங்ஙனமாவ தென் றங்ஙனமே நின்றனன்,
மேல் — அதன் பின்னர்,
நினைப்பு — இருவகைப் பாலினும் கவர்பட நின்ற எனது நினைவு,

* சேரமான் பெருமாள் நாயனுர் பொன்வண்ணத் தந்தாதி, 22-ம் பாசுரம்.

Koviloor Digital Library

வண் டா ரோதி — வண்டு மொய்க்கின்ற இயற்கை மணம் வீசும் அளகத்தை யுடையாய்!

நின் போல் வகைத்து ஏ — இறைவனது அனுபவ விருப்பம் பற்றி வந்த தாப விசேடத்தாற் பெண்பாற் குரிய நாணத்தை விடுத்துப் பலருங் கேட்கத் தூது செல்லுதி யென்று, என்னை வருந்தி யேவுதலால், ஊக்க முதலிய வுடைய ஆண்பாற் றன்மை அவையின்றிய நின் பெண்பாற் றன்மையிற் கலக்கப்பட் டிருபாலு மொழித்து நின்ற நின் வண்ணம் போன்றதாய்,

இரு பாலும் — ஆண்பால் பெண்பால் என்னும் இருபாலினிடத் துஞ் செல்லுகை,

ஒழித்தது ஏ — நீங்கிற்று.

ஆகலில் நீயும் புறத்தே என்னை ஒப்பாயாக.

இதன் கருத்து

சத்தார்த்த லக்ஷியனாகிய இறைவனது திருவடிகளை, வணங்கினேன். பணிந்து (திருவருட் சமுகத்தில் நின்ற யான் அவனால் கடைக் கணிக்கப் பெற்றதனால்), மெய்யறிவென்னும் இயற்கை விளக்கமாகிய அவ் விறைவனது ஆண்பால் வடிவம், ஆன்ம சத்தி விளக்கமாகிய எனது பெண்பாலிற் கலக்க, ஐக்கியானுபவம் பெற்று நின்றேன். அங்ஙனம் நின்ற என்னை இறைவன் மீட்டுங் கடைக்கணித்து, "இதுபொழுது தொடங்கி, இவ்வனுபவ ஒழுக்கமே, நீ யனுபவிக்கின்ற ஒழுக்கமாகுக" என்று திருவாய்மலர்ந்தருளினன். யானும், அடைதற் குரிய திருவருட் செல்வ மிங்ஙன மாவதென் றங்ஙனமே நின்றனன். அதன் பின்னர், இருவகைப் பாலினுங் கவர்பட நின்ற எனது நினைவு, "வண்டு மொய்க்கின்ற இயற்கை மணம் வீசும் அளகத்தை யுடையாய்! இறைவனது அனுபவ விருப்பம் பற்றி வந்த தாப விசேடத் தாற் பெண்பாற்குரிய நாணத்தை விடுத்துப் பலருங்கேட்கத் தூது செலுதி யென்று என்னை வருந்தி யேவுதலால் ஊக்க முதலிய வுடைய ஆண்பாற் றன்மை, அவை யின்றிய நின் பெண்பாற் றன்மையிற் கலக்கப்பட்டிருபாலும் ஒழித்து நின்ற நின் வண்ணம் போன்றதாய், ஆண்பால் பெண்பால் என்னும் இருபாலினிடத்துஞ் செல்லுகை நீங்கிற்று. ஆகலில் நீயும் புறத்தே என்னை யொப்பாயாக".

இது சிவானந்தத்தை அகத்தே யனுபவித்த தோழி புறத் தனுபவம் விரும்பிய தலைவியை அறி வுறுத்தியது.

Koviloor Digital Library

திருவருட்பா

முதல் நான்கு திருமுறைகளை முதல்பதிப்பு அச்சிடும்போது இனி அச்சிடுவதாகக் குறிக்கப்பட்டவை:—

1. நடராஜ நிபுணம்
2. நடராஜ விசித்திரம்
3. நடராஜ மதுரம்
4. நடராஜ அலங்காரம்
5. நடராஜ ஞான நாடகம்
6. நடராஜ ஆனந்த நாடகம்
7. சிதம்பர உபதேசம்
8. சிற்றம்பல நடனம்
9. பொன்னம்பல நடனம்
10. பொது நடனம்
11. தத்துவ நடனம்
12. ஆனந்த நடனம்
13. அதீத நிலை
14. அருள் விளக்கம்
15. மெய்ப்பொருள் விளக்கம்
16. மெய்ம்மொழிப் பொருள் விளக்கம்
17. சன்மார்க்க விளக்கம்
18. சாதன விளக்கம்
19. கலாந்த விளக்கம்
20. யோகாந்த விளக்கம்
21. நாதாந்த விளக்கம்
22. போதாந்த விளக்கம்
23. வேதாந்த விளக்கம்
24. சித்தாந்த விளக்கம்
25. அண்ட விளக்கம்
26. பிண்ட விளக்கம்
27. பிரகிருதி விருத்தி
28. தத்துவ விருத்தி
29. சுத்தசிவராசியம்
30. பரசிவராசியம்
31. மந்திரக் கொத்து
32. மகாவாக்கிய வகை
33. பொதுவேதம்
34. குடும்ப கோஷம்
35. இயல்வகை
36. அளவை வகை
37. ஞாயவகை
38. இலக்கண விருத்தி
39. தர்க்க விருத்தி
40. தென்மொழி விளக்கம்
41. வடமொழி விளக்கம்
42. உலகியல் விளக்கம்
43. கலை மரபு

Koviloor Digital Library

A. No. 4337

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

அருட்பெருஞ்ஜோதி

திருவருட்பா மகிமை

நேரிசை வெண்பா

திருச்சிற்றம்பலம்

தண்ணீர் விளக்கெரித்த தன்மைபோல் மாந்தர்கள்தம்
உண்ணீர் சிவம்விளங்க வோங்குவிக்கும் - கண்மணியாம்
நங்கள் இராமலிங்க னல்லவருட் பாமுறையைத்
துங்கமுற மாறு தொழு.

திருச்சிற்றம்பலம்

இது

வேதாகம சுத்தசைவ சித்தாந்த
சமயாசாரிய பீடமாய் விளங்குகின்ற
மதுரை திருஞானசம்பந்த மூர்த்திகளாதீனம்
சிதம்பர சுவாமிகளால்
அருளிச் செய்யப் பட்டது

Koviloor Digital Library

Koviloor Digital Library

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

அருட்பெருஞ்ஜோதி

சிவ கணபதி துணை

திருவருட்பா

முதல் திருமுறை

முதலாவது

திருவடிப்புகழ்ச்சி

நூற்றிருபத் தெட்டடியான் மிகுத்துவந்த கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

பரசிவம்: சின்மயம் பூரணம் சிவபோக பாக்கியம் பரமநிதியம்
பரசுகம் தன்மயம் சச்சிதா னந்தமெய்ப் பரம ஏகாந்தநிலயம்
பரமஞானம் பரமசத்துவ மகத்துவம் பரம கைவல்ய நிமலம்
பரமதத்துவ நிரதிசய நிட்களம் பூத பௌதிகாதார நிபுணம் 4

பவபந்த நிக்ரக விநோதசகளம் சிற்பரம் பரானந்த சொருபம்
பரிசயாதீதம் சுயம் சதோதயம் வரம் பரமார்த்த முக்தமௌனம்
படன வேதாந்தாந்த மாகமாந் தாந்த நிருபாதிகம் பரமசாந்தம்
பரநாத தத்துவாந்தம் சகச தரிசனம் பகிரங்கம் அந்தரங்கம் 8

பரவியோமம் பரமஜோதிமயம் விபுலம் பரம்பர மனந்தம் அசலம்
பரம லோகாதிக்க நித்திய சாம்பிராச்சியம் பரபதம் பரமசூக்ஷமம்
பராபர மநாமய நிராதர மகோசரம் பரமதந்திரம் விசித்திரம்
பராமுத நிராகரம் விகாசனம் விகோடணம் பரசுகோதய மஹோதயம்

பரிபவ விமோசனங் குணரகிதம் விசுவம் பதித்துவ பரோபரீணம்
பஞ்சகிர்த்திய சுத்த கர்த்தத்துவம் தற்பரம் சிதம்பர விலாசம்

Koviloor Digital Library

பகர் சுபாவம் புனிதமது லமது விதமம் பராம்பர நிராலம்பனம்
பரவு சாக்ஷாத்கார நிரவயவம் கற்பனுதீத நிருவிகாரம் 16

பரதுரிய அனுபவம் குருதுரிய பதமம் பகம்பகா தீதவிமலம்
பரம கருணும்பரம் தற்பதம் கன சொற்பதாதீதம் இன்பவடிவம்
பரோக்ஷ ஞானுதீதம் அபரோக்ஷ ஞானுனுபவ விலாசப் பிரகாசம்
பாவனுதீதம் குணுதீதம் உபசாந்த பதமகா மௌன ரூபம் 20

பரம போதம் போத ரகிதசகிதம் சம்பவாதீத மப்ரமேயம்
பகரனந் தானந்தம் அமலமுசிதம் சிற்பதம் சதானந்த சாரம்
பரையாதி கிரணுங்க சாங்க சௌபாங்க விம்பாகார நிருவிகற்பம்
பரசுகாரம்பம் பரம் பிரம வித்தம் பரானந்த புரணபோகம் 24

பரிமிதாதீதம் பரோதயம் பரஙிதம் பரபரீணம் பராந்தம்
பரமாற்புதம் பரமசேதனம் பசுபாச பாவனம் பரம மோக்ஷம்
பரமானு குண நவாதீதஞ் சிதாகாச பாஸ்கரம் பரமபோகம்
பரிபாக வேதன வரோத யானந்த பதபாலனம் பரமயோகம் 28

பரம சாத்திய வதீதானந்த போக்கியம் பரிகதம் பரிவேத்தியம்
பரகேவலாத் விதானந் தானுபவ சத்த பாதாக்ர சுத்தபலிதம்
பரமசுத் தாத் விதானந்த வனுபூதிகம் பரிபூத சிற்குணுந்தம்
பரமசித் தாந்த நிகமாந்த **சமரசசுத்த** பரமானுபவ விலாசம் ¼-32

தரமிகும் சர்வ சாதிட்டான சத்தியம் சர்வ ஆனந்தபோகம்
சார்ந்த சர்வாதார சர்வமங்கள சர்வ சத்திதரமென் றளவிலாச்
சகுண நிர்க்குணமுறு சலட்சண விலட்சணத் தன்மை பலவாகநாடித்
தம்மைநிகர் மறையெலாம் இன்னும் அளவிடநின்ற சங்கர னநாதியாதி

சாம கீதப்பிரியன் மணிகண்ட சீகண்ட சசிகண்ட சாமகண்ட
சயசய வெனுந்தொண்ட ரிதயமலர் மேவிய சடாமகுடன் மதனதகனன்
சந்திர சேகரன் இடபவாகனன் கங்காதரன் சூலபாணி இறைவன்
தலிமுதல் உமாபதி புராந்தகன் பசுபதி சயம்பு மாதேவன் அமலன்

தாண்டவன் தலைமாலை பூண்டவன் தொழுமன்பர் தங்களுக் கருளாண்டவன்
தன்னிகரில் சித்தெலாம் வல்லவன் வடதிசைச் சைலமெனும் ஒருவில்லவன்
தக்ஷுணுமூர்த்தி அருண்மூர்த்தி புண்ணியமூர்த்தி தகுமட்டமூர்த்தியானேன்
தலைமைபெறு கணநாயகன் குழகன் அழகன் மெய்ச்சாமி நந்தேவதேவன்

சம்பு வேதண்டன் பிறப்பிலான் முடிவிலான் தாணு முக்கண்க ளுடையான்
சதுரன் கடாசல வுரிப் போர்வையான் செந்தழல் கரத்தேந்தி நின்றோன்
சர்வ காரணன் விறற்காலகாலன் சர்வ சம்பிரமன் சர்வேச்சுரன்
தகைகொள் பரமேச்சுரன் சிவபிரான் எம்பிரான் தம்பிரான் செம்பொற்பதம்

Koviloor Digital Library

தகவுபெறு நிட்பேத நிட்கம்பமாம் பராசத்தி வடிவாம் பொற்பதம்
தக்கநிட் காடின்ய சம்வேத நாங்க சிற்சத்தி வடிவாம் பொற்பதம்
சாற்றரிய **விச்சை ஞானம் கிரியை** யென்னு முச்சத்திவடிவாம் பொற்பதம்
தடையிலா நிர்விடய சிற்குண சிவானந்த சத்திவடிவாம் பொற்பதம்

தகுவிந்தை மோகினியை மானை அசைவிக்கும் ஒரு சத்திவடிவாம் பொற்பதம்
தாழ்வி லீசானமுதன் மூர்த்திவரை ஐஞ்சத்தி தஞ்சத்தியாம் பொற்பதம்
சவிகற்ப நிருவிகற்பம் பெறும் அனந்தமா சத்திசத்தாம் பொற்பதம்
தடநிருப வவிவர்த்த சாமர்த்திய திருவருட் சத்தியுருவாம் பொற்பதம் 56

தவாத சாந்தப்பதம் துவாத சாந்தப்பதம் தருமிணை மலர்ப்பூம்பதம்
சகலர் விஞ்ஞானகலர் பிரளயாகலர் இதய சாக்ஷியாகிய பூம்பதம்
தனிவிலா அணுபக்ஷ சம்பு பக்ஷங்களில் சமரசமுறும் பூம்பதம்
தருபரஞ் சூக்குமம் தூலமிவை நிலவிய தமக்குள் உயிராம் பூம்பதம் 60

சரவசர அபரிமித விவித ஆன்மப் பகுதிதாங்குந் திருப்பூம்பதம்
தண்ட பிண்டாண்ட அகிலாண்ட பிரமாண்டந் தடிக்க வருளும்பூம்பதம்
தத்வ தாத்விக சகசிருட்டி திதிசங்கார சகல கர்த்துரு பூம்பதம்
சகசமல இருளகல நின்மல சுயம்ப்ரகாசங் குலவு நற்பூம்பதம் ½ – 64

மரபுறு மதாதீத வெளிநடுவி லானந்த மா நடனமிடு பூம்பதம்
மன்னும்வினை ஒப்புமல பரிபாகம் வாய்க்க மா மாயையை மிதிக்கும்பதம்
மலிபிறவி மறவியினமுழ்ந்தும் உயிர் தமை யருளின் மருவுற எடுக்கும்பதம்
வளரூர்த்த வீரதாண் டவமுதற் பஞ்சக மகிழ்ந்திட வியற்றும்பதம் 68

வல்ல முயலகன் மீதினூன்றிய திருப்பதம் வளந்தரத் தூக்கும்பதம்
வல்வினை யெலாந் தவிர்த்தழியாத சுத்தநிலை வாய்த்திட வழங்கும்பதம்
மறை துதிக்கும்பதம் மறைச்சிலம் பொளிர்பதம் மறைப்பாதுகைச் செம்பதம்
மறைமுடிமணிப்பதம் மறைக்குமெட்டாப்பதம் **மறைப்பரி**யுகைக்கும்பதம்

மறையவ னுளங்கொண்டபதம் அமித கோடியாம் மறையவர் சிரஞ்சூழ்பதம்
மறையவன் சிரசிகாமணி யெனும்பதம் மலர்கொண் மறையவன் வாழ்த்தும்பதம்
மறையவன் செயவுலக மாக்கின்ற அதிகார வாழ்வை யீந்தருளும்பதம்
மறையவன் கனவினுங் காணுதபதம் அந்த **மறையவன்** பரவும்பதம்

மால்விடை யிவர்ந்திடு மலர்ப்பதம் தெய்வ நெடுமா லருச்சிக்கும்பதம்
மால்பரவி நாடொறும் வணங்குபதம் மிக்க திருமால்விழி யிலங்கும்பதம்
[1]மாறேட நின்றபதம் ஓரனந்தங் கோடி [2]மாற்றலை யலங்கற்பதம்
மான்முடிப்பதம் நெடிய மாலுளப்பதம் அந்த மாலும் அறிவரிதாம்பதம்

1 மாறேட — மால், தேட 2 மாற்றலை — மால், தலை.

Koviloor Digital Library

மால்கொள் அவதாரங்கள்பத்தினும் வழிபட்டுவாய்மைபெற நிற்கும்பதம்
மாலுலகு காக்கின்ற வண்மைபெற் றடிமையின் வதிந்திட வளிக்கும்பதம்
வரையுறும் உருத்திரர்கள் புகழ்பதம் பலகோடி வயவுருத்திரர் சூழ்பதம்
வாய்ந்திடு முருத்திரற் கியல்கொண் முத்தொழில்செய்யும் வண்மைதந்தருளும்பதம்

வான இந்திரராதி யெண்டிசைக் காவலர்கண் மாதவத் திறனும்பதம்
மதியிரவி யாதிசுரர் அசுரரந்தரர் வான வாசிகள் வழுத்தும்பதம்
மணியுரகர் கருடர் காந்தருவர் விஞ்சையர்சித்தர் மாமுனிவ ரேத்தும்பதம்
மாநிருதர் பைசாசர் கிம்புருடர் யக்ஷர்கள் மதித்து வரமேற்கும்பதம் 88

மன்னு கின்னரர் பூதர் வித்தியாதரர் போகர் மற்றையர்கள் பற்றும்பதம்
வண்மைபெறு நந்திமுதல் சிவகணத்தலைவர்கண் மனக்கோயில் வாழும்பதம்
மாதேவி எங்கள் மலைமங்கை என்னம்மை மென் மலர்க்கையால் வருடும்பதம்
மறலியை உதைத்தருள் கழற்பதம் அரக்கனை மலைக்கீழ் அடர்க்கும்பதம்

வஞ்சமறு நெஞ்சினிடை எஞ்சலற விஞ்சுதிறன் மஞ்சுற விளங்கும்பதம்
வந்தனைசெய் புந்தியவர் தந்துயர் தவிர்ந்திட வுண்மந்தண நவிற்றும்பதம்
மாறிலொரு மாறனுள மீறின்மகிழ் வீறியிட மாறிநட மாடும்பதம்
மறக்கருணையுந் தனி அறக்கருணையுந் தந்து வாழ்விக்கும் ஒண்மைப்பதம்
ꠤ - 96

இரவுறும் பகலடியர் இருமருங்கினும் உறுவரென வயங்கிய சீர்ப்பதம்
எம்பந்தமறஎமதுசம்பந்தவள்ளல்மொழி இயன்மணமணக்கும்பதம்
ஈவரசர் எம்முடைய நாவரசர் சொற்பதிக இசை பரிமளிக்கும் பதம்
ஏவலார் புகழெமது நாவலாரூரர் புகல் இசைதிருப் பாட்டுப்பதம்100

ஏதவூர்தங்காதவாதவூர் எங்கோவின் இன்சொன்மணியணியும்பதம்
எல்லூரு மணிமாட நல்லூரின் அப்பர்முடி இடைவைகி யருண்மென்பதம்
எடுமேலெனத் தொண்டர் முடிமேன் மறுத்திடவும் இடைவலிந் தேறும்பதம்
எழில்பரவையிசையஆரூர்மறுகினருள்கொண் டிராமுழுது முலவும்பதம்

இன்றெண்டர் பசியறக் கச்சூரின் மனைதொறு மிரக்கநடை கொள்ளும்பதம்
இனைப்புறலறிந் தன்பர் பொதிசோறருந்த முனிருந்து பினடக்கும்பதம்
எறிவிறகு விற்கவெள் கூடற் றெருத்தொறும் இயங்கிய இரக்கப்பதம்
இறுவைகை யங்கரையின் மண்படப் பல்கால் எழுந்து விளையாடும்பதம்

எங்கே மெய்யன்பருளர் அங்கே நலந்தர எழுந்தருளும் வண்மைப்பதம்
எவ்வண்ணம் வேண்டுகினும் அவ்வண்ணம் அன்றே இரங்கி யீந்தருளும் பதம்
என்போன் றவர்க்கு மிகுபொன்போன்ற கருணைதந்திதயத் திருக்கும்பதம்
என்னுயிரை யன்னபதம் என் றுயிர்க் குயிரா யிலங்குசெம் பதுமப்பதம்

Koviloor Digital Library

என் அறிவெனும்பதம் எனறிவினுக் கறிவாயிருந்த செங் கமலப்பதம்
என் அன்பெனும்பதம் எனன்பிற்கு வித்தா யிசைந்தகோ கனகப்பதம்
என்தவ மெனும்பதம் என் மெய்த்தவப் பயனாயியைந்த செஞ்சலசப்பதம்
என்னிரு கண்மணியானபதம் என்கண் மணிகளுக் கினியநல் விருந்தாம்பதம்

என் செல்வமாம்பதம் என் மெய்ச்செல்வ வருவாயெனுந் தாமரைப்பொற்பதம்
என்பெரிய வாழ்வான பதம் என் களிப்பா மிரும்பதம் எனிதியாம் பதம்
என் தந்தைதாயெனும்இணைப்பதம் எனுறவாமியற்பதம் எனட்பாம்பதம்
என் குரு வெனும்பதம் எனிட்ட தெய்வப்பதம் எனதுகுல தெய்வப்பதம்

என்பொறிகளுக்கெலாம் நல்விடயமாம் பதம் எனெழுமையும் விடாப்பொற்பதம்
என்குறை யெலாந்தவிர்த்தாட்கொண்டபதம் எனக்கெய்ப்பில் வைப்பாகும்பதம்
எல்லார்க்கும் நல்லபதம் எல்லாஞ்செய் வல்லபதம் இணையிலாத் துணையாம்பதம்
எழுமனம் உடைந்துடைந் துருகிநெகிழ் பத்தர்கட் கின்னமுத மாகும்பதம்

எண்ணுறிற் பாலில்நறு நெய்யொடு சருக்கரை இசைந்தென இனிக்கும் பதம்
ஏற்ற முக்கனி பாகு கன்னல் கற்கண்டு தேனென்ன மதுரிக்கும்பதம்
எங்கள்பதம் எங்கள்பதம் என்று சமயத்தேவர் இசைவழக்கிடு நற்பதம்
ஈறிலாப்பதம் எலாந்தருதிருப்பதம் அழிவில்இன்புதவுகின்றபதமே.

திருச்சிற்றம்பலம்　　[1 - 128

ஐயா அவர்களின் அருள்வாக்கு

ப சி த் தி ரு

த னி த் தி ரு

வி ழி த் தி ரு

Koviloor Digital Library

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

இரண்டாவது

விண்ணப்பக் கலிவெண்பா

காப்பு

நேரிசைவெண்பா

திருச்சிற்றம்பலம்

அவ்வவ் விடைவந் தகற்றி யருள்தரலால்
எவ்வெவ் விடையூறும் எய்தலிலங் — தெவ்வர்தமைக்
கன்றுமத மாமுகமுங் கண்மூன்றுங் கொண்டிருந்த
தொன்றதுநம் முள்ளம் உறைந்து.

1 — சோழநாட்டுத் திருப்பதிகள் (காவிரியின் வடகரை)

திருச்சிற்றம்பலம்

சொற்பெறு மெய்ஞ்ஞானச் சுயஞ்ஜோதி யாந் **தில்லைச்**
சிற்சபையில் வாழ்தலைமைத் தெய்வமே — நற்சிவையாங் 1

தாயின் உலகனைத்துந் தாங்குந் **திருப்புலியூர்க்**
கோயி லமர்ந்தகுணக் குன்றமே — மாயமிகும் 2

வாட்களமுற் றுங்குவிழி மாதர்மய லற்றவர்சூழ்
வேட்களமுற் றோங்கும் விழுப்பொருளே — வாழ்க்கைமனை 3

நல்வாய லெங்கு நவமணிக்குன் றோங்குதிரு
நெல்வாயில் நின்றொளிரும் நீளொளியே — செல்வாய்த் 4

தெழிப்பாலை வேலைத் திரையொலிபோ லார்க்குங்
கழிப்பாலை யின்பக் களிப்பே — விழிப்பாலன் 5

கல்லூர்ப் பெருமணத்தைக் கட்டுரைக்கச் சோதிதரு
நல்லூர்ப் பெருமணம்வாழ் நன்னிலையே — சொல்லுங் 6

தயேந்திர ருள்ளத் தடம்போ லிலங்கு
மயேந்திரப் பள்ளியின்ப வாழ்வே — கயேந்திரனைக் 7

Koviloor Digital Library

காயலுரு தன்றுவந்து காத்தோன் புகழ்முல்லை
வாயிலி னோங்கு மணிவிளக்கே — மேய 8

பலிக்காலூர் தோறும் பதஞ்சேப்பச் சென்று
கலிக்காமூர் மேவுங் கரும்பே — வலிக்காலில் 9

[1] பாய்க்காடு கின்றவொரு பச்சை முகில்பரவுஞ்
சாய்க்காடு மேவுந் தடங்கடலே — வாய்க்கமையச் 10

சொல்லவ னீச்சரங்கு தோயவும்ப ராம்பெருமைப்
பல்லவனீச் சரத்தெம் பாவனமே — நல்லவர்கள் 11

கண்காட்டு நெற்றிக் கடவுளே! யென்றுதொழ
வெண்காட்டின் மேவுநின்ற மெய்ப்பொருளே—தண்காட்டிக்

கார்காட்டித் தையலர்தங் கண்காட்டிச் சோலைகள் சூழ்
சீர்காட்டுப் பள்ளிச் சிவக்கொழுந்தே — பார்காட் 13

டுருகாவூ ரெல்லாம் ஒளிநயக்க வோங்குங்
குருகாவூர் வெள்ளடையெங் கோவே — அருகாத 14

கார் [2] **காழில் நெஞ்சக் கவுணியர்க்குப்** போதமருள்
சீர்காழி ஞானத் திரவியமே — ஓர்காழிப் 15

பாலற்கா வன்று பசும்பொற் **றுளங்கொடுத்த**
கோலக்கா மேவுங் கொடையாளா — கோலக்கா 16

உள்ளிருக்கும் புள் [3] ளிருக்கு மோதும் புகழ்வாய்ந்த
புள்ளிருக்கும் வேளூர்ப் புரிசடையாய் — கள்ளிருக்கும் 17

காவின் மருவுங் கனமுந் திசைமணக்குங்
கோவின் மருவு**கண்ணார்** கோயிலாய் — மாவின் 18

இடைமுடியின் றீங்கனியென் றெல்லின் முசுத்தாவுங்
கடைமுடியின் மேவுங் கருத்தா — கொடைமுடியா 19

நன்றியூ ரென்றிந்த ஞாலமெலாம் வாழ்த்துகின்ற
நின்றியூர் மேவு நிலைமையனே — ஒன்றிக் 20

கருப்புன்கூ ருள்ளக் கயவர் நயவாத்
திருப்புன்கூர் மேவுஞ் சிவனே — உருப்பொலிந்தே 21

ஈடூரி லாதுயர்ந்த வேதுவினா லோங்குதிரு
நீடூரி லங்கு நிழற்றருவே — பீடுகொண்டு 22

1. காலில்பாய் — சேஷசயனம். 2. காழ் — இல் — நெஞ்சம் என்று பிரித்துப் பொருள்கொள்க. 3. இருக்கு — ரிக்வேதம்.

Koviloor Digital Library

மன்னியூ ரெல்லாம் வணங்க வளங்கொண்ட
வன்னியூர் மேவும் அதிபதியே — மன்னர்சுக 23

வாழ்விக் குடிகளடி மண்பூச லாலென்னும்
வேழ்விக் குடியமர்ந்த வித்தகனே — சூழ்வுற்றோர் 24

விண்ணெதிர்கொண் டிந்திரன்போன் மேவிநெடு நாள்வாழப்
பண்ணெதிர்கொள் பாடிப் பரம்பொருளே — நண்ணு 25

வணஞ்சே ரிறைவன் மகிழ்ந்து வணங்கும்
மணஞ்சேரி நீங்கா மகிழ்வே — மணஞ்சேர்ந்து 26

வாரட்ட கொங்கை மலையா ளொடுங் [1] **கொறுக்கை**
விரட்ட மேவும் வியனிறைவே — ஓரட்ட 27

திக்குங் கதிநாட்டிச் சீர்கொள் திருத் தொண்டருளம்
ஒக்குங் **கருப்பறிய** லூரரசே — மிக்கதிரு 28

மாவளருஞ் செந்தா மரைவளருஞ் செய்குரக்குக்
காவளரு மின்பக் கனசுகமே — தாவுமயல் 29

காழ்கொள் இருமனத்துக் காரிருணீத் தோர்மருவும்
வாழ்கொளி புத்தூர் மணிச்சுடரே — தாழ்வகற்ற 30

நண்ணிப் படிக்கரையர் நாடோறும் வாழ்த்துநின்ற
மண்ணிப் படிக்கரைவாழ் மங்கலமே — விண்ணினிடை 31

[2] வாமாம் புலியூர் மலர்ச்சோலை சூழ்ந்திலங்கும்
ஓமாம் புலியூர்வா முத்தமமே — நேமார்ந்த 32

வானாட்டு முள்ளூர் மருவுகின்றோர் போற்றுதிருக்
கானாட்டு முள்ளூர்க் கலைக்கடலே — மேனாட்டுந் 33

தேரையூர்ச் செங்கதிர்போல் செம்மணிகள் நின்றிலங்கும்
நாரையூர் மேவு நடுநிலையே — பாரில் 34

உடம்பூர் பவத்தை யொழித்தருளு மேன்மைக்
கடம்பூர்வா ழென்னிரண்டு கண்ணே — தடம்பொழிலிற் 35

கொந்தணவுங் கார்க்குழலார் கோலமயில் போலுலவும்
பந்தண நல்லூர்ப் பசுபதியே — கந்தமலர் 36

[3] அஞ்சனூர் செய்ததவத் தாலப் பெயர்கொண்ட
கஞ்சனூர் வாழுமென்றன் கண்மணியே — அஞ்சுகங்கள் 37

நாடிக்கா வுள்ளே நமச்சிவா யம்புகலுங்
கோடிக்கா மேவுங் குளிர்மதியே — ஓடிக் 38

1. கொறுக்கை என்பது — யானை. 2. வாம அம்புலி ஊர் — அழகிய சந்திரன் தவழுகின்ற. 3. ஹம்சன் என்பது — அஞ்சனெனத் திரிந்தது; இதற்கு அன்னத்தை வாகனமாகவுடைய பிரமன்எனப் பொருள் கொள்க.

Koviloor Digital Library

[1] கருமங்க லக்குடியிற் காண்டுமென வோதுந்
திருமங்க லக்குடியிற் றேனே — தரும 39

மனந்தாண் மலரை மருவுவிப்போர் வாழும்
பனந்தாளிற் பாலுகந்த பாகே — நினந்தாளிற் 40

சூழ்திருவாய்ப் பாடியங்கு சூழ்கினுமா மென்றுலகர்
வாழ்**திருவாய்ப் பாடி**யின்ப வாரிதியே — ஏழ்புவிக்குள் 41

வாய்ஞ்ஞலூ ரீதே மருவவென வானவர்சேர்
சேய்ஞ்ஞலூர் இன்பச் செழுங்கனியே — வாஞ்சையுறும் 42

சீவன் குடியுறவிச் சீர்நகரொன் றேயெனுஞ்சீர்த்
தேவன் குடிமகிழ்ந்த தெள்ளமுதே — ஓவின் 43

மயலூர் மனம்போல் வயலிற் கயலூர்
வியலூர் சிவானந்த வெற்பே — அயலாம்பன் 44

மட்டையூர் வண்டினங்கள் வாய்ந்து விருந்துகொளுங்
கொட்டையூர் உட்கிளருங் கோமளமே — இட்டமுடன் 45

என்னம்ப ரென்னம்ப ரென்றயன்மால் வாதுகொள
வின்னம்பர் மேவிநின்ற வென்னுறவே — முன்னம்பு 46

மாற்றும் புறம்பியலா வாய்மையருள் செய்யவுளம்
ஏற்கும் **புறம்பியம்**வா ழென்னுயிரே — மாற்கருவின் 47

கண்விசைய மங்கைக் களிபோற் பெறத்தொண்டர்
என்**விசைய மங்கையில்**வா ழென்குருவே — மண்ணுலகில் 48

வைகாவூர் நம்பொருட்டான் வைகியதென் றன்பர்தொழும்
வைகாவூர் மேவியவென் வாழ்முதலே — உய்யும்வகைக் 49

காத்தும் படைத்துங் கலைத்துநிற்போர் நாடோறும்
ஏத்துங் [2] **குரங்காட்டின்** என்னட்பே — மாத்தழைத்த 50

வண்பழனத் தின்குவிவெண் வாயிற்றேன் வாக்கியிட
வுண்**பழனத்** தென்றன் உயிர்க்குயிரே — பண்பகன்ற 51

வெய்யாற்றி னின்றவரை மெய்யாற்றி னேற்றுதிரு
வையாற்றின் மேவியவெ னாதரவே — பொய்யாற்றி 52

மெய்த்தான நின்றோர் வெளித்தான மேவுதிரு
நெய்த்தானத் துள்ளமர்ந்த நித்தியமே — மைத்த 53

கரும்புலியூர்க் காளையொடுங் கண்டோட்டங் கொள்ளும்
பெரும்புலியூர் வாழ்கருணைப் பேறே — விரும்பிநிதம் 54

[3] பொன்னுங் கௌத்துவமும் பூண்டோன் புகழ்ந்தருளை
மன்னு **மழபாடி** வச்சிரமே — துன்னுகின்ற 55

---

1. கரு — பிறப்பு, மங்கல் — ஒழிதல்.
2. குரங்காடு என்பது குரங்காட்டினென நின்றது, வேற்றுமைச்சந்தியாகலான்; அஃது - வடகுரங்காடுதுறை யென்னுமோர் திருப்பதி. 3. பொன் என்பது — இலக்குமி.

Koviloor Digital Library

நாய்க்குங் கடையேன் நவைதீர நற்கருணை
வாய்க்கும் பழுவூர் மரகதமே — [1] தேய்க்களங்கில் 56

வானூர் மதிபோன் மணியாற் குமுதமலர்
கானூர் உயர்தங்கக் கட்டியே — நானூறு 57

[2] கோலந் துறைகொண்ட [3] கோவையருள் [4] கோவைமகிழ்
[5] **ஆலந் துறையி** னணிமுத்தே — ஞாலங்கொள் 58

தேந்துறையி லன்னமகிழ் சேக்கை பலநிலவும்
ஆந்துறைவாழ் மாணிக்க மாமலையே — ஏந்தறிவாம் 59

நாற்றுறையில் நின்றவர்கள் நோக்கிமகிழ் வெய்துதிருப்
பாற்றுறையில் நின்ற பரஞ்சுடரே — நாற்றிசையுங் 60

தேனைக்கா வுண்மலர்கள் தேங்கடலென் றூக்குவிக்கும்
ஆனைக்கா மேவியம ரற்புதமே — மானைப்போன் 61

மைஞ்ஞீல வாட்கண் மலரான் மருவுதிருப்
பைஞ்ஞீலி மேவும் பரம்பரமே — எஞ்ஞான்றும் 62

ஏச்சிரா மங்கலத்தோ டின்பந் தரும்பாச்சி
லாச்சிரா மஞ்சே ரருணிலையே — நீச்சறியா 63

தாங்கோய் மலைப்பிறவி யார்கலிக்கோர் வார்கலமாம்
ஈங்கோய் மலைவா ழிலஞ்சியமே — ஓங்காது 64

2. சோழநாட்டுத் திருப்பதிகள் (காவிரியின் தென்கரை)

நாட்போக்கி நிற்கு நவையுடையார் நாடரிதாம்
வாட்போக்கி மேவுகின்ற வள்ளலே — கோட்போக்கி 65

நில்லுங் கடம்ப நெறிபோ லெனப்பூவை
சொல்லுங் **கடம்பந் துறை**நிறைவே — மல்லலொடு 66

வாழும் பராய்த்துறைவான் மன்னவரு மன்னவருஞ்
சூழும் **பராய்த்துறைவாழ்** தோன்றலே — சூழும்பல் 67

நற்குடியு மோங்கி நலம்பெருகு மேன்மைதிருக்
கற்குடியிற் சந்தான கற்பகமே — சிற்சுகத்தார் 68

பிற்சநந மில்லாப் பெருமைதரும் **உறையூர்ச்**
சற்சனர்சேர் **மூக்கீச் சரத்**தனியே — மற்செய் 69

அராப்பள்ளி மேவு மவனின்று வாழ்த்துஞ்
சிராப்பள்ளி ஞானத் தெளிவே — இராப்பள்ளி 70

---

1. தேய் என்பது — சண்டு விகுதி குன்றிய முதனிலைத் தொழிற்பெய ரென்க.
2. கோலந்துறை என்பது — கோலந்துறையென விகாரமாயிற்று.
3. கோவை என்பது—திருக்கோவையை. 4. கோவை என்பது—மாணிக்கவாசகர்.
5. ஆலந்துறை என்பது—அன்பிலாலந்துறை யென்னுமோர் திருப்பதி.

Koviloor Digital Library

நின்றெழன்மெய் யன்றெனவே நேர்ந்துலகு வாழ்த்துநின்ற
நன்றெறும்பி யூரிலங்கு நன்னெறியே — துன்றுகயற் 71

கண்ணூர் நெடுங்களத்தைக் கட்டழித்த மெய்த்தவர்சூழ்
தண்ணூர் நெடுங்களமெய்த் தாரகமே — எண்ணூர் 72

தருக்காட்டுப் பள்ளித் தகைகொண்டோர் சூழுந்
திருக்காட்டுப் பள்ளியில்வாழ் தேவே — மருக்காட்டு 73

நீலம் பொழிற்குள் நிறைதடங்கட் கோர்காட்டும்
ஆலம்பொழிற் சிவயோ கப்பயனே — சீல்நிறை 74

வாந்துருத்தி கொண்டுள் ளனலெழுப்பு வோர்புகழும்
பூந்துருத்தி மேவுசிவ புண்ணியமே — காந்தருவத் 75

தண்டியூர் போற்றுந் தகைகாசிக் கட்செய்து
கண்டியூர் வாழுங் கனகண்ணே — கொண்டியல்பின் 76

வேற்றுத் துறையுள் விரவா தவர்புகழுஞ்
சோற்றுத் துறையுட் சுகவளமே — ஆற்றலிலாத் 77

தீதிக் குடியென்று செப்பப் படார்மருவும்
1 வேதிக் குடியின்ப வெள்ளமே — கோதியலும் 78

வன்குடித் திட்டை மருளார் மருவுதிருத்
தென்குடித் திட்டைச் சிவப்ரதமே — நன்குடைய 79

உள்ளமங்கை மார்மே லுறுத்தா தவர்புகழும்
புள்ளமங்கை வாழ்பரம போகமே — கள்ளமிலஞ் 80

சக்கரப் பள்ளிதனிற் றும்பயின்ற மைந்தர்கள்சூழ்
சக்கரப் பள்ளிதனிற் றன்னொளியே — மிக்க 81

அருகாவூர் சூழ்ந் தழகுபெற வோங்குங்
கருகாவூர் இன்பக் கதியே — முருகார்ந்த 82

சோலைத் துறையிற் சுகஞ்சிவ நூல் வாசிக்கும்
பாலைத் துறையிற் பரிமளமே — சீலத்தர் 83

சொல்லூ ரடியப்பர் தூயமுடி மேல்வைத்த
நல்லூர் அமர்ந்தநடு நாயகமே — மல்லார்ந்த 84

மாவூ ரிரவியின்பொன் வையமளை வுஞ்சிகரி
ஆவூரி லுற்றவெங்க ளாண்டகையே — ஓவாது 85

சித்திமுற்ற யோகஞ் செழும்பொழிலிற் பூவைசெயுஞ்
சத்திமுற்ற மேவுஞ் சதாசிவமே — பத்தியுற்றோர் 86

முட்டிச் சுரத்தின் முயலா வகையருளும்
பட்டிச் சுரத்தெம் பராபரமே — துட்டமயல் 87

---

1. வேதிகுடி என்பது — வேதிக்குடியென விரித்தல் விகாரமாயிற்று.

Koviloor Digital Library

திங்குவிழை யார்தமைவான் சென்றமரச் செய்விக்க
ஓங்குபழை யாறையில்என் னுள்ளுவப்பே—பாங்குபெற 88

ஆர்ந்த வடவிலையான் அன்னத்தான் போற்றிநிகழ்
சார்ந்த வடதளிவாழ் தற்பரமே — சேர்ந்த 89

மலஞ்சுழி நின்ற மனத்தார்க் கரிதாம்
வலஞ்சுழி வாழ்பொன் மலையே — நிலஞ்சுழியா 90

தோணத்தில் வந்தோ னுடன்றறித்து வாழ்கும்ப
கோணத்திற் றெய்வ குலக்கொழுந்தே — மாணுற்றோர் 91

காழ்க்கோட்ட நீங்கக் கருதுங் குடமூக்கிற்
கீழ்க்கோட்ட மேவுமன்பர் கேண்மையே — வாழ்க்கோட்டத்

தேரோண மட்டுந் திகழ்குடந்தை மட்டுமன்றிக்
காரோண[1] மட்டுங் கமழ்மலரே — சீரோங்கும் 93

யோகிச் சுரர்சின் றுவந்து வணங்குதிரு
நாகிச் சுரமோங்கு நங்கனியே — யோகையுளந் 94

தேக்கும் வரகுணனுந் தென்னவன்கண் சூழ்பழியைப்
போக்கும் இடைமருதிற் பூரணமே — நீக்கமிலா 95

நன்குரங் காணு நடையோ ரடைகின்ற
தென்குரங் காடுதுறைச் செம்மலே — புன்குரம்பை 96

ஏலக் குடிபுகுந்த வெம்மனோர்க் குண்மைதரு
நீலக் குடியிலங்கு நிட்களமே — ஞாலத்து 97

நீடக்கோர் நாளு நினைந்தேத் திடும்வைகன்
மாடக்கோ யிற்குண் மதுரமே — பாடச்சீர் 98

வல்ல தமிழ்ப்புலவர் மன்னி வணங்குதிரு
நல்லமதி ழின்ப நவவடிவே — இல்லமையல் 99

ஆழும்பங் கென்ன அறிந்தோர் செறிந்தேத்துங்
கோழம்பம் வாழ்கருணைக் கொண்டலே — வீழும்பொய் 100

தீரா வடுவுடையார் சேர்தற் கருந்தெய்வச்
சீரா வடுதுறையெஞ் செல்வமே — பேராக் 101

கருத்திருத்தி யேத்துங் கருத்தர்க் கருள்செய்
திருத்துருத்தி யின்பச் செழிப்பே — வருத்துமயல் 102

நாளு மழுந்தார் நவையறுக்கு மன்பருள்ளம்
நீளு மழுந்தூர் நிறைநடமே — வேளிமையோர் 103

வாயூரத் [1]தேமா மலர்சொரிந்து வாழ்த்துநின்ற
மாயூரத் தன்பர் மனோரதமே — தேயா 104

1. காரோணம் என்பது — திருக்குடந்தைக்காரோணம்.

Koviloor Digital Library

வளநகரென் றெவ்வுலகும் வாழ்த்தப் படுஞ்சீர்
விளநகர்வா ழெங்கண் விருந்தே — இளமைச் 105

செறியலூர் கூந்தற் றிருவனையா ராடும்
பறியலூர் வாழ்மெய்ப் பரமே — நெறிகொண்டே 106

அன்பள்ளி யோங்கு மறிவுடையோர் வாழ்த்துஞ்செம்
பொன்பள்ளி வாழ்ஞான போதமே — இன்புள்ளித் 107

தெள்ளியார் போற்றித் திகழுந் **திருநன்னிப்**
பள்ளியார்ந் தோங்கும் பரசிவமே — எள்ளுறுநோய் 108

ஏய வலம்புரத்தை யெண்ணாம லெண்ணுகின்றோர்
மேய **வலம்புரத்து** மேதகவே — தூயகொடி 109

அங்காடு கோபுரம்வா னுற்றுநின் றதலைச்
சங்காடு மேவுஞ் சயம்புவே — பொங்குமிருட் 110

கூறுதிரு வாக்கூர் கொடுப்பனபோற் சூழ்ந்துமதில்
வீறுதிரு **வாக்கூர்** விளக்கமே — மாறகற்றி 111

நன்கடையூர் பற்பலவு நன்றிமற வாதேத்துந்
தென் [2]கடையூ ரானந்தத் தேறலே — வன்மையிலாச் 112

சொற்கடவி மேலோர் துதித்தவொழி யாதோங்கும்
நற்**கடவூர்** வீரட்ட நாயகனே — வற்கடத்தும் 113

வட்டக் குடிசற்றும் வெய்ப்பதே யில்லையெனும்
வேட்டக் குடிமேவு மேலவனே — நாட்டமுற்ற 114

வாக்குந் தெளிச்சேரி மாதவத்தர்க் கின்பநல
மாக்குந் **தெளிச்சேரி** யங்கணனே — நீக்குந் 115

கரும புரத்திற் கலவா தருள்செய்
தரும புரஞ்செய் தவமே — இருமையினும் 116

எவ்வாற்றின் மேவாத வேற்புடையோர் சூழ்ந்திறைஞ்சும்
நள்ளாற்றின் மேவியவென் னற்றுணையே—தெள்ளாற்றின் 117

நீட்டாறு கொண்டரம்பை நின்று கவின்காட்டுங்
கோட்டாறு மேவுங் குளிர்நறையே — கூட்டாக 118

கருவம்பர் தம்மைக் கலவாத மேன்மைத்
திருவம்பர் ஞானத் திரட்டே — ஒருவந்நர் 119

மாகாளங் கொள்ள மதனைத் துரத்துநின்ற
மாகாளத் தன்பர் மனநிலையமே — ஓகாளக் 120

காயச்சூர் விட்டுக் கதிசேர வேட்டவர்சூழ்
மியச்சூர் தண்ணென்னும் வெண்ணெருப்பே — மாயக் 121

1. தேமாமலர் என்பது—சிறந்த கற்பகமலர். 2. கடவூர் என்பது—கடையூரென மருவியது.

களங்கோயி னெஞ்சக் கயவர் மருவா
விளங்கோயின் ஞான விளிப்பே — வளங்கோளை 122

நாடுந் திலத நயப்புலவர் நாடோறும்
பாடுந் **திலதைப்** பதிநிதியே — ஆடுமயில் 123

காம்புரங்கொள் தோளியர்பொற் காவிற் பயில்கின்ற
பாம்புரங்கொள் உண்மைப் பரம்பொருளே — ஆம்புவனந் 124

துன்னும் பெருங்குடிகள் சூழ்ந்துவலஞ் செய்துவகை
மன்னுஞ் **சிறுகுடி**யான் மார்த்தமே — முன்னரசுங் 125

காழி மிழலையருங் கண்டுதொழக் காசளித்த
வீழி மிழலை விராட்டுருவே — ஊழிதொறும் 126

மன்னியூர் மால்விடையாய் வானவா! வென்றுதொழ
வன்னியூர் வாழு மணிகண்டா! — இந்நிமிடஞ் 127

சிந்துங் கருவலியின் றின்மையென்று தேர்ந்தவர்கள்
முந்துங் **கருவிலி**வாழ் முக்கண்ணே — மந்தணத்தைக் 128

காணு மருந்துறையிக் காமர்தல மென்றெவரும்
பேணு **பெருந்துறையிற்** பெம்மானே — ஏறுடன்கா 129

ஈட்டும் பெருநறையா றென்ன வயலோடி
நாட்டும் **பெருநறையூர்** நம்பனே — காட்டும் 130

பரிசிற் கரைப்புற்றோர் பாங்குபெற வோங்கும்
[1] **அரிசிற் கரைப்புத்தூ** ரானே — தரிசனத்தேக் 131

காணுஞ் சிவபுரத்தைக் காதலித்தோர் தங்கடுதி
யேனுஞ் **சிவபுரத்தில்** எம்மானே — மாணுங்கொள் 132

வெப்புங் கலையநல்லோர் மென்மதுரச் சொன்மாலை
செப்புங் **கலையநல்லூர்ச்** சின்மயனே — செப்பமுடன் 133

ஓங்குந் திருத்தொண்ட ருள்குளிர நல்லருளாற்
றூங்குங் **கருக்குடி**வாழ் சங்கரனே — ஆங்ககனந் 134

தாஞ் [2] சியத்தை வேங்கைத் தலையாற் றடுக்கின்ற
வாஞ்சியத்தின் மேவு மறையோனே — ஆஞ்சியிலா 135

இந்நிலத்தும் வானுறி யெந்நிலத்து மோங்குபெரு
நன்னிலத்து வாழ்ஞான நாடகனே — மன்னுமலர் 136

வண்டீச் சுரம்பாடி வார்மதுவுண் டுள்களிக்கும்
கொண்டீச் சுரத்தமர்ந்த கோமானே — கண்டீச 137

நண்பனையூ ரன்புகழும் நம்பவென வும்பர்தொழத்
தண்பனையூர் மேவுஞ் சடாதரனே — பண்புடனே 138

1. அரிசோன்னதிக்கரை என்பது — அரிசிற்கரையென மருவியது.

2 சீயத்தை—செய்யுள் விகாரத்தாற் குறுக்கும்வழி குறுக்கப்பட்டு சியந்தையென நின்றது.

Koviloor Digital Library

எற்குடியா னங்கொண் டிருக்க மகிழ்ந்தளித்த
விற்குடியின் வீரட்ட மேயவனே — சொற்கோடிய 139

வன்புகலா நெஞ்சின் மருவு மொருதகைமைத்
தென்புகலூர் வாழ்மகா தேவனே — இன்பமறை 140

அர்த்தமா நீக்கரிய வாதார மாகிநின்ற
வர்த்தமா னேச்சரத்து வாய்ந்தவனே — மித்தையுற்ற 141

[1] காமனதீ சங்கெட்டவே கண்பார்த் தருள்செய்த
[2] **ராமனதீ சம்**பெறுநி ராமயனே — தோமுண் 142

மயற்றார் பறித்த மனத்தில் விளைந்த
பயற்றூர் நிசையம் பரனே — இயற்றுஞ்சீர் 143

ஆச்சிரமே **வுஞ்செங்காட் டங்குடி**யி **லங்கணப**
தீச்சரம்வா ழுஞ்சந்திர சேகரனே — ஏச்சகல 144

விண்மருவி ஞானை விடநீக்க நல்லருள்செய்
வண்மருகன் மாணிக்க வண்ணனே — திண்மைகொண்ட 145

மாத்தமங்கை யுள்ள மருவிப் பிரியாத
சாத்தமங்கை கங்கைச் சடாமுடியோய் — தூத்தகைய் 146

பாகைக்கா ரென்னும் பணிமொழியார் வாழ்த்தோவா
நாகைக்கா ரோண நயந்தோனே — ஓகையற 147

விக்கல் வருங்கால் விடாய்தீர்த் துலகிடைநீ
சிக்கலெனுஞ் **சிக்கற்** றிறலோனே — மிக்கமினர் 148

வாளூர் தடங்கண் வயல்காட்டி யோங்குங்கீழ்
வேளூரிற் செங்கண் விடையோனே — நீளுவ்வைப் 149

பாவூ ரிசையிற் பயன்சுவையிற் பாங்குடைய
தேவூர் வளர்தேவ தேவனே — பூவிலிடை 150

இக்கூடன் மைந்த விளிக்கூட லென்றுபள்ளி
முக்கூடன் மேவியமர் முன்னவனே — தக்கநெடும் 151

தேரூ ரணிவீதிச் சீரூர் மணிமாட
ஆரூரில் எங்க ளருமருந்தே — நீரூர்ந்த 152

காரூர் பொழிலுங் கனியிந் நிளைப்பகற்றும்
ஆரூ ரரனெறிவே ளாண்மையே — ஏரார்ந்த 153

மண்மண் டலிகர் மருவுமா ரூர்ப்பரவை
உண்[3]மண் டலியெம் முடைமையே — நின்மைக் 154

---

1. காமனது ஈசம் — நல்லை. 2. ராமனது ஈசம் — திரு இராமனந்தீச்சுரம் என்பது; இது சோழநாட்டில் காவிரித் தென்கரையில் திருப்புகலூர் வர்த்தமானேச்சரத்திற்குத் தென்கிழக்கில் ஒரு கடிகை தூரத்திலுள்ளது. பாண்டிநாட்டிலுள்ள இராமேசுரம் அன்று. அதனை 200-வது கலி வெண்பாவில் காண்க.

3. மண்டளி என்பது — மண்டலியென் லகாரளகார வொற்றுமைத்திரிபு.

Koviloor Digital Library

களமர் மகிழக் கடைசியர் பாடும்
விளமர் கொழுந்தெம் விருப்பே — வளமை 155

எருக்கர விரஞ்சே ரெழில்வேணி கொண்டு
திருக்கர விரஞ்சேர் சிறப்பே — உருக்க 156

வருவேளூர் மாவெல்லா மாவேறுஞ் சோலைப்
பெருவேளூர் இன்பப் பெருக்கே — கருமை 157

மிலையாலங் காட்டு மிடற்றுருவென் றேத்துந்
தலையாலங் காட்டுத் தகவே — நிலைகொள் 158

நடவாயில் வெண்மணிகள் சங்கங்க ளீனுங்
குடவாயி லன்பர் குறிப்பே — மடவார்கோர் 159

[1] கூறை உவந்தளித்த கோவேயென் றன்பர் தொழச்
சேறை உவந்திருந்த சிற்பரமே — வேறுபடாப் 160

பாலூர் நிலவிற் பனிலங்கள் தன்கதிர்செய்
நாலூரில் அன்பர்பெறு நன்னயமே — மேலூரும் 161

நோய்க்கரையுட் செய்யாத நோன்மையோர் சூழ்ந்தகடு
வாய்க்கரையுள் மேவுகின்ற வண்மையே — வாய்த்த 162

பெரும்பூகந் தெங்கிற் பிறங்க வளங்கொள்ளும்
இரும்பூளை மேவி யிருந்தோய் — விரும்பும் 163

விரதப் பெரும்பாழி விண்ணவர்க ளேத்தும்
அரதைப் பெரும்பாழி யார்ந்தோய் — சரதத்தால் 164

ஏது மவளிவளென் றெண்ணா தவரிறைஞ்சி
ஓது **மவளிவணல் லூரு**டையோய் — கோதகன்ற 165

நீட்டுங் கருதி நியமத்தோர்க் கின்னருளை
நீட்டும் **பருதி நியமத்**தோய் — காட்டியநம் 166

தேவனா ரென்று திசைமுகன்மால் வாழ்த்துகின்ற
பூவனூர் மேவும் புகழுடையோய் — பூவுலகாம் 167

ஈங்கும்பா தாளமுத லெவ்வுலகும் எஞ்ஞான்றும்
தாங்கும்**பா தாளேச் சரத்**தமர்ந்தோய் — ஓங்குபுத்தி 168

மான்கவரி லோட்டி மகிழ்வோ டிருந்தேத்தும்
வான்களரில் வாழு மறைமுடியே — மேன்மைதரும் 169

முற்றேமம் வாய்ந்த முனிவர் தினம்பரவும்
சிற்றேமம் வாய்ந்த செழுங்கதிரே — கற்றவர்கள் 170

எங்கு முசாத்தானம் இருங்கழக மன்றவுதல்
தங்கு **முசாத்தானத்** தனிமுதலே — பொங்குபவ 171

1. மடவார்கோர்கூற்றை என்பது — கூறையென இரண்டாவதன் முடிபெற்று நின்றது.

Koviloor Digital Library

அல்லலிடும் பாவநத்த மட்டொளிசெய் கின்றதிரு
மல்லலிடும் பாவனத்து மாட்சிமையே — தொல்லைப் 172

படிக்குள் நோவாத பண்புடையோர் வாழ்த்தும்
கடிக்குளத் தன்பர் களிப்பே — கடிக்குளத்தின் 173

வண்டலைக்கத் தேனலரின் வார்ந்தோர் தடமாக்கும்
தண்டலைக்குள் நீணெறிச்சிந் தாமணியே—கொண்டலென

மன்கோட்டூர் சோலை வளர்கோட்டூர் தண்பழனத்
தென்கோட்டூர் தேவ சிகாமணியே — தென்கூட்டிப் 175

போய்வண் டுறைதடமும் பூம்பொழிலுஞ் சூழ்ந்தமர்
ஆய்வெண் டுறைமாசி லாமணியே — தோய்வுண்ட 176

கள்ளம்பூ தாதிநிலை கண்டுணர்வு கொண்டவர்சூழ்
கொள்ளம்பூ தூர்வாழ் குலமணியே—வெள்ளிடைவான் 177

வாம்பே ரெயிற்சூழ்ந்த மாண்பாற் றிருநாம
மாம்பே ரெயிலொப்பி லாமணியே — தாம்பேரா 178

வீட்டிலன்ப ரானந்த மேவச் செயுங்கொள்ளிக்
காட்டி லமர்ந்தவென்கண் காட்சியே — நீட்டுமொளி 179

ஆங்கூ ரிலைவே லவனு றியர்சூழத்
தேங்கூரில் வாழ்தேவ சிங்கமே — ஓங்குமலை 180

வல்லிக்கா தார மணிப்புயவென் றன்பர்தொழ
நெல்லிக்கா வாழ்மெய்ந் நியமமே — எல்லற்கண் 181

சேட்டியத் தானே தெரிந்துசுரர் வந்தேத்தும்
நாட்டியத் தான்குடிவாழ் நல்லினமே — நாட்டுமொரு 182

நாறுயி ரன்பர்தமை நோக்கியருள் செய்திருக்
காறுயின் மேலோர் கடைப்பிடியே — வீறுகும் 183

இன்றுப்பூர் வந்தொட் டிருந்ததிவ்வூ ரென்னவுயர்
கன்றுப்பூர் பஞ்சாக் கரப்பொருளே — துன்றுசை 184

வெய்ய வலிவலத்தை விட்டியன்பர்க் கின்னருள்செய்
துய்ய வலிவலத்துச் சொன்முடிபே — நையுமன 185

மைச்சினத்தை விட்டோர் மனத்திற் சுவைகொடுத்துக்
கச்சினத்தி னுட்கரையாக் கற்கண்டே — நெற்சுமக்கு 186

ஆளிலையென் றுரூர னூர்துதிக்கத் தந்தருளுங்
கோளிலியின் அன்பர்குலங் கொள்ளுவப்பே—நீளுலகம் 187

காய்மூர்க்க ரேனுங் கருதிற் கதிகொடுக்கும்
வாய்மூர்க் கமைந்த மறைக்கொழுந்தே — நேயமுணத் 188

தேடெலியை மூவுலகுந் தேர்ந்துதொழச் செய்தருளும்
ஈடில் மறைக்காட்டிலென்றன் எய்ப்பில்வைப்பே—நாடுமெனை

Koviloor Digital Library

நின்னகத்தி யான்பள்ளி நேர்ந்தேனென் றுட்கொண்ட
தென்னகத்தி யான்பள்ளிச் செம்பொன்னே—தொன்னெறியோர்

நாடிக் குழக நலமருளென் றேத்துகின்ற
கோடிக் குழகரருட் கோலமே — நீடுலகில் 191

3. ஈழ நாடு

நாட்டும் புகழீழ நாட்டிற் பவவிருளை
வாட்டுந் திருக்கோண மாமலையாய் — வேட்டுலகின் 192

மூதீச் சரமென்று முன்னோர் வணங்குதிருக்
கேதீச் சரத்திற் கிளர்கின்றோய் — ஓதுகின்றோர் 193

4. பாண்டி நாடு

பாலவாய் நிற்கும் பரையோடு வாழ்மதுரை
ஆலவாய்ச் சொக்கழகா னந்தமே — சிலர்தமைக் 194

காப்பனூ ரில்லாக் கருணையா லென்றுபுகும்
ஆப்பனூர் மேவுசதா னந்தமே — மாப்புலவர் 195

ஞானபரங் குன்றமென நண்ணிமகிழ் கூர்ந்தேத்த
வானபரங் குன்றலின்பா னந்தமே — வானவர்கோன் 196

தேமே டகத்தனெடு சீதரனும் வாழ்த்துஞ்சீர்
ஆமே டகத்தறிவா னந்தமே — பூமிதின் 197

நற்றவருங் கற்ற நவசித்த ரும்வாழ்த்தி
உற்றகொடுங் குன்றத்தெம் ஊதியமே — முற்றுகதி 198

இத்தூர மன்றி யிலித்தூர மில்லையெனப்
புத்தூர் வருமடியார் பூரிப்பே — சித்தாய்ந்து 199

நாமீச ராகு நலந்தருமென் றும்பர் [1]தொழும்
ராமீசம் வாழ்சிவ ரத்தினமே — பூமீது 200

நீடானை சூழு நிலமன்னர் வாழ்த்துதிரு
வாடானை மேவுகரு ணாகரமே — சேடான 201

வானப்பே ராற்றை மதியை முடிசூடுங்
கானப்பே ரானந்தக் காளையே — மோனருளே 202

பூவணமும் பூமணமும் போல அமர்ந்ததிருப்
பூவணத்தி லானந்தப் பொக்கிஷமே — தீவணத்தில் 203

கண்சுழிய லென்று கருணையளித் தென்னுளஞ்சேர்
தண்சுழியல் வாழ்சிவ சாக்ஷியே — பண்செறிப்பக் 204

---

1. தொழும் ராமீசம் என்பது — வடதூன் முடிபு, இராமேசுரம்.

கற்றாலங் குண்மைக் கதிதருமென் றற்றவர்சூழ்
குற்றாலத் தன்பர் குதுகலிப்பே — பொற்றாம 205

நல்வேலி சூழ்ந்து நயன்பெறுமொண் செஞ்சாலி
நெல்வேலி யுண்மை நிலயமே — வல்வேலை 206

5. சேர நாடு

நஞ்சைக் களத்துவைத்த நாதவெனத் தொண்டர்தொழ
அஞ்சைக் களஞ்சேர் அருவுருவே — நெஞ்சடக்கி 207

6. கொங்கு நாடு

ஆன்று நிறைந்தோர்க் கருளளிக்கும் **புக்கொளியூர்த்**
தோன்று**மவி நாசிச்** சுயம்புவே — சான்றவர்கள் 208

தம்முருகன் பூணாட் டலம்போல வாழ்கின்ற
வெம்முருகன் பூண்டி யிருநிதியே — செம்மையுடன் 209

அங்குன்றா தோங்கு மணிகொள் கொடிமாடச்
செங்குன்றூர் வாழுஞ்சஞ் சீவியே — தங்குமன 210

வஞ்சமாக் கூடல் வரையா தவர்சூழும்
வெஞ்சமாக் கூடல் விரிசுடரே — துஞ்சலெனும் 211

இன்ன லகற்ற இலங்கு**பவா னிக்கூடல்**
என்னா **நணா**விலிடை இன்னிசையே — துன்னியருள் 212

வேண்டிக் கொடுமுடியா மேன்மைபெறு மாதவர்சூழ்
பாண்டிக் கொடுமுடியிற் பண்மயமே — தீண்டரிய 213

வெங்கருவூர் வஞ்ச வினைதீர்த் தவர்சூழ்ந்த
நங்கருவூர்ச் செய்யுள் நவரசமே — தங்களற்றின் 214

7. நடு நாடு

தீங்கார் பிறதெய்வத் [1]தீங்குழியில் வீழ்ந்தவரைத்
தாங்கா **வரத்துறையிற்** றாணுவே — பூங்குழலார் 215

விங்கானை மாடஞ்சேர் விண்ணென் றகல்கடந்தைத்
தூங்கானை மாடச் சுடர்க்கொழுந்தே — நீங்காது 216

நீடலை யாற்றூர் நிழன்மணிக்குன் றோங்கு திருக்
கூடலை யாற்றூர்க் குணநிதியே — நாடியவான் 217

அம்புலியூர் சோலை யணிவயல்க ளோங்கெருக்கத்
தம்புலியூர் வேத சமரசமே — நம்புவிடை 218

ஆங்குந் தினையூர்ந் தருளாயென் றன்பர்தொழ
தோங்குந் **தினையூ** ருமாபதியே — தீங்குறுமொன் 219

[2] னார்புரத்தை வெண்ணகைத்தீ யாலழித்தா யென்றுதொழச்
[3] **சேர்புரத்தின்** வாழ்ஞான தீவகமே — வார்கெடிலச் 220

---

1. தீக்குழி என்பது — தீங்குழி என்றாயது. 2. ஆசிடை யெதுகை. 3. செந்தொடை.

Koviloor Digital Library

சென்னதிகை [1]யோங்கித் திலதவதி யார்பரவு
மன்னதிகை வீரட்ட மாதவமே — பன்னரிதாம் 221

ஆவலூ ரெங்களுடை யாரூர ரூரராம்
நாவலூர் ஞானியருண் ஞாபகமே — தேவகமாம் 222

மன்ற மமர்ந்த வளம்போற் றிகழ்ந்தமுது
குன்ற மமர்ந்தவருட் கொள்கையே — அன்றகத்தின் 223

நல்வெண்ணெ யுண்டொளித்த நாரணன்வந் தேத்துகின்ற
நெல்வெண்ணெய் மேவுசிவ நிட்டையே — சொல்வண்ணம்

நாவலர் போற்றி நலம்பெறவே யோங்குதிருக்
கோவலூர் வீரட்டங் கொள்பரிசே — ஆவலர்மா 225

தேவா! இறைவா! சிவனே! யெனுமுழக்கம்
ஓவா வறையணிநல் லூருயர்வே — தாவாக் 226

கடையாற்றி னன்பர்தமைக் கல்லாற்றி னீக்கும்
இடையாற்றின் வாழ்நல் லியல்பே — இடையாது 227

சொல்லூரன் றன்னைத் தொழும்புகொளுஞ் சீர்வெண்ணெய்
நல்லூ ரருட்டுறையி னற்பயனே — மல்லார்ந்து 228

மாசுந் துறையூர் மகிபன்முதல் [2]மூவருஞ்சீர்
பேசுந் துறையூர்ப் பிறைசூடி — நேசமுற 229

வேற்று வடுகூ ரிதயத்தி னூர்க்கென்றுந்
தோற்று வடுகூர்ச் சுயஞ்சுடரே — ஆற்றமயல் 230

காணிக் குழிவீழ் கடையர்க்குக் காண்பரிய
மாணிக்குழி வாழ் மகத்துவமே — மாணுற்ற 231

பூப்பா திரிகொன்றை புன்னைமுதற் சூழ்ந்திலங்கும்
ஏர்ப்பா திரிப்புலியூர் ஏந்தலே — சீர்ப்பொலியப் 232

பண்டீச் சுரனிப் பதியே விழைந்ததெனும்
முண்டீச் சுரத்தின் முழுமுதலே — பெண்தகையார் 233

ஏர்ப்பனங்காட் டூரென் றிருநிலத்தோர் வாழ்த்துகின்ற
சீர்ப்பனங்காட் டூர்மகிழ்நி க்ஷேபமே — சூர்ப்புடைத்த 234

தாமாத்தூர் வீழத் தடிந்தோன் கணேசனெடும்
ஆமாத்தூர் வாழ்மெய் யருட்பிழம்பே — யாமேத்தும் 235

உண்ணா முலையா முமையோடு மேவுதிரு
அண்ணா மலைவாழ் [4]அருட்சுடரே — கண்ணார்ந்த 236

1. ஓங்கி — பரவெனும் வேறு சிலை விலைக்குறைகள் — மன்னென்னு முதல்வினை [யோடு முடிந்தன.
2. சேர சோழ பாண்டியரெனும் முடியுடை வேந்தர்.
3. ஆசிடை யெதுகை அப்பர் சுவாமிகளைக் கரையேற்றிய தலம்.
4. அருட்சுடரே என்பது — அருட்பெருஞ்ஜோதி.

Koviloor Digital Library

8. தொண்ட நாடு

நாகம்ப ராந்தொண்ட நாட்டி லுயர்காஞ்சி
ஏகம்ப மேவும்பே ரின்பமே — ஆகுந்தென் 237

காற்றளிவண் பூமணத்தைக் காட்டும் பொழிற்கச்சி
மேற்றளிவா மானந்த விட்டுறவே — நாற்றமலர்ப் 238

பூந்தண் டளிவிரித்துப் புக்கிசைக்குஞ் சீர்ஓண
காந்தன் தளியருட்ப்ர காசமே — சேர்ந்தவர்க்கே 239

இங்கா பதஞ்சற்று மில்லாத அனேக
தங்கா பதஞ்சேர் தயாநிதியே — மங்காது 240

மெச்சிநெறிக் கார்வ மேவிநின்றோர் சூழ்ந்ததிருக்
கச்சிநெறிக் காரைக் காட்டிறையே — முச்சகமும் 241

ஆயுங் குரங்கணின்முட் டப்பெயர்கொண் டோங்குபுகழ்
ஏயுந் தலம்வா ழியல்மொழியே — தோயுமன 242

[1] யோகறலி லாத்தவத்தோ ருன்ன விளங்குதிரு
மாகறலி லன்பர்அபி மானமே — ஓகையிலா 243

[2] வீத்தூர மாவோட மெய்த்தவர்கள் சூழ்ந்ததிரு
வோத்தூரில் வேதாந்த உண்மையே — பூத்தவிசின் 244

ஆர்த்தான் பனகத் தவனிந் திரன்புகழ்வன்
பார்த்தான் பனங்காட்டூர் பாக்கியமே — பார்த்துலகில் 245

இல்ல மெனச்சென் றிரவா தவர்வாழும்
வல்லமகி ழன்பர் வசித்துவமே — சொல்லரிக்குக் 246

காற்பேறு கச்சியின்முக் காற்பே றிவணென்னும்
மாற்பேற்றி னன்பர் மனோபலமே — ஏற்புடைவாய் 247

ஊற லடியா ருறத்தொழுது மேவுதிரு
ஊற லழியா உவகையே — மாறுபடு 248

தீது மிலம்பயங்கோட் டீரென் றடியர்புகழ்
ஓது **மிலம்பயங்கோட்** டூர்நலமே — தீதுடைய 249

பொற்கோல மாமெயிற்குப் போர்க்கோலங் கொண்டதிரு
விற்கோல மேவுபர மேட்டிமையே — சொற்போரில் 250

ஓலங்காட் டும்பழைய னூர்நீலி வாதடக்கும்
ஆலங்காட் டிற்கு ழருண்மயமே — ஞாலஞ்சேர் 251

மாசூ ரகற்று மதியுடையோர் சூழ்ந்ததிருப்
பாசூரி லுண்மைப் பரத்துவமே — தேசூரன் 252

கண்பார்க்க வேண்டுமெனக் கண்டூன்று கோற்கொடுத்த
வெண்பாக்கத் தன்பர்பெறும் வீறுப்பே—பண்பார்க்கும் 253

---

1. யோகம் என்பது — யோகென விகாரமாயிற்று. 2. வீ என்பது — மரணம்.

Koviloor Digital Library

நள்ளிப் பதியே நலந்தருமென் றன்பர்புகும்
கள்ளிற் பதிநங் கடப்பாடே — எள்ளலுறும் 254

கோளத்தி நீக்குங் குணத்தோர்க் கருள்செய்**திருக்**
காளத்தி ஞானக் களஞ்சியமே — ஆளத்தா 255

வெற்றியூ ரென்ன **வினையேன் வினைதவிர்த்த**
ஒற்றியூர் மேவியவெவ் உள்ளன்பே — தெற்றிகளில் 256

பொங்குமணிக் கால்கள் பொலஞ்செய் **திருவொற்றிநகர்**
தங்குஞ் சிவபோக சாரமே — புங்கவர்கள் 257

சேர்ந்துவலங் கொள்ளுந் **திருவொற்றி யூர்க்கோயிற்**
சார்ந்து மகிழமுத சாரமே — தேர்ந்துலகர் 258

போற்றுந் **திருவொற்றிப் பூங்கோயிற்** குட்பெரியோர்
சாற்றும் புகழ்வேத சாரமே — ஊற்றுறுமெய் 259

அன்புமிகுந் தொண்டர்குழு வாயும்**வலி தாயத்தில்**
இன்பமிகு ஞான இலக்கணமே — துன்பமற 260

எல்லைவாயற் குண்மட்டு மேகில்வினை யேகுமெனும்
முல்லைவாயிற் குள்வைத்த முத்திவித்தே — மல்லல்பெறு 261

வேற்காட்ட ரேத்து**திரு வேற்காட்டின்** மேவியமுன்
னூற்காட் டுயர்வேத நுட்பமே — பாற்காட்டும் 262

ஆர்த்திபெற்ற மாதுமயி லாய்ப்பூசித் தார்**மயிலைக்**
கீர்த்திபெற்ற நல்வேத கீதமே — கார்த்திரண்டு 263

வாவுகின்ற சோலை வள**ர்வான்மி யூர்த்**தலத்தின்
மேவுகின்ற ஞான விதரணமே — தூவிமயில் 264

ஆடும் பொழிற்கச்**சூ ராலக்கோ யிற்**குளன்பர்
நீடுங் கனதூய நேயமே — ஈடில்லை 265

என்னுந் திருத்தொண்ட ரேத்தும் **இடைச்சுரத்தின்**
மன்னுஞ் சிவானந்த வண்ணமே — நன்னெறியோர் 266

துன்னுநெறிக் கோர்துணையாந் **தூயகழுக் குன்றினிடை**
முன்னுமறி வானந்த மூர்த்தமே — துன்னுபொழில் 267

அம்மதுரத் தேன்பொழியும் **அச்சிறுபாக் கத்து**லகர்
தம்மதநீக் குஞ்ஞான சம்மதமே — எம்மதமும் 268

சார்ந்தால் வினைநீக்கித் தாங்குதிரு **வக்கரையுள்**
நேர்ந்தார் உபநிடத நிச்சயமே — தேர்ந்தவர்கள் 269

தத்தமது மதியாற் சாரும் **அரசிலியூர்**
உத்தமமெய்ஞ் ஞான ஒழுக்கமே — பத்தியுள்ளோர் 270

எண்ணும் புகழ்கொள் **இரும்பைமா காளத்து**
நண்ணுஞ் சிவயோக நாட்டமே — மண்ணகத்துள் 271

9. துளுவ நாடு

கோபலத்திற் காண்பரிய கோகரணங் கோயில்கொண்ட
மாபலத்து மாபலமா மாபலமே — தாபமிலாப் 272

Koviloor Digital Library

10. வட நாடு

பாகியற்சொன் மங்கையொடும் பாங்கார் [1] **பருப்பதத்தில்**
யோகியர்க ளேத்திடவா மொப்புரவே — போகிமுதல் 273

பாடியுற்ற நீலப் பருப்பதத்தில் நல்லோர்கள்
தேடிவைத்த தெய்வத் திலகமே — நீடுபவம் 274

தங்கா தவனேக தங்கா பதஞ்சேர்ந்த
நங்காத லான நயப்புணர்வே — [2] சிங்காது 275

தண்ணிறைந்து நின்றவர்தாஞ் சார்திருக்கே **தாரத்திற்**
பண்ணிறைந்த கீதப் பனுவலே — எண்ணிறைந்த 276

சான்றோர் வணங்கு**நொடித் தான்மலையில்** வாழ்கின்ற
தேன்றோ யமுதச் செழுஞ்சுவையே — வான்தோய்ந்த 277

இந்திரரு நாரணரு மெண்ணில் பிரமர்களும்
வந்திறைஞ்சும் **வெள்ளி மலையானே** — தந்திடுநல் 278

தாய்க்குங் கிடையாத தண்ணருள்கொண் டன்பருளம்
வாய்க்குங் **கயிலை மலையானே** — தூய்க்குமரன் 279

தந்தையே யென்னருமைத் தந்தையே தாயேயென்
சிந்தையே கோயில்கொண்ட தீர்த்தனே — சந்தமிகும் 280

எண்டோ ளுடையாய் எனையுடையாய் மார்பகத்தில்
வண்டோ லிடுங்கொன்றை மாலையாய் — தொண்டர்விழி 281

உண்ணற் கெளியாய் உருத்திரன்மா லாதியர்தங்
கண்ணிற் கனவினிலுங் காண்பரியாய் — மண்ணுலகில் 282

என்போன் றவர்க்கும் இருணீக்கி இன்புதவும்
பொன்போன்ற மேனிப் புராதனனே — மின்போன்ற 283

செஞ்சடையாய் மூவருக்குந் தேவருக்கும் யாவருக்கும்
அஞ்சடையா வண்ணம் அளிப்போனே — விஞ்சுலகில் 284

எல்லார்க்கு நல்லவனே எல்லாஞ்செய் வல்லவனே
எல்லார்க்கும் ஒன்றா யிருப்போனே — தொல்லூழி 285

ஆர்ந்த சராசரங்க ளெல்லாம் அடிநிழலிற்
சேர்ந்தொடுங்க மாநடனஞ் செய்வோனே—சார்ந்துலகில் 286

எத்தேவர் மெய்த்தேவ ரென்றுரைக்கப் பட்டவர்கள்
அத்தேவர்க் கெல்லாமுன் னானோனே — சத்தான 287

வெண்மைமுதல் ஐவணமு மேவியைந்து தேவர்களாய்த்
திண்மைபெறும் ஐந்தொழிலுஞ் செய்வோனே—மண்முதலாம்

ஐந்தாய் இருசுடராய் ஆன்மாவாய் நாதமுடன்
விந்தாகி யெங்கும் விரிந்தோனே — அந்தணவெண் 289

நீறுடையாய் ஆறுடைய நீண்முடியாய்! நேடரிய

1. பருப்பதம் — ஸ்ரீசைலம். 2. சிங்குதல் — குறைதல்.

Koviloor Digital Library

வீறுடையாய்! நின்றனக்கோர் விண்ணப்பம்!

மாறுபட — ள்ள லடியேன் எனக்குள் ஒளியாமல்
உள்ள படியே உரைக்கின்றேன் — வெள்ளுறும்யான் 291

வன்சொ லுடனன்றி லள்ளலுன தன்பர்தமக்(கு)
இன்சொ லுடன் பணிந்தோன் றீந்ததிலே—புன்சொலெனும்

பொய்யுரைக்க வென்றால் புடையெழுவே னன்றியொரு
மெய்யுரைக்க வென்றும் விழைந்ததிலே — வையகத்தில் 293

பொல்லா விரதத்தைப் போற்றியுவந் துண்பதல்லாற்
கொல்லா விரதத்தைக் கொண்டதிலே — அல்லாதார் 294

வன்புகழைக் கேட்க மனங்கொண்ட தல்லாமல்
நின்புகழைக் கேட்க நினைந்ததிலே — வன்புகொண்டே 295

இன்னடிக்கு நுண்ணிடையார்க் கேவல்புரிந் தேனலதுன்
பொன்னடிக்குத் தொண்டு புரிந்ததிலே — பன்னுகின்ற 296

செக்குற்ற எள்ளெனவே சிந்தைநசிந் தேனலது
முக்குற்றந் தன்னை முறித்ததிலே — துக்கமிகுந் 297

தாவில் வலங்கொண்டு சஞ்சரித்தே னல்லதுநின்
கோவில்வலங் கொள்ளக் குறித்ததிலே — பூவுலகில் 298

வன்னிதியோர் முன்கூப்பி வாழ்த்தினே னன்றியுன்றன்
சன்னிதியிற் கைகூப்பித் தாழ்ந்ததிலே — புன்னெறிசேர் 299

மிண்டரொடு கூடி வியந்ததல்லால் ஐயாநின்
தொண்ட ரொடுங்கூடிச் சூழ்ந்ததிலே — கண்டவரைக் 300

கன்றுமுகங் கொண்டு கடுகடுத்துப் பார்ப்பதல்லால்
என்றும் முகமலர்ச்சி ஏற்றதிலே — நன்றிபெறும் 301

நன்னெஞ்சர் உன்சீர் நவில அதுகேட்டுக்
கன்னெஞ்சைச் சற்றுங் கரைத்ததிலே — பின்னெஞ்சாப் 302

பண்ணீர்மை கொண்டதமிழ்ப் பாமாலை யாற்றுதித்துக்
கண்ணீர்கொண் டுன்பாற் கனிந்ததிலே—தண்ணீர்போல் 303

நெஞ்ச முருகி நினைக்குமன்பர் போலெனைநீ
அஞ்சலென நின்று எடுத்ததிலே — விஞ்சுலகர் 304

மெய்யடிய னென்றுரைக்க வித்தகநின் பொன்னடிக்குப்
பொய்யடிமை வேடங்கள் பூண்டதுண்டு — நையமிகு 305

மையல் வினைக்குவந்த மாதர் புணர்ச்சியெனும்
வெய்ய வினைக்குழியில் விழ்ந்ததுண்டு — துய்யர்தமை 306

என்னென்று மில்லா தியல்பாகப் பின்னென்று
முன்னென்று மாக மொழிந்ததுண்டு — மன்னுகின்ற 307

மானஞ் செயாது மனநொந் திரப்போர்க்குத்
தானஞ்செய் வாரைத் தடுத்ததுண்டு — ஈனமிலா 308

Koviloor Digital Library
4337
அ.11(ஒரு)

வாரமுறை யாது வழக்கி விடைஓர
வார முரைத்தே மலைந்ததுண்டு — ஈரமிலா 309

நெஞ்ச ருடன்கூடி நேசஞ்செய் தும்மடியே
தஞ்சமெனத் தாழாது தாழ்ந்ததுண்டு — எஞ்சலிலாத் 310

தாயனையாய் உன்றனது சந்நிதிநேர் வந்துமொரு
நேயமுமில் லா[1]தொதிபோல் நின்றதுண்டு — தீயவினை 311

மாளாக் கொடிய மனச்செல்வர் வாயிலிற்போய்க்
கேளாச் சிவநிந்தை கேட்டதுண்டு — மீளாத 312

பொல்லாப் புலையரைப்போற் புண்ணியரை வன்மதத்தாற்
சொல்லா வசையெல்லாஞ் சொன்னதுண்டு—நல்லோரைப் 313

போற்றாது பொய்யுடம்பைப் போற்றிச் சிவபூசை
ஆற்றாது சோற்றுக் கலைந்ததுண்டு — தேற்றாமல் 314

ஈபத்தா வென்றிங் கிரப்போர் தமைக்கண்டு
கோபத்தால் நாய்போற் குரைத்ததுண்டு — பாபத்தால் 315

சிந்தையொன்றுவாக்கொன்றுசெய்கையொன்றுப்போகவிட்டே
எந்தைநினை ஏத்தா திருந்ததுண்டு — புந்தியிந்த 316

சொல்லைக்கல் லென்றுநல்லோர் சொன்னபுத்தி கேளாமல்
எல்லைக்கல் ஒத்தே இருந்ததுண்டு — தொல்லைவினை 317

[2] ஆழ்த்தா மயவுலகில் அற்ப மகிழ்ச்சியினால்
வாழ்த்தாமல் உன்னை மறந்ததுண்டு — தாழ்த்தாமல் 318

பூணா வெலும்பணியாய்ப் பூண்டோய்நின் பொன்வடிவங்
காணாது வீழ்நாள் கழித்ததுண்டு — மாணாத 319

காடுபோன் ஞாலக் கடுநடையி லேஇருகான்
மாடுபோல் நின்றுழைத்து வாழ்ந்ததுண்டு — நாடகன்ற 320

கள்ளிவா யோங்குபெருங் காமக் கடுங்காட்டிற்
கொள்ளிவாய்ப் பேய்போற் குதித்ததுண்டு—ஒள்ளியரால் 321

எள்ளுண்ட மாயா வியல்புறுபுன் கல்வியெலாங்
கள்ளுண்ட பித்தனைப்போற் கற்றதுண்டு—நள்ளுலகிற் 322

சீராசை யெங்குஞ்சொற் சென்றிடவே வேண்டுமெனும்
பேராசைப் பேய்தான் பிடித்ததுண்டு — நீராவென் 323

சாதகமோ! தீவினையின் சாதனையோ! நானறியேன்!
பாதகமென் றால்எனக்குப் பாற்சோறு — நீதகன்ற 324

தூய்மைநன்று மென்கின்ற தொன்மையினர் வாய்க்கினிய
வாய்மையென்றால் என்னுடைய வாய்குமட்டும்—காய்மைதரும்

கற்கு நிகராங் கடுஞ்சொலன்றி நன்மதுரச்
சொற்கும் எனக்கும்வெகு தூரங்காண் — பொற்புமிக 326

1. உதி என்பது — ஒதியென மருவியது.
2. ஆழ்த்து ஆமய உலகில் என்பது — அழுந்துகின்ற நோயுருவாகிய உலகில்.

Koviloor Digital Library

நண்ணியுனைப் போற்றுகின்ற நல்லோர்க் கினியசிவ
புண்ணியமென் றாலெனக்குப் போராட்டம் — அண்ணலுனை

நாளுரையா தேத்துகின்ற நல்லோர்மே லில்லாத
கோளுரையென் றாலெனக்குக் கொண்டாட்டம்—நீளநினை 328

நேசிக்கு நல்ல நெறியாஞ் **சிவாகமநூல்**
வாசிக்க வென்றாலென் வாய்நோகும் — காசிக்கு 329

நீடிக்கி லானாலு நேர்ந்தறிவ தல்லதுவீண்
வேடிக்கை என்றால் விடுவதிலை — நாடயலில் 330

வீறா முனது விழாச்செயினும் அவ்விடந்தான்
ஆறா யிரங்காத மாங்கண்டாய் — மாறான 331

போகமென்றால் உள்ளமிகப் பூரிக்கும் அன்றிசிவ
யோகமென்றால் என்னுடைய உண்ணடுங்கும்—சோகமுடன்

துள்ளலொழிந் தென்னெஞ்சஞ் சோர்ந்தழியுங் காலத்திற்
கள்ளமென்றால் உள்ளே களித்தெழும்பும்—அள்ளனெறி 333

செல்லென்றா லன்றிச் **சிவசிவா** வென்றொருகாற்
சொல்லென்றால் என்றனக்குத் துக்கம்வரும் — நல்லநெறி 334

வாம்பலன்கொண் டோர்கள் மறந்தும் பெறாக்கொடிய
சோம்பலென்ப தென்னுடைய சொந்தங்காண்—ஏம்பலுடன்

எற்றோ **இரக்கம்**என்ப தென்றனைக்கண் டஞ்சியெனை
உற்றோ ரையுமுடன்விட் டோடுங்காண் — சற்றேனும் 336

ஆக்கமே சேரா தறத்துரத்து கின்றவெறுந்
தூக்கமே என்றனக்குச் சோபனங்காண் — ஊக்கமிகும் 337

ஏறுடையாய் **நீறணியா ஈனர்**மனை யாயினும்வெண்
சோறுகிடைத் தாலதுவே சொர்க்கங்காண் — வீறுகின்ற 338

வாழ்வுரைக்கு நல்ல மனத்தர்தமை எஞ்ஞான்றுந்
தாழ்வுரைத்தல் என்னுடைய சாதகங்காண் — வேள்விசெயும்

தொண்டர்தமைத் துதியாத் துட்டரைப்போ லெப்பொழுதுஞ்
சண்டையென்ப தென்றனக்குத் தாய்தந்தை—கொண்டவெழு 340

தாதாட ஓங்கித் தலையாட வஞ்சரொடு
வாதாட வென்றாலென் வாய்துடிக்கும் — கோதாடச் 341

சிந்தை திரிந்துழலுந் தீயரைப்போல் நற்றரும
நிந்தையென்ப தென்பழைய நேசங்காண் — முந்தநினை 342

எண்ணென்றா லன்றி யிடர்செய் திடுங்கொடிய
பெண்ணென்றாற் றூக்கம் பிடியாது — பெண்களுடன் 343

புல்லென்றாற் றேகம் புளகிக்கும் அன்றிவிட்டு
நில்லென்றால் என்கண்ணில் நீரரும்பும் — புல்லரென்ற 344

பேர்க்கும்விருப் பெய்தாத பெண்பேய்கள் வெய்யசிறு
நீர்க்குழியே யான்குளிக்கு நீர்ப்பொய்கை—சீர்க்கரையின் 345

Koviloor Digital Library

ஏறாட்பெண் மாத ரிடைக்குள் அளிந்தென்றும்
ஆறாப்புண் ணுக்கே அடிமைநான் — தேறாத 346

வெஞ்சலஞ்செய் மாயா விகாரத்தி னால்வரும்வீண்
சஞ்சலமெல் லாமெனது சம்பந்தம் — அஞ்செழுத்தை 347

நேர்ந்தார்க் கருள்புரியு நின்னடியர் தாமேயுஞ்
சார்ந்தால் அதுபெரிய சங்கட்டம் — ஆர்ந்திடுமான் 348

காந்தும் விழிப்புலியைக் கண்டதுபோல் நல்லகுண
சாந்தமெனைக் கண்டாற் றலைசாய்க்கும் — ஆந்தகையோர் 349

சேர மனத்திற் செறிவித் திடும்புருட
தீரமெனைக் கண்டாற் சிரிக்குங்காண் — கோரமதைக் 350

காணில் உலகிற் கருத்துடையோர் கொள்ளுகின்ற
நாண மெனைக்கண்டு நாணுங்காண் — ஏனுலகில் 351

ஞானங் கொளாவெனது நாமமுரைத் தாலும்அபி
மானம் பயங்கொண்டு மாய்ந்துவிடும் — ஆனவுன்றன் 352

கேண்மைக் குலத்தொண்டர் கீர்த்தி பெறக்கொண்ட
ஆண்மைக்கு நானென்றால் ஆகாது — வாண்மைபெறும் 353

ஐயநின்றாட் பூசிக்கும் அன்பருள்ளத் தன்பிற்கும்
பொய்யன் எனக்கும் பொருத்தமிலை — வையகத்தோர் 354

இல்லெனினுஞ் 'சும்மாநீ ஈகின்றேன் என்றொருசொல்
சொல்'லெனினுஞ் சொல்லத் துணிவுகொளேன் — அல்லலெமக்(கு)

ஈயென்பா ரன்றிஅன்னை என்பயத்தால் நின்சோற்றில்
[1] ஈயென்ப தற்கும் இசையாள்காண் — ஈஎன்பார்க்(கு) 356

எண்ணுஞ் சிலர்மண் ணிடுவார் எனக்கந்த
மண்ணுங் கொடுக்கமனம் வாராது — அண்ணுறுமென் 357

இல்லை யடைந்தே இரப்பவருக் கெப்போதும்
இல்லையென்ப தென்வாய்க் கியல்புகாண் — தொல்லுலகை

ஆண்டாலும் அன்றி அயலார்புன் கீரைமணிப்
பூண்டாலும் என்கண் பொறுக்காது — நீண்டவெழு 359

தீப முறுவோர் திசையோர்மற் றியாவர்க்குங்
கோப மதுநான் கொடுக்கிலுண்டு — ஆபத்தில் 360

வீசங் கொடுத்தெட்டு வீச மெனப்பிறரை
மோசஞ் செயநான் முதற்பாதம் — பாசமுளோர் 361

கைக்குடைய வேயெழுதிக் கட்டிவைத்த இவ்வுலகப்
பொய்க்கதையே யான்படிக்கும் புத்தகங்கள் — மெய்ப்படுநின்

---

1. சோற்றில் மொய்க்கும் ஈயைக்கண்டு, தாய் தன் மகன் லோபகுணத்தால் ஈ என்பதற்குக் கொடு என்று பொருள்கொண்டு பயந்துவிடுவானோ வென்று கருதி அங்ஙனங் கூறாள்.

Koviloor Digital Library

மந்திரத்தை உச்சரியா வாயுடையே னென்போலத்
தந்திரத்திற் கைதேர்ந் தவரில்லை — எந்தையினி 363

ஏதென் றுரைப்பே னிருங்கடல்சூழ் வையகத்திற்
சூதென்ப தெல்லாமென் சுற்றங்காண் — ஓதுகின்ற 364

நஞ்சமெலாங் கூட்டி நவின்றிடினும் ஒவ்வாத
வஞ்சமெலாம் என்கை வசங்கண்டாய் — அஞ்சவரும் 365

வீணவமாம் வஞ்ச வினைக்குமுத லாகின்ற
ஆணவமே என்காணி ஆட்சியதாம் — மாணிறைந்த 366

நல்லறிவே என்னைநெடு நாட்பகைத்த தன்றிமற்றைப்
புல்லறிவே என்னுட் பொருள்கண்டாய் — சொல்லவொணு 367

வேடருக்குங் கிட்டாத வெங்குணத்தால் இங்குழலும்
மூடருக்குள் யானே முதல்வன்காண் — வீடடுத்த 368

மேதையர்கள் வேண்டா விலங்காய்த் திரிகின்ற
பேதையென்ப தென்னுரிமைப் பேர்கண்டாய் — பேதமுற 369

ஓதுவதென்! பற்பலவா யுற்றதவத் தோர்நீத்த
தீதுகளெல் லாமெனது செல்வங்காண் — ஆதலினல்

பேயினையொத் தில்வுலகிற் பித்தாகி நின்ற இந்த
நாயினைநீ யாண்டிடுதல் நன்கன்றே — ஆயினுமுன் 371

மண்ணு ருயிர்களுக்கும் வானவர்க்குந் தானிரங்கி
உண்ணுக் கொடுவிடமும் உண்டனையே! — எண்ணுமல் 372

வேய்த்தவள வெற்பெடுத்த வெய்யஅரக் கன்றனக்கும்
வாய்த்தவர மெல்லாம் வழங்கினையே — சாய்த்தமன 373

வீம்புடைய வன்முனிவர் வேள்விசெய்து விட்டகொடும்
பாம்பையெல்லாந் தோளிற் பரித்தனையே — நாம்பெரியர் 374

எஞ்சேமென் றுணவத்தா லேற்ற இருவரையும்
அஞ்சேலென் றுட்கொண் டருளினையே — துஞ்சுபன்றித் 375

தோயாக் குருளைகளின் துன்பம் பொறுதன்று
தாயாய் முலைப்பாலுந் தந்தனையே — வாயிசைக்குப் 376

பாண்டியன்முன் சொல்லிவந்த பாணன் பொருட்டடிமை
வேண்டி விறகெடுத்து விற்றனையே — ஆண்டொருநாள் 377

வாய்முடியாத் துன்புகொண்ட வந்திக்கோ ராளாகித்
தூய்முடிமேன் மண்ணுஞ் சுமந்தனையே — ஆய்துயர 378

மாவகஞ்சேர் மாணிக்க வாசகருக் காய்க்குதிரைச்
சேவகன்போல் வீதிதனிற் சென்றனையே — மாவிசயன் 379

வில்லடிக்கு நெஞ்சம் விரும்பியதல் லாலெறிந்த
கல்லடிக்கும் உள்ளங் களித்தனையே — மல்லலுறும் 380

வில்வக் கிளையுதிர்த்த வெய்ய முசுக்கலையைச்
செல்வத் துரைமகனுய்ச் செய்தனையே — சொல்அகலின்

Koviloor Digital Library

நீளுகின்ற நெய்யருந்த நேர்எலியை மூவுலகும்
ஆளுகின்ற மன்னவனாய் ஆக்கினையே — கோளகல 382

வாய்ச்சங்கு நூலிழைத்த வாய்ச்சிலம்பி தன்னையுயர்
கோச்செங்கட் சோழனெனக் கூட்டினையே—ஏச்சறுநல் 383

[1]ஆறடுத்த வாகீசர்க் காம்பசியைக் கண்டுகட்டுச்
சோறெடுத்துப் பின்னே சுமந்தனையே — கூறுகின்ற 384

தொன்மைபெறுஞ் சுந்தரர்க்குத் தோழனென்று பெண்பரவை
நன்மனைக்குத் தூது நடந்தனையே — நன்மைபெற 385

இற்றென்ற விற்றென்று எத்தனையோ போர்கள்செய்த
குற்றங் குணமாகக் கொண்டனையே — பற்றுலகில் 386

அன்புடைய தாயர்களோ ராயிரம்பே ரானாலும்
அன்புடையாய் நின்னைப்போ லாவாரோ!—இன்பமுடன்

ஈண்டவருந் தந்தையர்கள் எண்ணிலரே யாயினுமென்
ஆண்டவனே நின்னைப்போ லாவாரோ!—பூண்டகைகொள்

ஏறுடைய நின்னையன்றி எந்தை பிரானேயுன்
ஆணையெனக் குற்றதுணை யாருமில்லை — நாணமுளன் 389

ஆனேன் பிழைக ளனைத்தினையு மையா!நீ
தானே பொறுக்கத் தகுங்கண்டாய் — மேனோற்ற 390

மாற்றனக்கு மெட்டா மலர்க்கழலோய் நீயென்னைக்
கூற்றனுக்குக் காட்டிக் கொடுக்கற்க! — பாற்றவள 391

நந்தக் கடற்புவியில் நான்இன்னும் வன்பிறவிப்
பந்தக் கடலழுந்தப் பண்ணற்க! — முந்தைநெறி 392

நின்றேயுன் பொற்றாள் நினையாதார் பாழ்மனையிற்
சென்றே உடலோம்பச் செய்யற்க! — நன்றேநின் 393

றோங்கு நெறியோ ருளத்தமர்ந்தோய்! என்றன்னைத்
தீங்கு நெறியிற் செலுத்தற்க! — வீங்கடங்கி 394

வாழி யெனத்தான் வழுத்தினுமென் சொற்கடங்கா
ஏழை மனத்தா லிளைக்கின்றேன் — வாழுமரக் 395

கோடேற்றும் பொல்லாக் குரங்கெனவே பொய்யுலகக்
காடேறு நெஞ்சாற் கலங்குகின்றேன் — பாடேறும் 396

உள்ளறியா மாயையெனு முட்பகையாற் காமமெனுங்
கள்ளறியா துண்டு கவல்கின்றேன் — தெள்ளுறுமென் 397

கண்ணனையாய் நின்றாட் கமலங் களைவழுத்தா
மண்ணனையார் பாற்போய் மயங்குகின்றேன் — திண்ணமிலாக்

காதரவாந் துன்பக் கவலைக் கடல்வீழ்ந்தே
ஆதரவொன் றின்றி யலைகின்றேன் — ஓதுமறை 399

1. ஆறு என்பது — வழி.

Koviloor Digital Library

யாத்த ரெனுமுன்ற வடியார் தமைக்கண்டு
நாத்திகஞ்சொல் வார்க்கு நடுங்குகின்றேன் — பாத்துண்டே

உய்வ தறியா வுளத்தினே னுய்யும்வகைச்
செய்வ தறியேன் திகைக்கின்றேன் — சைவநெறி 401

உண்ணிரம்பு நின்கருணை யுண்டோ இலையோவென்(று)
எண்ணியெண்ணி உள்ள மிளைக்கின்றேன்—மண்ணினிடைக்

கொன்செய்கை கொண்டகொடுங் கூற்றன் குறுகிலதற்(கு)
என்செய்வோ மென்றெண்ணி யெய்க்கின்றேன்—முன்செய்வினை

யாமறையா நோயா லகமெலிவுற் றையோ! நான்
தாமரையில் நீர்போற் றயங்குகின்றேன் — தாமருடி 404

வள்ள லருள்கொடுக்க வந்திலனே யின்னுமென
உள்ளமது நீரா யுருகுகின்றேன் — எள்ளலுறும் 405

மாலைபாய்ந் தின்னுமென்ன வந்திடுமோ! என்றுநெஞ்சம்
ஆலைபாய்ந் துள்ளம் அழிகின்றேன் — ஞாலமிசைக் 406

கோட்பார வாழ்க்கைக் கொடுஞ்சிறையி னின்றென்னை
மீட்பா ரிலாது விழிக்கின்றேன் — மீட்பாகும் 407

ஆற்றி லொருகாலும் அடங்காச் சமுசாரச்
சேற்றிலொரு காலும்வைத்துத் தேய்கின்றேன்—தோற்றுமயற்

பாகமுறு வாழ்க்கையெனும் பாலைவனத் துன்னருணீர்த்
தாகமது கொண்டே தவிக்கின்றேன் — மோகமதிற் 409

போய்ப்படுமோர் பஞ்சப் பொறிகளால் வெம்பாம்பின்
வாய்ப்படுமோர்தேரையைப்போல்வாடுகின்றேன்-மாய்ப்பவரு

மீன்போலு மாதர் விழியால் வலைப்பட்ட
மான்போலுஞ் சோர்ந்து மடங்குகின்றேன் — கான்போல

வீற்று முலக விகாரப் பிரளயத்தில்
தோற்றுஞ் சுழியுட் சுழல்கின்றேன் — ஆற்றவுநான் 412

இப்பாரி லுன்மேல்அன் பில்லெனினும் அன்பனென
ஒப்பாரி யேனும் உடையேன்காண் — தப்பாய்ந்த

மட்டுவிடேன் உன்றுண் மறக்கினும்வெண் ணீற்றுநெறி
விட்டுவிடேன் என்றனைக் கைவிட்டுவிடேல்!—துட்டனென

மாலுந் திசைமுகனும் வானவரும் வந்துதடுத்
தாலுஞ் சிறியேனைத் தள்ளிவிடேல்! — சாலுலக 415

வாதனைகொண் டோனென்று மற்றெவரா னாலும்வந்து
போதனைசெய் தாலுமெனைப் போக்கிவிடேல்! — நீதயவு

சூழ்ந்திடுக! என்னையும்நின் தொண்டருடன்சேர்த்தருள்க!

வாழ்ந்திடுக! நின் தாள் மலர்! 417

திருச்சிற்றம்பலம்

Koviloor Digital Library

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

மூன்றாவது

நெஞ்சறிவுறுத்தல்

காப்பு

குறள் வெண்பா

திருச்சிற்றம்பலம்

சீர்சான்ற முக்கட் சிவகளிற்றைச் சேர்ந்திடில்ஆம்
பேர்சான்ற இன்பம் பெரிது. 1

ஆறு முகத்தான் அருளடையின் ஆமெல்லாப்
பேறு மிகத்தான் பெரிது. 2

கலி வெண்பா

திருச்சிற்றம்பலம்

பொன்னார் மலைபோற் பொலிவுற் றசையாமல்
எந்நாளும் **வாழியநீ யென் நெஞ்சே!** — பின்னுன 1

இப்பிறப்பி னோடுங் கெழுபிறப்பு மன்றியெனை
எப்பிறப்பும் விட்டகலா என் நெஞ்சே! — செப்பமுடன் 2

செவ்வொருசார் நின்று சிறியேன் கிளக்கின்ற
இவ்வொருசொல் கேட்டிடுக! என்னெஞ்சே! — எவ்வெவ்

1. பதி சொரூபம்

உலகும் பரவும் ஒருமுதலா யெங்கும்
இலகுஞ் சிவமா யிறையாய் — விலகும் 4

உருவா யுருவி லுருவா யுருவுள்
அருவா யருவி லருவாய் — உருவருவாய் 5

நித்தியமாய் நிர்க்குணமாய் நிற்சலமாய் நின்மலமாய்ச்
சத்தியமாய்ச் சத்துவமாய்த் தத்துவமாய் — முத்தியருள் 6

ஒன்றாய்ப் பலவா யுயிரா யுயிர்க்குயிராய்
நன்றாய் நவமாய் நடுநிலையாய் — நின்றோங்கும் 7

வேதமாய் வேதாந்த வித்தாய் விளங்குபர
நாதமாய் நாதாந்த நாயகமாய் — ஓதுஞ் 8

Koviloor Digital Library

செறிவாய்த் திரமாய்ச் சிதாகாச மாய்ச்சொல்
அறிவா யறிவு ளறிவாய் — நெறிமேவு 9

காலமாய்க் காலங் கடந்த கருத்தாய்நற்
சீலமாய்ச் சிற்பரமாய்ச் சின்மயமாய் — ஞாலம் 10

பொருந்தாப் பொருளாய்ப் பொருந்தும் பொருளாய்ப்
பெருந்தா ரகஞ்சூழ்ந்த பேறாய்த் — திருந்தாத 11

போக்கும் வரத்துமிலாப் பூரணமாய்ப் புண்ணியர்கள்
நோக்குந் திறத்தெழுந்த நுண்ணுணர்வாய் — நீக்கமிலா 12

ஆதியா யாதிநடு வந்தமா யாங்ககன்ற
சோதியாய்ச் சோதியாச் சொற்பயனாய் — நீதியாய் 13

ஆங்கார நீக்கும் அகார உகாரமதாய்
ஓங்கார மாயவற்றி னுட்பொருளாய்ப் — பாங்கான 14

சித்தமாய்ச் சித்தாந்த தேசாய்த் திகம்பரமாய்ச்
சத்தமாய்ச் சுத்த சதாநிலையாய் — வித்தமாய் 15

அண்டமா யண்டத் தணுவா யருளகண்டா
கண்டமா யானந்தா காரமதாய் — அண்டத்தின் 16

அப்பாலா யிப்பாலா யண்மையாய்ச் சேய்மையதாய்
எப்பாலா யெப்பாலு மில்லதுமாய்ச் — செப்பாலும் 17

நெஞ்சாலுங் காய நிலையாலு மந்நிலைக்குள்
அஞ்சாலுங் காண்டற் கரும்பதமாய் — எஞ்சாப் 18

பரமாய்ப் பகாப்பொருளாய்ப் பாலாய்ச் சுவையின்
தரமாய்ப் பரப்பிரமந் தானாய் — வரமாய 19

ஒன்பான் வடிவா யொளியெண் குணக்கடலாய்
அன்பா யகநிலையா யற்புதமாய் — இன்பாய் 20

அகமாய்ப் புறமா யகம்புறமாய் நீங்குஞ்
சகமாய்ச் சகமாயை தானாய்ச் — சகமாயை 21

இல்லாதா யென்று மிருப்பதா யாதொன்றுங்
கொல்லாநார்க் கின்பங் கொடுப்பதாய் — எல்லார்க்கும் 22

நண்ணுவதாய் நண்ணாதாய் நல்வினையா யல்வினையாய்
எண்ணுவதா யெண்ணரி னரியலாதாய் — என்றுநின்ற 23

வானாய் நிலனாய் வளியா யனலாய்நீர்
தானாய் வழிபடுநான் முன்றானாய் — வானாதி 24

ஒன்றிடத்து மொன்றாதா யொன்றுவதாய் ஆனந்த
மன்றிடத்தி லென்றும் வதிவதாய் — ஒன்றியதோர் 25

ஐந்நிறமா யந்நிறத்தி னொளியா யவ்வொளிக்குள்
எந்நிறமும் வேண்டா வியனிறமாய் — முந்நிறத்திற் 26

Koviloor Digital Library

பூப்பதுவாய்க் காப்பதுவாய்ப் போக்குவதாய்த் தேக்குவதாய்
நீப்பதுவாய்த் தன்னுள் நிறுத்துவதாய்ப் — பூப்பதின்றி 27

வாளா திருப்பதுவாய் வாதனை தீதமதாய்
நீளாது நீண்ட நிலையினதாய் — மீளாப் 28

பெரிதாய்ச் சிறிதாய்ப் பெரிதுஞ் சிறிதும்
அரிதா யரிதி லரிதாய்த் — துரிய 29

வெளியாய்ப் பரவெளியாய் மேவுபர விந்தின்
ஒளியாய்ச் சிவானந்த வூற்றாய்த் — தெளியாதி 30

கற்பமாய்க் காணுஞ்சங் கற்ப விகற்பமாய்
நிற்பதா கார நிருவிகற்பாய்ப் — பொற்புடைய 31

முச்சுடராய் முச்சுடர்க்கு முன்னொளியாய்ப் பின்னொளியாய்
எச்சுடரும் போதா வியற்சுடராய் — அச்சில் 32

நிறைவாய்க் குறைவாய் நிறைகுறை வில்லாதாய்
மறைவாய் வெளியாய் மனுவாய் — மறையாத 33

சச்சிதா னந்தமாய்த் தன்னிகரொன் றில்லாதாய்
விச்சையா லெல்லாம் விரிப்பதுவாய் — மெச்சுகின்ற 34

யோகமா யோகியா யோகத் தெழுந்தசிவ
போகமாய்ப் போகியாய்ப் போகமருள் — ஏகமாய்க் 35

கேவலமாய்ச் சுத்த சகலமாய்க் கீழ்ச்சகல
கேவலங்கள் சற்றுங் கிடையாதாய் — மாவலத்தில் 36

காட்சியாய்க் காண்பானாய்க் காணப் படுபொருளாய்ச்
சூட்சியாய்ச் சூட்சியாற் றோய்வரிதாய் — மாட்சிபெறச் 37

செய்பவனாய்ச் செய்தொழிலாய்ச் செய்பொருளாய்ச் செய்தொழிலால்
உய்பவனா யுய்விக்கு முத்தமனாய் — மொய்கொள் 38

அதுவா யவளா யவனா யவையுங்
கதுவாது நின்ற கணிப்பாய்க் — கதுவாமல். 39

ஐயந் திரிபோ டறியாமை விட்டகற்றிப்
பொய்யென்ப தொன்றும் பொருந்தாராய்ச் — செய்யென்ற 40

ஓர்வினையில் இன்பமுமற் றோர்வினையிற் றுன்பமுமாஞ்
சார்வினைவிட் டோங்குந் தகையினராய்ப் — பார்வினையில் 41

ஓர்பால், வெறுப்புமற்றை யோர்பால் விருப்புமுறுஞ்
சார்பான் மயங்காத் தகையினராய்ச் — சார்பாய 42

ஓரிடத்திற் றண்மையுமற் றோரிடத்தில் வெஞ்சினமும்
பாரிடத்திற் கொள்ளாப் பரிசினராய் — நீரிடத்தில் 43

தண்மைநிக ராதென்றுஞ் சாந்தம் பழுத்துயர்ந்த
ஒண்மையுடன் ஒன்றை யுணர்ந்தவராய் — வெண்மையிலா

Koviloor Digital Library

ஒன்று மறிவி னுதயாதி யீறளவும்
என்றும் இரண்டென்ப தில்லவராய் — மன்றவொளிர் 45

அம்மூன்றி னுள்ளே யடுக்கிவரு மொன்றகன்ற
மும்மூன்றின் மூன்று முனிந்தவராய்த் — தம்மூன்றி 46

வீடாது நின்றும் விரிந்தும் விகற்பநடை
நாடாது நான்கு நசித்தவராய் — ஊடாக 47

எஞ்சாம லஞ்சி னிடமாய் நடமாடும்
அஞ்சாதி அஞ்சும் அறுத்தவராய் — எஞ்சாமல் 48

ஈண்டாண் டருளு மிறையோர் தமையாறில்
ஆண்டாண்டு கண்டு ஆறகன்றவராய் — ஈண்டாது 49

வாழியுற்ற வானேரும் வந்து தமக்கிரண்டோ
டேழியற்ற ஏழு மிகந்தவராய் — ஊழியற்றக் 50

கட்டிநின்றுட் சோதியொன்று காணத் தொடங்குகின்றோர்
எட்டுகின்ற எட்டின்மே லெய்தினராய்க் — கட்டுகின்ற 51

தேன்றோய் கருணைச் சிவங்கலந்து தேக்குகின்ற
சான்றோர்தம் உள்ளந் தணவாதாய் — [1]மான்றமலத் 52

தாக்கொழிந்து தத்துவத்தின் சார்பாந் தனுவொழிந்து
வாக்கொழிந்து மாணு மனமொழிந்து — ஏக்கமுற 53

வாய்க்குஞ் சுகமொழிந்து மண்ணொழிந்து விண்ணொழிந்து
சாய்க்கு மிராப்பகலுந் தானொழிந்து — நீக்கொழிந்து 54

நானுமொழி யாதொழிந்து ஞானமொழி யாதொழிந்து
தானுமொழி யாமற் றுனொழிந்து — மோனநிலை 55

நிற்கும் பிரம நிரதிசயா னந்தமதாய்
நிற்கும் பரம நிருத்தனெவன்! 56

நற்பரமாய் — நின்று னெவனன்பர் நேயமனத் தேவிரைந்து
சென்று னெவன்சர்வ தீர்த்தனெவன் — வன்றிமை 57

இல்லா னெவன்யார்க்கு மீச னெவன்யாவும்
வல்லா னெவனந்தி வண்ணனெவன் — கல்லாலில் 58

சுட்டகன்ற ஞான சுகாதிதங் காட்டிமுற்றும்
விட்டகன்ற யோக விநோதனெவன்! — மட்டகன்ற 59

2. சித்தன்

அண்டங்க ளெல்லா மணுவி லடைத்தருளித்
திண்டங்கு மாறிருத்துஞ் சித்தனெவன்! — பண்டங்கு 60

வீயாச் சிறுபெண் விளையாட்டு வண்டமெலாந்
தேயாது கூட்டுவிக்குஞ் சித்தனெவன் — ஆயாதும் 61

1. மான்றமலத்தாக்கு — மயக்குதலைச் செய்கின்ற மலத்தினேதிரீடு எனக் கொள்க.

Koviloor Digital Library

வேண்டாமை வேண்டுவது மேவாத சித்தர்தமைத்
தீண்டாது தீண்டுகின்ற சித்தனெவன் — ஈண்டோது 62

பற்றுருவாய்ப் பற்றுப் பரவணுவி னுள்விளங்குஞ்
சிற்றுருவா யுள்ளொளிக்குஞ் சித்தனெவன்—மற்றுருவின் 63

வையாது வைத்துலகை மாவின் திரசாலஞ்
செய்யாது செய்விக்குஞ் சித்தனெவன் — நையாமல் 64

அப்பிடைவைப் பாமுலகில் ஆருயிரை மாயையெனும்
செப்பிடைவைத் தாட்டுகின்ற சித்தனெவன்!—ஒப்புறவே

நில்லாத காற்றை நிலையாக் கடத்தடைத்துச்
செல்லாது வைக்கின்ற சித்தனெவன் — பொல்லாத 66

வெம்பாம்பை மேலணிந்தோர் வெம்புற்றி னுள்ளிருந்தே
செம்பாம்பை யாட்டுகின்ற சித்தனெவன் — தம்பாங்கர் 67

ஒண்கையில் தானென்றின்றி யுண்ணின் றுயிர்களையூழ்த்
திண்கயிற்று ளூட்டுகின்ற சித்தனெவன்—வண்கையுடைத் 68

தானசைந்தால் மற்றைச் சகமசையும் என்றுமறை
தேனசையச் சொல்கின்ற சித்தனெவன் — ஊனமின்றிப் 69

பேர்த்துயிர்க ளெல்லாமோர் பெண்பிள்ளை யின்வசமாய்ச்
சேர்த்து வருவிக்குஞ் சித்தனெவன் — போர்த்துமிக 70

அல்விரவுங் காலை யகிலமெலாந் தன்பதத்தோர்
சில்விரலிற் சேர்க்கின்ற சித்தனெவன் — பல்வகையாய்க் 71

கைகலந்த வன்மைக் கருப்பா சயப்பையுட்
செய்கருவுக் கூட்டுவிக்குஞ் சித்தனெவன்! — உய்கருவை

மெய்வைத்த வேர்வையினும் வீழ்நிலத்தும் அண்டத்துஞ்
செய்வித்தங் கூட்டுவிக்குஞ் சித்தனெவன் — உய்விக்கும் 73

வித்தொன்று மின்றி விளைவித் தருளளிக்குஞ்
சித்தென்றும் வல்லவொரு சித்தனெவன் — சத்துடனே 74

உற்பத்தி யாயுலகில் ஒன்பதுவாய்ப் பாவைகள்செய்
சிற்பத் தொழில்வல்ல சித்தனெவன் — பற்பலவாங் 75

காரா ழிகளைக் கரையின்றி யெல்லையிலாச்
சேருழி நிற்கவைத்த சித்தனெவன் — பேராத 76

நீர்மேல் நெருப்பை நிலையுறவைத் தெவ்வுலகுஞ்
சீர்மே வுறச்செய்யுஞ் சித்தனெவன் — பாராதி 77

ஐந்திலைந்து நான்கொருமூன் றாமிரண்டொன் றாய்முறையே
சிந்தையுற நின்றருளுஞ் சித்தனெவன் — பந்தமுற 78

ஆண்பெண்ணாய்ப் பெண்ணாணா யண்மை தனைவாளிற்
சேண்பண்ண வல்லவொரு சித்தனெவன் — மாண்பண்ணுப்

Koviloor Digital Library

பேடாணைப் பெண்ணைப் பெண்ணாண் பெரும்பேடாய்ச்
சேடாகச் செய்யவல்ல சித்தனெவன் — சேடாய . 80

வெண்மை கிழமாய் விருத்தமந்த வெண்மையதாய்த்
திண்மை பெறச்செய்யுஞ் சித்தனெவன் — ஒண்மையிலா 81

ஓட்டினைச்செம் பொன்னாய் உயர்செம்பொன் ஓடாகச்
சேட்டையறச் செய்கின்ற சித்தனெவன் — காட்டிலுறு 82

காஞ்சிரத்தைக் கற்பகமாய்க் கற்பகத்தைக் காஞ்சிரமாய்த்
தேஞ்சிவணச் செய்கின்ற சித்தனெவன் — வாஞ்சையுற 83

நாரணன்சேய் நான்முகனாய் நான்முகன்சேய் நாரணனாய்ச்
சீரணவச் செய்யவல்ல சித்தனெவன் — பேரணவக் 84

கொம்மை பெறுங்கோடா கோடியண்ட மெல்லாமோர்
செம்மயிர்க்கா லுட்புகுத்துஞ் சித்தனெவன் — செம்மையிலா

வெம்புலியை வெண்பால் விளைபசுவா யப்பசுவைச்
செம்புலியாய்ச் செய்யவல்ல சித்தனெவன் — அம்புலியை 86

அங்கதிரோன் செங்கதிரா யம்புலியாய்ப் பம்புகின்ற
செங்கதிரைச் செய்யவல்ல சித்தனெவன் — துங்கமுறு 87

ஓரணுவோர் மாமலையா யோர்மா மலையணுவோர்
சீரணுவாய்ச் செய்யவல்ல சித்தனெவன் — வீரமுடன் 88

முன்னகையா னின்றதொரு முப்புரத்தை யன்றொருகாற்
சின்னகையாற் றீமடுத்த சித்தனெவன் — முன்னயன்மால்89

மற்றிருந்த வானவரும் வாய்ந்தசைக்கா வண்ணமொரு
[1]சிற்றுரும்பை நாட்டிநின்ற சித்தனெவன் — மற்றவர்போல்

அல்லா வயனு மரியு முருத்திரனுஞ்
செல்லா நெறிநின்ற சித்தனெவன் — ஒல்லாத 91

கல்லிற் சுவையாய்க் கனியிற் சுவையிலதாய்ச்
செல்லப் பணிக்கவல்ல சித்தனெவன் — அல்லலறப் 92

பார்க்கின்ற யாவர்கட்கும் பாவனா தீதனெனச்
சீர்க்கின்ற மெய்ஞ்ஞானச் சித்தனெவன்—மார்க்கங்கள் 93

ஒன்றென்ற மேலவரை யொன்றென் றுரைத்தவர்பாற்
சென்றொன்றி நிற்கின்ற சித்தனெவன்—அன்றொருநாள் 94

கல்லானை தின்னக் கரும்பளித்துப் பாண்டியன்வீண்
செல்லா தளித்தமகா சித்தனெவன் — சொல்லாத 95

ஒன்றே யிரண்டேமே லொன்றிரண்டே யென்பவற்றுட்
சென்றே நடுநின்ற சித்தனெவன் — சென்றேறும் 96

அத்திரத்தை மென்மலரா யம்மலரை யத்திரமாய்ச்
சித்திரத்தைப் பேசுவிக்குஞ் சித்தனெவன்—எத்தலத்துஞ் 97

1. சிற்றுரும்பு — அற்பமாகிய துரும்பு.

Koviloor Digital Library

[1]சங்கமதே தாபரமாய்த் தாபரமே சங்கமதாய்ச்
செங்கையிடா தாற்றவல்ல சித்தனெவன் — தங்குகின்ற 98

சத்தெல்லா மாகிச் சயம்புவா யானந்தச்
சித்தெல்லாம் வல்லசிவ சித்தனெவன் — தத்தெல்லாம் 99

3. கள்வன்

நீட்டாது நெஞ்ச நிலைத்தவர்க்குந் தன்னுண்மை
காட்டாது காட்டிநிற்குங் **கள்வனெவன்!**—பாட்டோடு 100

வண்டாலுங் கொன்றை மலரோ யெனமறைகள்
கண்டாலுங் காணாத கள்வனெவன் — தொண்டாக 101

அள்ளஞ் செறியார்க்கே யன்றி யறிவார்க்குக்
கள்ளஞ் செறியாத கள்வனெவன் — எள்ளலறக் 102

கொண்டவெலாந் தன்பாற் கொடுக்குமவர் தம்மிடத்திற்
கண்டவெலாங் கொள்ளைகொளுங் கள்வனெவன்-கொண்டுளத்தில்

தன்னையொளிக் கின்றோர்கள் தம்முளொளித் துள்ளவெலாங்
கன்னமிடக் கைவந்த கள்வனெவன் — மன்னுலகைச் 104

சற்பனைசெய் கின்றதிரோ தானமெனுஞ் சத்தியினாற்
கற்பனைசெய் தேமயக்குங் கள்வனெவன் — முற்படுமித் 105

தொண்டுலகி லுள்ளவுயிர் தோறுமொளித் தாற்றலெலாங்
கண்டுலவு கின்றதொரு கள்வனெவன் — விண்டகலா 106

மண்மயக்கும் பொன்மயக்கு மாதர் மயக்குமெனுங்
கண்மயக்கங் காட்டிநிற்குங் கள்வனெவன்—உண்மயக்கும் 107

மாசு பறிக்கு மதியுடையோர் தம்முடைய
காசு பறிக்கின்ற கள்வனெவன் — ஆசகன்ற 108

பெண்ணா லெவையும் பிறப்பித்து மற்றைநுதற்
கண்ணா லழிக்கின்ற கள்வனெவன் — எண்ணாது 109

4. சதுரன்

நானென்று நிற்கில் நடுவேயந் நானணைத்
தானென்று நிற்குஞ் **சதுரனெவன்!** — மானென்ற 110

மாயைதனைக் காட்டி மறைப்பித்தம் மாயையிற்றன்
சாயைதனைக் காட்டுஞ் சதுரனெவன் — நேயமுடன் 111

நான்மறையு நான்முகனு நாரணனு நாடுதொறுந்
தான்மறையு மேன்மைச் சதுரனெவன் — வான்மறையா 112

முன்னை மறைக்கு முடிப்பொருளென் றுய்பவர்க்குந்
தன்னை மறைக்குஞ் சதுரனெவன் — உன்னுகின்றோர் 113

சித்தத்திற் சுத்த சிதாகாச மென்றொருசிற்
சத்தத்திற் காட்டுஞ் சதுரனெவன் — முத்தரென 114

1. சங்கமம் என்பது — சங்கம் என விகாரமாயிற்று.

Koviloor Digital Library

5. தலைமைத் தேவன்

யாவரிருந்தா ரவர்காண விற்றிருக்குந்
தேவர் புகழ்தலைமைத் தேவனெவன்! யாவர்களும் 115

இவ்வணத்தன் இவ்விடத்தன் இவ்வியலன் என்றறியாச்
செவ்வணத்த னுந்தலைமைத் தேவனெவன் — மெய்வணத்தோர்

தாம்வாழ அண்ட சராசரங்கள் தாம்வாழ
நாம்வாழத் தன்னுரையா நான்மறைகள் — தாம்வாழச் 117

சாருருவி னல்லருளே சத்தியாய் மெய்யறிவின்
சீருருவே யோருருவாந் தேவனெவன் — ஈருருவும் 118

ஒன்றென் றுணர வுணர்த்தி யடியருளெஞ்
சென்றங் கமர்ந்தருளுந் தேவனெவன் — என்றென்றுந் 119

தற்சகச மென்றே சமயஞ் சமரசமாஞ்
சிற்சபையில் வாழ்கின்ற தேவனெவன் — பிறப்டுமோர் 120

6. பக்தி நெறி

பொய்விட்டு மெய்ந்நெறியைப் போற்றித்தற் போதத்தைக்
கைவிட் டுணர்வே கடைப்பிடித்து — நெய்விட்ட 121

தீப்போற் கனலுஞ் செருக்கறவே செங்கமலப்
பூப்போலுந் தன்முட் புணைபற்றிக் — காப்பாய 122

வெண்ணீ றணிந்து விதிர்விதிர்த்து மெய்பொடிப்பக்
கண்ணீ ரருவி கலந்தாடி — உண்ணிர்மை 123

என்புருகி யுள்ளுருகி யின்பா ருயிருருகி
அன்புருகி அன்புருவ மாகிப்பின் — வன்பகன்று 124

புண்ணியா! திங்கட் புரிசடையாய்! பொன்னிதழிக்
கண்ணியா! எங்கள் கணகண்ணே! — எண்ணியாங்(கு) 125

அன்பர்க் கருளு மரசே! அமுதே! பே
ரின்பக் கடலே! எமதுறவே! — மன்பெற்று 126

மாற்றுரையாப் பொன்னே! மணியே! எங் கண்மணியே!
ஏற்றுவந்த மெய்ப்பொருளே! என்றுநிதம்—போற்றிநின்றால்

உள்ளூறி யுள்ளத் துணர்வூறி யவ்வுணர்வின்
அள்ளூறி யண்ணித் தமுதூறித் — தெள்ளூறும் 128

வான்போற் பரவி மதிபோல் குளிர்ந்துயர்கோற்
றேன்போன் மதுரிக்குந் தேவனெவன்! — வான்போனோர் 129

மான்கொடுக்குந் தெய்வ மடந்தையர்க்கு மங்கலப்பொன்
நாண்கொடுக்க நஞ்சுவந்த நாதனெவன்—நாண்மலர்ப்பெய் 130

தார்த்தியாய்த் தேவ ரரகரவென் றேத்தவட்ட
மூர்த்தியாய் நின்ற முதல்வனெவன் — சீர்த்திபெற 131

Koviloor Digital Library

7. கணேசர்

ஈண்டற் புதவடிவா யெத்தேவ ரேனுநின்று
காண்டற் கரிதாங் கணேசனெவன்! வேண்டுற்றுப் 132

பூமியெங்கும் வாழ்த்திப் புகழ்வார் விரும்புமிட்ட
காமியங்க ளீயுங் கணேசனெவன் — நாமியங்க 133

ஏண வருமிடையூ றெல்லா மகற்றியருள்
காணவெமக் கீயுங் கணேசனெவன் — மாணவரும் 134

8. முருகர்

முந்த மறையின் முழுப்பொருளை நான்முகற்குத்
தந்த அருட்கடலாஞ் சாமியெவன்! — தந்தமக்காம் 135

வாதகற்றி யுண்மை மரபளித்து வஞ்சமலக்
கோதகற்று நெஞ்சக் குகேசனெவன்! — தீதகற்றித் 136

9. பரம சிவம்

தங்குமுல கங்கள் சாயாமற் செஞ்சடைமேற்
கங்கைதனைச் சேர்த்த கடவுளெவன்! — எங்குறினுங் 137

கூம்பா நிலைமைக் குணத்தோர் தொழுகின்ற
பாம்பா பரணப் பரமனெவன் — கூம்பாது 138

போற்றுரைத்து நிற்கும் புனிதன்மேல் வந்தகொடுங்
கூற்றுதைத்த செந்தாட் குழகனெவன் — ஆற்றலுறு 139

வையந் துதிக்கு மகாலிங்க மூர்த்திமுதல்
ஐயைந்து மூர்த்தியெனும் ஐயனெவன் — ஐயந்தீர் 140

வல்லார்சொல் வண்ணமெந்த வண்ணமந்த வண்ணங்கள்
எல்லா முடைய விதத்தனெவன் — எல்லார்க்குந் 141

தாந்தலைவ ராகத்தந் தாள்தொழுமெத் தேவர்க்கும்
ஆந்தலைமை யீந்தபர மார்த்தனெவன் — போந்துயிர்கள் 142

எங்கெங் கிருந்துமனத் தியாது விழைந்தாலும்
அங்கங் கிருந்தளிக்கும் அண்ணலெவன் — புங்கமிகும் 143

அண்ணற் றிருமலர்க்கை யாழிபெறக் கண்ணிடந்த
கண்ணற் கருளியமுக் கண்ணனெவன் — மண்ணிடத்தில் 144

ஓயாது சூன்முதிர்ந்த வோர்பெண் தனக்காகத்
தாயாகி வந்த தயாளனெவன்! — சேயாக 145

வேற்பிடித்த கண்ணப்பன் மேவுமெச்சில் வேண்டுமிதத்
தாற்பொசித்து நேர்ந்த தயாளனெவன் — பாற்குடத்தைத் 146

தான்தந்தை யென்றெறிந்தோன் தாளெறிந்த தண்டிக்குத்
தான்தந்தை யான தயாளனெவன்! — தான்கொல்டு 147

சம்பு நறுங்கனியின் தன்விதையைத் தாள்பணிந்த
சம்பு முனிக்கீயுந் தயாளனெவன் — அம்புவியில் 148

Koviloor Digital Library

ஆண்டவனென் றேத்தப்பொன் னம்பலத்தி லானந்தத்
தாண்டவஞ்செய் கின்ற தயாளனெவன் — காண்டகைய 149

முத்துச் சிவிகையின்மேல் முன்காழி யோங்குமுழு
முத்தைத் தனிவைத்த முத்தனெவன் — பத்திபெறு 150

நாவொன் றரசர்க்கு நாந்தருவே நல்லூரில்
வாவென்று வாய்மலர்ந்த வள்ளலெவன் — பூவொன்று 151

நன்றொண்டர் சுந்தரரை நாந்தடுக்க வந்தமையால்
வன்றொண்டன் நீ! யென்ற வள்ளலெவன்—நன்தொண்டிற்

காணிக்கை யாகக் கருத்தளித்தார் தம்மொழியை
மாணிக்க மென்றுரைத்த வள்ளலெவன் — தாணிற்குந் 153

தன்னன்பர் தாம்வருந்திற் சற்றுந் தரியாது
மன்னன்ப ருளளிக்கும் வள்ளலெவன் — முன்னன்பிற் 154

சால்புடைய நல்லோர்க்குத் தண்ணருள்தந் தாட்கொளவோர்
மால்விடைமேல் வந்தருளும் வள்ளலெவன் — மான்முதலோர்

தாமலையா வண்ணந் தகையருளி யோங்கும்வெள்ளி
மாமலைவாழ் கின்றவிருள் வள்ளலெவன் — ஆமவனே 156

நம்மைப் பணிகொண்டு நாரணனு நாடரிதாஞ்
செம்மைக் கதியருள்நந் தெய்வங்காண் — எம்மையினும் 157

நாடக் கிடைத்தல் நமக்கன்றி நான்முகற்குந்
தேடக் கிடையாநந் தெய்வங்காண் — நீடச்சீர் 158

நல்வந் தனைசெய்யு நம்போல்வார்க் கோர்ஞானச்
செல்வந் தருநமது தெய்வங்காண் — சொல்வந்த 159

எண்மைபெறு நாமுலகில் என்றும் பிறந்திறவாத்
திண்மை யளித்தருள்நந் தெய்வங்காண் — வண்மையுற 160

முப்பாழ் கடந்த முழுப்பாழுக் கப்பாலைச்
செப்பாது செப்புறுநந் தேசிகன்காண் — தப்பாது 161

தீரா விடும்பைத் திரிபென்ப தியாதொன்றுஞ்
சேரா நெறியருள்நந் தேசிகன்காண் — ஆராது 162

நித்தந் தெரியா நிலைமே வியநமது
சித்தந் தெளிவிக்குந் தேசிகன்காண் — பித்தரென 163

யாதொன்றுந் தேரா திருந்தநமக் கிவ்வுலகந்
தீதென் றறிவித்த தேசிகன்காண் — கோதின்றி 164

ஓசைபெறு கடல்சூ ழுற்ற வுலகில் நம்மை
ஆசை யுடனின்ற அப்பன்காண்! — மாசுறவே 165

வன்பாய் வளர்க்கின்ற மற்றையர்போ லல்லாமல்
அன்பாய் நமைவளர்க்கும் அப்பன்காண் — இன்பாக 166

Koviloor Digital Library

இப்பாரிற் சேயா ரிதய மலர்ந்தம்மை
யப்பா வெனுநங்க ளப்பன்காண் — செப்பாமல் 167

எள்ளித் திரிந்தாலும் [1] இந்தாவென் றின்னமுதம்
அள்ளிக் கொடுக்குநம தப்பன்காண்—உள்ளிக்கொண்(டு) 168

இன்றே யருள்வா யெனத்துதிக்கில் ஆங்குநமக்கு
அன்றே யருளுநம தப்பன்காண்! — நன்றேமுன் 169

[2] காதரவு செய்துநலங் கற்பித்துப் பின்பெரிய
ஆதரவு செய்யுநங்க ளப்பன்காண் — கோதுறுமா 170

வஞ்சமலத் தால்வருந்தி வாடுகின்ற நந்தமையே
அஞ்சலஞ்ச லென்றருளு மப்பன்காண் — துஞ்சலெனும் 171

நச்சென்ற வாதனையை நாளுமெண்ணி நாமஞ்சும்
அச்சங் கெடுத்தாண்ட அப்பன்காண் — [3] நிச்சலுமிங் 172

கேயிரவு மெல்லு மெளியேம் பிழைத்தபிழை
ஆயிரமுந் தான்பொறுக்கு மப்பன்காண்!—சேயிரங்கா 173

முன்ன மெடுத்தணைத்து முத்தமிட்டுப் பாலருத்தும்
அன்னையினு மன்புடைய அப்பன்காண்!—மன்னுலகில் 174

வன்மை யறப்பத்து மாதஞ் சுமந்துநமை
நன்மை தரப்பெற்ற நற்றாய்காண் — இம்மைதனில் 175

[4] அன்றொருநாள் நம்பசிகண் டந்தோ! தரியாது
நன்றிரவிற் சோறளித்த நற்றாய்காண் — என்றுமருட் 176

செம்மை யிலாச்சிறிய தேவர்கள்பாற் சேர்க்காது
நம்மை வளர்க்கின்ற நற்றாய்காண் — சும்மையென 177

மூளும் பெருங்குற்ற முன்னிமேன் மேற்செயினும்
நாளும் பொறுத்தருளு நற்றாய்காண் — மூளுகின்ற 178

வன்னெறியிற் சென்றாலும் வாவென் றழைத்துநமை
நன்னெறியிற் சேர்க்கின்ற நற்றாய்காண் — செந்நெறியின் 179

நாந்தேடா முன்ன நமைத்தேடிப் பின்புதனை
நாந்தேடச் செய்கின்ற நற்றாய்காண்! — ஆந்தோறுங் 180

கால மறிந்தே கனிவோடு நல்லருட்பால்
ஞால மிசையளிக்கு நற்றாய்காண் — சாலவுறு 181

வெம்பிணியும் வேதனையும் வேசறிக்கை யுந்துயரும்
நம்பசியுந் தீர்த்தருளு நற்றாய்காண் — அம்புவியில் 182

---

1. இந்தா என்பது — மரூஉச்சொல்; அது — இதனைத் தரப்பெற்றுக்கொள் என்னும் பொருட்டு, அல்லதூஉம் இங்குவா என்னும் எளிமைக் கண்ணிய ஏவலுமாம்.

2. காதரவு செய்தல் என்பது — அச்சுறுத்தல். 3. நிச்சல் என்பது — நாடோறும்.

4. வள்ளலார், பிரதி, வெள்ளிக்கிழமை, அமாவாசைகளில் ஒற்றியூர் போவது வழக்கம். ஓர்நாள் வழக்கப்படி போய் தரிசனம் செய்துகொண்டு அவர் வசந்த மண்டபத்தில் தனியே நிஷ்டை கூடியிருந்து கண்விழிக்கப் பசிநோயால் வருந்தியபோது, பரமசிவம் கோயில் குருக்கள்போல் வந்து பிரசாதம் தந்து பசியாற்றியதாக, அக்காலத்தில் வள்ளலாருடன் கூடியிருந்தவர்களால் சொல்லக் கேட்டது.

Koviloor Digital Library

வெங்கீரி லாட்டிடிலெம் மெய்நோகு மென்றருளாம்
நன்னீரி லாட்டுகின்ற நற்றாய்காண் — எங்கீரின் 183

மேலாய் நமக்கு வியனுலகில் அன்புடைய
நாலா யிரந்தாயின் நற்றாய்காண் — ஏலாது 184

வாடி யழுதாலெம் வருத்தந் தரியாது
நாடி யெடுத்தணைக்கு நற்றாய்காண் — நீடுலகில் 185

தான்பாடக் கேட்டுத் தமியேன் களிக்குமுன்னம்
நான்பாடக் கேட்டுவக்கு நற்றாய்காண் — வான்பாடும் 186

ஞானமணஞ் செய்யருளா நங்கைதனைத் தந்துநமக்
கானமணஞ் செய்விக்கும் அம்மான்காண் — தேனினொடும்

இன்பா லமுதாதி யேக்கமுற வின்னருள்கொண்
டன்பால் விருந்தளிக்கு மம்மான்காண் — வன்பாவ 188

வாழ்கடல்வீழ்ந் துள்ள மழுந்து நமையெடுத்துச்
சூழ்கரையி லேற்றுந் துணைவன்காண்—வீழ்குணத்தால் 189

இன்ப மெனைத்து மிதுவென் றறியாநந்
துன்பந் தொடைக்குந் துணைவன்காண் — வன்பவமாந் 190

தீநெறியிற் சென்று தியங்குகின்ற நந்தமக்குத்
தூநெறியைக் காட்டுந் துணைவன்காண் — மாநிலத்தில் 191

இன்றுதொட்ட தன்றி யியற்கையாய் நந்தமக்குத்
தொன்றுதொட்டுவந்தஅருட்சுற்றங்காண்—தொன்றுதொட்டே

ஆயுமுடற் கன்புடைத்தா மாருயிரிற் முன்சிறந்த
நேயம்வைத்த நம்முடைய நேசன்காண் — பேயரென 193

வாங்காது நாமே மறந்தாலு நம்மைவிட்டு
நீங்காத நம்முடைய நேசன்காண் — தீங்காக 194

ஈட்டுகின்ற வாபத்தி லிந்தா வெனவருளை
நீட்டுகின்ற நம்முடைய நேசன்காண் — கூட்டுலகிற் 195

புல்லென்ற மாயையிடைப் போந்தோறும் நம்மையிங்கு
நில்லென் றிருத்துகின்ற நேசன்காண் — சில்லென்றென் 196

உட்டுவுந் தன்னைமறந் துண்டாலு மற்றதற்கு
நிட்டூரஞ் செய்யாத நேசன்காண் — [1]நட்டூர்ந்து 197

வஞ்சமது நாமெண்ணி வாழ்ந்தாலுந் தான்சிறிதும்
நெஞ்சிலது வையாத நேசன்காண் — எஞ்சலிலாப் 198

பார்நின்ற நாங்கிடையாப் பண்டமெது வேண்டிடினும்
நேர்நின் றளித்துவரு நேசன்காண் — ஆர்வமுடன் 199

ஆர்ந்தநமக் கிவ்விடத்து மவ்விடத்து மெவ்விடத்தும்
நேர்ந்தவுயிர் போற்கிடைத்த நேசன்காண்—சேர்ந்துமிகத் 200

1. நட்டு ஊர்ந்து எனப்பிரித்து—நேசித்துச்சென்று எனப் பொருள்கொள்க.

Koviloor Digital Library

தாபஞ்செய் குற்றந் தரினும் பொறுப்பதன்றிக்
கோபஞ் செயாமது கோமான்காண்! — பாபமற 201

விள்ளுமிறை நாமன்பு மேலலன்றி வேற்றரசர்
கொள்ளுமிறை வாங்காநங் கோமான்காண் — உள்ளமுற202

உண்டளிக்கு மூனுடைபூ னூரா திகள்தானே
கொண்டுநமக் கிங்களிக்குங் கோமான்காண் — மண்டலத்தில்

ஒன்றுலு நீங்கா துகங்கள் பலபலவாய்ச்
சென்றுலுஞ் செல்லாநஞ் செல்வங்காண்! — முன்றுவி 204

நாடிவைக்கு நல்லறிவோர் நாளுந் தவம்புரிந்து
தேடிவைத்த நம்முடைய செல்வங்காண் — மாடிருந்து 205

நாமெத் தனைநாளு நல்கிடினுந் தானுலவாச்
சேமித்த வைப்பின் திரவியங்காண் — பூமிக்கண் 206

ஈங்குறினும் வானுறி யாங்குறினும் விட்டகலா
தோங்கருளால் நம்மை உடையவன்காண்! — ஆங்கவன்றன்

19. வடிவழகு

கங்கைச் சடையழகுங் காதன்மிகு மச்சடைமேல்
திங்கட் கொழுந்தின் திருவழகுங் — திங்கள்தன்மேற் 208

சார்ந்திலங்குங் கொன்றைமலர்த் தாரழகும் அத்தார்மேல்
ஆர்ந்திலங்கும் வண்டி னணியழகும்—தேர்ந்தவர்க்கும் 209

நோக்கரிய நோக்கழகும் நோக்கார் நுதலழகும்
போக்கரிய நன்னுதலிற் பொட்டழகும்—தேக்குதிரி 210

புண்டரத்தி னல்லழகும் பொன்னருள்தான் தன்னெழிலைக்
கண்டவர்பா லூற்றுகின்ற கண்ணழகும்–தொண்டர்கள்தம்

நேசித்த நெஞ்சமலர் நீடு மணமுகந்த
நாசித் திருக்குமிழின் நல்லழகும் — தேசுற்ற 212

முல்லை முகையாம் முறுவலழகும் பவள
வெல்லை வளர்செவ் விதழழகும் — நல்லவரைத் 213

தேவென்ற தீம்பாலிற் றேன்கலந்தாற் போலினிக்க
வாவென் றருளுமலர் வாயழகும் — பூவொன்றும் 214

கோன்பரவுஞ் சங்கக் குழையழகும் அன்பர்மொழித்
தேன்பரவும் வள்ளைச் செவியழகும் — நான்பரவி 215

வேட்டவையை நின்றுங்கு விண்ணப்பஞ் செய்யவது
கேட்டருளும் வார்செவியின் கேழழகும் — நாட்டிலுயர் 216

சைவ முதலாய்த் தழைக்க அருள்சுரக்குந்
தெய்வ முகத்தின் திருவழகும் — தெய்வமுகத் 217

துள்ளங்குளிர வுயிர்குளிர மெய்குளிரக்
கொள்ளுங் கருணைக் குறிப்பழகும் — உள்ளறிவின் 218

Koviloor Digital Library

எள்ளாத மேன்மையுல கெல்லாந் தழைப்பவொளிர்
தெள்ளா ரமுதச் சிரிப்பழகும் — உள்ளோங்குஞ் 219

சீல வருளின் றிறத்துக் கிலச்சினையாம்
நீல மணிமிடற்றி னீடழகும் — மாலகற்றி 220

வாழ்ந்தொளிரும் அன்பர் மனம்போலும் வெண்ணீறு
சூழ்ந்தொளிகொண் டோங்குதிருத் தோளழகும்—தாழ்ந்திலவாய்த்

தானோங்கு மண்டமெலாஞ் சத்தமுறக் கூவுமொரு
மானோங்குஞ் செங்கை மலரழகும் — ஊனோங்கும் 222

ஆணவத்தின் கூற்றை யழிக்க வொளிர்மழுவைக்-
கர்ணவைத்த செங்கமலக் கையழகும் — நாணமுற்றே 223

ஏங்கும் பரிசுடைய வெம்போல்வா ரச்சமெலாம்
வாங்கும் அபய மலரழகும் — தீங்கடையாச் 224

சீர்வரவு மெல்லாச் சிறப்பும் பெறவுமருள்
சார்வரத வொண்கைத் தலத்தழகும் — பேரரவப் 225

பூணிலங்க வெண்பொற் பொடியிலங்க வென்பணித்தார்
மாணிலங்க மேவுதிரு மார்பழகும் — சேணிலத்தர் 226

மேலுடுத்த வாடையெலாம் வெஃக வியாக்கிரமத்
தோலுடுத்த வொண்மருங்கிற் றுன்னழகும் — பாலடுத்த 227

கேழ்க்கோல மேவுதிருக் கீளழகும் அக்கீளின்
கீழ்க்கோ வணத்தின் கிளரழகும் — கீட்கோலம் 228

ஒட்டிநின்ற மெய்யன்ப ருள்ள மெலாஞ்சேர்த்துக்
கட்டிநின்ற வீரக் கழலழகும் — எட்டிரண்டுஞ் 229

சித்திக்கும் யோகியர்தஞ் சிந்தைதனிற் றேன்போன்று
தித்திக்குஞ் சேவடியின் சீரழகும் — சத்தித்து 230

மல்வைத்த மாமறையு மாலயனுங் காண்பரிய
செல்வத் திருவடியின் சீரழகும் — சொல்வைத்த 231

செம்மை மணிமலையைச் சேர்ந்த மரகதம்போல்
அம்மையொரு பால்வாழ்ந் தருளழகும்—அம்மமிகச் 232

சீர்த்திநிகழ் செம்பவளச் செம்மே னியினழகும்
பார்த்திருந்தால் நம்முட் பசிபோங்காண்! — தீர்த்தருளங்

கொண்டிருந்தான் பொன்மேவிக் கோலமதை நாந்தினமுங்
கண்டிருந்தால் அல்லலெலாங் கட்டறுங்காண்—தொண்டடைந்து

பாட்டா லவன்புகழைப் பாடுகின்றோர் பக்கநின்று
கேட்டால் வினைகள்விடை கேட்குங்காண்! — நீட்டாமல்

ஒன்னார் புரம்பொடித்த உத்தமனே! என்றொருகால்
சொன்னா லுலகத் துயரறுங்காண் — எந்நாளும் 236

பன்னுமுள்ளத் துள்ளாம் பரசிவமே! என்றொருகால்
உன்னுமுன்னந் தீமையெலா மோடிடுங்காண்—அன்னவன்றன்

Koviloor Digital Library

11. அறிவுறுத்தல் சிவசரிதம்

ஆட்டி யல்காற் பூமாட் டடையென்று லந்தோ! முன்
னீட்டியகாற் பின்வாங்கி நிற்கின்றாய் — ஊட்டுமவன் 238

[1]மாற்கடவு ளாமோர் மகவலறக் கண்டுதிருப்
பாற்கடலை யீந்தவருட் பான்மைதனை — நாற்கடலின் 239

மத்தியினீ கேட்டும் வணங்குகிலாய் அன்படையப்
புத்தியுளோர்க் கீதொன்றும் போதாதோ — முத்திநெறி

மாணு வரக்கன் மலைக்கீ ழிருந்தேத்த
[2]வாணுள் வழங்கியதோர் வண்மைதனை — நாணூடும் 241

நண்ணி யுரைத்து நயந்திலைநீ யன்புகொளப்
புண்ணியருக் கீதொன்றும் போதாதோ — புண்ணியராஞ் 242

சுந்தரர்க்குக் கச்சூரில் தோழமையைத் தான்தெரிக்க
வந்திரப்புச் சோறளித்த வண்மைதனை — முந்தகத்திற் 243

பேதமறக் கேட்டும் பிறழ்ந்தனையே அன்படையப்
போதமுளோர்க் கீதொன்றும் போதாதோ—போதவுநெய் 244

அங்கோ ரெலிதா னருந்தவஃகற் றாண்டவைதைச்
செங்கோல ளுக்கியவச் சீர்த்திதனை — இங்கோதச் 245

சந்ததநீ கேட்டுமவன் றனினையா யன்படையப்
புந்தியுளோர்க் கீதொன்றும் போதாதோ — முந்தவரு 246

[3] நற்றுணையென் றேத்துமந்த நாவரசர்க் கன்றுகடற்
[4] கற்றுணையோர் தெப்பமெனக் காட்டியதை — இற்றெனநீ

மாவுலகிற் கேட்டும் வணங்குகிலா யன்படையப்
பூவுலகர்க் கீதொன்றும் போதாதோ — தாவுநுதற் 248

கண்சுமந்தான் அன்பன் கலங்காவகை வைகை
மண்சுமந்தான் என்றுரைக்கும் வாய்மைதனைப்-பண்புடையோர்

மாணவுரைப் பக்கேட்டும் வாய்ந்தேத்தாய் மெய்யன்பு
பூணவென்று வீதொன்றும் போதாதோ — நீணரகத் 250

தீங்குறுமா பாதகத்தைத் தீர்த்தோர் மறையவனைப்
பாங்கடையச் செய்தவருட் பண்பதனை — யீங்குலகர் 251

தூங்கமுற வுரைத்துஞ் சூழ்கின் றிலையன்பு
பொங்கவென்று வீதொன்றும் போதாதோ — தங்கியவிப் 252

பாரறியாத் தாயாகிப் பன்றிக் குருளைகட்கு
ஊரறிய நன்முலைப்பா லூட்டியதைச் — சீரறிவோர் 253

---

1. உபமந்யு. 2. வாழ்நாள் — வாணுளென மருவியது.
3. தேவாரம், 4-வது திருமுறை, நமச்சிவாயப்பதிகம். (1)
4. கற்றுணை என்பது — கற்றூணையெனக் குறுகி நின்றது.

Koviloor Digital Library

சொல் லின்றார் கேட்டுந் துதிக்கின் றிலையன்பு
புல்லவென்று விதொன்றும் போதாதோ — நல்லதிருப் 254

பாத மலர்வருந்தப் **பாணன்** றனக்காளாய்க்
கோதில் விறகேற்று விலைகூறியதை — நீதியுளோர் 255

சாற்றிநின்றார் கேட்டுமவன் றனிணையாய் மெய்யன்பிற்
போற்றவென்று விதொன்றும் போதாதோ — போற்றுகின்ற

ஆடுங் கரியும் அணிலுங் குரங்கும் அன்பு
தேடுஞ் **சிலம்பியொடு சிற்றெறும்பும்** — நீடுகின்ற 257

பாம்புஞ் சிவார்ச்சனைதான் பண்ணியதென் றற்பூசை
ஓம்புவதற் கியார்தா னுவவாதார் — சோம்புறுநீ 258

வன்பென்ப தெல்லா மறுத்தவன்றாட் பூசிக்கும்
அன்பென்ப தியாதோ அறியாயே — அன்புடனே 259

செஞ்சடைகொள் நம்பெருமான் சீர்கேட் டிரையருந்தா
தஞ்சடக்கி யோக மமர்ந்துலகின் — வஞ்சமற 260

நாரையே முத்தியின்ப நாடியதென் றன்மற்றை
யாரையே நாடாதா ரென்றுரைப்பேன் — **ஈரமிலாய்** 261

நீயோ சிறிது நினைந்திலையவ் வின்பமென்னை
யேயோநின் றன்மை யிருந்தவிதம் — ஓயாத 262

அன்புடையார் யாரினும்பே ரன்புடையா னம்பெருமான்
நின்புடையா னித்த நிகழ்த்துகின்றேன்—உன்புடையோர்263

அன்பவன்மேற் கொண்ட தறியேன் புறச்சமயத்
தின்புடையா ரேனு மிணங்குவரே — அன்புடனே 264

தாவென்றால் நல்லருளிந் தாவென்பா னம்பெருமான்
[1] ஆவுன்பா லோதி யலுக்கின்றேன் — நீவன்பால் 265

நின்று யலதவனை நேர்ந்துநினை யாய்பித்த
ரென்றாலு மென்சொற் கிணங்குவரே — குன்றாது 266

பித்தா வெனினும் பிறப்பறுப்பா னம்முடையான்
[2] அத்தோ வுனக்கி தறைகின்றேன் — சற்றேனுங் 267

கேள்வியிலார் போலதனைக் கேளாய் கெடுகின்றாய்
வேள்வியிலார் கூட்டம் விழைகின்றாய் — வேள்வியென்ற268

வேலைவருங் காலொளித்து மேவுகின்றாய் நின்தலைக்கண்(கு)
ஓலைவருங் காலிங் கொளிப்பாயே! — மாலையுறும் 269

12. உலக ஆசை

இப்பார் வெறும்பூ விருப்பவே லென்றனக்குச்
செப்பா முனம்விரைந்து செல்கின்றாய் — அப்பாழிற் 270

1. ஆ—வியப்பிடைச் சொல். 2. அந்நோ என்பது—அந்நோவென வலிக்கும்வழி வலித்தது

Koviloor Digital Library

செல்லாதே சைவநெறி செல்லென்று லென்றுடனுஞ்
சொல்லாது போய்மயக்கந் தோய்கின்றாய் — பொல்லாத 271

[1] அஞ்சருந்தென் றுலமுறி ஞர்கின்றாய் விட்டிடென்றால்
நஞ்சருந்தென் றற்போ னலிகின்றாய் — வஞ்சகத்தில் 272

ஓடுகின்றாய் மீளாம லுன்னிச்சை யின்வழியே
ஆடுகின்றாய் மற்றங் கயர்கின்றாய் — நீடுலகைச் 273

சூழ்கின்றாய் வேறொன்றிற் சுற்றுகின்றாய் மற்றொன்றில்
வீழ்கின்றாய் மேலொன்றின் மீள்கின்றாய் — தாழ்வொன்றே

ஈகின்றாய் வன்னெறியி லென்னை வலதழிக்கப்
போகின்றாய் மீட்டும் புகுகின்றாய் — யோகின்றி 275

ஒன்றைமறக் கின்றாய்மற் றொன்றைநினைக் கின்றாயென்
நன்றைமறைக் கின்றாய் நலிகின்றாய் — வென்றிபெறுஞ் 276

சேவிற் பரமன்றாட் சேரென்றால் மற்றொருசார்
மேவிப் பலவாய் விரிகின்றாய் — பாவித்துக் 277

கூன்று முனக்கனந்தங் கோடிதெண்ட னிட்டாலும்
ஒன்று மிரங்கா யுழல்கின்றாய்! — நன்றுருகாக் 278

கல்லென்பேன் உன்னைக் கரணங் கலந்தறியாக்
கல்லென்று லென்சொல் கடவாதே — புல்லனினை 279

வல் இரும்பென் பேனந்த வல்லிரும்பேற் கூடத்திற்
கொல்லன் குறிப்பைவிட்டுக் கோணுதே—அல்லலெலாங் 280

கூட்டுகின்ற வன்மைக் குரங்கென்பேன் அக்குரங்கேல்
ஆட்டுகின்றோன் சொல்வழிவிட் டாடாதே — நீட்டுலகர் 281

ஏசுகின்ற பேயென்பேன் எப்பேயு மஞ்செழுத்தைப்
பேசுகின்றோர் தம்மைப் பிடியாதே — கூசுகிற்பக் 282

கண்டோரைக் கவ்வுங் கடுஞ்சுணங்க னென்பனது
கொண்டோரைக் கண்டாற் குலையாதே—அண்டார்க்கும் 283

பூவி லடங்காப் புலியென்பேன் எப்புலியும்
மேவில் வயப்பட்டா லெதிராதே — நோவியற்றி 284

வீறுகின்ற மும்மதமால் வெற்பென்பேன் ஆங்கதுவும்
ஏறுகின்றோன் சொல்வழிவிட் [2]டேறாதே — சீறுகின்ற 285

[3] வென்னடைசேர் மற்றை விலங்கென்பேன் எவ்விலங்கும்
மன்னவன்சேர் நாட்டில் வழங்காதே — நின்னையினி 286

1. ஐந்து என்பது—அஞ்சு என மருவிற்று; அஃதிண்டாகு பெயராய்ச் சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றமென்னும் ஐந்தாசைகளைக் குறித்து நின்றது.

2. ஏறுதல் என்பது — ஈண்டொழுக்கத்தின்மேல் நின்றது.

3. வென்னடை — வெந்நடை யெனப் பிரித்துக்கொள்க; அற்றேல் — கொடு நடையெனப்பொருள் கொள்ளின் — வெந்நடையெனப் பொதுநகர மாக்கிக்கொள்க.

Koviloor Digital Library

என்னென்பேன்! என்மொழியை ஏற்றனையேல்மாற்றுயர்ந்த
பொன்னென்பேன்! என்வழியிற் போந்திலையே—கொன்னுறநீ

போம்வழியும் பொய்நீ புரிவதுவும் பொய்யதனால்
ஆம்விளைவும் பொய்நின் னறிவும்பொய் — தோம்விளைக்கும்

நின்னுடலும் பொய்யிங்கு நின்தவமும் பொய்நிலையா
நின்னிலையும் பொய்யன்றி நீயும்பொய் — என்னிலிவண் 289

ஏது முணர்ந்திலையே யிம்மாய வாழ்க்கையெனும்
வாதிலிழுத் தென்னை மயக்கினையே — தீதுறுநீ 290

வன்னேர் விடங்காண்! நின்வன்பெயரின் முன்பொருகீற்று[1]
என்னே யறியாம லிட்டழைத்தேன் — கொன்னேநீ 291

13. பெண்ணாசை

நோவ தொழியா [2]நொறிற் காம வெப்பினிடை
ஆவ தறியா தழுந்தினையே — மேவுமதில் 292

உள்ளெரிய மேலா முணர்வுங் கருகவுடல்
நள்ளெரிய நட்பி னலம்வெதும்ப — விள்வதின்றி 293

வாடிப் பிலஞ்சென்று வான்சென் றொளித்தாலுந்
தேடிச் சுடுங்கொடிய தீகண்டாய் — ஓடியங்கு 294

பேர்ந்தா லலது பெருங்காமத் தீநின்னைச்
சேர்ந்தாரை யுஞ்சுடுஞ்செந் தீகண்டாய் — சார்ந்தாங்கு 295

சந்தீ யெனவருவார் தம்மைச் சுடுங்காமஞ்
செந்தீயை யுஞ்சுடுமோர் தீகண்டாய் — வந்திங்கு 296

மன்னிற் றனைக்காணா வண்ண நினைத்தாலு
நண்ணித் தலைக்கேறு நஞ்சங்காண்! — எண்ணற்ற 297

போருறுமுட் காமப் புதுமயக்க நின்னுடைய
பேரறிவைக் கொள்ளைகொளும் பித்தங்காண்!-சோரறிவிற்

கள்ளடைக்கும் காமக் கடுமயக்க மெய்ந்நெறிக்கோர்
முள்ளடைக்கும் பொல்லா முரண்கண்டாய்!—அள்ளலுற

ஏதமெலாந் தன்னு ளிடுங்காமம் பாதகத்தின்
பேதமெலா மொன்றிப் பிறப்பிடங்காண் — ஆதலினால் 300

வெம்மான் மடந்தையரை மேவவொணாது!—ஆங்கவர்கள்
தம்மாசை யின்னுந் தவிர்ந்திலையே — இம்மாய 301

மன்ற [3]வணங்கினர் [4]செவ் வாய்மடவார் [5]பேதையர்கள்
என்றகொடுஞ் சொற்பொருளை எண்ணிலையே—தொன்றுலகில்

---

1. நெஞ்சு எனும் மொழிக்கு முன்னுள்ள கீற்று (ெ) நீங்கின், நஞ்சு (விஷம்) என்றாகும்.
2. நொறில் — விரைவு. 3. அணங்கினர் — நோயுடையார்.
4. செவ்வாய் மடவார் — சிவந்த வாயினையுடைய பெண்கள். 5. பேதையர்—அறிவில்லார்

Koviloor Digital Library

பெண்ணென் றுரைப்பிற் பிறப்பெழு மாந்துயரம்
எண்ணென்ற நல்லோர்சொல் எண்ணிலையே — பெண்ணிங்கு

[1] மாமாத் திரையின் வருத்தனமென் றெண்ணினையங்
நாமார்த்த மாசையென நாடிலையே — யாமார்த்தம் 304

மந்திரத்தும் பூசை மரபினுமற் றெவ்விதமாந்
தந்திரத்துஞ் சாயாச் சழக்கன்றோ — மந்திரத்திற் 305

பேய்பிடித்தாற் றீர்ந்திடுமிப் பெண்பேய் விடாதேசெந்
நாய்பிடித்தாற் போலுமென்று நாடிலையே — ஆய்விலுன்றன்

ஏழமையென் னென்பே ளிவர்மயக்கம் வன்னரகின்
தோழமையென் றந்தோ துணிந்திலையே — ஊழமைந்த 307

காரிருளிற் செல்லக் கலங்குகின்றாய் மாதர்குழற்
பேரிருளிற் செல்வதனைப் பேர்த்திலையே—பாரிடையோர் 308

எண்வா ளெனிலஞ்சி யேகுகின்று யேந்திழையார்
கண்வா ளறுப்பக் கனிந்தனையே — மண்வாழும் 309

ஓரானை யைக்கண்டா லோடுகின்றாய் மாதர்முலை
யீரானை யைக்கண் டிசைந்தனையே — சீரான 310

வெற்பென்று லேற விரைந்தறியாய் மாதர்முலை
வெற்பென்று லேற விரைந்தனையே — பொற்பொன்றுஞ் 311

சிங்கமென்றால் வாடித் தியங்குகின்றாய் மாதரிடைச்
சிங்கமெனிற் காணத் திரும்பினையே — யிங்குசிறு 312

பாம்பென்று லோடிப் பதுங்குகின்றாய் மாதரல்குற்
பாம்பென்றாற் சற்றும் பயந்திலையே — யாம்பண்டைக் 313

கீழ்க்கடலி லாடென்றாற் கேட்கிலைநீ மாதரல்குற்
பாழ்க்கடலிற் கேளாது பாய்ந்தனையே — கீழ்க்கதுவுங் 314

கல்லென்றாற் பின்னிடுவாய் காரிகையார் காற்சிலம்பு
கல்லென்றால் மேலெழும்பக் கற்றனையே — யல்லளகம் 315

மையோ கருமென் மணலோவென் பாய்மாறி
ஐயோ நரைப்ப தறிந்திலையோ — பொய்யோதி 316

ஒண்பிறையே யொண்ணுதலென் றுன்னுகின்றா யுள்ளெலும்பாம்
வெண்பிறையன் றேயதனை விண்டிலையே — கண்புருவம்317

வில்லென்றாய் வெண்மயிராய் மேவி யுதிர்ந்திடுங்காற்
சொல்லென்றாற் சொல்லத் துணியாயே — வல்லம்பிற் 318

கண் குவளையென்றாய்க் கண்ணீ ருலர்ந்துமிக
உட்குழியும் போதி லுரைப்பாயே — கட்குலவு 319

1. பெண்ணிங்கு மாமாத்திரையின் வருத்தனம் என்றெண்ணினை என்பதற்கு—பேண் என்று பொருள் கொண்டனை என்பது பொருள்.

Koviloor Digital Library

மெய்க்குமிழே நாசியென வெஃகினையால் வெண்மலத்தால்
உய்க்குமிழுஞ் சிந்த லுளதேயோ — வெய்த்தலிலா 320

வள்ளையென்றாய் வார்காது வள்ளைதனக் குட்புழையோ
டுள்ளுநரம் பின்புனைவு முண்டேயோ — வெள்ளைநகை 321

முல்லையென்றாய் முல்லை முறித்தொருகோற் கொண்டுநிதம்
ஒல்லை யழுக்கெடுப்ப துண்டேயோ — நல்லதொரு 322

கோவ்வையென இதழைக் கொள்கின்றாய் மேற்குழம்புஞ்
செவ்வை யிரத்தமெனத் தேர்ந்திலையே — செவ்வியகண் 323

ளுடி யெனக் [1]கவுட்கே யாசைவைத்தாய் மேற்செழுந்தோல்
வாடியக்கா லென்னுரைக்க மாட்டுவையே—கூடியதோர் 324

அந்த மதிமுகமென் றுடுகின்றாய் ஏழ்துளைகள்
எந்தமதிக் குண்டதனை யெண்ணிலையே — [2]நந்தெனவே 325

கண்டமட்டுங் கூறினையக் கண்டமட்டு மன்றியுடல்
கொண்டமட்டு மற்றதன்மெய்க் கூறன்றே—விண்டவறறைத்

தோளென் றுரைத்துத் துடிக்கின்றா யவ்வேய்க்கு
மூவொன்று வெள்ளெலும்பின் மூட்டுண்டே—நாளொன்றுஞ்

செங்காந்த ளங்கையெனச் செப்புகின்றா யம்மலர்க்குப்
பொங்காப் பலவிரலின் பூட்டுண்டே — மங்காத 328

செவ்விளநீர் கொங்கையெனச் செப்பினைவல் லூன்றடிப்பிங்
கெவ்விளநீர்க் குண்டதனை யெண்ணிலையே—செவ்வைபெறுஞ்

செப்பென் றனைமுலையைச் சீசீ [3]சிலந்தியது
துப்பென் றவர்க்கியாது சொல்லுதியே — [4]வப்பிறுகச் 330

சூழ்ந்தமுலை மொட்டென்றே துள்ளுகின்றாய் கீழ்த்துவண்டு
விழ்ந்தமுலைக் கென்ன விளம்புதியே — தாழ்ந்தவவை 331

மண்கட்டும் பந்தெனவே வாழ்ந்தாய் முதிர்ந்துடையாப்
புண்கட்டி யென்பவர்வாய்ப் [5]பொத்துவையே — திண்கட்டும்

அந்நீர்க் குரும்பை யவையென்றாய் மேலெழும்புஞ்
செந்நீர்ப் புடைப்பென்பார் தேர்ந்திலையே — யந்நீரார் 333

கண்ணீர் தரும்பருவாய்க் கட்டுரைப்பார் சான்றாக
வெண்ணீர் வரல்கண்டும் வெட்கிலையே — தண்ணீர்மைச் 334

சாடியென்பாய் நீயயலோர் தாதுக் கடத்திடுமேன்
மூடியென்பார் மற்றவர்வாய் மூடுதியோ — [6]மேடதனை 335

ஆலிலையே யென்பா யடர்குடரோ [7]டீருளொடுந்
தோலிலையே யாலிலைக்கென் சொல்லுதியே — நூலிடைதான்

1. கவுள் — கன்னம். 2. நந்து — சங்கு. 3. சிலந்தி — புண்கட்டி.
4. வம்பு — வப்பென விகாரமாயிற்று. 5. பொத்துதல் என்பது — மூடுதல்.
6. மேடு — வயிறு. 7. ஈருள் என்பது — ஈரல் என மருவி வழங்கியது.

Koviloor Digital Library

உண்டோ விலையோவென் றுட்புகழ்வாய் கைதொட்டுக்
கண்டோர்[1]பூட் டுண்டென்பார் கண்டிலையே—விண்டோங்கும்

ஆழ்ங்கடலென் பாய்மடவா ரல்குலினைச் சிற்சிலர்கள்
பாழ்ங்கிணறென் பாரதனைப் பார்த்திலையே—தாழ்ங்கொடிஞ்சித்

தேராழி யென்பாயச் சீக்குழியை யன்றுசிறு
நீராழி யென்பவர்க்கென் [2]னேருதியே — ஆராப்புன் 339

நீர்வழியை யாசை நிலையென்றாய் வன்மலந்தான்
சோர்வழியை யென்னென்று சொல்லுதியே—சார்புடைதான்

ஆருச் சிலைநீர்கா ளுரு யொழுக்கிடவும்
வீருப்புன் னென்று விடுத்திலையே — யூருக்கி 341

மூலை யெறும்புடன்ஈ மொய்ப்பதஞ்சி மற்றதன்மேற்
சீலையிடக் கண்டுந் தெரிந்திலையே — மேலையுறு 342

மேநரக மென்றால் விதிர்ப்புறுநீ மாதரல்குல்
கோநரக மென்றுற் குலைந்திலையே — யூனமிதைக் 343

கண்டால் நமதாசைக் கைவிடுவா ரென்றதனைத்
தண்டா தொளித்திடவுஞ் சார்ந்தனையே — அண்டாது 344

போத விடாயாகிப் புலம்புகின்றாய் மற்றதன்பான்
மாதவிடா யுண்டான் மதித்திலையே — மாதரவர் 345

தங்குறங்கை மெல்லரம்பைத் தண்டென்றாய் தண்டுன்றி
வெங்குறங்கின் மேவுங்கால் விள்ளுதியே — நன்கிலவாய் 346

ஏய்ந்தமுழந் தாளைவரா லென்றாய் புலாற்சிறிதே
வாய்ந்து வராற்றேற்கு மதித்திலையே — சேந்தவடி 347

தண்டா மரையென்றாய் தன்மை விளர்ப்படைந்தால்
வெண்டா மரையென்று மேவுதியோ — வண்டாரா 348

மேனாட்டுஞ் சண்பகமே மேனியென்றாய் தீயிடுங்கால்
தீநாற்றஞ் சண்பகத்திற் றேர்ந்தனையோ — வானாட்டு 349

மின்றோர் வடிவென்றாய் மேனி யுரைத்தவுளி
தோன்றே [3]ஒருபுடையா யொத்ததுகாண் — ஒன்றாச்சொல்

வேள்வா கனமென்றாய் வெய்யநமன் விட்டிடுந்தூ
தாள்வா கனமென்று லாகாதோ — வேளாளேன் 351

[4]காகளமா யின்குரலைக் கட்டுரைத்தாய் காலனென்போன்
காகளமென் பார்க்கென் கழறுதியே — நாகளவுஞ் 352

சாயைமயி லென்றே தருக்குகின்றாய் சார் [5]பிரம
சாயையஃ தென்பார்க்கென் சாற்றுதியே — சேயமலர் 353

1. பூட்டு—ஈண்டுடற் பொருத்து. 2. நேர்தல் என்பது—ஈண்டு விடைகொடுத்த லென்னும் பொருட்டு. 3. ஈண்டொரு புடை யொத்தமை தோற்றியாங்கழியும் நிலையின்மையாய் என்று கொள்க. 4. வேளாறேன்காகளம் — குயில். 5. பிரமசாயை — பிரமஹத்தி.

Koviloor Digital Library

அன்னநடை யென்பா யஃதன் றருந்துகின்ற
அன்னநடை யென்பார்க்கென் ஆற்றுதியே — அன்னவரை

ஓரோ வியமென்பா யோவியமே லாங்கெழுபத்
தீரா யிரநாடி யாண்டுடைத்தே — பாரார்ந்த 355

முன்னுமலர்க்கொம்பென்பாய்மூன்றுடரைக்கோடியெனத்
துன்னு முரோமத் துவாரமுண்டே — இன்னமுதாற் 356

செய்தவடி வென்பாயச் செய்கைமெய்யே லீயவர்கள்
வைதிடினு மற்றதனை வையாயே — பொய்தவிராய் 357

ஒள்ளிழையார் தம்முருவோ ருண்கரும்பென் றுய்சிறிது
கிள்ளியெடுத் தாலிரத்தங் கீழ்வருமே — கொள்ளுமவர் 358

ஈடில்பெயர் நல்லா ரெனநயந்தாய் நாய்ப்பெயர்தான்
கேடில்பெருஞ் சூரனென்பர் கேட்டிலையோ—நாடிலவர் 359

மெல்லியலா ரென்பாய் மிகுகருப்ப வேதனையை
வல்லியலார் யார்பொறுக்க வல்லார்காண்!—வில்லியல்பூண்

வேய்ந்தா லவர்மேல் விழுகின்றாய் வெந்தீயிற்
பாய்ந்தாலு மங்கோர் பலனுண்டே! — வேய்ந்தாங்கு 361

சென்றா லவர்பின்வர்ச் செல்கின்றாய் வெம்புலிப்பின்
சென்றாலு மங்கோர் திறனுண்டே — சென்றாங்கு 362

நின்றா லவர்பின்னர் நிற்கின்றாய் கண்மூடி
நின்றாலு மங்கோர் நிலையுண்டே — ஒன்றாது 363

கண்டா லவருடம்பைக் [1]கட்டுகின்றாய் கல்லணைத்துக்
கொண்டாலு மங்கோர் குணமுண்டே — பெண்டானுர் 364

வைதாலுந் தொண்டு வலித்தாய் பிணத்தொண்டு
செய்தாலு மங்கோர் சிறப்புளதே — கைதாவி 365

மெய்த்தாவுஞ் செந்தோல் மினுக்கால் மயங்கினைநீ
செத்தாலு மங்கோர் சிறப்புளதே — வைத்தாடும் 366

மஞ்சண் மினுக்கான் மயங்கினைநீ மற்றொழிந்து
துஞ்சுகினு மங்கோர் சுகமுளதே — வஞ்சியரைப் 367

பார்த்தாடி யோடிப் படர்கின்றாய் வெந்நரகைப்
பார்த்தாலு மங்கோர் பலனுண்டே — சேர்த்தார்கைத் 368

தொட்டாற் களித்துச் சுகிக்கின்றாய் வன்பூதந்
தொட்டாலு மங்கோர் துணையுண்டே — நட்டாலுந் 369

தெவ்வின் மடவாரைத் தினைக்கின்றாய் தீவிடத்தை
வவ்வுகினும் அங்கோர் மதியுண்டே — செவ்விதழ்நீர் 370

உண்டான் மகிழ்வாய்நீ யொண்சிறுவர் தஞ்சிறுநீர்
உண்டாலு மங்கோ ருரனுண்டே — கண்டாகக் 371

---

1. கட்டுதல் என்பது — ஈண்டு தழுவுதல் என்னும் பொருட்டு.

Koviloor Digital Library

கவ்வுகின்ற யவ்விதழைக் கார்[1]மதுகம் வேம்பிவற்றைக்
கவ்வுகினு மங்கோர் கதியுண்டே — அவ்வினையர் 372

மென்றீயு மிச்சில் விழைகின்றாய் நீவெறும்வாய்
மென்றாலு மங்கோர் வினைவுண்டே — முன்றானைப் 373

பட்டான் மகிழ்வு பதிந்தாய் பதைக்கவம்பு
பட்டாலு மங்கோர் பலனுண்டே — கிட்டாமெய்த் 374

தீண்டிடினுள் ளோங்கிச் சிரிக்கின்றாய் செந்தேள்முன்
தீண்டிடினு மங்கோர் திறனுண்டே — வேண்டியவர் 375

வாய்க்கிடயா தானுமொன்று வாங்குகின்றாய் மற்றதையோர்
நாய்க்கிடினு மங்கோர் நலனுண்டே — தாக்கவர்க்காய்த் 376

தேட்டாண்மை செய்வாயத் தேட்டாண்மை யைத்தெருவில்
போட்டாலு மங்கோர் புகழுண்டே — வாட்டாரைக் 377

கொண்டா ருடனுணவு கொள்கின்றாய் குக்கனுடன்
உண்டாலு மங்கோ ருறவுண்டே — மிண்டாகும் 378

இங்கிவர்வாய்ப் பாகிலையை யேற்கின்றாய் புன்மலத்தை
நுங்கினுமங் கோர்நன் [2]நொறிலுண்டே—மங்கையர்தம் 379

ஏத்தா மணைகாத் திருக்கின்றா யீமமது
காத்தாலு மங்கோர் கனமுண்டே — பூத்தாழ்வோர் 380

காட்டாக் குரல்கேட்பாய் கர்த்தபத்தின் பாழ்ங்குரலைக்
கேட்டாலு மங்கோர் கிளருண்டே — கோட்டாவி 381

ஆழ்ந்தா ருடன்வாழ வாதரித்தா யாழ்ங்கடலில்
வீழ்ந்தாலு மங்கோர் விரகுண்டே — வீழ்ந்தாருள் 382

வீட்டான் முலையுமெதிர் வீட்டான் முகமுமுறக்
காட்டாநின் றார்கஃடுங் காய்ந்திலையே — கூட்டாட்குச் 383

செய்கை யிடும்படிதன் சீமான் றனதுபணப்
பைகை யிடல்கண்டும் பயந்திலையே — சைகையது 384

கையா லொருசிலர்க்குங் கண்ணா லொருசிலர்க்குஞ்
செய்யா மயக்குகின்றார் தேர்ந்திலையே — எய்யாமல் 385

ஈறிகந்த இவ்வகையாய் இம்மடவார் செய்கையெலாங்
கூறுவனேல் அம்ம! குடர்குழம்பும் — கூறுமிவர் 386

வாயொருபாற் பேச மனமொருபாற் செல்லவுட
லாயொருபாற் செய்ய அழிவார்காண் — ஆயவிவர் 387

நன்றறியார் தீதே நயப்பார் சிவதலத்திற்
சென்றறியார் பேய்க்கே சிறப்பெடுப்பார் — இன்றிவரை 388

வஞ்சமென்கோ! வெவ்வினையாம் வல்லியமென்கோ! பவத்தின்
புஞ்சமென்கோ! மாநரக பூமியென்கோ! — வஞ்சுறுமிவர் 389

1, மதுகம் என்பது — எட்டிமரம். 2, நொறில் என்பது — அடக்கம்.

Koviloor Digital Library

வாளென்கோ! வாய்க்கடங்கா மாயமென்கோ! மண்முடிவு
நாளென்கோ! வெய்ய நமனென்கோ!—கோளென்கோ! 390

சாலமென்கோ! வானிந்திர சாலமென்கோ! வீருல
காலமென்கோ! நின்பொல்லாக் காலமென்கோ!—ஞாலமதிற்

**பெண்ணென்றால் யோகப் பெரியோர் நடுங்குவரேல்
மண்ணின்றார் யார்நடுங்க மாட்டார்காண்!**—பெண்ணென்றாற்

பேயு மிரங்குமென்பாய் பேயொன்றோ! தாம்பயந்த
சேயு மிரங்குமவர் **தீமைக்கே!** — ஆயுஞ்செம் 393

பொன்னாற் றுகிலாற் புனையா விடிலவர்மெய்
என்னாகு மற்றிதைநீ யெண்ணிலையே — இன்னாமைக் 394

கொத்தென்ற வம்மடவார் **கூட்ட மெழுமைக்கும்
வித்தென் றறிந்துமதை விட்டிலையே**—தொத்தென்று395

பாச வினைக்குட் படுத்துறுமப் பாவையர்மேல்
ஆசையுனக் கெவ்வா றடைந்ததுவே — நேசமிலாய் 396

14. பொன்னாசை

நின்னாசை யென்னென்பேன் நெய்வீழ் நெருப்பெனவே
பொன்னாசை மேன்மேலும் பொங்கினையே!—பொன்னாசை

வைத்திழந்து வீணே வயிறெரிந்து மண்ணுலகில்
எத்தனைபேர் நின்கண் ணெதிர்நின்றார் — தத்துகின்ற 398

பொன்னுடையார் துன்பப் புணரியொன்றே யல்லதுமற்
றென்னுடையார் கண்டிங் கிருந்தனையே — பொன்னிருந்தால்

ஆற்றன்மிகு தாயுமறி யாவகையால் வைத்திடவோர்
ஏற்றவிடம் வேண்டுமதற் கென்செய்வாய் — ஏற்றவிடம்400

வாய்த்தாலு மங்கதனை வைத்தவிடங் காட்டாமல்
ஏய்த்தாற் சிவசிவமற் றென்செய்வாய் — ஏய்க்காது 401

நின்றாலும் பின்னதுதா னீடுங் கரியான
தென்றா லரகரமற் றென்செய்வாய் — நன்றாக 402

ஒன்றொருசார் நில்லென்று லோடுகின்ற நீயதனை
என்றும் புரப்பதனுக் கென்செய்வாய் — வென்றியொடு 403

பேர்த்துப் புரட்டிப் பெருஞ்சினத்தால் மாற்றலர்கள்
ஈர்த்துப் பறிக்கிலதற் கென்செய்வாய்—பேர்த்தெடுக்கக் 404

கைபுகுத்துங் காலுட் கருங்குளவி செங்குளவி
எய்புகுத்தக் கொட்டிடின்மற் றென்செய்வாய்—பொய்புகுத்தும்

பொன்காவற் பூதமது போயெடுக்கும் போதுமறித்
தென்காவ லென்றான்மற் றென்செய்வாய்—பொன்காவல்406

Koviloor Digital Library

வீறுங்கா லாணவமாம் வெங்கூளி நின்றலைமேல்
ஏறுங்கான் மற்றதனுக் கென்செய்வாய் — மாறுஞ்சீர் 407

உன்னேயம் வேண்டி உலோபமெனுங் குறும்பன்
இன்னே வருவனதற் கென்செய்வாய் — முன்னேதும் 408

இல்லா நமக்குண்டோ வில்லையோ வென்னுநலம்
எல்லா மழியுமதற் கென்செய்வாய் — நில்லாமல் 409

ஆய்ந்தோர் சிலநாளி லாயிரம்பேர் பக்கலது
பாய்ந்தோடிப் போவதுநீ பார்த்திலையே — ஆய்ந்தோர்சொல்

[1]கூத்தாட் டவைசேர் குழாம்விளிந்தாற் போலுமென்ற
சீர்த்தாட் குறள்மொழியுந் தேர்ந்திலையே—போர்த்தோடும் 411

நாட்கொல்லி யென்று நடுங்குகின்றாய் நாளறியா
ஆட்கொல்லி யென்பரிதை யாய்ந்திலையே — கீழ்க்கொல்லைப்

பச்சிலையாற் பொன்னைப் படைப்பாரேல் மற்றதன்மேல்
இச்சையுனக் கெவ்வா றிருந்ததுவே — இச்சையிலார் 413

இட்டமலம் பட்டவிட மெல்லாம்பொன் னாமென்றால்
இட்டமதை [2]விட்டற் கிசைந்திலையே — முட்டகற்றப் 414

பொன்னடப்ப தன்றியது போனகமே யாதியவா
யென்னடுத்த தொன்றுமிஃ தெண்ணிலையே—இந்நிலத்தில் 415

நீண்மயக்கம் பொன்முன் னிலையா யுலகியலாம்
வீண்மயக்க மென்றதனை விட்டிலையே — நீண்வலயத் 416

திச்செல்வ மின்றி யியலாதேற் சிற்றுயிர்கள்
எச்செல்வங் கொண்டிங் கிருந்தனவே!—வெச்சென்ற 417

15. மண்ணாசை

மண்ணாசை கொண்டனைநீ மண்ணாளு மன்னரெலாம்
மண்ணா லழிதல் மதித்திலையே! — எண்ணாது 418

மண்கொண்டார் மாண்டார்தம் மாய்ந்தவுடல் வைக்கவயன்
மண்கொண்டார் தம்மிருப்பில் வைத்திலரே—திண்கொண்ட

விண்ணேகுங் காலங்கு வேண்டுமென வீண்டுபிடி
மண்ணேனுங் கொண்டேக வல்லாரோ!—மண்ணேயம் 420

என்னதென்றான் முன்னொருவன் என்னதென்றான் பின்னொருவன்
இன்னதுநீ கேட்டிங் கிருந்திலையோ — மன்னுலகில் 421

கண்காணி யாய்நீயே காணியல்லாய் நீயிருந்த
மண்காணி யென்று மதித்தனையே — கண்காண 422

மண்காணி வேண்டி வருந்துகின்றாய் நீமேலை
விண்காணி வேண்டல் வியப்பன்றே — எண்காண 423

1. திருக்குறள், அதிகாரம்—34, (2) 2. விடற்கு என்பது—விட்டற்கு என விகாரமாயிற்று

அந்தரத்தில் நின்றுய்நீ யந்தோ நினைவிடமண்
அந்தரத்தில் நின்ற தறிந்திலையே — தந்திரத்தின் 424

மண்கொடுப்பேன் என்றுரைக்கில் வைவார் சிறுவர்களும்
மண்கொடுக்கில் நீதான் மகிழ்ந்தனையே—வண்கொடுக்கும் 425

வீடென்றேன் மற்றதைமண் வீடென்றே நீநினைந்தாய்
[1]வீடென்ற சொற்பொருளை விண்டிலையே!—நாடொன்றும்

மண்ணால் மரத்தால் வனைகின்ற வீடனைத்துங்
கண்ணாரக் கட்டழிதல் கண்டிலையோ — மண்ணான 427

மேல்வீடு மங்குடைய வேந்தர்களு மேல்வீட்டப்
பால்வீடும் பாழாதல் பார்த்திலையோ — மேல்வீட்டில் 428

ஏறுவனே யென்பாய் இயமன் கடாமிசைவந்
தேறுவனேல் உன்றனிசை யென்னுமோ! — கூறிடுமிம் 429

மண்ணளித்த வேதியனு மண்விருப்பங் கொள்ளானேல்
எண்ணமுனக் கெவ்வா றிருந்ததுவே — மண்ணிடத்தில் 430

ஆகாத் துரும்பிடத்தும் ஆசைவைத்தாய் என்னிலுன்றன்
ஏகாப் பெருங்காம மென்சொல்கேன்! — போகாத 431

16. கோபம்

பாபக் கடற்கோர் படுகடலாம் பாழ்வெகுளிக்
கோபக் கடலிற் குளித்தனையே! — தாபமுறச் 432

[2]செல்லா விடத்துச் சினந்தீது செல்லிடத்தும்
இல்லதனிற் றீயதென்ற தெண்ணிலையே—மல்லல்பெறத் 433

[2]தன்னைத்தான் காக்கிற் சினங்காக்க என்றதனைப்
பொன்னைப்போற் போற்றிப் புகழ்ந்திலையே — துன்னி 434

[3]அகழ்வாரைத் தாங்கு நிலம்போல வென்னுந்
திகழ்வாய் மையுநீ தெளியாய் — இகழ்வாரை 435

எவ்வண்ண நம்மை யிகழ்வா ரறிவோமென்
றிவ்வண்ண மென்னைவெளி யிட்டனையே—தெவ்வென்ன 436

ஓரா வெகுளி யுடையான் றவமடையான்
றீராயென் பாரதுவுந் தேர்ந்திலையே — பேராகின் 437

வெவ்வினைக்கீ டாகவரன் வெம்மைபுரி வானென்றால்
இவ்வெகுளி யார்மாட் டிருத்துவதே — செவ்வையிலாய் 438

ஏய்ந்தனையன் போரிடத்தி லின்னமை செய்தவரைக்
காய்ந்தனமற் றென்னபலன் கண்டனையே—வாய்ந்தறிவோர்

எல்லா நலமு மிஃதேயென் றேத்துகின்ற
கொல்லா நலஞ் சிறிதுங் கொண்டிலையே—பொல்லாத 440

1. வீடு — பற்றுக்களினின்றும் விடுபட்டது.
2. திருக்குறள், அதிகாரம் — 31, (2, 5.) 3. திருக்குறள், அதிகாரம் — 16, (1)

Koviloor Digital Library

வன்போ டிருக்கு மறிவிலிநீ மன்னுயிர்க்கண்
அன்போ டிரக்கம் அடைந்திலையே! — இன்போங்கு 441

தூய்மையென்ப தெல்லாந் துணையா யணைவதுதான்
வாய்மையென்ப தொன்றே மதித்திலையே — தூய்மையிலாய்

மானொருகை யேந்திநின்ற வள்ளலன்பர் தங்களுளே
நானொருவ னென்று நடித்தனையே — ஆனமற்றைப் 443

பாதகங்க ளெல்லாம் பழகிப் பழகியதிற்
சாதகஞ்செய் வோரிற் றலைநின்றாய் — பாதகத்தில் 444

ஓயா விகார வுணர்ச்சியினால் இவ்வுலக
மாயா விகார மகிழ்ந்தனையே! — சாயாது 445

17. இளமை

நீஇளமை மெய்யாய் நினைந்தாய் நினைப்பெற்ற
தாயிளமை யெத்தனைநாட் டங்கியதே! — ஆயிளமை 446

மெய்கொடுத்த தென்பாய் விருத்தர்கட்கு நின்போல்வார்
கைகொடுத்துப் போவதனைக் கண்டிலையே — மெய்கொடுத்த

கூனொடுங்கைக் கோலூன்றிக் குந்தி நடைதளர்ந்து
கானடுங்க நிற்பவரைக் கண்டிலையோ — ஊனொடுங்க 448

ஐயநட வென்றே யரும்புதல்வர் முன்செலப்பின்
பைய நடப்பவரைப் பார்த்திலையோ — வெய்யநமன் 449

நாடழைக்கச் சேனரி நாயழைக்க நாறுசுடு
காடழைக்க மூத்துநின்றார் கண்டிலையோ — பீடடைந்த 450

மெய்யுலர்ந்து நீரின் விழியுலர்ந்து வாயுலர்ந்து
கையுலர்ந்து நிற்பவரைக் கண்டிலையோ—மெய்யுலர்ந்தும் 451

சாகான் கிழவன் தளர்கின்றா னென்றிவணீ
ஓகாளஞ் செய்வதனை யோர்ந்திலையோ — ஆகாத 452

கண்டமிது பொல்லாக் கடுநோ யெனுங்குமர
கண்டமிஃ தென்பவரைக் கண்டிலையோ — கொண்டவுடல்

குட்டமுறக் கைகால் குறுக்குமிது பொல்லாத
குட்டமென நோவார் குறித்திலையோ — துட்டவினை 454

மாலையினுங் காலையினு மத்தியினுங் குத்துமிது
சூலையென நோவாரைச் சூழ்ந்திலையோ — சாலவுமித் 455

தேக மதுநலியச் செய்யுங்கா றுய்வரிதாம்
மேகமிஃ தென்பாரை மேவிலையோ — தாகமுறச் 456

சித்தநோய் செய்கின்ற சீதநோய் வாதமொடு
பித்தநோய் கொண்டவர்பாற் பேர்ந்திலையோ — மெத்தரிய

கைப்பிணியுங் காற்பிணியுங் கட்பிணியோ டெண்ணரிய
மெய்ப்பிணியுங் கொண்டவரை விண்டிலையோ — எய்ப்புடைய

Koviloor Digital Library

முட்டுறுங் கைகான் முடங்கூன் முதலாய
வெட்டுறுங் கொண்டவரை யெண்ணிலையோ—தட்டுறிங்(கு)

எண்ணற்ற துண்டேல் இளமை யொருபொருளாய்
எண்ணப் படுமோவென் றெண்ணிலையே!—எண்ணத்தில்

18. உடம்பு

பொய்யென் றறவோர் புலம்புறவும் இவ்வுடம்பை
மெய்யென்று பொய்ம்மயக்க மேவினையே! — கைநின்று 461

கூகா வெனமடவார் கூடி யழல்கண்டும்
நீகாதல் வைத்து நிகழ்ந்தனையே — மாகாதல் 462

பெண்டிருந்து மாழ்கப் பிணங்கொண்டு செல்வாரைக்
கண்டிருந்து மந்தோ கலங்கிலையே — பண்டிருந்த 463

ஊரார் பிணத்தி னுடன்சென்று நாமீண்டும்
நீராடல் சற்று நினைந்திலையே — சீராக 464

இன்றிருந்தார் நாளைக் கிருப்பதுபொய் யென்றறவோர்
நன்றிருந்த வார்த்தையுநீ நாடிலையே — ஒன்றி 465

[1] உறங்குவது போலுமென்ற வொண்குறளின் வாய்மை
மறங்கருதி யந்தோ மறந்தாய் — கறங்கின் 466

[1] நெருந லுளனொருவன் என்னு நெடுஞ்சொன்
மருவுங் குறட்பா மறந்தாய் — தெருவில் 467

இறந்தார் பிறந்தார் இறந்தா ரெனுஞ்சொன்
மறந்தாய்! மறந்தாய்! மறந்தாய்! — இறந்தார் 468

பறையோசை யண்டம் படீரென் றொலிக்க
மறையோசை யென்றே மறந்தாய் — இறையோன் 469

[2] புலனைந்தும் என்றருளும் பொன்மொழியை மாயா
மலமொன்றி யந்தோ மறந்தாய் — நிலனொன்றி 470

விக்குள் எழுநீர் விடுமினென அயலோர்
நெக்குருக லந்தோ நினைந்திலையே — மிக்கனலில் 471

நெய்விடல்போ லுற்றவர்கண் ணீர்விட் டழவுயிர்பன்
மெய்விடலுங் கண்டனைநீ விண்டிலையே — செய்வினையின்

வாள்கழியச் செங்கதிரோன் வான்கழிய - நம்முடைய
நாள்கழிதற் கந்தோ நடுங்கிலையே! — கோள்கழியும் 473

நாழிகையோர் நாளாக நாடினையே நாளையொரு
நாழிகையா யெண்ணி நலிந்திலையே!—நாழிகைமுன் 474

நின்று ரிருந்தார் நிலைகுலைய வீழ்ந்துயிர்தான்
சென்று ரெனக்கேட்டுந் தேர்ந்திலையே — பின்றுது 475

1. திருக்குறள் அதிகாரம் — 34, (9, 6)
2. சம்பந்தர் தேவாரம் முதல் திருமுறை திருவையாறு (1)

Koviloor Digital Library

தொட்டா ருணவுடனே தும்மினு ரம்மவுயிர்
விட்டா ரெனக்கேட்டும் வெட்கிலையே — தட்டாமல் 476

உண்டார் படுத்தா ருறங்கினுர் பேருறக்கங்
கொண்டா ரெனக்கேட்டும் கூசிலையே — வண்டாரார் 477

நேற்று மணம்புரிந்தார் நீருஞ ரின்று என்று
சாற்றுவது கேட்டுந் தணந்திலையே — வீற்றுறுதேர் 478

ஊர்ந்தார் தெருவி லுலாப்போந்தார் வானுலகஞ்
சேர்ந்தா ரெனக்கேட்டுந் தேர்ந்திலையே — சேர்ந்தாங்கு 479

என்னே யிருந்தார் இருமினுர் ஈண்டிறந்தார்
அன்னே யெனக்கேட்டு மாய்ந்திலையே — கொன்னே 480

மருவுங் கருப்பைக்குள் வாய்ந்தே முதிராக்
கருவும் பிதிர்ந்துதிரக் கண்டாய் — கருவொன் 481

றெடுதிங்க [1] ளையைந்தில் ஒவ்வொன்றி லந்தோ
கெடுகின்ற தென்றதுவுங் கேட்டாய் — படுமிந் 482

நிலைமுற்ற யோனி நெருக்கி லுயிர்போய்ப்
பலனற்று விழ்ந்ததுவும் பார்த்தாய் — பலனுற்றே 483

காவென்று வீழ்ந்தக் கணமே பிணமாகக்
கோவென் றழுவார் குறித்திலையோ — நோவின்றிப் 484

பாலனென்றே அன்னைமுலைப் பாலருந்துங் காலையிலே
கால னுயிர்குடிக்கக் கண்டிலையோ — மேலுவந்து 485

பெற்றார் மகிழ்வெய்தப் பேசி விளையாடுங்கால்
அற்றாவி போவ தறிந்திலையோ — கற்றுயப் 486

பள்ளியிடுங் காலவனைப் பார நமன்வாயில்
அள்ளியிடுந் திமை யறிந்திலையோ — பள்ளிவிடுங் 487

காளைப் பருவமதிற் கண்டா ரிரங்கிடவவ்
ஆளைச் சமன்கொள்வ தாய்ந்திலையோ — வேளைமண 488

மாப்பிள்ளை யாகி மணமுடிக்கு மன்றவனே
சாப்பிள்ளை யாகலெண்ணிச் சார்ந்திலையே! — மேற்பிள்ளை

மாடையேர்ப் பெண்டுடலில் வாழுங்காற் பற்பலர்தாம்
பாடைமேற் சேர்தலினைப் பார்த்திலையோ — வீடலிஃ(து)

இக்கணமோ மேல்வந் திடுங்கணமோ வென்றிமற்றை
எக்கணமோ வென்றுநீ யெண்ணிலையே — தொக்குறுதோற்

கூடென்கோ! இவ்வுடம்பை கோள்வினைநீ ரோட்டில்விட்ட
ஏடென்கோ! நீர்மே லெழுத்தென்கோ! — காடென்கோ!

பாழென்கோ! ஒன்பதுவாய்ப் பாவையென்கோ! வன்பிறவி
ஏழென்கோ! கன்மமதற் கீடென்கோ! — தாழ்மண்ணிற் 493

---

1. ஞயைந்து என்பதனை — ஞந்து மைந்து மென வும்மைத் தொகையாகக் கொள்க.

Koviloor Digital Library

பாண்டமென்கோ! வெஞ்சரக்குப் பையென்கோ! பாழ்ங்கரும
காண்டமென்கோ! ஆணவத்தின் கட்டென்கோ!—கோண்டகையார்

மெய்யென்கோ! மாய வினையென்கோ! மின்னென்கோ!
பொய்யென்கோ! மாயப் பொடியென்கோ! — [1]மெய்யென்ற

[2]மங்கலத்தை மங்கலத்தால் வாஞ்சித் தனருலகர்
அங்கவற்றை யெண்ணு தலைந்தனையே — தங்குலகின் 496

மற்றிதனை யோம்பி வளர்க்க வுழன்றனைநீ
கற்றதனை யெங்கே கவிழ்த்தனையே! — அற்றவரை 497

இக்கட் டவிழ்த்திங் கெரிமூட் டெனக்கேட்டும்
முக்கட்டுந் தேட முயன்றனையே — இக்கட்டு 498

மண்பட்டு வெந்தீ மரம்பட் டிடக்கண்டும்
வெண்பட் டுடுக்க விரைந்தனையே — பண்பட்ட 499

ஐயா அரைநா ணவிழுமெனக் கேட்டுநின்றும்
மெய்யா பரணத்தின் மேவினையே — எய்யாமல் 500

காதிற் கடுக்கன் கழற்றுமெனக் கேட்டுநின்றும்
ஏதிற் பணியினிடத் தெய்தினையே — தாதிற்குத் 501

துற்கந்த மாகச் சுடுங்கான் முகர்ந்திருந்தும்
நற்கந்தத் தின்பா னடந்தனையே — புற்கென்ற 502

வன்சுவைத்தீ நாற்ற மலமாய் வரல்கண்டும்
இன்சுவைப்பா லெய்தி யிருந்தனையே—முன்சுவைத்துப் 503

[3]பாறுண்ட காட்டிற் பலர்வெந் திடக்கண்டும்
சோறுண் டிருக்கத் துணிந்தனையே! — மாறுண்டு 504

கூம்புலகம் பொய்யெனநான் கூவுகின்றேன் கேட்டுமிகு
சோம்பலுடன் தூக்கந் தொடர்ந்தனையே — ஆம்பலனோர்

நல்வாழ்வை யெண்ணி நயந்தோர் நயவாத
இல்வாழ்வை மெய்யென் றிருந்தனையே! — சொல்ஆவி

ஈன்றேன் றனைநாளும் எண்ணாமல் இவ்வுடம்பை
ஈன்றோரை யின்றோரென் றெண்ணினையே—ஈன்றோர்கள் 507

நொந்தால் உடலின்று நோவார் வினைப்பகைதான்
வந்தா லதுநீக்க வல்லாரோ? — வந்தாடல் 508

உற்றசிறார் நம்மடையா தோட்டுநிற்பார் தென்திசைவாழ்
மற்றவன்வந் தாற்றடுக்க வல்லாரோ?—சிற்றுணவை 509

ஈங்கென்றால் வாங்கி யிடுவார் அருளமுதம்
வாங்கென்றால் வாங்கியிட வல்லாரோ? — தீங்ககற்றத் 510

தூண்டா மனையாதிச் சுற்றமெலாஞ் சுற்றியிட
நீண்டா யவர்நன் னெறித்துணையோ? — மாண்டாற்பின் 511

1, 2. மெய்யென்று—அமங்கலத்தை. 3. பாறு உண்ட என்பது — பருந்துகள் உண்ட.

Koviloor Digital Library

கூடி யழத்துணையாய்க் கூடுவார் வல்னரகில்
வாடியழும் போது வருவாரோ? — நீடியநீ 512

இச்சீவர் தன்துணையோ ஈங்கிவர்கள் நின்துணையோ
சிச்சீ! யிதென்ன திறங்கண்டாய்! — இச்சீவர் 513

நின்னைவைத்து முன்சென்றால் நீசெய்வ தென்னவர்முன்
இந்நிலத்தில் நீசென்று லென்செய்வர் — நின்னியல்பின் 514

19. பல பிறப்பு

எத்தனைதாய் எத்தனைபேர் எத்தனையூர் எத்தனைவாழ்(வு)
எத்தனையோ தேகம் எடுத்தனையே — அத்தனைக்கும் 515

அவ்வவ் விடங்கடொறும் அவ்வவரை யாண்டாண்டிங்(கு)
எவ்வெவ் விதத்தால் இழந்தனையோ? — அவ்விதத்தில் 516

ஒன்றேனு நன்று யுணர்ந்திருந்தி யேலிவரை
இன்றே துறத்தற் கிசையாயோ! — நின்றேரில் 517

தாயார் மனையார் தனயரார் தம்மவரார்
நீயார் இதனை நினைந்திலையே — சேயேகில் 518

ஏங்குவரே யென்றாய் இயமன்வரில் நின்னுயிரை
வாங்கிமுடி யிட்டகத்தில் வைப்பாரோ!—நீங்கியிவண் 519

உன்தந்தை தன்றனக்கிங் கோர்தந்தை நாடுவனீ
என்தந்தை யென்றுரைப்ப தெவ்வாறே — சென்றுபின்நின்

தன்மனையாள் மற்றொருவன் றன்மனையா ளாவளெனில்
என்மனையா ளென்பதுநீ யெவ்வணமே — நன்மைபெறு 521

20. அஞ்ஞானம்

நட்பமைந்த நன்னெறிநீ நாடா வகைதடுக்கும்
உட்பகைவர் என்றிவரை யோர்ந்திலையே—நட்புடையாய் 522

எம்மான் படைத்தவுயி ரித்தனைக்குட் சில்லுயிர்பால்
இம்மா லடைந்ததுநீ யென்னினைந்தோ — அம்மாறில் 523

எம்பந்த மேநினக்கிங் கில்லையென்றுன் மற்றையவர்
தம்பந்த மெவ்வாறு தங்கியதே — சம்பந்தர் 524

[1]அற்றவருக் கற்றசிவ ஞமெனுமப் பொன்மொழியை
மற்றைமொழி போன்று மறந்தனையே — சிற்றுயிர்க்குக் 525

கற்பனையிற் காய்ப்புளதாய்க் காட்டும் பிரபஞ்சக்
கற்பனையை மெய்யென்று கண்டனையே — பற்பலவாங் 526

---

1. வெற்றவே யடியா ரடிமிசை வீழும் விருப்பினன் வெள்ளைநீ றணியுங்
கொற்றவன் றனக்கு மந்திரி யாய குலச்சிறை குலாவிநின் றேத்தும்
ஒற்றைவெள் விடையன் உம்பரார் தலைவன் உலகினி லியற்கையை யொழிந்திட்டு
அற்றவர்க்கற்ற சிவன் உறை கின்ற ஆலவா யாவதும் இதுவே. (சம்பந்தர் தேவாரம்)

Koviloor Digital Library

[1]தூரியத்திற் றேன்றெலிபோற் றேன்றிக் கெடுமாயா
காரியத்தை மெய்யெனநீ கண்டனையே — சீரியற்றும் 527

ஆடகத்திற் பித்தளையை யாலித் திடுங்கபட
நாடகத்தை மெய்யென்று நம்பினையே — நீடகத்திற் 528

காயவித்தை யாலக் கடவு ளியற்றுமிந்த
மாயவித்தை மெய்யெனநீ வாழ்ந்தனையே — [2]வாயவித்தை

இப்படக மாயை யிருட்டமமே யென்னுமொரு
[3]முப்படகத் துள்ளே முயங்கினையே — ஒப்பிறைவன் 530

ஆனவொளி யிற்பரையா மாதபத்தி னுற்றேன்றுங்
கானலினை நீராய்க் களித்தனையே — ஆனபிரி 531

யாசத்தி யென்றிடுமோர் அம்மைவினை யாட்டெனுமிப்
பாசத்தி னுள்ளே படர்ந்தனையே — நேசத்திற் 532

பொய்யொன் றுண்மெய்யிற் புகும்பால லீலைதனை
மெய்யென்று வீணில் விரிந்தனையே — பொய்யென்று 533

மீட்டுநின்ற லிலா விநோத மெனுங்கதையைக்
கேட்டுநின்று மந்தோ கிளர்ந்தனையே — யீட்டிநின்ற 534

காலத்தை வீணிற் கழிக்கும் படிமேக
சாலத்தை மெய்யாய்த் தருக்கினையே — சாலத்திற் 535

கண்மையகன் றேங்குமந்த காரத்திற் செம்மாப்புற்
றுண்மையொன் றுங் காணு துழன்றனையே — வண்மையிலாய்

இங்குநினைப் பெரியோர் என்னினைப்பார் ஏமாப்பிற்
கங்குலினைப் பகலாய்க் கண்டனையே — தங்குறுமித் 537

தேகாதி பொய்யெனவே தேர்ந்தா ருரைக்கவுநீ
மோகாதிக் குள்ளே முயல்கின்றுய் — ஓகோநுங் 538

[4]கோமுடிக்கண் தீப்பற்றிக் கொண்டதென்றுல் மற்றதற்குப்
பூமுடிக்கத் தேடுகின்றேர் போன்றனையே — மாமுடிக்கும்

வாழ்வுநிலை யன்றிமைப்பின் மாறுகின்ற தென்றுரைத்தும்
[5]விழ்வுகொடு வாளா விழுகின்றுய் — தாழ்வுறநும் 540

விண்டுறுங்[6]கை வீடனலால் வேகின்ற தென்னவுட்போய்
உண்டுறங்கு கின்றேரை யொத்தனையே—தொண்டுலகம் 541

கானமுயற் கொம்பாய்க் கழிகின்ற தென்கின்றேன்
நீநயமுற் றந்தோ நிகழ்கின்றுய் — ஆனநும்மூர் 542

வெள்ளத்தி னுன்முழுகி விட்டதென்றுற் சென்றுகடை
கொள்ளத் திரிபவர்போற் கூடினையே — கொள்ளவிங்கு 543

---

1. தூரியம் என்பது — பறை. 2. வாய் அவித்தை — பொருந்தின அஞ்ஞானம்.
3. முப்படகம் என்பது — மூன்று மறைப்பு; அவை—மான், ஆங்காரம், மூலப்பகுதி.
4. கோமுடி என்பது — குடுமி. 5. விழ்வு — விருப்பம்.
6. கை என்பது — தாழ்வாரத்து வாரைகள்.

Koviloor Digital Library

கண்டனவெல் லாநிலையாக் கைதவமென் றின்றேனி
கொண்டன்வழுற் சேரக் குறிக்கின்றாய் — உண்டழிக்க 544

[1]ஊழி வெள்ளம் வந்ததென்றாலுண்பதற்கு மாடுதற்கும்
ஊழிநன்னீ ரோவென்பா ரொத்தனையே — ஏழியற்றும் 545

நற்புவனம் போகந் தனுகரண மென்கின்ற
சொற்பனத்தி லந்தோ துவன்றினையே — பற்பகலும் 546

உண்டனவே யுண்கின்றாய் ஓர்ந்தனவே யோர்கின்றாய்
கண்டனவே கண்டு களிக்கின்றாய்!—கொண்டனவே 547

கொண்டியங்கு கின்றாய் குறித்தனவே பிற்குறித்துப்
பண்டறியார் போலப் படர்கின்றாய் — பண்டறிந்து 548

சொல்லாடி நின்றனவே சொல்கின்றாய் மற்றிதனை
நல்லோர்கள் கண்டால் நகையாரோ — செல்லான 549

காலம்போ லிங்குநிகழ் காலமுங்காண் கின்றியெதிர்
காலமற்று மத்திறமேற் காண்குவையேற் — சாலவுமுன் 550

போதுசெலா முன்னம்நு பூதியைநீ நாடாமல்
யாதுபய னெண்ணி யிளைகின்றாய் — தீதுசெயும் 551

21. ஆணவம்

வினவத்தை யெல்லாம் விளக்குந் திறன்மூல
ஆணவத்தி னூலே அழிந்தனையே! — ஆணவத்தில் 552

நீயா ரெனவறியாய்! நின்னெதிரில் நின்றவரை
நீயா ரெனவினவி நீண்டனையே! — ஓயாமல் 553

ஊனின்ற வொன்றி னுளவறியா யந்தோநீ
நானென்று சொல்லி நலிந்தனையே — நானென்று 554

சொல்லுதியோ சொல்லாயோ துவ்வாமை பெற்றொருநீ
அல்லலுறுங் காலத் தறைகண்டாய் — அல்லலெலாம் 555

நீயிங்கே நானங்கே நிற்கநடு வேகுதித்தால்
நீயெங்கே நானெங்கே நின்றறிகாண் — நீயிங்கு 556

ஒன்றெடுக்கச் சென்றுமற்றை யொன்றெடுக்கக் காண்கின்றேன்
நின்றடுத்த நீயெங் கிருந்தனையே — மன்றடுத்த 557

தாளா தரித்தேநின் றன்னைமறந் துய்யாது
வாளா மதத்தில் மலிகின்றாய் — கேளாயிச் 558

சார்பிலொன்று விட்டொழிந்தாற் சாலமகிழ் கிற்பேனுன்
சோர்புகொண்டு நீதான் துயர்கின்றாய் — சார்புபெருந் 559

[2]தூவென்று நானிவணஞ் சும்மா விருந்தாலும்
வாவென் றெனையும் வலிக்கின்றாய் — ஓவுன்றன் 560

1. ஊழி என்பது — கடல். 2. தூ என்று என்பது — ஆதரவென்று.

Koviloor Digital Library

சூழ்ச்சியறி யேனீ சுழல்கின்ற போதெல்லாஞ்
சூழ்ச்சியிலே நானுஞ் சுழல்கின்றேன் — நீட்சியினீ 561

காலசைத்தால் யானுங் கடிதிற் றலையசைப்பேன்
மாலசைத்த நின்புணர்ப்பின் வாறெதுவோ — வாலுமண்டக்

[1]கூவத்தில் யானோர் குடநீ கயிற்றேடும்
ஏவற் கொளுமேழை யென்கேனே — பாவத்திற் 563

சுற்றுண்ட நீகடலிற் றேன்றுசுழி யாகவதில்
எற்றுண்ட நான்திரண மென்கேனே — பற்றிடுநீ 564

சங்கற்ப மாஞ்சூறை தானுக நானுடும்
அங்கட் சருகென் றறைகேனே — பொங்குற்ற 565

சேலைவிரா யோர்தறியிற் செல்குழைநீ பின்றெடரும்
நூலிழைநா னென்று நுவல்கேனே — மாலிடுநீ 566

துள்ளுறுப்பின் மட்பகைஞன் சுற்றுழி யாகவதின்
உள்ளுறுப்பே நானென் றுரைக்கேனே — வெள்ளுறுநீ 567

பாழலைவா னேகும் பருந்தாக வப்பருந்தின்
நீழலைநா னென்று நிகேனே — நீழலுரு 568

நின்வசநா னென்றுலகு நிந்தைமொழி கின்றதலால்
என்வசநீ யென்ப திலைகண்டாய் — என்வசம் நீ 569

ஆனல் எளியேனுக் காகாப் பொருளுளவோ!
வானுடர் வந்து வணங்காரோ! — [2]ஆனமல் 570

எண்ணுதற்கும் பேசுதற்கும் எட்டாப் பரஞ்சோதிக்
கண்ணுதலும் அங்கைக் கனியன்றே! — எண்ணுமிடத்

தென்செய்வேன் ஓர்கணமு மென்சொல்வழி நில்லாமற்
கொன்செய்வே னென்று குதிக்கின்றய் — வன்செய்புஞ் 572

[3]சிந்தோடு மோர்வடவைத் தீயுங் கரத்தடைப்பர்
அந்தோ வுனையார் அடக்குவரே — வந்தோடுங் 573

[4]கச்சோத மென்னக் கதிரோன் றனையெடுப்பர்
அச்சோ வுனையா ரடக்குவரே — வைச்சோங்கும் 574

மூவுலகுஞ் சேர்த்தொருதம் முன்றனை யின்முடிவர்
ஆவுனையு மிங்கா ரடக்குவரே — மேவுபல 575

தேசமென்றுங் காலமென்றுந் திக்கென்றும் பற்பலவாம்
வாசமென்று மவ்வவ் வழக்கென்றும் — மாசுடைய 576

போகமென்று மற்றைப் புலனென்றும் பொய்யகலா
யோகமென்றும் பற்பலவாம் யூகமென்றும்—ஏகமென்றும் 577

---

1. அண்டக்கூவம் என்பது—உலகமாகிய கிணறு. 2. ஆனமை என்பது—விட்டுநீங்காமை.
3. சிந்து என்பது — கடல். 4. கச்சோதம் என்பது — மின்மினிப்பூச்சி.

Koviloor Digital Library

வானென்று முந்நீர் மலையென்று மண்ணென்றும்
ஊனென்று மற்றை யுறவென்றும் — மேனின்ற 578

சாதியென்றும் வாழ்வென்றுந் தாழ்வென்று மிவ்வுலக
நீதியென்றுங் கன்ம நெறியென்றும் — ஓதரிய 579

அண்டமென்று மண்டத் தசைவு மசைவுமலாப்
பண்டமென்றுஞ் சொல்பவெலாம் பன்முகங்கள்-கொண்டிருந்த

உன்னினைவி னுள்ளே யுதித்திட் டுலவிநிற்ப
எந்நினைவு கொண்டோமற் றிவ்வுலகர் — எந்நல்வயுந் 581

தந்தோ னெவனோ சதுமுகனுண் டென்பார்கள்
அந்தோநின் செய்கை யறியாரே — அந்தோநான் 582

ஆமென்றுன் மற்றதனை யல்லவென்பா யல்லவென்றால்
ஆமென்பா யென்னை யலைக்கின்றாய் — நாமன்பாய்

என்றும் பிறந்திறவா இன்பம் அடைதுமென்றால்
நன்றென் றிருப்படுவாய் நண்ணுங்கால்—[1]தொன்றெனவே

செல்கிற்பாய் செல்லாச் சிறுநடையிற் றீமையெலாம்
நல்கிற்பா யென்னேநின் னட்புடைமை — சொல்கிற்பில் 585

ஆவதுவும் நின்னால் அழிவதும் நின்னால்! எனயான்
நோவதுவுங் கண்டயலி னேக்கினையே—தாவுமெனக்(கு) 586

ஆணவலம் பெண்ணவல மாகும் பொருளவலம்
ஊணவலம் உற்றாரோ டூரவலம் — பூணவலம் 587

ஊனவல மன்றியுமென் உற்றதுணை யாநீயுந்
தானவல மென்றாலென் சாற்றுவதே — நானிவணம் 588

இன்பமெது கண்டேமால் இச்சையெலாந் **துன்பமதில்**
துன்பம் பிறப்பென்றே சோர்கின்றேன்! — வன்புடைய

இப்பிறவித் துன்பத்தி னுந்தியிற் றுன்பமது
செப்பரிதாம்! என்றே திகைக்கின்றேன்—செப்பிறப்பின் 590

ஓயாத துன்ப முரைக்க வுடம்பெல்லாம்
வாயாகி னும்போத மாட்டாதேல் — ஏயேநாம் 591

செய்வதென்னே வென்று தியங்குகின்றேன் இவ்வணநர்ன்
நைவதெல்லாங் கண்டு நடந்தனையே — கைவருமிவ் 592

இல்லிக் குடமுடைந்தால் யாதாம்!என் றுன்னுட்ன்யான்
சொல்லித் திரிந்துமெனைச் சூழ்ந்திலையே — **வல்இயமன்** 593

நாளையோ இன்றோ நடக்கின்ற நாட்களில்எவ்
வேளையோ! தூது விடிலவர்கள் — கேளையோ 594

1. தொன்று என்பது — பழமை..

Koviloor Digital Library

நல்லோ மெனினும் நடவார் நடவார்! நாஞ்
செல்லோ மெனினுமது செல்லாதே — வல்லீர்யாம் 595

இன்சொலினேம் இன்றிங் கிருந்துவரு வோமெனயாம்
என்சொலினு மச்சொலெலாம் ஏலாதே — மன்சொலுடைத்

தாமரையோன் மான்முதலோர் தாமறையா ராயிலன்று
நாமறைவோ மென்றல் நடவாதே — நாமிவணம் 597

அந்நாள் வருமுன்னர் ஆதி யருளடையும்
நன்னு ளடைதற்கு நாடுதுங்காண்! — என்னு நின் 598

ரேதுகின்றேன் கேட்டு முருர்போன் றுலகியலிற்
போதுகின்று யாது புரிமிற்பேன் — தீதுநன்றே(டு) 599

22. முக்குணம்

ஏற்றவடி நாளுறவா மென்னேவிட்டுத் தாமதமாம்
நேற்றையுற வோடுறவு நேர்ந்தனேயே — சாற்றுமந்த 600

தாமதமே யோரவித்தைத் தாமதமே [1]ஆவரணந்
தாமதமே மோக சமுத்திரங்காண்! — தாமதமென் 601

றையோ வொருநீ யதனேடு கூடினேயாற்
பொய்யோநா மென்று புகன்றதுவே — கையாமல் 602

ஒன்னலர்போற் கூடுவா ரோடொருநீ கூடுங்கால்
என்னேநினே யாயென்சொ லெண்ணுதியோ—பன்னுறுநின்

றீதெல்லா நான் ஆதி சேடர்பல ராய்ப்பிரமன்
போதெல்லாஞ் சொல்லிடினும் போதாதே — ஆதலினல்

வைகின்றேன் வாழ்த்தாய் மதித்தொருநீ செய்வதெல்லாஞ்
செய்கின்று மீதோர் திறமன்றே — உய்கிற்பான் 605

வாடுகின்றே னின்னே மதித்தொருநா னிமலத்தை
நாடுகின்று மீதோர் நலமன்றே — கூடுகின்ற 606

ஈண்டோ ரனுவா யிருந்தநீ யெண்டிசைபோல்
நீண்டா யிஃதோர் நெறியன்றே — வேண்டாநீ 607

மற்றவர்போ லன்றே மனனே! நின் வண்புகழை
முற்றுமிவ ணீர்தான் மொழிவாரே — சுற்றிமனந் 608

தானடங்கின் எல்லாச் சகமு மடங்கும்ஒரு
மானடங்கொள் பாத மலர்வாய்க்கும் — வானடங்க 609

எல்லா நலமும் இதனு லெனமறைகள்
எல்லாநின் சீரே யெடுத்தியம்பும் — எல்லார்க்கும் 610

1. ஆவரணம் என்பது — மறைப்பு.

Koviloor Digital Library

[1]மாகமங்கொண் டுற்ற மனேலயமே வான்கதியென்(று)
ஆகமங்கள் நின்சீ ரறைந்திடுங்காண் — ஆகுமிந்த 611

நன்மை பெறுமேன்மை நண்ணியநீ நின்னுடைய
தன்மைவிட லந்தோ சதுரலவிப் — புன்மையெலாம் 612

23. பன்மத சுகம்

விட்டொழித்து நான்மொழியு மெய்ச்சுகத்தை நண்ணுதிநீ
இட்டிழைத்த அச்சுகந்தான் யாதென்னிற் — கட்டழித்த 613

வேடஞ் சுகமென்றும் மெய்யுணர்வை யின்றிநின்ற
மூடஞ் சுகமென்றும் முன்பலவாந் — தோட்டஞ்செய் 614

போகஞ் சுகமென்றும் போகந் தருங்கரும
யோகஞ் சுகமென்று முண்டிலையென் — றுகஞ்செய் 615

போதஞ் சுகமென்றும் பொன்றல்சுக மெஃறும்விந்து
நாதஞ் சுகமென்று நாம்பொருளென் — றேதலஃ(து) 616

ஒன்றே சுகமென்று முட்கண் டிருக்குமந்த
நன்றே சுகமென்று நாம்புறத்திற் — சென்றேகண்(டு) 617

ஆற்றல் சுகமென்று மன்பறியாச் சூனியமே
யேற்ற சுகமென்று மிவ்வண்ணம் — ஏற்றபடி 618

வெல்லுகின்றோர் போன்று விரிநீ ருலகிடையே
சொல்லுகின்றோர் சொல்லுஞ் சுகமன்று—சொல்லுகின்ற 619

24. சித்தாந்தம்

வானுதி தத்துவங்கண் மாய்த்தாண் டுறுகின்ற
நானுதி மூன்றிலொன்று நாடாமல் — ஆனுமை 620

எள்ளும் பகலும் இரவுமிலா வோரிடத்தில்
உள்ளும் புறம்பு மொருபடித்தாய் — வள்ளலென 621

வாழும் பரசிவத்தின் **வன்னிவெப்பம்** போலமுற்றுஞ்
சூழுஞ் சுகமே சுகங்கண்டாய் — சூழ்வதனுக் 622

செவ்வா றிருந்தா வியலு மெனிலம்ம!
இவ்வா றிருந்தா வியலாதாற் — செவ்வாற்றிற் 623

25. உபதேசம்

**பற்றற்றான் பற்றினையே பற்றியிடல் வேண்டுமது
பற்றற்ற லன்றிப் பலியாதால்** — பற்றற்றல் 624

1. மாகமம் என்பது — பெரிதாகிய பொறுமை.

Koviloor Digital Library

வேதனையா லிங்கு விரியுஞ் சகப்பழக்க
வாதனைபோய் நீங்கிலன்றி வாராதால்—வாதனையும் 625

ஈனமங்தோ இவ்வுலக மென்று அருளை நாடுகின்ற
ஞானம்வந்தா லன்றி நலியாதால் — ஞானமது 626

போகமுற்றும் பொய்யெனவே போதும் அனித்தியவி
வேகமுற்ற லன்றி விளங்காதால் — ஆகவஃ(து) 627

உண்ணவந்தாற் போலுமிவண் உற்றுவிசா ரித்திடுமோர்
எண்ணம்வந்தா லன்றி இசையாதால் — எண்ணமது 628

பங்கமடைந் தாரவையைப் பாராது சாதுக்கள்
சங்கமடைந் தாலன்றிச் சாராதால் — இங்கதனல் 629

26. அசாதுக்கள்

விழ்முகத்த ராகிநிதம் வெண்ணீ றணிந்தறியாப்
பாழ்முகத்தோர் தம்பாற் படர்ந்துறையேல்—பாழ்முகத்திற்

பேயாட வுள்ளறியாப் பித்தாட நின்னுடனே
வாயாடு வோர்பான் மருவிநில்லேல் — நீயாடிப் 631

பேதித் திடவும் பிறழ்ந்திடவு நின்னுடனே
வாதித் திடுவோர்பால் வாய்ந்துறையேல்—சாதித்துச் 632

சைவமெங்கே? வெண்ணீற்றின் சார்பெங்கே? மெய்யான
தெய்வமெங்கே? என்பவரைச் சேர்ந்துறையேல்—உய்வதெங்கே

தீராச் சிவநிந்தை செய்துசிறு தேவர்களை
நேராய்ப் பிதற்றுவர்பால் நேர்ந்துறையேல் — ஓராமல் 634

எள்ளென்றுந் தெய்வமென்ப தில்லை யிதுதெளிந்துக்
கொள்ளென்றுந் துள்ளுகின்றோர் கூட்டமுறேல்—நள்ளொன்று

நாமென்று நம்மையன்றி நண்ணும் பிரமமில்லை
யாமென்றுஞ் சொல்பவர்பா லார்ந்துறையேல்—தாமொன்ற

எல்லா வறிவும் எமதறிவே யென்றுரைக்கும்
பொல்லா வலக்காரர் பொய்யுகவேல் — புல்லாக 637

அற்பமே மற்றவெலாம் [1]ஆயிலமி யாக்காய
கற்பமே வத்துவென்பார் கண்ணடையேல்—சிற்சிலவாஞ் 638

சித்திகளே வத்துவென்போர்ச் சேர்ந்துறையேல் பன்மாயா
சத்திகளே வத்துவென்போர் சார்படையேல்—பொத்தியவிச்

சன்மமே தோற்றுந் தரமாந் திரமளித்த
கன்மமே வத்துவென்போர் கண்ணுறையேல்—கன்மமிகு 640

1. ஆயில் என்பது — ஆராயுங்கால் எனக்கொள்க.

Koviloor Digital Library

மாகங் கதியென்பார் மாட்டுறையேல் பல்போக
யோகம் பொருளென்பா ரூடுறையேல் — ஏகங்கொள் 641

மண்ணென்பார் வானென்பார் வாய்முச் சுடரென்பார்
பெண்ணென்பார் மற்றவர்தம் பேருரையேல்—மண்ணின்பால்

மன்னுரையாச் சில்லோர் மரந்தெய்வ மென்பார்மற்
றென்னுரையா ரீண்டவர்பா லெய்தியிடேல்—மன்னலங்கள்

பூத்தாற் சிறுவர்களும் பூசா பலமென்பர்
தேற்றார் சிவபூசை செய்யாராய்ப் — பூத்தாவி 644

வீறுகின்ற பூசையிலென் வீணென்று வீங்பாழ்வாய்க்
கூறுகின்ற பேயர்கள்பாற் கூடியுறேல் — மாறுகின்ற 645

நீட்கோல வாழ்க்கையெலா நீத்திடுவான் பொன்னறைக்குத்
தாட்கோ லிடுவாரைச் சார்ந்துறையேல் — நீட்கோல 646

மெய்யொழுக்கத் தார்போல் வெளிநின் றகத்தொழியாப்
பொய்யொழுக்கத்தார்பாற்பொருந்தியுறேல்-பொய்யொழுக்கிற்

பொய்ந்நூல் பதறிப் புலம்புகின்ற பித்தர்கள்பால்
அந்நூல் விரும்பி யடைந்தலையேல் — கைந்நேர்ந்து 648

கோடாது கோடி கொடுத்தாலுஞ் சைவநெறி
நாடா தவரவையை நண்ணியிடேல் — கோடாது 649

கொல்லா விரதமது கொள்ளாரைக் காணிலொரு
புல்லாக எண்ணிப் புறம்பொழிக — எல்லாமும் 650

ஆகநவில் கின்றதென்னம் ஐயனுக்கன் பில்லாரை
நீகனவி லேனு நினையற்க — ஏகனடிக்(கு) 651

27. சாதுக்கள்

அன்பே வடிவாய் அருளே உயிராய்ப்பே
ரின்பே உணவாய் இசைந்தாரும் — அன்பாகிக் 652

கண்டிகையே பூணிற் கலவையே வெண்ணீறுய்க்
கொண்டிகவாச் சார்பு குறித்தாருந் — தொண்டுடனே 653

வாய்மலரான் மாலை வகுத்தலொடு நம்பிறைக்குத்
தூய்மலரான் மாலை தொடுப்பாருஞ் — சார்மலரோன் 654

ஏர்[1]நந்த னப்பணிகண் டிச்சையுற நம்பிறைக்குச்
சீர்நந்த னப்பணிகள் செய்வோரும் — நார்நந்தாத் 655

தீயின்மெழு காச்சிந்தை சேர்ந்துருகி நம்பிறைவாழ்
கோயின்மெழு காகின்ற கொள்கையரும்—மேயினரைத் 656

தாயில் வளர்க்குந் தயவுடைய நம்பெருமான்
கோயில் விளக்குங் குணத்தோருந் — தூயவருள் 657

1. நந்தன் என்பது — நந்து (சங்கு) உடையுவன் — விஷ்ணு.

Koviloor Digital Library

இன்புடனே திபமுத லெல்லாச் சரியைகளும்
அன்புடனே செய்தங் கமர்வாரும் — அன்புடனே 658

அண்ணியமேல் அன்பர்க் கமுதீத லாதிசிவ
புண்ணியமே நாளும் புரிவோரும் — புண்ணியமாந் 659

தேனே! அமுதே! சிவமே! சிவமேயெம்
மானேயென் றேத்தி மகிழ்வாரும் — வானுன 660

மன்னே யருட்கடலே மாணிக்க மேயெங்கள்
அன்னேயென் றுன்னி யமர்வோரும் — நன்னேயப் 661

பண்ணீர் மொழியாற் பரிந்தேத்தி யானந்தக்
கண்ணீர்கொண் டுள்ளங் களிப்போரும் — உண்ணீரிற் 662

பண்டுகண்டுங் காணுப் பரிசினராய்ப் பொன்மேனி
கண்டுகண்டு நாளுங் களிப்போரும் — தொண்டடையும் 663

பொற்பதிக மென்றெண்ணிப் போற்றியொரு மூவர்களின்
சொற்பதிகங் கொண்டு துதிப்போருஞ்—சொற்பனத்தும் 664

மாசகத்திற் சேர்க்காத மாணிக்க மென்றுதிரு
வாசகத்தை வாயான் மலர்வோரும் — வாசகத்தின் 665

மன்னிசைப்பான் மேலோர் வகுத்தேத்தி நின்றதிரு
வின்னிசைப்பா வாதி யிசைப்போரும் — மன்னிசைப்பின் 666

நல்வாழ் வருளுகின்ற நம்பெருமான் மான்மியங்கள்
சொல்வோருங் கேட்டுத் தொழுவோருஞ்—சொல்வாய்ந்த 667

தாதாவென் றன்புடனே சாமகீ தங்கண்முதல்
வேதாகமங்கள் விரிப்போரும் — வேதாந்தஞ் 668

சேர்ந்தோர்க் கருளுஞ் சிவமே பொருளென்று
தேர்ந்தே சிவபூசை செய்வோரும் — ஆர்ந்தேத்தி 669

நன்னெஞ்சே கோயிலென நம்பெருமான் றன்னைவைத்து
மன்னுஞ் சிவநேயம் வாய்ந்தோரும் — முன்னயன்றன் 670

அஞ்செழுத்தெல் லாங்கேட்கு வஞ்செழுத்தா மெம்பெருமான்
அஞ்செழுத்தா லர்ச்சித் தமர்வோரும் — அஞ்செனவே 671

விஞ்சும் பொறியின் விடயமெலா நம்பெருமான்
செஞ்சுசுந் தரப்பதத்திற் சேர்த்தோரும் — வஞ்சஞ்செய் 672

பொய்வே தனைநீக்கும் புண்ணியன்பாற் றம்முயிரை
நைவே தனமாக்கு நல்லோருஞ் — செய்வேலை 673

நீட நடத்தலொடு நிற்றன்முத னம்பெருமான்
ஆட லடித்தியான மார்ந்தோரும் — வாடலறத் 674

தூய நனவிற் சுழுத்தியொடு நம்பெருமான்
நேய நிகழ்த்து நெறியோரும் — மாயமுறு 675

Koviloor Digital Library

மானதுவாய் நின்ற வயநீக்கித் தானற்றுத்
தானதுவாய் நிற்குந் தகையோரும் — வானமதில் 676

வானங்கண் டாடு மயில்போன்று நம்பெருமான்
தானங்கண் டாடுந் தவத்தோரும் — மோனமொடு 677

தாழ்சடையு நீறுஞ் சரிகோ வணக்கீளும்
வாழ்சிவமுங் கொண்டு வதிவோரும் — ஆழ்நிலைய 678

வாரியலை போன்றசுத்த மாயையினு லாம்பூத
காரியங்க ளாதியெலாங் கண்டொழித்து — ஊரியங்கத் 679

28. சிவயோகம்

தஞ்சந் தருமலரோன் றத்துவமாம் பூதங்கள்
அஞ்சும் பொறியஞ்சு மஞ்சறிவும் — அஞ்செனுமோர் 680

வாக்குமுத லஞ்சுமற்று மாலோன்றன் றத்துவமாம்
ஊக்குங் கலைமுதலா மோரேழும் — நீக்கியப்பால் 681

மேவி விளங்குசுத்த வித்தைமுத ஞதமட்டுந்
தாவி வயங்குசுத்த தத்துவத்தின் — மேவியகன்(று) 682

அப்பால் அருள்கண் டருளாற் றமைத்தாங்கண்டு
அப்பாற் பரவெளிகண் டப்பாலுக்—கப்பாலும் 683

தீராச் சுயமாய்ச் சிதானந்த மாமொளியைப்
பாரா விருந்த படியிருந்து — பேராது 684

கண்டதுவென் றென்றுங் கலவாது தாங்கலந்து
கொண்டசிவ யோகியராங் கொற்றவரும்—அண்டரிய 685

சத்துவத்திற் சத்துவமே தம்முருவாய்க் கொண்டுபர
தத்துவத்தி னிற்குந் தகவோரும் — அத்துவத்தில் 686

தீதுஞ் சுகமுஞ் சிவன்செயல்என் றெண்ணிவந்த
யாதுஞ் சமமா விருப்போரும் — கோதுபடக் 687

கூறுங் குறியுங் குணமுங் குலமுமடி
யீறுங் கடையு மிகந்தோரும் — வீறுகின்ற 688

சேந்தி னடைந்தவெலாஞ் சீரணிக்கச் சேர்சித்த
சாந்தி யுடனே சரிப்போருஞ் — சாந்திபெறத் 689

தம்மையுறுஞ் சித்தெவையுந் தாமுவத்தல் செய்யாமற்
செம்மையுடன் வாழுந் திறலோரும் — எம்மையினும் 690

ஆராமை யோங்கு மவாக்கடனீர் மான்குளம்பில்
நீராக நீந்தி நிலைத்தோருஞ் — சேராது 691

தம்பொருளைக் கண்டே சதானந்த வீட்டினிடைச்
செம்பொருளைச் சார்ந்த திறத்தோரும்—மண்பொருள்போய்த்

Koviloor Digital Library

[1]தாய ரெனமாதர் தம்மையெண்ணிப் பாலர்பித்தர்
பேயரென நண்ணும் பெரியோரும் — ஈயதனின் 693

எப்பரிசா மோர்திரண மெவ்வுலகுஞ் செய்தளிக்க
மெய்ப்பரிசஞ் செய்யவல்ல வித்தகரும் — எய்ப்படவே 694

யாவு மறிந்து மறியார்போன் றெப்பொழுதுஞ்
சாவும் பிறப்புந் தவிர்ந்தோரும் — ஓவலின்றி 695

வைதிடினும் வாழ்கவென வாழ்த்தி யுபசாரஞ்
செய்திடினுந் தன்மை திறம்பாரும் — மெய்வகையில் 696

தேரு வுலகஞ் சிவமயமாய்க் கண்டெங்கும்
ஏரு திழியா திருப்போரும் — மாருது 697

மோனந்தான் கொண்டு முடிந்தவிடத் தோங்குபர
மானந்தா தீதத் தமர்ந்தோருந் — தாநந்தாச் 698

சாதுக்க ளாமவர்தஞ் சங்க மகத்துவத்தைச்
சாதுக்க ளன்றியெவர் தாமறிவார் — நீதுக்க 699

நீங்கியன்னோர் சங்கத்தி னின்றுமகிழ்ந் தேத்திநிதம்
ஆங்கவர்தாட் குற்றேவ லாய்ந்தியற்றி — ஓங்குசிவ 700

பஞ்சா ஸூரத்தைப் பகரருளே நாவாக
எஞ்சாப் பரிவுடனே யெண்ணிஅருட் — செஞ்சோதித் 701

தாதொன்று தும்பைமுடித் தாணுவடி யொன்றிமற்றை
யாதொன்றும் நோக்கா தமைந்திடுக! — தீதென்ற 702

பாழ்வாழ்வு நீங்கப் பதிவாழ்வி லெஞ்ஞான்றும்
வாழ்வாய் என்னேடு மகிழ்ந்து! 703

திருச்சிற்றம்பலம்

1. மண்ணாசை பொன்னாசைகளை முற்றுந் துறந்தவர்களும் பசிப்பிணியால் மெலிகின்ற ஓரோர் காலத்து, மாதரும் உணவு கொடுத்தற்குரிய ராகலின், தாயரென மாதர் தம்மை யெண்ணும் பெரியோர் என்று காட்டியவாறு காண்க. அன்றியும், மூவாசைகளில் மண்ணாசையும் பொன்னாசையும் அறவே ஒழித்தவர்களுக்கும், பெண்ணாசை ஒழிவது அருமையாதலால், மாதரைத் தாயரென எண்ணவேண்டும் என்னும் உபாயவகையை உணர்த்திய வாறுமாம்.

Koviloor Digital Library

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

நாலாவது

சிவநேச வெண்பா

காப்பு

நேரிசை வெண்பா.

திருச்சிற்றம்பலம்

முன்னவனே யானை முகத்தவனே முத்திநலஞ்
சொன்னவனே தூய்மெய்ச் சுகத்தவனே — மன்னவனே
சிற்பரனே ஐங்கரனே செஞ்சடையஞ் சேகரனே
தற்பரனே நின்றாள் சரண். 1

வீறுடையாய் வேலுடையாய் வெற்புடையாய் விண்ணுடையாய்
நீறுடையாய் நேயர்கள் தம் நெஞ்சுடையாய் — கூறு
முதல்வா ஓராறு முகவாமுக் கண்ணன்
புதல்வாநின் றாளெம் புகல். 2

திருச்சிற்றம்பலம்

சீர்சான்ற வேதச் செழும்பொருளே சிற்சொருபப்
பேர்சான்ற வுண்மைப் பிரமமே — நேர்சான்றோர்
நாடும் பரசிவமே நாயேனுக்கு அன்புநின்பால்
நீடும் படிநீ நிகழ்த்து. 1

நினைப்பித்தா நித்தா நிமலா வெனநீ
நினைப்பித்தால் ஏழை நினைப்பேன் — நினைப்பின்
மறப்பித்தால் யானு மறப்பேன் எனையும்
பிறப்பித்தா யென்னலென் பேசு. 2

உருவா யுருவி லுருவாகி யோங்கி
அருவா யருவி லருவாய் — ஒருவாமல்
நின்றாயே நின்ற நினைக்காண்ப தெவ்வாறோ
என்தாயே யென்தந்தை யே. 3

வெஞ்சஞ் சலமா விகார மெனும்பேய்க்கு
நெஞ்சம் பறிகொடுத்து நிற்கின்றேன் — அஞ்சலென
எண்டோ ளிறையே யெனையடிமை கொள்ளமனம்
உண்டோ விலையோ வுரை. 4

Koviloor Digital Library

அப்பாலுன் சித்த மறியேன் எனக்கம்மை
யப்பாநின் றுவன்றி யார்கண்டாய் — இப்பாரில்
சாதியுரு வாக்குந் தனையவிழ்த்துத் தன்மயமாஞ்
சோதியுரு வாக்குந் துணை. 5

பேரறிவாற் கண்டும் பெரியோர் அறியாரேல்
யாரறிவார் யானோ அறிகிற்பேன் — சீர்கொள்
வெளியாய் வெளிக்குள் வெளியாய் ஒளிக்குள்
ஒளியாகி நின்ற வுனை. 6

[1]**வந்தித்தேன்** பிட்டுகந்த வள்ளலே நின்னடியான்
சிந்தித்தே னென்றல் சிரிப்பன்றோ — பந்தத்தாஞ்
சிந்துசிந்திப் பித்தெனது சிந்தையுள்நின் பொன்னருளே
வந்துசிந்திப் பித்தன் மறந்து. 7

தேனென்ற வின்சொற் றெரிந்துநினைப் பாடுகின்றேன்
நானென் றுரைத்தல் நகையன்றோ — வானின்ற
ஒண்பொருணீ யுள்ள முவந்தருளா வின்சொல்லும்
வண்பொருளு மீதன் மறந்து. 8

அண்டங்க ளோஅவற்றி னப்பாலோ இப்பாலோ
பண்டங்க ளோசிற் பரவெளியோ — கண்டங்க
வெம்பெருமா னீத்தவர்தம் மெய்யுளமோ தையலொடும்
எம்பெருமான் நீவா ழிடம். 9

பூதமெங்கே மற்றைப் புலனெங்கே பல்லுயிரின்
பேதமெங்கே யண்டமெனும் பேரெங்கே — நாதமெங்கே
மன்வடிவ மெங்கே மறையெங்கே வான்பொருள்நீ
பொன்வடிவங் கொள்ளாத போது. 10

பேருருவோ சோதிப் பிழம்பாகுஞ் சின்மயத்தின்
சீருருவோ தேவர் திருவுருவம் — நேருருவிற்
சால்புறச்சே ரண்ட சராசரங்க ளெல்லாநுங்
கால்விரற்பால் நின்றொடுங்குங் கால். 11

இன்றோ பகலோ இரவோ வருநாளில்
என்றோ வறியேன் எளியேனே — மன்றோங்கும்
தாயனையாய் நின்னருளாந் தண்ணமுத முண்டு(உ)வந்து
நாயனையேன் வாழ்கின்ற நாள். 12

மண்ணாசை வெற்பே மறிகடலே பொன்னாசை
பெண்ணாசை யொன்றேயென் பேராசை — நண்ணாசை
விட்டார் புகழும் விடையாய்நான் பொய்யாசைப்
பட்டால் வருமே பதம். 13

1. வந்தி தேன் எனற்பாலது — வந்தித்தேனென விரித்தல் விகாரமாயிற்று; ஈண்டு தேன் என்பது — இனிமை.

Koviloor Digital Library

தந்தையா யென்னுடைய தாயாய்த் தகைசான்ற
சிந்தையா யென்னருமைத் தேசிகனாய் — முந்தையாய்
நீடு மறைமுதலாய் நின்றாயென் னேநெஞ்சம்
வாடுமென்னை யாட்கொள்ளா வாறு. 14

ஊட்டுகின்ற வல்வினையாம் உட்கயிற்றா லுள்ளிருந்தே
ஆட்டுகின்ற நீதா னறிந்திலையோ — வாட்டுகின்ற
அஞ்சுபுல வேடர்க் கறிவைப் பறிகொடுத்தென்
நெஞ்சுபுலர்ந் தேங்கு நிலை. 15

ஆமோ வலவோ அறியேன் சிறியேனான்
தாமோ தரனுஞ் சதுமுகனுந் — தாமே
அடியா ரிக்கு மரசேநின் னேவல்
அடியார்குற் றேவலடி யன். 16

உன்னு லெனக்காவ துண்டதுநீ கண்டதுவே
என்னா லுனக்காவ தேதுளது — சொன்னால்யான்
தந்தார்வத் தோடுந்த லைமேற்கொண் டுய்கிற்பேன்
எந்தாயிங் கொன்றுமறி யேன். 17

சென்றுரைப்பார் சொல்லிற் **சிறியான் பயமறியான்**
என்றுரைப்பா ராங்கதுமற் றென்னளவே — மன்றகத்தோய்
அஞ்சேல் விழியாரை யந்தகனைன் பார்மொழியை
அஞ்சேன் சிறிது மறிந்து. 18

எந்தாய்நின் அன்பர்தமக் கின்னமுத மிட்டேத்திச்
சிந்தா நலமொன்றுஞ் செய்தறியேன் — நந்தாச்
சுவருண்ட மண்போலுஞ் சோறுண்டேன் மண்ணில்
எவருண் டெனைப்போ லியம்பு. 19

உப்பிருந்த வோடோ ஓதியோ வுலாப்பிணமோ
வெப்பிருந்த காடோ வினைச்சுமையோ — செப்பறியேன்
கண்ணப்ப ருக்குக் கனியனையாய் நிற்பணியா(து)
உண்ணப் பருக்கும் **உடம்பு.** 20

ஏலார் மனைதொறும்போ யேற்றெலும்புந் தேயநெடுங்
காலாய்த் திரிந்துழலுங் கால்கண்டாய் — மாலாகித்
தொண்டே வலஞ்செய்கழற் றேன்றலே நின்கோயிற்
கண்டே வலஞ்செய்யாக் **கால்.** 21

ஏசும் பிறர்மனையில் ஏங்கவவர் ஈயுமரைக்
காசும் பெறவிரிக்குங் கைகண்டாய் — மாசுந்த
விண்டுஞ் சிரங்குனிக்கும் வித்தகனே நின்தலத்தைக்
கண்டுஞ் சிரங்குவியாக் **கை.** 22

Koviloor Digital Library

வெங்கோடை யாதபத்தின் வீழ்நீர் வறந்துலர்ந்து
மங்கோடை யாதல் வழக்கன்றே — எங்கோ நின்
சீர்சிந்தாச் சேவடியின் சீர்கேட்டு மானந்த
நீர்சிந்தா வன்கண் ணிலை. 23

வாயன்றேல் வெம்மலஞ்செல் வாயன்றேன் மாநரக
வாயன்றேல் வல்வெறிநாய் வாயென்பாம் — தாயென்றே
[1]ஊழ்த்தாதா ஏத்தும் உடையாய் சிவவென்றே
வாழ்த்தாதார் நாற்றப்பாழ் வாய். 24

வீட்டா ரிறைநீ விடைமேல் வரும்பவனி
காட்டா தடைத்த கதவன்றே — நாட்டாதி
நல்லத் துளையா நதிச்சடையா வென்னுஞ்சீர்ச்
செல்லத் துளையாச் செவி. 25

புல்லங் கணநீர்ப் புழையென்கோ புற்றென்கோ
சொல்லும் பசுமட் டுளையென்கோ — சொல்லுஞ்சீர்
வீயாத [2]பிஞ்ஞகப்பேர் மெல்லினத்தி னல்லிசைதான்
தோயாத நாசித் துளை. 26

தோற்றமிலாக் கண்ணுஞ் சுவையுணரா நாவுநிகழ்
நாற்ற மறியாத நாசியுமோர் — மாற்றமுந்தான்
கேளாச் செவியுங்கொள் கீழ்முகமே நீற்றணிதான்
மூளாது பாழ்த்த முகம். 27

மான்றும் உலக வழக்கின் படிமதித்து
மூன்று வகிர்ந்தே முடைநாற — ஊன்று
மலக்கூடை யேற்றுகினு மாறுதே தென்பால்
தலக்கூடற் றுழாத் தலை. 28

கல்லென்கோ நீரடைக்குங் கல்லென்கோ கான்கொள்கருங்
கல்லென்கோ காழ்வயிரக் கல்லென்கோ — சொல்லென்கோ
இன்று லெனிலோ எடுத்தாளெம் ஈன்றுணோர்
நின்றுள் நினையாத நெஞ்சு. 29

சொல்லுகின்ற வுள்ளுயிரைச் சோர்வுற் றிடக்குளிர்ந்து
கொல்லுகின்ற நஞ்சிற் கொடிதன்றே — ஒல்லுமன்றத்
தெம்மானின் றுட்கமலம் எண்ணுது பாழ்வயிற்றிற்
சும்மா அடைக்கின்ற சோறு. 30

சோர்படைத்துச் சோறுன்றுற் றுண்டைவிக்கிக்கொண்டுநடு
மார்படைத்துச் சாவுகினு மானன்றே — சீர்ப்படைக்க
எண்ணுவா ரெண்ணு மிறைவாநின் றுளேத்தா(து)
உண்ணுவா ருண்ணு மிடத்து. 31

1. ஊழ்த்தாதா — பிரமன். 2. பிஞ்ஞகன் — சிவபிரானது திருநாமங்களுள் ஒன்று; மெல்லின எழுத்துக்களை உச்சரிப்பதற்கு இடமாகிய நாசியைப் பெற்றதின்பயன் மெல்லின எழுத்துக்களாலாகிய பிஞ்ஞகன் முதலிய திருநாமங்களை ஓதுதலேயாம்.

Koviloor Digital Library

ஓகோ கொடிதே யுறும்புலைய ரில்லினிடத்
தேகோ வதைத்துண் செயலன்றே! — வாகோர்தம்
வாழ்மனையிற் செல்லாது வள்ளனினை யேத்தாதார்
பாழ்மனையிற் சென்றுண் பது. 32

வீயுமிடு காட்டகத்துள் வேம்பிணத்தின் வெந்தசையைப்
பேயுமுட னுண்ணவுண் ணும்பே றன்றே — தேயுமயல்
நீங்கவருள் செய்வோய்வெண் ணீறணியார் தீமனையில்
ஆங்கவரோ டுண்ணு மது. 33

கண்குழைந்து வாடுங் கடுநரகின் பேருரைக்கில்
ஒண்குழந்தை யேனுமுலை யுண்ணுதால் — தண்குழைய
பூண்டாதார்க் கொன்றைப் புரிசடையோய் நின்புகழை
வேண்டாதார் வீழ்ந்து விரைந்து. 34

கண்ணுதலே நின்றாட் கருதாரை நேசிக்க
எண்ணுதலே செய்யேன்மற் றெண்ணுவனேன்—மண்ணுலகில்
ஆமிடத்து நின்னடியார்க் காசையுரைத் தில்லையென்பார்
போமிடத்திற் போவேன் புலர்ந்து. 35

அங்கணனே நின்னடிக்கோ ரன்பிலரைச் சார்ந்தோர்தம்
[1]வங்கணமே வைப்பதினுன் வைத்தேனேல் — அங்கணத்தில்
நீர்போ லெனது நிலைகெடுக நிற்பழிசொற்
றூர்போ லழிக தளர்ந்து. 36

பூவைவிட்டுப் புல்லெடுப்பார் போலுன் திருப்பாதத்
தேவைவிட்டு வெம்பிறவித் தேவர்களைக் — கோவையிட்டுக்
கூவுவார் மற்றவரைக் கூடியிடேன் கூடுவனேல்
ஓவுவா [2]ராவ லுனை. 37

யாதோ கனற்கண் யமதூதர் காய்ச்சு[3]கருந்
தாதோ தழற்பிழம்போ தானறியேன் — மீதோங்கு
நாட்டாதார்க் கொன்றை நதிச்சடையோய் அஞ்செழுத்தை
நாட்டாதார் வாய்க்கு நலம். 38

என்னெஞ்சோர் கோயி லெனக்கொண்டோய் நின்னினையார்
தன்னெஞ்சோ கல்லாமச் சாம்பிணத்தார் — வன்னெஞ்சிற்
சார்ந்தவர்க்கு மற்றவரைத் தாளுக்கி வார்த்தைசொல
நேர்ந்தவர்க்குங் கல்லாகு நெஞ்சு. 39

வெள்ளமுதுந் தேனும் வியன்கரும்பு முக்கனியின்
உள்ளமுதுந் தெள்ளமுது மொவ்வாதாற், — கள்ளமிலா
நின்னன்பர் தம்புகழி னின்மதுரந் தன்னையினி
என்னென்ப தையா இயம்பு. 40

1. வங்கணம் என்பது — நட்பு. 2. ஆவல் என்பதனை எதிர்காலத்தன்மை யொருமை வினைமுற்றாகக் கொள்க. 3. கருந்தாது — இரும்பு.

Koviloor Digital Library

பண்ணாலுன் சீரிசைச்சம் பந்தர்சொல வெள்ளெலும்பு
பெண்ணான தென்பார் பெரிதன்றே — அண்ணாவச்
சைவவடி வாஞான சம்பந்தர் சீருரைக்கில்
தெய்வவடி வாஞ்சாம்பர் சேர்ந்து. 41

எங்கோவே யான்புகலி யெம்பெருமான் தன்மணத்தில்
அங்கோர் பொருட்சுமையா னானேனேல் — இங்கேசின்
தாள்வருந்த வேண்டேன் றடைபட்டேன் ஆதலினிந்
நாள்வருந்த வேண்டுகின்றேன் நான். 42

பூவுக் கரையரும்வான் புங்கவரும் போற்றுதிரு
நாவுக் கரையரென நன்னுமம் — மேவுற்ற
தொண்டர்க்கு நீகட்டுச் சோறெடுத்தா யென்றறிந்தோ
தொண்டர்க்குத் தொண்டனென்பார் சொல். 43

[1]**எம்பரவை** யோமண் ணிடந்தலைந்தான் சுந்தரனுர்
தம்பரவை விட்டுத் தலைக்கடையாய் — வம்பணையாய்
வாயிற் படியாய் வடிவெடுக்க நேர்ந்திலனே
மாயப் பெயர்நீண்ட மால். 44

நண்ணித் தலையால் நடக்கின்றே மென்பதெங்கண்
மண்ணிற் பழைய வழக்கங்காண் — பண்ணிற்சொல்
அம்மையார் வாமத்தோ யாயினுமுன் காரைக்கால்
அம்மையார் போனடந்தா ரார். 45

வேத முடிவோ விளங்கா கமமுடிவோ
நாத முடிவோ நவில்கண்டாய் — வாதமுறு
மாசகர்க்கு ணில்லா மணிச்சுடரே மாணிக்க
வாசகர்க்கு நீயுரைத்த வாறு. 46

ஆர்கொண்டார் செய்க்கறியிட் டாரே[2]சிறுத்தொண்டப்
பேர்கொண்டா ராயிடிலெம் பெம்மானே — ஓர்தொண்டே
நாய்க்குங் கடைப்பட்ட நாங்களென்பே மெங்கண்முடை
வாய்க்கிங் கிஃதோர் வழக்கு. 47

கோள்கொண்ட நஞ்சங் குடியேனே கூர்கொண்ட
வாள்கொண்டு வீசி மடியேனே — கீள்கொண்ட
வங்கோ வணத்தழகா! அம்பலவா! நின்புகழை
இங்கோதி வாழ்த்தாத யான். 48

ஆயாக் கொடியேனுக்கு அன்புடையாய்! நீயருளிங்(கு)
ஈயாக் குறையே யிலைகண்டாய்! — [3]மாயாற்கும்
விள்ளாத் திருவடிக்கீழ் விண்ணப்பம் யான்செய்து
கொள்ளாக் குறையே குறை. 49

---

1. எம்பர! என்பது — அண்மைவிளி; இறை - முன்னிலை.
2. செயற்கரிய செய்த பெரியோர்க்கு 'சிறுத்தொண்டர்' எனப் பெயர் அமைவதாயின், 'தொண்டர்' எனும் பெயர்க்கு உரியார் யாரோ! என்பதாம்.
3. மாயற்கு என்பது — மாயாற்கென நீட்டல் விகாரமாயிற்று.

Koviloor Digital Library

பெற்றிடுதாய் போல்வதுநின் பெற்றியென்பேன் பிள்ளையது
மற்றழுதாற் கேட்டும் வராதங்கே — சற்றிருக்கப்
பெற்றாள் பொறுப்பள் பிரானீ பொறுக்கினுநின்
பொற்றாள் பொருவெம் புலம்பு. 50

பொன்போற் பொறுமையுளார் புந்திவிடாய் நீயென்பார்
என்போற் பொறுமையுளார் யார்கண்டாய் — புன்போக
வல்லாம் படிசினங்கொண் டாணவஞ்செய் யின்னுமை
யெல்லாம் பொறுக்கின்றேன் யான். 51

முன்மணத்திற் சுந்தரரை முன்வலுவிற் கொண்டதுபோல்
என்மணத்தில் நீவந் திடாவிடினும் — நின்கணத்தில்
ஒன்று மொருகணம்வந் துற்றழைக்கிற் செய்ததன்றி
இன்று மொருமணஞ்செய் வேன். 52

செய்யா ரழலேநின் செம்மேனி யென்னினுமென்
அய்யாநின் கால்பிடித்தற் கஞ்சேன்காண் — மெய்யாவிஞ்
ஞான்றுகண்டு நான்மகிழ நந்தொண்ட னென்றெனையும்
ஏன்றுகொண்டாற் போது மெனக்கு. 53

என்பாலோ வென்பா லிராதோடு கின்றமனத்
தின்பாலோ வம்மனத்தைச் சேர்மாயை — தன்பாலோ
யார்பாற் பிழையுளதோ யானறியேன் என்னம்மை
யோர்பாற் கொளநின்றோ யோது. 54

நாணவத்தி னேன்றனையோ நாயேனை மூடிநின்ற
ஆணவத்தை யோநா னறியேனே — வீணவத்திற்
றீங்குடையா யென்னவிவண் செய்பிழையை நோக்கியருட்
பாங்குடையாய் தண்டிப் பது. 55

எச்சம் பெறுமுலகோர் **எட்டிமர மானாலும்**
பச்சென் றிருக்கப் பகர்வார்காண் — வெச்சென்ற
நஞ்சனையேன் குற்றமெலா நாடா து நாதவெனை
அஞ்சனையே லென்பா யமர்ந்து. 56

கற்றறியே னின்னடிச்சீர் கற்றார் கழகத்தில்
உற்றறியே னுண்மை புணர்ந்தறியேன் — சிற்றறிவேன்
வன்செய்வே னோர்விழியார் மையலினேன் மாதேவா
என்செய்வே னின்னருளின் றேல். 57

மெய்தா னுடையோர் விரும்புகின்ற **நின்னருளென்**
செய்தால் வருமோ? தெரியேனே — பொய்தாவு
நெஞ்சினேன் மன்று ணிருந்தா நினைக்கேழ்க்க
அஞ்சினே னன்பின்மை யால். 58

Koviloor Digital Library

மாதேவா வோவா மருந்தேவா மாமணியிப்
போதேவா வென்றே புலம்புற்றேன் — நீதாவா
யானாலுன் சித்த மறியே னுடம்பொழிந்து
போனாலென் செய்வேன் புகல். 59

கொன்செய்தாற் கேற்றிடுமென் குற்றமெலா மையவெனை
என்செய்தாற் றீர்ந்திடுமோ யானறியேன் — முன்செய்தோய்
நின்பா லெனைக்கொடுத்தே னீசெய்க வன்றியினி
யென்பாற் செயலொன் றிலை. 60

எண்ணிலெளி யேன்றலிர வெல்லா வுயிர்களுநின்
தண்ணிலகுந் தாணீழல் சார்ந்திடுங்காண் — மண்ணில்வருந்
தீங்கென்ற வெல்லாமென் சிந்தையிசைந் துற்றனமற்
றுங்கொன்று மில்லாமை யால். 61

தாரம்விற்றுஞ் செய்விற்றுந் தன்னைவிற்றும் பொய்யாத
வாரம்வைத்தான் முன்னிங்கோர் மன்னனென்பர் - நாரம்வைத்த
வேணிப் பிரானதுதான் மெய்யாமே லன்றெனைநீ
யேணிற் பிறப்பித்த தில். 62

உள்ளொன்ற நின்னடிக்கன் புற்றறியே னென்னுளத்தின்
வெள்ளென்ற வன்மை விளங்காதோ — நல்லொன்ற
வச்சங்கொண் டேனைநினக் கன்பனென்பர் வேழத்தின்
எச்சங்கண் டாற்போல வே. 63

[1]**நீத்தாடுஞ்** செஞ்சடையாய் நீள்வேடங் கட்டிவஞ்சக்
கூத்தாடு கின்றேனைக் கொண்டுசிலர் — கூத்தாநின்
பத்தனென்ப ரென்னே பகல்வேடத் தார்க்குமிங்கு
[2]வித்தமிலர் நாயேற்கும் வேறு. 64

அன்புடையா ரின்சொல் லமுதேற நின்செவிக்கே
இன்புடையா யென்பொய்ப் மேற்குங்கொல்—துன்புடையேன்
பொய்யுடையே னாயினுநின் பொன்னருளை வேண்டுமொரு
மெய்யுடையே னென்கோ விரைந்து. 65

என்னு ருயிர்க்குயிரா மெம்பெருமா னின்பதத்தை
உன்னு ருயிர்க்குறுதி யுண்டோதான் — பொன்னுகத்
தார்க்குஞ் சதுமுகர்க்குந் [3]தானத்த வர்க்குமற்றை
யார்க்கும் புகலுன் னருள். 66

வெள்ளைப் பிறையணிந்த வேணிப் பிரானேநான்
பிள்ளைப் பிராயத்திற் பெற்றுளை — எள்ளப்
பொறுத்தாளத் தாயிற் பொறுப்புடையோய் நீதான்
வெறுத்தா லினியென்செய் வேன். 67

1. **நீத்தம்** என்பது — **நீத்**தெனக்குறைந்து நின்றது.
2. **வித்தம்** என்பது — **அறிவு**. 3. **தானம்** என்பது — **சுவர்க்கம்**.

Koviloor Digital Library

ஆயிரமன் றேநூறு மன்றேயீ ரைந்தன்றே
ஆயிரம்பே ரெந்தையெழுத் தைந்தேகாண் — நீயிரவும்
எல்லு நினைத்தியென ஏத்துகினு மெந்தாய்வீண்
செல்லுமன மென்செய்கேன் செப்பு. 68

வஞ்சந் தருங்காம வாழ்க்கையிடைச் சிக்கியவென்
நெஞ்சந் திருத்தி நிலைத்திலையே — எஞ்சங்
கரனே மழுக்கொள் கரனே அரனே
வரனே சிதம்பரனே வந்து. 69

தாழ்விக்கும் வஞ்சச் சகமா லொழித்தென்னை
வாழ்விக்கு நல்ல மருந்தென்கோ — வீழ்விக்கு
மீங்கான மாயை யிகந்தோர்க் கருள்வோய்நின்
பாங்கான செம்பொற் பதம். 70

ஏசொலிக்கு மானிடனா யேன்பிறந்தேன் றொண்டர்கள்தம்
தூசொலிப்பான் கல்லாகத் தோன்றிலனே — தூசொலிப்பான்
கல்லாகத் தோன்றுவனேற் காளகண்டா! நாயேனுக்
கெல்லா நலமுமுள தே. 71

குற்றம் பலசெயினுங் கோபஞ் செயாதவருட்
சிற்றம் பலமுறையுஞ் சிற்பரனே — வெற்றம்பற்
பொய்விட்டா லன்றிப் புரந்தருளே னென்றெனைநீ
கைவிட்டா லென்செய்கேன் காண். 72

தீக்குணத்தார் யாவருமென் சீடரெனி லென்னுடைய
தீக்குணத்தி னெல்லையெவர் தேர்கிற்பார் — ஊக்கமிகும்
நல்லோர்க் களிக்கு நதிச்சடையோ யெற்கருளில்
எல்லார்க்கு மையுறவா மே. 73

இன்படையான் றன்புடையா னென்றேழை யேன்றலைமேல்
அன்புடையாய் நீயமைப்பித் தாயிதற்கு — வன்படையா
தெவ்வண்ண நின்னெஞ் சிசைந்ததோ அந்நாளில்
இவ்வண்ண மென்றறிகி லேன். 74

ஏய்ப்பிறப்பொன் றில்லாதோ யென்பிறப்பி னேழ்மடங்கோர்
பேய்ப்பிறப்பே நல்ல பிறப்பந்தோ — வாய்ப்புலகம்
வஞ்சமெனத் தேக மறைத்தடிமண் வையாமல்
அஞ்சிநின்னோ டாடு மது. 75

கோடும் பிறைச்சடையோய் கோளுங் குறும்புஞ்சாக்
காடும் பிணிமூப்புங் காணார்காண் — நீடுநினைக்
கண்டா ரடிப்பொடியைக் கண்டார் திருவடியைக்
கண்டார் வடிவுகண்டார் கள். 76

Koviloor Digital Library

மாலெங்கே வேதனுயர் வாழ்வெங்கே இந்திரன்செங்
கோலெங்கே வானோர் குடியெங்கே — கோலஞ்சேர்
அண்டமெங்கே யவ்வவ் வரும்பொருளெங் கேநினது
கண்டமங்கே நீலமுருக் கால்! 77

எவ்வேளை யோவருங்கூற் றெம்பாலென் றெண்ணுகின்ற
அவ்வேளை தோறு மழுங்குற்றேன் — செவ்வேளை
மிக்களித்தோய் நின்கழற்கால் வீரத்தை யெண்ணுதொறும்
எக்களித்து வாழ்கின்றேன் யான். 78

துற்சங்கத் தோர்களைமுந் தோயாது நின்னடியார்
சற்சங்கத் தென்றனைநீ தான்கூட்டி — நற்சங்கக்
காப்பான் புகழுங் கழற்புகழைக் கேட்பித்துக்
காப்பா யிஃதென் கருத்து. 79

என்னமுதே முக்க ணிறையே நிறைஞான
வின்னமுதே நின்னடியை யேத்துகின்றோர் — பொன்னடிக்கே
காதலுற்றுத் தொண்டுசெயக் காதல்கொண்டே னெற்கருணை
காதலுற்றுச் செய்தல் கடன். 80

ஆரா வமுதே யருட்கடலே நாயேன்றன்
பேராத வஞ்சப் பிழைநோக்கி — யாரேனும்
நின்போல்வா ரில்லாதோய் நீயே புறம்பழித்தால்
என்போல்வா ரென்சொல்லா ரீங்கு. 81

மெய்யாக நின்னைவிட வேறோர் துணையில்லேன்
ஐயா வதுநீ யறிந்ததுகாண் — பொய்யான
தீதுசெய்வேன் றன்பிழையைச் சித்தங் குறித்திடில்யான்
யாதுசெய்வே னந்தோ வினி. 82

திண்ண மறியாச் சிறியே னுளத்திருக்கும்
எண்ண மறிந்தா யிரங்குகிலாய் — அண்ணலுன்பால்
நித்த மிரங்காவென் னெஞ்சமர்ந்த தாலோநின்
சித்த மிரங்காச் செயல். 83

கொன்னெஞ்சேன் றன்பிழையைக் கூர்ந்துற்று நானினைக்கில்
என்னெஞ்சே யென்னை யெரிக்குங்காண் — மன்னுஞ்சீர்
எந்தாய்நின் சித்தத்திற் கேதாமோ நானறியேன்
சிந்தா குலனென்செய் வேன். 84

நின்னன்பர் தம்பா னிறுத்துதியோ வன்றியெனைப்
பொன்னன்பர் தம்பாற் புணர்த்துதியோ — [1]பொன்னன்பர்
வைவமே யென்னும் நெறியே னறியேனென்
தெய்வமே நின்றன் செயல். 85

1. பொன்னன்பர் என்பது — செல்வர்.

Koviloor Digital Library

என்சிறுமை நோக்கா தெனக்கருளல் வேண்டுமென்றே
நின்பெருமை நோக்கியிங்கு நிற்கின்றேன் — என்பெரும!
யாதோநின் சித்த மறியே னடியேற்கெப்
போதோ வருள்வாய் புகல். 86

எந்தாயென் குற்றமெலா மெண்ணுங்கா லுண்ணடுங்கி
நொந்தா குலத்தி னுழைகின்றேன் — சிந்தாத
காள மகிழ்நின் களக்கருணை யெண்ணுதொறு
மீளமகிழ் கின்றேன் விரைந்து. 87

எள்ளலே யென்னினுமோ ரேத்துதலாய்க் கொண்டருளெம்
வள்ளலே யென்றனைநீ வாழ்வித்தால் — தள்ளலே
வேண்டுமென யாரே விளம்புவார் நின்னடியர்
காண்டுமெனச் சூழ்வார் களித்து. 88

வேணிக்க மேவைத்த வெற்பே விலையில்லா
மாணிக்க மேகருணை மாகடலே — மாணிக்கு
முன்பொற் கிழியளித்த முத்தேயென் னுருயிர்க்கு
நின்பொற் கழலே நிலை. 89

முத்தேவர் போற்று முதற்றேவ நின்னையன்றி
எத்தேவர் சுற்றே யெடுத்துரைநீ — பித்தேன்செய்
குற்றமெலா மிங்கோர் குணமாகக் கொண்டென்னை
அற்றமிலா தாள்கின் றவர். 90

கங்கைச் சடையாய்முக் கண்ணுடையாய் கட்செவியாம்
அங்கச் சுடையா யருளுடையாய் — மங்கைக்
கொருகூ றளித்தா யுனைத்தொழுமிந் நாயேன்
இருகூ றளித்தே லிடர்க்கு. 91

பேசத் தெரியேன் பிழையறியேன் பேதுறினுங்
கூசத் தெரியேன் குணமறியேன் — நேசத்திற்
கொள்ளுவா ருன்னடிமைக் கூட்டத்தா ரல்லாதார்
எள்ளுவார் கண்டா யெனை. 92

ஊணே யுடையேயென் றுட்கருதி வெட்கமிலேன்
வீணேநன் னாளை விடுகின்றேன் — காணேநின்
செம்பாத மேயென்றுந் தீராப் பொருளென்று
நம்பாத நாயடியே னேன். 93

சிவமே சிவஞானச் செல்வமே யன்பர்
நவமே தவமே நலமே — நவமாம்
வடிவுற்ற தேவேநின் மாக்கருணை யன்றோ
படிவுற்ற வென்னுட் பயன். 94

Koviloor Digital Library

கோளாக்கிக் கொள்ளுங் கொடியே னையுநினக்கோர்
ஆளாக்கிக் கொள்ளற் கமைவாயேல் — நீளாக்குஞ்
செங்கேச வேணிச் சிவனேயென் னாணவத்திற்
கெங்கே யிடங்கா ணியம்பு. 95

திண்ணஞ்சற் றீந்திடநின் சித்தந் திரும்பாத
வண்ணஞ்சற் றேதெரிய வந்ததுகாண் — எண்ணெஞ்சின்
இத்தனையு மென்வினைகள் நீங்கி யிருக்கவண்ட
மெத்தனையும் போதாமை யென்று. 96

இண்டைச் சடையோ யெனக்கருள வெண்ணாதியேல்
தொண்டைப் பெறுமென் துயரெல்லாஞ்—சண்டைக்கிங்(கு)
[1]உய்ஞ்சே மெனவோடு மோட்டத்திற் கென்னுடைய
நெஞ்சே பிறகிடுங்கா ணின்று. 97

கண்ணா ணிழுதைகள்பாற் காட்டிக் கொடுக்கிலெனை
அண்ணா வருளுக் கழகன்றே — உண்ணாடு
நின்னடியார் கூட்டத்தில் நீரிவனைச் சேர்த்திடுமின்!
என்னடியான் என்பா யெடுத்து. 98

கண்ணப்ப னேத்துநுதற் கண்ணப்பு! மெய்ஞ்ஞான
விண்ணப்ப **நின்றனக்கோர் விண்ணப்பம்** — மண்ணிற்சில
வானவரைப் போற்று மதத்தோர் பலருண்டு
நானவரைச் சேராம னாட்டு. 99

பொன்னரின் றொளிரும் புரிசடையோய் நின்னையன்றிப்
பின்னொன் றறியேன் பிழைநோக்கி — **என்னை**
அடித்தாலு நீயே அணைத்தாலு நீயே
பிடித்தேனுன் பொற்பாதப் பேறு. 100

துற்குணத்தில் வேறு தொடர்வே னெனினுமற்றை
நற்குணத்தி லுன்சீர் நயப்பேன்காண் — சிற்குணத்தோய்
கூற்றுதைத்த நின்பொற் குரைகழற்பூந் தாளறிக
வேற்றுரைத்தே னில்லை விரித்து. 101

இப்பாரில் என்பிழைக ளெல்லாம் பொறுத்தருளென்
அப்பாநின் றாட்கே யடைக்கலங்காண் — இப்பாரில்
நான்நினது தாள்நீழல் நண்ணுமட்டும் நின்னடியர்பால்
நினது சீர்கேட்கப் பண்! 102

திருச்சிற்றம்பலம்

1. உய்ந்தோம் என்பது — உய்ஞ்சேம் எனத் திரிந்தது.

Koviloor Digital Library

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

ஐந்தாவது

மஹாதேவமாலை

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

கருணைநிறைந் தகம்புறமுந் துளும்பிவழிந்
துயிர்க்கெல்லாங் களைக ணுகித்
தெருள்நிறைந்த இன்பநிலை வளர்க்கின்ற
கண்ணுடையோய்! சிதையா ஞானப்
பொருள்நிறைந்த மறையமுதம் பொழிகின்ற
மலர்வாயோய்! பொய்ய னேன்றன்
மருள்நிறைந்த மனக்கருங்கற் பாறையுமுட்
கசிந்துருக்கும் **வடிவத் தோயே!**

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

உலகநிலை முழுதாகி ஆங்காங் குள்ள
உயிராகி உயிர்க்குயிராம் ஒளிதா ணுகிக்
கலகநிலை யறியாத காட்சி யாகிக்
கதியாகி மெய்ஞ்ஞானக் கண்ண தாகி
இலகுசிதா காசமதாய்ப் பரமா காச
இயல்பாகி யிணையொன்று மில்லா தாகி
அலகிலறி வானந்த மாகிச் சச்சி
தானந்த மயமாகி யமர்ந்த தேவே. 1

உலகமெலாந் தனிநிறைந்த வுண்மை யாகி
யோகியர்தம் அனுபவத்தின் உவப்பா யென்றுங்
கலகமுறு வுபசாந்த நிலைய தாகிக்
களங்கமற்ற அருண்ஞானக் காட்சி யாகி
விலகலுறு நிபிடவா னந்த மாகி
மீதானத் தொளிர்கின்ற விளக்க மாகி
இலகுபரா பரமாய்ச்சிற் பரமா யன்பர்
இதயமலர் மீதிருந்த இன்பத் தேவே. 2

Koviloor Digital Library

வித்தாகி முளையாகி விளைவ தாகி
விளைவிக்கும் பொருளாகி மேலு மாகிக்
கொத்தாகிப் பயனாகிக் கொள்வோ னாகிக்
குறைவாகி நிறைவாகிக் குறைவி லாத
சத்தாகிச் சித்தாகி யின்ப மாகிச்
சதாநிலையா யெவ்வுயிர்க்குஞ் சாக்ஷி யாகி
முத்தாகி மாணிக்க மாகித் தெய்வ
முழுவயிரத் தனிமணியாய் முளைத்த தேவே. 3

வேதாந்த நிலையாகிச் சித்தாந் தத்தின்
மெய்யாகிச் சமரசத்தின் விவேக மாகி
நாதாந்த வெளியாகி முத்தாந் தத்தின்
நடுவாகி நவநிலைக்கு நண்ணா தாகி
மூதாண்ட கோடியெல்லாந் தாங்கி நின்ற
முதலாகி மனாதீத முத்தி யாகி
வாதாண்ட சமயநெறிக் கமையா தென்று
மௌனவியோ மத்தினிடை வயங்குந் தேவே. 4

தோன்றுதுவி தாத்துவித மாய்வி சிட்டாத்
துவிதமாய்க் கேவலாத் துவித மாகிச்
சான்றசுத்தாத் துவிதமாய்ச் சுத்தந் தோய்ந்த
சமரசாத் துவிதமுமாய்த் தன்னை யன்றி
ஊன்றுநிலை வேறொன்று மிலதா யென்றும்
உள்ளதாய் நிரதிசய வுணர்வா யெல்லாம்
ஈன்றருளுந் தாயாகித் தந்தை யாகி
எழிற்குருவாய்த் தெய்வதமா யிலங்குந் தேவே. 5

பரமாகிச் சூக்குமமாய்த் தூல மாகிப்
பரமார்த்த நிலையாகிப் பதத்தின் மேலாஞ்
சிரமாகித் திருவருளாம் வெளியா யான்ம
சிற்சத்தி யாய்ப்பரையின் செம்மை யாகித்
திரமாகித் தற்போத நிவர்த்தி யாகிச்
சிவமாகிச் சிவானுபவச் செல்வ மாகி
அரமாகி யானந்த போத மாகி
ஆனந்தா தீதமதா யமர்ந்த தேவே. 6

இந்தியமாய்க் கரணாதி யனைத்து மாகி
இயல்புருட னாய்க்கால பரமு மாகிப்
பந்தமற்ற வியோமமாய்ப் பரமா யப்பாற்
பரம்பரமாய் விசுவமுண்ட பான்மை யாகி
வந்தவுப சாந்தமதாய் மௌன மாகி
மகாமௌன நிலையாகி வயங்கா நின்ற
அந்தமில்தொம் பதமாய்த்தற் பதமா யொன்றும்
அசிபதமா யதீதமா யமர்ந்த தேவே. 7

Koviloor Digital Library

நின்மயமா யென்மயமா யொன்றுங் காட்டா
நிராமயமாய் நிருவிகற்ப நிலையாய் மேலாந்
தன்மயமாய்த் தற்பரமாய் விமல மாகித்
தடத்தமாய்ச் சொரூபமாய்ச் சகச மாகிச்
சின்மயமாய்ச் சிற்பரமா யசல மாகிச்
சிற்சொலித மாயகண்ட சிவமா யெங்கு
மன்மயமாய் வாசகா தீத மாகி
மனாதீத மாயமர்ந்த மௌனத் தேவே. 8

அளவிறந்த நெடுங்காலஞ் சித்தர் யோகர்
அறிஞர்மல ரயன்முதலோ ரனந்த வேதம்
களவிறந்துங் கரணாதி யிறந்துஞ் செய்யுங்
கடுந்தவத்துங் காண்பரிதாங் கடவு ளாகி
உளவிறந்த எம்போல்வா ருள்ளத் துள்ளே
ஊறுகின்ற தெள்ளமுத வூற லாகிப்
பிளவிறந்து பிண்டாண்ட முழுதுந் தானாய்ப்
பிறங்குகின்ற பெருங்கருணைப் பெரிய தேவே. 9

வாயாகி வாயிறந்த மௌன மாகி
மதமாகி மதங்கடந்த வாய்மை யாகிக்
காயாகிப் பழமாகித் தருவாய் மற்றைக்
கருவிகர ணாதிகளின் கலப்பாய்ப் பெற்ற
தாயாகித் தந்தையாய்ப் பிள்ளை யாகித்
தானாகி நானாகிச் சகல மாகி
ஓயாத சத்தியெலா முடைய தாகி
ஒன்றாகிப் பலவாகி யோங்குந் தேவே. 10

அண்டங்கள் பலவாகி யவற்றின் மேலும்
அளவாகி யளவாத வதீத மாகிப்
பிண்டங்க ளனந்தவகை யாகிப் பிண்டம்
பிறங்குகின்ற பொருளாகிப் பேதந் தோற்றும்
பண்டங்கள் பலவாகி யிவற்றைக் காக்கும்
பதியாகி யானந்தம் பழுத்துச் சாந்தங்
கொண்டெங்கு நிழல்பரப்பித் தழைந்த ஞானக்
கொழுங்கடவுட் டருவாகிக் குலவுந் தேவே. 11

பொன்னாகி மணியாகிப் போக மாகிப்
புறமாகி யகமாகிப் புனித மாகி
மன்னாகி மலையாகிக் கடலு மாகி
மதியாகி ரவியாகி மற்று மாகி
முன்னாகிப் பின்னாகி நடுவு மாகி
முழுதாகி நாதமுற முழங்கி யெங்கு
மின்னாகிப் பரவியின்ப வெள்ளந் தேக்க
வியன்கருணைப் பொழிமுகிலாய் விளங்குந் தேவே. 12

Koviloor Digital Library

அரிதாகி யரியதினு மரிய தாகி
அநாதியா யாதியா யருள தாகிப்
பெரிதாகிப் பெரியதினும் பெரிய தாகிப்
பேதமா யபேதமாய்ப் பிறங்கா நின்ற
கரிதாகி வெளிதாகிக் கலைக ளாகிக்
கலைகடந்த பொருளாகிக் கரணா தீதத்
தெரிதான வெளிநடுவி லருளாம் வண்மைச்
செழுங்கிரணச் சுடராகித் திகழுந் தேவே. 13

உருவாகி யுருவினிலுள் ளுருவ மாகி
உருவத்தி லுருவாகி யுருவுள் ளொன்றாய்
அருவாகி யருவினிலுள் ளருவ மாகி
அருவத்தி லருவாகி யருவுள் ளொன்றாய்க்
குருவாகிச் சத்துவசிற் குணத்த தாகிக்
குணரகிதப் பொருளாகிக் குலவா நின்ற
மருவாகி மலராகி வல்லி யாகி
மகத்துவமா யணுத்துவமாய் வயங்குந் தேவே. 14

சகலமாய்க் கேவலமாய்ச் சுத்த மாகிச்
சராசரமா யல்லவாய்த் தானே தானாய்
அகலமாய்க் குறுக்கமாய் நெடுமை யாகி
அவையனைத்து மணுகாத வசல மாகி
இகலுறாத் துணையாகித் தனிய தாகி
எண்குணமா யெண்குணத்தெம் மிறையா யென்றும்
உகலிலாத் தண்ணருள்கொண் டுயிரை யெல்லாம்
ஊட்டிவளர்த் திடுங்கருணை யோவாத் தேவே. 15

வாசகமாய் வாச்சியமாய் நடுவா யந்த
வாசகவாச் சியங்கடந்த மௌன மாகித்
தேசகமா யிருளகமா யிரண்டுங் காட்டாச்
சித்தகமாய் வித்தகமாய்ச் சிறிதும் பந்த
பாசமுறாப் பதியாகிப் பசுவு மாகிப்
பாசநிலை யாகியொன்றும் பகரா தாகி
நாசமிலா வெளியாகி ஒளிதா னாகி
நாதாந்த முடிவில்நடம் நவிற்றுந் தேவே. 16

சகமாகிச் சீவனா யீச னாகிச்
சதுமுகனாய்த் திருமாலாய் அரன்றா னாகி
மகமாயை முதலாய்க் கூடத்த னாகி
வான்பிரம மாகியல்லா வழக்கு மாகி
இகமாகிப் பரமாகிச் சமய கோடி
எத்தனையு மாகியவை எட்டா வான்கற்
பகமாகிப் பரமாகிப் பரம மாகிப்
பராபரமாய்ப் பரம்பரமாய்ப் பதியுந் தேவே. 17

Koviloor Digital Library

விதியாகி யரியாகிக் கிரீச ளுகி
விளங்கு மகேச்சுரனாகி விமல மான
நிதியாகுஞ் சதாசிவனாய் விந்து வாகி
நிகழ்நாத மாய்ப்பரையாய் நிமலா னந்தப்
பதியாகும் பரசிவமாய்ப் பரமாய் மேலாய்ப்
பக்கமிரண் டாயிரண்டும் பகரா தாகிக்
கதியாகி அளவிறந்த கதிக ளெல்லாம்
கடந்துநின்று நிறைந்தபெருங் கருணைத் தேவே. 18

மானாகி மோகினியாய் விந்து வாகி
மற்றவையாற் காணாத வான மாகி
நானாகி நானல்ல னாகி நானே
நானாகும் பதமாகி நான்முன் கண்ட
தானாகித் தானல்ல னாகித் தானே
தானாகும் பதமாகிச் சகச ஞான
வானாகி வான்டுவில் வயங்கு கின்ற
மௌனநிலை யாகியெங்கும் வளருந் தேவே. 19

மந்திரமாய்ப் பதமாகி வன்ன மாகி
வளர்கலையாய்த் தத்துவமாய்ப் புவன மாகிச்
சந்திரனா யிந்திரனா யிரவி யாகித்
தானவராய் வானவராய்த் தயங்கா நின்ற
தந்திரமா யிவையொன்று மல்ல வாகித்
தானாகித் தனதாகித் தானுன் காட்டா
அந்தரமா யப்பாலா யதற்கப் பாலாய்
அப்பாலுக் கப்பாலா யமர்ந்த தேவே. 20

மலைமேலுங் கடன்மேலும் மலரின் மேலும்
வாழ்கின்ற மூவுருவின் வயங்குங் கோவே
நிலைமேலு நெறிமேலு நிறுத்து கின்ற
நெடுந்தவத்தோர் நிறைமேலு நிகழ்த்தும் வேதக்
கலைமேலும் எம்போல்வா ருளத்தின் மேலும்
கண்மேலுந் தோள்மேலுங் கருத்தின் மேலும்
தலைமேலும் உயிர்மேலும் உணர்வின் மேலும்
தகுமன்பின் மேலும்வளர் தாண்மெய்த் தேவே. 21

பொற்குன்றே யக்ம்புறமும் பொலிந்து நின்ற
பூரணமே யாரணத்துட் பொருளே யென்றும்
கற்கின்றோர்க் கினியசுவைக் கரும்பே தான
கற்பகமே கற்பகத்தீங் கனியே வாய்மைச்
சொற்குன்றா நாவகத்துண் மாறா வின்பம்
தோற்றுகின்ற திருவருட்சீர்ச் சோதியே விண்
நிற்கின்ற சுடரேஅச் சுடருள் ஓங்கும்
நீளொளியே அவ்வொளிக்குள் நிறைந்த தேவே. 22

Koviloor Digital Library

தேசுவிரித் திருளகற்றி என்றும் ஓங்கித்
திகழ்கின்ற செழுங்கதிரே செறிந்த வாழ்க்கை
மாசுவிரித் திடுமனத்திற் பயிலாத் தெய்வ
மணிவிளக்கே ஆனந்த வாழ்வே எங்கும்
காசுவிரித் திடும்ஒளிபோற் கலந்து நின்ற
காரணமே சாந்தமெனக் கருதா நின்ற
தூசுவிரித் துடுக்கின்றோர் தம்மை நீங்காச்
சுகமயமே யருட்கருணை துலங்குந் தேவே. 23

கோவேஎண் குணக்குன்றே குன்று ஞானக்
கொழுந்தேனே செழும்பாகே குளிர்ந்த மோனக்
காவேமெய் யறிவின்ப மயமே யென்றன்
கண்ணேமுக் கண்கொண்ட கரும்பே வானத்
தேவேயத் தேவுக்குந் தெளிய வொண்ணுத்
தெய்வமே வாடாமற் றிகழ்சிற் போதப்
பூவேயப் பூவிலுறு மணமே யெங்கும்
பூரணமாய் நிறைந்தருளும் புனிதத் தேவே. 24

வானேயவ் வானுலவுங் காற்றே காற்றின்
வருநெருப்பே நெருப்புறுநீர் வடிவே நீரிற்
றானேயும் புவியேயப் புவியிற் றங்கும்
தாபரமே சங்கமமே சாற்று கின்ற
ஊனேநல் லுயிரேயுள் ளொளியே யுள்ளத்
துணர்வேயவ் வுணர்வுகலந் தூறு கின்ற
தேனேமுக் கனியேசெங் கரும்பே பாகின்
றீஞ்சுவையே சுவையனைத்துந் திரண்ட தேவே. 25

விண்ணேவின் னுருவேவின் முதலே விண்ணுள்
வெளியேயவ் வெளிவிளங்கு வெளியே யென்றன்
கண்ணேகண் மணியேகண் ணொளியே கண்ணுட்
கலந்துநின்ற கதிரேயக் கதிரின் வித்தே
தண்ணேதண் மதியேயம் மதியிற் பூத்த
தண்ணமுதே தண்ணமுத சாரமே சொற்
பண்ணேபண் ணிசையேபண் மயமே பண்ணின்
பயனேமெய்த் தவர்வாழ்த்திப் பரவுந் தேவே. 26

மாணேயத் தவருளத்தே மலர்ந்த செந்தா
மரைமலரின் வயங்குகின்ற மணியே ஞானப்
பூணேமெய்ப் பொருளேயற் புதமே மோனப்
புத்தமுதே யானந்தம் பொலிந்த பொற்பே
ஆணேபெண் ணுருவமே யலியே யொன்றும்
அல்லாத பேரொளியே யனைத்துந் தாங்குந்
தூணேசிற் சுகமேயச் சுகமேற் பொங்கும்
சொரூபானந் தக்கடலே சோதித் தேவே. 27

Koviloor Digital Library

பூதமே யவைதோன்றிப் புகுந் தொடுங்கும்
புகலிடமே யிடம்புரிந்த பொருளே போற்றும்
வேதமே வேதத்தின் விளைவே வேத
வியன்முடிவே யம்முடிவின் விளங்குங் கோவே
நாதமே நாதாந்த நடமே யந்த
நடத்தினையுள் நடத்துகின்ற நலமே ஞான
போதமே போதமெலாங் கடந்து நின்ற
பூரணமே யோகியருட் பொலிந்த தேவே. 28

ஞாலமே ஞாலமெலாம் விளங்க வைத்த
நாயகமே கற்பமுதல் நவிலா நின்ற
காலமே காலமெலாங் கடந்த ஞானக்
கதியேமெய்க் கதியளிக்குங் கடவுளே சிற்
கோலமே குணமேயுட் குறியே கோலங்
குணங்குறிகள் கடந்துநின்ற குருவே யன்பர்
சீலமே மாலறியா மனத்திற் கண்ட
செம்பொருளே யும்பர்பதஞ் செழிக்குந் தேவே. 29

தத்துவமே தத்துவா தீதமே சிற்
சயம்புவே யெங்குநிறை சாக்ஷியே மெய்ச்
சத்துவமே சத்துவத்தின் பயனு மின்பந்
தந்தருளும் பெருவாழ்வாஞ் சாமியே யெஞ்
சித்தநிலை தெளிவிக்கு மொளியே சற்றுந்
தெவிட்டாத தெள்ளமுதே தேனே யென்றுஞ்
சுத்தநெறி திறம்பாதார் அறிவிற் றோய்ந்த
சுகப்பொருளே மெய்ஞ்ஞானந் துலங்குந் தேவே. 30

யோகமே யோகத்தின் பயனே யோகத்
தொருமுதலே யோகத்தி னோங்குந் தூய
போகமே போகத்தின் பொலிவே போகம்
புரிந்தருளும் புண்ணியமே புனித ஞான
யாகமே யாகத்தின் விளைவே யாகத்
திறையேயவ் விறைபுரியு மின்பே யன்பர்
மோகமே மோகமெலா மழித்து வீறும்
மோனமே மோனத்தின் முளைத்த தேவே. 31

காட்சியே காண்பதுவே ஞேயமே யுட்
கண்ணுடையார் கண்ணிறைந்த களிப்பே யோங்கு
மாட்சியே யுண்மையறி வின்ப மென்ன
வயங்குகின்ற வாழ்வேமா மௌனக் காணி
ஆட்சியே ஆட்சிசெயும் அரசே சுத்த
அறிவேமெய் யன்பேதெள் ளமுதே நல்ல
சூட்சியே சூட்சியெலாங் கடந்து நின்ற
துரியமே துரியமுடிச் சோதித் தேவே. 32

Koviloor Digital Library

மறைமுடிக்குப் பொருத்தமுறு மணியே ஞான
வாரிதியே அன்பர்கள்தம் மனத்தே நின்ற
குறைமுடிக்குங் குணக்குன்றே! குன்று மோனக்
கோமளமே தூயசிவக் கொழுந்தே வெள்ளைப்
பிறைமுடிக்கும் பெருமானே! துளவ மாலைப்
பெம்மானே! செங்கமலப் பிரானே! இந்த
இறைமுடிக்கு மூவர்கட்கு மேலாய் நின்ற
இறையேயிவ் வுருவுமின்றி யிருந்த தேவே. 33

கோதகன்ற யோகர்மனக் குகையில் வாழுங்
குருவேசண் முகங்கொண்ட கோவே வஞ்ச
வாதகன்ற ஞானியர்தம் மதியி லூறும்
வானமுதே யானந்த மழையே மாயை
வேதகன்ற முத்தர்களை விழுங்கும் ஞான
வேழமே மெய்யின்ப விருந்தே நெஞ்சில்
தீதகன்ற மெய்யடியர் தமக்கு வாய்த்த
செல்வமே யெல்லையிலாச் சீர்மைத் தேவே. 34

அருளருவி வழிந்துவழிந் தொழுக் வோங்கும்
ஆனந்தத் தனிமலையே யமல வேதப்
பொருளளவு நிறைந்தவற்றின் மேலு மோங்கிப்
பொலிகின்ற பரம்பொருளே புரண மாகி
இருளறுசிற் பிரகாச மயமாஞ் சுத்த
ஏகாந்தப் பெருவெளிக்குள் இருந்த வாழ்வே
தெருளளவு முளமுழுதுங் கலந்து கொண்டு
தித்திக்குஞ் செழுந்தேனே தேவ தேவே. 35

அளவையெலாங் கடந்துமனங் கடந்து மற்றை
அறிவையெலாங் கடந்துகடந் தமல யோகர்
உளவையெலாங் கடந்துபதங் கடந்து மேலை
ஒன்றுகடந் திரண்டுகடந் துணரச் சூழ்ந்த
களவையெலாங் கடந்தண்ட பிண்ட மெல்லாங்
கடந்துநிறை வானசுகக் கடலே யன்பர்
வளவையெலா மிருளகற்று மொளியே மோன
வாழ்வேயெவ் வுயிர்க்குயிராய் வதியுந் தேவே. 36

வன்புகலந் தறியாத மனத்தோர் தங்கள்
மனங்கலந்து மதிகலந்து வயங்கா நின்ற
என்புகலந் தான்கலந்து புலன்க ளோடும்
இந்திரியம் அவைகலந்துள் ளியங்கு கின்ற
அன்புகலந் தறிவுகலந் துயிரைம் பூதம்
ஆன்மாவுங் கலந்துகலந் தண்ணித் தூறி
இன்புகலந் தருள்கலந்து துளும்பிப் பொங்கி
எழுங்கருணைப் பெருக்காறே யின்பத் தேவே. 37

Koviloor Digital Library

தண்ணமுத மதிகுளிர்ந்த கிரணம் வீசத்
தடம்பொழிற்பூ மணம்வீசத் தென்றல் வீச
எண்ணமுதப் பளிக்குநிலா முற்றத் தேயின்
னிசைவீசத் தண்பனிநீர் எடுத்து வீசப்
பெண்ணமுதம் அனையவர்விண் ணமுதம் ஊட்டப்
பெறுகின்ற **சுகமனைத்தும் பிற்பட் டோடக்**
கண்ணமுதத் துடம்புயிர்மற் றனைத்து மின்பங்
கலந்துகொளத் தருங்கருணைக் கடவுள் தேவே. 38

சுழியாத அருட்கருணைப் பெருக்கே யென்றுந்
தூண்டாத மணிவிளக்கின் சோதியே வான்
ஒழியாது கதிர்பரப்புஞ் சுடரே யன்பர்க்(கு)
ஓவாத இன்பருளும் ஒன்றே விண்ணோர்
விழியாலு மொழியாலு மனத்தி னாலும்
விழைதருமெய்த் தவத்தாலும் விளம்பும் எந்த
வழியாலுங் கண்டுகொளற் கரிதாய்ச் சுத்த
மௌனவெளி யூடிருந்து வயங்குந் தேவே. 39

சொல்லொழியப் பொருளொழியக் கரண மெல்லாஞ்
சோர்ந்தொழிய வுணர்வொழியத் துளங்கா நின்ற
அல்லொழியப் பகலொழிய நடுவே நின்ற
ஆனந்த அனுபவமே அதீத வாழ்வே
நெல்லொழியப் பதர்கொள்வார் போல இன்ப
நிறைவொழியக் குறைகொள்மத நெறியோர் நெஞ்சக்
கல்லொழிய மெய்யடியார் இதய மெல்லாம்
கலந்துகலந் தினிக்கின்ற கருணைத் தேவே. 40

அலைகடலும் புவிவரையும் அனல்கால் நீரும்
அந்தரமும் மற்றையவெ லாண்டம் யாவும்
நிலைகுலையா வண்ணமருள் வெளியி னூடு
நிரைநிரையா நிறுத்திஉயிர் நிகழும் வண்ணந்
தலைகுலையாத் தத்துவஞ்செய் திரோதை யென்னுந்
தனியாணை நடத்தியருள் தலத்தில் என்றும்
மலைவறவீற் றிருந்தருளு மரசே முத்தி
வழித்துணையே விழித்துணையுண் மணியாந் தேவே. 41

வரம்பழுத்த நெறியேமெய்ந் நெறியி லின்ப
வளம்பழுத்த பெருவாழ்வே வானோர் தங்கள்
சிரம்பழுத்த பதப்பொருளே யறிவா னந்த
சிவம்பழுத்த அனுபவமே சிதாகா சத்தில்
பரம்பழுத்த நடத்தரசே கருணை யென்னும்
பழம்பழுத்த வான்றருவே பரம ஞானத்
திரம்பழுத்த யோகியர்தம் யோகத் துள்ளே
தினம்பழுத்துக் கனிந்தவருட் செல்வத் தேவே. 42

Koviloor Digital Library

அண்டமெலாங் கண்ணுகக் கொளினுங் காண்டற்
கனுத்துணையுங் கூடாவென் றனந்த வேதம்
விண்டலறி யோலமிட்டுப் புலம்ப மோன
வெளிக்குள்வெளி யாய்நிறைந்து விளங்கும் ஒன்றே
கண்டவடி வாயகண்ட மயமா யெங்குங்
கலந்துநின்ற பெருங்கருணைக் கடவு ளேயெஞ்
சண்டவினைத் தொடக்கறச்சின் மயத்தைக் காட்டுஞ்
சற்குருவே சிவகுருவே சாந்தத் தேவே. 43

பேதமுறு மெய்ப்போத வடிவ மாகிப்
பெருங்கருணை நிறம்பழுத்துச் சாந்தம் பொங்கிச்
சீதமிகுந் தருள்கனிந்து கலிந்து மாறுச்
சின்மயமாய் நின்மலமே மணந்து நீங்கா
ஆதரவோ டியன்மௌனச் சுவைமேன் மேற்கொண்
டானந்த ரசம்ஒழுக்கி யன்பா லென்றுஞ்
சேதமுறு தறிஞருளந் தித்தித் தோங்கும்
செழும்புனிதக் கொழுங்கனியே தேவ தேவே. 44

உடல்குளிர உயிர்தழைக்க உணர்ச்சி யோங்க
உளங்கனிய மெய்யன்ப ருள்ளத் தூடே
கடலணைய பேரின்பந் துளும்ப நாளுங்
கருணைமலர்த் தேன்பொழியுங் கடவுட் காவே
விடலரிய எம்போல்வா ரிதயந் தோறும்
வேதாந்த மருந்தளிக்கும் விருந்தே வேதம்
தொடலரிய வெளிமுழுதும் பரவி ஞானச்
சோதிவிரித் தொளிர்கின்ற சோதித் தேவே. 45

கிரியைநெறி யகற்றிமறை முடிவில் நின்று
கேளாமற் கேட்கின்ற கேள்வியே சொற்
கரியவரை விடுத்துநவ நிலைக்கு மேலே
காணமற் காண்கின்ற காட்சியே யுள்
அரியநிலை ஒன்றிரண்டின் நடுவே சற்றும்
அறியாமல் அறிகின்ற அறிவே யென்றும்
உரியசதா நிலைநின்ற உணர்ச்சி மேலோர்
உன்னுமல் உன்னுகின்ற ஒளியாந் தேவே. 46

சொற்போதற் கரும்பெரிய மறைகள் நாடித்
தொடர்ந்துதொடர்ந் தயர்ந்திளைத்துத் துளங்கி யேங்கிப்
பிற்போத விரைந்தன்ப ருளத்தே சென்ற
பெருங்கருணைப் பெருவாழ்வே பெயரா தென்றுந்
தற்போத ஒழிவினிடை நிறைந்து பொங்கித்
ததும்பிவழிந் தோங்கியெல்லாந் தானே யாகிச்
சிற்போதத் தகம்புறமுங் கோத்து நின்ற
சிவானந்தப் பெருக்கேமெய்ச் செல்வத் தேவே. 47

Koviloor Digital Library

பொங்குபல சமயமெனு நதிக ளெல்லாம்
புகுந்துகலந் திடநிறைவாய்ப் பொங்கி யோங்குங்
கங்குகரை காணாத கடலே யெங்குங்
கண்ணாகக் காண்கின்ற கதியே யன்பர்
தங்கநிழல் பரப்பிமயற் சோடை யெல்லாந்
தணிக்கின்ற தருவேபூந் தடமே ஞானச்
செங்குமுதம் மலரவரு மதியே யெல்லாஞ்
செய்யவல்ல கடவுளே தேவ தேவே. 48

வான்காணு மறைகாணு மலரோன் காணான்
மால்காணா னுருத்திரனு மதித்துக் காணான்
நான்காணே னிடத்ததனைக் காண்பே மென்று
நல்லோர்கள் நவில்கின்ற நலமே வேட்கை
மான்காணா உளக்கமலம் மலர்த்தா நின்ற
வான்சுடரே! ஆனந்த மயமே யீன்ற
ஆன்காணா இளங்கன்று யலமந் தேங்கும்
அன்பர்தமைக் கலந்துகொளும் அமலத் தேவே. 49

மெய்ஞ்ஞான விருப்பத்தி லேறிக் கேள்வி
மீதேறித் தெளிந்திச்சை விடுத லேறி
அஞ்ஞான மற்றபடி யேறி யுண்மை
அறிந்தபடி நிலையேறி அதுநான் என்னுங்
கைஞ்ஞானங் கழன்றேறி மற்ற வெல்லாங்
கடந்தேறி மௌனவியற் கதியி லேறி
எஞ்ஞானம் அறத்தெளிந்தோர் கண்டுங் காணேம்
என்கின்ற அனுபவமே யின்பத் தேவே. 50

பற்றறியா முத்தர்தமை யெல்லாம் வாழைப்
பழம்போல விழுங்குகின்ற பரமே மாசு
பெற்றறியாப் பெரும்பதமே பதத்தைக் காட்டும்
பெருமானே ஆனந்தப் பேற்றின் வாழ்வே
உற்றறியா தின்னுமின்னும் மறைக ளெல்லாம்
ஓலமிட்டுத் தேடநின்ற ஒன்றே ஒன்றுங்
கற்றறியாப் பேதையேன் றனக்கு மின்பங்
கனிந்தளித்த அருட்கடலே கருணைத் தேவே. 51

மெய்ப்புணர்ந்த வாதவூர் மலையைச் சுத்த
வெளியாக்கிக் கலந்துகொண்ட வெளியே முற்றும்
பொய்புணர்ந்த எமைப்போல்வார் தமக்கு மின்பம்
புரிந்தருளுங் கருணைவெள்ளப் பொற்பே யன்பர்
கையுறைந்து வளர்நெல்லிக் கனியே யுள்ளங்
கரைந்துகரைந் துருகவவர் கருத்தி னூடே
உய்யுநெறி யொளிகாட்டி வெளியு முள்ளும்
ஓங்குகின்ற சுயஞ்சுடரே யுண்மைத் தேவே. 52

Koviloor Digital Library

ஒலிவடிவு நிறஞ்சுவைகள் நாற்ற மூற்றம்
உறுதொழில்கள் பயன்பலவே றுளவா யெங்கும்
மலிவகையா யெவ்வகையு மொன்று மொன்றும்
மாட்டாதா யெல்லாமும் வல்ல தாகிச்
சலிவகையி லாதமுதற் பொருளே யெல்லாந்
தன்மயமாய் விளங்குகின்ற தனியே யாண்பெண்
அலிவகையல் லாதவகை கடந்து நின்ற
அருட்சிவமே சிவபோகத் தமைந்த தேவே. 53

பேராய வண்டங்கள் பலவும் பிண்ட
பேதங்கள் பற்பலவும் பிண்டாண் டத்தின்
வாராய பலபொருளுங் கடலு மண்ணும்
மலையுளவுங் கடலுளவு மணலும் வானும்
ஊராத வான்மீனு மணுவு மற்றை
உள்ளனவு மளந்திடலாம் ஓகோ! உன்னை
யாராலு மளப்பரிதென் றனந்த வேதம்
அறைந்திளைக்க அதிதூர மாகுந் தேவே. 54

கற்பங்கள் பலகோடி செல்லத் தீய
கனலினடு வூசியின்மேற் காலை யூன்றிப்
பொற்பறமெய் யுணவின்றி யுறக்க மின்றிப்
புலர்ந்தெலும்பு புலப்படவைம் பொறியை யோம்பி
நிற்பவருக் கொளித்துமறைக் கொளித்து யோக
நீண்முனிவர்க் கொளித்தமரர்க் கொளித்து மேலாஞ்
சிற்பதத்திற் சின்மயமாய் நிறைந்து ஞானத்
திருவாள ருட்கலந்த தேவ தேவே. 55

மட்டகன்ற நெடுங்கால மனத்தால் வாக்கால்
மதித்திடினும் புலம்பிடினும் வாரா தென்றே
கட்டகன்ற மெய்யறிவோர் கரண நீக்கிக்
கலையகற்றிக் கருவியெலாங் கழற்றி மாயை
விட்டகன்று கருமமல போதம் யாவும்
விடுத்தொழித்துச் சகசமல வீக்க நீக்கிச்
சுட்டகன்று நிற்கவவர் தம்மை முற்றுஞ்
சூழ்ந்துகலந் திடுஞ்சிவமே துரியத் தேவே. 56

உருநான்கு மருநான்கு நடுவே நின்ற
உருவருவ மொன்றுமிவை யுடன்மே லுற்ற
ஒருநான்கு மிவைகடந்த வொன்று மாயவ்
வொன்றினடு வாய்நடுவுள் ளொன்றாய் நின்றே
இருநான்கு மமைந்தவரை நான்கி னேடும்
எண்ணான்கின் மேலிருத்து மிறையே மாயைக்
கருநான்கும் பொருணான்குங் காட்டு முக்கட்
கடவுளே கடவுளர்கள் கருதுந் தேவே. 57

Koviloor Digital Library

பாங்குளநாந் தெரிதுமெனத் துணிந்து கோடிப்
பழமறைகள் தனித்தனியே பாடிப் பாடி
ஈங்குளதென் றுங்குளதென் றோடி யோடி
இளைத்திளைத்துத் தொடர்ந்துதொடர்ந் தெட்டுந் தோறும்
வாங்குபர வெளிமுழுது நீண்டு நீண்டு
மறைந்துமறைந் தொளிக்கின்ற மணியே யெங்குந்
தேங்குபர மானந்த வெள்ளமே சச்
சிதானந்த வருட்சிவமே தேவ தேவே. 58

எழுத்தறிந்து தமையுணர்ந்த யோக ருள்ளத்
தியலறிவாந் தருவினிலன் பெனுமோ ருச்சி
பழுத்தளிந்து மௌனநறுஞ் சுவைமேற் பொங்கிப்
பதம்பொருந்த வனுபவிக்கும் **பழமே** மாயைக்
கழுத்தரிந்து கருமமலத் தலையை வீசுங்
கடுந்தொழிலோர் தமக்கேநற் கருணை காட்டி
விழுத்துணையா யமர்ந்தருளும் பொருளே மோன
வெளியினிறை யானந்த விளைவாந் தேவே. 59

உருத்திரர்நா ரணர்பிரமர் விண்ணோர் வேந்தர்
உறுகருடர் காந்தருவ ரியக்கர் பூதர்
மருத்துவர்யோ கியர்சித்தர் முனிவர் மற்றை
வானவர்கண் முதலோர்தம் மனத்தாற் றேடிக்
கருத்தழிந்து தனித்தனியே சென்று **வேதங்**
களைவினவ மற்றவையுங் காணே மென்று
வருத்தமுற்றுங் கவரோடு புலம்ப நின்ற
வஞ்சவெளி யேயின்ப மயமாந் தேவே. 60

பாயிரமா மறையனந்த மனந்த மின்னும்
பார்த்தளந்து காண்டுமெனப் பல்கான் மேவி
ஆயிரமா யிரமுகங்க ளாலும் பன்னாள்
அளந்தளந்தோ ரணுத்துணையு மளவு காணா
தேயிரங்கி யழுதுசிவ சிவவென் றேங்கித்
திரும்பவருட் பரவெளிவாழ் சிவமே யீன்ற
தாயிரங்கி வளர்ப்பதுபோ லெம்போல் வாரைத்
தண்ணருளால் வளர்த்தென்றுந் தாங்குந் தேவே. 61

[பொது நூல் — வேதம்]

அந்தரமிங் கறிவோமற் றதனி லண்டம்
அடுக்கடுக்கா யமைந்தவுள வறிவோ மாங்கே
உந்துறும்பல் பிண்டநிலை யறிவோஞ் சீவன்
உற்றநிலை யறிவோமற் றணைத்து நாட்டும்
எந்தைநின தருள்விளையாட் டிந்தோ வந்தோ
எள்ளளவு மறிந்திலோ மென்னே யென்று
முந்தனந்த **மறைகளெலாம்** வழுத்த நின்ற
முழுமுதலே யன்பர்குறை முடிக்குந் தேவே. 62

Koviloor Digital Library

[அநுபவ நூல் — உபநிடதம்]

தோன்றுபர சாக்கிரமுங் கண்டோ மந்தச்
சொப்பனமுங் கண்டோமேற் சுழுத்தி கண்டோம்
ஆன்றபர துரியநிலை கண்டோ மப்பால்
அநுகண்டோ மப்பாலா மதுவுங் கண்டோம்
ஏன்றவுப சாந்தநிலை கண்டோ மப்பால்
இருந்தநினைக் காண்கிலோ மென்னே யென்று
சான்றவுப நிடங்களெலாம் வழுத்த நின்ற
தன்மயமே சின்மயமே சகசத் தேவே. 63

[சிறப்பு நூல் — ஆகமம்]

பரிக்கிரக நிலைமுழுதுந் தொடர்ந்தோ மேலைப்
பரவிந்து நிலையனைத்தும் பார்த்தோம் பாசம்
எரிக்குமியற் பரநாத நிலைக்கண் மெல்ல
எய்தினோ மப்பாலு மெட்டிப் போனோந்
தெரிக்கரிய வெளிமூன்றுந் தெரிந்தோ மெங்குஞ்
சிவமேநின் சின்மயமோர் சிறிதுந் தேரோந்
தரிக்கரிதென் றாகமங்க ளெல்லாம் போற்றத்
தனிநின்ற பரம்பொருளே சாந்தத் தேவே. 64

[கலைகள் — பசுநூல்]

மணக்குமலர்த் தேனுண்ட வண்டே போல
வளர்பரமா னந்தமுண்டு மகிழ்ந்தோ ரெல்லாம்
இணக்கமுறக் கலந்துகலந் ததீத மாதற்
கியற்கைநிலை யாததுதா னெம்மாற் கூறுங்
கணக்குவழக் கனைத்தினையுங் கடந்த தந்தோ
காண்பரிதிங் கெவர்க்குமெனக் கலைக ளெல்லாம்
பிணக்கறநின் றோலமிடத் தனித்து நின்ற
பெரும்பதமே மதாதீதப் பெரிய தேவே. 65

பொதுவென்றும் பொதுவினடம் புரியா நின்ற
பூரணசிற் சிவமென்றும் போதா னந்த
மதுவென்றும் பிரமமென்றும் பரம மென்றும்
வகுக்கின்றோர் வகுத்திடுக வதுதா னென்றும்
இதுவென்றுஞ் சுட்டவொணா ததனாற் சும்மா
இருப்பதுவே துணிவெனக்கொண் டிருக்கின் றோரை
[1]விதுவென்ற தண்ணளியாற் கலந்து கொண்டு
விளங்குகின்ற பெருவெளியே விமலத் தேவே. 66

அருமறையா கமங்கண்முத வடுவீ றெல்லாம்
அமைந்தமைந்து மற்றவைக்கு மப்பா லாகிக்
கருமறைந்த வுயிர்கள்தொறுங் கலந்து மேவிக்
கலவாமற் பன்னெறியுங் கடந்து ஞானத்
திருமணிமன் றகத்தின்ப வுருவா யென்றுந்
திகழ்கருணை நடம்புரியுஞ் சிவமே மோனப்
பெருநிலையே பரமவின்ப நிலையே முக்கட்
பெருமானே யெத்திறத்தும் பெரிய தேவே. 67

1. விது என்பது — சந்திரன், சண்டிரண்டனுருபு விரிக்க.

Koviloor Digital Library

என்னுயிர் நீ யென்னுயிர்க்கோ ருயிரு நீயென்
இன்னுயிர்க்குத் துணைவனீ யென்னை யீன்ற
அன்னைநீ யென்னுடைய வப்ப னீயென்
அரும்பொருணீ யென்னிதயத் தன்பு நீயென்
நன்னெறிநீ யெனக்குரிய வுறவு நீயென்
நற்குருநீ யெனைக்கலந்த நட்பு நீயென்
றன்னுடைய வாழ்வுநீ யென்னைக் காக்குந்
தலைவனீ கண்மூன்று தழைத்த தேவே. 68

தானாகித் தானல்ல தொன்று மில்லாத்
தன்மையனு யெவ்வெவைக்குந் தலைவ னாகி
வானாகி வளியனலாய் நீரு மாகி
மலர்தலைய வுலகாகி மற்று மாகித்
தேனாகித் தேனிறுஞ் சுவைய தாகித்
தீஞ்சுவையின் பயனாகித் தேடு கின்ற
நானாகி யென்னிறையாய் நின்றோய் நின்னை
நாயடியே னெவ்வாறு நவிற்று மாறே. 69

ஆனேறும் பெருமானே யரசே யென்றன்
ஆருயிருக் கொருதுணையே யமுதே கொன்றைத்
தேனேறு மலர்ச்சடையெஞ் சிவனே தில்லைச்
செழுஞ்சுடரே யானந்தத் தெய்வ மேயென்
ஊனேறு முயிர்க்குணிறை யொளியே யெல்லாம்
உடையானே நின்னடிச்சீ ருன்னி யன்பர்
வானேறு கின்றார்நா னொருவன் பாவி
மண்ணேறி மயக்கேறி வருந்துற் றேனே. 70

செஞ்சடையெம் பெருமானே சிறுமா னேற்ற
செழுங்கமலக் கரத்தவனே சிவனே சூழ்ந்து
மஞ்சடையு மதிற்றில்லை மணியே யொற்றி
வளர்மருந்தே யென்னுடைய வாழ்வே வேட்கை
அஞ்சடைய வஞ்சியர்மா லடைய வஞ்ச
மடையநெடுந் துயரடைய வகன்ற பாவி
நெஞ்சடைய நினைதியோ நினைதி யேன்மெய்ந்
நெறியுடையார் நெஞ்சமர்ந்த நீத னன்றே. 71

அன்னையினும் பெரிதினிய கருணை யூட்டும்
ஆரமுதே யென்னுறவே யரசே யிந்த
மன்னுலகி லடியேனை யென்னே துன்ப
வலையிலகப் படவியற்றி மறைந்தா யந்தோ
பொன்னைமதித் திடுகின்றோர் மருங்கே சூழ்ந்து
போனகமும் பொய்யுறவும் பொருந்த லாற்றேன்
என்னையுளங் கொள்ளுதியோ கொள்ளி லாயோ
என்செய்வே னென்செய்வே னென்செய் வேனே. 72

Koviloor Digital Library

படித்தேன்பொய் புலகியல்நூல் எந்தாய் நீயே
படிப்பித்தா யன்றியுமப் படிப்பி விச்சை
ஒடித்தேனுன் ஒடித்தேனே வொடிப்பித் தாய்பின்
உன்னடியே துணையெனநான் உறுதி யாகப்
பிடித்தேன்மற் றதுவுநீ பிடிப்பித் தாயிப்
பேதையே னின்னருளைப் பெற்றோர் போல்
நடித்தேனெம் பெருமானீ தோன்று நானே
நடித்தேனோ அல்லதுநீ நடிப்பித் தாயோ. 73

மத்தேறி யலைதயிர்போல் வஞ்ச வாழ்க்கை
மயலேறி விருப்பேறி மதத்தி னோடு
பித்தேறி யுழல்கின்ற மனத்தா லந்தோ
பேயேறி நலிகின்ற பேதை யானேன்
வித்தேறி விளைவேறி மகிழ்கின் றோர்போல்
மேலேறி யன்பரெலாம் விளங்கு கின்றார்
ஒத்தேறி யுயிர்க்குயிராய் நிறைந்த வெங்கள்
உடையானே இதுதகுமோ வுணர்கி லேனே. 74

மதியணிந்த முடிக்கனியே மணியே யெல்லாம்
வல்லவருட் குருவேநின் மலர்த்தாள் வாழ்த்திக்
கதியணிந்தா ரன்பரெலாம் அடியே னென்றுங்
கண்டறியேன் கருமத்தாற் கலங்கி யந்தோ
பொதியணிந்து திரிந்துழலும் ஏறு போலப்
பொய்யுலகிற் பொய்சுமந்து புலம்பா நின்றேன்
துதியணிந்த நின்னருளென் றனக்கு முண்டோ
இன்றெனிலிப் பாவியேன் சொல்வ தென்னே. 75

என்னரசே யென்னுயிரே யென்னை யீன்ற
என்தாயே யெல்குருவே யெளியே னிங்கே
தன்னரசே செலுத்தியெங்கும் உழலா நின்ற
சஞ்சலநெஞ் சகத்தாலே தயங்கி யந்தோ
மின்னரசே பெண்ணமுதே யென்று மாதர்
வெய்யசிறு நீர்க்குழிக்கண் விழவே யெண்ணிக்
கொன்னரைசேர் கிழக்குருடன் கோல்போல் வீணே
குப்புறுகின் றேன்மயலிற் கொடிய னேனே. 76

அல்விலங்கு செழுஞ்சுடரா யடியா ருள்ளத்
தமர்ந்தருளுஞ் சிவகுருவே யடியே னிங்கே
இல்விலங்கு மடந்தையென்றே யெந்தா யந்த
இருப்புவிலங் கினையொழித்தும் என்னே பின்னும்
மல்விலங்கு பரத்தையர்தம் ஆசை யென்னும்
வல்விலங்கு பூண்டந்தோ மயங்கி நின்றேன்
புல்விலங்கு மிதுசெய்யா ஓகோ இந்தப்
புலைநாயேன் பிழைபொறுக்கிற் புதிதே யன்றே. 77

Koviloor Digital Library

வன்கொடுமை மலநீக்கி யடியார் தம்மை
வாழ்விக்குங் குருவேநின் மலர்த்தா ளெண்ண
முன்கொடுசென் றிடுமடியேன் றன்னை யிந்த
மூடமன மிவ்வுலக முயற்சி நாடிப்
பின்கொடுசென் றலைத்[1]திழுக்கு தந்தோ நாயேன்
பேய்பிடித்த பித்தனைப்போற் பிதற்று நின்றேன்
என்கொடுமை யென்பாவ மெந்தா யெந்தாய்
என்னுரைப்பே னெங்குறுவே னென்செய்வேனே. 78

உய்குவித்து[2] மெய்யடியார் தம்மை யெல்லாம்
உண்மைநிலை பெறவருளு முடையா யிங்கே
மைகுவித்த நெடுங்கண்ணார் மயக்கி லாழ்ந்து
வருந்துகின்றே னல்லாலுன் மலர்த்தா ளெண்ணிக்
கைகுவித்துக் கண்களினீர் பொழிந்து நாளோர்
கணமேனுங் கருதிநினைக் கலந்த துண்டோ
செய்குவித்துக் கொள்ளுதியோ கொள்கி லாயோ
திருவுளத்தை யறியேனென் செய்கு வேனே. 79

அருள்வெளியி லானந்த வடிவி னால்நின்
றுடுகின்ற பெருவாழ்வே யரசே யிந்த
மருள்வலையி லகப்பட்ட மனத்தா லந்தோ
மதிகலங்கி மெய்ந்நிலைக்கோர் வழிகா ணாதே
இருள்நெறியிற் கோலிழந்த குருட்டு மன்போல்
எண்ணாதெல் லாமெண்ணி யேங்கி யேங்கி
உருள்சகடக் கால்போலுஞ் சுழலா நின்றேன்
உய்யும்வகை யறியேனிவ் வொதிய னேனே. 80

கற்றவனை தனக்குமுணா வளிக்கு முன்றன்
கருணைநிலை தனையறியேன் கடையே னிங்கே
எற்றவனை யெறும்பேபோற் றிரிந்து நாளும்
இளைத்துநின தருள்காணா தெந்தா யந்தோ
பெற்றவனைக் காணாத பிள்ளை போலப்
பேதுறுகின் றேன்செய்யும் பிழையை நோக்கி
[3]இற்றவனைக் கேள்விடல்போல் விடுதி யேல்யான்
என்செய்வே னெங்குறுவே னென்சொல வேனே. 81

---

1. இழுக்குது என்பது—மரூஉவழக்கு, அல்லதூஉம்—ஆசிரியர்—தொல்காப்பியனார் கூறிய கடிசொல்லில்லை யென்றதனாற் கோடலுமாம். இங்ஙனமாதல் — இனியே தேடிக் குனருள் வருமோ வெனக்கருதி "பேங்குதே" நெஞ்சம், எனத் தாயுமானார் முதலிய பிரசான்றோர் செய்யுட்களானு முணர்கவென்க.
2. உய்குவித்து என்பதனுள்-கு-சாரியை. 3. இற்றவள் என்பது — மனையறங்காப்போள்.

Koviloor Digital Library

அடிமைசெயப் புகுந்திடுமெம் போல்வார் குற்றம்
ஆயிரமும் பொறுத்தருளு மரசே நாயேன்
கொடுமைசெயு மனத்தாலே வருந்தி யந்தோ
குரங்கின்கை மாலையெனக் குலையா நின்றேன்
கடுமைசெயப் பிறர்துணிந்தா லடிமை தன்னைக்
கண்டிருத்த லழகன்றே கருணைக் கெந்தாய்
செடிமையுளப் பாதகனே னென்செய் வேனின்
திருவுளத்தை யறிந்திலேன் றிகைக்கின் றேனே. 82

கூம்பாத மெய்ந்நெறியோ ருளத்தே யென்றுங்
குறையாத வின்பளிக்குங் குருவே யாசைத்
தாம்பாலே யாப்புண்டு வருந்தி நாயேன்
தையலார் மையலெனுஞ் சலதி யாழ்ந்து
ஓம்பாம லுவர்நீருண் டுயங்கு கின்றேன்
உன்னடிய ரக்கரைமே லுவந்து நின்றே
தீம்பாலுஞ் சருக்கரையுந் தேனு நெய்யுந்
தேக்குகின்றா ரிதுதகுமோ தேவ தேவே. 83

வெள்ளமணி சடைக்கனியே மூவ ராகி
விரிந்தருளு மொருதனியே விமல னேனைக்
கள்ளமனக் குரங்காட்டு மாட்ட மெல்லாங்
கண்டிருந்து மிரங்கிலையேற் கவலை யாலே
உள்ளமெலிந் துழல்கின்ற சிறியேன் பின்னர்
உய்யும்வகை யெவ்வகைநீ துன்னுந் தோறும்
பொள்ளெனமெய் வியர்க்கவுளம் பதைக்கச் சோபம்
பொங்கிவழி கின்றதுநான் பொறுக்கி லேனே. 84

எனையறியாப் பருவத்தே யாண்டு கொண்ட
என்னரசே யென்குருவே யிறையே யின்று
மனையறியாப் பிழைகருது மகிழ்நன் போல
மதியறியேன் செய்பிழையை மனத்துட் கொண்டே
தனையறியா முகத்தவர்போ லிருந்தா யெந்தாய்
தடங்கருணைப் பெருங்கடற்குத் தகுமோ கண்டாய்
அனையறியாச் சிறுகுழவி யாகி யீங்கே
அடிநாயே னரற்றுகின்றே னந்தோ வந்தோ. 85

தீவினைநல் வினையெனும்வன் கயிற்றா லிந்தச்
சீவர்களை யாட்டுகின்ற தேவே நாயேன்
ஏவினைநேர் கண்மடவார் மையற் பேயால்
இடருழந்துஞ் சலிப்பின்றி யென்னே பின்னும்
நாவினையென் பால்வருந்திக் கறண்டு கின்ற
நாய்க்குநகை தோன்றநின்று நயக்கின் றேனுன்
ஆவினைவிட் டெருதுகறந் திடுவான் செல்லும்
அறிவிலிக்கு மறிவிலியே னான வாறே. 86

Koviloor Digital Library

எம்பெருமா னின்வினையாட் டென்சொல் கேனுன்
ஏதுமறி யாச்சிறியே னெனைத்தா னிங்கே
செம்புனலாற் குழைத்தபுலாற் சுவர்சூழ் பொத்தைச்
சிறுவீட்டி லிருட்டறையிற் சிறைசெய் தந்தோ
கம்பமுறப் பசித்தழலுங் கொளுந்த வந்தக்
கரணமுதற் பொறிபுலப்பேய் கவர்ந்து சூழ்ந்து
வம்பியற்றக் காமாதி யரட்ட ரெல்லாம்
மடிபிடித்து வருத்தவென்றோ வளர்த்தா யெந்தாய். 87

அம்பரத்தே யானந்த வடிவா லென்றும்
ஆடுகின்ற மாமணியே யரசே நாயேன்
இம்பரத்த மெனுமுலக நடையி லந்தோ
இடருழந்தேன் பன்னெறியி லெனையி ழுத்தே
பம்பரத்தி னுடியலைப் படுத்து மிந்தப்
பாவிமன மெனக்குவயப் படுவ தில்லை
கொம்பரற்ற இளங்கொடிபோற் றளர்ந்தே னெல்லைக்
குறிக்கொள்ளக் கருதுதியோ குறித்தி டாயோ. 88

கண்ணுடைய நுதற்கரும்பே மன்றி லாடுங்
காரணகா ரியங்கடந்த கடவு ளேநின்
தண்ணுடைய மலரடிக்கோர் சிறிது மன்பு
சார்ந்தேனே செம்மரம்போற் றணிந்த நெஞ்சேன்
பெண்ணுடைய மயலாலே சுழல்கின் றேனென்
பேதைமையை யென்புகல்வேன் பேய னேனைப்
புண்ணுடைய புழுவிரும்பும் புள்ளென் கேனே
புலைவிழைந்து நிலைவெறுத்தேன் புலைய னேனே. 89

பொன்னுடையா ரிடம்புகவோ அவர்கட் கேற்கப்
பொய்மொழிகள் புகன்றிடவோ பொதிபோ லிந்தக்
கொன்னுடையா வுடல்பருக்கப் பசிக்குச் சோறு
கொடுக்கவோ குளிர்க்காடை கொளவோ வஞ்ச
மின்னிடையார் முடைச்சிறுநீர்க் குழிக்க ணந்தோ
வீழ்ந்திடவோ தாழ்ந்திளைத்து விழிக்க வோதான்
என்னுடையா யென்னுடையா யென்னை யிங்கே
எடுத்துவளர்த் தனையறியே னென்சொல் வேனே. 90

வருகணத்து வாழ்ந்திடுமோ விழுமோ இந்த
மலக்கூடென் றறிஞரெலாம் வருந்தக் கேட்டும்
அருகணைத்துக் கொளப்பெண்பே யெங்கே மேட்டுக்
கடைத்திடவெண் சோறெங்கே ஆடை யெங்கே
இருகணுக்கு வியப்பெங்கே வசதி யான
இடமெங்கே யென்றுதிரிந் திளைத்தே னல்லால்
ஒருகணத்தும் உனைநினைந்த துண்டோ வென்னை
உடையானே யெவ்வகைநான் உய்யு மாறே. 91

Koviloor Digital Library

பொன்மலையோ சிறிதெனப்பே ராசை பொங்கிப்
புவிநடையிற் பற்பலகாற் போந்து போந்து
நென்மலையோ நிதிமலையோ வென்று தேடி
நிலைகுலைந்த தன்றியுனை நினைந்து நேடி
மன்மலையோ! மாமணியோ! மருந்தோ! என்று
வழுத்தியதே யில்லையிந்த வஞ்ச நெஞ்சங்
கன்மலையோ இரும்போசெம் மரமோ பாறைக்
கருங்கல்லோ பராய்முருட் டுக் கட்டை யேயோ. 92

தம்மைமறந் தருளமுத முண்டு தேக்குந்
தகையுடையார் திருக்கூட்டஞ் சார்ந்து நாயேன்
வெம்மையெலாந் தவிர்ந்துமனங் குளிரக் கேள்வி
விருந்தருந்தி மெய்யறிவாம் வீட்டி லென்றுஞ்
செம்மையெலாந் தருமௌன அணைமேற் கொண்டு
செறியிரவு பகலொன்றுந் தெரியா வண்ணம்
இம்மையிலே யெம்மையினுங் காணாச் சுத்த
இன்பநிலை யடைவேனோ! ஏழை யேனே. 93

அடியனேன் பிழையனைத்தும் பொறுத்தாட் கொண்ட
அருட்கடலே மன்றோங்கு மரசே யிந்நாள்
கொடியனேன் செய்பிழையைத் திருவுள் ளத்தே
கொள்ளுதியோ கொண்டுகுலங் குறிப்ப துண்டோ
நெடியனே முதற்கடவுட் சமுகத் தோர்தம்
நெடும்பிழைக ளாயிரமும் பொறுத்து மாயை
ஒடியநோர் நின்றபெருங் கருணை வள்ளல்
எனமறைக ளோதுவதிங் குனைத்தா னன்றே. 94

கண்மயக்கும் பேரிருட்டுக் கங்குற் போதிற்
கருத்தறியாச் சிறுவனையோர் கடுங்கா னத்தே
உண்மயக்கங் கொளவிடுத்தே யொருவன் பின்போம்
ஒருதாய்போன் மாயையிரு ளோங்கும் போதின்
மண்மயக்கம் பெறும்விடயக் காட்டி லந்தோ
மதியிலேன் மாழாந்து மயங்க நீதான்
வண்மையுற்ற நியதியின்பின் என்னை விட்டே
மறைந்தனையே பரமேநின் வண்மை யென்னே. 95

நற்றாயும் பிழைகுறிக்கக் கண்டோ மிந்த
நானிலத்தே மற்றவர்யார் நாடார் வீணே
பற்றாயு மவர்தமைநாம் பற்றோம் பற்றிற்
பற்றாத பற்றுடையார் பற்றி யுள்ளே
உற்றாயுஞ் சிவபெருமான் கருணை யொன்றே
உறுபிழைக ளெத்துணையும் பொறுப்ப தென்றுன்
பொற்றாளை விரும்பியதும் மன்று ளாடும்
பொருளேயென் பிழையனைத்தும் பொறுக்க வன்றே. 96

Koviloor Digital Library

எண்ணியநம் எண்ணமெலா முடிப்பான் மன்றுள்
எம்பெருமா னென்றுமகிழ்ந் திறுமாந் திங்கே
நண்ணியமற் றையர்தம்மை யுருமை பேசி
நன்குமதி யாதிருந்த நாயி னேனைத்
தண்ணியநல் லருட்கடலே மன்றி லின்பத்
தாண்டவஞ்செய் கின்றபெருந் தகையே யெங்கள்
புண்ணியனே பிழைகுறித்து விடுத்தி யாயிற்
பொய்யனே னெங்குற்றென் புரிவே னந்தோ. 97

அன்பர்திரு வுளங்கோயி லாகக் கொண்டே
அற்புதச்சிற் சபையோங்கு மரசே யிங்கு
வன்பரிடைச் சிறியேனை மயங்க வைத்து
மறைந்தனையே யானந்த வடிவோய் நின்னைத்
துன்பவடி வுடைப்பிறரிற் பிரித்து மேலோர்
துரியவடி வினனென்று சொன்ன வெல்லாம்
இன்பவடி வடைந்தன்றே யெந்தா யந்தோ
என்னளவென் சொல்கேனிவ் வேழை யேனே. 98

புற்றேங்கும் அரவமெல்லாம் பணியாக் கொண்டு
பொன்மேனி தனிலணிந்த பொருளே மாயை
உற்றேங்கு வஞ்சமனக் கள்வ னேனை
உளங்கொண்டு பணிகொள்வ தனக்கே யொக்கும்
மற்றேங்கு மவரெல்லாம் பெருமை வேண்டும்
வன்மனத்த ரெனைவேண்டார் வள்ளலே நான்
கற்றேங்கு மறிவறியேன் பல்வாச் சொல்லுங்
கருத்தறியே னெனக்கருளக் கருதுவாயே. 99

அருளுடைய பரம்பொருளே! மன்றி லாடும்
ஆனந்தப் பெருவாழ்வே யன்பு ளோர்தம்
தெருளுடைய வுளமுழுதுங் கோயில் கொண்ட
சிவமே!மெய் யறிவுருவாந் தெய்வ மேயிம்
மருளுடைய மனப்பேதை நாயி னேன்செய்
வன்பிழையைச் சிறிதேனு மதித்தி யாயில்
இருளுடைய பவக்கடல்விட் டேறேன் என்னை
ஏற்றுவதற் கெண்ணுக! என் இன்பத் தேவே! 100

திருச்சிற்றம்பலம்

Koviloor Digital Library

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

ஆருவது

திருவருண் முறையீடு

கட்டளைக் கலித்துறை
திருச்சிற்றம்பலம்

அருளரசே யருட் குன்றேமன் றுடு மருளிறையே
அருளமு தேயருட் பேறே நிறைந்த வருட்கடலே
அருளணி யேயருட் கண்ணேவிண் ணோங்கு மருளொளியே
அருளற மேயருட் பண்பேமுக் கண்கொ ளருட்சிவமே. 1

துனியா லுளந்தளர்ந் தந்தோ! துரும்பிற் சுழலுகின்றேன்
இனியா யினுமிரங் காதோநின் சித்தமெந் தாயிதென்ன
அனியாய மோ! என் னளவினின் பாற்றண் ணருளிலையோ
சனியாமென் வல்வினைப் போதனை யோவென்கொல் சாற்றுவதே.

என்னே முறையுண் டெனிற்கேள்வி யுண்டென்ப ரென்னளவில்
இன்னே சிறிது மிலையேநின் பாலிதற் கென்செய்குவேன்
மன்னேமுக் கண்ணுடை மாமணி யேயிடை வைப்பரிதாம்
பொன்னேமின் னேர்சடைத் தன்னே ரிலாப்பரி பூரணனே. 3

தண்டாத சஞ்சலங் கொண்டே னிலையைத் தாரணியிற்
கண்டா ரிரங்குவர் கேட்டா ருருகுவர் கங்கைதிங்கட்
டுண்டார் மலர்ச்சடை யெந்தா யிரங்கிலை தூய்மையிலா
அண்டார் பிழையும் பொறுப்போ யிதுநின் னருட்கழகே. 4

பொய்யா முலக நடைநின்று சஞ்சலம் பொங்கமுக்கண்
ஐயாவென் னுள்ள மழலார் மெழுகொத் தழிகின்றதாற்
பையா ரரவ மதிச்சடை யாய்செம் பவளநிறச்
செய்யா யெனக்கருள் செய்யா யெனிலென்ன செய்குவனே. 5

விடமிலை யோர்மணி கண்டாநின் சைவ விரதஞ்செய்யத்
திடமிலை யோபுட் செறிவிலை யேயென் றன் சித்தத்துநின்
நடமிலை யேபுன்ற னன்பிலை யேவுனை நாடுதற்கோர்
இடமிலை யேயிதை யெண்ணிலை யேசற் றிரங்கிலையே. 6

Koviloor Digital Library

விண்ணுடை யாய்வெள்ளி வெற்புடை யாய்மதி மேவுசடைக்
கண்ணுடை யாய்நெற்றிக் கண்ணுடை யாயருட் கண்ணுடையாய்
பண்ணுடை யாய்திசைப் பட்டுடை யாயிடப் பாலிலருட்
பெண்ணுடை யாய்வந்திப் பிட்டுடை யாயென் பெருஞ்செல்வமே

விடையுடை யாய்மறை மேலுடை யாய்நதி மேவியசெஞ்
சடையுடை யாய்கொன்றைத் தாருடை யாய்கரந் தாங்குமழுப்
படையுடை யாயருட் பண்புடை யாய்பெண் பரவையின்பால்
நடையுடை யாயரு ளுடுடை யாய்பத நல்குகவே. 8

கீளுடை யாய்பிறைக் கீற்றுடை யாயெங் கிளைத்தலைமேல்
தாளுடை யாய்செஞ் சடையுடை யாயென் றனையுடையாய்
வாளுடை யாய்மலை மானுடை யாய்கலை மானுடையாய்
ஆளுடை யாய்மன்று ளாட்டுடை யாயென்னை யாண்டருளே. 9

நான்படும் பாடு சிவனே யுலகர் நவிலும்பஞ்சு
தான்படு மோசொல்லத் தான்படு மோவெண்ணத் தான்படுமோ
கான்படு கண்ணியின் மான்படு மாறு கலங்கிநின்றேன்
ஏன்படு கின்றனை யென்றிரங் காயென்னி லென்செய்வனே. 10

பொய்யோ வடிமை யுரைத்தலெங் தாயென்னுட் போந்திருந்தாய்
ஐயோநின் னுள்ளத் தறிந்ததன் றோவென் னவலமெல்லாங்
கையோட வல்லவ ரோர்பதி னுயிரங் கற்பநின்று
மெய்யோ டெழுதினுந் தானடங் காத வியப்புடைத்தே. 11

தேன்சொல்லும் வாயுமை பாகாநின் றன்னைத் தெரிந்தடுத்தோர்
தான்சொல்லுங் குற்றங் குணமாகக் கொள்ளுந் தயாளுவென்றே
நான்சொல்வ தென்னைபொன் னுண்சொல்லும் வாணிதன் னுண்சொல்லுமவ்
வான்சொல்லு மெம்மலை மான்சொல்லுங் கைம்மலை மான்சொல்லுமே.

வென்றே முதலையு மூர்க்கருங் கொண்டது மீளவிடார்
என்றே யுரைப்பரிங் கென்போன்ற மூடர்மற் றில்லைநின்பேர்
நன்றே யுரைத்துநின் றன்றே விடுத்தன னுணிலென்மட்
டின்றேயக் கட்டுரை யின்றேயென் சொல்வ திறையவனே. 13

கைக்கின்ற காயு மினிப்பாம் விடமுங் கனவமுதாம்
பொய்க்கின்ற கானலு நீராம்வன் பாவமும் புண்ணியமாம்
வைக்கின்ற வோடுஞ்செம் பொன்னுமென் கெட்ட மனதுநின்சீர்
துய்க்கின்ற நல்ல மனதாவ தில்லையென் சொல்லுவனே. 14

வீணே பொழுது கழிக்கின்ற நானுன் விரைமலர்த்தாட்
காணேன்கண் டாரையுங் காண்கின் றிலேன்சற் றுங் காணற்கன்பும்
பூணேன் றவமும் புரியே னறமும் புகல்கின்றிலேன்
நாணேன் விலங்கிழி யானோ யெனுங்கடை நாயினனே. 15

Koviloor Digital Library

நானே ரெளிமை யடிமையென் றேநல்ல னல்லனென்று
தானேநின் னன்பர் தகாதென்ப ரீதென்று தானினைத்தோ
ஏனோநின் னுள்ள மிரங்கிலை யின்னு மிரங்கிலையேற்
கானோடு வேன்கொல் கடல்விழு வேன்கொல்முக் கண்ணவனே. 16

மின்போலுஞ் செஞ்சடை வித்தக னேயொளி மேவியசெம்
பொன்போலு மேனியெம் புண்ணிய னேயெனைப் போற்றிப்பெற்ற
தன்போலுந் தாய்தந்தை யாயிரம் பேருந் தாலுமந்தோ!
நின்போலும் அன்புடை யார் எனக் காரிந்த நீணிலத்தே! 17

அன்பாலென் றன்னையிங் காளுடை யாயிவ் வடியவனேன்
நின்பாலென் றுன்ப நெறிப்பா லகற்றென்று நின்றதல்லால்
துன்பா லிடரைப் பிறர்பா லுடுத்தொன்று சொன்னதுண்டோ?
என்பா லிரங்கிலை யென்? பாற் கடல்பிள்ளைக் கீந்தவனே! 18

என்போன் மனிதரை யேனடுப் பேனெனக் கெய்ப்பில்வைப்பாம்
பொன்போல் விளங்கும் புரிசடை யான்றனைப் போயடுத்தேன்
துன்போ ரணுவும் பெறேனினி யானென்று சொல்லிவந்தேன்
முன்போற் பராமுகஞ் செய்யே லருளுக முக்கணனே. 19

பொன்னுடை யார்தமைப் போயடுப் பாயென்ற புன்மையினேற்
கென்னுடை யான்றனை யேயடுப் பேனிதற் கெள்ளளவும்
பின்னிடை யேனவர் முன்னடை யேனெனப் பேசிவந்தேன்
மின்னிடை மாதுமை பாகாவென் சோகம் விலக்குகவே. 20

சாதகத் தோர்கட்குத் தானருள் வேனெனிற் றாழ்ந்திடுமா
பாதகத் தோனுக்கு முன்னரு ளீந்ததெப் பான்மைகொண்டோ
தீதகத் தேனெளி யோனு யினுமுன் றிருவடியாம்
போதகத் தேநினைக் கின்றேன் கருணை புரிந்தருளே. 21

அருளறி யாச்சிறு தேவருந் தம்மை யடுத்தவர்கட்(கு)
இருளறி யாவிளக் கென்றாலு நெஞ்ச மிரங்குகின்றார்
மருளறி யாப்பெருந் தேவேநின் றன்னடி வந்தடுத்தேன்
தெருளறி யாச்சிறி யேனுயி னுஞ்செய்க சீரருளே. 22

அரும்பொரு ளேயென் னரசேயென் னுருயிர்க் காகவந்த
பெரும்பொரு ளேயருட் பேறே சிவானந்தம் பெற்றவர்பால்
வரும்பொரு ளேமுக்கண் மாமணி யேநின் வழியருளாற்
றரும்பொரு ளேபொரு ளென்றுவந் தேனெனைத் தாங்கிக்கொள்ளே.

சரங்கார் முகந்தொடுத் தெய்வது போலென் றனையுலகத்
துரங்கா ரிருட்பெரு வாதனை யாலிட ரூட்டுநெஞ்சக்
குரங்கான் மெலிந்துநின் னுமைந் துணையெனக் கூறுகின்றேன்
இரங்கார் தமக்கு மிரங்குகின் றோயெற் கிரங்குகவே. 24

கூறுற்ற குற்றமுந் தானே மகிழ்விற் குணமெனவே
ஆறுற்ற செஞ்சடை யண்ணல்கொள் வானென்ப ராங்கதற்கு
வேறுற்ற தோர்கரி வேண்டுங்கொ லோவென்னுண் மேவியென்றும்
வீறுற்ற பாதத் தவன்மிடற் றேகரி மேவியுமே. 25

சூற்படு மேக நிறத்தோனு நான்முகத் தோனுமென்னைப்
போற்படும் பாடுநல் லோர்சொலக் கேட்கும் பொழுதுமனம்
வேற்படும் புண்ணிற் கலங்கியந் தோநம் விடையவன்பூங்
காற்படுந் தூளிநம் மேற்படு மோவொரு காலென்றுமே. 26

வாளேய் நெடுங்கண்ணி யெம்பெரு மாட்டி வருடுமலர்த்
தாளே வருந்த மணிக்கூடற் பாணன் றனக்கடிமை
ஆளே யெனவிற கேற்றுவிற் றோய்நின் னருள்கிடைக்கும்
நாளேநன் னுளந்த நாட்கா யிரந்தெண்ட னுன்செய்வனே. 27

அடுத்தார் தமையென்று மேலோர் விடார்க ளவர்க்குப்பிச்சை
எடுத்தா யினுமிடு வார்கள்என் பாரதற் கேற்கச்சொற்பூத்
தொடுத்தா ரொருவர்க்குக் கச்சூரி லேபிச்சைச் சோறெடுத்துக்
கொடுத்தாய்நின் பேரருளென் சொல்லு கேனெண் குணக்குன்றமே.

நாடிநின் றேநினை நான்கேட்டுக் கொள்வது நண்ணும்பத்துக்
கோடியன் றேயொரு கோடியி னூற்றொரு கூறுமன்றே
தேடிநின் றேபுதைப் போருந் தருவர்நின் சீர்நினைந்துட்
பாடியந் தோமனம் வாடிநின் றேன்முகம் பார்த்தருளே. 29

தாயாகி னுஞ்சற்று நேரந் தரிப்பள்நந் தந்தையைநாம்
வாயார வாழ்த்தினும் வையினுந் தன்னிடை வந்திதுநீ
ஈயா யெனிலருள் வானென் றுனையடுத் தேனுமையாள்
நேயா மனமிரங் காயாவென் னெண்ண நெறிப்படவே. 30

நடும்பாட்டை நாவலன் வாய்த்திருப் பாட்டை நயந்திட்டநீ
குடும்பாட்டை மேற்கொண்ட வென்றமிழ்ப் பாட்டையுங் கொண்டெனுள்ளத்
திடும்பாட்டை நீக்கிலை யென்னினுந் துன்பத் திழுக்குற்றுநான்
படும்பாட்டை யாயினும் பார்த்திரங் காயெம் பரஞ்சுடரே! 31

ஏட்டாலுங் கேளய லென்பாரை நான்சிரித் தென்னைவெட்டிப்
போட்டாலும் வேறிடங் கேளேன்என் னுனைப் புறம்விடுத்துக்
கேட்டாலு மென்னை யுடையா னிடஞ்சென்று கேட்பனென்றே
நீட்டாலும் வாயுரைப் பாட்டாலுஞ் சொல்லி நிறுத்துவனே. 32

சீர்க்கின்ற கூடலிற் பாணனுக் காட்படச் சென்றவந்நாள்
வேர்க்கின்ற வெம்மண லென்றலை மேல்வைக்கு மெல்லடிக்குப்
பேர்க்கின்ற தோறு முறுத்திய தோவெனப் பேசியெண்ணிப்
பார்க்கின்ற தோறுமென் கண்ணேயென் னுள்ளம் பதைக்கின்றதே.

Koviloor Digital Library

நீயேயென் றந்தை யருளுடை யாயெனை நேர்ந்துபெற்ற
தாயேநின் பாலிடத் தெம்பெரு மாட்டியித் தன்மையினால்
நாயேன் சிறிதுங் குணமில னாயினு நானுமுங்கள்
சேயே யெனைப்புறம் விட்டா லுலகஞ் சிரித்திடுமே. 34

தெருளும் பொருளுநின் சீரரு ளேயெனத் தேர்ந்தபின்யான்
மருளும் புவனத் தொருவரை யேனு மதித்ததுண்டோ
வெருளும் புவியிற் றுயராற் கலங்கி வெதும்புகின்றேன்
இருளுங் கருமணி கண்டா வறிந்து மிரங்கிலையே. 35

பெண்ணான் மயங்கு மெளியேனை யாளப் பெருங்கருணை
அண்ணா!நின் னுள்ள மிரங்காத வண்ண மறிந்துகொண்டேன்
கண்ணா ருலகிலென் றுன்பமெல் லாம்வெளி காணிலிந்த
மண்ணா பிலத்தொடு விண்ணாடுங் கொள்ளை வழங்குமென்றே. 36

நெறிகொண்ட நின்னடித் தாமரைக் காட்பட்டு நின்றவென்னைக்
குறிகொண்ட வாழ்க்கைத் துயராம் பெரிய கொடுங்கலிப்பேய்
முறிகொண் டலைக்க வழக்கோ! வளர்த்த முடக்கிழநாய்
வெறிகொண்ட தேனும் விடத்துணி யாரிவ் வியனிலத்தே. 37

மதியாம லாரையு நானிறு மாந்து மகிழ்கின்றதெம்
பதியா முனது திருவருட் சீருரம் பற்றியன்றோ!
எதியார் படினு மிடர்ப்பட் டலையவிவ் வேழைக்கென்ன
விதியா வினிப்பட மாட்டே னருள்செய் விடையவனே. 38

கற்கோட்டை நெஞ்சருந் தம்பா லடுத்தவர் கட்குச்சும்மாச்
சொற்கோட்டை யாயினுங் கட்டுவர் நின்னைத் துணிந்தடுத்தேன்
அற்கோட்டை நெஞ்சுடை யேனுக் கிரங்கில யன்றலவா
நெற்கோட்டை யீந்தவன் நீயல்லை யோ?முக்க ணின்மலனே!

ஆதிக்க மாயை மனத்தேன் கவலை யடுத்தடுத்து
வாதிக்க நொந்து வருந்துகின் றேனின் வழக்கமெண்ணிச்
சோதிக்க வென்னைத் தொடங்கே லருளத் தொடங்குகண்டாய்
போதிக்க வல்லநற் சேயுமை யோடென்னுட் புக்கவனே. 40

பிறைமுடித் தாண்டொரு பெண்முடித் [1]தோர்பிள்ளைப் பேர்முடித்த
நிறைமுடித் தாண்டவஞ் செவ்வேணி செய்திட நித்தமன்றின்
மறைமுடித் தாண்டவஞ் செய்வோயென் பாலருள் வைத்தெளியேன்
குறைமுடித் தாண்டுகொ ளென்னே பலமுறை கூறுவதே. 41

நடங்கொண்ட பொன்னடி நீழலி னான்வந்து நண்ணுமட்டுந்
திடங்கொண்ட நின்புக ழல்லாற் பிறர்புகழ் செப்பவையேல்
விடங்கொண்ட கண்டத் தருட்குன்ற மேயிம வெற்புடையாள்
இடங்கொண்ட தெய்வத் தனிமுத லேயெம் மிறையவனே. 42

1. ஓர் பிள்ளைப்பேர் — மதலை — சரக்கொன்றை.

Koviloor Digital Library

விழிக்கஞ்ச னந்தரு மின்னார்தம் வாழ்க்கையில் வீழ்ந்தயலோர்
மொழிக்கஞ்சி யுள்ளம் பொருதுநின் னாம மொழிந்தெளியேன்
குழிக்கஞ்சி போன்[1]மயங் கின்றே னருளக் குறித்திலையேற்
பழிக்கஞ்சி னேயின்னு மென்பழிக் கஞ்சப் படுமுனக்கே. 43

செல்வைக்கும் கண்ணுமை பாகாநின் சித்தந் திருவருளென்
பால்வைக்கு மேலிட ரெல்லா மெனைவிட்டப் பானடக்கக்
கால்வைக்கு மேநற் சுகவாழ்வென் மீதினிற் கண்வைக்குமே
மால்வைக்கு மாயைகண் மண்வைக்கு மேதங்கள் வாய்தனிலே. 44

ஒருமாது பெற்ற மகன்பொருட் டாக வுவந்துமுன்னம்
வருமாம னாகி வழக்குரைத் தோய்என் வழக்குரைத்தற்கு
இருமா நிலத்தது போல்வேடங் கட்ட விருத்திகொலோ
திருமால் வணங்கும் பதத்தவ யானுன் சிறுவனன்றே. 45

முன்னஞ்ச முண்ட மிடற்றர சேநின் முழுக்கருணை
அன்னஞ் சுகம்பெற வுண்டுமுன் பாலன் படைந்திலதாற்
கன்னெஞ்ச மோகட்டை வன்னெஞ்ச மோவெட்டிக் காய்நெஞ்சமோ
என்னெஞ்ச மென்னெஞ்ச மோதெரி யேனிதற் கென்செய்வதே.

வானம் விடாதுறு காற்போலென் றன்னை வளைந்துகொண்ட
மானம் விடாதிதற் கென்செய்கு வேனின்னை வந்தடுத்தேன்
ஊனம் விடாதுழ லுமேயன் பிழையை யுளங் [2]கொண்டிடேல்
ஞானம் விடாத நடத்தோய்நின் றண்ணரு ணல்குகவே. 47

நாயுஞ் செயாத நடையுடை யேனுக்கு நாணமுமுள்
நோயுஞ் செயாநின்ற வன்மிடி நீக்கிநன் னேன்பளித்தாய்
பேயுஞ் செயாத கொடுந்தவத் தாற்பெற்ற பிள்ளைக்குநற்
றாயுஞ் செயாளிந்த நன்றிகண் டாய்செஞ் சடையவனே. 48

உருவத்தி லேசிறி யேனாகி யூகத்தி லொன்றுமின்றித்
தெருவத்தி லேசிறு கால்வீசி யாடிடச் சென்றவந்தப்
பருவத்தி லேநல் லறிவளித் தேஉனைப் பாடச்செய்தாய்
அருவத்தி லேயுரு வானேய்நின் றண்ணளி யார்க்குளதே. 49

மானெழுந் தாடுங் கரத்தோய்நின் சாந்த மனத்திற்சினந்
தானெழுந் தாலு மெழுகவென் றேயென் றளர்வையெல்லாம்
ஊனெழுந் தார்க்கநின் பாலுரைப் பேனன்றி ஊர்க்குரைக்க
நானெழுந் தாலுமென் னாவெழு மோ!மொழி நல்கிடவே. 50

வனமெழுந் தாடுஞ் சடையோய்நின் சித்த மகிழ்தலன்றிச்
சினமெழுந் தாலு மெழுகவென் றேயென் சிறுமையைநின்
முனமெழுந் தாற்றுவ தல்லாற் பிறர்க்கு மொழிந்திடவென்
மனமெழுந் தாலுமென் வாயெழு மோ!உள்ள வாறிதுவே. 51

1. மயங்குகின்றேன் எனற்பாலது — மயங்கின்றேன் என விகாரமாயிற்று.
2. கொண்டிடேல் முன்னிலை யெதிர்மறை யேவன்முற்றாகக் கொள்க.

Koviloor Digital Library

சிற்பர மேயெஞ் சிவமே திருவருட் சீர்மிகுந்த
கற்பக மேயுனைச் சார்ந்தோர்க் களிக்குநின் கைவழக்கம்
அற்பமன் றேபல வண்டங் களினடங் காததென்றே
நற்பர ஞானிகள் வாசகத் தாற்கண்டு நாடினனே. 52

வருஞ் [1]செல்லுள் நீர்மறுத் தாலுங் கருணை மருதவெங்கட்
பெருஞ்செல்வ மேயெஞ் சிவமே! நினைத்தொழப் பெற்றுமிங்கே
தருஞ்செல் லரிக்கு மரம்போற் சிறுமைத் தளர்நடையால்
அருஞ்செல்லன் மூழ்கிநிற் கின்றே னெஃதுநின் னருட்கழகே. 53

கருமுக நீக்கிய பாணனுக் கேகன கங்கொடுக்கத்
திருமுகஞ் சேரற் களித்தோய்என் றுன்னைத் தெரிந்தடுத்தென்
ஒருமுகம் பார்த்தரு ளென்கின்ற வேழைக் குதவிலையேல்
[2]உருமுக வார்க்கும் விடையோ யெவர்மற் றுதவுவரே. 54

மருப்பா வனத்துற்ற மாணிக்கு மன்னன் மனமறிந்தோர்
திருப்பா சுரஞ்செய்து பொற்கிழி யீந்தநின் சீர்நினைந்தே
விருப்பா நினையடுத் தேனெனக் கீந்திட வேயின்றென்னை
கருப்பாநின் சித்தந் திருப்பாயென் மீது கறைக்கண்டனே. 55

பிழையைய மேவுமிவ் வாழ்க்கையி லேமனம் பேதுறவிவ்
வேழையை நீவிட லாமோ வடிமைக் கிரங்குகண்டாய்
[3]மாழையைப் போன்முன்னர்த் தாங்கொண்டு வைத்து வளர்த்தவிள
வாழையைத் தாம்பின்னர் நீர்விட லின்றி மறுப்பதுண்டே. 56

கருத்தறி யாச்சிறி யேன்படுந் துன்பக் கலக்கமெல்லாம்
உருத்தறி யாமை பொறுத்தரு ளீபவ ருன்னையன்றித்
திருத்தறி யார்பிற ரன்றேமென் கன்றின் சிறுமையொன்றும்
எருத்தறி யாதுநற் சேதா வறியு மிரங்குகவே. 57

வான்வேண்டிக் கொண்ட மருந்தோமுக் கண்கொண்ட வள்ளலுன்னை
நான்வேண்டிக் கொண்டது நின்னடி யார்க்கு நகைதருமீ(து)
ஏன்வேண்டிக் கொண்டனை யென்பா ரிதற்கின்னு மேனிரங்காய்
தான்வேண்டிக் கொண்ட வடிமைக்குக் கூழிடத் தாழ்ப்பதுண்டே.

பையுரைத் தாடும் பணிப்புயத் தோய்தமைப் பாடுகின்றோர்
உய்யுரைத் தாவுள்ள தில்லதென் றில்லதை யுள்ளதென்றே
பொய்யுரைத் தாலுந் தருவார் பிறரது போலன்றிநான்
மெய்யுரைத் தாலு மிரங்காமை நின்னருண் மெய்க்கழகே. 59

மடல்வற்றி னாலு மணம்வற் றாத மலரெனவென்
உடல்வற்றி னாலுமென் னுள்வற்று மோதுய ருள்ளவெல்லா
மடல்வற்று றாதநின் றாட்கன்றி யீங்கய லார்க்குரையேன்
கடல்வற்றி னாலுங் கருணைவற் றாதமுக் கண்ணவனே. 60

1. செல் என்பது — மேகம். 2. உரும் — என்பது இடி. 3. மாழை என்பது — பொன்.

எள்ளிருக் கின்றதற் கேனுஞ் சிறிதிட மின்றியென்பான்
முள்ளிருக் கின்றது போலுற்ற துன்ப முயக்கமெல்லாம்
வெள்ளிருக் கின்றவர் தாமுங்கண் டாரெனின் மேவியென்றன்
உள்ளிருக் கின்றநின் ருட்கோத லென்னெம் உடையவனே. 61

[1]**பொன்கின்று** பூத்த சடையாயிவ் வேழைக்குன் பொன்னருளாம்
நன்கின்று நீதரல் வேண்டுமங் தோதுயர் நண்ணியென்னைத்
தின்கின்ற தேகொடும் பாம்பையும் பாலுணச் செய்துகொலார்
என்கின்ற ஞால மிழுக்குரை யாதெற் கிரங்கிடினே. 62

வாய்மூடிக் கொல்பவர் போலேயென் னுள்ளத்தை வன்றுயராம்
பேய்மூடிக் கொண்டதென் செய்கேன் முகத்திற் பிறங்குகையைச்
சேய்மூடிக் கொண்டுநற் பாற்கழக் கண்டுங் திகழ்முலையைத்
தாய்மூடிக் கொள்ளுவ துண்டோ? அருளுக சங்கரனே. 63

கோள்வேண்டு மேழை மனத்தினை வேருற்றுக் கொட்டக்கொள்ளித்
தேள்வேண்டு மோசுடத் தீவேண்டு மோவதை செய்திடவோர்
வாள்வேண்டு மோகொடுந் துன்பே யதிலெண் மடங்குகண்டாய்
ஆள்வேண்டு மேலென்னை யாள்வேண்டு மென்னு ளருரொழித்தே.

விடையிலை யோவதன் மேலேறி யென்முன் விரைந்துவரப்
படையிலை யோதுய ரெல்லாங் துணிக்கப் பதங்கொளருட்
கொடையிலை யோவென் குறைதீர நல்கக் குலவுமென்தாய்
புடையிலை யோவென் றனக்காகப் பேசவெம் புண்ணியனே. 65

நறையுள தேமலர்க் கொன்றைகொண் டாடிய நற்சடைமேற்
பிறையுள தேகங்கைப் பெண்ணுள தேபிறங் குங்கழுத்திற்
கறையுள தேயரு ளெங்குள தேயிக் கடையவனேன்
குறையுள தேயென் றரற்றவுஞ் சற்றுங் குறித்திலதே. 66

சினத்தாலுங் காமத்தி னாலுமென் றன்னைத் திகைப்பிக்குமிம்
மனத்தா லுறுந்துயர் போதாமை யென்று மதித்துச்சுற்றும்
இனத்தாலும் வாழ்க்கை யிடும்பையி னாலு மிளைக்கவைத்தாய்
அனத்தான் புகழும் பதத்தோ யிதுநின் னருட்கழகே. 67

புல்லள வாயினு மீயார்தம் வாயிற் புகுந்துபுகழ்ச்
சொல்லள வாநின் றிரப்போ ரிரக்கநற் [2]சொன்னங்களைக்
[3]கல்லள வாத்தரு கின்றோர்தம் பாலுங் கருதிச்சென்றோர்
நெல்லள வாயினுங் கேளேனின் பாலன்றி நின்மலனே. 68

பிறைசூழ்ந்த வேணி முடிக்கனி யேயெம் பெருஞ்செல்வமே!
கறைசூழ்ந்த கண்டத்தெங் கற்பக மேநுதற் கட்கரும்பே
மறைசூழ்ந்த மன்றொளிர் மாமணி யேயென் மனமுழுதுங்
குறைசூழ்ந்து கொண்டதென் செய்கே னகற்றக் குறித்தருளே. 69

1. பொன்கின்று பூத்தசடை என்பது — கொன்றை பூத்த சடை.
2. சொன்னம் — சொர்ணம் — பொன். 3. கல் என்பது — மலை.

Koviloor Digital Library

கண்கட்டி யாடும் பருவத்தி லேமுலை கண்டவொரு
பெண்கட்டி யாள நினைக்கின்ற வோர்சிறு பிள்ளையைப்போல்
எண்கட்டி யானுன் னருள்விழைந் தேன்சிவ னேயென்னெஞ்சம்
புண்கட்டி யாயலைக் கின்றது மண்கட்டிப் போலுதிர்ந்தே. 70

மெய்விட்ட வஞ்சக நெஞ்சாற் படுந்துயர் வெந்நெருப்பில்
நெய்விட்ட வாறிந்த வாழ்க்கையின் வாதனை நேரிட்டதாற்
பொய்விட்ட நெஞ்சுறும் பொற்பதத் தையவிப் பொய்யனைநீ
கைவிட் டிடனினை யேலருள் வாய்கரு ணைக்கடலே. 71

அருட்கட லேயக் கடலமுதே யவ் வமுதத்துற்ற
தெருட்சுவை யேயச் சுவைப்பய னேமறைச் சென்னிநின்ற
பொருட்பத மேயப் பதத்தர சேநின் புகழ்நினையா
இருட்குண மாயை மனத்தே னையுமுவந் தேன்றுகொள்ளே. 72

அண்டங்கண் டானு மளந்தானுங் காண்டற் கரியவநின்
கண்டங்கண் டார்க்குஞ் சடைமேற் குறைந்த கலைமதியின்
துண்டங்கண் டார்க்கும் பயமுள தோவெனச் சூழ்ந்தடைந்தேன்
தொண்டன்கண் டாள்பல தெண்டன்கண் டாய்நின் றுணையடிக்கே.

தேட்டக்கண் டேர்மொழிப் பாகா வுலகிற் சிலர்குரங்கை
ஆட்டக்கண் டேனன்றி யக்குரங் காலவ ராடச்சற்றுங்
கேட்டுக்கண் டேனிலை நானேழை நெஞ்சக் கிழக்குரங்கால்
வேட்டுக்கொண் டாடுகின் றேனிது சான்ற வியப்புடைத்தே. 74

போகங்கொண் டார்த்த வருளா ரமுதப் புணர்முலையைப்
பாகங்கொண் டார்த்த பரம்பொரு ளேநின் பதநினையா
வேகங்கொண் டார்த்த மனத்தாலிவ் வேழை மெலிந்துமிகச்
சோகங்கொண் டார்த்துநிற் கின்றே னருளத் தொடங்குகவே. 75

இன்றல வேநெடு நாளாக வேழைக் கெதிர்த்ததுன்பம்
ஒன்றல வேபல வெண்ணில வேயுற் றுரைத்ததயன்
மன்றல வேபிறர் நன்றல வேயென வந்தகயக்
கன்றல வேபசுங் கன்றடி யேன்றனைக் காத்தருளே. 76

படிபட்ட மாயையின் பாற்பட்ட சாலப் பரப்பிற்பட்டே
மிடிபட்ட வாழ்க்கையின் மேற்பட்ட துன்ப விசாரத்தினால்
அடிபட்ட நானுனக் காட்பட்டு மின்னு மலைதல்நன்றோ
பிடிபட்ட நேரிடைப் பெண்பட்ட பாகப் பெருந்தகையே. 77

உடையாயென் விண்ணப்ப மொன்றுண்டு கேட்டருள் உன்னடிச்சீர்
தடையாது மின்றிப் புகல்வதல் லாலிச் சகத்திடைநா
னடையாற் சிறுமைகொண் டந்தோ பிறரை நவின்றவர்பால்
அடையா மையுநெஞ் சுடையாமை யுந்தந் தருளுகவே. 78

நஞ்சமென் றேநின்ற நாயேன் குறையைத் தவிருனக்கோர்
பஞ்சமின் றேயுல கெல்லாநின் சீரருட் பாங்குகண்டாய்
எஞ்சநின் றேற்குனை யல்லாற் றுணைபிறி தில்லையிது
வஞ்சமன் றேநின் பதங்காண்க முக்கண் மணிச்சுடரே. 79

Koviloor Digital Library

பொறுத்தாலு நால்செயுங் குற்றங்கள் யாவும் பொறாதெனைநீ
ஒறுத்தாலு நன்றினிக் கைவிட் டிடேலென் னுடையவனீ
வெறுத்தாலும் வேறிலை வேற்றோ ரிடத்தை விரும்பியென்னை
அறுத்தாலுஞ் சென்றிட மாட்டேன் எனக்குன் னருளிடமே. 80

சேல்வரு மேர்விழி மங்கைபங் காவென் சிறுமைகண்டான்
மேல்வரு நீவரத் தாழ்த்தாலு முன்றன் வியனருட்பொற்
கால்வரு மேயிளங் கன்றழத் தாய்ப்பசுக் காணின்மடிப்
பால்வரு மேமுலைப் பால்வரு மேபெற்ற பாவைக்குமே. 81

வன்பட்ட கூடலில் வான்பட்ட வையை வரம்பிட்டநின்
பொன்பட்ட மேனியிற் புண்பட்ட போதிற் புவிநடையாங்
துன்பட்ட வீரரந் தோவாத வூரர்தந் தூயநெஞ்சம்
என்பட்ட தோ! இன்று கேட்டவென் னெஞ்ச மிடிபட்டதே! 82

நீர்சிந்துங் கண்ணு நிலைசிந்து நெஞ்சமு நீணடையிற்
சீர்சிந்து வாழ்க்கையுந் தேன்சிந்தி வாடிய செம்மலர்போற்
கூர்சிந்து புந்தியுங் கொண்டுநின் றேனுட் குறைசிந்தும்வா
றோர்சிந்து போலரு ணோர்சிந்த னேத்து முடையவனே. 83

கொடிகொண்ட வேற்றி னடையுஞ் சடையுங் குளிர்முகமும்
துடிகொண்ட கையும் பொடிகொண்ட மேனியுந் தோலுடையும்
பிடிகொண்ட பாகமும் பேரரு ணோக்கமும் பெய்கழலுங்
குடிகொண்ட நன்மன மென்மனம் போற்குறை கொள்வதின்றே. 84

விதிக்கும் பதிக்கும் பதிநதி யார்மதி வேணிப்பதி
திதிக்கும் பதிக்கும் பதிமேற் கதிக்குந் திகழ்பதிவான்
துதிக்கும் பதிக்கும் பதியோங்கு மாபதி சொற்கடந்த
பதிக்கும் பதிசிற் பதியெம் பதிநம் பசுபதியே. 85

எனையடைந் தாழ்த்திய துன்பச் சுமையை யிறக்கெனவே
நினையடைந் தேனடி நாயேற் கருள நினைதிகண்டாய்
வினையடைந் தேமன வீறுடைந் தேநின்று வேற்றவர்தம்
மனையடைந் தேமனம் வாடலுன் றொண்டர் மரபல்லவே. 86

வனம்போய் வருவது போலவென் செல்வர் மனையிடத்தே
தினம்போய் வருமிச் சிறியேன் சிறுமைச் செயலதுபோய்ச்
சினம்போய்க் கொடும்பகைக் காமமும் போய்நின் றிறநிகழ்த்தா
வினம்போய்க் கொடிய மனம்போ யிருப்பதென் றென்னரசே. 87

பெற்றா ளனையநின் குற்றேவல் செய்து பிழைக்கறியாச்
சிற்றாள் பலரினுஞ் சிற்றா ளெனுமென் சிறுமைதவிர்த்(து)
உற்றா ளிலையெனின் மற்றார் துணையெனக் குன்கமலப்
பொற்றா ளருட்புகழ்க் கற்றாய்ந்து பாடப் புரிந்தருளே. 88

அந்நாணை யாதுநஞ் சேற்றயன் மான்மனை யாதியர்தம்
பொன்னாணைக் காத்த வருட்கட லேபிறர் புன்மனைபோய்
இந்நாணை யாவகை யென்னாணைக் காத்தரு ளேழைக்குநின்
தன்னாணை யையநின் றாளாணை வேறு சரணில்லையே. 89

Koviloor Digital Library

பவசாத னம்பெறும் பாதகர் மேவுமிப் பாரிடைநற்
சிவசாத னத்தரை யேன்படைத் தாயத் திருவிலிகள்
அவசாத னங்களைக் கண்டிவ ருள்ள மழுங்கவென்றோ
கவசா தனமெனக் கைம்மா னுரியைக் களித்தவனே. 90

நான்செய்த புண்ணியம் யாதோ சிவாய நமவெனவே
ஊன்செய்த நாவைக்கொண் டோதப்பெற் றேனெனை யொப்பவரார்
வான்செய்த நான்முகத் தோனுந் திருநெடு மாலுமற்றைத்
தேன்செய்த கற்பகத் தேவனுந் தேவருஞ் செய்யரிதே. 91

உற்று யினுமறைக் கோர்வரி யோயென்னை யுற்றுப்பெற்ற
நற்று யினுமினி யானேநின் னல்லரு ணல்கிலென்னை
விற்று யினுங்கொள வேண்டுகின்றேனென் விருப்பறிந்துஞ்
சற்று யினுமிரங் காதோநின் சித்தந் தயாநிதியே. 92

வான்மா றினுமொழி மாருத மாறன் மனங்களிக்கக்
கான்மாறி யாடிய கற்பக மேநின் கருணையென்மேற்
முன்மா றினும்விட்டு நான்மாறி டேன்பெற்ற தாய்க்குமுலைப்
பான்மாறி னும்பிள்ளை பான்மாறு மோவதிற் பல்லிடுமே. 93

அன்பரி தாமனத் தேழையன் யான்றுய ரான்மெலிந்தே
இன்பரி தாமிச் சிறுநடை வாழ்க்கையி லேங்குகின்றேன்
என்பரி தாப நிலைநீ யறிந்து மிரங்கிலையேல்
வன்பரி தாந்தண் ணருட்கட லேயென்னை வாழ்வெனக்கே. 94

மைகண்ட கண்டமு மாள்கண்ட வாமமும் வைத்தருளிற்
கைகண்ட நீயெங்குங் கண்கண்ட தெய்வங் கருதிலென்றே
மெய்கண்ட நான்மற்றைப் பொய்கண்ட தெய்வங்கண் மேவுவனோ
நெய்கண்ட வூண்விட்டு நீர்கண்ட கூழுக்கென் னேடுவதே. 95

வேணிக்கு மேலொரு [1]வேணிவைத் தோய்முன் விரும்பியொரு
மாணிக்கு வேதம் வகுத்தே கிழியொன்று வாங்கித்தந்த
காணிக்குத் தானரைக் காணிமட் டாயினுங் காட்டுகண்டாய்
[2]பாணிக்கு மோதரும் [3]பாணிவந் தேற்றவர் பான்மைகண்டே. 96

மறைக்கொளித் தாய்நெடு மாற்கொளித் தாய்திசை மாமுகங்கொள்
இறைக்கொளித் தாயிங் கதிலோர் பழியிலை யென்றன்மனக்
குறைக்கொளித் தாலுங் குறைதீர்த் தருளெனக் கூவிடுமென்
முறைக்கொளித் தாலு மரசேநின் பாற்பழி மூடிடுமே. 97

முன்மழை வேண்டும் பருவப் பயிர்வெயின் மூடிக்கெட்ட
பின்மழை பேய்ந்தென்னை பேறுகண் டாயந்தப் பெற்றியைப்போல்
நின்மழை போற்கொடை யின்றன்றி மூப்பு நெருங்கியக்காற்
பொன்மழை பேய்ந்தென்னை கன்மழை பேய்ந்தென்னை பூரணனே.

1. வேணி என்பது — நதி. 2. பாணிக்குமோ என்பது — தாமதிக்குமோ.
3. பாணி என்பது — கை — நீர்.

Koviloor Digital Library

நீளா தரவுகொண் டென்குறை யாவு நிகழ்த்தவுநீ
கேளா தவனென வாளா விருக்கின்ற கேண்மையென்னே?
சூளாத முக்கண் மணியே விடேலுனைச் சூழ்ந்தவென்னை
ஆளாகக் கொள்ளினு மீளா நரகத் தழுத்தினுமே. 99

வளங்கன்று மாவனத் தீன்றதன் தாயின்றி வாடுகின்ற
இளங்கன்று போற்சிறு வாழ்க்கையி னின்னரு ளின்றியந்தோ
உளங்கன்று நான்செய்வ தென்னே கருணை யுதவுகண்டாய்
களங்கன்று பேரருட் காரென்று கூறுங் களத்தவனே. 100

காற்றுக்கு மேல்விட்ட பஞ்சாகி யுள்ளங் கறங்கச்சென்றே
சோற்றுக்கு மேற்கதி யின்றென வேற்றகந் தோறுமுண்போர்
தூற்றுக்கு மேற்பெருந் தூறிலை யாங்கென் றுயரமெனுஞ்
சேற்றுக்கு மேற்பெருஞ் சேறிலை காணருட் செவ்வண்ணனே. 101

அந்தோ துயரிற் சுழன்றுடு மேழை யவலநெஞ்சஞ்
சிந்தோத நீரிற் சுழியோ விளையவர் செங்கைதொட்ட
பந்தோ சிறுவர்தம் பம்பரமோ கொட்டும் பஞ்சுகொலோ
வந்தோ டுழலுந் துரும்போவென் சொல்வதெம் மாமணியே. 102

பொன்வச மோபெண்க ளின்வச மோகடற் பூவசமோ
மின்வச மோவெனு மெய்வச மோவென் விதிவசமோ
தன்வச மோமலந் தன்வச மோவென் சவலைநெஞ்சம்
என்வச மோவில்லை நின்வச நானெனை யேன்றுகொள்ளே. 103

நானடங் காதொரு நாட்செயுங் குற்ற நடக்கையெல்லாம்
வானடங் காதிந்த மண்ணடங் காது மதிக்குமண்டந்
தானடங் காதெங்குந் தானடங் காதெனத் தானறிந்து
மானடங் காட்டு மணியெனை யாண்டது மாவியப்பே! 104

பாம்பா யினுமுணப் பால்கொடுப் பார்வளர்ப் பார்மனைப்பால்
வேம்பாயி னும்வெட்டல் செய்யார் வளர்த்த வெருட்சிக்கடாத்
[1]தாம்பா யினுமொரு [2]தாம்பாயி னுங்கொடு தாம்பின்செல்வார்
தேம்பாய் மலர்க்குழற் காம்பாக வென்னையுஞ் சேர்த்துக்கொள்ளே.

நெருப்புக்கு முட்டையுங் கூழ்க்கிட வுப்பையு நேடிச்செல்வோர்
பருப்புக்கு நெய்யுமொண் பாலுக்கு வாழைப் பழமுங்கொள்ளத்
தெருப்புக்கு வாரொடு சேர்கிலென் னுமிச் சிறுநடையாம்
இருப்புக்கு வேண்டிய நான்சிவ யோகர்பின் னெய்திலென்னே.

எம்மத மாட்டு மரியோயென் பாவி யிடும்பைநெஞ்சை
மும்மத யானையின் காலிட் டிடறினு மொய்யனற்கண்
விம்மத மாக்கினும் வெட்டினு நன்றுன்னை விட்டவதன்
வெம்மத நீங்கலென் சம்மதங் காணெவ் விதத்தினுமே. 107

1. கடா, தாம், பாயினும் - பாய்ந்தாலும். 2. தாம்பு—கயிறு.

Koviloor Digital Library

கல்லாத புந்தியு மங்தோநின் ருளிற் கணப்பொழுது
நில்லாத நெஞ்சமும் பொல்லாத மாயையு நீண்மதமுங்
கொல்லாமற் கொன்றெனைத் தின்னுமற் றின்கின்ற கொள்கையையிங்
கெல்லா மறிந்த வுனக்கெளி யேனின் றிசைப்பதென்னே. 108

தெவ்வழி யோடு மனத்தேனுக் குன்றன் றிருவுளந்தான்
இவ்வழி யேகென் றிருவழிக் குள்விட்ட தெவ்வழியோ
அவ்வழி யேவழி செவ்வழி பாடநின் ருடுகின்றேய்
வெவ்வழி நீர்ப்புணைக் கென்னே செயலிவ் வியனிலத்தே. 109

கண்ணூர் நுதற்செங் கரும்பேநின் பொன்னருட் காண்மலரை
எண்ணாத பாவியிங் கேன்பிறந் தேனினை யேத்துகின்றோர்
உண்ணாத வூணு முடுக்கா வுடையு முணர்ச்சிசற்று
நண்ணாத நெஞ்சமுங் கொண்டுல கோர்முன்னர் நாணுறவே. 110

அம்மா வயிற்றெரிக் காற்றே னெனநின் றழுதலறச்
சும்மாவச் சேய்முகந் தாய்பார்த் திருக்கத் துணிவள்கொலோ
இம்மா நிலத்தமு தேற்றாயி னுந்தந் திடுவள்முக்கண்
எம்மானிங் கேழை யழுமுகம் பார்த்து மிரங்கிலையே. 111

ஓயாக் கருணை முகிலே நுதற்கண் ணொருவநின்பாற்
றோயாக் கொடியவெந் நெஞ்சத்தை நான்சுடு சொல்லைச்சொல்லி
வாயாற் சுடினுந் தெரிந்தில தேயினி வல்வடவைத்
தீயாற் சுடினுமென் னந்தோ சிறிதுந் தெரிவதன்றே. 112

மாலறி யான்மல ரோனறி யான்மக வானறியான்
காலறி யான்மற்றை வானோர் கனவினுங் கண்டறியார்
சேலறி யாவிழி மங்கைபங் காநின் றிறத்தைமறை
நாலறி யாவெளி யேனறி வேனென னுனுடைத்தே. 113

ஆறிட்ட வேணியு மாட்டிட்ட பாதமு மம்மையொரு
கூறிட்ட பாகமுங் கோத்திட்ட கொன்றையுங் கோலமிக்க
நீறிட்ட மேனியு நான்காணு நாளென் னிலைத்தலைமேல்
ஏறிட்ட கைகள்கண் டாணவப் பேய்க ளிறங்கிடுமே. 114

அல்லுண்ட கண்டத் தரசேநின் சீர்த்தி யமுதமுண்டோர்
கொல்லுண்ட தேவர்தங் கோவுண்ட சீரெனுங் கூழுண்பரோ
[1]சொல்லுண்ட வாயினர் புல்லுண்ப ரோவின் சுவைக்கண்டெனுங்
கல்லுண்ட பேர்கருங் கல்லுண்ப ரோவிக் கடலிடத்தே. 115

காரே யெனுமணி கண்டத்தி னுன்பொற் கழலையன்றி
யாரே துணைநமக் கேழைநெஞ் சேயிங் கிருந்துகழு
நீரே யெனினுந் தரற்கஞ்சு வாரொடு நீயுஞ்சென்று
சேரே லிறுகச் **சிவாய நம**வெனச் சிந்தைசெய்யே. 116

1. சோல் என்பது — நெல்.

Koviloor Digital Library

வலைப்பட்ட மானென வாட்பட்ட கண்ணியர் மையலென்னும்
புலைப்பட்ட பேய்க்கு விலைப்பட்ட நான்மதி போய்ப்புலம்ப
விலைப்பட்ட விம்மன மந்தோவிவ் வேழைக்கென் றெங்கிருந்து
தலைப்பட்ட தோவிதற் கென்செய்கு வேன்முக்கட் சங்கரனே. 117

குருந்தாமென் சோக மனமான பிள்ளைக் குரங்குக்கிங்கே
வருந்தா ணவமென்னு மானிடப் பேயொன்று மாத்திரமோ
பெருந்தா மதமென் றிராக்கதப் பேயும் பிடித்ததெந்தாய்
திருந்தா வதன்குதிப் பென்னொரு வாய்கொண்டு செப்பரிதே. 118

பெண்மணி பாகப் பெருமணி யேயருட் பெற்றிகொண்ட
விண்மணி யான விழிமணி யேயென் விருப்புறுநற்
கண்மணி நேர்கட வுண்மணி யேயொரு கான்மணியைத்
திண்மணிக் கூடலில் விற்றேங்கு தெய்வ சிகாமணியே. 119

அலையெழுத் துந்தெறு மைந்தெழுத் தாலுன்னை யர்ச்சிக்கின்றோர்
கலையெழுத் தும்புகழ் காலெழுத் திற்குக் கனிவிரக்கம்
இலையெழுத் தும்பிறப் பீடெழுத் துங்கொண்ட வெங்கள்புழுத்
தலையெழுத் துஞ்சரி யாமோ நுதற்கண் தனிமுதலே. 120

ஆட்சிகண் டார்க்குற்ற துன்பத்தைத் தான்கொண் டருளளிக்கும்
மாட்சிகண் டாயெந்தை வள்ளற் குணமென்பர் மற்றதற்குக்
காட்சிகண் டேனிலை யாயினு முன்னருட் கண்டத்திலோர்
சாட்சிகண் டேன்களி கொண்டேன் கருணைத் தடங்கடலே. 121

கண்கொண்ட நெற்றியுங் கார்கொண்ட கண்டமுங் கற்பளிக்கும்
பெண்கொண்ட பாகமுங் கண்டேன்முன் **மாறன் பிரம்படியாற்**
புண்கொண்ட மேனிப் புறங்கண்டி லேனப் புறத்தைக்கண்டால்
ஒண்கொண்ட கல்லு முருகுமென் றேவிங் கொளித்தனையே. 122

வேய்க்குப் பொருமெழிற் றோளுடைத் தேவி விளங்குமெங்கள்
தாய்க்குக் கனிந்தொரு கூறளித் தோய்நின் றயவுமிந்த
நாய்க்குக் கிடைக்கு மெனவொரு சோதிட நல்கிலவர்
வாய்க்குப் பழத்தொடு சர்க்கரை வாங்கி வழங்குவனே. 123

காண்டத்தின் மேவும் உலகீர்! இத் தேகங் கரும்பனைபோல்
நீண்டத்தி லென்னை? நிலையல வேயிது நிற்றல்பசும்
பாண்டத்தி னீர்நிற்ற லன்றோ? நமைநம் பசுபதிதான்
ஆண்டத்தி லென்னை குறையோநம் மேற்குறை யாயிரமே. 124

வேணிக்க ணீர்வைத்த தேவே! மதுரை வியன்றெருவில்
மாணிக்கம் விற்றசெம் மாணிக்க மே! எனை வாழ்வித்ததோர்
ஆணிப்பொன் னேதெள் ளமுதேநின் செய்ய வடிமலர்க்குக்
காணிக்கை யாக்கிக்கொண் டாள்வா யெனது கருத்தினையே. 125

Koviloor.Digital Library

மாகலே வாணர் பிறன்பா லெமக்கு மனைக்குங்கட்ட
நீகலை தாவொரு மேகலை தாவுண னென்மலைதா
போகலை யாவெனப் பின்றொடர் வாரவர் போன்மனனீ
யேகலை யீகல ரேகம்ப வாண ரிடஞ்செல்கவே. 126

ஊர்தரு வார்நல்ல வூண்தரு வாருடை யுந்தருவார்
பார்தரு வாருமற் கோர்தரு வார்பொன் பணந்தருவார்
சோர்தரு வாருள் ளறிவுகெ டாமற் சுகிப்பதற்கிங்
கார்தரு வாரம்மை யார்தரு பாகனை யன்றிநெஞ்சே. 127

பண்செய்த சொன்மங்கை பாகாவெண் பாற்கடற் பள்ளிகொண்டோன்
திண்செய்த சக்கரங் கொள்வா னருச்சனை செய்திட்டநாள்
விண்செய்த நின்னருட் சேவடி மேற்பட வேண்டியவன்
கண்செய்த நற்றவம் யாதோ கருத்திற் கணிப்பரிதே. 128

மாப்பிட்டு நேர்ந்துண்டு வந்தியை வாழ்வித்த வள்ளலுன்வெண்
காப்பிட்டு மேற்பல பாப்பிட்ட மேனியைக் கண்டுதொழக்
கூப்பிட்டு நானிற்க வந்திலை நாதனைக் கூடவில்லாள்
பூப்பிட்ட காலத்திற் கூப்பிட்ட போதிலும் போவதுண்டே. 129

என்மேற் பிழையிலை யானென்செய் கேனென் னிடத்திருந்தென்
சொன்மேற் கொளாதெனை யின்மேற் றுரும்பெனச் சுற்றுநெஞ்சத்
தின்மேற் பிழையது புன்மேற் பனியெனச் செய்தொழிக்க
நின்மேற் பரம்விடை தன்மேற்கொண் டன்பர்முன் னிற்பவனே.130

மைவிட்டி டாமணி கண்டாநின் றன்னை வழுத்துமென்னை
நெய்விட்டி டாவுண்டி போலின்பி லான்மெய்ந் நெறியறியான்
பொய்விட்டி டான்வெம் புலைவிட்டி டான்மயற் போகமெலாங்
கைவிட்டி டானெனக் கைவிட்டி டேல்வந்து காத்தருளே. 131

நல்லமு தஞ்சிவை தான்றரக் கொண்டுநின் னற்செவிக்குச்
சொல்லமு தந்தந்த வெங்கள் பிரான்வளஞ் சூழ்மயிலை
இல்லமு தந்திகழ் பெண்ணுக வென்பை யெழுப்பியநாட்
சில்லமு தம்பெற்ற தேவரை வானஞ் சிரித்ததன்றே. 132

சொற்றுணை வேதிய னென்னும் பதிகச் சுருதியைநின்
பொற்றுணை வார்கழற் கேற்றியப் பொன்னடிப் போதினையே
நற்றுணை யாக்கரை யேறிய புண்ணிய நாவரசைக்
கற்றுணை யாநிந்தக் கற்றுணையாமென் கடைநெஞ்சமே. 133

சடையவ! நீமுன் தடுத்தாண்ட நம்பிக்குச் சற்றெனினுங்
கடையவ னேன்செயுங் கைம்மா றறிந்திலன் கால்வருந்தி
நடையுற நின்னைப் பரவைதன் பாங்கர் நடத்தியன்பர்
இடைவரு முன்ற விரக்கத்தைத் தான்வெளி யிட்டதற்கே. 134

Koviloor Digital Library

திருவாத வூரெம் பெருமான் பொருட்டன்று தென்னன்முன்னே
வெருவாத வைதிகப் பாய்பரி மேற்கொண்டு மேவிநின்ற
ஒருவாத கோலத் தொருவாவக் கோலத்தை யுள்குளிர்ந்தே
கருவாத நீங்கிடக் காட்டுகண் டாயென் கனவினிலே. 135

சீர்தரு நாவுக் கரையரைப் போலிச் சிறியனுமோர்
கார்தரு மாயைச் சமணன் மனக்கருங் கல்லிற்கட்டிப்
பார்தரு பாவக் கடலிடை வீழ்த்திடப் பட்டுழன்றே
ஏர்தரும் ஐந்தெழுத் தோதுகின் றேன்கரை யேற்றரசே. 136

தூக்கமுஞ் சோம்பலுந் துக்கமும் வாழ்க்கையைத் தொட்டுவரும்
ஏக்கமு நோயு மிடையூறு மற்றை யிடரும்விட்ட
நீக்கமு நின்மல நெஞ்சமுஞ் சாந்த நிறைவுமருள்
ஆக்கமு நின்பதத் தன்புந் தருக வருட்சிவமே. 137

பொய்வந்த வாயும் புலைவந்த செய்கையும் புன்மையெல்லாங்
கைவந்த நெஞ்சமுங் கண்டே னினிநற் கனிவுடன்யான்
மெய்வந்த வாயும் விதிவந்த செய்கையும் வீறன்பினுற்
றைவந்த நெஞ்சமுங் காண்பதென் றோசெஞ் சடைக்கனியே. 138

கங்கைகொண் டாய்மலர் வேணியி லேயருட் கண்ணிமலை
மங்கைகொண் டாயிடப் பாகத்தி லேயைய மற்றுமொரு
நங்கைகொண் டாலெங்கு கொண்டருள் வாயென்று நண்ணுமன்பர்
சங்கைகொண் டாலதற் கென்சொல்லு வாய்முக்கட் சங்கரனே.139

வாட்கொண்ட கண்ணியர் மாயா விகார வலைபிழைத்துன்
தாட்கொண்ட நீழலிற் சார்ந்திடு மாறென் றனக்கருள்வாய்
கீட்கொண்ட கோவணப் பேரழ காவெனைக் கேதமற
ஆட்கொண்ட நீயின்று வாளா விருப்ப தழகல்லவே. 140

வீட்டுத் தலைவ! நின் றுள்வணங் கார்தம் விரி தலைசும்
மாட்டுத் தலைபட்டி மாட்டுத் தலைபுன் வராகத்தலை!
ஆட்டுத் தலைவெறி நாய்த்தலை! பாம்பி னடுந்தலைகற்
பூட்டுத் தலைவெம் புலைத்தலை! நாற்றப் புழுத்தலையே! 141

தெண்ணீர் முடியனைக் காணார்தங் கண் இருள் சேர்குருட்டுக்
கண்ணீர் சொரிந்தகண் காசக்கண் புன்முலைக் கண்ணகக்கண்
புண்ணீ ரொழுகுங் கொடுங்கண் **பொருமைக்கண்** புன்கண்வன்கண்
மண்ணீர்மை யுற்றகண் மாமணி நீத்தகண் மாலைக்கண்ணே. 142

கண்ணுத லான்புகழ் கேளார் செவிபொய்க் கதையொலியும்
அண்ணுற மாதரு மைந்தருங் கூடி யழுமொலியுந்
துண்ணெனுந் தீச்சொல் லொலியுமவ் வந்தகன் றூதர்கண்மொத்
துண்ணுற வாவென் றுரப்பொலி யும்புகு மூன்செவியே. 143

Koviloor Digital Library

மணிகொண்ட கண்டனை வாழ்த்தார்தம் வாய்த்தெரு மண்ணுண்டவாய்
பிணிகொண்ட வாய்விடப் பிச்சுண்ட வாய்வரும் பேச்சற்றவாய்
துணிகொண்ட வாயனற் சூடுண்ட வாய்மலஞ் சோர்ந்திழிவாய்
குணிகொண்ட வுப்பிலிக் கூழுண்ட வாயெனக் கூறுபவே. 144

சுகமிலை யேயென் றுடையானை யெண்ணலர் தங்கள்நெஞ்சம்
சுகமிலை யேயுணச் சோறிலை யேகட்டத் தூசிலையே
அகமிலை யேபொரு ளாவிலை யேவள்ள லாரிலையே
இகமிலை யேயொன்று மிங்கிலை யேயென் றிரங்குநெஞ்சே. 145

பொங்கரும் பேர்முலை மங்கைக் கிடந்தந்த புத்தமுதே
செங்கரும் பேநறுந் தேனே மதுரச் செழுங்கனியே
திங்களுங் கங்கையுஞ் சேர்ந்தொளிர் வேணிச் சிவக்கொழுந்தே
எங்களை யாட்கொண்டு மென்னே துயரி லிருத்துவதே. 146

வில்லைப்பொன் னுக்கரங் கொண்டோய்வன் றெண்டர் விரும்புறச்செங்
கல்லைப்பொன் னுக்கிக் கொடுத்தோய்நின் பாதங் கருத்தில்வையார்
புல்லைப்பொன் னுக்கொளும் புல்லர்கள் பாற்சென்று பொன்னளிக்க
வல்லைப்பொன் னார்புயவென் பாரிஃதென் சொல் வாணர்களே. 147

கூத்துடை யாயென் னுடையாய்முத் தேவருங் கூறுகின்ற
வேத்துடை யாயன்ப ரேத்துடை யாயென்ற னெண்மைமொழிச்
சாத்துடை யாய்நின் றனக்கே பரமெனத் தாங்குதற்கோர்
வேத்துடை யார்மற் றிலையரு ளீதென்றல் விண்ணப்பமே. 148

வெப்பிலை யேயெனுந் தண்விளக் கேமுக்கண் வித்தகநின்
ஒப்பிலை யேயெனுஞ் சீர்புக லார்புற்கை யுண்ணுதற்கோர்
உப்பிலை யேபொரு ளொன்றிலை யேயென் றுழல்பவர்மேற்
றப்பிலை யேயவர் புன்றலை யேட்டிற் றவமிலையே. 149

எனைப்பெற்ற தாயினு மன்புடை யாயெனக் கின்பநல்கும்
உனைப்பெற்ற வுள்ளத் தவர்மலர்ச் சேவடிக் கோங்குமன்பு
தனைப்பெற்ற நன்மனந் தாம்பெற்ற மேலவர் சார்பைப்பெற்றுல்
வினைப்பெற்ற வாழ்வின் மனைப்பெற்றம் போல மெலிவதின்றே. 150

நிறைமதி யாளர் புகழ்வோய் சடையுடை நீண்முடிமேற்
குறைமதி தானென்று கொண்டனை யேயக் குறிப்பெனவே
பொறைமதி யேன்றன் குறைமதி தன்னையும் பொன்னடிக்கீழ்
உறைமதி யாக்கொண் டருள்வா யுலக முவப்புறவே. 151

துடிவைத்த செங்கை யரசே! நல்லூரினின் றாமலர்ப்பொன்
அடிவைத்த போதெங்கள் அப்பர்நஞ் சென்னி யதுகுளிர்ந்தெப்
படிவைத்த தோவின்பம் யானெனுந் தோறுமிப் பாவிக்குமால்
குடிவைத்த புன்றலை யொன்றே மனமுங் குளிர்கின்றதே. 152

ஒருமுடி மேற்பிறை வைத்தோ யரியய னெண்மறைதம்
பெருமுடி மேலுற வேண்ட வராதுனைப் பித்தனென்ற
மருமுடி யூரன் முடிமேன் மறுப்பவும் வந்தவர்
திருமுடி மேலென்ன வாசைகண் டாய்நின் றிருவடிக்கே. 153

வேல்கொண்ட கையுமுந் நூல்கொண்ட மார்பமுமென்மலர்ப்பொற்
கால்கொண்ட வொண்கழற் காட்சியும் பன்னிரு கண்ணும்விடை
மேல்கொண்ட செஞ்சுடர் மேனியுஞ் சண்முக வீறுங்கண்டு
மால்கொண்ட நெஞ்ச மகிழ்வதெந் நாளென்கண் மாமணியே. 154

விண்பூத்த கங்கையு மின்பூத்த வேணியு மென்முகமுங்
கண்பூத்த நெற்றியும் பெண்பூத்த பாகமுங் கார்மிடறுந்
தண்பூத்த பாதமும் பொன்பூத்த மேனியுஞ் சார்ந்துகண்டே
மண்பூத்த வாழ்க்கையை விண்பூத்த பூவின் மதிப்பதென்றே. 155

தண்மதி யோவதன் றண்ணமு தோவெனச் சார்ந்திருணீத்(து)
உண்மதி யோர்க்கின் புதவுநின் பேரரு ளூற்றிடவே
எண்மதி யோடிச்சை யெய்தா தலையுமென் னேழைமதி
பெண்மதி யோவன்றிப் பேய்மதி யோவென்னை பேசுவதே. 156

பிட்டுக்கும் வந்துமுன் மண்சுமந் தாயென்பர் பித்தனென்ற
திட்டுக்குஞ் சீரருள் செய்தளித் தாயென்பர்! தீவிறகுக்
கட்டுக்கும் பொன்முடி காட்டிநின் றாயென்பர்! கண்டிடவென்
மட்டுக்கும் வஞ்சகத் தெய்வமென் கோ!முக்கண் மாணிக்கமே.

மையிட்ட கண்ணியர் பொய்யிட்ட வாழ்வின் மதிமயங்கிக்
கையிட்ட நானுமுன் மெய்யிட்ட சீரருள் காண்குவனோ?
பையிட்ட பாம்பணி யையிட்ட மேனியும் பத்தருள்ள
மொய்யிட்ட காலுஞ்செவ் வையிட்ட வேலுங்கொண் முன்னவனே.

தவமே புரியும் பருவமி லேன்பொய்ச் சகநடைக்கண்
அவமே புரியு மறிவிலி யேனுக் கருளுமுண்டோ
உவமேய மென்னப்ப டாதெங்கு மாகியொளி ரொளியாஞ்
சிவமேமுக் கண்ணுடைத் தேவேநின் சித்தந் தெரிந்திலனே. 159

மட்டுண்ட கொன்றைச் சடையர சேயன்று வந்தியிட்ட
பிட்டுண்ட பிச்சைப் பெருந்தகை யேகொடும் பெண்மயலாற்
கட்டுண்ட நான்சுகப் பட்டுண்டு வாழ்வனிக் கன்மனமாந்
திட்டுண்ட பேய்த்தலை வெட்டுண்ட நாளிலென் றீமையற்றே.160

ஆட்டுக்குக் காலெடுத் தாய்நினைப் பாடல ராங்கியற்றும்
பாட்டுக்குப் பேரென்கொல் பண்ணென்கொ னீட்டியப் பாட்டெழுதும்
ஏட்டுக்கு மையென்கொல் சேற்றி லுறங்க விறங்குங்கடா
மாட்டுக்கு வீடென்கொல் பஞ்சணை யென்கொன் மதித்திடினே.161

ஒப்பற்ற முக்கட் சுடரேநின் சீர்த்தி யுருதவெறுந்
துப்பற்ற பாட்டிற் சுவையுள தோவதைச் சூழ்ந்துகற்றுச்
செப்பற்ற வாய்க்குத் திருவுள தோசிறி தேனுமுண்டேல்
உப்பற்ற புன்கறி யுண்டோர்தந் நாவுக் குவப்புளதே. 162

சேல்வருங் கண்ணி யிடத்தோய்நின் சீர்த்தியைச் சேர்த்தியந்த
நால்வருஞ் செய்தமிழ் கேட்டும் புறத்தி னடக்கச்சற்றே
கால்வரு மாயினு மின்புரு வாகிக் கனிமனமப்
பால்வரு மோவதன் பாற்பெண் கனைவிட்டுப் பார்க்கினுமே. 163

கார்முக மாகப்பொற் கல்வளைத் தோயிக் கடையவனேன்
சோர்முக மாகநின் சீர்முகம் பார்த்துத் துவளுகின்றேன்
போர்முக மாகநின் றோரையுங் காத்தநின் பொன்னருளிப்
பார்முக மாகவென் னோர்முகம் பார்க்கப் பரிந்திலதே. 164

வான்வளர்த் தாயிந்த மண்வளர்த் தாயெங்கு மன்னுயிர்கள்
தான்வளர்த் தாய்நின் றகையறி யாவென் றணையரசே
ஏன்வளர்த் தாய்கொடும் பாம்பையெல் லாந்தள் ளிலைவளர்த்தாய்
மான்வளர்த் தாய்கரத் தார்நினைப் போல வளர்ப்பவரே. 165

அற்கண்ட மோங்கு மரசேநின் றன்னடி யார்மதுரச்
சொற்கண்ட போதுமென் புற்கண்ட நெஞ்சந் துணிந்துநில்லா
திற்கண்ட மெய்த்தவர் போலோடு கின்ற தெறிந்ததுதீங்
கற்கண் டெனினுமக் கற்கண்ட காக்கைநிற் காதென்பரே. 166

சொல்லுகின் றோர்க்கமு தம்போற் சுவைதருந் தொல்புகழோய்
வெல்லுகின் றோரின்றிச் சும்மா வலையுமென் வேடநெஞ்சம்
புல்லுகின் றோர்தமைக் கண்டாலென் னுங்கொல் புகல்வெறும்வாய்
மெல்லுகின் றோர்க்கொரு நெல்லவல் வாய்க்கில் விடுவரன்றே. 167

சீரிடு வார்பொருட் செல்வர்க்க லாமலித் தீனர்கட்கிங்
காரிடு வார்பிச்சை யாயினும் பிச்ச னசடனென்றே
பேரிடு வார்வம்புப் பேச்சிடு வாரிந்தப் பெற்றிகண்டும்
போரிடு வார்நினைப் போற்றுறேன் னேமுக்கட் புண்ணியனே. 168

சேலுக்கு நேர்விழி மங்கைபங் காவென் சிறுமதிதான்
மேலுக்கு நெஞ்சையுட் காப்பது போனின்று வெவ்விடய
மாலுக்கு வாங்கி வழங்கவுந் தான்சம் மதித்ததுகாண்
பாலுக்குங் காவல்வெம் பூனைக்குந் தோழனென் பாரிதுவே. 169

இணையேது மின்றிய தேவே[1]கனலி னனிந்தெனுமுக்
கணையே கொளுஞ்செங் கரும்பே பிறவிக் கடல்கடத்தும்
புணையே திருவருட் பூரண மேமெய்ப் புலமளிக்குந்
துணையேயென் றுன்பந் துடைத்தாண்டு கொள்ளத் துணிந்தருளே.

1. கனல்—அக்கினி; இனன்—சூரியன்; இந்து—சந்திரன்.

Koviloor Digital Library

நிலைகாட்டி யாண்டநின் ருட்கன்பி லாதன்பி னீண்டவன்போற்
புலைகாட் டியமனத் தேன்கொண்ட வேடம் புனையிடைமேற்
கலைகாட்டிக் கட்டு மயிர்த்தலை காட்டிப்புன் கந்தைசுற்றி
முலைகாட்டி யாண்மகன் பெண்வேடங் காட்டு முறைமையன்றே.

விடநாகப் பூணணி மேலோயென் னெஞ்சம் விரிதல்விட்டென்
உடனாக மெய்யன்பு ளூற்றாக நின்னரு ளூற்றிடுதற்
கிடனாக மெய்ந்நெறிக் கீடாகச் செய்குவ திங்குனக்கே
கடனாக நிற்பது கண்டேன்பின் றுன்பொன் றுங் கண்டிலனே. 172

நயப்படு மோர்நின் னருளெனக் கின்றெனி னுய்மனமென்
வயப்படு மோதுயர் மண்படு மோநல்ல வாழ்வையென் னுற்
செயப்படு மோகுணஞ் சீர்ப்படு மோபவஞ் சேரச்சற்றும்
பயப்படு மோமலம் பாழ்படு மோவெம் பசுபதியே. 173

சோபங்கண் டார்க்கருள் செய்வோய் மதிக்கன்றிச் சூழ்ந்திடுவெந்
தீபங்கண் டாலு மிருள்போமிவ் வேழை தியங்கும்பரி
தாபங்கண் டாயருள் செய்யாதென் குற்றந் தனைக்குறித்துக்
கோபங்கண் டாலுநன் றையாவென் றுன்பக் கொதிப்பறுமே. 174

எல்லா முடைய விறையவ னேநினை யேத்துகின்ற
நல்லார் தமக்கொரு நாளேனும் பூசை நயந்தியற்றிச்
சொல்லா லவர்புகழ் சொல்லாதிவ் வண்ணந் துயர்வதற்கென்
கல்லாமை யொன்றுமற் றில்லாமை யொன்றிரு காரணமே. 175

பிறையாறு கொண்டசெவ் வேணிப் பிரான்பதப் பேறடைவான்
மறையாறு காட்டுநின் றண்ணரு ளேயன்றி மாயையென்னும்
நிறையாறு சூழுந் துரும்பாய்ச் சுழலுமென் னெஞ்சினுள்ள
குறையாறு தற்கிடம் வேறில்லை காணிக் குவலயத்தே. 176

மாலறி யாதவ னன்றேயத் தெய்வ வரதனுநின்
காலறி யாதவ னென்றுலக் காலையெக் காலையெமைப்
போலறி யாதவர் காண்பார்முற் கண்டமெய்ப் புண்ணியர்தம்
பாலறி யாதவ னுனிது கேட்டுணர் பாலனன்றே. 177

ஒன்றேயென் னுருயிர்க் கோருற வேயெனக் கோரமுதே
நன்றேமுக் கண்ணுடை நாயக மேமிக்க நல்லகுணக்
குன்றே நிறையருட் கோவே யெனது குலதெய்வமே
மன்றே யொளிர்முழு மாணிக்க மேயெனை வாழ்விக்கவே. 178

தாழ்வேது மின்றிய கோவே யெனக்குத் தனித்தபெரு
வாழ்வே நுதற்கண் மணியேயென் னுள்ள மணிவிளக்கே
ஏழ்வேலை யென்னினும் போதா விடும்பை யிடுங்குடும்பப்
பாழ்வே தனைப்பட மாட்டே னெனக்குன் பதமருளே. 179

Koviloor Digital Library

வண்டுகொண் டார்நறுங் கொன்றையி னுன்றன் மலரடிக்குத்
தொண்டுகொண் டார்தஞ் சுகத்துக்கும் வாழ்க்கைச் சுழலிற்றள்ளும்
பெண்டுகொண் டார்தந் துயருக்கு மொப்பின்று பேசிலென்றே
கண்டுகொண் டாயினி நெஞ்சேநின் னுள்ளக் கருத்தெதுவே.180

மலங்கவிழ்ந் தார்மனம் வான்கவிழ்ந் தாலுமவ் வான்புறமாஞ்
சலங்கவிழ்ந் தாலுஞ் சலியாதென் புன்மனந் தான்கடலிற்
கலங்கவிழ்ந் தார்மனம் போலே சலிப்பது காண்குடும்ப
விலங்கவிழ்ந் தாலன்றி நில்லாதென் செய்வல் விடையவனே. 181

மைகொடுத் தார்நெடுங் கண்மலை மானுக்கு வாய்ந்தொருபான்
மெய்கொடுத் தாய்தவர் விட்டவெம் மானுக்கு மேவுறவோர்
கைகொடுத் தாய்மயற் கண்ணியில் வீழ்ந்துட் கலங்குறுமென்
கொய்கொடுத் தாழ்மன மானுக்குக் காலைக் கொடுத்தருளே. 182

உடம்பா ருறுமயிர்க் காற்புழை தோறன லூட்டிவெய்ய
விடம்பாச் சியவிருப் பூசிகள் பாய்ச்சினு மெத்தென்னுமித்
தடம்பார் சிறுநடைத் துன்பஞ்செய் வேதனைத் தாங்கரிதென்
கடம்பா!நற் பன்னிரு கண்ணா! இனியெனைக் காத்தருளே. 183

மண்ணாலு மண்ணுற்ற வாழ்க்கையி னாலுமவ் வாழ்க்கைக்குற்ற
பெண்ணாலு நொந்துவந் தாரை யெலாமருட் பேறெனுமுக்
கண்ணாலும் பார்த்தைந்து கையாலு மீயுங் **கணபதி!**நின்
பண்ணாலு மாமறை மேற்றாளை யென்னுட் பதித்தருளே. 184

வானாள மாலயன் வாழ்வாள வன்றியெம் மண்முழுதுந்
தானாள நின்பதந் தாழ்பவர் தாழ்கவொண் சங்கையங்கை
மானாள மெய்யிடந் தந்தோய்துன் பற்ற மனமதொன்றே
நானாள வெண்ணிநின் றாளேத்து கின்றன னல்குகவே. 185

ஈடறி யாதமுக் கண்ணாநின் னன்ப ரியல்பினையிந்
நாடறி யாதுன் னருளன்றி யூண்சுவை நாவையன்றி
மேடறி யாதுநற் பாட்டைக்கற் றோரன்றி மேற்சுமந்த
ஏடறி யாதவை யேனறி யாவென் றிகழ்வரன்றே. 186

சூடுண்ட பூனைக்குச் சோறுண்ட வாய்பின் துடிப்பதன்றி
ஊடுண்ட பாவிட்ட வூண்கண்ட தேனு முணத்துணியா(து)
ஈடுண்ட வென்மன மந்தோ துயரி லிடியுண்டுமிவ்
வீடுண்ட வாழ்க்கையின் வீழுண்ட தாலெம் விடையவனே. 187

கரங்காட்டி மையிட்ட கண்காட்டி யென்பெருங் கன்மநெஞ்சக்
குரங்காட்டிச் சேய்மையி னிற்கின்ற மாதரைக் கொண்டுகல்லார்
உரங்காட்டிக் கோலொன் றுடனீட்டிக் காட்டி யுரப்பியொரு
மரங்காட் டியகுரங் காட்டுகின் றோரென் மணிகண்டனே. 188

Koviloor Digital Library

களங்கனி போன்மணி கண்டாநின் பொற்கழல் காணற்கென்சிற்
றுளங்கனி யாதுநின் சீர்கேட் கினுமன் புறவுருகா
வளங்கனி காமஞ் சிறவாமற் சிற்றில் வகுத்துழலும்
இளங்கனி போனின்ற தென்செய்கு வேனெம் மிறையவனே. 189

மாமத்தி னூற்சுழல் வெண்டயிர் போன்று மடந்தையர்தங்
காமத் திளூற்சுழ லென்றனெஞ் சோவுன்றன் காலையன்பாந்
தாமத்தி னூற்றனை யிட்டநெஞ் சோவித் தகையிரண்டில்
நாமத்தினூற் பித்த னென்போய் நினக்கெது நல்லநெஞ்சே? 190

ஏற்றிலிட் டார்கொடி கொண்டோய் விளக்கினை யேற்றபெருங்
காற்றிலிட் டாலு மிடலாநென் மாவைக் கவித்திடுநீர்
ஆற்றிலிட் டாலும் பெறலாமுட் காலை யடுங்குடும்பச்
சேற்றிலிட் டாற்பின் பரிதா மெவர்க்குந் திருப்புவதே. 191

தேரோங்கு காழிக்கண் மெய்ஞ்ஞானப் பாலுண்ட செம்மணியைச்
சீரோங்கு முத்துச் சிவிகையின் மேல்வைத்த தேவ! உன்றன்
பேரோங்கு மைந்தெழுத் தன்றோ படைப்பைப் பிரமனுக்கும்
ஏரோங்கு காப்பைத் திருநெடு மாலுக்கும் ஈந்ததுவே. 192

வேதனை யாமது சூதனை யாவென்று வேதனையாற்
போதனை யாநின் றுனைக்கூவு மேழையைப் போதனைகேள்
வாதனை யாதிங்கு வாதனை யாவென்றுன் வாய்மலரச்
சோதனை யாயினுஞ் சோதனை யாசிற் சுகப்பொருளே. 193

இன்பற்ற விச்சிறு வாழ்க்கையி லேவெயி லேறவெம்பும்
என்பற்ற புன்புழுப் போற்றள ரேழை யெனினுமிவன்
அன்பற்ற பாவியென் றந்தோ! எனைவிடி லையவைய(து)
என்பற்ற தாகமற் றில்லைகண் டாயெனை யேன்றுகொள்ளே. 194

களங்கொண்ட வோர்மணிக் காட்சியு முச்சுடர்க் கண்ணருளும்
வளங்கொண்ட தெய்வத் திருமுக மாட்சியும் வாய்ந்தபரி
மளங்கொண்ட கொன்றைச் சடையும்பொற் சேவடி மாண்புமொன்ற
உளங்கொண்ட புண்ணிய ரன்றேவென் றன்னை யுடையவரே. 195

காவிக்கு நேர்மணி கண்டாவண் டார்குழற் கற்பருளுந்
தேவிக்கு வாமங் கொடுத்தோய்நின் மாமலர்ச் சேவடிப்பால்
சேவிக்குஞ் சேவகஞ் செய்வோரை யாயினுஞ் சேவிக்கவிப்
பாவிக்கு வாய்க்கிலென் னுவிக்கு நீண்ட பயனதுவே. 196

கொங்கிட்ட கொன்றைச் சடையுநின் னேர்பசுங் கோமளப்பெண்
பங்கிட்ட வெண்டிரு நீற்றொளி மேனியும் பார்த்திடிற்பின்
இங்கிட்ட மாயையை யெங்கிட்ட வாவென் றிசைப்பினும்போய்ச்
சங்கிட்ட வோசையிற் பொங்கிட்ட வாய்கொடு தாண்டிடுமே. 197

Koviloor Digital Library

வெம்பெரு மானுக்குக் கைகொடுத் தாண்ட மிகுங்கருணை
யெம்பெரு மானுக்கு விண்ணப்பந் தேவ ரிளம்பிடியார்
தம்பெரு மானுக்குஞ் சார்மலை மானுக்குஞ் சாற்றுமைங்கைச்
செம்பெரு மானுக்கு மெந்தாய்க்கு நான்பணி செய்யச்செய்யே.

சாற்றவ னேகநன் னுவுள்ள தாயினுஞ் சாற்றரிதாம்
வீற்றவ னேவெள்ளி வெற்பவ னேயருண் மேவியவெண்
ணீற்றவ னேநின் னருடர வேண்டு நெடுமுடிவெள்
ளேற்றவ னேபலி யேற்றவ னேயன்பர்க் கேற்றவனே. 199

பதியே சரணம் பரமே சரணம் பரம்பரமாந்
திதியே சரணஞ் சிவமே சரணஞ் சிவமுணர்ந்தோர்
கதியே சரணமென் கண்ணே சரணமுக் கட்கருணை
நிதியே சரணஞ் சரணமென் பான்மெய்ந் நிலையருளே. 200

என்னுற வேயென் குருவேயென் னுள்ளத் தெழுமின்பமே
என்னுயி ரேயென்ற னன்பே நிலைபெற்ற வென்செல்வமே
என்னறி வேயென்றன் வாழ்வேயென் வாழ்வுக் கிடுமுதலே
என்னர சேயென் குலதெய்வ மேயெனை யேன்றுகொள்ளே. 201

கான்போ லிருண்டவிவ் வஞ்சக வாழ்க்கையிற் கன்னெஞ்சமே
மான்போற் குதித்துக்கொண் டோடே லமுத மதிவிளங்கும்
வான்போற் குளிர்ந்த சிவானந்த வாழ்க்கையின் வாழ்வுறச்செந்
தேன்போ லினிக்குஞ் **சிவாய நம**வெனச் சிந்தைசெய்யே. 202

வேதனென் கோதற வேண்டுமென் கோவென விண்ணப்பஞ்செய்
பாதனென் கோகடற் பள்ளிகொண் டான்றொழும் பண்பனென்கோ
நாதனென் கோபர நாதனென் கோவெங்கள் **நம்பி**க்குநற்
றூதனென் கோவவன் றோழனென் கோநினைத் தூய்மணியே. 203

இயங்கா மனமுங் கயங்கா நிலையு மிகபரத்தே
மயங்கா வறிவுந் தியங்கா நெறியு மகிழ்ந்தருள்வாய்
வயங்கா நிலத்தின் முயங்கா வுயர்தவர் வாழ்த்துகின்ற
புயங்கா துதித்தற் குயங்கா தவருட் புகுந்தவனே. 204

சிவசங்க ராசிவ யோகா சிவகதிச் சீரளிக்குஞ்
சிவசம்பு வேசிவ லோகா சிவானந்தச் செல்வநல்குஞ்
சிவசுந்த ராசிவ போகா சிவாகமச் செந்நெறிசொல்
சிவபுங்க வாசிவ ஞானிகள் வாழ்த்துஞ் சிவகுருவே. 205

மதிநந்து வாந்த வருட்சிவ மேசின் மயசிவமே
துதிசித் தெலாம்வல்ல மெய்ச்சிவ மேசிற் சுகசிவமே
கதிநித்த சுத்தச் சிவமே விளங்குமுக் கட்சிவமே
பதிசச்சி தானந்த சிற்சிவ மேயென் **பரசிவமே.** 206

Koviloor Digital Library

கடும்புல வேடர்க ளோரைவர் இந்தியக் கள்வரைவர்
கொடுங்கர ணத்துட்டர் நால்வர்கள் வன்மலக் கோளரைவர்
அடும்படை கோடிகொண் டுற்றூர்மற் றேழையன் யானொருவன்
இடும்படை யாதுமி லேன்வெல்வ தெங்ங னிறையவனே. 207

இடைக்கொடி வாமத் திறைவாமெய்ஞ் ஞானிகட் கின்பநல்கும்
விடைக்கொடி யேந்தும் வலத்தாய்நின் னுமம் வியந்துரையார்
கடைக்கொடி போலக் கதறுகின் றூர்பொய்க் கதையவர்தாம்
புடைக்கொடி யாலன்றிப் புல்லா லெயிலைப் புனைபவரே. 208

உருமத்தி லேபட்ட புன்புழுப் போலிவ் வுலகநடைக்
கருமத்தி லேபட்ட வென்மனந் தானின் கழலடையுந்
தருமத்தி லேபட்ட தின்றேயென் றெண்ணுந் தனையுமந்தோ!
மருமத்தி லேபட்ட வாளியைப் போன்று வருத்துவதே. 209

என்னிறை வாவிமை யோரிறை வாமறை யின்முடிபின்
முன்னிறை வாமலை யின்னிறை வாமலர் முண்டகத்தோன்
தன்னிறை வாதிதித் தானிறை வாமெய்த் தபோதனருண்
மன்னிறை வாயிங்கு வாவென் றெனக்குநல் வாழ்வருளே. 210

கஞ்சத்தி லேர்முக மஞ்சத்தி லேர்நடைக் கன்னியர்கண்
நஞ்சத்தி லேயவர் வஞ்சத்தி லேபட்டு நாணுறும்புன்
நெஞ்சத்தி லேயதன் றஞ்சத்தி லேமுக் கணித்தவென்போற்
பஞ்சத்தி லேபிர பஞ்சத்தி லேயுழைப் பாரெவரே. 211

நான்முகத் தோனுந் திருநெடு மாலுமெய்ஞ் ஞானமென்னும்
வான்முகக் கண்கொண்டு காணமற் றம்முரு மாறியுநின்
தேன்முகக் கொன்றை முடியுஞ்செந் தாமரைச் சேவடியும்
ஊன்முகக் கண்கொண்டு தேடிநின் றூர்சற் றுணர்விலரே. 212

இருவர்க் கறியப் படாதெழுந் தோங்கிநின் றேத்துகின்றோர்
கருவர்க்க நீக்குங் கருணைவெற் பேயென் கவலையைஇங்(கு)
ஒருவர்க்கு நான்சொல மாட்டே னவரென் னுடையவரோ
வெருவற்க வென்றெனை யாண்டரு ளீதென்றன் **விண்ணப்பமே.**

ஒண்ணுத லேழை **மடவார்தம் வாழ்க்கையி னுற்றிடினும்**
பண்ணுத லேர்மறை யாயிரஞ் சூழுநின் பாதத்தையான்
எண்ணுத லேதொழி லாகச்செய் வித்தென்னை **ஏன்றுகொள்வாய்!**
கண்ணுத லேகரு ணைக்கட லேயென் கருத்திதுவே. 214

தளைக்கின்ற மாயக் குடும்பப் பெருந்துயர் தாங்கியந்தோ
இளைக்கின்ற வேழைக் கிரங்குகண் டாய்சிறி தேயிறகு
முளைக்கின்ற போதறுப் பார்போ னின்னுமை மொழிந்திடுங்கால்
வளைக்கின்ற மாயைக்கிங் காற்றேன்முக் கண்ணுடை மாமணியே.

Koviloor Digital Library

மஞ்சடை வான நிறத்தோ னயன்முதல் வானவர்க்கா
நஞ்சடை யாள மிடுமிடற் றேய்கங்கை நண்ணுகின்ற
செஞ்சடை யாய்நின் றிருப்பெய ராகச் சிறந்தவெழுத்
தஞ்சடை யார்கண்கள் பஞ்சடை யாமுன் னறிவிலரே. 216

இலங்கா புரத்த னிராக்கதர் மன்னன் இராவணன்முன்
மலங்காநின் **வெள்ளி மலைக்கீ ழிருந்து** வருந்திநின்சீர்
கலங்காமற் **பாடிடக் கேட்டே யிரங்கிக் கருணைசெய்த**
நலங்காணின் றன்மையின் றென்னள வியாண்டையி னண்ணியதே!

உடையென்றும் பூணென்று மூணென்று நாடி யுழன்றிடுமிந்
நடையென்றுஞ் சஞ்சலஞ் சஞ்சலங் காணிநி ஞன்சிறியேன்
புடையென்று வெய்ய லுறும்புழுப் போன்று புழுங்குகின்றேன்
விடையென்று மாலறங் கொண்டோயென் றுன்பம் விலக்குகவே.

நிலையறி யாத குடும்பத் துயரென்னு நீத்தத்திலே
தலையறி யாது விழுந்தேனை யாண்டரு டானளிப்பாய்
அலையறி யாத கடலேமுக் கண்கொண்ட வாரமுதே
விலையறி யாத மணியே விடேலிதென் **விண்ணப்பமே.** 219

மெய்யகத் தேகணப் போதும் விடாது விரும்புகின்றோர்
கையகத் தேநின் றுளிர்கனி யேநுதற் கட்கரும்பே
வையகத் தேநினை யல்லாம னற்றுணை மற்றிலையிப்
பொய்யகத் தேன்செயுந் தீங்கா யிரமும் பொறுத்தருளே. 220

முலைக்கலங் கார மிடுமட வார்மயன் மூடியவர்
தலைக்கலங் கார மலர்சூடு வார்நின் றனைவழுத்தார்
இலைக்கலங் காரவ் **இயமன்**வந் தாலென் னிசைப்பர்வெள்ளி
மலைக்கலங் கார மணியே!முக் கண்கொண்ட மாமருந்தே. 221

புரிகின்ற வீட்டகம் போந்தடி பட்டுப் புறங்கடையில்
திரிகின்ற நாய்க்குஞ் சிரிப்பாமென் பாவிச் சிறுபிழைப்பைச்
சொரிகின்ற புண்ணிற் கனலிடல் போலெணுந் தோறுநெஞ்சம்
எரிகின்ற தென்செய்கு வேன்பிறை வார்சடை யென்னமுதே.

மனக்கேத மாற்று மருந்தே! பொதுவொளிர் மாணிக்கமே!
கனக்கே துறவென் கருத்தறி யாமற் கழறுகின்ற
தனக்கேளர் பாற்சென் றடியே னிதயந் தளர்வதெல்லாம்
நினக்கே தெரிந்த தெனக்கே யருள நினைந்தருளே. 223

மோகங் கலந்த மனத்தேன் துயரங்கண் முற்றுமற்றுத்
தேகங் கலந்த பவந்தீர்க்கு நின்பதஞ் சிந்திக்குநாட்
போகங் கலந்த திருநாண் மலையற் புதப்பசுந்தேன்
பாகங் கலந்தசெம் பாலே நுதற்கட் பரஞ்சுடரே. 224

Koviloor Digital Library

கோலொன்று கண்ட விறைமகன் வாழ்வினுங் கோடிபங்கு
மேலொன்று கண்டன நெஞ்சே!என் சொல்லை விரும்பினியஞ்
சேலொன்று கண்ட மணியான் வரைப்பசுந் தேன்கலந்த
பாலொன்று கண்டகண் கொண்டுயர் வாழ்வு பலித்ததுவே. 225

புலையள வோவெனு நெஞ்சக னேன்றுயர்ப் போகமெட்டு
மலையள வோவிந்த மண்ணள வோவந்த வானளவோ
வலையள வோவன்று மன்றுணின் றேங்கு மருமருந்தே
யிலையள வோவெனுந் தேவே யறிந்து மிரங்கிலையே. 226

கல்லென்று வல்லென்று மின்னார் புளகக் கனதனத்தைச்
சொல்லென்று சொல்லுமுன் சொல்லுமங் தோநின் றுணையடிக்கண்
ணில்லென்று பல்ல நிகழ்த்தினு மென்மன நிற்பதன்றே
யல்லென்று வெல்களங் கொண்டோயென் செய்வ தறிந்திலனே.

கள்ளா டியகொன்றைச் செஞ்சடை யோய்நற் கனகமன்றி
னுள்ளா டியமலர்ச் சேவடி யோயிவ் வுலகியற்கண்
எள்ளா டியசெக் கிடைப்படல் போற்றுன் பிடையினைத்துத்
தள்ளா டியநடை கொண்டேற்கு நன்னடை தந்தருளே!

மருக்கா மலர்க்குழன் மின்னார் மயற்சண்ட மாருதத்தால்
இருக்கா துழலுமென் னேழைநெஞ் சேயிவ் விடும்பையிலே
செருக்கா துருகிச் சிவாய நமவெனத் தேர்ந்தன்பினால்
ஒருக்கா லுரைக்கிற் பெருக்காகு நல்லின்ப மோங்கிடுமே. 229

மதிக்கண்ணி வேணிப் பெருந்தகை யேநின் மலரடிக்குத்
துதிக்கண்ணி சூட்டுமெய்த் தொண்டரிற் சேர்ந்துநின் தூயஒற்றிப்
பதிக்கண்ணி நின்னைப் பணிந்தேத்தி யுள்ளம் பரவசமாக்
கதிக்கண்ணி வாழும் படியரு ளாயென் கருத்திதுவே. 230

இரையேற்று துன்பக் குடும்ப விகார விருட்கடலிற்
புரையேற்று நெஞ்சம் புலர்ந்துநின் றேனைப் பொருட்படுத்திக்
கரையேற்ற வேண்டுமென் கண்ணே! பவத்தைக் கடிமருந்தே!
திரையேற்று செஞ்சடைத் தேவே! யமரர் சிகாமணியே! 231

போற்றியென் ஆவித் துணையே!என் அன்பிற் புகுஞ்சிவமே!
போற்றியென் வாழ்வின் பயனே!என் இன்பப் புதுநறவே!
போற்றியென் கண்ணுண் மணியே!என் உள்ளம் புனையணியே!
போற்றியென்னோர் பெருந் தேவே!
கருணை புரிந்தருளே! 232

திருச்சிற்றம்பலம்

Koviloor Digital Library

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

ஏழாவது

வடிவுடை மாணிக்கமாலை

காப்பு

கட்டளைக் கலித்துறை

திருச்சிற்றம்பலம்

சீர்கொண்ட வொற்றிப் பதியுடை யானிடஞ் சேர்ந்தமணி
வார்கொண்ட கொங்கை வடிவாம் பிகைதன் மலரடிக்குத்
தார்கொண்ட செந்தமிழ்ப் பாமாலை சாத்தத் தமியனுக்கே
ஏர்கொண்ட நல்லரு ளீயுங் குணலய வேரம்பனே!

கட்டளைக் கலித்துறை

திருச்சிற்றம்பலம்

கடலமு தேசெங் கரும்பே யருட்கற்ப கக்கனியே
உடலுயி ரேயுயிர்க் குள்ளுணர் வேயுணர் வுள்ளொளியே
அடல்விடை யாரொற்றி யாரிடங் கொண்ட வருமருந்தே
மடலவிழ் ஞான மலரே **வடிவுடை மாணிக்கமே.** 1

அணியே யணிபெறு மொற்றித் தியாகர்தம் மன்புறுசற்
குணியேயெம் வாழ்க்கைக் குலதெய்வ மேமலைக் கோன்றவமே
பணியேன் பிழைபொறுத் தாட்கொண்ட தெய்வப் பதிகொள்சிந்தா
மணியேயென் கண்ணுண் மணியே வடிவுடை மாணிக்கமே. 2

மானேர் விழிமலை மானேயெம் மானிடம் வாழ்மயிலே
கானே ரளகப் பசுங்குயி லேயருட் கட்கரும்பே
தேனே திருவொற்றி மாநகர் வாழுஞ் சிவசத்தியே!
வானே கருணை வடிவே வடிவுடை மாணிக்கமே. 3

பொருளே யடியர் புகலிட மேயொற்றிப் பூரணன்தண்
ணருளே யெம்மாருயிர்க் காந்துணை யேவிண் ணவர்புகழுந்
தெருளே மெய்ஞ்ஞானத் தெளிவே மறைமுடிச் செம்பொருளே
மருளேத நீக்கு மொளியே வடிவுடை மாணிக்கமே. 4

Koviloor Digital Library

திருமாலு நான்முகத் தேவுமுன் னுள்மிகத் தேடிமனத்(து)
அருமா லுழக்க வனலுரு வாகி யமர்ந்தருளும்
பெருமானெம் மாஒற்றிப் பெம்மான்கைம் மான்கொளும் பித்தன்மலை
மருமா னிடங்கொள்பெண் மானே வடிவுடை மாணிக்கமே. 5

உன்னே ரருட்டெய்வங் காணேன் மனத்து முரைக்கப்படாப்
பொன்னேயப் பொன்னற் புதவொளி யேமலர்ப் பொன்வணங்கும்
அன்னே யெம்மாருயிர்க் கோருயி ரேயொற்றி யம்பதிவாழ்
மன்னே ரிடம்வளர் மின்னே வடிவுடை மாணிக்கமே. 6

கண்ணேயக் கண்ணின் மணியே மணியிற் கலந்தொளிசெய்
விண்ணே வியனொற்றி யூரண்ணல் வாமத்தில் வீற்றிருக்கும்
பெண்ணே மலைபெறும் பெண்மணி யேதெய்வப் பெண்ணமுதே
மண்ணேய நீத்தவர் வாழ்வே வடிவுடை மாணிக்கமே. 7

மலையான் றவஞ்செய்து பெற்றமுத் தேயொற்றி வாழ்கனகச்
சிலையான் மணக்க மணக்குந்தெய் வீகத் திருமலரே
அலையான் மலிகடற் பள்ளிகொண் டான்றெழு மாரமுதே
வலையா னருமை மகளே வடிவுடை மாணிக்கமே. 8

காமம் படர்நெஞ் சுடையோர் கனவினுங் காணப்படாச்
சேமம் படர்செல்வப் பொன்னே மதுரச் செழுங்கனியே
தாமம் படரொற்றி யூர்வாழ் பவளத் தனிமலையின்
வாமம் படர்பைங் கொடியே வடிவுடை மாணிக்கமே. 9

கோடா வருட்குணக் குன்றே சிவத்திற் குறிப்பிலரை
நாடாத வானந்த நட்பே!மெய் யன்பர் நயக்குமின்பே
பீடார் திருவொற்றிப் பெம்மா னிடஞ்செய் பெருந்தவமே
வாடா மணிமலர்க் கொம்பே வடிவுடை மாணிக்கமே. 10

நாலே யெனுமறை யந்தங்க ளின்னமு நாடியெனைப்
போலே வருந்த வெளியொளி யாயொற்றிப் புண்ணியர்தம்
பாலே யிருந்த நினைத்தங்கை யாகப் பகரப்பெற்ற
மாலே தவத்திற் பெரியோன் வடிவுடை மாணிக்கமே. 11

கங்கைகொண் டோனொற்றி யூரண்ணல் வாமங் கலந்தருள்செய்
நங்கையெல் லாவுல குந்தந்த நின்னையந் நாரணற்குத்
தங்கையென் கோவன்றித் தாயரென் கோசொற் றழைக்குமலை
மங்கையங் கோமள மானே வடிவுடை மாணிக்கமே. 12

சோலையிட் டார்வய லூரொற்றி வைத்துத்தன் றொண்டரன்பின்
வேலையிட் டாற்செயும் பித்தனை மெய்யிடை மேவுகரித்
தோலையிட் டாடுந் தொழிலுடை யோனைத் துணிந்துமுன்னுள்
மாலையிட் டாயிஃ தென்னே வடிவுடை மாணிக்கமே. 13

Koviloor Digital Library

தனையாள் பவரின்றி நிற்கும் பரமன் றனியருளாய்
வினையா ளுயிர்மல நீக்கிமெய் வீட்டின் விடுத்திடுநீ
எனையா ளருளொற்றி யூர்வா மூவன்றன் னிடத்துமொரு
மனையா ளெனநின்ற தென்னே வடிவுடை மாணிக்கமே. 14

பின்னின்ற பிள்ளையின் மேலார்வந் தாய்க்கெனப் பேசுவர்நீ
முன்னின்ற பிள்ளையின் மேலாசை யுள்ளவர் மொய்யசுரர்
கொன்னின்ற போர்க்கிளம் பிள்ளையை யேவக் கொடுத்ததென்னே
மன்னின்ற வொற்றி மயிலே வடிவுடை மாணிக்கமே. 15

பையாளு மல்குற் சுரர்மட வார்கள் பலருளுமிச்
செய்யாளும் வெண்ணிற மெய்யாளு மெத்தவஞ் செய்தனரோ
கையாளு நின்னடிக் குற்றேவல் செய்யக் கடைக்கணித்தாய்
மையாளுங் கண்ணொற்றி வாழ்வே வடிவுடை மாணிக்கமே. 16

இலையாற்று நீமலர்க் காலாற் பணிக்குங்குற் றேவலெலாந்
தலையாற் செயும்பெண்கள் பல்லோரிற் பூமகள் தன்னைத்தள்ளாய்
நிலையாற் பெரியநின் றொண்டர்தம் பக்க நிலாமையினன்
மலையாற் கருளொற்றி வாழ்வே வடிவுடை மாணிக்கமே. 17

கலைமக ளோநின் பணியையன் போடுங் கடைப்பிடித்தாள்
அலைமக ளோவன் பொடுபிடித் தாளெற் கறைதிகண்டாய்
தலைமக ளேயருட் டாயேசெவ் வாய்க்கருந் தாழ்குழற்பொன்
மலைமக ளேயொற்றி வாழ்வே வடிவுடை மாணிக்கமே. 18

பொன்னேடு வாணியென் போரிரு வோரும் பொருணற்கல்வி
தன்னோ டருளுந் திறநின்குற் றேவலைத் தாங்கிநின்ற
பின்னோ வலததன் முன்னோ தெளிந்திடப் பேசுகநீ
மன்னோ டெழிலொற்றி யூர்வாழ் வடிவுடை மாணிக்கமே. 19

காமட் டலர்திரு வொற்றிநின் னயகன் கந்தைசுற்றி
யேமட் டரையொடு நிற்பது கண்டு மிரங்கலர்போல்
நீமட்டு மேபட் டுடுக்கின் றணையுன்ற னேயமென்னே
மாமட் டலர்குழன் மானே வடிவுடை மாணிக்கமே. 20

விற்றூர்நின் றன்மணத் தம்பியின் மேற்சிறு மெல்லனிச்ச
மாற்றூநின் சிற்றடிப் போதினைத் தூக்கிவைத் தாரெனின்மால்
ஏற்றூர் திருவொற்றி யூரார் களக்கறுப் பேற்றவரே
மாற்றூ வியல்கொண் மயிலே வடிவுடை மாணிக்கமே. 21

பொருப்புறு நீலியென் பார்நின்னை மெய்யது போலுமொற்றி
விருப்புறு நாயகன் பாம்பா பரணமும் வெண்டலையும்
நெருப்புறு கையுங் கனன்மேனி யுங்கண்டு நெஞ்சமஞ்சாய்
மருப்புறு கொங்கை மயிலே வடிவுடை மாணிக்கமே. 22

Koviloor Digital Library

அனம்பொறுத் தான்புக ழொற்றிநின் னுயக னங்குமிழித்
தனம்பொறுத் தாளொரு மாற்றுனைத் தன்முடி தன்னில்வைத்தே
தினம்பொறுத் தானது கண்டுஞ் சினமின்றிச் சேர்ந்தநின்போல்
மனம்பொறுத் தாரெவர் கண்டாய் வடிவுடை மாணிக்கமே. 23

ஓருரு வாயொற்றி யூரமர்ந் தார்நின் னுடையவர்பெண்
சீருரு வாகுநின் மாற்றுனை நீதெளி யாத்திறத்தில்
நீருரு வாக்கிச் சுமந்தா ரதனை நினைந்திலையே
வாருரு வார்கொங்கை நங்காய் வடிவுடை மாணிக்கமே. 24

சார்ந்தேநின் பாலொற்றி யூர்வாழு நாயகர் தாமகிழ்வு
கூர்ந்தே குலாவுமக் கொள்கையைக் காணிற் கொதிப்பளென்று
தேர்ந்தேயக் கங்கையைச் செஞ்சடை மேற்சிறை செய்தனரொண்
வார்ந்தே குழைகொள் விழியாய் வடிவுடை மாணிக்கமே. 25

நீயே யெனது பிழைகுறிப் பாயெனி னின்னடிமைப்
பேயேன் செயும்வண்ண மெவ்வண்ண மோவெனைப் பெற்றளிக்குந்
தாயே கருணைத் தடங்கட லேயொற்றிச் சார்குமுத
வாயேர் [1]சவுந்தர மானே வடிவுடை மாணிக்கமே. 26

முப்போது மன்பர்கள் வாழ்த்தொற்றி யூரெம் முதல்வர்மகிழ்
ஒப்போ தருமலைப் பெண்ணமு தேயென்று வந்துநினை
எப்போதுஞ் சிந்தித் திடர்நீங்கி வாழவெனக் கருள்வாய்
மைப்போ தனையகண் மானே வடிவுடை மாணிக்கமே. 27

மீதலத் தோர்களுள் யார்வணங் காதவர் மேவுநடுப்
பூதலத் தோர்களுள் யார்புக ழாதவர் போற்றிநிதம்
பாதலத் தோர்களுள் யார்பணி யாதவர் பற்றிநின்றுண்
மாதலத் தோங்கொற்றி வாழ்வே வடிவுடை மாணிக்கமே. 28

சேய்க்குற்றந் தாய்பொறுத் தேடா வருகெனச் செப்புவளிந்
நாய்க்குற்ற நீபொறுத் தாளுதல் வேண்டு நவின்மதியின்
தேய்க்குற்ற மாற்றுந் **திருவொற்றி நாதர்தந் தேவி** யன்பர்
வாய்க்குற்ற நீக்கு மயிலே வடிவுடை மாணிக்கமே. 29

செங்கம லாசனன் றேவிபொன் னுனுந் திருமுதலோர்
சங்கம தாமிடற் றோங்குபொன் னுனுந் தலைகுனித்துத்
துங்கமு றுதுள நாணத் திருவொற்றித் தோன்றல்புனை
மங்கல நாணுடை யாளே வடிவுடை மாணிக்கமே. 30

சேடா ரியன்மணம் வீசச் செயன்மணஞ் சேர்ந்துபொங்க
வேடார் பொழிலொற்றி யூரண்ண னெஞ்ச மிருந்துவக்க
வீடா விருளு முகிலும்பின் னிட்டு வெருவவைத்த
வாடா மலர்க்குழ லாளே வடிவுடை மாணிக்கமே. 31

1. சௌந்தரம் என்பது — சவுந்தரம் எனப் போலியாயிற்று.

Koviloor Digital Library

புரநோக்கி னுற்பொடி தேக்கிய வொற்றிப் புனிதர்களக்
[1]கரநோக்கி நல்லமு தாக்கிநிற் போற்றுங் கருத்தினரா
தரநோக்கி யுள்ளிரு ணீக்கிமெய்ஞ் ஞானத் தனிச்சுகந்தான்
வரநோக்கி யாள்விழி மானே வடிவுடை மாணிக்கமே. 32

உன்னுந் திருவொற்றி யூருடை யார்நெஞ் சுவப்பவெழிற்
றுன்னு முயிர்ப்பயி ரெல்லாந் தழைக்கச் சுகக்கருணை
யென்னுந் திருவமு தோயாம லூற்றி யெமதுளத்தின்
மன்னுங் கடைக்கண் மயிலே வடிவுடை மாணிக்கமே. 33

வெள்ளங் குளிருஞ் சடைமுடி யோனொற்றி வித்தகன்றன்
உள்ளங் குளிரமெய் பூரிப்ப வானந்த மூற்றெடுப்பத்
தெள்ளங் குளிரின் னமுதே யளிக்குஞ்செவ் வாய்க்குமுத
வள்ளங் குளிர்முத்த மானே வடிவுடை மாணிக்கமே. 34

மாநந்த மார்வயற் காழிக் கவுணியர் மாமணிக்கன்(று)
ஆனந்த வின்னமு தூற்றுந் திருமுலை யாரணங்கே
கானந்த வோங்கு மெழிலொற்றி யாருட் களித்தியலும்
வானந் தருமிடை மானே வடிவுடை மாணிக்கமே. 35

வான்றேட நான்கு மறைதேட மாலுடன் வாரிசமே
லான்றேட மற்றை யருந்தவர் தேடவென் னன்பின்மையால்
யான்றேட வென்னுளஞ் சேரொற்றி யூரெம் மிருநிதியே
மான்றேடும் வாட்கண் மயிலே வடிவுடை மாணிக்கமே. 36

முத்தேவர் [2]விண்ணவன் முதற்றேவர் சித்தர் முனிவர் மற்றை
எத்தே வருநின் னடிநினை வார்நினைக் கின்றிலர்தாஞ்
செத்தே பிறக்குஞ் சிறியரன் றேவொற்றித் தேவர்நற்று
மத்தேவர் வாம மயிலே வடிவுடை மாணிக்கமே. 37

திருநாள் நினைத்தொழு நன்னுள் தொழாமற் செலுத்தியநாள்
கருநாள் எனமறை யெல்லாம் புகலுங் கருத்தறிந்தே
ஒருநா ளினுநின் றனைமற வாரன்ப ரொற்றியில்வாழ்
மருநாண் மலர்க்குழன் மானே வடிவுடை மாணிக்கமே. 38

வானு ளடைவர் வறுமை யுரூர்நன் மனைமக்கள்பொன்
பூனு ளிடம்புகழ் போதம் பெறுவர்பின் புன்மையொன்றுங்
காணுர்நின் னுமங் கருதுகின் றோர் ஒற்றிக் கண்ணுதல்பால்
மாணுர்வ முற்ற மயிலே வடிவுடை மாணிக்கமே. 39

சீரறி வாய்த்திரு வொற்றிப் பரம சிவத்தைநினைப்
போரறி வாயவ் வறிவாம் வெளிக்கப் புறத்துநின்றாய்
யாரறி வார்நின்னை நாயே னறிவ தழகுடைத்தே
வாரெறி பூண்முலை மானே வடிவுடை மாணிக்கமே. 40

1. கரம் என்பது — விடம். 2. விண்ணவன் என்பது — இந்திரன்

Koviloor Digital Library

போற்றிடு வோர்தம் பிழையா யிரமும் பொறுத்தருள்செய்
வீற்றெருளிர் ஞான விளக்கே! மரகத மென்கரும்பே
யேற்றெருளி ரொற்றி யிடத்தா ரிடத்தி லிலங்குமுயர்
மாற்றெருளி ரும்பசும் பொன்னே வடிவுடை மாணிக்கமே. 41

ஆசையுள் ளாரயன் மாலாதி தேவர்கள் யாருநின்றுட்
பூசையுள் ளாரெனி லெங்கே யுலகர்செய் பூசைகொள்வார்
தேசையுள் ளாரொற்றி யூருடை யாரிடஞ் சேர்மயிலே
[1]மாசையுள் ளார்புகழ் மானே வடிவுடை மாணிக்கமே. 42

அண்டாரை வென்றுல காண்டுமெய்ஞ் ஞான மடைந்துவிண்ணிற்
பண்டாரை சூழ்மதி போலிருப் போர்கணின் **பத்தர்பதங்**
கண்டாரைக் கண்டவ ரன்றோ! திருவொற்றிக் கண்ணுதல்சேர்
வண்டாரை வேலன்ன மானே வடிவுடை மாணிக்கமே. 43

அடியார் தொழுநின் னடிப்பொடி தான்சற் றணியப்பெற்ற
முடியா லடிக்குப் பெருமைபெற் றூரம் முகுந்தன்சந்தக்
கடியார் மலரயன் முன்னோர்தென் னொற்றிக் கடவுட்செம்பால்
வடியாக் கருணைக் கடலே வடிவுடை மாணிக்கமே. 44

ஓவா தயன்முத லோர்முடி கோடி யுறழ்ந்துபடி
லாவா வனிச்சம் பொருமலர்ச் சிற்றடி யாற்றுங்கொலோ
காவா யிமயப்பொற் பாவா யருளொற்றிக் காமர்வல்லி
வாவா வெனுமன்பர் வாழ்வே வடிவுடை மாணிக்கமே. 45

இட்டார் மறைக்கு முபநிட தத்திற்கு மின்னுஞ்சற்றும்
எட்டாநின் பொன்னடிப் போதெளி யேன்றலைக் கெட்டுங்கொலோ
கட்டார் சடைமுடி யொற்றியெம் மானெஞ்ச கத்தமர்ந்த
மட்டார் குழன்மட மானே வடிவுடை மாணிக்கமே. 46

வெளியாய் வெளிக்குள் வெறுவெளி யாய்ச்சிவ மேநிறைந்த
ஒளியா யொளிக்கு ளொளியாம் பரைநினை யொப்பவரார்
எளியார்க் கெளியர் திருவொற்றி யார்மெய் யினிதுபரி
மளியாநின் றோங்கு மருவே வடிவுடை மாணிக்கமே. 47

விணங்கா தலன்பர்த மன்பிற்கு நின்புல விக்குமன்றி
வணங்கா மதிமுடி யெங்கள் பிரானொற்றி வாணனுநின்
குணங்கா தலித்துமெய்க் கூறுதந் தானெனக் கூறுவருன்
மணங்கா தலித்த தறியார் வடிவுடை மாணிக்கமே. 48

பன்னும்பல் வேறண்ட மெல்லாமவ் வண்டப் பரப்பினின்று
துன்னுஞ் சராசரம் யாவையு மீன்றது சூழ்ந்துமுன்னே
இன்னு மிளந்தை யழியாத கன்னிகை யென்பதென்னே
மன்னுஞ் சுகாநந்த வாழ்வே வடிவுடை மாணிக்கமே. 49

1. மாசை என்பது — பொன்.

Koviloor Digital Library

சினங்கடந் தோருள்ளச் செந்தா மரையிற் செழித்துமற்றை
மனங்கடந் தோதுமவ் வாக்குங் கடந்த மறையன்னமே
தினங்கடந் தோர்புக ழொற்றியெம் மானிடஞ் சேரமுதே
வனங்கடந் தோன்புகழ் மானே வடிவுடை மாணிக்கமே. 50

வல்லாரும் வல்லவ ரல்லாரு மற்றை மனிதர்முதல்
எல்லாரு நின்செய லல்லா தணுவு மியக்கிலரேல்
இல்லாமை யாலுழல் புல்லேன்செய் குற்றங்க ளேதுகண்டாய்
மல்லார் வயலொற்றி நல்லாய் வடிவுடை மாணிக்கமே. 51

எழுதா வெழிலுயிர்ச் சித்திர மேயின் னிசைப்பயனே
தொழுதாடு மன்பர்த முட்களிப் பேசிற் சுகக்கடலே
செழுவார் மலர்ப்பொழி லொற்றியெம் மான்றன் றிருத்துணையே
வழுவா மறையின் பொருளே வடிவுடை மாணிக்கமே. 52

தெருட்பா லுறுமைங்கைச் செல்வர்க்கு நல்லிளஞ் சேய்க்குமகிழ்ந்
தருட்பா லளிக்குந் தனத்தன மேயெம் மகங்கலந்த
இருட்பா லகற்று மிருஞ்சுட ரேயொற்றி யெந்தையுள்ள
மருட்பால் பயிலு மயிலே வடிவுடை மாணிக்கமே. 53

அயிலேந்தும் பிள்ளைநற் றாயே திருவொற்றி யையர்மலர்க்
[1]கயிலேந் தரும்பெறன் முத்தே யிசையிற் கனிந்தகுரற்
குயிலே குயின்மென் குழற்பிடி யேமலைக் கோன்பயந்த
மயிலே மதிமுக மானே வடிவுடை மாணிக்கமே. 54

செய்யக மோங்குந் திருவொற்றி யூரிற் சிவபெருமான்
மெய்யக மோங்குநல் லன்பேநின் பாலன்பு மேவுகின்றோர்
கையக மோங்குங் கனியே தனிமெய்க் கதிநெறியே
வையக மோங்கு மருந்தே வடிவுடை மாணிக்கமே. 55

தரும்பே ரருளொற்றி யூருடை யானிடஞ் சார்ந்தபசுங்
கரும்பே யினியகற் கண்டே மதுரக் கனிநறவே
இரும்பேய் மனத்தினர் பாலிசை யாத இளங்கிளியே!
வரும்பே ரொளிச்செஞ் சுடரே வடிவுடை மாணிக்கமே. 56

சேலேர் விழியருட் டேனே யடியருட் டித்திக்குஞ்செம்
பாலே மதுரச்செம் பாகேசொல் வேதப் பனுவன்முடி
மேலே விளங்கும் விளக்கே யருளொற்றி வித்தகனார்
மாலே கொளுமெழின் மானே வடிவுடை மாணிக்கமே. 57

எம்பா லருள்வைத் தெழிலொற்றி யூர்கொண் டிருக்குமிறைச்
செம்பால் கலந்தபைந் தேனே கதலிச் செழுங்கனியே
வெம்பாலை நெஞ்சருண் மேவா மலர்ப்பத மென்கொடியே
வம்பா லணிமுலை மானே வடிவுடை மாணிக்கமே. 58

1. கையிலேந்தேனற்பாலது — கயிலேந்தேனப் போலியாயிற்று.

Koviloor Digital Library

ஏமமுய்ப் போரெமக் கென்றே யிளைக்கி லெடுக்கவைத்த
சேமவைப் பேயன்பர் தேடுமெய்ஞ் ஞானத் திரவியமே
தாமமைக் கார்மலர்க் கூந்தற் பிடிமென் றனிநடையாய்
வாமநற் சீரொற்றி மானே வடிவுடை மாணிக்கமே. 59

மன்னேர் மலையன் மனையுநற் காஞ்சன மாலையுநீ
அன்னே யெனத்திரு வாயா லழைக்கப்பெற் றூரவர்தாம்
முன்னே யருந்தவ மென்னே முயன்றனர் முன்னுமொற்றி
வன்னே ரிளமுலை மின்னே வடிவுடை மாணிக்கமே. 60

கணமொன்றி லேனுமென் னுள்ளக் கவலைக் கடல்கடந்தே
குணமொன்றி லேனெது செய்கேனின் உள்ளக் குறிப்பறியேன்
பணமொன்று பாம்பணி யொற்றியெம் மானிடப் பாலிற்றெய்வ
மணமொன்று பச்சைக் கொடியே வடிவுடை மாணிக்கமே. 61

கருவே தனையற வென்னெஞ் சகத்திற் களிப்பொடொற்றிக்
குருவே யெனுநின் கணவனு நீயுங் குலவுமந்தத்
திருவே யருள்செந் திருவே முதற்பணி செய்யத்தந்த
மருவே மருவு மலரே வடிவுடை மாணிக்கமே. 62

எண்ணிய வெண்ணங்க ளெல்லாம் பலிக்க வெனக்குனருள்
பண்ணிய வுள்ளங்கொ ளுள்ளும் புறம்பும் பரிமளிக்கும்
புண்ணிய மல்லிகைப் போதே யெழிலொற்றிப் பூரணர்பான்
மண்ணிய பச்சை மணியே வடிவுடை மாணிக்கமே. 63

தீதுசெய் தாலுநின் னன்பர்கள் தம்முன் செருக்கிநின்று
வாதுசெய் தாலுநின் றுண்மறந் தாலு மறிவிலியேன்
ஏதுசெய் தாலும் பொறுத்தருள் வாயொற்றி யின்னிடைப்பூ
மாதுசெய் தாழ்குழன் மானே வடிவுடை மாணிக்கமே. 64

மருந்தினின் றுனெற்றி யூர்வாழு நின்றன் மகிழ்நன்முன்னுந்
திருந்திநின் றூர்புகழ் நின்முன்னு நல்லருட் டேன்விழைந்தே
விருந்தினின் றேன்சற்று முள்ளிரங் காத விதத்தைக்கண்டு
வருந்திநின் றேனிது நன்றோ வடிவுடை மாணிக்கமே. 65

என்போற் குணத்தி லிழிந்தவ ரில்லையெப் போதுமெங்கும்
நின்போ லருளிற் சிறந்தவ ரில்லையிந் நீர்மையினாற்
பொன்போலு நின்னரு ளென்னே யெனக்கும் புரிதிகண்டாய்
மன்போ லுயரொற்றி வாழ்வே வடிவுடை மாணிக்கமே. 66

துன்பே மிகுமிவ் வடியேன் மனத்தினின் றுய்யவருள் .
இன்பே மிகுவதெந் நாளோ? எழிலொற்றி யெந்தையுயிர்க்
கன்பேமெய்த் தொண்ட ரறிவே சிவநெறிக் கன்பிலர்பால்
வன்பேமெய்ப் போத வடிவே வடிவுடை மாணிக்கமே. 67

Koviloor Digital Library

சற்றே யெனினுமென் னெஞ்சத் துயரந் தவிரவுநின்
பொற்றே மலர்ப்பதம் போற்றவு முள்ளம் புரிதிகண்டாய்
சொற்றே ரறிஞர் புகழொற்றி மேவுந் துணைவர்தஞ்செம்
மற்றோர் புயத்தணை மானே வடிவுடை மாணிக்கமே. 68

சந்தோட மாப்பிற ரெல்லா மிருக்கவுஞ் சஞ்சலத்தால்
அந்தோ வொருதமி யேன்மட்டும் வாட லருட்கழகோ
நந்தோட நீக்கிய நங்கா யெனத்திரு நான்முகன்மால்
வந்தோது மொற்றி மயிலே வடிவுடை மாணிக்கமே. 69

அடியேன் மிசையெப் பிழையிருந் தாலு மவைபொறுத்துச்
செடியேத நீக்கிநற் சீரருள் வாய்திகழ் தெய்வமறைக்
கொடியே மரகதக் கொம்பே யெழிலொற்றிக் கோமளமே
வடியே ரயில்விழி மானே வடிவுடை மாணிக்கமே. 70

கண்ணப்ப னேத்துநற் காளத்தி யார்மங் கலங்கொளொற்றி
நண்ணப்பர் வேண்டு நலமே பரானந்த நன்னறவே
எண்ணப் படாவெழி லோவிய மேயெமை யேன்றுகொண்ட
வண்ணப் பசும்பொன் வடிவே வடிவுடை மாணிக்கமே. 71

கற்பே விகற்பங் கடியுமொன் றேயெங்கள் கண்ணிறைந்த
பொற்பேமெய்த் தொண்டர்தம் புண்ணிய மேயருட் போதவின்பே
சொற்பே ரறிவுட் சுகப்பொரு ளேமெய்ச் சுயஞ்சுடரே
மற்பேர் பெறுமொற்றி மானே வடிவுடை மாணிக்கமே. 72

மிகவே துயர்க்கடல் வீழ்ந்தேனை நீகை விடுதலருட்
டகவே யெனக்குநற் றுயே யகில சராசரமுஞ்
சுகவேலை மூழ்கத் திருவொற்றி யூரிடந் துன்னிப்பெற்ற
மகவே யெனப்புரக் கின்றோய் வடிவுடை மாணிக்கமே. 73

வேதங்க ளாயொற்றி மேவுஞ் சிவத்தின் விளைவருளாய்ப்
பூதங்க ளாய்ப்பொறி யாய்ப்புல னாகிப் புகல்கரண
பேதங்க ளாயுயி ராகிய நின்னையிப் பேதையென்வாய்
வாதங்க ளாலறி வேனோ வடிவுடை மாணிக்கமே. 74

மதியே மதிமுக மானே யடியர் மனத்துவைத்த
நிதியே கருணை நிறைவே சுகாநந்த நீணிலையே
கதியே கதிவழி காட்டுங்கண் ணேயொற்றிக் காவலர்பால்
வதியே ரிளமட மானே வடிவுடை மாணிக்கமே. 75

ஆறுத் துயரத் தழுந்துநின் றேனையிங் கஞ்சலென்றே
கூறுக் குறையென் குறையே யினிநின் குறிப்பறியேன்
தேறுச் சிறியர்க் கரிதாந் திருவொற்றித் தேவர்மகிழ்
மாறுக் கருணை மழையே வடிவுடை மாணிக்கமே. 76

Koviloor Digital Library

எற்றே நிலையொன்று மில்லா துயங்கு மெனக்கருளச்
சற்றேநின் னுள்ளந் திரும்பிலை யான்செயத் தக்கதென்னே
சொற்றேனி றைமறைக் கொம்பேமெய்ஞ் ஞானச் சுடர்க்கொழுந்தே
மற்றே ரணியொற்றி வாழ்வே வடிவுடை மாணிக்கமே. 77

செவ்வேலை வென்றகண் மின்னே நின்சித்தந் திரும்பியெனக்
கெவ்வேலை செய்யென் றிடினுமவ் வேலை யியற்றுவல்காண்
தெவ்வேலை வற்றச்செ யவ்வேலை யீன்றெருற்றித் தேவர்நெஞ்சை
வவ்வேலை வார்குழன் மானே வடிவுடை மாணிக்கமே. 78

தாயே மிகவுந் தயவுடை யாளெனச் சாற்றுவரிச்
சேயேன் படுந்துயர் நீக்கவென் னேயுளஞ்செய்திலையே
நாயேன் பிழையினி நாடாது நல்லரு ணல்கவரு
வாயேயெம் மொற்றி மயிலே வடிவுடை மாணிக்கமே. 79

நானே நினக்கடி யேனென் பிழைகளை நாடியநீ
தானே யெனைவிடி லந்தோ வினியெவர் தாங்குகின்றோர்
தேனே நல்வேதத் தெளிவே கதிக்குச் செலுநெறியே
வானோர் பொழிலொற்றி மானே வடிவுடை மாணிக்கமே. 80

கல்லா ரிடத்திலென் னில்லாமை சொல்லிக் கலங்கியிடா
நல்லாண்மை யுண்டருள் வல்லாண்மை யுண்டெனி னல்குவையோ
வல்லா ரெவர்கட்கும் வல்லார் திருவொற்றி வாணரொடு
மல்லார் பொழிலொற்றி வாழ்வோய் வடிவுடை மாணிக்கமே. 81

சுந்தர வாண்முகத் தோகாய் மறைகள் சொலும்பைங்கிள்ளாய்
கந்தர வார்குழற் பூவாய் கருணைக் கடைக்கணங்காய்
அந்தர நேரிடைப் பாவா யருளொற்றி யண்ணன்மகிழ்
மந்தர நேர்கொங்கை மங்காய் வடிவுடை மாணிக்கமே. 82

பத்தர்தம் முள்ளத் திருக்கோயின் மேவும் பரம்பரையே
சுத்தமெய்ஞ் ஞான வொளிப்பிழம் பேசிற் சுகாநந்தமே
நித்தநின் சீர்சொல வெற்கருள் வாயொற்றி நின்மலருண்
மத்தர்தம் வாம மயிலே வடிவுடை மாணிக்கமே. 83

பூவாய் மலர்க்குழற் பூவாய்மெய் யன்பர் புனைந்ததமிழ்ப்
பாவாய் நிறைந்தபொற் பாவாய்செந் தேனிற் பகர்மொழியாய்
காவா யெனவயன் காவாய் பவனுங் கருதுமலர்
மாவா யெழிலொற்றி வாழ்வே வடிவுடை மாணிக்கமே. 84

தாதா வுணவுடை தாதா வெனப்புல்லர் தம்மிடைப்போய்
மாதாக மூற்றவர் வன்னெஞ்சி னின்னடி வைகுங்கொலோ
காதார் நெடுங்கட் கரும்பேநல் லொற்றிக் கருத்தர்நட
வாதா ரிடம்வளர் மாதே வடிவுடை மாணிக்கமே. 85

Koviloor Digital Library

களந்திரும் பாவிக் கடையேனை யாளக் கருணைகொண்டுன்
உளந்திரும் பாமைக்கென் செய்கேன் துயர்க்கட லூடலைந்தேன்
குளந்திரும் பாவிழிக் கோமா னெடுங்தொண்டர் கூட்டமுற
வளந்திரும் பாவொற்றி வாழ்வோய் வடிவுடை மாணிக்கமே. 86

ஆரணம் பூத்த வருட்கோ மளக்கொடி யந்தரிபூந்
தோரணம் பூத்த வெழிலொற்றி யூர்மகிழ் சுந்தரிசற்
காரணம் பூத்த சிவைபார்ப் பதிநங் கௌரியென்னும்
வாரணம் பூத்த தனத்தாய் வடிவுடை மாணிக்கமே. 87

திருவல்லி யேத்து மபிடேக வல்லியெஞ் சென்னியிடை
வருவல்லி கற்பக வல்லியொண் பச்சை மணிவல்லியெங்
கருவல்லி நீக்குங் **கருணை** **பகவல்லி** கண்கொளொற்றி
மருவல்லி யென்று மறைதேர் வடிவுடை மாணிக்கமே. 88

உடையென்ன வொண்புலித் தோலுடை யார்கண்டு (உ)வக்குமிள
நடையன்ன மேமலர்ப் பொன்முத லாம்பெண்கள் நாயகமே
படையன்ன நீள்விழி மின்னே ரிடைப்பொற் பசுங்கிளியே
மடைமன்னு நீரொற்றி வாழ்வே வடிவுடை மாணிக்கமே. 89

கற்பதுங் கேட்பது **மெல்லா**நின் னற்புதக் கஞ்சமலர்ப்
பொற்பதங் காணும் பொருட்டென வெண்ணுவர் புண்ணியரே
சொற்பத மாயவைக் கப்புற மாய்நின்ற தூய்ச்சுடரே
மற்பதஞ் சேரொற்றி வாழ்வே வடிவுடை மாணிக்கமே. 90

நின்னு லெனக்குள வெல்லா நலனு நினையடைந்த
வென்னு லுனக்குள தென்னைகண் டாயெமை யீன்றவளே
முன்**நால் வருக்கருள்** ஒற்றியெம் மான்கண் முழுமணியே
மன்னுன் மறையின் முடிவே வடிவுடை மாணிக்கமே. 91

நன்றே சிவநெறி நாடுமெய்த் தொண்டர்க்கு நன்மைசெய்து
நின்றேநின் சேவடிக் குற்றேவல் செய்ய நினைத்தனனீ
தென்றே முடிகுவ தின்றே முடியி லினிதுகண்டாய்
மன்றே ரெழிலொற்றி வாழ்வே வடிவுடை மாணிக்கமே. 92

அத்தனை யொற்றிக் கிறைவனை யம்பலத் தாடுகின்ற
முத்தனைச் சேர்ந்தவொண் முத்தே மதிய முகவமுதே
இத்தனை யென்றள வேலாத குற்ற மிழைத்திடுமிம்
மத்தனை யாளல் வழக்கோ வடிவுடை மாணிக்கமே. 93

கூறுத வாழ்க்கைச் சிறுமையை நோக்கிக் குறித்திடுமென்
தேறுத விண்ணப்பஞ் சற்றேனு நின்றன் திருச்செவியில்
ஏறுத வண்ணமென் னெற்றித் தி யாக ரிடப்புறத்தின்
மாறு தமர்ந்த மயிலே வடிவுடை மாணிக்கமே. 94

Koviloor Digital Library

ஓயா விடர்கொண் டலைவேனுக் கன்பர்க் குதவுதல்போல்
ஈயா விடினுமோ ரெள்ளள வேனு மிரங்குகண்டாய்
சாயா வருடருந் தாயே யெழிலொற்றித் தற்பரையே
மாயா நலமருள் வாழ்வே வடிவுடை மாணிக்கமே. 95

பெரும்பேதை யேன்சிறு வாழ்க்கைத் துயரெனும் பேரலையிற்
றுரும்பே யெனவலை கின்றேன் புணைநின் றுணைப்பதமே
கரும்பே கருணைக் கடலே யருண்முக் கனிநறவே
வரும்பே ரருளொற்றி வாழ்வே வடிவுடை மாணிக்கமே. 96

காதர வாலுட் கலங்கிநின் றேனின் கடைக்கணருள்
ஆதர வான்மகிழ் கின்றே னினியுன் னடைக்கலமே
சீதர னேத்துந் **திருவொற்றி நாதர்தந் தேவி**யெழின்
மாதர சேயொற்றி வாழ்வே வடிவுடை மாணிக்கமே. 97

பொன்னுடையா ரன்றிப் போற்றுநற் கல்விப் பொருளுடையார்
என்னுடை யாரென வேசுகின் றுரிஃ தென்னையன்னே
மின்னுடை யாய்மின்னிற் றுன்னிடை யாயொற்றி மேவுமுக்கண்
மன்னுடை யாயென் னுடையாய் வடிவுடை மாணிக்கமே. 98

பொய்விட் டிடாதவன் னெஞ்சகத் தேனைப் புலம்பும்வண்ணங்
கைவிட் டிடாதின்னுங் காப்பா யதுநின் கடன்கரும்பே
மெய்விட் டிடாருள் விளையின்ப மேயொற்றி வித்தகமே
மைவிட் டிடாவிழி மானே வடிவுடை மாணிக்கமே. 99

நேயானு கூல மனமுடை யாயினி நீயுமென்றன்
தாயாகில் யானுன் தனையனு மாகில்**என் றன்னுளத்தில்**
ஓயா துறுந்துய ரெல்லாந் தவிர்த்தருள் ஒற்றியிற்செவ்
வாயா ரமுத **வடிவே! வடிவுடை மாணிக்கமே!** 100

வாழிநின் சேவடி போற்றிநின் பூம்பத வாரிசங்கள்
வாழிநின் றுண்மலர் போற்றிநின் றண்ணளி வாழிநின்சீர்
வாழியென் னுள்ளத்தில் நீயுநின் றெற்றி மகிழ்நருநீ
வாழி!என் ஆருயிர் வாழ்வே! வடிவுடை மாணிக்கமே!

திருச்சிற்றம்பலம் 101

Koviloor Digital Library

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

எட்டாவது

இங்கிதமாலை*

காப்பு

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

ஒருமா முகனை யொருமாவை யூர்வா கனமா யுறநோக்கித்
திருமான் முதலோர் சிறுமையெலாந் தீர்த்தெம் மிருகண் மணியாகிக்
கருமா லகற்றுங் **கணபதியாங்** கடவு ளடியுங் களித்தவர்பின்
வருமா கருணைக் கடற்குமர **வள்ள** லடியும் வணங்குவாம்.

திருச்சிற்றம்பலம்

---

*திருவருட் பிரகாச வள்ளலார் தமது மாணவருள் ஒருவராகிய கூடலூர்-அய்யாசாமிப் பிள்ளையவர்கள் இங்கிதமாலை எனுந் தொடர்க்குப் பொருள் அருள் செய்யும்படி வேண்ட, விளக்கியவாறு:

"இந்நூல் யாது பெயர்த்தோவெனின் இங்கிதமாலை என்னும் பெயர்த்து.
இந்நாம வாக்கியத்தைப் பாகுபாடு செய்க எனின், இங்கிதம், மாலை எனப் பாகுபாடு செய்க.

இங்கிதம் என்பது என்னையெனின், குறிப்பால் நிகழும் உறுப்பின் தொழில் எனப் பொருள் தருவதன்றி, அடையாளம், இனிமை, எண்ணக் குறிப்பு, எண்ணம், கருத்து, அறிவு, சயிக்ஞை, நோக்கம் எனவும் பொருள் தரும்.

இந்நூல் யாது காரணத்தால் இப்பெயர் அடைந்ததோ? எனின், நாயக நாயிகா விவகாரத்தில் நிகழ்ந்த அங்கோபாங்கப் பிரத்தியங்கப் பிரேரக ஞாய சகித பாவனை சயிக்ஞை நயமும், நல்லறிவு சகித சயிக்ஞா வசன விசேடத்தாற் பாலென வெளிருதும், கனியெனச் சிதருதும், தேனெனக் குழருதுமாகி நேர்ந்த சல்லாப வியன்மொழியின் எண்ணக் குறிப்பும் சொலிக்க, ஆன்ம சிற்சத்தியாகிய தலைவி கடவுளாய தலைவரோடு சயிக்ஞை புரிந்த ஐக்யானுபவ சையோக விவகாரத்தைப் பராசத்தியாராய உயிர்ப் பாங்கியாரிடத்து வினவிய "தலைவி பாங்கிக் குரைத்தல்" என்னும் துறை நயத்தால் இப்பெயர் எய்தியது எனக்கொள்க."

Koviloor Digital Library

பாடாண்டிணை

கடவுள் மாட்டு மானிடப்பெண்டிர் நயந்த பக்கம்

(வினவுத்தரம்)

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

திருவார் கமலத் தடம்பணைசூழ் செல்வப் பெருஞ்சீ ரொற்றியில்வாழ்
மருவார் கொன்றைச் சடைமுடிகொள் வள்ள லிவர்க்குப் பலிகொடுநான்
ஒருவா தடைந்தே னினிநமக்கிங் குதவ வருந்தோ றுன்முலைமேல்
இருவா ரிடுநீ யென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. 1

தண்ணார் மலரை மதிநதியைத் தாங்குஞ் சடையா ரிவர்தமைநான்
அண்ணா லொற்றி யிருந்தவரே யைய ரேனீர் யாரென்றேன்
நண்ணா ரிடத்து மம்பலத்து நடவா தவர்நா மென்றுசொலி
எண்ணா தருகே வருகின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. 2

பிட்டி னதிமண் சுமந்தவொற்றிப் பிச்சைத் தேவ ரிவர்தமைநான்
தட்டின் மலர்க்கை யிடத்ததுவோ தனத்தைப் பிடியு மென்றுரைத்தேன்
மட்டி னொருமூன் றுடனேழு மத்தர் தலையீ தென்றுசொலி
எட்டி முலையைப் பிடிக்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. 3

மடையிற் கயல்பா யொற்றிநகர் வள்ள லாகு மிவர்தமைநான்
அடையிற் கனிபொற் பணியென்றே யருளீ ருரியீ ருடையென்றேன்
கடையிற் படுமோர் பணியென்றே கருதி யுரைத்தே மென்றுரைத்தென்
இடையிற் கலையை யுரிகின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. 4

மன்றன் மணக்கு மொற்றிநகர் வாண ராகு மிவர்தமைநான்
இன்றன் பொடுங்கை யேந்தனத்தை யேற்றோர் கலத்திற் கொளுமென்றேன்
அன்றன் புடையா யெண்கலத்தி னுங்கொண் டிடுவே மென்றுசொலி
என்றன் முலையைத் தொடுகின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. 5

கோமாற் கருளுந் திருவொற்றிக் கோயி லுடையா ரிவரைமத
மாமாற் றியநீ ரேகலவி மகிழ்ந்தின் றடியேன் மனையினிடைத்
தாமாற் றிடக்கொண் டேகுமென்றேன் றாவென் றார்தந் தாலென்னை
ஏமாற் றினையே யென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. 6

அம்மா லயனுங் காண்பரியீர்க் கமரும் பதிதான் யாதென்றேன்
இம்மா லுடையா யொற்றுதற்கோ ரெச்ச மதுகண் டறியென்றார்
செம்மா லிஃதொன் றென்னென்றேன் றிருவே புரிமேற் சேர்கின்ற
எம்மான் மற்றொன் றென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. 7

கண்கள் களிப்ப வீண்டுநிற்குங் கள்வ ரிவரூ ரொற்றியதாம்
பண்க ளியன்ற திருவாயாற் பலிதா வென்றார் கொடுவந்தேன்
பெண்கள் தரலீ தன்றென்றார் பேசப் பலியா தென்றேனின்
எண்கண் பலித்த தென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. 8

Koviloor Digital Library

ஆரா மகிழ்வு தருமொருபே ரழக ரிவரு ரொற்றியதாம்
நேராய் விருந்துண் டோவென்றார் நீர்தான் வேறிங் கிலையென்றேன்
வாரார் முலையாய் வாயமுது மலர்க்கை யமுது மனையமுதும்
ஏரா யுளவே யென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. 9

அடுத்தார்க் கருளு மொற்றிநக ரைய ரிவர்தா மிகத்தாகங்
கடுத்தா மென்றார் கடிதடநீர் கண்டீ ரையங் கொளுமென்றேன்
கொடுத்தாய் கண்ட தில்லையயங் கொள்ளு மிடஞ்சூழ்ந் திடுங்கலையை
எடுத்தாற் காண்பே மென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. 10

இந்தா ரிதழி யிலங்குசடை யேந்த லிவரு ரொற்றியதாம்
வந்தார் பெண்ணே யமுதென்றார் வரையின் சுதையிங் குண்டென்றேன்
அந்தார் குழலாய் பசிக்கினும்பெண் ணாசை விடுமோ வமுதின்றேல்
எந்தா ரந்தா வென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. 11

தன்னந் தனியா யிங்குநிற்குஞ் சாமி யிவரு ரொற்றியதாம்
அன்னந் தருவீ ரென்றார்நா னழைத்தே னின்னை யன்னமிட
முன்னம் பசிபோ யிற்றென்றார் முன்னின் றகன்றே னிவ்வன்னம்
இன்னந் தருவா யென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. 12

மாறா வழகோ டிங்குநிற்கும் வள்ள லிவரு ரொற்றியதாம்
வீறா முணவீ யென்றார்நீர் மேவா வுணவிங் குண்டென்றேன்
கூறா மகிழ்வே கொடுவென்றார் கொடுத்தா லிதுதா னன்றென்றே
ஏறா வழக்குத் தொடுக்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. 13

வண்மை யுடையார் திருவொற்றி வாண ரிவர்தாம் பலியென்றார்
உண்மை யறிவிர் பலியெண்மை யுணர்கி லிரென் னுழையென்றேன்
பெண்மை சிறந்தாய் நின்மனையிற் பேசும் பலிக்கென் றடைந்ததுநாம்
எண்மை யுணர்ந்தே யென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. 14

திருவை யளிக்குந் திருவொற்றித் தேவ ரீர்க்கென் விழைவென்றேன்
வெருவ லுனது பெயரிடையோர் மெய்நீக் கியநின் முகமென்றார்
தருவ லதனை வெளிப்படையாற் சாற்று மென்றேன் சாற்றுவனேல்
இருவை மடவா யென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. 15

முந்தை மறையோன் புகழொற்றி முதல்வ ரிவர்தம் முகநோக்கிக்
கந்தை யுடையீ ரென்னென்றேன் கழியா வுன்றன் மொழியாலே
இந்து முகத்தா யெமக்கொன்றே யிருநான் குனக்குக் கந்தையுள
திந்த வியப்பென் னென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. 16

துன்ன லுடையா ரிவர்தமைநீர் துன்னும் பதிதான் யாதென்றேன்
என்ன விரவி லெமைத்தெளிவா ரின்ற மினது பெயரென்றார்
உன்ன லுறுவீர் வெளிப்படவீ துரைப்பீ ரென்றே னுரைப்பேனேல்
இன்ன லடைவா யென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. 17

சிமைக்கோள் குலத் திருமலர்க்கைத் தேவர் நீரெங் கிருந்ததென்றேன்
எமைக்கண் டளவின் மாதேநீ யிருந்த தெனயா மிருந்ததென்றார்
அமைக்கு மொழியிங் கிதமென்றே னுமன் மொழியிங் கிதமன்றே
இமைக்கு மிழையா யென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. 18

Koviloor Digital Library

நடங்கொள் பதத்தீர் திருவொற்றி நங்கள் பெருமா னீரன்றோ
திடங்கொள் புகழ்க்கச் சூரிடஞ்சேர்ந் தீரென் றேனின் னடுநோக்காக்
குடஞ்சேர்ந் ததுமாங் கஃதென்றார் குடம்யா தென்றே னஃதறிதற்
கிடங்கா நடுநீக் கென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடி. 19

சங்க மருவு மொற்றியுளீர் சடைமே லிருந்த தென்னென்றேன்
மங்கை நினது முன்பருவ மருவு முதனீத் திருந்ததென்றார்
கங்கை யிருந்த தேயென்றேன் கமலை யனையாய் கழுக்கடையும்
எங்கை யிருந்த தென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடி. 20

தூதிசே ரொற்றி வளர்தரும துரையே நீர்முன் னுடலுறும்
பதியா தென்றே னம்பெயர்முற் பகரீ ரெழுத்தைப் பறித்ததென்றார்
நிதிசேர்ந் திடுமப் பெயர்யாது நிகழ்த்து மென்றே னீயிட்ட
தெதுவோ வதுகா ணென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடி. 21

உடற்கச் சுயிரா மொற்றியுளீ ருமது திருப்பேர் யாதென்றேன்
குடக்குச் சிவந்த பொழுதினைமுன் கொண்ட வண்ண ராமென்றார்
விடைக்குக் கருத்தா வாநீர்தாம் விளம்பன் மிகக்கற் றவரென்றேன்
இடக்குப் புகன்றா யென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடி. 22

மணங்கே தகைவான் செயுமொற்றி வள்ள லிவரை வல்விரைவேன்
பிணங்கேஞ் சிறிது நில்லுமென்றேன் பிணங்கா விடினு னென்னலென
வணங்கே நினக்கொன் றினிற்பாதி யதிலோர் பாதி யாகுமிதற்
கிணங்கேஞ் சிறிது மென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடி. 23

ஒற்றி நகரா ரிவர்தமைநீ ருவந்தே றுவதிங் கியாதென்றேன்
மற்றுன் பருவத் தொருபங்கே மடவா யென்றார் மறைவிடையீ
திற்றென் றறிதற் கரிதென்றே னெம்மை யறிவா ரன்றியஃ
தெற்றென் றறிவா ரென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடி. 24

கண்ணின் மணிபோ லிங்குநிற்குங் கள்வ ரிவரூ ரொற்றியதாம்
பண்ணின் மொழியாய் நின்பாலோர் பறவைப் பெயர்வேண் டினம்படைத்தான்
மண்ணின் மிசையோர் பறவையதா வாழ்வா யென்றா ரென்னென்றேன்
எண்ணி யறிநீ யென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடி. 25

சேடார் வளஞ்சூ ழொற்றிநகர் செல்வப் பெருமா னிவர்தமைநான்
ஓடார் கரத்தீ ரெண்டோள்க ளுடையீ ரென்னென் றுரைத்தேனீ
கோடா கோடி முகநூறு கோடா கோடிக் களமென்னே
ஈடா யுடையா யென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடி. 26

துருமஞ் செழிக்கும் பொழிலொற்றித் தோன்று லிங்கு நீர்வந்த
கருமஞ் சொலுமென் றேனிவண்யாங் கடாதற் குன்பா லெம்முடைமைத்
தருமம் பெறக்கண் டாமென்றார் தருவ லிருந்தா லென்றேனில்
இருமந் தரமோ வென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடி. 27

ஒருகை முகத்தோர்க் கையரெனு மொற்றித் தேவ ரிவர்தமைநான்
வருகை புவந்தீ ரென்றனைநீர் மருவி யணைதல் வேண்டுமென்றேன்
தருகை யுடனே யகங்காரந் தனையெம் மடியார் தமைமயக்கை
இருகை வளைசிந் தென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. 28

திருந்த மிகுஞ்சீ ரொற்றியில்வாழ் தேவ ரேயிங் கெதுவேண்டி
வருந்த மலர்க்கா லுறநடந்து வந்தீ ரென்றேன் மாதேநீ
அருத்தந் தெளிந்தே நிருவாண மாக வுன்ற னகத்தருட்கண்
இருந்த வடைந்தே மென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. 29

வளஞ்சே ரொற்றி மாணிக்க வண்ண ராகு மிவர்தமைநான்
குளஞ்சேர்ந் திருந்த துமக்கொருகண் கோலச் சடையீ ரழகிதென்றேன்
களஞ்சேர் குளத்தி னெழின்முலைக்கண் காண வோரைந் துனக்கழகீ
திளஞ்சேல் விழியா யென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. 30

பலஞ்சே ரொற்றிப் பதியுடையீர் பதிவே றுண்டோ நுமக்கென்றேன்
உலஞ்சேர் வெண்பொன் மலையென்றா ருண்டோ நீண்ட மலையென்றேன்
வலஞ்சே ரிடைத்தவ் வருவித்த மலைகா ணதனின் மம்முதல்சென்
றிலஞ்சேர்ந் ததுவு மென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. 31

வயலா ரொற்றி வாணரிவர் வந்தார் நின்றார் வாய்திறவார்
செயலார் விரல்கண் முடக்கியடி சேர்த்தீ ரிதழ்கள் விரிவித்தார்
மயலா ருளத்தோ டென்னென்றேன் மறித்தோர் விரலா லென்னுடைய
வியலாற் வடிவிற் சுட்டுகின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. 32

பேர்வா மொற்றி வாணரிவர் பேசா மௌன யோகியராய்ச்
சீர்வாழ் நமது மனையினிடைச் சேர்ந்தார் விழைவென் செப்புமென்றேன்
ஓர்வா முடியுங் குழலணியு மொருநல் விரலாற் சுட்டியுந்தம்
ஏர்வா மொருகை பார்க்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. 33

பெருஞ்சீ ரொற்றி வாணரிவர் பேசா மௌனம் பிடித்திங்கே
விரிஞ்சீர் தரநின் றுடன்கீழு மேலு நோக்கி விரைந்தார்யான்
வருஞ்சீ ருடையீர் மணிவார்த்தை வகுக்க வென்றேன் மார்பிடைக்காழ்
இருஞ்சீர் மணியைக் காட்டுகின்றா ரிதுதான் சேடி யென்னேடீ..

வலந்தங் கியசீ ரொற்றிநகர் வள்ள லிவர்தாம் மௌனமொடு
கலந்திங் கிருந்த வண்டசத்தைக் காட்டி மூன்று விரனீட்டி
நலந்தங் குறப்பின் னடுமுடக்கி நண்ணு மிந்த நகத்தொடுவாய்
இலந்தங் கரத்தாற் குறிக்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. 35

தேனார் பொழிலா ரொற்றியில்வாழ் தேவ ரிவர்வாய் திறவாராய்
மானார் கரத்தோர் நகந்தெறித்து வாவா நின்றார் நீளார்வந்
தானா ருளத்தோ டியாதென்றேன் றங்கைத் தலத்திற் றலையையடி
யேனா டுறவே காட்டுகின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. 36

Koviloor Digital Library

செச்சை யழகர் திருவொற்றித் தேவ ரிவர்வாய் திறவாராய்
மெச்சு மொருகாற் கரந்தொட்டு மீண்டு மிடற்றக் கரம்வைத்தார்
பிச்ச ரடிகேள் வேண்டுவது பேசீ ரென்றேன் றமைக்காட்டி
இச்சை யெனையுங் குறிக்கின்று ரிதுதான் சேடி யென்னேடீ. 37

மன்றுர் நிலையார் திருவொற்றி வாண ரிவர்தா மௌனமொடு
நின்று ரிருகை யொலியிசைத்தார் நிமிர்ந்தார் தவிசி னிலைகுறைத்தார்
நன்று ரமுது சிறிதுமிழ்ந்தார் நடித்தார் யாவு மையமென்றேன்
இன்று மரைக்கை யேந்துகின்று ரிதுதான் சேடி யென்னேடீ. 38

வாரா விருந்தாய் வள்ளலிவர் வந்தார் மௌன மொடுநின்றுர்
நீரா ரெங்கே யிருப்பதென்றே னீண்ட சடையைக் குறிப்பித்தார்
ஊரா வைத்த தெதுவென்றே னொண்கை யோடென் னிடத்தினில்வைத்
தேரார் கரத்தாற் சுட்டுகின்று ரிதுதான் சேடி யென்னேடீ. 39

செங்கேழ் கங்கைச் சடையார்வாய் திறவா ராக வீண்டடைந்தார்
எங்கே யிருந்திங் கணைந்ததுகா ணெங்கள் பெருமா னென்றேனென்
அங்கே முருகி னகன்றுபோ யங்கே யிறைப்போ தமர்ந்தெழுந்தே
இங்கே நடந்து வருகின்று ரிதுதான் சேடி யென்னேடீ. 40

கொடையா ரொற்றி வாணரிவர் கூறு மௌன ராகிநின்றுர்
தொடையா ரிதழி மதிச்சடையென் துரையே யிழைவே துமக்கென்றேன்
உடையார் துனனற் கந்தைதனை யுற்று நோக்கி நகைசெய்தே
இடையாக் கழுமுட் காட்டுகின்று ரிதுதான் சேடி யென்னேடீ.

பொன்னைக் கொடுத்தும் புணர்வரிய புனித ரிவரு ரொற்றியதாம்
முன்னைத் தவத்தால் யாங்காண முன்னே நின்றுர் முகமலர்ந்து
மின்னிற் பொலியுஞ் சடையீரென் வேண்டு மென்றே னுணச்செய்யாள்
இன்னச் சினங்கா ணென்கின்று ரிதுதான் சேடி யென்னேடீ. 42

வயலார் சோலை யெழிலொற்றி வாண ராகு மிவர்தமைநான்
செயலா ரடியர்க் கருள்வீர்நுஞ் சிரத்து முரத்துந் திகழ்கரத்தும்
வியலாய்க் கொண்ட தென்னென்றேன் விளங்கும் பிநாக மவைமூன்றும்
இயலாற் காண்டி யென்கின்று ரிதுதான் சேடி யென்னேடீ. 43

பொதுநின் றருள்வீ ரொற்றியுளீர் பூவுந் தியதென் விழியென்றேன்
இதுவென் றறிநா மேறுநின்ற தென்று ரேறு கின்றதுதான்
எதுவென் றுரைத்தே னெதுநடுவோ ரெழுத்திட் டறிநீ யென்றுசொலி
எதிர்நின் றுவந்து நகைக்கின்று ரிதுதான் சேடி யென்னேடீ. 44

இட்டங் களித்த தொற்றியுளீ ரீண்டிவ் வேளை யெவனென்றேன்
சுட்டுஞ் சுதனே யென்றுர்நான் சுட்டி யறியச் சொலுமென்றேன்
பட்டுண் மருங்குற் பாவாய்நீ பரித்த தன்றே பாரென்றே
எட்டுங் களிப்பா லுரைக்கின்று ரிதுதான் சேடி யென்னேடீ. 45

பாற்றுக் கணத்தா ரிவர்காட்டுப் பள்ளித் தலைவ ரொற்றியினின்
ருற்றப் பசித்து வந்தாரா மன்ன மிடுமி னென்றுரைத்தேன்
சோற்றுக் கிளைத்தோ மாயினும்யாஞ் சொல்லுக் கிளையேங் கீழ்ப்பள்ளி
யேற்றுக் கிடந்தா யென்கின்று ரிதுதான் சேடி யென்னேடீ. 46

Koviloor Digital Library

குருகா ரொற்றி வாணர்பலி கொள்ள வகையுண் டோவென்றேன்
ஒருகா லெடுத்தீண் டுரையென்று ரொருகா லெடுத்துக் காட்டுமென்றேன்
வருகா விரிப்பொன் னம்பலத்தே வந்தாற் காட்டு கின்றும்வீழ்
இருகா லுடையா யென்கின்று ரிதுதான் சேடி யென்னேடீ. 47

வேலை ஞாலம் புகழொற்றி விளங்குந் தேவ ரணிகின்ற
மாலை யாதென் றேனயன்மான் மாலை யகற்று மாலையென்றார்
சோலை மலரன் றேயென்றேன் சோலை யேநாந் தொடுப்பதென
வேல முறுவல் புரிகின்று ரிதுதான் சேடி யென்னேடீ. 48

உயிரு ளுறைவீர் திருவொற்றி யுடையீர் நீரென் மேற்பிடித்த
வயிர மதனை விடுமென்றேன் வயிரி யலநீ மாதேயாஞ்
செயிர தகற்றுன் முலையிடங்கொள் செல்வ னலகாண் டெளியென்றே
இயல்கொண் முறுவல் புரிகின்று ரிதுதான் சேடி யென்னேடீ. 49

தண்கா வளஞ்சூழ் திருவொற்றித் தலத்தி லமர்ந்த சாமிநுங்கை
எண்கார் முகமாப் பொன்னென்றே னிடையிட் டறித லரிதென்றார்
மண்கா தலிக்கு மாடென்றேன் மதிக்குங் கணைவில் லன்றென்றே
எண்கா ணகைசெய் தருள்கின்று ரிதுதான் சேடி யென்னேடீ. 50

செய்காண் வளஞ்சூ ழொற்றியுளீர் திருமான் முதன்முத் தேவர்கட்கும்
ஐகா ணீரென் றேனிதன்மே லணங்கே நீயே மூடைதியென்றார்
மெய்கா ணதுதா னென்னென்றேன் விளங்குஞ் சுட்டுப் பெயரென்றே
எய்கா ணுறவே நகைக்கின்று ரிதுதான் சேடி. யென்னேடீ. 51

விண்டு வணங்கு மொற்றியுளீர் மென்பூ விருந்தும் வன்பூவில்
வண்டு விழுந்த தென்றேனெம் மலர்க்கை வண்டும் விழுந்ததென்றார்
தொண்டர்க் கருள்வீர் மிகவென்றேன் றேகாய் நாமே தொண்டனென
எண்டங் குறவே நகைக்கின்று ரிதுதான் சேடி யென்னேடீ. 52

மட்டார் மலர்க்கா வொற்றியுளீர் மதிக்குங் கலைமேல் விழுமென்றேன்
எட்டா மெழுத்தை யெடுத்ததுநா மிசைத்தே மென்று ரெட்டாக
உட்டா வுறுமவ் வெழுத்தறிய வுரைப்பீ ரென்றே னந்தணரூர்க்
கிட்டார் நாம மென்கின்று ரிதுதான் சேடி யென்னேடீ. 53

ஒற்றி நகரீர் மனவசிதா னுடையார்க் கருள்வீர் நீரென்றேன்
பற்றி யிறுதி தொடங்கியது பயிலு மவர்க்கே யருள்வதென்றார்
மற்றி துணர்கி லேனென்றேன் வருந்தே லுள்ள வன்மையெலாம்
எற்றி லுணர்தி யென்கின்று ரிதுதான் சேடி யென்னேடீ. 54

வான்றோய் பொழில்சூ ழொற்றியுளீர் வருந்தா தணைவே னேவென்றேன்
ஊன்றோ யுடற்கென் றார்தெரிய வுரைப்பீ ரென்றே னேவிதுதான்
சான்றோ ருமது மரபோர்ந்து தரித்த பெயர்க்குத் தகாதென்றே
யேன்றோர் மொழிதந் தருள்கின்று ரிதுதான் சேடி யென்னேடீ. 55

Koviloor Digital Library

தீது தவிர்க்கு மொற்றியுளீர் செல்ல லறுப்ப தென்றென்றேன்
ஈது நமக்குத் தெரிந்ததென்றா ரிறையா மோவிங் கிதுவென்றேன்
ஓது மடியார் மனக்கங்கு லோட்டு நாமே புணரன்றி
ஏது மிறையன் றென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடி. 56

ஒண்கை மழுவோ டனலுடையீ ரொற்றி நகர்வா ழுத்தமர்நீர்
வண்கை யொருமை நாதரென்றேன் வண்கைப் பன்மை நாதரென்றார்
எண்க ணடங்கா வதிசயங்கா ணென்றேன் பொருளன் றிவையதற்கென்
றெண்சொன் மணிதந் தருள்கின்றா ரிதுதான் சேடி யென்னேடி..

ஒருவ ரெனவா ழொற்றியுளீ ருமக்கம் மனையுண் டோவென்றேன்
இருவ ரொருபே ருடையவர்கா ணென்றா ரென்னென் றேனெம்பேர்
மருவு மீறற் றயலகரம் வயங்கு மிகர மானதென்றே
இருவு மொழிதந் தருள்கின்றா ரிதுதான் சேடி யென்னேடி. 58

பேரா ரொற்றி யீரும்மைப் பெற்றா ரெவரென் றேனவர்தம்
ஏரார் பெயரின் முன்பினிரண் டிரண்டா மெழுத்தா ரென்றாரென்
நேரா யுரைப்பீ ரென்றேனீ நெஞ்ச நெகிழ்ந்தா லுரைப்பாமென்
றேரா யுரைசெய் தருள்கின்றா ரிதுதான் சேடி யென்னேடி.. 59

தளிநான் மறையீ ரொற்றிநகர் தழைக்க வாழ்வீர் தனிஞான
வொளிநா வரசை யைந்தெழுத்தா லுவரி கடத்தி னீரென்றேன்
களிநா வலனை யீரெழுத்தாற் கடலில் வீழ்த்தி னேமென்றே
எளியேற் குவப்பின் மொழிகின்றா ரிதுதான் சேடி யென்னேடி. 60

ஓமூன் றுளத்தீ ரொற்றியுளீ ருற்றோர்க் களிப்பீ ரோவென்றேன்
தாமூன் றென்பார்க் கயன்மூன்றுந் தருவே மென்றா ரம்மமிகத்
தேமூன் றினநும் மொழியென்றேன் செவ்வா யுறுமுன் னகையென்றே
ஏமூன் றுறவே நகைக்கின்றா ரிதுதான் சேடி யென்னேடி. 61

மன்னி விளங்கு மொற்றியுளீர் மடவா ரிரக்கும் வகையதுதான்
முன்னி லொருதா வாமென்றேன் மூத்தா வெனலே முறையென்றார்
என்னி லிதுதா னையமென்றே னெமக்குந் தெரியு மெனத்திருவாய்
இன்ன லமுத முகுக்கின்றா ரிதுதான் சேடி யென்னேடி. 62

வளஞ்சே ரொற்றி யீரெனக்கு மாலை யணிவீ ரோவென்றேன்
குளஞ்சேர் மொழிப்பெண் பாவாய்நின் கோல மனைக்க ணுமகிழ்வால்
உளஞ்சேர்ந் தடைந்த போதேநின் னுளத்தி லணிந்தே முணரென்றே
இளஞ்சீர் நகைசெய் தருள்கின்றா ரிதுதான் சேடி யென்னேடி. 63

வீற்றா ரொற்றி நகரமர்ந்தீர் விளங்கு மலரே விளம்புநெடு
மாற்றா ரென்றே னிலைகாணெம் மாலை முடிமேற் பாரென்றார்
சாற்றாச் சலமே யீதென்றேன் சடையின் முடிமே லன்றென்றே
ஏற்றா தரவான் மொழிகின்றா ரிதுதான் செடி யென்னேடி. 64

Koviloor Digital Library

புயப்பா லொற்றி யீரச்சம் போமோ வென்றே னுமென்றார்
வயப்பா வலருக் கிறையானீர் வஞ்சிப் பாவிங் குறைத்ததென்றேன்
வியப்பா நகையப் பாவெனும்பா வெண்பா கலிப்பா வுரைத்துமென்றே
இயற்பான் மொழிதந் தருள்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. 65

தண்ணம் பொழில்சூ ழொற்றியுளீர் சங்கங் கையிற்சேர்த் திடுமென்றேன்
திண்ணம் பலமேல் வருங்கையிற் சேர்த்தோ முன்னர் தெரியென்றார்
வண்ணம் பலவிம் மொழிக்கென்றேன் மடவா யுனது மொழிக்கென்றே
எண்ணங் கொளநின் றுரைக்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. 66

உகஞ்சே ரொற்றி யூருடையீ ரொருமா தவரோ நீரென்றேன்
முகஞ்சேர் வடிவே லிரண்டுடையாய் மும்மா தவர்நா மென்றுரைத்தார்
சுகஞ்சேர்ந் திடுநம் மொழிக்கென்றேன் ரேகா யுனது மொழிக்கென்றே
இகஞ்சேர் நயப்பா லுரைக்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. 67

ஊரா மொற்றி யீராசை யுடையே னென்றே னெமக்கலது
நேரா வழக்குத் தொடுக்கின்றாய் நினக்கே தென்றார் நீரெனக்குச்
சேரா வணமீ தென்றேன்முன் சேர்த்தீ தெழுதித் தந்தவர்தாம்
யாரார் மடவா யென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. 68

வருத்தந் தவிரீ ரொற்றியுளீர் மனத்தி லகாத முண்டென்றேன்
நிருத்தந் தொழுநம் மடியவரை நினைக்கின் றேரைக் காணினது
உருத்தன் பெயர்முன் னெழுத்திலக்க முற்றே மற்ற வெல்லையகன்
றிருத்த லறியா யென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. 69

மைய லகற்றி ரொற்றியுளீர் வாவென் றுரைப்பீ ரோவென்றேன்
செய்ய வதன்மேற் சிகரம்வைத்துச் செவ்வ னுரைத்தா லிருவாவென்
றுய்ய வுரைப்பே மென்றார்நும் முரையென் னுரையென் றேனிங்கே
எய்யுன் னுரையை யென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. 70

தாவென் றருளு மொற்றியுளீர் தமியேன் மோக தாகமற
வாவென் றருள்வீ ரென்றேனவ் வாவின் பின்னர் வருமெழுத்தை
மேவென் றதனிற் சேர்த்ததிங்கே மேவி னன்றே வாவென்பேன்
ஏவென் றிடுகண் ணெல்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. 71

என்மே லருள்கூர்ந் தொற்றியுளீ ரென்னை யணைவா னினைவீரேற்
பொன்மேல் வெள்ளி யாமென்றேன் பொன்மேற் பச்சை யாங்கதன்மேல்
அன்மேற் குழலாய் சேயதன்மே லவ னதன்மேன் ஞாயிறஃ
தின்மே லொன்றின் றென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. 72

வயலா ரொற்றி மேவுபிடி வாதர் நாம மறியாதென்றேன்
மயலா யிடுமிப் பெயர்ப்பின்னர் வந்த வினைய நாமமென்றார்
செயலார் கால மறிந்தென்னைச் சேர்வி ரென்றேன் சிரித்துனக்கிங்
கியலா ரயலா ரென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. 73

நாலா ரணஞ்சூ ழொற்றியுளீர் நாகம் வாங்க லென்னென்றேன்
காலாங் கிரண்டிற் கட்டவென்றார் கலைத்தோல் வல்லீர் நீரென்றேன்
வேலார் விழிமாப் புலித்தோலும் வேழத் தோலும் வல்லேமென்
றேலா வமுத முருக்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. 74

Koviloor Digital Library

முடியா வளஞ்சூ ழொற்றியுளீர் முடிமே லிருந்த தென்னென்றேன்
கடியா வுள்ளங் கையின்முதலைக் கடிந்த தென்றார் கமலமென
வடிவார் கரத்தி லென்னென்றேன் வரைந்த வதனி றகன்றதென்றே
இடியா நயத்தி னகைக்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. 75

ஒன்றும் பெருஞ்சீ ரொற்றிநக ருடையீர் யார்க்கு முணர்வரியீர்
என்றும் பெரியீர் நீர்வருதற் கென்ன நிமித்த மென்றேன்யான்
துன்றும் விசும்பே காணென்றார் சூதா முமது சொல்லென்றேன்
இன்றுன் முலைதா னென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. 76

வானார் வணங்கு மொற்றியுளீர் மதிவாழ் சடையீர் மரபிடைநீர்
தானா ரென்றே னளிப்பள்ளித் தலைவ ரெனவே சாற்றினர்காண்
ஆனா லொற்றி யிருமென்றே னுண்டே யிருந்து வந்தனஞ்செய்
ஈனா **தவள்நீ** யெல்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. 77

பற்று முடித்தோர் புகழொற்றிப் பதியீர் நுமது பசுவினிடைக்
கற்று முடித்த தென்னிருகைக் கன்று முழுதுங் காணென்றேன்
மற்று முடித்த மாலையொடுன் மருங்குற் கலையுங் கற்றுமுடிந்
திற்று முடித்த தென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. 78

வானங் கொடுப்பீர் திருவொற்றி வாழ்வீ ரன்று வந்தெனது
மானங் கெடுத்தீ ரென்றுரைத்தேன் மானன் றிஃதுன் மானன்றே
ஊனங் கலிக்குந் தவர்விட்டா ருலக மறியுங் கேட்டறிந்தே
ஈனந் தவிர்ப்பா யென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. 79

ஞானம் படைத்த யோகியர்வாழ் நகரா மொற்றி நலத்தீர்மால்
ஏனம் புடைத்தீ ரணையென்பீ ரென்னை யுவந்திப் பொழுதென்றேன்
ஊனந் தவிர்த்த மலர்வாயி னுள்ளே நகைசெய் திஃதுரைக்கேம்
ஈனம் புகன்றா யென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. 80

கருமை யளவும் பொழிலொற்றிக் கணத்தீர் முனிவர் கலக்கமறப்
பெருமை நடத்தி னீரென்றேன் பிள்ளை நடத்தி னானென்றார்
தரும மலவிவ் விடையென்றேன் றரும விடையு முண்டெம்பால்
இருமை விழியா யென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. 81

ஒசிய விடுகு மிடையாரை யொற்றி யிருந்தே மயக்குகின்ற
வசியர் மிகநீ ரென்றேனெம் மகன்கா ணென்றார் வளர்காமப்
பசிய தொடையுற் றேனென்றேன் பட்ட மவிழ்த்துக் காட்டுநியேல்
இசையக் காண்பே மென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. 82

கலையா ளுடையீ ரொற்றிநின்றீர் காம மளித்தீர் களித்தணைவீர்
மலையா ளுமது மனையென்றேன் மருவின் மலையா ளல்லளென்றார்
அலையாண் மற்றை யவளென்றே னறியி னலையா ளல்லளுனை
இலையா மணவ தென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. 83

Koviloor Digital Library

சீலம் படைத்தீர் திருவொற்றித் தியாக ரேநீர் திண்மையிலோர்
சூலம் படைத்தீ ரென்னென்றேன் றோன்று முலகுய்ந் திடவென்றார்
ஆலங் களத்தீ ரென்றேனீ யாலம் வயிற்றா யன்றாநல்
ஏலங் குழலா யென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. 84

ஞால நிகழும் புகழொற்றி நடத்தீர் நீர்தா னூட்டமுறும்
பால ரலவோ வென்றேனைம் பாலர் பாலைப் பருவத்திற்
சால மயல்கொண் டிடவருமோர் தனிமைப் பாலர் யாமென்றே
ஏல முறுவல் புரிகின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. 85

வண்மை தருவீ ரொற்றிநகர் வாழ்வீ ரென்னை மருவீரென்
உண்மை யறியீ ரென்றேனியா முணர்ந்தே யகல நின்றதென்றார்
கண்மை யிலரோ நீரென்றேன் களமை யுடையேங் கண்மையுறல்
எண்மை நீயே யென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. 86

தவந்தங் கியசீ ரொற்றிநகர் தனைப்போ னினைத்தென் மனையடைந்தீர்
உவந்தென் மீதிற் றேவர்திரு வுள்ளந் திரும்பிற் றோவென்றேன்
சிவந்தங் கிடநின் னுள்ளமெம்மேற் றிரும்பிற் றதனைத் தேர்ந்தன்றே
இவர்ந்திங் கணைந்தா மென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ.

ஒன்னார் புரமூன் றெரிசெய்தீ ரொற்றி யுடையீ ரும்முடைய
பொன்னார் சடைமேல் வெள்ளெருக்கம் பூவை மிலைந்தீ ரென்னென்றேன்
நின்னா ரளகத் தணங்கேநீ நெட்டி மிலைந்தா யிதிலதுகீழ்
என்னா ருலக ரென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. 88

கனிமா னிதழி முலைச்சுவடு களித்தீ ரொற்றிக் காதலர்நீர்
தனிமா னேந்தி யாமென்றேன் றடங்கண் மடந்தாய் நின்முகமும்
பனிமா னேந்தி யாமென்றார் பரைமான் மருவி னீரென்றேன்
இனிமான் மருவி யென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. 89

சிறியேன் றவமோ வெனைப்பெற்றார் செய்த தவமோ வீண்டடைந்தீர்
அறியே னொற்றி யடிகேளிங் கடைந்த வாறென் னினைத்தென்றேன்
பொறிநே ருனது பொற்கலையைப் பூவார் கலையாக் குறநினைத்தே
எறிவேல் விழியா யென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. 90

அளிக்குங் குணத்தீர் திருவொற்றி யழக ரேநீ ரணிவேணி
வெளிக்கொன் முடிமே லணிந்ததுதான் விளியா விளம்பத் திரமென்றேன்
விளிக்கு மிளம்பத் திரமுமுடி மேலே மிலைந்தாம் விளங்கிழைநீ
யெளிக்கொண் டுரையே லென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ.

வாசங் கமழு மலர்ப்பூங்கா வனஞ்சூ ழொற்றி மாநகரீர்
நேசங் குறிப்ப தென்னென்றே னியோ நாமோ வுரையென்றார்
தேசம் புகழ்வீர் யானென்றேன் றிகழ்தைத் திரிதித் திரியேயாம்
ஏசங் குறிப்ப தென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. 92

Koviloor Digital Library

பேசுங் கமலப் பெண்புகழும் பெண்மை யுடைய பெண்களெலாங்
கூசும் படியிப் படியொற்றிக் கோவே வந்த தென்னென்றேன்
மாசுந் தரிநீ யிப்படிக்கு மயங்கும் படிக்கு மாதருனை
யேசும் படிக்கு மென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடி. 93

கொடியா லெயில்சூ ழொற்றியிடங் கொண்டீ ரடிகள் குருவுருவாம்
படியா லடியீ லிருந்தமறைப் பண்பை யுரைப்பீ ரென்றேனின்
மடியா லடியீ லிருந்தமறை மாண்பை வகுத்தா யெனிலதுநாம்
இடியா துரைப்பே மென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடி. 94

என்னே ருளத்தி னமர்ந்தீர்நல் லெழிலா ரொற்றி யிடையிருந்தீர்
என்னே யடிகள் பலியேற்ற லேழ்மை யுடையீர் போலுமென்றேன்
இன்னே கடலி னிடைநீடத் தேழ்மை யுடையாய் போலுமென
வின்னே யங்கொண் டுரைக்கின்றா ரிதுதான் சேடி யென்னேடி.

நல்லார் மதிக்கு மொற்றியுளீர் நண்ணு முயிர்க டொறுநின்றீர்
எல்லா மறிவீ ரென்னுடைய விச்சை யறியீர் போலுமென்றேன்
வல்லா யறிவின் மட்டொன்று மனமட் டொன்று வாய்மட்டோன்
றெல்லா மறிந்தே மென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடி. 96

மறிநீர்ச் சடையீர் சித்தெல்லாம் வல்லீ ரொற்றி மாநகரீர்
பொறிசே ருமது புகழ்பலவிற் பொருந்துங் குணமே வேண்டுமென்றேன்
குறிசே ரெமது விற்குணத்தின் குணத்தா யதனால் வேண்டுற்றாய்
எறிவேல் விழியா யென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடி. 97

ஊரூ ரிருப்பீ ரொற்றிவைத்தீ ரூர்தான் வேறுண் டோவென்றேன்
ஓரூர் வழக்கிற் கரியையிறை யுன்னி வினவு மூரொன்றோ
பேரூர் தினையூர் பெரும்புலியூர் பிடவூர் கடவூர் முதலாக
வேரூ ரனந்த மென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடி. 98

விழியொண் ணுதலீ ரொற்றியுளீர் வேதம் பிறவி யிலரென்றே
மொழியு நுமைத்தான் வேயீன்ற முத்த ரெனலிங் கென்னென்றேன்
பழியன் றணங்கே யவ்வேய்க்குப் படுமுத் தொருவித் தன்றதனால்
இழியும் பிறப்போ வென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடி. 99

விண்ணூர் பொழில்சூ ழொற்றியுளீர் விளங்குந் தாம மிகுவாசத்
தண்ணார் மலர்வே தனையொழிக்கத் தருநல் வேண்டு மெனக்கென்றேன்
பண்ணார் மொழியா யுபகாரம் பண்ணப் பகைவ ரேனுமிதை
யெண்ணா ரெண்ணா ரென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடி. 100

செம்பொன் மொழியார் முன்னரெனைச் சேர்வீ ரென்கோ திருவொற்றி
யம்பார் சடையீ ருமதாட லறியே னருளல் வேண்டுமென்றேன்
வம்பார் முலையாய் காட்டுகின்றா மன்னும் பொன்னா ரம்பலத்தே
யெம்பால் வாவென் றுரைக்கின்றா ரிதுதான் சேடி யென்னேடி. 101

Koviloor Digital Library

மைக்கோண் மிடற்றீ ரூரொற்றி வைத்தீ ருண்டோ மனையென்றேன்
கைக்க ணிறைந்த தனத்தினுந்தங் கண்ணி னிறைந்த கணவனையே
துய்க்கு மடவார் விழைவரெனச் சொல்லும் வழக்கி தறிந்திலையோ
வெய்க்கு மிடையா யென்கின்று ரிதுதான் சேடி யென்னேடீ. 102

ஆறு முகத்தார் தமையீன்ற வைந்து முகத்தா ரிவர்தமைநான்
மாறு முகத்தார் போலொற்றி வைத்தீர் பதியை யென்னென்றேன்
நாறு மலர்ப்பூங் குழலியோ நாமோ வைத்த துன்மொழிமன்
றேறு மொழியன் றென்கின்று ரிதுதான் சேடி யென்னேடீ. 103

வள்ளன் மதியோர் புகமொற்றி வள்ளா லுமது மணிச்சடையின்
வெள்ள மகண்மேற் பிள்ளைமதி விளங்க லழகி தென்றேனின்
உள்ள முகத்தும் பிள்ளைமதி யொளிகொண் முகத்தும் பிள்ளைமதி
யெள்ள லுடையா யென்கின்று ரிதுதான் சேடி யென்னேடீ. 104

உள்ளத் தனையே போலன்ப ருவக்குந் திருவா மொற்றியுளீர்
கள்ளத் தவர்போ லிவணிற்குங் கரும மென்னீ ரின்றென்றேன்
மெள்ளக் கரவு செயவோநாம் வேட மெடுத்தோ நின்சொனினை
எள்ளப் புரிந்த தென்கின்று ரிதுதான் சேடி யென்னேடீ. 105

அச்சை யடுக்குந் திருவொற்றி யவர்க்கோர் பிச்சைக் கொடுமென்றேன்
விச்சை யடுக்கும் படிநம்பான் மேவி னோர்க்கிவ் வகிலநடைப்
பிச்சை யெடுப்பே மலதுன்போற் பிச்சைக் கொடுப்பே மலவென்றே
இச்சை யெடுப்பா யுரைக்கின்று ரிதுதான் சேடி யென்னேடீ. 106

அள்ளற் பழனத் திருவொற்றி யழக ரிவர்தம் முகநோக்கி
வெள்ளச் சடையீ ருள்ளத்தே விருப்பே துரைத்தாற் றருவலென்றேன்
கொள்ளக் கிடையா வலர்குமுதங் கொண்ட வமுதங் கொணர்ந்தின்னும்
எள்ளத் தனைதா வென்கின்று ரிதுதான் சேடி யென்னேடீ. 107

விஞ்சு நெறியீ ரொற்றியுளிர் வியந்தீர் வியப்பென் னிவணென்றேன்
கஞ்ச மிரண்டு நமையங்கே கண்டு குவிந்த விரிந்திங்கே
வஞ்ச விருதா மரைமுகையை மறைக்கின் றனநின் பால்வியந்தாம்
எஞ்ச லறநா மென்கின்று ரிதுதான் சேடி யென்னேடீ. 108

அளியா ரொற்றி யுடையாருக் கன்ன நிரம்ப விடுமென்றேன்
அளியார் குழலாய் பிடியன்ன மளித்தாற் போது மாங்கதுநின்
ஒளியார் சிலம்பு சூழ்கமலத் துளதாற் கடகஞ் சூழ்கமலத்
தெளியார்க் கிடுநீ யென்கின்று ரிதுதான் சேடி யென்னேடீ. 109

விச்சைப் பெருமா னெனுமொற்றி விடங்கப் பெருமா னீர்முன்னம்
பிச்சைப் பெருமா னின்றுமணப் பிள்ளைப் பெருமா னுமென்றேன்
அச்சைப் பெறுநீ யம்மணப்பெண் ணாகி யிடையீ லையங்கொள்
இச்சைப் பெறும்பெண் ணென்கின்று ரிதுதான் சேடி யென்னேடீ.

படையம் புயத்தோன் புகமொற்றிப் பதியீ ரரவப் பணிசுமந்தீர்
புடையம் புயத்தி லென்றேன்செம் பொன்னே கொடையம் புயத்தினுநன்
னடையம் புயத்தும் சுமந்தனைநீ நானு வரவப் பணிமற்றும்
இடையம் பகத்து மென்கின்று ரிதுதான் சேடி யென்னேடீ. 111

Koviloor Digital Library

கூம்பா வொற்றி யூருடையீர் கொடும்பாம் பணிந்தீ ரென்னென்றேன்
ஓம்பா துரைக்கிற் பார்த்திடினுள் ளுன்னில் விடமேற் றுன்னிடைக்கீழ்ப்
பாம்பா வதுவே கொடும்பாம்பெம் பணிப்பாம் பதுபோற் பாம்பலவென்
றேம்பா நிற்ப விசைக்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. 112

புயல்சூ ழொற்றி யுடையீரென் புடையென் குறித்தோ போந்ததென்றேன்
கயல்சூழ் விழியாய் தனத்தவரைக் காண விரப்போ ரெதற்கென்றார்
மயல்சூழ் தனமிங் கிலையென்றேன் மறையா தெதிர்வைத் திலையென்றல்
இயல்சூ ழறமன் றென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. 113

நடவாழ் வொற்றி யுடையீர்நீர் நாக மணிந்த தழகென்றேன்
மடவா யதுநீர் நாகமென மதியே யென்மான் மனனடுங்க
விடவா யுமிழும் படநாகம் வேண்டிற் காண்டி யென்றேயென்
இடவா யருகே வருகின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. 114

கோடா வொற்றி யுடையீர்நுங் குலந்தான் யாதோ கூறுமென்றேன்
வீடார் பிரம குலந்தேவர் வேந்தர் குலநல் வினைவசியப்
பாடார் குலமோர் சக்கரத்தான் பள்ளிக் குலமெல் லாமுடையேம்
ஏடார் குழலா யென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. 115

நலமா மொற்றி யுடையீர்நீர் நல்ல வழக ரானாலுங்
குலமே துமக்கு மாலையிடக் கூடா தென்றே னின்குலம்போல்
உலகோ துறுநங் குலமொன்றோ ஓரா யிரத்தெட் டுயர்குலமிங்
கிலகா நின்ற தென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. 116

மதிலொற் றியினீர் நும்மனையான் மலையின் குலநும் மைந்தருளோர்
புதல்வர்க் கானைப் பெருங்குலமோர் புதல்வர்க் கிசையம் புலிகுலமாம்
எதிரற் றருள்வீர் நுங்குலமிங் கெதுவோ வென்றேன் மனைவியருள்
இதுமற் றொருத்திக் கென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ.

தேமாம் பொழில்சூ ழொற்றியுளீர் திகழுந் தகரக் காற்குலத்தை
பூமா லிலத்தில் விழைந்துற்றீர் புதுமை யிஃதும் புகழென்றேன்
ஆமா குலத்தி லரைக்குலத்துள் ளானைந்தே புறமற் றரைக்குலங்கொண்
டேமாந் தனைநீ யென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. 118

அனஞ்சூ ழொற்றிப் பதியுடையீ ரகில மறிய மன்றகத்தே
மனஞ்சூழ் தகரக் கால்கொண்டீர் வனப்பா மென்றே னுலகறியத்
தனஞ்சூ ழகத்தே யணங்கேநீ தானுந் தகரத் தலைகொண்டாய்
இனஞ்சூ ழழகா மென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. 119

பங்கே ருகப்பூம் பணையொற்றிப் பதியீர் நடுவம்பரமென்னும்
அங்கே யாட்டுக் காலெடுத்தீ ரழகென் றேனவ் வம்பரமேல்
இங்கே யாட்டுத் தோலெடுத்தா யாமென் றிரண்டு நீயென்றால்
எங்கே நின்சொல் லென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. 120

Koviloor Digital Library

மாணப் புகழ்சே ரொற்றியுளீர் மன்ரூர் தகர வித்தைதனைக்
காணற் கினிநான் செயலென்னே கருதி யுரைத்தல் வேண்டுமென்றேன்
வேணச் சுறுமெல் லியலேயாம் விளம்பு மொழியவ் வித்தையுனக்
கேணப் புகலு மென்கின்று ரிதுதான் சேடி யென்னேடீ. 121

நல்லா ரொற்றி யுடையீர்யா னடக்கோ வெறும்பூ வணையணைய
வல்லா லவனும் முடன்வருகோ வணையா தவலத் துயர்துய்க்கோ
செல்லா வென்சொன் னடவாதோ திருக்கூத் தெதுவோ வெனவிடைகள்
எல்லா நடவா தென்கின்று ரிதுதான் சேடி யென்னேடீ. 122

ஆட்டுத் தலைவர் நீரொற்றி யழகீ ரதனுற் சிறுவிதிக்கோர்
ஆட்டுத் தலைதந் தீரென்றே னன்று லறவோ ரறம்புகல
ஆட்டுத் தலைமுன் கொண்டதனு லஃதே பின்ன ரளித்தாமென்
றீட்டுத் தரமீந் தருள்கின்று ரிதுதான் சேடி யென்னேடீ. 123

ஒற்றிப் பெருமா னுமைவிழைந்தா ரூரில் வியப்பொன் றுண்டிரவிற்
கொற்றக் கமலம் விரிந்தொருகிழ்க் குளத்தே குமுதங் குவிந்ததென்றேன்
பொற்றைத் தனத்தீர் நுமைவிழைந்தார் புரத்தே மதியந் தேய்கின்ற
தெற்றைத் தினத்து மென்கின்று ரிதுதான் சேடி யென்னேடீ.124

இடஞ்சே ரொற்றி யுடையீர்நீ ரென்ன சாதி யினரென்றேன்
தடஞ்சேர் முலையாய் நாந்திறலாண் சாதி நீபெண் சாதியென்றூர்
விடஞ்சேர் களத்திர் நும்மொழிதான் வியப்பா மென்றே னயப்பானின்
இடஞ்சேர் மொழிதா னென்கின்று ரிதுதான் சேடி யென்னேடீ.

உடையா ரென்பா ருமையொற்றி யுடையீர் பணந்தா னுடையீரோ
நடையா யேற்கின் றீரென்றே னங்காய் நின்போ லொருபணத்தைக்
கடையா ரெனக்கீழ் வைத்தருமை காட்டேம் பணிகொள் பணங்கோடி
இடையா யுடையே மென்கின்று ரிதுதான் சேடி யென்னேடீ.

என்னு ருயிர்க்குப் பெருந்துணையா மெங்கள் பெருமா னீரிருக்கும்
நன்னு டொற்றி யன்றேதா னவில வேண்டு மென்றுரைத்தேன்
முன்னு மொற்றி யெனினுமது மொழித லழகோ தாழ்தலுயர்
வின்னா விலத்துண் டென்கின்று ரிதுதான் சேடி யென்னேடீ. 127

பெருந்தா ரணியோர் புகழொற்றிப் பெருமா னிவர்தம் முகநோக்கி
யருந்தா வமுத மனையிரிங் கடுத்த பரிசே தறையுமென்றேன்
வருந்தா திங்கே யருந்தமுத மனைய ளாக வாழ்விநெடும்
இருந்தா யடைந்தே மென்கின்று ரிதுதான் சேடி யென்னேடீ.

செம்மை வளஞ்சே ரொற்றியுளீர் திகழாக் கரித்தோ லுடுத்தீரே
உம்மை விழைந்த மடவார்க ளுடுக்கக் கலையுண் டோவென்றேன்
எம்மை யறியா யொருகலையோ விரண்டோ வனந்தங் கலைமெய்யில்
இம்மை யுடையே மென்கின்று ரிதுதான் சேடி யென்னேடீ.

கற்றைச் சடையீர் திருவொற்றிக் காவ லுடையீ ரிங்கடைந்தீர்
இற்றைப் பகலே நன்றென்றே னிற்றை யிரவே நன்றெமக்குப்
பொற்றைத் தனத்தாய் கையமுதம் பொழியா தலர்வாய்ப் புத்தமுதம்
இற்றைக் களித்தா யென்கின்று ரிதுதான் சேடி யென்னேடீ.

Koviloor Digital Library

கற்றீ ரொற்றீர் முன்பொருவான் காட்டிற் கவர்ந்தோர் நாட்டில்வளை
விற்றி ரின்றென் வளைகொண்டீர் விற்கத் துணிந்தீ ரோவென்றேன்
மற்றீர்ங் குழலாய் நீயெம்மோர் மனையின் வளையைக் கவர்ந்துகளத்
திற்றீ தணிந்தா யென்கின்று ரிதுதான் சேடி யென்னேடீ. 131

உடுக்கும் புகழா ரொற்றியுளா ருடைதா வென்றார் திகையெட்டு
முடுக்கும் பெரியீ ரெதுகண்டோ வுரைத்தீ ரென்றேன் றிகைமுழுதும்
உடுக்கும் பெரிய வரைச்சிறிய வொருமுன் றானை யான்மூடி
எடுக்குந் திரங்கண் டென்கின்று ரிதுதான் சேடி யென்னேடீ. 132

காவா யொற்றிப் பதியுடையீர் கல்லா னைக்குக் கரும்பன்று
தேவாய் மதுரை யிடத்தளித்த சித்த ரலவோ நீரென்றேன்
பாவா யிருகல் லானைக்குப் பரிவிற் கரும்பிங் கிரண்டொருநீ
ஈவா யிதுசித் தென்கின்று ரிதுதான் சேடி யென்னேடீ. 133

ஊட்டுந் திருவா ழொற்றியுளீ ருயிரை யுடலாஞ் செப்பிடைவைத்
தாட்டுந் திறத்தீர் நீரென்றே னணங்கே யிருசெப் பிடையாட்டுந்
தீட்டும் புகழன் றியுமுலகைச் சிறிதோர் செப்பி லாட்டுகின்றாய்
ஈட்டுந் திறத்தா யென்கின்று ரிதுதான் சேடி யென்னேடீ. 134

கந்த வனஞ்சூ ழொற்றியுளீர் கண்மூன் றுடையீர் வியப்பென்றேன்
வந்த வெமைத்தான் பிரிபோது மற்றை யவரைக் காண்போதுஞ்
சந்த மிருங்கண் ணிருமூன்றுந் தகுநான் கொன்றுந் தானடைந்தாய்
இந்த வியப்பென் னென்கின்று ரிதுதான் சேடி யென்னேடீ. 135

ஆழி விடையீர் திருவொற்றி யமர்ந்தீ ரிருவர்க் ககமகிழ்வான்
வீழி யதனிற் **படிக்காசு** வேண்டி யளித்தீ ராமென்றேன்
வீழி யதனிற் படிக்காசு வேண்டா தளித்தா யளவொன்றை
ஏழி லகற்றி யென்கின்று ரிதுதான் சேடி யென்னேடீ. 136

உற்ற விடத்தே பெருந்துணையா மொற்றிப் பெருமா னும்புகழைக்
கற்ற விடத்தே முக்கனியுங் கரும்பு மமுதுங் கயவாவோ
மற்ற விடச்சீ ரென்னென்றேன் மற்றை யுபய விடமுமுதல்
எற்ற விடமே யென்கின்று ரிதுதான் சேடி யென்னேடீ. 137

யான்செய் தவத்தின் பெரும்பயனே யென்னு ரமுதே யென்றுணையே
வான்செய் யரசே திருவொற்றி வள்ளால் வந்த தென்னென்றேன்
மான்செய் விழிப்பெண் ணேநீயாண் வடிவா னதுகேட் டுள்ளம்வியந்
தேன்கண் டிடவே யென்கின்று ரிதுதான் சேடி யென்னேடீ. 138

கருணைக் கடலே யென்னிரண்டு கண்ணே முக்கட் கரும்பேசெவ்
வருணப் பொருப்பே வளரொற்றி வள்ளன் மணியே மகிழ்ந்தணையத்
தருணப் பருவ மிஃதென்றேன் றவிரன் றெனக்காட் டியதுன்றன்
இருணச் சளக மென்கின்று ரிதுதான் சேடி யென்னேடீ. 139

Koviloor Digital Library

காவிக் களங்கொள் கனியேயென் கண்ணுண் மணியே யணியேயென்
ஆவித் துணையே திருவொற்றி யரசே யடைந்த தென்னென்றேன்
பூவிற் பொலியுங் குழலாய்நீ பொன்னி னுயர்ந்தா யெனக்கேட்டுன்
ஈவைக் கருதி யென்கின்று ரிதுதான் சேடி யென்னேடீ. 140

கண்ணு மனமுங் களிக்குமெழிற் கண்மூன் றுடையீர் கலையுடையீர்
நண்ணுந் திருவொ ழொற்றியுளீர் நடஞ்செய் வல்லீர் நீரென்றேன்
வண்ண முடையாய் நின்றனைப்போன் மலர்வாய் நடஞ்செய் வல்லோமோ
எண்ண வியப்பா மென்கின்று ரிதுதான் சேடி யென்னேடீ. 141

தாங்கும் விடைமே லழகிரென் றன்னைக் கலந்துந் திருவொற்றி
ஓங்குந் தளியீ லொளித்தீர்நீ ரொளிப்பில் வல்ல ராமென்றேன்
வாங்கு நுதலாய் நீயுமெனை மருவிக் கலந்து மலர்த்தளியில்
ஈங்கின் றொளித்தா யென்கின்று ரிதுதான் சேடி யென்னேடீ. 142

அம்மை யடுத்த திருமேனி யழகீ ரொற்றி யணிநகரீர்
உம்மை யடுத்தோர் மிகவாட்ட முறுத லழகோ வென் றுரைத்தேன்
நம்மை யடுத்தாய் நமையடுத்தோர் நம்போ லுறுவ ரன்றெனிலே
தெம்மை யடுத்த தென்கின்று ரிதுதான் சேடி யென்னேடீ. 143

உண்கண் மகிழ்வா ளளிமிழற்று மொற்றி நகரீ ரொருமூன்று
கண்க ளுடையீ ரென்காதல் கண்டு மிரங்கி ரென்னென்றேன்
பண்கொண் மொழியாய் நின்காதல் பன்னுண் சுவைசெய் பழம்போலும்
எண்கொண் டிருந்த தென்கின்று ரிதுதான் சேடி யென்னேடீ. 144

வணங்கே ழிலங்குஞ் செஞ்சடையீர் வளஞ்சே ரொற்றி மாநகரீர்
குணங்கேழ் மிடற்றீர் பாலிருளைக் கொண்டீர் கொள்கை யென்னென்றேன்
அணங்கே யொருபா லன்றிநின்போ லெம்பா லிருள்கொண் டிடச்சற்றும்
இணங்கே மிணங்கே மென்கின்று ரிதுதான் சேடி யென்னேடீ. 145

கரும்பி லினியீ ரென்னிரண்டு கண்க ளனையீர் கறைமிடற்றீர்
பெரும்பை யணியீர் திருவொற்றிப் பெரியீ ரெதுநும் பெயரென்றேன்
அரும்பன் முலையாய் பிறர்கேட்க வறைந்தா லளிப்பீ ரெனச்சூழ்வர்
இரும்பொ னிலையே யென்கின்று ரிதுதான் சேடி யென்னேடீ. 146

நிலையைத் தவரூர் தொழுமொற்றி நிமலப் பெருமா னீர்முன்னம்
மலையைச் சிலையாக் கொண்டீர்நும் மாவல் லபமற் புதமென்றேன்
வலையத் தறியாச் சிறுவர்களு மலையைச் சிலையாக் கொள்வர்களீ
திலையற் புதந்தா னென்கின்று ரிதுதான் சேடி யென்னேடீ. 147

உதயச் சுடரே யனையீர்நல் லொற்றி யுடையீ ரென்னுடைய
இதயத் தமர்ந்தீ ரென்னேயென் னெண்ண மறியீ ரோவென்றேன்
சுதையிற் றிகழ்வா யறிந்தன்றே துறந்து வெளிப்பட் டெதிரடைந்தாம்
இதையுற் றறிநீ யென்கின்று ரிதுதான் சேடி யென்னேடீ. 148

Koviloor Digital Library

புரக்குங் குணத்தீர் திருவொற்றிப் புனித ரேநீர் போர்க்களிற்றை
உரக்குங் கலக்கம் பெறவுரித்தீ ருள்ளத் திரக்க மென்னென்றேன்
கரக்கு மிடையாய் நீகளிற்றின் கன்றைக் கலக்கம் புரிந்தனைநின்
இரக்க மிதுவோ வென்கின்று ரிதுதான் சேடி யென்னேடி.. 149

பதங்கூ றொற்றிப் பதியீர்நீர் பசுவி லேறும் பரிசதுதான்
விதங்கூ றறத்தின் விதிதானோ விலக்கோ விளம்பல் வேண்டுமென்றேன்
இதங்கூ றிடுநற் பசுங் கன்றை நீயுமேறி யிடுகின்றாய்
இதங்கூ றிடுக வென்கின்று ரிதுதான் சேடி யென்னேடி. 150

யோக முடையார் புகழொற்றி யூரிற் பரம யோகியராந்
தாக முடையா ரிவர்தமக்குத் தண்ணீர் தரநின் றனையழைத்தேன்
போக முடையாய் புறத்தண்ணீர் புரிந்து விரும்பா மகத்தண்ணீர்
ஈக மகிழ்வி னென்கின்று ரிதுதான் சேடி யென்னேடி. 151

வளநீ ரொற்றி வாணரிவர் வந்தார் நின்றார் மாதேநாம்
உளநீர்த் தாக மாற்றுறுநீ ருதவ வேண்டு மென்றார்நான்
குளநீ ரொன்றே யுளதென்றேன் கொள்ளே மிடைமேற் கொளுமிந்த
இளநீர் தருக வென்கின்று ரிதுதான் சேடி யென்னேடி.. 152

மெய்ந்நீ ரொற்றி வாணரிவர் வெம்மை யுளநீர் வேண்டுமென்றார்
அந்நீ ரிலைநீர் தண்ணீர்தா னருந்தி லாகா தோவென்றேன்
முந்நீர் தனையை யனையீரிம் முதுநீ ருண்டு தலைக்கேறிற்
றிந்நீர் காண்டி யென்கின்று ரிதுதான் சேடி யென்னேடி. 153

சீலஞ் சேர்ந்த வொற்றியுளீர் சிறிதாம் பஞ்ச காலத்துங்
கோலஞ் சார்ந்து பிச்சைகொளக் குறித்து வருவீ ரென்னென்றேன்
காலம் போகும் வார்த்தை நிற்கும் கண்டா யிதுசொற் கடனுமோ
ஏலங் குழலா யென்கின்று ரிதுதான் சேடி யென்னேடி. 154

ஊற்றூர் சடையீ ரொற்றியுளீ ரூரூ ரிரக்கத் துணிவுற்றீர்
நீற்றால் விளங்குந் திருமேனி நோர்ந்திங் கிளைத்தீர் நீரென்றேன்
சோற்று லிளைத்தே மன்றும.து சொல்லா லிளைத்தே மின்றினிநாம்
ஏற்று லிகழ்வே யென்கின்று ரிதுதான் சேடி யென்னேடி. 155

நீரை விழுங்குஞ் சடையுடையீ ருளது நுமக்கு நீரூருந்
தேரை விழுங்கும் பசுவென்றேன் செறிநின் கலைக்கு ளொன்றுளது
காரை விழுங்கு மெமதுபசுக் கன்றின் றேரை நீர்த்தேரை
ஈர விழுங்கு மென்கின்று ரிதுதான் சேடி யென்னேடி. 156

பொன்னேர் மணிமன் றுடையீர்நீர் புரிந்த தெதுவெம் புடையென்றேன்
இன்னே யுரைத்தற் கஞ்சுதுமென் றுரென் னென்றே னியம்புதுமேன்
மின்னே நினது நடைப்பகையா மிருகம் பறவை தமைக்குறிக்கும்
என்னே யுரைப்ப தென்கின்று ரிதுதான் சேடி யென்னேடி. 157

அடையார் புரஞ்செற் றம்பலத்தே யாடு மழகீ ரெண்பதிற்றுக்
கடையா முடலின் றலைகொண்டீர் கரமொன் றினிலற் புதமென்றேன்
உடையாத் தலைமேற் றலையாக வுன்கை யீரைஞ் ஞூறுகொண்ட
திடையா வளைக்கே யென்கின்று ரிதுதான் சேடி யென்னேடி. 158

Koviloor Digital Library

தேவர்க் கரிய வானந்தத் திருத்தாண் டவஞ்செய் பெருமானீர்
மேவக் குகுகு குகுகுவணி வேணி யுடையீ ராமென்றேன்
தாவக் குகுகு குகுகுகுகுத் தாமே யைந்து விளங்கவணி
ஏவற் குணத்தா யென்கின்று ரிதுதான் சேடி யென்னேடீ. 159

கொன்றைச் சடையீர் கொடுங்கோளூர் குறித்தீர் வருதற் கஞ்சுவல்யான்
ஒன்றப் பெருங்கோ ளென்மீது முரைப்பா ருண்டென் றுணர்ந்தென்றேன்
நன்றப் படியேற் கோளிலியா நகரு முடையே நங்காய்நீ
இன்றச் சுறலென் னென்கின்று ரிதுதான் சேடி யென்னேடீ. 160

புரியுஞ் சடையீ ரமர்ந்திடுமூர் புலியூ ரெனிலெம் போல்வார்க்கும்
உரியும் புலித்தோ லுடையீர்போ லுறுதற் கியலு மோவென்றேன்
திரியும் புலியூ ரன்றுநின்போற் றெரிவை யரைக்கண் டிடிற்பயந்தே
இரியும் புலியூ ரென்கின்று ரிதுதான் சேடி யென்னேடீ. 161

தெவ்வூர் பொடிக்குஞ் சிறுநகையீத் தேவர் தமைநா னீரிருத்தல்
எவ்வூ ரென்றே னகைத்தணங்கே யேழூர் நாலூ ரென்றூர்பின்
அவ்வூர்த் தொகையி னிருத்தலரி தாமென் றேன்மற் றதிலோவ்வூர்
இவ்வூ ரெடுத்தா யென்கின்று ரிதுதான் சேடி யென்னேடீ. 162

மணங்கொ ளிதழிச் சடையீர்நீர் வாழும் பதியா தென்றேனின்
குணங்கொண் மொழிகேட் டோரளவு குறைந்த குயிலாம் பதியென்றூர்
அணங்கின் மறையூ ராமென்றே னஃதன் றருளோத் தூரிஃதும்
இணங்க வுடையே மென்கின்று ரிதுதான் சேடி யென்னேடீ. 163

ஆற்றுச் சடையா ரிவர்பலியென் றடைந்தார் நுமதூரி யாதென்றேன்
சோற்றுத் துறையென் றூர்நுமக்குச் சோற்றுக் கருப்பேன் சொலுமென்றேன்
தோற்றுத் திரிவே மன்றுநின்போற் சொல்லுங் கருப்பென் றுலகியம்ப
ஏற்றுத் திரியே மென்கின்று ரிதுதான் சேடி யென்னேடீ. 164

ஓங்குஞ் சடையீர் நெல்வாய லுடையே மென்றீ ருடையீரேற்
றுங்கும் புகழ்நும் மிடைச்சிறுமை சார்ந்த தெவனீர் சாற்றுமென்றேன்
ஏங்கும் படிநும் மிடைச்சிறுமை யெய்திற் றலதீண் டெமக்கின்றால்
ஈங்குங் காண்டி ரென்கின்று ரிதுதான் சேடி யென்னேடீ. 165

மைய லழகீ ரூரொற்றி வைத்தீ ருளவோ மனையென்றேன்
கையி னிறைந்த தனத்தினுந்நங் கண்ணி னிறைந்த கணவனையே
மெய்யின் விழைவா ரொருமனையோ விளம்பின் மனையு மிகப்பலவாம்
எய்யி லிடையா யென்கின்று ரிதுதான் சேடி யென்னேடீ. 166

திருச்சிற்றம்பலம்

முதல் திருமுறை முற்றிற்று.

Koviloor Digital Library

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

அருட்பெருஞ்ஜோதி

திருவருட்பா

இரண்டாவது திருமுறை

1. புண்ணிய விளக்கம்

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

பாடற் கினிய வாக்களிக்கும் பாலுஞ் சோறும் பரிந்தளிக்கும்
கூடற் கினிய அடியவர்தங் கூட்ட மளிக்கும் குணமளிக்கும்
ஆடற் கினிய நெஞ்சேநீ யஞ்சே லென்மே லாணைகண்டாய்
தேடற் கினிய சீரளிக்குஞ் சிவாய நமவென் றிடுநீறே. 1

கருமா லகற்றும் பிறப்பதனைக் களையு நெறியுங் காட்டுவிக்கும்
பெருமா லதனான் மயக்குகின்ற பேதை மடவார் நசையறுக்கும்
அருமா லுழந்த நெஞ்சேநீ யஞ்சே லென்மே லாணைகண்டாய்
திருமா லயனுந் தொழுதேத்துஞ் சிவாய நமவென் றிடுநீறே.

வெய்ய வினையின் வேரறுக்கு மெய்ம்மை ஞான வீட்டிலடைந்
துய்ய வமல நெறிகாட்டு முன்னற் கரிய வுணர்வளிக்கும்
ஐய மடைந்த நெஞ்சேநீ யஞ்சே லென்மே லாணைகண்டாய்
செய்ய மலர்க்கண் மால்போற்றுஞ் சிவாய நமவென் றிடுநீறே.

Koviloor Digital Library

கோல மலர்த்தாட் டுணைவழுத்துங் குலத்தொண் டடையக் கூட்டுவிக்கும்
நீல மணிகண் டப்பெருமா னிலையை யறிவித் தருளளிக்கும்
ஆல வினையா னெஞ்சேநீ யஞ்சே லென்மே லாணைகண்டாய்
சீல மளிக்குந் திருவளிக்குஞ் சிவாய நமவென் றிடுநீறே. 4

வஞ்சப் புலக்கா டெறியவருள் வாளு மளிக்கு மகிழ்வளிக்கும்
கஞ்சத் தவனுங் கரியவனுங் காணற் கரிய கழலளிக்கும்
அஞ்சிற் புகுந்த நெஞ்சேநீ யஞ்சே லென்மே லாணைகண்டாய்
செஞ்சொற் புலவர் புகழ்ந்தேத்துஞ் சிவாய நமவென் றிடுநீறே.

கண்கொண் மணியை முக்கனியைக் கரும்பைக் கரும்பின் கட்டிதனை
விண்கொ ளமுதை நம்மரசை விடைமே னமக்குத் தோற்றுவிக்கும்
அண்கொள் வினையா னெஞ்சேநீ யஞ்சே லென்மே லாணைகண்டாய்
திண்கொண் முனிவர் சுரர்புகழுஞ் சிவாய நமவென் றிடுநீறே. 6

நோயை யறுக்கும் பெருமருந்தை நோக்கற் கரிய நுண்மைதனைத்
தூய விடைமேல் வருநமது சொந்தத் துணையைத் தோற்றுவிக்கும்
ஆய வினையா னெஞ்சேநீ யஞ்சே லென்மே லாணைகண்டாய்
சேய வயன்மா லுடரிதாஞ் சிவாய நமவென் றிடுநீறே. 7

எண்ண வினிய வின்னமுதை யின்பக் கருணைப் பெருங்கடலை
உண்ண முடியாச் செழுந்தேனை யொருமால் விடைமேற் காட்டுவிக்கும்
அண்ண வினையா னெஞ்சேநீ யஞ்சே லென்மே லாணைகண்டாய்
திண்ண மளிக்குந் திறமளிக்குஞ் சிவாய நமவென் றிடுநீறே. 8

சிந்தா மணியை நாம்பலநாள் தேடி யெடுத்த செல்வமதை
இந்தார் வேணி முடிக்கனியை யின்றே விடைமேல் வரச்செயுங்காண்
அந்தோ வினையா னெஞ்சேநீ யஞ்சே லென்மே லாணைகண்டாய்
செந்தா மரையோன் றொழுதேத்துஞ் சிவாய நமவென் றிடுநீறே.

உள்ளத் தெழுந்த மகிழ்வைநமக் குற்ற துணையை யுள்ளுறவைக்
கொள்ளக் கிடையா மாணிக்கக் கொழுந்தை விடைமேற் கூட்டுவிக்கும்
அள்ளற் றுயரா னெஞ்சேநீ யஞ்சே லென்மே லாணைகண்டாய்
தெள்ளக் கடலான் புகழ்ந்தேத்துஞ் சிவாய நமவென் றிடுநீறே.

உற்ற விடத்தி லுதவநமக் குடையோர் வைத்த வைப்பதனைக்
கற்ற மனத்திற் புகுங்கருணைக் கனியை விடைமேற் காட்டுவிக்கும்
அற்ற மடைந்த நெஞ்சேநீ யஞ்சே லென்மே லாணைகண்டாய்
செற்ற மகற்றித் திறலளிக்குஞ் சிவாய நமவென் றிடுநீறே. 11

திருச்சிற்றம்பலம்

Koviloor Digital Library

2. அருள் நாம விளக்கம்

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

வாங்கு வின்னுதன் மங்கையர் விழியான்
மயங்கி வஞ்சர்பால் வருந்திநா டோறும்
ஏங்கு கின்றதி லென்பயன் கண்டாய்
எழில்கொ ளொற்றியூர்க் கென்னுடன் போந்து
தேங்கு லாவுசெங் கரும்பினு மினிதாய்த்
தித்தித் தன்பர்தஞ் சித்தத்துள் ளூறி
ஓங்கும் ஓம்சிவ சண்முக சிவவோம்
ஓம்சி வாயவென் றுன்னுதி மனனே. 1

தவம தின்றிவன் மங்கையர் முயக்காற்
றரும மின்றுவஞ் சகர்கடுஞ் சார்வால்
இவகை யான்மிக வருந்துறி லென்னும்
எழில்கொ ளொற்றியூர்க் கென்னுடன் போந்து
பவம தோட்டிநல் லானந்த வுருவாம்
பாங்கு காட்டிநற் பதந்தரு மடியார்
உவகை யோம்சிவ சண்முக சிவவோம்
ஓம்சி வாயவென் றுன்னுதி மனனே. 2

மின்னு நுண்ணிடைப் பெண்பெரும் பேய்கள்
வெய்ய நீர்க்குழி விழுந்தது போக
இன்னும் வீழ்கலை யுனக்கொன்று சொல்வேன்
எழில்கொ ளொற்றியூர்க் கென்னுடன் போந்து
பொன்னு லாவிய புயமுடை யானும்
புகழு லாவிய பூவுடை யானும்
உன்னும் ஓம்சிவ சண்முக சிவவோம்
ஓம்சி வாயவென் றுன்னுதி மனனே. 3

பொன்றும் வாழ்க்கையை நிலையென நினைத்தே
புலைய மங்கையர் புழுநெளி யளற்றில்
என்றும் வீழ்ந்துழன் மடமையை விடுத்தே
யெழில்கொ ளொற்றியூர்க் கென்னுடன் போந்து
துன்று தீம்பலாச் சுளையினு மினிப்பாய்த்
தொண்டர் தங்களுச் சுவைபெற வூறி
ஒன்றும் ஓம்சிவ சண்முக சிவவோம்
ஓம்சி வாயவென் றுன்னுதி மனனே. 4

வரைக்கு நேர்முலை மங்கையர் மயலான்
மயங்கி வஞ்சரால் வருத்தமுற் றனராம்
இரைக்கு மாக்கட லிடைவிழுந் தயரேல்
எழில்கொ ளொற்றியூர்க் கென்னுடன் போந்து

Koviloor Digital Library

கரைக்குந் தெள்ளிய வமுதமோ தேனோ
கனிகொ லோவெனக் கனிவுட னுயர்ந்தோர்
உரைக்கும் ஓம்சிவ சண்முக சிவவோம்
ஓம்சி வாயவென் றுன்னுதி மனனே. 5

வாது செய்ம்மட வார்தமை விழைந்தாய்
மறலி வந்துனை வாவென வழைக்கில்
ஏது செய்வையோ வேழைநீ யந்தோ
எழில்கொ ளொற்றியூர்க் கென்னுடன் போந்து
போது வைகிய நான்முகன் மகவான்
புணரி வைகிய பூமகள் கொழுநன்
ஓதும் ஓம்சிவ சண்முக சிவவோம்
ஓம்சி வாயவென் றுன்னுதி மனனே. 6

நண்ணு மங்கையர் புழுமலக் குழியில்
நாளும் வீழ்வுற்று நலிந்திடே னிதமாய்
எண்ணு மென்மொழி குருமொழி யாக
எண்ணி ஒற்றியூர்க் கென்னுடன் போந்து
பண்ணு மின்சுவை யமுதினு மினிதாய்ப்
பத்தர் நாடொறுஞ் சித்தமுள் ளூற
உண்ணும் ஓம்சிவ சண்முக சிவவோம்
ஓம்சி வாயவென் றுன்னுதி மனனே. 7

பந்த வண்ணமா மடந்தையர் மயக்காற்
பசையி னெஞ்சராற் பரிவுறு கின்றாய்
எந்த வண்ணநீ யுய்வண மந்தோ
எழில்கொ ளொற்றியூர்க் கென்னுடன் போந்து
சந்த மாம்புக ழடியரிற் கூடிச்
சனன மென்னுமோர் சாகர நீந்தி
உந்த ஓம்சிவ சண்முக சிவவோம்
ஓம்சி வாயவென் றுன்னுதி மனனே. 8

மட்டின் மங்கையர் கொங்கையை விழைந்தாய்
மட்டி லாததோர் வன்றுய ரடைந்தாய்
எட்டி யன்னர்பா லிரந்தலை கின்றாய்
எழில்கொ ளொற்றியூர்க் கென்னுடன் போந்து
தட்டி லாதநற் றவத்தவர் வானோர்
சார்ந்துங் காண்கிலாத் தற்பரம் பொருளை
ஒட்டி ஓம்சிவ சண்முக சிவவோம்
ஓம்சி வாயவென் றுன்னுதி மனனே. 9

நிலவு மொண்மதி முகத்தியர்க் குழன்றாய்
நீச நெஞ்சர்த நெடுங்கடை தனிற்போய்
இலவு காத்தனை யென்னைநின் மதியோ
எழில்கொ ளொற்றியூர்க் கென்னுடன் போந்து

Koviloor Digital Library

பலவு மாய்ந்துநன் குண்மையை யுணர்ந்த
பத்த ருள்ளகப் பதுமங்க டோறும்
உலவும் ஓம்சிவ சண்முக சிவவோம்
ஓம்சி வாயவென் றுன்னுதி மனனே. 10

திருச்சிற்றம்பலம்

3. ஸ்ரீ சிவஷண்முகநாம ஸங்கீர்த்தனலகரி

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

பழுது நேர்கின்ற வஞ்சகர் கடைவாய்ப்
பற்றி நின்றதிற் பயனெது கண்டாய்
பொழுது போகின்றது எழுதியென் னெஞ்சே
பொழில்கொள் ஒற்றியம் புரிதனக் கேகி
தொழுது **சண்முக** சிவசிவ வெனநந்
தோன்ற லார்தமைத் துதித்தவர் திருமுன்
பழுது சொல்லுதும் ஐயுற லென்மேல்
ஆணை காணவ ருள்பெற லாமே. 1

சூது நேர்கின்ற மூலச்சியர் பொருட்டாய்ச்
சுற்றி நின்றதிற் சுகமெது கண்டாய்
போது போகின்றது எழுதியென் னெஞ்சே
பொழில்கொள் ஒற்றியம் புரிதனக் கேகி
ஓது சண்முக சிவசிவ வெனவே
உன்னி னெக்குவிட் டுருகிநந் துயராம்
ஆது சொல்லுதும் ஐயுற லென்மேல்
ஆணை காணவ ருள்பெற லாமே. 2

ஞாலஞ் செல்கின்ற வஞ்சகர் கடைவாய்
நண்ணி நின்றதில் நலமெது கண்டாய்
காலஞ் செல்கின்றது எழுதியென் னெஞ்சே
கருதும் ஒற்றியங் கடிநகர்க் கேகிக்
கோலஞ் செய்யருட் சண்முக சிவவோங்
குழுக வோமெனக் கூவிநந் துயராம்
ஆலஞ் சொல்லுதும் ஐயுற லென்மேல்
ஆணை காணவ ருள் பெறலாமே. 3

மருட்டி வஞ்சக மதித்திடுங் கொடியார்
வாயல் காத்தின்னும் வருந்திலென் பயனே
இருட்டிப் போகின்ற தெழுதியென் னெஞ்சே
எழில்கொ ளொற்றியூ ரெனுந்தலத் தேகித்
தெருட்டி றஞ்செயுஞ் சண்முக சிவவோஞ்
சிவந மாவெனச் செப்பிநந் துயராம்
அரிட்டை யோதுது மையுற லென்மே
லாணை காணவ ருள்பெற லாமே. 4

Koviloor Digital Library

இல்லை யென்பதே பொருளெனக் கொண்டோர்
 ஈன வாயிலில் இடர்ப்படு கின்றாய்
எல்லை செல்கின்ற தெழுதியென் னெஞ்சே
 எழில்கொ ளொற்றியூ ரெனுந்தலத் தேகித்
தொல்லை யோஞ்சிவ சண்முக சிவவோந்
 தூய வென்றடி தொழுதுநா முற்ற
அல்ல லோதுது மையுற லென்மே
 லாணை காணவ ரருள்பெற லாமே. 5

கரவு நெஞ்சினர் கடைத்தலைக் குழன்றாய்
 கலங்கி யின்னுநீ கலுழ்ந்திடிற் கடிதே
இரவு போந்திடு மெழுதியென் னெஞ்சே
 எழில்கொ ளொற்றியூ ரெனுந்தலத் தேகிப்
பரவு சண்முக சிவசிவ சிவவோம்
 பரசு யம்புசங் கரசம்பு நமவோம்
அரவென் றேத்துது மையுற லென்மே
 லாணை காணவ ரருள் பெறலாமே. 6

ஏய்ந்து வஞ்சகர் கடைத்தலை வருந்தி
 யிருக்கின் றாயினி யிச்சிறு பொழுதுஞ்
சாய்ந்து போகின்ற தெழுதியென் னெஞ்சே
 தகைகொ ளொற்றியந் தலத்தினுக் கேகி
வாய்ந்து சண்முக நமசிவ சிவவோம்
 வரசு யம்புசங் கரசம்பு வெனவே
ஆய்ந்து போற்றுது மையுற லென்மே
 லாணை காணவ ரருள்பெற லாமே. 7

ஈர்ந்த நெஞ்சின ரிடந்தனி லிருந்தே
 இடர்கொண் டாயினி யிச்சிறு பொழுதும்
பேர்ந்து போகின்ற தெழுதியென் னெஞ்சே
 பிறங்கு மொற்றியம் பெருநகர்க் கேகி
ஓர்ந்து சண்முக **சரவண பவவோம்**
 ஓம்சு யம்புசங் கரசம்பு வெனவே
ஆர்ந்து போற்றுது மையுற லென்மே
 லாணை காணவ ரருள்பெற லாமே. 8

கமைப்பி னீகிலா வஞ்சகர் கடையைக்
 காத்தி ருக்கலை கடுகியிப் பொழுதும்
இமைப்பிற் போகின்ற தெழுதியென் னெஞ்சே
 எழில்கொ ளொற்றியூ ரெனுந்தலத் தேகி
எமைப்பு ரந்தசண் முகசிவ சிவவோம்
 இறைவ சங்கர அரகர வெனவே
அமைப்பி னேத்துது மையுற லென்மே
 லாணை காணவ ரருள்பெற லாமே. 9

Koviloor Digital Library

உறைந்து வஞ்சர்பால் குறையிரந் தவமே
யுழல்கின் ருயினி யுரைக்குமிப் பொழுதுங்
குறைந்து போகின்ற தெழுதியென் னெஞ்சே
குலவு மொற்றியங் கோநகர்க் கேகி
நிறைந்த சண்முக குருநம சிவவோம்
நிமல சிற்பர வரகர வெனவே
அறைந்து போற்றுது மையுற லென்மே
லாணை காணவ ரருள்பெற லாமே. 10

திருச்சிற்றம்பலம்

4. நமச்சிவாய ஸங்கீர்த்தனலகரி

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

சொல்ல வாவிய தொண்டர்தம் மனத்திற்
சுதந்த ரங்கொடு தோன்றிய துணையைக்
கல்ல வாவிய வேழையே னெஞ்சுங்
கரைந்து வந்திடக் கலந்திடுங் களிப்பைச்
செல்ல வாவிய பொழிற்றிரு வொற்றித்
தேனைத் தில்லைச்சிற் றம்பலத் தாடும்
நல்ல வாழ்வினை நான்மறைப் பொருளை
நமச்சி வாயத்தை நான் மறவேனே! 1

அட்ட மூர்த்தம தாகிய பொருளை
அண்ட ராதியோ ரறிகிலாத் திறத்தை
விட்ட வேட்கையர்க் கங்கையிற் கனியை
வேத மூலத்தை வித்தக விளைவை
எட்ட ரும்பர மானந்த நிறைவை
எங்கு மாகிநின் றிலங்கிய வொளியை
நட்ட மாடிய நடனநா யகத்தை
நமச்சி வாயத்தை நான்மற வேனே. 2

உம்பர் வான்றுய ரொழித்தருள் சிவத்தை
உலகெ லாம்புக ழுத்தமப் பொருளைத்
தம்ப மாயகி லாண்டமுந் தாங்குஞ்
சம்பு வைச்சிவ தருமத்தின் பயனைப்
பம்பு சீரருள் பொழிதரு முகிலைப்
பரம ஞானத்தைப் பரமசிற் சுகத்தை
நம்பி னோர்களை வாழ்விக்கு நலத்தை
நமச்சி வாயத்தை நான்மற வேனே. 3

மாலி னுச்சிமேல் வதிந்தமா மணியை
வழுத்து நாவக மணக்குநன் மலரைப்
பாலி னுள்ளினித் தோங்கிய சுவையைப்
பத்தர் தம்முளம் பரிசிக்கும் பழத்தை

Koviloor Digital Library

ஆலி னேங்கிய வானந்தக் கடலை
அம்ப லத்திலா மமுதை வேதங்கள்
நாலி னெற்றியூ ரமர்ந்திடுஞ் சிவத்தை
நமச்சி வாயத்தை நான்மற வேனே. 4

உண்ணி றைந்தெனை யொளித்திடு மொளியை
உண்ண வுண்ணமே லுவட்டுறு நறவைக்
கண்ணி றைந்ததோர் காட்சியை யாவுங்
கடந்த மேலவர் கலந்திடு முறவை
எண்ணி றைந்தமா லயன்முதற் றேவர்
யாருங் காண்கிலா வின்பத்தி னிறைவை
நண்ணி யொற்றியூ ரமர்ந்தருள் சிவத்தை
நமச்சி வாயத்தை நான்மற வேனே. 5

திக்கு மாறினு மெழுகடற் புவிமேற்
சென்று மாறினுஞ் சேண்விளங் கொளிகள்
உக்கு மாறினும் பெயலின்றி யுலகில்
உணவு மாறினும் புவிகளோ ரேழும்
மிக்கு மாறினு மண்டங்க ளெல்லாம்
விழுந்து மாறினும் வேதங்க ளுணரா
நக்க னெம்பிரா னருட்டிருப் பெயராம்
நமச்சி வாயத்தை நான்மற வேனே. 6

பெற்ற தாய்தனை மகமறந் தாலும்
பிள்ளை யைப்பெறுந் தாய்மறந் தாலும்
உற்ற தேகத்தை யுயிர்மறந் தாலும்
உயிரை மேவிய வுடன்மறந் தாலுங்
கற்ற நெஞ்சகங் கலைமறந் தாலுங்
கண்கள் நின்றிமைப் பதுமறந் தாலும்
நற்ற வத்தவ ருள்ளிருந் தோங்கும்
நமச்சி வாயத்தை நான்மற வேனே. 7

உடையு டுத்திட இடைமறந் தாலும்
உலகு ளோர்பசிக் குணமறந் தாலும்
படையெ டுத்தவர் படைமறந் தாலும்
பரவை தானலைப் பதுமறந் தாலும்
புடைய டுத்தவர் தமைமறந் தாலும்
பொன்னை வைத்தவப் புதைமறந் தாலும்
நடைய டுத்தவர் வழிமறந் தாலும்
நமச்சி வாயத்தை நான்மற வேனே. 8

வன்மை செய்திடும் வறுமைவந் தாலும்
மகிழ்வு செய்பெரு வாழ்வுவந் தாலும்
புன்மை மங்கையர் புணர்ச்சிநேர்ந் தாலும்
பொருந்தி னாலுநின் றாலுஞ்சென் றாலுங்

Koviloor Digital Library

தன்மை யில்லவர் சார்பிருந் தாலுஞ்
சான்ற மேலவர் தமையடைந் தாலும்
நன்மை யென்பன யாவையு மளிக்கும்
நமச்சி வாயத்தை நான்மற வேனே. 9

இன்னும் பற்பல நாளிருந் தாலும்
இக்க ணந்தனி லேயிறந் தாலுந்
துன்னும் வான்கதிக் கேபுகுந் தாலுஞ்
சோர்ந்து மாநர கத்துழன் றாலும்
என்ன மேலுமிங் கெனக்குவந் தாலும்
எம்பிரா னெனக்கு யாதுசெய் தாலும்
நன்னர் நெஞ்சக நாடிநின் றோங்கும்
நமச்சி வாயத்தை நான்மற வேனே! 10

திருச்சிற்றம்பலம்

5. நற்றுணை விளக்கம்

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

எஞ்ச வேண்டிய வைம்புலப் பகையால்
இடர்கொண் டோய்ந்தனை யென்னினு மினிநீ
அஞ்ச வேண்டிய தென்னையென் நெஞ்சே!
அஞ்ச லஞ்சல்கா ணருமறை நான்கும்
விஞ்ச வேண்டியு மாலவன் மலரோன்
விளங்க வேண்டியு மிடற்றின்க ணமுதாம்
நஞ்சை வேண்டிய நாதன்றன் னுமம்
நமச்சி வாயங்கா ணும்பெறுந் துணையே! 1

காவின் மன்னவ னெதிர்க்கினுங் காமன்
கணைக ளேவினுங் காலனே வரினும்
பூவின் மன்னவன் சீறினுந் திருமால்
போர்க்கு நேரினும் பொருளல நெஞ்சே!
ஓவின் மாதுய ரெற்றினுக் கடைந்தாய்
ஒன்று மஞ்சனீ யுளவறிந் திலையோ
நாவின் மன்னரைக் கரைதனிற் சேர்த்த
நமச்சி வாயங்கா ணும்பெறுந் துணையே! 2

நீட்ட முற்றதோர் வஞ்சக மடவார்
நெடுங்கண் வேல்பட நிலையது கலங்கி
வாட்ட முற்றனை யாயினு மஞ்சேல்
வாழி நெஞ்சமே! மலர்க்கணை தொடுப்பான்
கோட்ட முற்றதோர் நிலையொடு நின்ற
கொடிய காமனைக் கொளுவிய நுதற்றீ
நாட்ட முற்றதோர் நாதன்றன் னுமம்
நமச்சி வாயங்கா ணும்பெறுந் துணையே. 3

Koviloor Digital Library

எம்மை வாட்டுமிப் பசியினுக் கெவர்பால்
ஏகு வோமென வெண்ணலை நெஞ்சே!
அம்ம வொன்றுநீ யறிந்திலை போலும்
ஆலக் கோயிலு ளன்றுசுந் தரர்க்காய்ச்
செம்மை மாமலர்ப் பதங்கணொந் திடவே
சென்று சோறிரந் தளித்தருள் செய்தோன்
நம்மை யாளுடை நாதன்றன் னாமம்
நமச்சி வாயங்கா ணம்பெறுந் துணையே. 4

ஓடு கின்றனன் கதிரவ னவன்பின்
ஓடு கின்றன வொவ்வொரு நாளாய்
வீடு கின்றன வென்செய்வோ மினியவ்
வெய்ய கூற்றுவன் வெகுண்டிடி லென்றே
வாடு கின்றனை யஞ்சலை நெஞ்சே!
மார்க்கண் டேயர்தம் மாண்பறிந் திலையோ
நாடு கின்றவர் நாதன்றன் னாமம்
நமச்சி வாயங்கா ணம்பெறுந் துணையே. 5

மலங்கு மாலுடற் பிணிகளை நீக்க
மருந்து வேண்டினை வாழியென் னெஞ்சே!
கலங்கு றேலருட் டிருவெண்ணீ றெனது
கரத்தி ருந்தது கண்டிலை போலும்
விலங்கு றுப்பெருங் காமநோய் தவிர்க்க
விரும்பி யேங்கினை வெம்புறே லழியா
நலங்கொள் செஞ்சடை நாதன்றன் னாமம்
நமச்சி வாயங்கா ணம்பெறுந் துணையே. 6

மாலுந் துஞ்சுவான் மலரவ னிறப்பான்
மற்றை வானவர் முற்றிலு மழிவார்
ஏலு நற்றுணை யார்நமக் கென்றே
எண்ணி நிற்றியோ வேழைநீ நெஞ்சே!
கோலு மாயிரங் கோடியண் டங்கள்
குலைய நீக்கியு மாக்கியு மளிக்கும்
நாலு மாமறைப் பரம்பொரு ளாம
நமச்சி வாயங்கா ணம்பெறுந் துணையே. 7

கந்த வண்ணமாங் கமலன்மான் முதலோர்
கண்டிலா ரெனிற் கைலையம் பதியை
எந்த வண்ணநாங் காண்குவ தென்றே
எண்ணி யெண்ணிநீ யேங்கினை நெஞ்சே!
அந்த வண்ணவெள் ளானைமே னம்பி
அமர்ந்து சென்றதை யறிந்திலை போலும்
நந்தம் வண்ணமா நாதன்றன் னாமம்
நமச்சி வாயங்காண் நாம்பெறுந் துணையே. 8

Koviloor Digital Library

வீர மாந்தரு முனிவருஞ் சுரரும்
மேவு தற்கொணு வெள்ளியங் கிரியைச்
சேர நாஞ்சென்று வணங்கும்வா றெதுவோ
செப்பென் றேயெனை நச்சிய நெஞ்சே!
ஊர ரூருடன் சேரனூர் துரங்கம்
ஊர்ந்து சென்றவவ் வுளவறிந் திலையோ
நார மார்மதிச் சடையவ னுமம்
நமச்சி வாயங்காண் நாம்பெறுந் துணையே. 9

தலங்க டோறுஞ்சென் றவ்விடை யமர்ந்த
தம்பி ரான்றிருத் தாளிணை வணங்கி
வலங்கொ ளும்படி யென்னையுங் கூட
வாவென் கின்றனை வாழியென் னெஞ்சே!
இலங்க டோறுஞ்சென் றிரந்திடு மவனே
என்னை யுன்னையு மீர்க்குவ னதற்கு
நலங்கொ ளுந்துணை யாதெனிற் கேட்டி
நமச்சி வாயங்காண் நாம்பெறுந் துணையே! 10

திருச்சிற்றம்பலம்

6. திருவருள் வழக்க விளக்கம்

கட்டளைக் கலித்துறை

திருச்சிற்றம்பலம்

தோடுடை யார்புலித் தோலுடை யார்கடற் றூங்குமொரு
மாடுடை யார்மழு மானுடை யார்பிர மன்றலையாம்
ஓடுடை யாரொற்றி யூருடை யார்புக ழோங்கியவெண்
காடுடை யார்நெற்றிக் கண்ணுடை யாரெங் கடவுளரே. 1

வண்ணப்பன் மாமலர் மாற்றும் படிக்கு மகிழ்ந்தெமது
திண்ணப்பர் சாத்துஞ் செருப்படி மேற்கொண்டு தீஞ்சுவைத்தாய்
உண்ணப் பரிந்துநல் லூன்றர வுண்டுகண் ணொத்தக்கண்டே
கண்ணப்ப நிற்க வெனக்கைதொட் டாரெங் கடவுளரே. 2

செல்லிடிக் குங்குரற் கார்மத வேழச் சினவுரியார்
வல்லடுக் குங்கொங்கை மாதொரு பாகர் வடப்பொன் வெற்பாம்
வில்லெடுக் குங்கையர் சாக்கியர் அன்று விரைந்தெறிந்த
கல்லடிக் குங்கதி காட்டினர் காணெங் கடவுளரே. 3

ஏழியற் பண்பெற் றமுதோ டளாவி இலங்குதமிழ்க்
கேழியர் **சம்பந்த** ரந்தணர் வேண்டக் கிளர்ந்தநற்சீர்
வீழியிற் றம்பதிக் கேவிடை கேட்கவெற் பாளுடனே
காழியிற் றன்னுருக் காட்டின ராலெங் கடவுளரே. 4

நாட்டிற் புகழ்பெற்ற நாவுக் கரசர்முன் னாட்பதிகப்
பாட்டிற் கிரக்கமில் லீரெம் பிரானெனப் பாடவன்றே
ஆட்டிற் கிசைந்த மலர்வாழ்த்தி வேத மமைத்தமறைக்
காட்டிற் கதவந் திறந்தன ராலெங் கடவுளரே. 5

பைச்சூ ரரவப் படநடத் தானயன் பற்பலநாள்
எய்ச்சூர் தவஞ்செய் யினுங்கிடை யாப்பத மேய்ந்துமண்மேல்
வைச்சூரன் வன்றொண்டன் சுந்தரன் என்னுநம் வள்ளலுக்குக்
கச்சூரிற் சோறிரந் தூட்டின ராலெங் கடவுளரே. 6

ஏணப் பரிசெஞ் சடைமுத லானவெல் லாமறைத்துச்
சேணப் பரிகள் நடத்திடு கின்றநற் சேவகன்போன்
மாணப் பரிபவ நீக்கிய மாணிக்க வாசகர்க்காய்க்
காணப் பரிமிசை வந்தன ராலெங் கடவுளரே. 7

எல்லாஞ் செயவல்ல சித்தரின் மேவி யெழின்மதுரை
வல்லாரின் வல்லவ ரென்றறி யாமுடி மன்னன்முன்னே
பல்லா யிரவண்ட மும்பய மெய்தப் பராக்கிரமித்துக்
கல்லானை தின்னக் கரும்பளித் தாரெங் கடவுளரே. 8

மாலெடுத் தோங்கிய மாலய னாதிய வானவரும்
ஆலடுத் தோங்கிய வந்தண னேயென் றடைந்திரண்டு
பாலெடுத் தேத்தநம் பார்ப்பதி காணப் பகர்செய்மன்றிற்
காலெடுத் தாடுங் கருத்தர்கண் டீரெங் கடவுளரே. 9

மாற்பதஞ் சென்றபி னிந்திரர் நான்முகர் வாமனர்மான்
மேற்பதங் கொண்ட வுருத்திரர் விண்ணவர் மேன்மற்றுள்ளோர்
ஆற்பதங் கொண்டபல் லாயிரங் கோடியண் டங்களெல்லாங்
காற்பத மொன்றி லொடுக்கிநிற் பாரெங் கடவுளரே. 10

திருச்சிற்றம்பலம்

7. சிவ புண்ணியத் தேற்றம்

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

கடவுள் நீறிடாக் கடையரைக் கண்காள்!
கனவி லேனுநீர் காணுத லொழிக
அடவுண் மாசுதீர்த் தருள்திரு நீற்றை
அணியுந் தொண்டரை யன்புடன் காண்க
தடவுமின்னிசை வீணைகேட் டரக்கன்
றனக்கு வாளொடு நாள்கொடுத் தவனை
நடவு மால்விடை யொற்றியூ ருடைய
நாதன் றன்னைநா நண்ணுதற் பொருட்டே. 1

Koviloor Digital Library

போற்றி நீறிடாப் புலையரைக் கண்டாற்
போக போகநீர் புலமிழந் தவமே
நீற்றின் மேனியர் தங்களைக் கண்டால்
நிற்க நிற்கவந் நிமலரைக் காண்க
சாற்றி னன்னெறி யீதுகாண் கண்காள்!
தமனி யப்பெருந் தனுவெடுத் தெயிலைக்
காற்றி நின்றநங் கண்ணுதற் கரும்பைக்
கைலை யாளனைக் காணுதற் பொருட்டே. 2

தெய்வ நீறிடாச் சிறியரைக் கண்டாற்
சீறு பாம்புகண் டெனவொளித் தேக
சைவ நீறிடுந் தலைவரைக் கண்காள்!
சார்ந்து நின்றுநீர் தனிவிருந் துண்க
செய்ப வன்செய லும்மவை யுடனே
செய்விப் பானுமாய்த் தில்லையம் பலத்துள்
உய்வ தேதரக் கூத்துகந் தாடும்
ஒருவ னம்முள முற்றிடற் பொருட்டே. 3

தூய நீறிடாப் பேயர்க ளொன்று
சொல்லு வாரெனிற் புல்லென வடைக்க
தாய நீறிடு நேயரொன் றுரைத்தாற்
றழுவி யேயதை முழுவதுங் கேட்க
சேய நன்னெறி யணித்தது செவிகாள்!
சேர மானிடத் திருமுகங் கொடுத்து
ஆய பாணற்குப் பொன்பெற வருளும்
ஐயர் சேவடி யடைகுதற் பொருட்டே. 4

நல்ல நீறிடா நாய்களின் றேகம்
நாற்ற நேர்ந்திடி னண்ணுயிர்ப் படக்க
வல்ல நீறிடும் வல்லவ ரெழின்மெய்
வாச நேரிடின் மகிழ்வுடன் முகர்க
சொல்ல ரும்பரி மளந்தரு மூக்கே!
சொல்லும் வண்ணமித் தூய்நெறி யொன்ரும்
அல்ல னிக்கிநல் லருட்கட லாடி
ஐயர் சேவடி யடைகுதற் பொருட்டே. 5

அருள்செய் நீறிடா ரமுதுனக் கிடினும்
அம்ம லத்தினை யருந்துத லொழிக
தெருள்கொ ணீறிடுஞ் செல்வர்கூ ழிடினுஞ்
சேர்ந்து வாழ்த்தியத் திருவமு துண்க
இருள்செய் துன்பநீத் தென்னுடை நாவே!
இன்ப நல்லமு தினிதிருந் தருந்தி
மருள்செய் யானையின் றேலுடுத் தென்னுள்
வதியு மீசன்பால் வாழுதற் பொருட்டே. 6

Koviloor Digital Library

முத்தி நீறிடார் முன்கையாற் றெடினும்
முள்ளு றுத்தல்போன் முனிவுட னடுங்க
பத்தி நீறிடும் பத்தர்கள் காலாற்
பாய்ந்து தைக்கினும் பரிந்ததை மகிழ்க
புத்தி யீதுகா ணென்னுடை உடம்பே!
போற்ற லார்புரம் பொடிபட நகைத்தோன்
சத்தி வேற்கரத் தனயனை மகிழ்வோன்
றன்னை நாமென்றுஞ் சார்ந்திடற் பொருட்டே. 7

இனிய நீறிடா வீனநாய்ப் புலையர்க்
கெள்ளிற் பாதியு மீகுத லொழிக
இனிய நீறிடுஞ் சிவனடி யவர்கள்
எம்மைக் கேட்கினு மெடுத்தவர்க் கீக!
இனிய நன்னெறி யீதுகாண் கரங்காள்!
ஈச னம்முடை யிறைவன் றுதிப்போர்க்
கினிய மால்விடை யேறிவந் தருள்வோன்
இடங்கொண் டெம்முளே யிசைகுதற் பொருட்டே.

நாட நீறிடா மூடர்கள் கிடக்கும்
நரக வில்லிடை நடப்பதை யொழிக
ஊட னீக்கும்வெண் ணீறிடு மவர்கள்
உலவும் வீட்டிடை யோடியு நடக்க
கூட நன்னெறி யீதுகாண் கால்காள்!
குமரன் றந்தையெங் குடிமுழு தாள்வோன்
ஆட வம்பலத் தமர்ந்தவ னவன்றன்
அருட்க டற்படிந் தாடுதற் பொருட்டே. 9

நிலைகொ ணீறிடாப் புலையரை மறந்தும்
நினைப்ப தென்பதை நெஞ்சமே! ஒழிக
கலைகொ ணீறிடுங் கருத்தரை நாளுங்
கருதி நின்றுளே கனிந்துநெக் குருக
மலைகொள் வில்லினன் மால்விடை யுடையான்
மலர யன்றலை மன்னிய கரத்தான்
அலைகொ ணஞ்சமு தாக்கிய மிடற்றான்
அவனை நாமகிழ்ந் தடைகுதற் பொருட்டே. 10

திருச்சிற்றம்பலம்

8. முத்தியுபாயம்

திருவொற்றியூர்
வஞ்சித்துறை
திருச்சிற்றம்பலம்

ஒற்றி யூரனைப்
பற்றி நெஞ்சமே
நிற்றி நீயருட்
பெற்றி சேரவே. 1

சேர நெஞ்சமே
தார மன்றுகாண்
வாரம் வைத்தியேற்
சாரு முத்தியே. 2

Koviloor Digital Library

முத்தி வேண்டுமேற்
பத்தி வேண்டுமாற்
சத்தி யம்மிது
புத்தி நெஞ்சமே. 3

நெஞ்ச மேயிது
வஞ்ச மேயல
பிஞ்ச கன்பதந்
தஞ்ச மென்பதே. 4

என்ப தேற்றவன்
அன்ப தேற்றுநீ
வன்பு மாற்றுதி
இன்ப மூற்றவே. 5

ஊற்ற முற்றுவெண்
ணீற்ற னொற்றியூர்
போற்ற நீங்குமால்
ஆற்ற நோய்களே. 6

நோய்கள் கொண்டிடும்
பேய்கள் பற்பலர்
தூய்த னொற்றியூர்க்
கேய்த லில்லையே. 7

இல்லை யில்லைகாண்
ஒல்லை யொற்றியூர்
எல்லை சேரவே
அல்ல லென்பதே. 8

அல்ல லென்பதேன்
தொல்லை நெஞ்சமே
மல்ல லொற்றியூர்
எல்லை சென்றுமே. 9

சென்று வாழ்த்துதி
நன்று நெஞ்சமே
என்று நல்வளம்
ஒன்று மொற்றியே. 10

திருச்சிற்றம்பலம்

9. அவலத்தமுங்கல்

திருவொற்றியூர்

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

ஊதி யம்பெரு வொதியனேன் மதிபோய்
உழலும் பாவியே னுண்மை யொன்றறியேன்
வாதி யம்புறும் வஞ்சக ருடனே
வாயி முக்குற வன்மைகள் பேசி
ஆதி யெம்பெரு மானுனை மறந்தேன்
அன்பி லாதவெ னன்பினை நினைக்கில்
தீதி யம்பிய நஞ்சமுங் கலங்குந்
திகழு மொற்றியூர்த் தியாகமா மணியே. 1

கல்லி கந்தவ னெஞ்சகக் கொடியேன்
கயவர் தங்களுட் கலந்துநா டோறும்
மல்லி கந்தவாய் வாதமிட் டுலறி
வருந்து கின்றதுன் மார்க்கத்தை நினைக்கில்
இல்லி கந்தவென் மீதெனக் கேதான்
இகலுங் கோபமு மிருக்கின்ற தானல்
தில்லை யாயுன்ற னுளத்துக்கென் னுமோ
திகழு மொற்றியூர்த் தியாகமா மணியே. 2

Koviloor Digital Library

கைத வத்தர்தங் களிப்பினிற் களித்தே
காலம் போக்கினேன் களைகண்மற் றறியேன்
செய்த வத்தர்தந் திறஞ்சிறி துணரேன்
செய்வ தென்னைநின் றிருவருள் பெறவே
எய்த வத்திரு வருளெனக் கிரங்கி
ஈயி லுண்டுமற் றின்றெனி லின்றே
செய்த வத்திரு மடந்தையர் நடனந்
திகழு மொற்றியூர்த் தியாகமா மணியே. 3

அழுத பிள்ளைக்கே பாலுண வளிப்பாள்
அன்னை யென்பர்க ளழுவலி யில்லாக்
கொழுது நேர்சிறு குழவிக்குங் கொடுப்பாள்
குற்ற மன்றது மற்றவள் செயலே
தொழுது நின்னடி துதிக்கின்றோர்க் கெனவே
துட்ட னேனுக்குஞ் சூழ்ந்தருள் செயலாஞ்
செழுது மாதவி மலர்திசை மணக்கத்
திகழு மொற்றியூர்த் தியாகமா மணியே. 4

உள்ளி யோவென வலறிநின் றேத்தி
யுருகி நெக்கிலா வுளத்தன் யானெனினும்
வள்ளி யோயுனை மறக்கவு மாட்டேன்
மற்றைத் தேவரை மதிக்கவு மாட்டேன்
வெள்ளி யோவெனப் பொன்மகிழ் சிறக்க
விரைந்து மும்மதில் வில்வளைத் தெரித்தோய்
தெள்ளி யோர்புகழ்ந் தரகர வென்னத்
திகழு மொற்றியூர்த் தியாகமா மணியே. 5

விருப்பி லேன்றிரு மாலயன் பதவி
வேண்டிக் கொள்கென விளம்பினுங் கொள்ளேன்
மருப்பின் மாவுரி யாயுன்ற னடியார்
மதிக்கும் வாழ்வையே மனங்கொடு நின்றேன்
ஒருப்ப டாதவிவ் வென்னள வினியுன்
உள்ள மெப்படி யப்படி யறியேன்
திருப்பு யாசல மன்னர்மா தவத்தோர்
திகழு மொற்றியூர்த் தியாகமா மணியே. 6

நிலையி லாவுல கியற்படு மனத்தை
நிறுத்தி லேனொரு நியமமு மறியேன்
விலையி லாமணி யேவுனை வாழ்த்தி
வீட்டு நன்னெறிக் கூட்டென விளம்பேன்
அலையி லார்ந்தெழுந் துரும்பென வலைந்தேன்
அற்ப னேன்றிரு வருளடை வேனே
சிலையி லாரழற் கணைதொடுத் தவனே
திகழு மொற்றியூர்த் தியாகமா மணியே. 7

Koviloor Digital Library

காய மென்பதா காயமென் றறியேன்
கலங்கி னேனொரு களைகணு மில்லேன்
சேய நன்னெறி யணித்தெனக் காட்டுந்
தெய்வ நின்னருட் டிறஞ்சிறி தடையேன்
தூய நின்னடி யவருடன் கூடித்
தொழும்பு செய்வதே சுகமெனத் துணியேன்
தீய னேன்றனை யாள்வதெவ் வாறோ
திகழு மொற்றியூர்த் தியாகமா மணியே. 8

புன்னு னிப்படுந் துளியினுஞ் சிறிய
போகம் வேட்டுநின் பொன்னடி மறந்தேன்
என்னி னிப்படும் வணமஃ தறியேன்
என்செய் கேனெனை யென்செயப் புகுகேன்
மின்னி னிற்பொலி வேணியம் பெருமான்
வேற லேனெனை விரும்பலுன் கடனே
தென்ன னிப்படுஞ் சோலைசூழ்ந் தோங்கித்
திகழு மொற்றியூர்த் தியாகமா மணியே. 9

அடிய னேனல னென்னினு மடியே
னுக நின்றன னம்மையிம் மையினுங்
கடிய னேன்பிழை யாவையும் பொறுக்கக்
கடனு னக்கலாற் கண்டில னையா
பொடிகொண் மேனியெம் புண்ணிய முதலே
புன்னை யஞ்சடைப் புங்கவ ரேறே
செடியர் தேடுருத் திவ்விய வொளியே
திகழு மொற்றியூர்த் தியாகமா மணியே. 10

திருச்சிற்றம்பலம்

10. பழமொழி மேல்வைத்துப் பரிவுகூர்தல்

திருவொற்றியூர்

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

வானை நோக்கிமண் வழிநடப் பவன்போல்
வயங்கு நின்னருள் வழியிடை நடப்பான்,
ஊனை நோக்கினே னுயினு மடியேன்
உய்யும் வண்ணநீ யுவந்தருள் புரிவாய்
மானை நோக்கிய நோக்குடை மலையாள்
மகிழ மன்றிடை மாநடம் புரிவோய்
தேனை நோக்கிய கொன்றையஞ் சடையோய்
திகழு மொற்றியூர்த் தியாகநா யகனே. 1

வாயி லான்பெரு வழக்குரைப் பதுபோல்
வள்ள லுன்னடி மலர்களுக் கன்பாந்
தாயி லாதுநின் னருள்பெற விழைந்தேன்
துட்ட னேனருட் சுகம்பெற நினைவாய்

Koviloor Digital Library

கோயி லாகநல் லன்பர்தம் முளத்தைக்
கொண்ட மர்ந்திடுங் குணப்பெருங் குன்றே
தேயி லாதபல் வளஞ்செறிந் தோங்கித்
திகழு மொற்றியூர்த் தியாகநா யகனே. 2

வித்தை யின்றியே விளைத்திடு பவன்போல்
மெய்ய நின்னிரு மென்மலர்ப் பதத்திற்
பத்தி யின்றியே முத்தியை விழைந்தேன்
பாவி யேனருட் பண்புற நினைவாய்
மித்தை யின்றியே விளங்கிய வடியார்
விழைந்த யாவையுந் தழைந்திட வருள்வோய்
சித்தி வேண்டிய முனிவரர் பரவித்
திகழு மொற்றியூர்த் தியாகநா யகனே. 3

கலமி லாதுவான் கடல்கடப் பவன்போற்
கடவு ணின்னடிக் கமலங்கள் வழுத்தும்
நலமி லாதுநின் னருள்பெற விழைந்த
நாயி னேன்செயு நவைபொறுத் தருள்வாய்
மலமி லாதநல் வழியிடை நடப்போர்
மனத்துண் மேவிய மாமணிச் சுடரே
சிலமி லாஞ்சமா தியதருப் பொழில்கள்
திகழு மொற்றியூர்த் தியாகநா யகனே. 4

போர்க்கும் வெள்ளத்திற் பொன்புதைப் பவன்போற்
புலைய நெஞ்சிடைப் புனிதநின் னடியைச்
சேர்க்கும் வண்ணமே நினைக்கின்றே னெனினுஞ்
சிறிய னேனுக்குன் றிருவருள் புரிவாய்
கூர்க்கு நெட்டிலை வேற்படைக் கரங்கொள்
குமரன் றந்தையே கொடியதீ வினையைத்
தீர்க்குந் தெய்வமே சைவவை திகங்கள்
திகழு மொற்றியூர்த் தியாகநா யகனே. 5

ஓட வுன்னியே யுறங்குகின் றவன்போல்
ஓங்கு முத்தம வுன்னருட் கடலில்
ஆட வுன்னியே மங்கையர் மயலில்
அழுந்து கின்றவெற் கருள்செய நினைவாய்
நாட வுன்னியே மாலய னேங்க
நாயி னேனுள நண்ணிய பொருளே
தேட வுன்னிய மாதவ முனிவர்
திகழு மொற்றியூர்த் தியாகநா யகனே. 6

முதலி லாமலூ தியம்பெற விழையும்
மூட னென்னநின் மொய்கழற் பதமேத்
துதலி லாதுநின் னருள்பெற விழைந்தேன்
துட்ட னேனருட் சுகம்பெறு வேனோ

Koviloor Digital Library

நுதலி லாரமுற் கண்ணுடை யவனே
நோக்கு மன்பர்கள் தேக்குமின் னமுதே
சிதலி லாவள மோங்கியென் னுளுந்
திகழு மொற்றியூர்த் தியாகநா யகனே. 7

கல்லை யுந்திவா னதிகடப் பவர்போற்
காம முந்திய நாமநெஞ் சகத்தால்
எல்லை யுந்திய பவக்கடல் கடப்பான்
எண்ணு கின்றன னெனக்கருள் வாயோ
அல்லை யுந்திய வொண்சுடர்க் குன்றே
அகில கோடிகட் கருள்செயு மொன்றே
தில்லை நின்றொளிர் மன்றிடை யமுதே
திகழு மொற்றியூர்த் தியாகநா யகனே. 8

நெய்யி னுற்சுடு நெருப்பவிப் பவன்போல்
நெடிய துன்பமாங் கொடியவை நிறைந்த
பொய்யி னுற்பவம் போக்கிட நினைத்தேன்
புல்ல னேனுக்குன் னல்லருள் வருமோ
கையி னுற்றெழு மன்பர்தம் முள்ளக்
கமல மேவிய விமலவித் தகனே
செய்யி னுற்பொலிந் தோங்கிநல் வளங்கள்
திகழு மொற்றியூர்த் தியாகநா யகனே. 9

நீர்சொ ரிந்தொளி விளக்கெரிப் பவன்போல்
நித்த நின்னிடை நேசம் வைத்திடுவான்
பார்சொ ரிந்திடும் பவநெறி முயன்றேன்
பாவி யேன்றனைக் கூவிநின் னுள்வாய்
கார்சொ ரிந்தெனக் கருணையீந் தன்பர்
களித்த நெஞ்சிடை யொளித்திருப் பவனே
தேர்சொ ரிந்தமா மணித்திரு வீதித்
திகழு மொற்றியூர்த் தியாகநா யகனே. 10

திருச்சிற்றம்பலம்

11. அபராதத்தாற்றுமை

திருவொற்றியூர்

எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

துச்சிலே விரும்பித் துயர்கொளுங் கொடியேன்
துட்டனேன் றாய்மையொன் றில்லா
எச்சிலே யனையேன் பாவியே னென்னை
என்செய்தாற் றீருமோ வறியேன்
பச்சிலே யிடுவார் பக்கமே மருவும்
பரமனே யெம்பசு பதியே
அச்சிலே விரும்பு மவருளத் தமுதே
யையனே யொற்றியூ ரரசே. 1

Koviloor Digital Library

தூங்கினேன் சோம்பற் குறைவிட மானேன்
தோகையர் மயக்கிடை யழுந்தி
ஏங்கினே னவமே யிருந்தன னென்னை
என் செய்தாற் றீருமோ வறியேன்
வாங்கிமே ருவினை வளைத்திடும் பவள
மாமணிக் குன்றமே மருந்தே
ஓங்கிவா னளவும் பொழிற்செறி யொற்றி
யூர்வரு மென்னுடை யுயிரே. 2

கரப்பவர்க் கெல்லா முற்படுங் கொடிய
கடையனேன் விடையமே யுடையேன்
இரப்பவர்க் கணுவு மீந்திலே னென்னை
யென்செய்தாற் றீருமோ வறியேன்
திரப்படுங் கருணைச் செல்வமே சிவமே
தெய்வமே தெய்வநா யகமே
உரப்படு மன்ப ருள்ளொளி விளக்கே
ஒற்றியூர் வாழுமென் னுவப்பே. 3

இல்லையென் பதனுக் கஞ்சிடே னுய்க்கும்
இணையிலே னிழிவினேன் றுயர்க்கோர்
எல்லைமற் றறியே னெறியனே னென்னை
யென் செய்தாற் றீருமோ வறியேன்
கல்லைவில் லாக்குங் கருணைவா ரிதியே
கண்ணுத லுடைய செங்கனியே
தில்லைவா ழரசே தெய்வமா மணியே
திருவொற்றி யூர்வருந் தேவே. 4

மண்ணிலே மயங்கு மனத்தினை மீட்டுன்
மலரடி வழுத்திடச் சிறிதும்
எண்ணிலேன் கொடிய வேழையே னென்னை
யென் செய்தாற் றீருமோ வறியேன்
விண்ணிலே விளங்கு மொளியினுள் ளொளியே
விடையில்வந் தருள்விழி விருந்தே
கண்ணிலே விளங்கு மரும்பெறன் மணியே
காட்சியே யொற்றியங் கரும்பே. 5

முட்டியே மடவார் முலைத்தலை யழுக்கும்
மூடனேன் முழுப்புலை முறியேன்
எட்டியே யனையேன் பாவியே னென்னை
யென்செய்தாற் றீருமோ வறியேன்
ஒட்டியே யன்ப ருளத்தெழுங் களிப்பே
ஒளிக்குளாஞ் சோதியே! கரும்பின்
கட்டியே தேனே சடையுடைக் கனியே
காலமுங் கடந்தவர் கருத்தே. 6

Koviloor Digital Library

கருதென வடியார் காட்டியுந் தேருக்
கன்மனக் குரங்கனே னுதவா
எருதென நின்றேன் பாவியே னென்னை
யென் செய்தாற் றீருமோ வறியேன்
மருதிடை நின்ற மாணிக்க மணியே
வன்டவந் தீர்த்திடு மருந்தே
ஒருதிற முடையோ ருள்ளத்து ளொளியே
ஒற்றியூர் மேவுமென் னுறவே. 7

வைதிலேன் வணங்கா திகழ்பவர் தம்மை
வஞ்சனே னின்னடி யவர்பால்
எய்திலேன் பேயே னேழையே னென்னை
யென் செய்தாற் றீருமோ வறியேன்
கொய்துமா மலரிட் டருச்சனை புரிவோர்
கோலநெஞ் சொளிர்குணக் குன்றே
உய்திற முடையோர் பரவுநல் லொற்றி
யூரகத் தமர்ந்தரு ளொன்றே. 8

தெவ்வண மடவார் சீக்குழி விழுந்தேன்
தீயனேன் பேயனேன் சிறியேன்
எவ்வண முய்வே னென்செய்வே னென்னை
யென்செய்தாற் றீருமோ வறியேன்
எவ்வணப் பொருப்பே யென்னிரு கண்ணே
இடைவிடாப் பசியசெம் பொன்னே
செவ்வண மணியே திகழ்குணக் கடலே
திருவொற்றி யூர்ச்செழுந் தேனே. 9

வாதமே புரிவேன் கொடும்புலி யனையேன்
வஞ்சக மனத்தினேன் பொல்லா
ஏதமே யுடையே னென்செய்வே னென்னை
யென்செய்தாற் றீருமோ வறியேன்
போதமே யைந்தாம் பூதமே யொழியாப்
புனிதமே புதுமணப் பூவே
பாதமே சரணஞ் சரணமென் றன்னைப்
பாதுகாத் தளிப்பதுன் பரமே. 10

திருச்சிற்றம்பலம்

12. அருளியல் வினவல்

திருமுல்லைவாயில்

எழுசீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

தேனென வினிக்குந் திருவருட் கடலே
தெள்ளிய வமுதமே சிவமே
வானென நிற்குந் தெய்வமே முல்லை
வாயில்வாழ் மாசிலா மணியே

Koviloor Digital Library

ஊனென நின்ற வுணர்விலே னெனினும்
உன்றிருக் கோயில்வந் தடைந்தால்
ஏனெனக் கேளா திருந்தனை யையா
ஈதுநின் றிருவருட் கியல்போ. 1

பூங்கொடி யிடையைப் புணர்ந்தசெந் தேனே
புத்தமு தேமறைப் பொருளே
வாங்கொடி விடைகொ ளண்ணலே முல்லை
வாயில்வாழ் மாசிலா மணியே
தீங்கொடி யாத வினையனே னெனினுஞ்
செல்வநின் கோயில்வந் தடைந்தால்
ஈங்கொடி யாத வருட்கணு ேனாக்கி
ஏனெனு திருப்பது மியல்போ. 2

துப்புநே ரிதழி மகிழ்ந்த கல்யாண
சுந்தரா சுந்தரன் றூதா
மைப்பொதி மிடற்றுருய் வளர்திரு முல்லை
வாயில்வாழ் மாசிலா மணியே
அப்பனே யுன்னை விடுவனோ வடியேன்
அறிவிலே னெனினுநின் கோயிற்
கெய்ப்புடன் வந்தால் வாவென வுரையா
திருப்பதுன் றிருவருட் கியல்போ. 3

கங்கையஞ் சடைகொண் டோங்குசெங் கனியே
கண்கண்மூன் றோங்கு செங்கரும்பே
மங்கலில் லாத வண்மையே முல்லை
வாயில்வாழ் மாசிலா மணியே
துங்கநின் னடியைத் துதித்திடே னெனினுந்
தொண்டனேன் கோயில்வந் தடைத்தால்
எங்குவந்தாய்நீ யாரென வேனும்
இயம்பிடா திருப்பது மியல்போ. 4

நன்றுவந் தருளு நம்பனே யார்க்கும்
நல்லவ னேதிருத் தில்லை
மன்றுவந் தாடும் வள்ளலே முல்லை
வாயில்வாழ் மாசிலா மணியே
துன்றுநின் னடியைத் துதித்திடே னெனினுந்
தொண்டனேன் கோயில்வந் தடைந்தால்
என்றுவந் தாயென் றொருசொலுஞ் சொல்லா
திருப்பதுன் றிருவருட் கியல்போ. 5

பண்ணினு ளிசையே பாலினுட் சுவையே
பத்தர்கட் கருள்செயும் பரமே
மண்ணினி லோங்கி வளம்பெறு முல்லை
வாயில்வாழ் மாசிலா மணியே

Koviloor Digital Library

பெண்ணினும் பேதை மதியினே னெனினும்
பெருமநின் னருள்பெற லாமென்
றெண்ணிவந் தடைந்தாற் கேள்வியில் லாமல்
இருப்பதுன் றிருவருட் கியல்போ. 6

முன்னிய மறையின் முடிவினுட் பொருளே
முக்கணு மூவர்க்கு முதல்வா
மன்னிய கருணை வாரியே முல்லை
வாயில்வாழ் மாசிலா மணியே
அன்னிய னல்லேன் றொண்டனே னுன்றன்
அருட்பெருங் கோயில்வந் தடைந்தால்
என்னிது சிவனே பகைவரைப் போற்பார்த்
திருப்பதுன் றிருவருட் கியல்போ. 7

நல்லவர் பெறுநற் செல்வமே மன்றுண்
ஞானநா டகம்புரி நலமே
வல்லவர் மதிக்குந் தெய்வமே முல்லை
வாயில்வாழ் மாசிலா மணியே
புல்லவ னெனினு மடியனே னையா
பொய்யல வுலகறிந் ததுநீ
இல்லையென் றாலும் விடுவனோ? சும்மா
இருப்பதுன் றிருவருட் கியல்போ. 8

பொதுவினின் றருளு முதற்றனிப் பொருளே
புண்ணியம் விளைகின்ற புலமே
மதுவினின் றோங்கும் பொழிற்றிரு முல்லை
வாயில்வாழ் மாசிலா மணியே
புதுமைய னல்லேன் றொன்றுதொட் டுனது
பூங்கழற் கன்புபூண் டவன்காண்!
எதுநினைந் தடைந்தா யென்றுகே ளாமல்
இருப்பதுன் றிருவருட் கியல்போ. 9

பொன்னையுற் றவனு மயனுநின் றறியாப்
புண்ணியா கண்ணுதற் கரும்பே
மன்னனே மருந்தே வளர்திரு முல்லை
வாயில்வாழ் மாசிலா மணியே
உன்னைநான் கனவி னிடத்தும்விட் டொழியேன்
உன்றிரு வடித்துணை யறிய
என்னையீன் றவனே முகமறி யார்போல்
இருப்பதுன் றிருவருட் கியல்போ. 10

திருச்சிற்றம்பலம்

Koviloor Digital Library

13. திருமுல்லைவாயில் திருவிண்ணப்பம்

திருமுல்லைவாயில்

கலிவிருத்தம்

திருச்சிற்றம்பலம்

தாயின் மேவிய தற்பர மேமுல்லை
வாயின் மேவிய மாமணி யேயுன்றன்
கோயின் மேவிநின் கோமலர்த் தாடொழா
தேயின் மேவி யிருந்தன னென்னையே. 1

தில்லை வாய்ந்த செழுங்கனி யேதிரு
முல்லை வாயின் முதற்சிவ மூர்த்தியே
தொல்லை யேனுன்றன் றாய்திருக் கோயிலின்
எல்லை சேரவின் றெத்தவஞ் செய்ததே. 2

வளங்கொ ளும்முல்லை வாயிலின் மேவிய
குளங்கொ ளுங்கட் குருமணி யேயுனை
உளங்கொ ளும்படி யுன்றிருக் கோயிலிக்
களங்கொ ணெஞ்சினன் கண்டதுங் கண்டதே. 3

மலைவி லாமுல்லை வாயிலின் மேவிய
விலையி லாமணி யேவிளக் கேசற்றுங்
கொலையி லாதவர் கூடுநின் கோயிலின்
தலைநி லாவத் தவமென்கொல் செய்ததே. 4

சீர்சி றக்குந் திருமுல்லை வாயிலில்
ஏர்சி றக்கு மியன்மணி யேகொன்றைத்
தார்சி றக்குஞ் சடைக்கனி யேயுன்றன்
ஊர்சி றக்க வுறுவதெவ் வண்ணமே. 5

சேற்கொள் பொய்கைத் திருமுல்லை வாயிற்
டாற்கொள் வண்ணப் பரஞ்சுட ரேவிடை
மேற்கொள் சங்கரனே விமலா வுன்றன்
காற்கொ ளன்பர் கலங்குத லன்றதோ. 6

வண்ண மாமுல்லை வாயிலின் மேவிய
அண்ண லேயமு தேயர சேநுதற்
கண்ண னேயுனைக் காணவந் தோர்க்கெலாம்
நண்ண ருந்துயர் நல்குத லன்றதோ. 7

மண்ணி னேங்கி வளர்முல்லை வாயில்வாழ்
கண்ணுண் மாமணி யேகரும் பேயுனை
எண்ணு மன்ப ரிழிவடைந் தாலது
பண்ணு நின்னருள் பாரிடை வாழ்கவே. 8

Koviloor Digital Library

தீதி லாத திருமுல்லை வாயில்வாழ்
கோதி லாத குணப்பெருங் குன்றமே
வாதி லாதுனை வாழ்த்தவந் தோர்தமை
ஏதி லாரென் றிருப்பது மென்கொலோ. 9

தேசு லாவிய சீர்முல்லை வாயில்வாழ்
மாசி லாமணி யேமருந் தேசற்றுங்
கூசி டாமனின் கோயில்வந் துன்புகழ்
பேசி டாத பிழைபொறுத் தாள்வையே. 10

திருச்சிற்றம்பலம்

14. காட்சிப் பெருமிதம்

திருவலிதாயம்

கலிவிருத்தம்

திருச்சிற்றம்பலம்

திரைப டாத செழுங்கட லேசற்றும்
உரைப டாம லொளிசெய்பொன் னேபுகழ்
வரைப டாது வளர்வல்லி கேசநீ
தரைப டாக்கந்தை சாத்திய தென்கொலோ! 1

சிந்தை நின்ற சிவாநந்தச் செல்வமே
எந்தை யேயெமை யாட்கொண்ட தெய்வமே
தந்தை யேவலி தாயத்த லைவநீ!
கந்தை சுற்றுங் கணக்கது வென்கொலோ. 2

வேலை கொண்ட விடமுண்ட கண்டனே
மாலை கொண்ட வளர்வல்லி கேசனே
பாலை கொண்ட பராபர நீபழஞ்
சேலை கொண்ட திறமிது வென்கொலோ. 3

பன்னு வார்க்கரு ளும்பர மேட்டியே
மன்னு மாமணி யேவல்லி கேசனே
உன்ன நீயிங் குடுத்திய கந்தையைத்
துன்னு வாரிலை யோபரஞ் சோதியே. 4

கடுத்த தும்பிய கண்டவ கண்டனே
மடுத்த நற்புகழ் வாழ்வல்லி கேசநீ
தொடுத்த கந்தையை நீக்கித் துணிந்தொன்றை
உடுத்து வாரிலை யோவிவ் வுலகிலே. 5

ஆல டுத்த வரும்பொரு ளேதிரு
மால டுத்து மகிழ்வல்லி கேசநீ
பாலு டுத்த பழங்கந்தை யைவிடத்
தோலு டுப்பது வேமிகத் தூய்மையே. 6

Koviloor Digital Library

துன்னு மாமருந் தேசுட ரேயருண்
மன்னு மாணிக்க மேவல்லி கேசரே
துன்னு கந்தையைச் சுற்றிநிற்பீ ரெனில்
என்ன நீரெமக் கீயும் பரிசதே. 7

மாசில் சோதி மணிவிளக்கே மறை
வாசி மேவி வரும்வல்லி கேசநீர்
தூசில் கந்தையைச் சுற்றியை யோபர
தேசி போலிருந் தீரென்கொல் செய்வனே. 8

தேரு நற்றவர் சிந்தையெனுந் தலஞ்
சாரு நற்பொரு ளாம்வலி தாயநீர்
பாரு மற்றிப் பழங்கந்தை சாத்தினீர்
யாரு மற்றவ ரோசொலு மையரே. 9

மெல்லி தாய விரைமலர்ப் பாதனே
வல்லி தாய மருவிய நாதனே
புல்லி தாயவிக் கந்தையைப் போர்த்திநுற்
கல்லி தாயநெஞ் சங் கரை கின்றதே. 10

திருச்சிற்றம்பலம்

15. கொடைமடப் புகழ்ச்சி

திருவொற்றியூர்

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

திரப்ப டுந்திரு மாலயன் வாழ்த்தத்
 தியாக ரென்னுமோர் திருப்பெய ரடைந்தீர்!
வரப்ப டுந்திறத் திருமை யடைந்தால்
 வாய்தி றந்தொரு வார்த்தையுஞ் சொல்லீர்
இரப்ப வர்க்கொன்று மீகிலீ ராஞல்
 யாதுக் கையநீ ரிப்பெய ரெடுத்தீர்!
உரப்ப டுந்தவத் தோர்துதித் தோங்க
 வோங்கு சீரொற்றி யூருடை யீரே. 1

வெள்ளி மாமலை வீடென வுடையீர்
 விளங்கும் பொன்மலை வில்லெனக் கொண்டீர்
வள்ளி யீரென நும்மைவந் தடைந்தால்
 வாய்தி றந்தொரு வார்த்தையுஞ் சொல்லீர்
எள்ளி லெண்ணெய்போ லெங்கணு நின்றீர்
 ஏழை யேன்குறை யேனறி யீரோ
ஒள்ளி யீருமை யன்றியொன் றறியேன்
 ஓங்கு சீரொற்றி யூருடை யீரே. 2

Koviloor Digital Library

கள்ள மற்றவாக் கரசும் புத்திரருங்
களிக்க வேடடிக் காசளித் தருளும்
வள்ள லென்றுமை வந்தடைந் தேற்ருல்
வாய்தி றந்தொரு வார்த்தையுஞ் சொல்லீர்
எள்ள ரும்புகழ்த் தியாகரென் றெருபேர்
ஏன்கொண் டீரிரப் போர்க்கிட வன்ரே
உள்ள மிங்கறி வீரெனை யாள்வீர்
ஓங்கு சீரொற்றி யூருடை யீரே. 3

அண்மை யாகுஞ்சுந் தரர்க்கன்று கச்சூ
ராலக் கோயிலிற் சோறிரந் தளித்த
வண்மை கேட்டிங்கு வந்தடைந் தேற்ருல்
வாய்தி றந்தொரு வார்த்தையுஞ் சொல்லீர்
திண்மை சேர்திரு மால்விடை யூர்வீர்
தேவ ரீருக்குச் சிறுமையு முண்டோ
உண்மை யானுமை யன்றிமற் றறியேன்
ஓங்கு சீரொற்றி யூருடை யீரே. 4

சிந்தை நொந்துல கிற்பிறர் தம்மைச்
சேர்ந்தி டாதுநுந் திருப்பெயர் கேட்டு
வந்த டைந்தவெற் குண்டிலை யெனவே
வாய்திறந் தொரு வார்த்தையுஞ் சொல்லீர்
இந்த வண்ணநீ ரிருந்திடு வீரேல்
என்சொ லாருமை யிவ்வுல கத்தார்
உந்தி வந்தவ னோடரி யேத்த
வோங்கு சீரொற்றி யூருடை யீரே. 5

கல்லை யும்பசும் பொன்னெனப் புரிந்த
கருணை கேட்டுமைக் காதலித் திங்கு
வல்லை வந்துநின் றேற்றிடிற் சிறிதும்
வாய்தி றந்தொரு வார்த்தையுஞ் சொல்லீ
ரில்லை நீர்பிச்சை யெடுக்கின்றீ ரேனும்
இரக்கின் றோர்களு மிட்டுண்டார் கண்டீர்
ஒல்லை யிங்கென துளங்கொண்ட தறிவீர்
ஓங்கு சீரொற்றி யூருடை யீரே. 6

துளிக்குங் கண்ணுடன் சோர்வுற நெஞ்சந்
தோன்ற லேயுமைத் துணையென நம்பி
வளிக்குட் பஞ்சனை யேனடைந் தேற்ருல்
வாய்தி றந்தொரு வார்த்தையுஞ் சொல்லீர்
அளிக்குந் தன்மையீர் வாழ்ந்திவ ணிருக்க
அடிய னேனலை கின்றது மழகோ
ஒளிக்குந் தன்மைதா னுமக்குமுண் டேயோ
ஓங்கு சீரொற்றி யூருடை யீரே. 7

Koviloor Digital Library

குற்ற மெத்தனை யத்தனை யெல்லாங்
குணமெ னக்கொளுங் குணக்கட லென்றே
மற்று நானம்பி யிங்குவந் தேற்றால்
வாய்தி றந்தொரு வார்த்தையுஞ் சொல்லீர்
கற்ற நற்றவர்க் கேயருள் வீரேல்
கடைய னேனெந்தக் கடைத்தலைச் செல்கேன்
உற்ற நற்றுணை யுமையன்றி யறியேன்
ஒங்கு சீரொற்றி யூருடை யீரே. 8

பொய்யி லார்க்குமுன் பொற்கிழி யளித்த
புலவ ரேறெனப் புகழ்ந்திடக் கேட்டும்
மையல் கொண்டிடு மனத்தொடும் வந்தால்
வாய்தி றந்தொரு வார்த்தையுஞ் சொல்லீர்
ஐய நும்மடி யன்றியோர் துணையும்
அறிந்தி லேனிஃ தறிந்தரு ளீரேல்
உய்யும் வண்ணமெவ் வண்ணமென் செய்கேன்
ஒங்கு சீரொற்றி யூருடை யீரே. 9

தாயி லாரென நெஞ்சகந் தளர்ந்தேன்
தந்தை யுந்திருச் சந்நிதி யடைந்தேன்
வாயி லாரென விருக்கின்றீ ரல்லால்
வாய்தி றந்தொரு வார்த்தையுஞ் சொல்லீர்
கோயி லாகவென் னெஞ்சகத் தமர்ந்த
குணத்தி னீரென்றன் குறையறி யீரோ
ஓயி லாதுநற் றொண்டருக் கருள்வான்
ஒங்கு சீரொற்றி யூருடை யீரே. 10

திருச்சிற்றம்பலம்

16. திருவருள் வேட்கை

திருவொற்றியூர்
கோச்சகக் கலிப்பா
திருச்சிற்றம்பலம்

மன்னமுதா முன்றாள் வழுத்துகின்ற நல்லோர்க்கே
இன்னமுத மோர்பொழுது மிட்டறியே னாயிடினும்
முன்னமுதா வுண்டகள முன்னியுன்னி வாடுகின்றேன்
என்னமுதே யின்னு மிரக்கந்தான் றோன்றாதோ. 1

தோன்றுந் துணையாகுஞ் சோதியே நின்னடிக்கே
ஆன்றார்த்த வன்போ டகங்குழையே னாயிடினும்
ஊன்றார்த்த ரித்ததனை யுன்னியுன்னி வாடுகின்றேன்
தேன்றார்ச் சடையாயுன் சித்த மிரங்காதோ. 2

காதார் கடுவிழியார் காமவலைக் குள்ளாகி
ஆதார மின்றி யலைதந்தே னாயிடினும்
போதார் நின்துகழற் பொன்னடியே போற்றுகின்றேன்
நீதாவோ வுன்னுடைய நெஞ்ச மிரங்காதோ. 3

Koviloor Digital Library

இலேவேட்ட மாதர்தம தினநல மேவிழைந்து
கொலேவேட் டுழலுங் கொடியனே னெயிடினும்
நிலேவேட்ட நின்னருட்கே நின்றுநின்று வாடுகின்றேன்
கலேவேட்ட வேணியனே கருணைசற்றுங் கொண்டிலேயே. 4

கொண்டனிறத் தோனுங் குணிக்கரிய நின்னடிக்கே
தொண்டறிந்து செய்யாத துட்டனே னெயிடினும்
எண்டகநின் பொன்னருளே யெண்ணியெண்ணி வாடுகின்றேன்
தண்டலைசூ ழொற்றியுளாய் தயவுசற்றுஞ் சார்ந்திலேயே. 5

சாரா வறுஞ்சார்பிற் சார்ந்தரசே வுன்னுடைய
தாரார் மலரடியைத் தாழ்ந்தேத்தே னெயிடினும்
நேராய்நின் சந்நிதிக்க ணின்றுநின்று வாடுகின்றேன்
ஓராயோ சற்றேனு மொற்றியூ ருத்தமனே. 6

ஊர்மதிக்க வீணி லுளறுகின்ற தல்லதுநின்
சீர்மதிக்க நின்னடியைத் தேர்ந்தேத்தே னெயிடினுங்
கார்மதிக்கு நஞ்சமுண்ட கண்டநின்னைக் துள்குகின்றேன்
ஏர்மதிக்கு மொற்றியூ ரெந்தையளி யெய்தாயோ. 7

தாய்க்குமினி தாகுமுன்றன் றுண்மலரை யேத்தாது
நாய்க்குங் கடையாய் நலிகின்றே னெயிடினும்
வாய்க்குமுன்றன் சந்நிதிக்கண் வந்துவந்து வாடுகின்றேன்
தூய்க்குமரன் றந்தாயென் சோர்வறிந்து தீராயோ. 8

அறியாப் பருவத் தடியேனை யாட்கொண்ட
நெறியாங் கருணை நினைந்துருகே னெயிடினுங்
குறியாப் பொருளேயுன் கோயிலிடை வந்துநின்றும்
பறியாப் பிணியேன் பரதவிப்பைப் பார்த்திலேயே. 9

பார்நடையாங் கானிற் பரிந்துழல்வ தல்லதுநின்
சீர்நடையா நன்னெறியிற் சேர்ந்திலே னெயிடினும்
நேர்நடையா நின்கோயி லின்றுநின்று வாடுகின்றேன்
வார்நடையார் காணு வளரொற்றி மன்னமுதே. 10

திருச்சிற்றம்பலம்

17. அபராத விண்ணப்பம்

திருவொற்றியூர்

எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

தேவிய லறியாச் சிறியனேன் பிழையைத் திருவுளத் தெண்ணிநீ கோபம்
மேவியிங் கையோ கைவிடிற் சிவனே வேறுநான் யாதுசெய் வேனே
மூவிரு முகஞ்சேர் முத்தினை யளித்த முழுச்சுவை முதிர்ந்தசெங் கரும்பே
சேவின்மே லோங்குஞ் செழுமணிக் குன்றே திருவொற்றி யூர்மகிழ் தேவே, 1

Koviloor Digital Library

உய்யவொன் றறியா வொதியனேன் பிழையை உன்றிரு வுள்ளத்திற் கொ
வெய்யனென் றையோ கைவிடிற் சிவனே வேறுநான் யாதுசெய் வேனே [ண்டே
செய்யநெட் டிலைவேற் சேய்தனை யளித்த தெய்வமே யாநந்தத் திரட்டே
மையலற் றவர்தம் மனத்தொளிர் விளக்கே வளம்பெறு மொற்றியூர் மணியே. 2

கழல்கொளுன் னருமைத் திருவடி மலரைக் கருதிடாப் பிழைதனைக் குறித்தே
விழலனென் றையோ கைவிடிற் சிவனே வேறுநான் யாதுசெய் வேனே
அழலயிற் கரத்தெம் மையனை யீன்ற அப்பனே அயனுமா லறியாத்
தழனிறப் பவளக் குன்றமே யொற்றித் தனிநக ரமர்ந்தரு டகையே. 3

வாடனக் குறழும் வடுக்கணார்க் குருகும் வஞ்சனேன் பிழைதனைக் குறித்தே
வேடனென் றையோ கைவிடிற் சிவனே வேறுநான் யாதுசெய் வேனே
நீடயிற் படைசேர் கரத்தனை யளித்த நிருத்தனே நித்தனே நிமலா
ஏடகத் தமர்ந்த விசனே தில்லை எந்தையே யொற்றியூ ரிறையே. 4

நாணமொன் றில்லா நாயினேன் பிழையை நாடிநின் றிருவுளத் தடைத்தே
வீணனென் றையோ கைவிடிற் சிவனே வேறுநான் யாதுசெய் வேனே
காணநின் றடியர்க் கருடரும் பொருளே கடிமதி லொற்றியூர்க் கரசே
பூணயிற் கரத்தோர் புத்தமு தெழுந்த புண்ணியப் புனிதவா ரிதியே. 5

அஞ்செழுத் தோதி யுய்ந்திடாப் பிழையை ஐயநின் றிருவுளத் தெண்ணி
வெஞ்சனென் றையோ கைவிடிற் சிவனே வேறுநான் யாதுசெய் வேனே
கஞ்சன்மான் முதலோ ருயிர்பெற விடத்தைக் களத்திருத் தியவருட் கடலே
சஞ்சித மறுக்குஞ் சண்முக முடையோன் றந்தையே யொற்றியெந் தவமே. 6

நம்பினே னின்றன் றிருவடி மலரை நாயினேன் பிழைதனைக் குறியேல்
வெம்பினே னையோ கைவிடிற் சிவனே வேறுநான் யாதுசெய் வேனே
தும்பிமா முகனை வேலனை யீன்ற தோன்றலே வச்சிரத் தூணே
அம்பிகா பதியே யண்ணலே முக்கண் அத்தனே யொற்றி யூரமுதே. 7

சூழ்ந்தவஞ் சகனேன் பிழைதனைக் குறியேற் றுன்பசா கரந்தனி லழுந்தி
விழ்ந்தன னையோ கைவிடிற் சிவனே வேறுநான் யாதுசெய் வேனே
வாழ்ந்தமா தவர்கண் மனத்தொளி ரொளியே வள்ளலே மழவிடை யவனே
போழ்ந்தவேற் படைகொள் புனிதனை யளித்த பூரணா வொற்றியூர்ப் பொருளே.

துரும்பினேன் பிழையைத் திருவுளத் தடையேற் றுய்யநின் னருட்கட லாட
விரும்பினே னையோ கைவிடிற் சிவனே வேறுநான் யாதுசெய் வேனே
கரும்பினேர் மொழியா ரிருவரை மணக்குங் கனிதனை யளித்தகற் பகமே
இரும்பினோர் நெஞ்சரெனினு மென்போல் வார்க்கின்னருடரு மொற்றி யிறையே

கட்டினேன் பாபக் கொடுஞ்சுமை யெடுப்பேன் கடும்பிழை கருதிடே னின்னை
விட்டிலே னையோ கைவிடிற் சிவனே வேறுநான் யாதுசெய் வேனே
சுட்டிலாப் பொருளே சுகப்பெருங் கடலே தூய்த்திரு வொற்றியூர்த் துணையே
தட்டிலாக் குணத்தோர் புகழ்செயுங் குகனைத் தந்தரு டருந்தயா நிதியே. 10

திருச்சிற்றம்பலம்

Koviloor Digital Library

18. அறிவரும் பெருமை

திருவொற்றியூர்

எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

நாயினுங் கடையே னென்செய்வேன் பிணியா னலிகின்ற நலிவினை யறிந்துந்
தாயினு மினியா யின்னுநீ வரவு தாழ்த்தனை யென்கொலென் றறியேன்
மாயினு மல்லால் வாழினு நினது மலரடி யன்றியொன் றேத்தேன்
காயினு மென்னைக் கனியினு நின்னைக் கனவினும் விட்டிடேன் காணே. 1

காண்பது கருதி மாலொடு மலர்வாழ் கடவுள ரிருவருந் தங்கண்
மாண்பது மாறி வேறுரு வெடுத்தும் வள்ளனின் னுருவறிந் திலரே
கோண்பதர் நெஞ்சக் கொடியனே னெந்தக் கொள்கைகொண் டறிகுவ தையா
பூண்பது பணியாய் பொதுவினின் றாடும் புனிதநின் னருளலா தின்றே. 2

இன்றுவந் தெனைநீ யடிமைகொள் ளாயேல் எவ்வுல கத்தருந் தூற்ற
நன்றுநின் றன்மேற் பழிவரு மென்மேற் பழியிலை நவின்றன னையா
அன்றுவந் தொருசேய்க் கருள்புரிந் தாண்ட அண்ணலே யொற்றியூ ரரசே
நின்றுசிற் சபைக்கு ணடஞ்செயுங் கருணை நிலயமே நின்மலச் சுடரே. 3

சுடர்கொளு மணிப்பூண் முலைமட வியர்தந் தொடக்கினிற் பட்டுழன் றுேயா
இடர்கொளு மெனைநீ யாட்கொளு நாள்தான் எந்தநா ளந்தநா ளுரையாய்!
படர்கொளும் வானோ ரமுதுண நஞ்சைப் பரிந்துண்ட கருணையம் பரமே
குடர்கொளுஞ் சூலப் படையுடை யவனே கோதையோர் கூறுடை யவனே. 4

உடைமைவைத் தெனக்கின் றருள்செயா விடினும் ஒப்பிலாய் நின்னடிக் கெனையே
அடைமைவைத் தேனுநின்னருட் பொருளிங்களித் திடவேண்டு மின்றெவைக்குங்
கடைமையேன் வேறோர் தேவரை யறியேன் கடவுணின் றிருவடி யறிக
படைமைசேர் கரத்தெம் பசுபதி நீயே யென்றுளம் பார்த்துநின் றுயே. 5

பார்த்துநிற் கின்று யாவையு மெளியேன் பரதவித் துறுகணு னெஞ்சம்
வேர்த்துநிற் கின்றேன் கண்டிலை கொல்லோ விடமுண்ட கண்டனீ யன்றோ
ஆர்த்துநிற் கின்று ரைம்புல வேட ரவர்க்கிலக் காவனோ தமியேன்
ஓர்த்துநிற் கின்றுர் பரவுநல் லொற்றி யூரில்வா ழென்றுற வினனே. 6

உறவனே யுன்னை யுள்கிநெஞ் சழலி னுறுமிழு தெனக்கசிந் துருகா
மறவனேன் றன்னை யாட்கொளா விடில்யான் வருந்துவ தன்றியென் செய்கேன்
நிறவனே வெள்ளை நீறணி பவனே நெற்றிமேற் கண்ணுடை யவனே
அறவனே தில்லை யம்பலத் தாடும் அப்பனே யொற்றியூர்க் கரசே. 7

கரைபடா வஞ்சப் பவக்கட லுழக்குங் கடையனே னின்றிரு வடிக்கு
விரைபடா மலர்போ லிருந்துழல் கின்றேன் வெற்றனே னென்செய விரைகேன்
திரைபடாக் கருணைச் செல்வவா ரிதியே திருவொற்றி யூர்வளர் தேனே
உரைபடாப் பொன்னே புரைபடா மணியே உண்ணுதற் கினியநல் லமுதே. 8

Koviloor Digital Library

நல்லமு தனையார் நின்றிரு வடிக்கே நண்புவைத் துருகுகின் றனராற்
புல்லமு தனையே னென்செய்வான் பிறந்தேன் புண்ணிய மென்பதொன் றறியேன்
சொல்லமு தனைய தோகையோர் பாகந் துன்னிய தோன்றலே கனியாக்
கல்லமு தாக்குங் கடனுனக் கன்றோ கடையனேன் கழறுவ தென்னே. 9

என்னைநின் னவனுக் கொண்டுநின் கருணை யென்னுநன் னீரினு லாட்டி
அன்னையப் பனுமாய்ப் பரிவுகொண் டாண்ட அண்ணலே நண்ணரும் பொருளே
உன்னருந் தெய்வ நாயக மணியே ஒற்றியூர் மேவுமென் னுறவே
நன்னர்செய் கின்றோ யென்செய்வே னிதற்கு நன்குகைம் மாறுநா யேனே. 10

திருச்சிற்றம்பலம்

19. அருள்விடை வேட்கை

திருவொற்றியூர்

கலிவிருத்தம்

திருச்சிற்றம்பலம்

போகங் கொண்ட புணர்முலை மாதொரு
பாகங் கொண்ட படம்பக்க நாதரே!
மாகங் கொண்ட வளம்பொழி லொற்றியின்
மோகங் கொண்டவெம் முன்னின் றருளிரோ. 1

தவள நீற்றுமெய்ச் சாந்த விநோதரே
பவள மேனிப் படம்பக்க நாதரே
கவள வீற்றுக் கரியுரி போர்த்தநீர்
இவளை யொற்றிவிட் டெங்ஙனஞ் சென்றிரோ. 2

சீல மேவித் திகழனற் கண்ணுென்று
பால மேவும் படம்பக்க நாதரே
ஞால மேவு நவையை யகற்றமுன்
ஆல முண்டவ ரல்லிர்கொ லையரே. 3

உடைகொள் கோவணத் துற்ற வழகரே
படைகொள் சூலப் படம்பக்க நாதரே
கடைகொள் நஞ்சுண்டு கண்டங் கறுத்தநீர்
இடையி லொற்றிவிட் டெங்ஙனஞ் சென்றிரோ. 4

நிறைய வாழ்தொண்டர் நீடுற வன்பவம்
பறைய நின்ற படம்பக்க நாதரே
வுறைய மாணிக் குயிரளித் திட்டநீர்
குறையி லாவொற்றிக் கோயிற்க ணுள்ளிரோ. 5

வணங்கொ ளுக மணித்தலை யைந்துடைப்
பணங்கொள் செல்வப் படம்பக்க நாதரே
கணங்கொள் காமனைக் காய்ந்துயி ரீந்தநீர்
வணங்கு வார்க்கென்கொல் வாய்திற வாததே. 6

Koviloor Digital Library

நாட நல்லிசை நல்கிய மூவர்தம்
பாடல் கேட்கும் படம்பக்க நாதரே
வாட லென்றொரு மாணிக் களித்தநீர்
ஈடி லென்னள வெங்கொளித் திட்டிரோ. 7

சுலவு காற்றனல் தூயமண் விண்புனல்
பலவு மாகும் படம்பக்க நாதரே
நிலவு தண்மதி நீள்முடி வைத்தநீர்
குலவு மென்றன் குறைதவிர்க் கீர்கொலோ. 8

அடியர் நெஞ்சத்து அருட்பெருஞ் சோதியோர்
படிவ மாகும் படம்பக்க நாதரே
நெடிய மாலுக்கு நேமி யளித்தநீர்
மிடிய னேனருண் மேவ விரும்பிரோ. 9

மதிகொ ளன்பர் மனமெனுந் திவ்வியப்
பதிகொள் செல்வப் படம்பக்க நாதரே
விதிகொ டுன்பத்தை வீட்டிய ளித்தநீர்
துதிகொள் வீரென் றுயரைத் துரத்துமே. 10

திருச்சிற்றம்பலம்

20. எழுத்தறி பெருமான்மாலை

திருவொற்றியூர்
கோச்சகக் கலிப்பா
திருச்சிற்றம்பலம்

சிந்தை மயங்கித் தியங்குகின்ற நாயேனை
முந்தை வினைதொலைத்துன் மொய்கழற்கா ளாக்காதே
நிந்தையுறு நோயால் நிகழவைத்தல் நீதியதோ
எந்தைநீ யொற்றி எழுத்தறியும் பெருமானே! 1

மத்தனைவன் நெஞ்சகனை வஞ்சகனை வன்பிணிகொள்
பித்தனைவீ ணுட்போக்கும் பேயேனை நாயேனை
முத்தனையா யுன்றன் முளரித்தாட் காளாக்க
எத்தனைநாட் செல்லும் எழுத்தறியும் பெருமானே. 2

நன்னெறிசே ரன்பர்தமை நாடிடவு நின்புகழின்
சென்னெறியைச் சேர்ந்திடவுஞ் செய்தா யெனக்குனக்கும்
முன்னறியேன் பின்னறியேன் மூடனேன் கைமாறிங்
கென்னறிவே னையா எழுத்தறியும் பெருமானே. 3

மைப்படியுங் கண்ணார் மயலுழக்கச் செய்வாயோ?
கைப்படிய வுன்றன் கழல்கருதச் செய்வாயோ?
இப்படியென் றப்படியென் றென்னறிவே னுன்சித்தம்
எப்படியோ வையா எழுத்தறியும் பெருமானே. 4

Koviloor Digital Library

நில்லா உடம்பை நிலையென்றே நேசிக்கும்
பொல்லாத நெஞ்சப் புலையனே னிவ்வுலகிற்
சொல்லா மனனோயாற் சோர்வுற் றலையுமல்லல்
எல்லா மறிவாய் எழுத்தறியும் பெருமானே. 5

தீதறிவே னன்கணுவுஞ் செய்யேன்வீ ணாட்போக்கும்
வாதறிவேன் வஞ்சகனேன் வல்வினையேன் வாய்மையிலேன்
சூதறிவேன் மாலயனுஞ் சொல்லரிய நின்பெருமை
யாதறிவே னையா எழுத்தறியும் பெருமானே. 6

மாறாத வன்பிணியால் மாழாந்து நெஞ்சயர்ந்தே
கூறாத துன்பக் கொடுங்கடற்குள் வீழ்ந்தடியேன்
ஆறா தரற்றி யழுகின்றே னின்செவியில்
ஏறாதோ வையா எழுத்தறியும் பெருமானே. 7

உண்ணாடும் வல்வினையா லோயாப் பிணியுழந்து
புண்ணாக நெஞ்சம் புழுங்குகின்றேன் புண்ணியனே
கண்ணாளா வுன்றன் கருணை யெனக்களிக்க
எண்ணாயோ வையா எழுத்தறியும் பெருமானே. 8

புன்செய்கை மாறாப் புலையமட மங்கையர்தம்
வன்செய்கை யாலே மயங்குகின்ற வஞ்சகனேன்
கொன்செய்கை மாறாத கூற்றன் வருவானேல்
என்செய்வே னையா எழுத்தறியும் பெருமானே. 9

சங்குடையான் றாமரையான் றாண்முடியுங் காண்பரிதாங்
கொங்குடைய கொன்றைக் குளிர்சடையாய் கோதையொரு
பங்குடையா யேழைமுகம் பாராது தள்ளிவிட்டால்
எங்கடைவே னையா எழுத்தறியும் பெருமானே. 10

மன்றினிடை நடஞ்செய் மாணிக்க மாமலையே
வென்றிமழுக் கையுடைய வித்தகனே யென்றென்று
கன்றி னயர்ந்தழுமென் கண்ணீர் துடைத்தருள
என்று வருவாய்? எழுத்தறியும் பெருமானே. 11

மன்னளவிற் சோதி மணிபோல்வாய் மாதவத்தோர்
தென்னளவும் வேணிச் சிவனே யெனவொருகாற்
சொன்னளவிற் சொன்னவர்தந் துன்பொழிப்பா யென்பரது
என்னளவிற் காணேன் எழுத்தறியும் பெருமானே. 12

மின்போல்வா ரிச்சையினால் வெம்புகின்றே னானுந்
தன்போல்வா யென்னீன்ற தாய்போல்வாய் சார்ந்துரையாப்
பொன்போல்வாய் நின்னருளிப் போதடியேன் பெற்றேனேல்
என்போல்வா ரில்லை எழுத்தறியும் பெருமானே. 13

Koviloor Digital Library

பூமாந்தும் வண்டெனநின் பொன்னருளைப் புண்ணியர்கள்
தாமாந்தி நின்னடிக்கீழ்ச் சார்ந்துநின்று ரையோநான்
காமாந்த காரமெனுங் கள்ளுண்டு **கண்மூடி**
ஏமாந்தேன் ஒற்றி எழுத்தறியும் பெருமானே. 14

பன்னருமிப் பார்நடையிற் பாடுமன்ற பாதகனேன்
துன்னியநின் பொன்னடியைச் சூழாதே னயிடினும்
புன்னிகரேன் குற்றம் பொறுக்கப் பொறுப்புனக்கே
என்னருமைத் தாய்நீ! எழுத்தறியும் பெருமானே. 15

வீட்டுக் கடங்கா விளையாட்டுப் பிள்ளையெனத்
தேட்டுக் கடங்காத தீமனத்தா லாந்துயரம்
பாட்டுக் கடங்காநின் பத்தரடிப் புகழ்போல்
ஏட்டுக் கடங்காது எழுத்தறியும் பெருமானே. 16

பன்னு மனத்தாற் பரிசிழந்த பாதகனேன்
துன்னுமல வெங்கதிரோன் சூழ்கின்ற சோடையினுல்
நின்னருணீர் வேட்டு நிலைகலங்கி வாடுகின்றேன்
இன்னுமறி யாயோ எழுத்தறியும் பெருமானே. 17

கல்லை நிகராங் கடைமனம்போங் கானெறியிற்
புல்லைமதித் தையோமைம் பூவிழந்த பொய்யடியேன்
ஒல்லைபடு கின்ற வொறுவே தனைதனக்கோர்
எல்லை யறியேன் எழுத்தறியும் பெருமானே. 18

பொன்னைமதித் தையாநின் பொன்னடியைப் போற்றாத
கன்னிகரு நெஞ்சாற் கலங்குகின்ற கைதவனேன்
இன்ன லுழக்கின்ற வேழைகட்கு மேழைகண்டாய்
என்னை விடாதே எழுத்தறியும் பெருமானே. 19

மாசுவரே யென்னு மலக்கடலில் வீழ்ந்துலகோர்
ஆசுவரே யென்ன அலைவேனை யாளாயேல்
கூசுவரே கைகொட்டிக் கூடிச் சிரித்தடியார்
ஏசுவரே யொற்றி எழுத்தறியும் பெருமானே. 20

ஊர்சொல்வேன் பேர்சொல்வே னுத்தமனே நின்றிருத்தாட்
சீர்சொல்வே னென்றனைநீ சேர்க்கா தகற்றுவையேல்
நேர்சொல்வா யுன்றனக்கு நீதியி தல்லவென்றே
யார்சொல்வா ரையா எழுத்தறியும் பெருமானே. 21

நீக்கமிலா மெய்யடியர் நேசமிலாப் பொய்யடியேன்
ஊக்கமிலா நெஞ்சத்தி னேட்டகலச் செய்வாயேல்
தூக்கமிலா வானந்தத் தூக்கமன்றி மற்றுமிங்கோர்
ஏக்கமிலே னொற்றி எழுத்தறியும் பெருமானே. 22

Koviloor Digital Library

போகின்ற வஞ்சகரைப் போக்கியுன்றன் பொன்னடிக்காள்
ஆகின்ற மேலோ ரடிவழுத்தா நாயேற்குப்
பாகின் றனிச்சுவையிற் பாங்காகு நின்னருளை
ஈகின்ற தென்றோ எழுத்தறியும் பெருமானே. 23

ஊழை யகற்ற வுளவறியாப் பொய்யனிவன்
பீழைமன நம்மைப் பெறாதம் மனங்கொடிய
தாழையென வெண்ணியென்னைத் தள்ளிவிட்டாலென்செய்வேன்
ஏழைநா னொற்றி எழுத்தறியும் பெருமானே. 24

மடுக்க முடியா மலவிருட்டிற் சென்றுமனங்
கடுக்கமுடி யாப்புலனாற் கட்டிச் சுமக்கவைத்த
தொடுக்க முடியாத துன்பச் சுமையையினி
எடுக்கமுடி யாதே எழுத்தறியும் பெருமானே. 25

முள்ளளவு நெஞ்ச முழுப்புலைய மாதர்களாங்
கள்ளளவு நாயிற் கடைப்பட்ட வென்றனக்கு
உள்ளளவு மன்பர்க் குதவுமுன்றாட் கன்பொருசிற்
றெள்ளளவு முண்டோ எழுத்தறியும் பெருமானே. 26

பண்ண முடியாப் பரிபவங்கொண் டிவ்வுலகில்
நண்ண முடியா நலங்கருதி வாடுகின்றேன்
உண்ணமுடி யாவமுதா முன்னையன்றி யெவ்வெவர்க்கும்
எண்ணமுடி யாதே எழுத்தறியும் பெருமானே. 27

வெங்கொளித்தேள் போன்ற வினையால் வெதும்பிமனம்
அங்கொளிக்கா துன்னை யழைத்தழுது வாடுகின்றேன்
இங்கொளிக்கா நஞ்சமுண்ட வென்னருமை யப்பாநீ
எங்கொளித்தா யொற்றி எழுத்தறியும் பெருமானே. 28

பித்தளைக்குங் காமப் பெரும்பேய் மயக்குமயல்
விஇத்தனைத்தா மாணவம்பொய் விறுமழுக் காறுசினங்
கொத்தனைத்தாம் **வஞ்சங் கொலைமுதலாம் பாவங்கள்**
இத்தனைக்கு நான்காண் எழுத்தறியும் பெருமானே. 29

ஒல்லையே நஞ்சனைத்து முண்ட தயாநிதிநீ
அல்லையோ நின்றிங் கயர்வேன்முன் வந்தொருசொற்
சொல்லையோ வொற்றியூர்த் தூயதிருக் கோயிலுணீ
இல்லையோ வையா எழுத்தறியும் பெருமானே. 30

நினையுடையாய் நீயன்றி நேடிலெங்கு மில்லாதாய்
மனையுடையார் மக்களெனும் வாழ்க்கையிடைப் பட்டவமே
இனையுடையா னென்றிங் கெனையாள்வ துன்கடனே
எனையுடையா யொற்றி எழுத்தறியும் பெருமானே. 31

திருச்சிற்றம்பலம்

Koviloor Digital Library

21. நெஞ்சொடு நேர்தல்

திருவொற்றியூர்

கலிவிருத்தம்

திருச்சிற்றம்பலம்

ஒக்க நெஞ்சமே யொற்றி யூர்ப்படம்
பக்க நாதனைப் பணிந்து வாழ்த்தினல்
மிக்க காமத்தின் வெம்மை யால்வருந்
துக்க மியாவையுந் தூர வோடுமே. 1

ஓடு நெஞ்சமே யொன்று கேட்டிநீ
நீடு மொற்றியூர் நிமலன் மூவர்கள்
பாடு மெம்படம் பக்க நாதன்ருள்
நாடு நாடிடி னுடு நம்மதே. 2

நம்பு நெஞ்சமே நன்மை யெய்துமால்
அம்பு யன்புக ழண்ண லொற்றியூர்ப்
பம்பு சீர்ப்படம் பக்க னுன்னலார்
தம்பு ரஞ்சுடுந் தம்பி ,ரானையே. 3

தம்ப லம்பெறுந் தைய லார்களுல்
வெம்ப லந்தரும் வெய்ய நெஞ்சமே
அம்ப லத்தினி லமுதை யொற்றியூர்ச்
செம்ப லத்தைநீ சிந்தை செய்வையே. 4

செய்யும் வண்ணநீ தேறி நெஞ்சமே
உய்யும் வண்ணமா மொற்றி யூர்க்குளே
மெய்யும் வண்ணமா ணிக்க வெற்பருள்
பெய்யும் வண்ணமே பெறுதல் வேண்டுமே. 5

வேண்டு நெஞ்சமே மேவி யொற்றியூர்
ஆண்டு நின்றரு ளரசின் பொற்பதம்
பூண்டு கொண்டுளே போற்றி நிற்பையேல்
யாண்டுந் துன்பநீ யடைத லில்லையே. 6

இல்லை யுண்டென வெய்தி யையுறுங்
கல்லை யொத்தவென் கன்ம நெஞ்சமே
ஒல்லை யொற்றியூ ருற்று வாழ்தியேல்
நல்லை நல்லைநீ நட்பின் மேலையே. 7

மேலை யந்தகன் வெய்ய தூதுவர்
ஓலை காட்டுமுன் னொற்றி யூரில்வாழ்
பாலை சேர்ப்படம் பக்க நாதர்தங்
காலை நாடிநற் கதியி னிற்பையே. 8

Koviloor Digital Library

நிற்ப தென்றுநீ நீல நெஞ்சமே
அற்ப மாதர்தம் மவல நீங்கியே
சிற்டர ரன்றிருத் தில்லை யம்பலப்
பொற்ப னெற்றியிற் புகுந்து போற்றியே. 9

போற்றி யொற்றியூர்ப் புண்ணி யன்றிரு
நீற்றி னன்றனை நினைந்து நிற்பையேல்
தோற்ற ரும்பரஞ் சோதி நல்லருள்
ஊற்றெ ழுங்கட லொக்க நெஞ்சமே. 10

திருச்சிற்றம்பலம்

22. திருப்புகழ் விலாசம்

திருவொற்றியூர்

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

தூங்க வெண்பொடி யணிந்துநின் கோயிற்
றொழும்பு செய்துநின் றுணைப்பத மேத்திச்
செங்கண் மாலயன் றேடியுங் காணாச்
செல்வ நின்னருள் சேர்குவ தென்றோ
எங்க ளுள்ளுவந் தூறிய வமுதே
இன்ப மேயிமை யான்மகட் கரசே
திங்கள் தங்கிய சடையுடை மருந்தே
திகழு மொற்றியூர்ச் சிவபெரு மானே. 1

கண்ண னேடயன் காண்பருஞ் சுடரே
கந்த னென்னுமோர் கனிதருந் தருவே
எண்ண மேதகு மன்பர்தந் துணையே
யிலங்குந் திவ்விய வெண்குணப் பொருப்பே
அண்ண லேதிரு **வாலங்காட் டுறையும்**
அம்மை யப்பனே! யடியனேன் றன்னைத்
திண்ண மேயடித் தொழும்பனுய்ச் செய்வாய்த்
திகழு மொற்றியூர்ச் சிவபெரு மானே. 2

விடங்க லந்தருண் மிடறுடை யவனே
வேதன் மால்புகழ் விடையுடை யவனே
கடங்க லந்தமா வுரியுடை யவனே
கந்த னைத்தருங் கனிவுடை யவனே
இடங்க லந்தபெண் கூறுடை யவனே
எழில்கொள் சாமத்தி னிசையுடை யவனே
திடங்க லந்தகூர் மழுவுடை யவனே
திகழு மொற்றியூர்ச் சிவபெரு மானே. 3

Koviloor Digital Library

கஞ்ச னோர்தலை நக்த்தடர்த் தவனே
காமன் வெந்திடக் கண்விழித் தவனே
தஞ்ச மானவர்க் கருள்செயும் பரனே
சாமிக் கோர்திருத் தந்தையா னவனே
நஞ்ச மார்மணி கண்டனே யெவைக்கும்
நாதனே சிவ ஞானிகட் கரசே
செஞ்சொன் மாமறை யேத்துறும் பதனே
திகழு மொற்றியூர்ச் சிவபெரு மானே. 4

ஏல வார்குழ லாளிடத் தவனே
என்னை யாண்டவ னேயென தரசே
கோல மாகமா லுருக்கொண்டுங் காணுக்
குரைக ழற்பதக் கோமளக் கொழுந்தே
ஞால மீதிலெம் போல்பவர் பிழையை
நாடிடா தரு ணற்குணக் குன்றே
சீல மேவிய தவத்தினர் போற்றத்
திகழு மொற்றியூர்ச் சிவபெரு மானே. 5

ஆறு வாண்முகத் தமுதெழுங் கடலே
அயனு மாலுநின் றறிவரும் பொருளே
ஏறு மீதுவந் தேறுமெம் மரசே
யெந்தை யேயெமை யேன்றுகொள் ளிறையே
வீறு கொன்றையஞ் சடையுடைக் கனியே
வேத நாறிய மென்மலர்ப் பதனே
தேறு நெஞ்சினர் நாடொறும் வாழ்த்தத்
திகழு மொற்றியூர்ச் சிவபெரு மானே. 6

மாறு பூத்தவென் னெஞ்சினைத் திருத்தி
மயக்க நீக்கிட வருகுவ தென்றோ
ஏறு பூத்தவென் னின்னுயிர்க் குயிரே
யாவு மாகிநின் றிலங்கிய பொருளே
நீறு பூத்தொளி நிறைந்தவெண் ணெருப்பே
நித்தி யானந்தர்க் குற்றநல் லுறவே
சேறு பூத்தசெந் தாமரை முத்தந்
திகழு மொற்றியூர்ச் சிவபெரு மானே. 7

மாலின் கண்மலர் மலர்திருப் பதனே
மயிலின் மேல்வரு மகவுடை யவனே
ஆலின் கீழற மருள்புரிந் தவனே
அரவென் போர்களை யடிமைகொள் பவனே
காலிற் கூற்றுதைத் தருள்செயுஞ் சிவனே
கடவுளே நெற்றிக் கண்ணுடை யவனே
சேலி னீள்வயற் செறிந்தெழி லோங்கித்
திகழு மொற்றியூர்ச் சிவபெரு மானே. 8

Koviloor Digital Library

நாட்டு முப்புர நகைத்தெரித் தவனே
நண்ணி யம்பல நடஞ்செயும் பதனே
வேட்டு வெண்டலைத் தார்புனைந் தவனே
வேட னெச்சிலை விரும்பியுண் டவனே
கோட்டு மேருவைக் கோட்டிய புயனே
குற்ற முங்குண மாக்குறிப் பவனே
நீட்டு மெய்ப்புகழ்த் திசைபரந் தோங்கத்
திகழு மொற்றியூர்ச் சிவபெரு மானே. 9

அம்ப லத்துணின் றுடவல் லானே
ஆனி வர்ந்துவந் தருள்புரி பவனே
சம்பு சங்கர சிவசிவ வென்போர்
தங்க ளுள்ளகஞ் சார்ந்திருப் பவனே
தும்பை வன்னியஞ் சடைமுடி யவனே
தூய னேபரஞ் சோதியே யெங்கள்
செம்பொனே செழும் பவளமா மலையே
திகழு மொற்றியூர்ச் சிவபெரு மானே. 10

திருச்சிற்றம்பலம்

23. திருச்சாதனத் தெய்வத்திறம்

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

உடையாயுன் னடியவர்க்கு மவர்மேற் பூண்ட
ஒண்மணியாங் கண்மணிக்கு மோங்கு சைவ
அடையாள மென்னவொளிர் வெண்ணீற் றுக்கும்
அன்பிலே னஞ்சாம லந்தோ வந்தோ
நடையாய வுடன்முழுது நாவாய் நின்று
நவில்கின்றே னென்பாவி நாவைச் சற்றும்
இடையாத கொடுந்தீயாற் சுடினு மன்றி
என்செயினும் போதாதே யெந்தா யெந்தாய். 1

கண்ணுதலே நின்னடியார் தமையு நோக்கேன்
கண்மணிமா லைக்கெனினுங் கனிந்து நில்லேன்
பண்ணுதல்சேர் திருநீற்றுக் கோலந் தன்னைப்
பார்த்தேனு மஞ்சுகிலேன் பயனி லாமே
நண்ணுதல்சே ருடம்பெல்லா நாவாய் நின்று
நவில்கின்றே னென்கொடிய நாவை யந்தோ!
எண்ணுதல்சேர் கொடுந் தீயாற் சுடினுமன்றி
என்செயினும் போதாதே யெந்தா யெந்தாய். 2

வஞ்சமிலார் நெஞ்சகத்தே மருவு முக்கண்
மாமணியே யுனைநினையேன் வாளா நாளைக்
கஞ்சமலர் முகத்தியர்க்கும் வாதிற் றேன்றுங்
களிப்பினுக்குங் கழிக்கின்றேன் கடைய னேனை

Koviloor Digital Library

கஞ்சமுணக் கொடுத்துமடித் திடினும் வாளால்
நசிப்புறவே துணித்திடினு நலியத் தீயால்
எஞ்சலுறச் சுடினுமன்றி யந்தோ! இன்னும்
என்செயினும் போதாதே யெந்தா யெந்தாய். 3

அருள்பழுக்கும் கற்பகமே யரசே முக்கண்
ஆரமுதே நினைப்புகழே னந்தோ வஞ்ச
மருள்பழுக்கு நெஞ்சகத்தேன் வாளா நாளை
வாதமிட்டுக் கழிக்கின்றேன் மதியி லேனை
வெருள்பழுக்குங் கடுங்காட்டில் விடினு மாற்று
வெள்ளத்தி லடித்தேக விடினும் பொல்லா
இருள்பழுக்கும் பிலஞ்சேர விடினு மன்றி
என்செயினும் போதாதே யெந்தா யெந்தாய். 4

பெருங்கருணைக் கடலேயென் குருவே முக்கட்
பெருமானே நினைப்புகழேன் பேயே னந்தோ!
கருங்கன்மனக் குரங்காட்டி வாளா நாளைக்
கழிக்கின்றேன் பயனறியாக் கடைய னேனை
ஒருங்குருள வுடல்பதைப்ப வுறுங்குன் றேற்றி
உருட்டுகினு முயிர்நடுங்க வுள்ள மேங்க
இருங்கழுவி லேற்றுகினு மன்றி யின்னும்
என்செயினும் போதாதே யெந்தா யெந்தாய். 5

தொழுகின்றோ ருளத்தமர்ந்த சுடரே முக்கட்
சுடர்க்கொழுந்தே நின்பதத்தைத் துதியேன் வாதில்
விழுகின்றே னல்லோர்கள் வெறுப்பப் பேசி
வெறித்துழலு நாயனையேன் விழல னேனை
உழுகின்ற நுகப்படைகொண் டுலையத் தள்ளி
உழக்கினுநெட் டுடனடுங்க வுறுக்கி மேன்மேல்
எழுகின்ற கடலிடைவீழ்த் திடினு மன்றி
என்செயினும் போதாதே யெந்தா யெந்தாய். 6

விருப்பாகு மதிச்சடையாய் விடையா யென்றே
மெய்யன்போ டுனைத்துதியேன் விரைந்து வஞ்சக்
கருப்பாயும் விலங்கெனவே வளர்ந்தே நாளைக்
கழிக்கின்றேன் கருநெஞ்சக் கள்வ னேனைப்
பொருப்பாய யானையின்கா லிடினும் பொல்லாப்
புழுத்தலையிற் சோரிபுறம் பொழிய நீண்ட
இருப்பாணி யேற்றுகினு மன்றி யின்னும்
என்செயினும் போதாதே யெந்தா யெந்தாய். 7

அக்கநுதற் பிறைச்சடையாய் நின்று ளேத்தேன்
ஆண்பனைபோ னிகநீண்டே னறிவொன் றில்லேன்
மிக்கவொதி போற்பருத்தேன் கருங்க டாப்போல்
வீண்கருமத் துழல்கின்றேன் விழல னேனைச்

Koviloor Digital Library

செக்கிடைவைத் துடல்குழம்பிச் சிதைய வந்தோ
திருப்பிடினு மிருப்பறைமுட் சேரச் சேர்த்து
எக்கரிடை யுருட்டுகினு மன்றி யின்னும்
என்செயினும் போதாதே யெந்தா யெந்தாய். 8

அன்புடனின் பதம்புகழாப் பாவி நாவை
யறத்துணியே னின்னழகை யமர்ந்து காணுத்
துன்புறுகண் ணிரண்டினையுஞ் சூல்றே னின்னைத்
தொழாக்கையை வாளதனுற் றுண்ட மாக்கேன்
வன்பறநின் றனைவணங்காத் தலையை யந்தோ
மடித்திலே னொதியேபோல் வளர்ந்தே னென்னை
இன்பறுவல் லெரியிடைவீழ்த் திடினு மன்றி
என்செயினும் போதாதே யெந்தா யெந்தாய். 9

தேவேநின் னடிநினையா வஞ்ச நெஞ்சைத்
தீமூட்டிச் சிதைக்கறியேன் செதுக்கு கில்லேன்
கோவேநின் னடியர்தமைக் கூடாப் பொய்மைக்
குடிகொண்டேன் புலைகொண்ட கொடியே னந்தோ
நாவேற நினைத்துதியே னலமொன் றில்லேன்
நாய்க்கடைக்குங் கடைப்பட்டே னண்ணு கின்றோர்க்கு
ஈவேது மறியேனிங் கென்னை யந்தோ
என்செயினும் போதாதே யெந்தா யெந்தாய். 10

திருச்சிற்றம்பலம்

24. தியாகவண்ணப்பதிகம்

திருவொற்றியூர்

எழுசீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

காரார் குழலா ளுமையோ டயில்வேற் காளையொ டுந்தா னமர்கின்ற
ஏரார் கோலங் கண்டு களிப்பா னென்னு மெமக்கொன் றருளானேல்
நீரார் சடைமேற் பிறையொன் றுடையா னிதிக்கோன் றோழ னெனநின்றான்
பேரா ரொற்றி யூரான் றியாகப் பெருமான் பிச்சைப் பெருமானே. 1

தண்ணர் நீபத் தாரா னொடுமெந் தாயோ டுந்தா னமர்கின்ற
கண்ணார் கோலங் கண்டு களிப்பான் கருது மெமக்கொன் றருளானேற்
பண்ணா ரின்சொற் பதிகங் கொண்டு படிக்கா சளித்த பரமனோர்
பெண்ணார் பாக னொற்றித் தியாகப் பெருமான் பிச்சைப் பெருமானே. 2

பந்தர்க் கருளும் பாவையொ டும்வேற் பாலனொ டுந்தா னமர்கின்ற
நித்தக் கோலங் கண்டு களிப்பா னினைக்கு மெமக்கொன் றருளானேற்
சித்தப் பெருமான் றில்லைப் பெருமான் றெய்வப் பெருமான் சிவபெருமான்
பித்தப் பெருமா னொற்றித் தியாகப் பெருமான் பிச்சைப் பெருமானே. 3

Koviloor Digital Library

மன்னுங் கதிர்வேன் மகனு ரோடும் மலையா ளொடுந்தான் வதிகின்ற
துன்னுங் கோலங் கண்டு களிப்பான் றுதிக்கு மெமக்கொன் றருளானேல்
மின்னுஞ் சூலப் படையான் விடையான் வெள்ளி மலையொன் றதுவுடையான்
பின்னுஞ் சடையா னொற்றித் தியாகப் பெருமான் பிச்சைப் பெருமானே. 4

அணிவேற் படைகொண் மகனு ரொடுமெம் மம்மை யொடுந்தா னமர்கின்ற
தணியாக் கோலங் கண்டுக ளிக்கத் தகையா தெமக்கொன் றருளானேல்
மணிசேர் கண்ட னெண்டோ ளுடையான் வடபாற் கனக மலைவில்லான்
பிணிபோக் கிடுவா னொற்றித் தியாகப் பெருமான் பிச்சைப் பெருமானே. 5

சூத மெறிவேற் ஞேன்றலொ டுந்தன் றுணைவி யொடுந்தா னமர்கின்ற
காதற் கோலங் கண்டுக ளிப்பான் கருது மெமக்கொன் றருளானேல்
ஈதல் வல்லா னெல்லா முடையா னிமையோ ரயன்மாற் கிறையானுன்
பேத மில்லா னொற்றித் தியாகப் பெருமான் பிச்சைப் பெருமானே. 6

வெற்றிப் படைவேற் பிள்ளை யோடும் வெற்பா ளொடுந்தா னமர்கின்ற
மற்றிக் கோலங் கண்டுக ளிப்பான் வருந்து மெமக்கொன் றருளானேற்
கற்றைச் சடையான் கண்மூன் றுடையான் கரியோ னயனுங் காணுதான்
பெற்றத் திவர்வா னொற்றித் தியாகப் பெருமான் பிச்சைப் பெருமானே. 7

வரமன் றலினுர் குழலா ளொடும்வேன் மகனு ரொடுந்தா னமர்கின்ற
திரமன் றவுநின் றெழில்கண் டிடுவான் சிறக்க வெமக்கொன் றருளானேற்
பரமன் றனிமால் விடையொன் றுடையான் பணியே பணியாப் பரிவுற்றுன்
பிரமன் றலையா னொற்றித் தியாகப் பெருமான் பிச்சைப் பெருமானே. 8

அறங்கொள் ளுமையோ டயிலேந் தியவெம் மைய னொடுந்தா னமர்கின்ற
திறங்கொள் கோலங் கண்டுக ளிப்பான் சிறக்க வெமக்கொன் றருளானேல்
மறங்கொள் ளெயின்மூன் றெரித்தான் கனக மலையா னடியார் மயல்தீர்ப்பான்
பிறங்குஞ் சடையா னொற்றித் தியாகப் பெருமான் பிச்சைப் பெருமானே. 9

தேசா ரயில்வேன் மகனு ரொடுந்தன் றேவி யொடுந்தா னமர்கோலம்
ஈசா வெனநின் றேத்திக் காண வெண்ணு மெமக்கொன் றருளானேற்
காசா ரரவக் கச்சே ரிடையான் கண்ணுர் நுதலான் கனிவுற்றுப்
பேசார்க் கருளா னொற்றித் தியாகப் பெருமான் பிச்சைப் பெருமானே. 10

திருச்சிற்றம்பலம்

25. ஆடலமுதப்பத்து

திருவொற்றியூர் — திருத்தில்லை
எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்
திருச்சிற்றம்பலம்

சிந்தை நொந்துநொந் தயர்கின்றேன் சிவனே
செய்வ தோர்ந்திலேன் தீக்குண முடையேன்
வந்து நின்னடிக் காட்செய வென்றல்
வஞ்ச நெஞ்சமென் வசநின்ற திலையே

Koviloor Digital Library

எந்தை நின்னரு ளுண்டெனி லுய்வேன்
இல்லை யென்னினு னில்லையுந் திடலே
அந்தி வானிறத் தொற்றியூ ரரசே
அம்பலத் தினின் ருடல்செய் யமுதே. 1

மாய நெஞ்சமோ நின்னடி வழுத்தா
வண்ண மென்றனை வலிக்கின்ற ததனுற்
றீய னுயினே னென்செய்வேன் சிவனே
திருவ ருட்குநான் சேயனு மானேன்
காய வாழ்க்கையிற் காமமுண் டுள்ளங்
கலங்கு கின்றனன் களைகண்மற் றறியேன்
ஆய வொற்றியூ ரண்ணலே தில்லை
அம்ப லத்தினின் ருடல்செய் யமுதே. 2

உன்னை யுன்னிநெக் குருகிநின் றேத்த
உள்ள மென்வச முற்றதின் றேனும்
என்னை யாளுத லுன்கட னன்றேல்
இரக்க மென்பதுன் னிடத்திலை யன்றோ
முன்னை வல்வினை முடித்திடிற் சிவனே
மூடனே னுக்கு முன்னிற்ப தெவனோ
அன்னை யப்பனே யொற்றியூ ரரசே
அம்ப லத்தினின் ருடல்செய் யமுதே. 3

என்ன நான்சொலி நிறுத்தினு நில்லா
தேகு கின்றதிவ் வேழையேன் மனந்தான்
உன்ன தின்னரு ளொருசிறி துண்டேல்
ஒடுக்கி நிற்பனு வுண்மை மற்றின்றேல்
இன்ன தென்றறி யாமல விருளில்
இடர்கொள் வேனன்றி யென்செய்வேன் சிவனே
அன்ன துன்செய லொற்றியூ ரரசே
அம்ப லத்தினின் ருடல்செய் யமுதே. 4

பாவி நெஞ்சமென் பாலிரா தோடிப்
பாவை யார்மயற் படிந்துழைப் பதனுற்
சேவி யாதவென் பிழைபொறுத் தாளுஞ்
செய்கை நின்னதே செப்பலென் சிவனே
காவி நேர்விழி மலைமகள் காணக்
கடலி னஞ்சுண்டு கண்ணா னுயிர்கள்
ஆவி யீந்தரு ளொற்றியெம் மிறையே
அம்ப லத்தினின் ருடல்செய் யமுதே. 5

மூட நெஞ்சமென் மொழிவழி நில்லா
மோக வாரியின் முழுகுகின் றதுகாண்
தேட வென்வச மன்றது சிவனே
திருவ ருட்கடற் றிவலையொன் றுறுமேல்

Koviloor Digital Library

நாட நாடிய நலம்பெறு மதனல்
நானு முய்குவே னல்கிடல் வேண்டும்
ஆட லொற்றியாய் பெரும்பற்றப் புலியூர்
அம்ப லத்தினின் ருடல்செய் யமுதே. 6

கலங்கு கின்றவென் கண்ணுன தருளோர்
கடுகி னெல்லைதான் கலந்திடு மானல்
விலங்கு கின்றவென் னெஞ்சகின் றிடுமால்
வேறு நான்பெறும் வேட்கையு மின்ருன்
மலங்கு கின்றதை மாற்றுவ னுனது
மலர்ப்பொற் ருளலான் மற்றிலன் சிவனே
அலங்கு கின்றசீ ரொற்றியூ ரிறையே
அம்ப லத்தினின் ருடல்செய் யமுதே. 7

மறைவ தென்னையு மறைப்பது பொல்லா
வஞ்ச நெஞ்சமென் வசப்பட லிலைகாண்
இறைவ நின்னருட் கென்செய்வோ மெனவே
எண்ணி யெண்ணிநா னேங்குகின் றனனல்
உறைவ துன்னடி மலரன்றி மற்றென்
றுணர்ந்தி லேனிஃ துண்மைநீ யறிதி
அறைவ தென்னநா னொற்றியூ ரரசே
அம்ப லத்தினின் ருடல்செய் யமுதே. 8

ஒருக ணப்பொழு தேனுநின் னடியை
உள்கி டாதுள மோடுகின் றதனல்
திருக ணப்பெறுந் தீயனேன் செய்யுந்
திறம றிந்திலேன் செப்பலென் சிவனே
வருக ணத்துடல் நிற்குமோ விழுமோ
மாயு மோவென மயங்குவேன் றன்னை
அருக ணைத்தரு ளொற்றியூ ரிறையே
அம்ப லத்தினின் ருடல்செய் யமுதே. 9

யாது நின்கருத் தறிந்திலேன் மனமோ
என்வ சப்படா திருத்தலை யுரைத்தேன்
தீது செய்யினும் பொறுத்தெனைச் சிவனே
தீய வல்வினைச் சேர்ந்திடா வண்ணம்
பாது காப்பதுன் பரமின்றேற் பலவாய்ப்
பகர்த லென்னகாண் பழிவரு முனக்கே
யாது காண்டியெம் மொற்றியூ ரரசே
அம்ப லத்தினின் ருடல்செய் யமுதே. 10

திருச்சிற்றம்பலம்

Koviloor Digital Library

26. திருவடிச் சரண்புகல்

திருவொற்றியூர்
எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்
திருச்சிற்றம்பலம்

ஓட லெங்கணு நமக்கென்ன குறைகாண்
உற்ற நற்றுணை யொன்றுமில் லார்போல்
வாட னெஞ்சமே வருதியென் னுடனே
மகிழ்ந்து நாமிரு வருஞ்சென்று மகிழ்வாய்
கூட னோர்திரு வொற்றியூ ரகத்துக்
கோயின் மேவிநங் குடிமுழு தாளத்
தாட லந்தரு நமதருட் செல்வத்
தந்தை யாரடிச் சரண்புக லாமே. 1

ஏங்கி நோகின்ற தெற்றினுக் கோநீ
எண்ணி வேண்டிய தியாவையு முனக்கு
வாங்கி யீகுவ னென்றுக்கு மஞ்சேல்
மகிழ்ந்து நெஞ்சமே வருதியென் னுடனே
ஓங்கி வாழொற்றி யூரிடை யரவும்
ஒளிகொள் திங்களுங் கங்கையுஞ் சடைமேல்
தாங்கி வாழுநந் தாணுவாஞ் செல்வத்
தந்தை யாரடிச் சரண்புக லாமே. 2

கயவ ரில்லிடைக் கலங்கலை நெஞ்சே
காம வைம்புலக் கள்வரை வீட்டி
வயம ளிக்குவன் காண்டியென் மொழியை
மறுத்திடே லின்று வருதி யென்னுடனே
உயவ ளிக்குநல் லொற்றியூ ரமர்ந்தங்
குற்று வாழ்த்திநின் றுன்னுகின் றவர்க்குத்
தயவ ளிக்குநந் தனிமுதற் செல்வத்
தந்தை யாரடிச் சரண்புக லாமே. 3

சண்ட வெம்பவப் பிணியினுற் றந்தை
தாயி லாரெனத் தயங்குகின் றுயே
மண்ட லத்துழ னெஞ்சமே சுகமா
வாழ வேண்டிடில் வருதியென் னுடனே
ஒண்ட லத்திரு வொற்றியூ ரிடத்தும்
உன்னு கின்றவ ருள்ளக மெனுமோர்
தண்ட லத்தினுஞ் சார்ந்தநஞ் செல்வத்
தந்தை யாரடிச் சரண் புகலாமே. 4

விடங்கொள் கண்ணின ரடிவிழுந் தையோ
வெட்கி னையிந்த விதியுனக் கேனே
மடங்கொ னெஞ்சமே நினக்கின்று நல்ல
வாழ்வு வந்தது வருதியென் னுடனே

Koviloor Digital Library

இடங்கொள் பாரிடை நமக்கினி யொப்பார்
யார்கண்டா யொன்று மெண்ணலை கமலத்
தடங்கொ ளொற்றியூ ரமர்ந்தநஞ் செல்வத்
தந்தை யாரடிச் சரண்புக லாமே. 5

பொருந்தி யினருட் புகுந்துவீண் காலம்
போக்கி நின்றனை போனது போக
வருந்தி யின்னுமிங் குழன்றிடே னெஞ்சே
வாழ்க வாழ்கநீ வருதியென் னுடனே
திருந்தி நின்றநம் மூவர்தம் பதிகச்
செய்யதீந் தமிழ்த் தேறலுண் டருளைத்
தருந்தென் னொற்றியூர் வாழுநஞ் செல்வத்
தந்தை யாரடிச் சரண்புக லாமே. 6

நாட்ட முற்றனை யெழுமையும் பிரியா
நல்ல நெஞ்சமே நங்கையர் மயலால்
வாட்ட முற்றிவண் மயங்கினை யையோ
வாழ வேண்டிடில் வருதியென் னுடனே
கோட்ட மற்றிரு மலர்க்கரங் கூப்பிக்
கும்பிடும் பெருங் குணத்தவர் தமக்குத்
தாட்ட லந்தரு மொற்றியூர்ச் செல்வத்
தந்தை யாரடிச் சரண்புக லாமே. 7

உடுக்க வேண்டிமுன் னுடை யிழந்தார்போல்
உள்ள வாகுமென் றுன்னிடா தின்பம்
மடுக்க வேண்டிமுன் வாழ் விழந்தாயே
வாழ வேண்டிடில் வருதியென் னுடனே
அடுக்க வேண்டிநின் றழுதழு தேத்தி
அருந்த வத்தின ரழிவுறுப் பவத்தைத்
தடுக்க வேண்டுநல் லொற்றியூர்ச் செல்வத்
தந்தை யாரடிச் சரண்புக லாமே. 8

மோக மாதியால் வெல்லுமைம் புலனும்
மூட வேடரை முதலற வெறிந்து
வாகை யீகுவன் வருதியென் னுடனே
வஞ்ச வாழ்க்கையின் மயங்கு மென்னெஞ்சே
போக நீக்கிநற் புண்ணியம் புரிந்து
போற்றி நாடொறும் புகழ்ந்திடு மவர்க்குச்
சாகை நீத்தரு ளொற்றியூர் செல்வத்
தந்தை யாரடிச் சரண்புக லாமே. 9

பசியெ டுக்குமுன் னமுதுசே கரிப்பார்
பாரி னோர்களப் பண்பறிந் திலையோ
வசியெ டுக்குமுன் பிறப்பதை மாற்று
மதியி னெஞ்சமே! வருதியென் னுடனே

Koviloor Digital Library

நிசியெ டுக்குநற் சங்கவை யீன்ற
நித்தி லக்குவை நெறிப்பட வோங்கிச்
சசியெ டுக்குநல் லொற்றியூர்ச் செல்வத்
தந்தை யாரடிச் சரண்புக லாமே. 10

திருச்சிற்றம்பலம்

27. சிவாநந்தப்பத்து

திருவொற்றியூர் — திருத்தில்லை
எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்
திருச்சிற்றம்பலம்

இச்சை யுண்டெனக் குன்றிரு மலர்த்தாள்
எய்தும் வண்ணமிங் கென்செய வல்லேன்
கொச்சை நெஞ்சமென் குறிப்பினில் லாது
குதிப்பி னின்றது மதிப்பினிவ் வுலகிற்
பிச்சை யுண்டெனிற் பிச்சரிற் சீறும்
பேய ருண்மனை நாயென வுழைத்தேன்
செச்சை மேனியெந் திருவொற்றி யரசே
தில்லை யோங்கிய சிவாநந்தத் தேனே. 1

ஐய நின்னுடை யன்பர்க ளெல்லாம்
அழிவிலின் பமுற் றருகிருக் கின்றார்
வெய்ய நெஞ்சகப் பாவியேன் கொடிய
வீணனே னிங்கு வீழ்கதிக் கிடமாய்
வைய வாழ்க்கையின் மயங்குகின் றனன்மேல்
வருவ தோர்ந்திலன் வாழ்வடை வேனோ.
செய்ய வண்ணனே யொற்றியம் பொருளே
தில்லை யோங்கிய சிவாநந்தத் தேனே. 2

மடிகொ ணெஞ்சினால் வள்ளலுன் மலர்த்தாள்
மறந்து வஞ்சக வாழ்க்கையை மதித்தேன்
துடிகொ ணேரிடை மடவியர்க் குருகிச்
சுழல்கின் றேனருட் சுகம்பெறு வேனோ
வடிகொள் வேற்கரத் தண்ணலை யீன்ற
வள்ள லேயென வாழ்த்துகின் றவர்தஞ்
செடிக ணீக்கிய வொற்றியம் பரனே
தில்லை யோங்கிய சிவாநந்தத் தேனே. 3

இருக்க வாவுற வுலகெலா முய்ய
எடுத்த சேவடிக் கெள்ளள வேனும்
உருக்க மொன்றிலே னெறியினிற் பெரியேன்
ஒண்மை யெய்துதல் வெண்மை மற்றன்றே
தருக்க நின்றவென் றன்மையை நினைக்கிற்
றமிய னேனுக்கே தலைநடுக் குறுங்காண்
திருக்கண் மூன்றுடை யொற்றி யெம்பொருளே.
தில்லை யோங்கிய சிவாநந்தத் தேனே. 4

Koviloor Digital Library

எண்பெ ருவினைக் கேதுசெய் யுடலை
எடுத்த நாண்முத லிந்தநாள் வரைக்கும்
நண்பு ருப்பவ மியற்றின னல்லால்
நன்மை யென்பதோர் நாளினு மறியேன்
வண்பெ ருமெனக் குன்றிரு வருளாம்
வாழ்வுநேர்ந் திடும் வகையெந்த வகையோ
திண்பெ ருநிற்க வருளொற்றி யமுதே
தில்லை யோங்கிய சிவாநந்தத் தேனே. 5

பேதை நெஞ்சினேன் செய்பிழை யெல்லாம்
பேசி னுற்பெரும் பிணக்கினுக் கிடமாந்
தாதை நீயவை யெண்ணலை யெளியேன்
றனக்கு நின்றிருத் தண்ணளி புரிவாய்
கோதை நீக்கிய முனிவர்கள் காணக்
கூத்து கந்தருள் குணப்பெருங் குன்றே
தீதை நீக்கிய வொற்றியம் பெருமான்
தில்லை யோங்கிய சிவாநந்தத் தேனே. 6

வஞ்ச நெஞ்சர்தஞ் சேர்க்கையைத் துறந்து
வள்ள லுன்றிரு மலரடி யேத்தி
விஞ்சு நெஞ்சர்தம் அடித்துணைக் கேவல்
விரும்பி நிற்குமப் பெரும்பயன் பெறவே
தஞ்ச மென்றரு ணின்றிருக் கோயில்
சார்ந்து நின்றனன் றருதன்மற் றின்றே
செஞ்சொ லோங்கிய வொற்றியெம் பெருமான்
தில்லை யோங்கிய சிவாநந்தத் தேனே. 7

புல்ல னேன்புவி நடையிடை யலையும்
புலைய நெஞ்சினுற் பொருந்திடுங் கொடிய
அல்ல லென்பதற் கெல்லையொன் றறியேன்
வருந்து கின்றனன் விருந்தின னாகி
ஒல்லை யுன்றிருக் கோயின்முன் னடுத்தேன்
உத்தமா வுன்ற னுள்ளமிங் கறியேன்
செல்ல னீக்கிய வொற்றியம் பொருளே
தில்லை யோங்கிய சிவாநந்தத் தேனே. 8

எளிய னேன்பிழை யியற்றிய வெல்லாம்
எண்ணி னுட்படா வேனுமற் றவையை
அளிய நல்லரு ளிந்திடும் பொருட்டால்
ஆய்த லென்றல வாதலி னிண்டே
களிய நெஞ்சமாங் கருங்கலைக் கரைத்துக்
கருணை யீகுதல் கடனுனக் கையா
தெளிய வோங்கிய வொற்றியென் னமுதே
தில்லை யோங்கிய சிவாநந்தத் தேனே. 9

Koviloor Digital Library

வெறிபி டிக்கினு மகன்றனைப் பெற்றோர்
விடுத்திடார் அந்த வெறியது தீரும்
நெறிபி டித்துநின் றுய்வரென் னரசே
நீயு மப்படி நீசனேன் றனக்குப்
பொறிபி டித்தநற் போதக மருளிப்
புன்மை யாவையும் போக்கிடல் வேண்டுஞ்
செறிபி டித்தவான் பொழிலொற்றி யமுதே
தில்லை யோங்கிய சிவாநந்தத் தேனே. 10

திருச்சிற்றம்பலம்

28. சந்நிதி முறையீடு

திருவொற்றியூர்
வஞ்சி விருத்தம்
திருச்சிற்றம்பலம்

ஒற்றி மேவிய வுத்தம னேமணித்
தெற்றி மேவிய தில்லையப் பாவிழி
நெற்றி மேவிய நின்மல னேயுனைப்
பற்றி மேவிய நெஞ்சமுன் பாலதே. 1

பாலி னீற்றுப் பரஞ்சுட ரேமலர்க்
காலி னீற்றுக் கதிபெற வேழையேன்
மாலி னீற்று மயக்கற லென்றுகல்
லாலி னீற்றுப் பொருளரு ளாதியே! 2

ஆதி யேதில்லை யம்பலத் தாடல்செய்
சோதி யேதிருத் தோணிபு ரத்தனே!
ஓதி யேதரு மொற்றியப் பாவிது
நீதி யேயெனை நீமரு வாததே. 3

வாத மோதிய வஞ்சரைக் காணிலோர்
காத மோடுங் கடியனை யாள்வது
நீத மோவன்றி நேரு மநீதமோ
ஓத மோதொலி யொற்றித் தலத்தனே. 4

தலத்த னேதில்லைச் சங்கர னேதலைக்
கலத்த னேநெற்றிக் கண்ணுடை யாளனே
நலத்த னேயொற்றி நாயக னேயிந்த
மலத்த னேனையும் வாழ்வித்தன் மாண்பதே. 5

மாண்கொ ளம்பல மாணிக்க மேவிடம்
ஊண்கொள் கண்டத்தெம் மொற்றியப் பாவுன்றன்
ஏண்கொள் சேவடி யின்புக ழேத்திடாக்
கோண்கொ ணெஞ்சக் கொடியனு முய்வனே. 6

Koviloor Digital Library

உய்யும் வண்ணமிங் குன்னரு ளெய்தநான்
செய்யும் வண்ணந் தெரிந்திலன் செல்வமே
பெய்யும் வண்ணப் பெருமுகி லேபுரம்
எய்யும் வண்ண மெரித்தரு ளெந்தையே. 7

எந்தை யேதில்லை யெம்மிறை யேகுகன்
தந்தை யேயொற்றித் தண்ணமு தேயென்றன்
முந்தை யேழ்பவ மூட மயக்கறச்
சிந்தை யேதந் திருந்த வருள்வையே. 8

திருந்த நான்மறைத் தில்லைச்சிற் றம்பலத்
திருந்த ஞான வியலொளி யேயொற்றிப்
பொருந்த நின்றருள் புண்ணிய மேயிங்கு
வருந்த வென்றனை வைத்த தழகதோ. 9

வைத்த நின்னருள் வாழிய வாழிய
மெய்த்த தில்லையின் மேவிய வின்பமே
உய்த்த நல்லரு ளொற்றியப் பாவெனைப்
பொய்த்த சிந்தைவிட் டுன்றனைப் போற்றவே. 10

போற்ற வைத்தனை புண்ணிய னேயெனைச்
சாற்ற வைத்தனை நின்புகழ்த் தன்மையைத்
தேற்ற வைத்தனை நெஞ்சைத் தெளிந்தன்பை
ஊற்ற வைத்தனை யுன்னெற்றி மேவியே. 11

திருச்சிற்றம்பலம்

29. தவத்திறம் போற்றல்

திருவொற்றியூர்
அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்
திருச்சிற்றம்பலம்

வில்வத் தொடும்பொற் கொன்றையணி வேணிப் பெருமா னொற்றிநகர்
செல்வப் பெருமான் சிவபெருமான் தியாகப் பெருமான் திருவழகைக்
கல்வைப் புடைய மனங்களிக்கக் கண்கள் களிக்கக் கண்டுநின்றேன்
இல்வைப் புடையே னம்மானா னென்ன தவந்தான் செய்தேனே. 1

கூடும் படிமுன் றிருமாலுங் கோல மாகிப் புவியிடந்து
தேடுந் திருத்தாட் சிவபெருமான் தியாகப் பெருமான் திருப்பவனி
நாடும் புகழ்சே ரொற்றிநகர் நாடிப் புகுந்து கண்டேனல்
ஈடு மகன்றே னம்மானா னென்ன தவந்தான் செய்தேனே. 2

ஆர்க்கும் கடற்க ணன்றெழுந்த ஆல கால மத்தனையுஞ்
சேர்க்குங் களத்தான் சிவபெருமான் தியாகப் பெருமான் திருநடத்தைக்
கார்க்கண் பொழில்சூ ழொற்றியிற்போய்க் கண்டேன் பிறவி கண்டிலனே
யார்க்கென் றுரைப்பே னம்மானா னென்ன தவந்தான் செய்தேனே. 3

Koviloor Digital Library

உள்ளும் புறமு நிறைந்தடியா ருள்ள மதுரித் தூறுகின்ற
தெள்ளு மமுதாஞ் சிவபெருமான் தியாகப் பெருமான் திருமுகத்தைக்
கள்ளந் தவிர்க்கு மொற்றியிற்போய்க் கண்டேன் பசியைக் கண்டிலனே
எள்ள லிகந்தே னம்மானா னென்ன தவந்தான் செய்தேனே. 4

ஆவ லுடையா ருள்ளுடையா ரயன்மான் மகவா னுதியராந்
தேவர் பெருமான் சிவபெருமான் தியாகப் பெருமான் திருவடிவைக்
காவம் பொழில்சூ ழொற்றியிற்போய்க் கண்டேன் கண்ட காட்சிதனை
யாவர் பெறுவா ரம்மானா னென்ன தவந்தான் செய்தேனே. 5

மறப்பை யகன்ற மனத்துரவோர் வாழ்த்த வவர்க்கு வான்கதியின்
சிறப்பை யளிக்குஞ் சிவபெருமான் தியாகப் பெருமான் திருநடத்தைப்
பிறப்பை யகற்று மொற்றியிற்போய்ப் பேரா னந்தம் பெறக்கண்டேன்
இறப்பைத் தவிர்த்தே னம்மானா னென்ன தவந்தான் செய்தேனே. 6

வில்லாம் படிப்பொன் மேருவினை விரைய வாங்கும் வெற்றியினான்
செல்லாங் கருணைச் சிவபெருமான் றியாகப் பெருமான் றிருக்கூத்தைக்
கல்லாங் கொடிய மனங்கரையக் கண்டேன் பண்டு காணாத
எல்லாங் கண்டே னம்மானா னென்ன தவந்தான் செய்தேனே. 7

ஒல்லை யெயின்மூன் றெரிகொளுவ வுற்று நகைத்தோ னொற்றியுளான்
றில்லை நகரான் சிவபெருமான் றியாகப் பெருமான் றிருப்பவனி
கல்லை யளியுங் கனியாக்கக் கண்டேன் கொண்ட களிப்பினுக்கோர்
எல்லை யறியே னம்மானா னென்ன தவந்தான் செய்தேனே. 8

துன்னுஞ் சோம சுந்தரனார் தூய மதுரை நகரளித்த
தென்னர் பெருமான் சிவபெருமான் றியாகப் பெருமான் றிருவழகைப்
பன்னு மொற்றி நகர்தன்னிற் பார்த்தேன் வினைபோம் வழிபார்த்த
என்னை மறந்தே னம்மானா னென்ன தவந்தான் செய்தேனே. 9

முன்னங் காழி வள்ளலுக்கு முத்துச் சிவிகை குடையொடுபொற்
சின்ன மளித்தோன் சிவபெருமான் றியாகப் பெருமான் றிருவடிவைக்
கன்னின் றுருகா நெஞ்சுருகக் கண்டேன் கண்ட காட்சிதனை
என்னென் றுரைப்பே னம்மானா னென்ன தவந்தான் செய்தேனே. 10

திருச்சிற்றம்பலம்

30. நெஞ்சுறுத்த திருநேரிசை

திருவொற்றியூர்

நேரிசை வெண்பா

திருச்சிற்றம்பலம்

பொன்னார் விடைக்கொடியெம் புண்ணியனைப் புங்கவனை
ஒன்னார் புரமெரித்த வுத்தமனை — மன்னுய
அத்தனைநம் மொற்றியூ ரப்பனையெல் லாம்வல்ல
சித்தனைநீ வாழ்த்துதி நெஞ்சே. 1

Koviloor Digital Library

நெஞ்சே வுலக நெறிநின்று நீமயலால்
அஞ்சேலென் பின்வந் தருள்கண்டாய் — எஞ்சாத்
தவக்கொழுந்தாஞ் சற்குணவர் தாழ்ந்தேத்து மொற்றிச்
சிவக்கொழுந்தை வாழ்த்துநாஞ் சென்று. 2

சென்றுசென்று நல்காத செல்வர்தலை வாயிலிலே
நின்றுநின்று வாடுகின்ற நெஞ்சமே — இன்றுதிரு
வொற்றியப்பன் றுண்மலரை யுன்னுதியேற் காதலித்து
மற்றிசைப்ப தெல்லாம் வரும். 3

வருநா ளுயிர்வாழு மாண்பறியோ நெஞ்சே
ஒருநாளு நீவேறொன் றுன்னேல் — **திருநாளைப்
போவான்** றொழுமன்றிற் புண்ணியனை யொற்றியிற்றாய்
ஆவான் றிருவடியல் லால். 4

அல்லால முண்டமிடற் றாரமுதை யற்புதத்தைக்
கல்லால நீழலமர் கற்பகத்தைச் — சொல்லார்ந்த
விண்மணியை யென்னுயிரை மெய்ப்பொருளை யொற்றியிலென்
கண்மணியை நெஞ்சே கருது. 5

கருதாயோ நெஞ்சே கதிகிடைக்க வெங்கண்
மருதா வெழிற்றில்லை மன்னு — எருதேறும்
**என்னருமைத் தெய்வதமே யென்னருமைச் சற்குருவே
என்னருமை** யப்பாவே யென்று. 6

என்றுமுனக் காளாவே னென்னெஞ்சே வன்னெஞ்சர்
ஒன்றுமிடஞ் சென்றங் குழலாதே — நன்றுதரும்
ஒற்றியப்பன் பொன்னடியை யுன்னுகின்றோர் தம்பதத்தைப்
பற்றிநிற்பை யாகிற் பரிந்து. 7

பரிந்துனக்குச் சொல்கின்றேன் பாவங்க ளெல்லாம்
எரிந்துவிழ நாங்கதியி லேறத் — தெரிந்து
விடையானை யொற்றியூர் வித்தகனை மாதோர்
புடையானை நெஞ்சமே போற்று. 8

போற்றுதியென் னெஞ்சே புரநகையாற் சுட்டவனை
ஏற்றுகந்த வெம்மானை யெம்மவனை — நீற்றொளிசேர்
அவ்வண்ணத் தானை யணிபொழில்சூ ழொற்றியூர்ச்
செவ்வண்ணத் தானைத் தெரிந்து. 9

தெரிந்து நினக்கனந்தந் தெண்டனிடு கின்றேன்
விரிந்தநெஞ்சே யொற்றியிடை மேவும் — பரிந்தநெற்றிக்
கண்ணனை மாலயனுங் காணப் படாதானை
எண்ணுரை யெண்ணுதே யென்று. 10

Koviloor Digital Library

என்றென் றழுதா யிலையேயென் னெஞ்சமே
ஒன்றென்று நின்ற வுயர்வுடையான் — நன்றென்ற
செம்மைத் தொழும்பர்தொழுஞ் சீரொற்றி யூரண்ணல்
நம்மைத் தொழும்புகொள்ளு நாள். 11

நாளாகு முன்னெனது நன்னெஞ்சே யொற்றியப்பன்
தாளாகுந் தாமரைப்பொற் றண்மலர்க்கே — ஆளாகுந்
தீர்த்தர் தமக்கடிமை செய்தவர்தஞ் சீர்ச்சமுகம்
பார்த்துமகிழ் வாயதுவே பாங்கு. 12

பாங்குடையார் மெய்யிற் பலித்ததிரு நீறணியாத்
தீங்குடையார் திமனையிற் செல்லாதே — ஓங்குடையாள்
உற்றமர்ந்த பாகத்தெம் மொற்றியப்பன் பொன்னருளைப்
பெற்றமர்தி நெஞ்சே பெரிது. 13

பெரியானை மாதர்ப் பிறைக்கண்ணி யானை
அரியானை யங்கணனை யார்க்குங் — கரியானைத்
தோலானைச் சீரொற்றிச் சுண்ணவெண் ணீற்றானை
மேலானை நெஞ்சே விரும்பு. 14

விரும்பித் திருமால் விலங்காய் நெடுநாள்
அரும்பித் தளைந்துள் ளயர்ந்தே — திரும்பிவிழி
நீர்கொண்டுங் காணாத நித்தனொற்றி யூரனடிச்
சீர்கொண்டு நெஞ்சே திகழ். 15

திகழ்கின்ற ஞானச் செழுஞ்சுடரை வானோர்
புகழ்நின்ற தெய்வத்தைப் போதம் — நிகழ்கின்ற
ஒற்றிக் கனியை யுலகுடைய நாயகத்தை
வெற்றித் துணையைநெஞ்சே வேண்டு. 16

வேண்டாமை வேண்டுவது மேவாத் தவமுடையோர்
தீண்டாமை யாததுநீ தீண்டாதே — ஈண்டாமை
ஒன்றுவபோ னெஞ்சேநீ யொன்றியொற்றி யூரன்பாற்
சென்றுதொழு கண்டாய் தினம். 17

தினந்தோறு முள்ளுருகிச் சீர்பாடு மன்பர்
மனந்தோறு மோங்கு மணியை — யினந்தோறும்
வேதமலர் கின்ற வியன்பொழில்சூ ழொற்றிநகர்ப்
போத மலரை நெஞ்சே போற்று. 18

போற்றார் புரம்பொடித்த புண்ணியனை விண்ணவர்கள்
ஆற்றாத நஞ்சமுண்ட வாண்டகையைக் — கூற்றுவி
கொள்ளுங் கழற்காற் குருமணியை யொற்றியிடங்
கொள்ளும் பொருளை நெஞ்சே கூறு. 19

Koviloor Digital Library

கூறுமையாட் கீந்தருளுங் கோமானைச் செஞ்சடையில்
ஆறுமலர் கொன்றை யணிவோனைத் — தேறுமனம்
உள்ளவர்கட் குள்ளபடி யுள்ளவனை யொற்றியமர்
நள்ளவனை நெஞ்சமே நாடு. 20

நாடுஞ் சிவாய நமவென்று நாடுகின்றோர்
கூடுந் தவநெறியிற் கூடியே — நீடுமன்பர்
சித்தமனைத் தீபகமாஞ் சிற்பரனை யொற்றியூர்
உத்தமனை நெஞ்சமே யோது. 21

ஓதுநெறி யொன்றுளதென் னுள்ளமே யோர்தியது
தீதுநெறி சேராச் சிவநெறியிற் — போதுநெறி
ஓதம் பிடிக்கும்வய லொற்றியப்பன் றொண்டர்திருப்
பாதம் பிடிக்கும் பயன். 22

பயனறியாய் நெஞ்சே பவஞ்சார்தி மாலோ
டயனறியாச் சீருடைய வம்மான் — நயனறியார்
உள்ளத் தடையா னுயரொற்றி யூரவன்வாழ்
உள்ளத் தவரை யுறும். 23

தவராயி னுந்தேவர் தாமா யினுமற்
றெவரா யினுநமக்கிங் கென்னுங் — கவராத
நிந்தை யகன்றிடவென் னெஞ்சமே யொற்றியில்வாழ்
எந்தையடி வணங்கா ரேல். 24

ஏலக் குழலா ரிடைக்கீழ்ப் படுங்கொடிய
ஞாலக் கிடங்கரினை நம்பாதே — நீல
மணிகண்டா வென்றுவந்து வாழ்த்திநெஞ்சே நாளும்
பணிகண்டா யன்னோன் பதம். 25

பதந்தருவான் செல்வப் பயன்றருவான் மன்னுஞ்
சதந்தருவான் யாவுந் தருவான் — இதந்தருமென்
நெஞ்சமென்கொல் வாடுகின்றாய் நின்மலா நின்னடியே
தஞ்சமென்றா லொற்றியப்பன் றான். 26

திருச்சிற்றம்பலம்

31. சிகாமணிமாலை

புள்ளிருக்குவேளூர்[1]
கட்டளைக் கலித்துறை

திருச்சிற்றம்பலம்

வல்வினை யேனையிவ் வாழ்க்கைக் கடனின்றும் வள்ளலுன்றன்
நல்வினை வாழ்க்கைக் கரையேற்றி மெய்யரு ணல்குகண்டாய்
கொல்வினை யானை யுரித்தோய் வயித்திய நாதகுன்றாச்
செல்வினை மேலவர் வாழ்வே யமரர் சிகாமணியே. 1

1. வைத்தீஸ்வரன் கோயில். புள்—சடாயு, இருக்கு—வேதம், வேள்—முருகர் பூசித்த ஸ்தலம்.

Koviloor Digital Library

பொய்யே புலம்பிப் புழுத்தலை நாயிற் புறத்திலுற்றேன்
மெய்யே யுரைக்குநின் னன்பர்தஞ் சார்பை விரும்புகிலேன்
பையே லரவணை யேன்பிழை நோக்கிப் பராமுகநீ
செய்யேல் **வயித்திய நாதா** வமரர் சிகாமணியே. 2

கல்லேன் மனக்கருங் கல்லேன் சிறிதுங் கருத்தறியாப்
பொல்லேன்பொய் வாஞ்சித்த புல்லே னிரக்கம் பொறுமைசிறி
தில்லே னெனினுநின் பாலன்றி மற்றை யிடத்திற்சற்றுஞ்
செல்லேன் வயித்திய நாதா வமரர் சிகாமணியே. 3

ஆர்ப்பார் கடனஞ் சமுதுசெய் தாய்நின் னடிக்கன்பின்றி
வேர்ப்பார் தமக்கும் விருந்தளித் தாய்வெள்ளி வெற்பெடுத்த
கார்ப்பா ளனுக்குங் கருணைசெய் தாய்கடை யேன்றுயருந்
தீர்ப்பாய் வயித்திய நாதா வமரர் சிகாமணியே. 4

நானே நினக்குப் பணிசெயல் வேண்டுநின் ஞண்மலர்த்தாள்
தானே யெனக்குத் துணைசெயல் வேண்டுந் தயாநிதியே
கோனே கரும்பின் சுவையேசெம் பாலொடு கூட்டுநறுந்
தேனே வயித்திய நாதா வமரர் சிகாமணியே. 5

மருவார் குழலியர் மையற் கடல்விழும் வஞ்சநெஞ்சால்
வெருவா வுயங்கு மடியேன் பிணியை விலக்குகண்டாய்
உருவா யருவு மொளியும் வெளியுமென் றோதநின்ற
திருவார் வயித்திய நாதா வமரர் சிகாமணியே. 6

தவநேய மாகுநின் றுணைய மின்றித் தடமுலையார்
அவநேய மேற்கொண் டலைகின்ற பேதைக் கருள்புரிவாய்
நவநேய மாகி மனவாக் கிறந்த நடுவொளியாஞ்
சிவனே வயித்திய நாதா வமரர் சிகாமணியே. 7

ஐவா யரவிற் றுயில்கின்ற மாலு மயனுந்தங்கள்
கைவாய் புதைத்துப் பணிகேட்க மேவுமுக் கண்ணரசே
பொய்வாய் விடாவிப் புலையேன் பிழையைப் பொறுத்தருணீ
செய்வாய் வயித்திய நாதா வமரர் சிகாமணியே. 8

புல்வாயின் முன்னர்ப் புலிப்போத் தெனவென்முன் போந்துநின்ற
கல்வாய் மனத்தரைக் கண்டஞ்சி னேனைக் கடைக்கணிப்பாய்
அல்வாய் மணிமிடற் றுரமு தேயரு ளான்றபெருஞ்
செல்வா வயித்திய நாதா வமரர் சிகாமணியே. 9

ஆர்த்தார் கடனஞ் சமுதுசெய் தாயென்னை யன்பர்கள்பாற்
சேர்த்தாயென் றுன்ப மனைத்தையுந் தீர்த்துத் திருவருட்கண்
பார்த்தாய் பரம குருவாகி யென்னுட் பரிந்தமர்ந்த
தீர்த்தா வயித்திய நாதா வமரர் சிகாமணியே. 10

Koviloor Digital Library

அறத்தாயை யோர்புடை கொண்டோர் புடைமண் ணளந்தமுகில்
நிறத்தாயை வைத்துல கெல்லா நடத்து நிருத்தவண்டப்
புறத்தாயென் றுன்பந் தொடைத்தாண்டு மெய்யருட் போதந்தந்த
திறத்தாய் வயித்திய நாதா வமரர் சிகாமணியே. 11

அலையோய் கடலிற் சிவயோக மேவிய வந்தணர்தந்
நிலையோர் சிறிது மறியே னெனக்குன் னிமலவருண்
மலையோங்கு வாழ்க்கையும் வாய்க்குங் கொலோபொன் மலையென்கின்ற
சிலையோய் வயித்திய நாதா வமரர் சிகாமணியே. 12

ஊன்கொண்ட தேகத்து முள்ளத்து மேவி யுறும்பிணியால்
நான்கொண்ட துன்பந் தவிர்ப்பாய் வயித்திய நாதவென்றே
வான்கொண்ட நின்னருட் சீரேத்து கின்ற வகையறியேன்
தேன்கொண்ட கொன்றைச் சடையா யமரர் சிகாமணியே. 13

களிவே தனுமந்தக் காலனு மென்னைக் கருதவொட்டா
வொளிவே தரத்திரு வுள்ளஞ்செய் வாயன்ப ருள்ளமென்னுந்
தளிவே தனத்துறுந் தற்பர மேயருட் டண்ணமுதத்
தெளிவே வயித்திய நாதா வமரர் சிகாமணியே. 14

மால்விடை மேற்கொண்டு வந்தெளி யேனுடை வல்வினைக்கு
மேல்விடை யீந்திட வேண்டுங்கண் டாயிது வேசமயம்
நீல்விட முண்ட மிடற்றாய் வயித்திய நாதநின்பாற்
சேல்விடு வாட்கண் ணுமையொடுந் தேவர் சிகாமணியே. 15

திருச்சிற்றம்பலம்

---

32. கலிமுறையீடு

கலிவிருத்தம்

திருச்சிற்றம்பலம்

பொய்விடு கின்றில னென்றெம் புண்ணியா
கைவிடு கின்றியோ கடைய னேன்றனைப்
பைவிட முடையவெம் பாம்பு மேற்றநீ
மெய்விட மனையவென் பிழை பொறுக்கவே. 1

பொறுக்கினு மன்றியென் பொய்மை நோக்கியே
வெறுக்கினு நின்னலால் வேறு காண்கிலேன்
மறுக்கினுந் தொண்டரை வலிய வாண்டுபின்
சிறுக்கினும் பெருக்கமே செய்யுஞ் செல்வமே. 2

செல்லலுஞ் சிறுமையுஞ் சினமும் புல்லரைப்
புல்லலுங் கொண்டவென் பொய்மை கண்டுநீ
கொல்லலுந் தகுமெனைக் கொன்றி டாதருள்
மல்லலுந் தகுஞ்சடா மகுட வள்ளலே. 3

Koviloor Digital Library

வள்ளலே நின்னடி மலரை நண்ணிய
உள்ளலேன் பொய்மையை யுன்னி யென்னையாட்
கொள்ளலே யின்றெனிற் கொடிய வென்றனை
எள்ளலே யன்றிமற் றென்செய் கிற்பனே. 4

செய்யநன் றறிகிலாச் சிறிய னேன்றனைப்
பொய்யனென் றெண்ணிநீ புறம்பொ ழிப்பையேல்
வையநின் றையவோ மயங்க லன்றியான்
உய்யநின் றுணர்குவ தொன்று மில்லையே. 5

வேறு

இல்லை யென்ப திலாவருள் வெள்ளமே
தில்லை மன்றிற் சிவபரஞ் சோதியே
வல்லை யான்செயும் வஞ்சமெ லாம்பொறுத்
தொல்லை யின்ப முதவுதல் வேண்டுமே. 6

இல்லையே யென்பதிங் கில்லை யென்றருள்
நல்லையே நீயரு ணயந்து நல்கினுற்
கல்லையே யனையவென் கன்ம நெஞ்சகம்
ஒல்லையே வஞ்சம்விட் டுவக்கு முண்மையே. 7

வேறு

உண்மையே யறிகிலா வொதிய னேன்படும்
எண்மையே கண்டுமுள் ளிரக்கம் வைத்திலை
அண்மையே யம்பலத் தாடு மையநீ
வண்மையே யருட்பெரு வாரி யல்லயோ. 8

அல்லலங் கடலிடை யாழ்ந்த நாயினேன்
சொல்லலங் கடல்விடைத் தோன்ற னின்னருள்
மல்லலங் கடலிடை மகிழ்ந்து மூழ்கினுற்
கல்லலங் கடன்மனங் கனிதன் மெய்மையே. 9

மெய்மையே யறிகிலா வீண னேனிவண்
உய்மையே பெறவுனை யுன்னி யேத்திடாக்
கைமையே யனையர்தங் கடையிற் செல்லவும்
பொய்மையே யுரைக்கவும் புணர்த்த தென்கொலோ. 10

என்னுடை வஞ்சக வியற்கை யாவையும்
பொன்னுடை விடையினேய் பொறுத்துக் கொண்டுநின்
தன்னுடை யன்பர்தஞ் சங்கஞ் சார்ந்துநான்
நின்னுடைப் புகழ்தனை நிகழ்த்தச் செய்கவே. 11

நிகழுநின் றிருவரு ணிலையைக் கொண்டவர்
திகழுநற் றிருச்சபை யதனுட் சேர்க்குமுன்
அகழுமா லேனமா யளவுஞ் செம்மலர்ப்
புகழுமா றருளுக பொறுக்க பொய்மையே. 12

திருச்சிற்றம்பலம்

Koviloor Digital Library

33. எதிர்கொள் பத்து

எண்சீர்க் கழிநெடிலடிச் சந்த விருத்தம்

திருச்சிற்றம்பலம்

ஆனந்தக் கூத்தனை யம்பலத் தானை
அற்புதத் தேனையெம் மாதி பிரானைத்
தேனந்தக் கொன்றையஞ் செஞ்சடை யானைச்
செங்கண் விடையனை யெங்கண் மணியை
மோனந்தத் தார்பெறுந் தானந்தத் தானை
முத்தனை முத்தியின் வித்தனை முத்தை
ஈனந்தக் காதெனை யேன்று கொண்டானை
இன்றை யிரவி லெதிர்ந்துகொள் வேனே. 1

அடுத்தவர்க் கெல்லா மருள்புரி வானை
அம்பலக் கூத்தனை யெம்பெரு மானைத்
தடுத்தெமை யாண்டுகொண் டன்பளித் தானைச்
சங்கரன் றன்னையென் றந்தையைத் தாயைக்
கடுத்ததும் பும்மணி கண்டத்தி னானைக்
கண்ணுத லானையெங் கண்ணக லானை
எடுத்தெனைத் துன்பம்விட் டேற வைத்தானை
இன்றை யிரவி லெதிர்ந்துகொள் வேனே. 2

மாலயன் றேடியுங் காணு மலையை
வந்தனை செய்பவர் கண்ட மருந்தை
ஆல மமுதி னருந்தல்செய் தானை
ஆதியை யாதியோ டந்தமி லானைக்
காலன் வருந்தி விழவுதைத் தானைக்
கருணைக் கடலையென் கண்ணனை யானை
ஏல மணிகுழ லாளிடத் தானை
இன்றை யிரவி லெதிர்ந்துகொள் வேனே. 3

சுந்தரர்க் காகமுன் றூதுசென் றானைத்
தூயனை யாவருஞ் சொல்லரி யானைப்
பந்த மறுக்கும் பராபரன் றன்னைப்
பத்தரு ளங்கொள் பரஞ்சுட ரானை
மந்தர வெற்பின் மகிழ்ந்தமர்ந் தானை
வானவ ரெல்லாம் வணங்கநின் றானை
எந்தமை யாண்டுநல் லின்பளித் தானை
இன்றை யிரவி லெதிர்ந்துகொள் வேனே. 4

அன்பர்கள் வேண்டு மவையளிப் பானை
அம்பலத் தேநட மாடுகின் றானை
வன்பர்க ணெஞ்சின் மருவலில் லானை
வானவர் கோனையெம் வாழ்முத லானைத்

Koviloor Digital Library

துன்பந் தவிர்த்துச் சுகங்கொடுப் பானைச்
சோதியைச் சோதியுட் சோதியை நாளும்
என்பணி கொண்டெனை யேன்று கொண்டானை
இன்றை யிரவி லெதிர்ந்துகொள் வேனே. 5

கண்ணுத லானையென் கண்ணமர்ந் தானைக்
கருணை நிதியைக் கறைமிடற் றானை
ஒண்ணுத லாளுமை வாழிடத் தானை
ஒருவனை யொப்பிலா வுத்தமன் றன்னை
நண்ணுதல் யார்க்கு மருமையி னானை
நாதனை யெல்லார்க்கு நல்லவன் றன்னை
எண்ணுதல் செய்தெனக் கின்பளித் தானை
இன்றை யிரவி லெதிர்ந்துகொள் வேனே. 6

வெள்விடை மேல்வரும் வீறுடை யானை
வேத முடிவினில் வீற்றிருந் தானைக்
கள்விரை யார்மலர்க் கொன்றையி னானைக்
கற்பகந் தன்னைமுக் கண்கொள் கரும்பை
உள்வினை நீக்கியென் னுள்ளமர்ந் தானை
உலகுடை யானையென் னுற்ற துணையை
எள்வினை யொன்றுமி லாதவன் றன்னை
இன்றை யிரவி லெதிர்ந்துகொள் வேனே. 7

பெண்ணமர் பாகனைப் பேரரு ளோனைப்
பெரியவர்க் கெல்லாம் பெரியவன் றன்னைக்
கண்ணமர் நெற்றிக் கடவுட் பிரானைக்
கண்ணனை யாண்டமுக் கண்ணனை யெங்கள்
பண்ணமர் பாடற் பரிசளித் தானைப்
பார்முத லண்டம் படைத்தளிப் பானை
எண்ணம ராத வெழிலுடை யானை
இன்றை யிரவி லெதிர்ந்துகொள் வேனே. 8

வளங்கொளுந் தில்லைப்பொன் மன்றுடை யானை
வானவர் சென்னியின் மாணிக்கந் தன்னைக்
களங்கமி லாத கருத்துடை யானைக்
கற்பனை முற்றுங் கடந்துநின் றானை
உளங்கொளு மென்ற னுயிர்த்துணை யானை
உண்மையை யெல்லா முடையவன் றன்னை
இளம்பிறை சூடிய செஞ்சடை யானை
இன்றை யிரவி லெதிர்ந்துகொள் வேனே. 9

குற்றமெல் லாங்குண மாகக்கொள் வானைக்
கூத்துடை யானைப்பெண் கூறுடை யானை
மற்றவர் யார்க்கு மரியவன் றன்னை
வந்திப் பவர்க்கு மிகவெளி யானை

Koviloor Digital Library

பெற்றம தேறும் பெரிய பிரானைப்
பிறைமுடி யோனைப்பெம் மானையெம் மானை
எற்றியென் றுன்ப மெலாமொழித் தானை
இன்றை யிரவி லெதிர்ந்துகொள் வேனே. 10

திருச்சிற்றம்பலம்

34. நெஞ்சொடு நேர்தல்

கோயில்

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

அணிகொள் கோவணக் கந்தையே நமக்கிங்
கடுத்த வாடையென் றறிமட நெஞ்சே
கணிகொண் மாமணிக் கலன்கணங் கடவுட்
கண்ணுண் மாமணிக் கண்டிகை கண்டாய்
பிணிகொள் வன்பவ நீக்கும்வெண் ணீறே
பெருமைச் சாந்தமாம் பிறங்கொளி மன்றில்
திணிகொள் சங்கர சிவசிவ வென்று
சென்று வாழ்த்தலே செய்தொழி லாமே. 1

செய்த நன்றிமேற் றீங்கிழைப் பாரிற்
றிருப்பு மென்றனைத் திருப்புகின் றனைநீ
பெய்த பாலினைக் கமரிடைக் கவிழ்க்கும்
பேதை யாதலிற் பிறழ்ந்தனை யுனைநான்
வைத போதினும் வாழ்த்தென நினைத்து
மறுத்து நீக்கியவ் வழிநடக் கின்றாய்
கொய்த கோட்டினை நட்டனை வளர்ப்பாய்
கொடிய நெஞ்சமே மடியகிற் றிலையே. 2

இலையெ னாதணு வளவுமொன் றீய
வெண்ணு கின்றிலை யென்பெறு வாயோ
கொலையி னாதென வறிந்திலை நெஞ்சே
கொல்லு கின்றவக் கூற்றினுங் கொடியாய்
தலையின் மாலைதாழ் சடையுடைப் பெருமான்
றாணி னைந்திலை யூணினைந் துலகிற்
புலையி னார்கள்பாற் போதியோ வீணிற்
போகப் போகவிப் போக்கினி லழிந்தே. 3

அழிந்த வாழ்க்கையி னவலமிங் கனைத்தும்
ஐய மின்றிநீ யறிந்தனை நெஞ்சே
கழிந்த வெச்சிலை விழைந்திடு வார்போற்
கலந்து மீட்டுநீ கலங்குகின் றனையே
மொழிந்த முன்னையோர் பெறுஞ்சிவ கதிக்கே
முன்னுறா வகை யென்னுறு முன்னால்
இழிந்த நாயினுங் கடையனாய் நின்றேன்
என்செய் வேனுனை யேனடுத் தேனே. 4

தேனெய் யாடிய செஞ்சடைக் கனியைத்
தேனை மெய்யருட் டிருவினை யடியர்
ஊனை நெக்கிட வுருக்கிய வொளியை
உள்ளத் தோங்கிய வுவப்பினை மூவர்
கோனை யானந்தக் கொழுங்கட லமுதைக்
கோம ளத்தினைக் குன்றவில் லியையெம்
மானை யம்பல வாணனை நினையாய்
வஞ்ச நெஞ்சமே மாய்ந்திலை யினுமே. 5

இன்னு மெங்ஙன மேகுகின் றனையோ
ஏழை நெஞ்சமே யிங்குமங் குந்தான்
முன்னை நாம்பிறந் துழன்றவத் துயரை
முன்னி லென்குலை முறுக்குகின் றனகாண்
என்னை நீயெனக் குறுதுணை யந்தோ
என்சொ லேற்றிலை யெழில்கொளும் பொதுவின்
மன்னு நம்முடை வள்ளலை நினைத்தால்
மற்று நாம்பிற வாவகை வருமே. 6

பிறந்து முன்னரிவ் வுலகினும் பெண்டு
பிள்ளை யாதிய பெருந்தொடக் குழந்தே
இறந்து வீழ்கதி யிடைவிழுந் துழன்றே
இருந்த சேடத்தி னித்தனை யெல்லாம்
மறந்து விட்டனை நெஞ்சமே நீதான்
மதியி லாயது மறந்தில னெளியேன்
துறந்து நாம்பெறுஞ் சுகத்தினை யடையச்
சொல்லும் வண்ணநீ தொடங்கிடி னன்றே. 7

நன்று செய்வதற் குடன்படு வாயேல்
நல்ல நெஞ்சமே வல்லவிவ் வண்ணம்
இன்று செய்திநீ நாளையென் பாயேல்
இன்றி ருந்தவர் நாளைநின் றிலரே
ஒன்று கேண்மதி சுகர்முதன் முனிவோர்
உக்க வக்கணஞ் சிக்கெனத் துறந்தார்
அன்று முன்னரே கடந்தன ரன்றி
அதற்கு முன்னரே யகன்றன ரன்றே. 8

அன்றி னேர்கிலை நம்முடைப் பெருமான்
அஞ்செ ழுத்தையு மடிக்கடி மறந்தாய்
ஒன்றி மேற்கதி யுறவகை யந்தோ
உணர்கி லாய்வயிற் றூண்பொருட் டயலோர்
முன்றில் காத்தனை யவ்வள வேனும்
முயன்று காத்திலை முன்னவன் கோயில்
துன்றி நின்றநற் றொண்டர்தந் தொழும்பு
தொடங்கு வானவர் தூயமுன் றிலையே. 9

Koviloor Digital Library

தூய நெஞ்சமே சுகம்பெற வேண்டிற்
சொல்லு வாமது சொல்லள வன்றுற்
காய மாயமாங் கான்செறிந் துலவுங்
கள்வ ரைவரைக் கைவிடுத் ததன்மேற்
பாய வானவப் பகைகெட முருக்கிப்
பகலி ராவிலாப் பாங்கரி னின்றே
ஆய வானந்தக் கூத்துடைப் பரமா
காய சோதிகண் டமருத லணியே. 10

திருச்சிற்றம்பலம்

35. நெஞ்சறைகூவல்

திருவொற்றியூர்
எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்
திருச்சிற்றம்பலம்

கண்கண் மூன்றினார் கறைமணி மிடற்றார்
கங்கை நாயகர் மங்கைபங் குடையார்
பண்க ணீடிய பாடலார் மன்றிற்
பாத நீடிய பங்கயப் பதத்தார்
ஒண்கண் மாதரார் நடம்பயி லொற்றி
யூர மர்ந்துவாழ் வுற்றவர்க் கேநம்
மண்கொண் மாலைபோம் வண்ணநற் றமிழ்ப்பூ
மாலை சூட்டுதும் வருதியென் மனனே. 1

கரிய மாலன்று கரியமா வாகிக்
கலங்க நின்றபொற் கழல்புனை பதத்தார்
பெரிய வண்டங்கள் யாவையும் படைத்தும்
பித்த ரென்னுமப் பேர்தனை யகலார்
உரிய சீர்கொளு மொற்றியூ ரமர்ந்தார்
உம்பர் நாயகர் தம்புயம் புனைய
வரிய கன்றநன் மலர்கொடு தெரிந்து
மாலை சூட்டுதும் வருதியென் மனனே. 2

திருவி னாயகன் கைப்படை பெறுவான்
திருக்கண் சாத்திய திருமலர்ப் பதத்தார்
கருவி னின்றவெம் போல்பவர் தம்மைக்
காத்த ளிப்பதே கடனெனக் கொண்டார்
உருவி னின்றவ ருருவென நின்றோர்
ஒற்றி யூரிடை யுற்றன ரவர்க்கு
மருவி னின்றநன் மணங்கொளு மலர்ப்பூ
மாலை சூட்டுதும் வருதியென் மனனே. 3

கரும்பைந் நாகணைக் கடவுளான் முகன்வான்
கடவு ளாதியர் கலகங்கள் தவிர்ப்பான்
துரும்பை நாட்டியோர் விஞ்சையன் போலத்
தோன்றி நின்றவர் துரிசறுத் திட்டோன்

Koviloor Digital Library

தரும்பைம் பூம்பொழி லொற்றியூ ரிடத்துத்
தலங்கொண் டாரவர் தமக்குநா மகிழ்ந்து
வரும்பைஞ் சீர்த்தமிழ் மாலையோ டணிபூ
மாலை சூட்டுதும் வருதியென் மனனே. 4

வதன நான்குடை மலரவன் சிரத்தை
வாங்கி யோர்கையில் வைத்தநம் பெருமான்
[1]நிதன நெஞ்சகர்க் கருடருங் கருணை
நிதிய மாகிய நின்மலப் பெருமான்
சுதன மங்கையர் நடஞ்செயு மொற்றித்
தூய னலவர் துணைத்திருத் தோட்கு
மதன வின்தமிழ் மாலையோ டணிபூ
மாலை சூட்டுதும் வருதியென் மனனே. 5

கஞ்ச னங்கொரு விஞ்சன மாகிக்
காலிற் போந்துமுன் காணரு முடியார்
அஞ்ச னங்கொளு நெடுங்கணு ளெங்கள்
அம்மை காணநின் றுடிய பதத்தார்
செஞ்சொன் மாதவர் புகழ்திரு வொற்றித்
தேவர் காணவர் திருமுடிக் காட்ட
மஞ்ச னங்கொடு வருதுமென் மொழியை
மறுத்து நீயுடன் வருதியென் மனனே. 6

சூழு மாலயன் பெண்ணுரு வெடுத்துத்
தொழும்பு செய்திடத் தோன்றிநின் றவனைப்
போழும் வண்ணமே வடுகனுக் கருளும்
பூத நாதர்நற் பூரண னந்தர்
தாழுந் தன்மையோ ருயர்வுறச் செய்யுந்
தகைய ரொற்றியூர்த் தலத்தின ரவர்தாம்
வாழுங் கோயிற்குத் திருவல கிடுவோம்
மகிழ்வு கொண்டுடன் வருதியென் மனனே. 7

விதியு மாலுமுன் வேறுரு வெடுத்து
மேலுங் கீழுமாய் விரும்புற நின்றோர்
நதியுங் கொன்றையு நாகமும் பிறையும்
நண்ணி யோங்கிய புண்ணியச் சடையார்
பதியு நாமங்க ளனந்தமுற் றுடையார்
பணைகொ ளொற்றியூர்ப் பரமர்கா ணவர்தாம்
வதியுங் கோயிற்குத் திருவிளக் கிடுவோம்
வாழ்க நீயுடன் வருதியென் மனனே. 8

குளங்கொள் கண்ணினர் குற்றமே செயினுங்
குணமென் றேயதைக் கொண்டருள் புரிவோர்
உளங்கொ ளன்பர்த முள்ளகத் திருப்போர்
ஒற்றி யூரிடம் பற்றிய புனிதர்

1. நிதன நெஞ்சகம் என்பது — உருகுகின்ற நெஞ்சம்.

Koviloor Digital Library

களங்கொள் கண்டரெண் டோளர்கங் காளர்
கல்லை வில்லெனக் கண்டவ ரவர்தம்
வளங்கொள் கோயிற்குத் திருமெழுக் கிடுவோம்
வாழ்க நீயுடன் வருதியென் மனனே. 9

பணிகொள் மார்பினர் பாகன மொழியாள்
பாகர் காலனைப் பாற்றிய பதத்தார்
திணிகொள் வன்மத மலையுரி போர்த்தோர்
தேவர் நாயகர் திங்களஞ் சடையார்
அணிகொ ளொற்றியூ ரமர்ந்திடுந் தியாகர்
அழக ரங்கவ ரமைந்துவீற் றிருக்கும்
மணிகொள் கோயிற்குத் திருப்பணி செய்தும்
வாழ்க நீயுடன் வருதியென் மனனே. 10

திருச்சிற்றம்பலம்

36. நெஞ்சைத் தேற்றல்

திருவொற்றியூர்

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

சென்று வஞ்சர்தம் புறங்கடை நின்று
திகைக்க வெண்ணுமென் றிறனிலா நெஞ்சே
ஒன்று மஞ்சலை யென்னுடன் கூடி
ஒற்றி யூர்க்கின்று வருதியே லங்கு
மன்றுண் மேவிய வள்ளலார் மகிழ்ந்து
வாழ்கின் றூரவர் மலரடி வணங்கி
நன்று வேண்டிய யாவையும் வாங்கி
நல்கு வேனெனை நம்புதி மிகவே. 1

தீது வேண்டிய சிறியர்தம் மனையிற்
சென்று நின்றுநீ திகைத்திட னெஞ்சே
யாது வேண்டுதி வருதியென் னுடனே
யாணர் மேவிய வொற்றியூ ரகத்து
மாது வேண்டிய நடனநா யகனுர்
வள்ளலா ரங்கு வாழ்கின்றூர் கண்டாய்
ஈது வேண்டிய தென்னுமுன் னளிப்பார்
ஏற்று வாங்கிநா னீகுவ னுனக்கே. 2

இரக்கின் றோர்களுக் கில்லையென் னூர்பால்
இரத்த லீதலாம் எனலுணர்ந் திலையோ
கரக்கின் றோர்களைக் கனவினு நினையேல்
கருதி வந்தவர் கடியவ ரெனினும்
புரக்கின் றோர்மலர்ப் புரிசடை யுடையார்
பூத நாயகர் பொன்மலைச் சிலையார்
உரக்கின் றோர்திரு வொற்றியூர்க் கேகி
உன்னி யேற்குது முறுதியென் னெஞ்சே. 3

Koviloor Digital Library

கல்லி னெஞ்சர்பாற் கலங்கலென் னெஞ்சே
 கருதி வேண்டிய தியாதது கேண்மோ
சொல்லி னோங்கிய சுந்தரப் பெருமான்
 சோலை சூழொற்றித் தொன்னகர்ப் பெருமான்
அல்லி னோங்கிய கண்டத்தெம் பெருமான்
 அயனு மாலுநின் றறிவரும் பெருமான்
வல்லை யீகுவா னீகுவ தெல்லாம்
 வாங்கி யீகுவேன் வருதியென் னுடனே. 4

இலவு காக்கின்ற கிள்ளைபோ லுழன்றாய்
 என்னை நின்மதி யேழைநீ நெஞ்சே
பலவு வாழைமாக் கனிகனிந் திழியும்
 பணைகொ ளொற்றியூர்க் கென்னுடன் வருதி
நிலவு வெண்மதிச் சடையுடை யழகர்
 நிறைய மேனியி னிகழ்ந்தநீற் றழகர்
குலவு கின்றனர் வேண்டிய வெல்லாங்
 கொடுப்பர் வாங்கிநான் கொடுப்பனுன் றனக்கே. 5

மன்னு ருத்திரர் வாழ்வைவேண் டினையோ?
 மால வன்பெறும் வாழ்வுவேண் டினையோ?
அன்ன வூர்திபோ லாகவேண் டினையோ?
 அமையு மிந்திர னாகவேண் டினையோ?
என்ன வேண்டினுந் தடையிலை நெஞ்சே!
 இன்று வாங்கிநா னீகுவ னுனக்கே
வன்னி யஞ்சடை யெம்பிரா னொற்றி
 வளங்கொ ளூரிடை வருதியென் னுடனே. 6

மறப்பி லாச்சிவ யோகம்வேண் டுகினும்
 வழுத்த ரும்பெரு வாழ்வுவேண் டுகினும்
இறப்பி லாதின்னு மிருக்கவேண் டுகினும்
 யாது வேண்டினு மீகுவ னுனக்கே
பிறப்பி லானெங்கள் பரசிவ பெருமான்
 பித்த னென்றுநீ பெயர்ந்திட னெஞ்சே
வறப்பி லானருட் கடலவ னமர்ந்து
 வாழு மொற்றியின் வருதியென் னுடனே. 7

காலஞ் செல்கின்ற தறிந்திலை போலுங்
 காலன் வந்திடிற் காரிய மிலைகாண்
நீலஞ் செல்கின்ற மிடற்றினர் கரத்தில்
 நிமிர்ந்த வெண்மணருப் பேந்திய நிமலர்
ஏலஞ் செல்கின்ற குழலியோர் புடையார்
 இருக்கு மொற்றியூர்க் கென்னுடன் வருதி
ஞாலஞ் செல்கின்ற துயர்கெட வரங்கள்
 நல்கு வாரவை நல்குவ னுனக்கே. 8

Koviloor Digital Library

சென்று நீபுகும் வழியெலா முன்னைத்
தேட வென்வச மல்லவென் னெஞ்சே
இன்ற ரைக்கண மெங்குநேர்ந் தோடா
தியல்கொ ளொற்றியூர்க் கென்னுடன் வருதி
அன்று வானவ ருயிர்பெற நஞ்சம்
அருந்தி நின்றவெம் மண்ணலா ரிடத்தே
நின்று வேண்டிய யாவையு முனக்கு
நிகழ வாங்கிநா னீகுவ னன்றே. 9

கெடுக்கும் வண்ணமே பலருனக் குறுதி
கிலுத்து வாரவர் கெடுமொழி கேளேல்
அடுக்கும் வண்ணமே சொல்கின்றே னென்னைநீ
அம்மை யிம்மையு மகன்றிடா மையினுற்
றடுக்கும் வண்ணமே செய்திடே லொற்றித்
தலத்தினுக் கின்றென் றன்னுடன் வருதி
மடுக்கும் வண்ணமே வேண்டிய வெல்லாம்
வாங்கி யீகுவேன் வாழ்தியென் னெஞ்சே. 10

திருச்சிற்றம்பலம்

37. நெஞ்சறிவுறூஉ

திருவொற்றியூர்

எண்சீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

என்ன தன்றுகாண் வாழ்க்கையுட் சார்ந்த
இன்ப துன்பங்க ளிருவினைப் பயனுன்
மன்னு மும்மல மடஞ்செறி மனனே
வாழ்தி யோவிங்கு வல்வினைக் கிடமாய்
உன்ன நல்லமு தாஞ்சிவ பெருமான்
உற்று வாழ்ந்திடு மொற்றியூர்க் கின்றே
இன்ன லற்றிடச் செல்கின்றே னுனக்கும்
இயம்பி னேன்பழி யில்லையென் மீதே. 1

துன்ப வாழ்வினைச் சுகமென மனனே
சூழ்ந்து மாயையு ளாழ்ந்துநிற் கின்றாய்
வன்ப தாகிய நீயுமென் னுடனே
வருதியோ வன்றி நிற்றியோ வறியேன்
ஒன்ப தாகிய வுருவுடைப் பெருமான்
ஒருவன் வாழ்கின்ற வொற்றியூர்க் கின்றே
இன்ப வாழ்வுறச் செல்கின்றே னுனக்கும்
இயம்பினேன் பழி யில்லையென் மீதே. 2

ஆட்டு கின்றதற் காகவும் பலத்துள்
ஆடு கின்றசே வடிமலர் நினையாய்
வாட்டு கின்றனை வல்வினை மனனே
வாழ்ந்து நீசுக மாயிரு கண்டாய்

Koviloor Digital Library

கூட்டு கின்றநம் பரசிவன் மகிழ்விற்
குலவு மொற்றியூர்க் கோயில்சூழ்ந் திடபம்
ஈட்டு கின்றதற் கேகின்றே னுனக்கும்
இயம்பி னேன்பழி யில்லையென் மீதே. 3

வஞ்ச வாழ்க்கையை விடுத்தன னீயே
வாரிக் கொண்டிங்கு வாழ்ந்திரு மனனே
நஞ்ச மாயினு முண்குவை நீதான்
நானு மங்கதை நயப்பது நன்றோ
தஞ்ச மென்றவர்க் கருள்தரும் பெருமான்
தங்கு மொற்றியூர்த் தலத்தினுக் கின்றே
எஞ்ச லின்றிநான் செல்கின்றே னுனக்கும்
இயம்பி னேன்பழி யில்லையென் மீதே. 4

உண்மை யோதினு மோர்ந்திலை மனனே
உப்பி லிக்குவந் துண்ணுகின் றவர்போல்
வெண்மை வாழ்க்கையி னுகர்வினை விரும்பி
வெளுக்கின் றுயுனை வெறுப்பதி லென்னே
தண்மை மேவிய சடையுடைப் பெருமான்
சார்ந்த வொற்றியந் தலத்தினுக் கின்றே
எண்மை நீங்கிடச் செல்கின்றே னுனக்கும்
இயம்பி னேன்பழி யில்லையென் மீதே. 5

நீடு மைம்பொறி நெறிநடந் துலக
நெறியிற் கூடிநீ நினைப்பொடு மறப்பு
நாடு மாயையிற் கிடந்துழைக் கின்றாய்
நன்று நின்செய னின்றிடு மனனே
ஆடு மம்பலக் கூத்தனெம் பெருமான்
அமர்ந்த வொற்றியூ ராலயத் தின்றே
ஈடு நீங்கிடச் செல்கின்றே னுனக்கும்
இயம்பி னேன்பழி யில்லையென் மீதே. 6

கூறு மோர்கணத் தெண்ணுறு நினைவு
கோடி கோடியாய்க் கொண்டதை மறந்து
மாறு மாயையான் மயங்கிய மனனே
வருதி யன்றெனி னிற்றியிவ் வளவில்
ஆறு மேவிய வேணியெம் பெருமான்
அமர்ந்த வொற்றியூ ராலய மதன்பால்
ஈறி லின்புறச் செல்கின்றே னுனக்கும்
இயம்பி னேன்பழி யில்லையென் மீதே. 7

யாது கண்டனை யதனிடத் தெல்லாம்
அணைகின் றுயவ மாகநிற் கிந்த
போது போக்கினை யேயினி மனனே
போதி போதிநீ போம்வழி யெல்லாங்

Koviloor Digital Library

கோது நீக்கிநல் லருள்தரும் பெருமான்
குலவு மொற்றியூர்க் கோயிலுக் கின்றே
ஏத மோடநான் செல்கின்றே னுனக்கும்
இயம்பி னேன்பழி யில்லையென் மீதே. 8

விச்சை வேண்டினை வினையுடை மனனே
மேலை நாட்பட்ட வேதனை யறியாய்
துச்சை நீபடுந் துயருனக் கல்லாற்
சொல் லிறந்தநற் சுகம்பலித் திடுமோ
பிச்சை யெம்பெரு மானென நினையேற்
பிறங்கு மொற்றியம் பெருந்தகை யவன்பால்
இச்சை கொண்டுநான் செல்கின்றே னுனக்கும்
இயம்பி னேன்பழி யில்லையென் மீதே. 9

தூக்க முற்றிடுஞ் சோம்புடை மனனே
சொல்வ தென்னையோர் சுகமிது வென்றே
ஆக்க முற்றுநான் வாழநீ நரகில்
ஆழ நேர்ந்திடு மன்றுகண் டறிகாண்
நீக்க முற்றிடா நின்மல னமர்ந்து
நிகழு மொற்றியூர் நியமத்திற் கின்றே
ஏக்க மற்றிடச் செல்கின்றே னுனக்கும்
இயம்பி னேன்பழி யில்லையென் மீதே. 10

திருச்சிற்றம்பலம்

38. நெடுமொழி வஞ்சி

திருவொற்றியூர்
எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்
திருச்சிற்றம்பலம்

வார்க்கொண் மங்கையர் முலைமலைக் கேற்றி
மறித்து மங்கவர் மடுவினிற் றள்ளப்
பார்க்கின்றா யெனைக் கெடுப்பதி லுனக்குப்
பாவமே யலாற் பலன்சிறி துளதோ!
ஈர்க்கின் றாய்கடுங் காமமாம் புலையா
இன்று சென்றுநா னோர்பெறு மொற்றி
ஊர்க்குண் மேவிய சிவனருள் வாளால்
உன்னை வெட்டுவ லுண்மையென் றுணரே. 1

கொடிய மாதர்க ளிடையுறு நரகக்
குழியி லென்றனைக் கொண்டுசென் றழுத்திக்
கடிய வஞ்சனை யாலெனைக் கலக்கங்
கண்ட பாவியே காமவேட் டுவனே
இடிய நெஞ்சக மிடருழந் திருந்தேன்
இன்னு மென்னைநீ யேனிழுக் கின்றாய்
ஒடிவி லொற்றியூர்ச் சிவனருள் வாளால்
உன்னை வெட்டுவ லுண்மையென் றுணரே. 2

Koviloor Digital Library

பேதை மாதர்தம் மருங்கிடை யாழ்ந்த
பிலத்தி லென்றனைப் பிடித்தழ வீழ்த்தி
வாதை யுற்றிட வைத்தனை யையோ
மதியில் காமமாம் வஞ்சக முறியா
ஏத நீத்தரு ளடியர்தஞ் சார்வால்
எழுகின் றேனெனை யின்னுநீ யிழுக்கில்
ஓது மொற்றியூர்ச் சிவனருள் வாளால்
உன்னை வெட்டுவ லுண்மையென் றுணரே. 3

கோவ மென்னுமோர் கொலைப்புலைத் தலைமைக்
கொடிய னேயெனைக் கூடிநீ நின்ற
பாவ வன்மையாற் பகையடுத் துயிர்மேற்
பரிவி லாமலே பயனிழந் தனன்காண்
சாவ நீயில தேலெனை விடுக
சலஞ்செய் வாயெனிற் சதுர்மறை முழக்கம்
ஓவி லொற்றியூர்ச் சிவனருள் வாளால்
உன்னை வெட்டுவ லுண்மையென் றுணரே. 4

சார்ந்த லோபமாந் தயையிலி யேடா
தாழ்ந்தி ரப்பவர் தமக்கணு வதனுள்
ஈர்ந்த வொன்றினை யீயவு மொட்டாய்
இரக்கின் றோர்தரி னதுகொளற் கிசைவாய்
சோர்ந்தி டாதுநான் றுய்ப்பவுஞ் செய்யாய்
சுகமி லாதநீ தூரநில் லின்றேல்
ஓர்ந்த வொற்றியூர்ச் சிவனருள் வாளால்
உன்னை வெட்டுவ லுண்மையென் றுணரே. 5

மோக மென்னுமோர் மூடரிற் சிறந்தோய்
முடிவி லாத்துயர் மூலவில் லொழுக்கிற்
போக மென்னுமோ ரளற்றிடை விழவும்
போற்று மக்கள்பெண் டன்னைதந் தையராஞ்
சோக வாரியி லழுந்தவு மியற்றிச்
சூழ்கின் றாயெனைத் தொடர்ந்திடேற் றொடரில்
ஓகை யொற்றியூர்ச் சிவனருள் வாளால்
உன்னை வெட்டுவ லுண்மையென் றுணரே. 6

மதமெ னும்பெரு மத்தனே யெனைநீ
வருத்த லோதினல் வாயினுக் கடங்கா
சிதமெ னும்பரன் செயலினை யறியாய்
திங்கு செய்தனர் நன்மையாஞ் செய்தோம்
இதம றிந்தன மெமக்கினி யொப்பார்
யாவ ரென்றெனை யிழிச்சினை யடியார்க்
குதவு மொற்றியூர்ச் சிவனருள் வாளால்
உன்னை வெட்டுவ லுண்மையென் றுணரே. 7

Koviloor Digital Library

அமைவ றிந்திடா ஆணவப் பயலே!
அகில கோடியு மாட்டுகின் றவன்காண்
எமைந டத்துவோ னிதுண ராமல்
இன்று நாம்பர னிணையடி தொழுதோங்
கமைவி னேத்தினே மடியரு மானேங்
கனிகின் றேமெனக் கருதிட மயக்கேல்
உமைய னொற்றியூர்ச் சிவனருள் வாளால்
உன்னை வெட்டுவ லுண்மையென் றுணரே. 8

கருமை யாம்அகங் காரமர்க் கடவா!
கடைய னேயுனைக் கலந்தத னலே
அருமை யாகநாம் பாடினேங் கல்வி
அறவ றிந்தன மருளையு மடைந்தோம்
இருமை யின்பமும் பெற்றன மென்றே
எனைம தித்துநா னிழிவடைந் தனன்காண்
ஒருமை யொற்றியூர்ச் சிவனருள் வாளால்
உன்னை வெட்டுவ லுண்மையென் றுணரே. 9

வெண்மை சேரகங் காரமாம் வீண
விடுவி டென்றனை வித்தக முணராய்
தண்மை யின்றிதற் கிதுவெனத் துணிந்தேன்
றனையுஞ் சாய்ப்பது தகவென நினைத்தாய்
அண்மை நின்றிடேற் சேய்மைசென் றழிநீ
யன்றி நிற்றியே லரிமுத லேத்தும்
உண்மை யொற்றியூர்ச் சிவனருள் வாளால்
உன்னை வெட்டுவ லுண்மையென் றுணரே. 10

திருச்சிற்றம்பலம்

39. பற்றின் திறம் பகர்தல்

திருவொற்றியூர்
எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்
திருச்சிற்றம்பலம்

வாணரை விடையூர் வரதனை யொற்றி வாணனை மலிகடல் விடமாம்
ஊணனை யடியே முளத்தனை யெல்லா முடையனை யுள்கிநின் றேத்தா
வீணரை மடமை விழலரை மரட்ட வேடரை மூடரை நெஞ்சக்
கோணரை முருட்டுக் குறும்பரைக் கண்டாற் கூசுவ கூசுவ விழியே. 1

மூவரை யளித்த முதல்வனை முக்கண் மூர்த்தியைத் தீர்த்தனைப் பெரிய
தேவரைக் காத்த செல்வனை யொற்றித் தியாகனை நினைந்துநின் றேத்தாப்
பாவரை வரையாப் படிற்றரை வாதப் பதடரைச் சிதடரைப் பகைசேர்
கோவரைக் கொடிய குணத்தரைக் கண்டாற் கூசுவ கூசுவ விழியே. 2

அண்டனை யெண்டோ ளத்தனை யொற்றி யப்பனை யையனை நீல
கண்டனை யடியர் கருத்தனைப் பூத கணத்தனைக் கருதிநின் றேத்தா
மிண்டரைப் பின்று வெளிற்றரை வலிய வேற்றரைச் சிற்றரைப் பாபக்
குண்டரை வஞ்சக் குடியரைக் கண்டாற் கூசுவ கூசுவ விழியே. 3

Koviloor Digital Library

நாதனைப் பொதுவி னடத்தனை யெவர்க்கு நல்லனை வல்லனைச் சாம
கீதனை யொற்றிக் கிறைவனை யெங்கள் கேள்வனைக் கிளர்ந்துநின் றேத்தாத்
தீதரை நரகச் செக்கரை வஞ்சத் திருட்டரை மருட்டரைத் தொலையாக்
கோதரைக் கொலைசெய் கோட்டரைக் கண்டாற் கூசுவ கூசுவ விழியே. 4

நம்பனை யழியா நலத்தனை யெங்க ளுதனை நீதனைக் கச்சிக்
கம்பனை யொற்றிக் கங்கைவே ணியனைக் கருத்தனைக் கருதிநின் றேத்தா
வம்பரை யூத்தை வாயரைக் கபட மாயரைப் பேயரை யெட்டிக்
கொம்பரைப் பொல்லாக் கோளரைக் கண்டாற் கூசுவ கூசுவ விழியே. 5

சடையனை யெவர்க்குந் தலைவனைக் கொன்றைத் தாரனைச் சராசர சடத்துள்
உடையனை யொற்றி யூரனை மூவ ருச்சனை யுள்கிநின் றேத்தாக்
கடையரைப் பழைய கயவரைப் புரட்டுக் கடியரைக் கடியரைக் கலக
நடையரை உலக நசையரைக் கண்டால் நடுங்குவ [1] நடுங்குவ மனமே. 6

கஞ்சனைச் சிரங்கொய் கரத்தனை மூன்று கண்ணனைக் கண்ணனைக் காத்த
தஞ்சனை யொற்றித் தலத்தனைச் சைவத் தலைவனைத் தாழ்ந்துநின் றேத்தா
வஞ்சரைக் கடைய மடையரைக் காம மனத்தரைச் சினத்தரை வலிய
நஞ்சரை யிழிந்த நரகரைக் கண்டால் நடுங்குவ நடுங்குவ மனமே. 7

தாமனை மழுமான் றரித்தசெங் கரனைத் தகையனைச் சங்கரன் றன்னைச்
சேமனை யொற்றித் தியாகனைச் சிவனைத் தேவனைத் தேர்ந்துநின் றேத்தா
ஊமரை நீண்ட வொதியரைப் புதிய வொட்டரைத் துட்டரைப் பகைகொள்
நாமரை நரக நாடரைக் கண்டால் நடுங்குவ நடுங்குவ மனமே. 8

ஈசனைத் தாயி னினியனை யொற்றி யின்பனை யன்பனை யழியாத்
தேசனைத் தலைமைத் தேவனை ஞானச் சிறப்பனைச் சேர்ந்துநின் றேத்தா
நீசரை நாணி னெட்டரை நரக நேயரைத் தீயரைத் தரும
நாசரை யொழியா நட்டரைக் கண்டால் நடுங்குவ நடுங்குவ மனமே. 9

நித்தனைத் தூய நிமலனைப் புலியூர் நிருத்தனை யொருத்தனை வாய்மைச்
சுத்தனை யொற்றித் தலம்வளர் ஞான சுகத்தனைச் சூழ்ந்துநின் றேத்தா
மத்தரைச் சமண வாதரைத் தேர வறியரை முறியரை வைண
நத்தரைச் சுணங்க நாவரைக் கண்டால் நடுங்குவ நடுங்குவ மனமே. 10

திருச்சிற்றம்பலம்

---

1. நடுங்குவ நடுங்குவ மனமே என்பது — ஒருமை பன்மை மயக்கம் — உபலக்கணத்தா னமைந்த தென்க. இதனை விரிக்கிற் பெருகும். அறிவொன்றே யாகவுமிடனும் பற்றுக்கோடும்பற்றி, ஆசிரியர்—தொல்காப்பியனார்—மரபியலுள் "ஒன்றறிவது" என்னுஞ் சூத்திரந்தொட்டு "மடக்காமே" என்னுஞ் சூத்திரங்காறும் விதந்தமையானுங் காண்க. அல்லதூஉம்—ஒருமையிற்பன்மையும் பன்மையி னொருமையு மயங்கிவந்த தென்பதூஉமொன்று. ஒன்றறியிறுகெட்டு நின்றதெனக் கொள்ளுநர் கொள்க.

Koviloor Digital Library

40. அடிமைத்திறத் தலைசல்

திருவொற்றியூர்

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

தேவ ரறியார் மாலறியான் றிசைமா முகத்தோன் றானறியான்
யாவ ரறிவார் திருவொற்றி யப்பா வடியேன் யாதறிவேன்
மூவர் திருப்பாட் டினுக்கிசைந்தே முதிர்தீம் பாலு முக்கனியுங்
காவ லமுது நறுந்தேனுங் கைப்ப வினிக்கு நின்புகழே. 1

புகழே விரும்பிப் புலனிழந்தேன் போந்துன் பதத்தைப் போற்றுகிலேன்
இகழே னெனைநா னொற்றியப்பா வென்னை மதித்தே னிருண்மனத்தேன்
திகழே முலகி லெனைப்போலோர் சிறிய ரறியேன் றீவினையை
அகழே னெனினு மெனையாளா தகற்ற லருளுக் கழகன்றே. 2

அன்று மறியார் மாதவரு மயனு மாலு நின்னிலையை
இன்று மறியா ரன்றியவ ரென்று மறியா ரென்னிலொரு
நன்று மறியே னயடியே னுனெப் படிதா னறிவேனே
ஒன்று நெறியே தொற்றியப்பா வொப்பா ரில்லா வுத்தமனே. 3

ஒப்பா ரில்லா வொற்றியப்பா வுன்னை மறந்தேன் மாதர்கடம்
வெட்டார் குழியிற் கண்மூடி விழுந்தே னெழுந்தும் விரைகின்றேன்
இப்பார் நடையிற் களித்தவரை யீர்த்துக் கொடுபோய்ச் செக்கிலிடு
விப்பார் நமனுர் என்பதைநா னினையா தறிவை விடுத்தேனே. 4

விடுத்தேன் றவத்தோர் நெறிதன்னை வியந்தே னுலக வெந்நெறியை
மடுத்தேன் றுன்ப வாரிதனை வஞ்ச மனத்தர் மாட்டுறவை
அடுத்தே னொற்றி யப்பாவுன் னடியை நினையே னலமந்தேன்
படுத்தே நமன்செக் கிடும்போது படிறேன் யாது படுவேனே. 5

படுவே னல்லேன் மன்றமரார் பரிவே னல்லேன் பரமநினை
விடுவே னல்லே னென்னைபுநீ விடுவா யல்லை யினிச்சிறிதுங்
கெடுவே னல்லேன் சிறியார்சொற் கேட்பே னல்லேன் றருமநெறி
அடுவே னல்லேன் றிருவொற்றி யப்பா வுன்ற னருளுண்டே. 6

உண்டோ வெனைப்போன் மதியிழந்தோ ரொற்றி யப்பா வுன்னுடைய
திண்டோ ளிலங்குந் திருநீற்றைக் காண விரும்பேன் சேர்ந்தேத்தேன்
எண்டோ ளுடையா யென்றிரங்கே னிறையுந் திரும்பே னிவ்வறிவைக்
கொண்டே யுனைநான் கூடுவனின் குறிப்பே தொன்று மறியேனே. 7

அறியே னுன்றன் புகழ்ப்பெருமை யண்ண லொற்றி யப்பாநான்
சிறியே னெனினு நினையன்றித் தெளியேன் மற்றோர் தேவர்தமை
வெறியேன் பிழையைக் குறித்தெனைக்கை விட்டா லென்செய் வேனடியேன்
நெறியே தருத னின்கடன்கா ணின்னைப் பணித லென்கடனே. 8

Koviloor Digital Library

கடனே யடியர் தமைக்காத்த லென்றாற் கடையே னடியனன்றோ
உடனேர் பிணியு மொழித்திலையென் னுள்ளத் துயரந் தவிர்த்திலையே
விடனேர் கண்டத் தின்னமுதே வேத முடியில் விளங்கொளியே
அடனேர் விடையாய் திருவொற்றி யப்பா வுனைநா னயர்த்திலனே. 9

இலனே மற்றோர் துணைசிறிது மென்னே காம மெனுங்கடலின்
மலைனேன் வருந்தக் கண்டிருத்தன் மணியே யருளின் மரபன்றே
அலனே யயலா னடியேனா னையா வொற்றி யப்பாநல்
நலனேர் தில்லை யம்பலத்தி னடிக்கும் பதமே நாடினனே. 10

நாடி யலுத்தே னென்னளவோ நம்பா மன்றுள் நன்குநடம்
ஆடி மகிழுந் திருவொற்றி யப்பா வுன்ற னருட்புகழைக்
கோடி யளவி லொருகூறுங் குணித்தா ரின்றி யாங்காங்குந்
தேடி யளந்துந் தெளிந்திலரே திருமான் முதலாந் தேவர்களே. 1

திருச்சிற்றம்பலம்

41. அவத் தொழிற் கலைசல்

திருவொற்றியூர்

எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

அணங்கனார் களபத் தனமலைக் கிவரு மறிவிலே னென்புகாத் துழலுஞ்
சுணங்கனேன் றனக்குன் றிருவருள் கிடைக்குஞ் சுகமுமுண் டாங்கொலோவறி
கணங்கணேர் காட்டி லெரியுகந் தாடுங் கடவுளே கடவுளர்க் கிறையே [யேன்
உணங்குவெண் டலைத்தார் புனைதிருப் புயனே யொற்றியூ ருத்தம தேவே. 1

தேவரே யயனே திருநெடு மாலே சித்தரே முனிவரே முதலா
யாவரே யெனினு மையநின் றன்மை யறிந்திலர் யானுனை யறிதல்
தாவில்வான் சுடரைக் கண்ணிலி யறியுந் தன்மையன் றோபெருந் தவத்தோர்
ஓவின்மா தவஞ்செய் தோங்குசீ ரொற்றி யூரமர்ந் தருள்செயு மொன்றே. 2

ஒன்றுநின் றன்மை யறிந்தில மறைக ளுள்ளநொந் திளைக்கின்ற [1]தின்னும்
நன்றுநின் றன்மை நானறிந் தேத்தல் நாயர சாளல்போ லன்றோ
சென்றுநின் றடிய ருள்ளகத் தூறுந் தெள்ளிய வமுதத்தின் றிரட்டே
மன்றுணின் றாடு மாணிக்க மலையே வளங்கொளு மொற்றியூர் மணியே. 3

மணித்தலை நாக மனையவெங் கொடியார் வஞ்சக விழியினான் மயங்கிப்
பிணித்தலைக் கொண்டு வருந்திநின் றழலும் பேதையேற் குன்னரு ளுளதோ
கணித்தலை யறியாப் பேரொளிக் குன்றே கண்கண்மூன் றுடையவென் கண்ணே
அணித்தலை யடியர்க் கருடிரு வொற்றி யப்பனே செப்பரும் பொருளே. 4

ஒப்பிலா யுனது திருவருள் பெறுவா னுன்னினை கின்றனன் மனமோ
வெப்பிலாழ்ந் தெனது மொழிவழி யடையா வேதனைக் கிடங்கொடுத் துழன்ற
இப்பரி சானா லென்செய்வே னெளியே னெவ்வண நின்னருள் கிடைக்குந்
துப்புர வொழிந்தோ ருள்ளகத் தோங்குஞ் சோதியே யொற்றியூர்த் துணையே.

1. மறைகள் இளைக்கின்றது என்பது — மறைகளு மமரர்கூட்டமு மாட்டாதென் றாற்போலும் வந்த பன்மையி னொருமை மயக்கம்.

Koviloor Digital Library

துணையிலே னினது திருவடி யல்லாற் றுட்டனே னெனினுமென் றன்னை
இணையிலா யுனது தொண்டர்தந் தொண்ட னெனச்செய வின்னரு ளியல்பே
அணையிலா தன்ப ருள்ளகத் தோங்கு மானந்த வெள்ளமே யரசே
பணையில்வா ளைகள்பா யொற்றியம் பதியிற் பரிந்தமர்ந் தருள்செயும் பரமே. 6

பரிந்துநின் றுலக வாழ்க்கையி லுழலும் பரிசொழிந் தென்மலக் கங்குல்
இரிந்திட நினது திருவருள் புரியா திருத்தியே லென்செய்வே னெளியேன்
எரிந்திட வெயின்மூன் றழற்றிய நுதற்க ணெந்தையே யெனக்குறுந் துணையே
விரிந்தபூம் பொழில்சூ ழொற்றியம் பதியின் மேவிய வித்தக வாழ்வே. 7

வாழ்வது நின்ற னடியரோ டன்றி மற்றுமோர் வெற்றருள் வாழேன்
தாழ்வது நினது தாட்கலான் மற்றைத் தாட்கெலாஞ் சரணெனத் தாழேன்
சூழ்வது நினது திருத்தளி யல்லாற் சூழ்கிலேன் றெருண்டனேன் றன்னை
ஆள்வது கருதி னன்றியென் செய்கே னையனே யொற்றியூ ரரசே. 8

ஐயனே மாலு மயனுநின் றறியா வப்பனே யொற்றியூ ரரசே
மெய்யனே நினது திருவருள் விழைந்தேன் விழைவினை முடிப்பையோ வன்றிப்
பொய்யனேன் றன்மைக் கடாதது கருதிப் பொன்னருள் செயாதிருப் பாயோ
கையனே னென்று மறிந்திலே னென்னைக் காத்தருள் செய்வதுன் கடனே. 9

செய்வதுன் கடன்காண் சிவபெரு மானே திருவொற்றி யூர்வருந் தேனே
உய்வதென் கடன்கா ணன்றியொன் றில்லை யுலகெலா முடையநா யகனே
நைவதென் னெஞ்ச மென்செய்கே னினது நல்லருள் பெறுவிடி லென்னை
வைவதுன் னடிய ரன்றியிவ் வுலக வாழ்க்கையில் வரும்பொலா வணங்கே. 10

திருச்சிற்றம்பலம்

42. நாளவத்தலைசல்

திருவொற்றியூர்
எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்
திருச்சிற்றம்பலம்

இன்றிருந் தவரை நாளையிவ் வுலகி லிருந்திடக் கண்டிலே மாவா
என்றிருந் தவத்தோ ரரற்றுகின் றனரா லேழையே னுண்டுடுத் தவமே
சென்றிருந் துறங்கி விழிப்பதே யல்லாற் செய்வன செய்கிலே னந்தோ
மன்றிருந் தோங்கு மணிச்சுட ரொளியே வள்ளலே யொற்றியூர் வாழ்வே. 1

தாவியே யியமன் றமர்வரு மந்நாள் சம்புநின் றிருவரு ளடையாப்
பாவியேன் செய்வ தென்னென நெஞ்சம் பதைபதைத் துருகுகின் றனன்காண்
கூவியே யெனக்குன் னருட்ரி லல்லாற் கொடியனே னுய்வகை யறியேன்
வாவியோர் பெறப்பூஞ் சோலைசூழ்ந் தோங்கி வளம்பெறு மொற்றியூர் வாழ்வே.

நீரின்மே லெழுது மெழுத்தினும் விரைந்து நிலைபடா வுடம்பினை யோம்பிப்
பாரின்மே லலையும் பாவியேன் றனக்குப் பரிந்தருள் பாலியா யென்னிற்
காரின்மேல் வரல்போற் கடாமிசை வருமக் காலன்வந் திடிலெது செய்வேன்
வாரின்மேல் வளருந் திருமுலை மலையாண் மணாளனே யொற்றியூர் வாழ்வே. 3

Koviloor Digital Library

கருங்கணஞ் சூழக் கசியுமிவ் வுடலங் கருதுமிக் கணமிருந் ததுதான்
வருங்கண மேதாய் முடியுமோ வையோ வஞ்சனே னென்செய வல்லேன்
பெருங்கணஞ் சூழ வடவனத் தாடும் பித்தனே யுத்தம தவத்தோர்
மருங்கண வுறநின் றரகர வெனுஞ்சொல் வான்புகு மொற்றியூர் வாழ்வே. 4

கன்னிய ரளகக் காட்டிடை யுழன்ற கன்மனக் குரங்கினேன் றனைநீ
அன்னிய னென்றே கழித்திடி லுனக்கிங் கார்சொல வல்லவ ரையா
என்னிய லறியே னமன்றமர் வருநா ளென்செய்வே னென்செய்வே னந்தோ
மன்னிய வன்னி மலர்ச்சடை மருந்தே வளங்கொளு மொற்றியூர் வாழ்வே. 5

பசிக்குண வுழன்றுன் பாததா மரையைப் பாடுத லொழிந்துநீர்ப் பொறிபோல்
நசிக்குமிவ் வுடலை நம்பினே னென்னை நமன்றமர் வருத்திலென் செய்கேன்
விசிக்குநல் லரவக் கச்சினேய் நினது மெய்யரு ளலதொன்றும் விரும்பேன்
வசிக்குநற் றவத்தோர்க் கருள்செய வோங்கி வளம்பெறு மொற்றியூர் வாழ்வே.

கான்றசோ றருந்துஞ் சுணங்கனிற் பலநாள் கண்டபுன் சுகத்தையேவிரும்பும்
நான்றநெஞ் சகனே னமன்றமர் வருநா ணுறுவ தன்றியென் செய்கேன்
சான்றவர் மதிக்கு நின்றிரு வருடான் சார்ந்திடிற் றருக்குவ னையா
மான்றனிக் கரத்தெம் வள்ளலே யென்னை வாழ்விக்கு மொற்றியூர் வாழ்வே. 7

மடிக்குறு நீர்மே லெழுத்தினுக் கிடவே மைவடித் தெடுக்குநர் போல
நொடிக்குளே மறையு முடம்பினை வளர்க்க நொந்தன னுந்தது மல்லாற்
படிக்குளே மனத்தாற் பரிவுறு கின்றேன் பாவியேன் றனக்கருள் புரியாய்
வடிக்குறுந் தமிழ்கொண் டன்பருக் கருளும் வள்ளலே யொற்றியூர் வாழ்வே. 8

அங்கையிற் புண்போ லுலகவாழ் வனைத்தும் அழிதரக் கண்டுநெஞ் சயர்ந்தே
பங்கமுற் றலைவ தன்றிநின் கமல பாதத்தைப் பற்றிலே னந்தோ
இங்கெனை நிகரு மேழையா ரெனக்குன் னின்னரு ளெவ்வண மருள்வாய்
மங்கையோர் புடைகொள் வள்ளலே யழியா வளங்கொளு மொற்றியூர் வாழ்வே.

கணத்தினி லுலக மழிதரக் கண்டும் கண்ணிலார் போற்கிடந் துழைக்குங்
குணத்தினிற் கொடியேன் றனக்குநின் னருடான் கூடுவ தெவ்வண மறியேன்
பணத்தினிற் பொலியும் பாம்பரை யார்த்த பரமனே பிரமன்மா லறியா
வணத்தினு னின்ற மாணிக்கச் சுடரே வள்ளலே யொற்றியூர் வாழ்வே. 10

திருச்சிற்றம்பலம்

43. அவலமதிக்கலைசல்

திருவொற்றியூர்

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

மண்ணை மனத்துப் பாவியன்யான் மடவா ருள்ளே வதிந்தளிந்த
புண்ணை மதித்துப் புகுகின்றேன் போத மிறந்தேன் புண்ணியனே
எண்ண வினிய நின்புகழை யேத்தே னுதிபோ லிருக்கின்றேன்
தண்ண லமுதே நீயென்னைத் தடுத்திங் காளத் தக்கதுவே. 1

Koviloor Digital Library

தக்க தறியேன் வெறியேனுன் சண்ட மடவார் தம்முலைதோய்
துக்க மதனைச் சுகமென்றே துணிந்தே னென்னைத் தொழும்பனெனின்
மிக்க வடியா ரென்சொல்லார் விண்ணோர் மண்ணோ ரென்புகலார்
செக்கர் நிறத்துப் பொன்மேனித் திருநீற் றொளிசேர் செங்கரும்பே. 2

கரும்பே யொற்றி யூரமர்ந்த கனியே யுன்றன் கழலடியை
விரும்பே னடியா ரடித்தொண்டின் மேவேன் பொல்லா விடமனைய
பெரும்பேய் மாதர் பிணக்குழியிற் பேதை மனம்போந் திடச்சூறைத்
துரும்பே யென்னச் சுழல்கின்றேன் றுணையொன் றறியேன் றுனியேனே. 3

துளியே பிறத்தற் கேதுவெனுந் துட்டமடவா ருட்டதும்பும்
பனியேய் மலஞ்சூழ் முடைநாற்றப் பாழுங் குழிக்கே வீழ்ந்திளைத்தேன்
இனியே துறுமோ வென்செய்கே னெளியேன் றனைநீ யேன்றுகொளாய்
கனியே கருணைக் கடலேயென் கண்ணே யொற்றிக் காவலனே. 4

வலமே யுடையார் நின்கருணை வாய்ந்து வாழ்ந்தார் வஞ்சகனேன்
மலமே யுடையே னுதலினுன் மாத ரெனும்பே யவர்க்குமுவர்ச்
சலமே யொழுக்குப் பொத்தரிடைச் சாய்ந்து தளர்ந்தேன் சார்பறியேன்
நலமே யொற்றி நாடுடையாய் நாயே னுய்யு நாளென்றோ. 5

நாளை வருவ தறியேனு னஞ்ச மனைய நங்கையர்தம்
ஆளை யழுத்து நீர்க்குழியி லழுந்தி யழுந்தி யெழுந் தலைந்தேன்
கோளை யகற்றி நின்னடிக்கே கூடும் வண்ணங் குறிப்பாயோ
வேளை யெரித்த மெய்ஞ்ஞான விளக்கே முத்தி வித்தகமே. 6

முத்தி முதலே முக்கணுடை மூரிக் கரும்பே நின்பதத்திற்
பத்தி முதலே யில்லாதேன் பரம சுகத்திற் படிவேனோ
எத்தி யழைக்குங் கருங்கண்ணா ரிடைக்குட் பிளந்த வெடிப்பதனில்
தத்தி விழுந்தே னெழுவேனேற் றள்ளா நின்ற தென்மனமே. 7

மனமே முன்னர் வழிகாட்டப் பின்னே சென்று மங்கையர்தந்
தனமே யென்னு மலையேறிப் பார்த்தே னிருண்ட சலதியொன்று
முனமே தோன்ற மதிமயங்கி விழுந்தே னெழுவான் முயலுகின்றேன்
இனமே யென்னை நீயன்றி யெடுப்பா ரில்லை யென்னரசே. 8

என்னைக் கொடுத்தேன் பெண்பேய்கட் கின்ப மெனவே யெனக்கவர்நோய்
தன்னைக் கொடுத்தார் நானதுதோ தளர்ந்து நின்றே னல்லதுசெம்
பொன்னைக் கொடுத்தும் பெறவரிய பொருளே யுன்னைப் போற்றுகிலேன்
இன்னற் கொடுத்த பவமுடையே னெற்றுக் கிவணிற் கின்றேனே. 9

எற்றுக் கடியார் நின்றதுநின் னிணைத்தாண் மலரை யேத்தவன்றோ
மற்றிக் கொடியே னஃதின்றி மடவா ரிடைவாய் மணிப்பாம்பின்
புற்றுக் குழன்றே னென்னேயென் புந்தி யெவர்க்குப் புகல்வேனே
கற்றுத் தெளிந்தோர் புகழொற்றிக் கண்ணூர்ந் தோங்குங் கற்பகமே.

Koviloor Digital Library

ஓங்கும் பொருளே திருவொற்றி யூர்வா ழரசே யுனைத்துதியேன்
தீங்கும் புழுவுஞ் சிலைநீருஞ் சீழும் வழும்புஞ் சேர்ந்தலைக்கத்
தூங்கு மடவார் புலைநாற்றத் தூம்பி னுழையுஞ் சூதகனேன்
வாங்கும் பவந்தீர்த் தருள்வதுநின் கடன்கா ணிந்த மண்ணிடத்தே. 11

திருச்சிற்றம்பலம்

44. ஆனவாழ்வினலைசல்

திருவொற்றியூர்

எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

துள்ளிவாய் மடுக்குங் காளைய ராட்டத் துடுக்கினை யொடுக்குறுங் காமக்
கொள்ளிவாய்ப் பேய்க ளெனுமட வியர்தங் கூட்டத்து ளூட்டம் வைத் துழன் [றேன்
உள்ளிவாய் மடுத்துள் ளுருகியா னந்த வுததிபோற் கண்கணீ ருகுப்பார்
அள்ளிவாய் மடுக்கு மமுதமேயெங்க ளண்ணலே யொற்றியூ ரரசே. 1

ஒற்றியூ ரமரு மொளிகெழு மணியே யுன்னடி யுள்கிநின் றேத்தேன்
முற்றியூர் மலினக் குழியிருண் மடவார் முலையெனு மலநிறைக் குவையைச்
சுற்றியூர் நாயிற் சுழன்றனன் வறிதே சுகமெனச் சூழ்ந்தழி யுடலைப்
பற்றியூர் நகைக்கத் திரிதரு கின்றேன் பாவியே னுய்திற மரிதே. 2

அரியது நினது திருவரு ளொன்றே யவ்வரு ளடைதலே யெவைக்கும்
பெரியதோர் பேறென் றுணர்ந்திலேன் முருட்டுப் பேய்களை யாயிரங் கூட்டிச்
சரியெனச் சொலினும் போதுறு மடைமைத் தையலார் மையலி லழுந்திப்
பிரியமுற் றலைந்தே னேழைநா னொற்றிப் பெருமநின் னருளெனக் குண்டே. 3

பெருமநின் னருளே யன்றியிவ் வுலகிற் பேதையர் புழுமலப் பிலமாங் [பேன்
கருமவாழ் வெனைத்தும் வேண்டிலேன் மற்றைக் கடவுளர் வாழ்வையும் விரும்
தருமவா ரிதியே தடம்பணை யொற்றித் தலத்தமர் தனிமுதற் பொருளே
துருமவா னமுதே யடியனேன் றன்னைச் சோதியா தருள்வதுன் பரமே. 4

அருள்வதுன் னியற்கை யுலகெலா மறியு மையவோ நானதை யறிந்து
மருள்வதென் னியற்கை யென்செய்வே னிதனை மனங்கொளா தருளரு ளாயேல்
தெருள்வதொன் றின்றி மங்கையர் கொங்கைத் திடர்மலைச் சிகரத்தி லேறி
உருள்வது மல்குற் படுகுழி விழுந்தங் குலைவது மன்றியொன் றுண்டோ. 5

உண்டுநஞ் சமர ருயிர்பெறக் காத்த வொற்றியூ ரண்ணலே நின்னைக்
கண்டுநெஞ் சுருகிக் கண்கணீர் சோரக் கைகுவித் திணையடி யிறைஞ்சேன்
வண்டுநின் றலைக்குங் குழற்பிறை நுதலார் வஞ்சக விழியினால் மயங்கிக்
குண்டுநீர் ஞாலத் திடையலை கின்றேன் கொடியனே னடியனே னன்றே. 6

அன்றுநீ யடிமைச் சாதனங் காட்டி யாண்டஆ ரூரனா் உன்னைச்
சென்றுதூ தருளென் றிரங்குத னோக்கிச் சென்றநின் கருணையைக் கருதி
ஒன்றுதோ ருள்ள முருகுகின் றனன்கா ணொற்றியூ ரண்ணலே யுலகத்
தென்றுமா லுழந்தே னெனினுநின் னடியே னென்றனைக் கைவிடே லினியே. 7

Koviloor Digital Library

இனியநின் திருத்தா ளிணைமல ரேத்தே னிளமுலை மங்கையர்க் குள்ளங் [யேன்
கனியவக் கொடியார்க் கேவல்செய் துழன்றேன் கடையனேன் விடயவாழ்வுடை
துனியவிவ் வுடற்க ணுயிர்பிரிந் திடுங்காற் றுணைநினை யன்றியொன் றறியேன்
றனியமெய்ப் போத வேதநா யகனே தடம்பொழி லொற்றியூ ரிறையே. 8

இறையுநின் திருத்தாட் கமலங்க ளேத்தே னெழில்பெற வுடம்பினை யோம்பிக்
குறையும்வெண் மதிபோற் காலங்க ளொழித்துக் கோதையர் குறுங்குழியளற்றிற்
பொறையுநன் னிறையு நீத்துழன் றலைந்தேன் பொய்யனே னனக்குவெண்சோதி
நிறையும்வெண் ணீற்றுக் கோலனே யொற்றி நிமலனே யருளுத னெறியே. 9

நெறியிலேன் கொடிய மங்கையர் மைய னெறியிலே நின்றன னெனினும்
பொறியிலேன் பிழையைப் பொறுப்பதுன் கடனே பொறுப்பது மன்றியிவ்வுலக
வெறியிலே யின்னு மயங்கிடா துன்றன் விரைமல ரடித்துணை யேத்தும்
அறிவுளே யருள்வா யொற்றியூ ரரசே யன்றினு ருள்ளறுத் தவனே. 10

திருச்சிற்றம்பலம்

45. அருட்டிறத்தலைசல்

திருவொற்றியூர்
கோச்சகக் கலிப்பா
திருச்சிற்றம்பலம்

நறைமணக்குங் கொன்றை நதிச்சடில நாயகனே
கறைமணக்குந் திருநீல கண்டப் பெருமானே
உறைமணக்கும் பூம்பொழில்சூ ழொற்றியப்பா வுன்னுடைய
மறைமணக்குந் திருவடியை வாய்நிரம்ப வாழ்த்தேனே. 1

அலைவளைக்கும் பாற்கடலா னம்புயத்தான் வாழ்த்திநிதந்
தலைவளைக்குஞ் செங்கமலத் தாளுடையா யாளுடையாய்
உலைவளைக்கா முத்தலைவே லொற்றியப்பா வுன்னுடைய
மலைவளைக்குங் கைம்மலரின் வண்மைதனை வாழ்த்தேனே. 2

ஆறடுத்துச் சென்றவெங்கள் அப்பருக்கா வன்றுகட்டுச்
சோறெடுத்துச் சென்ற துணையே சுயஞ்சுடரே
ஊறெடுத்தோர் காணரிய வொற்றியப்பா வுன்னுடைய
நீறடுத்த வெண்டோ ணிலைமைதனைப் பாரேனே. 3

சைவத் தலைவர் தவத்தோர்கள் தம்பெருமான்
மெய்வைத்த வுள்ளம் விரவிநின்ற வித்தகனே
உய்வைத்த வுத்தமனே யொற்றியப்பா வுன்னுடைய
தெய்வப் புகழென் செவிநிறையக் கேளேனே. 4

பாடுகின்றோர் பாடப் பரிசளிக்கும் புண்ணியனே
தேடுகின்றோர் தேடநிற்குந் தியாகப் பெருமானே
ஊடுகின்றோ ரில்லாத வொற்றியப்பா வம்பலத்துள்
ஆடுகின்ற சேவடிகண் டல்லலொழிந் தீரேனே. 5

Koviloor Digital Library

பூணாக மாடப் பொதுநடிக்கும் புண்ணியனே
சேணாகம் வாங்குஞ் சிவனே கடல்விடத்தை
ஊணாக வுள்ளுவந்த வொற்றியப்பா மாலயனுங்
காணாத நின்னுருவைக் கண்டு களியேனோ. 6

கொள்ளுவார் கொள்ளுங் குலமணியே மாலயனுந்
துள்ளுவார் துள்ளடக்குந் தோன்றலே சூழ்ந்துநிதம்
உள்ளுவா ருள்ளுறையு மொற்றியப்பா வுன்னுடைய
தெள்ளுவார் பூங்கழற்கென் சிந்தைவைத்து நில்லேனோ. 7

செவ்வண்ண மேனித் திருநீற்றுப் பேரழகா
எவ்வண்ண நின்வண்ண மென்றறிதற் கொண்ணாதாய்
[1]உவ்வண்ண னேத்துகின்ற வொற்றியப்பா வுன்வடிவம்
இவ்வண்ண மென்றென் னிதயத் தெழுதேனோ. 8

மன்றுடையாய் மாலயனு மற்றுமுள வானவருங்
குன்றுடையா யென்னக் குறைதவிர்த்த கோமானே
ஒன்றுடையா யூர்விடையா யொற்றியப்பா வென்னுடைய
வன்றுடையா யென்றுன் மலரடியைப் போற்றேனோ. 9

குற்றஞ் செயினுங் குணமாகக் கொண்டருளும்
நற்றவர்த முள்ள நடுநின்ற நம்பரனே
உற்றவர்த நற்றுணைவா வொற்றியப்பா வென்கருத்து
முற்றிடநின் சந்நிதியின் முன்னின்று வாழ்த்தேனோ. 10

வஞ்ச மடவார் மயக்கு மயக்கொழிய
நஞ்சமணி கண்டத்து நாதனே யென்றென்று
[2]உஞ்சவர்கள் வாழ்த்துகின்ற வொற்றியப்பா வுன்னுடைய
கஞ்ச மலரடிக்கே காதலுற்றுப் போற்றேனோ. 11

இன்ன லுலக விருணடையி னூடோறுந்
துன்னவரு நெஞ்சத் துடுக்கழிய நல்லோர்கள்
உன்னலுறுந் தெள்ளமுதே யொற்றியப்பா வென்வாயுன்
றன்னடைவே பாடித் தழும்பேறக் காணேனோ. 12

பெண்மணியே யென்றுலகிற் பேதையரைப் பேசாதென்
கண்மணியே கற்பகமே கண்ணுதலிற் கொள்கரும்பே
ஒண்மணியே தேனேயென் றொற்றியப்பா வுன்றனைநான்
பண்மணஞ்செய் பாட்டிற் பரவித் துதியேனோ. 13

மானமிலார் நின்ருள் வழுத்தாத வன்மனத்தார்
ஈனரவர் பாற்போ யிளைத்தே னிளைப்பாற
ஊனமிலார் போற்றுகின்ற வொற்றியப்பா வுன்னுடைய
ஞான வடிவினிழ னண்ணி மகிழேனோ. 14

---

1. உவ்வண்ணன் என்பது — உகரவாச்சியார்த்தனும் விளங்கும் விஷ்ணு.
2. உஞ்சவர்கள் என்பது — உய்ந்தவர்கள் (அடியார்கள்.)

Koviloor Digital Library

கல்லார்க் கிதங்கூறிக் கற்பழிந்து நில்லாமல்
எல்லார்க்கு நல்லவனே யென்னரசே நற்றருமம்
ஒல்லார் புரமெரித்த வொற்றியப்பா வுன்னடிக்கே
சொல்லான் மலர்தொடுத்துச் சூழ்ந்தணிந்து வாழேனே. 15

கற்பவற்றைக் கல்லாக் கடையரிடஞ் சென்றவர்முன்
அற்பவற்றைக் கூலிக் கலைபு மலைப்பொழிய
உற்பவத்தை நீக்குகின்ற வொற்றியப்பா வுன்னுடைய
நற்பதத்தை யேத்தியரு ளன்னலந்தா னண்ணேனே. 16

தந்தைதாய் மக்கண்மனை தாரமெனுஞ் சங்கடத்திற்
சிந்தைதான் சென்று தியங்கி மயங்காமே
உந்தையென்போ ரில்லாத வொற்றியப்பா வுன்னடிக்கீழ்
முந்தையோர் போன்று முயங்கி மகிழேனே. 17

பொய்யொன்றே யன்றிப் புறம்பொன்றும் பேசாத
வையொன்றுந் தீநாற்ற வாயார்க்கு மேலானேன்
உய்யென் றருளியு மொற்றியப்பா வுன்னுடைய
மெய்யொன்று நீற்றின் விளக்கமது பாரேனே. 18

தூக்கமுமுன் றூங்கியபின் சோறிலையே யென்னுமந்த
ஏக்கமுமே யன்றி மற்றோ ரேக்கமிலா வேழையனேன்
ஊக்கமுளோர் போற்றுகின்ற வொற்றியப்பா நின்னடிக்கீழ்
நீக்கமிலா வானந்த நித்திரைதான் கொள்ளேனே. 19

வாதுபுரிந் தீன மடவார் மதித்திடுவான்
போதுநிதம் போக்கிப் புலம்பும் புலைநாயேன்
ஓதுமறை யோர்குலவு மொற்றியப்பா [1]வூரனுக்காத்
தூதுசென்ற நின்றுட் டுணைப்புகழைப் பாடேனே. 20

பொன்னசை யோடும் புலைச்சியர்தம் பேராசை
மன்னசை மன்னுகின்ற மண்ணசைப் பற்றறுத்தே
உன்னசை கொண்டேயென் னொற்றியப்பா நான்மகிழ்ந்துன்
மின்னரும் பொன்மேனி வெண்ணீற்றைப் பாரேனே. 21

கள்ளுண்ட நாய்போற் கடுங்காம வெள்ளமுண்டு
துள்ளுண்ட நெஞ்சத் துடுக்கடக்கி யன்பர்கள்தம்
உள்ளுண்ட தெள்ளமுதே யொற்றியப்பா வுன்றனைநான்
வெள்ளுண்ட நந்தி விடைமீதிற் காணேனே. 22

பேராத காமப் பிணிகொண்ட நெஞ்சகனேன்
வாராத வானந்த வாழ்வுவந்து வாழ்ந்திடவே
ஓராதார்க் கெட்டாத வொற்றியப்பா வுன்னுடைய
நீரார் சடைமேல் நிலவொளியைக் காணேனே. 23

1. ஊரன் என்பது — ஆரூரர் (சுந்தரர்.)

Koviloor Digital Library

வன்னெஞ்சப் பேதை மடவார்க் கழிந்தலையுங்
கன்னெஞ்சப் பாவியன்யான் காதலித்து நெக்குருகி
உன்னெஞ்சத் துள்ளுறையு மொற்றியப்பா வுன்னுடைய
வெந்நஞ் சணிமிடற்றை மிக்குவந்து வாழ்த்தேனே. 24

புண்ணியமோர் போதும் புரிந்தறியாப் பொய்யவனேன்
எண்ணியதோ ரெண்ண மிடரின்றி முற்றியிட
உண்ணிலவு நல்லொளியே யொற்றியப்பா வுன்னுடைய
தண்ணிலவு தாமரைப்பொற் றாண்முடியிற் கொள்ளேனே. 25

நன்றிதுவென் றோர்ந்துமதை நாடாது நன்னெறியைக்
கொன்றிதுநன் றென்னக் குறிக்குங் கொடியவன்யான்
ஒன்றுமனத் துள்ளொளியே யொற்றியப்பா வுன்னுடைய
வென்றி மழுப்படையின் மேன்மைதனைப் பாடேனே. 26

மண்கிடந்த வாழ்வின் மதிமயக்கு மங்கையராற்
புண்கிடந்த நெஞ்சப் புலையேன் புழுக்கமற
ஒண்கிடந்த முத்தலைவே லொற்றியப்பா நாரணன்றன்
கண்கிடந்த சேவடியின் காட்சிதனைக் காணேனே. 27

கூட்டுவிக்குண் மேமெழவே கூற்றுவன்வந் தாவிதனை
வாட்டுவிக்குங் காலம் வருமுன்னே யெவ்வுயிர்க்கும்
ஊட்டுவிக்குந் தாயாகு மொற்றியப்பா நீயுலகை
ஆட்டுவிக்கு மம்பலத்துன் னாட்டமதைப் பாரேனே. 28

மின்னொப்பாம் வாழ்வை வியந்திடருள் வீழ்ந்தலைந்தேன்
பொன்னொப்பாய் தெய்வமணப் பூவொப்பா யென்னினுமே
உன்னொப்பா ரில்லாத வொற்றியப்பா வுன்னுடைய
தன்னொப்பாம் வேணியின்மேற் சார்பிறையைப் பாரேனே. 29

சீலமற நிற்குஞ் சிறியா ருறவிடைநற்
காலமறப் பேசிக் கழிக்கின்றேன் வானவர்தம்
ஓலமற நஞ்சருந்து மொற்றியப்பா வுன்னுடைய
நீல மணிமிடற்றின் னேர்மைதனைப் பாரேனே. 30

சீர்புகழு மால்புகழுந் தேவரயன் றன்புகழும்
யார்புகழும் வேண்டே னடியே னடிநாயேன்
ஊர்புகழு நல்வளங்கொ ளொற்றியப்பா வுன்னிதழித்
தார்புகழு நற்றொழும்பு சார்ந்துன்பா னண்ணேனே. 31

ஆதவன்றன் பல்லிறுத்த வையற் கருள்புரிந்த
நாதவர னேயென்று நாத்தழும்பு கொண்டேத்தி
ஓதவள மிக்கவெழி லொற்றியப்பா மண்ணிடந்தும்
மாதவன்முன் காணா மலரடிக்கண் வைகேனே. 32

Koviloor Digital Library

கல்லைப் புறங்கண்ட காய்மனத்துக் கைதவனேன்
தொல்லைப் பழவினையின் றோய்வகன்று வாழ்ந்திடவே
ஒல்லைத் திருவருள்கொண் டொற்றியப்பா வுன்னுடைய
தில்லைப் பொதுவிற் றிருநடனங் காணேனே. 33

கடையவனேன் கன்மனத்தேன் கைதவனேன் வஞ்ச
நடையவனே னுணிலியே னுய்க்கிணையேன் றுன்பொழிய
உடையவனே யுலகேத்து மொற்றியப்பா நின்பால்வந்
தடையநின்று மெய்குளிர்ந்தே யானந்தங் கூடேனே. 34

வாதை மயற்காட்டு மடவார் மலக்குழியிற்
பேதை யெனவீழ்ந்தே பிணியுழந்த பேயடியேன்
ஓதை கடற்கரைவா யொற்றியப்பா வாழ்த்துகின்றோர்
தீதை யகற்றுமுன்றன் சீரருளைச் சேரேனே. 35

பொய்யர்க் குதவுகின்ற புன்மையினேன் வன்மைசெயும்
வெய்யற் கிரிமியென மெய்சோர்ந் திளைத்தலைந்தேன்
உய்யற் கருள்செய்யு மொற்றியப்பா வுன்னடிசேர்
மெய்யர்க் கடிமைசெய்துன் மென்மலர்த்தாள் நண்ணேனே. 36

திருச்சிற்றம்பலம்

46. திருவிண்ணப்பம்

திருவொற்றியூர்

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

சழக்கி ருந்ததென் னிடத்திலா யினுநீர்
  தந்தை யாதலிற் சார்ந்தநன் னெறியிற்
பழக்கி வைப்பது தேவரீர்க் குரிய
  பண்பன் றோவெனைப் பரிந்திலீ ரானல்
வழக் கிருப்பதிங் குமக்குமென் றனக்கும்
  வகுத்துக் கூறுதன் மரபுமற் றன்றாற்
புழைக்கை மாவுரி யீரொற்றி யுடையீர்
  பொய்ய னென்னில்யான் போம்வழி யெதுவோ. 1

அழுது நெஞ்சயர்ந் துமைநினைக் கின்றேன்
  ஐய நீரறி யாததொன் றன்றே
கழுது துன்றிய காட்டகத் தாடுங்
  கதியி லீரெனக் கழறின லல்லாற்
பழுது பேசின தொன்றிலை யொற்றிப்
  பதியில் வாழ்படம் பக்கநா யகரே
பொழுது போகின்ற தென்செய்கே னெனைநீர்
  பொய்ய னென்னில்யான் போம்வழி யெதுவோ. 2

Koviloor Digital Library

முன்னை மாதவ முயற்சியொன் றில்லா
மூட னேன்றனை முன்வர வழைத்துப்
பின்னை யொன்றும்வாய்ப் பேச்சிலீ ரானுற்
பித்த ரென்றுமைப் பேசிட லாமே
என்னை நான்டழித் திடுகின்ற தல்லால்
இகழ்கி லேனுமை யெழிலொற்றி யுடையீர்
புன்னை யஞ்சடை யீரெனை யுடையீர்
பொய்ய னென்னில்யான் போம்வழி யெதுவோ. 3

வன்மை பேசிய வன்றொண்டர் பொருட்டாய்
வழக்குப் பேசிய வள்ள லீரன்றோ
இன்மை யாளர்போல் வலியவந் திடினும்
ஏழை யாமிவ னென்றொழித் திட்டால்
தன்மை யன்றது தருமமு மன்றாற்
றாழியனே னின்னுஞ் சாற்றுவ தென்னே
பொன்மை யஞ்சடை யீரொற்றி யுடையீர்
பொய்ய னென்னில்யான் போம்வழி யெதுவோ. 4

உறங்கு கின்றதும் விழிப்பது மகிழ்வாய்
உண்ணு கின்றது முடுப்பது மயக்குள்
இறங்கு கின்றது மேறுகின் றதுமாய்
எய்க்கின் றேன்மன மென்னினு மடியேன்
அறங்கொ ளும்மடி யரணென வடைந்தேன்
அயர்வு தீர்த்தெனை யாட்கொள நினையீர்
புறங்கொள் காட்டகத் தீரொற்றி யுடையீர்
பொய்ய னென்னில்யான் போம்வழி யெதுவோ. 5

கரும்பின் கட்டியுங் கனியையுங் கொடுத்தாற்
கயவ ராயினுங் கசக்குமென் றுரையார்
அரும்பின் கட்டிள மூலையுமை மகிழும்
ஐய நீருமத் தருளெனக் களிக்க
இரும்பின் கட்டிநேர் நெஞ்சினே னெனினும்
ஏற்று வாங்கிடா திருந்ததுண் டேயோ
பொரும்பின் கட்டுரி யீரொற்றி யுடையீர்
பொய்ய னென்னில்யான் போம்வழி யெதுவோ. 6

விருப்பு நின்றதும் பதமலர் மிசையவ்
விருப்பை மாற்றுதல் விரகுமற் றன்றாற்
கருப்பு நேரினும் வள்ளியோர் கொடுக்குங்
கடமை நீங்குரு ருடைமையின் றேனும்
நெருப்பு நும்முரு வாயினு மருகில்
நிற்க வஞ்சுறே னிலனு மன்றாற்
பொருப்பு வில்லுடை யீரொற்றி யுடையீர்
பொய்ய னென்னில்யான் போம்வழி யெதுவோ. 7

Koviloor Digital Library

கொடிய நஞ்சமு தாக்கிய வுமக்கிக்
கொடிய னேனையாட் கொள்ளுத லரிதோ
அடியர் தம்பொருட் டடிபடு வீரெம்
ஐய நும்மடிக் காட்பட விரைந்தேன்
நெடிய மாலயன் காண்கில ரேனும்
நின்று காண்குவ லென்றுளந் துணிந்தேன்
பொடிய நீறணி வீரொற்றி யுடையீர்
பொய்ய னென்னில்யான் போம்வழி யெதுவோ. 8

வினையி னூலுட லெடுத்தன னேனும்
மேலை நாளுமை விரும்பிய வடியேன்
எனையின் னுனென வறிந்திலி ரோநீர்
எழுமைச் செய்கையு மிற்றென வறிவீர்
மனையி னுல்வருந் துயர்கெட வுமது
மரபு வேண்டியே வந்துநிற் கின்றேன்
புனையி னுலமர்ந் தீரொற்றி யுடையீர்
பொய்ய னென்னில்யான் போம்வழி யெதுவோ. 9

பிழைபு ரிந்தன னுகிலு முமது
பெருமை நோக்கிலப் பிழைசிறி தன்றே
மழைபு ரிந்திடும் வண்கையை மாற்ற
மதிக்கின் றேரெவர் மற்றிலை யதுபோல்
உழைபு ரிந்தருள் வீரெனிற் றடுப்பார்
உம்ப ரிம்பரி லொருவரு மிலைகாண்
புழை புரிந்தகை யுலவொற்றி யுடையீர்
பொய்ய னென்னில்யான் போம்வழி யெதுவோ. 10

திருச்சிற்றம்பலம்

47. பிரசாத விண்ணப்பம்

திருவொற்றியூர்
எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்
திருச்சிற்றம்பலம்

பசையிலாக் கருங்கற் பாறைநேர் மனத்துப் பதகனேன் படிற்றுரு வகனேன்
வசையிலார்க் கருளு மாணிக்க மணியே வள்ளலே நினைத்தொழுன் மறந்து
நசையிலா மலமுண் டோடுறுங் கொடிய நாயென வுணவுகொண் டுற்றேன்
தசையெலா நடுங்க வொற்றியி லுன்னுற் றண்டிக்கப் பட்டன னன்றே. 1

அன்னைபோன் றடியர்க் கருத்தியி னருத்து மப்பநின் னடியிணை காணு
தென்னையோ மலமுண் டுழன்றிடும் பன்றி யென்னவுண் டுற்றன னதனுற்
புன்னையஞ் சடையெம் புண்ணிய வொளியே பூதநா யகவென்ற னுடலந்
தன்னைநீ யமர்ந்த வொற்றியி லுன்னுற் றண்டிக்கப் பட்டன னன்றே. 2

கண்ணினு லுனது கழற்பதங் காணுங் கருத்தினை மறந்துபாழ் வயிற்றை
மண்ணினு னிறைத்த லெனவுண வருந்தி மலம்பெற வந்தன னதனுல்
எண்ணினு லடங்கா வெண்குணக் குன்றே யிறைவனே நீயமர்ந் தருளும்
தண்ணினு லோங்கு மொற்றியி லுன்னுற் றண்டிக்கப் பட்டன னன்றே. 3

Koviloor Digital Library

நின்முன நீல கண்டமென் ரேது நெறிமறந் துணவுகொண் டந்தோ
பொன்முன நின்ற விரும்பென நின்றேன் புலையனே னுதலா லின்று
மின்முன மிலங்கும் வேணியங் கனியே விரிகடற் ருனேசூ மூலகந்
தன்முன மிலங்கு மொற்றியி லுன்னுற் றண்டிக்கப் பட்டன னன்றே. 4

குழிக்குமண் ணடைக்குங் கொள்கைபோற் பாழுங் கும்பியை யோம்பின னல்
செழிக்குமுன் றிருமுன் னீலகண் டந்தான் செப்புதன் மறந்தன னதனல் [லாற்
விழிக்குணின் றிலங்கும் விளங்கொளி மணியே மென்கரும் பின்றவெண் முத்தந்
தழிக்கொளும் வயல்சூ ழொற்றியி லுன்னுற் றண்டிக்கப் பட்டன னன்றே. 5

கமரிடை மலநீர் கவிழ்த்தல்போல் வயிற்றுக் கடன்கழித் திட்டன னல்லால்
அமரிடைப் புரமூன் றெரித்தருள் புரிந்த வையனே நினைத்தொழுன் மறந்தேன்
சமரிடை மனத்தேன் ஆதலான் முனிவர் சங்கர சிவசிவ வென்றே
தமரிடை யோங்கு மொற்றியி லுன்னுற் றண்டிக்கப் பட்டன னன்றே. 6

அருமருந் தனையாய் நின்றிரு முன்போ யரகர வெனத்தொழுன் மறந்தே
இருளுறு மனத்தேன் மலத்தினு மிழிந்த வியல்புற வுண்டன னதனுற்
கருமருந் தனைய வஞ்செழுத் தோதுங் கருத்தர்போற் றிருத்தம தாகத்
தருமநின் ருேங்கு மொற்றியி லுன்னுற் றண்டிக்கப் பட்டன னன்றே. 7

கண்ணுதற் கரும்பே நின்முன நீல கண்டமென் ருேதுதன் மறந்தே
உண்ணுதற் கிசைந்தே யுண்டுபின் னுதிபோ லுன்முன நின்றன னதனல்
நண்ணுதற் பொருட்டோர் நான்முகன் மாயோ னுடிட வடியர்த முள்ளத்
தண்ணுதற் கலந்த வொற்றியி லுன்னுற் றண்டிக்கப் பட்டன னன்றே. 8

கற்றவர்க் கினிதாங் கதியரு ணீல கண்டமென் றுன்றிரு முன்னர்
சொற்றிடன் மறந்தேன் சோற்றினை யூத்தைத் துருத்தியி லடைத்தன னதனுற்
செற்றமற் றுயர்ந்தோர் சிவசிவ சிவமா தேவவோம் அரகர வெனுஞ்சொற்
சற்றும்விட் டகலா வொற்றியி லுன்னுற் றண்டிக்கப் பட்டன னன்றே. 9

முறைப்படி நினது முன்புநின் றேத்தி முன்னிய பின்னருண் ணுமற்
சிறைப்படி வயிற்றிற் பொறைப்பட வொதிபோற் சென்றுநின் முன்னருற்றதனுற்
கறைப்படவோங்குங் கண்டனே யெவர்க்குங் கருத்தனே யொருத்தனேமிகுசீர்
தறைப்படர்ந் தோங்கு மொற்றியி லுன்னுற் றண்டிக்கப் பட்டன னன்றே. 10

திருச்சிற்றம்பலம்

48. வழிமொழி விண்ணப்பம்

திருவொற்றியூருந் — திருத்தில்லையும்

எண்சீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

நீலனேன் கொடும் பொய்யல துரையா
நீச னென்பதென் னெஞ்சறிந் ததுகாண்
சால வாயினு நின்கழ லடிக்கே
சரண்பு குந்திடிற் றள்ளுதல் வழக்கோ

Koviloor Digital Library

ஆல முண்டநின் றன்மைமா றுவதேல்
அகில கோடியு மழிந்திடு மன்றே
சீல மேவிய வொற்றியம் பரனே
தில்லை யம்பலந் திகழொளி விளக்கே. 1

கண்ணுண் மாமணி யேயருட் கரும்பே
கற்ற நெஞ்சகங் கனிந்திடுங் கனியே
எண்ணு ளுட்படா வின்பமே யென்றென்
றெந்தை நின்றனை யேத்தில னெனினும்
மண்ணுண் மற்றியான் வழிவழி யடியேன்
மாய மன்றிநுன் மனமறிந் ததுவே
திண்ண மீந்தரு ளொற்றியூ ரரசே
தில்லை யம்பலந் திகழொளி விளக்கே. 2

நல்ல னல்லனு னயினுஞ் சிறியேன்
நான றிந்ததோ நாடறிந் ததுகாண்
சொல்ல வாயிலை யாயினு மெனைநீ
தொழும்பு கொண்டிடிற் றுய்யனு மாவேன்
வல்ல வுன்கருத் தறிந்திலேன் மனமோ
மயங்குகின் றதுயான் வாடுகின் றனன்காண்
செல்ல னீக்கிய வொற்றியூ ரரசே
தில்லை யம்பலந் திகழொளி விளக்கே. 3

இரக்க மென்பதென் னிடத்திலை யெனநீ
இகழ்தி யேலஃ தியல்புமற் றடியேன்
பரக்க நின்னருட் கிரக்கமே யடைந்தேன்
பார்த்தி லாய்கொலோ பார்த்தனை யெனினீ
கரப்ப துன்றனக் கழகன்று கண்டாய்
காள கண்டனே கங்கைநா யகனே
திரக்க ணொற்றியா யொற்றியாய் தில்லைத்
திருச்சிற் றம்பலந் திகழொளி விளக்கே. 4

யாது நான்பிழை செய்யினும் பொறுப்பான்
எந்தை யெம்பிறை யென்றுவந் தடைந்தேன்
தீது நோக்கிநீ செயிர்த்திடி லடியேன்
செய்வ தென்னைநின் சித்தமிங் கறியேன்
போது போகின்ற தன்றியென் மாயப்
புணர்ச்சி யாதொன்றும் போகின்ற திலைகாண்
சீத வார்பொழி லொற்றியம் பரனே
திருச்சிற் றம்பலந் திகழொளி விளக்கே. 5

தாய்க்குந் தந்தைக்கு நிகருநின் னிருதாட்
சார்ந்த மேலவர் தமைத்தொழு தேத்தா
நாய்க்கு நாயெனும் பாவியேன் பிழையை
நாடி நல்லருள் நல்கிடா திருந்தால்

Koviloor Digital Library

ஏய்க்கு மானிறக் காலன்வந் திடும்போ
தென்கொலா மிந்த வெண்ணமென் மனத்தைத்
தீய்க்கு தென்செய்வே னெற்றியெஞ் சிவனே
தில்லை யம்பலந் திகழொளி விளக்கே. 6

ஆட்டு கின்றநீ யறிந்திலை போலும்
ஐவர் பக்கநா னுடுகின் றதனைக்
காட்டு கின்றவான் கடலிடை யெழுந்த
காள முண்டவக் கருணையை யுலகில்
நாட்டு கின்றனை யாயிலிக் கொடிய
நாய்க்கு முன்னருள் நல்கிட வேண்டுந்
தீட்டு கின்றநற் புகழொற்றி யரசே
திருச்சிற் றம்பலந் திகழொளி விளக்கே. 7

உய்ய வொன்றிலேன் பொய்யனென் பதனை
ஒளித்திலே னிந்த வொதியனுக் கருள்நீ
செய்ய வேண்டுவ தின்றெனிற் சிவனே
செய்வ தென்னைநான் றிகைப்பதை யன்றி
மைய னெஞ்சினே னுகினு முன்னை
மறந்தி லேனிது வஞ்சமு மன்றே
செய்ய மேனியெம் மொற்றியூர் வாழ்வே
திருச்சிற் றம்பலந் திகழொளி விளக்கே. 8

வாடு கின்றன னென்றனை யின்னும்
வருந்த வைக்கினு மறந்திடே னுன்னைப்
பாடு கின்றனன் பாவியே னென்னைப்
பாது காப்பதுன் பரமது கண்டாய்
தேடு கின்றமா னுன்முகன் முதலாந்
தேவர் யாவருந் தெரிவரும் பொருளே
சேடு நின்றநல் லொற்றியூர் வாழ்வே
திருச்சிற் றம்பலந் திகழொளி விளக்கே. 9

சிறியர் செய்பிழை பெரியவர் பொறுக்குஞ்
சீல மென்பதுன் றிருமொழி யன்றே
வெறிய னேன்பிழை யாவையு முனது
மனத்திற் கொள்ளுதல் வழக்கல வினிநீ
இறையுந் தாழ்க்கலை யடியனேன் றன்னை
ஏன்று கொண்டருள் ளிந்திடல் வேண்டுஞ்
செறிய வோங்கிய வொற்றியம் பரமே
திருச்சிற் றம்பலந் திகழொளி விளக்கே. 10

திருச்சிற்றம்பலம்

Koviloor Digital Library

49. சிறுமை விண்ணப்பம்

திருவொற்றியூர்

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

இன்று நின்றவர் நாளைநின் றிலரே
என்செய் வோமிதற் கென்றுளம் பதைத்துச்
சென்று நின்றுசோர் கின்றனன் சிவனே
செய்வ தென்னைநான் சிறியருட் சிறியேன்
நன்று நின்றுணை நாடக மலர்த்தாள்
நண்ண வென்றுநீ நயந்தருள் வாயோ
பொன்ற லின்றிய வெழிலொற்றி யரசே
போற்றும் யாவர்க்கும் பொதுவினின் றவனே. 1

மறுமை யிம்மையும் வளம்பெற வேண்டேன்
மருவு நின்னருள் வாழ்வுற வடையாச்
சிறுமை யெண்ணியே திகைக்கின்றேன் சிவனே
செய்வ தென்னைநான் சிறியருட் சிறியேன்
வறுமை யாளனேன் வாட்டநீ யறியா
வண்ண முண்டுகொல் மாணிக்க மலையே
பொறுமை யாளனே யொற்றியம் பரனே
போற்றும் யாவர்க்கும் பொதுவினின் றவனே. 2

உய்ய வல்லனே லுன்திரு வருளாம்
உடைமை வேண்டுமவ் வுடைமையைத் தேடல்
செய்ய வல்லனோ வல்லகாண் சிவனே
செய்வ தென்னைநான் சிறியருட் சிறியேன்
பெய்ய வல்லநின் திருவரு ளேக்கம்
பெறவி ழைந்தனன் பிறவொன்றும் விரும்பேன்
பொய்யி தல்லவெம் மொற்றியம் பரனே
போற்றும் யாவர்க்கும் பொதுவினின் றவனே. 3

வெல்லு கின்றனர் வினைப்புல வேடர்
மெலிகின் றேனிங்கு வீணிலிற் காலஞ்
செல்லு கின்றன வையவோ சிவனே
செய்வ தென்னைநான் சிறியருட் சிறியேன்
சொல்லு கின்றனன் கேட்கின்றாய் கேட்டுந்
தூர நின்றனை யிரமில் லார்போல்
புல்லு கின்றசீ ரொற்றியம் பரனே
போற்றும் யாவர்க்கும் பொதுவினின் றவனே. 4

ஏறு கின்றிலே னிழிகிலே னடுநின்
றெய்க்கின் றேன்பவ மென்னுமக் குழியில்
தேறு கின்றிலேன் சிக்கெனச் சிவனே
செய்வ தென்னைநான் சிறியருட் சிறியேன்

Koviloor Digital Library

கூறு கின்றதென் கடவுணி யறியாக்
கொள்கை யொன்றிலைக் குன்றவில் லோனே
பூறு வங்கொளு மொற்றியெம் பரனே
போற்றும் யாவர்க்கும் பொதுவினின் றவனே. 5

கந்த மும்மல ரும்மென நின்றுய்
கண்டு கொண்டிலேன் காமவாழ் வதனல்
சிந்தை நொந்தயர் கின்றனன் சிவனே
செய்வ தென்னைநான் சிறியருட் சிறியேன்
எந்த நல்வழி யாலுனை யடைவேன்
யாதுந் தேர்ந்திலேன் போதுபோ வதுகாண்
புந்தி யின்பமே யொற்றியம் பரனே
போற்றும் யாவர்க்கும் பொதுவினின் றவனே. 6

அல்ல லென்னைவிட் டகன்றிட வொற்றி
அடுத்து நிற்கவோ வன்றிநற் புலியூர்த்
தில்லை மேவவோ அறிந்திலேன் சிவனே
செய்வ தென்னைநான் சிறியருட் சிறியேன்
ஒல்லை யிங்குவா வென்றருள் புரியா
தொழிதி யேலுனை யுறுவதெவ் வணமோ
புல்லர் மேவிடா வொற்றியம் பரனே
போற்றும் யாவர்க்கும் பொதுவினின் றவனே. 7

ஞால வாழ்க்கையை நம்பிநின் றுழலும்
நாயக ளுக்கெலா நாயர சானேன்
சீல மொன்றிலேன் றிகைக்கின்றேன் சிவனே
செய்வ தென்னைநான் சிறியருட் சிறியேன்
ஏல நின்னரு ளிதியே லுய்வேன்
இல்லையே லெனக் கில்லையுய் திறமே
போல வென்றுரை யாவொற்றி யரசே
போற்றும் யாவர்க்கும் பொதுவினின் றவனே. 8

சுத்த நெஞ்சருட் சேர்க்கினு மலது
சோம்ப னெஞ்சருட் சேர்க்கினு நினது
சித்த மென்னள வன்றது சிவனே
செய்வ தென்னைநான் சிறியருட் சிறியேன்
நித்த நின்னடி யன்றியொன் றேத்தேன்
நித்த னேயது நீயறி யாயோ
புத்த ருந்தமி ழொற்றியூ ரரசே
போற்றும் யாவர்க்கும் பொதுவினின் றவனே. 9

தத்து மத்திடைத் தயிரென வினையாற்
றளர்ந்து மூப்பினிற் றண்டுகொண் டுழன்றே
செத்து மீளவும் பிறப்பெனிற் சிவனே
செய்வ தென்னைநான் சிறியருட் சிறியேன்

Koviloor Digital Library

தொத்து வேண்டுநின் றிருவடிக் கெனையே
துட்ட னென்றியேற் றுணைபிறி தறியேன்
புத்தை நீக்கிய வொற்றியம் பரனே
போற்றும் யாவர்க்கும் பொதுவினின் றவனே. 10

பரிந்தி லேனருட் பாங்குறும் பொருட்டாய்ப்
பந்த பாசத்தைப் பறித்திடும் வழியைத்
தெரிந்தி லேன்றிகைப் புண்டனன் சிவனே
செய்வ தென்னைநான் சிறியருட் சிறியேன்
விரிந்த நெஞ்சமுங் குவிந்தில வின்னும்
வெய்ய மாயையிற் கையற வடைந்தே
புரிந்து சார்கின்ற தொற்றியம் பரனே
போற்றும் யாவர்க்கும் பொதுவினின் றவனே. 11

திருச்சிற்றம்பலம்

50. ஆற்று விண்ணப்பம்

திருவொற்றியூர்
எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்
திருச்சிற்றம்பலம்

அன்னையிற் பெரிது மினிய வென்னரசே
அம்பலத் தாடல்செய் யமுதே
பொன்னையொத் தொளிரும் புரிசடைக் களியே
போதமே யொற்றியெம் பொருளே
உன்னைவிட் டயலா றுறவுகொண் டடையேன்
உண்மையென் னுள்ளநீ யறிவாய்
என்னைவிட் டிடினு னென்செய்வே னுதிபோல்
இருக்கின்ற விவ்வெளி யேனே. 1

எளியனேன் மையன் மனத்தினு லுழன்றேன்
என்செய்வே னென்செய்வேன் பொல்லாக்
களியனேன் வாட்டங் கண்டனை யின்னுங்
கருணைசெய் திலையருட் கரும்பே
அளியனே திருச்சிற் றம்பலத் தொளியே
அருமருந் தேவட வனத்துத்
தளியனே யொற்றித் தலத்தமர் மணியே
தயையிலி போலிருந் தனையே. 2

இருந்தனை யெனது நெஞ்சினு ளெந்தாய்
என்றுய ரறிந்திலை போலும்
முருந்தன முறுவன் மங்கையர் மலைநேர்
முலைத்தலை யுருண்டன னேனும்
மருந்தனை யாயுன் றிருவடி மலரை
மறந்திலேன் வழுத்துகின் றனன்காண்
வருந்தனை யேலென் றுரைத்திலை யையா
வஞ்சக முனக்குமுண் டேயோ. 3

Koviloor Digital Library

உண்டநஞ் சின்னுங் கண்டம்விட் டகலா
துறைந்தது நாடொறு மடியேன்
கண்டனன் கருணைக் கடலெனுங் குறிப்பைக்
கண்டுகண் டுளமது நெகவே
விண்டன னென்னைக் கைவிடிற் சிவனே
விடத்தினுங் கொடியனு னன்றோ
அண்டர்கட் கரசே யம்பலத் தமுதே
அலைகின்றே னறிந்திருந் தனையே. 4

தனையர்செய் பிழையைத் தந்தையர் குறித்துத்
தள்ளுதல் வழக்கல வென்பார்
வினையனேன் பிழையை வினையிலி நீதான்
விவகரித் தெண்ணுத லழகோ
உனையலா திறந்தும் பிறந்துமிவ் வுலகில்
உழன்றிடுந் தேவரை மதியேன்
எனையலா துனக்கிங் காளிலை யோவுண்
டென்னினு மேன்றுகொண் டருளே. 5

ஏன்றுகொண் டருள வேண்டுமிவ் வெளியேன்
இருக்கினு மிறக்கினும் பொதுவுள்
ஊன்றுகொண் டருளு நின்னடி யல்லால்
உரைக்குமா லயன்முதற் றேவர்
நான்றுகொண் டிடுவ ரேனுமற் றவர்மேல்
நாவொழா துண்மையீ திதற்குச்
சான்றுகொண் டருள நினைத்தியே லென்னுட்
சார்ந்தநின் சரணிரண் டன்றே. 6

சரணவா ரிசமென் றலைமிசை யின்னுந்
தரித்திலை தாழ்த்தனை யடியேன்
கரணவா தனையுங் கந்தவா தனையுங்
கலங்கிடக் கடமிழுத் துந்தும்
மரணவா தனைக்கென் செய்குவ மென்றே
வருந்துகின் றனன்மன மாழாந்
தரணமுன் றெரிய நகைத்தவெம் மிறையே
அடியனை யாள்வதுன் கடனே. 7

கடம்பொழி யோங்க லுரிபுனை யுடுக்குங்
கடவுளே கடவுளர் கோவே
மடம்பொழி மனத்தேன் மலஞ்செறிந் தூறும்
வாயிலோ ரொன்பதில் வருமிவ்
உடம்பொழிந் திடுமேன் மீண்டுமீண் டெந்த
உடம்புகொண் டுழல்வனோ வென்று
நடம்பொழி பதத்தாய் நடுங்குகின் றனன்காண்
நான்செயும் வகையெது நவிலே. 8

Koviloor Digital Library

வகையெது தெரிந்தே னேழையே னுய்வான்
　　வள்ளலே வலிந்தெனை யாளுந்
தகையது வின்றே லென்செய்வே னுலகர்
　　சழக்குடைத் தமியனீ நின்ற
திகையெது வென்றுற் சொலவறி யாது
　　திகைத்திடுஞ் சிறியனேன் றன்னைப்
பகையது கருதா தாள்வதுன் பரங்காண்
　　பவளமா நிறத்தகற் பகமே. 9

கற்பன வறிந்து கற்கிலேன் சழக்குக்
　　கல்விகற் றுழன்றனன் கருணைச்
சொற்பன மதிலுங் காண்கிலேன் பொல்லாச்
　　சூகர மெனமலந் துய்த்தேன்
விற்பன னெனவே நிற்பது விழைந்தேன்
　　வீணனேன் விரகிலா வெறியேன்
அற்பனேன் றன்னை யாண்டநின் னருளை
　　ஆய்ந்திடி லன்னையிற் பெரிதே. 10

திருச்சிற்றம்பலம்

51. இரங்கல் விண்ணப்பம்

திருவொற்றியூர்
எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்
திருச்சிற்றம்பலம்

பற்று நோக்கிய பாவியேன் றனக்குப்
　　பரிந்து நீயருட் பதமளித் திலையே
மற்று நோக்கிய வல்வினை யதனால்
　　வஞ்ச மாயையின் வாழ்க்கையின் மனத்தின்
அற்று நோக்கிய நோய்களின் மூப்பின்
　　அலைதந் திவ்வுல கம்படும் பாட்டை
உற்று நோக்கினு றுருகுதென் னுள்ளம்
　　ஒற்றி மேவிய வுலகுடை யோனே. 1

கொடிய நெஞ்சினேன் கோபமே யடைந்தேன்
　　கோடி கோடியாங் குணப்பழு துடையேன்
கடிய வஞ்சகக் கள்வனேன் றனக்குன்
　　கருணை யீந்திடா திருந்திடிற் கடையேன்
அடிய னுகுவ தெவ்வண மென்றே
　　ஐய வையநா னலறிடு கின்றேன்
ஒடிய மும்மல மொருங்கறுத் தவர்சேர்
　　ஒற்றி மேவிய வுலகுடை யோனே. 2

காம மென்பதோ ருருக்கொடிவ் வுலகிற்
　　கலங்கு கின்றவிக் கடையனேன் றனக்குச்
சேம மென்பதா நின்னருள் கிடையாச்
　　சிறுமையே யின்னுஞ் செறிந்திடு மானல்

Koviloor Digital Library

ஏம நெஞ்சின ரென்றனை நோக்கி
யேட நீகடை யென்றிடி லவர்முன்
ஊம ராகுவ தன்றியென் செய்வேன்
ஒற்றி மேவிய வுலகுடை யோனே. 3

மண்ணி னின்றவர் வாழ்வதுங் கணத்தில்
வருந்தி மாய்வது மற்றிவை யெல்லாங்
கண்ணி னேர்நிதங் கண்டுமிவ் வாழ்விற்
காத லீங்கிலாக் கன்மனக் கொடியேன்
எண்ணி நின்றவோ ரெண்ணமு முடியா
தென்செய் கேன்வரு மிருவினைக் கயிற்றால்
உண்ணி ரம்பநின் றாட்டுகின் றனை நீ
ஒற்றி மேவிய வுலகுடை யோனே. 4

வெருட்சி யேதரு மலவிரா வின்னும்
விடியக் கண்டிலேன் வினையினே னுள்ளம்
மருட்சி மேவிய தென்செய்கே னுன்பால்
வருவ தற்கொரு வழியுமிங் கறியேன்
தெருட்சி யேதரு நின்னரு ளொளிதான்
சேரி லுய்குவேன் சேர்ந்தில தானால்
உருட்சி யாழியொத் துழல்வது மெய்காண்
ஒற்றி மேவிய வுலகுடை யோனே. 5

யாது முன்செய லாமென வறிந்தும்
ஐய வையமே லவரிவ ரொழியாத்
தீது செய்தனர் நன்மைசெய் தனர்நாந்
தெரிந்து செய்வதே திறமென நினைத்துக்
கோது செய்மலக் கோட்டையைக் காவல்
கொண்டுவாழ் கின்றேன் கண்டிட வினிநீ
ஓது செய்வதொன் றென்னுயிர்த் துணையே
ஒற்றி மேவிய வுலகுடை யோனே. 6

பந்த மட்டினும் பாவிநெஞ் சகத்தாற்
பவப்பெ ருங்கடற் படிந்துழன் றயர்ந்தேன்
இந்த மட்டினு முழன்றதே யமையும்
ஏற வேண்டுமுன் னெண்ணமே தறியேன்
அந்த மட்டினி லிருத்தியோ வன்றி
அடிமை வேண்டிநின் னருட்பெரும் புணையை
உந்த மட்டினற் றருதியோ வுரையாய்
ஒற்றி மேவிய வுலகுடை யோனே. 7

ஞான மென்பதி னுறுபொரு ளறியேன்
ஞானி யல்லனு னுயினுங் கடையேன்
ஆன போதிலு மெனக்குநின் னருளோர்
அணுவிற் பாதியே யாயினு மடைந்தால்

Koviloor Digital Library

வான மேவிய வமரரு மயனும்
மாலு மென்முனம் வலியில ரன்றே
ஊன நீக்கிநல் லருடரும் பொருளே
ஒற்றி மேவிய வுலகுடை யோனே. 8

அளிய நெஞ்சமோ ரறிவுரு வாகும்
அன்பர் தம்புடை யணுகிய வருள்போல்
எளிய நெஞ்சினேற் கெய்திடா தேனும்
எள்ளிற் பாதிமட் டீந்தருள் வாயேற்
களிய மாமயற் காடற வெறிந்தாங்
கார வேரினைக் களைந்துமெய்ப் போத
வொளிய வித்தினாற் போகமும் விளைப்பேன்
ஒற்றி மேவிய வுலகுடை யோனே. 9

நாக நாட்டதி னலம்பெற வேண்டேன்
நரகி லேகென நவிலினு மமைவேன்
ஆக நாட்டிடை விடுகெனில் விடுவேன்
அல்ல லாம்பவ மடையெனி லடைவேன்
தாக நாட்டிய மயலற வருணீர்
தருத லில்லெனச் சாற்றிடிற் றரியேன்
ஓகை நாட்டிய யோகியர் பரவும்
ஒற்றி மேவிய வுலகுடை யோனே. 10

திருச்சிற்றம்பலம்

52. காதல் விண்ணப்பம்

திருவொற்றியூர்

எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

வஞ்சக வினைக்கோர் கொள்கல மனைய
மனத்தினே னனைத்தினுங் கொடியேன்
தஞ்சமென் றடைந்தே நின்றிருக் கோயிற்
சந்நிதி முன்னர்நிற் கின்றேன்
எஞ்சலி லடங்காப் பாவியென் றெனைநீ
இகழ்ந்திடி லென்செய்வேன் சிவனே
கஞ்சன் மால்புகழு மொற்றியங் கரும்பே
கதிதருங் கருணையங் கடலே. 1

நிற்பது போன்று நிலைபடா வுடலை
நேசம்வைத் தோம்புறும் பொருட்டாய்ப்
பொற்பது தவிரும் புலையர்தம் மனைவாய்ப்
புந்திநொந் தயர்ந்தழு திளைத்தேன்
சொற்பதங் கடந்த நின்றிரு வடிக்குத்
தொண்டுசெய் நாளுமொன் றுளதோ
கற்பது கற்றோர் புகழ்திரு வொற்றிக்
காவல்கொள் கருணையங் கடலே. 2

Koviloor Digital Library

முன்னைவல் வினையால் வஞ்சக மடவார்
முழுப்புலைக் குழிவிழுந் திளைத்தேன்
என்னையோ கொடியே னின்றிரு வருடான்
எய்தில னேலுயிர்க் குறுதிப்
பின்னையெவ் வணந்தா னெய்துவ தறியேன்
பேதையிற் பேதைநா னன்றோ
சுன்னலே தேனே யொற்றியெம் மமுதே
கடவுளே கருணையங் கடலே. 3

மண்ணினுண் மயங்கி வஞ்சக வினையான்
மனந்தளர்ந் தழுங்கிநா டோறும்
எண்ணினு ளடங்காத் துயரொடும் புலையர்
இல்லிடை மல்லிடு கின்றேன்
விண்ணினு ளிலங்குஞ் சுடர்நிக ருனது
மெல்லடிக் கடிமைசெய் வேனே
கண்ணினுண் மணியே யொற்றியங் கனியே
கடவுளே கருணையங் கடலே. 4

அளவிலா வுலகத் தனந்தகோ டிகளாம்
ஆருயிர்த் தொகைக்குளு மெனைப்போல்
இளகிலா வஞ்ச நெஞ்சகப் பாவி
யேழைக ளுண்டுகொ லிலைகாண்
தளர்விலா துனது திருவடி யெனும்பொற்
றாமரைக் கணியனு குவனோ
களவிலார்க் கினிய வொற்றியெம் மருந்தே
கனந்தருங் கருணையங் கடலே. 5

ஞானமென் பதிலோ ரணுத்துணை யேனும்
நண்ணிலேன் புண்ணிய மறியேன்
ஈனமென் பதனுக் கிறையென லானேன்
எவ்வண முய்குவ தறியேன்
வானநா டவரும் பெறற்கரு நினது
மலரடித் தொழும்புசெய் வேனோ
கானவேட் டுருவா மொருவனே யொற்றிக்
கடவுளே கருணையங் கடலே. 6

ஞாலவாழ் வனைத்துங் கானனீ ரெனவே
நன்கறிந் துன்றிரு வருளாஞ்
சீலவாழ் வடையுஞ் செல்வமிப் பொல்லாச்
சிறியனும் பெறுகுவ தேயோ
நீலமா மிடற்றுப் பவளமா மலையே
நின்மல வானந்த நிலையே
காலனு னவிழ்க்குங் காலனே யொற்றிக்
கடவுளே கருணையங் கடலே. 7

Koviloor Digital Library

மாலொடு நான்கு வதனனுங் காணு
மலரடிக் கடிமைசெய் தினிப்பாம்
பாலொடு கலந்த தேனென வுன்சீர்ப்
பாடுநா ளெந்நா ளறியேன்
வேலொடு மயிலுங் கொண்டிடுஞ் சுடரை
விளைவித்த வித்தக விளக்கே
காலொடு பூத மைந்துமா மொற்றிக்
கடவுளே கருணையங் கடலே. 8

சற்றுநற் குணந்தான் சார்ந்திடாக் கொடியார்
தந்தலை வாயிலுட் குரைக்கும்
வெற்றுநாய் தனக்கும் வேறுநா யாக
மெலிகின்றே னைம்புலச் சேட்டை
அற்றுநின் றவர்க்கு மரியநின் றிருத்தாட்
கடிமைசெய் தொழுகுவ னேயோ
கற்றுமுற் றுணர்ந்தோர்க் கருடரு மொற்றிக்
கடவுளே கருணையங் கடலே. 9

மறைகளு மின்னுந் தலைத்தலை மயங்க
மறைந்துல குயிர்தொறு மொளித்த
இறைவநின் றிருத்தாட் கன்பிலாக் கொடியன்
என்னினு மேழையேன் றனக்கு
நிறைதரு நினது திருவரு ளளிக்க
நினைத்தலே நின்கடன் கண்டாய்
கறைமணி மிடற்றுத் தெய்வமே யொற்றிக்
காவல்கொள் கருணையங் கடலே. 10

திருச்சிற்றம்பலம்

53. பொருள் விண்ணப்பம்

திருவொற்றியூர்

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

உலக வாழ்க்கையி னுழலுமென் னெஞ்சம்
ஒன்று கோடியாய்ச் சென்றுசென் றலைந்தே
கலக மாயையிற் கவிழ்கின்ற தெளியேன்
கலுழ்கின் றேன்செயக் கடவதொன் றறியேன்
இலகு மன்பர்தம் எய்ப்பினில் வைப்பே
இன்ப வெள்ளமே யென்னுடை யுயிரே
திலக மேதிரு வொற்றியெம் முறவே
செல்வ மேபர சிவபரம் பொருளே. 1

எண்ணி லாவினைப் புற்றதின் வழியே
இன்ப துன்பங்க ளெய்தியென் னெஞ்சங்
கண்ணி லாக்குரங் கெனவுழன் றதுகாண்
கடைய னேன்செயக் கடவதொன் றறியேன்

Koviloor Digital Library

பெண்ணி லாவிய பாகத்தெம் மருதே
 பிரம னாதியர் பேசருந் திறனே
தெண்ணி லாமுடி யொற்றியங் கனியே
 செல்வ மேபர சிவபரம் பொருளே. 2

ஊனு றக்கமே பொருளென நினைத்த
 ஒதிய னேன்மன மொன்றிய தின்றாய்க்
காணு றக்கருங் காமஞ்சான் றதுகாண்
 கடைய னேன்செயக் கடவதொன் றறியேன்
மாணு றக்களங் கறுத்தசெம் மணியே
 வள்ள லேயென்னை வாழ்விக்கு மருந்தே
சேணு றத்தரு மொற்றிநா யகமே
 செல்வ மேபர சிவபரம் பொருளே. 3

யாது சொல்லினுங் கேட்பதின் றந்தோ
 யான்செய் தேனென தென்னுமிவ் விருளிற்
காது கின்றதென் வஞ்சக நெஞ்சங்
 கடைய னேன்செயக் கடவதொன் றறியேன்
ஓது மாமறை யுபநிட தத்தின்
 உச்சி மேவிய வச்சிர மணியே
தீது நீக்கிய வொற்றியந் தேனே
 செல்வ மேபர சிவபரம் பொருளே. 4

சொல்லுஞ் சொல்லள வன்றுகா ணெஞ்சத்
 துடுக்க னைத்துமிங் கொடுக்குவ தெவனோ
கல்லும் பிற்படு மிரும்பினும் பெரிதாற்
 கடைய னேன்செயக் கடவதொன் றறியேன்
அல்லு மெல்லுநின் றகங்குழைந் தேத்தும்
 அன்பருள் ளூறு மானந்தப் பெருக்கே
செல்லு லாம்பொழி லொற்றியங் கரும்பே
 செல்வ மேபர சிவபரம் பொருளே. 5

இம்மை யின்பமே வீடெனக் கருதி
 ஈன ரில்லிடை யிடர்மிக வுழந்தே
கைம்மை நெஞ்சமென் றனைவலிப் பதுகாண்
 கடைய னேன்செயக் கடவதொன்றறியேன்
மும்மை யாகிய தேவர்தந் தேவே
 முக்கண் மூர்த்தியே முத்தியின் முதலே
செம்மை மேனியெம் மொற்றியூ ரரசே
 செல்வ மேபர சிவபரம் பொருளே. 6

நின்ன டிக்கணோர் கணப்பொழு தேனும்
 நிற்ப தின்றியே நீசமங் கையர்தங்
கன்ன விற்றனம் விழைந்தது மனங்காண்
 கடையனேன் செயக் கடவதொன் றறியேன்

Koviloor Digital Library

அன்ன வூர்தியு மாலுநின் றலற
அடியர் தங்களுள் ளமர்ந்தரு ளமுதே
தென்னி சைப்பொழி லொற்றியெம் வாழ்வே
செல்வ மேபர சிவபரம் பொருளே. 7

புலைய மங்கையர் புணர்முலைக் குவட்டிற்
போந்து ருண்டெனைப் புலன்வழிப் படுத்திக்
கலைய நின்றதிக் கல்லுறழ் மனந்தான்
கடைய னேன்செயக் கடவதொன் றறியேன்
விலையி லாவுயர் மாணிக்க மணியே
வேத வுச்சியில் விளங்கொளி விளக்கே
சிலைவி லாக்கொளு மொற்றியெம் மருந்தே
செல்வ மேபர சிவபரம் பொருளே. 8

தந்தை தாய்மனை மக்களென் றுலகச்
சழக்கி லேயிட ருழக்குமென் மனந்தான்
கந்த வாதனை யியற்றுகின் றதுகாண்
கடைய னேன்செயக் கடவதொன் றறியேன்
எந்தை யேயெனை யெழுமையுந் தொடர்ந்த
இன்ப வெள்ளமே யென்னுயிர்க் குயிரே
சிந்தை யோங்கிய வொற்றியெந் தேவே
செல்வ மேபர சிவபரம் பொருளே. 9

கொடிய வஞ்சக நெஞ்சக மெனுமோர்
குரங்கிற் கென்னுறு குறைபல வுரைத்துங்
கடிய தாதலிற் கசிந்தில தினியிக்
கடைய னேன்செயக் கடவதொன் றறியேன்
அடிய னேன்பிழை யுளத்திடை நினையேல்
அருளல் வேண்டுமென் னுருயிர்த் துணையே
செடிக ணீக்கிய வொற்றியெம் முறவே
செல்வ மேபர சிவபரம் பொருளே. 10

திருச்சிற்றம்பலம்

54. கொடி விண்ணப்பம்

திருவொற்றியூர்
எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்
திருச்சிற்றம்பலம்

மாலை யொன்றுதோட் சுந்தரப் பெருமான்
மணத்திற் சென்றவண் வழக்கிட்ட தெனவே
ஓலை யொன்றுநீர் காட்டுதல் வேண்டாம்
உவந்து தொண்டனென் றுரைப்பிரே லென்னை
வேலை யொன்றல மிகப்பல வெனினும்
வெறுப் பிலாதுளம் வியந்துசெய் குவன்காண்
சோலை யொன்றுசீ ரொற்றியூ ருடையீர்
தூய மால்விடைத் துவசத்தி னீரே. 1

Koviloor Digital Library

பூத நும்படை யெனினுநா னஞ்சேன்
புதிய பாம்பின்பூண் பூட்டவும் வெருவேன்
பேத மின்றியம் பலந்தனிற் றூக்கும்
பெருமைச் சேவடி பிடிக்கவுந் தளரேன்
ஏத மெண்ணிடா தென்னையுந் தொழும்பன்
என்று கொள்விரே லெனக்கது சாலும்
சூத வொண்பொழி லொற்றியூ ருடையீர்
தூய மால்விடைத் துவசத்தி னீரே. 2

உப்பி டாதகூ ழிடுகினு முண்பேன்
உவந்திவ் வேலையைப் புணர்ந்துசெய் யெனநீர்
செப்பி டாமுனந் தலையினு னடந்து
செய்ய வல்லன்யான் செய்யுமப் பணிகள்
தப்பி டாததிற் றப்பிருந் தென்னைத்
தண்டிப் பீரெனிற் சலித்துளம் வெருவேன்
துப்பி டாவெனக் கருளொற்றி யுடையீர்
தூய மால்விடைத் துவசத்தி னீரே. 3

கூலி யென்பதோ ரணுத்துணை யேனுங்
குறித்தி லேனது கொடுக்கினுங் கொள்ளேன்
மாலி னுடையன் முதலியர்க் கேவல்
மறந்துஞ் செய்திடேன் மன்னுயிர்ப் பயிர்க்கே
ஆலி யன்னதாந் தேவரீர் கடைக்கண்
அருளை வேண்டினே னடிமைகொள் கிற்பீர்
சூலி யோர்புடை மகிழொற்றி யுடையீர்
தூய மால்விடைத் துவசத்தி னீரே. 4

தேர்ந்து தேடினுந் தேவர்போற் றலைமைத்
தேவ ரில்லையத் தெளிவுகொண் டடியேன்
ஆர்ந்து நும்மடிக் கடிமைசெய் திடப்பே
ராசை வைத்துமை யடுத்தன னடிகேள்
ஓர்ந்திங் கென்றனைத் தொழும்புகொள் வீரேல்
உய்கி லேனிஃ தும்பதங் காண்க
சோர்ந்தி டார்புக ழொற்றியூ ருடையீர்
தூய மால்விடைத் துவசத்தி னீரே. 5

புதிய னென்றெனைப் போக்குதி ரோநீர்
பூரு வத்தினும் பொன்னடிக் கடிமைப்
பதிய வைத்தன னுயினு மந்தப்
பழங் கணக்கினைப் பார்ப்பதி லென்னே
முதிய னல்லன்யா னெப்பணி விடையும்
முயன்று செய்குவேன் மூர்க்கனு மல்லேன்
துதிய தோங்கிய வொற்றியூ ருடையீர்
தூய மால்விடைத் துவசத்தி னீரே. 6

Koviloor Digital Library

ஒழுக்க மில்லவ னோரிடத் தடிமைக்
குதவு வான்கொலென் றுன்னுகிற் பீரேற்
புழுக்க நெஞ்சினே னும்முடைச் சமுகம்
போந்து நிற்பனேற் புண்ணியக் கனிகள்
பழுக்க நின்றிடுங் குணத்தரு வாவேன்
பார்த்த பேருமப் பரிசின ராவர்
தொழுக்க னென்னையாள் வீரொற்றி யுடையீர்
தூய மால்விடைத் துவசத்தி னீரே. 7

பிச்சை யேற்றுணும் பித்தரென் றும்மைப்
பேசு கின்றவர் பேச்சினைக் கேட்டும்
இச்சை நிற்கின்ற தும்மடிக் கேவல்
இயற்று வானந்த விச்சையை முடிப்பீர்
செச்சை மேனியீர் திருவுள மறியேன்
சிறிய னேன்மிகத் தியங்குகின் றனன்காண்
துச்சை நீக்கினோர்க் கருளொற்றி யுடையீர்
தூய மால்விடைத் துவசத்தி னீரே. 8

ஆல முண்டநீ ரின்னுமவ் வானோர்க்
கமுது வேண்டிமா லக்கடல் கடைய
ஓல வெவ்விடம் வரிலதை நீயே
உண்கென் றாலுநும் முரைப்படி யுண்பேன்
சாலஞ் செய்வது தகையன்று தருமத்
தனிப்பொற் குன்றனீர் சராசர நடத்துஞ்
சூல பாணியீர் திருவொற்றி நகரீர்
தூய மால்விடைத் துவசத்தி னீரே. 9

முத்தி நேர்கிலாத் தேவர்க டமைநான்
முந்து றேனவர் முற்பட வரினுஞ்
சுத்தி யாகிய சொல்லுடை யணுக்கத்
தொண்டர் தம்முடன் சூழ்த்திட ரெனினும்
புத்தி சேர்புறத் தொண்டர்தம் முடனே
பொருந்த வைக்கினும் போதுமற் றதுவே
துத்தி யார்பணி யீரொற்றி யுடையீர்
தூய மால்விடைத் துவசத்தி னீரே. 10

என்ன நானடி யேன்பல பலகால்
இயம்பி நிற்பதிங் கெம்பெரு மானீர்
இன்னு மென்னையோர் தொண்டனென் றுளத்தில்
ஏன்று கொள்ளிரே லிருங்கடற் புவியோர்
பன்ன வென்னுயிர் நும்பொருட் டாகப்
பாற்றி நும்மிசைப் பழிசுமத் துவல்காண்
துன்னு மாதவர் புகழொற்றி யுடையீர்
தூய மால்விடைத் துவசத்தி னீரே. 11

திருச்சிற்றம்பலம்

Koviloor Digital Library

55. நாடக விண்ணப்பம்

திருவொற்றியூர்
எண்சீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்
திருச்சிற்றம்பலம்

மடுக்கு நீருடைப் பாழ்ங்கிண றதனுள்
வழுக்கி வீழ்ந்தவன் வருந்துரு வண்ணம்
எடுக்கின் றேரென இடையிற்கை விடுதல்
இரக்க முள்ளவர்க் கியல்பன்று கண்டீர்
தடுக்கி லாதெனைச் சஞ்சல வாழ்விற்
றாழ்த்து கின்றது தருமமன் றுமக்கு
நடுக்கி லார்தொழு மொற்றியூ ருடையீர்
ஞான நாடக நவிற்றுகின் றீரே. 1

வெண்மை நெஞ்சினேன் மெய்யென்ப தறியேன்
விமல நும்மிடை வேட்கையு முடையேன்
உண்மை யோதினேன் வஞ்சக வாழ்க்கை
உவரி வீழ்வனே லுறுதிமற் றறியேன்
கண்மை யுள்ளவர் பாழ்ங்குழி வீழக்
கண் டிருப்பது கற்றவர்க் கழகோ
நண்மை யொற்றியீர் திருச்சிற்றம் பலத்துள்
ஞான நாடக நவிற்றுகின் றீரே. 2

குற்ற மேபல வியற்றினு மெனைநீர்
கொடிய னென்பது குறிப்பல வுமது
பொற்றை நேர்புயத் தொளிர்திரு நீற்றைப்
பூசு கின்றனன் புனிதநும் மடிக்கண்
உற்ற தோர்சிறி தன்புமிவ் வகையால்
உறுதி யீவதிங் குமக்கொரு கடன்காண்
நற்ற வத்தர்வா ழொற்றியூ ருடையீர்
ஞான நாடக நவிற்றுகின் றீரே. 3

உள்ள தோதினு லொறுக்கிலே மென்பர்
உலகு ளோரிந்த வுறுதிகொண் டடியேன்
கள்ள மோதிலே னும்மடி யறியக்
காம வேட்கையிற் கடலினும் பெரியேன்
வள்ள லேயும தருள்பெறச் சிறிது
வைத்த சிந்தையேன் மயக்கற வருள்வீர்
நள்ள லுற்றவர் வாழொற்றி யுடையீர்
ஞான நாடக நவிற்றுகின் றீரே. 4

[1] **அரந்தை** யோடொரு வழிச்செல்வோன் றனையோர்
ஆற்று வெள்ளமீர்த் தலேத்திட வவனும்
பரந்த நீரிடை நின்றழு வானேற்
பகைவ ராயினும் பார்த்திருப் பாரோ!

1. அரந்தை என்பது — மனக்கவலை.

Koviloor Digital Library

கரந்தை யஞ்சடை யண்ணனீ ரடியேன்
கலங்கக் கண்டிருக் கின்றது கடனே
நரந்த மார்பொழி லொற்றியூ ருடையீர்
ஞான நாடக நவிற்றுகின் றீரே. 5

பிறவிக் கண்ணிலான் கைக்கொளுங் கோலைப்
பிடுங்கி வீசுதல் பெரியவர்க் கறமோ!
மறவிக் கையறை மனத்தினே னும்மேல்
வைக்கு மன்பைநீர் மாற்றுத லழகோ
உறவிக் கொள்கையை யுள்ளிரே லிதனை
ஓதிக் கொள்ளிட மொன்றிலை கண்டீர்
நறவிக் கோங்கிய வொற்றியம் பதியீர்
ஞான நாடக நவிற்றுகின் றீரே. 6

வலிய வந்திடு விருந்தினை யொழிக்கார்
வண்கை யுள்ளவர் மற்றது போலக்
கலிய நெஞ்சினேன் வஞ்சக வாழ்விற்
கலங்கி யையநுங் கருணையா மமுதை
மலிய வுண்டிட வருகின்றேன் வருமுன்
மாற்று கிற்பிரேல் வள்ளனீ ரன்றோ
நலிய னீக்கிடு மொற்றியம் பதியீர்
ஞான நாடக நவிற்றுகின் றீரே. 7

பொய்ய னாகிலும் போக்கிட மறியாப்
புலைய னுண்டவன் புகழுரைப் பானேல்
உய்ய வைப்பனீ துண்மையிவ் வுலகில்
ஓதிய னேன்புக லோரிட மறியேன்
ஐய நும்மடிக் காட்செய லுடையேன்
ஆண்ட நீரெனை யகற்றுத லழகோ
நைய லற்றிட வருளொற்றி யுடையீர்
ஞான நாடக நவிற்றுகின் றீரே. 8

தந்தை யாயவர் தனயரைக் கெடுக்கச்
சமைவ ரென்பது சற்றுமின் றுலகில்!
எந்தை நீரெனை வஞ்சக வாழ்வில்
இருத்து வீரெனில் யார்க்கிது புகல்வேன்
பந்த மேலிட வெவ்வரி தாபம்
பார்ப்பி ரோவருட் பங்கய விழியீர்
நந்த வொண்பணை யொற்றியூ ருடையீர்
ஞான நாடக நவிற்றுகின் றீரே. 9

கல்வி வேண்டிய மகன்றனைப் பெற்றோர்
கடுத்த லோர்சிறு கதையினு மிலைகாண்!
செல்வம் வேண்டிலேன் றிருவருள் விழைந்தேன்
சிறிய னேனைநீர் தியக்குத லழகோ

Koviloor Digital Library

பல்வி தங்களாற் பணிசெயு முரிமைப்
பாங்கு நல்குமப் பரமுமக் கன்றே
நல்வி தத்தினர் புகழொற்றி யுடையீர்
ஞான நாடக நவிற்றுகின் றீரே. 10

மண்ணி னல்லவ னல்லவ ரிடத்தோர்
வணக்க மின்மையன் வணங்குவ னுஞல்
எண்ணி நம்புடை யிருவென வுரைப்பர்
ஏன்வ ணங்கினை யென்றுரைப் பாரோ
கண்ணி னல்லநுங் கழறொழ விசைந்தாற்
கலக்கங் காண்பது கடனன்று கண்டீர்
நண்ணி மாதவன் றொழுமொற்றி யுடையீர்
ஞான நாடக நவிற்றுகின் றீரே. 11

திருச்சிற்றம்பலம்

56. திருவண்ண விண்ணப்பம்

திருவொற்றியூர்

கோச்சகக் கலிப்பா

திருச்சிற்றம்பலம்

கண்ணப்பா வென்றருளுங் காளத்தி யப்பாமுன்
வண்ணப்பால் வேண்டு [1]மதலையைப்பால் வாரிதியை
உண்ணப்பா வென்றுரைத்த வொற்றியப்பா வந்தருள
எண்ணப்பா வென்றழுமிவ் வேழைமுகம் பாராயோ. 1

மஞ்சுபடுஞ் செஞ்சடில வள்ளலே புள்ளுகின்றோர்
உஞ்சுபடும் வண்ணமரு ளொற்றியூ ருத்தமனே
நஞ்சுபடுங் கண்டமுடை நம்பரனே வன்றுயராற்
பஞ்சுபடும் பாடுபடும் பாவிமுகம் பாராயோ. 2

கண்ணு ரமுதே கரும்பேயென் கண்ணேயென்
அண்ணுவுன் பொன்னருள்தா னுர்ந்திடுமோ அல்லதென்றும்
நண்ணுதோ யாது நணுகுமோ வென்றுருகி
எண்ணுது மெண்ணுமிந்த ஏழைமுகம் பாராயோ. 3

நாடியசீ ரொற்றி நகருடையாய் நின்கோயில்
நீடியநற் சந்நிதியி னின்றுநின்று மாலயனுந்
தேடியறி யொண்ணுத் திருவுருவைக் கண்டுருகிப்
பாடியழு தேங்குமிந்தப் பாவிமுகம் பாராயோ. 4

வாங்கிமலை வில்லாக்கு மன்னவனே யென்னரசே
ஓங்கி வளந்தழுவு மொற்றியூ ருத்தமனே
தூங்கிய துன்பச் சுமைசுமக்க மாட்டாது
ஏங்கியழு கின்றவிந்த ஏழைமுகம் பாராயோ. 5

1. மதலை என்பது — உபமன்யு.

Koviloor Digital Library

தொண்டர்க் கருளுந் துணையே யிணையில் விடம்
உண்டச் சுதற்கருளு மொற்றியூ ருத்தமனே
சண்டப் பவநோயாற் றுயிலாப் பிள்ளையெனப்
பண்டைத் துயர்கொளுமிப் பாவிமுகம் பாராயோ. 6

உட்டிகழ்ந்த மேலவனே யொற்றியூ ருத்தமனே
மட்டிலங்கு முன்றன் மலரடியைப் போற்றுது
தட்டிலங்கு நெஞ்சத்தாற் சஞ்சலித்துன் சந்நிதிக்கண்
எட்டிநின்று பார்க்குமிந்த ஏழைமுகம் பாராயோ. 7

நச்சை மிடற்றணிந்த நாயகனே யோர்பாகம்
பச்சைநிறங் கொண்ட பவளத் தனிமலையே
மிச்சை தவிர்க்குமொற்றி வித்தகனே நின்னருட்கே
இச்சைகொடு வாடுமிந்த ஏழைமுகம் பாராயோ. 8

மாலயர்ந்துங் காணு மலரடியாய் வஞ்சவினைக்
காலயர்ந்து வாடவருட் கண்ணுடையாய் விண்ணுடையாய்
சேலயர்ந்த கண்ணார் தியக்கத்தி லுழலுனருட்
பாலயர்ந்து வாடுமிந்தப் பாவிமுகம் பாராயோ. 9

சொந்தமுற வெண்ணித் தொழுகின்ற மெய்யடியர்
சந்தமுறு நெஞ்சத் தலத்தமர்ந்த தத்துவனே
நந்தவனஞ் சூழொற்றி நாயகனே வாழ்க்கையெனும்
பந்தமதில் வாடுமிந்தப் பாவிமுகம் பாராயோ. 10

தில்லையிடை மேவுமெங்கள் செல்வப் பெருவாழ்வே
ஒல்லையடி யார்க்கருளு மொற்றியூ ருத்தமனே
அல்லை நிகர்க்கு மளகத்தா ராசைதனக்
கெல்லையறி யாதவிந்த ஏழைமுகம் பாராயோ. 11

விதியிழந்த வெண்டலைகொள் வித்தகனே வேதியனே
மதியிழந்தோர்க் கேலா வளரொற்றி வானவனே
நிதியிழந்தோர் போலயர்ந்து நின்னுடைய வாழ்க்கைப்
பதிவிரும்பி வாடுமிந்தப் பாவிமுகம் பாராயோ. 12

திருச்சிற்றம்பலம்

57. மருட்கை விண்ணப்பம்

திருவொற்றியூர்

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

யாது செய்குவன் போதுபோ கின்ற
 தன்ன வேயும தன்பருக் கடியேன்
கோது செய்யினும் பொறுத்தருள் புரியுங்
 கொள்கை யீரெனைக் குறுகிய குறும்பர்

Koviloor Digital Library

வாது செய்கின்றார் மனந்தளர் கின்றேன்
வலியி லேன்செயும் வகையொன்று மறியேன்
மாதர் செய்பொழி லொற்றியூ ருடையீர்
வண்கையீ ரென்கண் மணியனை யீரே. 1

எனக்கு நீரிங்கோ ராண்டையல் லீரோ
என்னை வஞ்சகர் யாவருங் கூடிக்
கனக்கும் வன்பவக் கடலிடை வீழ்த்தக்
கண்டி ருத்தலோ கடனுமக் கெளியேன்
தனக்கு மற்றொரு சார்பிருந் திடுமேற்
றயவு செய்திடத் தக்கதன் றிலைகாண்
மனக்கு நல்லவர் வாழொற்றி யுடையீர்
வண்கையீ ரென்கண் மணியனை யீரே. 2

எஞ்ச லில்லதோர் காமமாங் கடலாழ்ந்
திளைக்கின் றேனினி யென்செய்வ னடியேன்
தஞ்ச மென்றும திணைமல ரடிக்கே
சரண் புகுந்தனன் றயவுசெய் யீரேல்
வஞ்ச வாழ்க்கையாந் திமிங்கில மெனுமீன்
வாரிக் கொண்டெனை வாய்மடுத் திடுங்காண்
மஞ்ச ளாவிய பொழிலொற்றி யுடையீர்
வண்கையீ ரென்கண் மணியனை யீரே. 3

என்பி றப்பினை யார்க்கெடுத் துரைப்பேன்
என்செய்வே னெனை யென்செய நினைக்கேன்
முன்பி றப்பிடை யிருந்தசே டத்தான்
மூட வாழ்க்கையாங் காடகத் தடைந்தே
அன்பி றந்தவெங் காமவேட் டுவனால்
அலைப்புண் டேனும தருள்பெற விழைந்தேன்
வன்பி றந்தவர் புகழொற்றி யுடையீர்
வண்கையீ ரென்கண் மணியனை யீரே. 4

காம மென்னுமோர் காவலி லுழன்றே
கலுழ்கின் றேனொரு களைகணு மறியேன்
சேம நல்லருட் பதம்பெறுந் தொண்டர்
சேர்ந்த நாட்டகஞ் சேர்வுற விழைந்தேன்
ஏம முற்றிடு மெனைவிடு விப்பார்
இல்லை யென்செய்வன் யாரினுஞ் சிறியேன்
வாம மாதராண் மருவொற்றி யுடையீர்
வண்கையீ ரென்கண் மணியனை யீரே. 5

இன்ப மென்பது விழைந்திட ருழந்தேன்
என்னை யொத்தவோ ரேழையிங் கறியேன்
துன்ப மென்பது பெருஞ்சுமை யாகச்
சுமக்கின் றேனருட் டுணைசிறி தில்லேன்

Koviloor Digital Library

அன்ப ருள்ளகத் தமர்ந்திடுந் தேவர்
அடிக்குற் றேவலுக் காட்படு வேனே
வன்பர் நாடுறு வொற்றியூ ருடையீர்
வண்கையீ ரென்கண் மணியனை யீரே. 6

ஊழ்வி னைப்படி யெப்படி யறியேன்
உளுற்று நின்றன னுமதருள் பெறவே
தாழ்வி னைத்தருங் காமமோ வெனைக்கீழ்த்
தள்ளு கின்றதே யுள்ளுநின் றதுகாண்
பாழ்வி னைக்கொளும் பாவியேன் செய்யும்
பாங்க றிந்திலே னேங்குகின் றனனால்
வாழ்வி னைத்தரு மொற்றி யூருடையீர்
வண்கையீ ரென்கண் மணியனை யீரே. 7

இறப்பி லார்தொழுந் தேவரீர் பதத்தை
எவ்வ நீக்கியே யெவ்விதத் தானும்
மறப்பி லாதுள நினைத்திடிற் காமம்
வழிம றித்ததை மயக்குகின் றதுகாண்
குறிப்பி லாதென்னுற் கூடிய மட்டுங்
குறைத்து மங்கது குறைகில தந்தோ
வறிப்பி லாவய லொற்றியூ ருடையீர்
வண்கையீ ரென்கண் மணியனை யீரே. 8

சஞ்சி தந்தருங் காமமென் றிடுமோர்
சலதி வீழ்ந்ததிற் றலைமயக் குற்றே
அஞ்சி யஞ்சிநா னலைகின்றே னென்னை
அஞ்ச லென்பவர் யாரையு மறியேன்
துஞ்சினுற் பின்பு சுகம்பலித் திடுமோ
துணையிலார்க் கொரு துணையென விருப்பீர்
மஞ்சி னீள்பொழி லொற்றியூ ருடையீர்
வண்கையீ ரென்கண் மணியனை யீரே. 9

அல்ல வோதிய ரிடைப்படுங் கமருக்
காசை வைத்தவென் னறிவின்மை யளவைச்
சொல்ல வோமுடி யாதெனை யாளத்
துணிவு கொள்விரோ தூயரை யாளல்
அல்ல வோவும தியற்கையா யினுநல்
அருட்க ணீரெனை யாளலுந் தகுங்காண்
மல்ல லோங்கிய வொற்றியூ ருடையீர்
வண்கையீ ரென்கண் மணியனை யீரே. 10

திருச்சிற்றம்பலம்

Koviloor Digital Library

58. கொடைமட விண்ணப்பம்

திருவொற்றியூர்
கட்டளைக் கலித்துறை
திருச்சிற்றம்பலம்

நின்போன்ற தெய்வமொன் றின்றெண வேத நிகழ்த்தவுநின்
பொன்போன்ற ஞானப் புதுமலர்த் தாட்டுணைப் போற்றுகிலேன்
என்போன்ற வேழையர் யாண்டுள ரம்பலத் தேநடஞ்செய்
மின்போன்ற வேணிய னேயொற்றி மேவிய வேதியனே. 1

வேதிய னேவெள்ளி வெற்பிடை மேவிய வித்தகனே
நீதிய னேமன்றி லிட்கள வானந்த நிர்த்தமிடும்
ஆதிய னேயெமை யாண்டவ னேமலை யாண்மகிழும்
பாதிய னேயெம் பராபர னேமுக்கட் பண்ணவனே. 2

பண்ணவ னேபசு பாசத்தை நீக்கும் பரம்பரனே
மண்ணவ னேவிண் மகிழ்ந்தவ னேமல மாற்றுகின்ற
விண்ணவ னேவெள் விடையவ னேவெற்றி மேவுநெற்றிக்
கண்ணவ னேயெனைக் காத்தவ னேயொற்றிக் காவலனே. 3

காவல னேயன்று மாணிக்குப் பொற்கிழிக் கட்டவிழ்த்த
பாவல னேதொழும் பாணன் பரிசுறப் பாட்டளித்த
நாவல னேதில்லை நாயக னேகட னஞ்சையுண்ட
மாவல னேமுக்கண் வானவ னேயொற்றி மன்னவனே. 4

மன்னவ னேகொன்றை மாலைய னேதிரு மாலயற்கு
முன்னவ னேயன்று நால்வர்க்கும் யோக முறையறந்தான்
சொன்னவ னேசிவ னேயொற்றி மேவிய தூயவனே
என்னவ னேயைய மேற்பவ னேயெனை யீன்றவனே. 5

ஈன்றவ னேயன்ப ரின்னுயிர்க் கின்புறு மின்னமுதம்
போன்றவ னேசிவ ஞானிக ளுள்ளுறும் புண்ணியனே
ஆன்றவ னேயெம துள்ளும் புறம்பு மறிந்துநின்ற
சான்றவ னேசிவ னேயொற்றி மேவிய சங்கரனே. 6

சங்கர னேயர னேபர னேநற் சராசரனே
கங்கர னேமதிக் கண்ணிய னேநுதற் கண்ணினனே
நங்கர மேவிய வங்கனி போன்றரு ளுயகனே
செங்கர னேர்வண னேயொற்றி மேவிய சின்மயனே. 7

சின்மய னேயனற் செங்கையி லேந்திய சேவகனே
நன்மைய னேமறை நான்முகன் மாலுக்கு நாடரிதாந்
தன்மைய னேசிவ சங்கர னேயெஞ் சதாசிவனே
பொன்மய னேமுப் புராந்தக னேயொற்றிப் புண்ணியனே. 8

Koviloor Digital Library

புண்ணிய னேயெமைப் போல்வார்க்கு மின்பப் பொருளளிக்குந்
திண்ணிய னேநற் சிவஞான நெஞ்சிற் றெளிந்தவருள்
அண்ணிய னேகங்கை யாறமர் வேணியி லார்ந்தமதிக்
கண்ணிய னேபற் பலவாகு மண்டங்கள் கண்டவனே. 9

கண்டவ னேசற்று நெஞ்சுரு காக்கொடுங் கள்வர்தமை
விண்டவ னேகடல் வெம்படி பொங்கும் விடமனைத்தும்
உண்டவ னேமற்று மொப்பொன் றிலாத வுயர்வுதனைக்
கொண்டவ னேயொற்றிக் கோயிலின் மேவுங் குருபரனே. 10

திருச்சிற்றம்பலம்

59. சிறு விண்ணப்பம்

பொது

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

பண்ணலுன் னருட்புகழைப் பாடு கின்றார்
பணிகின்றார் நின்னழகைப் பார்த்துப் பார்த்துக்
கண்ணூர வுளங்குளிரக் களித்தா னந்தக்
கண்ணீர்கொண் டாடுகின்றார் கருணை வாழ்வை
எண்ணுநின் றுணையெந்தா யெந்தா யெந்தாய்
என்கின்றார் நின்னன்ப ரெல்லா மென்றன்
அண்ணா நா னொருபாவி வஞ்ச நெஞ்சால்
அலைகின்றே னென்செய்கே னந்தோ வந்தோ. 1

எப்பாலு நின்னன்ப ரெல்லாங் கூடி
யேத்துகின்றார் நின்பதத்தை யேழையே னான்
வெப்பாய மடவியர்தங் கலவி வேட்டு
விழுகின்றேன் கண்கெட்ட விலங்கே போல
இப்பாரின் மயங்குகின்றே னன்மை யொன்றும்
எண்ணுகிலேன் முக்கணுடை யிறைவா வென்றன்
அப்பாவென் னுருயிர்க்கோர் துணைவா வீணின்
அலைகின்றே னென்செய்கே னந்தோ வந்தோ. 2

இன்புடையார் நின்னன்ப ரெல்லா நின்சீர்
இசைக்கின்றார் நானொருவ னேழை யிங்கே
வன்புடையார் தமைக்கூடி யவமே நச்சு
மாமரம்போ னிற்கின்றேன் வஞ்ச வாழ்க்கைத்
துன்புடையா ரனைவர்க்குந் தலைமை பூண்டேன்
தூய்மையென்ப தறிந்திலேன் சூழ்ந்தோர்க் கெல்லாம்
அன்புடையா யெனையுடையாய் விடையாய் வீணே
அலைகின்றே னென்செய்கே னந்தோ வந்தோ. 3

Koviloor Digital Library

விஞ்சுடையாய் நின்னன்ப ரெல்லா நின்சீர்
மெய்புளக மெழத் துதித்து விளங்கு கின்றூர்
நஞ்சுடையார் வஞ்சகர்தஞ் சார்பி லிங்கே
நானெருவன் பெரும்பாவி நண்ணிமூட
நெஞ்சுடையார் தமக்கெல்லாந் தலைமை பூண்டு
நிற்கின்றேன் கருணைமுக நிமலக் கஞ்சம்
அஞ்சுடையா யாறுடைய சடையாய் வீணில்
அலைகின்றே னென்செய்கே னந்தோ வந்தோ. 4

பொய்யாத நின்னடியா ரெல்லா நல்ல
புண்ணியமே செய்துநினைப் போற்று கின்றூர்
நையாநின் றலைகின்ற மனத்தா லிங்கே
நானெருவன் பெரும்பாவி நாயேன் றீமைச்
செய்யாநின் றுழைக்கின்றேன் சிறிது நின்னைச்
சிந்தியேன் வந்திக்குந் திறமு நாடேன்
ஐயாவென் னப்பாவென் னரசே வீணின்
அலைகின்றே னென்செய்கே னந்தோ வந்தோ. 5

தெருளுடையார் நின்னன்ப ரெல்லா நின்றுட்
சிந்தையில் வைத் தானந்தந் தேக்கு கின்றூர்
மருளுடையே னொருவன் பாவி வஞ்ச
மனத்தாலே யிளைத்திளைத்து மயங்கு கின்றேன்
இருளுடையே னேர்பூட்டும் பகடு போலிங்
கில்லுழப்பி லுழைக்கின்றே னெல்லாம் வல்ல
அருளுடையா யாளுடையா யுடையாய் வீணில்
அலைகின்றே னென்செய்கே னந்தோ வந்தோ. 6

வாரமுளார் நின்னடியா ரெல்லா நின்னை
வாழ்த்துகின்றூர் தலைகுளிர வணங்கு கின்றூர்
தீரமிலே னொருவன் பாவி வஞ்சச்
செயல்விளைக்கு மனத்தாலே திகைத்தேன் சைவ
சாரமிலே னசார மில்லேன் சித்த
சாந்தமிலேன் இரக்கமிலேன் றகவு மில்லேன்
ஆரமுதே முக்கணுடை யரசே வீணின்
அலைகின்றே னென்செய்கே னந்தோ வந்தோ. 7

வண்மைபெறு நின்னன்ப ரெல்லா நின்னை
வந்தனைசெய் தாநந்த வயத்தே நின்றூர்
பெண்மையுறு மனத்தாலே திகைத்தே னின்சீர்
பேசுகிலேன் கூசுகிலேன் பேதை நானோர்
ஒண்மையிலேன் ஒழுக்கமிலேன் நன்மை யென்ப
தொன்றுமிலே னெறியேபோ லுற்றேன் மிக்க
அண்மையில்வந் தருள்புரிவோ யென்னே வீணில்
அலைகின்றே னென்செய்கே னந்தோ வந்தோ. 8

Koviloor Digital Library

உம்பர்தமக் கரிதாமுன் பதத்தை யன்றி
ஒன்றுமறி யாருன்னை யுற்றோ ரெல்லாம்
இம்பர்வினை யுடையேனு னொருவன் பாவி
எட்டுணையு நினைந்தறியே னென்று மெங்கும்
வம்பவிழ்பூங் குழன்மடவார் மைய லொன்றே
மனமுடையே னுழைத்திளைத்த மாடுபோல் வேன்
அம்பலத்தெம் மரசேயிவ் வாழ்க்கைத் துன்பின்
அலைகின்றே னென்செய்கே னந்தோ வந்தோ. 9

கொலையறியாக் குணத்தோர்நின் னன்ப ரெல்லாங்
குணமேசெய் துன்னருடான் கூடு கின்றார்
புலையறிவே னொருவன் பிழையே செய்து
புலங்கெட்ட விலங்கேபோற் கலங்கு கின்றேன்
நிலையறியே னெறியொன்று மறியே னெங்கும்
நினையன்றித் துணையொன்று மறியேன் சற்றும்
அலையறியா வருட்கடனீ யாள்க வீணில்
அலைகின்றே னென்செய்கே னந்தோ வந்தோ. 10

திருச்சிற்றம்பலம்

60. பெரு விண்ணப்பம்

பொது

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

இருளார் மனத்தே னிழுக்குடையே னெளியே னின்னை யேத்தாத
மருளார் நெஞ்சப் புலையரிடம் வாய்ந்து வருந்தி மாழ்கின்றேன்
அருளா ரமுதப் பெருக்கேயென் அரசே யதுநீ யறிந்தன்றோ
தெருளா ரன்பர் திருச்சபையிற் சேர்க்கா தலைக்குந் திறமந்தோ. 1

உண்மை யறியே னெனினுமெனை உடையா யுனையே யொவ்வொருகால்
எண்மை யுடையே னினைக்கின்றே னென்னே யுன்னை யேத்தாத
வெண்மை யுடையார் சார்பாக விட்டா யந்தோ வினையேனை
வண்மை யுடையா யென்செய்கேன் மற்றோர் துணையிங் கறியேனே. 2

எளியே னிழைத்த பெரும்பிழைக ளெல்லாம் பொறுத்திங் கின்பளித்தாய்
களியேன் றனைநீ யினியந்தோ கைவிட் டிடிலென் கடவேனே
ஒளியே முக்கட் செழுங்கரும்பே ஒன்றே யன்ப ருறவேநல்
அளியே பரம வெளியேயென் ஐயா அரசே ஆரமுதே. 3

காமக் கடலிற் படிந்தனுராங் கடலில் விழுந்தேன் கரைகாணேன்
ஏமக் கொடுங்கூற் றெனுமகரம் யாது செயுமோ வென்செய்கேன்
நாமக் கவலை யொழித்துன்றாள் நண்ணு மவர்பால் நண்ணுவித்தே
தாமக் கடிப்பூஞ் சடையாயுன் றன்சீர் பாடத் தருவாயே. 4

Koviloor Digital Library

எண்ணு தெளியேன் செயும்பிழைக ளெல்லாம் பொறுத்திங் கெனையாள்வ
தண்ணு நினது கடன்கண்டா யடியேன் பலகா லறைவதென்னே
கண்ணார் நுதற்செங் கரும்பேமுக் கனியே கருணைக் கடலேசெவ்
வண்ணு வெள்ளை மால்விடையாய் மன்று டியமா மணிச்சுடரே. 5

பாலே யமுதே பழமேசெம் பாகே யெனுநின் பதப்புகழை
மாலே அயனே இந்திரனே மற்றைத் தேவ ரேமறைகள்
நாலே யறியா தெனிற்சிறியேன் நானே வறிவே னுயகவென்
மேலே யருள்கூர்ந் தெனைநின்றுண் மேவு வோர்பாற் சேர்த்தருளே. 6

கண்ணார் நுதலோய் பெருங்கருணைக் கடலோய் கங்கை மதிச்சடையோய்
பெண்ணு ரிடத்தோ யாவர்கட்கும் பெரியோய் கரியோன் பிரமனெடும்
அண்ணு வெனநின் றேத்தெடுப்ப வமர்ந்தோய் நின்ற னடிமலரை
எண்ணு துழல்வோர் சார்பாக விருக்கத் தரியே னெளியேனே. 7

பொய்யோ ரணியா வணிந்துழலும் புலையே னெனினும் புகலிடந்தான்
ஐயோ நினது பதமன்றி யறியே னிதுநீ யறியாயோ
கையோ ரனல்வைத் தாடுகின்ற கருணு நிதியே கண்ணுதலே
மெய்யோர் விரும்பும் அருமருந்தே வேத முடிவின் விழுப்பொருளே. 8

இன்னே யெளியேன் பொய்யுடையே னெனினு மடிய னலவோநான்
என்னே நின்னைத் துதியாதா ரிடத்தி லென்னை யிருத்தினையே
அன்னே யென்ற னப்பாவென் னையா வென்ற னரசேசெம்
பொன்னே முக்கட் பொருளேநின் புணர்ப்பை யறியேன் புலையேனே. 9

வஞ்ச மடவார் மயலொருபான் மணியே நின்னை வழுத்தாத
நஞ்ச மனையார் சார்பொருபா னலியும் வாழ்க்கைத் துயரொருபால்
விஞ்சு நினது திருவருளை மேவா துழலு மிடியொருபால்
எஞ்ச விலவா யலைக்கின்ற தென்செய் கேனிவ் வெளியேனே. 10

திருச்சிற்றம்பலம்

61. திருக்காட்சிக்கிரங்கல்

திருவொற்றியூர்

தரவுக் கோச்சகக் கலிப்பா

திருச்சிற்றம்பலம்

மண்ணேயும் வாழ்க்கையிடை மாழாந்து வன்பிணியாற்
புண்ணேயு நெஞ்சம் புழுங்குகின்ற பொய்யவனேன்
பண்ணேயு மின்பப் பரஞ்சுடரே யென்னிரண்டு
கண்ணேயுன் பொன்முகத்தைக் காணக் கிடைத்திலனே. 1

மருளார்ந்த வல்வினையால் வன்பிணியால் வன்றுயரால்
இருளார்ந்த நெஞ்சா லிடியுண்ட வேழையனேன்
தெருளார்ந்த மெய்ஞ்ஞானச் செல்வச் சிவமேநின்
அருளார்ந்த முக்கண் அழகுதனைக் கண்டிலனே. 2

Koviloor Digital Library

வல்லார் முலையார் மயலுழந்த வஞ்சகனேன்
பொல்லார் புரமெரித்த புண்ணியனே பொய்மறுத்த
நல்லார் தொழுந்தில்லை நாயகனே நன்றளித்த
அல்லார் களத்தின் அழகுதனைக் கண்டிலனே. 3

நோயான் மெலிந்துனரு ணோக்குகின்ற நொய்யவனேன்
தாயா னவனேயென் றந்தையே **அன்பர்தமைச்**
சேயாய் வளர்க்குஞ் சிவனே சிவனேயெந்
தூயாநின் பொற்றோளின் சுந்தரத்தைக் கண்டிலனே. 4

வன்னேர் முலையார் மயலுழந்த வன்மனத்தேன்
அன்னேயென் னப்பாவென் னையாவென் னாரமுதே
மன்னே மணியே மலையாண் மகிழுனது
பொன்னே ரிதழிப் புயங்காணப் பெற்றிலனே. 5

நண்ணும் வினையா னலிகின்ற நாயடியேன்
எண்ணுஞ் சுகாதீத வின்பமே யன்புடையோர்
கண்ணுங் கருத்துங் களிக்கவருங் கற்பகமே
பெண்ணொருபால் வாழுமுருப் பெற்றிதனைக் கண்டிலனே. 6

தெவ்வண்ண மாயையிடைச் செம்மாந்த சிற்றடியேன்
இவ்வண்ண மென்றறிதற் கெட்டாத வான்பொருளே
அவ்வண்ண மான வரசே யமுதேநின்
செவ்வண்ண மேனித் திறங்காணப் பெற்றிலனே. 7

அல்வைத்த நெஞ்சா லழுங்குகின்ற நாயடியேன்
சொல்வைத்த வுண்மைத் துணையே யிணைத்தோண்மேல்
வில்வத் தொடையணிந்த வித்தகனே நின்னுடைய
செல்வத் திருவடியின் சீர்காணப் பெற்றிலனே. 8

பொத்தேர் மயலாற் புழுங்குகின்ற பொய்யடியேன்
கொத்தேர் செழுங்கொன்றைக் குன்றமே கோவாத
முத்தே யெவர்க்கு முழுமுதலே முத்திக்கு
வித்தேநின் பொன்னடிக்கீழ் மேவிநிற்கக் கண்டிலனே. 9

நீதியிலார் வாயிலிடை நின்றலைந்த நெஞ்சகனேன்
சோதியெலாஞ் சூழ்ந்தபரஞ் சோதியே செஞ்சடைமேற்
பாதிநிலா வோங்கும் பரமேநீ யொற்றிநகர்
வீதியுலா வந்தவெழின் மெய்க்குளிரக் கண்டிலனே. 10

திருச்சிற்றம்பலம்

Koviloor Digital Library

62. திருவருட் கிரங்கல்

திருவொற்றியூர்

கோச்சகக் கலிப்பா

திருச்சிற்றம்பலம்

ஒப்பாரு மில்லாத வுத்தமனே யொற்றியிலென்
அப்பாவுன் பொன்னடிக்கே அன்பிலே னுனுலும்
தப்பா தகமெலியச் சஞ்சலத்தா லேங்குகின்ற
இப்பாத கத்தேற்கு இரங்கினு லாகாதோ. 1

எஞ்சா விடரா லிரும்பிணியா லேங்கிமனம்
பஞ்சாக நொந்து பரதவிக்கு நாயேனைச்
செஞ்சாலி யோங்குந் திருவொற்றி யப்பாநீ
அஞ்சாதே யென்றுன் அருள்கொடுத்தா லாகாதோ. 2

பற்றுஞ் செழுந்தமிழாற் பாடுகின்றோர் செய்தபெருங்
குற்றங் குணமாகக் கொள்ளுங் குணக்கடலே
மற்றங்கு மெண்டோண் மலையே மரகதமே
பெற்றிங் கடியேன் பிணிகெடுத்தா லாகாதோ. 3

எந்தையே யென்பவர்தம் இன்னமுதே யென்னுரிமைத்
தந்தையே தாயே தமரேயென் சற்குருவே
சிந்தையே யோங்குந் திருவொற்றி யையாவென்
நிந்தையே நீங்க நிழலளித்தா லாகாதோ. 4

உள்ளுந் திருத்தொண்ட ருள்ளத் தெழுங்களிப்பே
கொள்ளுஞ் சிவானந்தக் கூத்தாவுன் சேவடியை
நள்ளும் புகழுடைய நல்லோர்க ளெல்லாரும்
எள்ளும் புலையேன் இழிவொழித்தா லாகாதோ. 5

கோதையோர் கூறுடைய குன்றமே மன்றமர்ந்த
தாதையே யொற்றித் தலத்தமர்ந்த சங்கரனே
தீதையே நாடோறுஞ் செய்தலைந்து வாடுமிந்த
பேதையேன் செய்த பிழைபொறுத்தா லாகாதோ. 6

முத்திக்கு வித்தே முழுமணியே முத்தருளந்
தித்திக்குந் தேனே சிவமே செழுஞ்சுடரே
சத்திக்கு நாதத் தலங்கடந்த தத்துவனே
எத்திக்கு மில்லேன் இளைப்பொழித்தா லாகாதோ. 7

வஞ்சமிலா ருள்ள மருவுகின்ற வான்சுடரே
கஞ்சமுளான் போற்றுங் கருணைப் பெருங்கடலே
நஞ்சமுதாக் கொண்டருளு நல்லவனே நின்னலதோர்
தஞ்சமிலேன் றுன்பச் சழக்கொழித்தா லாகாதோ. 8

Koviloor Digital Library

சேய்பிழையைத் தாயறிந்துஞ் சீறுள் பொறுப்பாளிந்
நாய்பிழையை நீபொறுக்க ஞாயமுமுண் டையாவே
தேய்மதிபோ னெஞ்சந் தியக்கமுறச் சஞ்சலத்தால்
வாயலறி வாடுமெனை வாவென்று லாகாதோ. 9

கண்ணுண் மணிபோற் கருதுகின்ற நல்லோரை
எண்ணுங் கணமும்விடுத் தேகாத வின்னமுதே
உண்ணு முணவுக்கு முடைக்குமுயன் றோடுகின்ற
மண்ணுலகத் தென்றன் மயக்கறுத்தா லாகாதோ. 10

திருச்சிற்றம்பலம்

63. எண்ணத் திரங்கல்

திருவொற்றியூர்
கோச்சகக் கலிப்பா
திருச்சிற்றம்பலம்

எளியேனின் திருமுன்பே யென்னுரைக்கேன் பொல்லாத
களியேன் கொடுங்காமக் கன்மனத்தே னன்மையிலா
வெளியேன் வெறியேன்றன் மெய்ப்பிணியை யொற்றியில்வாழ்
அளியோய்நீ நீக்காயே லார்நீக்க வல்லாரே. 1

முன்னேசெய் வெவ்வினைதான் மூண்டதுவோ அல்லதுநான்
இன்னே பிழைதா னியற்றியதுண் டோவறியேன்
பொன்னேர் புரிசடையெம் புண்ணியனே யென்றேனை
அன்னேநீ நீக்காயே லார்நீக்க வல்லாரே. 2

இப்பா ரிடையுனையே யேத்துகின்ற நாயேனை
வெப்பா ருளத்தினர்போல் வெம்மைசெயும் வெம்பிணியை
எப்பா லவர்க்கு மிறைவனு மென்னருமை
அப்பாநீ நீக்காயே லார்நீக்க வல்லாரே. 3

ஓவா மயல்செய் யுலகநடைக் குள்துயரம்
மேவா வுழல்கின்ற வெண்மையேன் மெய்ந்நோயைச்
சேவார் கொடியெஞ் சிவனே சிவனேயோ
ஆவாநீ நீக்காயே லார்நீக்க வல்லாரே. 4

பொய்யா மலவிருட்டுப் பொத்தரிடை வீழ்ந்துழலுங்
கையா நெறியேன் கலங்கவந்த வெம்பிணியை
மையார் மிடற்றெம் மருந்தே மணியேயென்
ஐயாநீ நீக்காயே லார்நீக்க வல்லாரே. 5

இம்மா நிலத்தி லிடருழத்தல் போதாதே
விம்மா வழுங்கவென்றன் மெய்யுடற்றும் வெம்பிணியை
செம்மான் மழுக்கரங்கொள் செல்வச் சிவமேயென்
அம்மாநீ நீக்காயே லார்நீக்க வல்லாரே. 6

Koviloor Digital Library

புரைசேரு நெஞ்சப் புலையனேன் வன்காமத்
தரைசேருந் துன்பத் தடங்கடலேன் வெம்பிணியை
விரைசேருங் கொன்றை விரிசடையாய் விண்ணவர்தம்
அரைசேநீ நீக்காயே லார்நீக்க வல்லாரே. 7

இத்தா ரணியி லெளியோரைக் கண்டுமிக
வித்தாரம் பேசும் வெறியேன்றன் மெய்ப்பிணியைக்
கொத்தார் குழலியொரு கூறுடைய கோவேயென்
அத்தாநீ நீக்காயே லார்நீக்க வல்லாரே. 8

மறியேர் விழியார் மயக்கினிடை மாழாந்த
சிறியே னடியேன் றியங்கவந்த வன்னோயை
செறிவே பெறுந்தொண்டர் சிந்தை தனிலோங்கும்
அறிவேநீ நீக்காயே லார்நீக்க வல்லாரே. 9

துன்பே சுமையாச் சுமக்கின்ற நாயேனை
வன்பேசெய் துள்ள மயக்கினின்ற வன்னோயை
இன்பே யருள்கின்ற வென்னு ருயிரேயென்
அன்பேநீ நீக்காயே லார்நீக்க வல்லாரே. 10

திருச்சிற்றம்பலம்

64. நெஞ்சு நிலைக்கிரங்கல்

திருவொற்றியூர்

கட்டளைக் கலித்துறை

திருச்சிற்றம்பலம்

ஆளாக நின்பொன் னடிக்கன்பு செய்திட ஐயநெடு
நாளாக விச்சையுண் டென்னைசெய் கேன்கொடு நங்கையர்தம்
மாளா மயற்சண்ட மாருதத் தான்மன வாசியென்சொற்
கேளா தலைகின்ற தாலொற்றி மேவுங் கிளரொளியே. 1

ஒளியா யொளிக்கு ளொளிரொளி யேயொற்றி யுத்தமநீ
அளியா விடிலிதற் கென்னைசெய் கேனணங் கன்னவர்தங்
களியாற் களித்துத் தலைதெரி யாது [1]கயன்றுலவா
வளியாய்ச் சுழன்றிவண் மாயா மனமெனை வாதிப்பதே. 2

மாயா மனமெவ் வகையுரைத் தாலு மடந்தையர்பால்
ஓயாது செல்கின்ற தென்னைசெய் கேன்றமை யுற்றதொரு
நாயாகி னுங்கை விடாருல கோருனை நானடுத்தேன்
நீயாகி லுஞ்சற் றிரங்குகண் டாயொற்றி நின்மலனே. 3

1. கயன்று என்பது — மெலிந்து என்னும்பொருட்டு. இஃதுரியடியாகப் பிறந்த வினையெச்சம். இதனை ஆசிரியர் தொல்காப்பியர் கூறிய "கயவென்கிளவி மென்மையுஞ்செய்யும்" என்னும் உரியியற் சூத்திரத்தானும் உணர்க. இக்காலத்து இச்சொல் கசங்குதலென வழங்குகின்றது.

Koviloor Digital Library

மலஞ்சான்ற மங்கையர் கொங்கையி லேநசை வாய்த்துமனஞ்
சலஞ்சான்ற தாலிதற் கென்னைசெய் கேனின் சரணன்றியே
வலஞ்சான்ற நற்றுணை மற்றறி யேனொற்றி வானவனே
நலஞ்சான்ற ஞானத் தனிமுதலே தெய்வ நாயகனே. 4

நாயினுங் கீழ்ப்பட்ட வென்னெஞ்ச நன்கற்ற நங்கையர்பால்
ஏயினுஞ் செல்கின்ற தென்னைசெய் கேனுன்னை யேத்தியிடேன்
ஆயினு மிங்கென்னை யாட்கொளல் வேண்டுமை யாவுவந்த
தாயினு நல்லவ னேயொற்றி மேவுந் தயாநிதியே. 5

நிதியேநின் பொன்னடி யேத்தாது நெஞ்ச நிறைமயலாஞ்
சதியே புரிகின்ற தென்னைசெய் கேனுனைத் தாமலர்தம்
விதியே யெனக்கும் விதித்ததன் றேயவ் விதியுமிள
மதியோர் சடையண்ண லேயொற்றி யூரொளி மாணிக்கமே. 6

மாணாத வென்னெஞ்சம் வன்னஞ் சனைய மடந்தையர்பால்
நாணாது செல்கின்ற தென்னைசெய் கேன்சிவ ஞானியர்தங்
கோணாத வுள்ளத் திருக்கோயின் மேவிக் குலவுமொற்றி
வாணாவென் கண்ணினுண் மாமணி யேயென்றன் வாழ்முதலே.

வாழாத நெஞ்ச மெனையலைத் தோடி மடந்தையர்பால்
வீழாத நாளில்லை யென்னைசெய் கேனுன் விரைமலர்த்தாள்
தாழாத குற்றம் பொறுத்தடி யேன்றனைத் தாங்கிக்கொள்வாய்
சூழா தவரிடஞ் சூழாத வொற்றிச் சுடர்க்குன்றமே. 8

குன்றோர் முலைச்சியர் வன்மல வூத்தைக் குழியின்மனஞ்
சென்றே விழுகின்ற தென்னைசெய் கேனெஞ் சிவக்கொழுந்தே
நன்றே சதானந்த நாயக மேமறை நான்கினுக்கும்
ஒன்றே யுயரொளி யேயொற்றி யூரெம் முயிர்த்துணையே. 9

துணையாமுன் பொன்னடி யேத்தா மனமந் தோகையர்கண்
கணையா லிளைக்கின்ற தென்னைசெய் கேனென்றன் கண்ணிரண்டின்
இணையாம் பரஞ்சுட ரேயழி யாநல மேயின்பமே
பணையார் திருவொற்றி யூரர சேயெம் பரம்பொருளே. 10

பொருளேநின் பொன்னடி யுன்னாதென் வன்மனம் பூவையர்தம்
இருளே புரிகின்ற தென்னைசெய் கேனடி யேன்மயங்கு
மருளே தவிர்ந்துனை வாழ்த்தி வணங்கி மகிழ்ந்திடநீ
அருளே யருட்கட லேயொற்றி மாநக ராள்பவனே. 11

திருச்சிற்றம்பலம்

Koviloor Digital Library

65. தனிமைக் கிரங்கல்

திருவொற்றியூர்
எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்
திருச்சிற்றம்பலம்

ஆக்க லாதிய ஐந்தொழில் நடத்த
அயன்மு தலிய ஐவரை யளித்து
நீக்க மின்றியெவ் விடத்தினு நிறைந்த
நித்த நீயெனு நிச்சய மதனைத்
தாக்க வெண்ணியே தாமதப் பாவி
தலைப்பட் டானவன் றனையகற் றுதற்கே
ஊக்க முற்றநின் றிருவருள் வேண்டும்
ஒற்றி யோங்கிய வுத்தமப் பொருளே. 1

கணத்தி லென்னைவிட் டேகுகின் றவன்போற்
காட்டு கின்றனன் மீட்டும்வந் தடுத்துப்
பணத்து மண்ணினும் பாவைய ரிடத்தும்
பரவ நெஞ்சினை விரவுகின் றனன்காண்
குணத்தி னிற்கொடுந் தாமத னெனுமிக்
கொடிய வஞ்சக னொடியமெய்ப் போதம்
உணர்த்து வாரிலை யென்செய்கே னெளியேன்
ஒற்றி யோங்கிய வுத்தமப் பொருளே. 2

இமைக்கு மவ்வள வேனுநெஞ் சொடுங்கி
இருக்கக் கண்டிலே னிழிவுகொண் மலத்தின்
சுமைக்கு நொந்துநொந் தையவோ நாளுந்
துயர்கின் றேனயர் கின்றவென் றுயரைக்
குமைக்கும் வண்ணநின் றிருவரு ளின்னுங்
கூடப் பெற்றிலேன் கூறுவ தென்னே
உமைக்கு நல்வர முதவிய தேவே
ஒற்றி யோங்கிய வுத்தமப் பொருளே. 3

சென்ற நாளிலோ ரிறைப்பொழு தேனுஞ்
சிந்தை யோர்வகை தெளிந்ததன் றதுபோய்
நின்ற நாளினு நிற்கின்ற திலைகாண்
நெடிய பாவியே னிகழ்த்துவ தென்னே
என்ற னுருயிர்க் கொருபெருந் துணையாம்
எந்தை யேயென்னை யெழுமையுங் காத்த
உன்ற னுலின்னு முவகைகொள் கின்றேன்
ஒற்றி யோங்கிய வுத்தமப் பொருளே. 4

கோடி நாவினுங் கூறிட வடங்காக்
கொடிய மாயையி னெடியவாழ்க் கையினை
நாடி நெஞ்சக நலிகின்றே னுனையோர்
நாளு மெண்ணிலே னன்கடை யேனே

Koviloor Digital Library

வாடி னேன்பிழை மனங்கொள லழியா
வாழ்வை யேழையேன் வசஞ்செயல் வேண்டும்
ஊடி ஞலுமெய் யடியரை யிகவா
ஒற்றி மேவிய வுத்தமப் பொருளே. 5

அன்ப தென்பதைக் கனவினுங் காணேன்
ஆடு கின்றன னன்பரைப் போல
வன்ப வத்தையு மாய்த்திட நினைத்தேன்
வஞ்ச நெஞ்சினை வசப்படுக் கில்லேன்
துன்ப வாழ்க்கையிற் சுழல்கின்றே னின்னைத்
தொழுது வாழ்த்திநற் சுகம்பெறு வேனே
ஒன்ப தாகிய வுருவுடைப் பெரியோய்
ஒற்றி யோங்கிய வுத்தமப் பொருளே. 6

முன்னை நான்செய்த வல்வினை யிரண்டின்
முடிவு தேர்ந்திலன் வடிவெடுத் துலகில்
என்னை நான்கண்ட தந்நாள் தொடங்கி
இந்நாண் மட்டு மிருளென்ப தல்லாற்
பின்னை யாதொன்றும் பெற்றிலே னிதனைப்
பேச வென்னுளங் கூசுகின் றதுகாண்
உன்னை நம்பினே னின்குறிப் புணரேன்
ஒற்றி யோங்கிய வுத்தமப் பொருளே. 7

கண்ணி லான்சுடர் காணிய விழைந்த
கருத்தை யொத்தவென் கருத்தினை முடிப்பத்
தெண்ணி லாமுடிச் சிவபரம் பொருணின்
சித்த மெப்படி தெரிந்தில னெளியேன்
பண்ணி லாவிய பாடலந் தொடைநின்
பாத பங்கயம் பதிவுறப் புனைவோர்
உண்ணி லாவிய வானந்தப் பெருக்கே
ஒற்றி யோங்கிய வுத்தமப் பொருளே. 8

உண்மை நின்னருட் சுகம்பிற வெல்லாம்
உண்மை யன்றென வுணர்த்தியு மெனது
பெண்மை நெஞ்சகம் வெண்மைகொண் டுலகப்
பித்திலே யின்னுந் தொத்துகின் றதுகாண்
வண்மை யொன்றிலே னெண்மையி னந்தோ
வருந்துகின் றனன் வாழ்வடை வேனோ
ஒண்மை யம்பலத் தொளிசெயுஞ் சுடரே
ஒற்றி யோங்கிய வுத்தமப் பொருளே. 9

நையு மாறெனைக் காமமா திகள்தாம்
நண்ணி வஞ்சக நாட்டுகின் றதுநான்
செய்யு மாறிதற் கறிந்தில னெந்தாய்
திகைக்கின் றேனருட் டிறம்பெறு வேனே

Koviloor Digital Library

வையு மாறிலா வண்கைய ருளத்தின்
மன்னி வாழ்கின்ற மாமணிக் குன்றே
உய்யு மாறரு ளம்பலத் தமுதே
ஒற்றி யோங்கிய வுத்தமப் பொருளே. 10

திருச்சிற்றம்பலம்

66. கழிபகற்கிரங்கல்

பொது

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

ஆண்ட துண்டுநீ யென்றனை யடியேன்
ஆக்கை யொன்றுமே யசைமடற் பனைபோல்
நீண்ட துண்டுமற் றுன்னடிக் கன்பே
நீண்ட தில்லைவன் னெறிசெலு மொழுக்கம்
பூண்ட துண்டுநின் புனிதநல் லொழுக்கே
பூண்ட தில்லையென் புன்மையை நோக்கி
ஈண்ட வந்தரு ளாயெனி லந்தோ
என்செய் கேனர கிடையிடும் போதே. 1

ஊழை யேமிக நொந்திடு வேனோ
வுளத்தை நோவனோ வுலகிடை மயக்கும்
பாழை யேபலன் றருவ தெண்ணிப்
பாவியேன் பெரும் படருழக் கின்றேன்
மாழை யேர்திரு மேனியெம் பெருமான்
மனமிரங் கியென் வல்வினை கெடவந்
தேழை யேற்கரு ளாயெனி லந்தோ
என்செய் கேனர கிடையிடும் போதே. 2

ஈன்று கொண்டவென் றந்தையுந் தாயும்
யாவு நீயென வெண்ணிய நாயேன்
மான்று கொண்டவிவ் வஞ்சக வாழ்வின்
மயக்கி னுன்மிக வன்மைகள் செய்தேன்
சான்று கொண்டது கண்டனை யேனுந்
தமிய னேன்மிசைத் தயவுகொண டென்னை
ஏன்று கொண்டரு ளாயெனி லந்தோ
என்செய் கேனர கிடையிடும் போதே. 3

அம்மை யப்பனென் னுருயிர்த் துணைவன்
அரசன் தேசிக னன்புடைத் தேவன்
இம்மை யிற்பய னம்மையிற் பயன்மற்
றியாவு நீயென வெண்ணிநிற் கின்றேன்
செம்மை யிற்பெறு மன்பருள் ளகஞ்சேர்
செல்வமே யெனைச் சேர்த்தரு ளாயேல்
எம்மை யிற்பெறு வேன்சிறு நாயேன்
என்செய் கேனர கிடையிடும் போதே. 4

Koviloor Digital Library

தாய ராதியர் சலிப்புறு கிற்பார்
தமரு மென்றனைத் தழுவுத லொழிவார்
நேய ராதியர் நேயம்விட் டகல்வார்
நின்னை நம்பியென் னெஞ்சுவக் கின்றேன்
தீய ராதியிற் றீயனென் றெனைநின்
திருவு ளத்திடைச் சேர்த்திடா தொழித்தால்
ஏயர் கோனுக்கன் றருளுமெம் பெருமான்
என்செய் கேனர கிடையிடும் போதே. 5

முன்னை நான்செய்த வல்வினைச் சிமிழ்ப்பாள்
மோக வாரியின் மூழ்கின னேனும்
அன்னை போலுமென் னுருயிர்த் துணையாம்
அப்ப நின்னருள் [1]அம்பியை நம்பி
தன்னை நேர்சிவ ஞானமென் கரையைச்
சார்கு வேமெனுந் தருக்குட னுழன்றேன்
இன்னு நின்னரு ளீந்திலை யந்தோ
என்செய் கேனர கிடையிடும் போதே. 6

உண்ணு கின்றது முறங்குகின் றதுமேல்
உடுத்து கின்றது முலவுகின் றதுமால்
நண்ணு கின்றது நங்கையர் வாழ்க்கை
நாடு கின்றது நவையுடைத் தொழில்கள்
பண்ணு கின்றது மானபின் உடலைப்
பாடை மேலுறப் படுத்துகின் றதும்என்
றெண்ணு கின்றதோ றுளம்பதைக் கின்றேன்
என்செய் கேனர கிடையிடும் போதே. 7

கல்லை வெல்லவும் வல்லவென் மனந்தான்
கடவுள் நின்னடிக் கமலங்கள் நினைத்தல்
இல்லை நல்லைநின் னருளெனக் கதனால்
இல்லை யில்லைநீ யிரக்கமில் லாதான்
அல்லை யில்லையா லருள்தரா திருத்தல்
அடிய னேனள வாயினிங் கிடர்க்கே
எல்லை யில்லையென் றுளம்பதைக் கின்றேன்
என்செய் கேனர கிடையிடும் போதே. 8

பொங்கு மாயையின் புணர்ப்பினுக் குள்ளம்
போக்கி நின்றதும் புலப்பகை வர்களால்
இங்கு மாலரி யேற்றின்முன் கரிபோல்
ஏங்கு கின்றது மிடர்ப்பெருங் கடலில்
தங்கு மாசையங் கராப்பிடித் தீர்க்கத்
தவிப்பி னின்றதுந் தமியனேன் றனையும்
எங்கு மாகிநின் றுயறிந் திலையோ
என்செய் கேனர கிடையிடும் போதே. 9

---

1. அம்பி என்பது — மரக்கலம்.

Koviloor Digital Library

அரக்க னல்லன்யா னரக்கனே யெனினும்
அரக்க னுக்குமுன் னருளளித் தனையே
புரக்க வென்னைநின் னருட்கடன் றென்றே
போற்று கின்றனன் புலையிற் புலையேன்
உரக்க விங்கிழைத் திடும்பிழை யெல்லாம்
உன்ன லையநீ யுன்னியென் னளவில்
இரக்க நின்றிரு வுளத்திலை யானால்
என்செய் கேனர கிடையிடும் போதே. 10

திருச்சிற்றம்பலம்

67. அர்ப்பித்திரங்கல்

பொது

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

தம்பி ரான்றய விருக்கவிங் கெனக்கோர்
தாழ்வுண் டோவெனத் தருக்கொடு மிருந்தேன்
எம்பிரா னினக் கேழையே னளவில்
இரக்க மொன்றிலை யென்னென்ப தின்னும்
நம்பி ரானென நம்பிநிற் கின்றேன்
நம்பு மென்றனை வெம்பிடச் செயினுஞ்
செம்பி ரானரு ளளிக்கினு முனது
சித்த மன்றியான் செய்வதொன் றிலையே. 1

துட்ட நெஞ்சக வஞ்சகக் கொடியேன்
சொல்வ தென்னையென் றொல்வினை வசத்தால்
இட்ட நல்வழி யல்வழி யெனவே
எண்ணு மிவ்வழி யிரண்டிடை யெனைநீ
விட்ட தெவ்வழி யவ்வழி யகன்றே
வேறு மோர்வழி மேவிடப் படுமோ
சிட்ட ருள்ளுறுஞ் சிவபெரு மானின்
சித்த மன்றியான் செய்வதொன் றிலையே. 2

ஊட்டு கின்றனை யுண்ணுகின் றனன்மேல்
உறக்கு கின்றனை யுறங்குகின் றனன்பின்
காட்டு கின்றனை காணுகின் றனனீ
களிப்பிக் கின்றனை களிப்புறு கின்றேன்
ஆட்டு கின்றனை யாடுகின் றனனிவ்
வகில கோடியு மவ்வகை யானால்
தீட்டு மன்பருக் கன்பநின் றனது
சித்த மன்றியான் செய்வதொன் றிலையே. 3

கன்னி வான்சுடர் காணவுன் னுதல்போற்
கருத்தி லேனுநின் கருணையை விழைந்தேன்
என்னிலா விடை யூறடுத் ததனால்
இளைக்கின் றேனெனை யேன்றுகொள் வதற்கென்

Koviloor Digital Library

உண்ணி லாவிய வுயிர்க்குயி ரனையாய்
உன்னை யொத்ததோர் முன்னவ ரிலைகாண்
தெண்ணி லாமுடிச் சிவபரம் பொருணின்
சித்த மன்றியான் செய்வதொன் றிலையே. 4

மெச்சு கின்றவர் வேண்டிய வெல்லாம்
விழியி மைக்குமுன் மேவல்கண் டுனைநான்
நச்சு கின்றன னச்சினுங் கொடியேன்
நன்மை யெய்தவோ வன்மையுற் றிடவோ
இச்சை நன்றறி வாயருள் செய்யா
திருக்கின் றுயுனக் கியான்செய்த தென்னே
செச்சை மேனியெஞ் சிவபரஞ் சுடர்நின்
சித்த மன்றியான் செய்வதொன் றிலையே. 5

நாடுந் தாயினு நல்லவ னமது
நாதன் என்றுனை நாடுமப் பொழுதே
வாடு நெஞ்சகந் தளிர்க்கின்றேன் மற்றை
வைகற் போதெலாம் வாடுகின் றனன்காண்
பாடுந் தொண்டர்க ளிடர்ப்படிற் றரியாப்
பண்பென் மட்டுநின் பாலிலை போலுந்
தேடும் பத்தர்தம் முளத்தமர் வோய்நின்
சித்த மன்றியான் செய்வ தொன்றிலையே. 6

மருள ளித்தெனை மயக்கியிவ் வுலகில்
வருத்து கின்றனை மற்றெனக் குன்றன்
அருள ளிக்கிலை யாயினு நினக்கே
அடிமை யாக்கிலை யாயினும் வேற்றுப்
பொருள ளிக்கிலை யாயினு மொருநின்
பொன்மு கத்தையோர் போதுகண் டிடவே
தெருள ளித்திடிற் போதுமிங் குனது
சித்த மன்றியான் செய்வதொன் றிலையே. 7

மாறு கின்றன னெஞ்சக மஞ்சி
வள்ள லித்துணை வந்தில னினிமேற்
கூறு கின்றதென் னென்றயர் கின்றேன்
குலவித் தேற்றுமக் கொள்கைய ரின்றி
ஏறு கின்றன விரக்கமுள் ளவனம்
இறைவ னின்றரு ளிகுவ னென்றே
தேறு கின்றன னென்செய்கே னினது
சித்த மன்றியான் செய்வதொன் றிலையே. 8

தாயி னும்பெருந் தயவுடை யவனந்
தலைவ னென்றுநான் றருக்கொடுந் திரிந்தேன்
நாயி னுங்கடை யேன்படு மிடரை
நாளுங் கண்டனை நல்லருள் செய்யாய்

Koviloor Digital Library

ஆயி னுந்திரு முகங்கண்டு மகிழும்
அன்பர் தம்பணி யாற்றிமற் றுடலந்
தேயி னும்மிக நன்றெனக் கருளுன்
சித்த மன்றியான் செய்வதொன் றிலையே. 9

வானும் வையமு மளிக்கினு முன்பால்
மனம்வைத் தோங்குவ ருள்ளனின் னடியர்
நானு மவ்வகை யுலகிய லொழுக்கில்
நாடி நின்னருள் நலம்பெற விழைதல்
கூனு மோர்முடக் கண்ணிலி வானிற்
குலவு மொண்சுடர்க் குறித்திடல் போலுந்
தேனுங் கைக்குநின் னருளுண்டே லுண்டுன்
சித்த மன்றியான் செய்வதொன் றிலையே. 10

திருச்சிற்றம்பலம்

68. அச்சத்திரங்கல்

கோயில்

எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

துறையிடுங் கங்கைச் செழுஞ்சடைக் கனியே
சுயம்பிர காசமே யமுதிற்
கறையிடுங் கண்டத் தொருபெருங் கருணைக்
கடவுளே கண்ணுதற் கரும்பே
குறையிடுங் குணத்தாற் கொடியனே னெனினுங்
கொடுந்துய ராலலைந் தையா
முறையிடு கின்றே னருட்ரா தென்னை
மூடனென் றிகழ்வது முறையே. 1

இகழ்ந்திடே லெளியேன் றன்னை நீயன்றி
என்றுகொள் பவரிலை யந்தோ
அகழ்ந்தென துளத்தைச் சூறைகொண் டலைக்கும்
அஞரெலா மறுத்தருள் புரிவாய்
புகழ்ந்திடுந் தொண்ட ருளத்தினும் வெள்ளிப்
பொருப்பினும் பொதுவினு நிறைந்து
திகழ்ந்தருள் பழுக்குந் தெய்வதத் தருவே
செல்வமே சிவபரம் பொருளே. 2

பொருளெலாம் புணர்க்கும் புண்ணியப் பொருளே
புத்தமு தேகுணப் பொருப்பே
இருளெலா மறுக்கும் பேரொளிப் பிழம்பே
இன்பமே யென்பெருந் துணையே
அருளெலாந் திரண்ட வொருசிவ மூர்த்தி
அண்ணலே நின்னடிக் கபயம்
மருளெலாங் கொண்ட மனத்தினேன் றுன்ப
மயக்கெலா மாற்றியாண் டருளே. 3

Koviloor Digital Library

ஆண்டநின் கருணைக் கடலிடை யொருசிற்
றணுத்துணைத் திவலையே யெனினும்
ஈண்டவென் றல்மேற் றெறித்தியே லுய்வேன்
இல்லையே லென்செய்கே னெளியேன்
நீண்டவ னயன்மற் றேனைவா னவர்கள்
நினைப்பரு நிலைமையை யன்பர்
வேண்டினும் வேண்டா விடினுமாங் களிக்கும்
விமலனே விடைப்பெரு மானே. 4

பெருமையிற் பிறங்கும் பெரியநற் குணத்தோர்
பெற்றதோர் பெருந்தனிப் பொருளே
அருமையிற் பிரம ஞதிய தேவர்
அடைந்தநற் செல்வமே யமுதே
இருமையிற் பயனு நின்றிரு வருளே
என்றுநின் னடைக்கல மானேன்
கருமையிற் பொலியும் விடநிகர் துன்பக்
களைகளைந் தெனைவிளைத் தருளே. 5

விளைத்தனன் பவநோய்க் கேதுவாம் விடய
விருப்பினை நெருப்புறழ் துன்பின்
இளைத்தன னந்தோ வேழைமை யதனால்
என்செய்கே னென்பிழை பொறுத்துத்
தளைத்தவன் றுயர்நீத் தாளவல் லவர்நின்
றனையன்றி யறிந்திலன் றமியேன்
கிளைத்தவான் கங்கை நதிச்சடை யவனே
கிளர்தருஞ் சிற்பர சிவனே. 6

சிற்பர சிவனே தேவர்தந் தலைமைத்
தேவனே தில்லையம் பலத்தே
தற்பர நடஞ்செய் தாணுவே யகில
சராசர காரணப் பொருளே
அற்பர்தம் மிடஞ்செல் பற்பல துயரால்
அலைதரு கின்றன னெளியேன்
கற்பக மனையநின் றிருவருட் கடலிற்
களிப்புட னுடுவ தென்றோ. 7

என்றுநின் னருள்நீ ருண்டுவந் திடுநாள்
என்றுநின் னுருவுகண் டிடுநாள்
என்றுநின் னடியர்க் கேவல்செய் திடுநாள்
என்றென தகத்துய ரறுநாள்
மன்றுணின் றுடும் பரஞ்சுடர்க் குன்றே
வானவர் கனவினுந் தோன்ரு
தொன்றுறு மொன்றே யருண்மய மான
உத்தம வித்தக மணியே. 8

Koviloor Digital Library

வித்தக மறியேன் வினையினேன் றுன்ப
விரிகட லாழ்ந்தன னந்தோ
அத்தக வேளை யெடுப்பவர் நின்னை
யன்றியெங் கனுமிலை யையா
மத்தகக் கரியி னுரிபுனை பவள
வண்ணனே விண்ணவ ரரசே
புத்தக நிறைவி னடியவர் வேண்டும்
பொருளெலாம் புரிந்தருள் பவனே. 9

அருள்பவ னின்னை யல்லதை யிங்கும்
அங்குமற் றெங்குமின் றதுபோன்
மருள்பவ னென்னை யல்லதை மண்ணும்
வானமுந் தேடினு மின்றே
இருள்பவ முடையே னென்செய்கே னின்றுள்
இணைதுணை யெனநினைந் துற்றேன்
மருள்பவத் தொடுமென் றுயரறுத் தாள்வாய்
வாழிய வருட்பெருந் துறையே. 10

திருச்சிற்றம்பலம்

69. புறமொழிக் கிரங்கல்

பொது

கட்டளைக் கலித்துறை

திருச்சிற்றம்பலம்

கேளனந் தானொரு போதுண் டனைமனக் கேதமற
நீளனந் தேடு முடியா னெதுநினைக் கீந்ததென்றே
வேளனம் போனடை பின்னுரு மைந்தரும் வேடிக்கையாய்
ஏளனஞ் செய்குவர் நீயரு ளாவிடி லென்னப்பனே. 1

அப்பாநின் பொன்னரு ளென்மேற் றயைசெய் தளித்திலையேல்
துப்பா னவுமொரு போதுதுவ் வாது சுழன்றனையே
இப்பாரி லீசன் றிருவரு ணீபெற்ற தெங்ஙனமோ
செப்பா யெனவரிப் பார்சிரிப் பாரிச் செகத்தவரே. 2

தீதுசெய் தேற்கருள் செய்வானின் சித்தந் திரும்பிலையேல்
தாதுசெய் தேகத்து ளொருவொரு போது தவிர்ந்தநினைக்
கேதுசெய் தான்சிவ னென்றே யுலக ரிழிவுரைத்தால்
யாதுசெய் வேன்றெய்வ மேயெளி யேனுயிர்க் கின்னமுதே. 3

தெரியாமை யாற்சிறி யேன்செய்குற் றத்தைநின் சித்தமதிற்
பிரியாமை வைத்தருள் செய்திலை யேலெனைப் பெற்றவளும்
பெரியாசை கொண்டபிள் ளாயர னென்றரப் பெற்றதென்றே
பரியாசை செய்குவ ளாலய லாரென் பகருவதே. 4

Koviloor Digital Library

என்னும னுயடி யேன்செய்த குற்றங்கள் யாவுமெண்ணி
அண்ணுநின் சித்த மிரங்கா யெனிலிங் கயலவர்தாம்
பெண்ணு ரிடத்தவன் பேரருள் சற்றும் பெருதனைக்
கொண்ணுதிவ் வண்மை விரதமென் ருலென் னுரைப்பதுவே.

பொய்யான வஞ்சக னென்பிழை யாவும் பொறுத்துனருள்
செய்யா யெனிலெது செய்குவன் யானிச் செகதலத்தோர்
எய்யா விரதத்தில் யாதுபெற் ருயென் றிகழ்வர்கண்டாய்
ஐயாவென் னின்னமு தேயர சேயென தாண்டவனே. 6

உன்னுள்ளங் கொண்டேற் கருளா யெனிலிவ் வுலகர்பொய்யாம்
என்னுள்ளங் கொண்ட களவறி யாதுநின் றேடவிங்கே
நின்னுள்ளங் கொள்விர தப்பயன் யாது நிகழ்த்தெனவே
முன்னுள்ளங் கொண்டு மொழிவர்கண் டாயெம் முதல்வனே.

முந்தோகை கொண்டுநின் றண்ணருள் வாரியின் மூழ்குதற்கிங்
கந்தோவென் றுன்பந் தொடைத்தரு ளாயெனி லாங்குலகர்
வந்தோ சிவவிர தாவெது பெற்றனை வாய்திறவென்
றிந்தோர் தருசடை யாய்விடை யாயென்னை யேசுவரே. 8

ஆசும் படியி லகங்கா ரமுமுடை யானென்றெண்ணிப்
பேசும் படியி லெனக்கரு ளாயெனிற் பேருலகோர்
ஏசும் படிவரும் பொய்வேட னென்றதை யெண்ணியெண்ணிக்
கூசும் படிவரு மேயென்செய் கேனென் குலதெய்வமே. 9

ஐதட் டிடுநெஞ் சகத்தேன் பிழைகளை யாய்ந்துவெறும்
பொய்தட் டிகலுடை யேற்குன் கருணை புரிந்திலையேல்
வெய்தட்டி யுண்ட விரதாநின் னேன்பு விருத்தமென்றே
கைதட்டி வெண்ணகை செய்வர்கண் டாயருட் கற்பகமே. 10

திருச்சிற்றம்பலம்

70. கருணைபெரு திரங்கல்

பொது

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

நன்றி யொன்றிய நின்னடி யவர்க்கே
நானு மிங்கொரு நாயடி யவன்காண்
குன்றி னென்றிய விடர்மிக வுடையேன்
குற்ற நீக்குநற் குணமிலே னெனினும்
என்றி னென்றிய சிவபரஞ் சுடரே
இன்ப வாரியே யென்னுயிர்த் துணையே
ஒன்றி னென்றிய வுத்தமப் பொருளே
உனைய லாலெனை யுடைடவ ரெவரே. 1

Koviloor Digital Library

தீது செய்தனன் செய்கின்றேன் செய்வேன்
தீய னேன்கொடுந் தீக்குண வியல்பே
ஏது செய்தன னேனுமென் றன்னை
ஏன்று கொள்வதெம் மிறைவநின் னியல்பே
ஈது செய்தனை யென்னைவிட் டுலகில்
இடர்கொண் டேங்கென வியம்பிடி லடியேன்
ஓது செய்வதொன் றென்னுயிர்த் துணையே
உனையலா லெனை யுடையவ ரெவரே. 2

சென்ற நாளினுஞ் செல்கின்ற நாளிற்
சிறிய னேன்மிகத் தியங்குறு கின்றேன்
மன்ற நானிவ ணிவ்வகை யானால்
வள்ள லேநினை வழுத்துமா றெதுவோ
என்ற னாலினி யாவதொன் றிலையுன்
எண்ண மெப்படி யப்படி யிசைக
உன்ற னாற்களித் துவகைகொள் கின்றேன்
உனைய லாலெனை யுடையவ ரெவரே. 3

மையல் வாழ்க்கையி னாடொறு மடியேன்
வருந்தி நெஞ்சக மாழ்குவ தெல்லாம்
ஐய வையவோ கண்டிடா தவர்போல்
அடம்பி டிப்பதுன் னருளினுக் கழகோ
செய்ய மேலொன்று மறிந்திலன் சிவனே
தில்லை மன்றிடைத் தென்முக நோக்கி
உய்ய வைத்ததாள் நம்பிநிற் கின்றேன்
உனைய லாலெனை யுடையவ ரெவரே. 4

மண்ண கச்சிறு வாழ்க்கையின் பொருட்டால்
வருந்தி மற்றதன் வன்மைக ளெல்லாம்
எண்ண வெண்ணவென் னெஞ்சகம் பதைப்புற்
றேங்கி யேங்கிநா னிளைப்புறு கின்றேன்
அண்ண னின்றிரு வருட்டுணை யடைந்தால்
அமைந்து வாழ்குவ னடைவகை யறியேன்
உன்ன நல்லமு தனையவெம் பெருமான்
உனைய லாலெனை யுடையவ ரெவரே. 5

அன்னை யப்பனு நீயென மகிழ்ந்தே
அகங்கு ளிர்ந்துநா னுதரித் திருந்தேன்
என்னை யிப்படி யிடர்கொள விடுத்தால்
என்செய் கேனிதை யாரொடு புகல்கேன்
பொன்னை யொத்தநின் னடித்துணை மலரைப்
போற்று வார்க்குநீ புரிகுவ திதுவோ
உன்னை யெப்படி யாயினு மறவேன்
உனைய லாலெனை யுடையவ ரெவரே. 6

Koviloor Digital Library

நீல மிட்டகண் மடவியர் மயக்கால்
நெஞ்ச மோர்வழி நானொரு வழியாய்
ஞால மிட்டவிவ் வாழ்க்கையி லடியேன்
நடுங்கி யுள்ளக நலியுமென் றன்மை
ஆல மிட்டருள் களத்தநீ யறிந்தும்
அருள ளித்திலை யாகமற் றிதனை
ஓல மிட்டழு தரற்றியெங் குரைப்பேன்
உனைய லாலெனை யுடையவ ரெவரே. 7

கொடிய பாவியேன் படும்பரி தாபங்
குறித்துக் கண்டுமென் குறையகற் றாது
நெடிய காலமுந் தாழ்த்தனை நினது
நெஞ்சும் வஞ்சக நேர்ந்ததுண் டேயோ
அடியர் தந்துயர் கண்டிடிற் றரியார்
ஐய ரென்பரென் னளவஃ திலையோ
ஒடிய மாதுயர் நீக்கிடா யென்னில்
உனைய லாலெனை யுடையவ ரெவரே. 8

என்னென் றேழையே னுணர்விட் டுரைப்பேன்
இறைவ நின்றனை யிறைப்பொழு தேனும்
உன்னென் றுலென துரைமறுத் தெதிராய்
உலக மாயையிற் றிலகமென் றுரைக்கும்
மின்னென் றுலிடை மடவியர் மயக்கில்
வீழ்ந்தென் னெஞ்சக மாழ்ந்துவிட் டதனால்
உன்னன் பென்பதென் னிடத்திலை யேனும்
உனைய லாலெனை யுடையவ ரெவரே. 9

அடிய னேன்மிசை யாண்டவ நினக்கோர்
அன்பி ருந்ததென் றகங்கரித் திருந்தேன்
கொடிய னேன்படு மிடர்முழு தறிந்துங்
கூலி யாளனைப் போலெனை நினைத்தே
நெடிய வித்துணைப் போதுமோர் சிறிதும்
நெஞ்சி ரங்கிலை சஞ்சலத் தறிவும்
ஒடிய நின்றன னென்செய்கேன் சிவனே
உனைய லாலெனை யுடையவ ரெவரே. 10

திருச்சிற்றம்பலம்

71. திருவருட் பதிகம்

திருவண்ணாமலை

எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

வளங்கிளர் சடையும் விளங்கிய விதழி
மாலையு மாலயன் வழுத்துங்
குளங்கிளர் நுதலுங் களங்கிளர் மணியுங்
குலவுதிண் புயமுமம் புயத்தின்

Koviloor Digital Library

தளங்கிளர் பதமு மிளங்கதிர் வடிவுந்
தழைக்கநீ யிருத்தல்கண் டுவத்தல்
உளங்கிள ரமுதே துளங்குநெஞ் சகனேன்
உற்றருணையிற்பெற வருளே. 1

அன்பர்தம் மனத்தே யின்பமுற் றவைகள்
அளித்தவர் களித்திடப் புரியும்
பொன்பொலி மேனிக் கருணையங் கடலே
பொய்யனேன் பொய்மை கண்டின்னுந்
துன்பமுற் றலையச் செய்திடே லருணைத்
தொன்னக ரிடத்துன தெழில்கண்(டு)
என்புள முருகத் துதித்திடல் வேண்டும்
இவ்வர மெனக்கிவ ணருளே. 2

பூத்திடு மவனுங் காத்திடு பவனும்
புள்விலங் குருக்கொடு நேடி
ஏத்திடு முடியுங் கூத்திடு மடியும்
இன்னமுங் காண்கில ரென்றுங்
கோத்திடு மடியர் மாலையி னளவிற்
குலவினை யென்றுநல் லோர்கள்
சாற்றிடு மதுகேட் டுவந்தன னினது
சந்நிதி யுறவெனக் கருளே. 3

அருள்பழுத் தோங்கு மானந்தத் தருவே
அற்புத வமலநித் தியமே
தெருள்பழுத் தோங்குஞ் சித்தர்தம் முரிமைச்
செல்வமே யருணையந் தேவே
இருள்பழுத் தோங்கு நெஞ்சினே னெனினும்
என்பிழை பொறுத்துநின் கோயிற்
பொருள்பழுத் தோங்குஞ் சந்நிதி முன்னர்ப்
போந்துனைப் போற்றுமா றருளே. 4

மறையுமம் மறையின் வாய்மையு மாகி
மன்னிய வள்ளலே மலர்மேல்
இறையுமா தவனு மிறையுமின் னவனென்
றெய்திடா விறைவனே யடியேன்
பொறையுநன் னிறையு மறிவுநற் செறிவும்
பொருந்திடாப் பொய்யனே னெனினும்
அறையுநற் புகழ்சே ரருணையை விழைந்தேன்
அங்கெனை யடைகுவித் தருளே. 5

தேடுவார் தேடுஞ் செல்வமே சிவமே
திருவரு ளுபுரித் தேவே
ஏடுவா ரிதழிக் கண்ணியெங் கோவே
எந்தையே யெம்பெரு மானே

Koviloor Digital Library

பாடுவார்க் களிக்கும் பரம்பரப் பொருளே
பாவியேன் பொய்யெலாம் பொறுத்து
நாடுவார் புகழு நின்றிருக் கோயில்
நண்ணுமா வெனக்கிவ ணருளே. 6

உலகுயிர் தொறுநின் றாட்டுவித் தாட்டும்
ஒருவனே யுத்தம னேநின்
இலகுமுக் கண்ணுங் காளகண் டமுமெய்
இலங்குவெண் ணீற்றணி யெழிலுந்
திலகவொண் ணுதலுண் ணுமுலை யுமையாள்
சேரிடப் பாலுங்கண் டடியேன்
கலகவைம் புலன்செய் துயரமு மற்றைக்
கலக்கமு நீக்குமா வருளே. 7

அருட்பெருங் கடலே யானந்த நறவே
அடிநடு வந்தமுங் கடந்த
தெருட்பெரு மலையே திருவணு மலையிற்
றிகழ்சுயஞ் சோதியே சிவனே
மருட்பெருங் கடலின் மயங்குகின் றேனென்
மயக்கெலா மொழிந்துவன் பிறவி
இருட்பெருங் கடல்விட் டேறநின் கோயிற்
கெளியனேன் வரவர மருளே. 8

கருணையங் கடலே கண்கண்மூன் றுடைய
கடவுளே கமலன்மா லறியா
அருணையெங் கோவே பரசிவா னந்த
வமுதமே யற்புத நிலையே
இருணிலம் புகுதா தெனையெடுத் தாண்ட
இன்பமே யன்பர்தம் மன்பே
பொருணலம் பெறநின் சந்நிதிக் கெளியேன்
போந்துனைப் போற்றும்வா றருளே. 9

ஏதுசெய் திடினும் பொறுத்தருள் புரியும்
என்னுயிர்க் கொருபெருந் துணையே
தீதுசெய் மனத்தார் தம்முடன் சேராச்
செயலெனக் களித்தவென் தேவே
வாதுசெய் புலனால் வருந்தல்செய் கின்றேன்
வருந்துறு வண்ணமெற் கருளித்
தாதுசெய் பவனேத் தருணையங் கோயிற்
சந்நிதிக் கியான்வர வருளே. 10

திருச்சிற்றம்பலம்

Koviloor Digital Library

72. பிரசாதப் பதிகம்

புள்ளிருக்கும் வேளூர்

கலி விருத்தம்

திருச்சிற்றம்பலம்

சரதத் தாலன்பர் சார்ந்திடு நின்றிரு
விரதத் தாலன்றி வேறொன்றிற் றீருமோ
பரதத் தாண்டவ னேபரி திப்புரி
வரதத் தாண்டவ னேயிவ் வருத்தமே. 1

வேத னேனும் விலக்குதற் பாலனே
தீத னேன்றுயர் தீர்க்கும் வயித்திய
நாத னேயுன்ற னல்லரு ளில்லையேல்
நோத னேரும்வன் னோயிற் சிறிதுமே. 2

அருந்தி னாலன் பகங்குளி ரானந்த
விருந்தி னான்மகிழ் வித்தரு ளண்ணலே
வருந்தி நாட வரும்பிணி நின்னருள்
மருந்தி னாலன்றி மற்றொன்றிற் றீருமோ. 3

மாலு நான்கு வதனனு மாமறை
நாலு நாட்டரு நம்பர னேயெவ
ராலு நீக்க வரிதிவ் வருத்தநின்
ஏலு நல்லரு ளின்றெனிற் சற்றுமே. 4

தேவ ராயினுந் தேவர் வணங்குமோர்
மூவ ராயினு மூக்கணா நின்னருள்
மேவு றாது விலக்கிடற் பாலரோ
ஓவு றாத வுடற்பிணி தன்னையே. 5

வைய நாயக வானவர் நாயக
ஐய னாயகி சார்ந்திடு நாயக
உய்ய நின்னரு ளொன்றுவ தில்லையேல்
வெய்ய நோய்கள் விலகுவ தில்லையே. 6

கல்லை வில்லிற் கனித்தருள் செய்ததோர்
எல்லை யின்றி யெழுமின்ப வெள்ளமே
இல்லை யில்லைநின் னின்னரு ளில்லையேல்
தொல்லை நோயின் றொடக்கறு நீங்கலே. 7

நீதி மாதவர் நெஞ்சிடை நின்றொளிர்
சோதி யேமுத் தொழிலுடை மூவர்க்கும்
ஆதி யேநின் னருளொன்று மில்லையேல்
வாதியா நிற்கும் வன்பிணி யாவுமே. 8

Koviloor Digital Library

பத்தர் நித்தம் பயில்பரி திப்புரி
உத்தமப் பொரு ளேயுன் னருட்டனைப்
பெத்த மற்றிடப் பெற்றவர்க் கல்லது
நித்த முற்ற நெடும்பிணி நீங்குமோ. 9

சைவ சிற்குணர் தம்முள மன்னிய
தெய்வ தற்பர னேசிவ னேயிங்கு
உய்வ தற்குன் னருளொன்று மில்லையேல்
நைவ தற்கு நணுகுவ நோய்களே. 10

திருச்சிற்றம்பலம்

73. பிரார்த்தனைப் பதிகம்

திருவொற்றியூருந் — திருத்தில்லையும்

கட்டளைக் கலித்துறை

திருச்சிற்றம்பலம்

அப்பார் மலர்ச்சடை யாரமு தேயென் னருட்டுணையே
துப்பார் பவள மணிக்குன்ற மேசிற் சுகக்கடலே
வெப்பார் தருதுய ரான்மெலி கின்றனன் வெற்றடியேன்
இப்பார் தனிலென்னை யப்பாவஞ் சேலென வேன்று கொள்ளே.

ஏன்றுகொள் மானம தின்னுயிர் போன்முக்க ணெந்தையென்றே
சான்றுகொள் வாய்நினை நம்பிநின் றேனித் தமியடியேன்
மான்றுகொள் வான்வருந் துன்பங்க ணீக்க மதித்திலையேன்
ஞான்றுகொள் வேனன்றி யாதுசெய் வேனிந்த நானிலத்தே. 2

நிலத்தே சிறுவர்செய் குற்றங்கள் யாவு நினைத்தறவோர்
சலத்தே யுளத்தை விடாரென்ப ராதலிற் றுதையென்றே
குலத்தேவர் போற்றுங் குணக்குன்ற மேயெங் குலதெய்வமே
புலத்தே யிழிதகை யேன்பிழை யாவும் பொறுத்தருளே. 3

அருளா ரமுதப் பெருங்கட லேதில்லை யம்பலத்திற்
பொருளார் நடம்புரி புண்ணிய னேநினைப் போற்றுகிலேன்
இருளார் மனத்தி னிடருழந் தேனினி யாதுசெய்கேன்
மருளார் மலக்குடின் மாய்ந்திடி லுன்னருள் வாய்ப்பதற்கே. 4

வாயார நின்பொன் மலர்த்தாள் துணையை வழுத்துகிலேன்
ஓயா விடருழந் துண்ணலி கின்றன னேகெடுவேன்
பேயாய்ப் பிறந்திலென் பேயுமொவ் வேன்புலைப் பேறுவக்கும்
நாயாய்ப் பிறந்தில னுய்க்குங் கடைப்பட்ட நானிங்ஙனே. 5

நான்செய்த குற்றங்க ளெல்லாம் பொறுத்துநின் னல்லருணீ
தான்செய் தனையெனி லையாமுக் கட்பெருஞ் சாமியவற்
கேன்செய் தனையென நிற்றடுப் பாரிலை யென்னரசே
வான்செய்த நன்றியை யார்தடுத் தாரிந்த வையகத்தே. 6

Koviloor Digital Library

வையகத் தேயிடர் மாக்கடன் மூழ்கி வருந்துகின்ற
பொய்யகத் தேனைப் புரந்தரு ளாமற் புறம்பொழித்தால்
நையகத் தேனெது செய்வேனெந் தோவுண் ணலிகுவன்காண்
மெய்யகத் தேநின் றொளிர்தரு ஞான விரிசுடரே. 7

விரிதுய ராற்றடு மாறுகின் றேனிந்த வெவ்வினையேன்
பெரிதுய ராநின்ற நல்லோ ரடையுநின் பேரருடான்
அரிதுகண் டாயடை வேனென லாயினு மைய!மணிப்
புரிதுவர் வார்சடை யாய்நீ யுவப்பிற் புரியினுண்டே. 8

உண்டோவென் போற்றுய ராலலை கின்றவ ருத்தமநீ
கண்டோர் சிறிது மிரங்குகி லாயிக் கடையவனேன்
பண்டோர் துணையறி யேனின்னை யன்றிநிற் பற்றிநின்றேன்
எண்டோண் மணிமிடற் றெந்தாய் கருணை யிருங்கடலே. 9

கடலே யனைய துயர்மிகை யாலுட் கலங்குமென்னை
விடலே யருளென் றெடுத்தாளல் வேண்டுமென் விண்ணப்பமீ
தடலேறு வந்த வருட்கட லேயணி யம்பலத்துள்
உடலே மருவு முயிர்போ னிறைவொற்றி யூரப்பனே. 10

திருச்சிற்றம்பலம்

74. திருப்புகற் பதிகம்

பொது

கலிவிருத்தம்

திருச்சிற்றம்பலம்

வேகமுறு நெஞ்ச மெலிவுமெளி யேன்றன்
தேக மெலிவுந் தெரிந்து மிரங்காயேன்
மாக நதியு மதியும் வளர் சடையெம்
ஏக விளிமற் றெனக்கா ரிரங்குவரே. 1

கள்ள மனத்துக் கடையோர்பா லுறுமென்
உள்ள மெலிவு முடன்மெலிவுங் கண்டிருந்தும்
எள்ளி னளவு மிரங்கி யருளாயேல்
எள்ளு முலகி லெனக்கா ரிரங்குவரே. 2

பொன்னை வளர்ப் பாரைப் போற்றுமெ லெம்பெருமான்
உன்னைமதித் துன்னுறுமென் னுள்ள மறிந்திருந்தும்
அன்னையினுஞ் சால வருள்வோ யருளாயேல்
என்னை முகம்பார்த் தெனக்கா ரிரங்குவரே. 3

துன்னுடைய வியாக்கிரமத் தோலுடையான் றுனிருக்கப்
பொன்னுடையார் பக்கம் புகுவானே னென்றிருப்பேன்
தன்னுடைய துன்பந் தவிர்த்திங் கருளாயேல்
என்னுடையாய் மற்றிங் கெனக்கா ரிரங்குவரே. 4

Koviloor Digital Library

வன்கண்ணர் தம்மை மதியாதுன் பொன்னடியின்
தன்கண் ணடியேன்றன் சஞ்சலவன் னெஞ்சகத்தின்
புன்கண் ணுழல்வைப் புகல்கின்றேன் காத்திலையேல்
என்கண் ணலையா யெனக்கா ரிரங்குவரே. 5

தோன்றுவது மாய்வதுமாஞ் சூழ்ச்சியிடைப் பட்டலைந்து
மான்றுகொளுந் தேவர் மரபை மதியாமே
சான்றுகொளு நின்னைச் சரணடைந்தே னுயேனை
ஏன்றுகொளா யென்னி லெனக்கா ரிரங்குவரே. 6

தீதுமுற்று நாளுஞ் செயினும் பொறுத்தருளுஞ்
சாதுமுற்றுஞ் சூழ்ந்த தயாநிதிநீ யென்றடைந்தேன்
கோதுமுற்றுந் தீரக் குறியாயே னன்மையென்ப
தேதுமற்ற பாவிக் கெவர்தா னிரங்குவரே. 7

துன்றியமா பாதகத்தோன் சூழ்வினையை யோர்கணத்தில்
அன்றுதவிர்த் தாண்ட வருட்கடனீ யென்றடுத்தேன்
கன்றுறுமென் கண்கலக்கங் கண்டு மிரங்காயேல்
என்றுமுளாய் மற்றிங் கெவர்தா னிரங்குவரே. 8

கோடாமே பன்றிதருங் குட்டிகட்குத் தாயாகி
வாடா முலைகொடுத்த வள்ளலென நானடுத்தேன்
வாடாவென் றுன்னருளில் வாழ்வா னருளிலையேல்
ஈடாரு மில்லா யெனக்கா ரிரங்குவரே. 9

கல்லா நடையேன் கருணையிலே னாலும்
நல்லார் புகழு நமச்சிவா யப்பெயரே
அல்லாது பற்றொன் றறியே னருளாயேல்
எல்லா முடையா யெனக்கா ரிரங்குவரே. 10

திருச்சிற்றம்பலம்

75. சிந்தைத் திருப்பதிகம்

பொது

கோச்சகக் கலிப்பா

திருச்சிற்றம்பலம்

விடையார்க்குங் கொடியுடைய வித்தகவென் றுன்னடியின்
இடையார்த்து நின்றழுமிவ் வேழைமுகம் பாராமே
நடையார்க்கும் வாழ்க்கையிலே நல்குரவோர்க் கீயாத
உடையார்க்கோ வென்னை யுடையா யுதவுவதே. 1

கற்றே யறியாக் கடைப்புலையே னாலும்
உற்றே நின் றன்னைநினைந் தோதுகின்றே னல்லாமே
மற்றேதுந் தேறேனென் வன்றுயர்தீர்ந் துள்குளிரச்
சற்றே யிரங்கித் தயவுசெய்தா லாகாதோ. 2

Koviloor Digital Library

கல்லா ரொடுந்திரிந்தென் கண்ணேநின் றாள்வழுத்தும்
நல்லார் தமைக்காண நாணுகின்றே னானாலும்
வல்லாய்நின் றன்னையன்றி மற்றொன் றறியேனான்
எல்லா மறிவாய்க் கிதனை யியம்பலென்னே. 3

கள்ளநெறி கொள்ளுங் கடைநாயே னென்னினுநின்
வள்ளன்மலர்த் தாளே வழுத்துகின்றே னென்னுடைய
உள்ள மெலிவோ டுடன்மெலிவுங் கண்டுமந்தோ
எள்ளளவு மெந்தா யிரங்கா திருந்தனையே. 4

சீர்துணையார் தேடுஞ் சிவனேநின் றன்னையன்றி
ஓர்துணையு மில்லேனின் னொண்பொற் பதமறிய
கார்துணையா நாடுங் கலாபியென நாடுகின்றேன்
ஆர்துணையென் றையா வகல விருந்தனையே. 5

பேயனையா ரோடும் பிழைபுரிந்தே னானாலும்
நாயனையே னின்னுடைய நாம நவிற்றுகின்றேன்
தீயனைய துன்பிற் றிகைக்கின்றேன் கண்டிருந்துந்
தாயனையாய் சற்றுந் தயவு புரிந்திலையே. 6

வெள்ள மருவும் விரிசடையா யென்னுடைய
உள்ள விரிவு முடன்மெலிவுங் கண்டிருந்துந்
தள்ளரிய நின்னருளோர் சற்றும் புரியாமே
கள்ளவினைக் கென்னுளத்தைக் கைகாட்டி நின்றனையே. 7

என்னுரிமைத் தாய்க்கு மினியாய்நின் னைந்தெழுத்தை
உன்னுநிலைக் கென்னை யுரித்தாக்க வேண்டுதியேன்
மன்னுலகிற் பொன்னுடையார் வாயிற்கண் காத்தயர்ந்தேன்
தன்னுடைய வெண்ணந் தனைமுடிக்க வேண்டுவதே. 8

குற்றமெலா நல்ல குணமாகக் கொண்டருளும்
உற்றதுணை நீயேமற் றோர்துணையு மில்லையென்றே
நற்றவமை யாமுனது நாமநவில் கின்றேன்
கற்றவனே யென்றனைநீ கைவிடிலென் செய்வேனே. 9

அறியாப் பருவத் தறிவுறுத்தி யாட்கொண்ட
நெறியானே நின்னாணை நின்னாணை நின்னாணை
பொறியார்நின் னாமம் புகலுவதே யன்றிமற்றை
வெறியார்வன் னாமமொன்றும் வேண்டேனான் வேண்டேனே.

திருச்சிற்றம்பலம்

Koviloor Digital Library

76. உய்கைத் திருப்பதிகம்

பொது

கலி விருத்தம்

திருச்சிற்றம்பலம்

திருவுஞ் சீருஞ் சிறப்புந் திறலுஞ்சற்
குருவுங் கல்வியுங் குற்றமில் கேள்வியும்
பொருவி லன்னையும் போக்கறு தந்தையுந்
தரும வெள்விடைச் சாமிநின் னுமையே. 1

பொய்ய னேன்பிழை யாவும்பொ றுத்தருள்
செய்ய வேண்டுநின் செம்பொற் பதமலால்
ஐய னேமுக்க ணுவிவ் வடியனேற்
குய்ய வேறு புகலிலை யுண்மையே. 2

கள்ள நெஞ்சக னேனுங் கடையனேன்
வள்ள னின்மலர் வார்கழற் பாதமே
உள்ளு வேன்மற்றை யோர்தெய்வ நேயமுங்
கொள்ள லேனென் குறிப்பறிந் தாள்கவே. 3

வஞ்ச மாதர் மயக்கங் கனவினும்
எஞ்சு றுதிதற் கென்செய்கு வேனென்றன்
நெஞ்ச மம்மய லீங்கிட வந்தெனைத்
தஞ்ச மென்றுன் சரண்தந்து காக்கவே. 4

பற்று நெஞ்சகப் பாதக னேன்செயுங்
குற்றம் யாவுங் குணமெனக் கொண்டருள்
உற்ற வெட்டுணை யேனு முதவுவாய்
கற்ற நற்றவ ரேத்துமுக் கண்ணனே. 5

மதியுங் கல்வியும் வாய்மையும் வண்மையும்
பதியு மீந்தெம் பசுபதி மெய்ந்நெறிக்
கதியின் வைப்பது நின்கடன் வன்கடல்
வதியு நஞ்ச மணிமணி கண்டனே. 6

நீடு வாழ்க்கை நெறிவரு துன்பினுல்
வாடு மென்னை வருந்தலென் றுன்பதம்
பாடும் வண்ணநற் பாங்கருள் வாய்மன்றுள்
ஆடு முக்க ணருட்பெரு வெள்ளமே. 7

சிந்தை நொந்திச் சிறிய வடியனேன்
எந்தை யென்றுனை யெண்ணிநிற் கின்றனன்
இந்து சேகர னேயுன்ற னின்னருள்
தந்து காப்பதுன் றன்கட னாகுமே. 8

Koviloor Digital Library

உன்னை நாடுமென் னுள்ளம் பிறரிடைப்
பொன்னை நாடும் புதுமையி தென்கொலோ
மின்னை நாடுநல் வேணிப்பி ரானிங்கே
என்னை நாடி யெனக்கருள் செய்கவே. 9

இழை பொறுத்த முலையவர்க் கேற்றவென்
பிழை பொறுப்பதுன் பேரருட் கேதகும்
மழை பொறுக்கும் வடிவுடை யோன்புகழ்
தழை பொறுக்குஞ் சடைமுடித் தந்தையே. 10

மூட னேன்பிழை முற்றும் பொறுத்துனைப்
பாட வேயருட் பாங்கெனக் கீதியேல்
நாட வேறு மனையிடை நண்ணிநான்
வாட வேண்டுவ தென்னையெம் வள்ளலே. 11

மின்னுப் பாகி விளங்கும் விரிசடை
என்னப் பாவெனக் கின்னரு ளீந்துநின்
பொன்னுப் பாந்துணைப் பூம்பதம் போற்றியே
உன்னப் பாங்கி னுயர்நெறி யுய்க்கவே. 12

திருச்சிற்றம்பலம்

77. ஆநந்தப் பதிகம்

திருவொற்றியூர்

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

குடிகொண் மலஞ்சூழ் நவவாயிற் கூட்டைக் காத்துக் குணமிலியாய்ப்
படிகொ ணடையிற் பரதவிக்கும் பாவியேனைப் பரிந்தருளிப்
பொடிகொள் வெள்ளை பூச்சணிந்த பொன்னே யுன்னைப் போற்றியொற்றிக்
கடிகொ ணகர்க்கு வரச்செய்தாய் கைம்மா றறியேன் கடையேனே. 1

சாதல் பிறத்த லெனுங்கடலிற் றாழ்ந்து கறைகா ணாதழுந்தி
ஈத லிரக்க மென்னளவு மில்லா தலையு மென்றனைநீ
ஓத லறிவித் துணர்வறிவித் தொற்றி யூர்ச்சென் றுனைப்பாடக்
காத லறிவித் தாண்டதற்கோர் கைம்மா றறியேன் கடையேனே. 2

அற்ப வளவு நிச்சயிக்க லாகா வுடம்பை யருமைசெய்து
நிற்ப தலதுன் பொன்னடியை நினையாக் கொடிய நீலனெனைச்
சற்ப வணியாய் நின்றனுற்றித் தலத்தைச் சார்ந்து நின்புகழைக்
கற்ப வருள்செய் தனையதற்கோர் கைம்மா றறியேன் கடையேனே. 3

உண்டு வறிய வொதிபோல வுடம்பை வளர்த்தூ னாதியமே
கொண்டு காக்கைக் கிறையாகக் கொடுக்க நினைக்குங் கொடியனெனை
விண்டு வறியா நின்புகழை விரும்பி யொற்றி யூரினினைக்
கண்டு வணங்கச் செய்ததற்கோர் கைம்மா றறியேன் கடையேனே. 4

Koviloor Digital Library

நாய்க்கு மெனக்கு மொப்பாரி நாடி யதற்கு விருந்திடுவான்
வாய்க்கு மொதிபோற் பொய்யுடலை வளர்க்க நினைக்கும் வஞ்சனெனை
ஆய்க்கு மினிய வப்பாவுன் னொற்றி யூரை யடைந்திருளைக்
காய்க்கும் வண்ணஞ் செய்ததற்கோர் கைம்மா றறியேன் கடையேனே. 5

குருதி நிறைந்த குறுங்குடத்தைக் கொண்டோன் வழியிற் சென்றிடவா
யெருதின் மனத்தேன் சுமந்துநல மிழந்து திரியு மெய்ப்பொழிய
வருதி யெனவே வழியருளி யொற்றி யூர்க்கு வந்துன்னைக்
கருதி வணங்கச் செய்ததற்கோர் கைம்மா றறியேன் கடையேனே. 6

பாவ மெனுமோர் பெருஞ்சரக்குப் பையை யெடுத்துப் பண்பறியாக்
கோவ மெனுமோர் குரங்காட்டுங் கொடியேன் றன்னைப் பொருட்படுத்தித்
தேவ ரமுதே சிவனேநின் றிருத்தா ளேத்த வொற்றியெனுங்
காவ னகரம் வரச்செய்தாய் கைம்மா றறியேன் கடையேனே. 7

பொள்ளற் குடத்திற் புலாலுடம்பைப் போற்றி வளர்த்துப் புலனிழந்தே
துள்ளற் கெழுந்த மனத்துடனே துள்ளி யலைந்த துட்டனெனை
உள்ளற் கறிவு தந்துன்ற னொற்றி யூர்க்கு வந்துவினைக்
கள்ளப் பகைநீக் கிடச்செய்தாய் கைம்மா றறியேன் கடையேனே. 8

கூட்டு மெலும்பாற் றசையதனாற் கோலும் பொல்லாக் கூரைதனை
நாட்டும் பரம வீடெனவே நண்ணி மகிழ்ந்த நாயேனை
ஊட்டுந் தாய்போ லுவந்துன்ற னொற்றி யூர்வந் துறநினைவு
காட்டுங் கருணை செய்ததற்கோர் கைம்மா றறியேன் கடையேனே. 9

ஊணத் துயர்ந்த பழுமரம்போ லொதிபோற் றுன்பைத் தாங்குகின்ற
தூணத் தலம்போற் சோரிமிகுந் தோலை வளர்த்த சுணங்கனெனை
மாணப் பரிவா லருட்சிந்தா மணியே யுன்றன் னொற்றிநகர்
காணப் பணித்த வருளினுக்கோர் கைம்மா றறியேன் கடையேனே. 10

புண்ணும் வழும்பும் புலானிரும் புழுவும் பொதிந்த பொதிபோல
நண்ணுங் கொடிய நடைமனையை நானென் றுளறு நாயேனை
உண்ணு மமுதே நீயமர்ந்த வொற்றி யூர்கண் டென்மனமுங்
கண்ணுங் களிக்கச் செய்ததற்கோர் கைம்மா றறியேன் கடையேனே. 11

திருச்சிற்றம்பலம்

Koviloor Digital Library

78. திருவண்ணப் பதிகம்

கோயில்

இரட்டைக் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

திருவண்ண நதியும்வளை யொருவண்ண மதியும்வளர்
செவ்வண்ண நண்ணு சடையுந்
தெருள்வண்ண நுதல்விழியு மருள்வண்ண வதனமுந்
திகழ்வண்ண வெண்ண கையுமோர்
மருள்வண்ண மணிகுழை மலர்வண்ண மிடறுமலை
மகள்வண்ண மருவு மிடமு
மன்வண்ண மிகுதுணைப் பொன்வண்ண வடிமலரு
மாணிக்க வண்ண வடிவும்
இருவண்ண வெனதுமன தொருவண்ண மாகியே
இடைவிடா தேத்தும் வண்ணம்
எவ்வண்ண மவ்வண்ண மிவ்வண்ண மென்றிவண்
இயம்பலுன் கருணை வண்ணங்
கருவண்ண மறவுளம் பெருவண்ண முறநின்று
கடல்வண்ண னெண்ணு மமுதே
கனகவம் பலநாத கருணையங் கணபோத
கமல குஞ்சித பாதனே. 1

என்னுறு விருப்பாதி வல்விலங் கினமெலாம்
இடைவிடா துழல வொளியோர்
எள்ளளவு மின்றியஞ் ஞானவிருண் மூடிட
இருண்டுயிர் மருண்டு மாழ்க
நண்ணுமன மாயையாங் காட்டைக் கடந்துநின்
ஞானவரு ளூட்டை யடையும்
நாளெந்த நாளந்த நாளிந்த நாளென்று
நாயினேற் கருள்செய் கண்டாய்
விண்ணுறு சுடர்க்கெலாஞ் சுடரளித் தொருபெரு
வெளிக்குள் வளர் கின்றசுடரே
வித்தொன்று மின்றியே விளைவெலாந் தருகின்ற
விஞ்ஞான மழைசெய் முகிலே
கண்ணுறு நுதற்பெருங் கடவுளே மன்றினிற்
கருணை நடமிடு தெய்வமே
கனகவம் பலநாத கருணையங் கணபோத
கமல குஞ்சித பாதனே. 2

Koviloor Digital Library

பூதநெறி யாதிவரு நாதநெறி வரையுமாப்
புகலுமூ வுலகு நீத்துப்
புரையுற்ற மூடமெனு மிருணில மகன்றுமேற்
போயரு ளொளித் துணையினல்
வேதநெறி புகல்சகல கேவலமி லாதபர
வெளிகண்டு கொண்டு கண்ட
வினைவின்றி நானின்றி வெளியின்றி வெளியாய்
விளங்குநா ளென்ற ருளுவாய்
வாதநெறி நடவாத போதநெறி யாளர்நிறை
மதிநெறி யுலாவு மதியே
மணிமிடற் றரசேயெம் வாழ்வின்முத லேயரு
மருந்தே பெருந் தெய்வமே
காதநெறி மணம்வீசு கவிதரு பொழிற்குலவு
கடிமதிற் றில்லை நகர்வாழ்
கனகவம் பலநாத கருணையங் கணபோத
கமல குஞ்சித பாதனே. 3

கூர்கொண்ட வாள்கொண்டு கொலைகொண்ட வேட்டுவக்
குடிகொண்ட சேரி நடுவிற்
குவைகொண்ட வொருசெல்வ னருமைகொண் டீன்றிடு
குலங்கொண்ட சிறுவ னொருவன்
ஏர்கொண்டு சென்றவர்கள் கைகொண் டுறக்கண்கள்
நீர்கொண்டு வாட லெனவே
நிலைகொண்ட நீயருட் கலைகொண் டளித்தயான்
நெறிகொண்ட குறித வறியே
போர்கொண்ட பொறிமுதற் புலைகொண்ட தத்துவப்
புரைகொண்ட மறவர் குடியாம்
பொய்கொண்ட மெய்யென்னு மைகொண்ட சேரியிற்
போந்துநின் றவர லைக்கக்
கார்கொண்ட விடியொலிக் கண்கொண்ட பார்ப்பிற்
கலங்கினே னருள்புரி குவாய்
கனகவம் பலநாத கருணையங் கணபோத
கமல குஞ்சித பாதனே. 4

படமெடுத் தாடுமொரு பாம்பாக வென்மனம்
பாம்பாட்டி யாக மாயைப்
பார்த்துக் களித்துதவு பரிசுடையர் விடயம்
படர்ந்த பிரபஞ்ச மாகத்
திடமடுத் துறுபாம்பி னுட்டமது கண்டஞ்சு
சிறுவன்யா னாக நின்றேன்
திரத்து ரந்தந்த வச்சந்த விர்த்திடு
திறத்தனீ யாகல் வேண்டும்

Koviloor Digital Library

விடமடுத் தணிகொண்ட மணிகண்ட னேவிமல
விஞ்ஞான மாம கண்ட
வீடளித் தருள்கருணை வெற்பனே யற்புத
விராட்டுருவ வேதார்த் தனே
கடமடுத் திடுகளிற் றுரிகொண் டணிந்தமெய்க்
கடவுளே சடைகொ ளரசே
கனகவம் பலநாத கருணையங் கணபோத
கமல குஞ்சித பாதனே. 5

எழுவகைப் பிறவிகளு ளெப்பிறவி யெய்துகினும்
எய்துக பிறப்பி லினிநான்
எய்தாமை யெய்துகினு மெய்திடுக விருமையினும்
இன்ப மெய்தினு மெய்துக
வழுவகைத் துன்பமே வந்திடினும் வருகமிகு
வாழ்வுவந் திடினும் வருக
வறுமைவரு கினும்வருக மதிவரினும் வருகவவ
மதிவரினும் வருக வுயர்வோ
டிழிவகைத் துலகின்மற் றெதுவரினும் வருகவல
தெது போகினும் போகநின்
இணையடிகள் மறவாத மனமொன்று மாத்திரம்
எனக்கடைதல் வேண்டு மரசே
கழிவகைப் பவரோக நீக்குநல் லருளெனுங்
கதிமருந் துதவு நிதியே
கனகவம் பலநாத கருணையங் கணபோத
கமல குஞ்சித பாதனே. 6

பற்றுவது பந்தமப் பற்றறுதல் வீடிஃது
பரம வேதார்த்த மெனவே
பண்புளோர் நண்பினொடு பகருவது கேட்டுமென்
பாவிமனம் விடய நடையே
எற்றுவது செய்யாம லெழுவதொடு விழுவதும்
இறங்குவது மேறு வதும்வீண்
எண்ணுவது நண்ணுவது மிப்புவன போகங்கள்
யாவினுஞ் சென்று சென்றே
சுற்றுவது மாகியோர் சற்றுமறி வில்லாது
சுழல்கின்ற தென்செய் குவேன்
தூயநின் றிருவருளி னன்றியிவ் வேழையச்
சுழன்மன மடக்க வருமோ
கற்றுவழு வற்றவர் கருத்தமர் கருத்தனே
கண்ணுதற் கடவுண் மணியே
கனகவம் பலநாத கருணையங் கணபோத
கமல குஞ்சித பாதனே. 7

Koviloor Digital Library

எளியனேன் சிறியன்யான் செய்பிழைகள் சிறியவோ!
எழுகடலி னும்பெரி யவே
என்செய்கே னென்செய்கே னினியாயி னுஞ்செயா
தெந்தைநினை யேத்த வென்றால்
வளியின்வான் சுழல்கின்ற பஞ்சாக நெஞ்சால்
மயங்குகின் றேனடிய னேன்
மனமெனது வசமாக நினதுவச னாகை
வந்தறிவு தந்தருளு வாய்
ஒளியினொளி யேநாத வெளியின்வெளி யேவிடய
உருவினுரு வேயுரு வினும்
உயிரினுயி ரேயுயர்கொ ளுணர்வினுணர் வேயுணர்வின்
உறவினுற வேயெ மிறையே
களியினிறை வேயளிகொள் கருணைநிதி யேமணிகொள்
கண்டவெண் டோட் கடவுளே
கனகவம் பலநாத கருணையங் கணபோத
கமல குஞ்சித பாதனே. 8

சந்ததமெ னக்குமகிழ் தந்தைநீ யுண்டுநின்
றன்னிடத் தேம வல்லி
தாயுண்டு நின்னடிய ரென்னுநற் றமருண்டு
சாந்தமெனு நேய ருண்டு
புந்திகொள் நிராசையா மனைவியுண் டறிவெனும்
புதல்வனுண் டிரவு பகலும்
போனவிட முண்டருட் பொருளுமுண் டானந்த
போகபோக் கியமு முண்டு
வந்தனைசெய் நீறெனுங் கவசமுண் டக்கமா
மணியுமுண் டஞ்செ ழுத்தாம்
மந்திரப் படையுண்டு சிவகதியெ னும்பெரிய
வாழ்வுண்டு தாழ்வு முண்டோ
கந்தமிகு கொன்றையொடு கங்கைவளர் செஞ்சடைக்
கடவுளே கருணை மலையே
கனகவம் பலநாத கருணையங் கணபோத
கமல குஞ்சித பாதனே. 9

நான்முகனு மாலுமடி முடியுமறி வரியபர
நாதமிசை யோங்கு மலையே
ஞானமய மானவொரு வானநடு வானந்த
நடனமிடு கின்ற வொளியே
மான்முகம் விடாதுழலு மெனையுமுயர் நெறி மருவ
வைத்தவண் வளர்த்த பதியே
மறைமுடிவி னிறைபரப் பிரமமே யாகம
மதிக்குமுடி வுற்ற சிவமே

Koviloor Digital Library

ஊன்முகச் செயல்விடுத் துண்முகப் பார்வையின்
உறுந்தவர் பெறுஞ் செல்வமே
ஒழியாத வுவகையே யழியாத வின்பமே
ஒன்றிரண் டற்ற நிலையே
கான்முகக் கடகளிற் றுரிகொண்ட கடவுளே
கண்கொண்ட நுதலண் ணலே
கனகவம் பலநாத கருணையங் கணபோத
கமல குஞ்சித பாதனே. 10

திருச்சிற்றம்பலம்

79. அம்மை திருப்பதிகம்

கோயில்

இரட்டைக் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

உலகினுயிர் வகையுவகை யுறவினிய அருளமுதம்
உதவு மாநந்த சிவையே
உவமைசொல் அரியவொரு பெரியசிவ நெறிதனை
உணர்த்துபே ரின்ப நிதியே
இலகுபர வபரநிலை யிசையுமவ ரவர்பருவம்
இயலுற வுளங்கொள் பரையே
இருமைநெறி யொருமையுற அருமைபெறு பெருமைதனை
ஈந்தெனை யளித்த அறிவே
கலகமுறு சகசமல இருளகல வெளியான
காட்சியே கருணை நிறைவே
கடகரட விமலகய முகவமுதும் அறுமுகக்
கனவமுது முதவு கடலே
அலகில்வள நிறையுமொரு தில்லையம் பதிமேவும்
அண்ணலார் மகிழு மணியே
அகிலாண்ட முஞ்சரா சரமுமீன் றருள்பரசி
வாநந்த வல்லி யுமையே. 1

கற்பவையெ லாங்கற்று ணுணர்பவையெ லாமனக்
கரிசற வுணர்ந்து கேட்டுக்
காண்பவையெ லாங்கண்டு செய்பவையெ லாஞ்செய்து
கருநெறி யகன்ற பெரியோர்
பொற்பவையெ லாஞ்சென்று புகல்பவையெ லாங்கொண்டு
புரிபவை யெலாம் புரிந்துன்
புகழவையெ லாம்புகழ்ந் துறுமவையெ லாமுறும்
போதவை யெலா மருளுவாய்

Koviloor Digital Library

நிற்பவையெ லாநிற்ப அசைபவையெ லாமசைய
நிறைவவை யெலாஞ்செய் நிலையே
நினைபவையெ லாநெகிழ நெறியவையெ லாமோங்கும்
நித்தியா நந்த வடிவே
அற்புடைய வடியர்புகழ் தில்லையம் பதிமருவும்
அண்ணலார் மகிழு மணியே
அகிலாண்ட முஞ்சரா சரமுமீன் றருள்பரசி
வாநந்த வல்லி யுமையே. 2

இக்கணமி ருந்தவிம் மெய்யென்ற பொய்க்கூரை
இனிவரு கணப்போ திலே
இடியாதி ருக்குமோ இடியுமோ வென்செய்கோம்
என்செய்கோ மிடியு மெனில்யாம்
தெக்கண நடக்கவரு மக்கணம் பொல்லாத
தீக்கண மிருப்ப தென்றே
சிந்தைநைந் தயராத வண்ணநல் லருள்தந்த
திகழ் பரம சிவசத்தியே
எக்கண்மு மேத்துமொரு முக்கணி பரம்பரை
இமாசல குமாரி விமலை
இறைவிபை ரவியமலை யெனமறைக ளேத்திட
இருந்தருள் தருந் தேவியே
அக்கணுத லெம்பிரான் றில்லையம் பதிமருவும்
அண்ணலார் மகிழு மணியே
அகிலாண்ட முஞ்சரா சரமுமீன் றருள்பரசி
வாநந்த வல்லி யுமையே. 3

பொய்யாத மொழியுமயல் செய்யாத செயலும்வீண்
போகாத நாளும் விடயம்
புரியாத மனமுமுட் பிரியாத சாந்தமும்
புந்தி தளராத நிலையும்
எய்யாத வாழ்வும்வே றெண்ணாத நிறைவுநினை
என்றுமற வாத நெறியும்
இறவாத தகவுமேற் பிறவாத கதியுமிவ்
வேழையேற் கருள்செய் கண்டாய்
கொய்யாது குவியாது குமையாது மணம்வீசு
கோமளத் தெய்வ மலரே
கோவாத முத்தமே குறையாத மதியமே
கோடாத மணிவி ளக்கே
ஐயாந நங்கொண்ட தில்லையம் பதிமருவும்
அண்ணலார் மகிழு மணியே
அகிலாண்ட முஞ்சரா சரமுமீன் றருள்பரசி
வாநந்த வல்லி யுமையே. 4

Koviloor Digital Library

பவமான வெழுகடல் கடந்துமேற் கதியான
பதிநிலை யணைந்து வாழப்
பகலான சகலமுட னிரவான கேவலப்
பகையுந் தடாத படியோர்
தவமான கலனினருண் மீகாம னுலைது
தமியே னடத்த வருமோ
தானு நடக்குமோ வென்செய்கே னின்றிருச்
சரணமே சரண மருள்வாய்
உவமாந மற்றபர சிவமான சுத்தவெளி
உறவான முத்த ருறவே
உருவான வருவான வொருவான ஞானமே
உயிரான வொளியி னுணர்வே
அவமாந நீக்கியருள் தில்லையம் பதிமருவும்
அண்ணலார் மகிழு மணியே
அகிலாண்ட முஞ்சரா சரமுமீன் றருள்பரசி
வாநந்த வல்லி யுமையே. 5

சூரிட்ட நடையிலென் போரிட்ட மனதைநான்
சொல்லிட்ட மூடன னைத்துத்
துன்றிட்ட மோநமெனு நன்றிட்ட வமுதுண்டு
சும்மா விருத்தி யென்றுற்
காரிட்டி தற்குமுன் யாரிட்ட சாபமோ
கண்டிலே னம்மம்ம வோர்
கணமேனு நில்லாது பொல்லாது புவியிற்
கறங்கெனச் சுழல்கின் றதே
தாரிட்ட நீயருட் சீரிட்டி டாயெனிற்
றும்பிறவி தன்னி லதுதான்
தன்னைவீழ்த் துவதன்றி யென்னையும் வீழ்த்துமித்
தமியனே னென்செய் குவேன்
ஆறிட்ட சடையாளர் தில்லையம் பதிமருவும்
அண்ணலார் மகிழு மணியே
அகிலாண்ட முஞ்சரா சரமுமீன் றருள்பரசி
வாநந்த வல்லி யுமையே. 6

மாயையெனு மிரவிலென் மனையகத் தேவிடய
வாதனையெ னுங்கள் வர்தாம்
வந்துமன வடிமையை யெழுப்பியவ னைத்தமது
வசமாக வுளவு கண்டு
மேயமதி யெனுமொரு விளக்கினைய வித்தெனது
மெய்ந்நிலைச் சாளிகை யெலாம்
வேறுற வுடைத்துள்ள பொருளெலாங் கொள்ளைகொள
மிகநடுக் குற்று நினையே

Koviloor Digital Library

நேயமுற வோவாது கூவுகின் றேன்சற்றும்
நின்செவிக் கேற விலையோ
நீதியிலை யோதரும நெறியுமிலை யோவருளின்
நிறைவுமிலை யோவென் செய்கேன்
ஆயமறை முடிநின்ற தில்லையம் பதிமருவும்
அண்ணலார் மகிழு மணியே
அகிலாண்ட முஞ்சரா சரமுமீன் றருள்பரசி
வாநந்த வல்லி யுமையே. 7

வெவ்வினைக் கீடான காயமிது மாயமென
வேதமுத லாகம மெலாம்
மிகுபறைய றைந்துமிது வெயின்மஞ்ச ணிறமெனும்
விவேகர்சொற் கேட்ட றிந்தும்
கவ்வைபெறு கடலுலகில் வைரமலை யொத்தவர்
கணத்திடை யிறத்தல் பலகாற்
கண்ணுறக் கண்டுமிப் புலையுடலின் மாநமோர்
கடுவளவும் விடுவ தறியேன்
எவ்வமுறு சிறியனே னேழைமதி யென்னமதி
இன்னமதி யென்றுணர் கிலேன்
இந்தமதி கொண்டுநா னெந்தவகை யழியாத
இன்பநிலை கண்டு மகிழ்வேன்
அவ்வியம கற்றியருள் தில்லையம் பதிமருவும்
அண்ணலார் மகிழு மணியே
அகிலாண்ட முஞ்சரா சரமுமீன் றருள்பரசி
வாநந்த வல்லி யுமையே. 8

ஒளிமருவு முனதுதிரு வருளனுத் துணையேனும்
உற்றிடிற் சிறு துரும்பும்
உலகம் படைத்தன்முதன் முத்தொழிலி யற்றுமென
உயர்மறைக ளோர நந்தந்
தெளிவுறமு ழக்கவது கேட்டுநின் றிருவடித்
தியாநமில் லாம லவமே
சிறுதெய்வ நெறிசெல்லு மாநிடப் பேய்கள்பாற்
சேராமை யெற்க ருளுவாய்
களிமருவு மிமயவரை யரையன்மக ளெனவருங்
கருணைதரு கலப மயிலே
கருதுமடி யவரிதய கமலமலர் மிசையருட்
கலைகிளர வள ரன்னமே
அளிநறைகொ ளிதழிவனை தில்லையம் பதிமருவும்
அண்ணலார் மகிழு மணியே
அகிலாண்ட முஞ்சரா சரமுமீன் றருள்பரசி
வாநந்த வல்லி யுமையே. 9

Koviloor Digital Library

நீறணிந் தொளிரக்க மணிதரித் துயர்சைவ
நெறிநின்று னக்கு ரியவோர்
நிமலமுறு மைந்தெழுத் துண்ணிலையு றக்கொண்டு
நின்னடிப் பூசை செய்து
வீறணிந் தென்றுமொரு தன்மைபெறு சிவஞான
வித்தகர்ப தம்பர வுமோர்
மெய்ச்செல்வ வாழ்க்கையில் விருப்பமுடை யேனிது
விரைந்தருள வேண்டு மமுதே
பேறணிந் தயன்மாலு மிந்திரனு மறிவரிய
பெருமையை யணிந்த வமுதே
பிரசமலர் மகள்கலைசொன் மகள்விசய மகண்முதற்
பெண்கள்சிர மேவு மணியே
ஆறணிந் திடுசடை யர் தில்லையம் பதிமருவும்
அண்ணலார் மகிழு மணியே
அகிலாண்ட முஞ்சரா சரமுமீன் றருள்பரசி
வானந்த வல்லி யுமையே. 10

திருச்சிற்றம்பலம்

சிவகாம வல்லி தோத்திரம்

எண்சீரடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

அரங்காய மனமாயை யளக்க ராழும்
அறியாமற் காலிட்டிங் கழுந்து கின்றேன்
இரங்காயோ சிறிதுமுயி ரிரக்க மில்லா
என்மனமோ நின்மனமும் இறைவி யுன்றன்
உரங்காணு மரசியற்கோல் கொடுங்கோ லானல்
ஒடியெங்கே புகுந்தெவருக் குரைப்ப தம்மா
திரங்காணுப் பிள்ளையெனத் தாய் விடாளே
சிவகாம வல்லியெனுந் தெய்வத் தாயே. 1

அறுசீரடி ஆசிரிய விருத்தம்

திருவே திகழுங் கலைமகளே திருவே மலையான் திருமகளே
உருவே யிச்சை மயமேமெய் புணர்வின் வனமே யுயரின்பக்
குருவே யாதித் தனித்தாயே குலவும் பரையாம் பெருந்தாயே
மருவே மலரே சிவகாம வல்லி மணியே வந்தருளே. 2

அருளே யறிவே யன்பேதெள் ளமுதே மாத ரரசேமெய்ப்
பொருளே தெருளே மாற்றறியாப் பொன்னே மின்னே பூங்கிளியே
இருளேய் மனத்தி லெய்தாத வின்பப் பெருக்கே யிவ்வடியேன்
மருளே தவிர்த்த சிவகாம வல்லி நினக்கே வந்தனமே. 3

Koviloor Digital Library

கலித்துறை

தருவாயிது நற்றருணங் கண்டா யென்னைத் தாங்கிக்கொண்ட
குருவாய் விளங்கு மணிமன்ற வாணனைக் கூடியின்ப
உருவாயென் னுள்ளத்தி னுள்ளே யமர்ந்துள்ள வுண்மையெலாந்
திருவாய் மலர்ந்த சிவகாம வல்லிநின் சீரருளே. 4

அறுசீரடி ஆசிரிய விருத்தம்

தனத்தா லியன்ற தனிச்சபையி னடிக்கும் பெருமான் றனக்கன்றே
இனத்தா லுயர்ந்த மணமாலை யிட்டுக் களித்த துரைப்பெண்ணே
மனத்தான் விளங்குஞ் சிவகாம வல்லிக் கனியே மாலொடுமோர்
அனத்தால் புகழ மம்மேயிவ் வடியே னுனக்கே யடைக்கலமே. 5

திருச்சிற்றம்பலம்

80. கலைமகளார் திருப்பதிகம்

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்
திருச்சிற்றம்பலம்

தவளமலர்க் கமலமிசை வீற்றிருக்கு மம்மனையைச் சாந்தம் பூத்த
குவளைமலர்க் கண்ணாளைப் பெண்ணாளும் பெண்ணமுதைக் கோதி லாத
பவளவிதழ்ப் பசுங்கொடியை நான்முகனார் நாவோங்கும் பாவை தன்னைக்
கவளமத கயக்கொம்பின் முலையாளைக் கலைமாதைக் கருது வோமே. 1

சங்கம்வளர்ந் திடவளர்ந்த தமிழ்க்கொடியைச் சரச்சுவதி தன்னை யன்பர்
துங்கமுறக் கலைபயிற்றி யுணர்வளிக்குங் கலைஞானத் தோகை தன்னைத்
திங்களுதற் றிருவையருட் குருவைமல ரோங்கியபெண் தெய்வந் தன்னைத்
தங்கமலை முலையாளைக் கலையாளைத் தொழுதுபுகழ் சாற்று கிற்பாம். 2

கலைபயின்ற வுளத்தினிக்குங் கரும்பினைமுக் கனியையருட் கடலை யோங்கும்
நிலைபயின்ற முனிவரருந் தொழுதேத்த நான்முகனார் நீண்ட நாவிற்
றலைபயின்ற மறைபயின்று மூவுலகுங் காக்கின்ற தாயை வாகைச்
சிலைபயின்ற நுதலாளைக் கலைவாணி யம்மையைநாஞ் சிந்திப் போமே. 3

வெண்பா

அன்பர்பா னீங்காவெ னம்மையே தாமரைமேற்
பொன்பொருவு மேனியயன் பூவின் — மன்பெரிய
வாக்கிறைவி நின்றாண் மலர்ச்சரணம் போந்தேனைக்
காக்கக் கடனுனக்கே காண். 4

திருச்சிற்றம்பலம்

Koviloor Digital Library

81. போற்றித் திருப்பதிகம்

பொது

எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

அருள்தரல் வேண்டும் போற்றியென் னரசே
அடியனேன் மனத்தகத் தெழுந்த
இருள்கெடல் வேண்டும் போற்றியெந் தாயே
ஏழையே னின்றனைப் பாடுந்
தெருளுறல் வேண்டும் போற்றியென் னறிவே
சிந்தைநைந் துலகிடை மயங்கும்
மருளறல் வேண்டும் போற்றியென் குருவே
மதிநதி வளர்சடை மணியே. 1

மணிமிடற் றமுதே போற்றியென் றன்னை
வாழ்விக்க வேண்டுவல் போற்றி
அணிமதி முடியோய் போற்றியிவ் வேழைக்
கருளமு தருளுக போற்றி
பணியணி புயத்தோய் போற்றிநின் சீரே
பாடுதல் வேண்டுநான் போற்றி
தணிவில்பே ரொளியே போற்றியென் றன்னைத்
தாங்குக போற்றி நின்பதமே. 2

நின்பதம் பாடல் வேண்டுநான் போற்றி
நீறுபூத் தொளிர்குளிர் நெருப்பே
நின்புகழ் கேட்டல் வேண்டுநான் போற்றி
நெற்றியங் கண்கொளு நிறைவே
நின்வச மாதல் வேண்டுநான் போற்றி
நெடியமால் புகழ்தனி நிலையே
நின்பணி புரிதல் வேண்டுநான் போற்றி
நெடுஞ்சடை முடித்தயா நிதியே. 3

நிதிதரு நிறைவே போற்றியென் னுயிர்க்கோர்
நெறிதரு நிமலமே போற்றி
மதிமுடிக் கனியே போற்றியென் றன்னை
வாழ்வித்த வள்ளலே போற்றி
விதிமுதற் கிறையே போற்றிமெய்ஞ் ஞான
வியனெறி விளக்கமே போற்றி
பதிபசு பதியே போற்றிநின் பாதம்
பாடவெற் கருளுக போற்றி. 4

போற்றியென் னுயிர்க்கோ ரின்பமே யன்பர்
புரிதவக் காட்சியே போற்றி
போற்றியென் னன்பாந் தெய்வமே சைவம்
புகல்சிவ போகமே போற்றி

Koviloor Digital Library

போற்றியென் பெரிதாஞ் செல்வமே கருணைப்
பூரண வெள்ளமே போற்றி
போற்றியென் வாழ்வுக் கொருபெரு முதலே
போற்றிநின் சேவடிப் போதே. 5

போத வானந்த போகமே யென்னைப்
புறம்விட நினைத்திடேல் போற்றி
சீதவான் பிறைசேர் செஞ்சடை யாயென்
சிறுமைதீர்த் தருளுக போற்றி
பேதமொன் றில்லா வருட்கட லேயென்
பிழையெலாம் பொறுத்தருள் போற்றி
வேதமெய்ப் பொருளே போற்றிநின் னல்லால்
வேறெனக் கிலையருள் போற்றி. 6

போற்றுவா ருள்ளம் புகுந்தொளி ரொளியே
போற்றிநின் பூம்பதம் போற்றி
ஆற்றுவார் சடையென் னப்பனே போற்றி
அமலநின் னடிமலர் போற்றி
ஏற்றுவார் கொடிகொள் ளெந்தையே போற்றி
இறைவநின் னிருங்கழல் போற்றி
சாற்றுமா றரிய பெருமையே போற்றி
தலைவநின் றாட்டுணை போற்றி. 7

துணைமுலை மடந்தை யெம்பெரு மாட்டி
துணைவநின் றுணையடி போற்றி
புணையென விடரின் கடலினின் றேற்றும்
புனிதநின் பொன்னடி போற்றி
இணையில்பே ரின்ப வமுதருள் கருணை
யிறைவநின் னிணையடி போற்றி
கணையெனக் கண்ணன் றனைக்கொளு மொருமுக்
கண்ணநின் கழலடி போற்றி. 8

அடியனேன் பிழைகள் பொறுத்தருள் போற்றி
அயலெனை விட்டிடேல் போற்றி
கொடியனேற் கின்பந் தந்தருள் போற்றி
குணப்பெருங் குன்றமே போற்றி
நெடியவென் றுன்பந் தொடைத்தருள் போற்றி
நினையலாற் பிறிதிலேன் போற்றி
படிமிசைப் பிறர்பாற் செலுத்திடே லெங்கள்
பரமநின் னடைக்கல நானே. 9

நான்செயும் பிழைகள் பலவுநீ பொறுத்து
நலந்தரல் வேண்டுவன் போற்றி
ஏன்செய்தா யென்பா ரில்லைமற் றெனக்குன்
இன்னருள் ஞெக்கஞ்செய் போற்றி

Koviloor Digital Library

ஊன்செய்நா வாலுன் னைந்தெழுத் தெளியேன்
ஓதநீ யுவந்தருள் போற்றி
மான்செயு நெடுங்கண் மலைமக ளிடங்கொள்
வள்ளலே போற்றிநின் னருளே. 10

திருச்சிற்றம்பலம்

82. விண்ணப்பப் பதிகம்

திருவாரூர்

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

தண்ணார் மதிபோற் சீதளவெண் டரளக் கவிகைத் தனிநிழற்கீழ்க்
கண்ணார் செல்வச் செருக்கினர்தங் களிப்பிற் சிறிய கடைநாயேன்
பெண்ணார் பாகப் பெருந்தகைதன் பெரிய கருணைக் குரியமென்றே
எண்ணா நின்று களிக்கின்றே னாரூ ரெந்தா யிரங்காயே. 1

இரங்கா திருந்தாற் சிறியேனை யாரே மதிப்பா ரிழிந்தமனக்
குரங்கா லலைப்புண் டலைகின்ற கொடிய பாவி யிவனென்றே
உரங்கா தலித்தோர் சிரிப்பார்நா னுலகத் துயர நடிக்கின்ற
அரங்காக் கிடப்பே னென்செய்வே னாரூ ரமர்ந்த வருமணியே. 2

மணியார் கண்டத் தெண்டோட்செவ் வண்ணப் பவள மாமலையே
அணியால் விளங்குந் திருவாரூர் ஆரா வமுதே யடிச்சிறியேன்
தணியா வுலகச் சழக்கிடையே தளர்ந்து கிடந்து தவிக்கின்றேன்
திணியார் முருட்டுக் கடைமனத்தேன் செய்வ தொன்றுந் தெரியேனே.

தெரியத் தெரியுந் தெரிவுடையார் சிவாநு பவத்திற் சிறக்கின்றார்
பிரியப் பிரியும் பெரும்பாவி யடியேன் பிழையிற் பிழைக்கின்றேன்
துரியப் பொருளே யணியாரூர்ச் சோதி மணிநீ தூயவருள்
புரியப் பெறுவே னெனிலவர்போல் யானுஞ் சுகத்திற் பொலிவேனே. 4

பொலிவேன் கருணை புரிந்தாயேற் போதா னந்தக் கடலாடி
மலிவே னின்ப மயமாவே னாரூர் மணிநீ வழங்காயேல்
மெலிவேன் றுன்பக் கடன்மூழ்கி மேவியெடுப்பா ரில்லாமல்
நலிவே னந்தோ வந்தோநின் னல்ல கருணைக் கழகன்றே. 5

கருணைக் கடலே திருவாரூர்க் கடவுட் சுடரே நின்னுடைய
அருணக் கமல மலரடிக்கே யடிமை விழைந்தே னருளாயேல்
வருணக் கொலைமா பாதகனா மறையோன் றனக்கு மகிழ்ந்தன்று
தருணக் கருணை யளித்தபுக ழென்னா மிந்நாள் சாற்றுகவே. 6

இந்நா ளடியேன் பிழைத்தபிழை யெண்ணி யிரங்கா யெனிலந்தோ
அந்நா ளடிமை கொண்டனையே பிழையா தொன்று மறிந்திலையோ
பொன்னார் கருணைக் கடலின்று புதிதோ பிறர்பாற் போயிற்றோ
என்னா யகனே திருவாரூ ரெந்தா யுள்ள மிரங்கிலையே. 7

Koviloor Digital Library

உள்ளக் கவலை யொருசிறிது மொருநா ளேனு மொழிந்திடவும்
வெள்ளக் கருணை யிறையேனு மேவி யிடவும் பெற்றறியேன்
கள்ளக் குரங்கா யுழல்கின்ற மனத்தே னெனினுங் கடையேனைத்
தள்ளத் தகுமோ திருவாரூ ரெந்தா யெந்தாய் தமியேனே. 8

எந்தா யொருநா ளருள்வடிவி னெளியேன் கண்டு களிப்படைய
வந்தா யந்தோ கடைநாயேன் மறந்து விடுத்தேன் மதிகெட்டேன்
செந்தா மரைத்தா ளிணையன்றே சிக்கென் றிறுகப் பிடித்தேனேல்
இந்தார் சடையாய் திருவாரூ ரிறைவா துயரற் றிருப்பேனே. 9

இருப்பு மனத்துக் கடைநாயே னென்செய் வேனின் றிருவருளாம்
பொருப்பி லமர்ந்தா ரடியரெலா மந்தோ வுலகப் புலையொழுக்காந்
திருப்பிற் சுழன்று நானொருவன் றிகைக்கின் றேனோர் துணைகாணேன்
விருப்பிற் கருணை புரிவாயோ வாரூர் தண்ணார் வியனமுதே. 10

திருச்சிற்றம்பலம்

83. தரிசனப் பதிகம்

கோயில்

எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

திருவார் பொன்னம் பலநடுவே தெள்ளா ரமுதத் திரளனைய
உருவா ரறிவா னந்தநட முடையா ரடியார்க் குவகைநிலை
தருவா ரவர்தந் திருமுகத்தே ததும்பும் மிளவெண் ணகைகண்டேன்
இருவா தனையற் றந்தோநா னின்னு மொருகாற் காண்பேனோ. 1

பொன்னா யகனும் புரந்தரனும் பூவாழ் பவனும் புகழ்ந்தேத்த
மின்னார் பொன்னம் பலநடுவே விளங்குங் கருணை விழிவழங்கும்
அன்னா ரறிவா னந்தநட மாடுங் கழல்கண் டகங்குளிர்ந்தேன்
என்னா யகனா ரவர்கழலை யின்னு மொருகாற் காண்பேனோ. 2

தாயிற் பெரிய கருணையினார் தலைமா லையினார் தாழ்சடையார்
வாயிற் கினிய புகழுடைய வள்ள லவர்தந் திருவழகை
கோயிற் கருகே சென்றுமனங் குளிரக் கண்டேன் பிரிவுற்றேன்
ஈயிற் சிறியே னவரழகை யின்னு மொருகாற் காண்பேனோ. 3

புன்கண் ணகற்று மெய்யடியார் போற்றும் பொன்னம் பலநடுவே
வன்கண் ணறியார் திருநடஞ்செய் வரத ரமுதத் திருமுகத்தை
முன்கண் ணுலகிற் சிறியேன்செய் முழுமா தவத்தாற் கண்டேனென்
என்கண் ணனையா ரவர்முகத்தை யின்னு மொருகாற் காண்பேனோ. 4

அன்புற் றடியார் தொழுதேத்த வணியார் மணிப்பொன் னம்பலத்தே
வன்புற் றழியாப் பெருங்கருணை மலையார் தலையார் மாலையினார்
மன்புற் றரவார் கச்சிடையின் வயங்க நடஞ்செய் வதுகண்டேன்
இன்புற் றடியே னவர்நடத்தை யின்னு மொருகாற் காண்பேனோ. 5

இம்மா நிலத்திற் சிவபதமீ தென்னும் பொன்னம் பலநடுவே
அம்மா லறியா வடிகளடி யசைய நடஞ்செய் வதுகண்டேன்
எம்மா லறியப் படுவதல வென்னென் றுரைப்பே னேழையன்யான்
எம்மா னவர்தந் திருநடத்தை யின்னு மொருகாற் காண்பேனோ. 6

சிறியேன் றவமோ வெனையீன்றார் செய்த தவமோ யானறியேன்
மறியேர் கரத்தா ரம்பலத்தே வாழுஞ் சிவனார் தமைக்கண்டேன்
பிறியே னெனினும் பிறிந்தேனான் பேயே னந்தப் பிறிவினைக்கீழ்
எறியே னந்தோ வவர்தம்மை யின்னு மொருகாற் காண்பேனோ. 7

அருளே வடிவா யம்பலத்தே யாடும் பெருமா னடிகள்தமைத்
தெருளே வடிவா மடியவர்போற் சிறியேன் கண்டேன் சீருற்றேன்
மருளே வடிவே னாதலினான் மறந்தே பிரிந்தே மதிகெட்டேன்
இருளேர் மனத்தே னவர்தமைநா னின்னு மொருகாற் காண்பேனோ. 8

அன்னோ திருவம் பலத்தேயெம் மைய ருருக்கண் டேனதுதான்
பொன்னோ பவளப் பொருப்பதுவோ புதுமா ணிக்க மணித்திரளோ
மின்னோ விளக்கோ விரிசுடரோ மேலை யொளியோ வென்னுரைப்பேன்
என்னோ வவர்தந் திருவுருவை யின்னு மொருகாற் காண்பேனோ. 9

பொன்னென் றுரைக்கு மம்பலத்தே புனித னார்தம் மழகியலை
உன்னென் றுரைப்பே னென்னேயென் னுள்ளஞ் சிறிது முணர்ந்ததிலை
மின்னென் றுரைக்கும் படிமூன்று விளக்கு மழுங்கு மெனிலடியேன்
என்னென் றுரைப்பே னவரழகை யின்னு மொருகாற் காண்பேனோ.

திருச்சிற்றம்பலம்

84. அபராத விண்ணப்பம்

கோயில்

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

உலகம் பரவும் பொருளேயென் னுறவே யென்ற னுயிர்க்குயிரே
இலகம் பரத்தே பரம்பரமா யின்ப நடஞ்செ யெம்மிறையே
கலகம் பரவு மனத்தேனைக் கைவிட் டிடநீ கருதுதியோ
திலகம் பரவு நுதற்பாக னென்ப தருளின் றிறத்தன்றே. 1

அன்றோர் பொருளா யடியேனை யாட்கொண் டருளி யறிவளித்தாய்
இன்றோ சிறியேன் பிழைகருதி யிரங்கா தகற்ற வெண்ணுதியோ
குன்றோ ரனைய குறைசெயினுங் கொண்டு குலம்பே சுதலெந்தாய்
நன்றோ கருணைப் பெருங்கடலே யாளா யிந்த நாயினையே. 2

நாய்க்குங் கடையேன் பிழையனைத்து நாடிற் றவத்தா னல்கியநற்
றாய்க்குங் கோப முறுமென்னில் யாரே யென்பாற் சலியாதார்
வாய்க்குங் கருணைக் கடலுடையா யுன்பா லடுத்தேன் வலிந்தெளிய
பேய்க்குந் தயவு புரிகின்றோ யாள வேண்டும் பேதையையே. 3

Koviloor Digital Library

பேதைப் பருவத் தெனைவலியப் பிடித்தாட் கொண்ட பெருமானே
போதைக் கழிப்பான் வீண்புரியும் புலையேன் பிழையைப் பொறுக்கிலையேல்
வாதைப் படுமென் னுயிரையுன்றன் மலர்த்தாண் முன்னர் மடிவித்தே
ஓதைக் கடல்சூ ழுலகத்தே பழிசூழ் விப்பே னுரைத்தேனே. 4

உரைத்தார் சிலர்சின் னுட்கழிய வுறுவே மென்ன வுரைத்தவரே
நரைத்தா ரிறந்தா ரவர்தம்மை நான்கண் டிருந்து நாணுமே
விரைத்தாண் மலரைப் பெறலாமென் றெண்ணி வீணே விளைக்கின்றேன்
திரைத்தாழ் கடலிற் பெரும்பிழையே செய்தே னென்ன செய்வேனே.

செய்வேன் றீமை நலமொன்றும் தெரியேன் றெரிந்து தெளிந்தோரை
வைவே னன்றி வாழ்த்தேனென் வெண்ண மிந்த வண்ணமெனில்
உய்வே னென்ப தெவ்வாறென் னுடையா யுய்வே னுய்வித்தால்
நைவே னலதிங் கென்செய்வே னந்தோ வெண்ணி நலிவேனே. 6

எண்ணி நலிவே னின்பாத மெந்நா ளடைவோ மெனவென்பால்
நண்ணி நலிவைத் தவிராயே லென்செய் திடுவே னாயகனே
கண்ணி நலியப் படும்பறவைக் கால்போன் மனக்கால் கட்டுண்ணப்
பண்ணி நலஞ்சேர் திருக்கூட்டம் புகுத வெனினும் பரிந்தருளே. 7

பரியு மனத்தாற் கருணைநடம் பரவுந் தொண்டர் பதப்பணியே
புரியு மினத்தா ரொடுங்கூடிப் புனித னாகை வேண்டுமெனத்
திரியு மடிமைச் சிறியேனுக் கிரங்கா திருந்தாற் சின்னாட்பின்
எரியுங் கொடுவாய் நரகத்துக் கென்செய் வேனென் செய்வேனே. 8

என்செய் திடுவேன் புலைநாயே னியற்றும் பிழைக ளெல்லாநின்
பொன்செய் மலர்த்தாட் டுணையந்தோ பொறுத்துக் கருணை புரியாதேற்
புன்செய் விளைவிப் பயனிலியாய்ப் புறத்திற் கிடத்தி யெனவடியார்
வன்செ யுரையிற் சிரிப்பார்மற் றதுகண் டெங்ஙன் வாழ்வேனே. 9

வாழா மனத்தின் வழிசென்று வாளா நாளைக் கழிக்கின்ற
பாழா முலகச் சிறுநடையிற் பாவி யேனைப் பதிவித்தாய்
ஊழா மொளியெம் பெருமானே யின்னும் வினையா லொதியனையேன்
ஏழா நரகுக் காளாவே னல்லாற் புகலென் னெளியேற்கே. 10

எளியேன் கருணைத் திருநடஞ்செ யிணைத்தாண் மலர்கண் டிதயமெலாங்
களியேன் கருங்கற் பாறையெனக் கிடக்கின் றேனிக் கடையேனை
அளியே பெருக வாளுதியோ வாள்கி லாயோ யாதொன்றுந்
தெளியே னந்தோ வந்தோவென் செய்வேன் விலங்கிற் சிறியேனே.

சிறியேன் பிழையைத் திருவுளத்தே தேர்ந்திங் கென்னைச் சீறுதியோ
வெறியே மெனக்கொண் டிரங்குதியோ விவ்வா றவ்வா றெனவொன்றும்
அறியே னவலக் கடலழுந்தி யந்தோ வழுங்கி யயர்கின்றேன்
பிறியே னென்னைப் பிரிக்கினும்பின் றுணையுங் காணேன் பெருமானே.

Koviloor Digital Library

காணே னினது திருவருளைக் கண்டார் தமது கழறலைமேற்
பூணே னுலகச் சிறுநடையிற் போந்து பொய்யே புகன்றந்தோ
வீணே சுழன்று மெலிகின்றே னென்னே யின்னன் மிகச்சுமக்குந்
தூணே யெனவிங் கெனைவிதித்தா யெந்தா யாது சூழ்வேனே. 13

சூழ்வே னினது கருணைநடஞ் சூழும் பெரியார் தமைச்சூழ்ந்து
வாழ்வே னெளியேன் குறிப்பிந்த வண்ண மெனது மனக்குரங்கோ
தாழ்வே னினையுந் தாழ்விப்பே னவலக் கடலிற் சலியாமே
வீழ்வே னென்றா லெம்பெருமா னிதற்கென் செய்கேன் வினையேனே.

வினையே பெருக்கிக் கடைநாயேன் விடயச் செருக்கான் மிகநீண்ட
பனையே யெனநின் றுலர்கின்றேன் பாவி யேனுக் கருளுதியோ
நினையே நினையாப் பிழைகருதி நெகிழ விடவே நினைதியோ
அனையே யனையாய் திருக்குறிப்பை யறியே னீதென் றடியேனே. 15

அடியேன் முடுகிச் செயும்பிழைக ளனந்த மவற்றை யந்தோவிக்
கொடியே னினைக்குந் தொறுமுள்ளங் குமைந்து நடுங்கிக் குலைகின்றேன்
செடியேன் மனமோ வினையோநின் செயலோ செய்கை தெரியேன்வெண்
பொடியே திகழும் வடிவுடையா யாது புரிவேன் புலையேனே. 16

புலையே புரியு மனம்போன போக்கே யல்லாற் புண்ணியநன்
னிலையே யறியேன் சிறியேனுக் கருள லழகோ நிறைந்தகுண
மலையே மணியே மருந்தேயென் வாழ்வே யெல்லாம் வல்லோனே
கலையே கருதுங் கழலுடையா யருளா மையுநின் கடனன்றே. 17

கடந்தாழ் கயம்போற் செருக்கிமயற் கடலி லழுந்திக் கடுவினையேன்
மடந்தாழ் மனத்தோ டுலைகின்றேன் கரைகண் டேறும் வகையறியேன்
தொடர்ந்தா ரெடுப்பா ரெனையெடுக்குந் துணைநின் மலர்த்தாட் டுணைகண்டாய்
அடர்ந்தார் தமக்கு மருள்கின்றோ யாணை யாணை யடியேனே. 18

அடியா ரின்ப மடைகின்றா ரடியே னொருவ னயர்கின்றேன்
படியார் பலரும் பலபேசிச் சிரியா நின்றார் பரந்திரவும்
விடியா நின்ற தென்புரிவே னின்னுங் கருணை விளைத்திலையே
கொடியார் பிழையுங் குணமாகக் கொண்டு மகிழுங் குணக்குன்றே. 19

குன்றா நிலைநின் றருளடைந்தா ரன்ப ரெல்லாங் கொடியேனான்
நன்று நெறிசென் றறியாதே மனஞ்செல் வழியே நடக்கின்றேன்
பொன்று மணியே யவர்க்கருளி யென்னை விடுத்தல் புகழன்றே
என்றா லெனக்கே நகைதோன்று மெந்தா யுளத்துக் கென்னாமே. 20

என்னா ருயிருக் குயிரனையா யென்னைப் பொருளா யெண்ணிமகிழ்ந்
தந்நா ளடிமை கொண்டளித்தா யார்க்கோ வந்த விருந்தெனவே
இந்நா ளிரங்கா திருக்கின்றா யெங்கே புகுவே னென்புரிவேன்
நின்னா லன்றிப் பிறர்தம்மால் வேண்டே னென்று நின்மலனே. 21

நின்பா லடைந்தா ரன்பாலே யடியா ரெல்லா நெடுவினையேன்
வன்பான் மனப்பேய் தன்பாலே வருந்திச் சுழன்று மயர்கின்றேன்
தென்பா னோக்கி யின்பநடஞ் செய்யு மிறைவா சிறுவனுக்கா
முன்பா லமுதக் கடலளித்த முதல்வா வென்னை முன்னுதியே. 22

திருச்சிற்றம்பலம்

85. கலிவிண்ணப்பம்

பொது

கட்டளைக் கலித்துறை

திருச்சிற்றம்பலம்

செறியாத நெஞ்சக வஞ்சக னேனிச் சிறுதலத்தே
அறியா தறிந்தவன் போற்சில செய்திட லையநின்றாட்
குறியா தரித்தல தாணைமற் றில்லையெங் கொற்றவனே
முறியா தருள்செய்தி யோதெரி யேனெந்தை முன்னியதே. 1

தீதொன்று மேகண் டறிந்ததல் லாற்பலன் சேரநலம்
யாதொன்று நான்கண் டறியே னறிந்தவ னென்னவிங்கே
போதொன்று போக்குகின் றேன்பிழை யாவும் பொறுத்தருள்வாய்
மாதொன்று பாகத் துணையன்றி நற்றுணை மற்றில்லையே. 2

எல்லாந் தெரிந்த விறைவாநின் றண்ணரு ளெய்துகிலாப்
பொல்லாத பாவிப் புலையேன் பிழையைப் பொறுத்தருள்வாய்
கல்லா மனக்கடை யாலே கடைவைத்துக் கண்டதுநின்
பல்லா லணுத்துணை யும்மறி யேனின்ப மாவதுவே. 3

மண்ணுடை யாரிடை வாளா மனஞ்செல வைத்ததலால்
எண்ணுடை யாரிடை யெய்திநின் றாண்மல ரேத்துகிலேன்
புண்ணுடை யாரிற் புலம்புகின் றேனைப் பொறுத்தருண்முக்
கண்ணுடை யாய்கழற் காலுடை யாய்மணி கண்டத்தனே. 4

தாழாத துன்பச் சமுத்திரத் தேயித் தனியடியேன்
வீழாத வண்ணங் கருணைசெய் வாயென்னை வேண்டியநாள்
ஊழாம் வினைதவிர்த் தாண்டனை யேயென் னுடையவனே
வாழா வகையென்னை யிந்நாள் விடுத்தல் வழக்கலவே. 5

ஊன்செய்த வெம்புலைக் கூட்டின் பொருட்டிங் குணைமறந்து
நான்செய்த தீமையை நானே நினைக்க நடுங்குகின்றேன்
ஏன்செய் தனையெனக் கேளாது மேலு மிரங்குகின்றாய்
வான்செய்த நாதநின் றண்ணருள் வண்ணமென் வாழ்த்துவனே.

ஆயாது நான்செயுங் குற்றங் களைக்கண் டறியிற்பெற்ற
தாயாயி னும்பொறுப் பாளல வாங்கவை சற்றலவே
ஓயாது செய்யுந் தொறும்பொறுத் தாளு முனையெளியேன்
வாயா லுரைக்கவு மாட்டேனந் தோவென்ன வன்மையிதே.

Koviloor Digital Library

ஒன்றுந் தெரிந்திட மாட்டாப் பருவத் துணர்வுதந்தாய்
இன்றுந் தருதற் கிறைவாநின் னுள்ள மியைதிகொலோ
கன்றுங் கருத்தொடு மாழ்குகின் றேனுன் கழலடிக்கே
துன்றுங் கருத்தறி யேன்சிறி யேனென் றுணிவதுவே. 8

ஆவா வெனவெனை யாட்கொள வேண்டு மடிமைகொண்ட
தேவா வென்குற்றந் திருவுளத் தெண்ணிலென் செய்திடுவேன்
வாவா வெனவழைப் பார்பிற ரில்லை மறந்துமென்றன்
நாவா லுரைக்கவு மாட்டேன் சிறுதெய்வ நாமங்களே.

பள்ளத்தி லேசெலு நீர்போலென் னுள்ளம் பரப்பதலால்
எள்ளத்தி லேசிறி தாயினு நான்செல்வ தில்லையெந்தாய்
கள்ளத்தி லேசொல்லு கின்றே னலநின் கழலிணையென்
உள்ளத்தி லேநின்ற வாங்கவை காண்க வுடையவனே. 10

திருச்சிற்றம்பலம்

86. கருணை விண்ணப்பம்

பொது

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

நல்லார்க் கெல்லா நல்லவனீ யொருவன் யாண்டு நாயடியேன்
பொல்லார்க் கெல்லாம் பொல்லவனா னொருவ னிந்தப் புணர்ப்பதனால்
எல்லா முடையாய் நினக்கெதிரேன் றெண்ணே லுறவென் றெண்ணுகவீ
தல்லால் வழக்கென் னிருமைக்கும் பொதுமை யன்றோ வருளிடமே.

இடமே பொருளே யேவலேயென் றென்றெண் ணியிடர்ப் படுமோர்
மடமே யுடையேன் றனக்கருணீ வழங்க லழகோ வானந்த
நடமே யுடையோய் நினையன்றி வேற்றுத் தெய்வ நயவேற்குத்
திடமே யருடான் வழங்காது தீர்த்த லழகோ தெரிப்பாயே. 2

தெரித்தா லன்றிச் சிறிதேனுந் தெரிவொன் றில்லாச் சிறியேனைப்
பிரித்தாய் கூடும் வகையறியும் பெற்றி யென்னே பிறைமுடிமேல்
தரித்தா யடியேன் பிழைபொறுக்கத் தகுங்காண் துன்பந் தமியேனை
அரித்தாற் கண்டிங் கிரங்காமை யந்தோ வருளுக் கழகேயோ. 3

அருளோர் சிறிது முதவுகிலா யதனைப் பெறுதற் கடியேன்பால்
தெருளோர் சிறிது மிலையேயென் செய்கே னெங்கள் சிவனேயோ
மருளோ ரெனினுந் தமைநோக்கி வந்தார்க் களித்தல் வழக்கன்றோ
பொருளோ ரிடத்தே மிடிகொண்டோர் புகுத லின்று புதிதன்றே. 4

புதியே னல்லே னின்னடிமைப் பொருத்த மில்லே னல்லேன்யான்
மதியேன் வேற்றுத் தேவர்தமை வந்தங் கவர்தா மெதிர்ப்படினுந்
துதியே னின்னை விடுவேனோ தொண்ட னேனை விடலழகோ
நதியோர் சடையோ யின்னருணீ நல்கல் வேண்டு நாயேற்கே. 5

Koviloor Digital Library

நாயேன் றன்டக் கடல்வீழ்ந்து நலித லழகோ நல்லோர்க்கிங்
கீயே னென்று மில்லேனு னென்செய் கேனே வென்னுடைய
தாயே யனையாய் சிறிதென்மேற் றயவு புரிந்தா லாகாதோ
சேயேன் றன்னை விடுப்பாயோ விடுத்தா லுலகஞ் சிரியாதோ. 6

சிரிப்பார் நின்பே ரருள்பெற்றோர் சிவனே சிவனே சிவனேயோ
விரிப்பார் பழிச்சொல் லன்றியெனை விட்டால் வெள்ளை விடையோனே
தரிப்பா யிவனை யருளிடத்தே யென்று நின்று தகும்வண்ணந்
தெரிப்பார் நினக்கு மெவர்கண்டாய் தேவர் தேடற் கரியானே. 7

அரிய பெருமா னெளியோமை யாளும் பெருமான் யாவர்கட்கும்
பெரிய பெருமான் சிவபெருமான் பித்தப் பெருமா னென்றுன்னை
உரிய பெருமா தவர்பழிச்ச லுண்மை யெனிலென் னுடையானே
கரிய பெருமா னுடையேற்கு மருள லுன்றன் கடனன்றே. 8

அன்றுஞ் சிறியே னறிவறியே னதுநீ யறிந்து மருள்செய்தாய்
இன்றுஞ் சிறியே னறிவறியே னிதுநீ யறிந்து மருளாயேல்
என்று மொருதன் மையனெங்க ளிறைவ னெனமா மறைகளெலாந்
தொன்று மொழிந்த தூமொழிதான் சூது மொழியோ சொல்லாயே.

சொல்லற் கரிய பெரியபரஞ் சுடரே முக்கட் சுடர்க்கொழுந்தே
மல்லற் கருமா லயன்முதலோர் வழுத்தும் பெருஞ்சீர் மணிக்குன்றே
புல்லற் கரிதா மெளியேன்றன் பிழைகள் யாவும் பொறுத்திந்த
அல்லற் கடனின் றெனையெடுத்தே யருள்வா யுன்ற னருணலமே.

திருச்சிற்றம்பலம்

87. அடிமைப் பதிகம்

கோயில்

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

ஆள்வினையாற் பயனுறுவா ரசதி யாட
அந்தோவிப் புலைநாயே னன்பா னின்பால்
வேள்விசெயும் பெருந்தவர்க்கே வேள்வி செய்ய
வேண்டுமிதற் கெப்பெருமான் கருணை செய்யும்
நாள்வினைவிற் சின்னாளே யிதுதா னுண்மை
நம்புமென நவின்றுனையே நம்பி நின்றேன்
கேள்வியிலாத் துரைத்தனமோ வெது நாயேன்
கிளக்குமுறை கிளக்கிலனோ கேட்டி லாயே. 1

கேட்டிலா யடியேன்செய் முறையை யந்தோ
கேடிலாக் குணத்தவர்பாற் கிட்டு கின்றோய்
ஏட்டிலா பிரங்கோடி யெனினுஞ் சற்றும்
எழுதமுடி யாக்குறைகொண் டிளைக்கின் றேனென்

Koviloor Digital Library

சேட்டியா விடினுமெனைச் சேட்டித் தீர்க்குஞ்
சிறுமனத்தாற் செய்பிழையைத் தேர்தி யாயில்
நாட்டிலார் காக்கவல்லா ரென்னை யெந்தாய்
நாள்கழியா வண்ணமினி நல்கல் வேண்டும். 2

வேண்டாமை வேண்டுகின்றோர் நிற்க மற்றை
வேண்டுவார் வேண்டுவன விரும்பி நல்குந்
தூண்டாத மணிவிளக்கே பொதுவி லாடுஞ்
சுடர்க்கொழுந்தே யென்னுயிர்க்குத் துணையே யென்னை
ஆண்டாறு மூன்றுண்டில் ஆண்டு கொண்ட
அருட்கடலே யென்னுள்ளத் தமர்ந்த தேவே
ஈண்டாவ வெனச்சிறிய வடியே னுள்ளத்
தெண்ணமறிந் தருளாயே லென்செய் கேனே. 3

என்னையறி யாப்பருவத் தாண்டு கொண்ட
என்குருவே யெனக்குரிய வின்ப மேயென்
றன்னையின்று விடத்துணிந்தாய் போலு மந்தோ
தகுமோநின் பெருங்கருணைத் தகவுக் கெந்தாய்
உன்னையலா தொருவர்தம்பாற் செல்லே னென்னை
உடையானே யென்னுள்ளத் துள்ளே நின்று
முன்னைவினைப் பயனூட்ட நினைப்பிக் கின்றாய்
முடிப்பிக்கத் துணிந்திலையேன் மொழிவ தென்னே. 4

என்னுளை யறிந்துமென்னை யந்தோ வந்தோ
இவ்வகைசெய் திடத்துணிந்தா யென்னே யெந்தாய்
நின்னுணை நின்னையலா தொன்றும் வேண்டேன்
நீயிதனை யறிந்திலையோ நினைப்பிக் கின்ற
மன்னுவென் னுருயிர்க்கு வாழ்வே யென்கண்
மணியேயென் குருவேயென் மருந்தே யின்னும்
உன்னுலிங் குயிர்தரித்து வாழ்கின் றேனென்
உள்ளமறிந் துதவுதியோ வுணர்கி லேனே. 5

உள்ளமறிந் துதவுவனம் முடையா னெல்லாம்
உடையான்மற் றொருகுறையிங் குண்டோ வென்னக்
கள்ளமனத் தேனந்தோ களித்தி ருந்தேன்
கைவிடுவார் போலிருந்தாய் கருணைக் குன்றே
எள்ளலுறப் படுவேனிங் கேது செய்வேன்
எங்கெழுகேன் யார்க்குரைப்பே னின்னு முன்றன்
வள்ளலருட் டிறநோக்கி நிற்கின் றேனென்
மனத்துயர்போம் வகையருள மதித்தி டாயே. 6

வகையறியேன் சிறியேன்சன் மார்க்க மேவும்
மாண்புடைய பெருந்தவத்தோர் மகிழ வாழுந்
தகையறியே னலமொன்று மறியேன் பொய்மை
தானறிவே னல்லோரைச் சலஞ்செய் கின்ற

மிகையறிவேன் நீங்கென்ப வெல்லா மிங்கே
  மிகவறிவே னெனினுமென்னை விடுதி யாயிற்
பகையறிவே னின்மீதிற் பழிவைத் திந்தப்
  பாவியுயிர் விடத்துணிவேன் பகர்ந்திட் டேனே. 7

இட்டவகை வாழ்கின்றே னெந்தாய் நானே
  எண்ணுகிலே னெண்ணுவித்தா லென்செய் வேனின்
மட்டலர்சே வடியாணை நினைத்த வண்ணம்
  வாழ்விக்க வேண்டுமிந்த வண்ண மல்லால்
துட்டனென விடத்துணிதி யாயி லந்தோ
  சூறையுறு துரும்பெனவுஞ் சுழன்று வானில்
விட்டசிலை யெனப்பவத்தில் விழுவே னன்றி
  வேறெதுசெய் வேனிந்த விழல னேனே. 8

விழற்கிறைத்து மெலிகின்ற வீண னேனிவ்
  வியனுலகில் விளைத்திட்ட மிகைக ளெல்லாம்
அழற்கிறைத்த பஞ்செனவே யாக்கி நீயே
  ஆட்கொண்டாற் றடுப்பவரிங் காரே யையா
கழற்கடிமை யெனவுலக மறிய வொன்றுங்
  கருதறியாச் சிறுபருவத் தென்னை யாண்டு
நிழற்கருணை யளித்தாயே யிந்நா ணிகை
  நெகிழவிட்டா லென்செய்வே னிலையி லேனே. 9

நிலையறியே னிலையறிந்து பெற்ற நல்லோர்
  நெறியறியே னெனினுமுன்ற னேச மன்றி
இலையறியேன் மற்றவரைக் கனவி லேனும்
  எட்டுணையோர் துணையெனவு மெண்ணு றேனாற்
கலையறியேன் கருத்திலிருந் தறிவித் தாய்நான்
  கண்டறிந்தே னெனினுமவை போற்காட்ட வேண்டும்
அலையறியா வருட்கடலே யமுதே தேனே
  அம்பலத்தென் குருவேநா னடிமை யாளே. 10

திருச்சிற்றம்பலம்

88. வேட்கைக் கொத்து

தலைமகள் பாங்கியொடு கூறல்

எண்சீர்க் கழிநெடிலடிச் சந்த விருத்தம்

திருச்சிற்றம்பலம்

விண்படைத்த புகழ்த்தில்லை யம்பலத்தா னெவர்க்கும்
  மேலானா னன்பருள மேவுநட ராஜன்
பண்படைத்த வெனையறியா விளம்பருவந் தனிலே
  பரிந்துவந்து மாலையிட்டான் பார்த்தறியான் மீட்டும்
பெண்படைத்த பெண்களெலா மவமதித்தே லேது
  பேசுகின்றார் கூசுகின்றேன் பிச்சியென லானேன்
கண்படைத்துங் குழியில்விழுங் கணக்குமுண்டோ அவன்றன்
  கணக்கறிந்தும் விடுவேனோ கண்டாயென் றோழி. 1

Koviloor Digital Library

சீத்தமணி யம்பலத்தா னென்பிராண நாதன்
சிவபெருமா னெம்பெருமான் செல்வநட ராஜன்
வாய்த்தவென்னை யறியாத விளம்பருவந் தனிலே
மகிழ்ந்துவந்து மாலையிட்டார் மறித்துமுகம் பாரார்
ஆய்த்தகலை கற்றுணர்ந்த வணங்கனையார் தமக்குள்
ஆர்செய்த போதனையோ வாறுலு மிதுகேள்
காய்த்தமரம் வளையாத கணக்குமுண்டோ அவன்றன்
கணக்கறிந்தும் விடுவேனோ கண்டாயென் றோழி. 2

என்னுயிரிற் கலந்துகலந் தினிக்கின்ற பெருமான்
என்னிறைவன் பொதுவினட மியற்றுநட ராஜன்
தன்னையறி யாப்பருவத் தென்னைமணம் புரிந்தான்
தனையறிந்த பருவத்தே யெனையறிய விரும்பான்
பின்னையன்றி முன்னுமொரு பிழைபுரிந்தே னில்லை
பெண்பரிதா பங்காணல் பெருந்தகைக்கு மழகோ
கன்னலென்றுற் கைக்கின்ற கணக்குமுண்டோ அவன்றன்
கணக்கறிந்தும் விடுவேனோ கண்டாயென் றோழி. 3

தெருளமுதத் தனியோகர் சிந்தையிலு ஞானச்
செல்வரறி விடத்துநடஞ் செய்யு நடராஜன்
அருளமுத மளிப்பனென்றே யன்றுமணம் புணர்ந்தான்
அளித்தறியா னணுத்துணையு மநுபவித்து மறியேன்
மருளுடையா னல்லனொரு வஞ்சகனு மல்லன்
மனமிரக்க மிகவுடையான் வல்வினையே னளவில்
இருளுடையார் போலிருக்கு மியல்பென்னை அவன்றன்
இயல்பறிந்தும் விடுவேனோ வினித்தானென் றோழி. 4

சின்மயமாம் பொதுவினிலே தன்மயமாய் நின்று
திருநடஞ்செய் பெருங்கருணைச் செல்வநட ராஜன்
என்மயநா னறியாத விளம்பருவந் தனிலே
என்னைமணம் புரிந்தனனீ தெல்லாரு மறிவார்
இன்மயமில் லாதவர்போ லின்றுமணந் தருளான்
இறையளவும் பிழைபுரிந்தே னில்லையவ னிதயங்
கன்மயமோ வன்றுசுவைக் கனிமயமே யென்னுங்
கணக்கறிந்தும் விடுவேனோ கண்டாயென் றோழி. 5

என்குணத்தா னெல்லார்க்கு மிறைவனெல்லாம் வல்லான்
என்னகத்தும் புறத்துமுளா னின்பநட ராஜன்
பெண்குணத்தை யறியாத விளம்பருவந் தனிலே
பிச்சேற்றி மணம்புரிந்தான் பெரிதுகளித் திருந்தேன்
வண்குணத்தா லநுபவநா னறியநின்ற பொழுதில்
வந்தறியா னின்பமொன்றுந் தந்தறியா னவனும்
வெண்குணத்தா னல்லன்மிகு நல்லனெனப் பலகால்
விழித்தறிந்தும் விடுவேனோ விளம்பாயென் றோழி. 6

Koviloor Digital Library

பொய்யாத புகழுடையான் பொதுவினடம் புரிவான்
புண்ணியர்பா னண்ணியநற் புநிதநட ராஜன்
கொய்யாத வரும்பனைய விளம்பருவந் தனிலே
குறித்துமணம் புரிந்தனனுன் மறித்தும்வரக் காணேன்
செய்யாத செய்கையொன் றுஞ் செய்தறியேன் சிறிதுந்
திருவுளமே யறியுமற்றென் றெருவுளத்தின் செயல்கள்
நையாத வென்றனுயிர் நாதனருட் பெருமை
நானறிந்தும் விடுவேனோ நவிலாயென் றோழி. 7

கண்ணனையா னென்னுயிரிற் கலந்துநின்ற கணவன்
கணக்கறிவான் பிணக்கறியான் கருணைநட ராஜன்
தண்ணனையா மிளம்பருவந் தன்னிலெனைத் தனித்துத்
தானேவந் தருள்புரிந்து தனிமாலை புனைந்தான்
பெண்ணனையார் கண்டபடி பேசவுநான் கூசாப்
பெருமையொடு மிருந்தேனென் னருமையெலா மறிந்தான்
உண்ணனையா வகைவிரவு தாழ்த்தனனின் றவன்றன்
உளமறிந்தும் விடுவேனோ வுரையாயென் றோழி. 8

ஊன்மறந்த வுயிரகத்தே யொளிநிறைந்த வொருவன்
உலகமெலா முடையவனென் னுடையநட ராஜன்
பான்மறந்த சிறியவிளம் பருவமதின் மாலைப்
பரிந்தணிந்தான் றெரிந்ததனிப் பருவமிதிற் பரியான்
தான்மறந்தா னெனினுமிங்கு நான்மறக்க மாட்டேன்
தவத்தேறி யவத்திழியச் சம்மதமும் வருமோ
கோன்மறந்த குடியேபோன் மிடியேனு னவன்றன்
குணமறிந்தும் விடுவேனோ கூறாயென் றோழி. 9

தனித்தபர நாதமுடித் தலத்தின்மிசைத் தலத்தே
தலைவரெலாம் வணங்கநின்ற தலைவனட ராஜன்
இனித்தசுக மறிந்துகொளா விளம்பருவந் தனிலே
என்புருவ நடுவிருந்தான் பின்புகண்டே னில்லை
அனித்தமிலா விச்சரிதம் யார்க்குரைப்பே னந்தோ
அவனறிவா னனறிவே னயலறிவா ருளரோ
துனித்தநிலை விடுத்தொருகாற் சுத்தநிலை யதனிற்
சுகங்கண்டும் விடுவேனோ சொல்லாயென் றோழி. 10

திருச்சிற்றம்பலம்

89. சரணப்பதிகம்

கோயில்

கலி நிலைத்துறை

திருச்சிற்றம்பலம்

மதிவார்சடை மாமணி யேயருள் வள்ள லேஎன்
னிதியேதிரு வம்பலத் தாடல்செய் நித்த னேநிற்
றுதியே னெனினு முனையன்றித் துணையி லேனென்
பதியேயென தெண்ணம் பலிக்கும் படிக்க ருளே. 1

Koviloor Digital Library

படிமேலடி யேனுனை யன்றியோர் பற்றி லேனென்
முடிமேலடி வைத்தருள் செய்திட முன்னு கண்டாய்
கொடிமேல் விடைநாட் டியவெண் குணக்குன் றமே
பொடிமேல் விளங்குந்திரு மேனியெம் புண்ணி யனே. 2

புண்ணுமனஞ் சஞ்சலித் துள்ளம் புலர்ந்து நின்றேன்
அண்ணுவெனை யாட்கொள வேண்டு மகற்று வாயேல்
கண்ணுர்கனை கண்பிறி தொன்றில கள்வ னேனை
எண்ணுவினை யென்செயு மோவிதற் கென்செய் வேனே. 3

செய்வேனவ மன்றித் தவமொன்றுஞ் செய்த றியேன்
நைவேன்பிழை யாவும் பொறுத்தரு ணல்கு வாயேல்
உய்வேனல துய்வகை யின்றுமன் றேங்கு கின்றோய்
வைவேன்றுதிப் பேனுனை யென்று மறந்தி லேனே. 4

மறவாதுனை வாழ்த்துமெய் யன்பரை மாநி லத்தே
இறவாவகை யாட்கொண் டருளியவீச னேமெய்
உறவாகிய நின்பத மன்றியொன் றோர்கி லேனுன்
பிறவாநெறி தந்தரு ளென்பதென் பேசி டாயே. 5

என்னேயினு நின்னரு ளெய்தில னேழை யேனை
முன்னேவலிந் தாட்கொண்ட தின்று முனிந்த தேயோ
பொன்னேரணி யம்பலத் தாடிய புண்ணி யாவென்
அன்னேயர சேயமு தேயரு ளாண்ட வனே. 6

ஆண்டாயெனை யேழ்பிறப் பும்முனை யன்றி யொன்றுந்
தீண்டாதென துள்ளமென் றுலென் சிறுமை தீர்க்க
வேண்டாதய லாரெனக் காண்பதென் மெய்ய னேபொன்
ஆண்டான்றிரு வெய்தநஞ் சைக்கள நாட்டி னேயே. 7

நாட்டார்நகை செய்வரென் றோவரு ணல்கி லாய்நீ
வீட்டார்நினை யென்னினைப் பாரெனை மேவி லாயேல்
தாட்டாமரை யன்றித் துணையொன்றுஞ் சார்ந்தி லேனென்
மாட்டாமை யறிந்தருள் வாய்மணி மன்று ளானே. 8

மன்றாடிய மாமணி யேதனி வான வாவோர்
மின்றாழ்சடை வேதிய னேநினை வேண்டு கின்றேன்
பொன்றாதமெய் யன்பருக் கன்புளம் பூண்டு நின்று
நன்றாவிர வும்பக லுமுனை நாடு மாறே. 9

மாறுமன மாயையி னுண்மறி மாழ்கி மாழ்கி
ஏறுமல விருங்கு கின்றே னிதற்கென் செய்வேன்
தேறுவுளத் தென்றலை யேறிடச் செய்தி கண்டாய்
பேறுமணி யம்பல மேவிய பெற்றி யானே. 10

Koviloor Digital Library

ஆனேறிவந் தன்பரை யாட்கொளு மையனேயெம்
மானேமணி மன்றில் நடம்புரி வள்ள லேசெந்
தேனேயமு தேமுத லாகிய தெய்வ மேநீ
தானேயெனை யாண்டருள் வாய்நின் சரண் சரணே. 11

திருச்சிற்றம்பலம்

90. நற்றாய் கவன்றது

எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

திருவருட் புநிதை மகிழுநின் றாடுந் தில்லைமன் றழகனே யென்பாள்
மருவருட் கடலே மாணிக்க மலையே மதிச்சடை வள்ளலே யென்பாள்
இருவருக் கரிய வொருவனே யெனக்கிங் கியார்துணை நின்னலா தென்பாள் [னே
வெருவியுட் குழைவாள் விழிகணீர் துளிப்பாள் வெய்துயிர்ப்பா ளென்றன் மின்

ஓடுவாள் தில்லைத் திருச்சிற்றம் பலமென் றுருகுவா ளுணர்வில ளாகித்
தேடுவாள் திகைப்பாள் தியங்கு வாளையோ தெய்வமே தெய்வமே யென்பாள்
பாடுவாள் பதைப்பாள் பதறுவாள் நான்பெண் பாவிகாண் பாவிகா ணென்பாள்
வாடுவாள் மயங்கி வருந்துவா ளிருந்து வல்வினை யேன்பெற்ற மகளே. 2

உலகெலாந் தழைப்பப் பொதுவினி லோங்கு மொருதனித் தெய்வமென் கின்
இலகுபே ரின்ப வாரியென் கின்றா ளென்னுயிர்க் கிறைவனென் கின்றாள் [றாள்
அலகிலாக் கருணை யமுதனென் கின்றா ளன்பர்கட் கன்பனென் கின்றாள்
திலகவா ணுதலா ளிவ்வண்ணம் புலம்பித் தியக்கமுற் றழுங்குகின் றாளே. 3

திருவெலா மளிக்குந் தெய்வமென் கின்றாள் திருச்சிற்றம் பலவனென் கின்றாள்
உருவெலா முடைய வொருவனென் கின்றா ளுச்சிமேற் கரங்குவிக் கின்றாள்
கருவெலாங் கடந்தாங் கவன்றிரு மேனி காண்பதெந் நாள்கொலென் கின்றாள்
மருவெலா மயங்கு மலர்க்குழன் முடியாள் வருந்துகின் றாளென்றன் மகளே. 4

மின்னிணைச் சடில விடங்கனென் கின்றாள் விடைக்கொடி விமலனென்கின்றாள்
பொன்னிணை மலர்த்தாட் புநிதனென் கின்றாள் பொதுவிலே நடிப்பனென் கின்றாள்
என்னிணை விழிக ளவன்றிரு வழகை யென்றுகொல் காண்பதென் கின்றாள்
துன்னிணை முலைகள் விம்முற விடைபோல் துவள்கின்றாள் பசிய பொற்றொடியே

கருங்களிற் றுரிபோர்த் தம்பலத் தாடுங் கருணையெங் கடவுளென் கின்றாள்
பெருங்களி துளும்ப வடவனத் தோங்கும் பித்தரிற் பித்தனென் கின்றாள்
ஒருங்களி மிழற்றுங் குழலினு ரென்போ லுறுவரோ வவனையென் கின்றாள்
தருங்களி யுண்டாள் போல்கின்றா ளுணுந் தவிர்கின்றா ளென்மாருந் தவளே. 6

மன்றிடை நடிக்கு மணாளனை யல்லான் மதிப்பனோ பிறரையென் கின்றாள்
வன்றுயர் நீக்கு மவன்றிரு வடியை மறப்பனோ கணமுமென் கின்றாள்
ஒன்றுமில் லவனென் றுரைக்கினு மெல்லா முடையவ னுகுமென் கின்றாள்
பொன்றுதல் பிறழ்த லினியுறே னென்றே பொற்றொடி பொங்குகின் றாளே. 7

Koviloor Digital Library

திருத்தகு தில்லைத் திருச்சிற்றம் பலத்தே தெய்வமொன் றுண்டெமக் கென்பாள்
பெருத்தகுங் குமம்பொற் கலசவாண் முலையார் பேசுக பலபல வென்பாள்
மருத்தகு குழலாள் மனமொழி யுடல மற்றவு மவன்கழற் கென்பாள்
குருத்தகு குவளைக் கண்ணினீர் சொரிப்பாள் குதுகுலிப் பாள்பசுங் கொடியே.8

அம்பலத்தாடு மழகனைக் காணு தருந்தவும் பொருந்துமோ வென்பாள்
கம்பமுற் றிடுவாள் கண்கனீ ருகுப்பாள் கைகுவிப் பாளுளங் கனிவாள்
வம்பணி முலைக ளிரண்டுநோக் கிடுவாள் வள்ளலைப் பரிகிலீ ரென்பாள்
உம்பரன் றவஞ்செய் திடுமினீ ரென்பா ளுயங்குவாள் மயங்குவா ளுணர்வே. 9

திருச்சிற்றம்பலம்

91. உள்ளப் பஞ்சகம்

கட்டளைக் கலித்துறை

திருச்சிற்றம்பலம்

நீரார் சடையது நீண்மால் விடையது நேர்கொவ்வொன் றைத்
தாரார் முடியது சீரா ரடியது தாழ்வகற்றும்
பேரா யிரத்தது பேரா வரத்தது பேருலகம்
ஓரா வளத்ததொன் றுண்டேமுக் கண்ணுடைன் னுள்ளகத்தே.1

மட்டுப் படாதது மாமறை யாலு மலப்பகையாற்
கட்டுப் படாதது மாலா தியர்தங் கருத்தினுக்குந்
தட்டுப் படாதது பார்முதற் பூதத் தடைகளினால்
ஒட்டுப் படாததொன் றுண்டேமுக் கண்ணுடைன் னுள்ளகத்தே.

பேதப் படாதது பற்பல கற்பங்கள் பேர்ந்திடினுஞ்
சேதப் படாதது நன்றிது தீதெனச் செய்கைகளால்
ஏதப் படாததுள் வெட்டப் படாததிங் கியாவர்கட்கும்
ஓதப் படாததொன் றுண்டேமுக் கண்ணுடைன் னுள்ளகத்தே.3

தண்ணு ரளியது விண்ணே ரொளியது சாற்றுமறைப்
பண்ணுர் முடிவது பெண்ணுர் வடிவது பண்புயர்தீக்
கண்ணுர் நுதலது கண்ணுர் மணியது கண்டுகொள்ள
ஒண்ணு நிலையதொன் றுண்டேமுக் கண்ணுடைன் னுள்ளகத்தே.

பிறவா நெறியது பேசா நிலையது பேசிலென்றும்
இறவா வுருவதுள் ளேற்றால் வருவ திருளகன்றோர்
மறவா துடையது மாதோர் புடையது வாழ்த்துகின்றோர்
உறவா யிருப்பதொன் றுண்டேமுக் கண்ணுடைன் னுள்ளகத்தே.

திருச்சிற்றம்பலம்

Koviloor Digital Library

92. சிவசிதம்பர சங்கீர்த்தனம்

கட்டளைக் கலிப்பா

திருச்சிற்றம்பலம்

உலக முஞ்சரா சரமு நின்றுநின் றுலவுகின்றபே ருலக மென்பதுங்
கலக மின்றியெங் கணுநி றைந்தசிற் கநம்வி ளங்குசிற்ககந மென்பதும்
இலக வொன்றிரண் டெனல கன்றதோ ரிணையி லின்பமா மிதய மென்பதும்
திலக மென்றநங் குருசி தம்பரஞ் சிவசி தம்பரஞ் சிவசி தம்பரம். 1

வரமு றுஞ்சுதந் தரசு கந்தரு மனம டங்குசிற் கனந டந்தரும்
உரமு றும்பதம் பெறவ மூங்குபே ரொளிந டந்தரும் வெளிவி டந்தரும்
பரமு றுங்குணங் குறிக டந்தசிற் பரம மாகியே பரவு மாமறைச்
சிரமு றும்பரம் பரசி தம்பரஞ் சிவசி தம்பரஞ் சிவசி தம்பரம். 2

நித்தி யம்பரா பரநி ராதர நிர்க்கு ணஞ்சதா நிலய நிட்களஞ்
சத்தி யங்கநா கநமி குந்ததோர் தற்ப ரஞ்சிவஞ் சமர சத்துவம்
வித்தி யஞ்சுகோ தயநி கேதநம் விமல மென்றுநால் வேத முந்தொழுஞ்
சித்தி யங்குசிற் கநசி தம்பரஞ் சிவசி தம்பரஞ் சிவசி தம்பரம். 3

அருள ளித்துமெய் யன்பர் தம்மையுள் ளங்கை நெல்லிபோ லாக்கு கின்றதும்
பொருள ளித்துநான் மறையி னந்தமே புகலு கின்றதோர் புகல ளிப்பதும்
வெருள ளித்திடா விமல ஞாநவான் வெளியி லேவெளி விரவி நிற்பதாந்
தெருள ளிப்பதும் இருள்கெ டுப்பதுஞ் சிவசி தம்பரஞ் சிவசி தம்பரம். 4

பெத்த முஞ்சதா முத்தி யும்பெரும் பேத மாயதோர் போதவாதமுஞ்
சுத்த முந்தெரு வித்த முந்தருஞ் சொரூப வின்பமே நுய்க்கும் வாழ்க்கையும்
நித்த முந்தெரிந் துற்ற யோகர்தந் நிமலமாகி மெய்ந் நிறைவு கொண்டசிற்
சித்த முஞ்செலாப் பரம ராசியஞ் சிவசி தம்பரஞ் சிவசி தம்பரம். 5

திருச்சிற்றம்பலம்

93. திருக்குறிப்பு நாட்டம்

ஆசிரியத் தாழிசை

திருச்சிற்றம்பலம்

ஆற்றுக் கேபிறைக் கீற்றுக்கேசடை யாக்கிச் சேவடி தூக்கி யாருயிர்ப்
பேற்றுக் கேநடிப் பாய்மணி மன்றிற் பெருந்தகையே
சோற்றுக் கேயிதஞ் சொல்லிப் பேதையர் சூழல் வாய்த்துயர் சூழ்ந்து மேற்றிசைக்
காற்றுக் கேகறங் காய்ச்சுழன் றேனைக் கருதுதியோ. 1

ஞாலத் தார்தமைப் போலத் தாமிங்கு நண்ணு வார்நின்னை யெண்ணு வார்மிகு
சீலத் தார்சிவ மேயெவை யும்மெனத் தேர்ந்தனராற்
சாலத் தான்கொடுஞ் சாலத் தாலத்தைத் தாவி நான்பெரும் பாவி யாயினன்
ஏலத் தார்குழ லாளிடத் தாயெனை யெண்ணுதியோ. 2

Koviloor Digital Library

அண்ண லேநின்னை யெண்ண லேனென்னை யாண்டு கொண்டனை மீண்டும்
நண்ண லேயறி யேன்கடை யேன்சிறு நாயனையேன் [விண்டனன்
பெண்ண லேனிய லான லேனலிப் பேய னேன்கொடும் பேதை யேன்பிழை
கண்ண லேபுரி யாதின்னு மீட்கக் கருதுதியோ. 3

வல்லி யானந்த வல்லி சேர்மண வாள னேயரு ளாள னேமலை
வில்லி யாய்நகைத் தேபுரம் வீழ்த்த விடையவனே [னன்
புல்லி யான்புலைப் போகம் வேட்டுநின் பொன் னடித்துணைப் போகம் போக்கி
இல்லி யார்கடம் போலிருந் தேனெனை யெண்ணுதியோ. 4

திருச்சிற்றம்பலம்

94. தனித் திருப் புலம்பல்

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்
திருச்சிற்றம்பலம்

திங்கள் விளங்குஞ் சடைத்தருவை தீம்பாற் சுவையைச் செந்தேனைச்
செங்கை மருவுஞ் செழுங்கனியைச் சீரார் முக்கட் செங்கரும்பை
மங்கை மலையாண் மணந்தபெரு வாழ்வைப் பவள மலைதன்னை
எங்கள் பெருமான் றனையந்தோ வென்னே யெண்ணு திருந்தேனே. 1

அன்ப ரிதய மலர்க்கோயி லமர்ந்த பரமா னந்தத்தைத்
துன்ப மகலச் சுகமளிக்குந் தூய துணையைச் சுயஞ்சுடரை
வன்ப ரிடத்தின் மருவாத மணியை மணியார் மிடற்றானை
இன்ப நிறைவை யிறையோனை யென்னே யெண்ணு திருந்தேனே. 2

ஒருமைப் பயனை யொருமைநெறி யுணர்ந்தா ருணர்வி னுள்ளுணர்வைப்
பெருமைக் கதியைப் பசுபதியைப் பெரியோ ரெவர்க்கும் பெரியோனை
அருமைக் களத்திற் கருமையணி யம்மான் றன்னை யெம்மானை
இருமைப் பயனுந் தருவானை யென்னே யெண்ணு திருந்தேனே. 3

கறையோர் கண்டத் தனிந்தருளுங் கருணை நிதியைக் கண்ணுதலை
மறையோ னெடுமாற் கரியசிவ மலையை யலையில் வாரிதியைப்
பொறையோ ருள்ளம் புகுந்தொளிரும் புனித வொளியைப் பூரணனும்
இறையோன் றன்னை யந்தோநா னென்னே யெண்ணு திருந்தேனே. 4

திருச்சிற்றம்பலம்

95. பரமராசியம்

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்
திருச்சிற்றம்பலம்

விதியெ லாம்விலக் கெனவிலக் கிடுவேன்
விலக்கெ லாங்கொண்டு விதியென விதிப்பேன்
நிதியெ லாம்பெற நினைத்தெழு கின்றேன்
நிலமெ லாங்கொளு நினைப்புறு கின்றேன்

Koviloor Digital Library

எதியெ லாம்வெறுத் திட்டசிற் றாழை
இன்பெலா ங்கொள வெண்ணிநின் றயர்வேன்
பதியெ லாங்கடந் தெவ்வண முய்வேன்
பரம ராசியப் பரம்பரப் பொருளே. 1

செடிய னேன்கடுந் தீமையே புரிவேன்
தெளிவி லேன்மனச் செறிவென்ப தறியேன்
கொடிய னேன்கொடுங் கொலைபுரி வினத்தேன்
கோள னேனெடு நீளவஞ் சகனேன்
அடிய னேன்பிழை யனைத்தையும் பொறுத்துன்
அன்பர் தங்களோ டின்புற வருள்வாய்
படிய னேகமுங் கடந்தசிற் சபையிற்
பரம ராசியப் பரம்பரப் பொருளே. 2

திருச்சிற்றம்பலம்

96. திருப் புகழ்ச்சி

எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

திருவுளந் தெரியேன் திகைப்புறு கின்றேன்
சிறியரிற் சிறியனேன் வஞ்சக்
கருவுளக் கடையேன் பாவியேன் கொடிய
கன்மனக் குரங்கனே னந்தோ
வெருவுறு கின்றே னஞ்சலென் றின்னே
விரும்பியாட் கொள்ளுதல் வேண்டும்
மருவுமா கருணைப் பெருங்கட லமுதே
வள்ளலே யென்பெரு வாழ்வே. 1

அருள்பழுத் தோங்குங் கற்பகத் தருவே
அருண்மருந் தொளிர்குணக் குன்றே
அருளெனு மமுதந் தருமொரு கடலே
அருட்கிர ணங்கொளுஞ் சுடரே
அருளொளி வீசு மரும்பெறன் மணியே
அருட்சுவை கனிந்தசெம் பாகே
அருண்மணம் வீசு மொருதனி மலரே
அருண்மய மாம்பர சிவமே. 2

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

தாயுந் தந்தையுந் தெய்வமுங் குருவுந்
தாங்கு கின்றதோர் தலைவனும் பொருளும்
ஆயு மின்பமு மன்புமெய் யறிவும்
அனைத்து நீயென வாதரித் திருந்தேன்
ஏயு மென்னள விரக்கமொன் றிலையேல்
என்செய் வேனிதை யார்க்கெடுத் துரைப்பேன்
சேயு நின்னரு ணடையுறுங் கண்டாய்
தில்லை மன்றிடைத் திகழொளி விளக்கே. 3

திருச்சிற்றம்பலம்

Koviloor Digital Library

97. திருமருந்தருணிலை

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

பனகவணைத் திருநெடுமா லயன்போற்றப் புலவரெலாம் பரவ வோங்குங்
கனகமணி யம்பலத்தே பெரியமருந் தொன்றிருக்கக் கண்டேன் கண்டேன்
அனகநடத் ததுசச்சி தாநந்த வடிவதுபே ரருள்வாய்ந் துள்ள
தெனகமமர்ந் திருப்பதெல்லாம் வல்லதுபேர் நடராஜ னென்ப தம்மா. 1

திருநெடுமா லயன்றேடத் துரியநடு வொளித்ததெனத் தெளிந்தோர் சொல்லும்
ஒருகருணை மருந்துதிரு வம்பலத்தே யிருந்திடக்கண் டுவந்தே னந்தோ
அருவுருவங் கடந்ததுபே ரானந்த வடிவதுநல் லருள்வாய்ந் துள்ள
திருமையுநன் களிப்பதெல்லாம் வல்லதுபேர் நடராஜ னென்ப தம்மா. 2

திருச்சிற்றம்பலம்

98. திருவருள் விலாசம்

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

ஆண்டவனீ யாகிலுனக் கடியனுநா னாகில்
அருளுடையா யின்றிரவி லருளிறையாய் வந்து
நீண்டவனே முதலியருந் தீண்டரிதாம் பொருளின்
நிலைகாட்டி யடிமுடியி னெறிமுழுதுங் காட்டி
வேண்டவனே காலையினீ விழித்தவுட னெழுந்து
விதிமுடித்துப் புரிதியிது விளங்குமெனப் புகல்வாய்
தாண்டவனே யருட்பொதுவிற் றனிமுதலே கருணைத்
தடங்கடலே நெடுந்தகையே சங்கரனே சிவனே. 1

திருநெறிமெய்த் தமிழ்மறையாந் திருக்கடைக்காப் பதனுற்
றிருவுளங்காட் டியநாளிற் றெரிந்திலனிச் சிறியேன்
பெருநெறியென் னுளத்திருந்து காட்டியநா ளறிந்தேன்
பிழைபடாத் தெய்வமறை யிதுவெனப்பின் புணர்ந்தேன்
ஒருநெறியி லெனதுகரத் துவந்தளித்த நாளில்
உணராத வுளவையெலா மொருங்குணர்ந்து தெளிந்தேன்
தெருணெறிதந் தருளுமறைச் சிலம்பணிந்த பதத்தாள்
சிவகாம வல்லிமகிழ் திருநடத்தெள் ளமுதே. 2

திருச்சிற்றம்பலம்

99. சல்லாப லகரி

கலிச் சந்த விருத்தம்

திருச்சிற்றம்பலம்

சுந்தர நீறணி சுந்தரர் நடனத் தொழில்வல்லார்
வந்தன ரிங்கே வந்தன மென்றேன் மாதேநீ
மந்தண மிதுகே ளெந்தன மிலநம் வாழ்வெல்லாம்
அந்தர மென்றே ரென்னடி யம்மா வவர்குதே. 1

Koviloor Digital Library

நம்பல மாமென நன்மணி புக்கார் நடராஜர்
எம்பல மாவீ ரெம்பெரு மானீ ரேயென்றேன்
வம்பல மடவா யெம்முடை யின்ப வாழ்வெல்லாம்
அம்பல மென்று ரென்னடி யம்மா வவர்சூதே. 2

திருச்சிற்றம்பலம்

100. அறநிலை விளக்கம்

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

மருவாணைப் பெண்ணாக்கி ஒருகணத்திற் கண்விழித்து வயங்கு மப்பெண்
உருவாணை யுருவாக்கி இறந்தவரை யெழுப்புகின்ற வுருவ னேனும்
[1]கருவாணை யுறஇரங்கா துயிருடம்பைக் கடிந்துண்ணுங் கருத்த னேல்எங்
குருவாணை யெமதுசிவக் கொழுந்தாணை ஞானியெனக் கூறொணாதே.

திருச்சிற்றம்பலம்

101. அருள்நிலை விளக்கம்

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

மெய்விளக்கே விளக்கல்லால் வேறுவிளக் கில்லையென்றார் மேலோர் நானும்
பொய்விளக்கே விளக்கெனவுட் பொங்கிவழி கின்றேனோர் புதுமை யன்றே
செய்விளக்கும் புகழுடைய சென்னகர் நண்பர்களே செப்பக் கேளீர்
நெய்விளக்கே போன்றொருதண் ணீர்விளக்கு மெரிந்ததுசந் நிதியின் முன்னே.

திருச்சிற்றம்பலம்

102. வினவுத்தரம்

கண்ணிகள்

திருச்சிற்றம்பலம்

ஆகமமு மாரணமு மரும்பொருளென் றொருங்குரைத்த
ஏகவுரு வாகிநின்று ரிவரார்சொல் தோழி. 1

மாகநதி முடிக்கணிந்து மணிமன்று ளநவரத
நாகமணி மிளிரநட நவில்வார்காண் பெண்ணே. 2

திருச்சிற்றம்பலம்

103. நெஞ்சொடு நெகிழ்தல்

கட்டளைக் கலித்துறை

திருச்சிற்றம்பலம்

சீர்தரு வார்புகழ்ப் பேர்தரு வாரருட் டேன்றருவார்
ஊர்தரு வார்மதி யுந்தரு வார்கதி யுந்தருவார்
ஏர்தரு வார்தரு வாரொற்றி யூரெம் மிறைவரன்றி
யார்தரு வார்நெஞ்ச மேயிங்கு மங்கு மியம்புகவே. 1

1. கருவாணையுற என்பது — கருவாள் — நையுற.

Koviloor Digital Library

வாடக்கற் றுயிஃ தென்னைநெஞ் சேயிசை வாய்ந்தசிந்து
பாடக்கற் றுயிலை பொய்வேடங் கட்டிப் படிமிசைக்கூத்
தாடக்கற் றுயிலை யந்தோ பொருளுனக் கார்தருவார்
நீடக்கற் றூர்புக மொற்றியெம் மானை நினையினியே. 2

நேரா வழுக்குத் துணியாகி லுன்றனை நேரிற்கண்டும்
பாரா தவரென நிற்பார் உடுத்தது பட்டெனிலோ
வாரா திருப்பதென் வாருமென் பாரிந்த வஞ்சகர்பாற்
சேராது நன்னெஞ்ச மேயொற்றி யூரனைச் சேர்விரைந்தே. 3

பொய்விரிப் பார்க்குப்பொருள்விரிப் பார்நற்பொருட்பயனும்
மெய்விரிப் பார்க்கிரு கைவிரிப் பார்பெட்டி மேவுபணப்
பைவிரிப் பாரல்குற் பைவிரிப் பார்க்கவர் பாற்பரவி
மைவிரிப் பாய்மன மேயென்கொ லோநின் மதியின்மையே. 4

வாழைக் கனியுண மாட்டாது வானின் வளர்ந்துயர்ந்த
தாழைக் கனியுணத் தாவுகின் றேரிற் சயிலம்பெற்ற
மாழைக் கனிதிகழ் வாமத்தெம் மான்றொண்டர் மாட்டகன்றே
ஏழைக் கனிக ருளத்தினர் பாற்சென்ற தென்னைநெஞ்சே. 5

காயார் சரிகைக் கலிங்கமுன் டேலிக் [1]கலிங்கங்கண்டால்
நீயார்நின் பேரேது நின்னூ ரேதுநின் னிலையெதுநின்
தாயார்நின் றந்தை யெவன்குல மேதென்பர் சாற்றுமவ்வல்
வாயா ரிடஞ்செல னெஞ்சே விடைதர வல்லையன்றே. 6

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

துட்ட வஞ்சக நெஞ்சக மேயொன்று
சொல்லக் கேள்கடல் சூழுல கத்திலே
இட்ட மென்கொ லிறையள வேனுமோர்
இன்ப மில்லை யிடைக்கிடை யின்னலால்
நட்ட மிக்குறல் கண்டுகண் டேங்கினை
நாணுகின்றிலை நாய்க்குங் கடையை நீ
பட்ட வன்மைக ளெண்ணி லெனக்குடல்
பதைக்கு முள்ளம் பகீலென வேங்குமே. 7

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

பெரியபொரு ளெவைக்குமுதற் பெரும்பொருளா மரும்பொருளைப் பேசற்கொ
துரியநிலை யநுபவத்தைச் சுகமயமா யெங்குமுள்ள தொன்மை தன்னை [ண்ணாத்
அரியபரம் பரமான சிதம்பரத்தே நடம்புரியு மமுதை யந்தோ
உரியபர கதியடைதற் குன்னினையேன் மனனேநீ யுய்கு வாயே. 8

வேறு

சொன்னிலைக்கும் பொருணிலைக்குந் தூரியதா யானந்தச் சுடரா யன்பர்
தன்னிலைக்குஞ் சென்னிலைக்கு மண்மையதா யருள்பழுக்குந் தருவா யென்று
முன்னிலைக்கு நின்னிலைக்குங் காண்பரிதாய் மூவாத முதலாய்ச் சுத்த
நன்னிலைக்கு நிலையாய பசுபதியை மனனேநீ நவின்றி டாயே. 9

1. கலிங்கம் என்பது — வஸ்திரம்; கலிங்கதேசத்தில் செய்த வஸ்திரம் கலிங்கம் எனப் பெயர் எய்தியது.

Koviloor Digital Library

மண்முகத்திற் பலவிடய வாதனையான் மனனேநீ வருந்தி யந்தோ
புண்முகத்திற் சுவைவிரும்பு மெறும்பெனவா ளாநாளைப் போக்கு கின்றாய்
சண்முகத்தெம் பெருமானை ஐங்கரனை நடராஜத் தம்பி ரானை
உண்முகத்திற் கருதியநு பவமயமா யிருக்கிலைநின் னுணர்ச்சி யென்னே. 10

மாலெடுத்துக் கொண்டுகரு மாலாகித் திரிந்துழள மாலாய்ப் பின்னும்
வாலெடுத்துக் கொண்டுநடந் தணிவிடையாய்ச் சுமக்கின்றான் மனனே நீயக்
காலெடுத்துக் கொண்டுசுமந் திடவிரும்பு கிலையந்தோ கருதும் வேத
நாலெடுத்துக் கொண்டுமுடி சுமப்பதையு மறிகிலைநின் னலந்தா னென்னே. 11

ஆசிரியத் தாழிசை

உலக மேத்திநின் றோங்க வோங்கிய வொளிகொண் மன்றிடை யளிகொண் [மாநடம்
இலகுசேவடிக் கேயன்பு கூர்ந்திலை யேழை நெஞ்சே
திலக வாணுதலார்க் குழன்றனை தீமையே புரிந்தாய் விரிந்தனை
கலக மேகனிந் தாயென்னை காணின் கடைக்கருத்தே. 12

திருச்சிற்றம்பலம்

104. பொதுத்தனித் திருவெண்பா

நேரிசை வெண்பா

திருச்சிற்றம்பலம்

வந்திக்கு மெய்யடியார் மாலற்ற வோர்மனத்திற்
சந்திக்கு மெங்கள் சயம்புவே — பந்திக்கும்
வன்மலக்கட் டெல்லாம் வலிகெட் டறநினது
நின்மலக்கட் டண்ணருடா னோ். 1

சங்கரா முக்கட் சயம்புவே தாழ்சடைமேற்
பொங்கராத் திங்கள் பொலிந்தோனே — வெங்கரா
வாய்நின்று பிள்ளை வரப்பாடும் வன்றொண்டர்க்
காய்நின்று சந்துரைத்த தார். 2

நீலக் களங்கொண்ட நீடொளியே நீள்கங்கை
கோலச் சடைக்கணிந்த கோமளமே — ஞாலத்தில்
அந்தோ சிறியே னருளின்றி வாடுவது
சந்தோட மோநின் றனக்கு. 3

நான்சிறியே னென்னினுமிந் நானிலத்தி னுன்செய்பிழை
தான்சிறிதோ வன்றுலகிற் றான்பெரிதே — மான்கரத்தோய்
அங்ஙனமே னும்முன் னருட்பெருமைக் கிப்பெருமை
எங்ஙனமென் றுள்ள மெழும். 4

ஆவித் துணையேயென் னாரமுதே நின்வடிவைப்
[1]பாவித்து ணையேனிப் பாவியேன் — சேவித்து
வாழ்த்தேனின் பொன்னடியில் வந்தென் றலைகுனித்துத்
தாழ்த்தேனென் செய்தேன் றவம். 5

1. பாவித்துணையேன் என்பது — பாவித்து, உள், நையேன்.

Koviloor Digital Library

உன்னைநினைந் திங்கே யுலாவுகின்றே னன்றியெந்தாய்
பின்னை நினைப்பொன்றும் பெற்றிலேன் — என்னை
விடாதேநின் பொன்னடியை மேவார்சேர் துன்டாங்
கொடாதே யெனையேன்று கொள். 6

என்னரசே நின்னடிக்கீ ழென்னிடரை நீக்கெனநான்
சொன்னதலாற் றுயுடனுஞ் சொன்னேனோ — இன்னுமிந்தத்
துன்பச் சுமையைச் சுமக்கமுடி யாதென்றால்
அன்பர்க் கருள்வோ யருள். 7

அன்னேயென் னப்பாவென் னுருயிர்க்கோ ராதரவே
என்னேநின் னுள்ள மிரங்கிலையே — பொன்னே
யுடையா ரிடையென் னுளநொந்து வாடிக்
கடையேன் படுந்துயரைக் கண்டு. 8

[1]**பகுதி** தகுதி விகுதியெனும் பாட்டில்
இகலி லிடையை யிரட்டித் — தகவின்
அருச்சித்தான் முன்ன மதுகடையாங் கண்டீர்
திருச்சிற் சடையானைத் தேர்ந்து. 9

[2]**தாதாதா** தாதாதா தாக்குறைக்கென் செய்குதும்யாந்
[3]தாதாதா வென்றுலகிற் றுனலைந்தோம் — போதாதா
நந்தா மணியே நமச்சிவா யப்பொருளே
யெந்தா யெனப்புகழ வே. 10

பொய்கண்டாய் காமப் புதுமயக்கிற் போயுழலக்
கைகண்டா யென்னபலன் கண்டாயே — மெய்கண்ட
பொன்னே யனையார்பாற் போய்வணங்கக் கற்றிலையோ
என்னேநின் றன்மைமன மே. 11

இவ்வழியிற் செல்லாதே யென்னுடையான் றன்னடிசேர்
அவ்வழியிற் செல்லென் றடிக்கடிக்குச் — செவ்வழியிற்
சொன்னாலுங் கேட்கிலைநீ துட்டமன மேயுனக்கிங்
கென்னா லுறவே தினி. 12

கால்வாங் கியவுட் கதவங் கொளுமகத்தின்
பால்வாங் கியகாற் பரம்பரனே — மால்வாங்
கரிதார மூன்றி யாமயல்கொண் டேழைப்
பெரிதார வோர்மொழியைப் பேசு. 13

திருச்சிற்றம்பலம்

---

1 பகுதி, தகுதி, விகுதி:—இம்மூன்று மொழிகளில் இடையெழுத்தாகிய 'கு' இரட்டித்தால் குரு, குரு, குரு — அறு கு (அறுகம்புல்) முதலெழுத்துக்களைக் கூட்டின் ப, த, வி — பதவி (பதமுத்தி) கடையெழுத்துக்களைக்கூட்டின் தி, தி, தி—முத்தி (ஐக்கியமுத்தி). அறுகம்புல்லால் அருச்சித்தால் பதமுத்தியும் ஐக்கிய முத்தியும் சித்திக்கும்.

2. எழு தா — எழுதா. குறை சேர்க்க, (தலையில்) எழுதாக்குறை.

3. தாதா என்பது — வள்ளலே; தா என்பது — கொடு.

Koviloor Digital Library

105. தனித்திரு விருத்தம்

கட்டளைக் கலித்துறை

திருச்சிற்றம்பலம்

நீர்பூத்த வேணியு மாநந்தம் பூத்து நிறைமதியின்
சீர்பூத் தமுத விளநகை பூத்த திருமுகமும்
பார்பூத்த பச்சைப் பசுங்கொடி பூத்தசெம் பாகமுமோர்
கார்பூத்த கண்டமுங் கண்பூத்த காலுமென் கண்விருந்தே. 1

விழாக ஞான்றசெவ் வேணிப் பிரானென் வினையிரண்டுங்
கிழாக நானதன் மேலாக நெஞ்சக் கிலேசமெல்லாம்
பாழாக வின்பம் பயிராக வாய்க்கிலப் பாற்பிறவி
ஏழாக வன்றிமற் றெட்டாக விங்கென்னை யென்செயுமே. 2

ஆயிரங் கார்முகி னீர்விழி நீர்தர வையநின்பாற்
சேயிரங் காரெனக் கென்றேநின் பொற்பதஞ் சிந்திக்கின்றேன்
நீயிரங் காயெனி லென்செய்கு வேனிந் நிலத்திற்பெற்ற
தாயிரங் காளென்ப துண்டோதன் பிள்ளை தளர்ச்சிகண்டே. 3

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

செம்பவளத் தனிக்குன்றே யருளா னந்தச்
செழுங்கனியே முக்கணுடைத் தேவே மூவா
அம்புவிநீ ரனல்வளிவா னுதி யாய
அரசேயென் னுருயிர்க்கோ ரரண மாகுஞ்
சம்புசிவ சயம்புவே சங்க ராவெண்
சைலம்வளர் தெய்வதவான் றருவே மிக்க
வம்பவிழ்மென் குழலொருபால் விளங்க வோங்கும்
மழவிடைமேல் வருங்காட்சி வழங்கு வாயே. 4

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

நீடுகின்ற மாமறையு நெடுமாலுந் திசைமுகனு நிமல வாழ்க்கை
நாடுகின்ற முனிவரரு முருத்திரருந் தேடவரு ணட்டங் கொண்டு
பாடுகின்ற மெய்யடிய ருளம்விரும்பி யாநந்தப் படிவ மாகி
ஆடுகின்ற மாமணியை யாரமுதை நினைந்துநினைந் தன்பு செய்வாம்.

நிதியைநினைந் துனைமறந்த மதியைநினைந் தழுகேனே நிமலா நந்தக்
கதியையிகழ்ந் திருள்விழைந்த விதியைநினைந் தழுகேனே கண்போல் வாய்ந்த
பதியையுனைப் பாடாத பாட்டைநினைந் தழுகேனே படிற்று நெஞ்சச்
சதியைநினைந் தழுகேனே யாதுகுறித் தழுகேனித் தமிய னேனே. 6

வேறு

தாய்தடை யென்றேன் பின்னர்த் தாரமே தடையென் றேனுன்
சேய்தடை யென்றே னிந்தச் சிறுதடை யெல்லாந் தீர்ந்துந்
தோய்தடைச் சிறியே னின்னுந் துறந்திலே னெனைத் தடுக்க
ஏய்தடை யாதோ வெந்தா யென்செய்கே னென்செய் கேனே. 7

Koviloor Digital Library

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

எண்கடந்த வுயிர்கடொறு மொளியாய் மேவி
இருந்தருளும் பெருவாழ்வே யிறையே நின்றன்
விண்கடந்த பெரும்பதத்தை விரும்பேன் றூய்மை
விரும்புகிலே னின்னருளை விழைந்தி லேனுன்
பெண்கடந்த மயலெனுமோர் முருட்டுப் பேயாற்
பிடியுண்டே னடியுண்ட பிஞ்சு போன்றேன்
கண்கடந்த குருட்டுமர் கதைபோ னின்சீர்க்
கண்டுரைப்ப லென்கேனோ கடைய னேனே. 8

ஷை வேறு

மின்னைப் போலிடை மெல்லிய லாரென்றே
விடத்தைப் போல்வரும் வெம்மனப் பேய்களைப்
பொன்னைப் போன்மிகப் போற்றி யிடைநடுப்
புழையி லேவிரல் போதப்பு குத்தியீத்
தன்னைப் போன்முடை நாற்றச்ச லத்தையே
சந்த னச்சலந் தானெனக் கொள்கின்றேன்
என்னைப் போல்வது நாய்க்குலந் தன்னிலும்
இல்லை யல்ல தெவற்றினு மில்லையே. 9

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

கள்ளுருகு மலர்மணம்போற் கலந்தெங்கு நிறைந்தோய்நின் கருணைக் கந்தோ
முள்ளுருகும் வலியபராய் முருடுருகு முருகாத முறைசேர் கல்லும்
வள்ளுருகு மலையுருகு மண்ணுருகு மரமுருகு மதியி லேன்றன்
உள்ளுருகும் வகையிலையென் செய்கேனு னேன்பிறந்தே னுதிய னேனே. 10

மன்னுயிர்க்குத் தாய்தந்தை குருதெய்வ முறவுமுதன் மற்று நீயே
பின்னுயிர்க்கோர் துணைவேறு பிறிதிலையென் றியானறிந்த பின்பொய் யான
மின்னுடற்குத் தாய்தந்தை யாதியரை மதித்தேனோ விரும்பி னேனோ
என்னுயிர்க்குத் துணைவாநின் னுணையொன்று மறியேனு னிரங்கி டாயே.

மாற்றரிய பசும்பொன்னே மணியேயென் கண்ணேகண் மணியே யார்க்குந்
தோற்றரிய சுயஞ்சுடரே யானந்தச் செழுந்தேனே சோதி யேநீ
போற்றரிய சிறியேனைப் புறம்விடினும் வேற்றவர்பாற் போகேன் வேதந்
தேற்றரிய திருவடிக்கண் பழிவிளைப்பே னின்னுணைச் சிறிய னேனே. 12

உள்ளுணர்வோ ருளத்துநிறைந் தூற்றெழுந்த தெள்ளமுதே யுடையாய் வஞ்ச
நள்ளுணர்வேன் சிறிதேனு நலமறியேன் வெறித்துழலு நாயிற் பொல்லேன்
வெள்ளுணர்வே னெனினுமென்னை விடுதியோ விடுதியேல் வேறென் செய்கேன்
தள்ளுணர்வோ னெனினுமகன் றனையீன்றோர் புறம்பாகத் தள்ளா ரன்றே.

கலைபயின்று நெறியொழுகுங் கருத்துடையே னலனின்னைக் கனவி லேனு
மலைபயின்ற பெருங்குளத்தெம் வள்ளலே யெனத்துதியேன் வஞ்ச மில்லா
நிலைபயின்ற நல்லோர்தந் நேசமிலேன் கைதவமே நினைப்பே னந்தோ
உலைபயின்ற வரக்கெனநெஞ் சுருகேனு னேன்பிறந்தே னுதிய னேனே. 14

Koviloor Digital Library

இரும்புன்னை மலர்ச்சடையா யிவ்வுலகிற் சிலர்தங்கட் கென்று வாய்த்த
அரும்பின்னை மார்பகத்தோ னயனுதி சிறுதெய்வ மரபென் றேதுங்
கரும்பொன்னைச் செம்பொன்னிற் கைவிடா திருக்கின்றார் கடைய னேற்கே
தரும்பொன்னை மாற்றழிக்கு மரும்பொன்னி கிடைத்துமுனைத் தழுவி லேனே.

கஞ்சமலர்த் தவிசிருந்த நான்முகனு நெடுமாலுங் கருதிப் போற்ற
அஞ்சநடை யம்மைகண்டு களிக்கப்பொன் னம்பலத்தி லாடு கின்ற
எஞ்சலிலாப் பரம்பொருளே யென்குருவே யேழையினே னிடத்து நீயும்
வஞ்சநினைத் தனையாயி லென்செய்வே னென்செய்வேன் மதியி லேனே. 16

கட்டளைக் கலித்துறை

வேம்புக்குந் தண்ணிய நீர்விடு கின்றனர் வெவ்விடஞ்சேர்
பாம்புக்கும் பாலுண வீகின் றனரிப் படிமிசையான்
வீம்புக்குந் தீம்புக்கு மானே னெனினும் விடேலெனைநீ
தேம்புக்கும் வார்சடைத் தேவே கருணைச் சிவக்கொழுந்தே. 17

அடமுடி யாதுபல் லாற்றானு மேழைக் கடுத்ததுன்பம்
படமுடி யாதென்னை செய்கேனென் றன்முகம் பார்த்திரங்காய்
திடமுடி யாலயன் மால்வணங் குந்துணைச் சேவடியாய்
தடமுடி யாய்செஞ் சடைமுடி யாய்நந் தயாநிதியே. 18

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

பொல்லா வாழ்க்கைத் துயரமெனும் புணரிப் பெருக்கில் வீழ்ந்தழுந்திப்
பல்லார் நகைக்கப் பாவிபடும் பாட்டை முழுதும் பார்த்திருந்துங்
கல்லா லமர்ந்தீர் என்னிரண்டு கண்க ளனையீர் கறைமிடற்றீர்
எல்லா முடையீர் மால்விடையி ரென்னே யிரங்கி யருளீரே. 19

பொன்னை யுடையார் மிகுங்கல்விப் பொருளை யுடையா ரிவர்முன்னே
இன்ன லெனுமோர் கடல்வீழ்ந்திவ் வேழை படும்பா டறிந்திருந்தும்
மின்னை நிகருஞ் சடைமுடியீர் விடங்கொண் மிடற்றீர் வினைதவிர்ப்பீர்
என்னை யுடையீர் வெள்விடையி ரென்னே யிரங்கி யருளீரே. 20

கலி விருத்தம்

ஆயும் வஞ்சக நெஞ்சனிவ் வடியனே னையா
நீயும் வஞ்சக நெஞ்சனென் றாலிந்த நிலத்தே
ஏயு மிங்கிதற் கென்செய்வே னென்செய்வே னெனவைக்குந்
தாயுந் தந்தையு மாகியுண் ணிற்கின்றோய் சாற்றாய். 21

நானும் பொய்யலின் னடியனேன் றண்ணரு ணிதிநீ
தானும் பொய்யனென் றாலிதற் கென்செய்வேன் றலைவா
தேனும் பாலுந்தீங் கட்டியு மாகிநிற் றெளிந்தோர்
ஊனு முள்ளமு முயிருமண் ணிக்கின்ற வுரவோய். 22

நாலடித் தரவு கொச்சகக் கலிப்பா

நேசனுநீ சுற்றமுநீ நேர்நின் றளித்துவரும்
ஈசனுநீ யின்றாயு மெந்தையுநீ யென்றேநின்
தேசுறுசீ ரைந்தெழுத்துஞ் செப்புகின்ற நாயேனை
ஆசகலும் வண்ண மருள் புரிந்தா லாகாதோ. 23

Koviloor Digital Library

கட்டளைக் கலித்துறை

ஆற்ருல் விளங்குஞ் சடையோயிவ் வேழை யடியனும்பல்
லாற்ருல் வருந்தும் வருத்தமெல் லாமுற் றறிந்துமின்னம்
ஆற்ரு திருத்தனின் பேரரு ளாற்றுக் கழகுகொலோ
ஆற்ருமை மேற்கொண் டழுதா லெவரெனை யாற்றுவரே. 24

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

படியே யளந்த மாலவனும் பழைய மறைசொற் பண்ணவனும்
முடியீ றறியா முதற்பொருளே மொழியு மொற்றி நகர்க்கிறையே
அடியார் களுக்கே யிரங்கிமுன மடுத்த சுரநோய் தடுத்ததுபோற்
படிமீ தடியேற் குறுபிணிபோம் படிநீ கடைக்கண் பார்த்தருளே.

ஷை வேறு

அருளா ரமுதே யரசேநின் னடியேன் கொடியேன் முறையேயோ
இருள்சேர் மனத்தே டுடருழந்தே னெந்தா யிதுதான் முறையேயோ
மருள்சேர் மடவார் மயலாலே மாழ்கின் றேனுன் முறையேயோ
தெருளோர் சிறிது மறியாதே திகையா நின்றேன் முறையேயோ. 26

ஒழியாக் கவலை யுறுகின்றே னுடையாய் முறையோ முறையேயோ
அழியாக் கருணைக் கடலேயென் னரசே முறையோ முறையேயோ
பொழியாப் புயலே யனையார்பால் புகுவித் தனையே முறையேயோ
இழியாத் திரிதந் துழல்கின்றே னிறைவா முறையோ முறையேயோ.

எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

மதியொளிர் கங்கைச் சடைப்பெருங் கருணை வள்ளலே தெள்ளிய வமுதே
நிதியொளிர் வாழ்க்கை யிந்திரன் முதலோர் நிலைத்தவான் செல்வமு மண்ணிற்
பதியொளிர் வாழ்க்கை மணிமுடி யரசர் படைத்திடுஞ் செல்வமும் வேண்டேன்
கதியொளிர் நினது திருவருட் செல்வக் களிப்பையே கருதுகின் றனனே. 28

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

மன்ருடு மாமணியே நின்பொற் பாத
மலர்த்துணையே துணையாக வாழ்கின் றோர்க்கு
ஒன்ருலுங் குறைவில்லை யேழை யேன்யான்
ஒன்றுமிலே னிவ்வுலகி னுழலா நின்றேன்
இன்ருக நாட்கழியி லென்னே செய்கேன்
இணைமுலையார் மையலினு லிளைத்து நின்றேன்
என்ருலுஞ் சிறிதெளியேற் கிரங்கல் வேண்டும்
எழிலாரு மொற்றியூ ரின்ப வாழ்வே. 29

கட்டளைக் கலித்துறை

வெள்ளங்கொண் டோங்கும் விரிசடை யாய்மிகு மேட்டினின்றும்
பள்ளங்கொண் டோங்கும் புனல்போனின் றன்னருட் பண்புநல்லோர்
உள்ளங்கொண் டோங்கு மவமே பருத்த வொறியனையேன்
கள்ளங்கொண் டோங்கு மனத்துறு மோவுறிற் காண்குவனே. 30

Koviloor Digital Library

ஐயாமுக் கண்கொண்ட வாரமு தேயரு ளார்பவள
மெய்யாமெய்ஞ் ஞான விளக்கே கருணை விளங்கவைத்த
மையார் மிடற்று மணியேயன் றென்னை மகிழ்ந்ததந்தோ
பொய்யாவென் செய்வ லருளா யெனிலெங்கு போதுவனே. 31

நாராய ணன்றிசை நான்முக ஞதியர் நண்ணிநின்று
பாராய ணஞ்செயப் பட்டநின் சேவடிப் பங்கயமேற்
சீராய ணம்பெறப் பாடுந் திறமோர் சிறிதுமிலேன்
ஆரா யணங்குற நின்றேன்பொன் மன்றத் தமர்ந்தவனே. 32

பேய்கொண்ட நெஞ்சகப் பாழால் வருமென் பெருந்துயரை
வாய்கொண் டடங்த ரநந்தர்க்குஞ் சொல்ல வராதெனிலிந்
நாய்கொண் டுரைக்க வருமோவென் செய்குவ னச்சுமரக்
காய்கொண்டு வாழைக் கனியைக்கை விட்ட கடையவனே. 33

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

வன்மானங் கரத்தேந்து மாமணியே மணிகண்ட மணியே யன்பர்
நன்மானங் காத்தருளு மருட்கடலே யாநந்த நடஞ்செய் வாழ்வே
பொன்மானம் பிணைப்பொருந்து மம்பிணைவைத் தாண்டருளும் பொருளே நீயிங்
கென்மானங் காத்தருள வேண்டுதியோ வேண்டாயே லென்செய் வேனே.

கலி விருத்தம்

வைவ மென்றெழு கின்றவர் தமக்குநல் வாழ்வு
செய்வ மென்றெழு கின்றமெய்த் திருவருட் செயலுஞ்
சைவ **மென்பதுஞ்** சைவத்திற் சாற்றிடுந் தலைமைத்
தெய்வ மென்பது மென்னள வில்லையென் செய்வேன். 35

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

ஐய ரேயும தடியனு னுகில்
அடிக ணீரென தாண்டவ ராகில்
பொய்ய னேனுளத் தவலமும் பயமும்
புன்க ணுந்தவிர்த் தருளுதல் வேண்டும்
தைய லோர்புற நின்றுளங் களிப்பச்
சச்சி தாநந்தத் தனிநடம் புரியும்
மெய்ய ரேமிகு தூய்யரே தரும
விடைய ரேயென்றன் விழியமர்ந் தவரே. 36

கலி விருத்தம்

பொன்ன ளிக்குநற் புத்தியுந் தந்துநின்
தன்னருட் டுணைத் தாண்மலர்த் தியானமே
மன்ன வைத்திட வேண்டுமெம் வள்ளலே
என்னை நான்பல காலிங் கியம்பலே. 37

தாயுந் தந்தையுஞ் சற்குரு நாதனும்
ஆயுந் தெய்வமு நீயென்ற றிந்தனன்
பாயு மால்விடை யேறும் பரமனே
நீயுங் கைவிட வென்னை நினைத்தியோ. 38

Koviloor Digital Library

வேறு

ஒழியா மயல்கொண் டுழல்வே னவமே
அழியா வகையே யருள்வா யருள்வாய்
மொழியா மறையின் முதலே நுதலேய்
விழியாய் விழியாய் வினைதூள் படவே. 39

ஆசிரியத் தாழிசை

உலகெ லாநிறைந் தோங்கு பேரரு ளுருவ மாகியெவ் வுயிரு முய்ந்திட
இலகு வானெளி யாமணி மன்றிடை யென்று நின்றே
அலகி லாநந்த நாடகஞ் செய்ய மம்பொற் சேவடிக் கபய மென்னையுந்
திலக நீவிழை வாய்நட ராஜ சிகாமணியே. 40

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

என்னிருகண் காணுமது பெருந்தவமெப்
புவனத்தில் யார்தான் செய்வர்
முன்னிருவர் காணாம லலைந்தனரால்
இனுங்காண முயலா நின்றார்
நன்னிருபர் தொழுதேத்து மம்பலத்தே
யோரிடத்தோர் நாளா தித்தர்
பன்னிருவ ரொளிமாற்றும் பரவொளியைப்
பார்த்துயர்ந்தீர் பண்பி னீரே. 41

சேனுடர் முநிவருயர் திசைமுகன்மா
லுருத்திரனத் திரளோர் சற்றுங்
காணாத காட்சியைநான் கண்டேன்சிற்
றம்பலத்தின் கண்ணோ பன்னாள்
ஆணாகப் பிறந்தடியே னருந்தவமென்
புரிந்தேனோ வறிகி லேன்முன்
பேணாத பிறப்பெல்லாம் பிறப்பலவிப்
பிறப்பேயென் பிறப்பா மந்தோ. 42

எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

இருளற வோங்கும் பொதுவிலே நடஞ்செய்
எங்குரு நாதனெம் பெருமான்
அருளெனும் வடிவங் காட்டியொண் முகத்தே
அழகுறும் புன்னகை காட்டித்
தெருளுற வருளமைத் திருக்கையா லடவித்
திருமணி வாய்மலர்ந் தருகிற்
பொருளுற விருந்தோர் வாக்களித் தென்னுட்
புகுந்தனன் புதுமையீ தந்தோ. 43

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

பொன்னென்கோ மணியென்கோ புனிதவொளித்
திரளென்கோ பொற்பி னோங்கும்
மின்னென்கோ விளக்கென்கோ விரிசுடர்க்கோர்
சுடரென்கோ வினைய னேன்யான்

Koviloor Digital Library

என்னென்கோ வென்னென்கோ வெம்பெருமான்
திருமேனி யிருந்த வண்ணம்
முன்னென்கோ தறுதவத்தாற் கண்டுகளித்
திடப்பெற்றேன் முக்கண் மூர்த்தி. 44

வேறு

வஞ்சகர்க்கெல் லாமுதலா யறக்கடையாய்
மறத்தொழிலே வலிக்கும் பாவி
நெஞ்சகத்துன் மார்க்கனமா பாதகனைக்
கொடியேனை நீச னேனை
அஞ்சலெனக் கருணைபுரிந் தாண்டுகொண்ட
அருட்கடலை யமுதைத் தெய்வக்
கஞ்சமல ரவனெடுமாற் கரும்பொருளைப்
பொதுவினில்யான் கண்டுய்ந் தேனே. 45

கட்டளைக் கலித்துறை

நாதாபொன் னம்பலத் தேயறி வானந்த நாடகஞ்செய்
பாதா துரும்பினும் பற்றுதவென்னைப் பணிகொண் டெல்லாம்
ஓதா துணர வுணர்த்தியுள் ளேநின் றுளவுசொன்ன
நீதா நினைமறந் தென்னினைக் கேனிந்த நீணிலத்தே. 46

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

கந்த நாண்மலர்க் கழலிணை யுளத்துறக் கருதுகின் றவர்க்கெல்லாம்
பந்த நாண்வலை யவிழ்த்தருள் சிதம்பரை பரம்பரை யுடனுடும்
அந்த நாண்மகிழ் வடைபவ ருளர்சில ரவரெவ ரெனிலிங்கே
இந்த நாண்முறை திறம்பல ராயுயிர்க் கிதஞ்செயு மவரன்றே. 47

வேறு

மறைமுடி விளக்கே போற்றி மாணிக்க மலையே போற்றி
கறைமணி கண்ட போற்றி கண்ணுதற் கரும்பே போற்றி
பிறைமுடிச் சடைகொண் டோங்கும் பேரருட் குன்றே போற்றி
சிறைதவிர்த் தெனையாட் கொண்ட சிவசிவ போற்றி போற்றி. 48

திருச்சிற்றம்பலம்

106. நிந்தாஸ்துதி

அறுசீரடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

இறகெடுத்த வமணர்குலம் வேரறுத்த சொக்கேயீ தென்ன ஞாயம்
அறுகெடுத்த சடைமுடிமேல் மண்ணெடுக்க மாட்டாம லடிபட்டு ஐயோ
பிறகெடுத்தீர் வளையல் விற்றீர் சொற்கேளாப் பிள்ளைகளைப் பெற்ற தோஷம்
விறகெடுத்தீர் என்செய்வீர் விதிவசந்தான் யாவரையும் விடாது தானே.

திருச்சிற்றம்பலம்

இப்பதிகத்துள்—கலித்துறைகளும் விரவிநிற்கவும், விருத்தமெனக் குறியிட்டாளப் பட்டமைக்கீண்டு விதியெழுதப்புகின் மிகப்பெருகுமாதலின் விடுக்கப்பட்டது. சைவம் பன்னிரண்டு திருமுறைகளுள்—ஆளுடையவரசாகிய—அப்பர்சுவாமிகள் திருவாய் மலர்ந் தருளிய திருமுறையில் "குலம்பலம் பாவரும்" என்றற்றொடக்கத் திலக்கியங்களாற் கண்டு கொள்க. (தேவாரம்-4-ந் திருமுறை) (திருவாரூர், திருவிருத்தம்)

Koviloor Digital Library

திருவதிகைத் திருவீரட்டானம்

107. பெரியநாயகியம்மை தோத்திரம்

கலி விருத்தம்

திருச்சிற்றம்பலம்

உரிய நாயகி யோங்கதி கைப்பதித்
துரிய நாயகி தூயவீ ரட்டற்கே
பிரிய நாயகி பேரரு ளுயகி
பெரிய நாயகி பெற்றியைப் பேசுவாம். 1

பன்னிருசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

உலகந் தழைக்க வுயிர்தழைக்க வுணர்வு தழைக்க வொளிதழைக்க
உருவந் தழைத்த பசுங்கொடியே உள்ளத் தினிக்குந் தெள்ளமுதே
திலகந் தழைத்த நுதற்கரும்பே செல்வத் திருவே கலைக்குருவே
சிறக்கு மலைப்பெண் மணியேமா தேவி யிச்சை ஞானமொடு
வலகந் தழைக்குங் கிரியையின்பாம் வழங்கு மாதி பரையென்ன
வயங்கு மொருபே ரருளேயெம் மதியை விளக்கு மணிவிளக்கே
அலகந் தழைக்குந் திருவதிகை ஐயர் விரும்பும் மெய்யுறவே
அரிய பெரிய நாயகிப்பெண் அரசே என்னை யாண்டருளே. 2

தன்னே ரறியாப் பரவெளியிற் சத்தாஞ் சுத்த வநுபவத்தைச்
சார்ந்து நின்ற பெரியவர்க்குந் தாயே யெமக்குந் தனித்தாயே
மின்னே மின்னே ரிடைப்பிடியே விளங்கு மிதய மலரனமே
வேதம் புகலும் பசுங்கிளியே விமலக் குயிலே யிளமயிலே
பொன்னே யெல்லாம் வல்லகிரி புரையே பரையே பூரணமே
புனித மான புண்ணியமே பொற்பே கற்ப கப்பூவே
அன்னே முன்னே என்னையத் தமர்ந்த வதிகை யருட்சிவையே
அரிய பெரிய நாயகிப்பெண் அரசே யென்னை யாண்டருளே. 3

திருச்சிற்றம்பலம்

திருவோத்தூர்

108. ஞானசிகாமணி தோத்திரம்

பன்னிருசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

அணிவா யுலகத் தம்புயனு மளிக்குந் தொழிற்பொன் னம்புயனும்
அறியா வருமைத் திருவடியை யடியேந் தரிசித் தகங்குளிர
மணிவாய் மலர்ந்தெம் போல்வார்க்கு மறையுண் முடிபை வகுத்தருள
வயங்குங் கருணை வடிவெடுத்து வந்து விளங்கு மணிச்சுடரே
பிணிவாய் பிறவிக் கொருமருந்தே பேரா னந்தப் பெருவிருந்தே
பிறங்கு கதியி னருளாறே பெரியோர் மகிழ்விற் பெரும்பேறே
திணிவா யெயிற்சூழ் திருவோத்தூர் திகழ வமர்ந்த சிவநெறியே
தேவர் புகழுஞ் சிவஞானத் தேவே ஞான சிகாமணியே. 1

Koviloor Digital Library

நின்பா லறிவு நின்செயலு நீயும் பிறிதன் றெமதருவே
நெடிய விகற்ப வுணர்ச்சிகொடு நின்று யதனல் நேர்ந்திலைகாண்
அன்பா லுன்பா லொருமொழிதந் தனமிம் மொழியா லறிந்தொருங்கி
அளவா வறிவே யுருவாக வமரென் றுணர்த்து மரும்பொருளே
இன்பா லென்பாற் றருதாயி லினிய கருணை யிருங்கடலே
இகத்தும் பரத்துந் துணையாகி என்னு ளிருந்த வியனிறைவே
தென்பால் விளங்குந் திருவோத்தூர் திகழு மதுரச் செழுங்கனியே
தேவர் புகழுஞ் சிவஞானத் தேவே ஞான சிகாமணியே. 2

அசையும் பரிசாந் தத்துவமல் றவத்தை யகன்ற வறிவேநீ
யாகு மதனை யெமதருளா லலவா மென்றே யுலவாமல்
இசையும் விகற்ப நிலையையொழித் திருந்த படியே யிருந்தறிகாண்
என்றென் னுணர்வைத் தெளித்தனைக் கென்னே கைம்மா றறியேனே
நசையும் வெறுப்புந் தவிர்ந்தவர்பால் நண்ணுந் துணையே நன்னெறியே
நான்று னென்ன லறத்திகழ்ந்து நாளு மோங்கு நடுநிலையே
திசையும் புவியும் புகழோத்தூர் சீர்கொண் மதுரச் செழும்பாகே
தேவர் புகழுஞ் சிவஞானத் தேவே ஞான சிகாமணியே. 3

திருச்சிற்றம்பலம்

109. வயித்தியநாதர் பதிகம்

பதினன்குசீரடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

ஓகைமட வாரல்குலே பிரம பதமவர்கள்
உந்தியே வைகுந்த மேல்
ஓங்குமுலை யேகைலை யவர்குமுத வாயினிதழ்
ஊறலே யமுத மவர்தம்
பாகனைய மொழியேநல் வேதவாக் கியமவர்கள்
பார்வையே கருணை நோக்கம்
பாங்கினவ ரோடுவிளை யாடவரு சுகமதே
பரமசுக மாகு மிந்த
ஊகமறி யாமலே தேகமிக வாடினீர்
உறுசுவைப் பழமெ றிந்தே
உற்றவெறு வாய்மெல்லும் வீணர்நீ ரென்றுநல்
லோரை நிந்திப்ப ரவர்தம்
வாகைவாய் மதமற மருந்தருள்க தவசிகா
மணியுலக நாத வள்ளல்
மகிழவரு வேளூரி லன்பர்பவ ரோகமற
வளர் வயித்திய நாதனே. 1

Koviloor Digital Library

உண்டதே யுணவுதான் கண்டதே காட்சியிதை
உற்றறிய மாட்டார் களாய்
உயிருண்டு பாவபுண் ணியமுண்டு வினைகளுண்
டுறுபிறவி யுண்டு துன்பத்
தொண்டதே செயுநரக வாதையுண் டின்பமுறு
சொர்க்கமுண் டிவையு மன்றித்
தொழுகடவு ளுண்டுகதி யுண்டென்று சிலர்சொலுந்
துர்ப்புத்தி யாலுல கிலே
கொண்டதே சாதகம் வெறுத்துமட மாதர்தங்
கொங்கையும் வெறுத்தீர் கையில்
கொண்டதீங் கனியைவிட் டந்தரத் தொருபழங்
கொள்ளுவீ ரென்ப ரந்த
வண்டர்வா யறவொரு மருந்தருள்க தவசிகா
மணியுலக நாத வள்ளல்
மகிழவரு வேளூரி லன்பர்பவ ரோகமற
வளர் வயித்திய நாதனே. 2

உம்பர்வா னமுதனைய சொற்களாற் பெரியோர்
உரைத்தவாய் மைகளை நாடி
ஓதுகின் ளுர்தமைக் கண்டவ மதித் தெதிரில்
ஒதிபோல நிற்பது மலால்
கம்பர்வாய் இவர்வாய்க் கதைப்பென்பர் சிறுகருங்
காக்கைவாய்க் கத்த லிவர்வாய்க்
கத்தலிற் சிறிதென்பர் சூடேறு நெய்யொரு
கலங்கொள்ள வேண்டு மென்பர்
இம்பர்நாங் கேட்டகதை யிதுவென்ப ரன்றியும்
இவர்க்கேது தெரியு மென்பர்
இவையெலா மெவனோவோர் வம்பனும் வீணன்முன்
இட்டகட் டென்பர் அந்த
வம்பர்வா யறவொரு மருந்தருள்க தவசிகா
மணியுலக நாத வள்ளல்
மகிழவரு வேளூரி லன்பர்பவ ரோகமற
வளர் வயித்திய நாதனே. 3

கல்லையு முருக்கலாம் நாருரித் திடலாம்
கனிந்தகனி யாச்செய் யலாம்
கடுவிடமு முண்ணலாம் அமுதாக்க லாங்கொடுங்
கரடிபுலி சிங்க முதலா
வெல்லுயிரு கங்களையும் வசமாக்கலா மன்றி
வித்தை யுங்கற் பிக்கலாம்
மிக்கவா ழைத்தண்டை விறகாக்க லாமணலை
மேவுதேர் வடமாக் கலாம்

Koviloor Digital Library

இல்லையொரு தெய்வம்வே றில்லையெம் பாலின்பம்
ஈகின்ற பெண்கள் குறியே
எங்கள்குல தெய்வமெனு மூடரைத் தேற்றவெனில்
எத்துணையு மரிதரிது காண்
வல்லையவ ருணர்வுற மருந்தருள்க தவசிகா
மணியுலக நாத வள்ளல்
மகிழவரு வேளூரி லன்பர்பவ ரோகமற
வளர் வயித்திய நாதனே. 4

படியளவு சாம்பலைப் பூசியே சைவம்
பழுத்த பழமோ பூசணைப்
பழமோ வெனக்கருங் கல்போலு மசையாது
பாழாகு கின்றார்க ளோர்
பிடியளவு சாதமுங் கொள்ளார்கள் அல்லதொரு
பெண்ணை யெனினுங் கொள்கிலார்
பேய்கொண்ட தோவன்றி நோய்கொண்ட தோபெரும்
பித்தேற்ற தோவறிகி லேன்
செடியளவு மூத்தைவாய்ப் பல்லமுக் கெல்லாந்
தெரிந்திடக் காட்டி நகைதான்
செய்துவலை யாப்பெருஞ் செம்மரத் துண்டுபோற்
செம்மாப்ப ரவர்வாய் மதம்
மடியளவ தாவொரு மருந்தருள்க தவசிகா
மணியுலக நாத வள்ளல்
மகிழவரு வேளூரி லன்பர்பவ ரோகமற
வளர் வயித்திய நாதனே. 5

பெண்கொண்ட சுகமதே கண்கண்ட பலனிது
பிடிக்கவறி யாது சிலர்தாம்
பேரூரி லாதவொரு வெறுவெளியிலே சுகம்
பெறவே விரும்பி வீணிற்
பண்கொண்ட வுடல்வெளுத் துள்ளே நரம்பெலாம்
பசையற்று மேலெ ழும்பப்
பட்டினி கிடந்து சாகின்றார்க ளீதென்ன
பாவமிவ ருண்மை யறியார்
கண்கொண்ட குருடரே யென்றுவாய்ப் பல்லெல்லாங்
காட்டிச் சிரித்து நீண்ட
கழுமரக் கட்டைபோல் நிற்பார்க ளையவிக்
கயவர்வாய் மதமு முதுமே
மண்கொண்டு போகவோர் மருந்தருள்க தவசிகா
மணியுலக நாத வள்ளல்
மகிழவரு வேளூரி லன்பர்பவ ரோகமற
வளர் வயித்திய நாதனே. 6

Koviloor Digital Library

திருத்தமுடை யோர்கருணை யாலிந்த வுலகில்
தியங்குவீ ரழியாச் சுகம்
சேருலக மாம்பரம பதமதனை யடையுநெறி
சேரவா ருங்க ளென்றால்
இருத்தினிய சுவையுணவு வேண்டுமணி யாண்டதரும்
இடம்வேண்டு மிவைக ளெல்லாம்
இல்லையா யினுமிரவு பகலென்ப தறியாமல்
இறுகப் பிடித்த ணைக்கப்
பெருத்தமுலை யோடிளம் பருவமுட னழகுடைய
பெண்ணகப் படுமா கிலோ
பேசிட ரப்பரம பதநாட்டி னுக்குநும்
பிறகிதோ வருவ மென்பார்
வருத்துமவ ருறவற மருந்தருள்க தவசிகா
மணியுலக நாத வள்ளல்
மகிழவரு வேளூரி லன்பர்பவ ரோகமற
வளர் வயித்திய நாதனே. 7

பேதையுல கீர்விரத மேதுதவ மேதுவீண்
பேச்சிவை யெலாம் வேதனும்
பித்தன்வாய்ப் பித்தேறு கத்துநூல் கத்திய
பெரும்புரட் டாகு மல்லால்
ஓதையுறும் உலகா யதத்திலுள வுண்மைபோல்
ஒருசிறிது மில்லை யில்லை
உள்ளதறி யாதிலவு காத்தகிளி போலுடல்
உலர்ந்தீர்க ளினியா யினும்
மேதையுண வாதிவேண் டுவவெலா முண்டுநீர்
விரைமலர்த் தொடை யாதியா
வேண்டுவ வெலாங்கொண்டு மேடைமேற் பெண்களொடு
விளையாடு வீர்க ளென்பார்
வாதையவர் சார்பற மருந்தருள்க தவசிகா
மணியுலக நாத வள்ளல்
மகிழவரு வேளூரி லன்பர்பவ ரோகமற
வளர் வயித்திய நாதனே. 8

ஈனம் பழுத்தமன வாதையற நின்னருளை
எண்ணிநல் லோர்க ளொருபால்
இறைவநின் தோத்திர மியம்பியிரு கண்ணீர்
இறைப்ப வதுகண்டு நின்று
ஞானம் பழுத்துவிழி யாலொழுகு கின்றநீர்
நம்முலகி லொருவ ரலவே
ஞானியிவர் யோனிவழி தோன்றியவ ரோவென
நகைப்பர் சும்மா வழுகிலோ

Koviloor Digital Library

ஊனங் குழுத்தகண் ணுமென்ப ருலகத்தில்
உயர்பெண்டு சாக்கொ டுத்த
ஒருவன்முக மென்னவிவர் முகம்வாடு கின்றதென
உளறு வார்வா யடங்க
மானம் பழுத்திடு மருந்தருள்க தவசிகா
மணியுலக நாத வள்ளல்
மகிழவரு வேளூரி லன்பர்பவ ரோகமற
வளர் வயித்திய நாதனே. 9

கற்பவை யெலாங்கற் றுணர்ந்தபெரி யோர்தமைக்
காண்பதே யருமை யருமை
கற்பதரு மிடியனிவ னிடையடைந் தாலெனக்
கருணையா லவர் வலியவந்
திற்புற னிருப்பவது கண்டுமங் தோகடி
தெழுந்துபோய்த் தொழுது தங்கட்
கியலுறுதி வேண்டாது கண்கெட்ட குருடர்போல்
ஏமாந் திருப்ப ரிவர்தாம்
பொற்பினறு சுவையறியு மறிவுடைய ரன்றுமேற்
புல்லாதி யுணு முயிர்களும்
போன்றிடா ரிவர்களைக் கூரைபோய்ப் பாழாம்
புறச்சுவ ரெனப் புகலலாம்
வற்புறும் படிதரும வழியோங்கு தவசிகா
மணியுலக நாத வள்ளல்
மகிழவரு வேளூரி லன்பர்பவ ரோகமற
வளர் வயித்திய நாதனே. 10

மெய்யோர் தினைத்தனையு மறிகிலார் பொய்க்கதை
விளம்பவெனி லிவ்வு லகிலோ
மேலுலகி லேறுகினு மஞ்சாது மொழிவர்தெரு
மேவுமண் ணெனினு முதவக்
கையோ மனத்தையும் விடுக்கவிசை யார்கள்கொலை
களவுகட் காம முதலாக்
கண்டதீ மைகளன்றி நன்மையென் பதனையொரு
கனவிலுங் கண்டறி கிலார்
ஐயோமு னிவர்தமை விதிப்படி படைத்தவிதி
யங்கைதாங் கங்கை யென்னும்
ஆற்றிற் குளிக்கினுந் தீமூழ்கி யெழினுமவ்
வசுத்த நீங்காது கண்டாய்
மையோ ரணுத்துணையு மேவுறுத் தவசிகா
மணியுலக நாத வள்ளல்
மகிழவரு வேளூரி லன்பர்பவ ரோகமற
வளர் வயித்திய நாதனே. 11

Koviloor Digital Library

இளவேனின் மாலையாய்க் குளிர்சோலை யாய்மலர்
இலஞ்சிபூம் பொய்கை யருகாய்
ஏற்றசந் திரகாந்த மேடையா யதன்மேல்
இலங்கு மரமிய வணையுமாய்
தளவேயு மல்லிகைப் பந்தராய்ப் பால்போற்
றழைத்திடு நிலாக் காலமாய்த்
தனியிளந் தென்றலாய் நிறைநரம் புளவீணை
தன்னிசைப் பாட விடமாய்
களவே கலந்தகற் புடையமட வரல்புடை
கலந்தநய வார்த்தை யுடனுய்க்
களிகொள இருந்தவர்கள் கண்டசுகம் நின்னடிக்
கழனிழற் சுக நிகருமே
வளவேலை சூழுலகு புகழ்கின்ற தவசிகா
மணியுலக நாத வள்ளல்
மகிழவரு வேளூரி லன்பர்பவ ரோகமற
வளர் வயித்திய நாதனே. 12

திருச்சிற்றம்பலம்

110. ஸ்ரீ ராமநாமத் திருப்பதிகம்

எழுசீரடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

காராய வண்ண மணிவண்ண கண்ண கனசங்கு சக்ர தரநீள்
சீராய தூய மலர்வாய நேய ஸ்ரீராம ராம னெனவே
தாராய வாழ்வு தருநெஞ்சு சூழ்க தாமோத ராய நமவோம்
நாராய ணாய நமவாம னாய நமகேச வாய நமவே. 1

எண்சீரடி ஆசிரிய விருத்தம்

திருமகளெம் பெருமாட்டி மகிழும் வண்ணச்
செழுங்கனியே கொழும்பாகே தேனே தெய்வத்
தருமகனைக் காத்தருளக் கரத்தே வென்றித்
தநுவெடுத்த வொருமுதலே தருமப் பேறே
இருமையுமென் னுளத்தமர்ந்த ராம நாமத்
தென்னரசே யென்னமுதே யென்று யேநின்
மருமலர்ப்பொன் னடிவழுத்துஞ் சிறியேன் அந்தோ
மனந்தளர்ந்தேன் அறிந்தும்அருள் வழங்கி லாயே. 2

கலைக்கடலே கருணைநெடுங் கடலே கானங்
கடந்ததடங் கடலேயென் கருத்தே ஞான
மலைக்கணெழுஞ் சுடரேவான் சுடரே யன்பர்
மனத்தொளிருஞ் சுயஞ்சுடரே மணியே வானோர்
தலைக்கணுறு மகுடசிகா மணியே வாய்மைத்
தசரதன்றன் குலமணியே தமியேன் உள்ளம்
நிலைக்கணுறும் ஸ்ரீராம வள்ளலே யென்
நிலையறிந்தும் அருளவின்னு நினைந்தி லாயே. 3

Koviloor Digital Library

மண்ணுளா நின்றவர்தம் வாழ்வு வேண்டேன்
மற்றவர்போற் பற்றடைந்து மாள வேண்டேன்
விண்ணுளா நின்றவொரு மேன்மை வேண்டேன்
வித்தகநின் றிருவருளே வேண்டி நின்றேன்
புண்ணுளா நின்றமன முடையேன் செய்த
பொய்யனைத்துந் திருவுளத்தே பொறுப்பா யன்றிக்
கண்ணுளா சுடர்க்கமலக் கண்ணு என்னைக்
கைவிடிலென் செய்வேனே கடைய னேனே. 4

தெவ்வினையார் அரக்கர்குலஞ் செற்ற வெற்றிச்
சிங்கமே யெங்கள்குல தெய்வ மேயோ
வெவ்வினைதீர்த் தருள்கின்ற ராம நாம
வியன்சுடரே யிவ்வுலக விடயக் காட்டில்
இவ்வினையேன் அகப்பட்டேன் புலனுங் கள்வர்க்
கிலக்கானேன் துணையொன்று மில்லேன் அந்தோ
செய்வினையொன் றறியேனிங் கென்னை யெந்தாய்
திருவுளத்திற் சேர்த்திலையேற் செய்வ தென்னே. 5

வான்வண்ணக் கருமுகிலே மழையே நீல
மணிவண்ணக் கொழுஞ்சுடரே மருந்தே வானத்
தேன்வண்ணச் செழுஞ்சுவையே ராம நாமத்
தெய்வமே நின்புகழைத் தெளிந்தே ஓதா
ஊன்வண்ணப் புலைவாயர் இடத்தே சென்றுங்
குழைக்கின்றேன் செய்வகையொன் றுணரேன் அந்தோ
கான்வண்ணக் குடும்பத்திற் கிலக்கா வென்னைக்
காட்டினையே யென்னேநின் கருணை யீதோ. 6

பொன்னுடையார் வாயிலிற்போய் வீணே காலம்
போக்குகின்றேன் இவ்வுலகப் புணர்ப்பை வேண்டி
என்னுடையாய் நின்னடியை மறந்தேன் அந்தோ
என்செய்கேன் என்செய்கேன் ஏழையே னுன்
பின்னுடையேன் பிழையுடையேன் அல்லா லுன்றன்
பேரருளும் உடையேனே பிறந்தேன் வாளா
உன்னுடைய திருவுளத்தென் னினைதி யோவென்
ஒருமுதல்வா ஸ்ரீராமா வுணர்கி லேனே. 7

அறம்பழுக்குந் தருவேயென் குருவே யென்றன்
ஆருயிருக் கொருதுணையே யரசே பூவை
நிறம்பழுக்க அழகொழுகும் வடிவக் குன்றே
நெடுங்கடலுக் கணையளித்த நிலையே வெய்ய
மறம்பழுக்கும் இலங்கையிரா வணனைப் பண்டோர்
வாளியினூற் பணிகொண்ட மணியே வாய்மைத்
திறம்பழுக்கும் ஸ்ரீராம வள்ள லேநின்
திருவருளே யன்றிமற்றோர் செயலி லேனே. 8

Koviloor Digital Library

கல்லாய வன்மனத்தர் தம்பாற் சென்றே
கண்கலக்கங் கொள்கின்றேன் கவலை வாழ்வை
எல்லாமுள் ளிருந்தறிந்தா யன்றோ சற்றும்
இரங்கிலையெம் பெருமானே யென்னே யென்னே
பொல்லாத வெவ்வினையேன் எனினும் என்னைப்
புண்ணியனே புரப்பதருட் புகழ்ச்சி யன்றோ
அல்லார்ந்த துயர்கடலின் றெடுத்தி டாயேல்
ஆற்றேனுன் பழிநின்பால் ஆக்கு வேனே. 9

மையார்ந்த நெஞ்சகத்தோர் வாயில் சார்ந்தே
மனந்தளர்ந்தேன் வருந்துகின்ற வருத்த மெல்லாம்
ஐயாவென் உளத்தமர்ந்தாய் நீதான் சற்றும்
அறியாயோ அறியாயேல் அறிவார் யாரே
பொய்யான தன்மையினேன் எனினு மென்னைப்
புறம்விடுத்தல் அழகேயோ பொருளா வெண்ணி
மெய்யாவென் றனையந்நாள் ஆண்டா யிந்நாள்
வெறுத்தனையேல் எங்கேயான் மேவு வேனே. 10

கூறுவதோர் குணமில்லாக் கொடிதாஞ் செல்வக்
குருட்டறிவோர் இடைப்படுமென் குறைக ளெல்லாம்
ஆறுவதோர் வழிகாணேன் அந்தோ அந்தோ
அவலமெனுங் கருங்கடலில் அழுந்து கின்றேன்
ஏறுவதோர் வகையறியேன் எந்தா யெந்தாய்
ஏற்றுகின்றோர் நின்னையன்றி இல்லேன் என்னைச்
சீறுவதோ இரங்குவதோ யாதோ வுன்றன்
திருவுளத்தைத் தெரியேனே சிறிய னேனே. 11

திருச்சிற்றம்பலம்

திருவெவ்வுளூர் ஸ்ரீ வீரராகவப் பெருமாள்

111 போற்றித் திருப்பஞ்சகம்

அறுசீரடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

தண்ணமர் மதியே சாந்தந் தழைத்தசத் துவனே போற்றி
வண்ணமா மணியே போற்றி மணிவண்ணத் தேவா போற்றி
அண்ணலே எவ்வு ளூரில் அமர்ந்தரு ளாதி போற்றி
விண்ணவர் முதல்வா போற்றி வீரரா கவனே போற்றி. 1

பாண்டவர் தூத னாகப் பலித்தருள் பரனே போற்றி
நீண்டவ னென்ன வேதம் நிகழ்த்துமா நிதியே போற்றி
தூண்டலில் லாம லோங்குஞ் ஜோதிநல் விளக்கே போற்றி
வேண்டவ ரெவ்வு ளூர்வாழ் வீரராக கவனே போற்றி. 2

Koviloor Digital Library

மேதினி புரக்கும் வேந்தர் வீறெலாம் நினதே போற்றி
கோதிலா மனத்தே நின்று குலாவிய கோவே போற்றி
ஓதிய எவ்வு ளூரில் உறைந்தருள் புரிவாய் போற்றி
வேதியன் றன்னை யீன்ற வீரரா கவனே போற்றி. 3

இளங்கொடி தனைக்கொண் டேகும் இராவணன் றனை யழித்தே
களங்கமில் விபீட ணர்க்குக் கனவர சளித்தாய் போற்றி
துளங்குமா தவத்தோ ருற்ற துயரெலாந் தவிர்த்தாய் போற்றி
விளங்குநல் எவ்வு ளூர்வாழ் வீரரா கவனே போற்றி. 4

அற்புதத் திருவை மார்பில் அணைத்தபே ரழகா போற்றி
பொற்புறு திகிரி சங்கு பொருந்துகைப் புனிதா போற்றி
வற்புறு பிணிதீர்த் தென்னை மகிழ்வித்த வரதா போற்றி
வெற்புய ரெவ்வு ளூர்வாழ் வீரரா கவனே போற்றி. 5

திருச்சிற்றம்பலம்

திருக்கண்ணமங்கை

112. இலக்குமி தோத்திரம்

பன்னிருசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

உலகம் புரக்கும் பெருமான்றன் உளத்தும் புயத்தும் அமர்ந்தருளி
உவகை யளிக்கும் பேரின்ப வுருவே யெல்லாம் உடையாளே
திலகஞ் செறிவா ணுதற்கரும்பே தேனே கனிந்த செழுங்கனியே
தெவிட்டா தன்பர் உளத்துள்ளே தித்தித் தெழுமோர் தெள்ளமுதே
மலகஞ் சுகத்தேற் கருளளித்த வாழ்வே யென்கண் மணியேயென்
வருத்தந் தவிர்க்க வருங்குருவாம் வடிவே ஞான மணிவிளக்கே
சலகந் தரம்போற் கருணைபொழி தடங்கண் திருவே கண்ணமங்கைத்
தாயே சரணஞ் சரணமிது தருணங் கருணை தருவாயே.

திருச்சிற்றம்பலம்

சென்னப்பட்டணம் ஏழுகிணற் றருகிலிருக்கும்

துலுக்காணத் தம்மன்பேரில்*
பஞ்சரத்தினம்

திருச்சிற்றம்பலம்

சீர்வளர் மதியுந் திருவளர் வாழ்க்கைச் செல்வமுங் கல்வியும் பொறையும்
பார்வளர் திறனும் பயன்வளர் பரிசும் பத்தியு மெனக்கருள் பரிந்தே
வார்வளர் தனத்தாய் மருவளர் குழலாய் மணிவள ரணிமலர் முகத்தாய்
ஏர்வளர் குணத்தா யிசைதுலுக் காணத் திரேணுகை யெனுமொரு திருவே. 1

உவந்தொரு காசும் உதவிடாக் கொடிய உலுத்தர்தங் கடைதொறு மோடி
அவந்தனி லலையா வகையெனக் குன்றன் அகமலர்ந் தருளுதல் வேண்டும்
நவந்தரு மதிய நிவந்தபூங் கொடியே நலந்தரு நகைமணிக் கோவை
இவந்தோளிர் பசுந்தோ ளிசைதுலுக் காணத் திரேணுகை யெனுமொரு திருவே.

Koviloor Digital Library

விருந்தினர் தம்மை யுபசரித் திடவும் விரவுறு முறவினர் மகிழத்
திருந்திய மனத்தால் நன்றிசெய் திடவுஞ் சிறியனேற் கருளுதல் வேண்டும்
வருந்திவந் தடைந்தோர்க் கருள்செயுங் கருணை வாரியே வடிவுறு மயிலே
இருந்திசை புகழு மிசைதுலுக் காணத் திரேணுகை யெனுமொரு திருவே. 3

புண்ணியம் புரியும் புனிதர்தஞ் சார்பும் புத்திரர் மனைவியே முதலாய்
நண்ணிய குடும்ப நலம்பெறப் புரியும் நன்குமென் றனக்கருள் புரிவாய்
விண்ணிய கதிரி னொளிசெயு மிழையாய் விளங்கரு ளொழுகிய விழியாய்
எண்ணிய அடியர்க் கிசைதுலுக் காணத் திரேணுகை யெனுமொரு திருவே. 4

மனமெலி யாமற் பிணியடை யாமல் வஞ்சகர் தமைமரு வாமற்
சினமிலை யாம லுடல்சலி யாமற் சிறியனே னுறமகிழ்ந் தருள்வாய்
அனமகிழ் நடையா யணிதுடி யிடையாய் அழகுசெய் காஞ்சன வுடையாய்
இனமகிழ் சென்னை யிசைதுலுக் காணத் திரேணுகை யெனுமொரு திருவே. 5

திருச்சிற்றம்பலம்

இரண்டாவது திருமுறை
முற்றிற்று.

* இப்பஞ்சரத்தினம்—முதல் இரண்டு பதிப்புகளில் காணப்படவில்லை. திரு-காரணப்பட்டு கந்தசாமி பிள்ளை பார்வையிடப்பட்ட தீ. நா. முத்தைய்ய செட்டியார் பதிப்பில் மட்டும் உளது.

குறிப்பு:—இரண்டாவது திருமுறையில்உள்ள கீர்த்தனைகள் யாவும் ஆறுவது திருமுறையில்உள்ள கீர்த்தனைகளுடன் சேர்க்கப்பட்டுள்ளன.

Koviloor Digital Library

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

அருட்பெருஞ்ஜோதி

திருவருட்பா

மூன்றாவது திருமுறை

திருவொற்றியூர்

1. திருவுலாப்பேறு

தலைவி பாங்கியொடு கிளத்தல்

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

சீரார் வளஞ்சேர் ஒற்றிநகர்த் தியாகப் பெருமான் பவனிதனை
ஊரா ருடன்சென் றெனதுநெஞ்ச முவகை யோங்கப் பார்த்தனன்காண்
வாரார் முலைகண் மலைகளென வளர்ந்த வளைகள் தளர்ந்தனவால்
ஏரார் குழலா யென்னடிநா னிச்சை மயமாய் நின்றதுவே. 1

சீர்த்தேன் பொழிலா ரொற்றிநகர்த் தியாகப் பெருமான் பவனிவரப்
பார்த்தேன் கண்க ளிமைத்திலகாண் பைம்பொன் வளைக ளமைத்திலகாண்
தார்த்தேன் குழலுஞ் சரிந்தனகாண் தானை யிடையிற் பிரிந்தனகாண்
ஈர்த்தேன் குழலா யென்னடிநா னிச்சை மயமாய் நின்றதுவே. 2

Koviloor Digital Library

சீதப் புனல்சூழ் வொற்றித் தியாகப் பெருமான் றிருமாட
வீதிப் பவனி வரக்கண்டேன் மென்பூந் துகில்வீழ்ந் ததுகாணேன்
போதிற் றெனவு முணர்ந்திலேன் பொன்ன ரைர்பின் போதுகிலேன்
ஈதற் புதமே யென்னடிநா னிச்சை மயமாய் நின்றதுவே. 3

தென்னூர் சோலைத் திருவொற்றித் தியாகப் பெருமான் பவனிவரப்
பொன்னூர் வீதி தனிற்பார்த்தேன் புளகம் போர்த்தேன் மயல்பூத்தேன்
மின்னூர் பலர்க்கு முன்னுகை மேவி யவன்ற னெழில்வேட்டு
என்னு ரணங்கே யென்னடிநா னிச்சை மயமாய் நின்றதுவே. 4

சீலக் குணத்தோர் புகழொற்றித் தியாகப் பெருமான் பவனியிராக்
காலத் தடைந்து கண்டேனென் கண்க ளிரண்டோ வாயிரமோ
ஞாலத் தவர்க ளலர்தூற்ற நற்றா சிடையி னழுவிவிழ
ஏலக் குழலா யென்னடிநா னிச்சை மயமாய் நின்றதுவே. 5

சேயை யருளுந் திருவொற்றித் தியாகப் பெருமான் வீதிதனில்
தூய பவனி வரக்கண்டேன் சூழ்ந்த மகளிர் தமைக்காணேன்
தாயை மறந்தே னன்றியுமென் றனையு மறந்தேன் றனிப்பட்டே
ஏயென் றோழி யென்னடிநா னிச்சை மயமாய் நின்றதுவே. 6

திங்க ளுலவும் பொழிலொற்றித் தியாகப் பெருமான் றிருவீதி
அங்கண் களிக்கப் பவனிவந்தா னதுபோய்க் கண்டேன் தாயரெலாந்
தங்கள் குலத்துக் கடாதென்றூர் தம்மை விடுத்தேன் தனியாகி
எங்க ணணையா யென்னடிநா னிச்சை மயமாய் நின்றதுவே. 7

தேசார் மணிசூ ழொற்றிநகர்த் தியாகப் பெருமான் பவனிவரக்
கூசா தோடிக் கண்டரையிற் கூறை யிழந்தேன் கைவளைகள்
வீசா நின்றேன் தாயரெலாம் வீட்டுக் கடங்காப் பெண்ணெனவே
ஏசா நிற்க வென்னடிநா னிச்சை மயமாய் நின்றதுவே. 8

தேடார்க் கரியா னொற்றிநகர்த் தியாகப் பெருமான் பவனிவரத்
தோடார் பணைத்தோட் பெண்களொடுஞ் சூழ்ந்து மகிழ்ந்து கண்டதன்றி
வாடாக் காதல் கொண்டறியேன் வளையுந் துகிலுஞ் சோர்ந்ததுடன்
ஏடார் கோதை யென்னடிநா னிச்சை மயமாய் நின்றதுவே. 9

திருமாற் கரியா னொற்றிநகர்த் தியாகப் பெருமான் பவனிவரப்
பெருமான் மனமு நானுமுன்னும் பின்னுஞ் சென்று கண்டேமால்
பொருமா நின்றேன் தாயரெலாம் போவென் றீர்க்கப் போதுகிலேன்
இருண்மான் குழலா யென்னடிநா னிச்சை மயமாய் நின்றதுவே. 10

திருச்சிற்றம்பலம்

Koviloor Digital Library

திருவொற்றியூர்

2. நாரையுங் கிளியும் நாட்டுறு தூது

தலைவி பறவைமேல் வைத்துப் பையுளெய்தல்

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

கண்ண னெடுநாண் மண்ணிடந்துங் காணக் கிடையாக் கழலுடையார்
நண்ணும் ஒற்றி நகரார்க்கு நாராய் சென்று நவிற்றுயோ
அண்ண லுமது பவனிகண்ட வன்று முதலா யின்றளவும்
உண்ணு முணவோ டுறக்கமுநீத் துற்றா ளென்றிவ் வொருமொழியே. 1

மன்னுங் கருணை வழிவிழியார் மதுர மொழியா ரொற்றிநகர்த்
துன்னு மவர்தந் திருமுன்போய்ச் சுகங்கா ணின்று சொல்லீரோ
மின்னுந் தேவர் திருமுடிமேல் விளங்குஞ் சடையைக் கண்டவடன்
பின்னுஞ் சடையை யவிழ்த்தொன்றும் பேசா ளும்மைப் பிரிந்தென்றே.

வடிக்குந் தமிழ்த்தீந் தேனென்ன வசனம் புகல்வா ரொற்றிதனில்
நடிக்குந் தியாகர் திருமுன்போய் நாராய் நின்று நவிற்றுயோ
பிடிக்குங் கிடையா நடையுடைய பெண்க ளெல்லாம் பிச்சியென
நொடிக்கும் படிக்கு மிகுங்காம நோயால் வருந்தி நோவதுவே. 3

மாய மொழியார்க் கறிவறியார் வண்கை யுடையார் மறைமணக்குந்
தூய மொழியா ரொற்றியிற்போய்ச் சுகங்கா ணின்று சொல்லீரோ
நேய மொழியாள் பந்தாடா ணில்லாள் வாச நீராடாள்
ஏய மொழியாள் பாலனமு மேலா ளும்மை யெண்ணியென்றே. 4

ஒல்லார் புரமூன் றெரிசெய்தா ரொற்றி யமர்ந்தா ரெல்லார்க்கும்
நல்லார் வல்லா ரவர்முன்போய் நாராய் நின்று நவிற்றுதியே
அல்லார் குழலாள் கண்ணீரா மாற்றி லலைந்தா ளணங்கனையார்
பல்லார் சூழ்ந்து பழிதூற்றப் படுத்தாள் விடுத்தா ளாயமென்றே. 5

ஓவா நிலையார் பொற்சிலையா ரொற்றி நகரா ருண்மைசொலுந்
தூவாய் மொழியா ரவர்முன்போய்ச் சுகங்கா ணின்று சொல்லீரோ
பூவார் முடியாள் பூமுடியாள் போவாள் வருவாள் பொருந்துகிலாள்
ஆவா வென்பாள் மகளிரொடு மாடாள் தேடா ளனமென்றே. 6

வட்ட மதிபோ லழகொழுகும் வதன விடங்க ரொற்றிதனில்
நட்ட நவில்வா ரவர்முன்போய் நாராய் நின்று நவிற்றுயோ
கட்ட வவிழ்ந்த குழன்முடியாள் கடுகி விழுந்த கலைபுனையாள்
முட்ட விலங்கு முலைபிணையு மூடாள் மதனை முனிந்தன்றே. 7

வேலை விடத்தை மிடற்றணிந்த வெண்ணீற் றழகர் விண்ணளவுஞ்
சோலை மருவு மொற்றியிற்போய்ச் சுகங்கா ளவர்முன் சொல்லீரோ
மாலை மனத்தாள் கற்பகப்பூ மாலை தரினும் வாங்குகிலாள்
காலை யறியாள் பகலறியாள் கங்கு லறியாள் கலிந்தென்றே. 8

Koviloor Digital Library

மாண்காத் தளிர்க்கு மொற்றியினூர் வான மகளிர் மங்கலப்பொன்
ஞண்காத் தளித்தா ரவர்முன்போய் நாராய் நின்று நவிற்றுதியோ
பூண்காத் தலியாள் புலம்பிநின்ருள் புரண்டா ளயன்மா லாதியராஞ்
சேண்காத் தலிப்போர் தேற்றுகினுந் தேருள் மனது திறனென்றே. 9

தேசு பூத்த வடிவழகர் திருவா மொற்றித் தேவர்புலித்
தூசு பூத்த கீளுடையார் சுகங்கா ளவர்முன் சொல்லீரோ
மாசு பூத்த மணிபோல வருந்தா நின்ருள் மங்கையர்வாய்
ஏசு பூத்த வலர்கொடியா யிளைத்தா ளும்மை யெண்ணியென்றே. 10

திருச்சிற்றம்பலம்

திருவொற்றியூர்

3. இரங்கன் மாலை

தலைவி இரங்கல்

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

நன்று புரிவார் திருவொற்றி நாத ரெனது நாயகனூர்
மன்று ளமர்வா ர் மால்விடைமேல் வருவா ரவரை மாலையிட்ட
அன்று முதலா யின்றளவு மங்தோ சற்று மணைந்தறியேன்
குன்று நிகர்பூண் முலையாயென் குறையை யெவர்க்குக் கூறுவனே. 1

தகைசே ரொற்றித் தலத்தமர்ந்தார் தரியார் புரங்கள் தழலாக்க
நகைசேர்ந் தவரை மாலையிட்ட நாளே முதலிந் நாளளவும்
பகைசேர் மதன்பூச் சூடலன்றிப் பதப்பூச் சூடப் பார்த்தறியேன்
குகைசே ரிருட்பூங் குழலாயென் குறையை யெவர்க்குக் கூறுவனே. 2

தோடார் குழையா ரொற்றியினூர் தூயர்க் கலது சுகமருள
நாடா ரவர்க்கு மாலையிட்ட நாளே முதலிந் நாளளவுஞ்
சூடா மலர்போ லிருந்ததல்லாற் சுகமோ ரணுவுந் துய்த்தறியேன்
கோடா வொல்குங் கொடியேயென் குறையை யெவர்க்குக் கூறுவனே. 3

அண்ட ரெவர்க்கு மறிவொண்ணு ரணியா ரொற்றி யார்நீல
கண்ட ரவர்க்கு மாலையிட்ட கடனேயன்றி மற்றவரால்
பண்ட மறியேன் பலனறியேன் பரிவோ டணையப் பார்த்தறியேன்
கொண்டன் மனக்குங் கோதாயென் குறையை யெவர்க்குக் கூறுவனே.

பாடல் கமழும் பதமுடையார் பணைசே ரொற்றிப் பதியுடையார்
வாட லெனவே மாலையிட்ட மாண்பே யன்றி மற்றவரால்
ஆட லளிசூழ் குழலாயுன் னாணை யொன்று மறியனடி
கூடல் பெறவே வருந்துகின்றேன் குறையை யெவர்க்குக் கூறுவனே. 5

துடிசேர் கரத்தா ரொற்றியில்வாழ் சோதி வெண்ணீற் றழகரவர்
கடிசேர்ந் தென்னை மாலையிட்ட கடனே யன்றி மற்றவராற்
பிடிசேர் நடைநேர் பெண்களைப்போற் பின்னை யாதும் பெற்றறியேன்
கொடிநே ரிடையா யென்னடியேன் குறையை யெவர்க்குக் கூறுவனே.6

Koviloor Digital Library

ஒற்றி நகர்வா ழுத்தமனா ருயர்மால் விடையா ருடையார்தாம்
பற்றி யென்னை மாலையிட்ட பரிசே யன்றிப் பகைதெரிந்து
வெற்றி மதனன் வீறடங்க மேவி யணைந்தா ரல்லரடி
குற்ற மணுவுஞ் செய்தறியேன் குறையை யெவர்க்குக் கூறுவனே. 7

வானும் புவியும் புகழொற்றி வாணர் மலர்க்கை மழுவினொடு
மானு முடையா ரென்றனக்கு மாலையிட்ட தொன்றல்லால்
நானு மவருங் கூடியொரு நாளுங் கலந்த தில்லையடி
கோனுந் தியவேற் கண்ணாயென் குறையை யெவர்க்குக் கூறுவனே. 8

தெறித்து மணிக ளலைசிறக்குந் திருவா ழொற்றித் தேவரெனை
வறித்திங் கெளியேன் வருந்தாமல் மாலை யிட்ட நாளலது
மறித்து மொருநாள் வந்தென்னை மருவி யணைய நானறியேன்
குறித்திங் குழன்றேன் மாதேயென் குறையை யெவர்க்குக் கூறுவனே. 9

மின்னோ டொக்கும் வேணியினார் விமல ரொற்றி வாணரெனைத்
தென்னோ டொக்க மாலையிட்டுச் சென்றார் பின்பு சேர்ந்தறியார்
என்னோ டொத்த பெண்களெலா மேசி நகைக்க விடருழந்தேன்
கொன்னோ டொத்த கண்ணாயென் குறையை யெவர்க்குக் கூறுவனே. 10

உடுக்கு மதளா ரொற்றியினா ருலகம் புகழு முத்தமனார்
தொடுத்திங் கெனக்கு மாலையிட்ட சுகமே யன்றி யென்னுடனே
படுத்து மறியா ரெனக்குரிய பரிவிற் பொருளோ ரெள்ளளவுங்
கொடுத்து மறியார் மாதேயென் குறையை யெவர்க்குக் கூறுவனே. 11

உழையொன் றணிகைத் தலமுடையா ரொற்றி யுடையா ரென்றனக்கு
மழையொன் றலர்பூ மாலையிட்டார் மறித்தும் வந்தா ரல்லரடி
பிழையொன் றறியேன் பெண்களெலாம் பேசி நகைக்கப் பெற்றேன்காண்
குழையொன் றியகண் மாதேயென் குறையை யெவர்க்குக் கூறுவனே. 12

ஏடார் பொழில்சூ ழொற்றியினா ரென்கண் ணனையா ரென்றலைவர்
பீடார் மாலை யிட்டதன்றிப் பின்னோர் சுகமும் பெற்றறியேன்
வாடாக் காதற் பெண்களெலாம் வலது பேச நின்றனடி
கோடார் கொங்கை மாதேயென் குறையை யெவர்க்குக் கூறுவனே. 13

கஞ்ச னறியா ரொற்றியினார் கண்மூன் றுடையார் கனவினிலும்
வஞ்ச மறியா ரென்றனக்கு மாலை யிட்ட தொன்றல்லான்
மஞ்ச மதனி லென்னோடு மருவி யிருக்க நானறியேன்
கொஞ்ச மதிநேர் நுதலாயென் குறையை யெவர்க்குக் கூறுவனே. 14

ஆல மிருந்த களத்தழக ரணிசே ரொற்றி யாலயத்தார்
சால வெனக்கு மாலையிட்ட தன்மை யொன்றே யல்லாது
கால நிரம்ப வவர்புயத்தைக் கட்டி யணைந்த தில்லையடி
கோல மதிவாண் முகத்தாயென் குறையை யெவர்க்குக் கூறுவனே. 15

Koviloor Digital Library

நெய்தற் பணைசூ ழொற்றியினுர் நிருத்தம் பயில்வார் மாலயனும்
எய்தற் கரியார் மாலையிட்டா ரெனக்கென் றுரைக்கும் பெருமையல்லால்
உய்தற் கடியேல் மனையின்கண் ணுெருநா ளேனு முற்றறியார்
கொய்தற் கரிதாங் கொடியேயென் குறையை யெவர்க்குக் கூறுவனே.16

போர்க்கு முரியார் மால்பிரமன் போகி முதலாம் புங்கவர்கள்
யார்க்கு மரியா ரெனக்கெளிய ராகி யென்னை மாலையிட்டார்
ஈர்க்கும் புகுதா முலைமதத்தை யின்னுந் தவிர்த்தா ரல்லரடி
கூர்க்கு நெடுவேற் கண்ணுயென் குறையை யெவர்க்குக் கூறுவனே. 17

இறையா ரொற்றி யூரினிடை யிருந்தா ரினியா ரென்கணவர்
மறையா ரெனக்கு மாலையிட்டார் மருவா ரென்னை வஞ்சனையோ
பொறையா ரிரக்க மிகவுடையார் பொய்யொன் றுரையார் பொய்யலடி
குறையா மதிவாண் முகத்தாயென் குறையை யெவர்க்குக் கூறுவனே.18

உடுப்பார் கரித்தோ லொற்றியெனு மூராரென்னை யுடையவனுர்
மடுப்பா ரின்ப மாலையிட்டார் மருவா ரெனது பிழையுரைத்துக்
கெடுப்பா ரில்லை யென்சொலினுங் கேளா ரெனது கேள்வரவர்
கொடுப்பா ரென்றே மாதேயென் குறையை யெவர்க்குக் கூறுவனே.19

எருதில் வருவா ரொற்றியுளா ரென்னு யகனு ரெனக்கினியார்
வருதி யெனவே மாலையிட்டார் வந்தா லொன்றும் வாய்திறவார்
கருதி யவர்தங் கட்டளையைக் கடந்து நடந்தே னல்லவடி
[1]குருகுண் கரத்தா யென்னடியென் குறையை யெவர்க்குக் கூறுவனே.20

மாவென் றுரித்தார் மாலையிட்ட மணுள ரென்றே வந்தடைந்தால்
வாவென் றுரையார் போவென்னுர் மௌனஞ் சாதித் திருந்தனர்காண்
ஆவென் றலறிக் கண்ணீர்விட் டழுதாற் றுயர மாறுமடி
[2]கோவென் றிருவேற் கொண்டாயென் குறையை யெவர்க்குக் கூறுவனே.

நாட்டும் புகழார் திருவொற்றி நகர்வாழ் சிவனுர் நன்மையெலாங்
காட்டும் படிக்கு மாலையிட்ட கணவ ரெனவோர் காசளவிற்
கேட்டு மறியேன் தந்தறியார் கேட்டா லென்ன விளையுமடி
கோட்டு மணிப்பூண் முலையாயென் குறையை யெவர்க்குக் கூறுவனே.22

வெற்பை வளைத்தார் திருவொற்றி மேவி யமர்ந்தா ரவரெனது
கற்பை யழித்தார் மாலையிட்டுக் கணவ ராறு ரென்பதல்லாற்
சிற்ப மணிமே டையிலென்னைச் சேர்ந்தா ரென்ப தில்லையடி
கொற்பை யரவி ளிடையாயென் குறையை யெவர்க்குக் கூறுவனே. 23

1. குருகு என்பது — கைவளை. 2. கோ என்பது — அம்பு.

Koviloor Digital Library

என்ன கொடுத்துங் கிடைப்பரியா ரெழிலா ரொற்றி நாதரெனைச்
சின்ன வயதின் மாலையிட்டுச் சென்றார் சென்ற திறனல்லால்
இன்னு மருவ வந்திலர்காண் யாதோ வவர்தம் மெண்ணமது
கொன்னுண் வடிவேற் கண்ணாயென் குறையை யெவர்க்குக் கூறுவனே.

கரும்பி னினியார் கண்ணுதலார் கடிசே ரொற்றிக் காவலனார்
இரும்பின் மனத்தென் றனைமாலை யிட்டா ரிட்ட வன்றலது
திரும்பி யொருகால் வந்தென்னைச் சேர்ந்து மகிழ்ந்த தில்லையடி
குரும்பை யனைய முலையாயென் குறையை யெவர்க்குக் கூறுவனே. 25

தீது தவிப்பார் திருவொற்றித் தியாக ரழியாத் திறத்தரவர்
மாது மகிழ்தி யெனவென்னை மாலை யிட்டார் மாலையிட்ட
போது கண்ட திருமுகத்தைப் போற்றி மறித்துங் கண்டறியேன்
கோது கண்டேன் மாதேயென் குறையை யெவர்க்குக் கூறுவனே. 26

வென்றிக் கொடிமேல் விடையுயர்த்தார் மேலா ரொற்றி யூரரென்பாற்
சென்றிக் குளிர்பூ மாலையிட்டார் சேர்ந்தா ரல்லர் யானவரை
அன்றிப் பிறரை நாடினனோ வம்மா வொன்று மறியனடி
குன்றிற் றுயர்கொண் டழுமெனது குறையை யெவர்க்குக் கூறுவனே. 27

தோளா மணிநேர் வடிவழகர் சோலை சூழ்ந்த வொற்றியினார்
மாளா நிலைய ரென்றனக்கு மாலை யிட்டார் மருவிலர்காண்
கேளாய் மாதே யென்னிடையே கெடுதி யிருந்த தெனினுமதைக்
கோளா ருரைப்பா ரென்னடியென் குறையை யெவர்க்குக் கூறுவனே. 28

வாடா திருந்தேன் மழைபொழியு மலர்க்கா வனஞ்சூ ழொற்றியினார்
ஏடா ரணிபூ மாலையெனக் கிட்டா ரவர்க்கு மாலையிட்டேன்
தேடா திருந்தே னல்லடியான் தேடி யருகிற் சேர்ந்துமெனைக்
கூடா திருந்தா ரென்னடியென் குறையை யெவர்க்குக் கூறுவனே. 29

நலத்திற் சிறந்த வொற்றிநகர் நண்ணு மெனது நாயகனார்
வலத்திற் சிறந்தார் மாலையிட்டு மறித்து மருவார் வாராரேல்
நிலத்திற் சிறந்த வுறவினர்க ணிந்தித் தையோ வெனைத்தமது
குலத்திற் சேரா ரென்னடியென் குறையை யெவர்க்குக் கூறுவனே. 30

ஈர்ந்தே னளிசூ ழொற்றியுளா ரென்கண் மணியா ரென்கணவர்
வார்ந்தேன் சடையார் மாலையிட்டும் வாழா தலைந்து மனமெலிந்து
சோர்ந்தேன் பதைத்துத் துயர்க்கடலைச் சூழ்ந்தே னின்னுந் துடிக்கின்றேன்
கூர்ந்தேன் குழலா யென்னடியென் குறையை யெவர்க்குக் கூறுவனே. 31

திருச்சிற்றம்பலம்

Koviloor Digital Library

திருவொற்றியூர்

4. திருவுலா வியப்பு

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

வெள்ளச் சடையார் விடையார்செவ் வேலார் நூலார் மேலார்தம்
உள்ளத் துறைவார் நிறைவார்நல் லொற்றித் தியாகப் பெருமானுர்
வள்ளற் குணத்தார் திருப்பவனி வந்தா ரென்று ரம்மொழியை
விள்ளற் குள்ளே மனமென்னை விட்டங் கவர்முன் சென்றதுவே. 1

அந்தா ரணியுஞ் செஞ்சடையா ரடையார் புரமூன் றவையனலின்
உந்தா நின்ற வெண்ணகையா ரொற்றித் தியாகர் பவனியிங்கு
வந்தா ரென்று ரந்தோநான் மகிழ்ந்து காண வருமுன்னம்
மந்தா கினிபோன் மனமென்னை வஞ்சித் தவர்முன் சென்றதுவே. 2

பொன்னேர் சடையார் கிளருடையார் பூவை தனையோர் புடையுடையார்
தென்னேர் பொழில்சூ ழொற்றியூர்த் திகழுந் தியாகர் திருப்பவனி
இன்னே வந்தா ரென்றுர்நா னெழுந்தே னங் கெழுவதற்கு
முன்னே மனமென் றனைவிடுத்து முந்தி யவர்முன் சென்றதுவே. 3

காண வினியா ரென்னிரண்டு கண்க ளனையார் கடல்விடத்தை
ஊணி னுகர்ந்தா ருயர்ந்தார்நல் லொற்றித் தியாகப் பெருமானுர்
மாண வீதி வருகின்று ரென்றுர் காண வருமுன்னுன்
நாண வெனைவிட் டென்மனந்தா னயந்தங் கவர்முன் சென்றதுவே. 4

செழுந்தெண் கடற்றெள் ளமுதனையார் தியாக ரெனுமோர் திருப்பெயரார்
கொழுந்தண் பொழில்சூ ழொற்றியினுர் கோலப் பவனி யென்றுர்நான்
எழுந்திங் கவிழ்ந்த கலைபுனைந்தங் கேகு முன்ன ரெனைவிடுத்தே
அழுந்து நெஞ்சம் விழுந்துகூத் தாடி யவர்முன் சென்றதுவே. 5

சால மாலு மேலுமிடந் தாலு மறியாத் தழலுருவார்
சேலும் புனலுஞ் சூழொற்றித் திகழுந் தியாகப் பெருமானுர்
பாலுந் தேனுங் கலந்ததெனப் பவனி வந்தா ரென்றனர்யான்
மேலுங் கேட்கு முன்னமனம் விட்டங் கவர்முன் சென்றதுவே. 6

பின்றுழ் சடையார் தியாகரெனப் பேசு மருமைப் பெருமானுர்
மன்றுர் நடத்தா ரொற்றிதனில் வந்தார் பவனி யென்றுர்நான்
நன்றுத் துகிலைத் திருத்துமுன்ன நலஞ்சேர் கொன்றை நளிர்ப்பூவின்
மென்றுர் வாங்க மனமென்னை விட்டங் கவர்முன் சென்றதுவே. 7

கண்ணுர் நுதலார் மணிகண்டர் கனக வரையாங் கனசிலையார்
பெண்ணுர் பாகர் தியாகரெனப் பேசு மருமைப் பெருமானுர்
தண்ணுர் பொழில்சூ ழொற்றிதனிற் சார்ந்தார் பவனி யென்றனர்நான்
நண்ணு முன்ன மென்மனந்தா னுடி யவர்முன் சென்றதுவே. 8

Koviloor Digital Library

ஈமப் புறங்காட் டெரியாடு மெழிலார் தில்லை யினிதமர்வார்
சேமப் புலவர் தொழுமொற்றித் திகழுந் தியாகப் பெருமானார்
வாமப் பாவை யொடும்பவனி வந்தா ரென்று ரதுகாண்பான்
காமப் பறவை போலென்மனங் கடுகி யவர்முன் சென்றதுவே. 9

சூலப் படையார் பூதங்கள் சுற்றும் படையார் துதிப்பவர்தஞ்
சீலப் பதியார் திருவொற்றித் திகழுந் தியாகப் பெருமானார்
நீலக் களத்தார் திருப்பவனி நேர்ந்தா ரென்று ரதுகாண்பான்
சாலப் பசித்தார் போன்மனந்தான் தாவி யவர்முன் சென்றதுவே. 10

திருச்சிற்றம்பலம்

திருவொற்றியூர்

5. சல்லாப வியன்மொழி

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

காது நடந்த கண்மடவாள் கடிமா மனைக்குக் கால்வருந்தத்
தூது நடந்த பெரியவர்சீர் சுகத்தாரொற்றித் தொன்னகரார்
வாது நடந்தான் செய்கின்றீர் மாது நடந்து வாவென்றார்
போது நடந்த தென்றேனெப் போது நடந்த தென்றாரே. 1

கச்சை யிடுவார் படவரவைக் கண்மூன் றுடையார் வாமத்திற்
பச்சை யிடுவா ரொற்றியுள்ளார் பரிந்தென் மனையிற் பலிக்குற்றார்
இச்சை யிடுவா ருண்டியென்றா ருண்டே னென்றே னெனக்கின்று
பிச்சை யிடுவா யென்றார்நான் பிச்சை யடுவே னென்றேனே. 2

கருதற் கரியார் கரியார்முன் காணக் கிடையாக் கழலடியார்
மருதத் துறைவார் திருவொற்றி வாண ரின்றென் மனைக்குற்றார்
தருதற் கென்பா லின்றுவந்தீ ரென்றே னதுநீ தானென்றார்
வருதற் குரியீர் வாருமென்றேன் வந்தே னென்று மறைந்தாரே. 3

கல்லை வளைக்கும் பெருமானார் கழிசூ ழொற்றிக் கடிநகரார்
எல்லை வளைக்குந் தில்லையுள்ளா ரென்றன் மனைக்குப் பலிக்குற்றார்
அல்லை வளைக்குங் குழலன்ன மன்பி னுதவா விடிலோபம்
இல்லை வளைக்கு மென்றார்நா னில்லை வளைக்கு மென்றேனே. 4

வெற்றி யிருந்த மழுப்படையார் விடையார் மேரு வில்லுடையார்
பெற்றி யிருந்த மனத்தர்தமுட் பிறங்குந் தியாகப் பெருமானார்
சுற்றி யிருந்த பெண்களெல்லாஞ் சொல்லி நகைக்க வருகணைந்தார்
ஒற்றி யிருமென் றுரைத்தேனா னொற்றி யிருந்தே னென்றாரே. 5

விண்டங் கமரர் துயர்தவிர்க்கும் வேற்கை மகனை விரும்பிநின்றோர்
வண்டங் கிசைக்கும் பொழிலொற்றி வதிவா ரென்றன் மனையடைந்தார்
தண்டங் கழற்கு நிகரானீர் தண்டங் கழற்கென் றேன்மொழியாற்
கண்டங் கறுத்தா யென்றார்நீர் கண்டங் கறுத்தீ ரென்றேனே. 6

Koviloor Digital Library

விற்கண் டாத நுதன்மடவாள் வேட்ட நடன வித்தகனுர்
சொற்கண் டாத புகழொற்றித் தூய ரின்றென் மனைபுகுந்தார்
நிற்கண் டார்கண் மயலடைவா ரென்ருர் நீர்தா நிகழ்த்தியசொற்
கற்கண் டாமென் றுரைத்தேனுன் கற்கண் டாமென் றுரைத்தாரே. 7

விடையார் கொடிமே லுயர்த்தருளும் வேத கீதப் பெருமானுர்
உடையா ரொற்றி யூரமர்ந்தா ருவந்தென் மனையி லின்றடைந்தார்
இடையா வைய மென்ருர்நா னிடைதா னைய மென்றேனுற்
கடையா ரளியா ரென்ருர்கட் கடையா ரளியா ரென்றேனே. 8

நாடோன் றியசீர்த் திருவொற்றி நகரத் தமர்ந்த நாயகனுர்
ஈடோன் றில்லா ரென்மனையுற் றிருந்தார் பூவுண் டெழில்கொண்ட
மாடோன் றெங்கே யென்றேனுன் மனத்தி லென்ருர் மகிழ்ந்தமர்வெண்
காடோன் றுடையீ ரென்றேன்செங் காடோன் றுடையே னென்ருரே.9

சொல்லா லியன்ற தொடைபுனைவார் தூயா ரொற்றித் தொன்னகரார்
அல்லா லியன்ற மனத்தார்பா லணுகா ரென்றன் மனைபுகுந்தார்
வல்லா லியன்ற முலையென்ருர் வல்லார் நீரென் றேனுன்சொற்
கல்லா லியன்ற தென்ருர்முன் கல்லா லியன்ற தென்றேனே. 10

திருச்சிற்றம்பலம்

திருவொற்றியூர்

6. இன்பக்கிளவி

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

தில்லை வளத்தா ரம்பலத்தார் திருவேட் களத்தார் செவ்வணத்தார்
கல்லை வளைத்தா ரென்றன்மனக் கல்லைக் குழைத்தார் கங்கணத்தால்
எல்லை வளைத்தார் தியாகர்தமை யெழிலா ரொற்றி யெனுநகரில்
ஒல்லை வளைத்துக் கண்டேனு னென்று முரையா திருந்தாரே. 1

இருந்தார் திருவா ரூரகத்தி லென்னுக் கொடியா ரிதயத்திற்
பொருந்தார் கொன்றைப் பொலன்பூந்தார் புனைந்தார் தம்மைப் புகழ்ந்தார்கண்
விருந்தார் திருந்தார் புரமூன்றீ விளைத்தா ரொற்றி நகர்கிளைத்தார்
தருந்தார் காம மருந்தாரித் தரணி யிடத்தே தருவாரே. 2

தருவார் தருவார் செல்வமுதற் றருவா ரொற்றித் தலமமர்வார்
மருவார் தமது மனமருவார் மருவார் கொன்றை மலர்புனைவார்
திருவார் புயனு மலரோனுந் தேடுந் தியாகப் பெருமானுர்
வருவார் வருவா ரெனநின்று வழிபார்த் திருந்தேன் வந்திலரே. 3

வந்தா ரல்லர் மாதேநீ வருந்தே லென்று மார்பிலங்குந்
தந்தா ரல்லல் தவிர்ந்தோங்கத் தந்தா ரல்லர் தயையுடையார்
சந்தார் சோலை வளரொற்றித் தலத்தார் தியாகப் பெருமானுர்
பந்தார் முலையார்க் கவர்கொடுக்கும் பரிசே தொன்றும் பார்த்திலமே. 4

Koviloor Digital Library

இலமே செறித்தார் தாயரினி யென்செய் குவதென் றிருந்தேற்கு
நலமே தருவார் போலவந்தென் னலமே கொண்டு நழுவினர்காண்
உலமே யனைய திருத்தோளா ரொற்றித் தியாகப் பெருமானார்
வலமே வலமென வலமவல மாதே யினியென் வழுத்துவதே. 5

வழுத்தார் புரத்தை யெரித்தார்நல் வலத்தார் நடன மலரடியார்
செழுத்தார் மார்பர் திருவொற்றித் திகழுந் தியாகப் பெருமானார்
கழுத்தார் விடத்தார் தமதழகைக் கண்டு கனிந்து பெருங்காமம்
பழுத்தார் தம்மைக் கலந்திடநற் பதத்தா ரென்றும் பார்த்திலரே. 6

பாரா திருந்தார் தம்துமுகம் பார்த்து வருந்தும் பாவைதனைச்
சேரா திருந்தார் திருவொற்றித் திகழுந் தியாகப் பெருமானார்
வாரா திருந்தா ரின்னுமிவ்வ் வருத்தங் கேட்டு மாலைதனைத்
தாரா திருந்தார் சலமகளைத் தாழ்ந்த சடையிற் றரித்தாரே. 7

சடையிற் றரித்தா ரொருத்திதனைத் தழுவி மகிழ்மற் றொருபெண்ணைப்
புடையிற் றரித்தார் மகளேநீ போனு லெங்கே தரிப்பாரோ
கடையிற் றரித்த விடமதனைக் களத்திற் றரித்தார் கரித்தோலை
இடையிற் றரித்தா ரொற்றியூ ரிருந்தா ரிருந்தா ரென்னுளத்தே. 8

உளத்தே யிருந்தார் திருவொற்றி யூரிலிருந்தா ருவர்விடத்தைக்
களத்தே வதிந்தா ரவரென்றன் கண்ணுள் வதிந்தார் கடலமுதாம்
இளத்தே மொழியா யாதலினு லிமையே னிமைத்த லியல்பன்றே
வளத்தே மனத்தும் புகுகின்றார் வருந்தேன் சற்றும் வருந்தேனே. 9

வருந்தேன் மகளீ ரெனையொவ்வார் வளஞ்சே ரொற்றி மன்னவனார்
தருந்தே னமுத முண்டென்றுஞ் சலிய வாழ்விற் றருக்கிமகிழ்ந்
திருந்தேன் மணாள ரெனைப்பிரியா ரென்றும் புணர்ச்சிக் கேதுவிதா
மருந்தேன் மையற் பெருநோயை மறந்தே னவரை மறந்திலனே. 10

திருச்சிற்றம்பலம்

7. இன்பப் புகழ்ச்சி

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

மாடோன் றுடையா ருணவின்றி மண்ணுண் டதுகாண் மலரோன்றன்
ஓடோன் றுடையா ரொற்றிவைத்தா ரூரை மகிழ்வோ டுவந்தாலங்
காடோன் றுடையார் கண்டமட்டுங் கறுத்தார் பூத கணத்தோடும்
ஈடோன் றுடையார் மகளேநீ யேதுக் கவரை விழைந்தனையே. 1

Koviloor Digital Library

பித்த ரெனும்பேர் பிறங்கநின்றார் பேயோ டாடிப் பவுரிகொண்டார்
பத்தர் தமக்குப் பணிசெய்வார் பணியே பணியாய்ப் பரிவுற்றார்
சித்தர் திருவா யொற்றியினார் தியாக ரென்றுன் கலைகவர்ந்த
எத்த ரன்றோ மகளேநீ யேதுக் கவரை விழைந்தனையே. 2

கடுத்தாழ் களத்தார் கரித்தோலார் கண்ணுறன் மதனைக் கரிசெய்தார்
உடுத்தார் முன்னோர் டண்ணோட்டை யொளித்தே தொண்ட னொடும்வழக்குத்
தொடுத்தார் பாம்பும் புலியுமெச்சித் துதிக்க வொருகா லம்பலத்தில்
எடுத்தா ரன்றோ மகளேநீ யேதுக் கவரை விழைந்தனையே. 3

உரப்பார் மிசையிற் பூச்சூட வொட்டார் சடைமே லொருபெண்ணைக்
கரப்பார் மலர்தூ வியமதனைக் கண்ணுற் சுட்டார் கல்லெறிந்தோன்
வரப்பார் மிசைக்கண் வாழ்ந்திருக்க வைத்தார் பலிக்கு மனைதொறும்போய்
இரப்பா ரன்றோ மகளேநீ யேதுக் கவரை விழைந்தனையே. 4

கருது மவரை வெளிக்கிழுப்பார் காணு தெல்லாங் காட்டிநிற்பார்
மருதி லுறைவா ரொற்றிதனில் வதிவார் புரத்தை மலைவில்லாற்
பொருது முடிப்பார் போனகைப்பார் பூவுண் டுறங்கும் புதுவெள்ளை
எருதில் வருவார் மகளேநீ யேதுக் கவரை விழைந்தனையே. 5

ஆக்க மில்லார் வறுமையிலா ரருவ மில்லா ருருவமிலார்
தூக்க மில்லார் சுகமில்லார் துன்ப மில்லார் தோன்றுமல
வீக்க மில்லார் குடும்பமது விருத்தி யாக வேண்டுமெனும்
ஏக்க மில்லார் மகளேநீ யேதுக் கவரை விழைந்தனையே. 6

ஊரு மில்லா ரொற்றிவைத்தா ருறவொன் றில்லார் பகையில்லார்
பேரு மில்லா ரெவ்விடத்தும் பிறவா ரிறவார் பேச்சில்லார்
நேரு மில்லார் தாய்தந்தை நேயர் தம்மோ டுடன்பிறந்தோர்
யாரு மில்லார் மகளேநீ யேதுக் கவரை விழைந்தனையே. 7

தங்கு மருப்பார் கண்மணியைத் தரிப்பா ரென்பின் றார்புனைவார்
துங்கு மருட்கார் முகிலனையார் சொல்லு நமது சொற்கேட்டே
இங்கு மிருப்பா ரங்கிருப்பா ரெல்லா மியல்பிற் றுமுணர்ந்தே
எங்கு மிருப்பார் மகளேநீ யேதுக் கவரை விழைந்தனையே. 8

துத்திப் படத்தார் சடைத்தலையார் தொலையாப் பலிதேர் தொன்மையினார்
முத்திக் குடையார் மண்ணெடுப்பார் மொத்துண் டுழல்வார் மொய்கழற்காம்
புத்திக் குரிய பத்தர்கடம் பொருளை யுடலை யாவையுமே
எத்திப் பறிப்பார் மகளேநீ யேதுக் கவரை விழைந்தனையே. 9

மாறித் திரிவார் மனமடையார் வணங்கு மடியார் மனந்தோறும்
வீறித் திரிவார் வெறுவெளியின் மேவா நிற்பார் விறகு விலை
கூறித் திரிவார் குதிரையின்மேற் கொள்வார் பசுவிற் கோல்வளையோ
டேறித் திரிவார் மகளேநீ யேதுக் கவரை விழைந்தனையே. 10

திருச்சிற்றம்பலம்

Koviloor Digital Library

திருவொற்றியூர்

8. திருவுலாத்திறம்

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

தேனார் கமலத் தடஞ்சூழுந் திருவா றொற்றித் தியாகரவர்
வானா ரமரர் முனிவர்தொழ மண்ணோர் வணங்க வரும்பவனி
தானா வங்கொண் டகமலரத் தாழ்ந்து சூழ்ந்து கண்டலது
கானா ரலங்கற் பெண்ணைநான் கண்க ளுறக்கங் கொள்ளேனே. 1

திருமால் வணங்கு மொற்றிநகர் செழிக்குஞ் செல்வத் தியாகரவர்
கருமா லகற்றுந் தொண்டர்குழாங் கண்டு களிக்க வரும்பவனி
மருமாண் புடைய மனமகிழ்ந்து மலர்க்கை கூப்பிக் கண்டலது
பெருமான் வடுக்கட் பெணைநான் பெற்றா ரோடும் பேசேனே. 2

சேலார் தடஞ்சூ ழொற்றிநகர் சேருஞ் செல்வத் தியாகரவர்
ஆலார் களமேல் விளங்குமுக மழகு ததும்ப வரும்பவனி
நாலா ரணஞ்சூழ் வீதியிடை நாடிப் புகுந்து கண்டலது
பாலார் குதலைப் பெண்ணைநான் பாயிற் படுக்கை பொருந்தேனே. 3

செல்வந் துறழும் பொழிலொற்றித் தெய்வத் தலங்கொள் தியாகரவர்
வில்வந் திகழுஞ் செஞ்சடையின் விழுங்கி விளங்க வரும்பவனி
சொல்வந் தோங்கக் கண்டுநின்று தொழுது துதித்த பின்னலது
வல்வந் தளகப் பெண்ணைநா னவிழ்ந்த குழலு முடியேனே. 4

சேவார் கொடியா ரொற்றிநகர் திகழுஞ் செல்வத் தியாகரவர்
பூவார் கொன்றைப் புயங்கண்மனம் புணரப் புணர வரும்பவனி
ஓவாக் களிப்போ டகங்குளிர வுடலங் குளிரக் கண்டலது
பாவார் குதலைப் பெண்ணைநான் பரிந்து நீரும் பருகேனே. 5

சிற்றம் பலத்தா ரொற்றிநகர் திகழுஞ் செல்வத் தியாகரவர்
உற்றங் குவந்தோர் விண்ணகளெலா மோட நாடி வரும்பவனி
சுற்றுங் கண்கள் களிகூரத் தொழுது கண்ட பின்னலது
முற்றுங் கனிவாய்ப் பெண்ணைநான் முடிக்கோர் மலரு முடியேனே. 6

சிந்தைக் கினியா ரொற்றிநகர் திகழுஞ் செல்வத் தியாகரவர்
சந்தத் தடந்தோள் கண்டவர்கள் தம்மை விழுங்க வரும்பவனி
முந்தப் புகுந்து புளகமுடன் மூடிக் குளிரக் கண்டலது
கந்தக் குழல்வாய்ப் பெண்ணைநான் கண்ணி ரொழியக் காணேனே. 7

தென்னஞ் சோலை வளரொற்றி யூர்வாழ் செல்வத் தியாகரவர்
பின்னுஞ் சடைமேற் பிறைவிளங்கப் பிறங்கா நிற்க வரும்பவனி
மன்னுங் கரங்கள் தலைகுவித்து வணங்கி வாழ்த்திக் கண்டலது
துன்னுந் துவர்வாய்ப் பெண்ணைநான் சோறெள் ளளவு முண்ணேனே. 8

Koviloor Digital Library

சிந்தா குலந்தீர்த் தருளொற்றி யூர்வாழ் செல்வத் தியாகரவர்
வந்தார் கண்டா ரவர்மனத்தை வாங்கிப் போக வரும்பவனி
நந்தா மகிழ்வு தலைசிறப்ப நாடி யோடிக் கண்டலது
பந்தார் மலர்க்கைப் பெண்ணேநான் பாட லாடல் பயிலேனே. 9

செக்கர்ச் சடையா ரொற்றிநகர்ச் சேருஞ் செல்வத் தியாகரவர்
மிக்கற் புதவாண் முகத்தினகை விளங்க விரும்பி வரும்பவனி
மக்கட் பிறவி யெடுத்தபயன் வசிக்க வணங்கிக் கண்டலது
நக்கற் கியைந்த பெண்ணேநான் ஞாலத் தெவையு நயவேனே. 10

திருச்சிற்றம்பலம்

திருவொற்றியூர்

9. வியப்புமொழி

நற்றாய் நயத்தல்

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

மாதர் மணியே மகளேநீ வாய்த்த தவந்தான் யாதறியேன்
வேத ரனந்தர் மாலனந்தர் மேவி வணங்கக் காண்பரியார்
நாதர் நடன நாயகனுர் நல்லோ ருளத்துள் நண்ணுகின்றோர்
கோத ரறியாத் தியாகர்தமைக் கூடி யுடலங் குளிர்ந்தனையே. 1

திருவிற் றோன்று மகளேநீ செய்த தவந்தான் யாரறிவார்
மருவிற் றோன்றுங் கொன்றையந்தார் மார்ப ரொற்றி மாநகரார்
கருவிற் றோன்று மெங்களுயிர் காக்க நினைத்த கருணையினுற்
குருவிற் றோன்றுந் தியாகர்தமைக் கூடி யுடலங் குளிர்ந்தனையே. 2

என்னு ருயிர்போன் மகளேநீ யென்ன தவந்தா னியற்றினையோ
பொன்னுர் புயனு மலரோனும் போற்றி வணங்கும் பொற்பதத்தார்
தென்னு ரொற்றித் திருநகரார் தியாக ரெனுமோர் திருப்பெயரார்
கொன்னுர் சூலப் படையவரைக் கூடி யுடலங் குளிர்ந்தனையே. 3

சேலை நிகர்கண் மகளேநீ செய்த தவந்தான் செப்பரிதான்
மாலை யயனை வானவரை வருத்தும் படிக்கு மதித்தெழுந்த
வேலை விடத்தை மிடற்றணிந்தார் வீட்டு நெறியா மரசியற்செங்
கோலை யளித்தா ரவர்தம்மைக் கூடி யுடலங் குளிர்ந்தனையே. 4

தேனேர் குதலை மகளேநீ செய்த தவந்தா னெத்தவமோ
மானேர் கரத்தார் மழவிடைமேல் வருவார் மருவார் கொன்றையினுர்
பானேர் நீற்றர் பசுபதியார் பவள வண்ணர் பல்சடைமேற்
கோனேர் பிறையா ரவர்தம்மைக் கூடி யுடலங் குளிர்ந்தனையே. 5

வில்லார் நுதலாய் மகளேநீ மேலை நாட்செய் தவமெதுவோ
கல்லா ருள்ளங் கலவாதார் காம னெரியக் கண்விழித்தார்
வில்லார் விசையற் கருள்புரிந்தார் விளங்கு மொற்றி மேவிநின்ருர்
கொல்லா நெறியா ரவர்தம்மைக் கூடி யுடலங் குளிர்ந்தனையே. 6

Koviloor Digital Library

அஞ்சொற் கிளியே மகளேநீ யரிய தவமே தாற்றினையோ
வெஞ்சொற் புகலார் வஞ்சர்தமை மேவார் பூவார் கொன்றையினர்
கஞ்சற் கரியார் திருவொற்றிக் காவ லுடையா ரின்மொழியாற்
கொஞ்சத் தருவா ரவர்தம்மைக் கூடி யுடலங் குளிர்ந்தனையே. 7

பூவாய் வாட்கண் மகளேநீ புரிந்த தவந்தா னெத்தவமோ
சேவாய் விடங்கப் பெருமானார் திருமா லறியாச் சேவடியார்
காவாய்ந் தோங்குந் திருவொற்றிக் காவ லுடையா ரெவ்வெவர்க்குங்
கோவாய் நின்றா ரவர்தம்மைக் கூடி யுடலங் குளிர்ந்தனையே. 8

மலைநேர் முலையாய் மகளேநீ மதிக்குந் தவமே தாற்றினையோ
தலைநே ரலங்கற் றாழ்சடையார் சாதி யறியாச் சங்கரனார்
இலைநேர் தலைமூன் றொளிர்படையா ரெல்லா முடையா ரெருக்கின்மலர்க்
குலைநேர் சடையா ரவர்தம்மைக் கூடி யுடலங் குளிர்ந்தனையே. 9

மயிலி னியல்சேர் மகளேநீ மகிழ்ந்து புரிந்த தெத்தவமோ
வெயிலி னியல்சேர் மேனியினார் வெண்ணீ றுடையார் வெள்விடையார்
பயிலின் மொழியாள் பாங்குடையார் பணைசூ ழொற்றிப் பதியமர்ந்தார்
குயிலிற் குலவி யவர்தம்மைக் கூடி யுடலங் குளிர்ந்தனையே. 10

திருச்சிற்றம்பலம்

திருவொற்றியூர்

10. புணராவிரகு பொருந்துறு வேட்கையின் இரங்கல்

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

உள்ளார் புறத்தா ரொற்றியெனு மூரா ரொப்பொன் றுமிலார்
வள்ளா லென்று மறைதுதிக்க வருவா ரின்னும் வந்திலரே
எள்ளா திருந்த பெண்களெலா மிகழா நின்றா ரினியமொழித்
தெள்ளா ரமுதே யென்னடிநான் செய்வ தொன்றுந் தெரிந்திலனே. 1

மாலே றுடைத்தாங் கொடியுடையார் வளஞ்சே ரொற்றி மாநகரார்
பாலே றணிநீற் றழகரவர் பாவி யேனைப் பரிந்திலரே
கோலே றுண்ட மதன்கரும்பைக் குனித்தா னம்புங் கோத்தனன்காண்
சேலே றுண்க ணென்னடிநான் செய்வ தொன்றுந் தெரிந்திலனே. 2

பொய்ய ருளத்துப் புகுந்தறியார் போத னெடுமால் காண்பரிதாம்
ஐயர் திருவா ழொற்றிநக ரமர்ந்தா ரின்னு மணைந்திலரே
வைய மடவார் நகைக்கின்றார் மாரன் கணையாற் றிகைக்கின்றேன்
செய்ய முகத்தா யென்னடிநான் செய்வ தொன்றுந் தெரிந்திலனே. 3

Koviloor Digital Library

நந்திப் பரியார் திருவொற்றி நாத ரயன்மா றாடுகினுஞ்
சந்திப் பரியா ரென்னருமைத் தலைவ ரின்னுஞ் சார்ந்திலரே
அந்திப் பொழுதோ வந்ததினி யந்தோ மதிய மனல்சொரியுஞ்
சிந்திப் புடையே னென்னடிநான் செய்வ தொன்றுந் தெரிந்திலனே. 4

என்னா ருயிர்க்கோர் துணையானா ரென்னாண் டவனா ரென்னுடையார்
பொன்னா ரொற்றி நகரமர்ந்தார் புணர்வா ரின்னும் போந்திலரே
ஒன்னா ரெனவே தாயுமெனை யொறுத்தா ளானு முயிர்பொறுத்தேன்
தென்னார் குழலா யென்னடிநான் செய்வ தொன்றுந் தெரிந்திலனே. 5

மாணி யுயிர்காத் தந்தகனை மறுத்தா ரொற்றி மாநகரார்
காணி யுடையா ருலகுடையார் கனிவா யின்னுங் கலந்திலரே
பேணி வாழாப் பெண்ணெனவே பெண்க ளெல்லாம் பேசுகின்றார்
சேணின் றிழிந்தா யென்னடிநான் செய்வ தொன்றுந் தெரிந்திலனே. 6

வன்சொற் புகலா ரோருயிரும் வருந்த நினையார் மனமகிழ
இன்சொற் புகல்வா ரொற்றியுளா ரென்னா யகனார் வந்திலரே
புன்சொற் செவிகள் புகத்துயரம் பொறுத்து முடியேன் புலம்பிநின்றேன்
தென்சொற் கிளியே யென்னடிநான் செய்வ தொன்றுந் தெரிந்திலனே. 7

எட்டிக் கனியு மாங்கனிபோ லினிக்க வுரைக்கு மின்சொலினார்
தட்டிற் பொருந்தா ரொற்றியில்வாழ் தலைவ ரின்னுஞ் சார்ந்திலரே
மட்டிற் பொலியு மலர்க்கணைசெல் வழியே பழிசெல் வழியன்றோ
தெட்டிற் பொலியும் விழியாய்நான் செய்வ தொன்றுந் தெரிந்திலனே. 8

காலை மலர்ந்த கமலம்போற் கவின்செய் முகத்தார் கண்ணுதலார்
சோலை மலர்ந்த வொற்றியினார் சோகந் தீர்க்க வந்திலரே
மாலை மலர்ந்த மையனோய் வசந்த மதனால் வளர்ந்ததையோ
சேலை விழியா யென்னடிநான் செய்வ தொன்றுந் தெரிந்திலனே. 9

உலக முடையா ரென்னுடைய வுள்ள முடையா ரொற்றியினார்
அலகில் புகழா ரென்றலைவ ரந்தோ வின்னு மணைந்திலரே
கலக முடையார் மாதரெலாங் கன்னெஞ் சுடையார் தூதரெலாந்
திலக முகத்தா யென்னடிநான் செய்வ தொன்றுந் தெரிந்திலனே. 10

மாலு மறியா னயனறியான் மறையு மறியா வானவரெக்
காலு மறியா ரொற்றிநிற்குங் கள்வ ரவரைக் கண்டிலனே
கோலு மகளி ரலரொன்றோ கோடா கோடி யென்பதல்லாற்
சேலுண் விழியா யென்னடிநான் செய்வ தொன்றுந் தெரிந்திலனே. 11

உந்து மருத்தோ டைம்பூத மானா ரொற்றி யூரமர்ந்தார்
இந்து மிருந்துஞ் சடைத்தலையா ரென்பா லின்னு மெய்திலரே
சந்து பொருத்து வாரறியேன் றமிய ளாகத் தளர்கின்றேன்
சிந்துற் பவத்தா யென்னடிநான் செய்வ தொன்றுந் தெரிந்திலனே. 12

Koviloor Digital Library

ஆட லழக ரம்பலத்தா ரையா றுடையா ரன்பர்களோ(டு)
ஊட லறியா ரொற்றியினா ருவகை யோங்க வுற்றிலரே
வாட லெனவே யெனைத்தேற்று வாரை யறியேன் வாய்ந்தவரைத்
தேட லறியே னென்னடிநான் செய்வ தொன்றுந் தெரிந்திலனே. 13

தொழுது வணங்குஞ் சுந்தரற்குத் தூது நடந்த சுந்தரனார்
அழுது வணங்கு மவர்க்குமிக வருளொற் றியினா ரணைந்திலரே
பொழுது வணங்கு மிருண்மாலைப் பொழுது முடுகிப் புகுந்ததுகாண்
செழுமை விழியா யென்னடிநான் செய்வ தொன்றுந் தெரிந்திலனே. 14

பாவ மறுப்பார் பழியறுப்பார் பவமு மறுப்பா ரவமறுப்பார்
கோவ மறுப்பா ரொற்றியிலென் கொழுந ரின்னுங் கூடிலரே
தாவ மதனைங் கணைமாதர் தூறு தூவத் துயர்கின்றேன்
தேவ மடவா யென்னடிநான் செய்வ தொன்றுந் தெரிந்திலனே. 15

உயிர்க்குள் ளுயிரா யுறைகின்றோ ரொற்றி நகரார் பற்றிலரைச்
செயிர்க்கு ளழுத்தார் மணிகண்டத் தேவ ரின்னுஞ் சேர்ந்திலரே
வெயிற்கு மெலிந்த செந்தளிர்போல் வேளம் பதனுன் மெலிகின்றேன்
செயற்கை மடவா யென்னடிநான் செய்வ தொன்றுந் தெரிந்திலனே. 16

ஊன மடையா ரொற்றியினா ருரைப்பா ருள்ளத் துறைகின்றோர்
கான முடையார் நாடுடையார் கனிவா யின்னுங் கலந்திலரே
மான முடையா ரெம்முறவோர் வாழா மைக்கே வருந்துகின்றோர்
தீன மடையா யென்னடிநான் செய்வ தொன்றுந் தெரிந்திலனே. 17

மலையை வளைத்தார் மால்விடைமேல் வந்தார் வந்தென் வளையினொடு
கலையை வளைத்தா ரொற்றியிலென் கணவ ரென்னைக் கலந்திலரே
சிலையை வளைத்தான் மதனம்பு தெரிந்தான் விடுக்கச் சினக்கின்றான்
திலக நுதலா யென்னடிநான் செய்வ தொன்றுந் தெரிந்திலனே. 18

பிரமன் றலையிற் பலிகொள்ளும் பித்த ரருமைப் பெருமானார்
உரமன் னியசீ ரொற்றிநக ருள்ளா ரின்னு முற்றிலரே
அரமன் னியவேற் படையன்றோ வம்மா வயலா ரலர்மொழிதான்
திரமன் னுகிலே னென்னடிநான் செய்வ தொன்றுந் தெரிந்திலனே. 19

பவள நிறத்தார் திருவொற்றிப் பதியி லமர்ந்தார் பரசிவனார்
தவள நிறநீற் றணியழகர் தமியேன் றன்னைச் சார்ந்திலரே
துவளு மிடைதா னிறமுலைக டுள்ளா நின்ற தென்னவவோ
திவளு மிழையா யென்னடிநான் செய்வ தொன்றுந் தெரிந்திலனே. 20

வண்டார் கொன்றை வளர்சடையார் மதிக்க வெழுந்த வல்விடத்தை
உண்டா ரொற்றி யூரமர்ந்தா ருடையா ரென்பா லுற்றிலரே
கண்டார் கண்ட படிபேசக் கலங்கிப் புலம்ப லல்லாது
செண்டார் முலையா யென்னடிநான் செய்வ தொன்றுந் தெரிந்திலனே. 21

Koviloor Digital Library

உணவை யிழந்துந் தேவரெலா முணரா வொருவ ரொற்றியிலென்
கணவ ரடியேன் கண்ணகலாக் கள்வ ரின்னுங் கலந்திலரே
குணவ ரெனினுந் தாய்முதலோர் கூறு தெல்லாங் கூறுகின்ருர்
திணிகொண் முலையா யென்னடிநான் செய்வ தொன்றுந் தெரிந்திலனே.

வாக்குக் கடங்காப் புகழுடையார் வல்லா ரொற்றி மாநகரார்
நோக்குக் கடங்கா வழகுடையார் நோக்கியென்னை யணைந்திலரே
ஊக்க மிகுமார் கலியொலியென் னுயிர்மேன் மாறேற் றுரப்பொலிகாண்
டேக்கங் குழலா யென்னடிநான் செய்வ தொன்றுந் தெரிந்திலனே. 23

தரையிற் கீறிச் சலந்தரனைச் சாய்த்தா ரந்தச் சக்கரமால்
வரையற் களித்தார் திருவொற்றி வாண ரின்னும் வந்திலரே
கரையிற் புணர்ந்த நாரைகளைக் கண்டேன் கண்ட வுடன்காதல்
திரையிற் புணர்ந்தே னென்னடிநான் செய்வ தொன்றுந் தெரிந்திலனே.

பெற்ற மிவரும் பெருமானுர் பிரம னறியாப் பேரொளியாய்
உற்ற சிவனுர் திருவொற்றி யூர்வாழ் வுடையா ருற்றிலரே
எற்றென் றுரைப்பேன் செவிலியவ ளேரு மட்டு மேறுகின்ருள்
செற்ற மொழியா ளென்னடிநான் செய்வ தொன்றுந் தெரிந்திலனே. 25

போக முடையார் பெரும்பற்றப் புலியூ ருடையார் போதசிவ
யோக முடையா ரொற்றி யூர்வாழ் வுடையா ருற்றிலரே
சோக முடையேன் சிறிதேனுந் துயிலோ வணையா குயிலொழியா
தேக மயர்ந்தே னென்னடிநான் செய்வ தொன்றுந் தெரிந்திலனே. 26

தாமப் புயனுர் சங்கரனுர் தாயி னினியார் தற்பரனுர்
ஓமப் புகைவா னுறுமொற்றி யூர்வாழ் வுடையா ருற்றிலரே
காமப் பயலோ கணையெடுத்தான் கண்ட மகளிர் பழிதொடுத்தார்
சேமக் குயிலே யென்னடிநான் செய்வ தொன்றுந் தெரிந்திலனே. 27

ஆரூ ருடையா ரம்பலத்தா ராலங் காட்டா ரரசிலியார்
ஊரூர் புகழுந் திருவொற்றி யூரா ரின்னு முற்றிலரே
வாரூர் முலைக ளிடைவருத்த மனநொந் தயர்வ தன்றியினிச்
சீரூ ரணங்கே யென்னடிநான் செய்வ தொன்றுந் தெரிந்திலனே. 28

காலங் கடந்தார் மாலயன்றன் கருத்துங் கடந்தார் கதிகடந்தார்
ஞாலங் கடந்த திருவொற்றி நாத ரின்னு நண்ணிலரே
சாலங் கடந்த மனந்துணையாய்த் தனியே நின்று வருந்தலல்லாற்
சீலங் கடந்தே னென்னடிநான் செய்வ தொன்றுந் தெரிந்திலனே. 29

சங்கக் குழையார் சடைமுடியார் சதுரர் மறையின் றலைநடிப்பார்
செங்கட் பணியார் திருவொற்றித் தேவ ரின்னுஞ் சேர்ந்திலரே
மங்கைப் பருவ மணமில்லா மலர்போ லொழிய வாடுகின்றேன்
திங்கண் முகத்தா யென்னடிநான் செய்வ தொன்றுந் தெரிந்திலனே. 30

திருச்சிற்றம்பலம்

Koviloor Digital Library

திருவொற்றியூர்

11. குறியாராய்ச்சி

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

நந்தி மகிழ்வாய்த் தரிசிக்க நடனம் புரியு நாயகனார்
அந்தி நிறத்தார் திருவொற்றி யமர்ந்தா ரென்னை யணைவாரோ
புந்தி யிலளென் றணையாரோ யாதுந் தெரியேன் புலம்புகின்றேன்
சிந்தை மகிழக் குறமடவாய் தெரிந்தோர் குறிதான் செப்புவையே. 1

தரும விடையார் சங்கரனார் தகைசே ரொற்றித் தனிநகரார்
ஒருமை யளிப்பார் தியாகரெனை யுடையா ரின்று வருவாரோ
மருவ நாளை வருவாரோ வாரா தென்னை மறப்பாரோ
கரும மறிந்த குறமடவாய் கணித்தோர் குறிதான் கண்டுரையே. 2

ஆழி விடையா ரருளுடையா ரளவிட் டறியா வழகுடையார்
ஊழி வரினு மழியாத வொற்றித் தலம்வா ழுத்தமனார்
வாழி யென்பால் வருவாரோ வறியேன் வருந்த வாராரோ
தோழி யனைய குறமடவாய் துணிந்தோர் குறிநீ சொல்லுவையே. 3

அணியா ரடியார்க் கயன்முதலா மமரர்க் கெல்லா மரியரென்பாம்
பணியா ரொற்றிப் பதியுடையார் பரிந்தென் முகந்தான் பார்ப்பாரோ
தணியாக் காதல் தவிர்ப்பாரோ சார்ந்து வரவு தாழ்ப்பாரோ
குணியா வெழில்சேர் குறமடவாய் குறிதா னென்று கூறுவையே. 4

பொன்னார் புயத்துப் போர்விடையார் புல்லர் மனத்துட் போகாதார்
ஒன்னார் புரந்தீ யுறநகைத்தா ரொற்றி யெனுமோ ரூரமர்ந்தார்
என்னா யகனா ரெனைமருவ லின்றோ நாளை யோவறியேன்
மின்னார் மருங்குற் குறமடவாய் விரைந்தோர் குறிநீ விளம்புவையே. 5

பாலிற் றெளிந்த திருநீற்றர் பாவ நாசர் பண்டரங்கர்
ஆலிற் றெளிய நால்வர்களுக் கருளுந் தெருள ரொற்றியினார்
மாலிற் றெளியா நெஞ்சகத்தேன் மருவிக் கலக்க வருவாரோ
சேலிற் றெளிகட் குறப்பாவாய் தெரிந்தோர் குறிநீ செப்புகவே. 6

நிருத்தம் பயின்றார் நித்தியனார் நேசமனத்தர் நீலகண்டர்
ஒருத்தர் திருவா ழொற்றியினா ரும்ப ரறியா வென்கணவர்
பொருத்த மறிந்தே புணர்வாரோ பொருத்தம் பாரா தணைவாரோ
வருத்தந் தவிரக் குறப்பாவாய் மகிழ்ந்தோர் குறிதான் வழுத்துவையே. 7

கமலன் திருமா லாதியர்கள் கனவி னிடத்துங் காண்பரியார்
விமலர் திருவா ழொற்றியிடை மேவும் பெருமை வித்தகனார்
அமல ரவர்தா மென்மனைக்கின் றணைகு வாரோ வணையாரோ
தமல மகன்ற குறப்பாவாய் தனித்தோர் குறிதான் சாற்றுவையே. 8

Koviloor Digital Library

வன்னி யிதழி மலர்ச்சடையார் வன்னி யெனவோர் வடிவுடையார்
உன்னி யுருகு மவர்க்கெளியா ரொற்றி நகர்வா ழுத்தமனார்
கன்னி யழித்தார் தமைநானுங் கலப்பேன் கொல்லோ கலவேனோ
துன்னி மலைவாழ் குறமடவாய் துணிந்தோர் குறிநீ சொல்லுவையே. 9

கற்றைச் சடைமேற் கங்கைதனைக் கலந்தார் கொன்றைக் கண்ணியினார்
பொற்றைப் பெருவிற் படையுடையார் பொழில்சூ ழொற்றிப் புண்ணியனார்
இற்றைக் கடியேன் பள்ளியறைக் கெய்து வாரோ வெய்தாரோ
சுற்றுங் கருங்கட் குறமடவாய் சூழ்ந்தோர் குறிநீ சொல்லுவையே. 10

அரவக் கழலார் கருங்களத்தா ரஞ்சைக் களத்தா ரரிபிரமர்
பரவப் படுவார் திருவொற்றிப் பதியி லமர்ந்தார் பாசுபதர்
இரவு வருமுன் வருவாரோ வென்னை யணைதற் கிசைவாரோ
குரவ மணக்குங் குறமடவாய் குறிநீ யொன்று கூறுவையே. 11

திருச்சிற்றம்பலம்

திருவொற்றியூர்

12. காட்சி அற்புதம்

இரங்கல்

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

பூணா வணிபூண் புயமுடையார் பொன்னம் பலத்தார் பொங்குவிடம்
ஊணா வுவந்தார் திருவொற்றி யூர்வாழ் வுடையா ருண்மைசொலி
நீணா விருந்தா ரவரிங்கே நின்றார் மீட்டு நின்றிடவே
காணா துயர்ந்தே னென்னடிநான் கனவோ நனவோ கண்டதுவே. 1

ஓட்டி லிரந்துண் டொற்றியிடை யுற்றா ருலகத் துயிரையெலாம்
ஆட்டி நடிப்பா ராலயத்தி னருகே யெளிய ளாமெனவே
ஏட்டி லடங்காக் கையறவா லிருந்தே னிருந்த வென்முனுருக்
காட்டி மறைத்தா ரென்னடிநான் கனவோ நனவோ கண்டதுவே. 2

ஈத லொழியா வண்கையினா ரெல்லாம் வல்ல சித்தரவர்
ஓத லொழியா வொற்றியிலென் னுள்ள முவக்க வுலகமெலாம்
ஆத லொழியா வெழிலுருக்கொண் டடைந்தார்கண்டே னுடன்காணேன்
காத லொழியா தென்னடிநான் கனவோ நனவோ கண்டதுவே. 3

தொண்டு புரிவோர் தங்களுக்கோர் துணைவ ராவார் சூழ்ந்துவரி
வண்டு புரியுங் கொன்றைமலர் மாலை யழகர் வல்விடத்தை
உண்டு புரியுங் கருணையினா ரொற்றி யூர ரொண்பதத்தைக்
கண்டுங் காணே னென்னடிநான் கனவோ நனவோ கண்டதுவே. 4

அடியர் வருந்த வுடன்வருந்து மாண்டை யவர்தா மன்றயனும்
நெடிய மாலுங் காணாத நிமல வுருவோ டென்னெதிரே
வடிய லறியா வருள்காட்டி மறைத்தார் மருண்டேன் மங்கைநல்லார்
கடிய வயர்ந்தே னென்னடிநான் கனவோ நனவோ கண்டதுவே. 5

Koviloor Digital Library

கொற்ற முடையார் திருவொற்றிக் கோயி லுடையா ரென்னெதிரே
பொற்றை மணித்தோட் புயங்காட்டிப் போனு ரென்னைப் புலம்பவைத்துக்
குற்ற மறியேன் மனநடுக்கங் கொண்டே னுடலங் குழைகின்றேன்
கற்றின் முலையா யென்னடிநான் கனவோ நனவோ கண்டதுவே. 6

ஆல நிழற்கி ழன்றமர்ந்தா ராதி நடுவீ ருகிநின்ருர்
நீல மிடற்ருர் திருவொற்றி நியமத் தெதிரே நீற்றுருவக்
கோல நிகழக் கண்டேன்பின் குறிக்கக் காணேன் கூட்டுவிக்குங்
கால மறியே னென்னடிநான் கனவோ நனவோ கண்டதுவே. 7

சலங்கா தலிக்குந் தாழ்சடையார் தாமே தமக்குத் தந்தையனுர்
நிலங்கா தலிக்குந் திருவொற்றி நியமத் தெதிரே நின்றனர் காண்
விலங்கா தவரைத் தரிசித்தேன் மீட்டுங் காணேன் மெய்மறந்தேன்
கலங்கா நின்றே னென்னடிநான் கனவோ நனவோ கண்டதுவே. 8

நிரந்தார் கங்கை நீள்சடையார் நெற்றி விழியார் நித்தியனுர்
சிரந்தா ராகப் புயத்தணிவார் திருவா மொற்றித் தியாகரவர்
பரந்தார் கோயிற் கெதிர்நிற்கப் பார்த்தேன் மீட்டும் பார்ப்பதன்முன்
கரந்தார் கலுழ்ந்தே னென்னடிநான் கனவோ நனவோ கண்டதுவே. 9

அளித்தா ருலகை யம்பலத்தி லாடி வினையா லாட்டிநின்ருர்
தளித்தார் சோலை யொற்றியிடைத் தமது வடிவங் காட்டியுடன்
ஒளித்தார் நானு மனமயங்கி யுழலா நின்றே னெண்டொடிக்கைக்
களித்தார் குழலா யென்னடிநான் கனவோ நனவோ கண்டதுவே. 10

திருச்சிற்றம்பலம்

திருவொற்றியூர்

13. ஆற்றுக்காதலின் இரங்கல்

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

மந்தா கினிவான் மதிமத்த மருவுஞ் சடையார் மாசடையார்
நுந்தா விளக்கின் சுடரனையார் நோவ நுதலார் கண்ணுதலார்
உந்தா வொலிக்கு மோதமலி யொற்றி யூரி லுற்றெனக்குத்
தந்தார் மைய லென்னேஎன் சகியே யினிநான் சகியேனே. 1

பூமே லவனு மாலவனும் போற்றி வழுத்தும் பூங்கழலார்
சேமேல் வருவார் திருவொற்றித் தியாக ரவர்தந் திருப்புயத்தைத்
தேமே லலங்கன் முலையழுந்தச் சேர்ந்தா லன்றிச் சித்தசன்கைத்
தாமே லழற்பூத் தாழாதென் சகியே யினிநான் சகியேனே. 2

Koviloor Digital Library

கருணைக் கொருவே ரில்லாதார் கல்லுங் கரைக்குங் கழலடியார்
அருணைப் பதியா ராமாத்தூ ரமர்ந்தார் திருவா வடுதுறையார்
இருணச் சியமா மணிகண்ட ரெழிலா ரொற்றி யிறைவரிந்த
தருணத் தின்னுஞ் சேர்ந்திலரென் சகியே யினிநான் சகியேனே. 3

ஆரா வமுதா யன்புடையோ ரகத்து ளினிக்கு மற்புதனார்
தீரா வினையுந் தீர்த்தருளுந் தெய்வ மருந்தார் சிற்சபையார்
பாரார் புகழுந் திருவொற்றிப் பரமர் தமது தோளணையத்
தாரா ரின்னு மென்செய்கேன் சகியே யினிநான் சகியேனே. 4

துதிசெய் யடியார் தம்பசிக்குச் சோறு மிரப்பார் துய்யரொரு
நதிசெய் சடையார் திருவொற்றி நண்ணு மெனது நாயகனார்
மதிசெய் துயரு மதன்வலியு மாற்ற வின்னும் வந்திலரே
சதிசெய் தனரோ வென்னடியென் சகியே யினிநான் சகியேனே. 5

எங்கள் காழிக் கவுணியரை யெழிலார் சிவிகை யேற்றிவைத்தோர்
திங்க ளணியுஞ் செஞ்சடையார் தியாகர் திருவா மொற்றியினார்
அங்க ளணிபூந் தார்ப்புயத்தி லணைத்தா ரல்ல ரெனைமடவார்
தங்க ளலரோ தாழாதென் சகியே யினிநான் சகியேனே. 6

காவி மணந்த கருங்களத்தார் கருத்த ரெனது கண்ணனையார்
ஆவி யனையார் தாயனையா ரணிசே ரொற்றி யாண்டகையார்
பூவி னலங்கற் புயத்திலெனைப் புல்லா ரந்திப் பொழுதின்மதி
தாவி வருமே யென்செயுமோ சகியே யினிநான் சகியேனே. 7

மலஞ்சா திக்கு மக்கடமை மருவார் மருவார் மதிலழித்தார்
வலஞ்சா திக்கும் பாரிடத்தார் மாலு மறியா மலர்ப்பதத்தார்
நிலஞ்சா திக்கு மொற்றியினார் நினையா ரென்னை யணையாமற்
சலஞ்சா தித்தா ரென்னடியென் சகியே யினிநான் சகியேனே. 8

நாக வணியார் நக்கரெனு நாம முடையார் நாரணனோர்
பாக முடையார் மலைமகளோர் பாங்க ருடையார் பசுபதியார்
யோக முடையா ரொற்றியுளா ருற்று ரல்ல ருறுமோக
தாக மொழியா தென்செய்கேன் சகியே யினிநான் சகியேனே. 9

தீர்ந்தார் தலையே கலனகச் செறித்து நடிக்குந் திருக்கூத்தர்
தேர்ந்தார் தம்மைப் பித்தடையச் செய்வா ரொற்றித் தியாகரவர்
சேர்ந்தா ரல்ல ரின்னுமெனைத் தேடி வருமத் தீமதியஞ்
சார்ந்தா லதுதா னென்செயுமோ சகியே யினிநான் சகியேனே. 10

ஆயும் படிவத் தந்தணனாய் ஆரூ ரன்ற னணிமுடிமேல்
தோயுங் கமலத் திருவடிகள் சூட்டு மதிகைத் தொன்னகரார்
ஏயும் பெருமை யொற்றியுளா ரின்னு மணையா ரெனையளித்த
தாயுந் தமரு நொடிக்கின்றார் சகியே யினிநான் சகியேனே. 11

திருச்சிற்றம்பலம்

Koviloor Digital Library

திருவொற்றியூர்

14. திருக்கோலச் சிறப்பு

தலைவி வியத்தல்

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

பொன்னென் றொளிரும் புரிசடையார் புனைநூ லிடையார் புடையுடையார்
மன்னென் றுலகம் புகழொற்றி வாணர் பவனி வரக்கண்டேன்
மின்னென் றிலங்கு மாதரெலாம் வேட்கை யடைய விளங்கிநின்ற
தின்னென் றறியே னவரழகை யென்னென் றுரைப்ப தேந்திழையே. 1

அள்ளிக் கொடுக்குங் கருணையினு ரணிசே ரொற்றி யாலயத்தார்
வள்ளிக் குவந்தோன் றனையீன்ற வள்ளல் பவனி வரக்கண்டேன்
துள்ளிக் குதித்தென் மனமவரைச் சூழ்ந்த தின்னும் வந்ததிலை
எள்ளிக் கணியா வவரழகை யென்னென் றுரைப்ப தேந்திழையே. 2

அனத்துப் படிவங் கொண்டயனு மளவா முடியார் வடியாத
வனத்துச் சடையார் திருவொற்றி வாணர் பவனி வரக்கண்டேன்
மனத்துக் கடங்கா தாகிலதை வாய்கொண் டுரைக்க வசமாமோ
இனத்துக் குவப்பா மவரழகை யென்னென் றுரைப்ப தேந்திழையே. 3

கொழுதி யளிதே னுழுதுண்ணுங் கொன்றைச் சடையார் கூடலுடை
வழுதி மருகர் திருவொற்றி வாணர் பவனி வரக்கண்டேன்
பழுதி லவனுந் திருமாலும் படைக்குங் கமலப் பண்ணவனும்
எழுதி முடியா வவரழகை யென்னென் றுரைப்ப தேந்திழையே. 4

புன்னை யிதழிப் பொலிசடையார் போக யோகம் புரிந்துடையார்
மன்னும் விடையார் திருவொற்றி வாணர் பவனி வரக்கண்டேன்
உன்னு முடலங் குளிர்ந்தோங்க வுவகை பெருக வுற்றுநின்ற
என்னை விழுங்கு மவரழகை யென்னென் றுரைப்ப தேந்திழையே. 5

சொல்லுண் ணிறைந்த பொருளானார் தூய்ய ருளத்தே துன்னிநின்றார்
மல்லல் வயற்சூழ் திருவொற்றி வாணர் பவனி வரக்கண்டேன்
கல்லு மரமு மானந்தக் கண்ணீர் கொண்டு கண்டதெனில்
எல்லை யில்லா வவரழகை யென்னென் றுரைப்ப தேந்திழையே. 6

நீர்க்கு மதிக்கு நிலையாக நீண்ட சடையார் நின்றுநறு
வார்க்கும் பொழில்சூழ் திருவொற்றி வாணர் பவனி வரக்கண்டேன்
பார்க்கு மரிக்கும் பங்கயற்கும் பன்மா தவர்க்கும் பண்ணவர்க்கும்
யார்க்கு மடங்கா வவரழகை யென்னென் றுரைப்ப தேந்திழையே. 7

கலக வமணக் கைதவரைக் கழுவி லேற்றுங் கழுமலத்தோன்
வலகை குவித்துப் பாடுமொற்றி வாணர் பவனி வரக்கண்டேன்
உலக நிகழ்வைக் காணேனென் னுள்ள மொன்றே யறியுமடி
இலகு மவர்தந் திருவழகை யென்னென் றுரைப்ப தேந்திழையே. 8

Koviloor Digital Library

கண்ண னறியாக் கழற்பதத்தார் கண்ணூர் நெற்றிக் கடவுளருள்
வண்ண முடையார் திருவொற்றி வாணர் பவனி வரக்கண்டேன்
நண்ண விமையா ரெனவிமையா நாட்ட மடைந்து நின்றனடி
எண்ண முடியா வவரழகை யென்னென் றுரைப்ப தேந்திழையே. 9

மாழை மணித்தோ ளெட்டுடையார் மழுமா னேந்து மலர்க்கரத்தார்
வாழை வளஞ்சூ ழொற்றியூர் வாணர் பவனி வரக்கண்டேன்
யாழை மலைக்கு மொழிமடவா ரியாரு மயங்கிக் கலையவிழ்ந்தார்
ஏழை யேனு னவரழகை யென்னென் றுரைப்ப தேந்திழையே. 10

திருச்சிற்றம்பலம்

திருவொற்றியூர்

15. சோதிட நாடல்

தலைவி மிகு கழிகாதல்

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

பொன்னஞ் சிலையாற் புரமெரித்தார் பொழில்சூ ழொற்றிப் புண்ணியனூர்
முன்னஞ் சருந்து முக்கணனூர் மூவ ரறியா முதல்வர்வர
இன்னஞ் சிலநாள் சென்றிடுமோ விலதே யின்று வருவாரோ
உன்னஞ் சிறந்தீர் சோதிடம்பார்த் துரைப்பீர் புரிநூ லுத்தமரே. 1

பெற்றி யறியாப் பிரமனுக்கும் பெரிய மாற்கும் பெறவரியார்
புற்றி னரவார் கச்சையுடைப் புனித ரென்னைப் புணருமிடந்
தெற்றி மணிக்கால் விளங்குதில்லைச் சிற்றம் பலமோ வன்றியிந்த
ஒற்றி நகரோ சோதிடம்பார்த் துரைப்பீர் புரிநூ லுத்தமரே. 2

அளித்து மூன்று பிள்ளைகளா லகில நடக்க வாட்டுவிப்பார்
தெளித்து நதியைச் சடையிருத்துந் தேவர் திருவா ழொற்றியுளார்
களித்து மாலை கொடுப்பாரோ கள்ளி யெனவே விடுப்பாரோ
ஒளித்தொன் றுரையீர் சோதிடம்பார்த் துரைப்பீர் புரிநூ லுத்தமரே. 3

எண்டோ ளிலங்கு நீற்றணியர் யார்க்கு மிறைவ ரெனையுடையார்
வண்டோ லிடும்பூங் கொன்றையணி மாலை மார்பர் வஞ்சமிலார்
தண்டோய் பொழில்சூ ழொற்றியினுர் தமக்கு மெனக்கு மணப்பொருத்தம்
உண்டோ விலையோ சோதிடம்பார்த் துரைப்பீர் புரிநூ லுத்தமரே. 4

தவர்தாம் வணங்குந் தாளுடையார் தாய்போ லடியர் தமைப்புரப்பார்
பவர்தா மறியாப் பண்புடையார் பணைசூ ழொற்றிப் பதியமர்ந்தார்
அவர்தா மீண்டுற் றணைவாரோ வன்றி நான்போ யணைவேனோ
உவர்தா மகற்றுஞ் சோதிடம்பார்த் துரைப்பீர் புரிநூ லுத்தமரே. 5

பைத்த வரவப் பணியணிவார் பணைசூ ழொற்றிப் பதிமகிழ்வார்
மைத்த மிடற்று ரவர்தமக்கு மாலை யிடவே நானுளத்தில்
வைத்த கருத்து முடிந்திடுமோ வறிதே முடியா தழிந்திடுமோ
உய்த்த மதியாற் சோதிடம்பார்த் துரைப்பீர் புரிநூ லுத்தமரே. 6

Koviloor Digital Library

தக்க விதியின் மகத்தோடு தலையு மழித்தார் தண்ணளியார்
மிக்க வளஞ்சேர் திருவொற்றி மேவும் பரமர் வினையேன்றன்
துக்க மகலச் சுகமளிக்குந் தொடர்பு முண்டோ விலையோதான்
ஒக்க வறிந்தீர் சோதிடம்பார்த் துரைப்பீர் புரிநூ லுத்தமரே. 7

வெண்மை நீற்றர் வெள்ளேற்றர் வேத கீதர் மெய்யுவப்பார்
வண்மை யுடையா ரொற்றியினுர் மருவ மருவி மனமகிழ்ந்து
வண்மை யகலா தருட்கடனீ ராடு வேனே வாடேனே
உண்மை யறிந்தீர் சோதிடம்பார்த் துரைப்பீர் புரிநூ லுத்தமரே. 8

ஆர்த்து மலிநீர் வயலொற்றி யமர்ந்தார் மதியோ டரவைமுடிச்
சேர்த்து நடிப்பா ரவர்தமைநான் றேடி வலியச் சென்றிடினும்
பார்த்தும் பாரா திருப்பாரோ பரிந்து வாவென் றுரைப்பாரோ
ஓர்த்து மதிப்பீர் சோதிடம்பார்த் துரைப்பீர் புரிநூ லுத்தமரே. 9

அள்ள மிகும்பே ரழகுடையா ரானை யுரியா ரரிக்கரியார்
வெள்ள மிகும்பொன் வேணியினுர் வியன்சே ரொற்றி விகிர்தரவர்
கள்ள மூடனே புணர்வாரோ காதலுடனே கலப்பாரோ
உள்ள மறியேன் சோதிடம்பார்த் துரைப்பீர் புரிநூ லுத்தமரே. 10

திருச்சிற்றம்பலம்

திருவொற்றியூர்

16. திருவருட் பெருமிதம்

செவிலி கழறல்

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

விடையார் விடங்கப் பெருமானுர் வெள்ளச் சடையார் வெண்ணகையால்
அடையார் புரங்க ளெரித்தழித்தா ரவரே யிந்த வகிலமெலாம்
உடையா ரென்று நினைத்தனையூ ரொற்றி யவர்க்கென் றுணர்ந்திலையோ
இடையா மயல்கொண் டெதுபெறுவா யேழை யடிநீ யென்மகளே. 1

கருவாழ் வகற்றுங் கண்ணுதலார் கண்ண லயனுங் காண்பரியார்
திருவா மொற்றித் தேவரெனுஞ் செல்வ ரவரே செல்வமதிற்
பெருவாழ் வுடையா ரெனநினைத்தாய் பிச்சை யெடுத்த தறிந்திலையோ
இருவா மயல்கொண் டெதுபெறுவா யேழை யடிநீ யென்மகளே. 2

மட்டுக் கடங்கா வண்கையினுர் வளஞ்சே ரொற்றி வாணரவர்
பட்டுத் துகிலே திசைகளெலாம் படர்ந்த தென்னப் பரிந்தனையோ
கட்டத் துகிலுங் கிடையாது கந்தை யுடுத்த தறிந்திலையோ
இட்டுப் புணர்ந்திங் கெதுபெறுவா யேழை யடிநீ யென்மகளே. 3

நடங்கொள் கமலச் சேவடியார் நலஞ்சே ரொற்றி நாதரவர்
தடங்கொண் மார்பின் மணிப்பணியைத் தரிப்பார் நமக்கென் றெண்ணினையாற்
படங்கொள் பாம்பே பாம்பென்றுற் படையு நடுங்கும் பார்த்திலையோ
இடங்கொண் மயல்கொண் டெதுபெறுவா யேழை யடிநீ யென்மகளே. 4

Koviloor Digital Library

திருக்கண் ணுதலாற் றிருமகனைத் தீர்த்தா ரொற்றித் தேவரவர்
எருக்க மலரே சூடுவர்நீ யெழின்மல் லிகையென் றெண்ணினையால்
உருக்கு நெருப்பே யவருருவ முனக்கு மவர்க்கு முறவாமோ
இருக்க மயல்கொண் டெதுபெறுவா யேழை யடிநீ யென்மகளே. 5

மேலை வினையைத் தவிர்த்தருளும் விடையா ரொற்றி விகிர்தரவர்
மாலை கொடுப்பா ருணங்குதலை மாலை யதுதான் வாங்குவையே
ஆல மிடற்றார் காபாலி யாகித் திரிவா ரணிவிலரே
ஏல மயல்கொண் டென்பெறுவா யேழை யடிநீ யென்மகளே. 6

மாகம் பயிலும் பொழிற்பணைகொள் வளஞ்சே ரொற்றி வாணரவர்
யோகம் பயில்வார் மோகமிலா ரென்னே யுனக்கிங் கிணங்குவரே
ஆகம் பயில்வாள் மலையாளே யவளோ டொன்று மறிந்திலள்காண்
ஏக மயல்கொண் டெதுபெறுவா யேழை யடிநீ யென்மகளே. 7

விண்பார் புகழுந் திருவொற்றி மேவும் புனிதர் விடந்தரினும்
உண்பா ரின்னு முனக்கதுதா னுடன்பா டாமோ வுளமுருகித்
தண்பா ரென்பார் தமையெல்லாஞ் சார்வா ரதுவுன் சம்மதமோ
எண்பார் மயல்கொண் டெதுபெறுவா யேழை யடிநீ யென்மகளே. 8

நீடி வளங்கொள் ளொற்றியில்வாழ் நிமல ருலகத் துயிர்தோறும்
ஓடி யொளிப்பா ரவர்நீயு மொக்க வோட வுன்வசமோ
நாடி நடிப்பார் நீயுமுட னடித்தா லுலகர் நகையாரோ
ஈடின் மயல்கொண் டெதுபெறுவா யேழை யடிநீ யென்மகளே. 9

உள்ளி யுருகு மவர்க்கருளு மொற்றி நகர்வா ழுத்தமர்க்கு
வெள்ளி மலையும் பொன்மலையும் வீடென் றுரைப்பா ரானாலுங்
கள்ளி நெருங்கிப் புறங்கொள்சுடு காடே யிடங்காண் கண்டறிநீ
எள்ளின் மயல்கொண் டெதுபெறுவா யேழை யடிநீ யென்மகளே. 10

திருச்சிற்றம்பலம்

திருவொற்றியூர்

17. காதற்சிறப்புக் கதுவாமாண்பு

தலைவி கடிற்றெதிர் மறுத்தல்

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

உலக முடையார் தம்மூரை யொற்றி வைத்தா ரென்றாலும்
அலகில் புகழார் காபாலி யாகத் திரிந்தா ரென்றாலுந்
திலக மனையார் புறங்காட்டிற் சேர்ந்து நடித்தா ரென்றாலுங்
கலக விழியாய் நானவர்மேற் காத லொழியேன் கனவினுமே. 1

பெருமை யுடையார் மனைதொறும்போய்ப் பிச்சை யெடுத்தா ரானாலும்
அருமை மணியா ரம்பலத்தி லாடித் திரிந்தா ரானாலும்
ஒருமை யுடையார் கோவணமே யுடையா யுடுத்தா ரானாலுங்
கருமை விழியாய் நானவர்மேற் காத லொழியேன் கனவினுமே. 2

Koviloor Digital Library

எல்லா முடையார் மண்கூலிக் கெடுத்துப் பிழைத்தா ரானாலுங்
கொல்லா நலத்தார் யானையின்றோற் கொன்று தரித்தா ரானாலும்
வல்லார் விசையன் வில்லடியால் வடுப்பட் டுவந்தா ரானாலுங்
கல்லா முலையாய் நானவர்மேற் காத லொழியேன் கனவினுமே. 3

என்னை யுடையா ரொருவேட னெச்சி லுவந்தா ரென்றாலும்
அன்னை யனையா ரொருமகனை யறுக்க வுரைத்தா ரென்றாலுந்
துன்னு மிறையார் தொண்டனுக்குத் தூத ரானா ரென்றாலுங்
கன்னி யிதுகே ணானவர்மேற் காத லொழியேன் கனவினுமே. 4

என்று மிறவார் மிடற்றில்விட மிருக்க வமைத்தா ரென்றாலும்
ஒன்று நிலையார் நிலையில்லா தோடி யுழல்வா ரென்றாலும்
நன்று புரிவார் தருமனுயிர் நலிய வுதைத்தா ரென்றாலுங்
கன்றுண் கரத்தாய் நானவர்மேற் காத லொழியேன் கனவினுமே. 5

என்கண் ணனையார் மலைமகளை யிச்சித் தணைந்தா ரானாலும்
வன்கண் ணுடையார் தீக்கண்ணான் மதனை யெரித்தா ரானாலும்
புன்கண் ணறுப்பார் புன்னகையாற் புரத்தை யழித்தா ரானாலுங்
கன்னன் மொழியாய் நானவர்மேற் காத லொழியேன் கனவினுமே. 6

வாழ்வை யளிப்பார் மாடேறி மகிழ்ந்து திரிவா ரென்றாலுந்
தாழ்வை மறுப்பார் பூதகணத் தானை யுடையா ரென்றாலும்
ஊழ்வை யறுப்பார் பேய்க்கூட்டத் தொக்க நடிப்பா ரென்றாலுங்
காழ்கொண் முலையாய் நானவர்மேற் காத லொழியேன் கனவினுமே. 7

விமலை யிடத்தா ரின்பதுன்பம் வேண்டா நலத்தா ரானாலும்
அமல முடையார் தீவண்ண ராமென் றுரைப்பா யானாலும்
நமல மறுப்பார் பித்தரெனு நாம முடையா ரானாலுங்
கமலை யனையாய் நானவர்மேற் காத லொழியேன் கனவினுமே. 8

மான்கொள் கரத்தார் தலைமாலை மார்பி லணிந்தா ரென்றாலும்
ஆன்கொள் விடங்கர் சுடலையெரி யடலை விழைந்தா ரென்றாலும்
வான்கொள் சடையார் வழுத்துமது மத்த ரானா ரென்றாலுங்
கான்கொள் குழலாய் நானவர்மேற் காத லொழியேன் கனவினுமே. 9

போர்மால் விடையா ருலகமெலாம் போக்குந் தொழில ரானாலும்
ஆர்வாழ் சடையார் தமையடைந்தோ ராசை யழிப்பா ரானாலுந்
தார்வாழ் புயத்தார் மாவிரதர் தவஞா னியரே யானாலுங்
கார்வாழ் குழலாய் நானவர்மேற் காத லொழியேன் கனவினுமே. 10

கோதே மருவார் மாலயனுங் குறியா நெறியா ரென்றாலுஞ்
சாதே மகிழ்வா ரடியாரைத் தம்போ னினைப்பா ரென்றாலும்
மாதே வருக்கு மாதேவர் மௌன யோகி யென்றாலுங்
காதேர் குழையாய் நானவர்மேற் காத லொழியேன் கனவினுமே. 11

Koviloor Digital Library

உடையா ருலகிற் காசென்பார்க் கொன்று முதவா ராஞலும்
அடையார்க் கரியார் வேண்டார்க்கே யருள்வார் வலிய வாஞலும்
படையார் கரத்தர் பழிக்கஞ்சாப் பாசு பதரே யாஞலுங்
கடையா வமுதே நானவர்மேற் காத லொழியேன் கனவினுமே. 12

திருச்சிற்றம்பலம்

திருவொற்றியூர்

18. ஆற்றுவிரகம்

தோழியொடு கூறல்

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

ஓண முடையான் ருெழுதேத்து மொற்றி நகர்வா முத்தமர்பான்
மாண வலியச் சென்றென்னை மருவீ யணைவீ ரென்றேநான்
நாணம் விடுத்து நவின்ருலு நாமார் நீயா ரென்பாரேல்
ஏண விழியா யென்செய்வே னென்னை மடவா ரிகழாரோ. 1

காத மணக்குங் கடிமலர்ப்பூங் காவா ரொற்றிக் கண்ணுதலார்
போத மணக்கும் புனிதரவர் பொன்னம் புயத்தைப் புணரேனேற்
சீத மணக்குங் குழலாயென் சிந்தை மயங்கித் தியங்குமடி
ஏத மணக்கு மென்செய்வே னென்னை மடவா ரிகழாரோ. 2

பண்ணூர் மொழியா ருருக்காட்டும் பணைகு ழொற்றிப் பதியினரென்
கண்ணூர் மணிபோன் றென்னுயிரிற் கலந்து வாழுங் கள்வரவர்
நண்ணு ரின்னுந் திருவணையாய் நான்சென் றிடினு நலமருள
எண்ணு ராயி னென்செய்வே னென்னை மடவா ரிகழாரோ. 3

ஊரென் றுடையீ ரொற்றிதனை யுலக முடையீ ரென்னையணை
வீரென் றவர்முன் பலரறிய வெட்கம் விடுத்துக் கேட்டாலுஞ்
சேரென் றுரைத்தா லன்றியவர் சிரித்துத் திருவாய் மலர்ந்தெனைநீ
யாரென் றுரைத்தா லென்செய்வே னென்னை மடவா ரிகழாரோ. 4

சோம னிலவுந் தூய்ச்சடையார் சொல்லிற் கலந்த சுவையானூர்
சேம நிலவுந் திருவொற்றித் தேவ ரின்னுஞ் சேர்ந்திலர்நான்
தாம மருள்வீ ரென்கினுமித் தருணத் திசையா தென்பாரேல்
ஏம முலையா யென்செய்வே னென்னை மடவா ரிகழாரோ. 5

வில்லை மலையாய் கைக்கொண்டார் விடஞ்சூழ் கண்டர் விரிபொழில்சூழ்
தில்லை நகரா ரொற்றியுளார் சேர்ந்தா ரல்லர் நானவர்பால்
ஒல்லை யடைந்து நின்ருலு முன்னை யணைத லொருபோதும்
இல்லை யெனிலோ வென்செய்கே னென்னை மடவா ரிகழாரோ. 6

Koviloor Digital Library

திருந்தா லமர்ந்தார் திருப்புலியூர்ச் சிற்றம் பலத்திற் றிருநடஞ்செய்
மருந்தா ரொற்றி வாணரின்னும் வந்தா ரல்லர் நான்போயென்
அருந்தாழ் வகல வருள்வீரென் றுலுமொன்று மறியார்போல்
இருந்தா லம்மா வென்செய்வே னென்னை மடவா ரிகழாரே. 7

அசையா தமர்ந்து மண்டமெலா மசையப் புலியூ ரம்பலத்தே
நசையா நடிக்கு நாதரொற்றி நாட்டா ரின்னு நண்ணிலர்நான்
விசையாற் சென்றிங் கென்னையணை வீரென் றுரைப்பே னெனிலதற்கும்
இசையா ராகி லென்செய்கே னென்னை மடவா ரிகழாரே. 8

மாற்கா தலிக்கு மலரடியார் மாசற் றிலங்கு மணியனையார்
சேற்கா தலிக்கும் வயல்வளஞ்சூழ் திருவா மொற்றித் தேவரவர்
பாற்கா தலித்துச் சென்றாலும் பாவி யடிநீ யானணைதற்
கேற்கா தென்று லென்செய்வே னென்னை மடவா ரிகழாரே. 9

மாழை மலையைச் சிலையாக வளைத்தா ரன்பர் தமைவருத்தும்
ஊழை யழிப்பார் திருவொற்றி யூரா ரின்னு முற்றிலரென்
பாழை யகற்ற நான்செலினும் பாரா திருந்தாற் பைங்கொடியே
ஏழை யடிநா னென்செய்வே னென்னை மடவா ரிகழாரே. 10

திருச்சிற்றம்பலம்

திருவொற்றியூர்

19. காதன்மாட்சி

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

திடனுன் மறையார் திருவொற்றித் தியாக ரவர்தம் பவனிதனை
மடனு மகன்று காணவந்தான் மலர்க்கை வளைக ளிணைக்கவர்ந்து
படனு கணியார் நமைத்திரும்பிப் பாரா தோடு கின்றார்நாம்
உடனு வோடி னுலுமவ ரோட்டம் பிடிக்க வொண்ணுதே. 1

தக்க வளஞ்சே ரொற்றியில்வாழ் தம்பி ரானுர் பவனிதனைத்
துக்க மகன்று காணவந்தாற் றுகிலைக் கவர்ந்து துணிவுகொண்டே
பக்க மருவு நமைத்திரும்பிப் பாரா தோடு கின்றார்நாம்
ஒக்க வோடி னுலுமவ ரோட்டம் பிடிக்க வொண்ணுதே. 2

தாயா யளிக்குந் திருவொற்றித் தலத்தார் தமது பவனிதனை
மாயா நலத்திற் காணவந்தான் மருவு நமது மனங்கவர்ந்து
பாயா விரைவி னமைத்திரும்பிப் பாரா தோடு கின்றார்நாம்
ஓயா தோடி னுலுமவ ரோட்டம் பிடிக்க வொண்ணுதே. 3

நிலவார் சடையார் திருவொற்றி நிருத்தர் பவனி தனைக்காண
நலவா தரவின் வந்துநின்ற னங்கா யெனது நாண்கவர்ந்து
பலவா தரவா னமைத்திரும்பிப் பாரா தோடு கின்றார்நாம்
உலவா தோடி னுலுமவ ரோட்டம் பிடிக்க வொண்ணுதே. 4

Koviloor Digital Library

நாடார் வளங்கொ ளொற்றிநகர் நாதர் பவனி தனைக்காண
நீடா சையினால் வந்துவந்து நின்றா னமது நிறைகவர்ந்து
பாடார் வலரா நமைத்திரும்பிப் பாரா தோடு கின்றார்நாம்
ஓடா தோடி னாலுமவ ரோட்டம் பிடிக்க வொண்ணாதே. 5

ஆழியா வளத்தார் திருவொற்றி யையர் பவனி தனைக்காண
விழியா மகிழ்வி னொடும்வந்தா லென்னே பெண்ணே யெழில்கவர்ந்து
பழியா வெழிலி னமைத்திரும்பிப் பாரா தோடு கின்றார்நாம்
ஒழியா தோடி னாலுமவ ரோட்டம் பிடிக்க வொண்ணாதே. 6

திரையா ரோதை யொற்றியில்வாழ் தியாக ரவர்தம் பவனிதனைக்
கரையா மகிழ்விற் காணவந்தாற் கற்பி னலத்தைக் கவர்ந்துகொண்டு
பரையா தரிக்க நமைத்திரும்பிப் பாரா தோடு கின்றார்நாம்
உரையா தோடி னாலுமவ ரோட்டம் பிடிக்க வொண்ணாதே. 7

கடுக்கா தலித்தார் திருவொற்றிக் காளை யவர்தம் பவனிதனை
விடுக்கா மகிழ்விற் காணவந்தால் விரியு நமது வினைகவர்ந்து
படுக்கா மதிப்பி னமைத்திரும்பிப் பாரா தோடு கின்றார்நாம்
உடுக்கா தோடி னாலுமவ ரோட்டம் பிடிக்க வொண்ணாதே. 8

தில்லை யுடையார் திருவொற்றித் தியாக ரவர்தம் பவனிதனைக்
கல்லை யுருக்கிக் காணவந்தாற் கரண நமது கரந்திரவி
பல்லை யிறுத்தார் நமைத்திரும்பிப் பாரா தோடு கின்றார்நாம்
ஒல்லை யோடி னாலுமவ ரோட்டம் பிடிக்க வொண்ணாதே. 9

மடையார் வாளை வயலொற்றி வள்ளல் பவனி தனைக்காண
அடையா மகிழ்வி னொடும்வந்தா லம்மா நமது விடயமெலாம்
படையாற் கவர்ந்து நமைத்திரும்பிப் பாரா தோடு கின்றார்நாம்
உடையா தோடி னாலுமவ ரோட்டம் பிடிக்க வொண்ணாதே. 10

திருச்சிற்றம்பலம்

மூன்றாவது திருமுறை
முற்றிற்று

Koviloor Digital Library

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

அருட்பெருஞ்ஜோதி

திருவருட்பா

நான்காவது திருமுறை

முதலாவது

அன்புமாலை

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

அற்புதப்பொன் னம்பலத்தே யாடுகின்ற வரசே
ஆரமுதே யடியேன்ற னன்பேயென் னறிவே
கற்புதவு பெருங்கருணைக் கடலேயென் கண்ணே
கண்ணுதலே யானந்தக் களிப்பேமெய்க் கதியே
வெற்புதவு பசுங்கொடியை மருவுபெருந் தருவே
வேதவா கமமுடியின் விளங்குமொளி விளக்கே
பொற்புறவே யிவ்வுலகிற் பொருந்துசித்த ஞானேன்
பொருத்தமுநின் றிருவருளின் பொருத்தமது தானே. 1

நிறையணிந்த சிவகாமி நேயநிறை யொளியே
நித்தபரி பூரணமாஞ் சுத்தசிவ வெளியே
கறையணிந்த களத்தரசே கண்ணுடைய கரும்பே
கற்கண்டே கனியேயென் கண்ணேகண் மணியே
பிறையணிந்த முடிமலையே பெருங்கருணைக் கடலே
பெரியவரெல் லாம்வணங்கும் பெரியபரம் பொருளே
குறையணிந்து திரிகின்றேன் குறைகளெலாந் தவிர்த்தே
குற்றமெலாங் குணமாகக் கொள்வதுநின் குணமே. 2

Koviloor Digital Library

ஆண்பனைபெண் பனையாக்கி யங்கமதங் கனையா
யாக்கியருண் மணத்திலொளி யனைவரையு மாக்கு
மாண்பனைமிக் குவந்தளித்த மாகருணை மலையே
வருத்தமெலாந் தவிர்த்தெனக்கு வாழ்வளித்த வாழ்வே
நாண்பனையுந் தந்தையுமென் னற்குருவு மாகி
நாயடியே னுள்ளகத்து நண்ணியநா யகனே
வீண்பனைபோன் மிகநீண்டு விழற்கிறைப்பே னெனினும்
விருப்பமெலா நின்னருளின் விருப்பமன்றி யிலையே. 3

சித்தமநே கம்புரிந்து திரிந்துழலுஞ் சிறியேன்
செய்வகையொன் றறியாது திகைக்கின்றே னந்தோ
உத்தமனே யுன்னையலா லொருதுணைமற் றறியேன்
உன்னாணை யுன்னாணை யுண்மையிது கண்டாய்
இத்தமநே யச்சலந யிளிப்பொறுக்க மாட்டேன்
இரங்கியருள் செயல்வேண்டு மிதுதருண மெந்தாய்
சுத்தமனே யத்தவர்க்கு மெனைப்போலு மவர்க்குந்
துயர்தவிர்ப்பான் மணிமன்றிற் றுலங்கு நடத்தரசே. 4

துப்பாடு திருமேனிச் சோதிமணிச் சுடரே
துரியவெளிக் குள்ளிருந்த சுத்தசிவ வெளியே
அப்பாடு சடைமுடியெம் மானந்த மலையே
அருட்கடலே குருவேயென் னாண்டவனே யரசே
இப்பாடு படவெனக்கு முடியாது துரையே
இரங்கியருள் செயல்வேண்டு மிதுதருணங் கண்டாய்
தப்பாடு வேனெனினு மென்னைவிடத் துணியேல்
தனிமன்றுள் நடம்புரியுந் தாண்மலரெந் தாயே. 5

கண்ணோங்கு நுதற்கரும்பே கரும்பினிறை யமுதே
கற்கண்டே சர்க்கரையே கதலிநறுங் கனியே
விண்ணோங்கு வியன்சுடரே வியன்சுடர்க்குட் சுடரே
விடையவனே சடையவனே வேதமுடிப் பொருளே
பெண்ணோங்கு மொருபாகம் பிறங்குபெருந் தகையே
பெருமானை யொருகரங்கொள் பெரியபெரு மானே
எண்ணோங்கு சிறியவனே னென்னினுநின் னடியேன்
என்னைவிடத் துணியேனின் னின்னருடந் தருளே. 6

திருநெறிசேர் மெய்யடியர் திறனொன்று மறியேன்
செறிவறியே னறிவறியேன் செய்வகையை யறியேன்
கருநெறிசேர்ந் துழல்கின்ற கடையரினுங் கடையேன்
கற்கின்றேன் சாகாத கல்விநிலை காணேன்
பெருநெறிசேர் மெய்ஞ்ஞான சித்திநிலை பெறுவான்
பிதற்றுகின்றே னதற்குரிய பெற்றியிலே னந்தோ
வருநெறியி லென்னைவலிந் தாட்கொண்ட மணியே
மன்றுடைய பெருவாழ்வே வழங்குகநின் னருளே. 7

Koviloor Digital Library

குன்றாத குணக்குன்றே கோவாத மணியே
குருவேயென் குடிமுழுதாட் கொண்டசிவக் கொழுந்தே
என்றாதை யாகியெனக் கன்னையுமாய் நின்றே
எழுமையுமென் றனையாண்ட வென்னுயிரின் றுணையே
பொன்றாத பொருளேமெய்ப் புண்ணியத்தின் பயனே
பொய்யடியேன் பிழைகளெலாம் பொறுத்தபெருந் தகையே
அன்றால நிழலமர்ந்த வருளிறையே யெளியேன்
ஆசையெலா நின்னடிமே லன்றியொன்று மிலையே. 8

பூணாத பூண்களெலாம் பூண்டபரம் பொருளே
பொய்யடியேன் பிழைமுழுதும் பொறுத்தருளி யென்றுங்
காணாத காட்சியெலாங் காட்டியெனக் குள்ளே
கருணைநடம் புரிகின்ற கருணையையென் புகல்வேன்
மாணாத குணக்கொடியே னிதைநினைக்குந் தோறும்
மனமுருகி யிருகண்ணீர் வடிக்கின்றேன் கண்டாய்
ஏணாத னென்னினும்யா னம்மையினின் னடியேன்
எனவறிந்தே னறிந்தபின்ன ரிதயமலர்ந் தேனே. 9

அந்தோவீ ததிசயமீ ததிசயமென் புகல்வேன்
அறிவறியாச் சிறியேனை யறிவறியச் செய்தே
இந்தோங்கு சடைமணிநின் னடிமுடியுங் காட்டி
இதுகாட்டி யதுகாட்டி யென்னிலையுங் காட்டிச்
சந்தோட சித்தர்கடந் தனிச்சூதுங் காட்டிச்
சாகாத நிலைகாட்டிச் சகசநிலை காட்டி
வந்தோடு நிகர்மனம்போய்க் கரைந்தவிடங் காட்டி
மகிழ்வித்தாய் நின்னருளின் வண்மையெவர்க் குளதே. 10

அன்பருளக் கோயிலிலே யமர்ந்தருளும் பதியே
அம்பலத்தி லாடுகின்ற வானந்த நிதியே
வன்பருளத் தேமறைந்து வழங்குமொளி மணியே
மறைமுடியா கமமுடியின் வயங்குநிறை மதியே
என்பருவங் குறியாம லென்னைவலிந் தாட்கொண்
டின்பநிலை தனையளித்த வென்னறிவுக் கறிவே
முன்பருவம் பின்பருவங் கண்டருளிச் செய்யு
முறைமைநின தருணெறிக்கு மொழிதலறிந் திலனே. 11

பால்காட்டு மொளிவண்ணப் படிகமணி மலையே
பத்திக்கு நிலைதனிலே தித்திக்கும் பழமே
சேல்காட்டும் விழிக்கடையாற் றிருவருளைக் காட்டுஞ்
சிவகாம வல்லிமகிழ் திருநடநா யகனே
மால்காட்டி மறையாதென் மதிக்குமதி யாகி
வழிகாட்டி வழங்குகின்ற வகையதனைக் காட்டிக்
கால்காட்டிக் காலாலே காண்பதுவு மெனக்கே
காட்டியநின் கருணைக்குக் கைம்மாறொன் றிலனே. 12

Koviloor Digital Library

என்னையொன்று மறியாத விளம்பருவந் தனிலே
யென்னுளத்தே யமர்ந்தருளி யான்மயங்குந் தோறும்
அன்னையெனப் பரிந்தருளி யப்போதைக் கப்போ(து)
அப்பனெனத் தெளிவித்தே யறிவுறுத்தி நின்றாய்
நின்னையெனக் கென்னென்பே னென்னுயிரென் பேனோ
நீடியவென் னுயிர்த்துணையா நேயமதென் பேனோ
இன்னலறுத் தருள்கின்ற வென்குருவென் பேனோ
என்னென்பே னென்னுடைய இன்பமதென் பேனே. 13

பாடும்வகை யணுத்துணையும் பரிந்தறியாச் சிறிய
பருவத்தே யணிந்தணிந்து பாடும்வகை புரிந்து
நாடும்வகை யுடையோர்கள் நன்குமதித் திடவே
நல்லறிவு சிறிதளித்துப் புல்லறிவு போக்கி
நீடும்வகை சன்மார்க்க சுத்தசிவ நெறியில்
நிறுத்தினையைச் சிறியேனை நின்னருளென் னென்பேன்
கூடும்வகை யுடையரெலாங் குறிப்பெதிர்பார்க் கின்றார்
குற்றமெலாங் குணமாகக் கொண்டகுணக் குன்றே. 14

சற்றுமறி வில்லாத வெனையும்வலிந் தாண்டு
தமியேன்செய் குற்றமெலாஞ் சம்மதமாக் கொண்டு
கற்றுமறிந் துங்கேட்டுந் தெளிந்தபெரி யவருங்
கண்டுமகி ழப்புரிந்து பண்டைவினை யகற்றி
மற்றுமறி வனவெல்லா மறிவித்தென் னுளத்தே
மன்னுகின்ற மெய்யின்ப வாழ்க்கைமுதற் பொருளே
பெற்றுமறி வில்லாத பேதையென்மீ துனக்குப்
பெருங்கருணை வந்தவகை யெந்தவகை பேசே. 15

சுற்றதுமற் றவ்வழிமா சூததுவென் றெண்ணுத்
தொண்டரெலாங் கற்கின்றார் பண்டுமின்றுங் காணார்
எற்றதும்பு மணிமன்றி லின்பநடம் புரியும்
என்னுடைய துரையேநா னின்னுடைய வருளால்
கற்றதுநின் னிடத்தேபின் கேட்டதுநின் னிடத்தே
கண்டதுநின் னிடத்தேயுட் கொண்டதுநின் னிடத்தே
பெற்றதுநின் னிடத்தேயின் புற்றதுநின் னிடத்தே
பெரியதவம் புரிந்தேனென் பெற்றியதி சயமே. 16

ஏறியநா னெருநிலையி லேறவறி யாதே
இளைக்கின்ற காலத்தென் னிளைப்பெல்லா மொழிய
வீறியவோர் பருவசத்தி கைகொடுத்துத் தூக்கி
மேலேற்றச் செய்தவனை மேவுறவுஞ் செய்து
தேறியநீர் போலெனது சித்தமிகத் தேறித்
தெளிந்திடவுஞ் செய்தனையிச் செய்கையெவர் செய்வார்
ஊறியமெய் யன்புடையா ருள்ளமெனும் பொதுவில்
உவந்துநடம் புரிகின்ற வொருபெரிய பொருளே. 17

Koviloor Digital Library

தருநிதியக் குருவியற்றச் சஞ்சலிக்கு மனத்தால்
தளர்ந்தசிறி யேன்றனது தளர்வெல்லாந் தவிர்த்து
இருநிதியத் திருமகளி ருவரெனை வணங்கி
இசைந்திடுவந் தனமப்பா வென்றுமகிழ்ந் திசைத்துப்
பெருநிதிவாய்த் திடவெனது முன்பாடி யாடும்
பெற்றியளித் தனையிந்தப் பேதமையேன் றனக்கே
ஒருநிதிநின் னருணிதியு முவந்தளித்தல் வேண்டும்
உயர்பொதுவி லின்பநட முடையபரம் பொருளே. 18

அஞ்சாதே யென்மகனே யநுக்கிரகம் புரிந்தாம்
ஆடுகநீ வேண்டியவா றுடுகவிவ் வுலகில்
செஞ்சாலி வயலோங்கு தில்லைமன்றி லாடுந்
திருநடங்கண் டன்புருவாய்ச் சித்தசுத்த னாகி
எஞ்சாத நெடுங்கால மின்பவெள்ளந் திளைத்தே
இனிதுமிக வாழியவென் றெனக்கருளிச் செய்தாய்
துஞ்சாதி யந்தமிலாச் சுத்தநடத் தரசே
துரியநடு வேயிருந்த சுயஞ்சோதி மணியே. 19

நான்கேட்கின் றவையெல்லா மளிக்கின்று யெனக்கு
நல்லவனே யெல்லாமும் வல்லசிவ சித்தா
தான்கேட்கின் றவையின்றி முழுதொருங்கே யுணர்ந்தாய்
தத்துவனே மதியணிந்த சடைமுடியெம் மிறைவா
தேன்கேட்கு மொழிமங்கை யொருபங்கி லுடையாய்
சிவனேயெம் பெருமானே தேவர்பெரு மானே
வான்கேட்கும் புகழ்த்தில்லை மன்றினடம் புரிவாய்
மணிமிடற்றுப் பெருங்கருணை வள்ளலென்கண் மணியே.

ஆநந்த வெளியினிடை யாநந்த வடிவாய்
ஆநந்த நடம்புரியு மாநந்த வமுதே
வானந்த முதலெல்லா வந்தமுங்கண் டறிந்தோர்
மதிக்கின்ற பொருளேவெண் மதிமுடிச்செங் கனியே
ஊனந்தங் கியமாயை யுடலினிடத் திருந்தும்
ஊனமிலா திருக்கின்ற வுளவருளிச் செய்தாய்
நானந்த வுளவுகண்டு நடத்துகின்ற வகையும்
நல்லவனே நீமகிழ்ந்து சொல்லவரு வாயே. 21

ஆரணமு மாகமமு மெதுதுணிந்த ததுவே
அம்பலத்தி லாடுகின்ற வாட்டமென வெனக்குக்
காரணமுங் காரியமும் புலப்படவே தெரித்தாய்
கண்ணுதலே யிங்கிதற்குக் கைம்மாறொன் றறியேன்
பூரணநின் னடித்தொண்டு புரிகின்ற சிறியேன்
போற்றிசிவ போற்றியெனப் போற்றிமகிழ் கின்றேன்
நாரணநான் முகன்முதலோர் காண்பருமந் நடத்தை
நாயடியே னிதயத்தி னவிற்றியருள் வாயே. 22

Koviloor Digital Library

இறைவநின தருளாலே யெனைக்கண்டு கொண்டேன்
எனக்குநனைக் கண்டேன்பின் னிருவருமொன் றாக
உறைவதுகண் டதிசயித்தே னதிசயத்தை யொழிக்கும்
உளவறியே னவ்வுளவொன் றுரைத்தருளல் வேண்டும்
மறைவதிலா மணிமன்றுள் நடம்புரியும் வாழ்வே
வாழ்முதலே பரமசுக வாரியென்கண் மணியே
குறைவதிலாக் குளிர்மதியே சிவகாம வல்லிக்
கொழுந்துபடர்ந் தோங்குகின்ற குணநிமலக் குன்றே. 23

சத்தியமெய் யறிவின்ப வடிவாகிப் பொதுவிற்
றனிநடஞ்செய் தருளுகின்ற சற்குருவே யெனக்குப்
புத்தியொடு சித்தியுநல் லறிவுமளித் தழியாப்
புநிதநிலை தனிலிருக்கப் புரிந்தபரம் பொருளே
பத்தியறி யாச்சிறியேன் மயக்கமின்னுந் தவிர்த்துப்
பரமசுக மயமாக்கிப் படிற்றுளத்தைப் போக்கித்
தத்துவநீ நானென்னும் போதமது நீக்கித்
தனித்தசுகா தீதமுநீ தந்தருள்க மகிழ்ந்தே. 24

ஏதுமறி யாதிருளி லிருந்தசிறி யேனை
எடுத்துவிடுத் தறிவுசிறி தேய்ந்திடவும் புரிந்து
ஓதுமறை முதற்கலைக ளோதாம லுணர
உணர்விலிருந் துணர்த்தியரு ளுண்மைநிலை காட்டித்
தீதுசெறி சமயநெறி செல்லுதலைத் தவிர்த்துத்
திருவருண்மெய்ப் பொதுநெறியிற் செலுத்தியுநான் மருளும்
போதுமயங் கேன்மகனே யென்றுமயக் கெல்லாம்
போக்கியெனக் குள்ளிருந்த புநிதபரம் பொருளே. 25

முன்னறியேன் பின்னறியேன் முடிபதொன்று மறியேன்
முன்னியுமுன் னுதுமிங்கே மொழிந்தமொழி முழுதும்
பன்னிலையிற் செறிகின்றோர் பலருமன முவப்பப்
பழுதுபடா வண்ணமருள் பரிந்தளித்த பதியே
தன்னிலையிற் குறைவுபடாத் தத்துவப்பே ரொளியே
தனிமன்று ணடம்புரியுஞ் சத்தியதற் பரமே
இந்நிலையி லின்னுமென்றன் மயக்கமெலாந் தவிர்த்தே
எனையடிமை கொளல்வேண்டு மிதுசமயங் காணே. 26

ஐயறிவிற் சிறிதுமறிந் தநுபவிக்கத் தெரியா
தழுதுகளித் தாடுகின்ற வப்பருவத் தெளியேன்
மெய்யறிவிற் சிறந்தவருங் களிக்கவுனைப் பாடி
விரும்பியரு ணெறிநடக்க விடுத்தனைநீ யன்றே
பொய்யறிவிற் புலைமனத்துக் கொடியேன்முன் பிறப்பிற்
புரிந்ததவம் யாததனைப் புகன்றருள வேண்டும்
துய்யறிவுக் கறிவாகி மணிமன்றி னடஞ்செய்
சுத்தபரி பூரணமாஞ் சுகரூபப் பொருளே. 27

Koviloor Digital Library

அருணிறைந்த பெருந்தகையே யானந்த வமுதே
அற்புதப்பொன் னம்பலத்தே யாடுகின்ற வரசே
தெருணிறைந்த சிந்தையிலே தித்திக்குந் தேனே
செங்கனியே மதியணிந்த செஞ்சடையெம் பெருமான்
மருணிறைந்த மனக்கொடியேன் வஞ்சமெலாம் கண்டு
மகிழ்ந்தினிய வாழ்வளித்த மாகருணைக் கடலே
இருணிறைந்த மயக்கமின்னுந் தீர்ந்தருளல் வேண்டும்
என்னுடைய நாயகனே யிதுதருணங் காணே. 28

மன்னியபொன் னம்பலத்தே யானந்த நடஞ்செய்
மாமணியே யென்னிருகண் வயங்குமொளி மணியே
தன்னியல்பி னிறைந்தருளுஞ் சத்துவபூ ரணமே
தற்பரமே சிற்பரமே தத்துவப்பே ரொளியே
அந்நியமில் லாதசுத்த வத்துவித நிலையே
ஆதியந்த மேதுமின்றி யமர்ந்தபரம் பொருளே
என்னியல்பி னெனக்கருளி மயக்கமின்னுந் தவிர்த்தே
எனையாண்டு கொளல்வேண்டு மிதுதருணங் காணே. 29

பூதநிலை முதற்பரம நாதநிலை யளவும்
போந்தவற்றி னியற்கைமுதற் புணர்ப்பெல்லாம் விளங்க
வேதநிலை யாகமத்தி னிலைகளெலாம் விளங்க
வினையேன்ற னுளத்திருந்து விளக்கியமெய் விளக்கே
போதநிலை யாயதுவுங் கடந்தவின்ப நிலையாய்ப்
பொதுவினின்மெய் யறிவின்ப நடம்புரியும் பொருளே
ஏதநிலை யாவகையென் மயக்கமின்னுந் தவிர்த்தே
எனைக்காத்தல் வேண்டுகின்றே னிதுதருணங் காணே. 30

செவ்வண்ணத் திருமேனி கொண்டொருபாற் பசந்து
திகழ்படிக வண்ணமொடு தித்திக்குங் கனியே
இவ்வண்ண மெனமறைக்கு மெட்டாமெய்ப் பொருளே
என்னுயிரே யென்னுயிர்க்குள் ளிருந்தருளும் பதியே
அவ்வண்ணப் பெருந்தகையே யம்பலத்தே நடஞ்செய்
ஆரமுதே யடியேனிங் ககமகிழ்ந்து புரிதல்
எவ்வண்ண மதுவண்ண மிசைந்தருளல் வேண்டும்
என்னுடைய நாயகனே யிதுதருணங் காணே. 31

திருச்சிற்றம்பலம்

Koviloor Digital Library

இரண்டாவது
அருட்பிரகாசமாலை

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்
திருச்சிற்றம்பலம்

உலகமெலா முதிக்கின்ற வொளிநிலைமெய் யின்பம்
உறுகின்ற வெளிநிலையின் றுபயநிலை யாகி
இலகியநின் சேவடிகள் வருந்தியிட நடந்தே
இரவிலெளி யேனிருக்கு மிடந்தேடி யடைந்து
கலகமிலாத் தெருக்கதவங் காப்பவிழ்க்கப் புரிந்து
களித்தெனையங் கழைத்தெனது கையிலொன்று கொடுத்தாய்
அலகிலருட் கடலாமுன் பெருமையையென் னென்பேன்
ஆநந்த வல்லிமகி ழருணடனா யகனே. 1

ஒளிவண்ணம் வெளிவண்ண மென்றநந்த வேத
உச்சியெலா மெச்சுகின்ற வுச்சமல ரடிகள்
அளிவண்ணம் வருந்தியிட நடந்தருளி யடியேன்
அடைந்தவிடத் தடைந்துகத வந்திறக்கப் புரிந்து
களிவண்ண மெனையழைத்தென் கையில்வண்ண மளித்த
கருணைவண்ணந் தனைவியந்து கருதும்வண்ண மறியேன்
தெளிவண்ண முடையரன்பு செய்யும்வண்ணம் பொதுவிற்
றெய்வநடம் புரிகின்ற சைவபரம் பொருளே. 2

திருமாலு மருமாறிச் சிரஞ்சீவி யாகித்
தேடியுங்கண் டறியாத சேவடிகள் வருந்த
வருமாலை மண்ணுறுத்தப் பெயர்த்துநடந் தருளி
வஞ்சகனே னிருக்குமிடம் வலிந்திரவிற் றேடித்
தெருமாலைக் கதவுதனைத் திறப்பித்து நின்று
செவ்வண்ணத் திடைப்பசந்த திருமேனி காட்டிக்
குருமாலைப் பெருவண்ணக் கொழுந்தொன்று கொடுத்தாய்
குருமணிநின் றிருவருளைக் குறித்துமகிழ்ந் தனனே. 3

அன்றொருநா ளிரவிடைவந் தணிக்கதவந் திறப்பித்
தருண்மலர்ச்சே வடிவாயிற் படிப்புறத்து மகத்து
மன்றவைத்துக் கொண்டென்னை வரவழைத்து மகனே
வருந்தாதே யிங்கிதனை வாங்கிக்கொள் ளென்ன
ஒன்றுசிறி யேன்மறுப்ப மறித்தும்வலிந் தெனது
ஒருகைதனிற் கொடுத்திங்கே யுறைதியென்று மறைந்தாய்
இன்றதுதா னநுபவத்துக் கிசைந்ததுநா யடியேன்
என்னதவம் புரிந்தேனோ வினித்துயரொன் றிலனே. 4

Koviloor Digital Library

இரவிலடி வருந்தநடந் தெழிற்கதவந் திறப்பித்
தென்னையழைத்து மகனேநீ யிவ்வுலகிற் சிறிதுங்
கரவிடைநெஞ் சயர்ந்திளைத்துக் கலங்காதே யிதனைக்
களிப்பொடுவாங் கெனவெனது கைதனிலே கொடுத்து
உரவிடையிங் குறைகமகிழ்ந் தெனத்திருவாய் மலர்ந்த
உன்னுடைய பெருங்கருணைக் கொப்பிலையெல் புகல்வேன்
அரவிடையி லசைந்தாட வம்பலத்தி னடுவே
ஆனந்தத் திருநடஞ்செய் தாட்டுகின்ற வரசே. 5

இயங்காத விரவிடையன் றொருநாள்வந் தெளியேன்
இருக்குமிடந் தனைத்தேடிக் கதவுதிறப் பித்துக்
கயங்காத மலரடிகள் கவின்வாயிற் படியின்
கடைப்புறத்து மகத்தும்வைத்துக் களித்தெனையங் கழைத்து
மயங்காதே யிங்கிதனை வாங்கிக்கொண் டுலகின்
மகனேநீ விளையாடி வாழ்கவென வுரைத்தாய்
புயங்காநின் னருளருமை யறியாது திரிந்தேன்
பொய்யடியே னறிந்தின்று பூரித்தே னுளமே. 6

ஒருநாளன் றிரவிலடி வருந்தநடந் தடியேன்
உற்றவிடந் தனைத்தேடிக் கதவுதிறப் பித்து
மறுநாள மலரடியொன் றுள்ளகத்தே பெயர்த்து
வைத்துமகிழ்ந் தெனையழைத்து வாங்கிதனை யென்று
தருநாளில் யான்மறுப்ப மறித்தும்வலிந் தெனது
தடங்கைதனிற் கொடுத்திங்கே சார்கவென வுரைத்தாய்
வருநாளி லதனருமை யறிந்துமகிழ் கின்றேன்
மணிமன்றுள் நடம்புரியு மாணிக்க மணியே. 7

நெடுமாலும் பன்றியென நெடுங்காலம் விரைந்து
நேடியுங்கண் டறியாது நீடியபூம் பதங்கள்
தொடுமாலை யெனவருபூ மகள்முடியிற் சூட்டித்
தொல்வினையே னிருக்குமிடந் தனைத்தேடித் தொடர்ந்து
கடுமாலை நடுவிரவிற் கதவுதிறப் பித்துக்
கடையேனை யழைத்தெனது கையிலொன்று கொடுத்துக்
கொடுமாலை விடுத்துமகி ழெனத்திருவாய் மலர்ந்தாய்
குணக்குன்றே யிந்நாளின் கொடையையறிந் தனனே. 8

மறைமுடிக்கு மணியாகி வயங்கியசே வடிகள்
மண்மீது படநடந்து வந்தருளி யடியேன்
குறைமுடிக்கும் படிக்கதவந் திறப்பித்து நின்று
கூவியெனை யழைத்தொன்று கொடுத்தருளிச் செய்தாய்
கறைமுடிக்குங் களத்தரசே கருணைநெடுங் கடலே
கண்ணோங்கு மொளியேசிற் கனவெளிக்குள் வெளியே
பிறைமுடிக்குஞ் சடைக்கடவுட் பெருந்தருவே குருவே
பெரியமன்றுள் நடம்புரியும் பெரியபரம் பொருளே. 9

அன்றகத்தே யடிவருந்த நடந்தென்னை யழைத்திங்
கஞ்சாதே மகனேயென் றளித்தனையொன் றதனைத்
துன்றகத்துச் சிறியேனு னறியாது வறிதே
சுழன்றதுகண் டிரங்கிமிகத் துணிந்துமகிழ் விப்பான்
இன்றகத்தே புகுந்தருளி யெனக்கதனைத் தெரிவித்
தின்புறச்செய் தருளியநின் னிரக்கமெவர்க் குளதோ
மன்றகத்து நடம்புரிந்து வயங்குமொரு குருவே
வல்லவரெல் லாம்வணங்கு நல்லபரம் பொருளே. 10

அன்பர்மனக் கோயிலிலே யமர்ந்தருளி விளங்கும்
அரும்பொருளா முனதுமல ரடிவருந்த நடந்து
வன்பர்களிற் றலைநின்ற வஞ்சகனே னிருந்த
மனைக்கதவு திறப்பித்து மகிழ்ந்தெனையங் கழைத்துத்
துன்பமெலா நீங்குகவிங் கிதுதனைவாங் குகநீ
தொழும்பனென்ற வென்னுடைய துரையேநின் னருளை
என்பகர்வே னென்வியப்பே னெங்ஙனநான் மறப்பேன்
என்னுயிருக் குயிராகி யிலங்கியசற் குருவே. 11

ஞாலநிலை யடிவருந்த நடந்தருளி யடியேன்
நண்ணுமிடந் தனிற்கதவ நன்றுதிறப் பித்துக்
காலநிலை கருதிமனங் கலங்குகின்ற மகனே
கலங்காதே யென்றெனது கையிலொன்று கொடுத்துச்
சீலநிலை யுறவாழ்க வெனத்திருவாய் மலர்ந்த
சிவபெருமா னின்பெருமைத் திருவருளென் னென்பேன்
ஆலநிலை மணிகண்டத் தரும்பெருஞ்சீ ரொளியே
அம்பலத்திற் றிருநடஞ்செய் தாட்டுகின்ற வரசே. 12

இருணிறைந்த விரவிலடி வருந்தநடந் தடியேன்
இருக்குமிடந் தனைத்தேடிக் கதவுதிறப் பித்து
மருணிறைந்த மனத்தாலே மயங்குகின்ற மகனே
மயங்காதே யென்றென்னை வரவழைத்துப் புகன்று
தெருணிறைந்த தொன்றெனது செங்கைதனிற் கொடுத்துத்
திகழ்ந்துநின்ற பரம்பொருணின் றிருவருளென் னென்பேன்
அருணிறைந்த மெய்ப்பொருளே யடிமுடியொன் றில்லா
ஆநந்த மன்றினட மாடுகின்ற வரசே. 13

கன்மயமுங் கனிவிக்குந் திருவடிகள் வருந்தக்
கடைப்புலையே னிருக்குமிடந் தனைத்தேடி நடந்து
தொன்மயமா மிரவினிடைக் கதவுதிறப் பித்துத்
துணிந்தழைத்தென் கைதனிலே தூயவொன்றை யளித்து
வன்மயமில் லாமனத்தால் வாழ்கவென வுரைத்த
மாமணிநின் றிருவருளின் வண்மையையென் னென்பேன்
தன்மயமே சின்மயப்பொன் னம்பலத்தே யின்பத்
தனிநடஞ்செய் தருளுகின்ற தத்துவப்பே ரொளியே. 14

Koviloor Digital Library

பிரணவத்தி னடிமுடியி னடுவினுநின் றோங்கும்
பெருங்கருணைத் திருவடிகள் பெயர்ந்துவருந் திடவே
கரணமுற்று நடந்தடியே னிருக்குமிடந் தேடிக்
கதவுதிறப் பித்தருளிக் கடையேனை யழைத்துச்
சரணமுற்று வருந்தியவென் மகனேயிங் கிதனைத்
தாங்குகவென் றென்றெனது தடங்கைதனிற் கொடுத்து
மரணமற்று வாழ்கவெனத் திருவார்த்தை யளித்தாய்
மன்றுடையாய் நின்னருளின் வண்மையெவர்க் குளதே.

ஓங்காரத் துள்ளொளியா யவ்வொளிக்கு ளொளியாய்
உபயவடி வாகியநின் னபயபதம் வருந்த
ஈங்கார நடந்திரவில் யானிருக்கு மிடம்போந்
தெழிற்கதவந் திறப்பித்திங் கென்னைவலிந் தழைத்துப்
பாங்காரும் வண்ணமொன்றென் கைதனிலே யளித்துப்
பண்பொடுவாழ்ந் திடுகவெனப் பணித்தபரம் பொருளே
ஆங்கார வண்ணமகன் றதையறிந்து மகிழ்ந்தே
அநுபவிக்கின் றேன்பொதுவி லாடுகின்ற வரசே. 16

அரிபிரமா தியரெல்லா மறிந்தணுக வொண்ணு
அரும்பெருஞ்சீ ரடிமலர்க ளன்றொருநாள் வருந்தக்
கரியிரவி னடந்தருளி யானிருக்கு மிடத்தே
கதவுதிறப் பித்தெனது கையிலொன்று கொடுத்து
உரிமையொடு வாழ்கவென வுரைத்ததுவு மன்றி
உவந்தின்றை யிரவினும்வந் துணர்த்தினையென் மீது
பிரியமுனக் கிருந்தவண்ண மென்புகல்வேன் பொதுவிற்
பெருநடஞ்செய் யரசேயென் பிழைபொறுத்த குருவே. 17

காரணனென் றுரைக்கின்ற நாரணனு மயனுங்
கனவிடத்துங் காண்பரிய கழலடிகள் வருந்த
ஊரணவி நடந்தெளியே னுறையுமிடந் தேடி
உவந்தெனது கைதனிலே யொன்றுகொடுத் திங்கே
ஏரணவி யுறைகமகிழ்ந் தெனவுரைத்தாய் நின்சீர்
யாதறிந்து புகன்றேன்முன் யாதுதவம் புரிந்தேன்
பாரணவி யன்பரெலாம் பரிந்துபுகழ்ந் தேத்தப்
பணியணிந்து மணிமன்று ளணிநடஞ்செய் பதியே. 18

துரியவெளி தனிற்பரம நாதவணை நடுவே
சுயஞ்சுடரிற் றுலங்குகின்ற துணையடிகள் வருந்தப்
பிரியமொடு நடந்தெளியே னிருக்குமிடந் தேடிப்
பெருங்கதவந் திறப்பித்துப் பேயனெனை யழைத்து
உரியபொரு ளொன்றெனது கையிலளித் திங்கே
உறைகமகிழ்ந் தெனவுரைத்த வுத்தமநின் னருளைப்
பெரியபொரு ளெவற்றினுக்கும் பெரியபொரு ளென்றே
பின்னரறிந் தேனிதற்கு முன்னரறி யேனே. 19

Koviloor Digital Library

நீளாதி மூலமென நின்றவனு நெடுநாள்
நேடியுங்கண் டறியாத நின்னடிகள் வருந்த
ஆளாநா னிருக்குமிட மதுதேடி நடந்தே
அணிக்கதவந் திறப்பித்துள் ளென்போடென் னையழைத்து
வாளாநீ மயங்காதே மகனேயிங் கிதனை
வாங்கிக்கொள் ளென்றெனது மலர்க்கைதனிற் கொடுத்தாய்
கேளாயென் னுயிர்த்துணையாய்க் கிளர்மன்றில் வேத
கீதநடம் புரிகின்ற நாதமுடிப் பொருளே. 20

சத்தவுரு வாமறைப்பொற் சிலம்பணிந்தம் பலத்தே
தனிநடஞ்செய் தருளுமடித் தாமரைகள் வருந்த
சித்தவுரு வாகியிங்கே யெனைத்தேடி நடந்து
தெருக்கதவந் திறப்பித்தென் செங்கையிலொன் றளித்து
மத்தவுரு வாமனத்தான் மயக்கமுறேல் மகனே
மகிழ்ந்துறைக வெனத்திருவாய் மலர்ந்தகுண மலையே
சுத்தவுரு வாய்ச்சுத்த வருவாகி யழியாச்
சுத்தவரு வுருவான சுத்தபரம் பொருளே. 21

பலகோடி மறைகளெலா முலகோடி மயங்கப்
பரநாத முடிநடக்கும் பாதமலர் வருந்தச்
சிலகோடி நடந்தெளியே னிருக்குமிடத் தணைந்து
தெருக்கதவந் திறப்பித்தென் செங்கையிலொன் றளித்தே
அலகோடி வருந்தேலிங் கமர்கவெனத் திருவாய்
அலர்ந்தவருட் குருவேபொன் னம்பலத்தெம் மரசே
விலகோடி யெனத்துயர்க ளொன்றுடொன்று புகன்று
விரைந்தோடச் செய்தனையிவ் விளைவறியேன் வியப்பே.

செய்வகையோன் றறியாது திகைப்பினொடே யிருந்தேன்
திடுக்கெனவிங் கெழுந்திருப்பத் தெருக்கதவந் திறப்பித்
துய்வகையொன் றெனதுகரத் துவந்தளித்து மகனே
உய்கமகிழ்ந் தின்றுமுத லொன்றுமஞ்சே லென்று
மெய்வகையிற் புகன்றபின்னு மஞ்சியிருந் தேனை
மீட்டுமின்றை யிரவிலுணர் வூட்டியச்சந் தவிர்த்தாய்
ஐவகையாய் நின்றுமன்றி லாடுகின்ற வரசே
அற்புதத்தாண் மலர்வருத்த மடைந்தனவென் பொருட்டே.

உள்ளிரவி மதியாய்நின் றுலகமெலா நடத்தும்
உபயவகை யாகியநின் னபயபதம் வருந்த
நள்ளிரவின் மிகநடந்து நானிருக்கு மிடத்தே
நடைக்கதவந் திறப்பித்து நடைக்கடையி லழைத்து
எள்ளிரவு நினைந்துமயக் கெய்தியிடேல் மகனே
என்றென்கை தனிலொன்றை யீர்ந்துமகிழ் வித்தாய்
அள்ளிரவு போன்மிடற்றி லழகுகிளர்ந் தாட
அம்பலத்தி லாடுகின்ற செம்பவளக் குன்றே. 24

Koviloor Digital Library

விளங்கறிவுக் கறிவாகி மெய்த்துரிய நிலத்தே
விளையுமநு பவமயமா மெல்லடிகள் வருந்தத்
துளங்குசிறி யேனிருக்கு மிடந்தேடி நடந்து
தொடர்க்கதவந் திறப்பித்துத் தொழும்பனெனை யழைத்துக்
களங்கமிலா வொன்றெனது கைதனிலே கொடுத்துக்
களித்துறைக வெனத்திருவாக் களித்தவருட் கடலே
குளங்கொள்விழிப் பெருந்தகையே மணிமன்றி னடஞ்செய்
குருமணியே யன்பர்மனக் கோயிலில்வாழ் குருவே. 25

வேதமுடி மேற்சுடரா யாகமத்தின் முடிமேல்
விளங்குமொளி யாகியநின் மெல்லடிகள் வருந்தப்
பூதமுடி மேனடந்து நாளிருக்கு மிடத்தே
போந்திரவிற் கதவுதனைக் காப்பவிழ்க்கப் புரிந்து
நாதமுடி மேல்விளங்குந் திருமேனி காட்டி
நற்பொருளென் கைதனிலே நல்கியநின் பெருமை
ஓதமுடி யாதெனிலென் புகல்வேனம் பலத்தே
உயிர்க்கின்பந் தரநடன முடையபரம் பொருளே. 26

தங்குசரா சரமுழுது மளித்தருளி நடத்துந்
தாண்மலர்கண் மிகவருந்தத் தனித்துநடந் தொருநாள்
ஈங்குலில்யா னிருக்குமனைக் கதவுதிறப் பித்துக்
கையிலொன்று கொடுத்தவுன்றன் கருணையையென் னென்பேன்
இங்குசிறி யேன்பிழைகள் ளெத்தனையும் பொறுத்த
என்குருவே யென்னுயிருக் கின்பருளும் பொருளே
திங்களணி சடைப்பவளச் செழுஞ்சோதி மலையே
சிவகாம வல்லிமகிழ் திருநடநா யகனே. 27

மாமாயை யசைந்திடச்சிற் றம்பலத்தே நடித்தும்
வருந்தாத மலரடிகள் வருந்தநடந் தருளி
ஆமாறன் றிரவினிடை யணிக்கதவந் திறப்பித்
தங்கையிலொன் றளித்தினிநீ யஞ்சேலென் றுவந்து
தேமாவின் பழம்பிழிந்து வடித்துநறு நெய்யுந்
தேனுமொக்கக் கலந்ததெனத் திருவார்த்தை யளித்தாய்
கோமானின் னருட்பெருமை யென்னுரைப்பேன் பொதுவிற்
கூத்தாடி யெங்களையாட் கொண்டபரம் பொருளே. 28

படைப்பவனுங் காப்பவனும் பற்பலநாண் முயன்று
பார்க்கவிரும் பினுங்கிடையாப் பாதமலர் வருந்த
நடைப்புலையேன் பொருட்டாக நடந்திரவிற் கதவம்
நன்குதிறப் பித்தொன்று நல்கியது மன்றி
இடைப்படுநா ளினும்வந்தென் னிதயமயக் கெல்லாம்
இரிந்திடச்செய் தனையன்ற னின்னருளென் னென்பேன்
தடைப்படுமா றில்லாத பேரின்பப் பெருக்கே
தனிமன்றி லானந்தத் தாண்டவஞ்செய் யரசே. 29

Koviloor Digital Library

முன்னைமறை முடிமணியா மடிமலர்கள் வருந்த
முழுதிரவி னடந்தெளியேன் முயங்குமிடத் தடைந்து
அன்னையினும் பரிந்தருளி யணிக்கதவந் திறப்பித்
தங்கையிலொன் றளித்தெனையு மன்பினொடு நோக்கி
என்னையினி மயங்காதே யென்மகனே மகிழ்வோ
டிருத்தியென வுரைத்தாய்நின் னின்னருளென் னென்பேன்
மின்னைநிகர் செஞ்சடைமேன் மதியமசைந் தாட
வியன்பொதுவிற் றிருநடஞ்செய் விமலபரம் பொருளே.

மீதானத் தருளொளியாய் விளங்கியநின் னடிகள்
மிகவருந்த நடந்திரவில் வினையேன்றன் பொருட்டாச்
சீதானக் கதவுதனைத் திறப்பித்துச் சிறியேன்
செங்கையிலொன் றளித்தினிநீ சிறிதுமஞ்சே லிங்கு
மாதானத் தவர்சூழ வாழ்கவென வுரைத்தாய்
மாமணிநின் றிருவருளின் வண்மையெவர்க் குளதே
ஓதானத் தவர்தமக்கு முணர்வரிதாம் பொருளே
ஓங்கியசிற் றம்பலத்தே யொளிநடஞ்செய் பதியே. 31

வேதாந்த சித்தாந்த மென்னுமந்த விரண்டும்
விளங்கவமர்ந் தருளியநின் மெல்லடிகள் வருந்த
நாதாந்த வெளிதனிலே நடந்தருளு மதுபோல்
நடந்தருளிக் கடைநாயே னண்ணுமிடத் தடைந்து
போதாந்த மிசைவிளங்குந் திருமேனி காட்டிப்
புலையேன்கை யிடத்தொன்று பொருந்தவைத்த பொருளே
சூதாந்த மனத்தினுக்கு மப்பாற்பட் டிருந்த
துரியவெளிக் கேவிளங்கும் பெரியவருட் குருவே. 32

ஒருமையிலே யிருமையென வுருக்காட்டிப் பொதுவில்
ஒளிநடஞ்செய் தருளுகின்ற வுபயபதம் வருந்த
அருமையிலே நடந்தெளியே னிருக்குமிடத் தடைந்தே
அணிக்கதவந் திறப்பித்தென் னங்கையிலொன் றளித்துப்
பெருமையிலே பிறங்குகநீ யெனத்திருவாய் மலர்ந்த
பெருங்கருணைக் கடலேநின் பெற்றியையென் னென்பேன்
கருமையிலே நெடுங்காலங் கலந்துகலக் குற்ற
கலக்கமெலாந் தவிர்த்தெம்மைக் காத்தருளும் பதியே. 33

விந்துநிலை நாதநிலை யிருநிலைக்கு மரசாய்
விளங்கியநின் சேவடிகண் மிகவருந்த நடந்து
வந்துநிலை பெறச்சிறியே னிருக்குமிடத் தடைந்து
மணிக்கதவந் திறப்பித்தென் மகனேயென் றழைத்து
இந்துநிலை முடிமுதலாந் திருவுருவங் காட்டி
என்கையிலொன் றளித்தின்ப மெய்துகவென் றுரைத்தாய்
முந்துநிலைச் சிறியேன்செய் தவமறியேன் பொதுவில்
முத்தர்மனந் தித்திக்க நிர்த்தமிடும் பொருளே. 34

Koviloor Digital Library

நவநிலைக்கு மதிகார நடத்துகின்ற வரசாய்
　நண்ணியநின் பொன்னடிகள் நடந்துவருந் திடவே
அவநிலைக்குங் கடைப்புலையே னிருக்குமிடத் திரவில்
　அணைந்தருளிக் கதவுதிறந் தடியேனை யழைத்தே
சிவநிலைக்கும் படியெனது செங்கையிலொன் றளித்துச்
　சித்தமகிழ்ந் துறைகவெனத் திருப்பவளந் திறந்தாய்
பவநிலைக்குங் கடைநாயேன் பயின்றதவ மறியேன்
　பரம்பரமா மன்றினடம் பயின்றபசு பதியே. 35

புண்ணியர்தம் மனக்கோயிற் புகுந்தமர்ந்து விளங்கும்
　பொன்மலர்ச்சே வடிவருத்தம் பொருந்தநடந் தெளியேன்
நண்ணியவோ ரிடத்தடைந்து கதவுதிறப் பித்து
　நற்பொருளொன் றென்கைதனி னல்கியநின் பெருமை
எண்ணியபோ தெல்லாமென் மனமுருக்கு மென்றால்
　எம்பெருமா னின்னருளை யென்னெனயான் புகல்வேன்
தண்ணியவெண் மதியணிந்த செஞ்சடைநின் றாடத்
　தனித்தமன்றி லாநந்தத் தாண்டவஞ்செய் யரசே. 36

மூவருக்கு மெட்டாது மூத்ததிரு வடிகண்
　முழுதிரவில் வருந்தியிட முயங்கிநடந் தருளி
யாவருக்கு மிழிந்தேனிங் கிருக்குமிடத் தடைந்தே
　எழிற்கதவந் திறப்பித்து வெனையழைத்து மகனே
தேவருக்கு மரிதிதனை வாங்கெனவென் கரத்தே
　சித்தமகிழ்ந் தளித்தனைநின் றிருவருளென் னென்பேன்
பூவருக்கும் பொழிற்றில்லை யம்பலத்தே நடநம்
　புரிந்துயிருக் கின்பருளும் பூரணவான் பொருளே. 37

கற்றவர்தங் கருத்தினின்முக் கனிரசம்போ லினிக்குங்
　கழலடிகள் வருந்தியிடக் கடிதுநடந் திரவின்
மற்றவர்கா ணுறுதெளியே னிருக்குமிடத் தடைந்து
　மனைக்கதவு திறப்பித்து வலிந்தெனையங் கழைத்து
நற்றவர்க்கு மரிதிதனை வாங்கெனவென் கரத்தே
　நல்கியநின் பெருங்கருணை நட்பினையென் னென்பேன்
அற்றவர்க்கும் பற்றவர்க்கும் பொதுவினிலே நடஞ்செய்
　அருட்குருவே சச்சிதா நந்தபரம் பொருளே. 38

கருணைவடி வாயடியா ருள்ளகத்தே யமர்ந்த
　கழலடிகள் வருந்தியிடக் கங்குலிலே நடந்து
மருணிறையுஞ் சிறியேனு னிருக்குமிடத் தடைந்து
　மணிக்கதவந் திறப்பித்து மகிழ்ந்தழைத்து மகனே
பொருணிறையு மிதனையிங்கே வாங்கெனவென் கரத்தே
　பொருந்தவளித் தருளியநின் பொன்னருளென் னென்பேன்
அருணிறையும் பெருங்கடலே யம்பலத்திற் பரமா
　நந்தவுரு வாகிநட மாடுகின்ற வரசே. 39

Koviloor Digital Library

அருளுருவா யைந்தொழிலு நடத்துகின்ற வடிகள்
அசைந்துவருந் திடவிரவில் யானிருக்கு மிடத்தே
தெருளுருவி னடந்துதெருக் கதவுதிறப் பித்துச்
சிறியேனை யழைத்தெனது செங்கையிலொன் றளித்து
மருளுருவின் மற்றவர்போன் மயங்கேலென் மகனே
மகிழ்ந்துதிரு வருள்வழியே வாழ்கவென வுரைத்தாய்
இருளுருவின் மனக்கொடியேன் யாதுதவம் புரிந்தேன்
எல்லாம்வல் லவனாகி யிருந்தபசு பதியே. 40

முழுதுமுணர்ந் தவர்முடிமேன் முடிக்குமணி யாகி
முப்பொருளு மாகியநின் னொப்பிலடி மலர்கள்
கழுதுமுணர் வரியநடுக் கங்குலிலே வருந்தக்
கடிதுநடந் தடிநாயேன் கருதுமிடத் தடைந்து
பழுதுபடா வண்ணமெனைப் பரிந்தழைத்து மகனே
பணிந்திதனை வாங்கெனவென் பாணியுறக் கொடுத்துத்
தொழுதெனைப்பா டுகவென்று சொன்னபசு பதிநின்
தூயவருட் பெருமையென் சொல்லிவியக் கேனே. 41

மானினைத்த வளவெல்லாங் கடந்தப்பால் வயங்கு
மலரடிகள் வருந்தியிட மகிழ்ந்துநடந் தருளிப்
பானினைத்த சிறியேனு ளிருக்குமிடத் தடைந்து
பணைக்கதவந் திறப்பித்துப் பரிந்தழைத்து மகனே
நீநினைத்த வண்ணமெலாங் கைகூடு மிதுவோர்
நின்மலமென் றென்கைதனி னேர்ந்தளித்தாய் நினக்கு
நானினைத்த நன்றியொன்று மிலையேநின் னருளை
நாயடியே னென்புகல்வே னடராச மணியே. 42

சூரியசந் திரரெல்லாந் தோன்றுமை விளங்கும்
சுயஞ்சோதி யாகுமடித் துணைவருந்த நடந்து
கூரியமெய் யறிவென்ப தொருசிறிதுங் குறியாக்
கொடியேனு ளிருக்குமிடங் குறித்திரவி னடந்து
காரியமுண் டெனக்கூவிக் கதவுதிறப் பித்துக்
கையிலொன்றை யளித்தனையுன் கருணையையென் னென்பேன்
ஆரியர்தம் மளவுகடந் தப்பாலுங் கடந்த
வானந்த மன்றினட மாடுகின்ற வரசே. 43

தற்போதந் தோன்றாத தலந்தனிலே தோன்றுந்
தாண்மலர்கள் வருந்தியிடத் தனித்துநடந் தருளி
எற்போதங் ககன்றிரவில் யானிருக்கு மிடம்போந்
தெழிற்கதவந் திறப்பித்திவ் வெளியேனை யழைத்துப்
பொற்போத வண்ணமொன்றென் கைதனிலே யளித்துப்
புலையொழிந்த நிலைதனிலே பொருந்துகவென் றுரைத்தாய்
சிற்போத மயமான திருமணிமன் றிடத்தே
சிவமயமா மநுபோகத் திருநடஞ்செய் யரசே. 44

Koviloor Digital Library

கற்பனைக ளெல்லாம்போய்க் கரைந்ததலந் தனிலே
கரையாது நிறைந்ததிருக் கழலடிகள் வருந்த
வெற்பனையு மின்றியொரு தனியாக நடந்து
விரைந்திரவிற் கதவுதனைக் காப்பவிழ்க்கப் புரிந்து
அற்பனையோர் பொருளாக வழைத்தருளி யடியேன்
அங்கையிலொன் றளித்தனைநின் னருளினையென் புகல்வேன்
நற்பனவர் துதிக்கமணி மன்றகத்தே யின்ப
நடம்புரியும் பெருங்கருணை நாயகமா மணியே. 45

ஒன்றாகி யிரண்டாகி யொன்றிரண்டி னடுவே
உற்றவநு பவமயமா யொளிரடிகள் வருந்த
அன்றூர நடந்திரவில் யானுறையு மிடத்தே
அடைந்துகத வந்திறப்பித் தன்பொடெனை யழைத்து
நன்றூர வெனதுகரத் தொன்றருளி யிங்கே
நண்ணிநீ யெண்ணியவா நடத்துகவென் றுரைத்தாய்
இன்றூர வந்ததனை யுணர்த்தினைநின் னருளை
என்புகல்வேன் மணிமன்றி லிலங்கியசற் குருவே. 46

எங்கும்விளங் குவதாகி யின்பமய மாகி
என்னுணர்வுக் குணர்வுதரு மிணையடிகள் வருந்த
பொங்குமிர விடைநடந்து நானுறையு மிடத்தே
போந்துமணிக் கதவுதனைக் காப்பவிழ்க்கப் புரிந்து
தங்குமடி யேனையழைத் தங்கையிலொன் றளித்தே
தயவினொடு வாழ்கவெனத் தனித்திருவாய் மலர்ந்தாய்
இங்குநின தருட்பெருமை யென்னுரைப்பேன் பொதுவில்
இன்பநடம் புரிகின்ற வென்னுடைநா யகனே. 47

சித்தெவையும் வியத்தியுறுஞ் சுத்தசிவ சித்தாய்ச்
சித்தமதிற் றித்திக்குந் திருவடிகள்வருந்த
மத்தவிர விடைநடந்து வந்தருளி யடியேன்
வாழுமனைத் தெருக்கதவு திறப்பித்தங் கடைந்து
அத்தகவி னெனையழைத்தென் னங்கையிலொன் றளித்தாய்
அன்னையினு மன்புடையாய் நின்னருளென் னென்பேன்
முத்தர்குழுக் காணமன்றி லின்பநடம் புரியும்
முக்கணுடை யானந்தச் செக்கர்மணி மலையே. 48

சகலமொடு கேவலமுந் தாக்காத விடத்தே
தற்பரமாய் விளங்குகின்ற தாண்மலர்கள் வருந்த
பகலொழிய நடுவிரவி னடந்தருளி யடியேன்
பரியுமிடத் தடைந்துமணிக் கதவுதிறப் பித்துப்
புகலுறுக வருகவென வழைத்தெனது கரத்தே
பொருந்தவொன்று கொடுத்தனைநின் பொன்னருளென் னென்பேன்
உகலொழியப் பெருந்தவர்க ளுற்றுமகிழ்ந் தேத்த
உயர்பொதுவி லின்பநட முடையபரம் பொருளே. 49

Koviloor Digital Library

உள்ளுருகுந் தருணத்தே யொளிகாட்டி விளங்கும்
உயர்மலர்ச்சே வடிவருந்த வுவந்துநடந் தருளிக்
கள்ளமனத் தேனிருக்கு மிடந்தேடி யடைந்து
கதவுதிறப் பித்தருளிக் களித்தெனையங் கழைத்து
நள்ளுலகி லுனக்கிதுநா நல்கினநீ மகிழ்ந்து
நாளுமுயிர்க் கிதம்புரிந்து நடத்தியென வுரைத்தாய்
தெள்ளுமமு தாயன்பர் சித்தமெலா மினிக்குஞ்
செழுங்கனியே மணிமன்றிற் றிருநடநா யகனே. 50

தன்னுருவங் காட்டாத மலவிரவு விடியுந்
தருணத்தே யுதயஞ்செய் தாண்மலர்கள் வருந்தப்
பொன்னுருவத் திருமேனி கொண்டுநடந் தடியேன்
பொருந்துமிடத் தடைந்துகத வந்திறக்கப் புரிந்து
தன்னுருவம் போன்றதொன் றங்கெனையழைத்தென் கரத்தே
தந்தருளி மகிழ்ந்திங்கே தங்குகவென் றுரைத்தாய்
என்னுருவ மெனக்குணர்த்தி யருளியநின் பெருமை
என்னுரைப்பேன் மணிமன்றி லின்பநடத் தரசே. 51

அண்டவகை பிண்டவகை யனைத்துமுதித் தொடுங்கும்
அணிமலர்ச்சே வடிவருத்த மடையநடந் தருளிக்
கண்டவருங் காணாத நடுவிரவு தனில்யான்
கருதுமிடத் தடைந்துகத வந்திறக்கப் புரிந்து
தொண்டனென வெனையுமழைத் தென்கையிலொன் றளித்தாய்
துரையேநின் னருட்பெருமைத் தொன்மையையென் னென்பேன்
உண்டவர்க ளுண்ணுந்தோறு முவட்டாத வமுதே
உயர்பொதுவி லின்பநட முடையபரம் பொருளே. 52

அறிவுடையா ருள்ளகப்போ தலருகின்ற தருணத்
தருண்மணத்தே ளாகியுற்ற வடியிணைகள் வருந்தப்
பிரிவுடையே னிருக்குமிடந் தேடிநடந் தடைந்து
பெருங்கதவந் திறப்பித்துப் பேயனெனை யழைத்துச்
செறிவுடையா யிதுவாங்கென் றுதவவுநான் மறுப்பத்
திரும்பவுமென் கைதனிலே சேரவளித் தனையே
பொறிவறியே னளவினிலுன் கருணையையென் னென்பேன்
பொற்பொதுவி னடம்புரியும் பூரணவான் பொருளே. 53

விடையமொன்றுங் காணாத வெளிநடுவே யொளியாய்
விளங்குகின்ற சேவடிகண் மிகவருந்த நடந்து
கடையனையுங் குறிக்கொண்டு கருதுமிடத் தடைந்து
கதவுதிறப் பித்தெனது கையிலொன்று கொடுக்க
இடையினது நான்மறுப்ப மறுக்கேலென் மகனே
என்றுபின்னுங் கொடுத்தாய்நின் னின்னருளென் னென்பேன்
உடையபரம் பொருளேயென் னுயிர்த்துணையே பொதுவில்
உய்யும்வகை யருணடநஞ் செய்யுமொளி மணியே. 54

Koviloor Digital Library

நான்றனிக்குந் தருணத்தே தோன்றுகின்ற துணையாய்
　　நான்றனியா விடத்தெனக்குத் தோன்றாத துணையாய்
என்றருளுந் திருவடிகள் வருந்தநடந் தருளி
　　யானுறையு மிடத்தடைந்து கதவுதிறப் பித்து
ஆன்றவெனை யழைத்தெனது கையிலொன்று கொடுத்தாய்க்
　　கறிவிலியேன் செய்யும்வகை யறியேனின் கருணை
ஈன்றவட்கு மில்லையென நன்கறிந்தேன் பொதுவில்
　　இல்பநடம் புரிகின்ற வென்னுயிர்நா யகனே.　　55

அருள்விளங்கு முள்ளகத்தே யதுவதுவாய் விளங்கும்
　　அணிமலர்ச்சே வடிவருத்த மடையநடந் தருளிப்
பொருள்விளங்கா நடுவிரவி னுறையு மிடத்தே
　　போந்துதெருக் காப்பவிழ்க்கப் புரிந்தெனையங் கழைத்து
தெருள்விளங்கு மொருபொருளென் செங்கைதனி லளித்தாய்
　　சிவபெருமான் பெருங்கருணைத் திறத்தினையென் னென்பேன்
மருள்விளங்கி யுணர்ச்சியுறத் திருமணிமன் றிடத்தே
　　மன்னுயிருக் கின்பருள வயங்குநடத் தரசே.　　56

பருவமுறு தருணத்தே சர்க்கரையுந் தேனும்
　　பாலுநெய்யு மளிந்தநறும் பழரசமும் போல
மருவுமுள முயிருணர்வோ டெல்லாந்தித் திக்க
　　வயங்குமடி யிணைகண்மிக வருந்தநடந் தருளி
தெருவடைந்து நானிருக்கு மனைக்காப்புத் திறக்கச்
　　செய்தருளிப் பொருளொன்றென் செங்கைதனி லளித்தாய்
திருமணிமன் றிடைநடிக்கும் பெருமானின் கருணைத்
　　திறத்தினையிச் சிறியேனோ செப்புதலெங் ஙனமே.　　57

என்னறிவை யுண்டருளி யென்னுடனே கூடி
　　என்னின்ப மெனக்கருளி யென்னையுந்தா னாக்கித்
தன்னறிவாய் விளங்குகின்ற பொன்னடிகள் வருந்தத்
　　தனிநடந்து தெருக்கதவந் தாடிறப்பித் தருளி
முன்னறிவி லெனையழைத்தென் கையிலொன்று கொடுத்த
　　முன்னவநின் னின்னருளை யென்னெனயான் மொழிவேன்
மன்னறிவுக் கறிவாம்பொன் னம்பலத்தே யின்ப
　　வடிவாகி நடிக்கின்ற மாகருணை மலையே.　　58

பரயோக வநுபவத்தே யகம்புறந்தோன் றாத
　　பரஞ்சோதி யாகுமிணைப் பாதமலர் வருந்த
வரயோகர் வியப்பவடி யேனிருக்கு மிடத்தே
　　வந்துதெருக் கதவுதனைக் காப்பவிழ்க்கப் புரிந்து
திரயோகர்க் கரிதிதனை வாங்குகவென் றெனது
　　செங்கைதனி லளித்தாய்நின் றிருவருளென் னென்பேன்
உரயோக ருளம்போல விளங்குமணி மன்றில்
　　உயிர்க்கின்பந் தரநடந முடையபரம் பொருளே.　　59

சொன்னிறைந்த பொருளுமத னிலக்கியமு மாகித்
துரியநடு விருந்தவடித் துணைவருந்த நடந்து
கொன்னிறைந்த விரவினிடை யெழுந்தருளிக் கதவங்
கொளுங்காப்பை யவிழ்வித்துக் கொடியேனை யழைத்து
என்னிறைந்த வொருபொருளென் கையிலளித் தருளி
யென்மகனே வாழ்கவென வெழிற்றிருவாய் மலர்ந்தாய்
தன்னிறைந்த நின்கருணைத் தன்மையையென் புகல்வேன்
தனிமன்றி லானந்தத் தாண்டவஞ்செய் யரசே. 60

முத்தியொன்று வியத்தியொன்று காண்மினென்று சுகத்தின்
முடிகண்முடித் துரைக்கின்ற வடிகண்மிக வருந்தப்
பத்தியொன்று மில்லாத கடைப்புலையேன் பொருட்டாப்
படிற்றுளத்தே னிருக்குமிடந் தனைத்தேடி நடந்து
சித்தியொன்று திருமேனி காட்டிமனைக் கதவந்
திறப்பித்தங் கெனையழைத்தென் செங்கையிலே மகிழ்ந்து
சத்தியொன்று கொடுத்தாய்நின் றண்ணருளென் னென்பேன்
தனிமன்று ளானந்தத் தாண்டவஞ்செய் யரசே. 61

எனக்குநன்மை தீமையென்ப திரண்டுமொத்த விடத்தே
இரண்டுமொத்துத் தோன்றுகின்ற வெழிற்பதங்கள் வருந்தத்
தனக்குநல்ல வண்ணமொன்று தாங்கிநடந் தருளித்
தனித்திரவிற் கடைப்புலையேன் றங்குமிடத் தடைந்து
கனக்குமனைத் தெருக்கதவுக் காப்பவிழ்க்கப் புரிந்து
களிப்பொடெனை யழைத்தெனது கையிலொன்று கொடுத்து
உனக்கினிய வண்ணமிதென் றுரைத்தருளிச் சென்றாய்
உடையவநின் னருட்பெருமை யுரைக்கமுடி யாதே. 62

இம்மையினே டம்மையினு மெய்துகின்ற வின்பம்
எனைத்தொன்றும் வேண்டாத வியற்கைவருந் தருணம்
எம்மையினு நிறைசொருப சுத்தசுகா ரம்பம்
இயற்சொருப சுத்தசுக வநுபவமென் றிரண்டாய்ச்
செம்மையிலே விளங்குகின்ற திருவடிகள் வருந்தச்
சிறியேன்பா லடைந்தெனது செங்கையிலொன் றளித்தாய்
உம்மையிலே யான்செய்தவம் யாதெனவு மறியேன்
உயர்பொதுவி லின்பநட முடையபரம் பொருளே. 63

அன்பளிப்ப தொன்றுபின்ன ரின்பளிப்ப தொன்றென்
றறிஞரெலா மதிக்கின்ற வடிமலர்கள் வருந்த
என்பளித்த வுடல்கடொறு முயிர்க்குயிரா யிருக்கும்
எம்பெருமான் நடந்தருளிக் கதவுதிறப் பித்துத்
துன்பளிக்கு நெஞ்சகத்தென் றனைக்கூவி யழைத்துத்
தூயவிள நகைமுகத்தே துளும்பவெனை நோக்கி
முன்பளித்த தென்றெனது கையிலொன்றை யளித்தாய்
முன்னவநின் னருட்பெருமை முன்னவறி யேனே. 64

Koviloor Digital Library

மோகவிருட் கடல்கடத்தும் புணையொன்று நிறைந்த
மோனசுக மளிப்பிக்குந் துணையொன்றென் றுரைக்கும்
யோகமலர்த் திருவடிகள் வருந்தநடந் தருளி
உணர்விலியேன் பொருட்டாக விருட்டிரவி லடைந்து
போகமனைப் பெருங்கதவந் திறப்பித்துட் புகுந்து
புலையேனை யழைத்தொன்று பொருந்தவென்கை கொடுத்தாய்
நாகமணிப் பணிமிளிர வம்பலத்தே நடஞ்செய்
நாயகநின் பெருங்கருணை நவிற்றமுடி யாதே. 65

காணுகின்ற கண்களுக்குக் காட்டுகின்ற வொளியாய்க்
காட்டுகின்ற வொளிதனக்குக் காட்டுவிக்கு மொளியாய்ப்
பூணுகின்ற திருவடிகள் வருந்தநடந் தடியேன்
பொருந்துமிடத் தடைந்துகத வந்திறக்கப் புரிந்து
கோணுகின்ற மனத்தாலே நாணுவதேன் மகனே
குறைவறவாழ் கெனமகிழ்ந்து கொடுத்தனையொன் றெனக்கு
மாணுகின்ற நின்னருளின் பெருமையையென் னென்பேன்
மணிமன்றி லானந்த மாநடஞ்செய் யரசே. 66

ஆறாறு தத்துவத்தின் சொருபமுத லனைத்தும்
அறிவிக்கு மொன்றவற்றி னப்பாலே யிருந்த
வீறாய தற்சொருப முதலனைத்து மறிவில்
விளக்குவிக்கு மொன்றென்று விளைவறிந்தோர் விளம்பும்
பேறாய திருவடிகள் வருந்தநடந் திரவிற்
பேயடியே னிருக்குமிடத் தடைந்தென்னை யழைத்துச்
சோறாய பொருளொன்றென் கரத்தளித்தாய் பொதுவிற்
சோதிநின தருட்பெருமை யோதிமுடி யாதே. 67

கருவிகளை நம்முடனே கலந்துளத்தே யியக்கிக்
காட்டுவதொன் றக்கருவி கரணங்க ளனைத்தும்
ஒருவியப்பாற் படுத்திநமை யொருதனியாக் குவதொன்
றுபயமெனப் பெரியர்சொலு மபயபதம் வருந்தத்
துருவியடி யேனிருக்கு மிடத்திரவி லடைந்து
துணிந்தெனது கையிலொன்று சோதியுறக் கொடுத்து
வெருவியிடே லின்றுமுதன் மிகமகிழ்க வென்றாய்
வித்தகநின் றிருவருளை வியக்கமுடி யாதே. 68

ஆதியிலே கலப்பொழிய வான்மசுத்தி யளித்தாங்
கதுவதுவாக் குவதொன்று மதுவதுவா யாக்குஞ்
சோதியிலே தானாகிச் சூழ்வதொன்று மென்று
சூழ்ச்சியறிந் தோர்புகலுந் துணையடிகள் வருந்த
வீதியிலே நடந்தடியே னிருக்குமிடந் தேடி
விரும்பியடைந் தெனைக்கூவி விளைவொன்று கொடுத்தாய்
பாதியிலே யொன்றான பசுபதிநின் கருணைப்
பண்பையறிந் தேனெளியா நண்பையடைந் தேனே. 69

Koviloor Digital Library

இருட்டாய மலச்சிறையி லிருக்குநமை யெல்லாம்
எடுப்பதொன்று மின்பநிலை கொடுப்பதொன்று மெனவே
பொருட்டாயர் போற்றுகின்ற பொன்னடிகள் வருந்தப்
பொறையிரவில் யானிருக்கு மிடந்தேடிப் புகுந்து
மருட்டாயத் திருந்தேனைக் கூவிவர வழைத்து
வண்ணமொன்றென் கைதனிலே மகிழ்ந்தளித்தாய் நின்றன்
அருட்டாயப் பெருமைதனை யென்னுரைப்பேன் பொதுவில்
ஆநந்தத் திருநடஞ்செய் தருளுகின்ற வரசே. 70

உன்மனியி னுள்ளகத்தே யொளிருவதொன் றாகி
உற்றவதன் வெளிப்புறத்தே யோங்குவதொன் றாகிச்
சின்மயமாய் விளங்குகின்ற திருவடிகள் வருந்தச்
சிறுநாயேன் பொருட்டாக தெருவினடந் தருளிப்
பொன்மயமாந் திருமேனி விளங்கவென்பா லடைந்து
பொருளொன்றென் கைதனிலே பொருந்தவளித் தனையே
நின்மலனே நின்னருளை யென்புகல்வேன் பொதுவில்
நிறைந்தவின்ப வடிவாகி நிருத்தமிடும் பதியே. 71

ஐவர்களுக் கைந்தொழிலு மளித்திடுவ தொன்றும்
அத்தொழிற்கா ரணம்புரிந்து களித்திடுவ தொன்றுந்
தெய்வநெறி யென்றறிஞர் புகழ்ந்துபுகழ்ந் தேத்துந்
திருவடிகண் மிகவருந்தத் தெருவினிடை நடந்து
கைவரயா னிருக்குமனைக் கதவுதிறப் பித்துக்
களித்தெனையங் கழைத்தெனது கையிலொன்று கொடுத்தாய்
சைவமணி மன்றிடத்தே தனிநடநம் புரியுந்
தற்பரநின் னருட்பெருமை சாற்றமுடி யாதே. 72

அருளுதிக்குந் தருணத்தே யமுதவடி வாகி
ஆநந்த மயமாகி யமர்ந்ததிரு வடிகள்
இருளுதிக்கு மிரவினிடை வருந்தநடந் தருளி
யானிருக்கு மனைக்கதவந் திறப்பித்தங் கடைந்து
மருளுதிக்கு மனத்தேனை வரவழைத்து நோக்கி
மகிழ்ந்தெனது கரத்தொன்று வழங்கியசற் குருவே
தெருளுதிக்கு மணிமன்றிற் றிருநடஞ்செய் யரசே
சிவபெருமா னின்கருணைத் திறத்தைவியக் கேனே. 73

நான்கண்ட போதுசுயஞ் சோதிமய மாகி
நான்பிடித்த போதுமதி னவிநவண்ண மாகித்
தேன்கொண்ட பாலெனநான் சிந்திக்குந் தோறுந்
தித்திப்ப தாகியென்றன் சென்னிமிசை மகிழ்ந்து
தான்கொண்டு வைத்தவந்நாள் சில்லென்றென் னுடம்புந்
தகவுயிருங் குளிர்வித்த தாண்மலர்கள் வருந்த
வான்கொண்டு நடந்திங்கு வந்தெனக்கு மளித்தாய்
மன்றினடத் தரசேநின் மாகருணை வியப்பே. 74

Koviloor Digital Library

யோகாந்த மிசையிருப்ப தோன்றுகலாந் தத்தே
உவந்திருப்ப தொன்றெனமெய் யுணர்வுடையோ ருணர்வால்
ஏகாந்தத் திருந்துணரு மிணையடிகள் வருந்த
என்பொருட்டா யாளிருக்கு மிடந்தேடி நடந்து
வாகாந்தச் சணிக்கதவந் திறப்பித்தங் கென்னை
வரவழைத்தென் கைதனிலே மகிழ்ந்தொன்று கொடுத்தாய்
மோகாந்த காரமறுத் தவரேத்தப் பொதுவின்
முயங்கிநடம் புரிகின்ற முக்கணுடை யரசே. 75

மகமதிக்கு மறையுமறை யான்மதிக்கு மயனும்
மகிழ்ந்தயனுன் மதிக்குநெடு மாலுநெடு மாலான்
மிகமதிக்கு முருத்திரனு முருத்திரனுன் மதிக்கும்
மேலவனு மவன்மதிக்க விளங்குசதா சிவனுந்
தகமதிக்குந் தோறுமவ ரவருள்ளத்தின் மேலுந்
தலைமேலு மறைந்துறையுந் தாண்மலர்கள் வருந்த
அகமதிக்க நடந்தென்பா லடைந்தொன்று கொடுத்தாய்
அம்பலத்தி லாடுகின்ற யருட்பெருமை வியப்பே. 76

இருவினையொப் பாகிமல பரிபாகம் பொருந்தல்
எத்தருண மத்தருணத் தியன்ஞான வொளியாம்
உருவினையுற் றுள்ளகத்தும் பிரணவமே வடிவாய்
உற்றுவெளிப் புறத்துமெழுந் துணர்த்தியுரைத் தருளுந்
திருவடிகண் மிகவருந்த நடந்தெளியேன் பொருட்டாத்
தெருக்கதவந் திறப்பித்துச் சிறியேனை யழைத்துக்
குருவடிவங் காட்டியொன்று கொடுத்தாயென் கரத்தே
குணக்குன்றே நின்னருட்கென் குற்றமெலாங் குணமே.

தம்மடியார் வருந்திலது சகியாதக் கணத்தே
சார்ந்துவருத் தங்களெலாந் தயவினொடு தவிர்த்தே
எம்மடியா ரென்றுகொளு மிணையடிகள் வருந்த
இரவினிடை நடந்தெளியே னிருக்குமிடத் தடைந்து
கம்மடியர்க் கதவுபெருங் காப்பவிழப் புரிந்து
கடையேனை யழைத்தெனது கையிலொன்று கொடுத்து
நம்மடியா னென்றெனையுந் திருவுளத்தே யடைத்தாய்
நடம்புரியு நாயகநின் னற்கருணை வியப்பே. 78

உம்பருக்குங் கிடைப்பரிதா மணிமன்றிற் பூத
உருவடிவங் கடந்தாடுந் திருவடிக ளிடத்தே
செம்பருக்கைக் கல்லுறுத்தத் தெருவினடந் திரவில்
தெருக்கதவந் திறப்பித்துச் சிறியேனை யழைத்து
வம்பருக்குப் பெறலரிதா மொருபொருளென் கரத்தே
மகிழ்ந்தளித்துத் துயர்தீர்ந்து வாழ்கவென வுரைத்தாய்
இம்பருக்கோ வம்பருக்கு மிதுவியப்பா மெங்கள்
இறைவநின தருட்பெருமை யிசைப்பதெவ னனிந்தே.

Koviloor Digital Library

உருவமொரு நான்காகி யருவமுமவ் வளவாய்
உருவருவொன் றாகியிவை யொன்பானுங் கடந்து
துருவமுடி யாப்பரம துரியநடு விருந்த
சொருபவநு பவமயமாந் துணையடிகள் வருந்தத்
தெருவமிசை நடந்துசிறு செம்பரற்கல் லுறுத்தச்
சிறியேன்பா லடைந்தெனது செங்கையிலொன் றளித்தாய்
மருவவினி யாய்மன்றி னடம்புரிவாய் கருணை
மாகடலே நின்பெருமை வழுத்தமுடி யாதே. 80

பக்குவத்தா லுயர்வாழைப் பழங்கனிந்தாற் போலும்
பரங்கருணை யாற்கனிந்த பத்தர்சித்தந் தனிலே
பொக்கமிலப் பழந்தனிலே தெள்ளமுதங் கலந்தாற்
போற்கலந்து தித்திக்கும் பொன்னடிகள் வருந்த
மிக்கவிரு ளிரவினிடை நடந்தெளியே னிருக்கும்
வியன்மனையி லடைந்துகத வந்திறக்கப் புரிந்து
ஒக்கவெனை யழைத்தொன்று கொடுத்திங்கே யிருவென்
றுரைத்தனையெம் பெருமானின் னுயர்கருணை வியப்பே.

உளவறிந்தோர் தமக்கெல்லா முபநிடதப் பொருளாய்
உளவறியார்க் கிகபரமு முறுவிக்கும் பொருளாய்
அளவறிந்த வறிவாலே யறிந்திடநின் றாடும்
அடிமலர்கள் வருந்தியிட நடந்திரவி லடைந்து
களவறிந்தேன் றனைக்கூவிக் கதவுதிறப் பித்துக்
கையிலொன்று கொடுத்தாய்நின் கருணையையென் னென்பேன்
விளவெறிந்தோ னயன்முதலோர் பணிந்தேத்தப் பொதுவில்
விளங்குநடம் புரிகின்ற துளங்கொளிமா மணியே. 82

எவ்வுலகு மெவ்வுயிரு மெச்செயலுந் தோன்றி
இயங்குமிட மாகியெல்லா முயங்குமிட மாகித்
தெவ்வுலகு நண்புலகுஞ் சமனாகக் கண்ட
சித்தர்கடஞ் சித்தத்தே தித்திக்கும் பதங்கள்
இவ்வுலகில் வருந்தநடந் தென்பொருட்டா லிரவில்
எழிற்கதவந் திறப்பித்தங் கென்கையிலொன் றளித்தாய்
அவ்வுலக முதலுலக மனைத்துமகிழ்ந் தேத்த
அம்பலத்தே நடம்புரியுஞ் செம்பவளக் குன்றே. 83

மானினொடு மோகினியு மாமாயை யுடனே
வைந்துவமு மொன்றினொன்று வதிந்தசைய வசைத்தே
ஊனினொடு முயிருணர்வுங் கலந்துகலப் புறுமா
றுறுவித்துப் பின்கரும வொப்புவருந் தருணந்
தேனினொடு கலந்தவமு தெனருசிக்க விருந்த
திருவடிகள் வருந்தநடந் தடியேன்பா லடைந்து
வானினொடு விளங்குபொரு ளொன்றெனக்கு மளித்தாய்
மன்றினடத் தரசேநின் மாகருணை வியப்பே. 84

Koviloor Digital Library

பசுபாச பந்தமறும் பாங்குதனைக் காட்டிப்
பரமாகி யுள்ளிருந்து பற்றறவும் புரிந்தே
அசமான மானசிவா நந்தவநு பவமும்
அடைவித்தல் வநுபவந்தா மாகியசே வடிகள்
வசுமீது வருந்தியிட நடந்தடியே னிருக்கும்
மனையையடைந் தணிக்கதவந் திறப்பித்து நின்று
விசுவாச முறவெனையங் கழைத்தொன்று கொடுத்தாய்
விடையவநின் னருட்பெருமை யென்புகல்வேன் வியந்தே.

ஆதியுமா யந்தமுமாய் நடுவாகி யாதி
அந்தநடு வில்லாத மந்தணவான் பொருளாய்ச்
சோதியுமாய்ச் சோதியெலாந் தோன்றுபர மாகித்
துரியமுமாய் விளங்குகின்ற துணையடிகள் வருந்த
பாதியிர விடைநடந்து நானிருக்கு மிடத்தே
படர்ந்துதெருக் கதவங்காப் பவிழ்த்திடவும் புரிந்து
ஓதியிலங் கெனையழைத்தென் கரத்தொன்று கொடுத்தாய்
உடையவநின் னருட்பெருமை யென்னுரைப்பே னுவந்தே.

பாடுகின்ற மறைகளெலா மொருபுறஞ்சூழ்ந் தாடப்
பத்தரொடு முத்தரெலாம் பார்த்தாடப் பொதுவில்
ஆடுகின்ற திருவடிகள் வருந்தநடந் தடியேன்
அடையுமிடத் தடைந்திரவிற் காப்பவிழ்க்கப் புரிந்து
நாடுகின்ற சிறியேனை யழைத்தருளி நோக்கி
நகைமுகஞ்செய் தென்கரத்தே நல்கினையொன் றிதனால்
வாடுகின்ற வாட்டமெலாந் தவிர்ந்துமகிழ் கின்றேன்
மன்னவநின் பொன்னருளை யென்னெனவாழ்த் துவனே.

எம்மதத்தி லெவரெவர்க்கு மியைந்தவநு பவமாய்
எல்லாமா யல்லவுமா யிருந்தபடி யிருந்தே
அம்மதப்பொன் னம்பலத்தி லாநந்த நடஞ்செய்
அரும்பெருஞ்சே வடியிணைக ளசைந்துமிக வருந்த
இம்மதத்தி லென்பொருட்டா யிரவினடந் தருளி
எழிற்கதவந் திறப்பித்தங் கெனையழைத்தென் கரத்தே
சம்மதத்தா லொன்றளித்த தயவினையென் புகல்வேன்
தம்மையறிந் தவரறிவின் முன்னுமொளி மணியே. 88

பூதவெளி கரணவெளி பகுதிவெளி மாயா
போகவெளி மாமாயா யோகவெளி புகலும்
வேதவெளி யபரவிந்து வெளிபர நாத
வெளியேக வெளிபரம வெளிஞான வெளிமா
நாதவெளி சுத்தவெறு வெளிவெட்ட வெளியா
நவில்கின்ற வெளிகளெலா நடிக்குமடி வருந்த
ஏதவெளி யேன்பொருட்டா நடந்தென்பா லடைந்தே
என்கையிலொன் றளித்தனைநின் னிரக்கமெவர்க் குளதே.

Koviloor Digital Library

வானதுவாய்ப் பசுமலம்போய்த் தனித்துநிற்குந் தருணம்
வயங்குபரா நந்தசுகம் விளைந்துகொள்ளுந் தருணந்
தானதுவா யதுதானாய்ச் சகசமுறுந் தருணந்
தடையற்ற வநுபவமாந் தன்மையடி வருந்த
மானதுவாய் நடந்தெளியே னிருக்குமிடத் தடைந்து
மணிக்கதவந் திறப்பித்து மகிழ்ந்தெனையங் கழைத்து
ஆனதொரு பொருளளித்தாய் நின்னருளென் னென்பேன்
அம்பலத்தே நடம்புரியு மெம்பெருஞ்சோ தியனே. 90

புன்றலையென் றலையெனநா னறியாம லொருநாள்
பொருத்தியபோ தினிற்சிவந்து பொருந்தியபொன் னடிகள்
இன்றலைவின் மிகச்சிவந்து வருந்தநடந் தெளியேன்
இருக்குமிடத் தடைந்துகத வந்திறக்கப் புரிந்து
மன்றலினங் கெனையழைத்தென் கையிலொன்று கொடுத்தாய்
மன்னவநின் பெருங்கருணை வண்மையையென் னென்பேன்
பொன்றலிலாச் சித்தர்முத்தர் போற்றமணி மன்றிற்
புயங்கநடம் புரிகின்ற வயங்கொளிமா மணியே. 91

தஞ்சமுறு முயிர்க்குணர்வா யின்பமுமாய் நிறைந்த
தம்பெருமை தாமறியாத் தன்மையவா யொருநாள்
வஞ்சகனேன் புன்றலையில் வைத்திடவுஞ் சிவந்து
வருந்தியசே வடிபின்னும் வருந்தநடந் தருளி
எஞ்சலிலா விரவினிடை யானிருக்கு மிடஞ்சேர்ந்
தெழிற்கதவந் திறப்பித்தங் கெனையழைத்தொன் றளித்தாய்
விஞ்சுபரா நந்தநடம் வியன்பொதுவிற் புரியும்
மேலவநின் னருட்பெருமை விளம்பலெவன் வியந்தே. 92

எழுத்தினொடு பதமாகி மந்திரமாய்ப் புவன
மெல்லாமாய்த் தத்துவமா யியம்புகலை யாகி
வழுத்துமிவைக் குள்ளாகிப் புறமாகி நடத்தும்
வழியாகி நடத்துவிக்கு மன்னிறையு மாகி
அழுத்துறுமிங் கிவையெல்லா மல்லனவா யப்பா
லாகியதற் கப்பாலு மானபதம் வருந்த
இழைத்துநடந் திரவிலென்பா லடைந்தொன்று கொடுத்தாய்
எம்பெருமா னின்பெருமை யென்னுரைப்பேன் வியந்தே.

மாவின்மணப் போர்விடைமே னந்திவிடை மேலும்
வயங்கியன்பர் குறைதவிர்த்து வாழ்வளிப்ப தன்றிப்
பூவின்மணம் போலுயிருக் குயிராகி நிறைந்து
போகமளித் தருள்கின்ற பொன்னடிகள் வருந்தத்
தாவிநடந் திரவின்மனைக் கதவுதிறப் பித்தே
தயவுடனங் கெனையழைத்துத் தக்கதொன்று கொடுத்தாய்
நாவின்மணந் துறப்புலவர் வியந்தேத்தும் பொதுவில்
நடம்புரியு நாயகநின் னற்கருணை யிதுவே. 94

Koviloor Digital Library

மணப்போது வீற்றிருந்தான் மாலவன்மற் றவரும்
மனவழுக்கா றுறச்சிறியேன் வருந்தியநா ளந்தோ
கணப்போதுந் தரியாமற் கருணையடி வருந்தக்
கங்குலிலே நடந்தென்னைக் கருதியொன்று கொடுத்தாய்
உணப்போது போக்கினன்முன் னுளவறியா மையினால்
உளவறிந்தே னிந்நாளென் னுள்ளமகிழ் வுற்றேன்
தணப்போது மறைகளெலாந் தனித்தனிநின் றேத்தத்
தனிமன்றி லானந்தத் தாண்டவஞ்செய் யரசே. 95

நடங்கமலக் கண்குறுகி நெடுங்கமலக் கண்விளங்கும்
நல்லதிரு வடிவருந்த வல்லிரவி னடந்து
தொடுங்கதவந் திறப்பித்துத் துணிந்தெனையங் கழைத்துத்
துயரமெலாம் விடுகவிது தொடுகவெனக் கொடுத்தாய்
கொடுங்குணத்தே னளவினிலென் குற்றமெலாங் குணமாக்
கொண்டகுணக் குன்றேநின் குறிப்பினையென் புகல்வேன்
இடுங்கடுக வென்றுணர்த்தி யேற்றுகின்ற வறிவோர்
ஏத்தமணிப் பொதுவிலருட் கூத்துடைய பொருளே. 96

வெய்யபவக் கோடையிலே மிகவிளைத்து மெலிந்த
மெய்யடியர் தமக்கெல்லாம் விரும்புகுளிர் சோலைத்
துய்யநிழ லாயமுதாய் மெலிவனைத்துந் தவிர்க்கும்
துணையடிகண் மிகவருந்தத் துணிந்துநடந் தடியேன்
உய்யநடு விரவினில்யா னிருக்குமிடத் தடைந்தே
உயர்கதவந் திறப்பித்தங் குவந்தழைத்தொன் றளித்தாய்
வையகமும் வானகமும் வாழமணிப் பொதுவின்
மாநடஞ்செய் யரசேநின் வண்மையெவர்க் குளதே. 97

சிறியவனேன் சிறுமையெலாந் திருவுளங்கொள் ளாதென்
சென்னிமிசை யமர்ந்தருளுந் திருவடிகள் வருந்தச்
செறியிரவி னடந்தணைந்து நானிருக்கு மிடத்தே
தெருக்கதவந் திறப்பித்துச் சிறப்பினெனை யழைத்துப்
பிறிவிலதிங் கிதுதனைநீ பெறுகவெனப் பரிந்து
பேசியொன்று கொடுத்தாய்நின் பெருமையையென் னென்பேன்
பொறியினற வோர்துதிக்கப் பொதுவினடம் புரியும்
பொருளேநின் னருளேமெய்ப் பொருளெனத்தேர்ந் தனனே.

அடிநாளி லடியேனை யறிவுகுறிக் கொள்ளா
தாட்கொண்டென் சென்னிமிசை யமர்ந்தபதம் வருந்தப்
படிநாளி னடந்திரவி லடைந்தருளித் தெருவிற்
படர்கதவந் திறப்பித்துப் பரிந்தெனையங் கழைத்துப்
பிடிநாளு மகிழ்ந்தினது மனங்கொண்ட படியே
பேரறஞ்செய் துறுகவெனப் பேசியொன்று கொடுத்தாய்
பொடிநாளு மணிந்துமணிப் பொதுவினடம் புரியும்
பொருளேநின் னருளேமெய்ப் பொருளெனத்தேர்ந் தனனே.

Koviloor Digital Library

உலகியலோ டருளியலு மொருங்கறியச் சிறியேன்
உணர்விலிருந் துணர்த்தியென துயிர்க்குயிராய் விளங்கித்
திலகமெனத் திகழ்ந்தெனது சென்னிமிசை யமர்ந்த
திருவடிகள் வருந்தநடை செய்தருளி யடியேன்
இலகுமனைக் கதவிரவில் திறப்பித்தங் கென்னை
இனிதழைத்தொன் றளித்துமகிழ்ந் தின்னுநெடுங் காலம்
புலவர்தொழ வாழ்கவென்றாய் பொதுவினடம் புரியும்
பொருளேநின் னருளேமெய்ப் பொருளெனத்தேர்ந் தனனே. [100

திருச்சிற்றம்பலம்

மூன்றாவது

பிரசாதமாலை

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

திருவுருக்கொண் டெழுந்தருளிச் சிறியேன்முன் னடைந்து
திருநீற்றுப் பையவிழ்த்துச் செஞ்சுடர்ப்பூ வளிக்கத்
தருவுருக்கொண் டெதிர்வணங்கி வாங்கியநான் மீட்டுந்
தயாநிதியே திருநீறுந் தருகவெனக் கேட்ப
மருவுருக்கொண் டன்றளித்தாந் திருநீறின் றுனக்கு
மகிழ்ந்தளித்தா மிவையென்று வாய்மலர்ந்து நின்றாய்
குருவுருக்கொண் டம்பலத்தே யருணடநம் புரியுங்
குருமணியே யென்னைமுன்னாட் கொண்டகுணக் குன்றே.

என்வடிவந் தழைப்பவொரு பொன்வடிவந் தரித்தே
என்முனடைந் தெனைநோக்கி யிளநகைசெய் தருளித்
தன்வடிவத் திருநீற்றுத் தனிப்பையவிழ்த் தெனக்குத்
தகுசுடர்ப்பூ வளிக்கவுநான் முன்வாங்கிக் களித்து
மின்வடிவப் பெருந்தகையே திருநீறுந் தருதல்
வேண்டுமென முன்னரது விரும்பியளித் தனநாம்
உன்வடிவிற் காண்டியென வுரைத்தருளி நின்றாய்
ஒளிநடஞ்செய் யம்பலத்தே வெளிநடஞ்செய் யரசே. 2

அழகுநிறைந் திலகவொரு திருமேனி தரித்தே
அடியேன்முன் னெழுந்தருளி யருணகைகொண் டடியார்
கழகநடு வெனையிருத்தி யவர்க்கெல்லா நீறு
களித்தருளி யென்னளவிற் கருணைமுக மலர்ந்து
குழகியற்செஞ் சுடர்ப்பூவைப் பொக்கணத்தி லெடுத்துக்
கொடுத்தருளி நின்றனைநின் குறிப்பறியேன் குருவே
மழகளிற்றி னுரிவிளங்க மணிப்பொதுவிற் சோதி
மயவடிவோ டின்பநடம் வாய்ந்தியற்றும் பதியே. 3

Koviloor Digital Library

விலைகடந்த மணியெனவோர் திருமேனி தரித்து
வினையேன்முன் னெழுந்தருளி மெய்யடியர் விரும்பக்
கலைகடந்த பொருட்கெல்லாங் கரைகடந்து நாதக்
கதிகடந்த பெருங்கருணைக் கடைக்கண்மலர்ந் தருளி
அலைகடந்த கடன்மலர்ந்த மணச்செழும்பூ வடியேன்
அங்கைதனி லளித்ததைநின் னருட்குறிப்பே தறியேன்
மலைகடந்த நெடுந்தோளி லிதழியசைந் தாட
மன்றினடம் புரிகின்ற வள்ளலருட் குருவே. 4

உலர்ந்தமரந் தழைக்குமொரு திருவுருவந் தாங்கி
உணர்விலியேன் முன்னருவந் துறுகருணை துளும்ப
மலர்ந்தமுகங் காட்டிநின்று திருநீற்றுப் பையை
மலர்க்கரத்தா லவிழ்த்தங்கு வதிந்தவர்கட் கெல்லாம்
அலர்ந்ததிரு நீறளித்துப் பின்னரென்றன் கரத்தில்
அருண்மணப்பூ வளித்ததைநின் னருட்குறிப்பே தறியேன்
கலந்தவரைக் கலந்துமணிக் கனகமன்றி னடஞ்செய்
கருணைநெடுங் கடலேயென் கண்ணமர்ந்த வொளியே. 5

பிழையலதொன் றறியாத சிறியேன்முன் புரிந்த
பெருந்தவமோ திருவருளின் பெருமையிதோ வறியேன்
மழையெனநின் றிலகுதிரு மணிமிடற்றிற் படிக
வடந்திகழ நடந்துகுரு வடிவதுகொண் டடைந்து
விழைவினொடென் னெதிர்நின்று திருநீற்றுக் கோயில்
விரித்தருளி யருண்மணப்பூ விளக்கமொன்று கொடுத்தாய்
குழையசையச் சடையசையக் குலவுபொன்னம் பலத்தே
கூத்தியற்றி யென்னைமுன்னுட் கொண்டசிவக் கொழுந்தே.

முத்தேவ ரமுக்காற்றின் மூழ்கியிடத் தனித்த
முழுமணிபோன் றொருவடிவென் முன்கொடுவந் தருளி
எத்தேவர் தமக்குமிக வரியவெனு மணப்பூ
என்கரத்தே கொடுத்ததைநின் னெண்ணமிதென் றறியேன்
சித்தேயென் பவருமொரு சத்தேயென் பவருந்
தேறியபின் னொன்றாகத் தெரிந்துகொள்ளும் பொதுவில்
அத்தேவர் வழுத்தவின்ப வுருவாகி நடஞ்செய்
ஆரமுதே யென்னுயிருக் கானபெருந் துணையே. 7

தெள்ளமுத மனையவொரு திருவுருவந் தாங்கிச்
சிறியேன்முன் னெழுந்தருளிச் செழுமணப்பூ வளித்தாய்
உள்ளமுத மாகியநின் றிருக்குறிப்பே துணரேன்
உடையவனே யுடையவனே யுலகுணரா வொளியே
கள்ளமிலா வறிவாகி யவ்வறிவுக் கறிவாய்க்
கலந்துநின்ற பெருங்கருணைக் கடலேயென் கண்ணே
கொள்ளுதொறுங் கரணமெலாங் கரைந்துகனிந் தினிக்குங்
கொழுங்கனியே கோற்றேனே பொதுவிளங்குங் குருவே. 8

Koviloor Digital Library

கண்விருப்பங் கொளக்கரணங் கனிந்துகனிந் துருகக்
கருணைவடி வெடுத்தருளிக் கடையேன்முன் கலந்து
மண்விருப்பங் கொளுமணப்பூ மகிழ்ந்தெனக்குக் கொடுத்து
வாழ்கவென நின்றனைநின் மனக்குறிப்பே தறியேன்
பெண்விருப்பந் தவிர்க்குமொரு சிவகாம வல்லிப்
பெண்விருப்பம் பெற[1]விருவர் பெரியருளங் களிப்பப்
பண்விருப்பந் தருமறைகள் பலபலநின் றேத்தப்
பரமசிதம் பரநடநம் பயின்றபசு பதியே. 9

உன்னுதற்கு முணர்வதற்கு முவட்டாத வடிவம்
ஒன்றெடுத்து மெய்யன்ப ருவக்கவெழுந் தருளி
முன்னுதற்கோ ரணுத்துணையுந் தரமில்லாச் சிறியேன்
முகநோக்கிச் செழுமணப்பூ முகமலர்ந்து கொடுத்தாய்
துன்னுதற்கிங் கரிதாநின் றிருவுள்ளக் குறிப்பைத்
துணிந்தறியேன் என்னினுமோர் துணிவினுவக் கின்றேன்
பொன்னுதற்குத் திலகமெனுஞ் சிவகாம வல்லிப்
பூவையொரு புறங்களிப்பப் பொதுநடஞ்செய் பொருளே. 10

திருச்சிற்றம்பலம்

நான்காவது

ஆனந்தமாலை

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

திருவருடுந் திருவடிப்பொற் சிலம்பசைய நடந்தென்
சிந்தையிலே புகுந்துநின்பாற் சேர்ந்துகலந் திருந்தாள்
தெருமரலற் றுயர்ந்தமறைச் சிரத்தமர்ந்த புனிதை
சிவகாம வல்லிபெருந் தேவியுளங் களிப்பப்
பொருவருமெய் யன்புடையா ரிருவருங்கண் டுவந்து
போற்றமணிப் பொதுவினடம் புரிகின்ற துரையே
பருவரலற் றடிச்சிறியேன் பெருவரம்பெற் றுனையே
பாடுகின்றேன் பெரியவருட் பருவமடைந் தனனே. 1

சண்பைமறைக் கொழுந்துமகிழ் தரவமுதங் கொடுத்தாள்
தயவுடையா ளெனையுடையாள் சர்வசத்தி யுடையாள்
செண்பகப்பொன் மேனியினாள் செய்யமலர்ப் பதத்தாள்
சிவகாம வல்லிபெருந் தேவியுளங் களிப்பப்
பண்பகர்பொன் னம்பலத்தே யானந்த நடஞ்செய்
பரம்பரநின் றிருவருளைப் பாடுகின்றேன் மகிழ்ந்து
எண்பகர்குற் றங்களெலாங் குணமாகக் கொள்ளும்
எந்துரையென் றெண்ணுகின்ற வெண்ணமத னாலே. 2

1. இருவர்பெரியர் என்பது — பதஞ்சலி, வியாக்கிரமபாதர்.

Koviloor Digital Library

அருளுடைய நாயகியென் னம்மையடி யார்மேல்
அன்புடையா ளமுதனையா ளற்புதப்பெண் ணரசி
தெருளுடைய சிந்தையிலே தித்திக்கும் பதத்தாள்
சிவகாம வல்லிபெருந் தேவியுளங் களிப்ப
மருளுடைய மாயையெலாந் தேயமணி மன்றின்
மாநடஞ்செய் துரையேநின் மன்னருளின் றிறத்தை
இருளுடைய மனச்சிறியேன் பாடுகின்றேன் பருவம்
எய்தினனென் றறிஞரெலா மெண்ணிமதித் திடவே. 3

மாசுடையேன் பிழையனைத்தும் பொறுத்துவரை மளித்தாள்
மங்கையர்க ளுயகிநான் மறையணிந்த பதத்தாள்
தேசுடையா ளாநந்தத் தெள்ளமுத வடிவாள்
சிவகாம வல்லிபெருந் தேவியுளங் களிப்பக்
காசுடைய பவக்கோடைக் கொருநிழலாம் பொதுவிற்
கநடஞ்செய் துரையேநின் கருணையையே கருதி
ஆசுடையேன் பாடுகின்றேன் றுயரமெலாந் தவிர்ந்தேன்
அன்பர்பெறு மின்பநிலை யநுபவிக்கின் றேனே. 4

பொய்யாத வரமெனக்குப் புரிந்தபரம் பரைவான்
பூதமுதற் கருவியெலாம் பூட்டுவிக்குந் திறத்தாள்
செய்யாளுங் கலையவளு முருத்திரையும் வணங்குஞ்
சிவகாம வல்லிபெருந் தேவியுளங் களிப்பக்
கையாத வின்பநடங் கநகமணிப் பொதுவில்
களித்தியற்றுந் துரையேநின் கருணையைநான் கருதி
நையாத வண்ணமெலாம் பாடுகின்றேன் பருவம்
நண்ணியபுண் ணியரெல்லா நயந்துமகிழ்ந் திடவே. 5

அறங்கனிந்த வருட்கொடியென் னம்மையமு தளித்தாள்
அகிலாண்ட வல்லிசிவா நந்திசௌந் தரிசீர்த்
திறங்கலந்த நாதமணிச் சிலம்பணிந்த பதத்தாள்
சிவகாம வல்லிபெருந் தேவியுளங் களிப்ப
மறங்கனிந்தார் மயக்கமெலாந் தெளியமணிப் பொதுவின்
மாநடஞ்செய் துரையேநின் வண்மைதனை யடியேன்
புறங்கவியப் பாடுகின்றே னகங்கவியப் பாடும்
புண்ணியரெல் லாமிவனோர் புதியனெனக் கொளவே. 6

உள்ளமுத மூற்றுவிக்கு முத்தமியென் னம்மை
ஓங்கார பீடமிசைப் பாங்காக விருந்தாள்
தெள்ளமுத வடிவுடையாள் செல்வநல்கும் பதத்தாள்
சிவகாம வல்லிபெருந் தேவியுளங் களிப்பக்
கள்ளமறுத் தருள்விளக்கும் வள்ளன்மணிப் பொதுவிற்
கானிறுத்திக் காலெடுத்துக் களித்தாடுந் துரையே
எள்ளலறப் பாடுகின்றே னின்னருளை யருளால்
இப்பாட்டிற் பிழைகுறித்த லெங்ஙனமிங் ஙனமே. 7

Koviloor Digital Library

பார்பூத்த பசுங்கொடிபோற் பாவையர்க ளரசி
பரம்பரைசிற் பரைபரா பரைநிமலை யாதி
சீர்பூத்த தெய்வமறைச் சிலம்பணிந்த பதத்தாள்
சிவகாம வல்லிபெருந் தேவியுளங் களிப்ப
ஏர்பூத்த மணிமன்றி லின்பநடம் புரியும்
என்னருமைத் துரையேநின் னின்னருளை நினைந்து
கார்பூத்த கனமழைபோற் கண்களினீர் சொரிந்து
கனிந்துமிகப் பாடுகின்ற களிப்பையடைந் தனனே. 8

பூரணிசிற் போதைசிவ போகிசிவ யோகி
பூவையர்க ளுயகியைம் பூதமுந்தா னுளள்
தேரணியு நெடுவீதித் தில்லைநக ருடையாள்
சிவகாம வல்லிபெருந் தேவியுளங் களிப்ப
ஏரணியு மணிமன்றி லின்பவடி வாகி
இன்பநடம் புரிகின்ற வெம்முடைய துரையே
தாரணியி லுனைப்பாடுந் தரத்தையடைந் தனனென்
றன்மையெலா நன்மையெனச் சம்மதித்த வாறே. 9

தன்னொளியி லுலகமெலாந் தாங்குகின்ற விமலை
தற்பரையம் பரைமாசி தம்பரைசிற் சத்தி
சின்னவய தினிலென்னை யாளநினைக் கிசைத்தாள்
சிவகாம வல்லிபெருந் தேவியுளங் களிப்ப
மன்னியபொன் மணிப்பொதுவி லின்பநடம் புரிந்து
வயங்குகின்ற துரையேநின் மாகருணைத் திறத்தை
உன்னியுவந் துணர்ந்துருகிப் பாடுகின்றே னெங்கள்
உடையானே நின்னருளி னடையாள மிதுவே. 10

திருச்சிற்றம்பலம்

ஐந்தாவது

பத்திமாலை

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

அருளுடையா யடியேனு னருளருமை யறியேன்
அறியாதே மறுத்தபிழை யத்தனையும் பொறுத்து
மருளுடையேன் றனையழைத்துத் திரும்பவுமென் கரத்தே
மகிழ்ந்தளித்த பெருங்கருணை வண்ணமென்றன் மனமுந்
தெருளுடைய கண்களும்விட் டகலாதே யின்னுந்
தெரிகின்ற தாயினுமென் சிந்தையுரு கிலதே
இருளுடைய சிலையுமிதற் குருகலரி தலவே
இனித்தநடம் புரிந்துமன்றிற் றனித்தசிவக் கொழுந்தே. 1

Koviloor Digital Library

அன்புடையா யடியேனு னருளருமை யறியேன்
அறியாதே மறுத்தபிழை யத்தனையும் பொறுத்து
வன்புடையேன் றனையழைத்துத் திரும்பவுமென் கரத்தே
வலிந்தளித்த பெருங்கருணை வண்ணமென்றன் மனமும்
இன்புடைய கண்களும்விட் டகலாதே யின்னும்
விளங்குகின்ற தாயினுமென் வெய்யமன முருகா
என்புடைய வுடலுமிதற் குருகலரி தலவே
இனித்தநடம் புரிந்துமன்றிற் றனித்தசிவக் கொழுந்தே. 2

ஆளுடையாய் சிறியேனு னருளருமை யறியேன்
அறியாதே மறுத்தபிழை யத்தனையும் பொறுத்து
[1]வாளுடையேன் றனையழைத்துத் திரும்பவுமென் கரத்தே
வலிந்தளித்த பெருங்கருணை வண்ணமென்றன் மனமும்
நீளுடைய கண்களும்விட் டகலாதே யின்னும்
நிகழ்கின்ற தாயினுமென் னெஞ்சமுரு கிலதே
ஏளுடைய மலையுமிதற் குருகலரி தலவே
இனித்தநடம் புரிந்துமன்றிற் றனித்தசிவக் கொழுந்தே. 3

ஆரமுதே யடியேனு னருளருமை யறியேன்
அறியாதே மறுத்தபிழை யத்தனையும் பொறுத்து
வாரமுற வெனை யழைத்துத் திரும்பவுமென் கரத்தே
மகிழ்ந்தளித்த பெருங்கருணை வண்ணமென்றன் மனமுஞ்
சீருடைய கண்களும்விட் டகலாதே யின்னுந்
தெரிகின்ற தாயினுமென் சிந்தையுரு கிலதே
ஈரமிலா மரமுமிதற் குருகலரி தலவே
இனித்தநடம் புரிந்துமன்றிற் றனித்தசிவக் கொழுந்தே. 4

அற்புதநின் னருளருமை யறியேனுன் சிறிதும்
அறியாதே மறுத்தபிழை யாயிரமும் பொறுத்து
வற்புறுவேன் றனையழைத்துத் திரும்பவுமென் கரத்தே
வலிந்தளித்த பெருங்கருணை வண்ணமென்றன் மனமுங்
கற்புடைய கண்களும்விட் டகலாதே யின்னும்
காண்கின்ற தென்னினுமென் கன்மனமோ வுருகா
இற்புடைய விரும்புமிதற் குருகலரி தலவே
இனித்தநடம் புரிந்துமன்றிற் றனித்தசிவக் கொழுந்தே. 5

ஆண்டவநின் னருளருமை யறியாதே திரிந்தேன்
அன்றிரவின் மறுத்தபிழை யத்தனையும் பொறுத்து
வேண்டியெனை யருகழைத்துத் திரும்பவுமென் கரத்தே
மிகவளித்த வருள்வண்ணம் வினையுடையேன் மனமுங்
காண்டகைய கண்களும்விட் டகலாதே யின்னுங்
காண்கின்ற தாயினுமென் கருத்துருகக் காணேன்
ஈண்டுருகாக் கரடுமிதற் குருகலரி தலவே
இனித்தநடம் புரிந்துமன்றிற் றனித்தசிவக் கொழுந்தே. 6

1. வாள் என்பது — ஒளி, பட்டயம்.

Koviloor Digital Library

அரசேநின் திருவருளி னருமையொன்று மறியேன்
அறியாதே மறுத்தபிழை யத்தனையும் பொறுத்து
விரவுமன்பி லெனையழைத்து வலியவுமென் கரத்தே
வியந்தளித்த பெருங்கருணை விளக்கமென்றன் மனமும்
உரவுமலர்க் கண்களும்விட் டகலாதே யின்னும்
ஒளிர்கின்ற தாயினுமென் னுள்ளமுரு கிலதே
இரவுநிறத் தவருமிதற் குருகலரி தலவே
இனித்தநடம் புரிந்துமன்றிற் றனித்தசிவக் கொழுந்தே. 7

ஐயாநின் னருட்பெருமை யருமையொன்று மறியேன்
அறியாதே மறுத்தபிழை யத்தனையும் பொறுத்து
மெய்யாவன் றெனையழைத்து வலியவுமென் கரத்தே
வியந்தளித்த பெருங்கருணை விளக்கமென்றன் மனமுங்
கையாது கண்களும்விட் டகலாதே யின்னுங்
காண்கின்ற தாயினுமென் கருத்துருகக் காணேன்
எய்யாவன் பரலுமிதற் குருகலரி தலவே
இனித்தநடம் புரிந்துமன்றிற் றனித்தசிவக் கொழுந்தே. 8

அப்பாநின் திருவருட்பே ரமுதருமை யறியேன்
அன்றிரவின் மறுத்தபிழை யத்தனையும் பொறுத்து
இப்பாரி லெனையழைத்து வலியவுமென் கரத்தே
இனிதளித்த பெருங்கருணை யின்பமென்றன் மனமுந்
துப்பாய கண்களும்விட் டகலாதே யின்னுந்
தோன்றுகின்ற தாயினுமித் துட்டநெஞ்ச முருகா
எப்பாவி நெஞ்சுமிதற் குருகலரி தலவே
இனித்தநடம் புரிந்துமன்றிற் றனித்தசிவக் கொழுந்தே. 9

அம்மாநின் னருட்சத்தி யருமையொன்று மறியேன்
அன்றிரவின் மறுத்தபிழை யத்தனையும் பொறுத்து
வெம்மாயை யகற்றியெனை யருகழைத்தென் கரத்தே
மிகவளித்த பெருங்கருணை விளக்கமென்றன் மனமும்
மைம்மாழை விழிகளும்விட் டகலாதே யின்னும்
வதிகின்ற தாயினுமென் வஞ்சநெஞ்ச முருகா
எம்மாய நெஞ்சுமிதற் குருகலரி தலவே
இனித்தநடம் புரிந்துமன்றிற் றனித்தசிவக் கொழுந்தே.10

திருச்சிற்றம்பலம்

Koviloor Digital Library

ஆறாவது

சௌந்தரமாலை

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

சேலோடு மிணைந்தவிழிச் செல்விபெருந் தேவி
சிவகாம வல்லியொடு சிவபோக வடிவாய்
மேலோடு கீழ்நடுவுங் கடந்தோங்கு வெளியில்
விளங்கியநின் றிருவுருவை யுளங்கொளும்போ தெல்லாம்
பாலோடு பழம்பிழிந்து தேன்கலந்து பாகும்
பசுநெய்யுங் கூட்டியுண்ட படியிருப்ப தென்றால்
மாலோடு காண்கின்ற கண்களுக்கங் கிருந்த
வண்ணமிந்த வண்ணமென வெண்ணவுமொண் ணாதே. 1

இன்பருளும் பெருந்தாயென் னிதயத்தே யிருந்தாள்
இறைவியொடு மம்பலத்தே யிலங்கியநின் வடிவை
வன்புறுகன் மனக்கொடியே னினைக்குமிடத் தெல்லாம்
மனங்கரைந்து சுகமயமாய் வயங்குமெனி லந்தோ
அன்புடையார் நின்றுநின்று கண்டுகொண்ட காலம்
ஆங்கவர்கட் கிருந்தவண்ண மீங்கெவர்கள் புகல்வார்
துன்புறுத லில்லாத சுத்தநிலை யுடையார்
தொழுகின்ற தோறுமகிழ்ந் தெழுகின்ற துரையே. 2

சிவயோக சந்நிதருந் தேவியுல குடையாள்
சிவகாம வல்லியொடுஞ் செம்பொன்மணிப் பொதுவில்
நவயோக வுருமுடிக்கண் விளங்கியநின் வடிவை
நாய்க்கடையே னினைத்த நாவெனக்கே மனமும்
பவயோக விந்தியமு மின்பமய மான
படியென்றான் மெய்யறிவிற் பழுத்தபெருங் குணத்துத்
தவயோகர் கண்டவிடத் தவர்க்கிருந்த வண்ணந்
தன்னையிந்த வண்ணமென வென்னையுரைப் பதுவே. 3

சித்தியெலா மளித்தசிவ சத்தியெனை யுடையாள்
சிவகாம வல்லியொடு சிவஞானப் பொதுவின்
முத்தியெலாந் தரவிளங்கு முன்னவநின் வடிவை
மூடமனச் சிறியேனு னுடவரும் பொழுது
புத்தியெலா மொன்றாகிப் புத்தமுத முண்டாற்
போலுமிருப் பதுவதற்கு மேலுமிருப் பதுவேற்
பத்தியெலா முடையவர்கள் காணுமிடத் திருக்கும்
படிதானெப் படியோவிப் படியென்ப தரிதே. 4

Koviloor Digital Library

தெய்வமெலாம் வணங்குகின்ற தேவியெனை யளித்தாள்
சிவகாம வல்லியொடு திருமலியம் பலத்தே
சைவமெலாந் தரவிளங்கு நின்வடிவைக் கொடியேன்
றானினைத்த போதெனையே நானினைத்த திலையேல்
ஐவகையிந் தியங்கடந்தார் கண்டவிடத் திருந்த
அநுபவத்தின் வண்ணமதை யார்புகல வல்லார்
உய்வகையந் நாளுரைத்த தன்றியுமிந் நாளில்
உந்திரவில் வந்துணர்வு தந்தசிவ குருவே. 5

தேன்மொழிப்பெண் ணரசியருட் செல்வமெனக் களித்தாள்
சிவகாம வல்லியொடு செம்பொன்மணிப் பொதுவில்
வான்மொழிய நின்றிலங்கு நின்வடிவைச் சிறியேன்
மனங்கொண்ட காலத்தே வாய்த்தவநு பவத்தை
நான்மொழிய முடியாதே லன்பர்கண்ட காலம்
நண்ணியமெய் வண்ணமதை யெண்ணியெவர் புகல்வார்
நூன்மொழிக்கும் பொருட்குமிக நுண்ணியதாய் ஞான
நோக்குடையார் நோக்கினிலே நோக்கியமெய்ப் பொருளே.

சிற்றிடையெம் பெருமாட்டி தேவர்தொழும் பதத்தாள்
சிவகாம வல்லியொடு சிறந்தமணிப் பொதுவில்
உற்றிடைநின் றிலங்குகின்ற நின்வடிவைக் கொடியேன்
உன்னுதொறு முளமிளகித் தளதளவென் றுருகி
மற்றிடையில் வலியாம லாடுகின்ற தென்றால்
வழியடியர் விழிகளினால் மகிழ்ந்துகண்ட காலம்
பற்றிடையா தாங்கவர்கட் கிருந்தவண்ணந் தனையார்
பகர்வாரே பகர்வாரேற் பகவனிகர் வாரே. 7

ஆரமுத மனையவளென் னம்மையபி ராமி
ஆநந்த வல்லியொடு மம்பலத்தே விளங்கும்
பேரமுத மயமாமுன் றிருவடிவைக் குறித்துப்
பேசுகின்ற போதுமணம் வீசுகின்ற தொன்றோ
சீரமுத மாகியெல்லாந் தித்திப்ப தன்போர்
சிறிதுமிலாக் கடைப்புலையேன் றிறத்துக்கிங் கென்றால்
ஊரமுதப் பேரன்பர் பேசுமிடத் தவர்பால்
உற்றவண்ண மிற்றிதென்ன வுன்னமுடி யாதே. 8

பொற்பதத்தா ளென்னளவிற் பொன்னாசை தவிர்த்தாள்
பூரணியா னந்தசிவ போகவல்லி யோடு
சொற்பதமுங் கடந்துமன்றில் விளங்கியநின் வடிவைத்
தூய்மையிலே னெண்ணுந் தோறுமன மிளகிச்
சிற்பதத்திற் பரஞான மயமாகு மென்றால்
தெளிவுடையார் காண்கின்ற திறத்திலவர்க் கிருக்கும்
நற்பதமெய்த் தன்மையதோ வுரைப்பரிது மிகவும்
நாதமுடி தனிற்புரியு ஞானநடத் தரசே. 9

Koviloor Digital Library

என்பிழையா வையும்பொறுத்தா ளென்னைமுன்னே யளித்தாள்
இறைவிசிவ காமவல்லி யென்னம்மை யுடனே
இன்பவடி வாய்ப்பொதுவி விலங்கியநின் வண்ணம்
இற்றெனநா னினைத்திடுங்கா லெற்றெனவு மொழிவேன்
அன்புருவா யதுவதுவா யளிந்தபழ மாகி
அப்பழச்சா றாகியத னருஞ்சுவையு மாகி
என்புருக மனஞான மயமாகு மென்றால்
எற்றேமெய் யன்புடையா ரியைந்துகண்ட விடத்தே. 10

கரும்பனையா ளென்னிரண்டு கண்களிலே யிருந்தாள்
கற்பகப்பொன் வல்லிசிவ காமவல்லி யுடனே
விரும்புமணிப் பொதுவினிலே விளங்கியநின் வடிவை
வினையுடையே னினைக்கின்ற வேளையிலென் புகல்வேன்
இரும்பனைய மனநெகிழ்ந்து நெகிழ்ந்துருகி யொருபோ
இன்பமய மாகுமெனி லன்பர்கண்ட காலம்
அரும்பிமலர்ந் திட்டசிவா நந்தவநு பவத்தை
யாரறிவார் நீயறிவா யம்பலத்தெம் மரசே. 11

காமசத்தி யுடன்களிக்குங் காலையிலே யடியேன்
கஞான சத்தியையுங் கலந்துகொளப் புரிந்தாள்
வாமசத்தி சிவகாம வல்லியொடும் பொதுவில்
வயங்கியநின் றிருவடிவை மனங்கொளும்போ தெல்லாம்
ஆமசத்த னெனுமெனக்கே யாநந்த வெள்ளம்
அதுததும்பிப் பொங்கிவழிந் தாடுமெனி லந்தோ
ஏமசத்த ரெனுமறிஞர் கண்டவிடத் திருந்த
இன்பவநு பவப்பெருமை யாவர்புகல் வாரே. 12

திருச்சிற்றம்பலம்

ஏழாவது

அதிசயமாலை

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

அக்கோவீ ததிசயமீ ததிசயமென் புகல்வேன்
அயன்முதலோர் நெடுங்கால மயன்முதனித் திருந்து
மிக்கோல பிடவுமவர்க் கருளாம விருளான்
மிகமருண்டு மதியிலியாய் வினைவிரிய விரித்து
இக்கோலத் துடனிருந்தே னன்பறியேன் சிறியேன்
எனைக்கருதி யென்னிடத்தே யெழுந்தருளி யெனையுந்
தக்கோனென் றுலகிசைப்பத் தன்வணமொன் றளித்தான்
தனித்துசிவ காமவல்லிக் கினித்தநடத் தவனே. 1

Koviloor Digital Library

அச்சோவீ ததிசயமீ ததிசயமென் புகல்வேன்
அரிமுதலோர் நெடுங்காலம் புரிமுதனீத் திருந்து
நச்சோல மிடவுமவர்க் கருளாமன் மருளான்
நாள்கழித்துக் கோள்கொழிக்கு நடைநாயிற் கடையேன்
எச்சோடு மிழிவினுக்கொன் றில்லேனென் பொல்லேன்
எனைக்கருதி யானிருக்கு மிடத்திலெழுந் தருளித்
தச்சோதி வணப்பொருளொன் றெனக்களித்துக் களித்தான்
தனித்தசிவ காமவல்லிக் கினித்தநடத் தவனே. 2

அத்தோவீ ததிசயமீ ததிசயமென் புகல்வேன்
அந்தணரெல் லாருமறை மந்தணமே புகன்று
ஒத்தோல மிடவுமவர்க் கொருசிறிது மருளான்
ஒதியனையேன் விதியறியே னொருங்கேன்வன் குரங்கேன்
இத்தோட மிகவுடையேன் கடைநாய்க்குங் கடையேன்
எனைக்கருதி யானிருக்கு மிடந்தேடி நடந்து
சத்தோட முறவெனக்குஞ் சித்தியொன்று கொடுத்தான்
தனித்தசிவ காமவல்லிக் கினித்தநடத் தவனே. 3

அந்தோவீ ததிசயமீ ததிசயமென் புகல்வேன்
அறிவுடையா ரைம்புலனுஞ் செறிவுடையா ராகி
வந்தோல மிடவுமவர்க் கருளாமன் மருளான்
மனஞ்சென்ற வழியெல்லாந் தினஞ்சென்ற மதியேன்
எந்தோவென் றுலகியம்ப விழிவழியே யுழல்வேன்
எனைக்கருதி யெளியேனு னிருக்குமிடத் தடைந்து
சந்தோட முறவெனக்குந் தன்வணமொன் றளித்தான்
தனித்தசிவ காமவல்லிக் கினித்தநடத் தவனே. 4

அப்பாவீ ததிசயமீ ததிசயமென் புகல்வேன்
அருந்தவர்கள் விரும்பிமிக வருந்தியுள முயன்று
இப்பாரி லிருந்திடவு மவர்க்கருளான் மருளால்
இவ்வுலக நடைவிழைந்து வெவ்வினையே புரிந்து
எப்பாலு மிழிந்துமனத் திச்சைபுரி கின்றேன்
எனைக்கருதி யானிருக்கு மிடந்தேடி யடைந்து
தப்பாத வொளிவண்ணந் தந்தென்னை யளித்தான்
தனித்தசிவ காமவல்லிக் கினித்தநடத் தவனே. 5

அம்மாவீ ததிசயமீ ததிசயமென் புகல்வேன்
அன்பரெலா முயன்றுமுயன் றின்படைவான் வருந்தி
எம்மானென் றேத்திடவு மவர்க்கருளான் மருளால்
இதுநன்மை யிதுதீமை யென்றுநினை யாமே
மைம்மாலிற் களிசிறந்து வல்வினையே புரியும்
வஞ்சகனேன் றனைக்கருதி வந்துமகிழ்ந் தெனக்குந்
தம்மான முறவியந்து சம்மான மளித்தான்
தனித்தசிவ காமவல்லிக் கினித்தநடத் தவனே. 6

Koviloor Digital Library

ஆவாவீ ததிசயமீ ததிசயமென் புகல்வேன்
அடியரெலா நினைந்துநினைந் தவிழ்ந்தகநெக் குருகி
ஓவாம லரற்றிடவு மவர்க்கருளான் மாயை
உலகவிட யாநந்த முவந்துவந்து முயன்று
தீவாய நரகினிடை விழக்கடவே னெனைத்தான்
சிவாயநம வெனப்புகலுந் தெளிவுடைய னாக்கிச்
சாவாத வரங்கொடுத்துத் தனக்கடிமை பணித்தான்
தனித்தசிவ காமவல்லிக் கினித்தநடத் தவனே. 7

அண்ணாவீ ததிசயமீ ததிசயமென் புகல்வேன்
அறங்கரைந்த நாவினர்க ளகங்கரைந்து கரைந்து
கண்ணார நீர்பெருக்கி வருந்தவுமங் கருளான்
கடைநாயிற் கடையேன்மெய்க் கதியையொரு சிறிதும்
எண்ணாத கொடும்பாவிப் புலைமனத்துச் சிறியேன்
எனைக்கருதி வலியவுநா னிருக்குமிடத் தடைந்து
தண்ணார்வெண் மதியமுத முணவொன்று கொடுத்தான்
தனித்தசிவ காமவல்லிக் கினித்தநடத் தவனே. 8

ஐயாவீ ததிசயமீ ததிசயமென் புகல்வேன்
அருமையறிந் தருள்விரும்பி யுரிமைபல வியற்றிப்
பொய்யாத நிலைநின்ற புண்ணியர்க ளிருக்கப்
புலைமனத்துச் சிறியேனோர் புல்லுநிக ரில்லேன்
செய்யாத சிறுதொழிலே செய்துழலுங் கடையேன்
செருக்குடையே னெனைத்தனது திருவுளத்தி லடைத்தே
சையாதி யந்தநடுக் காட்டியொன்று கொடுத்தான்
தனித்தசிவ காமவல்லிக் கினித்தநடத் தவனே. 9

அன்னேவீ ததிசயமீ ததிசயமென் புகல்வேன்
அருளருமை யறிந்தவர்க ளருளமுதம் விரும்பி
என்னேயிங் கருளாமை யென்றுகவன் றிருப்ப
யாதுமொரு நன்றியிலேன் றீதுநெறி நடப்பேன்
முன்னேபின் னும்மறியா மூடமனப் புலையேன்
முழுக்கொடியே னெனைக்கருதி முன்னரெழுந் தருளி
தன்னோடு மிணைந்தவண்ண மொன்றெனக்குக் கொடுத்தான்
தனித்தசிவ காமவல்லிக் கினித்தநடத் தவனே. 10

ஐயோவீ ததிசயமீ ததிசயமென் புகல்வேன்
அருவினைக ளணுகாம லறநெறியே நடந்து
மெய்யோது மறிஞரெலாம் விரும்பியிருந் திடவும்
வெய்யவினைக் கடல்குளித்து விழற்கிறைத்துக் களித்துப்
பொய்யோதிப் புலைபெருக்கி நிலைசுருக்கி யுழலும்
புரைமனத்தே னெனைக்கருதிப் புகுந்தருளிக் கருணைச்
சையோக மூறவெனக்கும் வலிந்தொன்று கொடுத்தான்
தனித்தசிவ காமவல்லிக் கினித்தநடத் தவனே. 11

Koviloor Digital Library

எற்றேயீ ததிசயமீ ததிசயமென் னிசைப்பேன்
இச்சையெலாம் விடுத்துவநத் திடத்துமலை யிடத்தும்
உற்றேமெய்த் தவம்புரிவா ருன்னிவிழித் திருப்ப
உலகவிட யங்களையே விலகவிட மாட்டேன்
கற்றேது மறியகிலேன் கடையரினுங் கடையேன்
கருணையிலாக் கன்மனத்துக் கள்வனெனைக் கருதிச்
சற்றேயு மன்றுமிகப் பெரிதெனக்கிங் களித்தான்
தனித்தசிவ காமவல்லிக் கினித்தநடத் தவனே. 12

என்னேயீ ததிசயமீ ததிசயமென் னிசைப்பேன்
இரவுபக லறியாம லிருந்தவிடத் திருந்து
முன்னேமெய்த் தவம்புரிந்தா ரின்னேயு மிருப்ப
மூடர்களிற் றலைநின்ற வேடமனக் கொடியேன்
பொன்னேய மிகப்புரிந்த புலைக்கடையே னிழிந்த
புழுவினுமிங் கிழிந்திழிந்து புகுந்தவெனைக் கருதித்
தன்னேய முறவெனக்கு மொன்றளித்துக் களித்தான்
தனித்தசிவ காமவல்லிக் கினித்தநடத் தவனே. 13

ஓகோவீ ததிசயமீ ததிசயமென் னுரைப்பேன்
உள்ளபடி யுள்ளவொன்றை யுள்ளமுற விரும்பிப்
பாகோமுப் பழரசமோ வெனருசிக்கப் பாடிப்
பத்திசெய்வா ரிருக்கவுமோர் பத்தியுமில் லாதே
கோகோவென் றுலகுரைப்பத் திரிகின்ற கொடியேன்
குற்றமன்றிக் குணமறியாப் பெத்தனெனைக் கருதித்
தாகோத ரங்குளிர்ந்த தன்மையொன்று கொடுத்தான்
தனித்தசிவ காமவல்லிக் கினித்தநடத் தவனே. 14

திருச்சிற்றம்பலம்

எட்டாவது

அபராதமன்னிப்புமாலை

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

செய்வகைநன் கறியாதே திருவருளோ டுடிச்
சிலபுகன்றே னறிவறியாச் சிறியரினுஞ் சிறியேன்
பொய்வகையேன் புகன்றபிழை பொறுத்தருளல் வேண்டும்
புண்ணியனே மதியணிந்த புரிசடையாய் விடையாய்
மெய்வகையோர் விழித்திருப்ப விரும்பியெனை யன்றே
மிகவலிந்தாட் கொண்டருளி வினைதவிர்த்த விமலா
ஐவகைய கடவுளரு மந்தணரும் பரவ
ஆநந்தத் திருநடஞ்செய் யம்பலத்தெம் மரசே. 1

Koviloor Digital Library

நிலைநாடி யறியாதே நின்னருளோ டுடி
நீர்மையல புகன்றேனன் னெறியொழுகாக் கடையேன்
புலைநாயேன் புகன்றபிழை பொறுத்தருளல் வேண்டும்
பூதகணஞ் சூழநடம் புரிகின்ற புநிதா
கலைநாடு மதியணிந்த கநபவளச் சடையாய்
கருத்தறியாக் காலையிலே கருணையளித் தவனே
தலைஞாந முநிவர்கடந் தலைமீது விளங்குந்
தாளுடையா யாளுடைய சற்குருவென் னரசே. 2

கலைக்கடைநன் கறியாதே கநவருளோ டுடிக்
கரிசுபுகன் றேன்கவலைக் கடற்புணையென் றுணரேன்
புலைக்கடையேன் புகன்றபிழை பொறுத்தருளல் வேண்டும்
போற்றிசிவ போற்றிசிவ போற்றிசிவ போற்றி
தலைக்கடைவா யன்றிரவிற் றுண்மலரொன் றமர்த்தித்
தனிப்பொருளென் கையிலளித்த தயவுடைய பெருமான்
கொலைக்கடையார்க் கெய்தரிய குணமலையே பொதுவிற்
கூத்தாடிக் கொண்டுலகைக் காத்தாளுங் குருவே. 3

நின்புகழ்நன் கறியாதே நின்னருளோ டுடி
நெறியலவே புகன்றேனன் னிலைவிரும்பி நில்லேன்
புன்புலையேன் புகன்றபிழை பொறுத்தருளல் வேண்டும்
பூரணசிற் சிவனேமெய்ப் பொருளருளும் புநிதா
என்புடையங் நாளிரவி லெழுந்தருளி யளித்த
என்குருவே யென்னிருகண் ணிலங்கியநன் மணியே
அன்புடையா ரின்படையு மழகியவம் பலத்தே
ஆத்தாளும் அப்பனுமாய்க் கூத்தாடும் பதியே. 4

துலைக்கொடிநன் கறியாதே துணையருளோ டுடித்
துரிசுபுகன் றேன்கருணைப் பரிசுபுகன் றறியேன்
புலைக்கொடியேன் புகன்றபிழை பொறுத்தருளல் வேண்டும்
பொங்குதிரைக் கங்கைமதி தங்கியசெஞ் சடையாய்
மலைக்கொடியென் னம்மையருண் மாதுசிவ காம
வல்லிமறை வல்லிதுதி சொல்லிநின்று காணக்
கலைக்கொடிநன் குணர்முநிவர் கண்டுபுகழ்ந் தேத்தக்
கநகசபை தனினடிக்குங் காரணசற் குருவே. 5

பழுத்தலைநன் குணராதே பதியருளோ டுடிப்
பழுதுபுகன் றேன்கருணைப் பாங்கறியாப் படிறேன்
புழுத்தலையேன் புகன்றபிழை பொறுத்தருளல் வேண்டும்
புண்ணியர்தம் முள்ளகத்தே நண்ணியமெய்ப் பொருளே
கழுத்தலைநஞ் சணிந்தருளுங் கருணைநெடுங் கடலே
கான்மலரென் றலைமீது தான்மலர வளித்தாய்
விழுத்தலைவர் போற்றுமணி மன்றினடம் புரியும்
மெய்ம்மையறி வின்புருவாய் விளங்கியசற் குருவே. 6

Koviloor Digital Library

கையடைநன் கறியாதே கநவருளோ டூடிக்
காசுபுகன் றேன்கருணைத் தேசறியாக் கடையேன்
பொய்யடியேன் புகன்றபிழை பொறுத்தருளல் வேண்டும்
புத்தமுதே சுத்தசுக பூரணசிற் சிவமே
ஐயடிகள் காடவர்கோன் அகமகிழ்ந்து போற்றும்
அம்பலத்தே யருணடஞ்செய் செம்பவள மலையே
மெய்யடிய ருள்ளகத்தில் விளங்குகின்ற விளக்கே
வேதமுடி மீதிருந்த மேதகுசற் குருவே. 7

திறப்படநன் குணராதே திருவருளோ டூடித்
தீமைபுகன் றேன்கருணைத் திறஞ்சிறிதுந் தெளியேன்
புறப்படிறேன் புகன்றபிழை பொறுத்தருளல் வேண்டும்
பூதமுத னாதவரைப் புணருவித்த புனிதா
உறப்படுமெய் யுணர்வுடைய ருள்ளகத்தே விளங்கும்
உண்மையறி வாநந்த வுருவுடைய குருவே
சிறப்படைமா தவர்போற்றச் செம்பொன்மணிப் பொதுவில்
திருத்தொழிலைந் தியற்றுவிக்குந் திருநடநா யகனே. 8

தேர்ந்துணர்ந்து தெளியாதே திருவருளோ டூடிச்
சிலபுகன்றேன் றிருக்கருணைத் திறஞ்சிறிதுந் தெரியேன்
போந்தகனேன் புகன்றபிழை பொறுத்தருளல் வேண்டும்
போதாந்த மிசைவிளங்கு நாதாந்த விளக்கே
ஊர்ந்தபணக் கங்கணமே முதற்பணிக ளொளிர
உயர்பொதுவி னடிக்கின்ற செயலுடைய பெருமான்
சார்ந்தவரை யெவ்வகையுந் தாங்கியளிக் கின்ற
தயவுடைய பெருந்தலைமைத் தனிமுதலெந் தாயே. 9

ஒல்லும்வகை யறியாதே யுன்னருளோ டூடி
ஊறுபுகன் றேன்றுயர மாறும்வகை யுணரேன்
புல்லியனேன் புகன்றபிழை பொறுத்தருளல் வேண்டும்
பூதியணிந் தொளிர்கின்ற பொன்மேனிப் பெருமான்
சொல்லியலும் பொருளியலுங் கடந்தபர நாதத்
துரியவெளிப் பொருளான பெரியநிலைப் பதியே
மெல்லியநற் சிவகாம வல்லிகண்டு மகிழ
விரியுமறை யேத்தநடம் புரியுமரு ளிறையே. 10

திருச்சிற்றம்பலம்

Koviloor Digital Library

9. ஆளுடைய பிள்ளையார் அருள் மாலை

எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

உலகிய லுணர்வோ ரணுத்துணை யேனும்
உற்றிலாச் சிறியவோர் பருவத்
திலகிய வெனக்குள் ளிருந்தரு ணெறியில்
ஏற்றவுந் தரமிலா மையினுன்
விலகுறுங் காலத் தடிக்கடி யேற
விடுத்துப்பின் விலகுரு தளித்தாய்
திலகநற் காழி ஞானசம் பந்தத்
தெள்ளமு தாஞ்சிவ குருவே. 1

உயிரநு பவமுற் றிடிலத னிடத்தே
ஓங்கரு ளநுபவ முறுமச்
செயிரினல் லநுப வத்திலே சுத்த
சிவவநு பவமுறு மென்றுய்
பயிலுமூ வாண்டிற் சிவைதரு ஞானப்
பான்மகிழ்ந் துண்டுமெய்ந் நெறியாம்
பயிர்தழைந் துறவைத் தருளிய ஞான
பந்தனென் றேங்குசற் குருவே. 2

தத்துவ நிலைகள் தனித்தனி யேறித்
தனிப்பர நாதமாந் தலத்தே
ஒத்ததன் மயமா நின்னைநீ யின்றி
உற்றிட லுயிரநு பவமென்(று)
இத்துணை வெளியி னென்னையென் னிடத்தே
இருந்தவா றளித்தனை யன்றோ
சித்தநற் காழி ஞானசம் பந்தச்
செல்வமே எனதுசற் குருவே. 3

உலகிய லுணர்வோ ரணுத்துணை யேனும் உற்றிலாச் சிறியவோர் பருவத்
திலகிய வெனக்குள் ளிருந்தரு ணெறியில் ஏற்றவுந் தரமிலா மையினுன்
விலகுறுங் காலத் தடிக்கடி யேய விடுத்துப்பின் விலகுரு தளித்தாய்
[1]அலகிலா வுணர்ச்சி யளித்தனை யுன்றன் அருட்கடற் பெருமையென் புகல்வேன்
திலகநற் காழி ஞானசம் பந்தத் தெள்ளமு தாஞ்சிவ குருவே.

1. திருவருட்பிரகாசவள்ளலார் தமது திருக்கரத்தாலெழுதிய மூலப்பிரதியில் இத்திருச்செய்யுள் ஐந்தடியாகவே இருத்தலினாலிங்ஙனமே பதிப்பிக்கப்பட்டது. 'வீட்டுக்கடங்கா' என்ற செய்யுளைக் கவனிக்கவும். (2-ந் திருமுறை பக்கம்-197)

Koviloor Digital Library

தனிப்பர நாத வெளியின்மே னினது
தன்மயந் தன்மய மாக்கிப்
பனிப்பிலா தென்று முள்ளதாய் விளங்கிப்
பரம்பரத் துட்புற மாகி
இனிப்புற வொன்று மியம்புறு வியல்பாய்
இருந்ததே யருளநு பவமென்(று)
எனக்கருள் புரிந்தாய் ஞானசம் பந்தன்
என்னுமென் சற்குரு மணியே. 4

உள்ளதாய் விளங்கு மொருபெரு வெளிமேல்
உள்ளதாய் முற்றுமுள் ளதுவாய்
நள்ளதா யெனதாய் நானதாய்த் தனதாய்
நவிற்றருந் தானதா யின்ன
விள்ளொணு வப்பா லப்படிக் கப்பால்
வெறுவெளி சிவவநு பவமென்
றுள்ளுற வளித்த ஞானசம் பந்த
உத்தம சுத்தசற் குருவே. 5

பொத்திய மூல மலப்பிணி தவிர்க்கும்
பொருளரு ளநுபவ மதற்குப்
பத்திய முயிரி னநுபவ மிதனைப்
பற்றறப் பற்றுதி யிதுவே
சத்திய மெனவென் றனக்கருள் புரிந்த
தனிப்பெருங் கருணையென் புகல்வேன்
முத்தியற் சிவிகை யிவர்ந்தரு ணெறியின்
முதலர சியற்றிய துரையே. 6

அடியென லெதுவோ முடியென லெதுவோ
அருட்சிவ மதற்கெனப் பலகால்
படியுற வருந்தி யிருந்தவென் வருத்தம்
பார்த்தரு ளாலெழுந் தருளி
மிடியற வெனைத்தான் கடைக்கணித் தனக்குள்
விளங்குவ வடிமுடி யென்றாய்
வடிவிலாக் கருணை வாரியே மூன்று
வயதினி லருள்பெற்ற மணியே. 7

செவ்வகை யொருகாற் படுமதி யளவே
செறிபொறி மனமதன் முடிவில்
எவ்வகை நிலையுந் தோற்றுநீ நினக்குள்
எண்ணிய படியெலா மெய்தும்
இவ்வகை யொன்றே வருத்தமில் வகையென்
றெனக்கருள் புரிந்தசற் குருவே
தெவ்வகை அமண விருளற வெழுந்த
தீபமே சம்பந்தத் தேவே. 8

Koviloor Digital Library

முன்புறு நிலையும் பின்புறு நிலையு
முன்னிநின் றுளமயக் குறுங்கால்
அன்புறு நிலையாற் றிருநெறித் தமிழ்கொண்
டையநீத் தருளிய வரசே
என்புபெண் ணுருவோ டின்னுயி ரதுகொண்
டெழுந்திடப் புரிந்துல கெல்லாம்
இன்புறப் புரிந்த மறைத்தனிக் கொழுந்தே
என்னுயிர்க் குயிரெனுங் குருவே. 9

வருபகற் கற்பம் பலமுயன் றாலும்
வரலருந் திறனெலா மெனக்கே
ஒருபகற் பொழுதி லுறவளித் தனைநின்
உறுபெருங் கருணையென் னுரைப்பேன்
பெருமண நல்லூர்த் திருமணங் காணப்
பெற்றவர் தமையெலா ஞான
உருவடைந் தோங்கக் கருணைசெய் தளித்த
உயர்தனிக் கவுணிய மணியே. 10

இரட்டை ஆசிரிய விருத்தம்

சீரார் சண்பைக் கவுணியர்தந் தெய்வ மரபிற் றிகழ்விளக்கே
தெவிட்டா துளத்திற் றித்திக்குந் தேனே யழியாச் செல்வமே
காரார் மிடற்றுப் பவளமலைக் கண்ணின் முளைத்த கற்பகமே
கரும்பே கனியே யென்னிரண்டு கண்ணே கண்ணிற் கருமணியே
ஏரார் பருவ மூன்றிலுமை யினிய முலைப்பா லெடுத்தூட்டும்
இன்பக்குதலை மொழிக்குருந்தே யென்னு ருயிருக் கொருதுணையே
பேரார் ஞான சம்பந்தப் பெருமா னேநின் றிருப்புகழைப்
பேசு கின்றோர் மேன்மேலும் பெருஞ்செல் வத்திற் பிறங்குவரே.

முப்பத்திரண்டடி ஆசிரிய விருத்தம்

உலகியலி னுறுமயலி னடைவுபெறு மெனதிதயம்
ஒளிபெற விளங்கு சுடரே
உதயநிறை மதியமுத முணவுபெற நிலவுசிவ
யோகநிலை யருளு மலையே
உனதுசெய லெனதுசெய லுனதுடைமை யெனதுடைமை
உணரென வுணர்த்து நிறைவே
உளவெனவு மிலவெனவு முரைபுபய வசநமற
ஒருமொழியை யுதவு நிதியே
ஒன்றுட னிரண்டெனவி தண்டையிடு மிண்டரொடும்
ஒன்றலற நின்ற நிலையே
உன்னலற வுன்னுநிலை யின்னதென வென்னுடைய
உள்ளுணர வுள்ளு மதியே
உன்னிலையு மென்னிலையு மன்னியபி லைச்சிறிதும்
உற்றறிதி யென்ற பொருளே
உண்மைநெறி யண்மைதனி லுண்டுளமொ ருங்கிலென
ஓதுமெய்ப் போத நெறியே; 1

அலகின்மறை மொழியுமொரு பொருளின்முடி பெனவெனதகந்
தெளியவருள் செய் தெருளே
ஐம்பூத மாதிநீ யல்லையத் தத்துவ
அதீத வறிவென்ற வொன்றே

அத்துவா வாறையும் அகன்றநிலை யாதஃ
ததீதநிலை யென்ற நன்றே
ஆணையெம தாணை யெமை யன்றியொன் றில்லைநீ
அறிதி யென வருளுமுதலே

அன்பென்ப தேசிவமுணர்ந் திடுகவெள வெனக்
கறிவித்த சுத்த வறிவே
அத்துவித நிலைதுவித நிலைநின்ற பின்னல
தடைந்திடா தென்ற விறையே

ஆனந்த மதுசச்சி தானந்த மேயிஃ
தறிந்தடைதி யென்ற நலமே
அட்டசித்தி களுநின தேவல்செயு நீயவை
அவாவியிட லென்ற மணியே; ௧௨

இலகுபரி பூரண விலாசமல திலையண்ட
மெங்கணு மெனச்சொல் பதியே
இரவுபக லற்றவிட மதுசகல கேவல
மிரண்டினடு வென்ற பரமே

இச்சைமன மாயையே கண்டன வெலாமவை
யிருந்துகா ணென்ற தவமே
யான்பிற ரெனும்பேத நடைவிடுத் தென்னோ
டிருத்தியென வுரைசெய் யரைசே

என்களைக ணேயெனது கண்ணேயெ னிருகண்ணி
லங்குமணி யேயெ னுயிரே
என்னுயிர்க் குயிரேயெ னறிவேயெ னறிவூ
டிருந்தசிவ மேயெ னன்பே

என்றெய்வ மேயெனது தந்தையே யெனையீன்
றெடுத்ததா யேயெ னுறவே
என்செல்வ மேயெனது வாழ்வேயெ னின்பமே
என்னருட் குருவ டிவமே; ௧௩

கலகமன முடையவென் பிழைபொறுத் தாட்கொண்ட
கருணையங் கடல முதமே
காழிதனி லன்றுசுரர் முனிவர்சித் தர்கள்யோகர்
கருதுசம யாதி பர்களுங்

கைகுவித் தருகுநின் றேத்தமூ வாண்டிற்
களித்துமெய்ப் போத முண்டு
களிமதுர மொழுகுசெம் பதிகச் செழுஞ்சொன்மழை
கண்ணுதற் பவள மலையே

Koviloor Digital Library

கண்டுபொழி யருண்முகிற் சம்பந்த வள்ளலாங்
கடவுளே யோத்தூ ரினிற்
கவினுற விளங்குநற் பணிகள்சிவ புண்ணியக்
கதியுல கறிந்துய் யவே
கரையற்ற மகிழ்வினொடு செய்தருள் புரிந்திடுங்
காட்சியே சிவஞா னியாங்
கருதவரு மொருதிருப் பெயர்கொண்மணி யேயெமைக்
காப்பதுன் கடனென் றுமே. 1

திருச்சிற்றம்பலம்

10. ஆளுடைய அரசுகள் அருள் மாலை

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்
திருச்சிற்றம்பலம்

திருத்தருசீ ரதிகையருட் டலத்தி னோங்குஞ்
சிவக்கொழுந்தி னருட்பெருமைத் திறத்தால் வாய்மை
உருத்தகுமெய் யுணர்ச்சிவடி வாகிச் சைவ
ஒளிவிளங்க **நாவரசென்** றொருபேர்பெற்றுப்
பொருத்தமுற **உழவாரப் படைகைக்** கொண்ட
புண்ணியனே நண்ணியசீர்ப் புநித னேயென்
கருத்தமர்ந்த கலைமதியே கருணை ஞானக்
கடலேநின் கழல்கருதக் கருது வாயே. 1

வாய்மையிலாச் சமணதர் பலகாற் செய்த
வஞ்சமெலாந் திருவருட்பேர் வலத்தா னீந்தித்
தூய்மைபெறுஞ் சிவநெறியே விளங்க வோங்குஞ்
சோதிமணி விளக்கேயென் றுணையே யெம்மைச்
சேய்மைவிடா தணிமையிடத் தாள வந்த
செல்வமே யெல்லையிலாச் சிறப்பு வாய்ந்துள்
ஆய்மையுறு பெருந்தகையே யமுதே சைவ
அணியேசொல் லரசெனும்பே ரமைந்த தேவே. 2

தேவரெலாந் தொழுந்தலைமைத் தேவர் பாதத்
திருமலரை முடிக்கணிந்து திகழ்ந்து நின்ற
நாவரசே நான்முகனும் விரும்பு ஞான
நாயகனே நல்லவர்க்கு நண்ப னேயெம்
பாவமெலா மகற்றியருட் பான்மை நல்கும்
பண்புடைய பெருமானே பணிந்து நின்பால்
மேவவிருப் புறுமடியர்க் கன்பு செய்ய
வேண்டினே னவ்வகைநீ விதித்தி டாயே. 3

விதிவிலக்கீ தென்றறியும் வினைவொன் றில்லா
வினையனே னெனினுமென்னை விரும்பி யென்னுள்
மதிவிளக்கை யேற்றியருண் மனையின் ஞான
வாழ்வடையச் செயல்வேண்டும் வள்ள லேநற்

Koviloor Digital Library

பதிமலர்த்தா ணிழலடைந்த தவத்தோர்க் கெல்லாம்
பதியேசொல் லரசெனும்பேர் படைத்த தேவே
கதிதருகற் பகமேமுக் கனியே ஞானக்
கடலேயென் கருத்தேயென் கண்ணு ளானே. 4

கண்ணுளே விளங்குகின்ற மணியே சைவக்
கனியேநா வரசேசெங் கரும்பே வேதப்
பண்ணுளே விளைந்தவருட் பயனே யுண்மைப்
பதியோங்கு நிதியேநின் பாத மன்றி
விண்ணுளே யடைகின்ற போக மொன்றும்
விரும்பேனென் றனையாள வேண்டுங் கண்டாய்
[1]**ஒண்ணுளே யொன்பதுவாய் வைத்தாய்** என்ற
உத்தமனே சித்தமகிழ்ந் துதவு வோனே. 5

ஓங்காரத் தனிமொழியின் பயனைச் சற்றும்
ஓர்கிலேன் சிறியேனிவ் வுலக வாழ்வில்
ஆங்காரப் பெருமதமால் யானை போல
அகம்பாவ மயனுகி யலைகின் றேனுன்
பாங்காய மெய்ப்படியர் தம்மைச் சற்றும்
பரிந்திலே னருளடையும் பரிசொன் றுண்டோ
தீங்காய செயலனைத்து முடையே னென்ன
செய்வேன்சொல் லரசேயென் செய்கு வேனே. 6

செய்வகையொன் றறியாத சிறியே னிந்தச்
சிற்றுலக வாழ்க்கையிடைச் சிக்கி யந்தோ
பொய்வகையே புரிகின்றேன் புண்ணி யாநின்
பொன்னடியைப் போற்றிலேன் புனித னேநான்
உய்வகையெவ் வகையாது செய்வே னீயே
உறுதுணையென் றிருக்கின்றே னுணர்வி லேனை
மெய்வகையிற் செலுத்தநினைத் திடுதி யோசொல்
வேந்தேயென் னுயிர்த்துணையாய் விளங்குங் கோவே. 7

விளங்குமணி விளக்கெனநால் வேதத் துச்சி
மேவியமெய்ப் பொருளையுள்ளே விரும்பி வைத்துக்
களங்கறுமெய் யன்பரெல்லாங் களிப்ப வன்றோர்
கற்றுணையாற் கடல்கடந்து கரையிற் போந்து
துளங்குபெறுஞ் சிவநெறியைச் சார்ந்த ஞானத்
துணையேநந் துரையேநற் சுகமே யென்றும்
வளங்கெழுமா சமநெறியை வளர்க்க வந்த
வள்ளலே நின்னருளை வழங்கு வாயே. 8

அருள்வழங்குந் திலதவதி யம்மை யார்பின்
அவதரித்த மணியேசொல் லரசே ஞானத்
தெருள்வழங்குஞ் சிவநெறியை விளக்க வந்த
செழுஞ்சுடர்மா மணிவிளக்கே சிறிய னேனை

1. திருநாவுக்கரசு சுவாமிகள் அருளிய திருப்பூம்புகலூர்த் திருத்தாண்டகம் எண்ணுகேன்..........., என்ற பாசுரம்

Koviloor Digital Library

இருள்வழங்கு முலகியனின் றெடுத்து ஞான
இன்னருள்தந் தாண்டருள்வா யின்றே லந்தோ
மருள் வழங்கும் பவநெறியிற் சுழல்வே னுய்யும்
வகையறியே னின்னருட்கு மரபன் றீதே. 9

தேர்ந்தவுளத் திடைமிகவுந் தித்தித் தூறுஞ்
செழுந்தேனே சொல்லரசாந் தேவே மெய்மை
சார்ந்துதிகழ் அப்பூதி யடிகட் கின்பந்
தந்தபெருந் தகையேயெந் தந்தை யேயுட்
கூர்ந்தமதி நிறைவேயென் குருவே யெங்கள்
குலதெய்வ மேசைவக் கொழுந்தே துன்பந்
தீர்ந்தபெரு நெறித்துணையே யொப்பி லாத
செல்வமே அப்பனெனத் திகழ்கின் றோனே. 10

திருச்சிற்றம்பலம்

11. ஆளுடைய நம்பிகள் அருள்மாலை

கொச்சகக் கலிப்பா

திருச்சிற்றம்பலம்

மதியணிசெஞ் சடைக்கனியை மன்றுணடம் புரிமருந்தைத்
துதியணிசெஞ் சுவைப்பொருளிற் சொன்மாலை தொடுத்தருளி
விதியணிமா மறைநெறியு மெய்ந்நிலையா கமநெறியும்
வதியணிந்து விளங்கவைத்த வன்றொண்டப் பெருந்தகையே. 1

நீற்றிலிட்ட நிலையாப்புன் னெறியுடையார் தமைக்கூடிச்
சேற்றிலிட்ட கம்பமெனத் தியங்குற்றேன் றனையாளாய்
ஏற்றிலிட்ட திருவடியை யெண்ணியரும் பொன்னையெலாம்
ஆற்றிலிட்டுக் குளத்தெடுத்த வருட்டலைமைப் பெருந்தகையே. 2

இலைக்குளநீ ரழைத்ததனி லிடங்கருற வழைத்ததன்வாய்த்
தலைக்குதலை மதலையுயிர் தழைப்பவழைத் தருளியநின்
கலைக்கும்வட கலையின்முதற் கலைக்குமுறு கணக்குயர்பொன்
மலைக்குமணு நிலைக்குமுரு! வன்றொண்டப் பெருந்தகையே. 3

வேதமுதற் கலைகளெலாம் விரைந்துவிரைந் தநந்தமுறை
ஓதவவைக் கணுத்துணையு முணர்வரிதா மெம்பெருமான்
பாதமலர் நினதுதிருப் பணிமுடிமேற் படப்புரிந்த
மாதவம்யா துரைத்தருளாய் வன்றொண்டப் பெருந்தகையே. 4

Koviloor Digital Library

[1]**ஏழிசையா யிசைப்பயனா யின்னமுதா யென்னுடைய**
தோழனுமா யென்றுமுன்னீ சொன்னபெருஞ் சொற்பொருளை
ஆழநினைத் திடிலடியே னருங்கரணங் கரைந்துகரைந்
தூழியிலின் புறுவதுகா ணுயர்கருணைப் பெருந்தகையே. 5

வான்காண விந்திரனு மாலயனு மாதவருந்
தான்காண விறையருளாற் றனித்தவள யானையின்மேற்
கோன்காண வெழுந்தருளிக் குலவியநின் கோலமதை
நான்காணப் பெற்றிலனே நாவலூர்ப் பெருந்தகையே. 6

தேன்படிக்கு மமுதாமுன் றிருப்பாட்டைத் தினந்தோறும்
நான்படிக்கும் போதென்னை நானறியே னாவொன்றோ
ஊன்படிக்கு முளம்படிக்கு முயிர்படிக்கு முயிர்க்குயிருந்
தான்படிக்கு மநுபவங்காண் தனிக்கருணைப் பெருந்தகையே. 7

இன்பாட்டுத் தொழிற்பொதுவி லியற்றுகின்ற வெம்பெருமான்
உன்பாட்டுக் குவப்புறல்போ லூர்பாட்டுக் குவந்திலரென்
றென்பாட்டுக் கிசைப்பினுமென் னிடும்பாட்டுக் கரணமெலாம்
அன்பாட்டுக் கிசைவதுகா ணருட்பாட்டுப் பெருந்தகையே. 8

பரம்பரமாந் துரியமெனும் பதத்திருந்த பரம்பொருளை
உறம்பெறத்தோ ழமைகொண்ட வுன்பெருமை தனைமதித்து
வரம்பெறநற் றெய்வமெலாம் வந்திக்கு மென்றாலென்
தரம்பெறவென் புகல்வேனுன் றனித்தலைமைப் பெருந்தகையே. 9

பேரூரும் பரவைமனப் பிணக்கறவெம் பெருமானை
ஊரூரும் பலபுகல வோரிரவில் தூதனெனத்
தேரூருந் திருவாரூர்த் தெருவுதொறும் நடப்பித்தாய்
ஆரூர! நின்பெருமை யயன்மாலு மளப்பரிதே. 10

திருச்சிற்றம்பலம்

---

1 ஏழிசையா யிசைப்பயனா யின்னமுதா யென்னுடைய
தோழனுமா யான்செய்யுந் துரிசுகளுக் குடனாகி
மாழையொண்கண் பரவையைத்தந் தாண்டானை மதியிலா
ஏழையேன் பிரிந்திருக்கேன் என்ஆரூர் இறைவனையே.
திருச்சிற்றம்பலம் (தேவாரம்)

Koviloor Digital Library

12. ஆளுடைய அடிகள் அருள்மாலை

தரவுக்கொச்சகக் கலிப்பா

திருச்சிற்றம்பலம்

தேசகத்தி லினிக்கின்ற தெள்ளமுதே மாணிக்க
வாசகனே யானந்த வடிவான மாதவனே
மாசகன்ற நீதிருவாய் மலர்ந்ததமிழ் மாமறையின்
ஆசகன்ற வநுபவநா னநுபவிக்க வருளுதியே. 1

கருவெளிக்குட் புறனுகிக் கரணமெலாங் கடந்துநின்ற
பெருவெளிக்கு நெடுங்காலம் பித்தாகித் திரிகின்றோர்
குருவெளிக்கே நின்றுழலக் கோதறநீ கலந்ததனி
உருவெளிக்கே மறைபுகழு முயர்வாத வூர்மணியே. 2

மன்புருவ நடுமுதலா மனம்புதைத்து நெடுங்காலம்
என்புருவாய்த் தவஞ்செய்வா ரெல்லாரு மேமாக்க
அன்புருவம் பெற்றதன்பின் னருளுருவ மடைந்துபின்னர்
இன்புருவ மாயினைநீ யெழில்வாத வூரிறையே. 3

உருவண்டப் பெருமறையென் றுலகமெலாம் புகழ்கின்ற
திருவண்டப் பகுதியெனுந் திருவகவல் வாய்மலர்ந்த
குருவென்றெப் பெருந்தவருங் கூறுகின்ற கோவேநீ
[1] இருவென்றத் தனியகவ லெண்ணமெனக் கியம்புதியே. 4

தேடுகின்ற வானந்தச் சிற்சபையிற் சின்மயமாய்
ஆடுகின்ற சேவடிக்கீ ழாடுகின்ற வாரமுதே
நாடுகின்ற வாதவூர் நாயகனே நாயடியேன்
வாடுகின்ற வாட்டமெலாம் வந்தொருக்கான் மாற்றுதியே. 5

சேமமிகுந் திருவாத வூர்த்தேவென் றுலகுபுகழ்
மாமணியே நீயுரைத்த வாசகத்தை யெண்ணுதொறுங்
காமமிகு காதலன்றன் கலவிதனைக் கருதுகின்ற
ஏமமுறு கற்புடையா ளின்பினுமின் பெய்துவதே. 6

வான்கலந்த மாணிக்க வாசகநின் வாசகத்தை
நான்கலந்து பாடுங்கால் நற்கருப்பஞ் சாற்றினிலே
தேன்கலந்து பால்கலந்து செழுங்கனித்தீஞ் சுவைகலந்தென்
ஊன்கலந்து வுயிர்கலந்து வுவட்டாம லினிப்பதுவே. 7

1. மாணிக்கவாசக சுவாமிகள் திருவாசகம், திருவண்டப்பகுதி:
"கன்னற் கனிதேர் களிறெனக் கடைமுறை
என்னையும் இருப்ப தாக்கினன்"

Koviloor Digital Library

வருமொழிசெய் மாணிக்க வாசகநின் வாசகத்தில்
ஒருமொழியே யென்னையுமென் னுடையனையு மொன்றுவித்துத்
தருமொழியா மென்னிலினிச் சாதகமேன் சஞ்சலமேன்
குருமொழியை விரும்பியயல் கூடுவதேன் கூறுதியே. 8

பெண்சுமந்த பாகப் பெருமா னொருமாமேல்
எண்சுமந்த சேவகன்போ லெய்தியதும் வைகைநதி
மண்சுமந்து நின்றதுமோர் மாறன் பிரம்படியாற்
புண்சுமந்து கொண்டதுநின் பொருட்டன்றோ புண்ணியனே.

வாட்டமிலா மாணிக்க வாசகநின் வாசகத்தைக்
கேட்டபொழு தங்கிருந்த கீழ்ப்பறவைச் சாதிகளும்
வேட்டமுறும் பொல்லா விலங்குகளு மெய்ஞ்ஞாந
நாட்டமுறு மென்னிலிங்கு நானடைதல் வியப்பன்றே. 10

திருச்சிற்றம்பலம்

நான்காவது திருமுறை

முற்றிற்று

சென்னை சமரச சுத்தசன்மார்க்க சங்கம்,
"அருட்பெருஞ்ஜோதி நிலையம்"
7/99, அம்மன் கோயில் தெரு, கிருஷ்ணங்குளம் சமீபம், சென்னை.

Koviloor Digital Library

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

சிவ கணபதி துணை

அருட்பெருஞ்ஜோதி

திருவருட்பா

ஐந்தாவது திருமுறை

1. சித்திவிநாயகர் பதிகம்

கலி விருந்தம்

திருச்சிற்றம்பலம்

திருமா லறியாச் சேவடி யாலென்
கருமா லறுக்குங் கணபதி சரணம். 1

ஐங்கர னடிமல ரிங்குற நினைதிநின்
பொங்குறு துயரறும் மங்கலின் மனனே. 2

வெண்பா

அஞ்சுமுகத் தான்மகன்மா லஞ்சுமுகத் தானருள்வான்
அஞ்சுமுகத் தானஞ் சணிகரத்தான் — அஞ்சுமுக
வஞ்சரையான் காறு வகைவைத்தா னேரரையோ
டஞ்சரையான் கண்க ளவை. 1

வாதாகா வண்ண மணியேயெம் வல்லபைதன்
நாதாகா வண்ண நலங்கொள்வான் — போதார்
வனங்காத்து நீரளித்த வள்ளலே யன்பால்
இனங்காத் தருளா யெனை. 2

Koviloor Digital Library

எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

உலகெலாந் தழைப்ப வருண்மத வருவி
ஒழுகுமா முகமுமைங் கரமும்
இலகுசெம் மேனிக் காட்சியு மிரண்டோ
டிரண்டென வோங்குதிண்டோளுந்
திலகவா ணுதலார் சித்திபுத் திகளைச்
சேர்த்தணைத் திடுமிரு மருங்கும்
விலகுறு தெளியேன் விழைந்தனன் சித்தி
விநாயக விக்கினேச் சுரனே. 3

உள்ளமு முயிரு முணர்ச்சியு முடம்பும்
உறுபொருள் யாவுநின் றனக்கே
கள்ளமுங் கரிசு நினைந்திடா துதவிக்
கழலிணை நினைந்துநின் கருணை
வெள்ளமுண் டிரவு பகலறி யாத
வீட்டினி விருந்து நின்னோடும்
விள்ளலில் லாமற் கலப்பனோ சித்தி
விநாயக விக்கினேச் சுரனே. 4

நாதமுங் கடந்து நிறைந்துநின் மயமே
நானென வறிந்துநான் றானும்
பேதமுங் கடந்த மௌனராச் சியத்தைப்
பேதையேன் பிடிப்பதெந் நாளோ
ஏதமுஞ் சமய வாதமும் விடுத்தோர்
இதயமு மேழையேன் சிரமும்
வேதமுந் தாங்கும் பாதனே சித்தி
விநாயக விக்கினேச் சுரனே. 5

சச்சிதா னந்த வடிவநம் வடிவந்
தகுமதிட் டானமற் றிரண்டும்
பொய்ச்சிதா பாசக் கற்பனை யிவற்றைப்
போக்கியாங் கவ்வடி வாகி
அச்சிதா கார போதமு மதன்மேல்
ஆனந்த போதமும் விடுத்தல்
மெய்ச்சிதாம் வீடென் றுரைத்தனை சித்தி
விநாயக விக்கினேச் சுரனே. 6

ஒன்றல விரண்டு மலவிரண் டொன்றோ
டுருவல வருவல வுவட்ட
நன்றல நன்றல் லாதல விந்து
நாதமு மலவிவை யனைத்தும்
பொன்றலென் றறிந்துட் புறத்தினு மகண்ட
பூரண மாஞ்சிவ மொன்றே
வென்றலென் றறிநீ யென்றனை சித்தி
விநாயக விக்கினேச் சுரனே. 7

Koviloor Digital Library

சத்தசத் தியன்மற் றறிந்துமெய்ப் போதத்
தத்துவ நிலைபெற விழைவோர்
சித்தமுற் றகலா தொளித்தநின் கமலச்
சேவடி தொழுவெனக் கருள்வாய்
சுத்தசற் குணத்தெள் ளமுதெழு கடலே
சுகபரி பூரணப் பொருளே
வித்தக முக்க ணத்தனே சித்தி
விநாயக விக்கினேச் சுரனே. 8

மருளுறு மனமுங் கொடியவெங் குணமும்
மதித்தறி யாததுன் மதியும்
இருளுறு நிலையு நீங்கிநின் னடியை
எந்தநா ளடைகுவ னெளியேன்
அருளுறு மொளியா யவ்வெளிக் குள்ளே
அமர்ந்தசிற் பரவொளி நிறைவே
வெருளுறு சமயத் தறியொணுச் சித்தி
விநாயக விக்கினேச் சுரனே. 9

கேவல சகல வாதனை யதனுற்
கீழ்ப்படு மவக்கடன் மூழ்கி
ஓவற மயங்கி யுழலுமிச் சிறியேன்
உன்னரு ளடையுநா ளுளதோ
பாவல ருளத்திற் பரவிய நிறைவே
பரமசிற் சுகபரம் பரனே
மேவுறு மடியார்க் கருளிய சித்தி
விநாயக விக்கினேச் சுரனே. 10

கானனீர் விழைந்த மானென வுலகக்
கட்டினை நட்டுமன் றலையும்
ஈனவஞ் சகநெஞ் சகப்புலை யேனை
என்றுகொண் டருளுநா ளுளதோ
ஊனமொன் றில்லா வுத்தம ருளத்தே
ஓங்குசீர்ப் பிரணவ வொளியே
வேனவில் கரத்தோர்க் கினியவா சித்தி
விநாயக விக்கினேச் சுரனே. 11

பெரும்பொருட் கிடனும் பிரணவ வடிவிற்
பிறங்கிய வொருதனிப் பேறே
அரும்பொரு ளாகி மறைமுடிக் கண்ணே
அமர்ந்தபே ரானந்த நிறைவே
தரும்பர போக சித்தியுஞ் சுத்த
தருமமு முத்தியுஞ் சார்ந்து
விரும்பினோர்க் களிக்கும் வள்ளலே சித்தி
விநாயக விக்கினேச் சுரனே. 12

திருச்சிற்றம்பலம்

Koviloor Digital Library

2. வல்லபை கணேசர் பிரசாதமாலை

எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

திருநெடு மாலன் முலிடை நினது
சேவடித் துணைமலர்த் துகளான்
பெருநெடு மேனி தளிர்படப் பாம்பின்
பேருரு வகன்றமை மறவேன்
கருநெடுங் கடலைக் கடற்றுநற் றுணையே
கங்கணூன் றுடையசெங் கரும்பே
வருநெடு மருப்பொன் றிலகுவா ரணமே
வல்லபைக் கணேசமா மணியே. 1

நளினமா மலர்வாழ் நான்முகத் தொருவன்
நண்ணிநின் றுணையடி வழுத்திக்
களிநல னுடனிவ் வுலகெலாம் படைக்கக்
கடைக்கணித் ததையுள மறவேன்
அளிநல னுறுபே ரானந்தக் கடலே
அருமருந் தேயரு ளமுதே
வளிநிறை புலருக் கொருபெருந் துணையே
வல்லபைக் கணேசமா மணியே. 2

சீருருந் திரமூர்த் திகட்குமுத் தொழிலுஞ்
செய்தரு ளிறைமைதந் தருளிற்
பேருருத் திரங்கொண் டிடச்செய நினது
பெருமையை நாடொறு மறவேன்
ஆருருத் திடினு மஞ்சுதல் செய்யா
ஆண்மையெற் கருளிய வரசே
வாருருத் திடுபூண் மணிமுகக் கொங்கை
வல்லபைக் கணேசமா மணியே. 3

விண்ணவர் புகழு மெய்கண்ட நாதன்
வித்தகக் கபிலனு தியர்க்கே
கண்ணருள் செயுநின் பெருமையை யடியேன்
கனவிலு நனவிலு மறவேன்
தண்ணருட் கடலே யருட்சிவ போக
சாரமே சராசர நிறைவே
வண்ணமா மேனிப் பரசிவ களிறே
வல்லபைக் கணேசமா மணியே. 4

நாரையூர் நம்பி யமுதுகொண் டுட்ட
நற்றிரு வாய்மலர்ந் தருளிச்
சீரைமே வுறச்செய் தளித்திடு நினது
திருவரு ளுடொறு மறவேன்

Koviloor Digital Library

தேரையூர் வாழ்வுந் திரமல வெனாநற்
றிடமெனக் கருளிய வாழ்வே
வாரையூர் முலையாண் மங்கைநா யகியெம்
வல்லபைக் கணேசமா மணியே. 5

கும்பமா முனியின் கரகநீர்க் கவிழ்த்துக்
குளிர்மலர் நந்தனங் காத்துச்
செம்பொனாட் டிறைவற் கருளிய நினது
திருவருட் பெருமையை மறவேன்
நம்பனார்க் கினிய வருண்மகப் பேறே
நற்குணத் தோர்பெரு வாழ்வே
வம்பறு மலர்த்தார் மழைமுகிற் கூந்தல்
வல்லபைக் கணேசமா மணியே. 6

அயன்றவத் தீன்ற சித்திபுத் திகளாம்
அம்மைய ரிருவரை மணந்தே
இயன்றவண் டங்கள் வாழ்வுறச் செயுநின்
எழின்மணக் கோலத்தை மறவேன்
பயன்றருங் கருணைக் கற்பகத் தருவே
பரசிவத் தெழும்பரம் பரமே
வயன்றரு நிமல நித்தியப் பொருளே
வல்லபைக் கணேசமா மணியே. 7

முன்னருந் தவத்தோன் முற்கலன் முதலா
முனிவர்க ளினிதுவீ டடைய
இன்னருள் புரியு நின்னருட் பெருமை
இரவினும் பகலினு மறவேன்
என்னரும் பொருளே யென்னுயிர்க் குயிரே
என்னர சேயென துறவே
மன்னரு நெறியின் மன்னிய வறிவே
வல்லபைக் கணேசமா மணியே. 8

துதிபெறுங் காசி நகரிடத் தனந்தந்
தூயநல் லுருவுகொண் டாங்கண்
விதிபெறு மனைக டொறும்விருந் தினனாய்
மேவிய கருணையை மறவேன்
நதிபெறுஞ் சடிலப் பவளநற் குன்றே
நான்மறை நாடரு நலமே
மதிபெறு முளத்திற் பதிபெறுஞ் சிவமே
வல்லபைக் கணேசமா மணியே. 9

தடக்கைமா முகமு முக்கணும் பவளச்
சடிலமுஞ் சதுர்ப்புயங் களுங்கை
இடக்கையங் குசமும் பாசமும் பதமும்
இறைப்பொழு தேனும்யான் மறவேன்

Koviloor Digital Library

விடக்கள முடைய வித்தகப் பெருமான்
மிகமகிழ்ந் திடவருட் பேறே
மடக்கொடி நங்கை மங்கைநா யகியெம்
வல்லபைக் கணேசமா மணியே. 10

பெருவய லாறு முகனக லமர்ந்துன்
பெருமைகள் பேசிடத் தினமுந்
திருவளர் மேன்மைத் திறமுறச் சூழுந்
திருவருட் பெருமையை மறவேன்
மருவளர் தெய்வக் கற்பக மலரே
மனமொழி கடந்தவான் பொருளே
வருமலை வல்லிக் கொருமுதற் பேறே
வல்லபைக் கணேசமா மணியே. 11

திருச்சிற்றம்பலம்

3. கணேசத் திருவருள் மாலை

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

திருவுங் கல்வியுஞ் சீருஞ் சிறப்புமுன்
திருவ டிப்புகழ் பாடுந் திறமுநல்
உருவுஞ் சீலமு மூக்கமுந் தாழ்வுறு
உணர்வுந் தந்தெனை துள்ளத் தமர்ந்தவா
குருவுந் தெய்வமு மாகியன் பாளர்தங்
குறைத வீர்க்குங் குணப்பெருங் குன்றமே
வெருவுஞ் சிந்தை விலகக் கஜானனம்
விளங்குஞ் சித்தி விநாயக வள்ளலே. 1

சீத நாண்மலர்ச் செல்வனு மாமலர்ச்
செல்வி மார்பகச் செல்வனுங் காண்கிலாப்
பாத நாடொறும் பற்றறப் பற்றுவோர்
பாத நாடப் பரிந்தருள் பாலிப்பாய்
நாத நாடிய வந்தத்தி லோங்குமெய்ஞ்
ஞான நாடக நாயக நான்கெனும்
வேத நாடிய மெய்ப்பொரு ளேயருள்
விளங்குஞ் சித்தி விநாயக வள்ளலே. 2

என்னை வேண்டி யெனக்கருள் செய்தியேல்
இன்னல் நீங்குநல் லின்பமு மோங்குநின்
றன்னை வேண்டிச் சரண்புகுந் தேனென்னைத்
தாங்கிக் கொள்ளுஞ் சரண்பிறி தில்லைகாண்
அன்னை வேண்டி யழுமகப் போல்கின்றேன்
அறிகி லேனின் திருவுள மையனே
மின்னை வேண்டிய செஞ்சடை யாளனே
விளங்குஞ் சித்தி விநாயக வள்ளலே. 3

Koviloor Digital Library

நீண்ட மாலர வாகிக் கிடந்துநின்
நேயத் தால்கலி நீங்கிய வாறுகேட்(டு)
ஆண்ட வாநின் னடைக்கல மாயினேன்
அடிய னேன்பிழை யாயிர மும்பொறுத்(து)
ஈண்ட வாவின் படிகொடுத் தென்னைநீ
ஏன்று கொள்வதற் கெண்ணுதி யாவரும்
வேண்டு வாழ்வு தரும்பெருந் தெய்வமே
விளங்குஞ் சித்தி விநாயக வள்ளலே. 4

தஞ்ச மென்றுனைச் சார்ந்தன னெந்தைநீ
தானு மிந்தச் செகத்தவர் போலவே
வஞ்ச மெண்ணி யிருந்திடி லென்செய்வேன்
வஞ்ச மற்ற மனத்துறை யண்ணலே
பஞ்ச பாதகந் தீர்த்தனை யென்றுநின்
பாத பங்கயம் பற்றினன் பாவியேன்
விஞ்ச நல்லருள் வேண்டித் தருதியோ
விளங்குஞ் சித்தி விநாயக வள்ளலே. 5

கள்ள நெஞ்சக னுயினு மையநான்
கள்ள மின்றிக் கழறுகின் றேனென(து)
உள்ள நின்றிரு வுள்ள மறியுமே
ஓது கின்றதென் போது கழித்திடேல்
வள்ள மாமலர்ப் பாதப் பெரும்புகழ்
வாழ்த்தி நாத்தழும் பேற வழங்குவாய்
வெள்ள வேணிப் பெருந்தகை யேயருள்
விளங்குஞ் சித்தி விநாயக வள்ளலே. 6

மண்ணி லாசை மயக்கற வேண்டிய
மாத வர்க்கு மதிப்பரி யாயுனை
எண்ணி லாச்சிறி யேனையு முன்னின்றே
ஏன்று கொண்டனை யின்று விடுத்தியோ
உண்ணி லாவிய நின்றிரு வுள்ளமும்
ஆசை யோடுவர்ப் புங்கொள வொண்ணுமோ
வெண்ணி லாமுடிப் புண்ணிய மூர்த்தியே
விளங்குஞ் சித்தி விநாயக வள்ளலே. 7

ஆணி லேயன்றி யாருயிர்ப் பெண்ணிலே
அலியி லேயிவ் வடியனைப் போலவே
காணி லேனொரு பாவியை யிப்பெருங்
கள்ள நெஞ்சக் கடையனை யானையா
ஏணி லேயிட ரெய்த விடுத்தியேல்
என்செய் கேனினி யிவ்வுல கத்திலே
வீணி லேயுழைப் பேனரு ளையனே
விளங்குஞ் சித்தி விநாயக வள்ளலே. 8

Koviloor Digital Library

வாளி லேவிழி மங்கையர் கொங்கையாம்
மலையி லேமுக மாயத்தி லேயவர்
தோளி லேயிடைச் சூழலி லேயுந்திச்
சுழியி லேநிதஞ் சுற்றுமென் னெஞ்சநின்
தாளி லேநின்ற னித்த புகழிலே
தங்கும் வண்ணந் தரவுளஞ் செய்தியோ
வேளி லேயழ கானசெவ் வேளின்முன்
விளங்குஞ் சித்தி விநாயக வள்ளலே. 9

நாவி னாலுனை நாடொறும் பாடுவோர்
நாடு வார்தமை நண்ணிப் புகழவும்
ஓவி லாதுனைப் பாடவுந் துன்பெலாம்
ஓட வும்மகி ழோங்கவுஞ் செய்குவாய்
காவி நேர்களத் தான்மகி ழைங்கரக்
கடவு ளேநற் கருங்குழி யென்னுமூர்
மேவி யன்பர்க் கருள்கண நாதனே
விளங்குஞ் சித்தி விநாயக வள்ளலே. 10

திருச்சிற்றம்பலம்

4. தனித்திருமாலை

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

திங்களங் கொழுந்து வேய்ந்த செஞ்சடைக் கொழுந்தே போற்றி
மங்கை வல்லபைக்கு வாய்த்த மகிணநின் மலர்த்தாள் போற்றி
ஐங்கர நால்வாய் முக்கண் ணருட்சிவ களிறே போற்றி
கங்கையாய் மகிழுஞ் செல்வக் கணேசநின் கழல்கள் போற்றி. 1

கலிவண்ணத் துறை

உலகம் பரவும் பொருளென் கோவென் னுறவென்கோ
கலகம் பெறுமைம் புலன்வென் றுயருங் கதியென்கோ
திலகம் பெறுநெய் யெனநின் றிலகுஞ் சிவமென்கோ
இலகைங் கரவெம் பரநின் றனையென் னென்கேனே. 2

அடியா ருள்ளந் தித்தித் தூறு மமுதென்கோ
கடியார் கொன்றைச் செஞ்சடை யானைக் கன்றென்கோ
பொடியார் மேனிப் புண்ணியர் புகழும் பொருளென்கோ
அடிகேள் சித்தி விநாயக வென்னென் றறைகேனே. 3

Koviloor Digital Library

கலித்துறை

[1] **கமலமல** ரயனயநன் முதலமர ரிதயமுறு கரிசகல வருள்செய்பசு பதியாம்
நிமலநிறை மதியிளொளிர் நிரதிசய பரமசுக நிலையையருள் புரியுமதி பதியாம்
விமலபிர ணவவடிவ விகடதட கடகரட விபுலகய முகசுகுண பதியாம்
அமலபர சிவவொளியி னுதயசய விசயசய வபயவெனு மெமதுகண பதியே. 4

கட்டளைக் கலித்துறை

அம்பொன்று செஞ்சடை யப்பரைப் போற்றன் னடியர்தந்துக்
கம்பொன்றும் வண்ணங் கருணைசெய் தாளுங் கருதுமினோ
வம்பொன்று பூங்குழல் வல்லபை யோடு வயங்கியவெண்
கொம்பொன்று கொண்டெமை யாட்கொண் டருளிய குஞ்சரமே.

கலி விருத்தம்

அற்புதக் கணபதி யமல போற்றியே
தற்பர சண்முக சாமி போற்றியே
சிற்பர சிவமகா தேவ போற்றியே
பொற்பமர் கௌரிநிற் போற்றி போற்றியே. 6

அருளுறுங் கயமுகத் தண்ணல் பாதமும்
பொருளுறு சண்முகப் புனிதன் றாள்களும்
தெருளுறு சிவபிரான் செம்பொற் கஞ்சமும்
மருளற நாடொறும் வணங்கி வாழ்த்துவாம். 7

வண்ணக் கலிவிருத்தம்

துதிபெறு கணபதி யிணையடி மலரும்
பதிதரு சரவண பவன்மல ரடியுங்
கதிதரு பரசிவ னியலணி கழலும்
மதியுற மனனிடை மருவுது மிகவே. 8

வண்ண எண்சீர் விருத்தம்

கலைநிறை கணபதி சரணஞ் சரணம்
கஜமுக குணபதி சரணஞ் சரணம்
தலைவநி னிணையடி சரணஞ் சரணம்
சரவண பவகுக சரணஞ் சரணம்
சிலைமலை யுடையவ சரணஞ் சரணம்
சிவசிவ சிவசிவ சரணஞ் சரணம்
உலைவறு மொருபரை சரணஞ் சரணம்
உமைசிவை யம்பிகை சரணஞ் சரணம். 9

திருச்சிற்றம்பலம்

---

1. கமலமலர் அயன்—பிரமன்; கமலமலர் நயநன்—விஷ்ணு (நயநம்-கண்).

Koviloor Digital Library

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

அருட்பெருஞ்ஜோதி

திருத்தணிகைப்பதிகம்

1. பிரார்த்தனைமாலை

கட்டளைக் கலித்துறை

சிவசண்முக சிவஞானதேசிகன் திருவடிவாழ்க

சீர்கொண்ட தெய்வ வதனங்க ளாறுந் திகழ்கடப்பந்
தார்கொண்ட பன்னிரு தோள்களுந் தாமரைத் தாள்களுமோர்
கூர்கொண்ட வேலு மயிலுநற் கோழிக் கொடியுமருட்
கார்கொண்ட வண்மைத் தணிகா சலமுமென் [1]கண்ணுற்றதே. 1

கண்ணுன் றுறுசெங் கரும்பின்முத் தேபதங் கண்டிடுவான்
மண்ணுன் றுலகும் வழுத்தும் பவள மணிக்குன்றமே
திண்ணுன்று நான்கு புயங்கொண் டொளிர்வச் சிரமணியே
வண்ணுன் றலர்மலை வாழ்மயி லேறிய மாணிக்கமே. 2

மாணித்த ஞான மருந்தேயென் கண்ணினுண் மாமணியே
ஆணிப்பொன் னேயென தாருயி ரேதணி காசலனே
தாணிற்கி லேனினைத் தாழாத வஞ்சர் தமதிடம்போய்ப்
பேணித் திரிந்தன னந்தோவென் செய்வனிப் பேதையனே. 3

அன்னே யெனைத்தந்த வப்பாவென் றேங்கி யலறுகின்றேன்
என்னேயிவ் வேழைக் கிரங்காது நீட்டித் திருத்தலென்தாய்
பொன்னே சுகுணப் பொருப்பே தணிகைப் பொருப்பமர்ந்த
மன்னே கலப மயின்மே லழகிய மாமணியே. 4

மணியே தினைப்புன வல்லியை வேண்டி வளர்மறைவான்
கணியே யெனநின்ற கண்ணே யென்னுள்ளக் களிநறவே
பணியே னெனினு மெனைவலிந் தாண்டுன் பதந்தரவே
நணியே தணிகைக்கு வாவென வோர்மொழி நல்குவையே. 5

நல்காத வீனர்தம் பாற்சென் றிரந்து நவைப்படுதன்
மல்காத வண்ண மருள்செய்கண் டாய்மயில் வாகனனே
புல்காத நீக்கிய நல்லோர்க் கருளும் பரஞ்சுடரே
அல்காத வண்மைத் தணிகா சலத்தி லமர்ந்தவனே. 6

1. கண்ணுற்றதென்பது — ஒருமை பன்மை மயக்கம்.

Koviloor Digital Library

அமரா வதியிறைக் காருயி ரீந்த வருட்குன்றமே
சமரா புரிக்கர சேதணி காசலத் தற்பரனே
குமரா பரம குருவே குகாவெனக் கூவிநிற்பேன்
எமராஜன் வந்திடுங் காலைய னேயெனை யேன்றுகொள்ளே. 7

கொள்ளுண்ட வஞ்சர்தங் கூட்டுண்டு வாழ்க்கையிற் குட்டுண்டுமேல்
துள்ளுண்ட நோயினிற் சூடுண்டு மங்கையர் தோய்வெனுமோர்
கள்ளுண்ட நாய்க்குன் கருணையுண் டோநற் கடலமுதத்
தெள்ளுண்ட தேவர் புகழ்தணி காசலச் சிற்பரனே. 8

சிற்பகன் மேவுமித் தேகத்தை யோம்பித் திருவனையார்
[1]தற்பக மேவிழைந் தாழ்ந்தேன் தணிகை தனிலமர்ந்த
கற்பக மேநின் கழல்கரு தேனிக் கடைப்படுமென்
பொற்பக மேவிய நின்னரு ளென்னென்று போற்றுவதே. 9

போற்றே னெனினும் பொறுத்திடல் வேண்டும் புவிநடையாஞ்
சேற்றே விழுந்து தியங்குகின் றேனைச் சிறிதுமினி
ஆற்றே னெனதர சேயமு தேயெ னருட்செல்வமே
மேற்றேன் பெருகு பொழிற்றணி காசல வேலவனே. 10

வேல்கொண்ட கையும் விறல்கொண்ட தோளும் விளங்குமயின்
மேல்கொண்ட வீறு மலர்முக மாறும் விரைக்கமலக்
கால்கொண்ட வீரக் கழலுங்கண் டாலன்றிக் காமனெய்யுங்
கோல்கொண்ட வன்மை யறுமோ தணிகைக் குருபரனே. 11

குருவே யயனரி யாதியர் போற்றக் குறைதவிர்ப்பான்
வருவேல் பிடித்து மகிழ்வள்ள லேகுண மாமலையே
தருவே தணிகைத் தயாநிதி யேதுன்பச் சாகரமாங்
கருவே ரறுத்திக் கடையனைக் காக்கக் கடனுனக்கே. 12

உனக்கே விழைவுகொண் டோலமிட் டோங்கி புலறுகின்றேன்
எனக்கே யருளித் தமியேன் பிழையுளத் தெண்ணியிடேல்
புனக்கேழ் மணிவல்லி யைப்புணர்ந் தாண்டருள் புண்ணியனே
மனக்கேத மாற்றுந் தணிகா சலத்தமர் வானவனே. 13

வானோர் குடிகளை வாழ்வித்த தெய்வ மணிச்சுடரே
நானோ ரெளியனென் றுன்பறுத் தாளென நண்ணிநின்றேன்
ஏனோநின் னெஞ்ச மிரங்காத வண்ண மிருங்கணிப்பூந்
தேனோ டருவி பயிலுந் தணிகைச் சிவகுருவே. 14

கையாத துன்பக் கடன்மூழ்கி நெஞ்சங் கலங்கியென்றன்
ஐயாநின் பொன்னடிக் கோலமிட் டேனென்னை யாண்டுகொளாய்
மையார் தடங்கண் மலைமகள் கண்டு மகிழ்செல்வமே
செய்யார் தணிகை மலையர சேயயிற் செங்கையனே. 15

1. **தன்** என்பது — அசைநிலை.

Koviloor Digital Library

செங்கையங் காந்த ளனையமின் னார்தந் திறத்துழன்றே
வெங்கய முண்ட விளவாயி னேன்விறல் வேலினையோர்
அங்கையி லேந்திய வையா குறவ ரரிதிற்பெற்ற
மங்கை மகிழுந் தணிகேச னேயருள் வந்தெனக்கே. 16

கேளாது போலிருக் கின்றனை யேழையிக் கீழ்நடையில்
வாளா விடர்கொண் டலறிடு மோலத்தை மாமருந்தே
தோளா மணிச்சுட ரேதணி காசலத் தாய்ப்பொருளோ
நாளாயி னென்செய்கு வேனிறப் பாய நவைவருமே. 17

நவையே தருவஞ்ச நெஞ்சக மாயவு நானுன்னன்பர்
அவையே யணுகவு மானந்த வாரியி லாடிடவுஞ்
சுவையே யமுதன்ன நின்றிரு நாமந் துதிக்கவுமாம்
இவையேயென் னெண்ணந் தணிகா சலத்து ளிருப்பவனே. 18

இருப்பாய மாய மனத்தால் வருந்தி யிளைத்துநின்றேன்
பொருட்பாய கன்மப் புதுவாழ்வி லாழ்ந்தது போதுமின்றே
கருப்பாழ் செயுமுன் கழலடிக் கேயிக் கடையவனைத்
திருப்பா யெனிலென்செய் கேன்றணி காசலத் தெள்ளமுதே. 19

தெள்ளகத் தோங்கிய செஞ்சுட ரேசிவ தேசிகனே
கள்ளகத் தேமலர்க் காவார் தணிகையெங் கண்மணியே
எள்ளகத் தேயுமுன் றென்னின் றலைத்தெழுந் திங்குமங்குந்
துள்ளகத் தேன்சிரஞ் சேருங்கொ லோநின் றுணையடியே. 20

அடியே னெனச்சொல்வ தல்லானின் ருளடைந் தாரைக்கண்டே
துடியேன் அருண கிரிபாடு நின்னரு டோய்புகழைப்
படியேன் பதைத்துரு கேன்பணி யேன்மனப் பந்தமெலாங்
கடியேன் றணிகையைக் காணேனென் செய்வெனெங் காதலனே.

தலனே யடியர் தனிமன மாம்புகழ் சார்தணிகா
சலனே யயனரி யாதியர் வாழ்ந்திடத் தாங்கயில்வேல்
வலனேநின் பொன்னருள் வாரியின் மூழ்க மனோலயம்வாய்ந்
திலனேல் சனன மரணமென் னுங்கடற் கென்செய்வனே. 22

என்செய்கை யென்செய்கை யெந்தாய்நின் பொன்னடிக் கேயலங்கல்
வன்செய்கை நீங்க மகிழ்ந்தணி யேன்றுதி வாயுரைக்க
மென்செய்கை கூப்ப விழிநீர் துளித்திட மெய்சிலிர்க்கத்
தன்செய்கை யென்பதற் றேதணி காசலஞ் சார்ந்திலனே. 23

சாருந் தணிகையிற் சார்ந்தோய்நின் றுமரைத் தாட்டுணையைச்
சேருந் தொழும்பர் திருப்பத மன்றியிச் சிற்றடியேன்
ஊருந் தனமு முறவும் புகழு முரைமடவார்
வாருந் தணிமுலைப் போகமும் வேண்டிலன் மண்விண்ணிலே.

Koviloor Digital Library

மண்ணீ ரனல்வளி யாஞகி நின்றருள் வத்துவென்றே
தெண்ணீர்மை யாற்புகழ் மாலய னேமுதற் றேவர்கடங்
கண்ணீர் தொடைத்தருள் கற்பக மேயுனைக் கண்டுகொண்டேன்
தண்ணீர் பொழிற்கண் மதிவந்து லாவுந் தணிகையிலே. 25

தணியாத துன்பத் தடங்கட னீங்கநின் றன்மலர்த்தாட்
பணியாத பாவிக் கருளுமுண் டோபசு பாசமற்றோர்க்(கு)
அணியாக நின்ற வருட்செல்வ மேதணி காசலனே
அணியா தவன்முத லாமட்ட மூர்த்த மடைந்தவனே. 26

அடையாத வஞ்சகர் பாற்சென் றிரந்திங் கலைந்தலைந்தே
கடையான நாய்க்குன் கருணையுண் டோதணி கைக்குணின்றே
உடையாத நன்னெஞ்சர்க் குண்மையைக் காண்பிக்கு முத்தமனே
படையாத தேவர் சிறைமீட் டளித்தருள் பண்ணவனே. 27

பண்ணவ னேநின் பதமல ரேத்தும் பயனுடையோர்
கண்ணவ னேதணி காசல னேயயிற் கையவனே
விண்ணவ ரேத்திய மேலவ னேமயன் மேவுமனம்
புண்ணவ னேனையுஞ் சேர்ந்தாயென் னேயுன்றன் பொன்னருளே.

பொன்னூர் புயத்தனும் பூவுடை யோனும் புகழ்மணியே
என்னுயி யின்றுணை யேதணி காசலத் தேயமர்ந்த
மன்னுநின் பொன்னடி வாழ்த்தாது வீணில் வருந்துறுவேன்
இன்னு வியற்று மியமன்வந் தாலவற் கென்சொல்வனே. 29

சொல்லார் மலர்புனை யன்பகத் தோர்க்கருள் சொல்லுமெல்லாம்
வல்லாயென் றேத்த வறிந்தே னினியென்றன் வல்வினைகள்
எல்லாம் விடைகொண் டிரியுமென் மேலிய மன்சினமுஞ்
செல்லாது காணைய னேதணி காசலச் சீரரசே. 30

சிவசண்முக சிவஞானதேசிகன் திருவடிவாழ்க

2. எண்ணப்பத்து

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

சிவசண்முக சிவஞானதேசிகன் திருவடிவாழ்க

அணிகொள் வேலுடை யண்ணலே நின்றிரு வடிகளை யன்போடும்
பணிகி லேனக முருகிநின் ருடிலேன் பாடிலேன் மனமாயைத்
தணிகி லேன்றிருத் தணிகையை நினைகிலேன் சாமிநின் வழிபோதத்
துணிகி லேனிருந் தென்செய்தேன் பாவியேன் றுன்பமு மெஞ்சேனே. 1

சேல்பி டித்தவன் றந்தையா தியர்தொழுந் தெய்வமே சிவப்பேறே
மால்பி டித்தவ ரறியொணுத் தணிகைமா மலையமர்ந் திடுவாழ்வே
வேல்பி டித்தருள் வள்ளலே யான்சதுர் வேதமுங் காணுநின்
கால்பி டிக்கவுங் கருணைநீ செய்யவுங் கண்டுகண் களிப்பேனே. 2

Koviloor Digital Library

களித்து நின்றிருக் கழலிணை யேழையேன் காண்பனோ வலதன்பை
ஒளித்து வன்றுய ருழப்பனோ வின்னதென் றுணர்ந்திலே னருட்போதந்
தெளித்து நின்றிடுந் தேசிக வடிவமே தேவர்கள் பணிதேவே
தளிர்த்த தண்பொழிற் றணிகையில் வளர்சிவ தாருவே மயிலோனே. 3

மயிலின் மீதுவந் தருடரு நின்றிரு வரவினுக் கெதிர்பார்க்குஞ்
செயலி னேன்கருத் தெவ்வண முடியுமோ தெரிகிலே னென்செய்கேன்
அயிலின் மாமுத றடிந்திடு மையனே யாறுமா முகத்தேவே
கயிலை நேர்திருத் தணிகையம் பதிதனிற் கந்தனென் றிருப்போனே. 4

இருப்பு நெஞ்சகக் கொடியனேன் பிழைதனை யெண்ணுறே லினிவஞ்சக்
கருப்பு காவணங் காத்தரு ளையனே கருணையங் கடலேயென்
விருப்பு ளூறிநின் றோங்கிய வமுதமே வேலுடை யெம்மானே
தருப்பு காவினன் விலகுறுந் தணிகைவாழ் சாந்தசற் குணக்குன்றே. 5

குன்று நேர்பிணித் துயரினால் வருந்திநின் குறைகழல் கருதாத
துன்று வஞ்சகக் கள்ளனே னெஞ்சகத் துயரறுத் தருள்செய்வான்
இன்று மாமயின் மீதினி லேறியிவ் வேழைமுன் வருவாயேல்
நன்று நன்றதற் கென்சொல்வார் தணிகைவாழ் நாதநின் னடியாரே. 6

யாரை யுந்துணை கொண்டிலே னின்னடி யிணைதுணை யல்லானின்
பேரை யுன்னிவாழ்ந் திடும்படி செய்வையோ பேதுறச் செய்வாயோ
பாரை யும்முயிர்ப் பரப்பையும் படைத்தருள் பகவனே யுலகேத்துஞ்
சீரை யுற்றிடுந் தணிகையங் கடவுணின் றிருவுள மறியேனே. 7

உளங்கொள் வஞ்சக நெஞ்சர்த மிடமிட ருழந்தக முலைவுற்றேன்
வளங்கொள் நின்பத மலர்களை நாடோறும் வாழ்த்திலே னென்செய்கேன்
குளங்கொள் கண்ணனுங் கண்ணனும் பிரமனுங் குறிக்கரும் பெருவாழ்வே
தளங்கொள் பொய்கைசூழ் தணிகையம் பதியில்வாழ் தனிப்பெரும் புகழ்த்தேவே

தேவர் நாயக னாகியே யென்மனச் சிலைதனி லமர்ந்தோனே
மூவர் நாயக னெனமறை வாழ்த்திடு முத்தியின் வித்தேயிங்(கு)
ஏவ ராயினு நின்றிருத் தணிகைசென் றிறைஞ்சிடி னவரேயென்
பாவ நாசஞ்செய் தென்றனை யாட்கொளும் பரஞ்சுடர் கண்டாயே. 9

கண்ட னேகவா னவர்தொழு நின்றிருக் கழலிணை தனக்காசை
கொண்ட னேகமாய்த் தெண்டனிட் டானந்தக் கூத்தினை யுகந்தாடித்
தொண்ட னேனுநின் னடியரிற் செறிவனோ துயருழந் தலைவேனோ
அண்ட னேதிருத் தணிகைவா முன்னாலே யணிகொள்வேற் கரத்தோனே. 10

சிவசண்முக சிவஞானதேசிகன் திருவடிவாழ்க

Koviloor Digital Library

3. செழுஞ்சுடர் மாலை

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

சிவசண்முக சிவஞானதேசிகன் திருவடிவாழ்க

ஊணே யுடையே பொருளேயென் றுருகி மனது தடுமாறி
வீணே துயரத் தழுந்துகின்றேன் வேறோர் துணைநின் னடியன்றிக்
காணே னமுதே பெருங்கருணைக் கடலே கனியே கரும்பேநற்
சேணோர் தணிகை மலைமருந்தே தேனே ஞானச் செழுஞ்சுடரே. 1

பாரும் விசும்பு மறியவெனைப் பயந்த தாயுந் தந்தையுநீ
ஓரும் போதிங் கெனிலெளியே னுயாத் துயருற் றிடனன்றோ
யாருங் காண வுணவாதுக் கிழுப்பே னன்றி யென்செய்கேன்
சேருந் தணிகை மலைமருந்தே தேனே ஞானச் செழுஞ்சுடரே. 2

கஞ்சன் றுதிக்கும் பொருளேயென் கண்ணே நின்னைக் கருதாத
வஞ்சர் கொடிய முகம்பார்க்க மாட்டே னினியென் வருத்தமறுத்
தஞ்ச லெனவந் தருளாயே லாற்றேன் கண்டா யடியேனே
செஞ்சந் தனஞ்சேர் தணிகைமலைத் தேனே ஞானச் செழுஞ்சுடரே, 3

மின்னே ருலக நடையதனுள் மேவுந் துயருக் காளாகிக்
கன்னேர் மனத்தே னினைமறந்தேன் கண்டேன் கண்டாய் கற்பகமே
பொன்னே கடவுண் மாமணியே போதப் பொருளே பூரணமே
தென்னேர் தணிகை மலையரசே தேவே ஞானச் செழுஞ்சுடரே. 4

வளைத்தே வருத்தும் பெருந்துயரால் வாடிச் சவலை மகவாகி
இளைத்தேன் தேற்றுந் துணைகாணே னென்செய் துய்கே னெந்தாயே
விளைத்தே னுழுகு மலர்த்தருவே விண்ணே விழிக்கு விருந்தேசீர்
திளைத்தோர் பரவுந் திருத்தணிகைத் தேவே ஞானச் செழுஞ்சுடரே. 5

அடுத்தே வருத்துந் துயர்க்கடலி லறியா தந்தோ விழுந்திட்டேன்
எடுத்தே விடுவார் தமைக்காணே னெந்தா யெளியே னென்செய்கேன்
கடுத்தேர் கண்டத் தெம்மான்றன் கண்ணே தருமக் கடலேயென்
செடித்தீர் தணிகை மலைப்பொருளே தேனே ஞானச் செழுஞ்சுடரே. 6

உண்டாற் குறையு மெனப்பசிக்கு முலுத்த ரசுத்த முகத்தையெதிர்
கண்டால் நடுங்கி யொதுங்காது கடைகாத் திரந்து கழிக்கின்றேன்
கொண்டா ரடியர் நின்னருளை யானோ வொருவன் குறைபட்டேன்
திண்டா ரணிவேற் றணிகைமலைத் தேவே ஞானச் செழுஞ்சுடரே. 7

வேட்டே னினது திருவருளை வினையே னினியித் துயர்பொறுக்க
மாட்டேன் மணியே யன்னேயென் மன்னே வாழ்க்கை மாட்டுமனம்
நாட்டே னயன்மா லெதிர்வரினு நயக்கே னெனக்கு நல்காயோ
சேட்டே னலரும் பொழிற்றணிகைத் தேவே ஞானச் செழுஞ்சுடரே. 8

Koviloor Digital Library

கல்லா நாயே னெனினுமெனைக் காக்குந் தாய்நீ யென்றுலகம்
எல்லா மறியு மாதலினு லெந்தா யருளா திருத்தியெனிற்
பொல்லாப் பழிவந் தடையுமுனக் கரசே யினியான் புகல்வதென்னே
செல்லார் பொழில்சூழ் திருத்தணிகைத் தேவே ஞானச் செழுஞ்சுடரே. 9

அன்னே யப்பா வெனஇனருட் கார்வங் கூர்ந்திங் கலேகின்றேன்
என்னே சற்று மிரங்கிலைநீ யென்னெஞ் சோநின் னன்னெஞ்சம்
மன்னே யொளிகொண் மாணிக்க மணியே குணப்பொன் மலையேநற்
றென்னேர் பொழில்சூழ் திருத்தணிகைத் தேவே ஞானச் செழுஞ்சுடரே.10

நடையேய் துயரான் மெலிந்துநினை நாடா துழலு நாயேனுங்
கடையே னெனினுங் காத்தலென்றன் கண்ணே நினது கடனன்றோ
தடையேன் வருவாய் வந்துனருள் தருவா யிதுவே சமயங்காண்
செடிதீர்த் தருளுந் திருத்தணிகைத் தேவே ஞானச் செழுஞ்சுடரே. 11

சிவசண்முக சிவஞானதேசிகன் திருவடிவாழ்க

4. குறையிரந்த பத்து

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

சிவசண்முக சிவஞானதேசிகன் திருவடிவாழ்க

சீர்பூத்த வருட்கடலே கரும்பே தேனே
செம்பாகே யெனதுகுல தெய்வ மேநற்
கூர்பூத்த வேன்மலர்க்கை யரசே சாந்த
குணக்குன்றே தணிகைமலைக் கோவே ஞானப்
பேர்பூத்த நின்புகழைக் கருதி யேழை
பிழைக்கவருள் செய்வாயோ பிழையை நோக்கிப்
பார்பூத்த பவத்திலுற விடினென் செய்கேன்
பாவியே னந்தோவென் பயந்தீ ரேனே. 1

தீராத துயர்க்கடலி லழுந்தி நாளுந்
தியங்கியெழு தேங்குறிந்தச் சேய்க்கு நீகண்
பாராத செயலென்னே யெந்தா யெந்தாய்
பாவியென விட்டனையோ பன்னு ளாக
ஏராய வருள்தருவா யென்றே யேமாந்
திருந்தேனே யென்செய்கேன் யாரு மில்லேன்
சீராருந் தணிகைவரை யமுதே யாதி
தெய்வமே நின்கருத்தைத் தெளிந்தி லேனே. 2

தெளிக்குமறைப் பொருளேயென் னன்பே யென்றன்
செல்வமே திருத்தணிகைத் தேவே யன்பர்
களிக்குமறைக் கருத்தேமெய்ஞ் ஞான நீதிக்
கடலேநின் னருளைக் காணே னின்னும்

Koviloor Digital Library

சுளிக்குமிடித் துயரும்யமன் கயிறு மீனத்
தொடர்புமலத் தடர்புமனச் சோர்வு மந்தோ
அளிக்குமெனை யென்செயுமோ வறியே னின்றன்
அடித்துணையே யுறுதுணைமற் றன்றி யுண்டோ. 3

உண்டாய வுலகுயிர்கள் தம்மைக் காக்க
ஒளித்திருந்தவ் வுயிர்வினைக ளொருங்கே நாளுங்
கண்டாயே யிவ்வேழை கலங்குந் தன்மை
காணாயோ டன்னிரண்டு கண்கள் கொண்டோய்
தண்டாத நின்னருட்குத் தகுமோ விட்டால்
தருமமோ தணிகைவரைத் தலத்தின் வாழ்வே
விண்டாதி தேவர்தொழு முதலே முத்தி
வித்தேசொற் பதங்கடந்த வேற்கை யானே. 4

கையாத அன்புடையா ரங்கை மேவுங்
கனியேயென் னுயிரேயென் கண்ணே யென்றும்
பொய்யாத பூரணமே தணிகை ஞானப்
பொருளேநின் பொன்னருளிப் போதுயான் பெற்றால்
உய்யாத குறையுண்டோ துயர்சொல் லாமல்
ஓடுமே யமன்பாச மோய்ந்து போமென்
ஐயாநின் னடியரொடு வாழ்கு வேனிங்
காருணையல் லாலெனக்கின் றருள்செய் வாயே. 5

வாய்க்குமுன தருளென்றே யந்தோ நாளும்
வழிபார்த்திங் கிளைக்கின்றேன் வருத்தும் பொல்லா
நோய்க்குமுறு துயர்க்குமிலக் கானேன் மாழ்கி
நொந்தேனின் னருள்காணே னுவலும் பாசத்
தேய்க்குமவன் வரிலவனுக்கு யாது சொல்வேன்
என்செய்கேன் றுணையறியா வேழை யேனே
தூய்க்குமர குருவேதென் றணிகை மேவுஞ்
சோதியே யிரங்காயோ தொழும்பா ளற்கே. 6

ஆளாயோ துயரளக்கர் வீழ்ந்து மாழ்கி
ஐயாவோ வென்முறையை யந்தோ சற்றுங்
கேளாயோ யென்செய்கே னெந்தா யன்பர்
கிளத்துமுன தருளெனக்குக் கிடையா தாகில்
நாளாயோர் நடுவன்வரி லென்செய் வானோ
நாயினே னென்சொல்வே னுனு வேனோ
தோளாவோர் மணியேதென் றணிகை மேவுஞ்
சுடரேயென் னறிவேசிற் சுகங்கொள் வாழ்வே. 7

வாழ்வேநற் பொருளேநன் மருந்தே ஞான
வாரிதியே தணிகைமலை வள்ளலேயான்
பாழ்வேலை யெனுங்கொடிய துயருண் மாழ்கிப்
பதைத்தையா முறையோநின் பதத்துக் கென்றே

Koviloor Digital Library

தாழ்வேனீ தறிந்திலையே நாயேன் மட்டுந்
தயவிலையோ நான்பாவி தானோ பார்க்குள்
ஆழ்வேனென் றயல்விட்டா னீதி யேயோ
அச்சோவிங் கென்செய்கே னண்ணு லண்ணல். 8

அண்ணலே நின்னடியை யன்றி வேறோர்
ஆதரவிங் கறியேனெஞ் சழிந்து துன்பாற்
புண்ணுவேன் றன்னையின்னும் வஞ்சர் பாற்போய்ப்
புலந்துமுக வாட்டமுடன் புலம்பி நிற்கப்
பண்ணுதே யாவனிவன் பாவிக் குள்ளும்
படுபாவி யென்றென்னைப் பரிந்து தள்ள
எண்ணுதே யான்மிகவு மேழை கண்டாய்
இசைக்கரிய தணிகையில்வீற் றிருக்குங் கோவே. 9

கோவேநற் றணிகைவரை யமர்ந்த ஞானக்
குலமணியே குகனேசற் குருவே யார்க்குந்
தேவேயென் விண்ணப்ப மொன்று கேண்மோ
சிந்தைதனி னினைக்கவருள் செய்வாய் நாளும்
பூவேயு மயன்றிருமால் புலவர் முற்றும்
போற்றுமெழிற் புரந்தரனைப் புவியு மோங்கச்
சேவேறும் பெருமானிங் கிவர்கள் வாழ்த்தல்
செய்துவக்கு நின்னிரண்டு திருத்தாட் சீரே. 10

சிவசண்முக சிவஞானதேசிகன் திருவடிவாழ்க

5. ஜீவசாக்ஷி மாலை

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

சிவசண்முக சிவஞானதேசிகன் திருவடிவாழ்க

பண்ணேறு மொழியடியர் பரவி வாழ்த்தும்
பாதமல ரழகினையிப் பாவி பார்க்கிற்
கண்ணேறு படுமென்றோ கனவி லேனுங்
காட்டென்றுற் காட்டுகிலாய் கருணை யீதோ
விண்ணேறு மரிமுதலோர்க் கரிய ஞான
விளக்கேயென் கண்ணேமெய் வீட்டின் வித்தே
தண்ணேறு பொழிற்றணிகை மணியே ஜீவ
சாக்ஷியாய் நிறைந்தருளுஞ் சகச வாழ்வே. 1

பண்டுமனந் துவந்துகுணஞ் சிறிது மில்லாப்
பாவியேன் றனையாண்டாய் பரிவா லின்று
கொண்டுகுலம் பேசுதல்போ லெளியேன் குற்றங்
குறித்துவிடி லென்செய்கேன் கொடிய னேனைக்
கண்டுதிருத் தொண்டர்நகை செய்வா ரெந்தாய்
கைவிடே லுன்னுணை காண்மூர்த் தாளும்
தண்டுளவன் புகழ்தணிகை மணியே ஜீவ
சாக்ஷியாய் நிறைந்தருளுஞ் சகச வாழ்வே. 2

Koviloor Digital Library

புன்புலைய வஞ்சகர்பாற் சென்று வீணே
புகழ்ந்துமன மயர்ந்துறுகண் பொருந்திப் பொய்யாம்
வன்புலைய வயிறோம்பிப் பிறவி நோய்க்கு
மருந்தாய நின்னடியை மறந்தே னந்தோ
இன்புலைய வுயிர்கொள்வான் வரிலென் பாலவ்
இயமனுக்கிங் கென்சொல்கே னென்செய் கேனே
தன்புகழ்கா ணருந்தணிகை மணியே ஜீவ
சாக்ஷியாய் நிறைந்தருளுஞ் சகச வாழ்வே. 3

பெருங்களப மூலமடவா ரென்னும் பொல்லாப்
பேய்க்கோட்பட் டாடுகின்ற பித்த னேனுக்(கு)
இரும்புலவர்க் கரியதிரு வருளீ வாயேல்
என்சொல்வா ரடியரதற் கெந்தா யெந்தாய்
கரும்பினிழிந் தொழுகுமருட் சுவையே முக்கட்
கனிகனிந்த தேனேயென் கண்ணே ஞானந்
தரும்புனிதர் புகழ்தணிகை மணியே ஜீவ
சாக்ஷியாய் நிறைந்தருளுஞ் சகச வாழ்வே. 4

கல்லளவா நெஞ்சமென வஞ்ச மாதர்
கண்மாய மெனுங்கயிற்றாற் கட்டு வித்துச்
சொல்லளவாத் துன்பமெனுங் கடலில் வீழ்த்தச்
சோர்கின்றே னந்தோநற் றுணையொன் றில்லேன்
மல்லளவாய்ப் பவமாய்க்கு மருந்தா முன்றன்
மலர்ப்பாதப் புணைதந்தால் மயங்கே னெந்தாய்
[1]சல்லமுலாத் தருந்தணிகை மணியே ஜீவ
சாக்ஷியாய் நிறைந்தருளுஞ் சகச வாழ்வே. 5

அன்னைமுத லாம்பந்தத் தழுங்கி நாளும்
அலைந்துவயி றோம்பிமன மயர்ந்து நாயேன்
முன்னைவினை யாற்படும்பா டெல்லாஞ் சொல்லி
முடியேன்செய் பிழைகருதி முனியே லையா
பொன்னைநிக ரருட்குன்றே யொன்றே முக்கட்
பூமணமே நறவேநற் புலவர் போற்றத்
தன்னைநிகர் தருந்தணிகை மணியே ஜீவ
சாக்ஷியாய் நிறைந்தருளுஞ் சகச வாழ்வே. 6

பன்னரும்வன் றுயரால்நெஞ் சழிந்து நாளும்
பதைத்துருகி நின்னருட்பால் பருகக் கிட்டா(து)
உன்னரும்பொய் வாழ்க்கையெனுங் கானத் திந்த
ஊர்நகைக்கப் பாவியழ லுணர்ந்தி லாயோ
என்னருமை யப்பாவென் னையா வென்றன்
இன்றுயிர்க்குத் தலைவாவிங் கெவர்க்குந் தேவா
தன்னியற்சீர் வளர்தணிகை மணியே ஜீவ
சாக்ஷியாய் நிறைந்தருளுஞ் சகச வாழ்வே. 7

1. சல்லம் என்பது — பன்றிக்கோடு.

Koviloor Digital Library

கோவேநின் பதந்துதியா வஞ்ச நெஞ்சக்
கொடியோர்பான் மனவருத்தங் கொண்டாழ் கின்றேன்
சாவேனு மல்லனின்பொன் னருளைக் காணேன்
தமியேனை யுய்யும்வண்ணந் தருவ தென்றோ
சேவேறுஞ் சிவபெருமா னரிதி னீன்ற
செல்வமே யருண்ஞானத் தேனே யன்பர்
தாவேதந் தெறுந்தணிகை மணியே ஜீவ
சாக்ஷியாய் நிறைந்தருளுஞ் சகச வாழ்வே. 8

ஓயாது வருமிடியான் வஞ்சர் பாற்சென்
றுளங்கலங்கி நாணியிரந் துழன்றென் றுளும்
மாயாத துயரடைந்து வருந்தித் தெய்வ
மருந்தாய நின்னடியை மறந்திட் டேனே
தாயாகித் தந்தையாய்த் தமராய் ஞான
சற்குருவாய்த் தேவாகித் தழைத்த வொன்றே
சாயாத புகழ்த்தணிகை மணியே ஜீவ
சாக்ஷியாய் நிறைந்தருளுஞ் சகச வாழ்வே. 9

மின்னுளு மிடைமடவா ரல்கு லாய
வெங்குழியில் வீழ்ந்தாழ்ந்து மெலிந்தே னல்லால்
எந்நாளு முனைப்போற்றி யறியே னென்னே
ஏழைமதி கொண்டேனிங் கென்செய் கேனே
அன்னுயென் னப்பாவென் றரற்று மன்பர்க்
காரமுதே யருட்கடலே யமரர் கோவே
தன்னூர்வத் தமர்தணிகை மணியே ஜீவ
சாக்ஷியாய் நிறைந்தருளுஞ் சகச வாழ்வே. 10

வன்சொலினு ரிடையடைந்து மாழ்கு மிந்த
மாபாவி யேன்குறையை வகுத்து நாளும்
என்சொலினு மிரங்காம லந்தோ வாளா
விருக்கின்று யென்னேநின் னிரக்க மெந்தாய்
இன்சொலடி யவர்மகிழ மின்ப மேயுள்
இருளகற்றுஞ் செஞ்சுடரே யெவர்க்குங் கோவே
தன்சொல்வளர் தருந்தணிகை மணியே ஜீவ
சாக்ஷியாய் நிறைந்தருளுஞ் சகச வாழ்வே. 11

மீளாத வன்றுயர்கொண் டுனர் தம்மான்
மெலிந்துநினை யழைத்தலறி விம்மா நின்றேன்
கேளாத கேள்வியெலாங் கேட்பிப் பாய்நீ
கேட்கிலையோ வென்னளவிற் கேள்வி யின்றோ
மாளாத தொண்டரக விருளை நீக்கு
மதியேசிற் சுகஞான மழைபெய் விண்ணே
தாளாளர் புகழ்தணிகை மணியே ஜீவ
சாக்ஷியாய் நிறைந்தருளுஞ் சகச வாழ்வே. 12

Koviloor Digital Library

மண்ணினுன் மங்கையராற் பொருளா லந்தோ
வருந்திமன மயங்கிமிக வாடி நின்றேன்
புண்ணியா நின்னருளை யின்னுங் காணேன்
பொறுத்துமுடி யேன்றுயரம் புகல்வ தென்னே
எண்ணினு லளப்பரிய பெரிய மோன
இன்பமே யன்பர்தம திதயத் தோங்குந்
தண்ணினுற் பொழிற்றணிகை மணியே ஜீவ
சாக்ஷியாய் நிறைந்தருளுஞ் சகச வாழ்வே. 13

வஞ்சகராங் கானிடை யடைந்தே நெஞ்சம்
வருந்தியுறு கண்வெயிலான் மாழாந் தந்தோ
தஞ்சமென்பா ரின்றியொரு பாவி நானே
தனித்தருணீர்த் தாகமுற்றேன் தயைசெய் வாயோ
செஞ்சொன்மறை முடிவிளக்கே புண்மை ஞானத்
தேறலே முத்தொழில்செய் தேவர் தேவே
சஞ்சலநீத் தருள்தணிகை மணியே ஜீவ
சாக்ஷியாய் நிறைந்தருளுஞ் சகச வாழ்வே. 14

வாழாத வண்ணமெனைக் கெடுக்கும் பொல்லா
வஞ்சகநெஞ் சாலுலகின் மாழாந் தந்தோ
பாழான மடந்தையர்பாற் சிந்தை வைக்கும்
பாவியேன் முகம்பார்க்கப் படுவ தேயோ
ஏழாய வன்பவத்தை நீக்கு ஞான
இன்பமே யென்னரசே யிறையே சற்றுந்
தாழாத புகழ்த்தணிகை மணியே ஜீவ
சாக்ஷியாய் நிறைந்தருளுஞ் சகச வாழ்வே. 15

உளந்தளர விழிசுருக்கும் வஞ்சர் பாற்சென்
றுத்தமநின் னடியைமறந் தோயா வெய்யில்
இளந்தளிர்போல் நலிந்திரந்திங் குழலு மிந்த
ஏழைமுகம் பார்த்திரங்கா யென்னே யென்னே
வளந்தருசற் குணமலையே முக்கட் சோதி
மணியினிருந் தொளிரொளியே மயிலூர் மன்னே
தளந்தரும்பூம் பொழிற்றணிகை மணியே ஜீவ
சாக்ஷியாய் நிறைந்தருளுஞ் சகச வாழ்வே. 16

கல்லாத வஞ்சகர்பாற் சென்று வீணாள்
கழித்துநிற்குங் கடையனிவன் கருணை யில்லாப்
பொல்லாத பாவியென வெண்ணி யென்னைப்
புறம்போக்கி லையாயான் புரிவ தென்னே
எல்லாஞ்செய் வல்லவனே தேவர் யார்க்கும்
இறைவனே மயிலேறு மெம்பி ரானே
சல்லாப வளத்தணிகை மணியே ஜீவ
சாக்ஷியாய் நிறைந்தருளுஞ் சகச வாழ்வே. 17

Koviloor Digital Library

கன்னேய நெஞ்சகர்மாட் டணுகி யையோ
கரைந்துருகி யெந்தாய்நின் கருணை காணு(து)
என்னேயென் றேங்கியழும் பாவி யேனுக்
கிருக்கவிட மிலையோநின் னிதயங் கல்லோ
பொன்னேயென் னுயிர்க்குயிராய்ப் பொருந்து ஞான
பூரணமே புண்ணியமே புனித வைப்பே
தன்னேரில் தென்றணிகை மணியே ஜீவ
சாக்ஷியாய் நிறைந்தருளுஞ் சகச வாழ்வே. 18

பாவவினைக் கோரிடமா மடவார் தங்கள்
பாழ்ங்குழிக்கண் வீழ்மனம் பற்றி யந்தோ
மாவல்வினை யுடன்மெலிந்திங் குழல்கின் றேனின்
மலரடியைப் போற்றேனென் மதிதா னென்னே
தேவர்தொழும் பொருளேயென் குலத்துக் கெல்லாந்
தெய்வமே யடியருளஞ் செழிக்குந் தேனே
தாவகன்றோர் புகழ்த்தணிகை மணியே ஜீவ
சாக்ஷியாய் நிறைந்தருளுஞ் சகச வாழ்வே. 19

கன்னியர்தம் மார்பிடங்கொண் டலைக்கும் புன்சீழ்க்
கட்டிகளைக் கருதிமனங் கலங்கி வீணே
அன்னியனு யலைகின்றேன் மயக்க நீக்கி
அடிமைகொள லாகாதோ வருட்பொற் குன்றே
சென்னிமிசைக் கங்கைவைத்தோ னரிதிற் பெற்ற
செல்வமே யென்புருக்குந் தேனே யெங்குந்
தன்னியல்கொண் டுறுந்தணிகை மணியே ஜீவ
சாக்ஷியாய் நிறைந்தருளுஞ் சகச வாழ்வே. 20

உள்ளமனக் குரங்காட்டித் திரியு மென்றன்
உளவறிந்தோ வையாநீ யுன்னைப் போற்றூர்
கள்ளமனக் குரங்குகளை யாட்ட வைத்தாய்
கடையனேன் பொறுத்துமுடி கில்லேன் கண்டாய்
தெள்ளமுதப் பெருங்கடலே தேனே ஞானத்
தெளிவேயென் றெய்வமே தேவர் கோவே
தள்ளரிய புகழ்த்தணிகை மணியே ஜீவ
சாக்ஷியாய் நிறைந்தருளுஞ் சகச வாழ்வே. 21

வந்தாள்வா யையாவோ வஞ்சர் தம்பால்
வருந்துகின்றே னென்றலறு மாற்றங் கேட்டும்
எந்தாய்நீ யிரங்காம லிருக்கின் றுயால்
என்மனம்போ னின்மனமு மிருந்த தேயோ
கந்தாவென் றுரைப்பவர்தங் கருத்துள் ளூறுங்
கனிரசமே கரும்பேகற் கண்டே நற்சீர்த்
தந்தாளுந் திருத்தணிகை மணியே ஜீவ
சாக்ஷியாய் நிறைந்தருளுஞ் சகச வாழ்வே. 22

Koviloor Digital Library

ஊராதி யிகழ்மாயக் கயிற்றாற் கட்டுண்
டோய்ந்தலறி மனங்குழைந்திங் குழலு கின்றேன்
பாராதி யண்டமெலாங் கணத்திற் காண்போய்
பாவியேன் முகவாட்டம் பார்த்தி லாயோ
சீராதி பகவனருட் செல்வ மேயென்
சிந்தைமலர்ந் திடவூறுந் தேனே யின்பஞ்
சாராதி மலைத்தணிகை மணியே ஜீவ
சாக்ஷியாய் நிறைந்தருளுஞ் சகச வாழ்வே. 23

வாவென்பா ரின்றியுனை தன்ப ரென்னை
வஞ்சகனென் றேமறுத்து வன்க ணாநீ
போவென்பா ராகிலெங்கு போவே னந்தோ
பொய்யனேன் றுணையின்றிப் புலம்பு வேனே
கோவென்பார்க் கருடருமக் குன்றே யொன்றே
குணங்குறியற் றிடவருளுங் குருவே வாழ்க்கைத்
தாவென்பார் புகழ்த்தணிகை மணியே ஜீவ
சாக்ஷியாய் நிறைந்தருளுஞ் சகச வாழ்வே. 24

மாயைநெறி யாமுலக வாழ்க்கை தன்னில்
வருந்திநினை யழைத்தலறி மாழ்கா நின்றேன்
தாயையறி யாதுவருஞ் சூலுண் டோவென்
சாமிநீ யறியாயோ தலையில் லாயோ
பேயைநிகர் பாவியென நினைந்து விட்டாற்
பேதையே னென்செய்கேன் பெருஞ்சீர்க் குன்றே
சாயைகடற் செறிதணிகை மணியே ஜீவ
சாக்ஷியாய் நிறைந்தருளுஞ் சகச வாழ்வே. 25

மின்னைநிகர்ந் தழிவாழ்க்கைத் துயரால் நெஞ்சம்
மெலிந்துநின தருள்பருக வேட்டு நின்றேன்
என்னையிவன் பெரும்பாவி யென்றே தள்ளில்
என்செய்கேன் முன்பெறுஞ்சேய் இயற்றுங் குற்றம்
அன்னைபொறுத் திடல்நீதி யல்ல வோவென்
ஐயாவே நீபொறுக்க லாகா தோதான்
தன்னைநிகர் தருந்தணிகை மணியே ஜீவ
சாக்ஷியாய் நிறைந்தருளுஞ் சகச வாழ்வே. 26

முந்தைவினை யால்நினது வழியிற் செல்லா
மூடனேன் றனையன்பர் முனிந்து பெற்ற
தந்தைவழி நில்லாத பாவி யென்றே
தள்ளிவிடிற் றலைசாய்த்துத் தயங்கு வேனே
எந்தைநின தருள்சற்றே யளித்தால் வேறூர்
எண்ணமிலே னேகாந்தத் திருந்து வாழ்வேன்
சந்தனவான் பொழிற்றணிகை மணியே ஜீவ
சாக்ஷியாய் நிறைந்தருளுஞ் சகச வாழ்வே. 27

Koviloor Digital Library

பன்னகநோந் துறுவஞ்ச வுலகி னின்று
பரதவித்துன் னருட்கெதிர்போய்ப் பார்க்கின் றேனின்
பொன்னருளைப் புணர்ந்துமன மகிழ்ந்து வாழப்
புண்ணியனே நாயேற்குப் பொருத்த மின்றே
பின்னையொரு துணையறியேன் றனியே விட்டாற்
பெருமனினக் கழகேயோ பேதை யாமென்
றன்னையளித் தருடணிகை மணியே ஜீவ
சாக்ஷியாய் நிறைந்தருளுஞ் சகச வாழ்வே. 28

சிவசண்முக சிவஞானதேசிகன் திருவடிவாழ்க

6. ஆற்றுமுறை

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

சிவசண்முக சிவஞானதேசிகன் திருவடிவாழ்க

விண்ண ருதுவாழ் வேந்த ருதியர்
வேண்டி யேங்கவும் விட்டெ னெஞ்சகக்
கண்ண ருதுநீ கலந்து நிற்பதைக்
கள்ள நாயினேன் கண்டு கொண்டிலேன்
எண்ண ருத்துயர்க் கடலுண் மூழ்கியே
இயங்கி மாழ்குவேன் யாது செய்குவேன்
தண்ண ருப்பொழிற் குலவும் போரிவாழ்
சாமி யேதிருத் தணிகை நாதனே. 1

வாட்க ணேழையர் மயலிற் பட்டக
மயங்கி மாலயன் வழுத்து நின்றிருத்
தாட்க ணேயமற் றுலக வாழ்க்கையிற்
சஞ்ச ரித்துழல் வஞ்ச னேனிடம்
ஆட்க ணேசுழ லந்த கன்வரில்
அஞ்சு வேனலால் யாது செய்குவேன்
நாட்க ணோர்மலர்ப் பொழில்கொள் போரிவாழ்
நாயகா திருத் தணிகை நாதனே. 2

என்னரில் புன்றொழி லெய்தி யையவோ
இயல்பின் வாழ்க்கையி லியங்கி மாழ்கியே
கண்ணி னுண்மணி யாய நின்றனைக்
கருதி டாதுழல் கபட னேற்கருள்
நண்ணி வந்திவ னேழை யாமென
நல்கி யாண்டிட வரியாய மேசொலாய்
தண்ணி ரும்பொழிற் சூழும் போரிவாழ்
சாமி யேதிருத் தணிகை நாதனே. 3

கூவி யேழையர் குறைக ளுரவாட்
கொள்ளும் வள்ளலே குறுகும் வாழ்க்கையிற்
பாவி யேன்படும் பாட னைத்தையும்
பார்த்தி ருந்துநீ பரிந்து வந்திலாய்

Koviloor Digital Library

சேவி யேனெனிற் றள்ள லீதியோ
திருவ ருட்கொரு சிந்து வல்லையோ
தாவி யேர்வளைப் பயில்செய் போரிவாழ்
சாமி யேதிருத் தணிகை நாதனே. 4

சந்தை நேர்நடை தன்னி லேங்குவேன்
சாமி நின்றிருத் தாளுக் கன்பிலேன்
எந்தை நீமகிழ்ந் தென்னை யாள்வையேல்
என்னை யன்பர்க ளென்சொல் வார்களோ
நிந்தை யேற்பினுங் கருணை செய்திடல்
நித்த நின்னருள் நீதி யாகுமால்
தந்தை தாயென வந்து சீர்தருந்
தலைவ னேதிருத் தணிகை நாதனே. 5

செல்லும் வாழ்க்கையிற் றியங்க விட்டுநின்
செய்ய தாள்துதி செய்தி டாதுழல்
கல்லும் வெந்நிடக் கண்டு மிண்டுசெய்
கள்ள நெஞ்சினேன் கவலைதீர்ப் பையோ
சொல்லு மின்பவான் சோதி யேயருள்
தோற்ற மேசுக சொருப வள்ளலே
சல்லி யங்கெட வருள்செய் போரிவாழ்
சாமி யேதிருத் தணிகை நாதனே. 6

ஏது செய்குவ னேனு மென்றனை
ஈன்ற நீபொறுத் திடுத லல்லதை
ஈது செய்தவ னென்றிவ் வேழையை
எந்த வண்ணநீ யெண்ணி நீக்குவாய்
வாது செய்வனிப் போது வள்ளலே
வறிய னேனென மதித்து நின்றிடேல்
தாது செய்மலர்ப் பொழில்கொள் போரிவாழ்
சாமி யேதிருத் தணிகை நாதனே. 7

பேயு மஞ்சுறும் பேதை யார்களைப்
பேணு மிப்பெரும் பேய னேற்கொரு
தாயு மப்பனுந் தமரு நட்புமாய்த்
தண்ண ருட்கடல் தந்த வள்ளலே
நீயு நானுமோர் பாலு நீருமாய்
நிற்க வேண்டினே னீதி யாகுமோ
சாயும் வன்பவந் தன்னை நீக்கிடுஞ்
சாமி யேதிருத் தணிகை நாதனே. 8

பொய்யர் தம்மனம் புகுத லின்றெனைப்
புனித நூலெலாம் புகல்வ தாதலால்
ஐய நின்றிரு வருட்கி ரப்பவிங்
கஞ்சி நின்றெனிவ் விஞ்சு வஞ்சனேன்

Koviloor Digital Library

மெய்ய ருள்ளுளே விளங்குஞ் சோதியே
வித்தி லாதவான் விளைந்த வின்பமே
தைய லாரிரு வோரு மேவுதோட்
சாமி யேதிருத் தணிகை நாதனே. 9

மாலின் வாழ்க்கையின் மயங்கி நின்பதம்
மறந்து மூன்றிடும் வஞ்ச நெஞ்சினேன்
பாலி னீரென நின்ன டிக்கணே
பற்றி வாழ்ந்திடப் பண்ணு வாய்கொலோ
சேலின் வாட்கணார் தீய மாயையிற்
றியங்கி நின்றிடச் செய்கு வாய்கொலோ
சால நின்னுளந் தானெவ் வண்ணமோ
சாற்றி டாய்திருத் தணிகை நாதனே. 10

சிவசண்முக சிவஞானதேசிகன் திருவடிவாழ்க

7. இரந்த விண்ணப்பம்

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

சிவசண்முக சிவஞானதேசிகன் திருவடிவாழ்க

நாளை யேகியே வணங்குது மெனத்தின நாளையே கழிக்கின்றோம்
ஊளை நெஞ்சமே யென்னையோ வென்னையோ வுயர்திருத் தணிகேசன்
தாளை யுன்னியே வாழ்ந்தில மூயிருடல் தணந்திடல் தனையிந்த
வேளை யென்றறி வுற்றில மென்செய்வோம் விளம்பரும் விடையோமே. 1

விடைய வாழ்க்கையை விரும்பின னின்றிரு விரைமலர்ப் பதம் போற்றேன்
கடைய நாயினே னெவ்வணை நின்றிருக் கருணைபெற் றுய்வேனே
விடையி லேறிய சிவபரஞ் சுடருளே விளங்கிய வொளிக்குன்றே
தடையி லாதபே ரானந்த வெள்ளமே தணிகையெம் பெருமானே. 2

பெருமை வேண்டிய பேதையிற் பேதையேன் பெருந்துய ருழக்கின்றேன்
ஒருமை யீபுநின் றிருப்பத மிறைஞ்சிலே னுய்வதெப் படியேயோ
அருமை யாந்தவத் தம்மையு மப்பனு மளித்திடும் பெருவாழ்வே
தரும வள்ளலே குணப்பெருங் குன்றமே தணிகைமா மலையானே. 3

மலையும் வேற்கணார் மையலி லழுந்தியே வள்ளனின் பதம்போற்று(து)
அலையு மிப்பெருங் குறையினை யையகோ யாவரோ டுரைசெய்கேன்
நிலைகொ ளானந்த நிருத்தனுக் கொருபொரு ணிகழ்த்திய பெருவாழ்வே
தலைமை மேவிய சற்குரு நாதனே தணிகையம் பதியானே. 4

பதியு மப்பனு மன்னையுங் குருவுநற் பயன்றரு பொருளாய
கதியு நின்றிருக் கழலடி யல்லது கண்டில னெளியேனே
விதியு மாலுநின் றேத்திடுந் தெய்வமே விண்ணவர் பெருமானே
வதியுஞ் சின்மய வடிவமே தணிகைமா மலையமர்ந் திடுவாழ்வே. 5

Koviloor Digital Library

வாழு நின்றிருத் தொண்டர்கள் திருப்பதம் வழுத்திடா துலகத்தே
தாழும் வஞ்சர்பாற் றூழுமென் றன்மையென் றன்மைவன் பிறப்பாய
ஏழு மென்னவதே யாகிய தையனே யெவரெனைப் பொருகின்றோர்
ஊழு நீக்குறுந் தணிகையெம் மண்ணலே யுயர்திரு வருட்டேனே. 6

தேனுந் தெள்ளிய வமுதமுங் கைக்குநின் றிருவருட் டேனுண்டே
யானு நீயுமாய்க் கலந்துற வாடுநா ளெந்நா ளறியேனே
வானும் பூமியும் வழுத்திடுந் தணிகைமா மலையமர்ந் திடுதேவே
கோனுந் தற்பர குருவுமாய் விளங்கிய குமாரசற் குணக்குன்றே. 7

குன்று பொய்யுடல் வாழ்வினை மெய்யெனக் குறித்திவ ணலைகின்றேன்
இன்று நின்றிரு வருளடைந் துய்வனோ வில்லையிவ் வுலகத்தே
என்று மிப்படிப் பிறந்திறந் துழல்வனோ யாதுமிங் கறிகில்லேன்
நன்று **நின்றிருச் சித்தமென் பாக்கியம்** நற்றணி கையிற்றேவே. 8

தேவ ருந்தவ முனிவருஞ் சித்தருஞ் சிவனரி யயனுகும்
மூவ ரும்பணி முதல்வநின் னடியிலென் முடியுற வைப்பாயேல்
ஏவ ரும்மெனக் கெதிரிலை முத்திவீ டென்னுடை யதுகண்டாய்
தாவ ரும்பொழிற் றணிகையங் கடவுளே சரவண பவகோவே. 9

வேயை வென்றதோட் பாவையர் படுகுழி விழுந்தலைந் திடுமிந்த
நாயை யெப்படி யாட்கொள லாயினு நாதநின் செயலன்றே
தாயை யப்பனைத் தமரினை விட்டுனைச் சார்ந்தவர்க் கருள்கின்றோய்
மாயை நீக்கிநல் லருள்புரி தணிகைய வந்தரு ளிந்நாளே. 10

சிவசண்முக சிவஞானதேசிகன் திருவடிவாழ்க

8. கருணைமாலை

கலி விருத்தம்

சிவசண்முக சிவஞானதேசிகன் திருவடிவாழ்க

சங்க பாணியைச் சதுமு கத்தனைச்
செங்க ணுயிரத் தேவர் நாதனை
மங்க லம்பெற வைத்த வள்ளலே
தங்க ருட்டிருத் தணிகை யையனே. 1

ஐய னேநினை யன்றி யெங்கணும்
பொய்ய னேற்கொரு புகலி லாமையால்
வெய்ய னேனென வெறுத்து விட்டிடேல்
மெய்ய னேதிருத் தணிகை வேலனே. 2

வேலன் மாதவன் வேத னேத்திடும்
மேலன் மாமயின் மேல னன்பருட்
சால நின்றவன் றணிகை நாயகன்
வால நற்பத வைப்பெ னெஞ்சமே. 3

Koviloor Digital Library

நெஞ்ச மேயிஃ தென்னை நின்மதி
வஞ்ச வாழ்வினின் மயங்கு கின்றனை
தஞ்ச மென்றருட் டணிகை சார்தியேற்
கஞ்ச மாமலர்க் கழல்கி டைக்குமே. 4

கிடைக்குண் மாழ்கியே கிலஞ்செ யந்தகன்
படைக்குட் பட்டிடும் பான்மை யெய்திடேன்
தடைக்குட் பட்டிடாத் தணிகை யான்பதத்
தடைக்க லம்புகுந் தருள்செ ழிப்பனே. 5

செழிக்குஞ் சீர்த்திருத் தணிகைத் தேவநின்
கொழிக்கு நல்லருள் கொள்ளை கொள்ளவே
தழிக்கொண் டன்பரைச் சார்ந்தி லேனிவண்
பழிக்குள் ளாகுமென் பான்மை யென்னையோ. 6

என்னை யென்னையீ தென்றன் மாதவம்
முன்னை நன்னெறி முயன்றி லேனைநின்
பொன்னை யன்னதாள் போற்ற வைத்தனை
அன்னை யென்னுநற் றணிகை யண்ணலே. 7

அண்ணி லேனினை யைய நின்னடி
எண்ணி லேனிதற் கியாது செய்குவேன்
புண்ணி னேன்பிழை பொறுத்துக் கோடியால்
தண்ணி னீள்பொழிற் றணிகை யப்பனே. 8

அப்ப னென்னுடை யன்னை தேசிகன்
செப்ப னென்குலத் தெய்வ மானவன்
துப்ப னென்னுயிர்த் துணைவன் யாதுமோர்
தப்பி லன்பர்சேர் தணிகை வள்ளலே. 9

வள்ள லுன்னடி வணங்கிப் போற்றவென்
உள்ள மென்வசத் துற்ற தில்லையால்
எள்ள லையவோ வேழை யென்செய்கேன்
தள்ள ரும்பொழிற் றணிகை வெற்பனே. 10

வெற்ப னேதிருத் தணிகை வேலனே
பொற்ப னேதிருப் போரி நாதனே
கற்ப மேற்பல காலஞ் செல்லுமால்
அற்ப னேன்றுயர்க் களவு சாற்றவே. 11

சாறு சேர்திருத் தணிகை யெந்தைநின்
ஆறு மாமுகத் தழகை மொண்டுகொண்
டூறில் கண்களா லுண்ண வெண்ணினேன்
ஈறி லென்னுடை யெண்ண முற்றுமோ. 12

Koviloor Digital Library

முற்று மோமன முன்னி நின்பதம்
பற்று மோவினைப் பகுதி யென்பவை
வற்று மோசுக வாழ்வு வாய்க்குமோ
சற்று மோர்கிலேன் தணிகை யத்தனே. 13

அத்த னேதணி காச லத்தருள்
வித்த னேமயின் மேற்கொள் வேலனே
பித்த னேன்பெரும் பிழைபொ றுத்திடும்
சுத்த வன்பர்கள் சொல்வ ரேதமே. 14

ஏதிலா ரென வெண்ணிக் கைவிடில்
நீதி யோவெனை நிலைக்க வைத்தவா
சாதி வான்பொழிற் றணிகை நாதனே
ஈதி நின்னரு ளென்னும் பிச்சையே. 15

பிச்சை யேற்றவன் பிள்ளை நீயெனில்
இச்சை யேற்றவர்க் கியாது செய்குவாய்
பச்சை மாமயிற் பரம நாதனே
கச்சி நேர்தணி கைக்க டம்பனே. 16

கடப்ப மாமலர்க் கண்ணி மார்பனே
தடப்பெ ரும்பொழிற் றணிகைத் தேவனே
இடப்ப டாச்சிறி யேனை யன்பர்கள்
தொடப்ப டாதெனிற் சொல்வ தென்கொலோ. 17

என்சொல் கேளிதை யெண்ணி லற்புதம்
வன்சொ லேன்பிழை மதித்தி டாதுவந்
தின்சொ லாலிவ ணிருத்தி யென்றனன்
தன்சொல் செப்பருந் தணிகைத் தேவனே. 18

தேவ நேசனே சிறக்கு மீசனே
பாவ நாசனே பரம தேசனே
சாவ காசனே தணிகை வாசனே
கோவ பாசனே குறிக்கொ ளென்னையே. 19

குறிக்கொ ளன்பரைக் கூடு முதவிவ்
வெறிக்கொ ணாயினை வேண்டி யையநீ
முறிக்கொள் வாய்கொலோ முனிகொள் வாய்கொலோ
நெறிக்கொள் வோர்புகழ் தணிகை நித்தனே. 20

தணிகை மேவிய சாமி யேநினை
எணிகை விட்டிடே லென்று தோத்திர
மணிகை நின்னடிக் கயர்ந்து நின்றுவீன்
கணிகை போலெனைக் கலக்கிற் றுள்ளமே. 21

Koviloor Digital Library

உள்ள நெக்குவிட் டுருகு மன்பர்தந்
நள்ள கத்தினி னடிக்குஞ் சோதியே
தள்ள ருந்திறற் றணிகை யானந்த
வெள்ள மேமனம் விள்ளச் செய்வையே. 22

செய்வ தன்றவன் சிறிய னேன்றனை
வைவ ரன்பர்க ளென்னின் மத்தனேன்
உய்வ தெவ்வண முரைசெ யத்தனே
சைவ நாதனே தணிகை மன்னனே. 23

மன்னு நின்னருள் வாய்ப்ப தின்றியே
இன்னு மித்துய ரேய்க்கி லென்செய்கேன்
பொன்னி னம்புயன் போற்றும் பாதனே
தன்னி னின்றிடுந் தணிகை மேலனே. 24

மேலை வானவர் வேண்டு நின்றிருக்
காலை யென்சிரங் களிக்க வைப்பையோ
சாலை யோங்கிய தணிகை வெற்பனே
வேலை யேந்துகை விமல நாதனே. 25

வேத மாமுடி விளங்கு நின்றிருப்
பாத மேத்திடாப் பாவி யேன்றனக்
கீத லின்றுபோ வென்னி லென்செய்கேன்
சாதல் போக்குநற் றணிகை நேயனே. 26

நேய நின்புடை நின்றி டாதவென்
மாய நெஞ்சினுள் வந்தி ருப்பையோ
பேய னேன்பெரும் பிழைபொ றுத்திடத்
தாய நின்கடன் தணிகை வாணனே. 27

வாணு தற்பெரு மாட்டி மாரொடு
காணு தற்குனைக் காதல் கொண்டனன்
ஏணு தற்கென தெண்ண முற்றுமோ
மாணு தற்புகழ்த் தணிகை வண்ணனே. 28

வண்ண னேயருள் வழங்கும் பன்னிரு
கண்ண னேயயிற் கரங்கொ ளையனே
தண்ண னேதிருத் தணிகை வேலனே
திண்ண மீதருள் செய்யுங் காலமே. 29

கால்கு றித்தவென் கருத்து முற்றியே
சால்வ எத்திருத் தணிகை சார்வனேன்
மால்ப கைப்பிணி மாறி யோடவே
மேல்கு றிப்பனல் வெற்றிச் சங்கமே. 30

சிவசண்முக சிவஞானதேசிகன் திருவடிவாழ்க

Koviloor Digital Library

9. மருண்மாலை விண்ணப்பம்

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

சிவசண்முக சிவஞானதேசிகன் திருவடிவாழ்க

சொல்லும் பொருளு மாய்நிறைந்த சுகமே யன்பர் துதிதுணையே
புல்லும் புகழ்சேர் நற்றணிகைப் பொருப்பின் மருந்தே பூரணமே
அல்லும் பகலு நின்னுமை மந்தோ நினைந்துன் னுளாகேன்
கல்லும் பொருவா வன்மனத்தாற் கலங்கா நின்றேன் கடையேனே. 1

கடையேன் வஞ்ச நெஞ்சகத்தாற் கலுழ்கின் றேலின் றிருக்கருணை
அடையே னவமே திரிகின்றே னந்தோ சிறிது மறிவில்லேன்
விடையே றீசன் [1]புயம்படுமுன் விரைத்தாட் கமலம் பெறுவேனோ
கொடையே யருளைத் தருமுகிலே கோவே தணிகைக் குலமணியே. 2

மணியே யடியேன் கண்மணியே மருந்தே யன்பர் மகிழ்ந்தணியும்
அணியே தணிகை யரசேதெள் ளமுதே யென்ற னுருயிரே
பிணியேய் துயரால் வருந்திமனப் பேயா லலைந்து பிறழ்கின்றேன்
தணியேன் றாகம் நின்னருளைத் தருத லிலையேற் றாழ்வேனே. 3

தாழ்வேன் வஞ்ச நெஞ்சகர்பாற் சார்வேன் றனக்குன் னருள்தந்தால்
வாழ்வே னிலையே லென்செய்கேன் வருத்தம் பொறுக்க மாட்டேனே
ஏழ்வே தனையுங் கடந்தவர்தம் இன்பப் பெருக்கே யென்னுயிரே
போழ்வேற் கரங்கொள் புண்ணியனே புகழ்சேர் தணிகைப் பொருப்பரசே. 4

அரைசே யடியர்க் கருள்குகனே அண்ணு தணிகை யையாவே
விரைசேர் கதம்ப மலர்ப்புயனே வேலா யுதக்கை மேலோனே
புரைசேர் மனத்தால் வருந்தி யுன்றன் பூம்பொற் பதத்தைப் புகழ்கில்லேன்
தரைசேர் வாழ்விற் றயங்குகின்றே னந்தோ நின்று தனியேனே. 5

தனியே துயரில் வருந்திமனஞ் சாம்பி வாழ்க்கைத் தலைப்பட்டிங்
கினியே துறுமோ வென்செய்கே னென்றே நின்றேற் கிரங்காயோ
கனியே பாகே கரும்பேயென் கண்ணே தணிகைக் கற்பகமே
துனியேய் பிறவி தனையகற்றுந் துணையே சோதிச் சுகக்குன்றே. 6

குன்றே மகிழ்ந்த குணக்குன்றே கோவே தணிகைக் குருபரனே
நன்றே தெய்வ நாயகமே நவிலற் கரிய நல்லுறவே
என்றே வருவா யருடருவா யென்றே புலம்பி யேங்குற்றேன்
இன்றே காணப் பெறிலெந்தா யிறவேன் பிறவே னிருப்பேனே. 7

இருப்பேன் றுயர்வாழ் வினிலெவரினு மெந்தாய் நினது பதங்காணும்
விருப்பே னயன்மான் முதலோரை வேண்டே னருள வேண்டாயோ
திருப்பே ரொளியே யருட்கடலே தெள்ளா ரமுதே திருத்தணிகைப்
பொருப்பே மகிழ்ந்த புண்ணியமே புனித ஞான போதகமே. 8

1. புயம்படும் உன் — ஈசன் தோளில் பொருந்துகின்ற உனது.

Koviloor Digital Library

போதா நந்த வருட்கனியே புகலற் கரிய பொருளேயென்
நாதா தணிகை மலையரசே நல்லோர் புகழு நாயகனே
ஓதா தவமே வருந்துயரா லுழன்றே பிணியி லுலைகின்றேன்
ஏதா முனதின் னருளியா திருந்தா லங்தோ வெளியேற்கே. 9

எளியே னினது திருவருளுக் கெதிர்நோக் குற்றே யிரங்குகின்ற
களியே னெனைநீ கைவிட்டாற் கருணைக் கியல்போ கற்பகமே
அளியே தணிகை யருட்சுடரே யடிய ருறவே யருண்ஞானத்
துளியே யமையு மெனக்கெந்தாய் வாவென் றொருசொற் சொல்லாயே. 10

சிவசண்முக சிவஞானதேசிகன் திருவடிவாழ்க

10. பொறுக்காப் பத்து

எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

சிவசண்முக சிவஞானதேசிகன் திருவடிவாழ்க

மெய்யரு ளகத்தின் விளங்குநின் பதமாம்
விரைமலர்த் துணைதமை விரும்பாப்
பொய்யர்தம் மிடத்திவ் வடியனேன் புகுதல்
பொறுக்கிலன் பொறுக்கிலன் கண்டாய்
ஐயரு மிடப்பா லம்மையும் வருந்தி
அளித்திடுந் தெள்ளிய வமுதே
தையலர் மயக்கற் றவர்க்கருள் பொருளே
தணிகைவாழ் சரவண பவனே. 1

நன்மைய வெல்லா மளித்திடு முனது
நளினமா மலரடி வழுத்தாப்
புன்மைய ரிடத்திவ் வடியனேன் புகுதல்
பொறுக்கிலன் பொறுக்கிலன் கண்டாய்
சின்மயப் பொருள்நின் றெண்டர்பால் நாயேன்
சேர்ந்திடத் திருவருள் புரிவாய்
தன்மயக் கற்றோர்க் கருள்தரும் பொருளே
தணிகைவாழ் சரவண பவனே. 2

மருளிலா தவர்கள் வழுத்துநின் னடியை
மனமுற நினைந்தகத் தன்பாம்
பொருளிலா தவர்பா லேழையேன் புகுதல்
பொறுக்கிலன் பொறுக்கிலன் கண்டாய்
அருளெலாந் திரண்ட வானந்த வுருவே
அன்பர்பா லிருந்திட வருளாய்
தரளவான் மழைபெய் திடுந்திருப் பொழில்சூழ்
தணிகைவாழ் சரவண பவனே. 3

Koviloor Digital Library

நிலையருள் நினது மலரடிக் கன்பு
நிகழ்ந்திட நாடொறு நினையாப்
புலையர்தம் மிடமிப் புன்மையேன் புகுதல்
பொறுக்கிலன் பொறுக்கிலன் கண்டாய்
மலையர சளித்த மரகதக் கொம்பர்
வருந்தியீன் றெடுத்தமா மணியே
தலையர சளிக்க விந்திரன் புகழுந்
தணிகைவாழ் சரவண பவனே. 4

வல்லிருட் பவந்தீர் மருந்தெனு நினது
மலரடி மனமுற வழுத்தார்
புல்லர்தம் மிடமிப் பொய்யனேன் புகுதல்
பொறுக்கிலன் பொறுக்கிலன் கண்டாய்
ஒல்லையி னெனைமீட் டுன்னடி யவர்பால்
உற்றுவாழ்ந் திடச்செயி னுய்வேன்
சல்லமற் றவர்கட் கருள்தரும் பொருளே
தணிகைவாழ் சரவண பவனே. 5

கற்பிலா ரெனினு நினைந்திடி லருள்நின்
கருணையங் கடலடிக் கன்பாம்
பொற்பிலா தவர்பா லேழையேன் புகுதல்
பொறுக்கிலன் பொறுக்கிலன் கண்டாய்
[1]அற்பிலே னெனினு மென்பிழை பொறுத்துன்
அடியர்பாற் சேர்த்திடி லுய்வேன்
தற்பரா பரமே சற்குண மலையே
தணிகைவாழ் சரவண பவனே. 6

பத்திகொண் டவருட் பரவிய வொளியாம்
பரஞ்சுடர் நின்னடி பணியும்
புத்திகொள் ளலர்பா லெளியனேன் புகுதல்
பொறுக்கிலன் பொறுக்கிலன் கண்டாய்
நித்திய வடியர் தம்முடன் கூட்ட
நினைந்திடி லுய்குவ னரசே
சத்திசெங் கரத்திற் றரித்திடு மமுதே
தணிகைவாழ் சரவண பவனே. 7

நீற்றணி விளங்கு மவர்க்கருள் புரியும்
நின்னடிக் கமலங்கள் நினைந்தே
போற்றிடா தவர்பாற் பொய்யனேன் புகுதல்
பொறுக்கிலன் பொறுக்கிலன் கண்டாய்
ஆற்றல்கொள் நின்பொன் னடியருக் கடிய
னாச்செயி லுய்குவ னமுதே
சாற்றிடும் பெருமைக் களவிலா தோங்குந்
தணிகைவாழ் சரவண பவனே. 8

1. அற்பு என்பது — அன்பு.

Koviloor Digital Library

பரிந்திடு மனத்தோர்க் கருள்செயு நினது
பாததா மரைகளுக் கன்பு
புரிந்திடா தவர்பா லெளியனேன் புகுதல்
பொறுக்கிலன் பொறுக்கிலன் கண்டாய்
தெரிந்திடு மன்ப ரிடமுறி லுய்வேன்
திருவுள மறிகிலன் தேனே
சரிந்திடுங் கருத்தோர்க் கரியநற் புகழ்கொள்
தணிகைவாழ் சரவண பவனே. 9

எண்ணுறு மவர்கட் கருளுநின் னடியை
ஏத்திடா தழிதருஞ் செல்வப்
புண்ணுறு மவர்பா லெளியனேன் புகுதல்
பொறுக்கிலன் பொறுக்கிலன் கண்டாய்
கண்ணுறு மணியா நின்னடி யவர்பாற்
கலந்திடி லுய்குவன் கரும்பே
தண்ணுறுங் கருணைத் தனிப்பெருங் கடலே
தணிகைவாழ் சரவண பவனே. 10

சிவசண்முக சிவஞானதேசிகன் திருவடிவாழ்க

11. வேட்கை விண்ணப்பம்

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

சிவசண்முக சிவஞானதேசிகன் திருவடிவாழ்க

மன்னே யென்ற னுயிர்க்குயிரே மணியே தணிகை மலைமருந்தே
அன்னே யென்னை யாட்கொண்ட அரசே தணிகை ஐயாவே
பொன்னே ஞானப் பொங்கொளியே புனித வருளே பூரணமே
என்னே யெளியேன் துயருழத்த லெண்ணி யிரங்கா திருப்பதுவே. 1

இரங்கா நின்றிங் கலைதருமிவ் வெளியேன் கனவி னிடத்தேனும்
அரங்கா வரவி னடித்தோனு மயனுங் காண்டற் கரிதாய
உரங்கா முறுமா மயின்மேனின் னுருவந் தரிசித் துவப்படையும்
வரங்கா தலித்தேன் தணிகைமலை வாழ்வே யின்று வருவாயோ. 2

வருவா யென்று நாடோறும் வழிபார்த் திரங்கி மனந்தளர்ந்தேன்
கருவாய் பவனென் றெனைத்தள்ளக் கருது வாயோ வன்றியருள்
உருவாய் வந்து தருவாயோ தணிகா சலத்து ளுற்றமர்ந்த
ஒருவா வுன்றன் றிருவுளத்தை யுணரே னென்செய் துய்கேனே. 3

உய்யும் பொருட்டுன் றிருப்புகழை யுரையே னந்தோ வுரைக்கடங்காப்
பொய்யுங் களவு மழுக்காறும் பொருளாக் கொண்டேன் புலையேனை
எய்யும் படிவந் தடர்ந்தியம னீழுத்துப் பறிக்கி லென்னேயான்
செய்யும் வகையொன் றறியேனே தென்பாற் றணிகைச் செஞ்சுடரே. 4

Koviloor Digital Library

செஞ்சொற் சுவையே மெய்ஞ்ஞானச் செல்வப் பெருக்கே தெள்ளமுதே
விஞ்சைப் புலவர் புகழ்தணிகை விளக்கே துளக்கில் வேலோனே
வெஞ்சொற் புகலும் வஞ்சகர்பால் மேவி நின்றுண் மலர்மறந்தே
பஞ்சிற் றமியேன் படும்பாட்டைப் பார்த்தும் அருட்கண் பார்த்திலையே.

பார்க்கின் றிலையே பன்னிருகண் படைத்து மெளியேன் பாடனைத்துந்
தீர்க்கின் றிலையே யென்னேயான் செய்வேன் சிறியேன் சீமானே
போர்க்குன் றொருசூர் புயக்குன்றும் பொடிசெய் வேற்கைப் புண்ணியனே
சீர்க்குன் றெனுநல் வளத்தணிகைத் தேவே மயிலூர் சேவகனே. 6

சேவற் கொடிகொள் குணக்குன்றே சிந்தா மணியே யாவர்கட்குங்
காவற் பதியே தணிகைவளர் கரும்பே கனியே கற்பகமே
மூவர்க் கிறையே வேயீன்ற முத்த னளித்த முத்தேநற்
றேவர்க் கருணின் சேவடிக்கே விழைந்தேன் யாதுந் தெரியேனே. 7

தெரியே னுனது திருப்புகழைத் தேனே யுன்றன் சேவடிக்கே
பரியேன் பணியேன் கூத்தாடேன் பாடேன் புகழைப் பரவசமாய்த்
தரியேன் றணிகை தனைக்காணேன் சாகே னேகேன் கும்பிக்கே
உரியே னந்தோ வெதுகொண்டிங் குய்கேன் யாது செய்கேனே. 8

செய்வ துனது திருவடிக்காந் திறனே சிந்தை நின்பாலே
வைவ துன்னை நினையாத வஞ்ச கரையே வழுத்திநிதம்
உய்வ துனது திருநாம மொன்றைப் பிடித்தே மற்றொன்றால்
எய்வ தறியேன் றிருத்தணிகை யெந்தா யெந்தா யெளியேனே. 9

எளியே னினது சேவடியா மின்ப நறவை யெண்ணியெண்ணி
அளியே னெஞ்சஞ் சற்றேனு மன்போன் றில்லே னதுசிறிதும்
ஒளியே னெந்தா யென்னுள்ளத் தொளித்தே யெவையு முணர்கின்றாய்
வளியே முதலாய் நின்றருளு மணியே தணிகை வாழ்மன்னே. 10

சிவசண்முக சிவஞானதேசிகன் திருவடிவாழ்க

12. ஆறெழுத்துண்மை

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

சிவசண்முக சிவஞானதேசிகன் திருவடிவாழ்க

பெருமை நிதியே மால்விடைகொள் பெம்மான் வருந்திப் பெறும்பேறே
அருமை மணியே தணிகைமலை அமுதே யுன்றன் ஆறெழுத்தை
ஒருமை மனத்தி னுச்சரித்திங் குயர்ந்த திருவெண் ணீறிட்டால்
இருமை வளனு மெய்துமிட ரென்ப தொன்று மெய்தாதே. 1

Koviloor Digital Library

எய்தற் கரிய வருட்சுடரே யெல்லாம் வல்ல விறையோனே
செய்தற் கரிய வளத்தணிகைத் தேவே யுன்றன் ஆறெழுத்தை
உய்தற் பொருட்டிங் குச்சரித்தே உயர்ந்த திருவெண் ணீறிட்டால்
வைதற் கில்லாப் புகழ்ச்சிவரும் வன்க ணென்றும் வாராதே. 2

வாரா விருந்த வடியவர்தம் மனத்தி லொளிரும் மாமணியே
ஆரா வமுதே தணிகைமலை யரசே யுன்றன் ஆறெழுத்தை
ஓரா மனத்தி னுச்சரித்திங் குயர்ந்த திருவெண் ணீறிட்டால்
ஏரார் செல்வப் பெருக்கிகவா விடும்பை யொன்று மிகந்திடுமே. 3

இகவா வடியர் மனத்தூறு மின்பச் சுவையே யெம்மானே
அகவா மயிலூர் திருத்தணிகை யரசே யுன்ற னாறெழுத்தை
உகவா மனத்தி னுச்சரித்திங் குயர்ந்த திருவெண் ணீறிட்டாற்
சுகவாழ் வின்ப மதுதுன்னுந் துன்ப மொன்றுந் துன்னாதே. 4

துன்னு மறையின் முடிவிலொளிர் தூய விளக்கே சுகப்பெருக்கே
அன்னை யனையாய் தணிகைமலை அண்ண லுன்ற னாறெழுத்தை
உன்னி மனத்தி னுச்சரித்திங் குயர்ந்த திருவெண் ணீறிட்டாற்
சென்னி யணியா யடிசேருந் தீமை யொன்றுஞ் சேராதே. 5

சேரு முக்கட் கனிகனிந்த தேனே ஞானச் செழுமணியே
யாரும் புகழுந் தணிகையெம தன்பே யுன்ற னாறெழுத்தை
ஒரு மனத்தி னுச்சரித்திங் குயர்ந்த திருவெண் ணீறிட்டாற்
பாரும் விசும்பும் பதஞ்சாரும் பழங்க ணென்றுஞ் சாராதே. 6

சார்ந்த வடியார்க் கருளளிக்குந் தருமக் கடலே தற்பரமே
வார்ந்த பொழில்சூழ் திருத்தணிகை மணியே யுன்ற னாறெழுத்தை
ஓர்ந்து மனத்தி னுச்சரித்திங் குயர்ந்த திருவெண் ணீறிட்டால்
ஆர்ந்த ஞான முறுமழியா வலக்க ணென்று மழிந்திடுமே. 7

அழியாப் பொருளே யென்னுயிரே அயில்செங் கரங்கொ ளையாவே
கழியாப் புகழ்சேர் தணிகையமர் கந்தா வுன்ற னாறெழுத்தை
ஒழியா மனத்தி னுச்சரித்திங் குயர்ந்த திருவெண் ணீறிட்டாற்
பழியா வின்ப மதுபதியும் பனிமை யொன்றும் பதியாதே. 8

பதியே யெங்கு நிறைந்தருளும் பரம சுகமே பரஞ்சுடரே
கதியே யளிக்குந் தணிகையமர் கடம்பா வுன்ற னாறெழுத்தை
உதியோ மனத்தி னுச்சரித்திங் குயர்ந்த திருவெண் ணீறிட்டாற்
றுதியோர் நினது பதந்தோன்றுந் துன்ப மொன்றுந் தோன்றாதே. 9

தோன்று ஞானச் சின்மயமே தூய சுகமே சுயஞ்சுடரே
ஆன்றோர் புகழுந் தணிகைமலை அரசே யுன்ற னாறெழுத்தை
ஊன்று மனத்தி னுச்சரித்திங் குயர்ந்த திருவெண் ணீறிட்டால்
ஈன்றுள் நிகரும் அருளடையு மிடுக்க ணென்றும் அடையாதே. 10

சிவசண்முக சிவஞானதேசிகன் திருவடிவாழ்க

Koviloor Digital Library

13. போக்குரையிடு

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

சிவசண்முக சிவஞானதேசிகன் திருவடிவாழ்க

கற்கி லேனுன தருட்பெய ராங்குக கந்தவென் பவைநாளும்
நிற்கி லேனுன தாகம நெறிதனி னீசனே னுய்வேனோ
சொற்கி லேசமி லடியவ ரன்பினுட் டோய்தரு பசுந்தேனே
அற்பி லேர்தருந் தணிகையா ரமுதமே யானந்த வருட்குன்றே. 1

பாவ வாழ்க்கையிற் பாவியேன் செய்திடும் பண்பிலாப் பிழைநோக்கித்
தேவ ரீர்மன திரக்கமுற் றேயருள் செய்திடா திருப்பீரேற்
காவ லாகிய கடும்பிணித் துயரமிக் கடையனேன் றனக்கின்னும்
யாவ தாகுமோ வென்செய்கோ வென்செய்கோ வியலும்வேற் கரத்தீரே.

சேவி யாதவென் பிழைகளை யென்னுளே சிறிதறி தரும்போதோ
பாவி யேன்மனம் பகீலென வெதும்பியுட் பதைத்திடக் காண்கின்றேன்
ஆவி யேயரு ளமுதமே நின்றிரு வருள்தனக் கென்னாமோ
பூவி னாயகன் போற்றிடுந் தணிகையம் பொருப்பமர்ந் திடுவாழ்வே. 3

துன்பி னாலகம் வெதும்பினைந் தயர்ந்துநின் றுணையடி மலரேத்தும்
அன்பி லாதவிப் பாவியேன் செய்பிழை யனைத்தையும் பொறுப்பாயேல்
வன்பி லாதநின் னடியவர் தந்திரு மனத்தினுக் கென்னாமோ
இன்பி னாற்சுரர் போற்றிடுந் தணிகைவா ழிறைவனே யெம்மானே. 4

என்செய் கேனினுந் திருவருள் காண்கிலே னெடுக்கருந் துயருண்டேன்
கன்செய் பேய்மனக் கடையனே னென்னினுங் காப்பதுன் கடனன்றோ
பொன்செய் குன்றமே பூரண ஞானமே புராதனப் பொருள்வைப்பே
மன்செய் மாணிக்க விளக்கமே தணிகைவாழ் வள்ளலே மயிலோனே. 5

மண்ணி னண்ணிய வஞ்சகர் பாற்கொடு வயிற்றினா லலைப்பட்டேன்
கண்ணி னண்ணருங் காட்சியே நின்றிருக் கடைக்கணோக் கருணோக்கி
எண்ணி யெண்ணிநெஞ் சழிந்துகண் ணீர்கொளு மேழையேன் றனக்கின்னும்
புண்ணி னண்ணிய வேலெனத் துயருறிற் புலையனென் செய்கேனே.

மலங்கி வஞ்சகர் மாட்டிரந் தையகோ வருந்திநெஞ் சயர்வுற்றே
கலங்கி நின்றிருக் கருணையை விழைபுமென் கண்ணருள் செய்யாயோ
இலங்கி யெங்கணு நிறைந்தரு ளின்பமே யெந்தையே யெந்தாயே
நலங்கி ளர்ந்திடுந் தணிகையம் பதியமர் நாயக மணிக்குன்றே. 7

சைவ நாயக **சம்பந்த** னாகிய தமிழருட் குன்றேயென்
தெய்வ மேநினை யன்றியோர் துணையிலேன் றிருவரு ளறியாதோ
வைவ தேகொளும் வஞ்சகர் தம்மிடை வருந்திநெஞ் சழிகின்றேன்
செய்வ தோர்கிலேன் கைவிடி லென்செய்கேன் றெளிவிலாச் சிறியேனே.

Koviloor Digital Library

வாழ்வி லாஞ்சிறு களிப்பினு லுன்றனை மறந்திறு மாக்கின்றேன்
தாழ்வி லேசிறி தெண்ணிநொந் தயர்வனென் றன்மைநன் றருளாளா
[1]கேழ்வி மேவிய வடியவர் மகிழ்வுறக் கிடைத்தருள் பெருவாழ்வே
[2]வேழ்வி யோங்கிய தணிகைமா மலைதனில் விளங்கிவீற் றிருப்போனே. 9

என்று மாதர்மே லிச்சைவைத் துன்றனை யெண்ணுவேன் றுயருற்றுற்
கன்று நெஞ்சகக் கள்வனே னன்பினைக் கருத்திடை யெணிற்சால
நன்று நன்றெனக் கெவ்வணம் பொன்னரு ணல்குவை யறிகிலேன்
துன்று மாதவர் போற்றிடுந் தணிகைவாழ் சோதியே சுகவாழ்வே. 10

சிவசண்முக சிவஞானதேசிகன் திருவடிவாழ்க

14. பணித்திறம் வேட்டல்

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

சிவசண்முக சிவஞானதேசிகன் திருவடிவாழ்க

நண்ணேனே மகிழ்வினெடுந் திருத்தணிகை மலையதனை நண்ணி யென்றன்
கண்ணேநீ யமர்ந்தவெழில் கண்குளிரக் காணேனே கண்டு வாரி
உண்ணேனே ஆனந்தக் கண்ணீர்கொண் டாடியுனக் குகப்பாத் தொண்டு
பண்ணேனே நின்புகழைப் பாடேனே வாயாரப் பாவி யேனே. 1

பாவியேன் படுந்துயருக் கிரங்கியருள் தணிகையிலென் பால்வா வென்று
கூவிநீ யாட்கொளவோர் கனவேனுங் காணேனே குணப்பொற் குன்றே
ஆவியே யறிவேயெ னன்பேயென் அரசேநின் னடியைச் சற்றும்
சேவியே னெனினுமெனைக் கைவிடேல் அன்பர்பழி செப்பு வாரே. 2

வாரேனே திருத்தணிகை வழிநோக்கி வந்தென்கண் மணியே நின்று
பாரேனே நின்னழகைப் பார்த்துலக வாழ்க்கைதனிற் படுமிச் சோபந்
தீரேனே நின்னடியைச் சேவித்தா னந்தவெள்ளந் திளைத்தா டேனே
சாரேனே நின்னடியர் சமுகமதைச் சார்ந்தவர்தாள் தலைக்கொள் ளேனே. 3

கொள்ளேனே நீயமர்ந்த தணிகைமலைக் குறவெண்ணங் கோவே வந்தே
அள்ளேனே நின்னருளை யள்ளியுண்டே யானந்தத் தழுந்தி யாடித்
துள்ளேனே நின்றுணைத் துதியேனே துதித்துலகத் தொடர்பை யெல்லாந்
தள்ளேனே நின்னடிக்கீழ்ச் சாரேனே துணையில்லாத் தனிய னேனே. 4

தனியேயிங் குழல்கின்ற பாவியேன் றிருத்தணிகா சலம்வாழ் ஞானக்
கனியேநின் சேவடியைக் கண்ணுரக் கண்டுமனங் களிப்பு றேனே
துனியேசெய் வாழ்விலெந் தெனினென்ன முடியாது சுழல்வே னுநில்
இனியேது செய்வேன்மற் றொருதுணையுங் காணேனிவ் வேழை யேனே. 5

இவ்வேளை யருட்டணிகை யமர்ந்தருளுந் தேவையென திருகண் ணுயை
செவ்வேளை மனங்களிப்பச் சென்றுபுகழ்ந் தானந்தத் தெளிதே னுண்டே
எவ்வேளை யும்பரவி யேத்தேனே அவன்பணிக ளியற்றி டேனே
தெவ்வேளை யடர்க்கவகை தெரியாம லுழல்தருமிச் சிறிய னேனே. 6

1. கேழ்வி, 2. வேழ்வி என்பன — எதுகை நோக்கித் திரிந்தவாறு.

Koviloor Digital Library

சிறியேனிப் போரேகித் திருத்தணிகை மலையமர்ந்த தேவின் பாதங்
குறியேனே வானந்தக் கூத்தாடி யன்பர்கடங் குழாத்துட் சென்றே
அறியேனே பொருணிலையையறிந் தெனதென் பதைவிடுத்திவ் வகில மாயை
முறியேனே உடல்புளக மூடேனே நன்னெறியை முன்னி யின்றே. 7

முன்னேனே திருத்தணிகை யடைந்திடநின் சந்நிதியின் முன்னே நின்று
மன்னேனே வடியருடன் வாழேனே நின்னடியை வாழ்த்தி டேனே
உன்னேனே நன்னிலையை யுலகத்தோ ரெல்லிரு முங்கே வாரும்
என்னேனே நின்பெயரை யார்கூறி னுமவர்க் கிதங்கூ றேனே. 8

கூறேனே திருத்தணிகைக் குற்றனடிப் புகழதனைக் கூறி நெஞ்சந்
தேறேனே நின்னடியார் திருச்சமுகஞ் சேரேனே தீராத் துன்பம்
ஆறேனே நின்னடிய ரூகேனே பவக்கடல்விட் டகன்றே யப்பால்
ஏறேனே வருட்கடலி லிழியேனே வொழியாத வின்ப மார்ந்தே. 9

தேடேனே யென்னுதை னெங்குற்ற னெனவோடித் தேடிச் சென்றே
நாடேனே தணிகைதனி லுயகனே நின்னழகை நாடி நாடிக்
கூடேனே வடியருடன் கோவேயெங் குகனேயெங் குருவே யென்று
பாடேனே வானந்தப் பரவசமுற் றுன்கமலப் பதநண் ணேனே. 10

சிவசண்முக சிவஞானதேசிகன் திருவடிவாழ்க

15. நெஞ்சோடு புலத்தல்

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

சிவசண்முக சிவஞானதேசிகன் திருவடிவாழ்க

வாவா வென்ன வருள்தணிகை மருந்தை யென்கண் மாமணியைப்
பூவாய் நறவை மறந்தவநாள் போக்கின் றதுவும் போதாமல்
மூவா முதலி னருட்கேலா மூட நினைவு மின்றெண்ணி
ஆவா நெஞ்சே யெனைக்கெடுத்தா யந்தோ நீதா னுவாயோ. 1

வாயாத் துரிசற் றிடும்படியோர் வழுத்துந் தணிகை மலையமுதைக்
காயாக் கனியை மறந்தவநாள் கழிக்கின் றதுவும் போதாமல்
ஈயாக் கொடியர் தமக்கன்றி யேவா நினைவு மின்றெண்ணி
மாயா வென்றன் வாழ்வழித்தாய் மனமே நீதான் வாழ்வாயோ. 2

வாழும் படிநல் லருள்புரியு மருவுந் தணிகை மலைத்தேனைச்
சூழுங் கலப மயிலரசைத் துதியாப் பவமும் போதாமல்
வீழுங் கொடியர் தமக்கன்றி மேவா நினைவு மேவியின்று
தாழும் படியென் றனையலைத்தாய் சவலை மனமே சாகாயோ. 3

காயோ மெனநின் றவர்க்கினிய கனியாந் தணிகைக் கற்பகத்தைப்
போயோர் கணமும் போற்றுகிலாய் புன்மை புரிந்தாய் புலங்கெட்டாய்
பேயோ வெங்குந் திரிந்தோடிப் பேணு வென்பைப் பேணுகின்ற
நாயோ மனமே நீயுனைநா னம்பி வாளா நலிந்தேனே. 4

Koviloor Digital Library

தேனுங் கடமுந் திகழ்தணிகைத் தேவை நினையாய் தீநரக
மானு நடையி லுழல்கின்ருய் மனமே யுன்றன் வஞ்சகத்தால்
நானு மிழந்தேன் பெருவாழ்வை நாய்போ னலிந்திங் கவமேநீ
தானு மிழந்தா யென்னேயுன் றன்மை யிழிவாந் தன்மையதே. 5

தன்னு லுலகை நடத்துமருட் சாமி தணிகை சாராமற்
பொன்னுன் மண்ணுற் பூவையராற் புலம்பி வருந்தும் புன்னெஞ்சே
உன்னு லென்ற னுயர்விழந்தே னுற்ரு ரிழந்தே னுன்செயலைச்
சொன்னுல் நகைப்ப ரெனைவிட்டுந் தொலையா யிங்கு நிலையாயே. 6

நிலைக்குந் தணிகை யென்னரசை நீயு நினையாய் நினைப்பதையுங்
கலைக்குந் தொழில்கொண் டெனைக்கலக்கங் கண்டாய் பலனென் கண்டாயே
முலைக்குங் கலைக்கும் விழைந்தவமே முயங்கு மூட முழுநெஞ்சே
அலைக்குங் கொடிய விடநீயென் றறிந்தேன் முன்ன ரறிந்திலனே. 7

இலதை நினைப்பாய் பித்தர்கள்போ லேங்கா நிற்பாய் தணிகையிலென்
குலதெய் வமுமாய்க் கோவாய்ச்சற் குருவாய் நின்ற குகனருளே
நலதென் றறியா யான்செய்த நன்றி மறந்தாய் நாணுதென்
வலதை யழித்தாய் வலதொடுநீ வாழ்வாய் கொல்லோ வன்னெஞ்சே. 8

நெஞ்சே புகந்த துணையெனக்கு நீயென் றறிந்தே நேசித்தேன்
மஞ்சேர் தணிகை மலையமுதை வாரிக் கொளும்போ தென்னுள்ளே
நஞ்சே கலந்தா யுன்னுறவு நன்றே யினியுன் னட்பகன்ருல்
உஞ்சே னில்லையேல் வன்னரகத் துள்ளேன் கொள்ளே னென்றையுமே. 9

கொள்ளும் பொழில்சூழ் தணிகைமலைக் கோவை நினையா தெனைநரகில்
தள்ளும் படிக்கோ தலைப்பட்டாய் சகத்தின் மடவார் தம்மயலாங்
கள்ளுண் டந்தோ வெறிகொண்டாய் கலைத்தா யென்னைக் கடந்தோர்கள்
எள்ளும் படிவந் தலைக்கின்ரு யெனக்கென் றெங்கே யிருந்தாயோ. 10

இருந்தா யிங்கு கண்டவிடத் தேகா நின்ரு யவ்விடத்தும்
பொருந்தாய் மீண்டும் புகுவாய்பின் போவாய் வருவாய் புகழ்தணிகை
மருந்தாய் நின்ற குகனடியை வழுத்தா யென்னையும் வலிக்கின்ருய்
திருந்தாய் நெஞ்சே நின்செயலைச் செப்ப வெனக்குத் திடுக்கிடுமே.

சிவசண்முக சிவஞானதேசிகன் திருவடிவாழ்க

16. புன்மை நினைந்திரங்கல்

கட்டளைக் கலிப்பா

சிவசண்முக சிவஞானதேசிகன் திருவடிவாழ்க

மஞ்சட் பூச்சின் மினுக்கி லிளைஞர்கள்
மயங்க வேசெயும் வாள்விழி மாதர்பாற்
கெஞ்சிக் கொஞ்சி நிறையழிந் துன்னருட்
கிச்சை நீத்துக் கிடந்தன னுயினேன்

Koviloor Digital Library

மஞ்சுற் றோங்கும் பொழிற்றணி காசல
　வள்ள லென்வினை மாற்றுதல் நீதியே
தஞ்சத் தால்வந் தடைந்திடு மன்பர்கள்
　தம்மைக் காக்குந் தனியருட் குன்றமே. 1

முலையைக் காட்டி மயக்கியென் னுருயிர்
　முற்றும் வாங்குறு முண்டைகள் நன்மதி
குலையக் காட்டுங் கலவிக்கி சைந்துநின்
　கோலங் காணக் குறிப்பில னுயினேன்
நிலையைக் காட்டுநல் லானந்த வெள்ளமே
　நேச நெஞ்சக நின்றொளிர் தீபமே
கலையைக் காட்டு மதிதவழ் நற்றணி
　காச லத்தமர்ந் தோங்கதி காரனே. 2

வஞ்ச மேகுடி கொண்டு விளங்கிய
　மங்கை யர்க்கு மயலுறந் தேயவர்
நஞ்ச மேவு நயனத்திற் சிக்கிய
　நாயி னேனுனை நாடுவ தென்றுகாண்
கஞ்ச மேவு மயன்புகழ் சோதியே
　கடப்ப மாமலர்க் கந்த சுகந்தனே
தஞ்ச மேயென வந்தவர் தம்மையாள்
　தணிகை மாமலைச் சற்குரு நாதனே. 3

பாவ மோருரு வாகிய பாவையர்
　பன்னு கண்வலைப் பட்டு மயங்கியே
கோவை வாயிதழ்க் கிச்சைய தாகிநின்
　குரைக ழற்கன்பு கொண்டில னுயினேன்
மேவு வார்வினை நீக்கிய ளித்திடும்
　வேல னேதணி காசல மேலனே
தேவர் தேடருஞ் சீரருட் செல்வனே
　தெய்வ யானை திருமண வாளனே. 4

கரத்தைக் காட்டியே கண்களை நீட்டியே
　கடைய னேனுயிர் வாட்டிய கன்னியர்
உரத்தைக் காட்டி மயக்க மயங்கினேன்
　உன்றன் பாத வுபயத்தைப் போற்றிலேன்
புரத்தைக் காட்டு நகையி னெரித்ததோர்
　புண்ணி யர்க்குப் புகல்குரு நாதனே
வரத்தைக் காட்டு மலைத்தணி கேசனே
　வஞ்ச னேற்கருள் வாழ்வு கிடைக்குமோ. 5

காச மேகங் கடும்பிணி சூலைமோ
　காதி யாற்றந்து கண்கலக் கஞ்செயும்
மோச மேநிச மென்றுபெண் பேய்களை
　முன்னி னேனினை முன்னில னுயினேன்

Koviloor Digital Library

பாச நீக்கிடு மன்பர்கள் போலெனைப்
பாது காக்கும் பரமுனைக் கையனே
தேசம் யாவும் புகழ்தணி காசலச்
செல்வ மேயருட் சிற்சுக வாரியே. 6

ஐய மேற்றுத் திரிபவ ராயினும்
ஆசை யாம்பொரு ளீந்திட வல்லரேற்
குய்யங் காட்டு மடந்தையர் வாய்ப்பட்டுன்
கோல மாமலர்ப் பாதங் குறித்திலேன்
மையு லாம்பொழில் சூழுந் தணிகைவாழ்
வள்ள லேவள்ளி நாயக னேபுவிச்
சைய றும்பர ஞானிகள் போற்றிடுஞ்
சாமி யேயெனைக் காப்பதுன் றன்மையே. 7

கண்ணைக் காட்டி யிருமுலை காட்டிமோ
கத்தைக் காட்டி யகத்தைக்கொண் டேயழி
மண்ணைக் காட்டிடு மாய வனிதைமார்
மாலைப் போக்கினின் காலைப் பணிவனோ
பண்ணைக் காட்டி யுருகு மடியர்தம்
பத்திக் காட்டிமுத் திப்பொரு ளீதென
விண்ணைக் காட்டுந் திருத்தணி காசல
வேல னேயுமை யாளருள் பாலனே. 8

படியின் மாக்களை வீழ்த்தும் படுகுழிப்
பாவம் யாவும் பழகுறும் பாழ்ங்குழி
குடிகொ ளுற்றக் குழிசிறு நீர்தருங்
கொடிய வூற்றுக் குழிபுழுக் கொள்குழி
கடிம லக்குழி யாகுங் கருக்குழிக்
கள்ள மாதரைக் கண்டு மயங்கினேன்
ஓடிவில் சீர்த்தணி காசல நின்புகழ்
ஓதி லேனெனக் குண்டுகொ லுண்மையே. 9

கச்சுக் கட்டிம ணங்கட்டிக் காமுகர்
கண்ணைக் கட்டி மனங்கட்டி வஞ்சகம்
வச்சுக் கட்டிய வன்கழற் கட்டியு
மண்ணின் கட்டியு மானு முலைக்கட்டிக்
கிச்சைக் கட்டி யிடும்பையெ னுஞ்சுமை
யேறக் கட்டிய வெற்கருள்வாய் கொலோ
பிச்சைக் கட்டிய பித்தன் புதல்வனே
பெருமை கட்டும் பெருந்தணி கேசனே. 10

சிவசண்முக சிவஞானதேசிகன் திருவடிவாழ்க

Koviloor Digital Library

17. திருவடிசூட விழைதல்

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

சிவசன்முக சிவஞானதேசிகன் திருவடிவாழ்க

தேனா ரலங்கற் குழன்மடவார் திறத்தின் மயங்காத் திறலடைதற்
கானார் கொடியெம் பெருமான்ற னருட்கண் மணியே யற்புதமே
கானார் பொழில்சூழ் திருத்தணிகைக் கரும்பே கருணைப் பெருங்கடலே
வானா ரமுதே நின்றிருத்தா ளடியேன் முடிமேல் வைப்பாயே. 1

தாழுங் கொடிய மடவியர்தஞ் சழக்கா லுழலாத் தகையடைந்தே
ஆழும் பரமா னந்தவெள்ளத் தழுந்திக் களிக்கும் படிவாய்ப்ப
ஊழுந் தியசீ ரன்பர்மனத் தொளிருஞ் சுடரே யுயர்தணிகை
வாழும் பொருளே நின்றிருத்தா ளடியேன் முடிமேல் வைப்பாயே. 2

மின்னுண் மருங்குற் பேதையர்தம் வெளிற்று மயக்குண் மேவாமே
உன்னும் பரம யோகியர்தம் முடனே மருவி யுனைப்புகழ்வான்
பின்னுஞ் சடையெம் பெருமாற்கோர் பேறே தணிகைப் பிறங்கலின்மேன்
மன்னுஞ் சுடரே நின்றிருத்தா ளடியேன் முடிமேல் வைப்பாயே. 3

ஆறாத் துயரந் தருங்கொடியார்க் காளா யுழன்றிங் கலையாதே
கூறாப் பெருமை நின்னடியார் கூட்டத் துடன்போய்க் குலாவும்வண்ணந்
தேறாப் பொருளாஞ் சிவத்தொழுகுந் தேனே தணிகைத் திருமலைவாழ்
மாறாச் சுகமே நின்றிருத்தா ளடியேன் முடிமேல் வைப்பாயே. 4

விரத மழிக்குங் கொடியார்தம் விழியான் மெலியா துனைப்புகழுஞ்
சரத ரவையிற் சென்றுநின்சீர் தனையே வழுத்துந் தகையடைவான்
பரத மயின்மேற் செயுந்தணிகைப் பரனே வெள்ளிப் பருப்பதம்வாழ்
வரதன் மகனே நின்றிருத்தா ளடியேன் முடிமேல் வைப்பாயே. 5

வெயின்மேற் கீட மெனமடவார் வெய்ய மயற்கண் வீழாமே
அயின்மேற் கரங்கொள் நினைப்புகழு மடியார் சவையி னடையும்வகைக்
குயின்மேற் குலவுந் திருத்தணிகைக் குணப்பொற் குன்றே கொள்கலப
மயின்மேன் மணியே நின்றிருத்தா ளடியேன் முடிமேல் வைப்பாயே. 6

தனமுங் கடந்தே நாரியர்மா றனையுங் கடந்தே தவமழிக்குஞ்
சினமுங் கடந்தே நினைச்சேர்ந்தோர் தெய்வச் சபையிற் சேர்ந்திடவே
வனமுங் கடமுந் திகழ்தணிகை மலையின் மருந்தே வாக்கினொடு
மனமுங் கடந்தோய் நின்றிருத்தா ளடியேன் முடிமேல் வைப்பாயே. 7

கல்லாக் கொடிய மடவார்தங் காமக் குழிக்கண் வீழாமே
நல்லார்க் கெல்லா நல்லவநின் னாமந் துதிக்கு நலம்பெறவே
சொல்லாற் புனைந்த மாலையொடுந் தொழுது தணிகை தனைத்துதிக்க
வல்லார்க் கருளு நின்றிருத்தா ளடியேன் முடிமேல் வைப்பாயே. 8

Koviloor Digital Library

கள்ளக் கயற்கண் மடவார்தங் காமத் துழலா துனைநினைக்கும்
உள்ளத் தவர்பாற் சேர்ந்துமகிழ்ந் துண்மை புணர்ந்தங் குற்றிடுவான்
அள்ளற் பழனத் திருத்தணிகை யரசே ஞான வமுதளிக்கும்
வள்ளற் பெருமா னின்றிருத்தா ளடியேன் முடிமேல் வைப்பாயே. 9

பாகைப் பொருவு மொழியுடையீ ரென்று மடவார்ப் பழிச்சாமல்
ஓகைப் பெறுநின் றிருத்தொண்ட ருடன்சேர்ந் துண்மை யுணர்ந்திடுவான்
தோகைப் பரிமேல் வருந்தெய்வ சூளா மணியே திருத்தணிகை
வாகைப் புயனே நின்றிருத்தா ளடியேன் முடிமேல் வைப்பாயே. 10

சிவசண்முக சிவஞானதேசிகன் திருவடிவாழ்க

18. ஆற்றாவிரக்கம்

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

சிவசண்முக சிவஞானதேசிகன் திருவடிவாழ்க

தணிகை மலையைச் சாரேனோ சாமி யழகைப் பாரேனோ
பிணிகை யறையைப் போரேனோ பேரா வன்பு கூரேனோ
அணிசெய் யருள்நீ ராரேனோ ஆறாத் தாகந் தீரேனோ
பணிசெய் தொழும்பிற் சேரேனோ பார்மீ திரங்கு நீரேனே. 1

எளியே னென்ன விருப்பாரோ வேழைக் கிரங்கும் விருப்பாரோ
வளியேன் பேர்நெஞ் சிருப்பாரோ வழியாக் காமந் திருப்பாரோ
களியே னென்ன வுருப்பாரோ கருது மருட்குக் கருப்பாரோ
தெளியேன் யானென் செய்கேனே தென்பாற் றணிகைப் பொருப்பாரே. 2

செய்கோள் தணிகை நாடேனோ செவ்வேள் புகழைப் பாடேனோ
கைகள் கூப்பி யாடேனோ கருணைக் கடலில் நீடேனோ
மெய்கொள் புளக மூடேனோ மெய்யன் பர்கள்பாற் கூடேனோ
பொய்கொ ளுலகோ டோடேனோ புவிமீ திருகான் மாடேனே. 3

வந்தென் னெதிரில் நில்லாரோ மகிழ வொருசொல் சொல்லாரோ
முந்தும் மதனை வெல்லாரோ மோகந் தீரப் புல்லாரோ
கந்த னெனும்பே ரல்லாரோ கருணை நெஞ்சங் கல்லாரோ
சந்தத் தணிகை யில்லாரோ சகத்தி லெல்லாம் வல்லாரே. 4

நாட்டுந் தணிகை நண்ணேனோ நாதன் புகழை யெண்ணேனோ
கூட்டுந் தொழும்பு பண்ணேனோ குறையா வருள்நீ ருண்ணேனோ
சூட்டு மயக்கை மண்ணேனோ தொழும்ப ரிடத்தை யண்ணேனோ
காட்டு மவர்தாள் கண்ணேனோ கழியா வாழ்க்கைப் புண்ணேனே. 5

காமப் பயலைத் தடுப்பாரோ கடப்ப மலர்த்தார் கொடுப்பாரோ
வேமத் தனத்தைக் கடுப்பாரோ வென்மே லன்பை விடுப்பாரோ
மாமற் றுருவீ டடுப்பாரோ மனதிற் கோடாந் தொடுப்பாரோ
தாமத் தாழ்வைக் கெடுப்பாரோ தணிகை தனில்வே லெடுப்பாரே. 6

Koviloor Digital Library

காவி மலைக்கண் வதியேனோ கண்ணுண் மணியைத் துதியேனோ
பாவி மயலை மிதியேனோ பரமா னந்தத் துதியேனோ
ஓவி லருளைப் பதியேனோ வுயர்ந்த தொழும்பிற் கதியேனோ
தாவில் சுகத்தை மதியேனோ சற்றும் பயனில் லொதியேனே. 7

வருந்துந் தனிமுன் மன்னுரோ வருத்த முனக்கே னென்னுரோ
இருந்தென் னிடத்தே துன்னுரோ இணைத்தா ளிய வுன்னுரோ
பொருந்திங் கயலா ரன்னுரோ பொருளி தென்று பன்னுரோ
செருந்தி மலருந் திருத்தணிகைத் தேவ ரெவர்க்கு முன்னுரே. 8

தணிகா சலம்போய்த் தழையேனோ சாமி திருத்தாள் விழையேனோ
பணிகா தலித்துப் பிழையேனோ பாடி மனது குழையேனோ
திணிகா ணுலகை யழையேனோ சேர்ந்தவ் வீட்டுள் நுழையேனோ
பிணிகா ணுலகிற் பிறந்துழன்றே பேதுற் றலையும் பழையேனே. 9

மன்னுங் குவளை யியாரோ மதவேண் மதத்தைக் காயாரோ
இன்னுங் கோப மோயாரோ வென்றுய் தனக்குத் தாயாரோ
துன்னு மிரக்கந் தோயாரோ துகளேன் றுயரை யாயாரோ
பன்னும் வளங்கள் செறிந்தோங்கும் பணைகொள் தணிகைத் தூயாரே. 10

சிவசண்முக சிவஞானதேசிகன் திருவடிவாழ்க

19. ஏழைமையினிரங்கல்

எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

சிவசண்முக சிவஞானதேசிகன் திருவடிவாழ்க

தேனே யுவங்கொள் தெளிவே யகண்ட சிதமேவி நின்ற சிவமே
கோனே கனிந்த சிவபோத ஞான குருவே விளங்கு குகனே
தானே தனக்கு நிகராய் விளங்கு தணிகாச லத்தெம் மரசே
நானேழை யிங்கு மனநொந்து நொந்து நலிகின்ற செய்கை நலமோ. 1

நலமேவு தொண்ட ரயனுதி தேவர் நவையேக நல்கு தணிகா
சலமேவி யுன்ற னிருதாள் புகழ்ந்து தரிசிப்ப தென்று புகலாய்
நிலமேவு கின்ற சிவயோக ருள்ள நிகழ்கின்ற ஞான நிறைவே
வலமேவு வேல்கை யொளிசேர் கலாப மயிலேறி நின்ற மணியே. 2

மணியே கலாப மலைமே லமர்ந்த மதியே நினைச்சொன் மலரால்
அணியே னலன்பு மமையேன் மனத்தி லடியா ரடிக்கண் மகிழ்வாய்ப்
பணியே னினைந்து பதையே னிருந்து பருகே னுவந்த படியே
யெணியே நினைக்கி லவமாமிவ் வேழை யெதுபற்றி யுய்வ தரசே. 3

உய்வண்ண மின்றி யுலகாதரத்தி லுழல்கின்ற மாய மடவார்
பொய்வண்ண மொன்றின் மனமாழ்கி யன்மை புரிதந்து நின்ற புலையேன்
மெய்வண்ண மொன்று தணிகாச லத்து மிளிர்கின்ற தேவ விறல்வேற்
கைவண்ண வுன்ற னருள்வண்ண மான கழல்வண்ண நண்ண லுளதோ. 4

Koviloor Digital Library

நண்ணாத வஞ்ச ரிடநாடி நெஞ்ச நனிநொந்து நைந்து நவையாம்
புண்ணாகி நின்ற வெளியேனை யஞ்சல் புரியாது நம்பொ னடியை
எண்ணாத பாவி யிவனென்று தள்ளி னென்செய்வ துய்வ தறியேன்
தண்ணார் பொழிற்கண் மதிவந் துலாவு தணிகா சலத்தி றைவனே. 5

இறையேனு முன்ற னடிபெண் ணியங்கி யிழுதென்ன நெஞ்ச மிளகேன்
மறையோது முன்ற னருள்பெற்ற தொண்டர் வழிபட் டலங்க லணியேன்
குறையோடு மிங்கு மயல்கொண்டு நின்ற கொடியேனை யாள லுளதோ
நிறையோர் வணங்கு தணிகாச லத்தில் நிலைபெற் றிருக்கு மவனே. 6

அவநாள் கழிக்க வறிவே னலாது னடிபேணி நிற்க வறியேன்
தவநாடு மன்ப ரொடுசேர வந்து தணிகாச லத்தை யடையேன்
எவனா னெனக்கு மவணீ யிருக்கு மிடமீயி லுன்ற னடியார்
இவனா ரிவன்ற னியல்பென்ன வென்னி லெவனென் றுரைப்பை யெனையே. 7

எனையா னறிந்து னடிசேர வுன்னை யிறையேனு நெஞ்சி னிதமாய்
நினையே னயர்ந்து நிலையற்ற தேக நிசமென் றுழன்று துயர்வேன்
தனையே னினன்ப னெனவோதி லியாவர் தகுமென் றுரைப்ப ரரசே
வனையோர் கொளுஞ்செய் தணிகாச லத்து மகிழ்வோ டமர்ந்த வமுதே. 8

முதுவோர் வணங்கு தணிகா சலத்து முதலேயிவ் வேழை முறியேன்
மதுவான் மயங்கு மளிபோன் மயங்கி மதியாது நின்ற பிழையால்
விதுவாகி யன்ப ருளமேவு நீகை விடிலேழை யெங்கு மெலிவேன்
இதுநீதி யல்ல வெனவுன் றனக்கு மெவர்சொல்ல வல்ல ரரசே. 9

சிவசண்முக சிவஞானதேசிகன் திருவடிவாழ்க

20. பணித்திறஞ் சாலாப்பாடிழிவு

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

சிவசண்முக சிவஞானதேசிகன் திருவடிவாழ்க

அடுத்திலே னின்னடிய ரவைக்குட் சற்றும்
அன்பிலே னின்றொழும்ப னாகேன் வஞ்சந்
தடுத்திலேன் றணிகைதனிற் சென்று நின்னைத்
தரிசனஞ்செய் தேமதுரத் தமிழ்ச்சொன் மாலை
தொடுத்திலே னழுதுநின தருளை வேண்டித்
தொழுதுதொழு தானந்தத் தாய்நீ ராடேன்
எடுத்திலே னல்லனென்னும் பெயரை யந்தோ
ஏன்பிறந்தேன் புவிச்சுமையா விருக்கின் றேனே. 1

திரப்படுவேன் மையல்புரி மாய வாழ்வில்
தியங்குவேன் சிறிதேனுந் தெளிவொன் றில்லேன்
மரப்படுவேன் சிதடருடன் திரிவேன் வீணே
மங்கையர்தங் கண்களெனும் வலைக்குள் வீழ்வேன்

Koviloor Digital Library

கரப்பவர்க்கு முற்படுவேன் கருணை யில்லேன்
கண்ணனையாய் நின்றணிகை மலையைக் காணேன்
இரப்பவர்க்கோ ரணுவளவு மீயேன் பேயேன்
ஏன்பிறந்தேன் புவிச்சுமையா யிருக்கின் றேனே. 2

செய்திலே னின்றொண்ட ரடிக்குற் றேவல்
திருத்தணிகை மலையைவலஞ் செய்து கண்ணீர்ப்
பெய்திலேன் புலனைந்து மொடுக்கி வீதல்
பிறத்தலெனுங் கடல்நீந்தேன் பெண்கள் தம்மை
வைதிலேன் மலர்கொய்யேன் மாலை சூட்டேன்
மணியேநின் றிருப்புகழை வழுத்தே னின்பால்
எய்திலே னிவ்வுடல்கொண் டேழை யேன்யான்
ஏன்பிறந்தேன் புவிச்சுமையா யிருக்கின் றேனே. 3

சீர்கொண்டார் புகழ்தணிகை மலையிற் சேரேன்
சிவபெருமான் பெற்றபெருஞ் செல்வ மேநின்
பேர்கொண்டார் தமைவணங்கி மகிழேன் பித்தேன்
பெற்றதே யமையுமெனப் பிறங்கேன் மாதர்
வார்கொண்டார் முலைமலைவீழ்ந் துருள்வே னாளும்
வஞ்சமே செய்திடுவேன் மதியொன் றில்லேன்
ஏர்கொண்டா ரிகழ்ந்திடவிங் கேழை யேன்யான்
ஏன்பிறந்தேன் புவிச்சுமையா யிருக்கின் றேனே. 4

காமாந்த காரியாய் மாத ரல்குற்
கடல்வீழ்ந்தேன் மதிதாழ்ந்தேன் கவலை சூழ்ந்தேன்
நாமாந்த கனையுதைத்த நாத னின்ற
நாயகமா மணியேநன் னலமே யுன்றன்
பூமாந்தண் சேவடியைப் போற்றே னோங்கும்
பொழில்கொள்தணி காசலத்தைப் புகழ்ந்து பாடேன்
ஏமாந்த பாவியே னந்தோ வந்தோ
ஏன்பிறந்தேன் புவிச்சுமையா யிருக்கின் றேனே. 5

நன்றறியேன் தீங்கனைத்தும் பறியேன் பொல்லா
நங்கையர்தங் கண்மாய நவையைச் சற்றும்
வென்றறியேன் கொன்றறிவார் தம்மைக் கூடும்
வேடனேன் றிருத்தணிகை வெற்பி னின்பாற்
சென்றறியே னிலையென்ப தறிவே னொன்றுஞ்
செய்தறியேன் சிவதருமஞ் செய்வோர் நல்லோர்
என்றறியேன் வெறியேனிங் கந்தோ வந்தோ
ஏன்பிறந்தேன் புவிச்சுமையா யிருக்கின் றேனே. 6

அல்லார்க்குங் குழலார்மே லாசை வைப்பேன்
ஐயாநின் றிருத்தாண்மே லன்பு வையேன்
செல்லார்க்கும் பொழிற்றணிகை யெங்கே யென்று
தேடிடே னின்புகழைச் சிந்தை செய்யேன்

Koviloor Digital Library

கல்லார்க்குங் கடுமனத்தேன் வன்க ணேன்புன்
கண்ணினே னுதவாத கையேன் பொய்யேன்
எல்லார்க்கும் பொல்லாத பாவி யேன்யான்
ஏன்பிறந்தேன் புவிச்சுமையா யிருக்கின் றேனே. 7

அரும்பாய நகைமடவார்க் காளாய் மாளா
அலைகின்றே னறிவென்ப தறியே னின்பாற்
றிரும்பாத பாதகனேன் றிருவொன் றில்லேன்
திருத்தணிகை மலைக்கேகச் சிந்தை செய்யேன்
கரும்பாய வெறுத்துவேம் பருந்தும் பொல்லாக்
காக்கையொத்தேன் சற்றேனுங் கனித மில்லா
இரும்பாய வன்னெஞ்சக் கள்வ னேன்யான்
ஏன்பிறந்தேன் புவிச்சுமையா யிருக்கின் றேனே. 8

அம்பாத னெடுங்கண்ணார்க் கிச்சை கொள்வேன்
அகமலர முகமலர்வோ டருள்செய் யுன்றன்
செம்பாத மலரேத்தே னிலவு காத்தேன்
திருத்தணிகை யேநமது செல்வ மென்றே
நம்பாத கொடியேனல் லோரைக் கண்டால்
நாணிலே னடுங்கிலே னுயிற் பொல்லேன்
எம்பாத கத்தையெடுத் தியார்க்குச் சொல்வேன்
ஏன்பிறந்தேன் புவிச்சுமையா யிருக்கின் றேனே. 9

பண்ணேனின் புகழ்சொல்வோர் தமக்குப் பூசை
பாடேனின் றிருச்சீரைப் பரமநின்ற
கண்ணேநின் றணிகைதனைக் கண்டு போற்றேன்
கைகுவியேன் மெய்குளிரேன் கண்ணீர் பாயேன்
உண்ணேனல் லானந்த வமுதை யன்பர்
உடனுகே னேகாந்தத் துறவோ ரெண்ணம்
எண்ணேன்வன் றுயரமண்ணேன் மனஞ்செம் புண்ணேன்
ஏன்பிறந்தேன் புவிச்சுமையா யிருக்கின் றேனே. 10

சிவசண்முக சிவஞானதேசிகன் திருவடிவாழ்க

21. காணப்பத்து

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

சிவசண்முக சிவஞானதேசிகன் திருவடிவாழ்க

வரங்கொ ளடியர் மனமலரின் மகிழ்வுற் றமர்ந்த மாமணியே
திரங்கொள் தணிகை மலைவாழுஞ் செல்வப் பெருக்கே சிற்பரமே
தரங்கொ ளுலக மயலகலத் தாழ்ந்துள் ளுருக வழுதழுது
கரங்கொள் சிரத்தோ டியானுன்னைக் கண்க ளாரக் கண்டிலனே. 1

Koviloor Digital Library

வல்லி யொருபால் வானவர்தம் மகளாண் டொருபால் வரமயின்மேல்
எல்லி னிலங்கு நெட்டிலைவே லேந்தி வருமென் னிறையவனே
சொல்லி யடங்காத் துயரியற்றுந் துகள்சேர் சனனப் பெருவேரைக்
கல்லி யெறிந்து நின்னுருவைக் கண்க ளாரக் கண்டிலனே. 2

உருத்துள் ளிகலுஞ் சூர்முதலை யொழித்து வானத் தொன்பதியைத்
திருத்து மரைசே தென்றணிகைத் தெய்வ மணியே சிவஞானம்
அருத்து நினது திருவருள்கொண் டாடிப் பாடி யன்பதனாற்
கருத்துள் ளுருகி நின்னுருவைக் கண்க ளாரக் கண்டிலனே. 3

போத விருத்த லெனநினையாப் புனிதர் சனனப் போரோடு
சாத லெற்றுந் திருத்தணிகைச் சைவக் கனியே தற்பரமே
ஓத லறியா வஞ்சகர்பா லுழன்றே மாதர்க் குள்ளுருகுங்
காத லகற்றி நின்னுருவைக் கண்க ளாரக் கண்டிலனே. 4

வீட்டைப் பெறுவோ ருள்ளகத்து விளங்கும் விளக்கே விண்ணோர்தம்
நாட்டை நலஞ்செய் திருத்தணிகை நகத்தி லமர்ந்த நாயகமே
கேட்டைத் தருவஞ் சகவுலகிற் கிடைத்த மாய வாழ்க்கையெனுங்
காட்டைக் கடந்து நின்னுருவைக் கண்க ளாரக் கண்டிலனே. 5

மட்டித் தளறு படக்கடலை மலைக்குங் கொடிய மாவுருவைச்
சட்டித் தருளுந் தணிகையிலென் தாயே தமரே சற்குருவே
எட்டிக் கனியா மிவ்வுலகத் திடர்விட் டகல நின்பதத்தைக்
கட்டித் தழுவி நின்னுருவைக் கண்க ளாரக் கண்டிலனே. 6

இலக்க மறியா விருவினையா லிம்மா னிடமொன் றெடுத்தடியேன்
விலக்க மடையா வஞ்சகர்பால் வீணாட் போக்கி மேவிமனத்
தலக்க ணியற்றும் பொய்வாழ்வி லலைந்தேன் றணிகை யரசேயக்
கலக்க மகன்று நின்னுருவைக் கண்க ளாரக் கண்டிலனே. 7

விரைவாய் கடப்பந் தாரணிந்து விளங்கும் புயனே வேலோனே
தரைவாய் தவத்தாற் றணிகையமர் தருமக் கடலே தனியடியேன்
திரைவாய் சனனக் கடற்படிந்தே தியங்கி யலைந்தேன் சிவஞானக்
கரைவா யேறி நின்னுருவைக் கண்க ளாரக் கண்டிலனே. 8

பள்ள வுலகப் படுகுழியிற் பரிந்தங் குழலா தானந்த
வெள்ளத் தழுந்து மன்பர்விழி விருந்தே தணிகை வெற்பரசே
உள்ள மகல வங்குமிங்கு மோடி யலையும் வஞ்சநெஞ்சக்
கள்ள மகற்றி நின்னுருவைக் கண்க ளாரக் கண்டிலனே. 9

அடலை யணிந்தோர் புறங்காட்டி லாடும் பெருமா னளித்தருளும்
விடலை யெனமூ வரும்புகழும் வேலோய் தணிகை மேலோயே
நடலை யுலக நடையளற்றை நண்ணா தோங்கு மானந்தக்
கடலை யடுத்து நின்னுருவைக் கண்க ளாரக் கண்டிலனே. 10

சிவசண்முக சிவஞானதேசிகன் திருவடிவாழ்க

Koviloor Digital Library

22. பணித்திறஞ் சாலாமை

கலி விருத்தம்

சிவசண்முக சிவஞானதேசிகன் திருவடிவாழ்க

வஞ்சகப் பேதையர் மயக்கி லாழ்ந்துழல்
நெஞ்சகப் பாவியே னினைந்தி லேனையோ
வெஞ்சகப் போரினை விட்டு ளோர்புகழ்
தஞ்சகத் தணிகைவாழ் தரும வானையே. 1

வாரிகர் கூந்தலார் வன்க ணுன்மிக
மானிகழ் பேதையேன் மதித்தி லேனையோ
தானிரும் புகழ்கொளுந் தணிகை மேலருட்
டேனிருந் தொழுகிய செங்க ரும்பையே. 2

கருங்கடு நிகர்நெடுங் கண்ணி னார்மயல்
ஒருங்குறு மனத்தினே னுன்னி லேனையோ
தருப்புகழ் மிகுந்திடுந் தணிகை மாமலை
மருங்கமர்ந் தன்பருண் மன்னும் வாழ்வையே. 3

வைவளர் வாட்கணார் மயக்கில் வீழ்ந்தருப்
பொய்வளர் நெஞ்சினேன் போற்றி லேனையோ
மெய்வள ரன்பர்கண் மேவி யேத்துறுஞ்
செய்வளர் தணிகையிற் செழிக்குந் தேனையே. 4

செழிப்படு மங்கையர் தீய மாயையிற்
பழிப்படு நெஞ்சினேன் பரவி லேனையோ
வழிப்படு மன்பர்கள் வறுமை நீக்கியே
பொழிற்படுந் தணிகையிற் பொதிந்த பொன்னையே. 5

பொதிதரு மங்கையர் புளகக் கொங்கைமேல்
வதிதரு நெஞ்சினேன் மதித்தி லேனையோ
மதிதரு மன்பர்தம் மனத்தி லெண்ணிய
கதிதருந் தணிகைவாழ் கற்ப கத்தையே. 6

சிவசண்முக சிவஞானதேசிகன் திருவடிவாழ்க

23. குறை நேர்ந்த பத்து

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

சிவசண்முக சிவஞானதேசிகன் திருவடிவாழ்க

வான்பிறந்தார் புகழ்தணிகை மலையைக் கண்டு
வள்ளலே நின்புகழை மகிழ்ந்து கூறேன்
தேன்பிறந்த மலர்க்குழலார்க் காளா வாளா
திரிகின்றேன் புரிகின்றேன் றீமை நாளும்

Koviloor Digital Library

ஊன்பிறந்த வுடலோம்பி யவமே வாழ்நாள்
ஒழிக்கின்றேன் பழிக்காளா யுற்றே னந்தோ
ஏன்பிறந்தே னேன்பிறந்தேன் பாவி யேன்யான்
என்குறையை யெவர்க்கெடுத்திங் கியம்பு கேனே. 1

மெய்யாவோ நற்றணிகை மலையைச் சார்ந்து
மேன்மையுறும் நின்புகழை விரும்பி யேத்தேன்
உய்யாவோ வன்னெறியேன் பயன்ப டாத
ஓதியனையேன் எட்டிதனை யொத்தே னன்பர்
பொய்யாவோ டெனமடவார் போகம் வேட்டேன்
புலையனேன் சற்றேனும் புனித மில்லேன்
ஐயாவோ நாணுமற் பாவி யேன்யான்
யார்க்கெடுத்தென் குறைதன்னை யறைகு வேனே. 2

வாட்செல்லா நெடுங்கண்ணார் மயலில் வீழ்ந்து
மனம்போன வழிசென்று வருந்தா நின்றேன்
சேட்செல்லார் வரைத்தணிகைத் தேவ தேவே
சிவபெருமான் பெற்றபெருஞ் செல்வ மேநான்
நாட்செல்லா நின்றதினி யென்செய் கேனோ
நாயினேன் பிழைதன்னை நாடி நின்பாற்
கோட்சொல்லா நிற்பரெனி லென்னு மோவென்
குறையையெடுத் தெவர்க்கெளியேன் கூறு கேனே. 3

பொல்லாத மங்கையர்த மயற்குள் ளாகும்
புலையமனத் தால்வாடிப் புலம்பு கின்றேன்
கல்லாத பாவியென்று கைவிட் டாயோ
கருணையுரு வாகியசெங் கரும்பே மேரு
வில்லான்றன் செல்வமே தணிகை மேவும்
மெய்ஞ்ஞான வொளியே யிவ்வினையேன் றுன்பம்
எல்லாநீ யறிவாயே யறிந்தும் வாரா
திருந்தாலென் குறையையெவர்க் கியம்பு கேனே. 4

முன்னறியேன் பின்னறியேன் மாதர் பாலென்
மூடமனம் பிழுத்தோடப் பின்சென் றெய்த்தேன்
புன்னெறியேன் பொய்யரொடும் பயின்றே னின்றன்
புனிதவருட் கடலாடேன் புளக மூடேன்
பொன்னரையன் றெழுஞ்சடிலப் புனித னீன்ற
புண்ணியமே தணிகைவளர் போத வாழ்வே
என்னரைசே யென்னமுதே நின்பா லன்றி
எவர்க்கெடுத்தென் குறைதன்னை யியம்பு கேனே. 5

விடுமாட்டிற் றிரிந்துமட மாத ரார்தம்
வெய்யநீர்க் குழிவீழ்ந்து மீளா நெஞ்சத்
தடுமாற்றத் தொடும்புலைய வுடலை யோம்பிச்
சார்ந்தவர்க்கோ ரணுவளவுந் தானீ யாது

Koviloor Digital Library

படுகாட்டிற் பலனுதவாப் பனைபோல் நின்றேன்
பாவியே னுடற்சுமையைப் பலருங் கூடி
இடுகாட்டில் வைக்குங்கா லென்செய் வேனோ
என்குறையை யெவர்க்கெடுத்திங் கியம்பு கேனே. 6

மின்னைநே ரிடைமடவார் மயல்செய் கின்ற
வெங்குழியில் வீழ்ந்தழுந்தி வெறுத்தேன் போலப்
பின்னையே யெழுந்தெழுந்து மீட்டு மீட்டும்
பேய்போல வீழ்ந்தாடி மயற்குண் மூழ்கிப்
பொன்னையே யொத்தவுன தருளை வேண்டிப்
போற்றுது வீணைநாட் போக்கு கின்ற
என்னையே யான்சிரிப்பே னுகி லந்தோ
என்குறையை யெவர்க்கெடுத்திங் கியம்பு கேனே. 7

முலையொருபான் முகமொருபால் காட்டும் பொல்லா
மூடமட வார்கடமை முயங்கி நின்றேன்
இலையொருபா லனமொருபான் மனஞ்சேர்த் துண்ணும்
ஏழைமதி யேன்றணிகை யேந்த லேபொன்
மலையொருபால் வாங்கியசெவ் வண்ண மேனி
வள்ளல்தரு மருந்தேநின் மலர்த்தா ளேத்தேன்
புலையொருவா வஞ்சகநெஞ் சுடையே னென்றன்
புன்மைதனை யெவர்க்கெடுத்துப் புகலு வேனே. 8

வேய்ப்பான்மென் றோண்மடவார் மறைக்கு மாய
வெம்புழுச்சேர் வெடிப்பினிடை வீழ்ந்து நின்றேன்
தாய்ப்பாலை யுண்ணுது நாய்ப்பா லுண்ணுந்
தகையனேன் றிருத்தணிகை தன்னைச் சார்ந்து
ஆய்ப்பாலை யொருமருங்கா னின்ற செல்வத்
தாரமுதே நின்னருளை யடையேன் கண்டாய்
ஏய்ப்பாலை நடுங்கருங்கல் போனின் றெய்த்தேன்
என்குறையை யெவர்க்கெடுத்திங் கியம்பு கேனே. 9

வஞ்சமட மாதரார் போக மென்னும்
மலத்திலிடைக் கிருமியென வாளா வீழ்ந்தேன்
கஞ்சமலர் மனையானு மாலுந் தேடக்
காணுத செங்கவியிற் கனிந்த தேனே
தஞ்சமென்போர்க் கருள்புரியும் வள்ள லேநற்
றணிகையரை சேயுனது தாளைப் போற்றேன்
எஞ்சலிலா வினைச்சேம விடமா யுற்றேன்
என்குறையை யெவர்க்கெடுத்திங் கியம்பு கேனே. 10

சிவசண்முக சிவஞானதேசிகன் திருவடிவாழ்க

Koviloor Digital Library

24. முறையிட்டபத்து

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

சிவசண்முக சிவஞானதேசிகன் திருவடிவாழ்க

பொன்னைப் பொருளா நினைப்போர்பாற் போந்து மிடியா லிரந்தலுத்தேன்
நின்னைப் பொருளென் றுணராத நீச ரினியோர் நிலைகாணேன்
மின்னைப் பொருவுஞ் சடைப்பவள வெற்பில் விளைந்த வியன்கரும்பே
முன்னைப் பொருளே தணிகையனே முறையோ முறையோ முறையேயோ. 1

மக்கட் பிறவி யெடுத்துமுனை வழுத்தாக் கொடிய மரமனையேன்
துக்கக் கடலில் வீழ்ந்துமனஞ் சோர்கின் றேனோர் துணைகாணேன்
செக்கர்ப் பொருவு வடிவேற்கைத் தேவே தெவிட்டாத் தெள்ளமுதே
முக்கட் கரும்பின் முழுமுத்தே முறையோ முறையோ முறையேயோ. 2

அன்பி னுனது திருவடிக்கே யாளாய்த் தொண்டொன் றுற்றுதே
துன்பி னுடையோர் பாலனுகிச் சோர்ந்தே னினியோர் துணைகாணேன்
என்பின் மலிந்த மாலையணி யெம்மான் றந்த பெம்மானே
முன்பி னடுவாய் முளைத்தோனே முறையோ முறையோ முறையேயோ. 3

அருகா மலத்தி னலைந்திரக்க மறியா வஞ்ச நெஞ்சகர்பால்
உருகா வருந்தி யுழன்றலைந்தே னுன்று னென்றித் துணைகாணேன்
பெருகா தரவிற் சிவன்பெறுநற் பேறே தணிகைப் பெருவாழ்வே
முருகா முகமூ விரண்டுடையாய் முறையோ முறையோ முறையேயோ. 4

பொன்னின் றுளிரு மார்பனயன் போற்று முன்றுட் புகழ்மறந்தே
கன்னின் றணங்கு மனத்தார்பாற் கனிந்தே னினியோர் துணைகாணேன்
மின்னின் றிலங்கு சடைக்கனியுள் விளைந்த நறவே மெய்யடியர்
முன்னின் றருளுந் தணிகையனே முறையோ முறையோ முறையேயோ. 5

வெதிருள் ளவரின் மொழிகேளா வீண ரிடம்போய் மிகமெலிந்தே
அதிருங் கழற்சே வடிமறந்தே னந்தோ வினியோர் துணைகாணேன்
எதிருங் குயில்மேற் றவழ்தணிகை யிறையே முக்க ணரியற்கனியின்
முதிருஞ் சுவையே முதற்பொருளே முறையோ முறையோ முறையேயோ. 6

ஈனத் திவறு மனக்கொடியோ ரிடம்போய் மெலிந்து நாடோறும்
ஞானத் திருத்தாட் டுணைச்சிறிது நாடே னினியோர் துணைகாணேன்
தானத் தறுகண் மலையுரியின் சட்டை புனைந்தோன் றரும்பேறே
மோனத் தவர்த மகவிளக்கே முறையோ முறையோ முறையேயோ. 7

தேவே யெனநிற் போற்றாத சிறிய ரிடம்போய்த் தியங்கியென்றன்
கோவே நின்றன் றிருத்தாளைக் குறிக்க மறந்தேன் றுணைகாணேன்
மாவே முத்தி னுரிபுனைந்த வள்ளற் கினிய மகப்பேறே
மூவே தனையை யறுத்தருள்வோய் முறையோ முறையோ முறையேயோ. 8

Koviloor Digital Library

வேதா னந்த ஞெடுபோற்றி மேவப் படுநின் பதமறந்தே
ஈதா னந்தந் திடுவீரென் றீன ரிடம்போ யிரந்தலைந்தேன்
போதா னந்தப் பரசிவத்திற் போந்த பொருளே பூரணமே
மூதா னந்த வாரிதியே முறையோ முறையோ முறையேயோ. 9

வடியாக் கருணை வாரிதியாம் வள்ள லுன்றுண் மலர்மறந்தே
கொடியா ரிடம்போய்க் குறையிரந்தேன் கொடியே னினியோர் துணைகாணேன்
அடியார்க் கெளிய முக்கணுடை யம்மா னளித்த வருமருந்தே
முடியா முதன்மைப் பெரும்பொருளே முறையோ முறையோ முறையேயோ. 10

சிவசண்முக சிவஞானதேசிகன் திருவடிவாழ்க

25. நெஞ்சவலங்கூறல்

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

சிவசண்முக சிவஞானதேசிகன் திருவடிவாழ்க

இழுதை நெஞ்சினே னென்செய்வான் பிறந்தேன்
ஏழை மார்முலைக் கேவிழைந் துழன்றேன்
பழுதை பாம்பென மயங்கினன் கொடியேன்
பாவியே னெந்தப் பரிசுகொண் டடைவேன்
அழுது கண்கணீ ரார்ந்திடு மடியார்
அகத்துள் ளூறிய வானந்த வமுதே
தொழுது மால்புகழ் தணிகையென் னரசே
தோன்ற லேபரஞ் சுடர்தரு மொளியே. 1

வஞ்ச நெஞ்சினேன் வல்விலங் கனையேன்
மங்கை மார்முலை மலைதனி லுருள்வேன்
பஞ்ச பாதக மோருரு வெடுத்தேன்
பாவி யேனெந்தப் பரிசுகொண் டடைவேன்
கஞ்சன் மால்புகழ் கருணையங் கடலே
கண்கண் மூன்றுடைக் கரும்பொளிர் முத்தே
அஞ்ச லஞ்சலென் றன்பரைக் காக்கும்
அண்ண லேதணி காசலத் தரசே. 2

மையல் னெஞ்சினேன் மதியிலேன் கொடிய
வாட்க ணார்முலை மலைக்குப சரித்தேன்
பைய பாம்பினை நிகர்த்தவெங் கொடிய
பாவி யேனெந்தப் பரிசுகொண் டடைவேன்
மெய்ய ருள்ளகம் விளங்கொளி விளக்கே
மேலை யோர்களும் விளம்பரும் பொருளே
செய்ய மேனியெஞ் சிவபிரா னளித்த
செல்வ மேதிருத் தணிகையந் தேவே. 3

மதியி னெஞ்சினே னெறியினை யனையேன்
மாதர் கண்ணெனும் வலையிடைப் பட்டேன்
பதியி லேழையேன் படிற்றுவஞ் சகனேன்
பாவி யேனெந்தப் பரிசுகொண் டடைவேன்

Koviloor Digital Library

பொதியி லாடிய சிவபிரா னளித்த
புண்ணி யாவருட் போதக நாதா
துதியி ராமனுக் கருள்செயுந் தணிகைத்
தூய னேபசுந் தோகைவா கனனே. 4

துட்ட நெஞ்சினே னெட்டியை யனையேன்
துயர்செய் மாதர்கள் சூழலுட் டினமும்
பட்ட வஞ்சனே னென்செய வுதித்தேன்
பாவியே னெந்தப் பரிசுகொண் டடைவேன்
நட்ட மாடிய நாயக னளித்த
நல்ல மாணிக்க நாயக மணியே
மட்ட ருப்பொழில் சூழ்திருத் தணிகை
வள்ள லேமயில் வாகனத் தேவே. 5

காயு நெஞ்சினேன் பேயினை யனையேன்
கடிகொள் கோதையர் கண்வலைப் பட்டேன்
பாயும் வெம்புலி நிகர்த்தவெஞ் சினத்தேன்
பாவி யேனெந்தப் பரிசுகொண் டடைவேன்
தாயுந் தந்தையுஞ் சாமியு மெனது
சார்பு மாகிய தணிகையங் குகனே
ஆயுங் கொன்றைசெஞ் சடைக்கணிந் தாடும்
ஐயர் தந்தரு ளாநந்தப் பேறே. 6

தீங்கு நெஞ்சினேன் வேங்கையை யனையேன்
தீய மாதர்தந் திறத்துழல் கின்றேன்
பாங்கி லாரொடும் பழகிய வெறியேன்
பாவி யேனெந்தப் பரிசுகொண் டடைவேன்
தேங்கு கங்கையைச் செஞ்சடை யிருத்துஞ்
சிவபிரான் செல்வத் திருவருட் பேறே
ஓங்கு நற்றணி காசலத் தமர்ந்த
உண்மை யேயெனக் குற்றிடுந் துணையே. 7

கள்ள நெஞ்சினே னஞ்சினை யனையேன்
கடிய மாதர்தங் கருக்குழி யெனுமோர்
பள்ள மாழ்ந்திடு புலையனேன் கொலையேன்
பாவி யேனெந்தப் பரிசுகொண் டடைவேன்
வெள்ள வார்சடை வித்தகப் பெருமான்
வேண்ட நற்பொருள் விரித்துரைத் தோனே
புள்ள லம்புதண் வாவிசூழ் தணிகைப்
பொருப்ப மர்ந்திடும் புனிதபூ ரணனே. 8

மத்த நெஞ்சினேன் பித்தரிற் றிரிவேன்
மாதர் கண்களின் மயங்கினின் றலந்தேன்
பத்தி யென்பதோ ரணுவுமுற் றில்லேன்
பாவி யேனெந்தப் பரிசுகொண் டடைவேன்

Koviloor Digital Library

பித்த நாயக னருள்திருப் பேறே
பிரமன் மாலுக்கும் பேசரும் பொருளே
தத்தை பாடுறும் பொழிற்செறி தணிகா
சலத்தின் மேவிய தற்பர வொளியே. 9

அழுக்கு நெஞ்சினேன் பொய்யல தறியேன்
அணங்க னூர்மய லாழத்தில் விழுந்தேன்
பழுக்கு மூடருட் சேர்ந்திடுங் கொடியேன்
பாவி யேனெந்தப் பரிசுகொண் டடைவேன்
மழுக்கை யேந்திய மாசிலா மணிக்குன்
மன்னி யோங்கிய வளரொளிப் பிழம்பே
வழுக்கி லார்புகழ் தணிகையென் னரசே
வள்ள லேயென்னை வாழ்விக்கும் பொருளே. 10

சிவசண்முக சிவஞானதேசிகன் திருவடிவாழ்க

26. ஆற்றுப்புலம்பல்

கொச்சகக் கலிப்பா

சிவசண்முக சிவஞானதேசிகன் திருவடிவாழ்க

அண்ணுவோ என்னருமை ஐயாவோ பன்னிரண்டு
கண்ணுவோ வேல்பிடித்த கையாவோ செம்பவள
வண்ணுவோ நற்றணிகை மன்னுவோ என்றென்றே
எண்ணுவோ துன்பத் திருங்கடற்குண் மன்னினனே. 1

மன்னப்பார் போற்று மணியேநின் பொன்னருளைத்
துன்னப்பா ராது சுழன்றேன் அருணைகிரி
தன்னப்பா நற்றணிகை தன்னி லமர்ந்தருளும்
என்னப்பா வின்னுமிந்த வேழைக் கிரங்காயோ. 2

காய்நின்ற நெஞ்சக் கடையேன் றிருத்தணிகை
வாய்நின் றுனதுபுகழ் வாய்பாடக் கைகுவித்துத்
தாய்நின்றே தாளைத் தொழுதாடித் துன்பமெலாம்
போய்நின் றடைவேனே புண்ணியநின் பொன்னருளே. 3

பொன்பிணிக்கு நெஞ்சப் புலையேனை யிவ்வுலகில்
வன்பிணிக்கோ பெற்று வளர்த்தா யறியேனே
என்பிணைத்தார் வள்ளற் கினிமைபெறு மணியே
அன்பிணைத்தோர் போற்று மருட்டணிகை மன்னவனே. 4

வன்னேயும் வஞ்சகர்தம் வன்சார்பும் வன்றுயரும்
என்னேயும் கொண்டதனை யெண்ணி யிடிவேனே
அன்னே முறைபோகி யையா முறையேயோ
மன்னே முறைதணிகை வாழ்வே முறையேயோ. 5

சிவசண்முக சிவஞானதேசிகன் திருவடிவாழ்க

Koviloor Digital Library

27. திருவருள் விழைதல்

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

சிவசண்முக சிவஞானதேசிகன் திருவடிவாழ்க

தாணு வீன்றருள் செல்வமே தணிகையிற் சாமியே நினையேத்திக்
காணு வேனிலே யருளிவன் புன்மையிற் காலங்கள் கழிக்கின்றேன்
மாணு மன்பர்க ளென்சொலா ரையநீ வந்தெனக் கருள்வாயே
நாணு வேனல னடுங்கலன் ஒடுங்கலன் நாயினுங் கடையேனே. 1

கடைப்பட் டேங்குமிந் நாயினுக் கருள்தரக் கடவுள்நீ வருவாயேல்
மடைப்பட் டோங்கிய வன்பகத் தொண்டர்கள் வந்துனைத் தடுப்பாரேல்
தடைப்பட் டாயெனி லென்செய்வேன் என்செய்வேன் றளர்வது தவிரேனே
அடைப்பட் டோங்கிய வயற்றிருத் தணிகையம் பதியமர்ந் திடுதேவே. 2

தேவ ரேமுத லுலகங்கள் யாவையுஞ் சிருட்டியா தியசெய்யும்
மூவ ரேயெதிர் வருகினு மதித்திடேன் முருக!நின் பெயர்சொல்வோர்
யாவ ரேனுமென் குடிமுழு தாண்டெனை யளித்தவ ரவரேகாண்
தாவ னாடொறுந் தணிகையம் பதியில்வாழ் சண்முகப் பெருமானே. 3

சிவசண்முக சிவஞானதேசிகன் திருவடிவாழ்க

28. புண்ணியநீற்று மான்மியம்

வண்ணக் கலிவிருத்தம்

சிவசண்முக சிவஞானதேசிகன் திருவடிவாழ்க

திவசங்கடொ றுங்கொண்டிடு தீமைப்பிணி தீரும்
பவசங்கட மறுமிவ்விக பரமும்புகழ் பரவும்
கவசங்களெ னச்சூழ்ந்துறு கண்ணேறது தவிருஞ்
சிவசண்முக வெனவேயருட் டிருநீறணிந் திடிலே. 1

மாலேந்திய குழலார்தரு மயல்போமிட ரயல்போங்
கோலேந்திய வரசாட்சியுங் கூடும்புகழ் நீடும்
மேலேந்திய வானுடர்கண் மெலியாவித மொருசெவ்
வேலேந்திய முருகாவென வெண்ணீறணிந் திடிலே. 2

தவமுண்மையொ டுறும்வஞ்சகர் தஞ்சார்வது தவறும்
நவமண்மிய வடியாரிட நல்குந்திறன் மல்கும்
பவனன்புனல் கனன்மண்வெளி பலவாகிய பொருளாஞ்
சிவசண்முக வெனவேயருட் டிருநீறணிந் திடிலே. 3

துயிலேறிய சோர்வுங்கெடுந் துயரங்கெடு நடுவன்
கையிலேறிய பாசந்துணி கண்டேமுறித் திடுமால்
குயிலேறிய பொழில்சூழ்திருக் குன்றேறி நடக்கும்
மயிலேறிய மணியேயென வளர்நீறணிந் திடிலே. 4

Koviloor Digital Library

தேருப்பெரு மனமானது தேறுந்துயர் மாறும்
மாருப்பிணி மாயுந்திரு மருவுங்கரு வொருவும்
வீருப்பொடு வருசூர்முடி வேருக்கிட வருமோர்
[1]ஆருக்கரப் பொருளேயென வருள்நீறணிந் திடிலே. 5

சிவசண்முக சிவஞானதேசிகன் திருவடிவாழ்க

29. உறுதியுணர்த்தல்

கட்டளைக் கலித்துறை

சிவசண்முக சிவஞானதேசிகன் திருவடிவாழ்க

மஞ்சேர் பிணிமிடி யாதியை நோக்கி வருந்துறுமென்
நெஞ்சே தணிகைய னுறெழுத் துண்டுவெண் ணீறுண்டுநீ
எஞ்சே லிரவும் பகலுந் துதிசெய் திடுதிகண்டாய்
அஞ்சே லிதுசத் தியமாமென் சொல்லை யறிந்துகொண்டே... 1

அறியாத நம்பிணி யாதியை நீக்கு மருண்மருந்தின்
நெறியாந் தணிகைய னுறெழுத் துண்டுவெண் ணீறுண்டுநீ
எறியா திரவும் பகலுந் துதிசெய் திடுதிகண்டாய்
குறியா திருக்கலை யென்னுணை யென்றன் குணநெஞ்சமே. 2

என்றே பிணிக ளொழியுமென் றேதுய ரெய்தியிடேல்
நின்றே தணிகைய னுறெழுத் துண்டுவெண் ணீறுண்டுநீ
இன்றே யிரவும் பகலுந் துதிசெய் திடுதிகண்டாய்
நன்றேயெக் காலமும் வாழிய வாழிய நன்னெஞ்சமே. 3

சிவசண்முக சிவஞானதேசிகன் திருவடிவாழ்க

30. என்னைத் தேங்கல்

எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

சிவசண்முக சிவஞானதேசிகன் திருவடிவாழ்க

போதுகொண் டவனு மாலுநின் றேத்தும்
புண்ணிய நின்திரு வடிக்கே
யாதுகொண் டடைகேன் யாதுமேற் செய்கேன்
யாதுநின் திருவுள மறியேன்
தீதுகொண் டவனென் றெனக்கருள் சிறிதுஞ்
செய்திடா திருப்பையோ சிறியோன்
ஏதிவன் செயலொன் றிலையெனக் கருதி
ஈவையோ தணிகைமா மிறையே. 1

வாழ்வனே நின்பொன் னடிநிழல் கிடைத்தே
வயங்குமா னந்தவெள் ளத்துள்
ஆழ்வனே வெளியே னல்லதிவ் வுலகில்
அறஞ்செயாக் கொடியர்பாற் சென்றே

1. ஆறக்கரம் என்பது — ஆருக்கரமென நீட்டும் வழி நீட்டல்.

Koviloor Digital Library

தாழ்வனோ தாழ்ந்த டணிபுரிந் தவமே
சஞ்சரித் துழன்றுவெந் நரகில்
வீழ்வனோ விஃதென் றறிகிலேன் றணிகை
வெற்பினுள் ஒளிரருள் விளக்கே. 2

சிவசண்முக சிவஞானதேசிகன் திருவடிவாழ்க

31. கையடைமுட்டற்கிரங்கல்

கட்டளைக் கலித்துறை

சிவசண்முக சிவஞானதேசிகன் திருவடிவாழ்க

கார்பூத்த கண்டத் தொடுமேவு முக்கட் கனிகனிந்து
சீர்பூத் தொழுகுசெந் தேனே தணிகையிற் றெள்ளமுதே
போர்பூத்த வொற்றியி னின்முன்ன ரேற்றிடப் பேதையனேன்
ஏர்பூத்த வொண்பளி தங்காண் கிலனதற் கென்செய்வனே. 1

கருமருந் தாய மணிகண்ட நாயகன் கண்மணியாம்
அருமருந் தேதணி காசல மேவுமென் னுருயிரே
திருமருங் காரொற்றி யூர்மே வியநின் றிருமுன்னராய்
ஒருமருங் கேற்றவென் செய்கேன்கற் பூர வொளியினுக்கே. 2

பாலெடுத் தேத்துநற் பாம்பொடு வேங்கையும் பார்த்திடவோர்
காலெடுத் தம்பலத் தாடும் பிரான்றிருக் கண்மணியே
வேலெடுத் தோய்தென் றணிகா சலத்தமர் வித்தகநின்
பாலெடுத் தேற்றக் கிடைக்குங்கொ லோவெண் பளிதமெற்கே. 3

கண்ணப்ப னென்னுந் திருப்பெய ராலுல கம்புகழுந்
திண்ணப்ப னேத்துஞ் சிவனார் மகனுக்குத் தெண்டனிட்ட
விண்ணப்ப மொன்றிந்த மேதினி மாயையில் வீழ்வதறுத்
தெண்ணப் படுநின் றிருவரு ளீகவிவ் வேழையற்கே. 4

சிவசண்முக சிவஞானதேசிகன் திருவடிவாழ்க

32. பொது

கட்டளைக் கலித்துறை

சிவசண்முக சிவஞானதேசிகன் திருவடிவாழ்க

எப்பா லவரு மிறைஞ்சுந் தணிகை யிருந்தருளென்
அப்பாவுன் பொன்னடிக் கென்னெஞ் சகமிட மாக்கிமிக்க
வெப்பான நஞ்சன வஞ்சகர் பாற்செலும் வெந்துயர்நீத்
திப்பாரில் நின்னடி யார்க்கேவல் செய்ய வெனக்கருளே. 1

எய்யா தருள்தணி காசல மேவிய வென்னருமை
ஐயா நினது திருவடி யேத்தியன் றோவயனுஞ்
செய்யாண் மருவும் புயனுடைத் தேவனுஞ் சேனைவனும்
நைய்யாத வாயுளுஞ் செல்வமும் வன்மையு நண்ணினரே. 2

Koviloor Digital Library

வாளாருங் கண்ணியர் மாயையை நீக்கி மலிகரணக்
கோளாகும் வாதனை நீத்துமெய்ஞ் ஞானக் குறிகொடுநின்
தாளாகும் நீழலதுசார்ந்து நிற்கத் தகுந்ததிரு
நாளாகு நாளெந்த நாளறி யேன்றணி காசலனே. 3

ஊன்பார்க்கு மிவ்வுடற் பொய்மையைத் தேர்த லொழிந்தவமே
மான்பார்க்குங் கண்ணியர் மையலில் வீழு மயக்கமற்றே
தேன்பார்க்குஞ் சோலைத் தணிகா சலத்துன் றிருவழகை
நான்பார்க்கு நாளெந்த நாண்மயி லேறிய நாயகனே. 4

என்னே குறைநமக் கேழைநெஞ் சேமயி லேறிவரும்
மன்னே யெனநெடு மாலும் பிரமனும் வாழ்த்திநிற்குந்
தன்னேர் தணிகைத் தடமலை வாழுநற் றந்தையருட்
பொன்னேர் திருவடிப் போதுகண் டாய்நம் புகலிடமே. 5

பேதைநெஞ் சேயென்றன் பின்போந் திடுதியிப் பேயுலக
வாதையஞ் சேற்பொறி வாய்க்கலங் கேலிறை யும்மயங்கேற்
போதையெஞ் சேல்தணி காசலம் போயப் பொருப்பமர்ந்த
தாதையஞ் சேவடிக் கீழ்க்குடி யாகத் தயங்குவமே. 6

சிவசண்முக சிவஞானதேசிகன் திருவடிவாழ்க

33. நாளவம்படாமை வேண்டல்

எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

சிவசண்முக சிவஞானதேசிகன் திருவடிவாழ்க

குன்றமொத் திலங்கு பணைமுலை நெடுங்கட்
கோதையர் பால்விரைந் தோடிச்
சென்றவிப் புலையேன் மனத்தினை மீட்டுன்
திருவடிக் காக்குநா ளுளதோ
என்றனி யுயிரே யென்னுடைப் பொருளே
என்னுளத் தினிதெழு மின்பே
மன்றலம் பொழில்சூழ் தணிகையம் பொருப்பில்
வந்தமர்ந் தருள்செயு மணியே. 1

மணிக்குழை யடர்த்து மதர்த்தவேற் கண்ணார்
வஞ்சக மயக்கினி லாழ்ந்து
கனிக்கருந் துயர்கொண் மனத்தினை மீட்டுன்
கழலடிக் காக்குநா ளுளதோ
குனிக்கரும் பொருளே குணப்பெருங் குன்றே
குறிகுணங் கடந்ததோர் நெறியை
எனிக்கரு மாலு மயனுநின் றேத்தும்
எந்தையே தணிகையெம் மிறையே. 2

Koviloor Digital Library

இறைக்குளே புலக மடங்கலு மருட்டும்
இலைநெடு வேற்கணு ரளகச்
சிறைக்குளே வருந்து மனத்தினை மீட்டுன்
றிருவடிக் காக்குநா ளுளதோ
மறைக்குளே மறைந்தம் மறைக்கரி தாய
வள்ளலே யுள்ளகப் பொருளே
அறைக்குளே மடவார்க் கனநடை பயிற்றும்
அணிதிருத் தணிகைவா ழரைசே. 3

அரைமதிக் குறழு மொண்ணுதல் வாட்கண்
அலர்முலை யணங்கனு ரல்குற்
புரைமதித் துழலு மனத்தினை மீட்டுன்
பொன்னடிக் காக்குநா ளுளதோ
பரைமதித் திடஞ்சேர் பராபரற் கருமைப்
பாலனே வேலுடை யவனே
விரைமதித் தோங்கு மலர்ப்பொழிற் றணிகை
வெற்பினி லொளிருமெய் விளக்கே. 4

விளக்குறழ் மணிப்பூண் மேலணிந் தோங்கி
விம்முறு மிளமுலை மடவார்
களக்கினி லாழ்ந்த மனத்தினை மீட்டுன்
கழலடிக் காக்குநா ளுளதோ
அளக்கருங் கருணை வாரியே ஞான
அமுதமே யானந்தப் பெருக்கே
கிளக்கரும் புகழ்கொள் தணிகையம் பொருப்பிற்
கிளர்ந்தருள் புரியுமென் கிளையே. 5

கிளைக்குறும் பிணிக்கோ ருறையுளா மடவார்
கீழுறு மல்குலென் குழிவீழ்ந்
திளைக்கும்வன் கொடிய மனத்தினை மீட்டுன்
இணையடிக் காக்குநா ளுளதோ
விளைக்குமா னந்த வியன்றனி வித்தே
மெய்யடி யவருள விருப்பே
திளைக்குமா தவத்தோர்க் கருள்செயுந் தணிகைத்
தெய்வமே யருட் செழுந்தேனே. 6

தேன்வழி மலர்ப்பூங் குழற்றுடி யிடைவேற்
றிறல்விழி மாதரார் புணர்ப்பாங்
கான்வழி நடக்கு மனத்தினை மீட்டுன்
கழல்வழி நடத்துநா ளுளதோ
மான்வழி வருமென் னம்மையை வேண்டி
வண்புனத் தடைந்திட்ட மணியே
வான்வழி யடைக்குஞ் சிகரிசூழ் தணிகை
மாமலை யமர்ந்தருண் மருந்தே. 7

Koviloor Digital Library

மருந்தென மயக்குங் குதலையந் தீஞ்சொன்
வாணுதன் மங்கைய ரிடத்திற்
பொருந்தென வலிக்கு மனத்தினை மீட்டுன்
பொன்னடிக் காக்குநா ளுளதோ
அருந்திடா தருந்த வடியருள் ளோங்கும்
ஆனந்தத் தேறலே யமுதே
இருந்தரு முனிவர் புகழ்செயுந் தணிகை
இனிதமர்ந் தருளிய வின்பே. 8

இன்பமற் றுறுகண் விளைவிழி நிலமாம்
ஏந்திழை யவர்புழுக் குழியில்
துன்பமுற் றுழலு மனத்தினை மீட்டுன்
றுணையடிக் காக்குநா ளுளதோ
அன்பர்முற் றுணர வருள்செயுந் தேவே
அரியயன் பணிபெரி யவனே
வன்பதை யகற்றி மன்பதைக் கருள்வான்
மகிழ்ந்துறுந் தணிகையின் வாழ்வே. 9

வாழுமிவ் வுலக வாழ்க்கையை மிகவும்
வலித்திடு மங்கையர் தம்பால்
தாழுமென் கொடிய மனத்தினை மீட்டுன்
தாண்மலர்க் காக்குநா ளுளதோ
சூழுநெஞ் சிருளைப் போழுமெய் யொளியே
தோற்றமீ றற்றசிற் சுகமே
ஊழுமுற் பவமோ ரேழும்விட் டகல
உதவுசீ ரருட்பெருங் குன்றே. 10

சிவசண்முக சிவஞானதேசிகன் திருவடிவாழ்க

34. அன்பிற் பேதுறல்

எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

சிவசன்முக சிவஞானதேசிகன் திருவடிவாழ்க

மூடர்கள் தமக்குண் முற்படுங் கொடிய
முறியனேன் றனக்குநின் னடியாம்
ஏடவிழ் கமலத் திருநற வருந்த
என்றுகொல் அருள்புரிந் திடுவாய்
ஆடர வணிந்தே யம்பலத் தாடும்
ஐயருக் கொருதவப் பேறே
கோடணி தருக்கள் குலவுநற் றணிகைக்
குன்றமர்ந் திடுகுணக் குன்றே. 1

கற்றவர் புகழ்நின் திருவடி மலரைக்
கடையனேன் முடிமிசை யமர்த்தி
உற்றவிவ் வுலக மயக்கற மெய்மை
உணர்ந்துநா ளெந்தநா ளறியேன்

Koviloor Digital Library

நற்றவ ருணரும் பரசிவத் தெழுந்த
நல்லருட் சோதியே நவைதீர்
கொற்றவே லுகந்த குமரனே தணிகைக்
குன்றமர்ந் திடுகுணக் குன்றே. 2

ஞாலவாழ் வெனும்புன் மலமிசைந் துழலும்
நாயினுங் கடையவிந் நாய்க்குன்
சீலவாழ் வளிக்குந் திருவடிக் கமலத்
தேன்றரு நாளுமொன் றுண்டோ
ஆலவா யுகந்த வொருசிவ தருவில்
அருள்பழுத் தளிந்தசெங் கனியே
கோலவா னவர்கள் புகழ்திருத் தணிகைக்
குன்றமர்ந் திடுகுணக் குன்றே. 3

பவமெனுங் கடற்குள் வீழ்ந்துழன் றேங்கும்
பாவியேன் றன்முகம் பார்த்திங்
கெவையுநா டாம லென்னடி நிழற்கீழ்
இருந்திடென் றுரைப்பதெந் நாளோ
சிவமெனுந் தருமக் கடலகத் தெழுந்த
தெள்ளிய வமுதமே தேனே
குவிமுலை வல்லிக் கொடியொடுந் தணிகைக்
குன்றமர்ந் திடுகுணக் குன்றே. 4

முலைமுகங் காட்டி மயக்கிடுங் கொடியார்
முன்புழன் றேங்குமிவ் வெளியேன்
நிலைமுகங் காட்டு நின்றிருப் பாத
நீழல்வந் தடையுநா ளென்றோ
மலைமுகங் குழைய வளைத்திடுந் தெய்வ
மணிமகிழ் கண்ணினுண் மணியே
கொலைமுகஞ் செல்லார்க் கருடருந் தணிகைக்
குன்றமர்ந் திடுகுணக் குன்றே. 5

வருபய னறியா துழன்றிடு மேழை
மதியினே னுய்ந்திடும் வண்ணம்
ஒருவரு நினது திருவடிப் புகழை
உன்னுநா ளெந்நா ளறியேன்
அருவுரு வாகுஞ் சிவபிரா னளித்த
அரும்பெறற் செல்வமே யமுதே
குருவுரு வாகி யருள்தருந் தணிகைக்
குன்றமர்ந் திடுகுணக் குன்றே. 6

அழிதரு முலக வாழ்வினை மெய்யென்
றலைந்திடும் பாவியே னியற்றும்
பழிதரும் பிழையை யெண்ணுறே லின்று
பாதுகாத் தளிப்பதுன் கடனே

Koviloor Digital Library

மொழிதரு முக்கட் செங்கரும் பீன்ற
முத்தமே முத்தியின் முதலே
கொழிதரு மருவி பொழிதருந் தணிகைக்
குன்றமர்ந் திடுகுணக் குன்றே. 7

நின்னிலை யறியா வஞ்சக ரிடத்தில்
நின்றுநின் றலைதரு மெளியேன்
தன்னிலை யறிந்து மையகோ வின்னுந்
தயையிலா திருந்தனை யென்னே
பொன்னிலைப் பொதுவில் நடஞ்செயும் பவளப்
பொருப்பினுண் மலர்ந்திடும் பூவே
கொன்னிலை வேல்கைக் கொளுந்திருத் தணிகைக்
குன்றமர்ந் திடுகுணக் குன்றே. 8

பாடிநின் திருச்சீர் புகழ்ந்திடாக் கொடிய
பதகர்பால் நாடொறுஞ் சென்றே
வாடிநின் றேங்கு மேழையே னெஞ்ச
வாட்டமிங் கறிந்திலை யென்னே
ஆடிநீ ருடி யருள்செயும் பரமன்
அகமகி ழரும்பெறன் மருந்தே
கோடிலங் குயர்வா னணிதிருத் தணிகைக்
குன்றமர்ந் திடுகுணக் குன்றே. 9

வன்பொடு செருக்கும் வஞ்சர்பா லலையா
வண்ணமின் றருள்செயா யென்னில்
துன்பொடு மெலிவே னின்றிரு மலர்த்தாள்
துணையன்றித் துணையொன்றுங் காணேன்
அன்பொடும் பரம னுமைகையிற் கொடுக்க
அகமகிழ்ந் தணைக்கு மாரமுதே
கொன்பெறு மிலைவேற் கரந்தொடுந் தணிகைக்
குன்றமர்ந் திடுகுணக் குன்றே. 10

சிவசண்முக சிவஞானதேசிகன் திருவடிவாழ்க

35. கூடல் விழைதல்

எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

சிவசண்முக சிவஞானதேசிகன் திருவடிவாழ்க

சகமா றுடையா ரடையார் நெறியார் சடையார் விடையார் தனியானார்
உகமா ருடையா ருமையோர் புடையா ருதவும் முரிமைத் திருமகனார்
முகமா றுடையார் முகமா றுடையா ரெனவே யெனது முன்வந்தார்
அகமா ருடையேன் பதியா தென்றே னலைவா யென்று ரஃதென்னே. 1

Koviloor Digital Library

விதுவாழ் சடையார் விடைமேல் வருவார் விதிமா லறியா விமலனார்
மதுவாழ் குழலாள் புடைவா முடையார் மகனார் குகனார் மயிலூர்வார்
முதுவாழ் வடையா தவமே யலைவேன் முன்வந் திடயா னறியாதே
புதுவாழ் வுடையா ரெனவே மதிபோய் நின்றே னந்தோ பொல்லேனே. 2

காயோ டுடனாய்க் கனல்கை யேந்திக் காடே யிடமாக் கணங்கொண்ட
பேயோ டாடிப் பலிதேர் தருமோர் பித்தப் பெருமான் றிருமகனார்
தாயோ டுறழுந் தணிகா சலனார் தகைசேர் மயிலார் தனிவேலார் [வாமே.
வேயோ டுறழ்தோட் பாவையர் முன்னென் வெள்வளை கொண்டார் வின

பொன்னார் புயனார் புகழும் புகழார் புலியின் னதளார் புயநாலார்
தென்னார் சடையார் கொடிமேல் விடையார் சிவனா ரருமைத் திருமகனார்
என்னா யகனா ரென்னுயிர் போல்வா ரெழின்மா மயிலா ரிமையோர்கள்
தந்நா யகனார் தணிகா சலனார் தனிவந் திவண்மா றந்தாரே. 4

கல்லா லடியார் கல்லடி யுண்டார் கண்டா ருலகங் களைவேதஞ்
செல்லா நெறியார் செல்லுறு முடியார் சிவனா ரருமைத் திருமகனார்
எல்லா முடையார் தணிகா சலனா ரென்னா யகனா ரியல்வேலார்
நல்லா ரிடையென் வெள்வளை கொடுபின் னண்ணார் மயின்மேல் நடந்தாரே.

காரூர் சடையார் கனலார் மழுவார் கலவார் புரமூன் றெரிசெய்தார்
ஆரூ ருடையார் பலிதேர்ந் திடுமெம் மரனா ரருமைத் திருமகனார்
போரூ ருறைவார் தணிகா சலனார் புதியா ரெனவென் முனம்வந்தார்
ஏரூ ரெமதூ ரினில்வா வென்றா ரெளியே னேமாந் திருந்தேனே. 6

கண்ணார் நுதலார் விடமார் களனார் கரமார் மழுவார் களைகண்ணார்
பெண்ணார் புயனா ரயன்மாற் கரியார் பெரியார் கைலைப் பெருமானார்
தண்ணார் சடையார் தருமா மகனார் தணிகா சலனார் தனிவேலார்
எண்ணா ரெளியா ளிவளென் றெனையா னென்செய் கேனே விடர்கொண்டே.

மழுவார் தருகைப் பெருமான் மகனார் மயில்வா கனனா ரயில்வேலார்
தழுவார் வினையைத் தணியா ரணியார் தணிகா சலனார் தம்பாதந்
தொழுவா ரழுவார் விழுவா ரெழுவார் துதியா நிற்பா ரவர்நிற்க
புழுவா ருடலோம் பிடுமென் முனர்வந் தருள்தந் தருளிப் போனாரே. 8

நிருத்தம் பயின்றார் கடல்நஞ் சயின்றார் நினைவார் தங்கள் நெறிக்கேற்க
அருத்தம் பகர்வா ரருமைப் புதல்வ ரறுமா முகனா ரயில்வேலார்
திருத்தம் பெறுவார் புகழுந் தணிகைத் திருமா மலையா ரொருமாதின்
வருத்தம் பாரார் வளையுந் தாரார் வாரா ரவர்தம் மனமென்னே. 9

பிரமன் றலையிற் பலிகொண் டெருதிற் பெயரும் பிச்சைப் பெருமானார்
திரமன் றினிலே நடனம் புரிவார் சிவனார் மகனார் திறல்வேலார்
தரமன் றலைவான் பொழில்சா ரெழில்சேர் தணிகா சலனார் தமியேன்முன்
வரமன் றவுமால் கொளநின் றனனான் மடவா ரலரான் மனநொந்தே. 10

சிவசண்முக சிவஞானதேசிகன் திருவடிவாழ்க

Koviloor Digital Library

36. தரிசனை வேட்கை

எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

சிவசண்முக சிவஞானதேசிகன் திருவடிவாழ்க

வேல்கொளுங் கமலக் கையனை யெனையாண்
மெய்யனை யையனை யுலக
மால்கொளு மனத்த ரறிவரு மருந்தை
மாணிக்க மணியினை மயின்மேற்
கால்கொளுங் குகனை யெந்தையை யெனது
கருத்தனை யயனரி யறியாச்
சால்கொளுங் கடவுட் டனியருண் மகனைத்
தணிகையிற் கண்டிறைஞ் சுவனே. 1

கண்ணனை யயனை விண்ணவர் கோனைக்
காக்கவைத் திட்டவேற் கரனைப்
பண்ணனை யடியர் பாடலுக் கருளும்
பதியினை மதிகொள்தண் ணருளாம்
வண்ணனை யெல்லா வண்ணமு முடைய
வரதனீன் றெடுத்தருண் மகனைத்
தண்ணனை யெனது கண்ணனை யவனைத்
தணிகையிற் கண்டிறைஞ் சுவனே. 2

என்னுடை யுயிரை யான்பெறும் பேற்றை
என்னுடைப் பொருளினை யெளியேன்
மன்னுடைக் குருவின் வடிவினை யென்கண்
மணியினை யணியினை வரத்தே
மின்னுடைப் பவள வெற்பினி லுதித்து
மிளிரருட் டருவினை யடியேன்
தன்னுடைத் தேவைத் தந்தையைத் தாயைத்
தணிகையிற் கண்டிறைஞ் சுவனே. 3

பரங்கிரி யமருங் கற்பகத் தருவைப்
பராபரஞ் சுடரினை யெளியேற்
கிரங்கிவந் தருளும் ஏரகத் திறையை
எண்ணுதற் கரியபே ரின்பை
உரங்கிளர் வானோர்க் கொருதனி முதலை
ஒப்பிலா தோங்கிய வொன்றைத்
தரங்கிளர் அருண கிரிக்கருள் பவனைத்
தணிகையிற் கண்டிறைஞ் சுவனே. 4

அரும்பெறன் மணியை யமுதினை யன்பர்
அன்பினுக் கெளிவரு மரசை
விரும்புமா தவத்தோ ருள்ளகத் தொளிரும்
விளக்கினை யளக்கரும் பொருளைக்

Koviloor Digital Library

கரும்பினை யென்னுட் கனிந்திடுங் கனியை
முனிந்திடா தருளருட் கடலைத்
தரும்பர சிவத்துட் கிளர்ந்தொளி ரொளியைத்
தணிகையிற் கண்டிறைஞ் சுவனே. 5

மாரனை யெரித்தோன் மகிழ்திரு மகனை
வாகையம் புயத்தனை வடிவேற்
றீரனை யழியாச் சீரனை ஞானச்
செல்வனை வல்வினை நெஞ்சச்
சூரனைத் தடிந்த வீரனை யழியாச்
சுகத்தனைத் தேன்றுளி கடப்பந்
தாரனைக் குகனென் பேருடை யவனைத்
தணிகையிற் கண்டிறைஞ் சுவனே. 6

வேதனைச் சிறைக்குள் வேதனை படச்செய்
விமலனை யமலனை யற்பர்
போதனைக் கடங்காப் போதனை யைந்தாம்
பூதனை மாதவர் புகழும்
பாதனை யுமையாள் பாலனை யெங்கள்
பரமனை மகிழ்விக்கும் பரனைத்
தாதனை யுயிர்க்கு ளுயிரனை யவனைத்
தணிகையிற் கண்டிறைஞ் சுவனே. 7

குழகனை யழியாக் குமரனை யட்ட
குணத்தனைக் குறித்திட லரிதாம்
அழகனைச் செந்தி லப்பனை மலைதோ
றுடல்வா ழுண்ணலைத் தேவர்
கழகனைத் தண்டைக் காலனைப் பிணிக்கோர்
காலனை வேலனை மனதிற்
சழகிலார்க் கருளுஞ் சாமிநா தனைத்தென்
றணிகையிற் கண்டிறைஞ் சுவனே. 8

முத்தனை முத்திக் கொருதனி வித்தை
முதல்வனை முருகனை முக்கட்
பித்தனை யத்த னெனக்கொளுஞ் செல்வப்
பிள்ளையைப் பெரியவ ருளஞ்சேர்
சுத்தனைப் பத்தி வலைப்படு மவனைத்
துரியனைத் துரியமுங் கடந்த
சத்தனை நித்த நின்மலச் சுடரைத்
தணிகையிற் கண்டிறைஞ் சுவனே. 9

வள்ளயிற் கரங்கொள் வள்ளலை யிரவில்
வள்ளிநா யகிதனைக் கவர்ந்த
கள்ளனை யடிய ருள்ளகத் தவனைக்
கருத்தனைக் கருதுமா னந்த

Koviloor Digital Library

வெள்ளநின் றாட வருள்குரு பரனை
விருப்புறு பொருப்பனை வினையைத்
தள்ளவந் தருள்செய் திடுந்தயா நிதியைத்
தணிகையிற் கண்டிறைஞ் சுவனே. 10

சிவசண்முக சிவஞானதேசிகன் திருவடிவாழ்க

37. நாளெண்ணி வருந்தல்

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

சிவசண்முக சிவஞானதேசிகன் திருவடிவாழ்க

இன்னு மெத்தனை நாட்செல்லு மேழையே னிடர்க்கடல் விடுத்தேற
மின்னும் வேற்படை மிளிர்தருங் கைத்தல வித்தகப் பெருமானே
துன்னு நற்றணி காசலத் தமர்ந்தருள் தோன்றலே மயிலேறி
மன்னு முத்தம வள்ளல் நின்றிரு மனக்கருத் தறியேனே. 1

ஈறி லாதநின் னருள்பெற வெனக்கினு மெத்தனை நாட்செல்லும்
மாறி லாதவர் மனத்தொளிர் சோதியே மயின்மிசை வரும்வாழ்வே
தூறி லாவளச் சோலைசூழ் தணிகைவாழ் சுத்தசின் மயத்தேவே
ஊறி லாப்பெரு நிலையவா னந்தமே யொப்பிலா னருட்பேறே. 2

கூழை மாமுகி லனையவர் முலைத்தலைக் குளித்துழன் றலைகின்ற
ஏழை நெஞ்சினே னெத்தனை நாட்செல்லு மிடர்க்கடல் விடுத்தேற
மாழை மேனியன் வழுத்துமா ணிக்கமே வாழ்த்துவா யவர்பொல்லா
ஊழை நீக்கிநல் லருள்தருந் தெய்வமே யுத்தமச் சுகவாழ்வே. 3

ஐய வின்னுநா னெத்தனை நாட்செலு மல்லல்விட் டருண்மேவத்
துய்ய நன்னெறி மன்னிய வடியர்தந் துயர்தவிர்த் தருள்வோனே
வெய்ய நெஞ்சின ரெட்டொணா மெய்யனே வேல்கொளுங் கரத்தோனே
செய்ய மேனியஞ் சிவபிரான் பெற்றநற் செல்வனே திறலோனே. 4

பாவி யேனின்னு மெத்தனை நாட்செலும் பருவரல் விடுத்துய்யக்
கூவி யேயன்பர்க் கருள்தரும் வள்ளலே குணப்பெருங் குன்றேயென்
ஆவி யேயெனை யாள்குரு வடிவமே யானந்தப் பெருவாழ்வே
வாவி யோர்தருந் தணிகைமா மலைமிசை மன்னிய வருட்டேனே. 5

எளிய னேனின்னு மெத்தனை நாட்செலு மிடர்க்கடல் விடுத்தேற
ஒளிய னேகமாய்த் திரண்டிடுஞ் சிற்பர வுருவமே வுருவில்லா
வெளிய தாகிய வத்துவே முத்தியின் மெய்ப்பயன் றருவித்தே
அளிய தாகிய நெஞ்சினர்க் கருள்தரு மாறுமா முகத்தேவே. 6

தொண்ட னேனின்னு மெத்தனை நாட்செலுந் துயர்க்கடல் விடுத்தேற
வண்ட னேயண்டர்க் கருள்தரும் பரசிவ னருளிய பெருவாழ்வே
கண்ட னேகர்வந் தனைசெயுஞ் சூரனைக் களைந்தருள் களைகண்ணே
விண்ட னேர்புகுஞ் சிகரிசூழ் தணிகையில் விளங்கிய வேலோனே. 7

Koviloor Digital Library

வீண னேனின்னு மெத்தனை நாட்செல்லும் வெந்துயர்க் கடனீந்தக்
காண வானவர்க் கரும்பெருந் தலைவனே கருணையங் கண்ணனே
தூண நேர்புயச் சுந்தர வடிவனே துளக்கிலார்க் கருளியும்
ஏண னேயெனை யேன்றுகொள் தேசிக விறைவனே யியலோனே. 8

கடைய னேனின்னு மெத்தனை நாட்செலுங் கடுந்துயர்க் கடனீந்த
விடையி னேறிய சிவபிரான் பெற்றருள் வியன்திரு மகப்பேறே
உடைய நாயகிக் கொருபெருஞ் செல்வமே உலகெலா மளிப்போனே
அடைய நின்றவர்க் கருள்செயுந் தணிகைவா ழானந்தத் தெளிதேனே. 9

பேய னேனின்னு மெத்தனை நாட்செலும் பெருந்துயர்க் கடனீந்த
மாய னேமுதல் வானவர் தமக்கருண் மணிமிடற் றிறையோற்குச்
சேய னேயகந் தெளிந்தவர்க் கினியனே செல்வனே யெனைக்காக்குந்
தாய னேயென்றன் சற்குரு நாதனே தணிகைமா மலையானே. 10

சிவசண்முக சிவஞானதேசிகன் திருவடிவாழ்க

38. ஏத்தாப் பிறவி யிழிவு

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

சிவசண்முக சிவஞானதேசிகன் திருவடிவாழ்க

கல்லை யொத்தவென் னெஞ்சினை யுருக்கேன்
கடவுள் நின்னடி கண்டிட விழையேன்
அல்லை யொத்தகோ தையர்க்குளங் குழைவேன்
அன்பி லாரொடு மமர்ந்தவ முழல்வேன்
தில்லை யப்பனென் றுலகெடுத் தேத்துஞ்
சிவபிரான் றருஞ் செல்வநின் றணிகை
எல்லை யுற்றுனை யேத்திநின் றுடேன்
என்செய் வான்பிறந் தேனெளி யேனே. 1

மைய னெஞ்சினேன் மதிசிறி தில்லேன்
மாத ரார்முலை மலையிவர்ந் துருள்வேன்
ஐய நின்திரு வடித்துணை மறவா
அன்பர் தங்களை யடுத்துள மகிழேன்
உய்ய நின்திருத் தணிகையை யடையேன்
உடைய நாயக னுதவிய பேறே
எய்ய விவ்வெறும் வாழ்க்கையி லுழல்வேன்
என்செய் வான்பிறந் தேனெளி யேனே. 2

புலைய மாதர்தம் போகத்தை விழைந்தேன்
புன்மை யாவைக்கும் புகலிட மானேன்
நிலைய மாந்திருத் தணிகையை யடையேன்
நிருத்த னின்றருள் நின்மலக் கொழுந்தே

Koviloor Digital Library

விலையி லாதநின் றிருவருள் விழையேன்
    வீணர் தங்களை விரும்பிநின் றலைந்தேன்
இலையெ னுதனு வளவுமொன் றீயேன்
    என்செய் வான்பிறந் தேனெளி யேனே. 3

மருட்டு மங்கையர் புழுக்குழி யாழ்ந்து
    வருந்தி நாடொறு மனமிளைக் கின்றேன்
தெருட்டு நின்றிருத் தணிகையை யடையேன்
    சிவபிரான் பெற்ற செல்வமே நினது
அருட் டிறத்தினை நினைந்துநெக் குருகி
    அழுது கண்கள்நீ ரார்ந்திட நில்லேன்
இருட்டு வாழ்க்கையி லிடறிவீழ் கின்றேன்
    என்செய் வான்பிறந் தேனெளி யேனே. 4

நச்சி லேபழு கியகருங் கண்ணார்
    நலத்தை வேட்டுநற் புலத்தினை யிழந்தேன்
பிச்சி லேமிக மயங்கிய மனத்தேன்
    பேதை யேன்கொடும் பேயனேன் பொய்யேன்
[1]சச்சி லேசிவ னளித்திடு மணியே
    தங்கமே யுன்றன் றணிகையை விழையேன்
எச்சி லேவிழைந் திடருறு கின்றேன்
    என்செய் வான்பிறந் தேனெளி யேனே. 5

மின்னை யன்னநுண் ணிடையிள மடவார்
    வெய்ய நீர்க்குழி விழுந்திளைத் துழன்றேன்
புன்னை யஞ்சடை முன்னவ னளித்த
    பொன்னை யன்னநின் பூங்கழல் புகழேன்
அன்னை யென்னநல் லருள்தருந் தணிகை
    அடைந்து நின்றுநெஞ் சகமகிழ்ந் தாடேன்
என்னை யென்னையிங் கென்செய லன்னே
    என்செய் வான்பிறந் தேனெளி யேனே. 6

பட்டி மாடெனத் திரிதரு மடவார்
    பாழ்ங்குழிக் குள்விழ்ந் தாழ்ந்திளைக் கின்றேன்
தட்டி லார்புகழ் தணிகையை யடையேன்
    சம்பு வென்னுமோர் தருவொளிர் கனியே
ஒட்டி லேனினை யுளத்திடை நினையேன்
    உதவு றுதுநச் சுறுமர மானேன்
எட்டி யென்முன மினிப்புறு மந்தோ
    என்செய் வான்பிறந் தேனெளி யேனே. 7

ஓங்கி நீண்டவா ளுறழ்கருங் கண்ணார்
    உவர்ப்புக் கேணியி லுழைத்தக மிளைத்தேன்
வீங்கி நீண்டதோ ரொதியென நின்றேன்
    விழலுக் கேயிறைத் தலைந்தனன் வீணே

1. விந்து — விச்சு — என்றுற்போல, சந்து — சச்சு — எனப் போலியாயிற்று.

Koviloor Digital Library

தாங்கி னேனுடற் சுமைதனைச் சிவனார்
தநய நின்றிருத் தணிகையை யடையேன்
ஏங்கி னேன்சுழற் படுதுரும் பெனவே
என்செய் வான்பிறந் தேனெளி யேனே. 8

பண்ணை ளாவிய மொழியினுன் மயக்கும்
படிற்று மங்கையர் பால்விழை வுற்றேன்
தண்ண ளாவிய சோலைசூழ் தணிகைத்
தடத்த ளாவிய தருமநற் றேவே
பெண்ண ளாவிய புடையுடைப் பெருமான்
பெற்ற செல்வமே யற்றவர்க் கமுதே
எண்ண ளாவிய வஞ்சக நெஞ்சோ
டென்செய் வான்பிறந் தேனெளி யேனே. 9

கான ருவள கத்திய ரளக்கர்
காமத் தாழ்ந்தகங் கலங்குற நின்றேன்
வான மேவுறும் பொழிற்றிருத் தணிகை
மலையை நாடிநின் மலர்ப்பதம் புகழேன்
ஞான நாயகி யொருபுடை யமர்ந்த
நம்ப னார்க்கொரு நற்றவப் பேறே
ஈன னாகியிங் கிடர்ப்படு கின்றேன்
என்செய் வான்பிறந் தேனெளி யேனே. 10

சிவசண்முக சிவஞானதேசிகன் திருவடிவாழ்க

39. பவனிச் செருக்கு

கலி விருத்தம்

சிவசண்முக சிவஞானதேசிகன் திருவடிவாழ்க

பூவுண்டவெள் விடையேறிய புனிதன்றரு மகனார்
பாவுண்டதோ ரமுதன்னவர் பசுமாமயின் மேல்வந்
தாவுண்டன ரெனதின்னல மறியாரென விருந்தால்
நாவுண்டவர் திருமுன்பிது நலமன்றுமக் கெனவே. 1

ஒன்றார்புர மெரிசெய்தவ ரொற்றித்திரு நகரார்
மன்றார்நட முடையார்தரு மகனார்பசு மயின்மேல்
நின்றாரது கண்டேன்கலை நில்லாது கழன்ற
தென்றாரொடு சொல்வேனினை யானேமறந் தேனே. 2

வாரார்முலை யுமையாள்திரு மணவாளர்தம் மகனார்
ஆராவமு தனையாருயி ரனையாரயி லவனார்
நேரார்பணி மயிலின்மிசை நின்றாரது கண்டேன்
நீரார்விழி யிமைநீங்கின நிறைநீங்கிய தன்றே. 3

Koviloor Digital Library

ஒன்றோடிரண் டெனுங்கண்ணின ருதவுந்திரு மகனார்
என்றோடிக வெழிலார்மயி லேறியங் குற்றார்
நன்றோடினன் மகிழ்கூர்ந்தவர் நகைமாமுகங் கண்டேன்
கன்றோடின பசுவாடின கலையூடின வன்றே. 4

மலைவாங்குவி லரனார்திரு மகனார்பசு மயிலின்
நிலைதாங்குற நின்றாரவர் நிற்குந்நிலை கண்டேன்
அலைதீங்கின குழறாங்கின கைமேங்கின வரைமேல்
கலைநீங்கின முலைவீங்கின களியோங்கின வன்றே. 5

மான்கண்டகை யுடையார்தரு மகனார்தமை மயின்மேல்
நான்கண்டன னவர்கண்டனர் நகைகொண்டன முடனே
மீன்கண்டன விழியாரது பழியாக விளைத்தார்
ஏன்கண்டனை யென்றாளனை யென்னென்றுரைக் கேனே. 6

செங்கண்விடை தனிலேறிய சிவனார்திரு மகனார்
எங்கண்மணி யனையார்மயி லின்மீதுவந் திட்டார்
அங்கண்மிக மகிழ்வோடுசென் றவர்நின்றது கண்டேன்
இங்கண்வளை யிழந்தேன்மய லுழந்தேன்கலை யெனவே. 7

தண்டேன்பொழி யிதழிப்பொலி சடையார்தரு மகனார்
பண்டேன்புரி தொடையார் தமைப் பசுமாமயின் மீதிற்
கண்டேன்வளை காணேன்கலை காணேன்மிகு காமங்
கொண்டேன்றுயில் விண்டேனென்றுங் கூறேன்வரு மாறே. 8

மாவீழ்ந்திடு விடையார்திரு மகனார்பசு மயின்மேல்
நீவீழ்ந்திட நின்றாரது கண்டேனென்ற னெஞ்சே
பூவீழ்ந்தது வண்டேமதி போய்வீழ்ந்தது வண்டே
நாவீழ்ந்தது மலரேகளை நாண்வீழ்ந்தது மலரே. 9

வெற்றார்புர மெரித்தார்தரு மேலார்மயின் மேலே
உற்றாரவ ரெழின்மாமுகத் துள்ளேநகை கண்டேன்
பொற்றார்புயங் கண்டேன்றுயர் விண்டேனெனைப் போல
மற்றார்பெறு வாரோவினி வாழ்வேன்மன மகிழ்ந்தே. 10

சிவசண்முக சிவஞானதேசிகன் திருவடிவாழ்க

40. திருவருள் விலாசப்பத்து

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

சிவசண்முக சிவஞானதேசிகன் திருவடிவாழ்க

ஆறுமுகப் பெருங்கருணைக் கடலே தெய்வ
யானைமகிழ் மணிக்குன்றே யரசே முக்கட்
பேறுமுகப் பெருஞ்சுடர்க்குட் சுடரே செவ்வேல்
பிடித்தருளும் பெருந்தகையே பிரம ஞானம்

Koviloor Digital Library

வீறுமுகப் பெருங்குணத்தோ ரிதயத் தோங்கும்
விளக்கமே யானந்த வெள்ள மேமுன்
றேறுமுகப் பெரியவருட் குருவா யென்னைச்
சிறுகாலை யாட்கொண்ட தேவ தேவே. 1

கண்ணிமதி புனைந்தசடைக் கனியே முக்கட்
கரும்பேயென் கண்ணேமெய்க் கருணை வாழ்வே
புண்ணியநன் னிலையுடையோ ருளத்தில் வாய்க்கும்
புத்தமுதே யானந்த போக மேசீர்
எண்ணியமெய்த் தவர்க்கெல்லா மெளிதி லீந்த
என்னரசே ஆறுமுகத் திறையாம் வித்தே
திண்ணியவென் மனமுருக்கிக் குருவா யென்னைச்
சிறுகாலை யாட்கொண்ட தேவ தேவே. 2

நின்னிருதாட் டுணைபிடித்தே வாழ்கின் றேனுன்
நின்னையலாற் பின்னையொரு நேயங் காணேன்
என்னையினித் திருவுளத்தில் நினைதி யோநான்
ஏழையினு மேழைகண்டா யெந்தா யெந்தாய்
பொன்னையன்றி விரும்பாத புல்லர் தம்பால்
போகவொழிந் துன்பதமே போற்றும் வண்ணஞ்
சின்னமளித் தருட்குருவா யென்னை முன்னே
சிறுகாலை யாட்கொண்ட தேவ தேவே. 3

கல்வியெலாங் கற்பித்தாய் நின்பால் நேயங்
காணவைத்தா யிவ்வுலகங் கான லென்றே
ஒல்லும்வகை யறிவித்தா யுள்ளே நின்றென்
உடையானே நின்னருளு முதவு கின்றாய்
இல்லையெனப் பிறர்பாற்சென் றிரவா வண்ணம்
ஏற்றமளித் தாயிரக்க மென்னே யென்னே
செல்வவருட் குருவாகி நாயி னேனைச்
சிறுகாலை யாட்கொண்ட தேவ தேவே. 4

எந்தைபிரா னென்னிறைவ னிருக்க விங்கே
என்னகுறை நமக்கென்றே யிறுமாப் புற்றேன்
மந்தவுல கினிற்பிறரை யொருகா சுக்கும்
மதியாமல் நின்னடியே மதிக்கின் றேன்யான்
இந்தவடி யேனிடத்துன் றிருவு ளந்தான்
எவ்வாறோ வறிகிலே னேழை யேனுன்
சிந்தைமகிழ்ந் தருட்குருவா யென்னை முன்னே
சிறுகாலை யாட்கொண்ட தேவ தேவே. 5

மாருத பெருஞ்செல்வ யோகர் போற்றும்
மாமணியே யாறுமுக மணியே நின்சீர்
கூறுத புலவாய்மை யுடையார் தம்மைக்
கூடாத வண்ணமருட் குருவாய் வந்து

Koviloor Digital Library

தேருத நிலையெல்லாந் தேற்றி யோங்குஞ்
சிவஞானச் சிறப்படைந்து திகைப்பு நீங்கிச்
சீருத வாழ்விடைநான் வாழ வென்னைச்
சிறுகாலை யாட்கொண்ட தேவ தேவே. 6

கற்றறிந்த மெய்யுணர்ச்சி யுடையோ ருள்ளக்
கமலத்தே யோங்குபெருங் கடவு ளேநின்
பொற்றகைமா மலரடிச்சீர் வழுத்து கின்ற
புண்ணியர்தங் குழுவிலெனைப் புகுத்தி யென்றும்
உற்றவருட் சிந்தனைதந் தின்ப மேவி
உடையாயுன் னடியவனென் றோங்கும் வண்ணஞ்
சிற்றறிவை யகற்றியருட் குருவா யென்னைச்
சிறுகாலை யாட்கொண்ட தேவ தேவே. 7

ஞாலமெலாம் படைத்தவனைப் படைத்த முக்கண்
நாயகனே வடிவேற்கை நாதனே நான்
கோலமெலாங் கொடியேனற் குணமொன் றில்லேன்
குற்றமே விழைந்தேனிக் கோது ளேனைச்
சாலமெலாஞ் செயுமடவார் மயக்கி னீக்கிச்
சன்மார்க்க மடையவருள் தருவாய் ஞானச்
சீலமெலா முடையவருட் குருவாய் வந்து
சிறுகாலை யாட்கொண்ட தேவ தேவே. 8

கற்பனையே யெனுமுலகச் சழக்கி லந்தோ
காலூன்றி மயங்குகின்ற கடைய னேனைச்
சொற்பனமிவ் வுலகியற்கை யென்று நெஞ்சந்
துணிவுகொளச் செய்வித்துன் றுணைப்பொற் றாளை
அற்பகலு நினைந்துகனிந் துருகி ஞான
ஆனந்த போகமுற வருளல் வேண்டுஞ்
சிற்பரசற் குருவாய்வந் தென்னை முன்னே
சிறுகாலை யாட்கொண்ட தேவ தேவே. 9

பன்னிருகண் மலர்மலர்ந்த கடலே ஞானப்
பரஞ்சுடரே ஆறுமுகம் படைத்த கோவே
என்னிருகண் மணியேயென் தாயே யென்னை
ஈன்றுனே யென்னரசே யென்றன் வாழ்வே
மின்னிருவர் புடைவிளங்க மயின்மீ தேறி
விரும்புமடி யார்காண மேவுந் தேவே
சென்னியில்நின் னடிமலர்வைத் தென்னை முன்னே
சிறுகாலை யாட்கொண்ட தேவ தேவே. 10

சிவசண்முக சிவஞானதேசிகன் திருவடிவாழ்க

Koviloor Digital Library

41. திருவருட்பேற்று விழைவு

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

சிவசண்முக சிவஞானதேசிகன் திருவடிவாழ்க

உலகம் பரவும் பரஞ்சோதி யுருவாங் குருவே யும்பரிடைக்
கலகந் தருசூர்க் கிளைகளைந்த கதிர்வே லரசே கவின்றருசீர்த்
திலகந் திகழ்வா ளுதற்பரையின் செல்வப் புதல்வா திறலதனுல்
இலகுங் கலப மயிற்பரிமே லேறும் பரிசென் னியம்புகவே. 1

புகுவா னவர்தம் மிடர்முழுதும் போக்குங் கதிர்வேற் புண்ணியனே
மிகுவான் முதலாம் பூதமெலாம் விதித்தே நடத்தும் விளைவனைத்துந்
தகுவான் பொருளா முனதருளே யென்று லடியேன் றனையிங்கே
நகுவான் வருவித் திருள்நெறிக்கே நடத்த லழகோ நவிலாயே. 2

அழகா வமலா வருளாளா வறிவா வறிவா ரகமேவுங்
குழகா குமரா வெனையாண்ட கோவே நின்சீர் குறியாரைப்
பழகா வண்ண மெனக்கருளிப் பரனே நின்னைப் பணிகின்றோர்க்
கழகா தரவாம் பணிபுரிவா ரடியார்க் கடிமை யாக்குகவே. 3

ஆக்குந் தொழிலாற் களித்தானை யடக்குந் தொழிலா லடக்கிப்பின்
காக்குந் தொழிலா லருள்புரிந்த கருணைக் கடலே கடைநோக்கால்
நோக்குந் தொழிலோர் சிறிதுன்பா லுளதேன் மாயா நொடிப்பெல்லாம்
போக்குந் தொழிலென் பாலுண்டா மிதற்கென் புரிவேன் புண்ணியனே. 4

புரிவேன் விரதந் தவந்தானம் புரியா தொழிவேன் புண்ணியமே
பரிவேன் பாவம் பரிவேனிப் பரிசா லொன்றும் பயன்காணேன்
திரிவே னினது புகழ்பாடிச் சிறியே னிதனைத் தீர்வேனேல்
எரிவே னெரிவாய் நரகத்தே யிருப்பே னிளைப்பேன் விளைப்பேனே.

விளைப்பேன் பவமே யடிச்சிறியேன் வினையால் விளையும் வினைப்போகந்
திளைப்பே னெனினுங் கதிர்வடிவேற் றேவே யென்னுந் திருமொழியால்
இளைப்பே னலனிங் கியம்புகிற்பே னெனக்கென் குறையுண் டெமதூதன்
வளைப்பே னெனவந் திடிலவனை மடிப்பேன் கருணை வலத்தாலே. 6

வலத்தால் வடிவேற் கரத்தேந்து மணியே நின்னை வழுத்துகின்ற
நலத்தா லுயர்ந்த பெருந்தவர்பா னண்ணும் பரிசு நல்கினையேல்
தலத்தா லுயர்ந்த வானவருந் தமியேற் கிணையோ சடமான
மலத்தால் வருந்தாப் பெருவாழ்வான் மகிழ்வே னின்பம் வளர்வேனே. 7

இன்பப் பெருக்கே யருட்கடலே யிறையே யழியா விரும்பொருளே
அன்பர்க் கருளும் பெருங்கருணை யரசே யுணர்வா லாம்பயனே
வன்பர்க் கரிதாம் பரஞ்சோதி வடிவே வடிவேன் மணியேயென்
துன்பத் திடரைப் பொடியாக்கிச் சுகந்தந் தருளத் துணியாயே. 8

Koviloor Digital Library

சுகமே யடிய ருளத்தோங்குஞ் சுடரே யழியாத் துணையேயென்
அகமே புகுந்த வருட்டேவே அருமா மணியே யாரமுதே
இகமே பரத்து முனக்கன்றி யெத்தே வருக்கு மெமக்கருள
முகமே திலையெம் பெருமானே நினக்குண் டாறு முகமலரே. 9

ஆறுமுகமுந் திணிதோளி ராறுங் கருணை யடித்துணையும்
வீறு மயிலுந் தனிக்கடவுள் வேலுந் துணையுண் டெமக்கிங்கே
சீறும் பிணியுங் கொடுங்கோளுந் தீய வினையுஞ் செறியாவே
நாறும் பகட்டா னதிகார நடவா துலகம் பரவுறுமே. 10

சிவசண்முக சிவஞானதேசிகன் திருவடிவாழ்க

42. செல்வச்சீர்த்தி மாலை

இரட்டைக் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

சிவசண்முக சிவஞானதேசிகன் திருவடிவாழ்க

அடியார்க் கெளிய ரெனுமுக்க ணையர் தமக்கு முலகின்ற
அம்மை தனக்குந் திருவாய்முத் தளித்துக் களிக்கு மருமருந்தே
கடியார் கடப்ப மலர்மலர்ந்த கருணைப் பொருப்பே கற்பகமே
கண்ணுண் மணியே யன்பர்மனக் கமலம் விரிக்குங் கதிரொளியே
படியார் வளிவான் றீமுதலாம் பகுதி யாய பரம்பொருளே
பகர்தற் கரிய மெய்ஞ்ஞானப் பாகே யசுரர் படைமுழுதுந்
தடிவா யென்னச் சுரர்வேண்டத் தடிந்த வேற்கைத் தனிமுதலே
தணிகா சலமாந் தலத்தமர்ந்த சைவ மணியே சண்முகனே. 1

காயா தளியக் கனிந்தன்பாற் கல்லா லடிநின் றருளொழுகுங்
கனியுட் சுவையே யடியர்மனக் கவலை யகற்றுங் கற்பகமே
ஓயா துயிர்க்கு ளொளித்தெவையு முணர்த்தி யருளு மொன்றேயென்
உள்ளக் களிப்பே யைம்பொறியு மொடுக்கும் பெரியோர்க் கோருறவே
தேயாக் கருணைப் பாற்கடலே தெளியா வசுரர் போர்க்கடலே
தெய்வப் பதியே முதற்கதியே திருச்செந் தூரிற் றிகழ்மதியே
தாயா யென்னைக் காக்கவருந் தனியே பரம சற்குருவே
தணிகா சலமாந் தலத்தமர்ந்த சைவ மணியே சண்முகனே. 2

நானு மயன்மா லிந்திரன்பொன் னாட்டுப் புலவர் மனம்வேட்ட
நங்கை மார்கண் மங்கலப்பொன் னண்காத் தளித்த நாயகமே
சேனும் புவியும் பாதலமுந் தித்தித் தொழுகுஞ் செந்தேனே [ர்ப்
செஞ்சொற்சுவையே பொருட்சுவையே சிவன்கைப்பொருளே செங்கழுநீ
பூணுந் தடந்தோட் பெருந்தகையே பொய்ய ரறியாப் புண்ணியமே
போகங் கடந்த யோகியர்முப் போகம் விளைக்கும் பொற்புலமே
தானு மென்ன வுலகமெலாந் தாங்குந் தலைமைத் தயாநிதியே
தணிகா சலமாந் தலத்தமர்ந்த சைவ மணியே சண்முகனே. 3

Koviloor Digital Library

முன்னைப் பொருட்கு முதற்பொருளே முடியா தோங்கு முதுமறையே
முக்கட் கரும்பின் றெடுத்தமுழு முத்தே முதிர்ந்த முக்கனியே
பொன்னைப் புயங்கொண் டவன்போற்றும் பொன்னே புனித பூரணமே
போத மணக்கும் புதுமலரே புலவ ரெவரும் புகும்பதியே
மின்னைப் பொருவு முலகமயல் வெறுத்தோ ருள்ள விளக்கொளியே
மேலுங் கீழு நடுவுமென விளங்கி நிறைந்த மெய்த்தேவே
தன்னைப் பொருவுஞ் சிவயோகந் தன்னை யுடையோர் தம்பயனே
தணிகா சலமாந் தலத்தமர்ந்த சைவ மணியே சண்முகனே. 4

பித்தப் பெருமான் சிவபெருமான் பெரிய பெருமான் றனக்கருமைப்
பிள்ளைப் பெருமா னெனப்புலவர் பேசிக் களிக்கும் பெருவாழ்வே
மத்தப் பெருமா னிக்குமொரு மருந்தே யெல்லாம் வல்லோனே
வஞ்சச் சமண வல்லிருளை மாய்க்கு ஞான மணிச்சுடரே
அத்தக் கமலத் தயிற்படைகொ ளரசே மூவர்க் கருள்செய்தே
ஆக்க லளித்த லழித்தலெனு மம்முத் தொழிலுந் தருவோனே
சத்த வுலக சராசரமுந் தாளி லொடுக்குந் தனிப்பொருளே
தணிகா சலமாந் தலத்தமர்ந்த சைவ மணியே சண்முகனே. 5

ஏத மகற்று மென்னரசே யென்னு ருயிரே யென்னறிவே
என்கண் ணொளியே யென்பொருளே யென்சற் குருவே யென்றுயே
காத மணக்கு மலர்கடப்பங் கண்ணிப் புயனே காங்கெயனே
கருணைக் கடலே பன்னிருகட் கரும்பே யிருவர் காதலனே
சீத மதியை முடித்தசடைச் சிவனார் செல்வத் திருமகனே
திருமா லுடனான் முகன்மகவான் றேடிப் பணியுஞ் சீமானே
சாதல் பிறத்தல் தவிர்த்தருளுஞ் சரணம் புயனே சத்தியனே
தணிகா சலமாந் தலத்தமர்ந்த சைவ மணியே சண்முகனே. 6

வன்பிற் பொதிந்த மனத்தினர்பால் வருந்தி யுழல்வே னல்லாலுன்
மலர்த்தாள் நினையே னென்னேயிம் மதியி லேனு முய்வேனே
அன்பிற் கிரங்கி விடமுண்டோன் அருமை மகனே யாரமுதே
அகிலம் படைத்தோன் காத்தோனின் றழித்தோ னேத்த வளித்தோனே
துன்பிற் கிடமும் வன்பிறப்பைத் தொலைக்குந் துணையே சுகோதயமே
தோகை மயின்மேற் றோன்றுபெருஞ் சுடரே யிடராற் சோர்வுற்றே
தன்பிற் படுமச் சுரராவி தரிக்க வேலைத் தரித்தோனே
தணிகா சலமாந் தலத்தமர்ந்த சைவ மணியே சண்முகனே. 7

மாலு மயனு முருத்திரனும் வானத் தவரு மானிடரும்
மாவும் புள்ளு மூர்வனவு மலையுங் கடலும் மற்றவையும்
ஆலுங் கதியுஞ் சதகோடி யண்டப் பரப்புந் தானாக
அன்றோர் வடிவ மேருவிற்கொண் டருளுந் தூய வற்புதமே
வேலு மயிலுங் கொண்டுருவாய் விளையாட் டியற்றும் வித்தகமே
வேதப் பொருளே மதிச்சடைசேர் விமலன் றனக்கோர் மெய்ப்பொருளே
சாலுஞ் சுகுணத் திருமலையே தவத்தோர் புகழுந் தற்பரனே
தணிகா சலமாந் தலத்தமர்ந்த சைவ மணியே சண்முகனே. 8

Koviloor Digital Library

ஏத நிறுத்து மிவ்வுலகத் தியல்பின் வாழ்க்கை யிடத்தெளியேன்
எண்ணி யடங்காப் பெருந்துயர்கொண் டெந்தா யந்தோ விளைக்கின்றேன்
வேத நிறுத்து நின்கமல மென்றாட் டுணையே துணையல்லால்
வேறொன் றறியே னைத்தறிந்திவ் வினையேற் கருள வேண்டாவோ
போத நிறுத்துஞ் சற்குருவே புனித ஞானத் தறிவுருவே
பொய்ய ரறியாப் பரவெளியே புரமூன் றெரித்தோன் றருமொளியே
சாத னிறுத்து மவருள்ளத் தலந்தா ணிறுத்துந் தயாநிதியே
தணிகா சலமாந் தலத்தமர்ந்த சைவ மணியே சண்முகனே. 9

முருகா வெனநின் றேத்தாத மூட ரிடம்போய் மதிமயங்கி
முன்னு மடவார் முலைமுகட்டின் முயங்கி யலைந்தே நினைமறந்தேன்
உருகா வஞ்ச மனத்தேனை யுருத்திர்த் தியம னொருபாசத்
துடல நடுங்க விசிக்கிலவர்க் குரைப்ப தறியே னுத்தமனே
பருகா துள்ளத் தினித்திருக்கும் பாலே தேனே பகரருட்செம்
பாகே தோகை மயிலனடத்தும் பரமே யாவும் படைத்தோனே
தருகா தலித்தோன் முடிகொடுத்த தரும துரையே தற்பரனே
தணிகா சலமாந் தலத்தமர்ந்த சைவ மணியே சண்முகனே. 10

சிவசண்முக சிவஞானதேசிகன் திருவடிவாழ்க

43. செவியறிவுறுத்தல்

கலி விருத்தம்

சிவசண்முக சிவஞானதேசிகன் திருவடிவாழ்க

உலகியற் கடுஞ்சுரத் துழன்று நாடொறும்
அலகில்வெந் துயர்கிளைத் தழுங்கு நெஞ்சமே
இலகுசிற் பரகுக வென்று நீறிடிற்
கலகமில் லின்பமாங் கதிகி டைக்குமே. 1

மருளுறு முலகிலாம் வாழ்க்கை வேண்டியே
இருளுறு துயர்க்கட லிழியு நெஞ்சமே
தெருளுறு நீற்றினைச் சிவவென் றுட்கொளில்
அருளுறு வாழ்க்கையி லமர்த லுண்மையே. 2

வல்வினைப் பகுதியான் மயங்கி வஞ்சர்தங்
கொல்வினைக் குழியிடைக் குதிக்கு நெஞ்சமே
இல்வினைச் சண்முக வென்று நீறிடில்
நல்வினை பழுக்குமோர் நாடு வாய்க்குமே. 3

கடும்புலைக் கருத்தர்தங் கருத்தின் வண்ணமே
விடும்புன லெனத்துயர் விளைக்கு நெஞ்சமே
இடும்புகழ்ச் சண்முக வென்று நீறிடில்
நடுங்குமச் சங்கினை நண்ணாற் கென்றுமே. 4

Koviloor Digital Library

அன்பிலா வஞ்சர்தம் அவலச் சூழலில்
என்பிலாப் புழுவென விரங்கு நெஞ்சமே
இன்பருச் சண்முக வென்று நீறிடில்
துன்புருத் தனிக்கதிச் சூழல் வாய்க்குமே. 5

செறிவிலா வஞ்சகச் செல்வர் வாயிலில்
அறிவிலா துழலுமென் னவல நெஞ்சமே
எறிவிலாச் சண்முக வென்று நீறிடின்
மறிவிலாச் சிவகதி வாயில் வாய்க்குமே. 6

மறிதரு கண்ணினர் மயக்கத் தாழ்ந்துவீண்
வெறியொடு மலைந்திடர் விளைக்கு நெஞ்சமே
நெறிசிவ சண்முக வென்று நீறிடின்
முறிகொளீஇ நின்றவுன் மூடந் தீருமே. 7

காயமாங் கானலைக் கருதி நாடொறும்
மாயமாங் கானிடை வருந்து நெஞ்சமே
நேயமாஞ் சண்முக வென்று நீறிடில்
தோயமாம் பெரும்பிணித் துன்ப நீங்குமே. 8

சதிசெயு மங்கையர் தமது கண்வலை
மதிகெட வழுந்தியே வணங்கு நெஞ்சமே
நிதிசிவ சண்முக வென்று நீறிடில்
வதிதரு முலகிலுன் வருத்தந் தீருமே. 9

பசையறு வஞ்சகர் பாற்சென் றேங்கியே
வசைபெற நாடொறும் வருந்து நெஞ்சமே
இசைசிவ சண்முக வென்று நீறிடில்
திசைபெற மதிப்பருன் சிறுமை நீங்குமே. 10

சிவசண்முக சிவஞானதேசிகன் திருவடிவாழ்க

44. தேவவாசிரியம்

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

சிவசண்முக சிவஞானதேசிகன் திருவடிவாழ்க

யாரை யுங்கடு விழியினுன் மயக்குறு மேந்திழை யவர்வெந்நீர்த்
தாரை தன்னையும் விரும்பிவீழ்த் தாழ்ந்தவென் றனக்கரு ளுண்டேயோ
காரை முட்டியப் புறஞ்செலுஞ் செஞ்சுடர்க் கதிரவ னிவராழித்
தேரை யெட்டுறும் பொழில்செறி தணிகையிற் றேவர்கள் தொழுந்தேவே. 1

மறிக்கும் வேற்கணார் மலக்குழி யாழ்ந்துழல் வன்றசை யறுமென்பைக்
கறிக்கு நாயினுங் கடையநாய்க் குன்றிருக் கருணையு முண்டேயோ
குறிக்கும் வேய்மணி களைக்கதி ரிரதவான் குதிரையைப் புடைத்தெங்குந்
தெறிக்கு நல்வளஞ் செறிதிருத் தணிகையிற் றேவர்கள் தொழுந்தேவே. 2

Koviloor Digital Library

பிரிய மேயவன் மடந்தையர் தங்களைப் பிடித்தலைத் திடுவஞ்சக்
கரிய பேயினும் பெரியபேய்க் குந்திருக் கருணையு முண்டேயோ
அரிய மாலய னிந்திரன் முதலினோ ரமருல கறிந்தப்பால்
தெரிய வோங்கிய சிகிரிசூழ் தணிகையிற் றேவர்கள் தொழுந்தேவே. 3

சிவசண்முக சிவஞானதேசிகன் திருவடிவாழ்க

45. இங்கிதப்பத்து

கலிநிலை வண்ணத்துறை

சிவசண்முக சிவஞானதேசிகன் திருவடிவாழ்க

சீர்வளர் குவளைத் தார்வளர் புயனர் சிவனர்தம்
பேர்வளர் மகனர் கார்வளர் தணிகைப் பெருமானர்
ஏர்வளர் மயின்மே லூர்வளர் நியமத் திடைவந்தால்
வார்வளர் முலையா ரார்வளர் கில்லார் மயலம்மா. 1

மந்தா ரஞ்சேர் பைம்பொழி லின்கண் மயிலேறி
வந்தா ரந்தோ கண்டன னங்கை வளைகாணேன்
சந்தா ரஞ்சூழ் தண்கிளர் சாரற் றணிகேசர்
தந்தா ரென்பாற் றந்தா ரென்னைத் தந்தாரே. 2

நதியும் மதியும் பொதியுஞ் சடையார் நவின்மாலும்
விதியுந் துதியைம் முகனர் மகனர் மிகுசீருந்
நிதியும் பதியுங் கதியுந் தருவார் நெடுவேலார்
வதியும் மயின்மேல் வருவா ரலரே வருமாறே. 3

சந்தார் வரையுட் சிந்தா மணிநேர் தணிகேசர்
மந்தா நிலமே வுந்தார் மறுகின் மயிலேறி
வந்தார் நிலவோர் செந்தா மரையின் மலர்வாசக்
கொந்தார் குழலென் னிலையுங் கலையுங் கொண்டாரே. 4

தந்தே நயமா மாதவர் புகழுந் தணிகேசர்
சந்தே னெழிவா யந்தேன் மொழியாய் தனியின்று
வந்தே னினிமேல் வாரே னென்றுர் மனமாழ்கி
நொந்தேன் முலைமீ தவ்வுரை யென்றுர் நுவலென்னே. 5

தண்டணி காந்தளோர் சண்பக மலரிற் றளர்வெய்தத்
தெண்டணி நீலமோர் செங்குவ ளையினிற் றிகழ்வென்பால்
வண்டணி கேசரும் வந்தருள் வாரோ வாராரோ
தொண்டணி வீரொரு சோதிட மேனுஞ் சொல்லீரே. 6

காமலர் நறவுக் கேமலர் மூவிரு காலேநீ
தேமர் தணிகைத் தேவர் மருங்கிற் சேர்வாயேல்
ஆமல ருடையாட் கென்பெயர் பலவா மவையுள்ளே
ஓமல ரடிகே ளொன்றினை யொன்றென் றுரையாயே. 7

Koviloor Digital Library

தேடுங் கிளிநீ நின்னை விளம்பித் திருவன்னூர்
ஆடுந் தணிகையி லென்னுயி ரன்னா ரருகேபோய்க்
கூடுந் தனமிசை யென்பெயர் வைத்தக் கோதைக்கே
ஈடுங் கெடவின் றென்னையு மீந்தரு ளென்பாயே. 8

பொன்னை யிருத்தும் பொன்மல ரெகினப் புள்ளேநீ
அன்னை யிகழ்ந்தே யங்கலர் செய்வா னனுராகந்
தன்னை யளிக்குந் தண்டணி கேசர் தம்பாற்போய்
என்னை யிகழ்ந்தா ளென்செயல் கொண்டா ளென்பாயே. 9

வதியுந் தணிகையில் வாழ்வுறு மென்கண் மணியன்னார்
மதியுந் தழல்கெட மாமயின் மீதிவண் வருவாரேல்
திதியும் புவிபுகல் நின்பெயர் நெறியைத் தெரிவிப்பான்
நதியுந் துணவுத வுவனங் கொடிநீ நடவாயே. 10

மன்றேர் தணிகையில் நின்றீர் கதிதர வந்தீரோ
என்றே னசைதரு மின்றேன் மொழியா யானுன்பால்
இன்றே சுரருல கெய்திட வந்தே னென்றார்காண்
குன்றேர்முலையா யென்னடி யவர்சொற் குறிதானே. 11

சேதன நந்தார் சென்று வணங்குந் திறல்வேலார்
தாதன வண்ணத் துள்ளொளிர் கின்ற தணிகேசர்
மாதன முந்தா வந்தென வந்தே வாதாதா
ஆதன மென்றா ரென்னடி யம்மா வவர்சூதே. 12

சிவசண்முக சிவஞானதேசிகன் திருவடிவாழ்க

46. போற்றித் திருவிருத்தம்

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

சிவசண்முக சிவஞானதேசிகன் திருவடிவாழ்க

கங்கையஞ் சடைசேர் முக்கட் கரும்பருண் மணியே போற்றி
அங்கையங் கனியே போற்றி யருட்பெருங் கடலே போற்றி
டங்கையன் முதலோர் போற்றும் பரம்பரஞ் சுடரே போற்றி
சங்கைதீர்த் தருளுந் தெய்வச் சரவண பவனே போற்றி. 1

பனிப்பற வருளு முக்கட் பரஞ்சுட ரொளியே போற்றி
இனிப்புறு கருணை வான்றேன் எனக்கருள் புரிந்தோய் போற்றி
துனிப்பெரும் பவந்தீர்த் தென்னைச் சுகம்பெற வைத்தோய் போற்றி
தனிப்பெருந் தவமே போற்றி சண்முகத் தரசே போற்றி. 2

மணப்புது மலரே தெய்வ வான்சுவைக் கனியே போற்றி
தணப்பற வடியர்க் கின்பந் தருமொரு தருவே போற்றி
கணப்பெருந் தலைவ ரேத்துங் கழற்பதத் தரசே போற்றி
குணப்பெருங் குன்றே போற்றி குமரசற் குருவே போற்றி. 3

Koviloor Digital Library

தவம்பெறு முனிவ ருள்ளத் தாமரை யமர்ந்தோய் போற்றி
பவம்பெறுஞ் சிறியேன் றன்னைப் பாதுகாத் தளித்தோய் போற்றி
நவம்பெறு நிலைக்கு மேலா நண்ணிய நலமே போற்றி
சிவம்பெறும் பயனே போற்றி செங்கதிர் வேலோய் போற்றி. 4

மூவடி வாகி நின்ற முழுமுதற் பரமே போற்றி
மாவடி யமர்ந்த முக்கண் மலைதரு மணியே போற்றி
சேவடி வழுத்துந் தொண்டர் சிறுமைதீர்த் தருள்வோய் போற்றி
தூவடி வேல்கைக் கொண்ட சுந்தர வடிவே போற்றி. 5

விண்ணுறு சுடரே யென்னுள் விளங்கிய விளக்கே போற்றி
கண்ணுறு மணியே யென்னைக் கலந்தநற் களிப்பே போற்றி
பண்ணுறு பயனே யென்னைப் பணிவித்த மணியே போற்றி
எண்ணுறு மடியார் தங்கட் கினியதெள் ளமுதே போற்றி. 6

மறையெலாம் பரவ நின்ற மாணிக்க மலையே போற்றி
சிறையெலாந் தவிர்ந்து வானோர் திருவுறச் செய்தோய் போற்றி
குறையெலா மறுத்தே யின்பங் கொடுத்தவென் குருவே போற்றி
துறையெலாம் விளங்கு ஞானச் சோதியே போற்றி போற்றி. 7

தாருகப் பதகன் றன்னைத் தடிந்தருள் செய்தோய் போற்றி
வேருகச் சூர மாவை வீட்டிய வேலோய் போற்றி
ஆருகச் சமயக் காட்டை யழித்தவெங் கனலே போற்றி
போருகத் தகரை யூர்ந்த புண்ணிய மூர்த்தி போற்றி. 8

சிங்கமா முகனைக் கொன்ற திறலுடைச் சிம்புள் போற்றி
துங்கவா ரணத்தோன் கொண்ட துயர்தவிர்த் தளித்தோய் போற்றி
செங்கண்மான் மருக போற்றி சிவபிரான் செல்வ போற்றி
எங்களா ரமுதே போற்றி யாவர்க்கு மிறைவ போற்றி. 9

முத்தியின் முதல்வ போற்றி மூவிரு முகத்த போற்றி
சத்திவேற் கரத்த போற்றி சங்கரி புதல்வ போற்றி
சித்திதந் தருளுந் தேவர் சிகாமணி போற்றி போற்றி
பத்தியின் விளைந்த வின்பப் பரம்பர போற்றி போற்றி. 10

தெருளுடை யோர்க்கு வாய்த்த சிவாநந்தத் தேனே போற்றி
பொருளுடை மறையோ ருள்ளம் புகுந்தபுண் ணியமே போற்றி
மருளுடை மனத்தி னேனை வாழ்வித்த வாழ்வே போற்றி
அருளுடை யரசே யெங்கள் அறுமுகத் தமுதே போற்றி. 11

பொய்யனேன் பிழைக ளெல்லாம் பொறுத்திடல் வேண்டும் போற்றி
கையனேன் றன்னை யின்னுங் காத்திடல் வேண்டும் போற்றி
மெய்யனே மெய்ய ருள்ள மேவிய விளைவே போற்றி
ஐயனே யப்ப னேயெம் அரசனே போற்றி போற்றி. 12

Koviloor Digital Library

முருகநின் பாதம் போற்றி முளரியங் கண்ணற் கன்பாம்
மருகநின் கழல்கள் போற்றி வானவர் முதல்வ போற்றி
பெருகருள் வாரி போற்றி பெருங்குணப் பொருப்பே போற்றி
தருகநின் கருணை போற்றி சாமிநின் னடிகள் போற்றி. 13

கோதிலாக் குணத்தோய் போற்றி குகேசநின் பாதம் போற்றி
தீதிலாச் சிந்தை மேவு சிவபரஞ் சோதி போற்றி
போதினுன் முகனுங் காணாப் பூரண வடிவ போற்றி
ஆதிநின் றாள்கள் போற்றி அநாதிநின் னடிகள் போற்றி. 14

வேதமுங் கலைகள் யாவும் விளம்பிய புலவ போற்றி
நாதமுங் கடந்து நின்ற நாதநின் கருணை போற்றி
போதமும் பொருளு மாகும் புனிதநின் பாதம் போற்றி
ஆதர மாகி யென்னுள் அமர்ந்தவென் னரசே போற்றி. 15

சிவசண்முக சிவஞானதேசிகன் திருவடிவாழ்க

47. திருப்பள்ளித்தாமம் தாங்கல்

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

சிவசண்முக சிவஞானதேசிகன் திருவடிவாழ்க

வெம்பு முயிருக் கோருறவாய் வேளை நமனும் வருவானேல்
தம்பி தமையன் துணையாமோ தனயர் மனைவி வருவாரோ
உம்பர் பரவுந் திருத்தணிகை உயர்மா மலைமேல் இருப்பவர்க்குத்
தும்பக் குடலை யெடுக்காமல் துக்க வுடலை யெடுத்தேனே. 1

தொல்லைக் குடும்பத் துயரதனில் தொலைத்தே னந்தோ காலமெலாம்
அல்ல லகற்றிப் பெரியோரை யடுத்து மறியேன் அரும்பாவி
செல்வத் தணிகைத் திருமலைவாழ் தேவா வுன்றன் சந்நிதிக்கு
வில்வக் குடலை யெடுக்காமல் வீணுக் குடலை யெடுத்தேனே. 2

அவல வயிற்றை வளர்ப்பதற்கே அல்லும் பகலும் அதில்நினைவாய்க்
கவலைப் படுவ தன்றிசிவ கனியைச் சேரக் கருதுகிலேன்
திவலை யொழிக்குந் திருத்தணிகைத் திருமால் மருகன் திருத்தாட்குக்
குவளைக் குடலை யெடுக்காமல் கொழுத்த வுடலை யெடுத்தேனே. 3

சிவசண்முக சிவஞானதேசிகன் திருவடிவாழ்க

48. தனித்திருத்தொடை

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

சிவசண்முக சிவஞானதேசிகன் திருவடிவாழ்க

என்னிரு கண்ணின் மேவு மிலங்கொளி மணியே போற்றி
பன்னிரு படைகொண் டோங்கும் பன்னிரு கரத்தோய் போற்றி
மின்னிரு நங்கை மாருண் மேவிய மணாள போற்றி
நின்னிரு பாதம் போற்றி நீள்வடி வேல போற்றி. 1

520
Koviloor Digital Library

கலி விருத்தம்

மதிவளர் சடைமுடி மணிதரு சுரர்முடி மணியென்கோ
பதிவளர் சரவண பவநவ சிவகுரு பதியென்கோ
துதிவளர் துணையடி தொழுமடி யவர்பெறு துணையென்கோ
நிதிவளர் பரசுக நிலைபெறு நெறிதரு நினையானே. 2

கட்டளைக் கலித்துறை

முருகா சரணஞ் சரணமென் றுன்பத முன்னரியுள்ளம்
உருகாத நாயனை யேற்குநின் றண்ணரு ளுண்டுகொலோ
அருகாத பாற்கடன் மீதே யனந்த லமர்ந்தவன்றன்
மருகாமுக் கண்ணன் மைந்தா வெழின்மயில் வாகனனே. 3

வெண்பா

உலகம் பரவு மொருமுதல்வா தெய்வத்
திலகந் திகழிடத்துத் தேவே — இலகுதிருப்
புள்ளிருக்கும் வேளூர்ப் புனிதா வடியேன்றன்
உள்ளிருக்குந் துன்பை யொழி. 4

செக்கச் சிவந்தே திகழொருபாற் பச்சையதாய்
அக்கட் பரிதிபுரத் தார்ந்தோங்கு — முக்கட்
குழைக்கரும்பின் முத்துக் குமார மணியேயென்
பிழைக்கிரங்கி யாளுதியோ பேசு. 5

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருமாலைப் பணிகொண்டு கிரிகொண்ட தாருகனைச் செறித்து வாகைப்
பெருமாலை யணிதிணிதோட் பெருமானே யொருமான்றன் பெண்மேற்காமர்
வருமாலை யுடையவர்போன் மணமாலை புனைந்தமுழு மணியே முக்கட்
குருமாலைப் பொருளுரைத்த குமாரகுரு வேபரம குருவே போற்றி. 6

தோடேந்து கடப்பமலர்த் தொடையொடுசெங் குவளைமலர்த் தொடையும் [வேய்ந்து
பாடேந்து மறிஞர்தமிழ்ப் பாவொடுநா யடியேன்சொற் பாவுமேற்றுப்
பீடேந்து மிருமடவார் பெட்பொடுமாங் கவர்கண்முலைப் பெரிய யானைக்
கோடேந்து மணிநெடுந்தோட் குமரகுரு வேபரம குருவே போற்றி. 7

நீர்வேய்ந்த சடைமுடித்துத் தோலுடுத்து நீறணிந்து நிலவுங் கொன்றைத்
தார்வேய்ந்து விடங்கலந்த களங்காட்டி நுதலிடையோர் தழற்கண் காட்டிப்
பேர்வேய்ந்த மணிமன்றி லாடுகின்ற பெரும்பித்தப் பெருமா னின்ற
கூர்வேய்ந்த வேலணிதோட் குமரகுரு வேபரம குருவே போற்றி. 8

பெண்குணத்திற் கடைப்படுமோர் பேய்க்குணங்கொள் நாயேன்றன் பிழை [களெல்லாம்
எண்குணப் பொற்குன்றேநின் றிருவுளத்திற் சிறிதேனு மெண்ணேல் கண்டாய்
பண்குணத்திற் சிறந்திடுநின் பத்தர்தமைப் புரப்பதுபோற் பாவியேனை
வண்குணத்திற் புரத்தியிலை யேனுமெனைக் கைவிடேல் வடிவேலோனே. 9

Koviloor Digital Library

கலி விருத்தம்

சத்திவேற் கரத்தநின் சரணம் போற்றிமெய்ப்
பத்தியோ டருச்சனை பயிலும் பண்பினுன்
முத்திசார் குவரென மொழிதல் கேட்டுநற்
புத்தியோ டுன்பதம் புகழ்வர் புண்ணியர். 10

தேனே யமுதே சிவமே தவமே தெளிவேயெங்
கோனே குருவே குலமே குணமே குகனேயோ
வானே வெளியே யனலே புனலே மலையேயென்
ஊனே யுயிரே யுணர்வே யெனதுள் ளுறைவானே. 11

கட்டளைக் கலித்துறை

ஆறு முகங்கொண்ட வையாவென் றுன்ப மனைத்துமின்னும்
ஏறு முகங்கொண்ட தல்லா லிறங்கு முகமிலையால்
வீறு முகங்கொண்ட கைவேலின் வீரம் விளங்கவென்னைச்
சீறு முகங்கொண்ட வத்துன்ப மோடச் செலுத்துகவே. 12

பண்கொண்ட சண்முகத் தையா வருண்மிகும் பன்னிரண்டு
கண்கொண்ட நீசற்றுங் கண்டிலை யோவென் கவலைவெள்ளந்
திண்கொண்ட வெட்டுத் திசைகொண்டு நீள்சத்த தீவுங்கொண்டு
மண்கொண்டு விண்கொண்டு பாதாளங் கொண்டு வளர்கின்றதே. 13

வன்குலஞ் சேர்கடன் மாமுதல் வேரற மாட்டிவண்மை
நன்குலஞ் சேர்விண் ணகரளித் தோயன்று நண்ணியென்னை
நின்குலஞ் சேர்த்தனை யின்று விடேலுவ நேர்ந்துகொண்டு
பின்குலம் பேசுகின் றுருமுண் டோவிப் பெருநிலத்தே. 14

வண்ண விருத்தம்

திருமா லாதிய ருள்ளங் கொள்ளுமோர் செவ்விய வேலோனே
குருமா மணியே குணமணி யேசுரர் கோவே மேலோனே
கருமா மலமறு வண்ணந் தண்ணளி கண்டே கொண்டேனே
கதியே பதியே கனநிதி யேகற் கண்டே தண்டேனே
அருமா தவருயர் நெஞ்சம் விஞ்சிய வண்ணா விண்ணவனே
அரசே யமுதே யறிவுரு வேமுரு கையா மெய்யவனே
உருவா கியபவ பந்தஞ் சிந்திட வோதிய வேதியனே
ஒளியே வெளியே உலகமெ லாமுடை யோனே வானவனே. 15

கொச்சகக் கலிப்பா

கூழுக் கழுவேனோ கோத்தணிலைகக் கோவேயென்
ஊழுக் கழுவேனோ ஓயாத் துயர்ப்பிறவி
ஏழுக் கழுவேனோ வென்செய்கே னென்செய்கேன்
பாழுக் கிறைத்தேனீ துன்செயலோ பார்க்குமிடம். 16

Koviloor Digital Library

கட்டளைக் கலிப்பா

சிந்தைக் கும்வழி யில்லையுன் றன்மையைத்
தெரிதற் கென்னுந் திருத்தணி கேசனே
உந்தைக் கும்வழி யில்லையென் றுலிந்த
உலகில் யாவ ருனையன்றி நீர்மொள்ள
மொந்தைக் கும்வழி யில்லைவ ரத்திரு
முண்டைக் கும்வழி யில்லைய ரையிற்சாண்
கந்தைக் கும்வழி யில்லை யரகர
கஞ்சிக் கும்வழி யில்லையிங் கையனே. 17

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

கறிபிடித்த ஊன்கடையிற் கண்டவர்தங் கால்பிடித்துக் கவ்வும் பொல்லா
வெறிபிடித்த நாய்க்கேனும் வித்தைபயிற் றிடவாகும் வேண்டி வேண்டி
மறிபிடித்த சிறுவனைப்போல் வாத்தியார் மனமறுகி வருந்தத் தங்கள்
குறிபிடித்துக் காட்டுவோர்க் கியாவர்படிப் பிக்கவல்லார் குமர வேளே. 18

சிவசண்முக சிவஞானதேசிகன் திருவடிவாழ்க

குறிஞ்சிப்பாடிக் கடுத்துள்ள
சிங்கபுரிக் கந்தர் பதிகம்*

வெண்பா

சிவசண்முக சிவஞானதேசிகன் திருவடிவாழ்க

பொன்மகள்வாழ் சிங்கபுரி போதனறு மாமுகன்மேல்
நன்மைமிகு செந்தமிழ்ப்பா நாமுரைக்கச் — சின்மயத்தின்
மெய்வடிவா நங்குருதாள் வேழமுகன் றன்னிருதாள்
பொய்யகலப் போற்றுவமிப் போது.

அறுசீரடி ஆசிரிய விருத்தம்

சீராரு மறையொழுக்கந் தவிராது நான்மரபு சிறக்க வாழும்
ஏராரு நிதிபதியிந் திரன்புரமு மிகநாணு மெழிலின் மிக்க
வாராருங் கொங்கையர்கள் மணவாளருடன்கூடி வாழ்த்த நாளும்
தேராரு நெடுவீதிச் சிங்கபுரி தனிலமர்ந்த தெய்வக் குன்றே. 1

உம்பர்துயர் கயிலையரர்க் கோதிடவே யப்பொழுதே யுவந்து நாதன்
தம்பொருவில் முகமாறு கொண்டுநுத லின்றபொறி சரவணத்தில்
நம்புடைவ ருயவெடுத்து வந்தருளு நங்குகனே நலிவு தீர்ப்பாய்
திங்கள்தவழ் மதில்சூழுஞ் சிங்கபுரி தனிலமர்ந்த தெய்வக் குன்றே 2

பொல்லாத சூர்க்கிளையைத் தடிந்தமரர் படுந்துயரப் புன்மை நீக்கும்
வல்லானே யெனதுபிணி நீநினைந்தா லொருகணத்தில் மாறிடாதோ
கல்லாதே னெனினுமெனை யிகழாதே நினதடியார் கழகங் கூட்டாய்
செல்லாதார் வலியடக்குஞ் சிங்கபுரி தனிலமர்ந்த தெய்வக்குன்றே. 3

* இச்சிங்கபுரிக் கந்தர் பதிகம் முதல் இரண்டு பதிப்புகளில் காணப்படவில்லை.
தி. நா. முத்தைய்ய செட்டியார் பதிப்பில் மட்டும் உளது.

Koviloor Digital Library

பண்டுறுசங் கப்புலவ ரருஞ்சிறையைத் தவிர்த்தருளும் பகவ னேயென்
புண்டருவிந் நோய்தணிக்கப் புரையிலியோய் யான்செய்யும் புன்மைதானே
தண்டையெழில் கிண்கிணிசேர் சரணமலர்க் கனுதினமும் தமியேன் அன்பாய்த்
தெண்டனிடச் செய்தருள்வாய் சிங்கபுரி தனிலமர்ந்த தெய்வக் குன்றே. 4

தாவாத வசியர்குலப் பெண்ணினுக்கோர் கரமளித்த சதுரன் அன்றே
மூவாத மறைபுகலு மொழிகேட்டுன் முண்டகத்தாண் முறையிற் றுழ்ந்து
தேவாதி தேவனெனப் பலராலுந் துதிபுரிந்து சிறப்பின் மிக்க
தீவாயிப் பிணிதொலைப்பாய் சிங்கபுரி தனிலமர்ந்த தெய்வக் குன்றே. 5

வானவர்கோன் மேனுளிற் றரமறியா திகழ்ந்துவிட விரைவிற் சென்று
மானமதில் வீற்றிருந்தே யவன்புரிந்த கொடுமைதனை மாற்று மெங்கள்
தானவர்தங் குலமடர்த்த ஷண்முகனே இப்பிணியைத் தணிப்பாய் வாசத்
தேனவிழும் பொழில்சூழுஞ் சிங்கபுரி தனிலமர்ந்த தெய்வக் குன்றே. 6

மட்டாரும் பொழில்சேரும் **பரங்கிரிசெந் தூர்பழனி** மருவு சாமி
நட்டாரும் பணிபுரியு மாறுதலை மலைமுதலாய் நணுகி யெங்கள்
ஒட்டாதார் வலிபடக்கி யன்பர்துதி யேற்றருளு மொருவ காவாய்
தெட்டாதார்க் கருள்புரியுஞ் சிங்கபுரி தனிலமர்ந்த தெய்வக் குன்றே. 7

முன்செய்த மாதவத்தால் **அருணகிரி நாதர்**முன்னே முறையிட் டேத்தும்
புன்செயல்தீர் **திருப்புகழை** யேற்றருளு மெய்ஞ்ஞான புனித னென்றே
என்செயலி லிரவுபக லொழியாமற் போற்றியிட விரங்கா தென்னே
தென்றிசைசேர்ந் தருள்புரியுஞ் சிங்கபுரி தனிலமர்ந்த தெய்வக் குன்றே. 8

விண்ணவர்கோ னருந்துயர நீக்கிடவு மாதுதவ விளைவு நல்குங்
கண்ணகன்ற பேரருளின் கருணையினாற் குஞ்சரியைக் காத லோடும்
மண்ணுலகோர் முதலுயிர்கள் மகிழ்ந்திடவு மணம்புரிந்த வள்ளலே யென்
திண்ணியதீ வினையொழிப்பாய் சிங்கபுரி தனிலமர்ந்த தெய்வக் குன்றே. 9

மாசகன்ற சிவமுனிவ ரருளாலே மானிடமாய் வந்த மாதின்
ஆசில்தவப் பேறளிக்க வள்ளிமலை தனைச்சார்ந்தே யங்கு கூடி
நேசமிகு மணம்புரிந்த நின்மலனே சிறியேனை நீயே காப்பாய்
தேசுலவு பொழில்சூழுஞ் சிங்கபுரி தனிலமர்ந்த தெய்வக் குன்றே. 10

சிவசண்முக சிவஞானதேசிகன் திருவடிவாழ்க

Koviloor Digital Library

49. தெய்வமணி மாலை

(சென்னை — கந்தகோட்டம்)

பதினான்கு சீரடி ஆசிரிய விருத்தம்

சிவசண்முக சிவஞானதேசிகன் திருவடிவாழ்க

திருவோங்கு புண்ணியச் செயலோங்கி யன்பருள்
திறலோங்கு செல்வ மோங்கச்
செறிவோங்க அறிவோங்கி நிறைவான இன்பந்
திகழ்ந் தோங்க அருள்கொடுத்து
மருவோங்கு செங்கமல மலரோங்கு வணமோங்க
வளர்கருணை மயமோங்கி யோர்
வரமோங்கு தெள்ளமுத வயமோங்கி ஆனந்த
வடிவாகி யோங்கி ஞான
உருவோங்கும் உணர்வினிறை யொளியோங்கி யோங்குமயில்
ஊர்ந்தோங்கி யெவ்வு யிர்க்கும்
உறவோங்கு நின்பதமென் உளமோங்கி வளமோங்க
உய்கின்ற நாளெந்த நாள்
தருவோங்கு சென்னையிற் கந்தகோட் டத்துள்வளர்
தலமோங்கு கந்த வேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வ மணியே. 1

பரமேது வினைசெயும் பயனேது பதியேது
பசுவேது பாச மேது
பத்தியேது அடைகின்ற முத்தியேது அருளேது
பாவபுண் யங்க ளேது
வரமேது தவமேது விரதமேது ஒன்றுமிலை
மனம்விரும் புணவுண் டுநல்
வத்திரம ணிந்துமட மாதர்தமை நாடிநறு
மலர்சூடி விளையாடி மேற்
கரமேவ விட்டுமுலை தொட்டுவாழ்ந் தவரொடு
கலந்துமகிழ் கின்ற சுகமே
கண்கண்ட சுகமிதே கைகண்ட பலனெனுங்
கயவரைக் கூடா தருள்
தரமேவு சென்னையிற் கந்தகோட் டத்துள்வளர்
தலமோங்கு கந்த வேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வ மணியே. 2

Koviloor Digital Library

துடியென்னு மிடையனம் பிடியென்னு நடைமுகில்
துணையெனும் பிணைய லளகஞ்
சூதென்னு முலைசெழுந் தாதென்னு மலைபுனல்
சுழியென்ன மொழிசெ யுந்தி
வடியென்னும் விழிநிறைய மதியென்னும் வதனமென
மங்கையர்தம் அங்க முற்றே
மனமென்னும் ஒருபாவி மயலென்னும் அதுமேவி
மாழ்கநான் வாழ்க விந்தப்
படியென்னு மாசையைக் கடியென்ன வென்சொலிப்
படியென்ன வறியா துநின்
படியென்ன வென்மொழிப் படியின்ன வித்தைநீ
படியென்னு மென்செய் குவேன்
தடிதுன்னு மதில்சென்னை கந்தகோட் டத்துள்வளர்
தலமோங்கு கந்த வேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வ மணியே. 3

வள்ளலுனை உள்ளபடி வாழ்த்துகின் றோர்தமை
மதித்திடுவ தன்றி மற்றை
வானவரை மதியென்னில் நானவரை யொருகனவின்
மாட்டினு மறந்து மதியேன்
கள்ளமறும் உள்ளமுறும் நின்பதம லால்வேறு
கடவுளர் பதத்தை யவரென்
கண்ணெதி ரடுத்தைய நண்ணென அளிப்பினுங்
கடுவென வெறுத்து நிற்பேன்
எள்ளளவும் இம்மொழி யிலேசுமொழி யன்றுண்மை
என்னையாண் டருள் புரிகுவாய்
என்றந்தை யேயெனது தாயேயென் இன்பமே
என்றனறி வேயென் அன்பே
தள்ளரிய சென்னையிற் கந்தகோட் டத்துள் வளர்
தலமோங்கு கந்த வேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வ மணியே. 4

பதிபூசை முதலநற் கிரியையான் மனமெனும்
பசுகரண மீங் கசுத்த
பாவனை யறச்சுத்த பாவனையில் நிற்குமெய்ப்
பதியோக நிலைமை யதனுன்
மதிபாச மற்றதி னடங்கிடு மடக்கவே
மலைவின்மெய்ஞ் ஞான மயமாய்
வரவுபோக் கற்றநிலை கூடுமென வெனதுளே
வந்துணர்வு தந்த குருவே

Koviloor Digital Library

துதிவாய்மை பெறுசாந்த பதமேவு மதியமே
துரிசறு சுயஞ் சோதியே
தோகைவா கனமீ திலங்கவரு தோன்றலே
சொல்லரிய நல்ல துணையே
ததிபெறுஞ் சென்னையிற் கந்தகோட் டத்துள் வளர்
தலமோங்கு கந்த வேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வ மணியே. 5

காமவுட் பகைவனுங் கோபவெங் கொடியனுங்
கனலோப முழுமூ டனும்
கடுமோக வீணனுங் கொடுமதமெ னுந்துட்ட
கண்கெட்ட ஆங்கா ரியும்
ஏமமறு மாச்சரிய விழலனுங் கொலையென்
றியம்பபா தகனு மாமிவ்
எழுவரும் இவர்க்குற்ற உறவான பேர்களும்
எனைப்பற்றி டாமல் அருள்வாய்
சேமமிகு மாமறையின் ஓமெனும் அருட்பதத்
திறனருளி மலய முனிவன்
சிந்தனையின் வந்தனையு வந்தபெய்ஞ் ஞானசிவ
தேசிக சிகா ரத்னமே
தாமமொளிர் சென்னையிற் கந்தகோட் டத்துள் வளர்
தலமோங்கு கந்த வேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வ மணியே. 6

நிலையுறு நிராசையாம் உயர்குலப் பெண்டிரொடும்
நிகழ்சாந்த மாம்பு தல்வனும்
நெறிபெறும் உதாரகுண மென்னுநற் பொருளுமருள்
நீக்கும் அறிவாந் துணைவனும்
மலைவறு நிராங்கார நண்பனுஞ் சுத்தமுறு
மனமென்னு நல்லே வலும்
வருசகல கேவலமி லாதவிட மும்பெற்று
வாழ்கின்ற வாழ்வ ருளுவாய்
அலையிலாச் சிவஞான வாரியே யானந்த
வமுதமே குமுத மலர்வாய்
அணிகொள்பொற் கொடிபசுங் கொடியிரு புறம்படர்ந்து
அழகுபெற வருபொன் மலையே
தலைவர்புகழ் சென்னையிற் கந்தகோட் டத்துள்வளர்
தலமோங்கு கந்த வேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வ மணியே. 7

Koviloor Digital Library

ஒருமையுடன் நினதுதிரு மலரடி நினைக்கின்ற
உத்தமர்தம் உறவு வேண்டும்
உள்ளொன்று வைத்துப் புறம்பொன்று பேசுவார்
உறவுகல வாமை வேண்டும்
பெருமைபெறும் நினதுபுகழ் பேசவேண் டும்பொய்மை
பேசா திருக்க வேண்டும்
பெருநெறி பிடித்தொழுக வேண்டும் மதமானபேய்
பிடியா திருக்க வேண்டும்
மருவுபெண் ணாசையை மறக்கவே வேண்டுமுனை
மறவா திருக்க வேண்டும்
மதிவேண்டும் நின்கருணை நிதிவேண்டும் நோயற்ற
வாழ்வில்நான் வாழ வேண்டும்
தருமமிகு சென்னையிற் கந்தகோட் டத்துள்வளர்
தலமோங்கு கந்த வேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வ மணியே. 8

ஈயென்று நானொருவ ரிடநின்று கேளாத
இயல்புமென் னிடமொ ருவர்ஈ
திடுவென்ற போதவர்க் கிலையென்று சொல்லாமல்
இடுகின்ற திறமு மிறையாம்
நீயென்றும் எனைவிடா நிலையுநா னென்றுமுள்
நினைவிடா நெறியும் அயலார்
நிதியொன்றும் நயவாத மனமுமெய்ந் நிலையென்றும்
நெகிழாத திடமும் உலகிற்
சீயென்று பேயென்று நாயென்று பிறர்தமைத்
தீங்குசொல் லாத தெளிவும்
திரமொன்று வாய்மையுந் தூய்மையுந் தந்துநின்
திருவடிக் காளாக் குவாய்
தாயொன்று சென்னையிற் கந்தகோட் டத்துள்வளர்
தலமோங்கு கந்த வேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வ மணியே. 9

கரையில்வீண் கதையெலா முதிர்கருங் காக்கைபோற்
கதறுவார் கள்ளுண் டதீக்
கந்தநா றிடவூத்தை காதநா றிடவுறு
கடும்பொயிரு காத நாற
வரையில்வாய் கொடுதர்க்க வாதமிடு வார்சிவ
மணங்கமழ் மலர்ப்பொன் வாய்க்கு
மவுனமிடு வாரிவரை மூடரென வோதுறு
வழக்குநல் வழக்கெனினு நான்

Koviloor Digital Library

உரையிலவர் தமையுரு துனதுபுகழ் பேசுமவ
ரோடுறவு பெறவ ருளுவாய்
உயர்தெய்வ யானையொடு குறவர்மட மானுமுள்
உவப்புறு குணக் குன்றமே
தரையிலுயர் சென்னையிற் கந்தகோட் டத்துள்வளர்
தலமோங்கு கந்த வேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வ மணியே. 10

நாம்பிரமம் நமையன்றி ஆம்பிரமம் வேறில்லை
நன்மை தீமைகளு மில்லை
நவில்கின்ற வாகியாந் தரமிரண் டினுமொன்ற
நடுநின்ற தென்று வீணாள்
போம்பிரம நீதிகேட் போர்பிரமை யாகவே
போதிப்பர் சாதிப்பர் தாம்
புன்மைநெறி கைவிடார் தம்பிரமம் வினையொன்று
போந்திடிற் போக விடுவார்
சாம்பிரம மாம்இவர்கள் தாம்பிரம மெனுமறிவு
தாம்புபாம் பெனுமறிவு காண்
சத்துவ வகண்டபரி பூரண காரவுப
சாந்தசிவ சிற்பிரம நீ
தாம்பிரிவில் சென்னையிற் கந்தகோட் டத்துள்வளர்
தலமோங்கு கந்த வேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வ மணியே. 11

பார்கொண்ட நடையில்வன் பசிகொண்டு வந்திரப்
பார்முகம் பார்த்தி ரங்கும்
பண்பும்நின் திருவடிக் கன்பும்நிறை ஆயுளும்
பயியும்நன் னிதியு முணர்வும்
சீர்கொண்ட நிறையுமுட் பொறையுமெய்ப் புகழுநோய்த்
தீமையொரு சற்று மணுகாத்
திறமுமெய்த் திடமுநல் இடமும்நின் னடியர்புகழ்
செப்புகின் றோரடைவர் காண்
கூர்கொண்ட நெட்டிலைக் கதிர்வேலு மயிலுமொரு
கோழியங் கொடியும் விண்ணோர்
கோமான்றன் மகளுமொரு மாமான்றன் மகளுமால்
கொண்டநின் கோலமற வேன்
தார்கொண்ட சென்னையிற் கந்தகோட் டத்துள்வளர்
தலமோங்கு கந்த வேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வ மணியே. 12

Koviloor Digital Library

வன்பெருநெ ருப்பினைப் புன்புழுப் பற்றுமோ
வானையொரு மான்தா வுமோ
வலியுள்ள புலியையோர் எலிசீறு மோபெரிய
மலையையோர் ஈச்சி றகினால்
துன்புற அசைக்குமோ வச்சிரத் தூணொரு
துரும்பினால் துண்ட மாமோ
சூரியனை இருள்வந்து சூழுமோ காற்றில்மழை
தோயுமோ இல்லை யதுபோல்
அன்புடைய நின்னடியர் பொன்னடியை யுன்னுமவர்
அடிமலர் முடிக்க ணிந்தோர்க்கு
அவலமுறு மோ? காமம் வெகுளியுறு மோமனத்
தற்பமும் விகற்ப முறுமோ?
தன்புகழ்செய் சென்னையிற் கந்தகோட் டத்துள்வளர்
தலமோங்கு கந்த வேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வ மணியே. 13

கானலிடை நீருமொரு கட்டையிற் கள்வனுங்
காணுறு கயிற்றி லரவுங்
கடிதரு கிளிஞ்சிலிடை வெள்ளியும் பொன்னைக்
கதித்தபித் தளையி னிடையும்
மானலிற் கண்டுளம் மயங்கல்போற் கற்பனையை
மாயையிற் கண்டு வீணே
மனையென்றும் மகவென்றும் உறவென்றும் நிதியென்றும்
வாழ்வென்றும் மான மென்றும்
ஊனலி னுடம்பென்றும் உயிரென்றும் உளமென்றும்
உள்ளென்றும் வெளியென் றும்வான்
உலகென்றும் அளவறு விகாரமுற நின்றவெனை
உண்மையறி வித்த குருவே
தானமிகு சென்னையிற் கந்தகோட் டத்துள்வளர்
தலமோங்கு கந்த வேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வ மணியே. 14

கற்றேளிகோள் உணர்வினோர் வேண்டாத இப்பெருங்
கன்மவுட லிற்ப ருவநேர்
கண்டழியும் இளமைதான் பகல்வேட மோபுரைக்
கடல்நீர்கொ லோக படமோ
உற்றெளியின் வெயிலிட்ட மஞ்சளோ வானிட்ட
ஒருவிலோ நீர்க்கு மிழியோ
உலையனல் பெறக்காற்று ளூதுந் துருத்தியோ
ஒன்றுமறி யேனி தனைநான்

Koviloor Digital Library

பற்றுறுதி யாக்கொண்டு வனிதையர்கண் வலையினிற்
பட்டுமதி கெட்டு முன்றே
பாவமே பயில்கின்ற தல்லாது நின்னடிப்
பற்றணுவு முற்ற றிகிலேன்
சற்றையகல் சென்னையிற் கந்தகோட் டத்துள்வளர்
தலமோங்கு கந்த வேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வ மணியே. 15

சடமாகி யின்பந்த ராதாகி மிகுபெருஞ்
சஞ்சலா கார மாகிச்
சற்றாகி வெளிமயற் பற்றாகி யோடுமித்
தன்மைபெறு செல்வ மந்தோ
விடமாகி யொருகபட நடமாகி யாற்றிடை
விரைந்துசெலும் வெள்ள மாகி
வேலையலை யாகியாங் காரவலை யாகிமுதிர்
வேனிலுறு மேக மாகிக்
கடமாய சகடமுறு காலாகி நீடுவாய்க்
காலோடு நீரா கியே
கற்பிலா மகளிர்போற் பொற்பிலா துழலுமிது
கருதாத வகைய ருளுவாய்
தடமேவு சென்னையிற் கந்தகோட் டத்துள்வளர்
தலமோங்கு கந்த வேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வ மணியே. 16

உப்புற்ற பாண்டமென வொன்பது துவாரத்துள்
உற்றசும் பொழுகு முடலை
உயர்கின்ற வானிடையெ றிந்தகல் லென்றுமலை
உற்றிழியு மருவி யென்றும்
வெப்புற்ற காற்றிடைவி ளக்கென்றும் மேகமுறு
மின்னென்றும் விசு காற்றின்
மேற்பட்ட பஞ்சென்று மஞ்சென்றும் வினைதந்த
வெறுமாய வேட மென்றும்
கப்புற்ற பறவைக் குடம்பையென் றும்பொய்த்த
கனவென்றும் நீரி லெழுதுங்
கையெழுத் தென்றுமுட் கண்டுகொண் டதிலாசை
கைவிடே னென்செய் குவேன்
தப்பற்ற சென்னையிற் கந்தகோட் டத்துள்வளர்
தலமோங்கு கந்த வேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வ மணியே. 17

Koviloor Digital Library

எந்தைநினை வாழ்த்தாத பேயர்வாய் கூழுக்கும்
ஏக்கற் றிருக்கும் வெறுவாய்
எங்கள்பெரு மானுனை வணங்காத மூடர்தலை
இகழ்விற கெடுக்குந் தலை
கந்தமிகு நின்மேனி காணாத கயவர்கண்
கலநீர் சொரிந்த அழுகண்
கடவுள்நின் புகழ்தனைக் கேளாத வீணர்செவி
கைத்திழவு கேட்குஞ் செவி
பந்தமற நினையெணாப் பாவிகள்தம் நெஞ்சம்
பகீரென நடுங்கு நெஞ்சம்
பரமநின் திருமுன்னர் குவியாத வஞ்சர்கை
பலியேற்க நீள்கொ டுங்கை
சந்தமிகு சென்னையிற் கந்தகோட் டத்துள்வளர்
தலமோங்கு கந்த வேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வ மணியே. 18

ஐயநின் சீர்பேசு செல்வர்வாய் நல்லதெள்
ளமுதுண் டுஉவந்த திருவாய்
அப்பநின் திருவடி வணங்கினோர் தலைமுடி
அணிந்தோங்கி வாழுந் தலை
மெய்யநின் திருமேனி கண்டபுண் ணியர்கண்கள்
மிக்கவொளி மேவு கண்கள்
வேலநின் புகழ்கேட்ட வித்தகர் திருச்செவி
விழாச்சுபங் கேட்குஞ் செவி
துய்யநின் பதமெண்ணு மேலோர்கள் நெஞ்சமெய்ச்
சுகரூப மான நெஞ்சம்
தோன்றலுன் திருமுன் குவித்தபெரி யோர்கைகள்
சுவர்ன்னமிடு கின்ற கைகள்
சையமுயர் சென்னையிற் கந்தகோட் டத்துள்வளர்
தலமோங்கு கந்த வேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வ மணியே. 19

உழலுற்ற வுழவுழுத லுறுதொழி லியற்றிமல
மொத்தபல பொருளீட் டிவீண்
உறுவயிறு நிறையவெண் சோறடைத் திவ்வுடலை
ஒதிபோல் வளர்த்து நாளும்
விழலுற்ற வாழ்க்கையை விரும்பினே னையவிவ்
வெய்யவுடல் பொய்யென் கிலேன்
வெளிமயக் கோமாய விடமயக் கோவெனது
விதிமயக் கோவ றிகிலேன்

Koviloor Digital Library

கழலுற்ற நின்றுணைக் கான்மலர் வணங்கிநின்
கருணையை விழைந்து கொண்டெங்
களைகணே யீராறு கண்கொண்ட வென்றனிரு
கண்ணேயெ னட்புகழ் கிலேன்
தழைவுற்ற சென்னையிற் கந்தகோட் டத்துள்வளர்
தலமோங்கு கந்த வேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வ மணியே. 20

வானமெங் கேயமுத பானமெங் கேயமரர்
வாழ்க்கையடி மான மெங்கே
மாட்சியெங் கேயவர்கள் சூழ்ச்சியெங் கேதேவ
மன்னனர சாட்சி யெங்கே
ஞானமெங் கேமுனிவர் மோனமெங் கேயந்த
நான்முகன் செய்கை யெங்கே
நாரணன் காத்தலை நடத்தலெங் கேமறை
நவின்றிடு மொழுக்க மெங்கே
ஈனமங் கேசெய்த தாருகனை யாயிர
இலக்கமுறு சிங்க முகனை
எண்ணரிய திறல்பெற்ற சூரனைம றக்கருணை
ஈந்துபணி கொண்டி லையெனில்
தானமிங் கேர்சென்னை கந்தகோட் டத்துள்வளர்
தலமோங்கு கந்த வேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வ மணியே. 21

மனமான வொருசிறுவன் மதியான குருவையும்
மதித்திடா னின்ன டிச்சீர்
மகிழ்கல்வி கற்றிடான் சும்மாவி ரான்காம
மடுவினிடை வீழ்ந்து சுழல்வான்
சினமான வெஞ்சுரத் துழலுவன் உலோபமாஞ்
சிறுகுகையி னூடு புகுவான்
செறுமோக இருளிடைச் செல்குவான் மதமெனுஞ்
செய்குன்றி லேறி விழுவான்
இனமான மாச்சர்ய வெங்குழியி னுள்ளே
யிறங்குவான் சிறிது மந்தோ
என்சொல் கேளானெனது கைப்படான் மற்றிதற்
கேழையே னென்செய் குவேன்
தனநீடு சென்னையிற் கந்தகோட் டத்துள்வளர்
தலமோங்கு கந்த வேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வ மணியே. 22

Koviloor Digital Library

வாய்கொண் டுரைத்தலரி தென்செய்கே னென்செய்கேன்
வள்ளலுன் சேவ டிக்கண்
மன்னுது பொன்னுசை மண்ணுசை பெண்ணுசை
வாய்ந்துழலு மெனது மனது
பேய்கொண்டு கள்ளுண்டு கோலினுன் மொத்துண்டு
பித்துண்ட வன் குரங்கோ
பேசுறு குலாலனுற் சுழல்கின்ற திகிரியோ
பேதைவிளை யாடு பந்தோ
காய்கொண்டு பாய்கின்ற வெவ்விலங் கோபெருங்
காற்றினுல் சுழல் கறங்கோ
காலவடி வோ இந்த்ர ஜாலவடி வோவெனது
கர்மவடி வோஅறி கிலேன்
தாய்கொண்ட சென்னையிற் கந்தகோட் டத்துள்வளர்
தலமோங்கு கந்த வேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வ மணியே. 23

கற்றமே லவரொடுங் கூடிநில் லேன்கல்வி
கற்குநெறி தேர்ந்து கல்லேன்
கனிவுகொண் டுனதுதிரு வடியையொரு கனவினுங்
கருதிலே னல்ல னல்லேன்
குற்றமே செய்வதென் குணமாகு மப்பெருங்
குற்றமெல் லாங்கு ணமெனக்
கொள்ளுவது நின்னருட் குணமாகு மென்னிலென்
குறைதவிர்த் தருள்பு ரிகுவாய்
பெற்றமேல் வருமொரு பெருந்தகையி னருளுருப்
பெற்றெழுந் தோங்கு சுடரே
பிரணவா காரசின் மயவிமல சொரூபமே
பேதமில் பரப்பி ரமமே
தற்றகைய சென்னையிற் கந்தகோட் டத்துள்வளர்
தலமோங்கு கந்த வேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வ மணியே. 24

பாய்ப்பட்ட புலியன்ன நாய்ப்பட்ட கயவர்தம்
பாழ்ப்பட்ட மனையில் நெடுநாள்
பண்பட்ட கழுநீரும் விண்பட்ட வின்னமுது
பட்டபா டாகு மன்றிப்
போய்ப்பட்ட புல்லுமணி பூப்பட்ட பாடுநற்
பூண்பட்ட பாடு தவிடும்
புன்பட்ட வுமியுமுயர் பொன்பட்ட பாடவர்கள்
போகமொரு போக மாமோ

Koviloor Digital Library

ஆய்ப்பட்ட மறைமுடிச் சேய்ப்பட்ட நின்னடிக்
காட்பட்ட பெருவாழ் விலே
அருள்பட்ட நெறியுமெய்ப் பொருள்பட்ட நிலையுமுற
வமர்போக மேபோ கமாம்
தாய்ப்பட்ட சென்னையிற் கந்தகோட் டத்துள்வளர்
தலமோங்கு கந்த வேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வ மணியே. 25

சேவலங் கொடிகொண்ட நினையன்றி வேறுசிறு
தேவரைச் சிந்தை செய்வோர்
செங்கனியை விட்டுவேப் பங்கனியை யுண்ணுமொரு
சிறுகருங் காக்கை நிகர்வார்
நாவலங் காரமற வேறுபுகழ் பேசிநின்
நற்புகழ் வழுத்தா தபேர்
நாய்ப்பால் விரும்பியான் தாய்ப்பாலை நயவாத
நவையுடைப் பேய ராவார்
நீவலந் தரநினது குற்றேவல் புரியாது
நின்றுமற் றேவல் புரிவோர்
நெல்லுக் கிறைக்காது புல்லுக்கி றைக்கின்ற
நெடியவெறு வீண ராவார்
தாவலஞ் சென்னையிற் கந்தகோட் டத்துள்வளர்
தலமோங்கு கந்த வேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வ மணியே. 26

பிரமனினி யென்னைப் பிறப்பிக்க வல்லனோ
பெய்சிறையி லின்னு மொருகாற்
பின்பட்டு நிற்குமோ முன்பட்ட குட்டிற்
பெறுந்துயர் மறந்து விடுமோ
இரவுநிற முடையியம னினியெனைக் கனவினும்
இறப்பிக்க வெண்ண முறுமோ
எண்ணுறா னுதையுண்டு சிதையுண்ட தன்னுடல்
இருந்தவடு வெண்ணு றானோ
கரவுபெறு வினைவந்து நலியுமோ அதனையொரு
காசுக்கு மதியே னெலாங்
கற்றவர்கள் பற்றுநின் றிருவருளை யானுங்
கலந்திடப் பெற்று நின்றேன்
தரமருவு சென்னையிற் கந்தகோட் டத்துள்வளர்
தலமோங்கு கந்த வேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வ மணியே. 27

Koviloor Digital Library

நீருண்டு பொழிகின்ற காருண்டு விளைகின்ற
நிலனுண்டு பலனு முண்டு
நிதியுண்டு துதியுண்டு மதியுண்டு கதிகொண்ட
நெறியுண்டு நிலையு முண்டு
ஊருண்டு பேருண்டு மணியுண்டு பணியுண்டு
உடையுண்டு கொடையு முண்டு
உண்டுண்டு மகிழவே உணவுண்டு சாந்தமுறும்
உளமுண்டு வளமு முண்டு
தேருண்டு கரியுண்டு பரியுண்டு மற்றுள்ள
செல்வங்கள் யாவு முண்டு
தேனுண்டு வண்டுறு கடம்பணியு நின்பதத்
தியானமுண் டாயி லரசே!
தாருண்ட சென்னையிற் கந்தகோட் டத்துள்வளர்
தலமோங்கு கந்த வேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வ மணியே. 28

உளமெனது வசநின்ற தில்லையென் றெல்லைவினை
ஒல்லைவிட் டிடவு மில்லை
உன்பதத் தன்பில்லை யென்றனுக் குற்றதுணை
உனையன்றி வேறு மில்லை
இளையனவ னுக்கருள வேண்டுமென் றுன்பால்
இசைக்கின்ற பேரு மில்லை
ஏழையவ னுக்கருள்வ தேனென்றுன் எதிர்நின்று
இயம்புகின் றோரு மில்லை
வளமருவு முனதுதிரு வருள்குறைவ தில்லைமேன்
மற்றொரு வழக்கு மில்லை
வந்திரப் போர்களுக் கில்லையென்ப தில்லைநீ
வன்மனத் தவனு மல்லை
தளர்விலாச் சென்னையிற் கந்தகோட் டத்துள்வளர்
தலமோங்கு கந்த வேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வ மணியே. 29

எத்திக்கு மென்னுளந் தித்திக்கு மின்பமே
என்னுயிர்க் குயிரா குமோர்
ஏகமே யானந்த போகமே யோகமே
என்பெருஞ் செல்வ மேநன்
முத்திக்கு முதலான முதல்வனே மெய்ஞ்ஞான
மூர்த்தியே முடிவி லாத
முருகனே நெடியமான் மருகனே சிவபிரான்
முத்தாடும் அருமை மகனே

Koviloor Digital Library

பத்திக்கு உவந்தருள் பரிந்தருளு நின்னடிப்
பற்றருளி யென்னை யிந்தப்
படியிலே யுழல்கின்ற குடியிலே யொருவனுப்
பண்ணுமை லாண்ட ருளுவாய்
சத்திக்கு நீர்ச்சென்னை கந்தகோட் டத்துள்வளர்
தலமோங்கு கந்த வேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வ மணியே. 30

நான்கொண்ட விரதநின் னடியலாற் பிறர்தம்மை
நாடாமை யாகு மிந்த
நல்விரத மாங்கனியை யின்மையெனு மொருதுட்ட
நாய்வந்து கவ்வி யந்தோ
தான்கொண்டு போவதினி யென்செய்வே னென்செய்வேன்
தளராமை யென்னு மொருகைத்
தடிகொண் டடிக்கவோ வலியிலேன் சிறியனேன்
றன்முகம் பார்த்தரு ளுவாய்
வான்கொண்ட தெள்ளமுத வாரியே மிகுகருணை
மழையே மழைக்கொண் டலே
வள்ளலே யென்னிருகண் மணியேயெ னின்பமே
மயிலேறு மாணிக் கமே
தான்கொண்ட சென்னையிற் கந்தகோட் டத்துள்வளர்
தலமோங்கு கந்த வேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வ மணியே. 31

சிவசண்முக சிவஞானதேசிகன் திருவடிவாழ்க

50. கந்தர் சரணப்பத்து
(சென்னை — கந்தகோட்டம்)

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

சிவசண்முக சிவஞானதேசிகன் திருவடிவாழ்க

அருளா ரமுதே! சரணஞ் சரணம்
அழகா அமலா சரணஞ் சரணம்
பொருளா வெனையாள் புனிதா சரணம்
பொன்னே மணியே சரணஞ் சரணம்
மருள்வார்க் கரியாய் சரணஞ் சரணம்
மயில்வா கனனே சரணஞ் சரணம்
கருணா லயனே சரணஞ் சரணம்
கந்தா சரணஞ் சரணஞ் சரணம். 1

Koviloor Digital Library

பண்ணேர் மறையின் பயனே சரணம்
பதியே பரமே சரணஞ் சரணம்
விண்ணே ரொளியே வெளியே சரணம்
வெளியின் விளைவே சரணஞ் சரணம்
உண்ணே ருயிரே யுணர்வே சரணம்
உருவே யருவே யுறவே சரணம்
கண்ணே மணியே சரணஞ் சரணம்
கந்தா சரணஞ் சரணஞ் சரணம். 2

முடியா முதலே சரணஞ் சரணம்
முருகா குமரா சரணஞ் சரணம்
வடிவே லரசே சரணஞ் சரணம்
மயிலூர் மணியே சரணஞ் சரணம்
அடியார்க் கெளியாய் சரணஞ் சரணம்
அரியாய் பெரியாய் சரணஞ் சரணம்
கடியாக் கதியே சரணஞ் சரணம்
கந்தா சரணஞ் சரணஞ் சரணம். 3

பூவே மணமே சரணஞ் சரணம்
பொருளே யருளே சரணஞ் சரணம்
கோவே குகனே சரணஞ் சரணம்
குருவே திருவே சரணஞ் சரணம்
தேவே தெளிவே சரணஞ் சரணம்
சிவசண் முகனே சரணஞ் சரணம்
காவேர் தருவே சரணஞ் சரணம்
கந்தா சரணஞ் சரணஞ் சரணம். 4

நடவுந் தனிமா மயிலோய் சரணம்
நல்லோர் புகழும் வல்லோய் சரணம்
திடமுந் திருவுந் தருவோய் சரணம்
தேவர்க் கரியாய் சரணஞ் சரணம்
தடவண் புயனே சரணஞ் சரணம்
தனிமா முதலே சரணஞ் சரணம்
கடவுண் மணியே சரணஞ் சரணம்
கந்தா சரணஞ் சரணஞ் சரணம். 5

கோலக் குறமான் கணவா சரணம்
குலமா மணியே சரணஞ் சரணம்
சீலத் தவருக் கருள்வோய் சரணம்
சிவனார் புதல்வா சரணஞ் சரணம்
ஞாலத் துயர்தீர் நலனே சரணம்
நடுவா கியநல் லொளியே சரணம்
காலற் றெறுவோய் சரணஞ் சரணம்
கந்தா சரணஞ் சரணஞ் சரணம். 6

Koviloor Digital Library

நங்கட் கினியாய் சரணஞ் சரணம்
நந்தா வுயர்சம் பந்தா சரணம்
திங்கட் சடையோன் மகனே சரணம்
சிவைதந் தருளும் புதல்வா சரணம்
துங்கச் சுகநன் றருள்வோய் சரணம்
சுரர்வாழ்ந் திடுநந் துரையே சரணம்
கங்கைக் கொருமா மதலாய் சரணம்
கந்தா சரணஞ் சரணஞ் சரணம். 7

ஒளியுள் ளொளியே சரணஞ் சரணம்
ஒன்றே பலவே சரணஞ் சரணம்
தெளியுந் தெருளே சரணஞ் சரணம்
சிவமே தவமே சரணஞ் சரணம்
அளியுங் கனியே சரணஞ் சரணம்
அமுதே யறிவே சரணஞ் சரணம்
களியோன் றருள்வோய் சரணஞ் சரணம்
கந்தா சரணஞ் சரணஞ் சரணம். 8

மன்னே யெனையாள் வரதா சரணம்
மதியே யடியேன் வாழ்வே சரணம்
பொன்னே புனிதா சரணஞ் சரணம்
புகழ்வா ரிதயம் புகுவாய் சரணம்
அன்னே வடிவே லரசே சரணம்
அறுமா முகனே சரணஞ் சரணம்
கன்னேர் புயனே சரணஞ் சரணம்
கந்தா சரணஞ் சரணஞ் சரணம். 9

வேதப் பொருளே சரணஞ் சரணம்
விண்ணோர் பெருமான் சரணஞ் சரணம்
போதத் திறனே சரணஞ் சரணம்
புனைமா மயிலோய் சரணஞ் சரணம்
நாதத் தொலியே சரணஞ் சரணம்
நவையில் லவனே சரணஞ் சரணம்
காதுக் கினிதாம் புகழோய் சரணம்
கந்தா சரணஞ் சரணஞ் சரணம். 10

சிவசண்முக சிவஞானதேசிகன் திருவடிவாழ்க

அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை

ஐந்தாவது திருமுறை
முற்றிற்று

குறிப்பு:—ஐந்தாவது திருமுறையில் உள்ள கீர்த்தனைகள் யாவும் ஆறாவது திருமுறையில் உள்ள கீர்த்தனைகளுடன் சேர்க்கப்பட்டுள்ளன.

Koviloor Digital Library

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

அருட்பெருஞ்ஜோதி

திருவருட்பா

ஐந்து திருமுறைகள்

பதிகங்கள் — பாட்டுகள்

அகராதி

அ

*அகராதி 539
அக்கநுதற்பிறை 203
அக்கோவீததிசய 421
அங்கணனே 77
அங்கையிற்புண் 238
அசையாதமர்ந்து 383
அசையும்பரி 345
அச்சத்திரங்கல்-10 286
அச்சையடுக்குந் 156
அச்சோவீததிசய 422
அஞ்சாதேயென் 389
அஞ்சுமுகத்தான் 437
அஞ்செழுத்தோ 192
அஞ்சொற்கிளி 369
அடமுடியாது 339
அடலையணிந் 485
அடிநாளிலடி 411
அடிமைசெயப் 102
அடிமைத்திறத்
தலைசல்-11 235
அடிமைப்பதிகம்-10 321
அடியர்நெஞ்ச 195
அடியர்வருந்த 374
அடியனேன்பி 104
அடியனேன்பிழைய 313
அடியனேன்மி 291
அடியனேனல 179
அடியாரின்ப 318
அடியாருள்ளந் 444
அடியார்க்கெளிய 512
அடியார்தொழு 137
அடியெனலெது 428
அடியேனெனச் 448
அடியேன்மிசை 140
அடியேன்முடுகி 318
அடுத்தவர்க்கெல் 221
அடுத்தார்க்கருளு 146
அடுத்தார்தமை 109
அடுத்திலேனின் 482
அடுத்தேவருத் 451
அடையாதவஞ்ச 449
அடையார்புரஞ் 161
அட்டமூர்த்தம 169
அணங்கனூர் 236
அணிகொள்கோ 223
அணிகொள்வேலு 449
அணியாரடியார் 373
அணியேயணி 132
அணிவாயுலகத் 344
அணிவேற்படை 205
அண்டங்கண் 114
அண்டங்களோ 74
அண்டங்கள் 87
அண்டமெலாங் 94
அண்டரெவர்க்கு 358
அண்டவகை 402
அண்டனேயெண் 233
அண்டாரை 137
அண்ணலே 330
அண்ணாவீததிசய 423
அண்ணாவோநின் 454
அண்ணாவோ 492
அண்ணிலேனினை 464
அண்ணமயாகுஞ் 189
அதிசயமாலை-14 421
அத்தனேதணி 465
அத்தனையொற்றி 142
அத்தோவீததிசய 422

* அகராதி — இம்மாதிரி தடித்த எழுத்துகளில் இருப்பவை பதிகங்கள்.

Koviloor Digital Library

அந்தரமிங்கறிவோ 97
அந்தாரணிபுஞ் 362
அந்தோதுயரிற் 117
அந்தோவீததிசய 387
அந்தோவீததிசய 422
அந்நாணையாது 115
அபராதத்தாற்றாமை-10 181
அபராதமன்னிப்புமாலை -10 424
அபராதவிண்ணப்பம் -10 191
அபராதவிண்ணப்பம் -22 316
அப்பனென்னு 464
அப்பாநின் 288
அப்பாநின்றிருவ 418
அப்பார்மலர்ச் 295
அப்பாலுன்சித்த 74
அப்பாவீததிசய 422
அமராவதியிறை 447
அமைவறிந்திடா 233
அம்பரத்தேயான 103
அம்பலத்தழகனை 328
அம்பாதனெடுங் 484
அம்பலத்துணின் 202
அம்பொன்று 445
அம்மாலயனுங் 145
அம்மாவயிற்றெரி 118
அம்மாவீததிசய 422
அம்மாவின்னருட் 418
அம்மைதிருப்பதிகம் -10 306
அம்மையப்பனே 282
அம்மையடுத்த 160
அயன்றவத்தின்ற 441
அயிலேந்தும் 138
அரக்கனல்லன் 284
அரங்காயமன 310
அரசேநின்றிரு 418
அரந்தையோ 264
அரவக்கழலார் 374
அரிதாகியரியதினு 88
அரிபிரமாதிய 395
அரியதுநினது 240
அரியபெருமா 321
அருகாமலத்தி 489
அருட்கடலேயக் 114
அருட்பெருங்கட 293
அருட்டிறத்தலைசல்-36 241
அருட்பிரகாசமாலை -100 392
அருணிறைந்த 391
அருந்திறலன் 294
அருமருந்தனை 248
அருமறையாகம 98
அரும்பாயநகை 484
அரும்பெறன் 502
அரும்பொருளே 108
அருளரசே 106
அருளருவிவழிந்து 92
அருளளித்துமெய் 329
அருளறியாச்சிறு 108
அருளாரமுதப் 295
அருளாரமுதேயர 340
அருளாரமுதேசர 536
அருளியல்வினவல்-10 183
அருளுடையநாயகி 415
அருளுடையபரம் 105
அருளுடையாயடி 416
அருளுதிக்குந் 406
அருளுருவாயைந் 400
அருளுறுங்கய 445
அருளேயறிவே 310
அருளேவடிவா 316
அருளோர்சிறிது 320
அருள்செய்நீறி 175
அருள்தரல்வேண் 312
அருள்நிலைவிளக்கம்-1 333
அருள்நாமவிளக்கம் -10 165
அருள்பவனின்னை 288
அருள்பழுக்குங் 203
அருள்பழுத்தோ 331
அருள்பழுத்தோ 292
அருள்வதுன் 240
அருள்வழங்குங் 432
அருள்விடை வேட்கை -10 194
அருள்விளங்கு 403
அருள்வெளியி 101
அரைசேயடி 467
அரைமதிக்குறழு 497
அர்ப்பித்திரங்கல்-10 284
அலைகடலும் 93
அலையெழுத்துங் 119
அலையோய்கடலி 219
அலைவளைக்கும் 241
அல்லலங்கடலி 220
அல்லலென்பதே 177
அல்லலென்னை 252
அல்லவோதிய 269
அல்லார்க்குங்குழ 483
அல்லாலமுண்ட 215
அல்லுண்டகண் 118
அல்விலங்கு 100
அல்வைத்தநெஞ் 275
அவத்தொழிற்கலைசல் -10 236
அவநாள்கழிக்க 482
அவலத்தழுங்கல்-10 177
அவலமதிக்கலைசல்-11 238
அவலவயிற்றை 519
அவ்வவ்விடை 6
அழகாவமலா 511
அழகுநிறைந் 412
அழிதருமுலக 499
அழிந்தவாழ்க்கை 223
அழியாப்பொரு 472
அழியாவளத்தார் 384
அழுக்குநெஞ்சி 492
அழுதுபிள்ளைக்கே 178
அழுதுநெஞ்சய 245
அளவிலாவுலகத் 258
அளவிறந்தநெடுங் 87
அளவையெலாங் 92
அளிக்குங்குண 154
அளித்தாருலகை 375
அளித்துமன்று 378
அளியநெஞ்ச 257
அளியாரொற்றி 156
அள்ளமிகும்பே 379
அள்ளற்பழனத் 156
அள்ளிக்கொடுக் 377

Koviloor Digital Library

அறங்கனிந்த 415
அறங்கொள்ளு 205
அறத்தாயையோ 219
அறநிலைவிளக்கம்-1 333
அறம்பழுக்குந் 351
அறியாப்பருவத் 191
அறியாப்பருவத்தறி 298
அறியாதநம்பிணி 494
அறியேனுன்றன் 235
அறிவரும்பெருமை-10 193
அறிவுடையாரு 402
அற்கண்டமோ 124
அற்பவளவுநிச் 300
அற்புதக்கண 445
அற்புதப்பொன் 385
அற்புதநின் 417
அற்புதத்திருவை 353
அளஞ்சூழொற் 157
அனத்துப்படிவ 377
அனம்பொறுத் 135
அன்பதென்ப 281
அன்பரிதயமலர் 330
அன்பரிதாமனத் 116
அன்பருளக்கோ 387
அன்பர்கள்வே 221
அன்பர்தம் 292
அன்பர்திருவுளங் 105
அன்பர்பானீங்கா 311
அன்பர்மனக் 394
அன்பளிப்ப 404
அன்பாலென்ற 108
அன்பிலாவஞ்சர் 515
அன்பினுனது 489
அன்பிற்பேதுறல்-10 498
அன்புடனின் 204
அன்புடையாயடி 417
அன்புடையாரின் 80
அன்புமாலை-31 385
அன்புற்றடியார் 315
அன்றகத்தேயடி 394
அன்றினோர்கிலை 224
அன்றுஞ்சிறி 321
அன்றுநீயடிமை 240
அன்றுமறியார் 235
அன்றொருநாளி 392
அன்றோர்பொரு 316
அன்னையப்பா 452
அன்னையெனைத் 446
அன்னையென்ன 336
அன்னைபோன் 247
அன்னைமுதலாம் 455
அன்னையப்பனுநீ 290
அன்னையிற்பெரி 253
அன்னையினும்பெ 99
அன்னோதிருவம் 316
அன்னோவீததிச 423

ஆ

ஆகமமுமாரண 333
ஆக்கமில்லா 366
ஆக்கலாதிய 280
ஆக்குந்தொழி 511
ஆசும்படியி 289
ஆசைபுள்ளா 137
ஆடலமுதப்பத்து-10 205
ஆடலழகரம்பல 371
ஆட்சிகண்டார்க் 119
ஆட்டுகின்றதற் 229
ஆட்டுகின்றநீ 250
ஆட்டுக்குக்கா 123
ஆட்டுத்தலைவர் 158
ஆணிலேயன்றி 443
ஆண்டதுண்டுநீ 282
ஆண்டநின்கரு 287
ஆண்டவநின் 417
ஆண்டவனியாகி 332
ஆண்டாயெனை 326
ஆண்பனைபெண் 386
ஆதவன்றன்பல் 244
ஆதிக்கமாயை 110
ஆதியிலேகலப் 405
ஆதியுமாயந்தமு 409
ஆதியேதில்லை 212
ஆநந்தமாலை-10 414
ஆநந்தப்பதிகம்-11 300
ஆநந்தவெளி 389
ஆமோவலவோ 75
ஆயாக்கொடி 78
ஆயாதுநான்செ 319
ஆயிரங்கார்முகி 337
ஆயிரமன்றே 81
ஆயும்படிவத் 376
ஆயும்வஞ்சக 339
ஆரணமுமாகம 389
ஆரணம்பூத்தவ 142
ஆரமுதமனையவ 420
ஆரமுதேயடி 417
ஆராமகிழ்வுதரு 146
ஆராவமுதாயன் 376
ஆராவமுதே 82
ஆரூருடையாரம் 372
ஆர்கொண்டார் 78
ஆர்க்குங்கடற் 213
ஆர்த்தார்கடனஞ் 218
ஆர்த்துமலிநீர் 379
ஆர்ப்பார்கடனஞ் 218
ஆலடுத்தவரு 187
ஆலநிழற்கிழன் 375
ஆலமிருந்த 359
ஆலமுண்டநீ 263
ஆவலுடையாரு 214
ஆவாவீததிசய 423
ஆவாவெனவெ 320
ஆவித்துணையே 335
ஆழிவிடையார் 373
ஆழிவிடையீர் 159
ஆளாகநின்பொ 278
ஆளாயோதுய 453
ஆளுடைய அடிகள் அருள்மாலை-10 435
ஆளுடைய அரசுகள் அருள்மாலை-10 431
ஆளுடைய பிள்ளையார் அருள்மாலை-12 427
ஆளுடைய நம்பிகள் அருள்மாலை-10 433
ஆளுடையாய் 417
ஆள்வினையாற் 321
ஆறடுத்துச்சென் 241
ஆருத்துயரத்தழு 140
ஆருத்துயரந்தரு 479

542 Koviloor Digital Library

ஆருறுதத்துவத் 405
ஆறிட்டவேணி 118
ஆறுமுகங்கொண் 521
ஆறுமுகத்தார் 156
ஆறுமுகப்பெரு 508
ஆறுமுகமுந்தினி 512
ஆறுமுகத்தான் 31
ஆறுவாண்முகத் 201
ஆறெழுத்துண்மை-10-471
ஆற்ருக்காதலின் இரங்கல்-11 375
ஆற்ருமுறை-10 460
ஆற்ருப்புலம்பல்-5 492
ஆற்ருல்விளங்கு 340
ஆற்ருவின்னப்பம்-10-253
ஆற்ருவிரகம்-10 382
ஆற்ருவிரக்கம்-10 480
ஆற்றுக்கேபிறை 329
ஆற்றுச்சடை 162
ஆனந்தக்கூத்த 221
ஆனுவார்வினலைசல் 10-240
ஆனேறிவர் 327
ஆனேறும்பெரு 99

இ

இகவாவடியர் 472
இகழ்ந்திடே 286
இக்கணமிருந்த 307
இங்கிதப்பத்து-12 516
இங்கிதமாலை-167 144
இச்சையுண்டே 210
இடஞ்சேரொற் 158
இடமேபொரு 320
இடைக்கொடி 129
இட்டங்களித்த 149
இட்டவகை 323
இட்டார்மறைக் 137
இணையேது 124
இண்டைச்சடை 84
இத்தாரணி 278
இந்தாரிதழி 46
இந்தியமாய்க் 86
இந்நாளடியேன் 314
இப்பாரிடையுணை 277
இப்பாரிலென் 84
இமைக்குமவ்வள 280
இம்மாநிலத்திவி 277
இம்மாநிலத்திற் 316
இம்மையினே 404
இம்மையின்பமே 260
இயங்காத 393
இயங்காமனமும் 128
இரக்கமென்ப 249
இரக்கின்ருேர் 227
இரங்கல்விண்ணப்பம் 10-255
இரங்கன்மாலை-31 358
இரங்காதிருந்தா 314
இரங்காநின்றி 470
இரந்தவிண்ணப்பம் 10-462
இரவிலடிவருந்த 393
இருக்கவாவுற 210
இருட்டாய 406
இருணிறைந்த 394
இருந்தனையெண 253
இருந்தாயிங்கு 476
இருந்தார் 364
இருட்பாயமாய 448
இருப்புநெஞ்சக 450
இருப்பமனத்துக் 315
இருப்பேன்றுய 467
இரும்புன்னை 339
இருவர்க்கரிய 129
இருவினைபொட் 407
இருளறவோ 342
இருளார்மனத் 273
இரையேற்று 131
இலக்கமறியா 485
இலக்குமிதோத்திரம்-1 353
இலங்காபுரத்த 130
இலதைநினைப்பா 476
இலமேசெறி 365
இலவுகாக்கின்ற 228
இலனேமற்ருேர் 236
இலைக்குளநீ 433
இலையாற்றுநீ 134
இலையெனுதணு 223
இலைவேட்ட 191
இல்லையில்லை 177
இல்லையுண்டென 199
இல்லையென்பதி 220
இல்லையென்பத 182
இல்லையென்பதே 168
இல்லையேயென்ப 220
இவ்வழியிற்செல் 336
இவ்வேளையருட் 474
இழுதைநெஞ் 490
இழைபொறுத் 300
இளங்கொடி 353
இளவேனின்மா 350
இறகெடுத்த 343
இறப்பிலார் 269
இறைக்குளே 497
இறையாரொற்றி 360
இறையுநின்றிரு 241
இறையேனு 482
இறைவநின 390
இனியநின் 241
இனியநீறிடா 176
இன்பக்கிளவி-10 364
இன்படையான் 81
இன்பப்புகழ்ச்சி-10 365
இன்பப்பெரு 511
இன்பமற் 498
இன்பமென்பது 268
இன்பருளும் 419
இன்பற்றவிச்சி 127
இன்பாட்டுத் 434
இன்புடையார் 271
இன்றலவே 114
இன்றிருந்தவரை 237
இன்றுநின்றவர் 251
இன்றுவந்தெனை 193
இன்ருேபகலோ 74
இன்னவுலக 242
இன்னுமெங்ஙன 224
இன்னுமெத்தனை 504
இன்னும்பற்பல 171
இன்னேயெளி 274

Koviloor Digital Library

ஈ

ஈசனைத் 234
ஈடறியாத 126
ஈதலொழியா 374
ஈமப்புறங் 363
ஈயென்று 527
ஈர்ந்தநெஞ்சி 168
ஈர்ந்தே 361
ஈறிலாதநின் 504
ஈனத்திவறு 489
ஈனம்பழுத்த 348
ஈன்றவனே 270
ஈன்றுகொண்ட 282

உ

உகஞ்சேரொற்றி 152
உடம்பாருறு 126
உடல்குளிர 94
உடற்கச்சுயி 147
உடுக்கவேண்டி 209
உடுக்குமதளா 359
உடுக்கும் 159
உடுப்பார் 360
உடைகொள் 194
உடைமைவைத் 193
உடையாயுன் 202
உடையாயென் 114
உடையாருலகிற் 382
உடையாரென் 158
உடையுடுத்திட 170
உடையென்றும் 130
உடையென்ன 142
உட்டிகழ்ந்த 267
உணவையிழங் 372
உண்கண்மகிழ் 160
உண்டதேயுண 346
உண்டநஞ்சின் 254
உண்டாயவுல 453
உண்டாற்குறையு 451
உண்டுநஞ்சமர 240
உண்டுவெறிய 300
உண்டோவெனை 235
உண்டோவென் 296
உண்ணுடும்வல் 196
உண்ணிறைந்தெ 170
உண்ணுகின்றது 283
உண்மைநின்னரு 281
உண்மையறியே 273
உண்மையேயறி 220
உண்மையோதி 230
உதயச்சுடரே 160
உந்துமருத்தோ 370
உப்பிடாத 262
உப்பிருந்த 75
உப்புற்ற 530
உம்பருக்குங் 407
உம்பர்தமக் 273
உம்பர்துயர் 522
உம்பர்வானமுத 346
உம்பர்வான்றுய 169
உயிரநுபவமுற் 427
உயிருளுறை 150
உயிர்க்குள் 371
உய்குவித்து 101
உய்கைத்திருப்பதிகம் 12-299
உய்யவல்லனே 251
உய்யவொன்றறியா 192
உய்யவொன்றி 250
உய்யும்பொருட் 470
உய்யும்வண்ண 213
உய்வண்ண 481
உரப்பார் 366
உரியநாயகி 344
உருத்திரர் 97
உருத்துள் 485
உருநான்கு 96
உருமத்திலே 129
உருவண்டப் 435
உருவத்திலே 111
உருவமொரு 408
உருவாகியுருவி 88
உருவாயுருவி 73
உரைத்தார்சிலர் 317
உலகநிலைமுழு 85
உலகந்தழைக்க 344
உலகமுஞ்சரா 329
உலகமுடையா 370
உலகமுடையார் 380
உலகமெலாந்தனி 85
உலகமெலாமு 392
உலகமேத்திநின் 335
உலகம்பரவுமொ 520
உலகம்பரவும்பர 511
உலகம்பரவும்பெ 316
உலகம்பரவும்பெ 444
உலகம்புரக்கும் 353
உலகவாழ்க்கையி 259
உலகியலினுறும 429
உலகியலுணர் 427
உலகியலோ 412
உலகியற்கடுஞ் 514
உலகினுயிர்வகை 306
உலகுயிர்தொறு 293
உலகெலாநிறைந் 342
உலகெலாந்தழை 438
உலகெலாந்தழைப் 327
உலர்ந்தமரங் 413
உலங்தொரு 353
உழலூற்ற 531
உழையொன் 359
உளங்கொள் 450
உளத்தேயிருங் 365
உளந்தளர 457
உளமெனது 535
உளவறிந்தோர் 408
உள்ளக்கவலை 315
உள்ளதாய் 428
உள்ளதோதினு 264
உள்ளத்தனையே 156
உள்ளத்தெழுந்த 164
உள்ளநெக் 466
உள்ளப்பஞ்சகம்-5 328
உள்ளமறிந்து 322
உள்ளமனக் 458
உள்ளமுத 415
உள்ளமுமுயிரு 438
உள்வார் 369
உள்ளியுருகு 380

Koviloor Digital Library

உள்ளியோ 178
உள்ளிரவி 396
உள்ளுணர்வோ 338
உள்ளுந்திருத் 276
உள்ளும்புறமு 214
உள்ளுருகுந்தரு 402
உள்ளொன்ற 80
உறங்குகின்றது 246
உறவனேயுன்னை 193
உறுதியுணர்த்தல்-3 494
உறைந்துவஞ்சர் 169
உற்றவிடத்திலு 164
உற்றவிடத்தே 159
உற்றுயினுமறை 116
உனக்கேவிழை 447
உன்மரியி 406
உன்னுலெனக்கா 75
உன்னுதற்கு 414
உன்னுந்திரு 136
உன்னுள்ளங் 289
உன்னேரருட் 133
உன்னைநாடுமெ 300
உன்னைநினைந் 336
உன்னையுன்னி 206

ஊ

ஊட்டுகின்ற 75
ஊட்டுகின்றனை 284
ஊட்டுந்திருவா 159
ஊணத்துயர்ந்த 301
ஊனுறக்கமே 260
ஊனேயுடையே 451
ஊனேயுடையே 83
ஊதியம்பெரு 177
ஊராதியிகழ் 459
ஊராமொற்றி 152
ஊருமில்லா 366
ஊருரிருப்பீ 155
ஊரென்றுடை 382
ஊர்சொல்வேன் 197
ஊர்தருவார் 120
ஊர்மதிக்க 191
ஊழையகற்ற 198
ஊழையேமிக 282
ஊழ்வினைப்படி 269
ஊற்றமுற்று 177
ஊற்றூர்சடையீ 161
ஊனமடையா 371
ஊன்கொண்ட 219
ஊன்செய்த 319
ஊன்பார்க்கு 496
ஊன்மறந்த 325

எ

எங்கள்காழி 376
எங்கும்விளங் 401
எங்கோவே 78
எச்சம்பெறு 79
எஞ்சலில் 268
எஞ்சவேண்டிய 171
எஞ்சாவிடரா 276
எட்டிக்கனியு 370
எண்கடந்த 338
எண்குணத்தா 324
எண்டோளிலங் 378
என்னைத்திரங்கல்-10-277
என்னைத்தேங்கல்-2 494
என்னைப்பத்து-10 449
எண்ணைவினிய 164
எண்ணுதெளியே 274
எண்ணுமனுயடி 289
எண்ணிநலிவே 317
எண்ணரியநம் 105
எண்ணரியவெண் 139
எண்ணிலா 259
என்னிலெளி 80
எண்ணில் 460
எண்ணுறுமவர் 470
எண்ணுறுவிருப் 302
எண்பெருவினை 211
எதிர்கொள்பத்து-10 221
எத்திக்கு 535
எந்தாயென் 83
எந்தாயொருநா 315
எந்தாய்நின் 75
எந்தைநினை 531
எந்தைபிரானெ 509
எந்தையேதில்லை 213
எந்தையேயென் 276
எப்பாலவரு 495
எப்பாலு 271
எம்பரவையோ 78
எம்பாலருள்வை 138
எம்பெருமா 103
எம்மதத்தி 409
எம்மதமாட்டு 117
எம்மைவாட்டு 172
எய்தற்கரிய 472
எய்யாதருள் 495
எருதில்வருவார் 360
எல்லாஞ்செயவல் 174
எல்லாந்தெரிந்த 319
எல்லாமுடையவி 125
எல்லாமுடையார் 381
எவ்வுலகு 408
எவ்வேளையோ 82
எழுதாவெழிலுயி 138
எழுத்தறிந்து 97
எழுத்தறிபெருமான்மாலை 31-195
எழுத்திடுநெடு 410
எழுவகைப்பிறவி 304
எளியனேனரின் 504
எளியனேன்சிறி 305
எளியனேன்பி 211
எளியனேன்மை 253
எளியனேன்றிரு 227
எளியேனிமைத்த 273
எளியேனினதுசே 471
எளியேனினதுதி 468
எளியேனின் 277
எளியேனென்ன 480
எளியேன்கருணை 317
எள்ளலேயென்னி 83
எள்ளிருக்கின்ற 113
எற்றுக்கடியர் 239
எற்றேறுநில 141
எற்றேயிததிசய 424

Koviloor Digital Library

எனக்குநன்மை	404
எனக்குநீரிங்கோ	268
என்னைப்பெற்ற	122
என்னையடைந்தாழ்	115
என்னையறியாப்	102
என்னையானறிந்து	482
என்கண்ணணையா	381
என்சிறுமை	83
என்செய்கே	473
என்செய்கை	448
என்செய்திடுவே	317
என்சொல்கே	465
என்பதேற்றவன்	177
என்பாலோ	79
என்பிழையாவை	421
என்பிறப்பினை	268
என்போற்குணத்	139
என்போன்மனித	108
என்மேலருள்	152
என்மேற்பிழை	120
என்வடிவந்தழை	412
என்றுநின்னருள்	287
என்றுமாதர்	474
என்றுமிறவார்	381
என்றுமுனக்	215
என்றென்றழுதா	216
என்றேபிணிக	494
என்னகொடுத்து	361
என்னதன்று	229
என்னநானடி	263
என்னநான்சொ	206
என்னமுதே	82
என்னரசேநின்	336
என்னரசேயென்	100
என்னறிவையுண்	403
என்னுணையறிந்து	322
என்னுருயிருக்கு	318
என்னுருயிர்க்குயிரா	80
என்னுருயிர்க்குப்	158
என்னுருயிர்க்கோர்	370
என்னுருயிர்போ	368
என்னிருகண்ணி	519
என்னிருகண்கா	342
என்னிறைவா	129
என்னுடைவஞ்ச	220
என்னுடையுயி	502
என்னுயிரிற்கலங்	324
என்னுயிர்நீ	99
என்னுரிமைத்தா	298
என்னுறவேயெ	128
என்னெஞ்சோர்	77
என்னென்றேழை	291
என்னேகுறை	496
என்னேமுறையு	106
என்னேயினுநின்	326
என்னேயீதறி	424
என்னேருளத்தி	155
என்னைக்கொடுத்	239
என்னைநின்னவ	194
என்னையறியாப்	322
என்னையுடையா	381
என்னையென்னை	464
என்னையொன்று	388
என்னைவேண்டி	442

ஏ

ஏங்கிநோகின்ற	208
ஏசும்பிறர்	75
ஏசொலிக்கு	81
ஏடார்பொழில்	359
ஏட்டாலுங்	109
ஏணைப்பரிசெஞ்	174
ஏதநிறுத்து	514
ஏதமகற்று	513
ஏதிலாரென	465
ஏதுசெய்குவ	461
ஏதுசெய்திடினும்	293
ஏதுமறியாதிரு	390
எத்தாப்பிறவியிழிவு	10-505
ஏமமுய்ப்போரெ	139
ஏய்ந்துவஞ்சகர்	168
ஏய்ப்பிறப்பொன்	81
ஏலக்குழலாரி	217
ஏலவார்குழலா	201
ஏலார்மனை	75
ஏழிசையா	434
ஏழியற்பண்	173
ஏழைமையிளிரங்கல்-9	481
ஏறியநாரொரு	388
ஏறுகின்றிலே	251
ஏற்றிவிட்டார்	127
ஏன்றுகொண்ட	254
ஏன்றுகொள்	295

ஐ

ஐங்கரனடி	437
ஐதட்டிடுநெஞ்ச	289
ஐயநின்சீர்பேசு	531
ஐயநின்னுடை	210
ஐயமேற்றுத்	478
ஐயரேயுமதடி	341
ஐயவின்னுநா	504
ஐயறிவிற்சிறி	390
ஐயனேமாலு	237
ஐயாநின்	418
ஐயாமுக்கண்	341
ஐயாவீதறி	423
ஐயோவீதறி	423
ஐயயனோநினை	463
ஐவர்களுக்கைங்	406
ஐவாயரவிற்	218

ஒ

ஒக்கநெஞ்சமே	199
ஒசியவிடுகுமிடை	153
ஒண்கைமழுவோ	151
ஒண்ணுதலேழை	129
ஒப்பற்றமுக்கட்	124
ஒப்பாரில்லா	235
ஒப்பாருமில்லாத	276
ஒப்பிலாயுனது	236
ஒருகணப்பொழு	207
ஒருகைமுகத்தோ	148
ஒருநாளன்றி	393
ஒருமாதுபெற்ற	111
ஒருமாமுகனை	144

Koviloor Digital Library

ஒருமுடிமேற் 123
ஒருமைப்பயனே 330
ஒருமையிலே 398
ஒருமையுடன் 527
ஒருவரென 151
ஒலிவடிவு 96
ஒல்லார்புரமூன் 357
ஒல்லும்வகை 426
ஒல்லையெயின் 214
ஒல்லையேநஞ் 198
ஒழியாக்கவலை 340
ஒழியாமயல் 342
ஒழுக்கமில்ல 263
ஒளிமருவு 309
ஒளியாயொளிக் 278
ஒளியுள்ளொளி 538
ஒளிவண்ணம் 392
ஒற்றிநகராரிவர் 147
ஒற்றிநகரீர் 150
ஒற்றிநகர்வாழ 359
ஒற்றிப்பெருமா 158
ஒற்றிமேவிய 212
ஒற்றியூரமரு 240
ஒற்றியூரனைப் 176
ஒன்றலவிரண்டு 438
ஒன்றாகியிரண் 401
ஒன்றூர்புர 507
ஒன்றுநின்றன் 236
ஒன்றுந்தெரிந் 320
ஒன்றும்பெருஞ் 153
ஒன்றேயென் 125
ஒன்றோடிரண் 508
ஒன்னார்புரமூன் 154

ஓ

ஓகைமடவார் 345
ஓகோகொடிதே 77
ஓகோவிதநி 424
ஓங்காரத்தனி 432
ஓங்காரத்துள் 395
ஓங்கிநீண்டவா 506
ஓங்குஞ்சடையீர் 162
ஓங்கும்பொருளே 240
ஓடலெங்கணு 208
ஓடவுன்னியே 180
ஓடுகின்றனன் 172
ஓடுநெஞ்சமே 199
ஓடுவாள்தில்லை 327
ஓட்டிவிரந் 374
ஓணமுடையான் 382
ஓதுநெறியொன் 217
ஓமூன்றுளத்தீ 151
ஓயாக்கருணை 118
ஓயாதுவருமிடி 456
ஓயாவிடர் 143
ஓருருவா 135
ஓவாநிலையார் 357
ஓவாமயல்செய் 277
ஓவாதயன்முதல் 137

க

கங்கைகொண்டாய் 121
கங்கைகொண் 133
கங்கைச்சடையா 83
கங்கையஞ்சடை 184
கங்கையஞ்சடைசே 517
கச்சுக்கட்டி 478
கச்சையிடுவார் 363
கஞ்சத்திலோர் 129
கஞ்சமலர்த் 339
கஞ்சனங்கொரு 226
கஞ்சனறியா 359
கஞ்சனைச் 234
கஞ்சனோர்தலை 201
கஞ்சன்றுதிக்கும் 451
கடந்தாழ்கயம் 318
கடப்பாமலர் 465
கடம்பொழி 254
கடலமுதே 132
கடலேயனைய 296
கடவுள்நீறிடாக் 174
கடனேயடியர் 236
கடுக்காதலித்தார் 384
கடுத்ததும்பிய 187
கடுத்தாழ் 366
கடும்புலவேடர் 129
கடும்புலைக் 514
கடைப்பட்டே 493
கடையவனேன் 245
கடையனேனின் 505
கடையேன் 467
கட்டினேன் 192
கணத்திலென்னை 280
கணத்தினிலுலக 238
கணமொன்றிலே 139
கணேசத்திருவருள் மாலை-10 442
கண்கட்டியாடும் 114
கண்கண்மூன்றி 225
கண்கள்களிப்ப 145
கண்குழைந்து 77
கண்கொண்ட 119
கண்கொண்மணி 164
கண்டவனே 271
கண்டனேகவா 450
கண்ணடப்பனேன் 495
கண்ணப்பனேத் 140
கண்ணப்பனேத்து 84
கண்ணப்பா 266
கண்ணனறியாக் 378
கண்ணனெடு 357
கண்ணனையயனை 502
கண்ணனையா 325
கண்ணனோடயன் 200
கண்ணாணிமுதை 84
கண்ணாரமுதே 266
கண்ணார்நுதலார் 362
கண்ணார்நுதலார் 501
கண்ணார்நுதலோ 274
கண்ணார்நுதற் 118
கண்ணிமதி 509
கண்ணிலான்சுடர் 281
கண்ணிலான்சுடர் 284
கண்ணிறைவுனது 247
கண்ணின்மணி 147
கண்ணுறுடைய 103
கண்ணுறுமணி 277
கண்ணுறுமாம 249

Koviloor Digital Library

கண்ணுதலானை 222
கண்ணுதலான் 121
கண்ணுதலேநின்ரு 77
கண்ணுதலேநின் 202
கண்ணுதற்கரும் 248
கண்ணுமனமுங் 160
கண்ணுளேவிளங் 432
கண்ணேயக் 133
கண்ணைக்காட்டி 478
கண்ணேநங்கு 386
கண்மயக்கும் 104
கண்மூன்றுறு 446
கண்விருப்புங் 414
கந்தநாண்மல 343
கந்தமும்மல 252
கந்தர்சரணப்பத்து 10-536
கந்தவண்ண 172
கந்தவனஞ் 159
கமரிடைமல 248
கமலமலரயன் 445
கமலன் 373
கமைப்பினீகிலா 168
கயவரில்லிடை 208
கரங்காட்டி 126
கரத்தைக்காட்டி 477
கரப்பவர்க் 182
கரவுநெஞ்சினர் 168
கரியமாலன்று 225
கருங்கடு 486
கருங்கணஞ் 238
கருங்களிற் 327
கருணைக்கடலே 159
கருணைக்கடலே 314
கருணைக்கொரு 376
கருணைநிறைந் 85
கருணைபெருதிரங்கல் 10 - 289
கருணைமாலை-30 463
கருணையங்கடலே 293
கருணைவடிவா 399
கருணைவின்னப்பம் 10 - 320
கருதற்கரி 363
கருதாயோநெஞ் 215
கருதுமவரை 366
கருதெனவடி 183
கருத்தறியாச் 112
கருமருந்தாய 495
கருமாலகற்றும் 163
கருமுகநீக்கிய 112
கருமையளவும் 153
கருமையாம் 233
கரும்பனையா 421
கரும்பிலினியீ 160
கரும்பினினியார் 361
கரும்பின்கட் 246
கரும்பே 239
கரும்டைந்நாக 225
கருவாழ்வகற் 379
கருவிகளை 405
கருவெளிக்குட் 435
கருவேதனை 139
கரைபடாவஞ்ச 193
கரையில்வீண் 527
கலகமணக் 377
கலங்குகின்ற 207
கலமிலாது 180
கலிமுறையீடு-12 219
கலிவின்னப்பம்-10 319
கலைக்கடலே 350
கலைக்கடைநன் 425
கலைநிறை 445
கலைபுயின்ற 311
கலைபயின்று 338
கலைமகளார்திருப்பதிகம் 4 - 311
கலைமகளோ 134
கலையாளுடையீ 153
கல்லளவா 455
கல்லாக்கொடிய 479
கல்லாதவஞ்ச 457
கல்லாதபுந்தியு 118
கல்லாநடை 297
கல்லாநாயே 452
கல்லாயவன் 352
கல்லாரிடத்தி 141
கல்லாரொடுங் 298
கல்லார்க்கிதங் 243
கல்லாலடியார் 501
கல்லிகந்தவன் 177
கல்லிநெஞ் 228
கல்லென்கோ 76
கல்லென்று 131
கல்லேன்மனக் 218
கல்லைநிகராங் 197
கல்லைப்புறங் 245
கல்லையுந்தி 181
கல்லையுமுருக் 346
கல்லையும்பசும் 189
கல்லையொத்த 505
கல்லைவெளக்கும் 363
கல்லைவில்லிற் 294
கல்லைவெல்ல 283
கல்வியெலாங் 509
கல்விவேண்டிய 265
கழல்கொளுன் 192
கழிபகற்கிரங்கல்-10 282
களங்கனி 127
களங்கொண்ட 127
களந்திரும் 142
களித்துநின் 450
களிவேதனுமங் 219
கள்ளக்கயற் 480
கள்ளநெஞ்சகனு 443
கள்ளநெஞ்சக 299
கள்ளநெஞ்சி 491
கள்ளநெறி 298
கள்ளமற்ற 189
கள்ளமனத்துக் 296
கள்ளாடிய 131
கள்ளுண்டநாய் 243
கள்ளுருகு 338
கறிபிடித்த 522
கறையோர் 330
கற்சிலே 473
கற்கோட்டை 110
கற்பங்கள்பல 96
கற்பதுங்கோட் 142
கற்பவற்றை 243
கற்பவையெலாங் 306
கற்பவையெலாங் 349
கற்பனவறிந்து 255
கற்பனைகளெல் 401

Koviloor Digital Library

கற்பனையே 510
கற்பிலா 469
கற்பேவிக 140
கற்றமேலவ 533
கற்றவர்புகழ் 498
கற்றவர்க்கினிதா 248
கற்றவர்தங் 399
கற்றவனை 101
கற்றறிந்த 510
கற்றறியே 79
கற்றீரொற்றீர் 159
கற்றேயறியா 297
கற்றைச்சடை 374
கற்றைச்சடையீர் 158
கற்றொளி 529
கனிமானிதழி 154
கன்மயமுங் 394
கன்னியரளகக் 238
கன்னியர்தம் 458
கன்னேய 458

கா

காசமேகங் 477
காட்சியற்புதம்-10 374
காட்சிப்பெருமிதம்-10 187
காட்சியேகாண் 91
காணவினியாரெ 362
காணப்பத்து-10 484
காணுகின்றகண் 405
காணேனினது 318
காண்டத்தின்மே 119
காண்பதுகருதி 193
காதமணக்குங் 382
காதரவாலுட் 143
காதல்விண்ணப்பம்-10 257
காதற்சிறப்புக்கதுவா மாண்பு-12 380
காதன்மாட்சி-10 383
காதார்கருவிழி 190
காதுநடந்த 363
காமக்கடலிற் 273
காமசத்தி 421
காமட்டலர் 134
காமப்பயலைத் 480
காமமென்பதோ 255
காமமென்னுமோ 268
காமம்படர்நெஞ் 133
காமலர்நறவுக் 516
காமவுட்பகை 526
காமாந்தகாரி 483
காயமாங் 515
காயமென்பதா 179
காயாதளியக் 512
காயார்சரி 334
காயுநெஞ்சி 491
காயோடுட 501
காயோமென 475
காய்நின்ற 492
காரணனென்று 395
காராயவண்ண 350
காரார்குழலா 204
காரூர்சடை 501
காரேயெனு 118
கார்பூத்த 495
கார்முகமாகப் 124
காலங்கடந்தார் 372
காலஞ்செல்கின்ற 228
காலைமலர்ந்த 370
கால்குறித்த 466
கால்வாங்கிய 336
காவலனேயன் 270
காவாயொற்றிப் 159
காவிக்களங் 160
காவிக்குநேர் 127
காவிமணந்த 376
காவிமலைக்கண் 481
காவின்மன்னவ 171
காற்றுக்குமேல் 117
கானலிடை 529
கானமுவள 507
கானனீர்விழை 439
கான்போலிருண் 128
கான்றசோறருங் 238

கி

கிடைக்குன் 464
கிரியைநெறி 94
கிளைக்குறும் 497

கீ

கீளுடையாய் 107

கு

குடிகொண்மலஞ் 300
கும்பமாமுனி 441
குருகாரொற்றி 150
குருதிநிறைந்த 301
குருந்தாமென் 119
குருவேயயனரி 447
குழகனையழியாக் 503
குழிக்குமண்ண 248
குளங்கொள் 226
குறிக்கொளன்ப 465
குறியாராய்ச்சி-11 373
குறைநேர்ந்தபத்து-10 485
குறையிரந்தபத்து-10 452
குற்றஞ்செயினுங் 242
குற்றமெத்தனை 190
குற்றமேலா 298
குற்றமெல்லாங் 222
குற்றமேபல 264
குற்றம்பல 81
குன்றமொத் 496
குன்றுதகுறைக் 387
குன்றுநிலை 318
குன்றுநேர் 450
குன்றுபொய் 463
குன்றேமகிழ் 467
குன்றோர்முலை 279

கூ

கூடல்விழைதல்-10 500
கூடும்படிமுன் 213
கூட்டுமெலும்பா 301
கூட்டுவிக்குண் 244
கூத்துடையா 122
கூம்பாதமெய் 102
கூம்பாவொற்றி 157
கூர்கொண்ட 303

Koviloor Digital Library

கூவியென்பதே 262
கூவியேழை 460
கூழுக்கழுவே 521
கூழைமாமுகி 504
கூருதவாழ்க்கை 142
கூறுமையாட் 217
கூறுமோர்கணத் 230
கூறுவதோர் 352
கூறுற்றகுற்ற 109
கூறேனோ 475

கெ

கெடுக்கும்வண் 229

கே

கேட்டிலாயடியே 321
கேவலசகலவாத 439
கேளனந்தானொ 288
கேளாதுபோலிரு 448

கை

கைக்கின்றகாய 107
கைதவத்தா 178
கையடைநல் 426
கையடைமுட்டற்கிரங்கல்-4 495
கையாததுன்ப 447
கையாதஅன்பு 453

கொ

கொங்கிட்ட 127
கொடிகொண்ட 115
கொடியநஞ்சமு 247
கொடியநெஞ்சி 255
கொடியபாவி 291
கொடியமாதர் 231
கொடியவஞ்சக 261
கொடியாலெயில் 155
கொடிவின்னப்பம் 11-261
கொடைமடப்புகழ்ச்சி 10-188
கொடைமடவின்னப்பம் 10-270
கொடையாரொ 149
கொண்டனிறத் 191
கொலையறியாக் 273
கொழுதியளிதே 377
கொள்ளுண்ட 447
கொள்ளும்பொழி 476
கொள்ளுவார் 242
கொள்ளேனோ 474
கொற்றமுடை 375
கொன்செய்தாற் 80
கொன்றைச் 162
கொன்னெஞ்சேன் 82

கோ

கோடாமேபன்றி 297
கோடாவருட் 133
கோடாவொற்றி 157
கோடிநாவினுங் 280
கோடும்பிறைச் 81
கோதகன்ற 92
கோதிலாக்குறை 519
கோதேமருவார் 381
கோதையோர் 276
கோமாற்கருளுங் 145
கோலக்குறமான் 537
கோலமலர்த்தாட் 164
கோலொன்று 131
கோலமென்னு 232
கோவேநற் 454
கோவேயின் 456
கோவேயெண் 90
கோளாக்கிக்கொள் 84
கோள்கொண்ட 78
கோள்வேண்டு 113

ச

சகமாகிச்சிவனு 88
சகமாறுடையா 500
சகமிலேயேயென் 122
சகலமாய்க்கேவல 88
சகலமொடு 401
சங்கக்குழையார் 372
சங்கபாணியைச் 463
சங்கமருவு 147
சங்கம்வளர்ந் 311
சங்கரனே 270
சங்கராமுக் 335
சங்குடையான் 196
சச்சிதானந்த 438
சஞ்சிதந்தரு 269
சடமாகி 530
சடையனை 234
சடையவநீ 120
சடையிற்றரி 365
சண்டவெம் 208
சண்பைமறைக் 414
சதிசெய 515
சத்தசத்தியன் 439
சத்தவுருவா 396
சத்தியமெய் 390
சத்திவேற் 521
சந்ததமெனக்கு 305
சந்தார்வரை 516
சந்தைநேர் 461
சந்தோடமாப் 140
சந்நிதிமுறையீடு-11 212
சரங்கார்முகங் 108
சரணப்பதிகம்-11 325
சரணவாரிச 254
சரதத்தாலன்பர் 294
சலங்காதலிக்குந் 375
சல்லாபலகரி-2 332
சல்லாபவியன்மொழி 10-363
சழக்கிருந்த 245
சற்றுநற்குணங் 259
சற்றுமறிவில்லா 388
சற்றேயெனினு 140

சா

சாதகத்தோ 108
சாதல்பிறத்த 300
சாராவருஞ் 191
சாருந்தணிகை 448
சார்ந்தலோபமாங் 232

Koviloor Digital Library

550

சார்ந்தவடி 472
சார்ந்தேநின் 135
சாலமாலு 362
சாறுசேர்திரு 464
சாற்றவனேக 128

சி

சிகாமணிமாலை-15 **217**
சிங்கபுரிக்கந்தர்பதிகம் **522**
சிங்கமாமுகனை 518
சித்தமனே 386
சித்திமெலா 419
சித்திவிநாயகர்பதிகம் **437**
சித்தெவையும் 401
சிந்தாகுலந்தீர் 368
சிந்தாமணியை 164
சிந்தைக்கினி 367
சிந்தைக்கும் 522
சிந்தைத்திருப்பதிகம் **10-297**
சிந்தைநின்ற 187
சிந்தைநொந்தி 299
சிந்தைநொந்து 205
சிந்தைநொந்துல 189
சிந்தைமயங்கி 195
சிமைக்கொள் 146
சிரிப்பார்நின் 321
சிவகாமவல்லி தோத்திரம் **5-310**
சிவசங்கரா 128
சிவசிதம்பரசங்கீர்த்தனம் **5-329**
சிவநேசவெண்பா-104 **73**
சிவபுண்ணியத்தோற்றம் **10-174**
சிவமேசிவஞான 83
சிவயோகசங் 419
சிவாநந்தப்பத்து-10 **210**
சிறியவனேன் 411
சிறியர்செய் 250
சிறியேனிட் 475
சிறியேன்பிழை 317
சிறியேன்றவமோ 154
சிறியேன்றவமோ 316
சிறுமைவிண்ணப்பம் **11-251**
சிறுவிண்ணப்பம்-10 **271**
சிற்பகன்மேவு 447
சிற்பரசிவனே 287
சிற்பரமேயெஞ் 112
சிற்றம்பலத்தா 367
சிற்றிடையெம் 420
சினங்கடந் 138
சினத்தாலுங் 113
சின்மயமாம் 324
சின்மயனே 270

சீ

ஸ்ரீசிவஷண்முகநாமஸங்கீர்த்தனலகரி-10 **167**
சீதநாண்மலர்ச் 442
சீதப்புனல் 356
சீத்தமணி 324
சீரறிவாய்த் 136
ஸ்ரீராமநாமத்திருப்பதிகம் **11-350**
சீராருமறை 522
சீரார்சண்பைக் 429
சீரார்வளஞ்சேர் 355
சீரிடுவார் 124
சீருருத்திர 440
சீர்கொண்டதெய் 446
சீர்கொண்டவொ 132
சீர்கொண்டார் 483
சீர்க்கின்றகூட 109
சீர்சான்றமுக்கட் 31
சீர்சான்றவேத 73
சீர்சிறக்குந் 186
சீர்தருநாவுக்கரை 121
சீர்தருவார் 333
சீர்துணையார் 298
சீர்த்தேன் 355
சீர்புகழுமால் 244
சீர்பூத்தவருட் 452
சீர்வளர்குவளை 516
சீர்வளர்மதி 353
சீலக்குணத்தோர் 356
சீலஞ்சேர்ந்த 161
சீலமறநிற்குஞ் 244
சீலமேவித்திக 194
சீலம்படைத்தீர் 154
ஜீவசாக்ஷிமாலை-28 **454**

சு

சுகமேபாடிய 512
சுடர்கொளு 193
சுத்தநெஞ்ச 252
சுந்தரநீறணி 332
சுந்தரர்க்காக 221
சுந்தரவாண் 141
சுலவுகாற்றனல் 195
சுழியாதவருட் 93
சுற்றதுமற்றவ் 388

சூ

சூடுண்டபூனைக் 126
சூதமெறி 205
சூதுநேர்கின்ற 167
சூரிட்டநடை 308
சூரியசந்திர 400
சூலப்படையார் 363
சூழுமாலயன் 226
சூழ்ந்தவஞ்சக 192
சூழ்வேனினது 318
சூற்படுமேகநிற 109

செ

செக்கச்சிவந்தே 520
செக்கர்ச்சடை 368
செங்கண்விடை 508
செங்கமலாசனன் 135
செங்கேழ்கங்கை 149
செங்கையங் 448
செச்சையழகர் 149
செஞ்சடையெம் 99
செஞ்சொற் 471
செடியனேன் 331
செம்பவளத் 337
செம்பொன்மொழி 155

Koviloor Digital Library

செம்மைவளஞ் 158
செய்காண்வளஞ் 150
செய்கொள் 480
செய்தநன்றி 223
செய்திலே 483
செய்யகமோங்கு 138
செய்யநன்றறி 220
செய்யாரமுலே 79
செய்யும்வண்ண 199
செய்வகைநன் 424
செய்வகையொன் 432
செய்வகை 396
செய்வதன் 466
செய்வதுனது 471
செய்வதுன்கட 237
செய்வேனவ 326
செய்வேன்றீமை 317
செல்லிடிக்குங் 173
செல்லுஞ்சிறுமை 219
செல்லும்வாழ் 461
செல்வச்சீர்த்திமாலை 10-512
செல்வந்துறமும் 367
செவியறிவுறுத்தல் 10-514
செவ்வகையொ 428
செவ்வண்ணத் 391
செவ்வண்ணமே 242
செவ்வேலை 141
செழிக்குஞ் 464
செழிப்படு 486
செழுஞ்சுடர்மாலை-11 451
செழுந்தெண் 362
செறியாதநெஞ்ச 319
செறிவிலாவஞ்சக 515
சென்றநாளிலோ 280
சென்றநாளினுஞ் 290
சென்றுசென்று 215
சென்றுநீபுகும் 229
சென்றுரைப்பார் 75
சென்றுவஞ்சர் 227
சென்றுவாழ்த்து 177

சே

சேடாரியன் 135
சேடார்வளஞ் 147
சேணுடர் 342
சேதனந்தார் 517
சேமமிகுந்திரு 435
சேயையருளுந் 356
சேய்க்குற்றந்தா 135
சேய்பிழை 277
சேரநெஞ்சமே 176
சேருமுக்கட் 472
சேலார்தடஞ் 367
சேலுக்குநேர் 124
சேலேர்விழி 138
சேலைநிகர் 368
சேலோடுமிணை 419
சேல்பிடித்தவன் 449
சேல்வருங்கண் 124
சேல்வருமோர் 115
சேல்வைக்குங் 111
சேவலங்கொடி 534
சேவற்கொடி 471
சேவார்கொடி 367
சேவியாத 473
சேற்கொள் 186

சை

சைவசிற்குணர் 295
சைவத்தலைவர் 241
சைவநாயக 473

சொ

சொந்தமுற 267
சொல்லவொவிய 169
சொல்லற்கரிய 321
சொல்லார்மலர் 449
சொல்லாலியன்ற 364
சொல்லுகின்ற 76
சொல்லுகின்றே 124
சொல்லுஞ் 260
சொல்லுண் 377
சொல்லும்பொரு 467
சொல்லொழியப் 93
சொற்பெறுமெய்ஞ் 6
சொற்போதற்கரு 94
சொற்றுணை 120
சொன்னிலைக்கும் 334
சொன்னிறைந்த 404

சோ

சோதிடநாடல்-10 378
சோபங்கண்டார் 125
சோமனிலவுந் 382
சோர்படைத்துச் 76
சோலையிட்டார் 133

சௌ

சௌந்தரமாலை-12 419

ஞா

ஞாலஞ்செல்கின் 167
ஞாலத்தார் 329
ஞாலமிகழும் 154
ஞாலமிலையடி 394
ஞாலமெலாம் 510
ஞாலமே 91
ஞாலவாழ்க்கை 252
ஞாலவாழ்வெனத் 258
ஞாலவாழ்வெ 499
ஞானசிகாமணிதோத்திரம் 3-344
ஞானமென்பதி 258
ஞானமென்பதி 256
ஞானம்படைத்த 153

த

தகைசேரொற்றி 358
தக்கதறியேன் 239
தக்கவளஞ் 383
தக்கவிதியின் 379
தங்குசராசர 397
தங்குமருட்பார் 366
தஞ்சமுறு 410
தஞ்சமென்றுனே 443
தஞ்சமென்றேநசி 114

5521
Koviloor Digital Library

தடக்கைமாமுக 441
தணிகாசலம்போ 481
தண்காவளஞ்சூழ் 150
தணிகைமலையை 480
தணிகைமேவிய 465
தணியாததுன்ப 449
தண்டணி 516
தண்டாதசஞ்சல 106
தண்டேன்பொழி 508
தண்ணமர் 352
தண்ணமுதமதி 93
தண்ணம்பொழில் 152
தண்ணருளி 328
தண்ணார்நீபத் 204
தண்ணார்மதி 314
தண்ணார்மலரை 145
தண்மதியோ 123
தத்துமத்திடை 252
தத்துவநிலை 427
தத்துவமே 91
தந்தேநயமா 516
தந்தைதாய்மக் 243
தந்தைதாய்மனை 261
தந்தையாயவர் 265
தந்தையாயென் 75
தம்பலம் 199
தம்பிரான் 284
தம்மடியார் 407
தம்மைமறந் 104
தரிசனப்பதிகம்-10 315
தரிசனைவேட்கை-10 502
தருநிதியக் 389
தருமவிடை 373
தரும்பேரரு 138
தருவாயிதருநற் 311
தருவார் 364
தரையிற்கீறிச் 372
தலங்கடோறுஞ் 173
தலத்தனைதில்லை 212
தலைனையடியர் 448
தவத்திறம்போற்றல் 10-213
தவநேயமாகு 218
தவந்தங்கிய 154
தவமதின்றிவன் 165
தவமுண்மையொ 493
தவமேபுரியும் 123
தவம்பெறு 518
தவராயினு 217
தவர்தாம் 378
தவளநீற்று 194
தவளமலர்க் 311
தனிநான்மறை 151
தனைக்கின்ற 129
தற்போதந் 400
தனத்தாலியன்ற 311
தனமுங்கட 479
தனித்திருத்தொடை-
18-519
தனித்தபரநாத 325
தனித்திருப்புலம்பல்-4 330
தனித்திருமாலை-9 444
தனித்திருவிருத்தம் 48-337
தனிப்பரநாத 428
தனிமைக்கிரங்கல்-10 280
தனியேதுய 467
தனியேயிங் 474
தனையர்செய் 254
தனையாள்பவரி 134
தன்னந்தனியா 146
தன்னுலுலகை 476
தன்னுருவங்காட் 402
தன்னேரறியாப் 344
தன்னொளியி 416

தா

தாங்கும் 160
தாணுவின்றரு 493
தாதாதாதா 336
தாதாவுணவுடை 141
தாமப்புயனர் 372
தாமனைமமு 234
தாபராதியர் 283
தாயாகினுஞ் 109
தாயாயளிக்குந் 383
தாயிலாரென 190
தாயிற்பெரிய 315
தாயினும்பெருந் 285
தாயின்மேவிய 186
தாயுந்தந்தையுஞ் 341
தாயுந்தந்தையுந் 331
தாயேமிகவுந் 141
தாய்க்குந்தந்தை 249
தாய்க்குமினிதாகு 191
தாய்தடையென் 337
தாரம்விற்றுஞ் 80
தாருகப்பத 518
தாவாதவசிய 523
தாவியேயியமன் 237
தாவென்றருளும் 152
தாழாததுன்ப 319
தாழுங்கொடிய 479
தாழ்விக்கும் 81
தாழ்வேதுமின்றி 125
தாழ்வேன் 467
தானுகித் 99

தி

திகழ்கின்றஞான 216
திக்குமாறினும் 170
திங்களங்கொழு 444
திங்களுலவு 356
திங்கள்விளங்கும் 330
திடனுன்மறை 383
திண்ணஞ்சற் 84
திண்ணமறியாச் 82
தியாகவண்ணப்பதிகம்
10-204
திரப்படுந்திரு 188
திரப்படுவேன 482
திருக்கண்ணுத 380
திருக்காட்சிக்கிரங்கல்
10-274
திருக்குறிப்புநாட்டம் 4-329
திருக்கோலச்சிறப்பு 10-377
திருச்சாதனத்தெய்வத்திறம்
10-202
திருத்தகுசீ 431
திருத்தகுதில்லை 328
திருத்தமிகுஞ் 148
திருத்தமுடை 347
திருநாள்நினை 136

Koviloor Digital Library

553

திருத்தணிகைப்பதிகம்-446
திருநெடுமா 440
திருநெடுமாலன் 332
திருநெறிசேர் 386
திருநெறிமெய்த் 332
திருந்தநான் 213
திருந்தாலமர்ந்து 383
திருப்பள்ளித்தாமந்தாங்கல் 3-519
திருப்புகழ்ச்சி-3 331
திருப்புகழ்விலாசம்-10-200
திருப்புகற்பதிகம்-10 296
திருமகளெம்பெ 350
திருமருந்தருணிலை-2 332
திருமாலறியா 437
திருமாலாதிய 521
திருமாலுநான்மு 133
திருமாலுமுருமா 392
திருமாலைப்பணி 520
திருமால்வணங்கு 367
திருமாற்கரியா 356
திருமுல்லைவாயில்திரு விண்ணப்பம்-10 186
திருவடிசூடவிழைதல் 10-479
திருவடிச்சரண்புகல் 10-208
திருவடிப்புகழ்ச்சி-128 1
திருவண்ணநதி 302
திருவண்ணப்பதிகம் 10-302
திருவண்ணவிண்ணப்பம் 12-266
திருவருடுங் 414
திருவருட்கிரங்கல்-10-276
திருவருட்பதிகம்-10 291
திருவருட்புநிதை 327
திருவருட்பெருமிதம்- 10-379
திருவருட்பேற்றுவிழைவு- 10-511
திருவருண்முறையீடு- 232-106
திருவருள்வழக்கவிளக்கம்- 10-173
திருவருள்விலாசப்பத்து 10-508
திருவருள்விலாசம்-2 332
திருவருள்விழைதல்-3 493
திருவருள்வேட்கை 10-190
திருவல்லி 142
திருவாதவூரெம் 121
திருவார்கமலத் 145
திருவார்பொன் 315
திருவிண்ணப்பம்-10 245
திருவிற்குேன்று 368
திருவிளையகன் 225
திருவுங்கல்வி 442
திருவுஞ்சீரும் 299
திருவுலாத்திறம்-10 367
திருவுலாப்பேறு-10 355
திருவுலாவியப்பு-10 362
திருவுருக்கொண் 412
திருவுளங்தெரி 331
திருவெலா 327
திருவேதிகமு 310
திருவையளிக்கு 146
திருவோங்கு 524
திரைபடாத 187
திரையாரோதை 384
தில்லையிடை 267
தில்லையுடையா 384
தில்லைவளத்தா 364
தில்லைவாய்ந்த 186
திசைங்க 493
திறப்படநன் 426
தினந்தோறு 216

தீ

தீக்குணத்தார் 81
தீங்குநெஞ்சி 491
தீதறிவேனன் 196
தீதிலாததிரு 187
தீதுசெய்தனன் 290
தீதுசெய்தாலு 139
தீதுசெய்தேற் 288
தீதுதவிர்க்கு 151
தீதுதவிர்ப்பார் 361
தீதுமுற்று 297
தீதுவேண்டி 227
தீதொன்றுமே 310
தீராததுயர்க் 452
தீர்ந்தார்தலை 376
தீவினைநல்வினை 102

து

துங்கவெண் 200
துச்சிலைவிரும் 181
துடிசேர்கரத் 358
துடியென்னு 525
துடிவைத்த 122
துட்டநெஞ்சக 284
துட்டநெஞ்சி 491
துட்டவஞ்சக 334
துணைமுலைமடந் 313
துணையாமுன் 279
துணையிலே 237
துதிசெய்யடி 376
துதிசேரொற்றி 147
துதிபெறுகண 445
துதிபெறுங்காசி 441
துத்திப்படத்தார் 366
துப்பாடுதிரு 386
துப்புநேரிதழி 184
துயிலேறிய 493
துரியவெளிதனி 395
துருமஞ்செழிக்கு 147
துரும்பினேன் 192
துலுக்கானத்தம்மன்பேரில் பஞ்சரத்தினம்-5 353
துலைக்கொடி 425
துளிக்குங் 189
துள்ளிவாய் 240
துறையிடுங் 286
துற்குணத்தில் 84
துற்சங்கத்தோர் 82
துனியாலுளங் 106
துனியேபிற 239
துன்பவாழ்வினை 229
துன்பிலுலகம் 473
துன்பேசுமை 278
துன்பேமிகுமிவ் 139
துன்றியமா 297
துன்னலுடையா 146
துன்னுஞ்சோம 214

Koviloor Digital Library

துன்னுமறை 472
துன்னுடைய 296
துன்னுமாமருந் 188

தூ

தூக்கமுஞ்சோம் 121
தூக்கமுமுன் 243
தூக்கமுற்றிடு 231
தூங்கினேன் 182
தூயநீறிடா 175
தூயநெஞ்சமே 225

தெ

தெண்ணீர் 121
தெய்வமெலாம் 420
தெய்வநீறிடா 175
தெய்வமணிமாலை-31 524
தெரித்தாலன்றி 320
தெரிந்துநினைக் 215
தெரியத்தெரி 314
தெரியாமை 288
தெரியேனுனது 471
தெருட்பாலுறு 138
தெருளமுதத் 324
தெருளுடையார் 272
தெருளுடையோ 518
தெருளும்பொரு 110
தெவ்வணமட 183
தெவ்வண்ண 275
தெவ்வழியோடு 118
தெவ்வினையார் 351
தெவ்வூர்பொடி 162
தெளிக்குமறை 452
தெள்ளகத் 448
தெள்ளமுதமனை 413
தெறித்துமணி 359
தென்னஞ்சோலை 367
தென்னூர்சோலை 356

தே

தேசகத்தி 435
தேசாரயில் 205
தேசார்மணி 356
தேசுபூத்த 358
தேசுலாவிய 187
தேசுவிரித் 90
தேடார்க்கரிய 356
தேடுகின்ற 435
தேடுங்கிளி 517
தேடுவார்தேடு 292
தேடேனோ 475
தேட்டக்கண் 114
தேமாம்பொழில் 157
தேருநற்றவர் 188
தேரோங்கு 127
தேர்ந்தவுளத் 433
தேர்ந்துணர்ந்து 426
தேர்ந்துதேடி 262
தேவநேசனே 465
தேவரறியார் 235
தேவராயினு 294
தேவருந்தவ 463
தேவரெலாந் 431
தேவரேமுத 493
தேவரேயயனே 236
தேவர்க்கரிய 162
தேவர்நாயகம் 450
தேவாசிரியம்-3 515
தேவியலறியாச் 191
தேவேநின்னடி 204
தேவேயென 489
தேருப்பெரு 494
தேனூரலங்கற் 479
தேனூர்கமலத் 367
தேனூர்பொழிலா 148
தேனுங்கடமுந் 476
தேனுந்தெள்ளிய 463
தேனெய்யாடிய 224
தேனெனவினி 183
தேனென்ற 74
தேனேயமுதே 521
தேனேயுளங் 481
தேனேர்குதலை 368
தேன்சொல்லும் 107
தேன்படிக்கு 434
தேன்மொழிப் 420
தேன்வழிமலர் 497

தொ

தொண்டனே 504
தொண்டர்க்கரு 267
தொண்டுபுரிவோ 374
தொல்லைக்குடும் 519
தொழுகின்றோ 203
தொழுதுவணங் 371

தோ

தோடார்குழை 358
தோடுடையார் 173
தோடேந்து 520
தோளாமணி 361
தோற்றமிலா 76
தோன்றுஞானச் 472
தோன்றுத்துணை 190
தோன்றுதுவி 86
தோன்றுபர 98
தோன்றுவது 297

ந

நங்கட்கினியாய் 538
நச்சிலேபழ 506
நச்சைமிடற் 267
நடங்கொண்ட 110
நடங்கொள்கமல 379
நடங்கொள்பதத் 147
நடவாழ்வொற் 157
நடவுந்தனிமா 537
நடுங்கமலக் 411
நடும்பாட்டை 109
நடையேய்துய 452
நண்ணுதவஞ்ச 482
நண்ணித்தலையா 78
நண்ணுமங்கையர் 166
நண்ணும்வினை 275
நண்ணேனே 474
நதியும்மதியும் 516
நந்திப்பரி 370
நந்திமகிழ் 373

Koviloor Digital Library

நமச்சிவாயஸங்கீர்த்தன
லகரி-10 169
நம்பலமாமென 333
நம்பனையழியா 234
நம்பினேனின் 192
நம்புநெஞ்ச 199
நயப்படுமோர் 125
நலத்திற் 361
நலமாமொற்றி 157
நலமேவுதொண் 481
நல்காதவீனர் 446
நல்லநீறிடா 175
நல்லமுதஞ்சிவை 120
நல்லமுதனையார் 194
நல்லவர்பெறு 185
நல்லனல்லனு 249
நல்லாரொற்றி 158
நல்லார்க்கெல்லா 320
நல்லார்மதிக்கு 155
நவநிலைக்கு 399
நவையேதரு 448
நளினமாமலர் 440
நறைமணக்குங் 241
நறையுளதேமலர் 113
நற்றுயும்பிழை 104
நற்றுய்கவன்றது-9 327
நற்றுணைவிளக்கம்-10-171
நன்மையவெல் 468
நன்றறியேன் 483
நன்றிதுவென் 244
நன்றியொன் 289
நன்றுசெய்வதற் 224
நன்றுபுரிவார் 358
நன்றுவந்தருளு 184
நன்றேசிவனெறி 142
நன்னெறி 195

நா

நாகநாட்டதி 257
நாகவணியார் 376
நாடகவின்னப்பம்11-264
நாடநல்லிசை 195
நாடநீறிடா 176
நாடார்வளங் 384
நாடிநின்றே 109
நாடியசீரொற்றி 266
நாடியலுத்தே 236
நாடுஞ்சிவாயநம 217
நாடுந்தாயினு 285
நாடொன்றிய 364
நாட்டமுற்றெணை 209
நாட்டாநகை 326
நாட்டிற்புகழ் 174
நாட்டுந்தணிகை 480
நாட்டுமுப்புர 202
நாட்டும்புகழார் 360
நாணமொன்றில் 192
நாணவைத்தி 79
நாணுமயன் 512
நாதமுங்கடந்து 438
நாதனைப் 234
நாதாபொன் 343
நாம்பிரம 528
நாயினுங்கடை 193
நாயினுங்கீழ் 279
நாயுஞ்செயாத 111
நாயேன்றுன்பக் 321
நாய்க்குங்கடை 316
நாய்க்குமென 301
நாராயணன் 341
நாரையுங்கிளியுநாட்டுறு
தூது-10 356
நாரையூர்நம்பி 440
நாலாரணஞ்சூழ் 152
நாலேயெனுமறை 133
நாவினுலுனை 444
நாளவத்தலைசல்-10 237
நாளவம்படாமை
வேண்டல்-10 496
நாளாகுமுன் 216
நாளென்னிவருந்தல்
10-504
நாளையேகியே 462
நாளைவருவ 239
நானடங்கா 117
நானும்பொய்ய 339
நானேநினக்கடி 141
நானேநினக்கு 218
நானேரெளிமை 108
நான்கண்ட 406
நான்கேட்கின் 389
நான்கொண்ட 536
நான்சிறியே 335
நான்செய் 313
நான்செய்தகுற் 295
நான்செய்தபுண் 116
நான்படும்பாடு 107
நான்முகத்தோ 129
நான்முகனு 305
நான்றனிக்குங் 403

நி

நிகழுநின் 220
நிதிதருநிறை 312
நிதியேநின் 279
நிதியைநினை 337
நித்தனைத்தூய 234
நித்தியம் 329
நிந்நாஸ்துதி-1 343
நிரந்தார் 375
நிருத்தம் 501
நிருத்தம்பயி 373
நிலத்தேசிறு 295
நிலவார்சடை 383
நிலவுமொண்மதி 166
நிலைகாட்டி 125
நிலைகொணீறிடா 176
நிலைக்குந்தணி 476
நிலைநாடியறி 425
நிலையருள் 469
நிலையறியாத 130
நிலையறியே 323
நிலையிலாவுல 178
நிலையுறு 526
நிலையைத்தவ 160
நில்லாவுடம்பை 196
நிறைமதி 122
நிறையணிந்த 385
நிறையவாழ் 194
நிற்பதுபோன்று 257
நிற்பதென்று 200
நினைப்பித்தா 73

556

Koviloor Digital Library

நினையுடையாய் 198
நின்பதம்பாடல் 312
நின்பாலடை 319
நின்பாலறிவு 345
நின்புகழ்நன் 425
நின்போன்ற 270
நின் மயமாய் 87
நின்முனநீல 248
நின்னடிக் 260
நின்னன்பர் 82
நின்னுலெனக் 142
நின்னிருதாட் 509
நின்னிலையறியா 500

நீ

நீக்கமிலா 197
நீடிவளங் 380
நீடுகின்ற 337
நீடுமைம்பொறி 230
நீடுவாழ்க்கை 299
நீட்டமுற்ற 171
நீண்டமாலர 443
நீதிமாதவர் 294
நீதியிலார் 275
நீத்தாடுஞ் 80
நீயேயெனது 135
நீயேயென்றந்தை 110
நீரார்சடை 328
நீரின்மேலெழு 237
நீருண்டு 535
நீரைவிழுங்குஞ் 161
நீர்க்குமதி 377
நீர்சிந்துங் 115
நீர்சொரிந் 181
நீர்பூத்தவேணி 337
நீர்வேய்ந்த 520
நீலக்களங் 335
நீலமிட்டகண் 291
நீலனேன் 248
நீளாதரவு 117
நீளாதிமூல 396
நீறணிந்தொ 310
நீற்றணிவிளங்கு 469
நீற்றிலிட்ட 433

நெ

நெஞ்சமேயிஃதெ 464
நெஞ்சமேயிது 177
நெஞ்சவலங்கூறல்-10-490
நெஞ்சறிவுறுத்தல் 705-31
பதிசொரூபம் 31
சித்தன் 34
கள்வன் 37
சதுரன் 37
தலைமைத்தேவன் 38
பத்திநெறி 38
கணேசர் 39
முருகர் 39
பரமசிவம் 39
வடிவழகு 43
அறிவுறுத்தல் 45
உலகஆசை 46
பெண்ணாசை 48
பொன்னாசை 54
மண்ணாசை 55
கோபம் 56
இளமை 57
உடம்பு 58
பலபிறப்பு 61
அஞ்ஞானம் 61
ஆணவம் 63
முக்குணம் 66
பன்மதசுகம் 67
சித்தாந்தம் 67
உபதேசம் 67
அசாதுக்கள் 68
சாதுக்கள் 69
சிவயோகம் 71
நெஞ்சறிவுறூஉ-10 229
நெஞ்சறைகூவல்-10 225
நெஞ்சுநிலைக்கிரங்கல் 11-278
நெஞ்சுறுத்ததிருநேரிசை 26-214
நெஞ்சேயுகந்த 476
நெஞ்சேவுலக 215
நெஞ்சைத்தேற்றல்-10-227
நெஞ்சொடுநெகிழ்தல் 12-333
நெஞ்சொடுநேர்தல்10-199
நெஞ்சொடுநேர்தல்10-223
நெஞ்சொடுபுலத்தல் 11-475
நெடுமாலும் 393
நெடுமொழிவஞ்சி-10 231
நெய்தற் 360
நெய்யினுற்சுடு 181
நெருப்புக்கு 117
நெறிகொண்ட 110
நெறியிலேன் 241

நே

நேசனுநீ 339
நேயநின்புடை 466
நேயானுகூல 143
நேராவழு 334

நை

நையுமாறெனை 281

நோ

நோயான்மெலி 275
நோயையறுக்கும் 164
நோய்கள் 177

ப

பகுதிதகுதி 336
பக்குவத்தா 408
பங்கேருகட்பூம் 157
பசிக்குணவு 238
பசியெடுக்குமுன் 209
பசுபாசபந்த 409
பசையறு 515
பசையிலா 247
படமெடுத்தாடு 303
படித்தேன் 100
படிபட்ட 114
படிமேலடி 326
படியளவு 347
படியின்மாக்களை 478
படியேயளந்த 340

Koviloor Digital Library

படுவேனல்லேன் 235
படைப்பவனுங் 397
படையம்புயத் 156
பட்டிமாடென 506
பணிகொள்மார் 227
பணித்திறஞ்சாலாப் பாடிழிவு-10 **482**
பணித்திறஞ்சாலாமை **6-486**
பணித்திறம்வேட்டல் **10-474**
பண்கொண்ட 521
பண்செய்த 120
பண்டுமனதுவங் 454
பண்டுறுசங் 523
பண்ணமுடி 198
பண்ணவனேநின் 449
பண்ணவனேபசு 270
பண்ணளாவிய 507
பண்ணார்மொழி 382
பண்ணுலுன்னரு 271
பண்ணுலுன்சீரினை 78
பண்ணினுளிசை 184
பண்ணோர்மறை 537
பண்ணேறு 454
பண்ணேனின் 484
பதங்கூறெற்றி 161
பதந்தருவான் 217
பதிபூசை 525
பதியுமப்பனு 462
பதியேசரணம் 128
பதியேயெங்கு 472
பத்தர்க்கரு 204
பத்தர்தம் 141
பத்தர்நித்தம் 295
பத்திகொண் 469
பத்திமாலை-10 **416**
பந்தமட்டி 256
பந்தவண்ண 166
பயனறியாய் 217
பரங்கிரி 502
பரசிவம்சின்மயம் 1
பரமராசியம்-2 **330**
பரமாகிச்சுக் 86
பரமேது 524
பரம்பரமாங் 434
பரயோகவநு 403
பரிக்கிரகநிலை 98
பரிந்திடுமன 470
பரிந்திலேனருட் 253
பரிந்துநின் 237
பரிந்துனக்கு 215
பரியுமனத்தாற் 317
பருவமுறு 403
பலகோடிமறை 396
பலஞ்சேரொற்றி 148
பவசாதனம் 116
பவமானவெழு 308
பவமெனுங் 499
பவளநிறத் 371
பவனிச்செருக்கு-10 **507**
பழமொழிமேல்வைத்துப் பரிவு கூர்தல்-10 **179**
பழுதுநேர்கின்ற 167
பழுத்தலை 425
பள்ளத்திலே 320
பள்ளவுலகப் 485
பற்றறியா 95
பற்றின்திறம்பகர்தல் **10-233**
பற்றுஞ்செழு 276
பற்றுநெஞ்சக 299
பற்றுநோக்கி 255
பற்றுமுடித்தோ 153
பற்றுவது 304
பனகவணைத் 332
பனிப்பற 517
பன்னகநொங் 460
பன்னருமிப் 197
பன்னரும்வன் 455
பன்னிருகண் 510
பன்னுமனத்தா 197
பன்னும்பல்வே 137
பன்னுவார்க்கரு 187

பா

பாகைப்பொரு 480
பாங்குடையார் 216
பாங்குளநாங் 97
பாடல்கமழும் 358
பாடற்கினிய 163
பாடிநின்றிரு 500
பாடுகின்ற 409
பாடுகின்றோர் 241
பாடும்வகை 388
பாண்டவர் 352
பாம்பாயினு 117
பாயிரமாமறை 97
பாய்ப்பட்ட 533
பாராதிருந்தார் 365
பாரும்விசும்பு 451
பார்கொண்ட 528
பார்க்கின்றிலை 471
பார்த்துநிற் 193
பார்நடையாங் 191
பார்பூத்த 416
பாலிற்றெளிந்த 373
பாலினீற்றுப் 212
பாலெடுத்தேத்து 495
பாலேயமுதே 274
பால்காட்டு 387
பாவமறுப்பார் 371
பாவமெனுமோர் 301
பாவமோருரு 477
பாவவாழ்க்கை 473
பாவவினைக் 458
பாவிநெஞ்ச 206
பாவியேன்படும் 474
பாவியேனின்னு 504
பாற்றக்கணத்தா 149

பி

பிச்சையேற்ற 465
பிச்சையேற்று 263
பிட்டினதிமண் 145
பிட்டுக்கு 123
பித்தப்பெருமான் 513
பித்தரெனும் 366
பித்தனைக்குங் 198
பிரசாதப்பதிகம்-10 **294**
பிரசாதமாலை-10 **412**
பிரசாதவின்னப்பம் **10-247**

Koviloor Digital Library

558

பிரணவத்தி 395
பிரமனினி 534
பிரமன்றலை 371
பிரமன்றலையிற் 501
பிரார்த்தனைப்பதிகம் 10-295
பிரார்த்தனைமாலை-30 446
பிரியமேயவன் 516
பிழைபுரிந்த 247
பிழையலதொன் 413
பிறந்துமுன்ன 224
பிறவாநெறியது 328
பிறவிக்கண் 265
பிறைசூழ்ந்த 113
பிறைமுடித்தாண் 110
பிறையாறு 125
பின்ரும் 362
பின்னின்ற 134

பீ

பீழையைமேவு 112

பு

புகழேவிரும்பிப் 235
புகுவானவர் 511
புணராவிழைவுபொருந்துறு வேட்கையின் இரங்கல் 30-369
புண்ணுமனஞ் 326
புண்ணியமோர் 244
புண்ணியம் 354
புண்ணியர்தம் 399
புண்ணியனே 271
புண்ணியநீற்றுமான்மியம் 5-493
புண்ணியவிளக்கம் 11-163
புண்ணும் 301
புதியனென் 262
புதியேனல்லே 320
புயப்பாலொற்றி 152
புயல்சூழொற்றி 157
புரக்குங்குண 161
புரநோக்கி 136
புரிகின்ற 130
புரியுஞ்சடையீ 162
புரிவேன் 511
புரைசேரு 278
புலையமங்கை 261
புலையமாதர் 505
புலையளவோ 131
புலையேபுரிய 318
புல்லங்கணநீர் 76
புல்லளவாயினு 113
புல்லனேன் 211
புல்வாயின் 218
புறமொழிக்கிரங்கல் 10-288
புற்றேங்கு 105
புன்கண்ணகற்று 315
புன்செய்கை 196
புன்புலையவஞ்ச 455
புன்மைநினைந்திரங்கல் 10-476
புன்றலையென் 410
புன்னுனிப்ப 179
புன்னையிதழிப் 377

பூ

பூங்கொடி 184
பூணுகமாடப் 242
பூணுதபூண் 387
பூணுவெண்பூண் 374
பூதநிலைமுத 391
பூதநும்படை 262
பூதநெறி 303
பூதமெங்கே 74
பூதமே 91
பூதவெளி 409
பூத்திடு 292
பூமாந்தும் 197
பூமேலவனு 375
பூரணிசிற் 416
பூவாய்மலர் 141
பூவாய்வாட்கண் 369
பூவுக்கரை 78
பூவுண்ட 507
பூவேமணமே 537
பூவைவிட்டுப் 77

பெ

பெண்குணத்திற் 520
பெண்கொண்ட 347
பெண்சுமந்த 436
பெண்ணமர் 222
பெண்ணுன் 110
பெண்மணிபாகப் 119
பெண்மணியே 242
பெத்தமுஞ் 329
பெரியநாயகியம்மை தோத்திரம்-3 344
பெரியபொரு 334
பெரியானைமாதர் 216
பெருங்கருணைக் 203
பெருங்களபமுலை 455
பெருஞ்சீரொற்றி 148
பெருந்தாரணி 157
பெருமநின் 240
பெருமைநிதியே 471
பெருமைவேண் 462
பெருமையிற்பிற 287
பெருமையுடை 380
பெரும்பேதை 143
பெரும்பொருட்கி 439
பெருவயலாறு 442
பெருவிண்ணப்பம்-10-273
பெற்றதாய் 170
பெற்றமிவரும் 372
பெற்றுளனைய 115
பெற்றிடுதாய் 79
பெற்றியறியாப் 378

பே

பேசத்தெரியேன் 83
பேசுங்கமலப் 155
பேதப்படா 328
பேதமுறு 94
பேதைநெஞ்சினே 211
பேதைநெஞ்சே 496
பேதைப்பருவ 317
பேதைமாதர் 232
பேதையுலகிர் 348
பேயனே 298

Koviloor Digital Library

பேயனேனின்னு 505
பேயுமஞ்சுறும் 461
பேய்கொண்ட 341
பேரறிவாற் 74
பேராதகாமப் 243
பேராரொற்றி 151
பேராயவண் 96
பேருருவோ 74
பேரூரும்பரவை 434
பேர்வாமொற்றி 148

பை

பைச்சூரரவப் 174
பைத்தவரவப் 378
பையாளுமல்கு 134
பையுரைத்தாடும் 112

பொ

பொங்கரும்பேர் 122
பொங்குபல 95
பொங்குமாயை 283
பொதிதருமங் 486
பொது-6 495
பொதுத்தனித்திரு வெண்பா-13 335
பொதுநின்றருள் 149
பொதுவினின்ற 185
பொதுவென்றும் 98
பொத்தேர் 275
பொத்தியமூல 428
பொய்கண்டாய் 336
பொய்யருளத்து 369
பொய்யர்க்குத 245
பொய்யர்தம்மன 461
பொய்யனாகிலும் 265
பொய்யனேன்பி 518
பொய்யனேன் 299
பொய்யாதநின்ன 272
பொய்யாதபுக 325
பொய்யாதமொ 307
பொய்யாதவரமெ 415
பொய்யாமல 277
பொய்யாமுலக 106
பொய்யான 289
பொய்யிலார்க்கு 190
பொய்யேபுலம்பி 218
பொய்யொன்றே 243
பொய்யோரணி 274
பொய்யோவடி 107
பொய்வந்த 121
பொய்விடுகின்ற 219
பொய்விட்டிடாத 143
பொய்விரி 334
பொருந்தியின 209
பொருப்புறுநீலி 134
பொருளெலாம் 286
பொருளேயடி 132
பொருளேநின் 279
பொருள்விண்ணப்பம் 10-259
பொலிவேன் 314
பொல்லாத 487
பொல்லாதசூர் 522
பொல்லாதவாழ் 339
பொள்ளற்குடத் 301
பொறுக்காப்பத்து-10 468
பொறுக்கினுமன் 219
பொறுத்தாலு 115
பொற்குன்றே 89
பொற்பதத்தா 420
பொன்கின்று 113
பொன்பிணிக்கு 492
பொன்போற் 79
பொன்மகள் 522
பொன்மலையோ 104
பொன்வசமோ 117
பொன்றும்வாழ்க் 165
பொன்னஞ்சிலை 378
பொன்னளிக்கு 341
பொன்னாகிமணி 87
பொன்னாசையோ 243
பொன்னாயகனும் 315
பொன்னார்புயத் 449
பொன்னார்புய 501
பொன்னார்புய 373
பொனார்மலை 31
பொன்னார்விடை 214
பொன்னின்றொ 84
பொன்னின்றொ 377
பொன்னின்றொ 489
பொன்னுடையா 103
பொன்னுடையா 108
பொன்னுடையா 143
பொன்னுடையா 351
பொன்னெனன்கோ 342
பொன்னென்று 316
பொன்னேர்சடை 362
பொன்னேர்மணி 161
பொன்னைப்பொ 489
பொன்னைக்கொ 149
பொன்னைமதி 197
பொன்னையிருத் 517
பொன்னையுடை 339
பொன்னையுற்ற 185
பொன்னைவளர்ப் 296
பொன்னோடுவா 134

போ

போகங்கொண்ட 194
போகங்கொண் 114
போகமுடையார் 372
போகின்றவஞ்சக 198
போக்குரையீடு-10 473
போதலிருத்தலெ 485
போதவாநந்த 313
போதானந்த 468
போதுகொண்ட 494
போர்க்கும்வெள் 180
போர்க்குமுரியார் 360
போர்மால்விடை 381
போற்றவைத்த 213
போற்றார்புரம் 216
போற்றிடுவோர்த 137
போற்றித்திருப்பஞ்சகம்-352
போற்றித்திருப்பதிகம்6-312
போற்றித்திருவிருத்தம் 15-517
போற்றிநீறிடாப் 175
போற்றியென்றா 131
போற்றியென் 312
போற்றியொற்றி 200

Koviloor Digital Library

560

போற்றுதியென் 215
போற்றுவாருள்ள 313
போற்றேனெனி 447

ம

மகமதிக்கு 407
மஹாதேவமாலை-101 85
மக்கட்பிறவி 489
மஞ்சடைவான 130
மஞ்சட்பூச்சின் 476
மஞ்சுபடுஞ் 266
மஞ்சேர் 494
மடல்வற்றி 112
மடிகொணெஞ்சி 210
மடிக்குறு 238
மடுக்கமுடியா 198
மடுக்குநீருடைப் 264
மடையார்வாளை 384
மடையிற்கயல் 145
மட்டகன்ற 96
மட்டாரும்பொ 523
மட்டார்மலர்க்கா 150
மட்டித்தளறு 485
மட்டின்மங்கை 166
மட்டுக்கடங் 379
மட்டுண்ட 123
மட்டுப்படா 328
மணக்குமலர் 98
மணங்கேதகை 147
மணங்கொளி 162
மணப்புது 517
மணப்போது 411
மணிகொண்ட 122
மணிக்குழை 496
மணித்தலை 236
மணிமிடற்ற 312
மணியார்கண்டத் 314
மணியேகலாப 481
மணியேதிணைப் 446
மணியேயடி 467
மண்கிடந்த 244
மண்ணகச்சிறு 290
மண்ணுசை 74
மண்ணுலு 126
மண்ணுளா 351
மண்ணிலாசை 443
மண்ணிலே 182
மண்ணினண்ணி 473
மண்ணினல்ல 266
மண்ணிஞன் 457
மண்ணினின் 256
மண்ணிறுண் 258
மண்ணிஞேங்கி 186
மண்ணீரனல் 449
மண்ணுடை 319
மண்ணேயும் 274
மண்ணைமனத் 238
மண்முகத் 335
மதமெனும் 232
மதிகொளன்பர் 195
மதிக்கண்ணி 131
மதிதத்து 128
மதியணிந்தசடை 100
மதியணிசெஞ் 433
மதியாமலரை 110
மதியினெஞ் 490
மதியுங்கல்வி 299
மதியேமதி 140
மதியொளிர் 340
மதிலொற்றி 157
மதிவளர் 520
மதிவார்சடை 325
மத்தநெஞ் 491
மத்தனை 195
மத்தேறி 100
மந்தாகினி 375
மந்தாரஞ் 516
மந்திரமாய்ப் 89
மயிலினியல் 369
மயிலின்மீது 450
மருக்காமலர்க் 131
மருட்கைவிண்ணப்பம் 10-267
மருட்டிநெஞ்ச 167
மருட்டுமங்கை 506
மருண்மாலைவிண்ணப்பம் 10-467
மருந்திளின்று 139
மருந்தென 498
மருப்பாவனத் 112
மருவாணைப் 333
மருவார்குழலி 218
மருளளித்தெனை 285
மருளார்ந்த 274
மருளிலாதவர் 468
மருளுறுமன 439
மருளுறுமுல 514
மலங்கவிழ்ந்தார் 126
மலங்கிவஞ் 473
மலங்குமாலுடற் 172
மலஞ்சாதிக்கு 376
மலஞ்சான்ற 279
மலைநேர் 369
மலைமேலுங் 89
மலையான்றவஞ் 133
மலையும்வேற் 462
மலையை 371
மலைவாங்கு 508
மலைவிலா 186
மழுவார் 501
மறப்பிலாச் 228
மறப்பையகன்ற 214
மறவாதுனை 326
மறிக்கும் 515
மறிதருகண்ணி 515
மறிநீர்ச்சடை 155
மறியேர்விழி 278
மறுமையிம்மை 251
மறைகளு 259
மறைக்கொளி 116
மறைமுடிக்குப் 92
மறைமுடிக்கும 393
மறைமுடிவிளக் 343
மறையும்ம் 292
மறையெலாம் 518
மறைவதென்னை 207
மனக்கேதமாற்று 130
மனமான 532
மனமெலியாமற் 354
மனமேமுன்னர் 239
மன்புருவநடு 435

Koviloor Digital Library

மன்றன்மணக்கு 145
மன்ருடிய 326
மன்ருடுமா 340
மன்ருர்நிலையார் 149
மன்றிடை 327
மன்றினிடை 196
மன்றுடையாய் 242
மன்றேர்தணி 517
மன்னடப்பார் 492
மன்னமுதா 190
மன்னவனே 270
மன்னளவிற் 196
மன்னியபொன் 391
மன்னிவிளங்கு 151
மன்னுங்கதிர் 205
மன்னுங்கருணை 357
மன்னுங்குவளை 481
மன்னுநின்னருள் 466
மன்னுயிர்க்குத் 338
மன்னுருத்திரர் 228
மன்னேயென்னையா 538
மன்னேயென்ற 470
மன்னேர்மலை 139

மா

மாகநதி 333
மாகம்பயிலும் 380
மாகலைவாணர் 120
மாசகன்றுசிவ 523
மாசில்சோதி 188
மாசுடையேன் 415
மாசுவரே 197
மாடொன்று 365
மாணப்புகழ் 158
மாணுதவென் 279
மாணித்தஞான 446
மாணியுயிர் 370
மாணேயத்தவ 90
மாண்காத்தளிர் 358
மாண்கொளம்பல 212
மாதர்மணியே 368
மாதேவா 80
மாநந்தமார் 136
மாப்பிட்டு 120
மாமத்தினுற் 127
மாமாயை 397
மாயநெஞ்சமோ 206
மாயமொழி 357
மாயாமன 278
மாயைநெறி 459
மாயையெனு 308
மாரனையெரித் 503
மாலயர்ந்துங் 267
மாலயன் 221
மாலறியாத 125
மாலறியான் 118
மாலினுச்சி 169
மாலின்கண் 201
மாலின்வாழ்க்கை 462
மாலுநான்கு 294
மாலுந்துஞ்சு 172
மாலுமயனு 513
மாலுமறியா 370
மாலெங்கே 82
மாலெடுத்துக் 335
மாலெடுத்தோங் 174
மாலேந்தியகுழ 493
மாலேறுடை 369
மாலையொன்று 261
மாலொடுநான்கு 259
மால்விடைமேற் 219
மாவின்மணப் 410
மாவீழ்ந்திடு 508
மாவென்றுரித்தா 360
மாழைமணித் 378
மாழைமலையைச் 383
மாருதபெருஞ் 509
மாருதவெம்பிணி 196
மாருமன 326
மாருவழகோடிங் 146
மாறித்திரிவார் 366
மாறுகின்றன 285
மாறுபூத்த 201
மாற்காதலிக்கு 383
மாற்பதஞ் 174
மாற்றறிய 338
மானமிலார் 242
மானுகிமோகினி 89
மாளிணைத்த 400
மாளிஞெடு 408
மானெழுந்தாடுங் 111
மானேர்விழி 132
மான்கண்ட 508
மான்கொள் 381
மான்ருமுலக 76

மி

மிகவேதுயர்க் 140
மின்போலுஞ் 108
மின்போல்வா 196
மின்னுருமிடை 456
மின்னிணைச் 327
மின்னுண்மரு 479
மின்னுநுண்ணி 165
மின்னொருகை 451
மின்னைநிகர்ந் 459
மின்னைநேரிடை 488
மின்னைப்போ 338
மின்னையன்ன 506
மின்னெப்பாசி 300
மின்னெப்பாம் 244
மின்னேடொ 359

மீ

மீதலத்தோர் 135
மீதானத்தரு 398
மீளாதவன்றுயர் 456

மு

முடியாமுதலே 537
முடியாவளஞ் 153
முட்டியே 182
முதலிலாம 180
முதுவோர் 482
முத்தனை 503
முத்திக்கு 276
முத்திநீடிடார் 176
முத்திநேர் 263
முத்திமுதலே 239
முத்தியின் 518
முத்தியுபாயம்-10 176
முத்தியொன்று 404

562 Koviloor Digital Library

முத்திவேண்டு 177
முத்தேவர்முக் 413
முத்தேவர்போற்று 83
முத்தேவர்விண் 136
முந்தைமறையோ 146
முந்தைவினை 459
முந்தோகை 289
முப்போது 135
முருகநின்பாத 519
முருகாவென 514
முருகாசரணஞ் 520
முலைக்கலங் 130
முலைமுகங் 499
முலையைக்காட்டி 477
முலையொருபான் 488
முழுதுமுணர்ந் 400
முள்ளளவு 198
முறைப்படி 248
முறையிட்டபத்து-10 489
முற்றுமோ 465
முன்செய்தமாத 523
முன்புறுநிலை 429
முன்மணத்திற் 79
முன்மழை 116
முன்னங்காழி 214
முன்னஞ்சமுண் 111
முன்னருந்தவ 441
முன்னவனேயானை 73
முன்னறியேன் 487
முன்னறியேன் 390
முன்னியமறை 185
முன்னேசெய் 277
முன்னேஞே 475
முன்னைநான் 283
முன்னைநான் 281
முன்னைப்பொரு 513
முன்னைமறை 398
முன்னைமாதவ 246
முன்னைவல்வினை 258

மூ

மூடநெஞ்ச 206
மூடர்கள்தமக் 498
மூடனேன் 300
மூவடிவாகி 518
மூவருக்கு 399
மூவரை 233

மெ

மெச்சுகின்ற 285
மெய்ஞ்ஞான 95
மெய்தானுடை 79
மெய்ந்நீரொற்றி 161
மெய்மையே 220
மெய்யகத்தே 130
மெய்யருளகத் 468
மெய்யாகநின் 82
மெய்யாவோ 487
மெய்புணர்ந்த 95
மெய்யோர்தினை 349
மெய்விட்ட 114
மெய்விளக்கே 333
மெல்லிதாய 188

மே

மேதினிபுரக்கு 353
மேலையந்தகன் 199
மேலைவானவர் 466
மேல்வினையைத் 380

மை

மைகண்டகண்ட 116
மைகொடுத்தார் 126
மைக்கொண் 156
மைப்படியுங் 195
மையலக்ற்றி 152
மையலழகி 162
மையல்வாழ்க்கை 290
மையனெஞ்சினே 505
மையனெஞ்சினே 490
மையானநெஞ் 352
மையிட்ட 123
மைவிட்டிடா 120

மோ

மோகங்கலந்த 130
மோகமாதியால் 209
மோகமென்னு 232
மோகவிருட்கடல் 405

யா

யாதுகண்டனை 230
யாதுசெய்குவன் 267
யாதுசொல்லினு 260
யாதுநான்பிழை 249
யாதுநின்கருத் 207
யாதுமுன்செய 256
யாதோகனற் 77
யாரையுங்கடு 515
யாரையுந்துணை 450
யான்செய்தவத்தி 159

யோ

யோகமுடையார் 161
யோகமே 91
யோகாந்தமிசை 407

வ

வகையறியேன் 322
வகையெதுதெரி 255
வஞ்சகராங் 457
வஞ்சகர்க்கெல் 343
வஞ்சகவினைக் 257
வஞ்சகப்பேதை 486
வஞ்சநெஞ்சர் 211
வஞ்சநெஞ்சினே 490
வஞ்சந்தருங்காம 81
வஞ்சப்புலக்கா 164
வஞ்சமடமாத 488
வஞ்சமடவார்மய 242
வஞ்சமடவார்மய 274
வஞ்சமாதர்மயக் 299
வஞ்சமிலாருள்ள 276
வஞ்சமிலார் 202
வஞ்சமேகுடி 477
வஞ்சவாழ்க்கை 230
வடிக்குந்தமிழ்த் 357
வடியாக்கருணை 490
வடிவுடைமாணிக்க மாலை-101 132
வட்டமதிபோ 357

Koviloor Digital Library

வணங்கேழிலங்கு 160
வணங்கொணுக 194
வண்டார்கொன் 371
வண்டுகொண்டா 126
வண்ணப்பன் 173
வண்ணமாமுல்லை 186
வண்ணனேயரு 466
வண்மைதருவீ 154
வண்மைபெறு 272
வண்மையுடையா 146
வதைநான்குடை 226
வதியுந்தணிகை 517
வந்தாரல்வர் 364
வந்தாள்வா 458
வந்திக்கு 335
வந்தித்தேன் 74
வந்தென்னைதிரி 480
வயலாரொற்றி 152
வயலாரொற்றி 148
வயலார்சோலை 149
வயித்தியநாதர்பதிகம் 12-345
வரங்கொளடி 484
வரமன்றலினுர் 205
வரமுறுஞ் 329
வரம்பழுத்தநெறி 93
வருகணைத்து 103
வருஞ்செல்லுணீர் 112
வருத்தந்தவிரீ 152
வருநாளுயிர் 215
வருந்துந்தனி 481
வருந்தேன்மகவீ 365
வருபகற்கற்பம் 429
வருபயனறி 499
வருமொழிசெய் 436
வருவாயென்று 470
வரைக்குநேர் 165
வலத்தால் 511
வலந்தங்கிய 148
வலமேயுடை 239
வலியவந்திடு 265
வலைப்பட்ட 119
வல்லபைகணேசர்பிரசாத மாலை-11 440
வல்லாரும்வல்லவ 138
வல்லார்முலை 275
வல்லியாநந்த 330
வல்லியொருபா 485
வல்லிருட் 469
வல்வினைப் 514
வல்வினையேனை 217
வழிமொழிவிண்ணப்பம்-248
வழுத்தார் 365
வளங்கன்றுமா 117
வளங்கிளர் 291
வளங்கொளும் 186
வளங்கொளுந் 222
வளஞ்சேரொற்றி 148
வளஞ்சேரொற்றி 151
வளநீரொற்றி 161
வளைத்தேவருத்து 451
வள்ளயிற் 503
வள்ளலுனை 525
வள்ளலுன்னடி 464
வள்ளலேலெங்கின்ன 220
வள்ளன்மதியோ 156
வனமெழுந்தாடுஞ் 111
வனம்போய் 115
வன்கண்ணர் 297
வன்குலஞ் 521
வன்கொடுமை 101
வன்சொலினுரி 456
வன்சொற்புகலா 370
வன்பட்டகூடலி 115
வன்பிற்பொறிந் 513
வன்புகலந்தறியா 92
வன்பெரு 529
வன்பொடு 500
வன்மானங் 341
வன்மைசெய்திடு 170
வன்மைபேசிய 246
வன்னியிதழி 374
வன்னெஞ்சப் 244
வன்னேர்முலை 275
வன்னேயும் 492

வா

வாக்குக்கடங் 372
வாங்கிமலை 266
வாங்குவின்று 165
வாசகமாய்வாச்சி 88
வாசங்கமழு 154
வாடக்கற்று 334
வாடனக்குறமும் 192
வாடாதிருந்தேன் 361
வாடுகின்றன 250
வாட்கணேமைய 460
வாட்கொண்ட 121
வாட்செல்லா 487
வாட்டமிலா 436
வாணரைவிடை 233
வாணுளடைவர் 136
வாணுதற்பெரு 466
வாதமேபுரி 183
வாதமோதிய 212
வாதாகாவண்ண 437
வாதுசெய் 166
வாதுபுரிந்தின 243
வாதைமயற்காட் 245
வாயன்றேல் 76
வாயாகிவாயிறந்த 87
வாயாத்துரிசற் 475
வாயாரநின்பொ 295
வாயிலான் 179
வாய்கொண்டு 533
வாய்க்குமுன 453
வாய்மூடிக்கொல் 113
வாய்மையிலாச் 431
வாரமுளார் 272
வாரார்முலை 507
வாராவிருந்த 472
வாராவிருந்தாய் 149
வாரேனேதிருத் 474
வார்கொண்மங் 231
வாவாவென்ன 475
வாவென்டா 459
வாழாதநெஞ்ச 279
வாழாதவண்ண 457
வாழாமனத்தின் 317
வாழிநின்சேவடி 143
வாழுநின்திருத் 463
வாழுமிவ்வுலக 498

Koviloor Digital Library

வாழும்படிநல் 475
வாழைக்கனி 334
வாழ்வதுநின்ற 237
வாழ்வனே 494
வாழ்விலாஞ் 474
வாழ்வேநற் 453
வாழ்வையளிப் 381
வாளாருங் 496
வாளிலேவிழி 444
வாளேய்நெடுங் 109
வானங்கொடுப் 153
வானதுவாய்ப் 410
வானமெங்கே 532
வானவர்கோன் 523
வானம்விடாதுறு 111
வானர்வணங்கு 153
வானுளமாலயன் 126
வானிகர்கூந் 486
வானும்புவியும் 359
வானும்வையமும் 286
வானேயவ்வானுல 90
வானைநோக்கி 179
வானோர்குடிகளை 447
வான்கலந்தமாணி 435
வான்காணவிந்தி 434
வான்காணுமறை 95
வான்பிறந்தார் 486
வான்மாறினு 116
வான்வண்ணக் 351
வான்வளர்த்தா 124
வான்வேண்டிக் 112
வான்றேட 136
வான்றேய்பொழி 150

வி

விச்சைப்பெருமா 156
விச்சைவேண்டி 231
விஞ்சுடையாய் 272
விஞ்சுநெறியி 156
விடங்கலந்தருண் 200
விடங்கொள் 208
விடநாகப்பூ 125
விடமிலையோ் 106
விடுத்தேன்றவத் 235
விடுமாட்டிற் 487
விடையமொல்று 402
விடையவாழ்க் 462
விடையார்கொடி 364
விடையார்க்குங் 297
விடையார்விடங் 379
விடையிலையோ 113
விடையுடையாய் 107
விணங்காதலன்ப 137
விண்டங்கமரர் 363
விண்டுவணங்கு 150
விண்ணப்பக்கலிவெண்பா 417-6
விண்ணப்பப்பதிகம்10-314
விண்ணவர்கோ 523
விண்ணவர்புகழு 440
விண்ணருதுவாழ் 460
விண்ணோர்பொழில் 155
விண்ணுடையாய் 107
விண்ணுறுசுடரே 518
விண்ணேவிண் 90
விண்படைத்த 323
விண்பார்புகழுந் 380
விண்பூத்தகங்கை 123
விதிக்கும்பதிக்கும் 115
விதியாகி 89
விதியிழந்த 267
விதியுமாலுமுன் 226
விதியெலாம் 330
விதிவிலக்கி 431
விதுவாழ்சடை 501
வித்தகமறியேன் 288
வித்தாகிமுளையாகி 86
வித்தையின்றியே 180
விந்துநிலை 398
விமலையிடத்தா 381
வியப்புமொழி-10 368
விரதமழிக்குங் 479
விரிதுயராற்றடு 296
விருந்தினர் 354
விருப்பாகுமதிச் 203
விருப்பிலேன் 178
விருப்புநின்றதும் 246
விரும்பித்திருமா 216
விரைவாய்கடப்ப 485
விலைகடந்த 413
வில்லாம்படிப் 214
வில்லார்நுதலாய் 368
வில்லைப்பொன் 122
வில்லைமலையாய் 382
வில்வைத்தொடும் 213
விழற்கிறைத்து 323
விழிக்கஞ்சனங் 111
விழியொண்ணுத 155
விளக்குறழ் 497
விளங்கறிவுக்கு 397
விளங்குமணி 432
விளைத்தனன் 287
விளைப்பேன் 511
விற்கண்டாத 364
வினவுத்தரம்-2 333
வினையினுலு 247
வினையேபெருக்கி 318

வீ

வீட்டாரிறைநீ 76
வீட்டுக்கடங்கா 197
வீட்டுத்தலைவ 121
வீட்டைப்பெறு 485
வீணனேனின்னு 505
வீணேபொழுது 107
வீயுமிடுகாட் 77
வீரமாந்தரு 173
வீழாகஞான்ற 337
வீறுடையாய் 73
வீற்ருரொற்றி 151
வீற்றுர்நின்றன் 134

வெ

வெங்கொளித்தே 198
வெங்கோடை 76
வெஞ்சஞ்சலமா 73
வெண்மைசேர 233
வெண்மைநீற்றர் 379
வெண்மைநெஞ் 264
வெதிருள் 489
வெப்பிலையே 122

Koviloor Digital Library

வெம்புழுயி 519
வெம்பெருமானு 128
வெயின்மேற் 479
வெய்யபவக் 411
வெய்யவினையின் 163
வெருட்சியே 256
வெல்லுகின்றனர் 251
வெவ்வினைக்கிடா 309
வெளியாய்வெளி 137
வெள்விடைமேல் 222
வெள்ளங்குளிரு 136
வெள்ளங்கொண் 340
வெள்ளச்சடை 362
வெள்ளமணிச் 102
வெள்ளமருவும் 298
வெள்ளமுதுந்தே 77
வெள்ளிமாமலை 188
வெள்ளைப்பிறை 80
வெறிபிடிக்கினும் 212
வெற்பனேதிரு 464
வெற்பைவளைத் 360
வெற்றூர்புரமெரி 508
வெற்றிப்படை 205
வெற்றியிருந்த 363
வென்றிக்கொடி 361
வென்றேறுதலையு 107

வே

வேகமுறுநெஞ் 296
வேட்கைக்கொத்து-10-323
வேட்கைவிண்ணப்பம் 10-470
வேட்டேனினது 451
வேணிக்கணீர் 119
வேணிக்கமேவைத் 83
வேணிக்குமே 116
வேண்டாமைமேவ 322
வேண்டாமைமேவ 216
வேண்டுநெஞ்ச 199
வேதங்களாயொ 140
வேதப்பொருளே 538
வேதமாமுடி 466
வேதமுங்கலை 519
வேதமுடிமேற் 397
வேதமுடிவோ 78
வேதமுதற் 433
வேதனென்கோ 128
வேதனேனும் 294
வேதனையாமது 127
வேதனைச்சிறை 503
வேதாநந்த 490
வேதாந்தநிலை 86
வேதாந்தசித்தா 398
வேதியனேவெள் 270
வேம்புக்குந்தண் 339
வேயையவென்ற 463
வேய்க்குட்பொரு 119
வேய்ப்பான்மென் 488
வேலன்மாதவன் 463
வேலைகொண்ட 187
வேலைஞாலம் 150
வேலைவிடத்தை 357
வேல்கொண்ட 447
வேல்கொண்ட 123
வேல்கொளுங் 502

வை

வைதிலேன் 183
வைத்தநின்னருள் 213
வையகத்தே 296
வையநாயக 294
வைவமென்றெழு 341
வைவளர்வாட் 486

அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை

திருச்சிற்றம்பலம்

அருட்பெருஞ்ஜோதி
அச்சகம், சென்னை.
14-3-1942

சென்னை சமரச சுத்தசன்மார்க்க சங்கம்,
"அருட்பெருஞ்ஜோதி நிலையம்"
7/99, அம்மன் கோயில் தெரு, கிருஷ்ணங்குளம் சமீபம், சென்னை.

Koviloor Digital Library

566.

சென்னை

சமரச சுத்தசன்மார்க்க சங்க வெளியீடு

திருவருட்பா

உரைப் புத்தகம்

உரையாசிரியர்—மகாவித்வான் சித்தாந்த ரத்நாகரம்

அரன்வாயல் வேங்கடசுப்புப்பிள்ளை

1. ஜீவகாருண்ய ஒழுக்கம்
2. திருவடிப்புகழ்ச்சி
3. விண்ணப்பக் கலிவெண்பா
4. நெஞ்சறி வுறுத்தல்
5. சிவநேச வெண்பா
6. **மகாதேவமாலை**

மேற்படி 6-பாகங்களும் அடங்கியது. ஜீவகாருண்ய ஒழுக்கத்திற்கு வசனமாகவும், நான்குபாகங்களுக்கும் பலநூல்களின் மேற்கோள்களுடன் பதவுரை-விசேஷ உரைகளுடன் தெளிவான விருத்தியுரையும், திருவருட்பாவில் தோத்திரங்களில் மிகச்சிறந்த மகாதேவமாலை 101-பாடல்களுக்கும் பல சாஸ்திரங்களின் மேற்கோள்களுடன், பதவுரை விசேஷ உரைகளுடன் கூடிய விருத்தியுரையும் சேர்ந்த இந்த உரைப்புத்தகம் சுமார் 400-பக்கங்கள் சுத்தப்பதிப்பு விலை அணு 12.

தமிழ்ப்பயிற்சி அதிகம் வேண்டுமானாலும், அறிவும் அன்பும் பெருக வேண்டுமானாலும் அவசியம் இவ்விருத்தியுரைப் புத்தகத்தை வாசிக்க வேணடும்.

மகாதேவமாலை

மூலமும்—விருத்தியுரையும் தனி அணு 9.

A. No. A 3337
Δz-111(8G)

இங்கிதமாலை

மூலமும் — விருத்தியுரையும்

உரையாசிரியர் — மகா வித்வான்

காஞ்சிபுரம் - இராமசாமி நாயுடு அவர்கள்

சுவாமிகள் சல்லாப வியன்மொழியாக இயற்றியுள்ள இந்நாலின். 166-பாடல்களுக்கும் அகப்பொருள் புறப்பொருள் ஆகிய இரண்டு உரைகளும் அடங்கியது. விலை அணு 6.

மனுமுறை கண்ட வாசகம்

சுவாமிகள் திருவாய்மலர்ந்தருளியது. காருண்யமும், அன்பும் ததும்பியுள்ள சிறந்த வசனநூல் அணு 2.